ஸ்ரீ பலகர்மகுலோபதேசம்.

JL
X4B m211,N14x
N14.4
161 66

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரஹ்மணே நம:

விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-3.4 { நள௵ தைமீ 1917௵ ஜனவரிமீ } இதழ்-1.

மெய்ஞ்ஞான தீபம்.

நாம் ஒரு காரியத்தைச் செய்வதற்கு முன்னம், அக்காரியம் நம்மால் முற்றச் செய்ய இயலுமோ என்பதை நன்றாய் ஆராய்ந்து தேரவேண்டும். அங்ஙனம் ஆராயாமல் செய்யும் காரியம், முற்றுப் பெறாமல் போதலோடு, அதனைச் செய்வோன் பலவாயகஷ்டங்களுக்கு உள்ளாகின்றான். ஆதலால், எதையும் முன்யோசனையுடன் செய்வதே சாலச்சிறந்தது.

***

நீ தொடர்ந்தகாரியம், உன்னால் முற்றுப் பெறுமோ பெறாதோ என்ற சந்தேகத்தைக் கொள்ளாதே. துணிந்தபின் அக்காரியம் உன்னால் சரிவர முற்றுப் பெறும் என்ற திடத்துடன் வேலைசெய். அத்திடமே உன்னை அவ்வேலையைத் திறமாய் முற்றுப்பெறச் செய்யும்.

***

சாதாரண காரியங்களே இவ்வண்ணம் திடத்தால் ஆவதென்னின், என்றும் பிறவாப்பேரானந்த நிலையை நமக்குத்தரும் பெம்மானை அடைய, இத்திடமோ நமக்குத்துணையாய் உள்ளதென்று சிலர் கேட்கவும் செய்வர்! மனிதன் செய்யும் பெருந்தொழில் முதல் சிறுதொழிலீறாக எல்லாம் திடத்தாலேயே ஆகின்றன! திடம் இல்லான் என்றும் தான் நினைத்தவற்றை எய்தப்பெறான்.

***

நீ உண்மையில் நமக்குப் பரமானந்தப் பெருவாழ்வளிக்கும் பரமேஸ்வரனைக் கண்ணுற் காணவேண்டுமாயின், 'நான் கடவுளைக் கண்ணுற்காண்பேன். நான் கடவுளைக் கண்ணுற்காண்பேன்' என்ற திடமான எண்ணத்தை எப்போதும் விடாதே. நீ அங்ஙனம் செய்வாயாயின், எளிதில் நீ நாடிய கடவுளைக்காண்பாய்.

***

இம்மிகப் பெருந்தொழிலே, திடமென்னும் அருமந்த பொருளால்ஆவதென்றால், மண்ணுலகில் மாந்தர் உயர்வு பெறச் செய்யும் மற்றைய காரியங்களோ ஆகப்பெறா? நமது தாயுமானவர்கூறியதுபோல், இப்போது சிங்கத்துடனும் யானையுடனும் சிலர் விளையாடுகிறார்களே, அதற்குக்காரணம் என்ன? ஜாலக்காரன் இரவைப்பகலாகவும், பகலை இரவாகவும் காட்டுகிறானே, எப்படி? அவனிடத்தில், 'நான்இந்தஜனங்களை மயக்கிவிடுவேன், என்ற திடம் இல்லாவிடின், நம்மைமயக்கிவிடுவானா? இல்லை. திடம் ஒன்றே அங்கங்கிருந்து, அளவற்ற அற்புதகாரியங்களைச் செய்கிறது.

***

நீ திடத்தைக் கைக்கொள். அதுவே உனக்குப்பெரிய உயிர்த்தோழன். அவன் தோழமை உனக்கு இருந்தால், நீ உலகில் சீரும் சிறப்பும் பொருந்திய பெரியமனிதனாய்வாழ்வாய். திடத்தைவிடாதே. திடம் என்னும் வச்சிராயுதம் எந்த முடியாத காரியமாம் மலையையும் வெட்டித்தள்ளும். ஆதலால், திடமே பொருள்; திடமே துணை; திடமே உயிரென எண்.

மனோபலம்.

மனோபல மென்பது என்ன, அது எவ்வகைப்பட்ட தென்பதை ஒரு சிறுகதையினால் விளக்குவோம். பூரணகர்ப்பத்துடனிருந்த ஒரு சிங்கம், பசியினால் வருந்தி இரைக்காக ஒரு காட்டில் திரிகையில் ஓரிடத்தில் ஆடுகள் மேய்ந்துகொண் டிருந்ததைக் கண்ணுற்று மிக்க ஆக்கிரத்துடனும் அதி வேகமாயும், மேய்ந்துகொண்டிருந்த சில ஆடுகளின் மேற்பாய்ந்தது. ஆடுகள் தப்பி ஓடிப்போய்விட்டன. சிங்கமோ பாய்ந்த வேகத்தினாலும் ஆடுகள் தப்பிப் போய் விட்டதினாலும் பூமியில்வந்துவிழுந்தது. விழுந்த அதிர்ச்சியில் வயிறுவெடித்து வயற்றினின்றும் குட்டிவெளிவந்தது. சிங்கமும் உயிர்துறந்தது. சிங்கக் குட்டி கண்ணைத்திறந்துபார்த்து, ஆடுகள் ஒருபக்கம் ஓடுவதைக்கண்ணுற்று தள்ளாடித் தடுமாறி எழுந்து ஆடுகளுடன் போய்ச் சேர்ந்து கொண்டது. சேர்க்கையினால் மானிடர்களுக்கும் புதிதாக குணங்கள் ஏற்படுகிற தென்பது யாருமறிந்தவிஷயம். மிருகங்களுக்கு கேட்கவேண்டுமோ? சேர்க்கையினால் உண்டாகும் தோஷங்களை விளக்குவதற்கு, நமது ஜனங்கள் அடிக்கடி பன்றியையும் கன்று குட்டியையும் உபமானமாக எடுத்துப்பேசுவதை எல்லோரும் கேட்டிருப்பார்கள். அவ்விஷயம் முற்றிலும் உண்மை என்பதில் சந்தேகமில்லை. 'மிருகேந்திரன்' 'மிருகராஜன்' என்று அழைக்கப்படுகிற சிங்கஜாதிக்குரிய இயற்கை குணங்கள், ஆட்டுக்கூட்டத்திற் சேர்ந்துகொண்ட இச்சிறுசிங்கக் குட்டிக்கு ஏற்படுவது அசாத்தியமாகிவிட்டது. இதுவும் ஆடுகளுடன் சேர்ந்ததினால், தன்குலம் தன் ஜாதிக்குரிய குணங்களைவிட்டு ஆட்டுக்குட்டிகளுக் கொப்பாக தன்னையும் நடத்திக்கொண்டு வந்தது. புல் பூண்டு முதலானவைகளைத் தின்பதும் தண்ணீர் குடிப்பதும், ஆடுகளைப்போல் 'பா ஆ ஆ ஆ' என்று கத்துவதும் காடி, புலி, சிங்கம் முதலான மிருகங்களைக் கண்டவிடத்து மற்ற ஆடுகளைப்போல் பயந்து கூக்குரலிட்டுக்கொண்டு ஓடுவதும் சகஜமாய் விட்டன. ஆயிரக்கணக்கான ஆடுகளைக் காட்டில் மேய்க்கும் இடையனுக்கு ஆட்டுக் கூட்டத்தில் ஒரு சிங்கக்குட்டி, சேர்ந்திருப்பது தென்படவில்லை. இதுவும் சிறுகுட்டியானதால் மற்றஆடுகளும்இதை ஆட்டுக்குட்டியாகவே நினைத்திருந்தன.

இப்படி இருக்கும் நாளில் ஓர்நாள் ஒரு சிங்கம் இரைதேடிக்கொண்டு வருகையில் இந்த ஆட்டுமந்தையின் அருகு நெருங்கி உற்றுநோக்கிற்று. சிங்கக்குட்டி ஒன்று ஆடுகளுடன் மேய்வதைப் பார்த்து திடுக்கிட்டு "ஆகா! இதென்னபுதுமை! என்ன ஆச்சரியம்! நமது குலத் துதித்தவனைக் காணப்படுகிறதே! ஆடுகளுடன் ஐக்கியமாகிவிட்டதென்ன! ஒருக்கால் ஆடுகளை ஏமாற்றி, தான் நல்லவனென்று நம்பச் செய்து ஒரு வருமறியாமல் ஆடுகளைக் கொன்று தின்றுகொண்டிருக்கின்றதோ! 'அப்படி செய்வது ஹீனத்தொழிலாச்சுதே! ஆகிலும் சற்றுகவனிக்கலாம்' என்று உற்றுநோக்கிப் பார்க்கையில் ஆடுகளைப் போலவே புற்பூண்டுகளை மேய்வதையும் கத்துவதையும் பார்த்து அடங்காத்துயருமுண்டாகி "நமதுகுலத்துக்கு அழிவுகாலம் சமீபித்துவிட்டது போலும். நம்மில் ஒருவன் தன் சக்தியை மறந்து பேதமையான ஆட்டு ஜாதியிற் பிறந்தவனுக் கொப்பாக இருப்பதை நாம் கேட்டதில்லை. இது தான் மாயையோ? இதென்னஉலகம்? கடவுள் இப்படியும் அறிவைக்கெடுத்து விடுவாரோ?" என்று விசனித்து இதற்கு என்ன செய்யலாமென்று ஆலோசித்து "இதன் உண்மையை அறிந்து, கூடுமானால் இவனையும் இம்மாயையினின்று மீட்கவே

XTB m211, N14Y 161166

ண்டும்" என்ற எண்ணங்கொண்டு சமயம் பார்த்து சிங்கக்குட்டி ஆடுகளுடன் ஒரு பக்கத்தில் மேய்ந்துகொண் டிருக்கும் சமயத்தில் திடீரென்று அக்கூட்டத்திற்பாய்ந்தது. ஆடுகள் கதறிக்கொண்டு நாலுபக்கங்களிலும் ஓட ஆரம்பித்தன. சிங்கக்குட்டியும் ஆடுகளைப்போல பா—வென்று அலறிக்கொண்டு ஓடுவதைக்கவனித்து அதனிடமே விரைவிற் சென்று ஒரே பிடியாய்க் கவ்வித் தூக்கிக்கொண்டு காட்டிற்குள் வெகு தூரம் கொண்டுபோய் ஓரிடத்தில் விட்டது. சிங்கக் குட்டி "ஐயையோ என்னைக்கொல்லாதே நான்பேதமையான ஆட்டுக்குட்டி" என்று உடல்பதறி அழவாரம்பித்தது.

"அல்ல நீ ஒரு சிங்கக்குட்டி"

"நான் சிங்கக் குட்டியல்ல, நான் ஆட்டுக்குட்டி. என்னைக்கொல்லாதேயும். என்
ர.

தைக்கேள். நீ ஆடல்ல;
தே அழாதே. நான்
ல்லை. நீ என்குலத்தைச்
று சிங்கம் சொல்லிற்று

ஏமாற்றுவதில்லை உமக்கு
ஆட்டுக்குட்டி தான்
ருய்த்தெரியும். நான்
ாவது நம்புவார்களா?
படுத்திவிட்டுபிற்பாடு
இவ்விதம் ஏமாற்றுகி
விடும். என் கூட்டத்
சேர்ந்து கொள்ளுங்
கிரா! உமக்குச்சரணம்.
னைக் கொல்வது தர்ம
பேரில்கிருபைகூர்' என்று
க்கேட்ட சிங்கத்திற்கு பரி
இதற்கு என்னவகையிற்
ன்பதை ருசுப்படுத்தலா
த்து அண்டையிலிருந்த
த பலவந்தமாய் அழைத்
ான் சொல்வதைச்சற்று
உனது ரூபமே உன

க்கு புலப்படாமலிருக்கிறது. ஆடுகளின் ரூபத்தை நீ நன்றாய் அறிவாய். இந்த தடாகத்தின்கரையில் நின்றுகொள். தண்ணீரில் உன் ரூபத்தைப்பார். உன் ரூபத்தையும், என் ரூபத்தையும் சற்று ஒப்பிட்டுப்பார். நான் உன்னை தடாகத்தினுள் தள்ளுவதற்காக அழைத்துவந்திருக்கிறே னென்று சந்தேகமில்லாம லிருக்கும் பொருட்டு நான் சற்று விலகிநின்று கொள்கிறேன் என்று சொல்லிற்று. பதற்றத்துடன் தண்ணீரில் உற்றுநோக்கிற்று. சிங்கத்தையும் பார்த்து சந்தேகம் பிறந்து விட்டது. சிங்கம் கெம்பீரமாய் நிற்பதைப்போல் தானும் நின்றுபார்த்தது. முகம், நிறம், காது, வாய் எல்லாம் சிங்கத்திற்கொப்பாக விருந்தன. பெரியசிங்கம் "நல்லது இப்பொழுது என்னைப்போல் நின்றுகொண்டு உரத்தகொனியில் கர்ஜனைசெய்" என்றுதான்கர்ஜனை செய்து காட்டிற்று. கர்ஜனையைக்கே நடுக்கமுற்ற தெனினும், ரூபத்தைக் கண்ணுற்றதினால் மனதில் சற்று நம் உண்டாயிருந்ததின் காரணமாக கு சப்தமிட்டது. இதுவரை ஆடுபோ திக்கொண்டிருந்த சிங்கக் குட்டி த தத்தைக் கேட்டு ஆச்சரிய மடைந் பெரிய சிங்கத்துக்கு சந்தோஷம் பி குட்டியை உற்சாகப்படுத்தவே இர மூன்றுதடவை கர்ஜிக்க சரியான சி தொனி ஏற்பட்டுவிட்டது. "இப் பொழுது என்னைப்போல் நீயும் சக்தி தென்பதைக் காட்டுகிறேன்" என்று லிவிட்டு, தான்சற்றுப்பின்வாங்கி ஓடி வேகமாய்த் தாண்டிற்று. குட்டியும் விதம் எத்தனித்து பெரிய சிங்க கொப்பாக தாண்டிற்று. "சபாஷ்! ஆடு இவ்விதம் செய்ய சக்தியற்ற தென்ப உணர். நாம் ஆடுகளல்ல. ஆடுகள் நம இரையாகக் கூடியவைகள். வேறுஒரு கமும் நமக்கு இணையல்ல, பிரமாண்டமா காட்டுயானைகளும் நமதுகர்ஜனைக்கு அஞ் மென்பதைபறிந்துகொள். நமதாக்கையின் வலிமை, வேறுஎந்தமிருகத்திற்கும் கிடை யாவென்பதை அறி. நாம் மிருகராஜ

161166

என்பனவைமறந்துவிடாதே. 'பயமின்மை'
யென்பது கைக்குவந்தவருக்கே யுரிய
தென்பதை நன்குணர். மிருகங்களுக் கெல்
லாம் 'அரசன்' என்னும் ஸ்தானத்தை
வகித்து மேன்மையாக வாழ்நாட்களைக்
கழிப்பாயாக' என்று சொல்லித் தன்னு
டன் கூட்டிக்கொண்டு காட்டிற்குள் சென்
றது.

உலகசிருஷ்டியில் மானிடர்கள், சிங்கத்
திற்கொப்பாக சிருஷ்டிக்கப்பட் டிருக்கி
றார்களென்ற ஒருவிஷயத்தைத்தான், நமது
வேதங்கள், நமது உபநிஷதங்கள், நமது
இதிகாசங்கள், ஸ்ருதிகள், ஸ்மிருதிகள்,
ராணங்கள் முறையிடுகின்றன.

பயமற்றிரு பயமற்றிரு பயமற்றிரு."
இவ் வொன்றினையே ரிஷிகளும், ஸித்
களும், இமயமலையின் சிகரத்திலிருந்து
ன்னியாகுமரிவரை கேட்கும்படி கர்ஜித்
க்கிறார்கள். நம் தேசத்தில் ஒவ்வொரு
த்திலும், ஒவ்வொரு இடத்திலும்
நக அவதார புருஷர்கள் தோன்றி,
மபங்கியிருக்கும் ஜனங்களுக்குத் தங்
யே உதாரண மாகக்காட்டி யிருக்கி
ள். அவர்களுடைய சரித்திரங்களையே
ணங்களென்று நாம் சொல்லுகிறோம்.
ராணங்கள் பொய்யல்ல, உண்மையே.
ல அவைகளின் முக்கிய கருத்தை
ாதவர்களுக்குப் புராணங்கள் பொய்

மநெறி தவறாமல் காலங்கழித்தவரு
கள் இறந்ததின் பின் மோக்ஷலோகத்
துப் போவதாய்க் கற்றறிந்த பண்டி
ள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம்.
மாக்ஷம்' என்ற ஒருலோகம் இயிருக்கிற
, இல்லையோ நாமறியோம். ஆனால்
மோக்ஷபதவிக் கொப்பாக இம்மண்
லகத்திலும் ஓர் பதவியிருக்கின்றது.
அநுபவத்தில் அதை நன்றாய்ப்பார்த்தி
றோம். "பயமின்மை என்பதினால் ஏற்படு
கிற பதவியே மோக்ஷ மென்னலாம்.

குலோத்தாரண 'கைங்கர்யம்.

நாம் அநேக நாளாகக் கொண்டிருந்த
குலோத்தாரணமாகிய எண்ணமானது இப்
பொழுதுதான் பூர்த்தியாவதாகத் தெரிய
வருகிறது. அதாவது, நமது இடத்தையும்
இதில் ஸ்தாபித்துள்ள விஸ்வகுலோத்
தாரண அச்சுக்கூடத்தையும் தற்போதைய
பத்திரிகையையும் பாடசாலை முதலிய
வற்றையும் நமது ஜாதியார் பொது நன்
மைக்கென்று ஏற்படுத்தி யிருந்தாலும்,
என்னொருவனுடைய சொந்தமாக என்
னிடம் உபயோகிக்க வேண்டுமானாலும்
உபயோகித்துக் கொள்ளும் மார்க்கத்தி
லிருந்தது. இப்பொழுது அப்படியில்லா
மல் விஸ்வகர்ம வம்சஸ்தர்கள் யாவருக்
கும் பொதுவாகச் செய்து விட்டு அதை
யாவரும விர்த்தி செய்யவும் அதற்காக
பண்டு சேர்க்கவும் மற்றும் ...ன்றுபுயபா
கள்படவும் சுதந்திரங்கள்
யிலிருந்து ஓராசுகூ
அவற்றை வேறவித
உபயோகிக்கவாவது
திரம் கிடையாது. இப்
துவிட்டு அதில் ஓர் இ
விஸ்வகர்ம சத்திரமொ
வேண்டி யிருக்கிறது.
க்கு சரியானகட்டிட
வெளியூர்களிலிருந்து
னைக்கு வந்தால் இவ்வி
செய்துக்கொள்வதற்கு
தர்களுக்கென்று சத்தி
த்திரைவாசிகளாயுள்ள
டப்படுவதால் இவ்வித
நேர்ந்தது. இவைகளுக்
வேண்டி யிருப்பதால்
யுள்ள தர்மகுண சீலர்கள்
சக்தியானுசாரம் பொரு
இவ்வித குலதர்மங்களைப்
வைத்தால் கூடிய சீ
பொதுக்காரியங்கள் கை

இதற்குப் பொருள் ச

ஒருவன் தனதுமனம், விவேகத்துடன்
பயிர்செய்யத்தக்க காடாகிய ஒரு தோட்
டத்திற்குச்சமானமாகும். அதில் பிரயோ
ஜனமுள்ள நல்ல வித்துகளை விதைக்காத
இடத்தில்பிரயோஜன மில்லாதபுல் பூண்டு
களின் வித்துகள் ஏராளமாக விழுந்து பல
வகைகள் என்கிற புல்பூண்டுகள் விளையும்.

ஆதலால் ஒருதோட்டக்காரன் தனது
தோட்டத்திலுள்ள அசுத்தமான புல் பூண்டு
களை நீக்கித் தனக்குவேண்டும் நல்ல கனி
களையும் காய்கறிகளையும் கொடுக்கத்தக்க
நல்லமரங்களையும் நல்லசெடிகளையும் அதில்
வைத்து வளர்ப்பதுபோல மனிதன் தன்
மனதிலுள்ள குற்றநினைப்புகளும் பய
நினைப்புகளும் அசுத்தமானநினைப்பு
களுமாகிய புல்பூண்டுகளை நீக்கி ஆரோக்
கியமும் செல்வமும் வலிமையுமாகிய காய்
களையும் இன்பமும் புகழும் முத்தியு
மாகிய கனிகளையும் கொடுக்கத்தக்க குற்ற
மற்ற நினைப்புகளும் பயனுள்ள நினைப்பு
களும் சுத்தமான நினைப்புகளுமாகியசெடி
களையும் மரங்களையும் வைத்துவளர்த்துக்
கொள்ளவேண்டும். இப்படிச் செய்துவரு
கின்ற மனிதன் தனது ஆன்மாவாகிய
தோட்டத்தின் தலைவன் என்று விரை
விலாவது மெதுவிலோ நன்கு தெரி
ந்துகொள்வான்.

இதனை அன்புடன் கேட்டறி
ந்து உங்கள்மனதில் இதனை அகலா
மற் காத்து மனதை சன்மார்க்க
மும் ஒழுக்கமுமான ஒற்றுமை வழி
யில் செலுத்தி ஊக்கத்தோடு உழைத்து
நமது குலத்தை முன்னேற்றத்திற்குக்
கொண்டுவருவீர்களென்று முற்றிலும்

(...ப்புரவு).

பொய்யாமனத் தினால் மாசற்ற
சன் அருள்—என்றும்.
...ப்புரவு கண்ணோட்டம் வாய்மை
...ஊன்றிய தூண்—என்றும் [யோடு

நகை யீகைஇன் சொல்இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு—என்றும்.
தூங்காமை கல்வி துணிவுடைமைஇம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு—என்றும்.

மேலோருரைத்தபடி மேற்கூறும் விஷயத்
தில் மனம்வைத்து உறுதிமனதோடு ஒத்
துழைத்து நடந்து நமது குலத்தினர் முன்
னேற்றத்திற்குவரும் உபாயமாகிய ஏதுக்
களைத் தேடிக்கொள்வோமாக.

தேவஸ்தான நிலைமைகள்.

சென்னையிலுள்ள நமது ஸ்ரீகாளிகாம்பா
ளென்னும் காமாக்ஷி அம்மன் தேவஸ்தா
னத்தின் நிலைமையை ஷை தேவஸ்தான
தர்ம பரிபாலன சபையார் தற்காலம் எப்
படி வைத்திருக்கிறார்களென்பதை எடுத்
துக் காட்டுவோமாக.

அநேகநாளைக்குமுன் ஷை தேவஸ்தானத்
திற்கு நம்மவர்கள் கட்டடங்களை கட்டியும்
அநேக சொத்துக்களை வைத்தும் அக்கோ
விலுக்குவேண்டிய இந்தவாகனாதிகளையும்,
ஆபரணாதிகளையும், மற்றத் தட்டு முட்டு
பாத்திரவகை சாமான்களையும் செய்துவை
த்து ஒருவரை தர்மகர்த்தாவாகவும் நிய
மித்து வைத்திருந்தார்கள். அந்த ஓர் தர்ம
கர்த்தரே ஷை தேவஸ்தான பரிபாலனங்
களை சரிவரக் கவனித்து, உற்சவாதிகளை
யும் நிரம்ப கௌரவமாக மற்ற தேவஸ்தா
னங்களுக்கு சமமாகவும் மேன்மையாக
வும் நடத்திவந்தார்கள். சில நாளாக ஷை
தேவஸ்தானத்திற்கு தர்மபரிபாலன சபை
யென்று ஓர்சபை ஏற்படுத்தி அதற்கு
பிரசிடெண்டு ஒருவர், காரியதரிசிஒருவர்,
தர்மகர்த்தர் ஒருவர், கமிடி மெம்பர்கள்
25—பேர்கள் மெம்பர்கள் பலபேர்களெனச்
சேர்த்து இங்கிலீஷ் சிஷ்டம்போல் நடக்க
வேண்டுமென்று தீர்மானித்து நடத்துகி
ன்றார்கள். ஆனால், அதுமுதல் இந்த தே
வஸ்தானக் காரியங்கள் சரிவர நடவாமல்
அடிக்கடி கோர்ட்டுக்குப்போக நேரிட்டு
தேவஸ்தான சொத்துக்களை வீண் செலவு
களில் செலவிடுகிறார்கள்.

ஒருவன் தனதுமனம், விவேகத்துடன்
பயிர்செய்யத்தக்க காடாகிய ஒரு தோட்
த்திற்குச்சமானமாகும். அதில் பிரயோ
னமுள்ள நல்ல வித்துகளை விதைக்காத
த்தில்பிரயோஜன மில்லாத புல் பூண்டு
ின் வித்துகள் ஏராளமாக விழுந்து பல
கள் என்கிற புல்பூண்டுகள் விளையும்.

ஆதலால் ஒருதோட்டக்காரன் தனது
த்திலுள்ள அசுத்தமான புல் பூண்டு
நீக்கித் தனக்குவேண்டும் நல்ல கனி
யும் காய்கறிகளையும் கொடுக்கத்தக்க
லமரங்களையும் நல்லசெடிகளையும் அதில்
த்து வளர்ப்பதுபோல மனிதன் தன்
லுள்ள குற்றநினைப்புகளும் பா
னைப்புகளும் அசுத்தமானநினைப்பு
கிய புல்பூண்டுகளை நீக்கி ஆரோக்
செல்வமும் வலிமையுமாகிய காய்
யும் இன்பமும் புகழும் முத்தியு
னிகளையும் கொடுக்கத்தக்க குற்ற
னைப்புகளும் பயனுள்ள நினைப்பு
த்தமான நினைப்புகளுமாகியசெடி
மரங்களையும் வைத்துவளர்த்துக்
வேண்டும். இப்படிச் செய்து வரு
மனிதன் தனது ஆன்மாவாகிய
த்தின் தலைவன் என்று விரை
ல்லது மெதுவிலோ நன்கு தெரி
வான்.

இதனை அன்புடன் கேட்டறி
உங்கள்மனதில் இதனை அகலா
க் காத்து மனதை சன்மார்க்க
ழுக்கமுமான ஒற்றுமை வழி
த்தி ஊக்கத்தோடு உழைத்து
க்கை முன்னேற்றத்திற்குக்
ருவீர்களென்று முற்றிலும்

ப்புரவு).

பொய்யாமனத் தினால் மாசற்ற
ன் அருள்—என்றும்.
ப்புரவு கண்ணோட்டம் வாய்மை
ந்திய தூண்—என்றும் [யோடு
நகை யீகைஇன் சொல்இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு—என்றும்.
தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு—என்றும்.

மேலோருரைத்தபடி மேற்கூறும் விஷயத்
தில் மனம்வைத்து உறுதிமனதோடு ஒத்
துழைத்து நடந்து நமது குலத்தினர் முன்
னேற்றத்திற்குவரும் உபாயமாகிய எதுக்
களைத் தேடிக்கொள்வோமாக.

தேவஸ்தான நிலைமைகள்.

சென்னையிலுள்ள நமது ஸ்ரீகாளிகாம்பா
ளென்னும் காமாக்ஷி அம்மன் தேவஸ்தா
னத்தின் நிலைமையை ஷை தேவஸ்தான
தர்ம பரிபாலன சபையார் தற்காலம் எப்
படி வைத்திருக்கிறார்களென்பதை எடுத்
துக் காட்டுவோமாக.

அநேககாலைக்குமுன்ஷை தேவஸ்தானத்
திற்கு நம்மவர்கள் கட்டடங்களை கட்டியும்
அநேக சொத்துக்களை வைத்தும் அக்கோ
விலுக்குவேண்டிய இந்தவாகனாதிகளையும்,
ஆபரணாதிகளையும், மற்றத் தட்டு முட்டு
பாத்திரவகை சாமான்களையும் செய்துவை
த்து ஒருவரை தர்மகர்த்தாவாகவும் நிய
மித்து வைத்திருந்தார்கள். அந்த ஓர் தர்ம
கர்த்தரே ஷை தேவஸ்தான பரிபாலனங்
களை சரிவரக் கவனித்து, உற்சவாதிகளை
யும் நிரம்ப கௌரவமாக மற்ற தேவஸ்தா
னங்களுக்கு சமமாகவும் மேன்மையாக
வும் நடத்திவந்தார்கள். சில நாளாக ஷை
தேவஸ்தானத்திற்கு தர்மபரிபாலன சபை
யென்று ஓர்சபை ஏற்படுத்தி அதற்கு
பிரசிடெண்டு ஒருவர், காரியதரிசிஒருவர்,
தர்மகர்த்தர் ஒருவர், கமிடி மெம்பர்கள்
25—பேர்கள் மெம்பர்கள் பலபேர்களைச்
சேர்த்து இங்கிலீஷ் சிஸ்டம்போல் நடக்க
வேண்டுமென்று தீர்மானித்து நடத்துகி
ன்றார்கள். ஆனால், அதுமுதல் இந்த தே
வஸ்தானக் காரியங்கள் சரிவர நடவாமல்
அடிக்கடி கோர்ட்டுக்குப்போக நேரிட்டு
தேவஸ்தான சொத்துக்களை வீண் செலவு
களில் செலவிடுகிறார்கள்.

அதற்குக் காரணம் நம்மவர்கள் ஒற்
றுமை குறைவும் சரியானபடி சபையை
நடத்தாத குறைவுமேயாகும். மற்ற தே
வஸ்தானங்களிலோ இவ்வித சபையும் பல
தர்மகர்த்தர்களும் இருக்கிறார்களே யன்றி
இல்லாமற் போகவில்லை. ஆனால் அவர்க
ளெல்லாம் கலந்து ஒரு மனதாக ஒத்து
உழைக்கிறார்கள். அதனால் அந்த தேவ
ஸ்தானங்களெல்லாம் வரவர மேன்மைக்கு
வருகின்றன. அதுபோல் நம்மவர்கள் அவ்
வித சபைகள் ஏற்படுத்திக் கொண்டதால்
கிடைத்தலாபம் என்ன என்ன வென்றால்
உற்சவாதிகளை சரிவர நடத்தாமலிருக்க
வும், கோயில் சொத்துக்களை போட்டி
போட்டுக்கொண்டு நாசம் செய்யவும், கோ
யில் வீடுகளை குட்டிச்சுவராக்கவும், கோ
யில் பணங்களை கோர்ட்டுக்கு செலவிட
வும் அனுகூலங்களாச்சுது. மற்றவர்களு
க்கு இவ்விதசபைகள் விர்த்திசெய்வதற்கு
அனுகூலமானால் இவர்களுக்கு நாசம்செய்
ய அனுகூலமாச்சுது. நான் இவ்விதம்
எழுதியதற்கு என்மீது கோபமிருக்கலாம்.
ஷை தேவஸ்தானத்திற்கு ஒரே தர்மகர்த்
தாக இருந்து வேலைபார்த்த பொழுது
ஏற்பட்ட சொத்துக்களைவிட இப்பொழுது
சபை ஏற்பட்டு எவ்வளவு விர்த்தியாச்சுது
எவ்வளவு கடன் ஏற்பட்டது என்பதை
கவனித்தால் என்மீது வருத்தம் தோன்
றாது. ஒரு தர்மகர்த்தா யிருந்தபோது
அவருடைய பொருப்பாகவே யிருந்தது.
அவர்களுடைய யிஷ்டப்படி விர்த்திசெய்
தார்கள். நம்மவர்களுக்கு சரியானபடி
சபையை நடத்தவும் ஒத்துழைக்கும் பொ
ருத்தம் கிடையாது. ஆனால், நாசம்செய்ய
மாத்திரம் ஒற்றுமையாகக் கலந்து பாடு
படும் பொருத்தமுண்டு. இதுவும் நமது
குலம் செய்த புண்ணியமே, நம்மால் ஒன்
றுமில்லை. இச்செயலுக்கு காரண மென்ன
வென்று யோசிக்குமிடத்து நம்மவர்களிட
த்திலுள்ள பொறுமையும் ஒற்றுமைக் கு
றைவுமேயாகும். மேலும், தேவஸ்தானத்
திற்கு உண்டி ஏற்பட்டு நடந்துகொண்
டிருந்தது. அவ்வேற்பாட்டினால் சம்பளக்
காரர்கள் செலவுகள்போக மாதம் ஒன்று
க்கு 20-ரூபாய் வசூலாய்க்கொண்டிருக்க
அதைச் சில நாளாக நிறுத்திவிட்டதினா
லேயே நம்மவர்களுடைய ஒழுங்கீனம்
நன்கு தெரிந்து கொள்ளக்கூடுமல்லவா ?
இதுவென்ன அக்கிரமச்செயல்! இப்படிச்
செய்வதற்கு சபைகளேன் ?, மீடிங்குக
ளேன் ? இவர்களுக்கு சபையை சரிவர
நடத்தத்தெரியாதிருக்க, நான் பெரியவன்
நான் பெரியவன் என்று ஒருவர்க்கொருவர்
போட்டி போட்டுக்கொண்டிருந்தால் பெ
துக்காரியங்களெல்லாம் எப்படி முடியும்
ஒவ்வொருவரும் பல்லக்கு ஏறவேண்
மென்றால் அதனைச் சுமப்பவர்கள் யாரெ
பதை எனிவர்கள் கவனிக்கப்படாது. இக்
குலம் செய்தபாபம் இவர்களைக் கவனிக்
விடவில்லைபோல் தோன்றுகின்றது. ம
றக்குலத்தவர்கள் எந்தச்சபையைச் சேர்
தாலும் சரிவர நடத்திவருவதையும் இ
குலத்தவர்கள் செய்துவருவதையும் அ
பவத்தில் பார்க்கலாம். நம்மவர்களுடை
ஊழல்களெல்லாம் உள்ளங்கை நெல்லி
கனிபோல் விளங்கிவிடுகிறது. இதைவி
என்ன வேண்டும். ஆகவே, நாமிங்கு இ
வளவுதூரம் இதைச் சொல்லவந்தெ
லாம் என்னவென்றால், இனியாகிலும் ஷை
சபையை ஒழுங்குபடச்செய்து ஒற்றுமை
யாக உழைக்கவேண்டுமென்பதே எமது
கொள்கை. அப்படி உழைக்க மனமில்லா
விட்டால் பழயபடி ஒருவர்மூலமாகவாவ
விட்டுவிட வேண்டும். இதுவுமில்லாம
அதுவுமில்லாமல் ஊழல் செய்வதால் என்
னபலன் உண்டாகப்போகிறது? உள்ளது
போய் திண்டாட்டப்படுவதுதான். சாதா
ரணமாகநம்மவர்கள் எந்தக்காரியத்திற்கு
போனாலும் இரண்டுகக்ஷிகள் ஏற்படுத்தி
கொள்ளுகிறார்கள். ஆனால், அப்படியிருக்
வேண்டியது அவசியந்தான். அப்படி
பட்டால்தான் அவைகளிலுள்ள குற்
குறை தெரியவருமென்றாலும், ஒ
யம் தீர்மானத்திற்குவந்தபோது எ
யோ அதில் இருகக்ஷிக்காரர்களும்
விடவேண்டியதல்லவோ பொருத்த

ம். அப்படியன்றி "நான் பிடித்த முயலுக்கு கொம்புண்டு" என்று ஒரேபிடிவாதங்கொண்டு பேசுவதில் என்னபலன்? சரியானகக்ஷி ஒன்றும் தவறானகக்ஷி ஒன்றும் கூடி உழைக்குமானால் எக்காரியமும் சரிவர நடவாதென்பது வெளிப்படை. அப்பொழுது புத்திசாலிகளுடைய கொள்கை எப்படி நிறைவேறும்? ஆனால், இப்படிப்பட்ட தூர் எண்ணத்தவர்கள் பொது நன்மைக்கு உழைக்க வந்தவர்களல்ல. அவரவர்களுடைய சாமர்த்தியத்தைக்காட்டவும் அவர்கள் பெயர் முன்னுக்கு வரவேண்டுமென்கிற எண்ணத்துடன் முன்வந்தவர்களென்றும் ஏற்படுகின்றது. இதனால் நம் ஜாதியாரின் ஒற்றுமைக்குறைவும், ஒழுங்கீனமும், வெளிப்படுகின்றது. இதுதான் ஒழுங்கீனமாகும். இதனால்தான் மற்ற ஜாதியார்கள் நம்மை மதிக்கிறதுமில்லை. நம் ஜாதிக்கும் குறைவு ஏற்படுகிறதென்பதை அவசியம் கவனிக்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

***

மதுமாமிச விலக்கு.

அலைகடற் புடைசூழ்ந்த இந்நிலவுலகின்கண் பெறுதற்கரியமானிடப்பிறவி பெற்ற மாந்தர்யாவரும் சுகத்தையே விரும்பும் இயற்கைக் குணமுடையவர்கள். அச்சுகம் தேகசுகமே யன்றி மனோசுகமன்று. இச்சுகத்தோடு ஆடம்பரத்தையும் விரும்புகின்றார்கள். அவ்விருப்பத்தை நிறைவேற்ற தைரியம் வேண்டுமெனக்கருதி, மதுபானத்தைக் கையாடுகின்றார்கள். சிலர் தேக ஆரோக்கியத்திற்கு பிராந்தி,சாராயம் முதலானது இன்றியமையாததெனக்கருதி அவைகளைத்தாம்தினமுட்கொள்ளும் உணவினி லொன்றாய்க்கருதி உட்கொள்கின்றனர். அவ்விதமுட்கொள்வதால் தேக ஆரோக்கியத்தை முழுதும் தியாகங்கொடுத்து விடவேண்டியதாயிருக்கிறது. உடலுருமாறிவிடுகிறது. நரம்பு நாசமாகி விடுகிறது. பைத்திய முண்டானவன் போற் பிதற்றச் செய்கிறது வதனத்தின் வனப்பு வாடிவிடுகின்றது. பெண்டு பிள்ளைகள் சோற்றிற்கு ஏங்கித்திரிய யேதுவாகின்றது. சண்டை சச்சரவுகளுக்குக் காரணமா யிருக்கிறது. பிறர் அவமதிப்பிற்கு ஆளாக்குகின்றது. களிமகனொருவன் கள்ளுண்டதால் கண்டோர் நகைக்க ஊரெங்குந்திரிந்து உடைசோர்ந்து உன்மத்தன்போலாகி உழன்று படுக்கப்பாயுமற்று, தனனிருப்பிடஞ்செல்ல சக்தியற்றுப் புறத்திண்ணைகளிலும், பாழிடங்களிலும் பிணம்போற் கிடந்ததைப்பார்த்தோர் பரிகசித்ததைக்கண்டும் கேட்டுமிருக்கின்றோமல்லவா. இத்துர்ப்பழக்கம் நம்மினத்தாரிடம் சிலவிடங்களிற் காண்பதுகஷ்டமில்லை. இக்குடியே குடித்தன் சீர்கேட்டிற்குங் குல ஹீனத்திற்கும் காரணமா யிருக்கிறது. சில கட்குடியர்கள் "குடியாதவ வீடுவிடியாது" என்று கூறிகுடியாத த கூட்டாளிகளையும் குடிக்கச்செய்கிறார்க அதன் கருத்து குடிக்கவேண்டு மன்றல பின்னெவ்வாறெனில், "குடி ஆதவன் வி விடியாது" (ஆதவன், சூரியன்) சூரிய தித்தால் இவ்வுலகமுழுவதிலுமுள்ள ஒ வொருவரும் அதன் பிரகாசத்தைப் பெ று, அவரவர்கள் வேலைகளைச் சந்தோ மாகவும் சுறுசுறுப்பாகவுஞ்செய்து தங்க வாழ்நாளைக் கழிக்கின்றார்கள். ஆனா குடிக்கிறவர்கள் அச்சூரியனுடைய பிரக சத்தைப்பெற்றும் அவர்கள் சோம்பலாய் தூங்குவதால் இருள் நிறைந்த இடத்தை ஒருவரும் விரும்பாததுபோல், நற்கருமங் கள் அவர்களையடையாது என்பதே. மது பானஞ் செய்யக்கூடாதென்று அறிவிற் சிறந்த பெரியோர்கள் Temperance Association முதலானவைகளை யேற்படுத்தி யிருக்கிறார்கள். அதிற்சேர்ந்தவர்களுக்கு "Good Templers" என்ற பெயரையடைகிறார்கள். சில கட்குடியர்களை ஏன், கள், பிராந்திமுதலிய லாகிரிவஸ்துக்களை யுபயோகிக்கிறீர்கள்" என்று ந கேட்கும்பொழுது தாங்கள் தேக அ

க்கியமாயிருந்ததாகவும் அதனால் அநேக வைத்தியர்கள் பிராந்தியை யுபயோகித்தால் சுகத்தை யடையலாமென்று சொல்லியிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள் அநேகபெண்களுக்குப் பிரசவ காலங்களில் பிராந்தியைக் கொடுக்கிறார்கள். மேல் நாட்டிலுள்ள அநேகவைத்தியர்கள் பிராந்தியில் (Alcohal) ஆல்கோஹால்சேர்ந்திருக்கிறதென்றும், பிராந்தியையுபயோகிக்கிற ஆஸ்பத்திரிகளில் சுகத்தையடைகிறவர்கள் கொஞ்சமென்றும் அதையுபயோகிக்காத ஆஸ்பத்திரிகளில் சுகத்தையடைகிறவர்கள் அதிகமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். முன்காலத்தில் தங்கள் தைரியத்தினால் அநேகர் கீர்த்தியை யடைந்தது மதுபானஞ்செய்து அதன்மூலமாக அடைந்ததையன்று. கட்குடியால் புகழ்ச்சிக்குப்பதிலாக இகழ்ச்சி யடைவது உண்மை யெனக் கண்ட பெரியோர்கள் புகழ்ச்சியையே பெறவிருப்பமுள்ளவர்களாதலால் மதுவை நீக்கிமாட்சிமையை யடைவார்களாகவும். மதுபானத்தின் முடிவு மாமிசத்தை யுண்ணத் தூண்டுகின்றது. அதையும் நீக்கவேண்டும். ஏனெனில்:—

நம்மிலும் உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாரிடத்தே ஜலபானம் பண்ணினும், அவருந்தாழ்ந்தஜாதியாரென்று அவர் வீட்டிலே ஜலபானமும் பண்ணாத மனிதர்கள் புலையர்களுடைய மலத்தையும் புசிக்கின்ற பன்றி, கோழிமுதலியவைகளைப் புசிக்கின்றார்களே! அவர்கள் அப்புலையரினும் தாழ்ந்தபுலையர்களாவார்களேயன்றி உயர்ந்த ஜாதியாராகார்கள். அன்னம், பானீயம் முதலியவைகளிலே மயிர், ஈ, எறும்புமுதலியவைகளி லொன்று விருந்திருக்கக்கண்டாலும் மிகஅருவருத்துஉண்டசோற்றையும் கக்கும் மாந்தர்கள் மற்ற மாமிசங்களைப் புசிக்கின்றார்களே! ஊறுகாய்முதலியவைகளிலே ஒரு புழுவைக்கண்டால் அருவருக்துச் சரீரங்குலைந்து அவைகளையெடுத்தெறிந்துவிடும் மாந்தர்கள்புழுத்தமாமிசங் கு ...ப்பிப்புசிக்கின்றார்களே! அண்டைவீட்டிற் பிணங்கிடந்தாலும் போஜனஞ் செய்தற்கு மனம்பொருந்தாத மனிதர்கள் மிருகம், பக்ஷி முதலியவைகளுடைய பிணத்தைக் கலத்திலே படைத்துக் கொண்டு புசிக்கிறார்களே!

(தொடரும்)

துண்ணூர். T. தங்கவேலாச்சாரி.

***

கல்வியே இகபரசுக ஆதாரம்.

கல்வியறிவு மிக்கசனவான்களே அன்பார்ந்த சகோதரர்களே!—

1. இந்நிர்ணயஞ் செய்யொண்ணாப் பூமண்டலம் யாவும் கல்வி மயத்தின் குன்றாச் சக்தியின் மூலமாகத்தானே நடைபெற்று வருகிறதென்பது கற்றறிந்தபுத்திமான்களுக்குத் தெரிந்த விஷயமாகும். (எவ்வளவு ஊக்கமோ அவ்வளவு ஆக்கம்) என்றபடி எவ்வளவு கற்கிறோமோ அவ்வளவுஅறிவு பெருக்கமுண்டாகும். இப்பாதகண்டமாகிய இந்தியாவின்கண் கல்வி, அறிவு, கேள்வி, ஒழுக்கம், வித்துவம் இவைகளில் மிக்கச்சிறந்தஔவையார், திருவள்ளுவர், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் மற்றுமுள்ள மகாவித்துவான்கள் யாவரும் தம் விடாமுயற்சியுடன் கற்றகல்வி நுட்பத்தாலேயே அச்சமயம் அரசுபுரிந்துவந்த மாமன்னர்களை வணங்கச்செய்து தேவர்களைப் போல்பூஜிக்கப்பெற்றுக் கல்வியின் திறமையால் அநேக அற்புதங்களைச்செய்துகாட்டி சிறப்புற்றுக் கீர்த்தியோங்கிப் புகழப்பட்டு வந்தார்களென்பது நன்கு தெரிந்த விஷயமாகும். இம்மதியூக வித்துவான்கள் அச்சமயத்துள்ள மன்னர்களுக்கு மந்திரியினும் மிக்க தந்திரசாலிகளாய் அறிவுபுகட்டி உதவிபுரிந்தும் வந்திருக்கிறார்கள்.

2. அக்காலத்திலுள்ள இராஜ சபைகளில் கல்விமான்களே மிக்க புகண்ணிய முடையவர்களாய்த் தடாகத்தையலங்கரிக்கச் செய்யும் தாமரை மலரைப்போலவும்,

வதனத்தை யலங்கரிக்கும் இனியவர்ணத் திலகத்தைப் போலவும், நாட்டை யலங்கரிக்கும் புண்ணியநதி ஆலயங்களைப் போலவும், அலங்கரித்துப் பிரகாசித்து வந்திருக்கிறார்கள். தற்காலத்து மன்னர் சபைகளிலும் கல்வியறிவிற் றேர்ந்த வித்துவான்களே அமைச்சர்களாகவும் இராஜகாரியங்களைத் தளராது நடத்துந் திறமை யுடையவர்களா யிருந்துவருகிறார்கள். சன்மார்க்கத்தை நெறிதவறாது நடத்தவும், மனோலயசக்தியை யடையவும், திரிகாலவர்த்தமானங்களை யறிந்து முன்னதாகத்தெரிவிக்கவும், சிருஷ்டித்தொழில்களைக் கற்கவும், அதனுட்பங்களையறியவும், தெரிசிக் கொண்ணா மூலசக்தியைத் தெரிசிக்கவும், தத்துவங்களையும் தன்னையும் இன்னான் என அறியவும், சகலத்தையும் நிர்வகித்து ஆட்கொள்ளவும், ஆயுளைப்பெருக்கி கற்பகாலமாய்ச் செய்து கொள்ளவும், கல்வியே மூலஆதாரமாகும்.

3. கல்வியைக் களங்கமறக் கற்றால் பளிங்குபோல் பிரகாசியாநின்ற முதல்வன் அவரகத்தில் அன்போடுகுடிபுகுந்து சர்வமும் அவரே பிரகாசிப்பார். கல்வியைக்குன்றா ஊக்கத்துடன் (இளமையிற்கல்) என்ற வாக்கியத்தை சிரமேற் பூண்டவராய்ப் பயின்ற மாவல்லமை வித்துவ கல்விக்களஞ்சியமாகிய அருட்கவிகம்பர் பெருமானின் அன்பார்ந்த புதல்வரின் கல்விஊக்கத்தைச் சிலவரிகளில் சுருக்கித் தெரிவிப்பாம்.

4. கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பருக்கு ஓர் செல்வப்புதல்வரிருந்தார். அவருடைய பெயர் அம்பிகாபதி யெனப்படுவர். இவர் இளமையிலேயே கல்விகற்பதில் மிக்க ஊக்கமுடையவராகித் தனக்கு 12-வது வயது முடியுமுன்னரே கல்வியில் மிக்கதேர்ந்த மாவித்துவான்களின் அறிவிலும், கவி புனைவதிலும் அதிநுட்ப சாதுரியமுடையவராகி கம்பரின் குமாரனோ அல்லது குமாரனோவென அவ்வளவு கல்வித் திறமை பூண்டவராக வித்துவான்களும் அரசர்களும் மெச்சப் பிரகாசித்து வந்தார். தம் தந்தையாகிய கம்பரே புத்திரனுடைய கல்விச்சாமர்த்தியத்தை வியந்து அம்பிகாபதியின் முழுச்சிந்தையும் கல்வியினிடத்தே ஒப்புவிக்கப்பட்டு அதிலேயே நாட்டமாயிருப்பதாக அறிந்து அதைப்பரிக்ஷிக்கும் பொருட்டாக ஓர் நாள் தன் மனைவியினிடத்தில் அம்பிகாபதிக்குப் போஜனம் படைக்கும்போது பசுவின் நெய் இடுவதற்கு பதிலாக வேப்பெண்ணெய் விடும்படி சொன்னார். இதைச்செவியுற்று யாதொரு விகல்பமுங் கொள்ளாதவளாய் புருடனின் வார்த்தையைச் சிரமேற் புனைந்த அவ்வம்மை மனத்தினிடத்தே நினைந்ததாவது, கற்றறிந்த நம் கணவர்யாதோ ஓர் காரணம் குறித்தே இதை நம்மிடத்தில் தெரிவித்திருக்கவேண்டும். அவர் கற்றவர். அறியாது ஒன்றும் செய்யார் என்று தன்னைத்தானே திடஞ்செய்து கொண்டு, மாரனும் நாணும் இனியவசீகர வதன அங்கத்தையுடைய தன் புதல்வன் அம்பிகாபதிக்கு அன்னம் படைக்கும்போது கம்பரின் உத்திரவின்படியே பசுவின் நெய்யிடுவதற்குப் பதிலாக வேப்பெண்ணெயைப் படைத்தாள். புதல்வன் புதுமையின்றி அன்ன மருந்தியதைத் தன்கணவர் கம்பரிடத்தில் தெரிவித்தாள். இதை யறிந்து கம்பர் அம்பிகாபதியை அழைத்து இன்று அன்னமுண்டதில் ஏதேனும் விசேஷமுண்டாவென வினவினார். அதற்கு அம்பிகாபதி பிதா! யாதொரு விசேடமுமில்லையென்று மறுமொழி பகர்ந்தார்.

5. இதுகண்ட கம்பர், ஒரு கருமத்திலேயே கண்ணாயிருப்பவர் வேறெதையுங் கவனியாரென்பது தெளிவாய்ப் புலப்படுகிறது. இதையறிந்தன்றோ.

மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

எனப் பெரியோர்கள் கூறியிருக்கிறார்கள். இத்தன்மைபொத்த கல்வி [illegible]

தான் கல்வியின் சிறப்பு விளங்கும். அம்பிகாபதியைப் பரிக்ஷித்த இன்னும் சிலகதைகளும் கூறுவார்கள். ஆகையால் கல்வியைக் கைசோரவிடாது, கற்ற மகான்களின் திறமை அவர்களினுடைய காயம் அழிந்தும் அன்னவர்களினுடைய உலக உபகாரமான அமுதாச அருமை வாக்கியங்களால் அவர்களின் உடலழியாது சிரஞ்சீவிகளாயிருப்பதுபோல பயனுடையதாய் இருந்து வருகிறது.

6. கல்விகற்றவர்க்கு எந்நாடும் தன்னாடாகும். கல்விப் பலங்கொண்ட ஒருவன் முன் சதுரங்கசேனையுடனிற்கும் மாவீர மன்னனின் பலம் அற்ப துரும்பை யொக்கும். சதுரங்க சேனையையுடைய ஓர் மன்னனின் படையை அதற்குத் தக்க பலமுடைய படையைக்கொண்டு அநேகநாள் யுத்தஞ்செய்து வெற்றிகொள்வதை கம்பரையொத்த கல்விமான் ஓர் இமைப்போதில் யாதொரு யுத்ததளவாடசேனைகளின்றி தன்னாவின் ஓர்சொல்லால் யாவரையும் பின்வாங்கச்செய்து வெற்றிகொள்ளலாம். கல்வியின் புகழையும் மேன்மையையும் எடுத்துரைத்தலரிது. கற்றோரைப் பகைத்தல் நெருப்பினுங்கொடிது.

7. விஸ்வகுலச்செல்வர்களே! (முபற்சியுடையார் இகழ்ச்சியடையார்) கல்வியின் பெருமையை யறிந்து கற்று நம்முன்னோர்கள் அடைந்திருக்கும் திறமையையும் அன்னவர்களால் நிர்மாணஞ்செய்துள்ள சிற்ப சாஸ்திர ஆலய கோபுர அரண்மனை கடாசங்களின் அபூர்வ தொழில்வல்லமையைப் புகழாதார் யாவர்? ஒருவருமிலர். தற்போது அவ்வற்புதத் தொழில்களைக் கைக்கொள்ளத்தடைப்பட்டிருப்பது கல்வியின்மையின் பெருங்குறையன்றோ காரணம். கல்விபயின்றும் ஊக்கமின்றி யிருப்பதன்றோ பெருங்குறை. கல்வியின்றி எவ்விதம் விஷயங்களின் நுட்பமும் தொழில்களின் சூக்ஷமமும் விளங்கும். ஊக்கமின்றி எவ்விதம் விர்த்திசெய்வது. குலாபிவிர்த்திக்கு கல்வியும் ஊக்கமுமே முக்கியமாகும். கல்வியே நடையுடைபாவனை பரிசுத்த பழக்க நாகரீகங்களைப் போதிக்கும் சற்குரு. கல்வியே இகத்திற்கும் பரத்திற்கும் முதற்குரு. குலாபிவிர்த்திக்கு மூலகுரு கல்வியே யாகும். ஆகையால் புத்திநுட்பமுடைய சகோதரர்களே! கல்வியென்னும் சுவர்ன வணியின்பேரில் விடாமுயற்சி ஊக்கம் என்னும் ஆபரணத்தை யணிந்து குலாபிவிர்த்தி யெனும் உயர்குலஉன்னத சிகரத்தை யடையவேண்டும்.

8. கல்வி பயின்றாலும் மற்றஏனையவிஷயங்களில் முயன்றாலும் நற்சிந்தனையுடனும்; வெற்றிகொள்வோம். பூர்த்திசெய்வோம் என்ற பூரணநம்பிக்கை வேண்டும், நல்ல ஞானத்தோடு உழைத்தல்வேண்டும், ஞானமின்றி எத்தொழிலைக் கைப்பற்றினும் பயன்படாது. நம் பற்றுமுற்றிலும் கல்வி கற்பதிலேயே வைத்தல்வேண்டும். நம் சிந்தனை முழுவதும் நம் குலப்பாலியர்களைக் கல்விகற்க அனுப்புவதிலேயே செலுத்தல் வேண்டும். நம் அறிவை நல்ல சாஸ்த்திர ஆராச்சி செய்வதிலேயே புகுத்தல்வேண்டும். வீண்போது போக்கல், துர்க்கிருத்தியங்கள் விரும்பா நடவடிக்கைகள் இவைகளைநீக்கி பக்தியோடு பெரியோரையும், கல்விமான்களையும் பணிந்து தொண்டுபூண்டு அன்னவர் வழிகளில் நடந்து சன்மார்க்க நெறியைக்கைக்கொண்டு யாவரும் அன்போடு பூஜிக்கும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். "வருந்தினால் வாராததொன்றில்லை" எதைக்கொள்ளவேண்டுமென்றாலும் அதை அன்பினாலேயே கொள்ளவேண்டும். "ஆசையின்றி ஞானம் வருமோ" ஞானத்தையும் அன்பினாலேயே கொள்ள வேண்டும். எப்பொருளையும் விரும்பித்தான் சித்தியடைய வேண்டும். கல்வியில் மனம்வைத்துக் கல்வியின் செயலை யறிந்து உங்களுடைய பாலியர்களை யாவரையும் பாடசாலைக்கு அனுப்பி அறிவுடையவர்களா யிருக்கவும் உன்னதநிலைமையை யடையவும் அந்த பராபரவஸ்துவான சிவஜோதிப்பொருளை அன்போடு

பணிந்து பிரார்த்தனை செய்வீர்களென்று நன்றியறிதலுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஞானம்பிகைபாலன்,
K. A. சபாபதி,
R. F. Street, Dindigal.

***

இந்திய கைத்தொழிலின் பெருமையும் அதன் அவசியமும்.

நமது விஸ்வகர்மாக்களுடைய ஐந்துவித கைத்தொழில்களெல்லாம் தற்காலம் எந்நிலைமையி லிருக்கிறதென்றால், நம்வீட்டு கிணறுகளையெல்லாம் குழாய்ஜலத்தைநம்பி தூர்த்துவிட்டதைப் போலும்; மின்சார விளக்குகளை நம்பி வீட்டு விளக்குகளை எடுத்துவிட்டதுபோலவாயிற்று.

மேற்சொல்லியவைகளால், என்னநஷ்டமென்றால், குழாய்ஜலம் இரண்டுநாள் நின்றுவிட்டால், நம்வீட்டு பெண்பிள்ளைகள் வீடுவீடாக குடம், தவலைகளை எடுத்துக்கொண்டு கிணறு இருக்கும் இடந்தேடி அலைவதைப் பார்க்கிறோம். தீபம் நின்றுவிட்டாலோ, நமது பழயதீபங்கள் எந்த இடத்திலிருக்கிறதென்றுதேட புறப்படுகிறதுபோல, நம் பூர்வ கைத்தொழில்களெல்லாம்அன்னியநாட்டு நாகரீகமினுக்குள்ள விலை சாசமான சாமான்களை நம்பி, சிறப்புவாய்ந்த சாசுவதசிற்பத்தொழில்களை கைசோரவிட நேர்ந்தது. இந்த மஹாயுத்தத்தின் பலவித கஷ்டங்களினால், வழக்கமாய் இந்தியாவுக்கு வந்து குவிந்துகொண்டிருந்த அன்னியதேச சாமான்கள் சரிவரவாமல் நமக்குஅதிககஷ்டம் நேரிட்டது யாவரும் அறிந்த உண்மை. இந்த சங்கடத்தை ஒருவாறு நீக்கவே இப்போது நமது காருண்ய கெவர்மெண்டாரும் பழயபடி இந்திய சிற்பதொழில்களைத் தலையெடுக்கும்படிவேண்டிய பிரயத்தனங்கள் செய்ய அநேகவித ஆலோசனைகள்செய்து வருகிறார்கள்.

இந்தசமயம் திடீரெனக்கைவிட்டபழய தொழில்களைசெய்ய திடமின்றிபின்வாங்குகிறார்களே யன்றி, முன்வருபவர் சிலரே யாவர். இதன்காரணம் கஷ்டமில்லாமல் சுகத்தை அநுபவித்துவிட்டு, மறுபடியும் கஷ்டத்தை அநுபவிப்பதென்றால் மனம் எவ்விதம் கொள்ளும்? இத்தொழில்களை கைசோரவிட்டதற்கு முதற்காரணம்நமது அசட்டையும் ஊக்கக்குறையுமே யாகும். இரண்டாவது நம்தொழில்களை ஆதரிப்பவர்களில்லாமையேயாம். இப்போது தோன்றிய ஊக்கம் அப்போதே உண்டாயிருக்குமானால், இந்த கேவலநிலைமையில், நம்தொழில் பிரகாசமின்றி இராது. ஆகையால், கூடியவரையில் நம் இந்திய சிற்பதொழில்கள் முன்னுக்குவர ஆலோசனை என்னவென்றால், பொருள் தரக்கூடியவர்கள்முன்வரவேண்டும். முற்காலத்திலிருந்த பொருளாளிகள் பின்வாங்காமல் பொருள்கொடுத்து உதவிசெய்தால் எப்பேர்ப்பட்ட தொழில்களையும் விஸ்வகர்மாக்கள் செய்து முடித்து வந்தார்களேயொழிய எதையும் செய்யமுடியாமல் பின் வாங்கினவர்களில்லை. இதற்குத் திருஷ்டாந்திரம் அநேக கோட்டைகொத்தளம் மாடமாளிகை தேவஸ்தானமுதலிய பல கட்டடங்களும், பல ஆயுதங்களும்செய்து முடித்துவந்தார்களென்பது நிதரிசனமாகஇருக்கிறது. தற்போதும் வடஇந்தியாவில் செய்தும் வருவதைகாணலாம். அக்காலத்தில் இவ்விந்தியா யாதொரு குறைவுமின்றி க்ஷேமத்திலிருந்தது. இந்திய சிற்பத்தைக் கைவிட்டதால் இவ்விந்தியாவுக்கே அநேக பஞ்சம் ஏற்படலாயிற்று.

கைத்தொழிலென்றால் சிற்பத்தில் சொல்லிய ஐந்து தொழிலில் ஒன்றாகிய இரும்புவேலைமாத்திரம் இவ்விந்தியாவில் சரிவர செய்துவந்தால் போதுமல்லவா. அதாவது, ஊசி முதல் பெரிய இஞ்சின்வரையிலுள்ள பல தொழில்களையும் இவ்விந்தியாவில் செய்யும்படி நமது காருண்ய கெவர்மெண்டார் அவர்கள் துணைபுரிந்து சகா

யம் செய்தால் இந்தியாவின் தொழில் பஞ்சம் நீங்கி க்ஷேமமடைந்துவிடு மென்பது எமது கருத்து. இதைப்போலவேதான் மற்ற நான்கு தொழில்களும்கூட. இதற்கு உதாரணமாக ஸர். டாடா அவர்களால் பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இரும்பு, எஃகு உற்பத்திசாலையே போதியது. இதுவிஷயத்தை நமது பாரத மண்டல கைத்தொழில் மஹாசபையின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ப—ர்.

***

மைசூரும் கைத்தொழில் முயற்சியும்.

ஐரோப்பிய யுத்தத்தால் ஆஸ்டிரியா, ஜெர்மனி, பெல்ஜியம் முதலிய நாடுகளிலிருந்து சரக்குகள்இந்தியாவுக்குவரத் தடைப்படுவதால் உண்டாகும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் வியாபாரக் குறைவையும் சரக்கு விலை ஏற்றத்தையும் நன்குணர்ந்து பலவிதமான கைத்தொழில்களை மைசூர் ராஜ்யத்தில் நிலைநிறுத்துவதற்காக அந்த அரசாங்கத்தார் பொருட்செலவை மதியாமல் ஏழெட்டுப்பேரை ஜப்பானுக்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வித்தியார்த்திகள் உத்தியோகஸ்தர்கள் போலும். வியாபாரம் கைத்தொழில் விஷயங்களைக் கற்பதற்காக நாளது மீ 20உ மைசூரைவிட்டுப் புறப்பட்டு ஜப்பான் சென்று 6-மீ அங்கே வாசஞ்செய்து தொழில்முறையைத் தெரிந்து திரும்புவார்கள் போலும். இதிலும் நாட்டுக்குநிரந்தரமான நன்மை செய்யும்படியானது வேறில்லை. கைத்தொழில் கற்பதற்கு ஏற்ற தேசம் ஜப்பான், இந்தியாவிற்கு அருகிலும் உள்ளது. இவர்கள் திரும்பிவந்து பல்வகையான கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு இடமாகும்.

தொழில்களை விர்த்திசெய்வதற்குக் கவர்ன்மெண்டார் முன்வந்தாலன்றி ஒரு கைத்தொழிலும் முன்னுக்கு வராது. காரணம் யாதெனில்:—இத்தேசவாசிகள் பெரும்பாலோர் கிருஷித்தொழில் புரிபவர். இந்நாட்டார் செய்துவந்த கைத்தொழில்கள் பெரும்பாலும் க்ஷீணகதி அடைந்துவிட்டன. பொருளீட்ட வேண்டும் எனும் அவா பலருக்கு இருப்பினும் கைத்தொழில் வியாபார வகைகளில் ஒற்றுமை யில்லாததால் தொட்டகாரியம் துலங்காமல் போகிறது. கவர்ன்மெண்டு ஆதரவும் மேல்விசாரணையு மிருக்குமானால் கைத்தொழில்கள் சீர்கெடாமல் செழிப்பாக ஆகும். ஜப்பானுக்கு அனுப்பப்பட்டவர்கள் எண்மர் ஆவர். எல்லோரும் இந்தியர்கள். பாடசாலை மாணவர்களை அனுப்பாமல் வயது தேர்ந்தவர்களை அனுப்புவதால் அவர்கள் செய்யும் காரியமனைத்தும் வ[illegible]சையா யிருக்கும். மைசூர் சமஸ்தானத்தார் இவ்விஷயத்தில் முன்வந்ததைக் கேட்டுக் களிப்படைகிறோம். கைத்தொழி[illegible]ரக்குகள் பல மைசூர் ராஜ்யத்திலகிடைப்பதால் விலை நயமா யிருப்பதோடு இந்தியர்களுக்குத் தக்கவாறு சரக்குகளும்தயாரிக்கப்பெறும். நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை என்பர் நல்லோர். வித்தியார்த்திகள் ஊக்கத்தோடு கற்றுத்தெளிவாராக. தேகசுகம் கெடாமல் நாட்டுக்கு நன்மைபுரியத் தகுந்தவர்களாய் அவர்கள் திரும்பிவருவார்களாக.

***

கைத்தொழிலோ கைத்தொழில்.

இவ்வூர் குண்டிகாய்ந்த கோவணாண்கள் பிழைக்கும்வழிகைத்தொழிலென்ப[து] கைகண்ட விஷயம். உத்தியோகம் புருலட்சணம் என்பதும் இதுவேயாகும். கைத்தொழில்களை விருத்திசெய்ய ஒரு கமிஷன் ஏற்பட்டிருப்பதும் தெரியுமே; அந்த கமிஷனை பிரசிடெண்டு ஸர். தாமஸ் ஹாலண்ட்டு சென்னைக்கு இப்போது

வந்திருக்கிறார். இவ்வூரில் சில கைத்தொழிற்சாலைகளைப் போய் பார்த்தார். சீக்கிரத்தில் நெல்லிக்குப்பம், மைசூர் முதலிய இடங்களுக்கும் இவ்விஷயமாய்ப்போகிறார். இதுவரையில் அவர் சென்னை தென் இந்தியா வியாபாரச் சங்கத்தாரைக் கண்டு பேசியதில் இவ்வூராண்டிகளுக் கனுகூலமாய் சில அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார் இனி லச்சி இவர்கள்மேல் , கானைப்போடுவாளோ, நல்லகாலம் பிறக்குமோ என்று சந்தோஷிக்கவும் இடமுண்டாகிறது. இவ்வூர் கைத்தொழிலாளர்கள் வெகு யுக்திசாலிகள், கண்கண்டது கைசெய்யும் என்று எதையும் செய்யவல்லவர்கள்; இவ்விடத்திய இயற்கைப் பொருள்களுக்கும் குறைவில்லை; கடுகு சிறுத்தாலும் காரம் போகவில்லை யென்பதுபோல் மூலதனத்துக்கும் கஷ்டமிராது, ஆனால் அது இப்போது மூலையில் முடங்கியிருப்பதைத் தைரியஞ்சொல்லி இலாபத்தைக் காட்டி வெளிக்குக் கொண்டுவருபவர் தான் இல்லை. கைத்தொழிற் படிப்பையும் அதிகமாய் சொல்லிவைத்து எந்திரங்களை அதிகமாய் உபயோகிக்கவும் அனுகூலங்களை யுண்டுபண்ணிவைக்கவேண்டும். உள்ளூர் சாமான்கள் வெளியூர்களுக்குப்போய் லாபகரமாய் விற்கப்படவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று அவர் சொன்னதெல்லாம் வெகு திருப்தியாகும். எடுத்த எடுப்பிலேயே இவ்வளவு நல்லெண்ணத்துடன் இவர் ஆரம்பித்தது ஆண்டிகள் அதிர்ஷ்டமே. இந்த கமிஷன் விசாரணையில் இந்த எண்ணங்களை பலப்பட்டு ஆண்டிகள் செய்யும் சாமான்கள் அன்னிய தேசத்தவர்களின் போட்டா போட்டியால் அடிபட்டுப் போகாமல் தகுந்த சாப்புவரிகளும் போட ஏற்பாடாய் விட்டால் கமிஷனைக் கையெடுத்துக் கும்பிட்டு கண்ணீரொத்திக்கொண்டு மனோங்கும் வாழ்த்தி டேர கொட்டுவார்கள். ஆண்டியும் அப்போது பல்லாண்டு பாடுவான்.

-*-

நெருப்புக்குச்சி.

நெருப்புக்குச்சி செய்யும் விஷயத்தைப் பற்றியும் அதற்குத் தகுந்த மரத்தைத் தேடுவதைப் பற்றியும் பின்னர் கவனிக்கப்பட்டது. உலகத்தில் ஒவ்வொரு நிமிஷத்திலும், 3,000,000 நெருப்புக்குச்சிகளைக் கிழித்து உபயோகப் படுத்துகிறார்களாம். இந்தியாவில் வருஷா வருஷம் 16,000,000 நெருப்புப்பெட்டிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதில் இந்தியாவில் 1,000,000 நெருப்புப் பெட்டிகள் செய்யப்படுகின்றன. இவ்விதமாய்க் கணக்கெடுக்கும்பொழுது நாள் 1-க்கு 700குரோஸ் நெருப்புப்பெட்டிகளைச் செய்யக் கூடிய 70 நெருப்புக் குச்சித் தொழிற்சாலைகளை இந்தியாவில் ஏற்படுத்துவதற்குஇடமிருக்கிறது. நெருப்புக்குச்சிகளுக்கு உபயோகப்படுத்தக்கூடிய 8-வகைமரங்கள் மேற்குத் தொடர் மலைச்சாரங்களில்கிடைக்கின்றன. தேயிலைப் பெட்டிகள் செய்வதற்கும், சிகரெட்டுப் பெட்டிகள் செய்வதற்கும், மற்றும் பாக்செய்யும் பெட்டிகள் செய்வதற்கும் வேண்டிய மிருதுவான மரங்கள் இப்பாகங்களில் வேண்டியவரையில் இருக்கின்றனவாம். காகிதப் பென்சில்களுக்கு வேண்டிய மரங்களும் இங்கு இருக்கின்றனவாம். மேலும் இக்காடுகளில், காகிதத்திற்கு வேண்டிய கூழ் செய்வதற்கான மரங்களும், மூங்கில்களும் கிடைக்கின்றன. இனி வேண்டுவது ஒற்றுமையே. இது கிடைத்துவிட்டால் எல்லாம்கிடைக்கும்.

சோப்.

சோப்செய்யும் விஷயத்தைக் கவனித்தபோது பருத்திஎண்ணெய், மீன்எண்ணெய் கொழுப்பு,ரோசின்முதலியவற்றிலிருந்து இதைச்செய்யலாம் என்று வெளியிடப்பட்டது. கொழுப்பு,பருத்திஎண்ணெய் மற்றுமுள்ள எண்ணெய்கள் இந்தியாவில் அதிகமாய்க்கிடைக்கின்றன. இவ்வெண்ணெய்களைத்தான் ஜெர்மெனியர்களும், ஆங்கிலேயர்களும் மற்றுமுள்ளோர்களும் வாங்கிக் கொண்டுபோய் நமக்குசோப்பாகச்செய்து

அனுப்புகிறார்கள். இவ்வாறு செய்வதில் எவ்வளவு வண்டி சத்தம், கப்பல் கழிவு, முதலியன செலவாகிறதென்பதைக் கவனித்துப்பாருங்கள்! ஜப்பானுக்கு எண்ணெய் விதை முதலானது கிடையாது. கொழுப்பு எடுக்க ஆடுமாடுகள் கிடையாது. தங்களுக்கு வேண்டிய சோப்பைச் செய்துகொள்ளக் கூடப் போதுமான தளவாடங்கள் கிடையாது. இப்படியிருக்க அது இந்தியாவிற்கு சோப்புசெய்து அனுப்புகிறது என்றால் நமது மந்தகுணத்தைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை; வீண் ஆடம்பரத்தில் நம்மவர்கள்செலவுசெய்யும்பொருள்களில்ஒரு சிறிது நல்வழிகளில் பிரயோஜனப்படுத்தினால் அதிக பயனைக் கொடுக்குமே இச்சண்டைக் காலத்தில் அலாவர்கள் தங்கள் தங்கள் சௌகரியத்தைத் தேடிக்கொண்டும், எறியும் வீட்டில் பிடுங்கியது லாபம் என்று எண்ணிக்கொண்டும் அமெரிக்கா ஜப்பான் முதலிய நாடுகள் தொழிலை விருத்தி செய்துகொண்டிருக்கையில், நாம் செயலற்று, முன்னாளில் அது செய்தோம் இது செய்தோம் என்று பேசிக்கொண்டிருப்பது பரிதபிக்கத் தக்கது. "கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லினுட் பிறந்த பதராகும்மே" என்பதை நம்மவர்கள் மறந்துவிட்டார்கள்.

***

சுய ஆட்சி.

காங்கிரஸ் மஹாசபை.

சென்ற டிசம்பர்மீ 27உ லக்னௌவில் எல்லா இந்திய காங்கிரஸ் சபை கூடிற்று. அதற்கு ஐக்கியமாகாணத்தி லிருந்து 1084 பேரும் பீஹார் 90, வங்காளம் 89, பம்பாய் 572, பீரார் 195, பர்மா 4, பஞ்சாப் 55,-சென்னை 253 பேரும் பிரதிநிதிகளாகச் சென்றனர். முன்சூரத்தில் பிரிந்துபோன நவீனகட்சியாரும் இவ்வருடக் காங்கிரசில் ஒன்றுசேர்ந்தது இந்தியாவின் முன்னேற்றத்தைக் குறிக்கும் பெரியகுறியாகும். ஸ்ரீபால கங்காதரதிலகர், விபின சந்திரபால், சுரேந்திரநாதபானர்ஜி, பண்டிதமதன மோஹனமாலவியா, சர்-ராஷ் பிஹாரிகோஸ் மிஸஸ். பெஸண்ட், பிரஹ்ம ஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள், C. P. ராமசாமி ஐயரவர்கள்முதலானோருடன் சபை பிரகாசம் உற்றது. ஸ்ரீமந். சுரேந்திரநாத பானர்ஜியவர்கள், ஸ்ரீமந். அம்பிகாசரண். முசும்தார் அவர்களை இந்த 31-வது காங்கிரசுக்கு சபாநாயகராக வீற்றிருக்க வேண்டினர். சபையோரும் ஏகமனதுடன் அங்கீகரித்தார்கள். கனம் முசும்தார் அவர்கள் இந்தியாவின் முன்னேற்றத்தைநாடி அதிக கவனத்துடனும் சாவதானத்துடனும் உழைத்துவரும் பெரிய தேசாபிமானியாவர். அவர் சபையோர் வேண்டுகோளின்படி அக்கிராசனம் வகித்துப் பேசிய முன்னுரை, மிகவும் பாராட்டத் தக்கது. இந்தியா விழிப்படையவேண்டும் என்பதையும், இனி வரும்காலம் நற்காலம் என்பதையும், அக்காலத்தைக் கைநழுவவிடா வண்ணம், நம்மவர்கள்ஒத்துழைக்கவேண்டும் என்பதையும் வற்புறுத்திப் பேசினார். இந்தியர்கள் இன்னும் சுயஆட்சி அருகர் அல்லர் என்றுகூறி இளிக்கும் தூங்குமூஞ்சிகள் வாய்க்காப்பாக பல காரணங்களைக் காட்டி ஏளனம் செய்தார். ... ... இனி காங்கிரஸ் நடவடிக்கைகளைச் சுருங்கக்கூறுவோம்,—இவ்வருடம், இந்தியாவின் ராஜபக்தி, இந்தியாவின் சுயஆட்சி, இந்தியாவும் ஏகாதிபத்தியமும், இங்கிலாந்தில் பிரதிநிதிகள் சென்று பிரிடிஷ் துரைத்தனத்தாருக்கு சுயஆட்சி தீர்மானங்களை எடுத்துப்பேசப் பிரதிநிதிகளை அனுப்பல், வரவு செலவில் சுயாதிகாரம், ஆயுதச் சட்டம், சேனையில் இந்தியர் சேர்க்கை, தேசப்பாதுகாப்புச் சட்டம், அச்சுக்கூடச்சட்டம் இவற்றைக் குறைத்தல், ஒப்பந்தக் கூலி, சுதேசிய முயற்சி என்ற பல விஷயங்கள் பேசப்பட்டன. அவற்றுள் முக்கியமாய் சுயஆட்சியைப்பற்றியும், ஆயுதச்சட்டத்தைப்பற்றியும் பேசிய தேசாபிமானிகளின் பிரசங்கத்தின் சாரம் பின்வருமாறு:—

ஆயுதச் சட்டம்.

மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு.

ஆயுதச் சட்டத்தை ரத்து செய்துவிட வேண்டுமென்ற தீர்மானத்தை மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு ஆதரித்து மிகவும் உருக்கமாகப் பேசியபொழுது, ஸர் ஜேம்ஸ் மெஸ்டனும், லேடி மெஸ்டனும் பிரசன்னமாயிருந்தனர். அவர் பேசியதாவது:—

மனிதர்களின் ஆண்மைத்தன்மையைப் பாதிக்கும்படியான ஆயுதச் சட்டத்தை ரத்து செய்துவிட வேண்டுமென்று ஒரு ஸ்திரீயாகிய யான்பேசுவது விபரீதமாகத் தோன்றும். ஆனால், இந்தியாவின் பூர்வ பெருமையானது நிலைநாட்டப்படவேண்டுமென்றும், ஆண்மக்கள் ஆண்மக்களாகவே இருக்கவேண்டுமென்றும், தாய்மார்களுக்காக நான்வாதிப்பது பொருத்தமேயாகும். ஆயுதங்களைத் தரிக்கவேண்டுமென்று ஹிந்துக்களுக்கும் முகம்மதியருக்கும் உள்ள உரிமையானது பிறப்புடன் கூடவே யுள்ளதாகும். அந்த உரிமையை இல்லையென்று மறந்துவிடுவதானால், அது அவர்களுடைய ஆண்மைத் தனத்திற்கு ஓர் அபச்சொல்லாகும். ஏகாதிபத்தியத்தை காக்க வேண்டி ஆயுதம் பூண்டு ராணுவச் சேவகம் புரிய விரும்பும் கோடிக் கணக்கான பேருக்கு அந்த உரிமையைக் கொடுப்பதில்லையென்றால், அது ஏகாதிபத்திய லட்சியத்துக்கே இழிவாகும். இந்தியருக்கு அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று நான்பெரிதும் கோருகிறேன். சகோதரர்களே! இத்தனை வருஷகாலமாக நீங்கள் அவ்விதம் கேட்டும் பலனில்லாதிருக்கும்பொழுது, இச்சமயம் ஒருஸ்திரீயைத் தவிர உங்களுடைய கோரிக்கையை ஆதரித்துப் பேசுவோர் யாருளர்? (வெட்கம்) நான் நிஜாம் ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவள். எங்களது ராஜ்ஜியத்திலே யாரும் ஆயுதம் தரிக்கலாம். அவ்வாறு சமஸ்தானத்திலே ஆயுதம் தரித்திருப்பவர்களிலே எவரேனும் ராஜவிசுவாசத்தில் குறைந்திருந்தனரென்பதாக இன்றளவும் சொல்லப்பட்டதில்லை. ஓர் இந்திய சமஸ்தானமானது தனது பிரஜைகளின் ராஜ விசுவாசத்தை நம்பியிருக்கும்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவும் அவ்விதமே நம்பக்கூடாதோ? கவனியுங்கள் கவனியுங்கள்) இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான ஸ்திரீகள் தங்களது குமாரர்களையும் சகோதரர்களையும் போர்முனைக்கு அனுப்பியிருக்கவில்லையா? அவ்விதம் அனுப்பப்பட்டுள்ள குமாரரும் சகோதரர்களும் போர்முனையிலே இரத்தத்தைச் சிந்தி தீரபுருஷர்கள் என்ற பெரும்பெயரைப் பெற்று புகழ்ச்சிக்குப் பாத்திரமாயிருக்கையில், இந்தியருக்கு மறுபடியும் ஆண்மைத்தன்மை உண்டாகுமாறு ஆயுதத்தை தரிக்கும் உரிமையை அவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லக்கூடாதோ?"

தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டது.

***

சுய ஆட்சியைப்பற்றிய தீர்மானத்தை பாபுசுரேந்திரநாத பானர்ஜி. பிரேரேபிணை செய்து அதை வற்புறுத்திப் பேசினார்.

இத்தீர்மானத்தை இரண்டு பங்காகப் பிரிக்கலாம். ஒன்று பூர்வபீடிகை; மற்றது; காரியம் எப்படி நடத்தவேண்டுமென்று சொல்லுகிறது. நம்முடைய கோரிக்கைக்குக் காரணம் பூர்வ பீடிகையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற 1915-ம் வருஷத்தில் காங்கிரஸ் பம்பாயில் கூடினதற்குப் பிறகு, காங்கிரஸ் கமிட்டியும் முஸ்லீம் லீக் கமிட்டியும் ஒன்று கூடி யோசித்து ஒரே கோரிக்கையாகச் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தன. ஹிந்துக்களுக்குள்ளும் ஒற்றுமை யிருப்பதை அத்தீர்மானம் குன்றின்மேலிட்ட விளக்குபோல் காட்டுகிறது. இந்தியாவுக்கு சுய ஆட்சி கொடுத்துவிட்டால், பாமரஜனங்களின் நன்மை பாராட்டப் படமாட்டாதென்று ஒரு ஆட்சேபம் சொல்லுகிறார்கள்.

ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளில் வரம்புகடந்து எழுதும் பத்திரிகைகள் அந்த அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதல்லாமல் வங்காளத்தின் கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் லார்டு ரோனால்டுஷேயும் சொல்லியிருக்கிறார். அந்த லார்டு ரோனால்டுஷேயைப்பற்றி வங்காளம் கண்டனம் செய்துகொண்டிருக்கையில் இந்தியா மந்திரி அவரைப்புகழ்ந்து பேசி இருக்கிறார். நாம் பாமர ஜனங்களின் பிரதிநிதிகள் அல்லவாம்! அன்னியர்கள்தான் ஜனங்களைக் காப்பாற்ற ஏற்பட்டவர்களாம்! அவர்களுக்குப் பதிலாக தேசத்தலைவர்கள் ஏற்படுவது சுபாவத்துக்கு விரோதமாகுமோ? உடன்படிக்கைகளின் ஷரத்துப்படி நடக்க வேண்டியது தருமம் என்பதை ஸ்திரப்படுத்த இந்த யுத்தம் ஏற்பட்டது. ஐரோப்பாவில் ஒரு விஷயம் சத்யமானால், அது ஆசியாவிலும் சத்தியமாகத்தான் இருக்க வேண்டும். நமது அரசர்கள் செய்துகொடுத்திருக்கிற உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவேண்டுமென்பதே நம்முடைய கோரிக்கை. ஆகையால் யுத்தத்திற்குப் பிறகு சுயஆட்சி வேண்டுமென்று கேட்கிறோம். மிஸ்டர் லயனல் கர்டிஸ் என்பவர் இந்தியாவைப்பற்றி சில புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார். அதில் ஒன்றில் அவர் என்ன சொல்லுகிறார் என்றால், "சுய ஆட்சி நடத்தாத ஜனங்கள் சுய ஆட்சிக்கு லாயக்காகும்படி அவர்களைத் தயார்செய்ய சுய ஆட்சி நடத்துகிறவர்கள் அவர்களுக்குப் பாரமார்த்திகத்தில் அவர்களைப் பழக்க வேண்டும்" என்பதாம். ஆகையால் ஐரோப்பாவிலுள்ள ஜாதிகள் செய்துகொண்ட ஆயத்தம் என்னவென்றால், பாரமார்த்திக வழியில் நடந்தனர். நல்லது ஆகையால் லௌகிகம் சுய ஆட்சியை அடைய வழியல்ல. ஆனால் இந்தியாவைப்பற்றி அவர் பேசும்பொழுது "இன்னும் போகவேண்டும்" என்கிறார்; அதற்கு அவர் சொல்லும் காரணமென்னவென்றால், "ஓட்" கொடுக்கிறவர்கள் இந்தியாவில் இல்லையென்கிறார். 1732-ம் வருஷத்தில் "சீர்திருத்தச்சட்டம்" பார்லிமெண்டினால் செய்யப்பட்டதற்குமுன், இங்கிலாந்தில் "ஓட்" கொடுக்கிறவர்கள் இருந்தார்கள். ஜப்பானிலும், பிலிப்பைன் தீவுகளிலும் இருந்தார்களா? இந்தியா சுயஆட்சிக்குத் தகுதியில்லையாம்; ஐரோப்பா அநாகரீக நிலைமையிலிருந்தகாலத்தில், இந்தியா சுய ஆட்சி நடத்திவந்தது என்பதை நினைப்பில் வைத்துக்கொள்ளுங்கள் மிகப் பூர்வீககாலத்தில் அரசர்கள் இந்தியாவில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டனர். முகம்மதிய சமுகத்தில் ஜன ஆதிக்யபுத்தி ஊன்றிருக்கிறது. சுய ஆட்சி நமக்கு எதற்காக? நம்முடைய நன்மைக்காகவும், ஆளுகையின் நன்மைக்காகவும் சுய ஆட்சி அவசியம். சுய ஆட்சியை நமக்குக் கொடுத்துவிட்டால், அராஜகம் மறைந்துபோய்விடும். ஒரு ஆட்சி எவ்வளவு நல்லதாயிருந்தாலும், அது சுய ஆட்சிக்குச் சமமாகாது. ஆட்சி நல்லதாகிறதற்கு சுயஆட்சி அவசியம்.

ராஜீயவாழ்வில் நான் சம்பந்தப்பட ஆரம்பம் செய்த காலம் முதல், இந்தியாவுக்கு சுயஆட்சி வேண்டுமென்று வாதம்செய்து வந்திருக்கிறேன். சென்ற வருஷத்தில் பம்பாயில் நாம் கூடியபிறகு, நம்முடைய சுயஆட்சி யோசனை வெகு முன்னேற்றமடைந்திருக்கிறது. ஹிந்துக்களும் முகம்மதியர்களும் ஒருவரோடொருவர் சமாதானமாய்ப் போய்விடும் புத்திப்போக்கை உடையவர்களாகி இருவகுப்புக்குள்ளும் ஒற்றுமை உண்டுபண்ணிவிட்டார்கள். 1[illegible] வருஷங்களுக்கு முன் இப் பட்டணத்தில் காங்கிரஸ் கூடினபொழுது, முகம்மதியர்களில் சிலர் தவிர மற்றவர்கள் காங்கிரசுக்கு விரோதமாயிருந்தார்கள். ஆனால் இந்த வருஷத்திலோவென்றால், கைலாகுகொடுத்து நம்மை வரவேற்று உபசரித்தார்கள். காங்கிரஸ் செய்துகொண்டு வந்திருக்கும் கோரிக்கைகளுக்கு விரோதமா யுள்ளவர்கள் "உங்களுடையகோரிக்கைகளைப்பற்றி முஸல்மான்கள்என்னசொல்லுவார்களோ" என்று சொல்வது வழக்கம். இப்பொழுது

ஹிந்துக்களும் முஸல்மான்களும் ஒத்து கோரிக்கைகளைச் செய்துகொள்ளுகிறபடியால், "பாமர ஜனங்கள் என்ன சொல்வார்களோ" என்கிறார்கள். அன்னியர்களுக்குப் பதிலாக தேசத் தலைவர்களை ஏற்படுத்தப் பார்ப்பது இயற்கை யல்லவா? ஜனங்களுடைய நன்மையை அன்னியர்களை விட தேசத்தலைவர்கள் நன்கு பாதுகாப்பார்கள். அமெரிக்கா தேசத்து பத்திரிகைப் பிரதிநிதி ஒருவரிடத்தில் லார்டு செம்ஸ்போர்டு சில அபிப்பிராயங்களை வெளியிட்டதாகப் படித்தோம். அந்த உத்தேசங்களை அவர் நிறைவேற்றி விடுவாராகில் இந்திய ஜாதியைக் காப்பாற்றினவரென்று அவருடைய பெயருக்கு அழியாப் புகழ் உண்டாகும். படித்த இந்தியர் கலகக்காரர்களல்ல. கலகத்தை அடக்கக்கூடிய சீர்திருத்தங்களையே அவர்கள் தேடுகிறார்கள். சீர்திருத்தங்கள் செய்யப்படவில்லையானால் கலகத்துக்கு விதை விதைத்ததுபோல்தான். திருத்தங்கள் போதுமானவையாயிருக்கவேண்டும். ஜனங்களிடத்தில் கவர்ன்மெண்டுக்கு நம்பிக்கை யிருக்கிறதாகக் காட்டவேண்டும், இந்தப் பரிட்சைக்கு ஈடுகொடுக்காத எந்தத் திருத்தமும் அமைதியின்மையை உண்டுபண்ணும். யுத்தத்திற்குப் பிறகு இந்தியா சுயஆட்சியை அடையவேண்டுமென்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நெடுகவே ஒரு உணர்ச்சி விசாலமாய்ப் பரவி யிருக்கிறது என்று அவர் சொல்லிவிட்டு மிஸ்டர் லயனல் கர்டிஸ் எழுதிய கடிதத்தைக் கண்டித்துப் பேசினார். ராஜ தந்திரிகள் முன்னாடியே விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை. இப்பொழுதுள்ள நிலைமையில் சுயஆட்சியானது பிசின்போல் வேலைசெய்யும் ஏகாதிபத்தியத்திலுள்ள எல்லா தேசங்களும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளும்படி சுயஆட்சி செய்யக்கூடியது. விரோதமாயிருந்த நாடுகளையெல்லாம் அது ஏகமாகச் செய்துவிட்டது. வங்காளத்தில் அராஜகம் உண்டானதற்கு காரணம் ஏற்கெனவே நடந்த தப்பு ஆட்சி பொருளாதார காரியங்களிலும் தொழில் செய்வதிலும் ஜனங்களுக்கிருந்த கஷ்டங்களே காரணம். பலாத்காரமாய் அடக்குவது ஒன்றுதான் அதிகாரவர்க்க மறிந்த முறை அராஜகத்தைத் தொலைக்க அதிகாரி வர்க்கத்துக்கு சரியான வழி தெரியவில்லை. சுய ஆட்சியைக் கொடுத்துவிட்டும், அதுமுதல் 6-வருஷ காலத்திற்குள் அராஜகம் இருந்தவிடம் தெரியாமற் போய்விடும்.

ஆட்சி நன்றாயிருக்கவேண்டுமானால் சுய ஆட்சி அவசியம் இப்பொழுதுள்ள ஆட்சியில் போதுமான சீர்திருத்தம் செய்ய நம்மால் கூடவில்லை. நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவும் சுய ஆட்சி அவசியம் குடியேற்ற நாடுகள் நம்மை ஆள நமக்கு இஷ்டமில்லையானால், வெகு சிரமங்களை நான் எதிர்க்கவேண்டி யிருக்கும். நாம் தாழ்ந்தவர்கள்போல் பிறர் மதிப்பதும் சுய ஆட்சியில்தான் போகக்கூடும்.

***

மிஸஸ் பெஸண்டு.

மிஸஸ் பெஸண்டு தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் பின்வருமாறு சொன்னார்:—இத்தீர்மானத்தின் 3-வது பாகத்தை பற்றித்தான் நான் பேசுவேன். இங்கிலாந்து மகாயுத்தத்தில் முனைந்திருக்கிறபோது சுயாட்சி கேட்கப்படாது என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவிஷயத்தில் சுயஆட்சி செய்துகொண்டிருக்கிற குடியேற்ற நாடுகளின் அடிச்சுவடுகளையே பின்பற்றுகிறோம். பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸீலண்டு, தென் ஆப்பிரிக்கா கானடா முதலிய 5 தேசங்களின் வெள்ளைச் சாதியார் நம்மேல் வந்து அதிகாரம் செலுத்துகிற வரையில் காத்துக்கொண்டிருக்க முடியாது. அவர்களுக்குக் கீழ்ப்படியவும் கூடாது. இந்தியர்கள் பிரிவுபட்டவர்களா யிருப்பதனால் அவர்களுக்கு சுய ஆட்சி கொடுக்கப்படாதென்று சொல்லப்

பட்டது. ஆனால் இப்போது இந்துக்களும் மகம்மதியர்களும் ஒன்று சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் இப்போது ஒன்றுசேர்ந்த ஜாதியாக ஆனார்கள். சுய ஆட்சி இந்தியர்களுக்குக் கொடுக்கக்கூடாததற்கு ஜனங்கள் கல்வி யறிவில்லாதவரா யிருக்கிறார்கள் என்று ஒரு காரணம் சொல்லப்பட்டது. ஆனால் ஜனங்கள் கல்வியறிவு பெறுவதற்கு எவர் உத்திரவாதியாவர்? காலஞ்சென்ற ஸ்ரீமான் கோகலே பாமர ஜனங்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்று சொன்னதை பிரிட்டிஷ் சட்டசபை மறுத்தனர். இந்தியா தன்னைக் காத்துக்கொள்ளக்கூடாத நிலையிலிருக்கிறதென்று சுய ஆட்சி கொடுக்காததற்கு மூன்றாவதாகக் காரணம் சொல்லப்பட்டது. அப்படியாக இந்தியா தன்னைக் காத்துக்கொள்ளக்கூடாமல் செய்தது யார்? தயவுசெய்து சொல்லவேண்டும். யார் ஆயுதச்சட்டத்தைச் செய்தார்கள்? ஹோம் ரூல்தான் இந்தியர்களை சுய ஆட்சிக்குத் தகுதியாய்ச் செய்ய முடியும்.

அச்சுச் சட்டத்தைப்பற்றி மிஸஸ் பெஸண்டு பிறகு மிகுதியும் கண்டித்துப் பேசினார். சென்ற சில வருஷங்களாகக் கவர்ன்மெண்டார் நடத்தின கடுமையான நடவடிக்கைகளைக் கண்டித்துப் பேசினார். ஒரு வேளை தம்முடைய பேச்சுக்கள் அழுத்தமாயிருக்கிறதென்று ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் நினைப்பாரோ என்றும் பயப்பட்டார். ஆனால் இந்தியாவின் நிலைமை மிகவும் சகிக்கக்கூடாத நிலைமையி லிருக்கிறதென்பதை ஆளுகிறவர்கள் அறியவேண்டுமென்றும் அவர் சொன்னார். இங்கிலாந்து இந்தியாவுக்கு சுயேச்சையைக் கொடுக்காது என்று சொன்னார். ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாருக்கு சுயேச்சையைக் கொடுக்கக்கூடியதென்பது என்னவோ கூடாத காரியம். ஆனால் இங்கிலாந்து, இந்தியாவின் ராஜவிசுவாசத்தை உத்தேசித்து இந்தியாவிலுள்ளவர் சுயேச்சை யுள்ளவர்கள் என்ற ஒரு சட்டத்தைச் செய்யக்கூடும் என்று முடிவில் சொல்லி முடித்தார்.

லோகமாந்ய பாலகங்காதர திலகர்.

லோகமாந்ய பாலகங்காதர திலகர் தீர்மானத்தை ஆமோதித்துப்பேச எழுந்ததும் சபையோர் உற்சாகத்துடன் ஆரவாரஞ்செய்தார்கள் அவர் சொன்னதாவது:—காங்கிரஸ் மஹாசபை கடந்த 30-வருஷ காலமாய் சுராஜ்யத்திற்காக போர்புரிந்திருக்கின்றது. முதன் முதல் இந்தியாவின் வயோதிக மஹாபுருஷர் ஹூக்ளி நதிக்கரையில் இந்தப்பேச்சை முதன்முதல் பஹிரங்கமாய் கிளப்பினார். தப்பெண்ணத்தினால் நாம் 10-வருஷகாலம் பிரிந்து காலங்கழித்த பிற்பாடு மீண்டும் நாமெல்லோரும் ஐக்கியம் பெற்று ஐக்கிய மாகாணத்தில் ஒன்றுகூடி இந்த லக்நௌநகரில் அதிருஷ்ட ப்ராப்தர்களானோம். முஸ்லீம் சகோதரர்களுக்கு நாம் வெகுதூரம் இணங்கிவிட்டோமென்று சொல்லப்படுகின்றது. நாம் அவர்களுக்கு எவ்வளவு இணங்கிப்போனாலும் தகும். முஸ்லீம்களுக்கு மாத்திரம் சுய ஆட்சி பாத்யம் கொடுத்தாலும் நான் ஆக்ஷேபிப்பவ னல்லன். இந்தியாவிலுள்ள வேறெந்த ஒரு தனி சமூகத்திற்கு மாத்திரம் சுய ஆட்சி சுவாதீனம் கொடுத்தாலும் அதைக்குறித்தும் நான் ஆக்ஷேபிப்பவ னல்லன். ஏனென்றால், அப்போது நடைபெறக் கூடிய சண்டை இந்திய ஜனசமூகத்திற்கும் அதிகார வர்க்கத்திற்கும் நடைபெறும் சண்டையா யிருக்கும் இப்போதைப்போல முக்கோணச் சண்டையா யிராது. பத்து வருஷங்களுக்கு முன்னே என்ன நடந்ததென்பதை கவனிப்போம் அப்போது சுய ஆட்சி "ஸ்வாராஜ்யம்" என்ற பெயருடன் வெளித்தோன்றியது, பிறகு அது சுய ஆட்சி என்ற பெயருடன் சட்டரீதியாக கவர்ன்மெண்டின் சீர்திருத்தத்தை தேடிற்று. இப்போது அது 'ஹோம் ரூல்' என்ற பெயருடன் விளங்குகிறது. கடந்த 30-வருஷங்களாய் காங்கிரஸ் மஹாசபையில் செய்யப்பட்ட தீர்மானங்களனைத்தும் சுய ஆட்-

சிக்கு அடிப்படைச் சாதனங்களே யன்றி வேறல்ல. காங்கிரஸ் மஹாசபையில் வருஷாவருஷம் நிறைவேற்றப்பட்ட முப்பதே சொச்சம் தீர்மானங்களும் இந்த சுய ஆட்சித் தீர்மானத்தில் அடங்கிவிட்டன. உங்களிடம் என்னென்ன விருக்கின்றனவோ அவற்றையெலாம் இதன்பொருட்டு தியாகஞ் செய்வீர்களாக, பலமுள்ள படைகள் நம்மை எதிர்த்து வருகின்றன. நாம் தற்போது ஒற்றுமையுடனிருந்து வராவிட்டால் நாம் ஜெயம்பெறமாட்டோம். காங்கிரஸ் விஷயங்களைக்குறித்து ஆலோசனை செய்து விவாதித்து ஒரு தீர்மானத்தைச் செய்யும் ஸ்தாபனமேயன்றி வேறல்ல எனவே காங்கிரஸ் மஹாசபை இப்போது அதன்வேலையை முடித்துவிட்டதெனலாம் இனிமேல் அதன்வேலை நிர்வாகவேலையாக மாறும். நீங்கள் உங்களுடைய எல்லையையடைவதில் ஜெயம் பெறுவிட்டால் அது உங்களுடைய குற்றமே யாகும். , நம்முடைய எண்ணம் நிறைவேறுவது நம்முடைய இடைவிடா உழைப்பையும் வேலையையும் பொறுத்ததா யிருக்கின்றது. கடவுள் அனுக்கிரகித்தால் இதற்கு வேண்டிய உற்சாகத்தை நீங்கள் பெறுவீர்கள். 1917-ம்வருஷத்தில் அல்லது நிச்சயமாய் 1918-ம்வருஷத்தில் நாம் ஸ்வராஜ்ய ஆட்சியின் கீழ் மீண்டும் கூடுவோமென்று நாம் நம்புகிறோம்.

***

கனம் டேஜ் பகதூர் ஸப்ரு.

கனம் டேஜ் பகதூர் ஸப்ரு பின் வருமாறு பேசினார்:—

நம்முடைய கோரிக்கைகளை ஒரு வார்த்தையாகச் சொல்வதென்றால் பிரஸ்தாப திருத்தங்களை யெல்லாம் செய்து நிறைவேற்றும்படி நமக்கு சக்திவேண்டும் என்பதே. நம்மிடத்தில் இங்கிலாந்துக்கு பட்சமில்லையென்றால் நமக்குமாத்திரம் அதனிடத்தில் இருப்பதுசாத்தியமா? குடியேற்ற நாடுகளிடத்தில் நாம் சிரத்தையுள்ளவர்களாகவே இருக்கிறோம். நாம் சுய ஆட்சிக்குத் தகுதியில்லையென்பதை எப்பொழுது கண்டுபிடித்தார்கள். இப்பொழுதும்சுதேச சமஸ்தானங்களை இந்தியர்கள்தானே ஆளுகிறார்கள். நமக்கு சக்தி யில்லையானால், சக்தி உண்டாகும்படி செய்யாதவர்களுடைய தப்பே அதுவாகும். நம்முடைய பொறுமை உலகப் பிரசித்தமான விஷயம், எத்தனை காலந்தான் பொறுக்கலாம். துளித்துளி சீர்திருத்தங்கள் ஏற்பட்டால் போதுமென்று நினைத்துக்கொண்டு ஏமாந்து போகாமல் இருப்போமாக.

***

கனம் சர்மா.

சுராஜ்யத்தை அடைவதற்கு வேண்டிய வேலையைச்செய்ய காலம் வந்துவிட்டதென்று கனம் சர்மா சொன்னார்.

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் சாசுவதமான ஒற்றுமை இருக்கவேண்டுமானால், உங்கள்முன் ஆஜர்செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியம். வேறு வழியில்லை. சுதேச சமஸ்தானத்தில் ப்ரிட்டிஷ் பிரதிநிதியாயுள்ள ஒருவர் அந்த சமஸ்தானத்தின் நிர்வாகத்தை நடத்திவைக்கக் கூடியவரா யிருக்கையில், நிர்வாக சபையை உடைய ஒரு கவர்னர் ப்ரிட்டிஷ் இந்தியாவில் ஏன் அதேமாதிரி செய்துவைக்கமுடியாது. இந்தியாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக 180-லட்சம் பெயர்கள் இருக்கிறார்கள். இங்கிலாந்தின் மொத்த ஜனத்தொகையே அவ்வளவுதான். இவ்வளவு ஜனங்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள முடியாதா ? நமக்கு ஒரு புறத்தில் ஜப்பான் வலுத்துக்கொண்டிருக்கிறது. இன்னொரு புறத்தில் ருஷ்யா வலுத்துக்கொண் டிருக்கிறது. வலிமைபெற்ற இரண்டு தேசங்களுக்கு நடுவிலிருந்த பெல்ஜியத்துக்கு நேர்ந்தகதி நமக்கு நேராமல் செய்யவேண்டுமானால் நமக்கு சுய ஆட்சி கொடுக்க வேண்டியதுதான்.

மிஸ்டர் பாப்டிஸ்டா.

தீர்மானத்தை ஆதரித்து மிஸ்டர் பாப்டிஸ்டா பேசியதாவது :—

ஹோம் ரூலில் எல்லாருக்கும் நம்பிக்கையுண்டாகும்படிசெய்த பெருமையாருக்கு? மிஸ்ஸஸ் பெஸண்டுக்கே அதிக பெருமை அதற்காக அவர் துன்பப்பட்டிருக்கிறார். ஆகவே அவரை நாம் நேசிக்கிறோமென்றும் முடிவுரையில் அவரைப் பின்பற்றத் தயாரென்றும் நான் அவருக்கு உறுதிசொல்லுகிறேன். தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியரை இந்தியாவிலுள்ளவர்களைத்தவிர மற்ற இடங்களிலுள்ளோர் மதிப்பதில்லை. இந்தியாவும் இங்கிலாந்தும் ஒன்றுகூடி இரத்தத்தைச் சிந்தியிருக்கின்றன. யுத்தத்திற்குப் பிறகு இந்தியரை அடிமைபோல நடத்தவேண்டுமென்றோ அவ்விதம் இரத்தம் சிந்தப்பட்டது? 150-வருஷகாலமாக ஆங்கிலோ இந்தியருக்கு சுதந்திரம் இருந்து வருகிறது. வயிறு நிரம்ப சாப்பிடுவது என்றால் என்னவென்பதை யறியாமல் வருஷந்தோறும் நம்மில் கோடிக்கணக்கான பேர் இறக்கின்றனர். இதுதான் நமது கதியாக இருக்கிறது. இந்த நிலைமையைக் கண்டு மனம் சகிக்காது இந்தியருடைய மரியாதையையும் இங்கிலாந்தினுடைய மரியாதையையும் கவனிக்கும்பொழுது, அத்தகைய நிலைமை நீக்கப்படவேண்டும். தேசத்தை ஆண்டுவரும் ஜனங்கள் அந்நிலைமைக்குப் பாத்திரமானவர்களல்லர். ஆனால், ஆட்சி முறைமையே அதற்குப் பாத்திரமாகும்.

***

பண்டித கோகர்நாத் மிச்ரா.

அப்பால் இவர் உருது பாஷையில் பேசியதாவது:—

சட்ட சபைகளிலே கவர்ன்மெண்டால் நியமிக்கப்படுபவர்களும் உத்தியோகப்பற்றுள்ள மெம்பர்களும் எப்பொழுதும் கவர்ன்மெண்டின் கட்சியையே சேர்ந்திருக்கின்றனர். ஆகவே சட்ட சபைகளின் அமைப்பையும், அதுகாரணமாக நிர்வாக முறைமையையும் திருத்தியமைக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். சுய ஆட்சி கொடுத்தால், ஏகாதிபத்தியமானது ஆழ்ந்த அடிப்படையுடன் நிகரின்றி இருக்கும்.

***

மிஸ்டர் பால்.

பிறகு மிஸ்டர் விபினசந்திரபால்பேசியதாவது:—சுய ஆட்சியே நமது அடிப்படை. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தம் நிலைநாட்டப்படுவதற்கு நமக்கு அந்த சுய ஆட்சியைக் கொடுக்க வேண்டும், இந்தியர் தளர்ச்சியடைந்து வருகின்றனர். இதை நான் நன்கு பார்க்கிறேன். அந்தந்தத் தேசத்தினர் தங்களுடைய தேசத்தில் சுதந்திரத்துடன் வசிப்பதுபோலவே நாமும் நமது தேசத்தில் சுதந்திரத்துடன் வசிப்போமென்பதாக நமக்கு பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து நம்பிக்கை சொல்லப்பட வேண்டும். இந்தியா நீங்கலாக ஏகாதிபத்தியம் உண்டா? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள மொத்த ஜனத்தொகை 11-கோடி; அதில் 9½-கோடிபேர் கருப்பு வர்ணமும், பழுப்பு வர்ணமும் உள்ளவர்கள். இந்தியாவை விலக்கிவிட்டு, ஏகாதிபத்தியத்தைத் திருத்தியமைப்பதென்றால் அது கூடாத காரியம்.

மிஸ்டர் கோவிந்தராகவ ஐயர்.

திவான் பகதூர் மிஸ்டர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் அடுத்த படியில் எழுந்திருந்து பின்வருமாறு பேசினார்:—நம்முடைய தோலின் நிறத்தைப் பற்றி நாம் வெட்கப்படக் கூடாது. பிறருடைய பலவிதப் பட்ட மனோபாவங்களைப் பற்றித்

தான் வருத்தப்பட வேண்டும். ஸுலு, காப்பிரி, நீக்ரோ, ஹிந்து, முஸல்மன், பார்ஸி முதலிய பல்வேறு வகைப்பட்ட ஜாதியர்களெல்லாரையும சேர்த்து நிறமுள்ள ஜாதியாரென்றே சொல்லப்படுகிறார்கள். அவர்களெல்லாரும் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களும், ஒரேவிதசக்தி வாய்ந்தவர்களுமாக இருக்கிறார்கள். அவர்களின்மேல் பொறுப்பைப் போட்டு அவர்களை நம்பிவிட்டால், பொறுப்பேறின ஸ்தானங்களை வகிக்கும் சக்தி அவர்களுக்குத் தானாகவே உண்டாகிவிடும். பாமர ஜனங்களுள்ளும் அநேக வகுப்பாருள்ளும் சண்டை உண்டாயிருந்ததென்று சொல்லப்பட்டது. கூட்டுறவு முயற்சி ஸ்தாபனத்திற்கும் கட்டாயப் படிப்புக்கும் படித்த வகுப்பாரே ஆதரவு காட்டி வருகிறார்கள். அவர்களை குடியேற்ற நாடுகளுக்கு இந்தியாவின் ஆட்சியில் ஒருவிதமான பாத்தியமும் கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்து அப்படிச் செய்யப் பார்ப்பதில் முனைந்திருக்கிறார்கள். அம்மாதிரியான முயற்சி செய்து அவ்விஷயம் நடக்காமல் தடுத்துவிடுவதற்கு வேண்டிய காரியங்களைச்செய்தே தீருவார்கள். ஆனால் குடியேற்ற நாட்டுச் சட்டசபைகளில் இந்தியப் பிரதிநிதிகள் இருக்கும்படி அக்குடியேற்றநாடு செய்து இந்தியர்களை அவர்கள் சமமாக நடத்தவேண்டும். அப்போதுதான் நம்முடைய தேசத்தின் ஆட்சியில் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு இடம் கொடுக்கலாமா என்பதாக ஆலோசிக்க முடியும்.

***

மிஸ்ஸெஸ் ஸரோஜினி நாயுடு.

மிஸ்ஸஸ் ஸரோஜினி நாயுடு அடுத்தபடியில் எழுந்து பேசினார். அவர் எழுந்ததும் சபையோரெல்லாரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள் அவர் பின்வருமாறு பேசினார்:—ஹோம்ரூல் இப்போது ஒரு கனவன்று; ஹிந்துக்களும் முஸல்மான்களும் சேர்ந்தபோதே அது உண்டாக வேண்டியதுதான். ராஜ விஸ்வாசமும், விசேஷமான தைரியமும் கொண்ட மாமுதபாத் முஸல்மன்களுக்கும், மஸ்ரூஹக்குக்கும் மகம்மது ஆலி ஜின்னா முதலியவர்களுக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஹோம்ரூலை அடைவதை இடை நின்று தடுப்பவர் ஒருவருமில்லை. எவரும் ஹோம்ரூலைக் கொடுக்க மறுக்கப் போவதில்லை. சுயேச்சையைப் பெறுவதற்கு நமக்குச் சுதந்திரம் இருக்கிறது. அச்சுதந்திரத்தைக்கொடுப்பதைத் தவிர்க்கச் சுதந்திரம் ஒருவருக்குமில்லை. பல வகுப்பினராயுள்ள நமக்குள் அன்பும், ஒற்றுமையும் இருப்பதால் நாம் ஒரே ஜாதியினராய் ஆகிவிட்டோமாதலினால் நாம் ஹோம் ரூலைக் கேட்கிறோம். இத்தீர்மானம் வெகு விசேஷமான உற்சாகத்துடன் நிறைவேற்றப்பட்டது. சபையினர் எல்லாரும் எழுந்துநின்று வந்தேமாதரம் வந்தேமாதரம் என்று சேர்ந்துசப்தமிட்டார்கள்.

***

லக்நௌ எனும் பூர்வலக்ஷ மணப்புரியில்கூடிய இந்தியத் தொழில் ஆலோசனைக் கான்பரன்ஸ்

(அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்.)

இந்தியத்தொழில் ஆலோசனை கான்பரன்ஸின் 12-வது வருஷக்கூட்டம் 1916ஆ டிசம்பர்மீ 30உ லக்நௌ நகரில் கூடிய பொழுது கனம் ரெய் ஸீதாநாத ராய் பகதூர் அக்கிராஸ்தானம் வகித்துச் செய்த நீண்டதொரு பிரசங்கத்தின் முக்கியமான சாராம்ஸத்தைமட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

முன்னுரை.

கனவான்களே! தொழிலபிவிருத்தியிலே இதர தேசங்களெல்லாம் விரைவான முன்னேற்றமடைந்து வருகையில் இந்தியா தேசமோ அநேகமாக அசையாமல் நின்றிருக்கிறது. ஆனால் தேசத்தின் ஜனத்தொகையோ பெருகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, பல மனிதர்கள் தங்களுடைய ஜீவனோபாயத்திற்காக விவசாயத்தை எதிர் பார்த்திருக்கும்படி நேர்ந்துவிட்டது. 1891-ம் வருஷத்திலே கணக்கெடுத்தபடி, நமது ஜனத்தொகையில் நூற்றுக்கு 62-பேர் விவசாயத்தையே ஜீவனோபாயத்திற்கு நம்பியிருப்பதாக மதிக்கப்பட்டுளது 1901, 1911-ஆகிய வருஷங்களிலே முறையே நூற்றுக்கு 68-பேரும் 71-பேரும் விவசாயத்தை ஜீவனோபாயமாகக் கொண்டுளரென்று கணக்கெடுக்கப் பட்டுளது. இங்கிலாந்திலுள்ள வேலையாளரிலே ஒவ்வொரு நூறுபேரிலும் 58-பேர் தொழில் முயற்சிகளிலும், 9-பேரே விவசாயத்திலும், உழைத்து ஜீவனோபாயம் பெற்றுவர, இந்தியாவிலோ நூற்றில் 12-பேருக்கே தொழில் முயற்சியில் ஜீவனோபாயம் கிடைக்குப்படி யிருக்கிறது. எனவே இந்தியாவில்தொழில் முயற்சிஎவ்வளவு தூரம் குறைந்திருக்கிறதென்பது நன்கு புலப்படும். மேலும், இங்கே விவசாயத்தையே நம்பி யிருப்பதால் ஆபத்துண்டாவதோடு, தொழில் முயற்சியைப்போல் விவசாயத்தில் அவ்வளவு லாபமில்லை யென்பதும் வெளிப்படை. ஆகவே, மற்றத் தேசத்தினருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், மற்றத் தேசத்தினருடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் பரம ஏழைகளாயிருக்கிறோம்.

பூர்வகால நிலைமை.

தற்சமயம் இப்படியெல்லா மிருந்தும், முற்காலத்திலோ இந்தியா தேசமானது பணத்தில் பெருத்த தேசமென்று கருதப்பட்டு வந்தது. பொன்விளையும் பூமியென்று இந்தியாவைக் குறித்துப் புலவர்கள் பாடியிருப்பதோடு, இந்தியாவின் செல்வத்தைக்கொண்டு அன்னிய தேசத்தினரும் படையெடுத்து வரலாயினர். பொதுவாக இந்தியா தேசமானது விவசாய தேசமேயென்றும் ஆங்கிலேயர் கருதி யிருக்கின்றனர். நமது தேசத்தின் பூர்வ சரித்திரத்தைப் பார்த்தால், இந்தியாவிலிருந்து அன்னிய தேசங்களுக்கு தொழில் முறைமைப் பண்டங்கள் வெகுவாக ஏற்றுமதிசெய்யப்பட்டன வென்றும், மூலப்பொருள்களே அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன வென்றும், புலப்படும் தொழில் முறைமையில் பண்டங்களைச் செய்வதில் ஆதிகாலத்திலே ஹிந்துக்கள் மிக்க விசேஷ மடைந்திருந்தனர்.

தொழில்கள் அழிந்த காரணம்.

18-வது நூற்றாண்டின் கடைசியிலிருந்து இந்தியாவின்தொழில் முயற்சியானது குறையத் தலைப்பட்டது. ஐரோப்பாவிலே தொழில் முயற்சி விஷயமாய் மிக்க மாறுதல்கள் ஏற்பட்டகாரணமாக, ஆள்வேலைக்குப்பதிலாக யந்திரங்களே ஏராளமாகக் கையாளப்பட்டு வந்தன. ஆகவே தொழில் முயற்சியானது ஐரோப்பாவிலே பெரிதும் பரவியது. இந்தியாவோ பழையவழிகளையே அனுஷ்டித்து வந்தது. தவிர ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரும் இங்கேவர, இங்கிருந்த பூர்வீகத் தொழில்கள் நசுக்கப்பட்டுப்போயின. இந்தியாவின் துணிகள் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்படாதபடி அங்கே இரக்குமதி வரி விதிக்கப்பட்டதோடு, இந்தியத் துணிகளை இறக்குமதி செய்யக்கூடாதென்றும் தடுக்கப்பட்டதென்பதாக ஆங்கிலேயரொருவர்சொல்லியிருக்கிறார்.

தொழிலபி விருத்திக்குரிய தேவைகள்.

தொழிலபி விருத்திக்குரிய முக்கியமான தேவைகள் என்னவென்றால்:—இயற்கைப் பொருள்கள்; பற்பலவிதமான வேலைகளைச் செய்யக்கூடிய தொழிலாளிகள்; சாஸ்திர ஞானம், மூலதனம் யந்திர சாதனங்கள்; தொழில் விஷயமாய்க்கட்டுப்பாடான ஒழுங்கும் ஏற்பாடும்; வியாபார ஸ்தலங்கள் போக்கு வரத்து வசதிகள்; ராஜாங்கஉதவி; தொழில் முயற்சியில் துணிந்து தலையிடும் சிரத்தையும் ஊக்கமும்; ஆகிய இவைகளே அவசியமான தேவைகளாகும்; இவைகளைக் குறித்து சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

இயற்கைப் பொருள்கள்.

பொதுவாகச் சொல்வோமானால் இந்தியாவிலே இயற்கைப் பொருள்கள் அதாவது மூலப்பொருள்கள் ஏராளமாகக்கிடைக்கின்றன. எனவே தொழிலபிவிருத்திக்குரிய விசேஷமான சௌகரியம் இந்தியாவுக்கு இருக்கிறது. இப்படியிருந்தும் இங்கிருந்து மூலப் பொருள்கள் பல்லாயிரம் மைலுக்கப்பாலுள்ள தேசங்களுக்குச் சென்று, அங்கே அவைகள் தொழில்முறைமையில் பண்டங்களாகமாறி, மறுபடியும் இந்தியாவுக்குத் திரும்பிவந்து விலையாகும்படியிருப்பது என்ன ஆச்சரியம்! இந்தியாவின்பூசாரமோ பற்பலவிதமான விவசாயப்பொருள்களின் விளைவுக்கு அனுகூலமாய்இருக்கிறது. தாதுப் பொருள்களும் இங்கே அதிகமாகக் கிடைக்கின்றன. கிடைத்தும், ஒருதொழிலுக்கேற்ற இடம் இன்னதென்பதை அறிந்து, அந்த இடத்தில் தொழிலை ஸ்தாபிக்காததினால் அபரிமிதமான நஷ்டங்கள் ஏற்படுகின்றன வென்பதைக் கவனிக்கவேண்டும்.

பற்பலவிதமான தொழிலாளிகள்.

இந்தியாவிலே சில இடங்களில் தொழிலாளிகள் ஏராளமாக இருக்கின்றனர். சில இடங்களில் அவ்வளவு இல்லை. ஆகவே தொழிலபிவிருத்திக்காகத் தொழிலாளிகளைச் சேகரிக்கவேண்டும். தொழிலாளிகளின் சமூகவாழ்விலுள்ள ஜனசார அருமைகளைப் போக்கவும், ரயில்வேகட்டணங்களை குறைக்கவும், தொழிற்சாலைகளில் வேலை செய்வதில் உள்ள பலன்களை யதிகரிக்கவும், ஏற்பாடுசெய்தால், தொழிலாளிகளைச் சேகரிக்க முடியும். சாமர்த்தியசாலிகளான வேலையாளரென்றும், சாமர்த்தியசாலிகளல்லாத தொழிலாளிகளென்றும் தொழிலாளிகளை இருவகையாகப் பிரிக்கலாம். இந்தியாவிலுள்ள வேலையாளரில் பெரும்பாலரும் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள். வேலையாளரை நன்குபழக்கவேண்டுமென்பதே இச்சமயம் இந்தியாவின் மிகவும் அவசரமான தேவையாகும். ஆனதுபற்றி தொழிற்கல்வியைப் புகட்டுவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் பாடசாலைகள் ஏற்படவேண்டும். வேலையாளரின் திறமையை விருத்திசெய்யவும், அவர்களுக்கு அதிகவருமானம் கிடைக்குமாறு செய்யவுமே, மேற்படி பாடசாலையில் தக்க பாடங்களிருக்கவேண்டும். தொழிற் கல்வியைப் புகட்டுமுன்னே ஆரம்பக் கல்வியைப் புகட்ட வேண்டிய தவசியம்.

தொழில் முறைமையில் சாமர்த்தியம்.

இத்தேசத்திலே தொழில் முறைமையில் சாமர்த்திய சாலிகளான வேலையாளர் அநேகமாக இல்லை. இக்குறையை நிவர்த்தி செய்தால்தான் தொழிலபிவிருத்தி ஏற்படக்கூடும். அதற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் தொழிற்கல்விக் கலாசாலையொன்று இருக்கவேண்டும். மேலும் தொழில் ஞானத்தின் உயர்தர அம்சங்களைப் போதிப்பதற்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் தொழிலாராய்ச்சி ஸ்தாபனமொன்று இருக்கவேண்டும். தவிர, தொழிற்சாலைகளில் மாணவர்கள் அனுபவபூர்வமான ஞானம்பெறும் வண்ணம் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இங்கிலாந்திலே தொழிற்சாலைகளில் வேலைகற்றுக்கொள்ளுவதற்காக இந்திய மாணவர்களுக்குத் தக்க சௌகரியம்கிடைக்காததினால், மிகுந்த அதிருப்தியுண்டாயிருக்கிறது. ஏராளமான சாமான்களை இந்தியாவுக்காக அங்கேபிரிட்டிஷ் தொழிற்சாலைகளில் இந்தியா மந்திரி விலைக்கு வாங்கிவருவதனால், அந்த அதிருப்தியைப் போக்குவதற்குற்ற வழியை அவர் தேடவேண்டும்.

மூலதனம்.

இனி மூலதனத்தைப்பற்றிக் கவனிப்போம். இந்தியாவிலே தொழில் முயற்சிக்குக் கிடைக்கக்கூடிய மூலதனம் சொற்பம் இங்கே சிலர் பணத்தைத் தூங்கப் போட்டு வைத்திருக்கின்றனரென்பது உண்மைதான். ஆனால் ஏராளமான பணம் தூங்கிக் கிடக்கிறதென்பதுபெரிதும் மிகைபடச் சொல்வதாகும் தொழில் முயற்சிகளில் இந்தியர் தாராளமாய்ப் பணம்போட முன்வராதிருப்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள. தொழில் முயற்சிகளை ஸ்தாபிப்பவர்களுடைய திறமையில்ஜனங்களுக்கு நம்பிக்கைகுறைவாயிருப்பதும், தொழில் முயற்சிகளின் நிலைமையைப் பற்றி நிச்சயமில்லாமலிருப்பதும் முதல் காரணமாகும். இரண்டாவது காரணமென்ன வென்றால், இங்கே கிடைக்கக்கூடிய மூலதனத்தில் பெரும்பாகம் நிலங்களில் போடப்பட்டிருப்பதாகும்; தவிர நல்ல வட்டிகிடைக்கும் வியாபாரம் முதலியவைகளிலும் போடப்பட்டுளது. இவ்விடங்களில் போடப்பட்டுள்ள மூலதனத்தைத் தொழில் முயற்சிகளில் போடும்படி ஜனங்களைத் தூண்டவேண்டி இரண்டு வழிகளை அனுஷ்டிக்கலாம். தொழில் முயற்சிகளுக்கு கவர்ன்மெண்டார் ஆதரவளித்தால் அதுகாரணமாக முதலாளிகளுக்கு நம்பிக்கை உண்டு பண்ணலாம்; வேண்டுமளவு மூலதனம் கிடைக்காதிருப்பதே தொழிலபிவிருத்திக்கு முக்கியதடைகளாயிருக்கின்றன.

பணப் பழக்கமும் ராஜாங்கமும்.

தொழில் முயற்சிகள் தங்களுடையமூலதனத்தை மட்டும் நம்பியிருந்தால் போதாது. கடன்வாங்கிப் பணத்தைச் சேகரிக்கவேண்டும். இந்தியாவிலே பண லேவாதேவியானது வரவர அதிகரித்துக்கொண்டே போனால் தான், இந்தியாவில் செல்வ அபிவிருத்தியும் க்ஷேமலாப அபிவிருத்தியும் ஏற்படக்கூடுமென்று அர்த்த சாஸ்திர நிபுணரொருவர் சொல்லியிருக்கிறார். அன்னிய தேசத்தினரால் நடத்தப்படும் பாங்கிகளோ தக்க ஈடுகாட்டும் இந்தியத்தொழில் முயற்சிகளுக்கும்பணம் கடன் கொடுக்க வழக்கமாக மறுத்துவருகின்றன. இது விசனத்திற் கிடமான செய்தியாகும். ஆகவே பண லேவாதேவிக்கான சாதனங்களைக்கவர்ன்மெண்டார் அவசியம் தேடிக்கொடுக்கவேண்டும். இதற்காக இந்தியா முழுவதற்கும்பொதுவாய் "ராஜாங்க பாங்கி" என்று ஒரு நாணயசாலையை ஏற்படுத்தவேண்டும்; இந்தியாவின் முக்கியமான இடங்களிலே அதன் கிளைகளை அமைக்கவேண்டும்; அல்லது ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு ராஜாங்க பாங்கியை ஏற்படுத்த வேண்டும்.

ராஜாங்க தனத்தின் உபயோகம்.

கர்ரன்ஸி நோட்டுகளை அச்சடித்து வழங்குவதில் கவர்ன்மெண்டுக்குக்கிடைக்கும் லாபத் தொகையும், கவர்ன்மெண்டுகளின் கையிலிருப்புள்ள தொகையும், ஜில்லாக் கஜானாக்களில் கையிருப்பாக வுள்ள தொகையும், லண்டனிலே நாணயமாற்றுக்காக இந்தியா மந்திரியிடம் வைக்கப்பட்டிருக்கும் தொகையும், நோட்டுகளை அச்சடித்துச் செலாவணி செய்வதற்காக வைத்திருக்கும் சேமநிதியின் தொகையும், அந்த ராஜாங்க பாங்கியில் போடப்படவேண்டும் இச்சமயத்தில் அத்தொகைகளோ கவர்ன்மெண்டின் கஜானாக்களில் பிரயோஜனமற்றுக் கிடக்கின்றன; அல்லது லண்டனிலே கடன்கொடுக்கப்படுகின்றன. பாங்கிகளிலே பணப்பழக்கம் இல்லாமல், பெரிதும் பணமுடக்கு ஏற்பட்டிருக்கும் காலங்களில கவர்ன்மெண்டின் கஜானாக்களிலே பணம் பல தடவைகளில் நிரம்பிக் கிடப்பதுண்டு. ராஜாங்கபாங்கியொன்று ஏற்படுமாயின், அத்தொகைகளின் பெரும்பாகமானது இந்தியத் தொழிலபிவிருத்திக்கு மிக்க உபயோகப்படும். லண்டன் பட்டணமோ பணத்தில் மிகவும் பெருத்த இடம். அந்த இடத்திலே இந்தியாவின் பணத்தைக்கடன்கொடுப்ப தெப்படியென்றால், அது தவறாகலாய்க் காட்டப்படும் பரோபகாரமாகும். இந்தியாவினுடைய பணத்தை இந்தியாவின் நன்மைக்கே உபயோகப்படும்படி செய்யவேண்டுமென்று நாம் கண்டிப்பாய்க் கேட்பது சரியேயாகும். இந்தியாவின் தொழிலபிவிருத்திக்காக அன்னிய தேசங்களில் கடன் வாங்கக்கூடாதென்பதல்ல; கடன் வாங்கலாம். ஆனால், அக்கடன் தொகைக்குள்ள வட்டி

தான் கொடுக்கப்பட வேண்டும். அப்பணத்தினால் தொழில்முயற்சிகளில் கிடைக்கும் லாபத்தொகையானது இத்தேசத்தைவிட்டுப் போகக்கூடாது.

யந்திர சாதனங்கள்.

யந்திர சாதனங்கள் ஒருவகையில் மூலதனமாகும். ஆகவே அவைகளை ஜாக்கிரதையுடன் பராமரித்து வரவேண்டும். மூலதனம் கம்மியாய் இருப்பதினாலோ விலையின் மலிவினாலோ மட்டமான யந்திரங்களைப் பலர் வாங்கிவைக்கிறார். இது பெருந்தப்பாகும். முன்னம் அமெரிக்கரொருவர் கோடிக்கணக்கான பணம் செலவு செய்து யந்திரங்களை வாங்கி தமது தொழிற்சாலையில் நிர்மாணித்தார். அவைகளின் நிர்மாணம் சரியாவென்று ஒரு நிபுணருடன் அவைகளை அவர்பார்வையிட்டு வந்த பொழுது, யந்திரங்களின் நிர்மாண காலத்திலே, அவைகளைவிட உயர்தரமான புதியயந்திரங்கள் ஏற்பட்டு விட்டன வென்று அந்நிபுணர் அறிவித்தார். உடனே அவர் தாம் கோடிக்கணக்கான பணம் செலவிட்டு யந்திரங்கள் வாங்கியிருப்பதைப் பெரிதாக நினையாமல், புதுமாதிரியான யந்திரங்களை உடனே வாங்கிவைக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டார். யந்திரமானது எவ்வளவுக்கெவ்வளவு உயர்தரமாக இருக்கிறதோடு எவ்வளவுக் கெவ்வளவு உயர்தரமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு செலவு கம்மியாகும். ஆகவே தொழிற் சாலைகளுக்கு அதிகலாபம் கிடைக்கும். இதைக் கவனத்தில் வைக்கவேண்டும்.

தகுந்த ஏற்பாடும் ஒழுங்கும்.

தொழிலைச் சரியாக நடத்துவதற்குத் தகுந்த ஏற்பாடும் ஒழுங்கும் முக்கிய அவசியம். பலனடைவதற்கு அத்தகைய ஏற்பாடே ஜீவாதாரமாகும். பெரிய தொழில் முயற்சிகளை ஒருவரே நடத்துவதென்பது அபூர்வம். ஆகவே பலர் சேர்ந்து பங்காளிகளாக இருந்து நடத்தவேண்டும். இதுவரையில் இந்தியாவிலே கூட்டுக் கம்பெனிகள் நல்ல பலனடையவில்லை. தொழில் முயற்சிகளின் நிர்வாக சபைகளில் ஸ்தானம் வகிப்பவர்கள் அதற்கேற்ற நிபுணத்துவம் இல்லாதவர்களாக இருக்கின்றனர். தொழில் முயற்சிகளை நன்கு நடத்தக்கூடியவர்கள் மிகவும் அவசியம்.

வியாபாரப் படிப்பு.

ஆகவே அதற்காக வியாபாரப் படிப்பு அவசியமாகிறது. தொழில் முயற்சியை நடத்தக்கூடியவருக்கு அர்த்த சாஸ்திர ஞானம் இருக்கவேண்டும். இத்தேசத்திலே மூலப்பொருள்களின் விளைவு, வினியோகம், பண்டமாற்று முதலிய விஷயங்களை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். வியாபாரச் சட்டம், லேவாதேவி முறைகள், ஏற்றுமதி இறக்குமதி விஷயங்கள், நாணயமாற்றின் விகிதம், போக்குவரத்தின் செலவு, முதலிய பற்பல விஷயங்கள் தெரியவேண்டும். பற்பல தேசங்களிலே யூனிவர்ஸிடிகளில் வியாபாரப்படிப்பின் தேர்ச்சிக்குப் பட்டமளிக்கப்படுகிறது. அது முக்கியமான பட்டமாகவும் கருதப்படுகிறது. பம்பாய் யூனிவர்ஸிடியில் வியாபாரத் தேர்ச்சிக்குப் பட்டமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற மாகாண யூனிவர்ஸிடிகளும் அவ்விதமே செய்ய வேண்டும். வியாபார பட்டம் பெற்றுவிட்டதனாலேயே, வியாபார விஷயத் தேர்ச்சி ஏற்பட்டு விடுமென்று நினைத்து விடக்கூடாது.

உள்நாட்டு வியாபாரம்.

இத்தேசத்திலே பற்பல விதமான பண்டங்களுக்கு நல்லகிராக்கிஇருக்கிறது. இச்சமயம் இங்கே அன்னியதேச சாமான்கள் வந்து குவிகின்றன. அவ்வியாபாரத்தை நாம் கைப்பற்றி விடுவது கஷ்டமல்ல. நீண்டகாலமாகும்வரையில் நமக்கு வேண்டிய பண்டங்களை நாம் தயாரித்துக் கொண்டால் போதும். நம்முடைய தொழில் முயற்சிகள் மிகவும் பிரபலமடைந்து வன்மை பெறுமானால், அப்பொழுது

அவைகளை அன்னியதேசங்களுக்கு அனுப்பி லாபமடையப் பார்க்கலாம். இங்கே தயாராகிவரும் சிலபண்டங்களுக்கு அன்னிய தேசங்களில் ஏற்கெனவே நல்ல கிராக்கி இருக்கிறது. ஆகவே அந்தகிராக்கியை விட்டுவிடாமல், அதில் விடாது லாபமடைந்துவர நாம் முயற்சி செய்ய வேண்டும்.

போக்குவரத்து வசதிகள்.

லாபம் கிடைக்குமாறு சந்தைகளுக்கு சாமான்களை யனுப்புவதற்கேற்ற போக்குவரத்து வசதிகள் வேண்டும். தொழில்கள் வளரவேண்டுமாயின், சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்கான கட்டணவிகிதம் மலிவாய் இருக்கவேண்டும்; சாமான்கள் ஜடுதியில் அனுப்பப்பட வேண்டும்; தவிர சாமான்களை ஏற்றிக்கொண்டுபோய் இறக்குவதில் அவைகளை ஜாக்கிரதையாகக் கையாளவும் வேண்டும். இம்மூன்றும் மிக்க முக்கியம். இந்தியாவிலுள்ள ரயில்வேக்களிலே இம்மூன்றினும் அபிவிருத்தி யேற்படவேண்டும். ரயில்வே கம்பெனிகளின் நிர்வாக விஷயமாய் நமக்குள்ள குறைகளிலே பிரமாதமாக இருக்கும் இரண்டு குறைகள் எவை யெனில், கட்டணவிகிதம் அதிகமாயிருப்பது ஒன்று; அதோடு அந்தக் கட்டண விகிதங்களோ உள்நாட்டுப் பண்டங்களைக் காட்டிலும், அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும்சாமான்களுக்கு மிக்க சௌகரியமாய் இருப்பது இரண்டாவதாகும். எவ்வளவு அதிகமான லாபம் கிடைக்குமென்பதிலேயே ரயில்வே கம்பெனிகள் கண்ணு யிருக்கின்றன. ரயில்வேக்களில் பெரும்பாலனவை கவர்ன்மெண்டுக்குச் சொந்தமாதலாலும், மற்றுஞ் சில ரயில்வேக்களுக்கு கவர்ன்மெண்டிலிருந்து பல சாதனங்கள் கிடைத்து வருவதாலும் தேசத்தின் திரவிய நிலைமையை ரயில்வே கம்பெனிகள் அலட்சியஞ் செய்துவிடக்கூடாதென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ள நமக்கு உரிமையுண்டு.

ரயில்வேக்களின் நிர்வாகம்

அதுபற்றி ரயில்வேக்களின் நிர்வாகத்தைக்கவர்ன்மெண்டே வகிக்கவேண்டுமென்று மேதாவிகளான ஜனத் தலைவர்கள் சொல்லி யிருக்கின்றனர்; இப்படிச் செய்யாதுபோனால், மற்றொரு மார்க்கத்தை அனுஷ்டிக்கலாம். ரயில்வே கம்பெனிகளின் நிர்வாகத்தை தேசநன்மையை யொட்டிக் கவனித்து வருவதற்காக ஒரு கமிட்டியைச் சாசுவதமாய் ஏற்படுத்தலாம். அந்தக் கமிட்டியிலே ஹைகோர்ட்டுஜட்ஜிகளில் இருவர் இருக்கவேண்டு மென்பதோடு நிபுணர்களான ஐரோப்பிய ரொருவரும், இந்திய ரொருவரும் இருக்கவும் வேண்டும். தேசத்தின் நன்மையை உத்தேசித்து ரயில்வே கட்டண விகிதங்களை மாற்றவோ திருத்திஅமைக்கவோ வேண்டுமாயின், அவ்விதமே செய்ய அக்கமிட்டிக்கு அதிகாரம் இருக்கவேண்டும். மூலப்பொருள்களையும் யந்திரங்களையும் ஏற்றிச் செல்லுவதற்கு ரயில்வேக்களில் குறைவான கட்டணவிகிதம் ஏற்படுத்தினால், தேசத்தின் திரவிய அபிவிருத்திக்கு அது மிகவும் அனுகூலமா யிருக்கும். சாமான்களின் போக்கு வரத்திக்கு ரயில்வேமட்டுமேயல்லாமல், நதி, கால்வாய் முதலியவைகளும் போக்கு வரத்து சாதனங்களாய் இருக்கின்றன. ஆகவே நதி, கால்வாய் முதலிய போக்கு வரத்து வசதிகளை நிர்மாணிப்பதிலும் சீர்படுத்துவதிலும் கவர்ன்மெண்டார் மிக்க கவனம் செலுத்தவேண்டும்.

இதர தேசங்களில் ராஜாங்க உதவி.

தொழிலபிவிருத்திக்கு ஒன்பதாவது தேவையாக உள்ளது ராஜாங்க உதவியாகும். தேசத் திரவிய அபிவிருத்திக்கு ராஜாங்கத்தின் உதவி மிகவும் அவசியமென்று உலகமெங்கும் ஒப்புக்கொள்ளப்பட்டுளது. உலகத்திலே நாகரீகத்தில் முதிர்ந்த தேசங்களிலெல்லாம் தேசத் தொழிலபிவிருத்திக்கு ராஜாங்கத்தார் உதவிபுரிந்து வருகின்றனர். ஜப்பானிலே திரவிய

அபிவிருத்திக்கு ராஜாங்கத்தார் வரன்முறையாக உதவிபுரிந்து வந்திருக்கின்றனர். தலைதூக்கச் சிரமப்படும் தொழில் முயற்சிக்கு ஜெப்பானிய கவர்ன்மெண்டார் உதவி புரிந்திருப்பதோடு, முக்கியமான தொழில்களை கவர்ன்மெண்டாரே நடத்திக் காட்டியு மிருக்கின்றனர். அதனால் அத்தேசத்தில் மிக்க திரவிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. ஹங்கேரி தேசத்தின் நிலைமையானது அநேகமாக இந்தியாவின் நிலைமையை ஒத்திருக்கிறது. அத்தேசத்திலே தொழி லபிவிருத்திக்கு ராஜாங்கத்தார் பேருதவி செய்திருக்கிறார்கள். தொழில் முயற்சிக்குப் பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்திருப்பதோடு தொழில்முயற்சிகளின் மூலதனத்திற்கு இவ்வளவு லாபம் கட்டிக் கொடுக்கப்படுமென்றும் உறுதி கூறியிருக்கின்றனர். தவிர ராஜாங்கத்திற்கு வேண்டிய சாமான்களெல்லாம் உள்நாட்டு சாமான்களாக இருக்கவேண்டு மென்றும், விதித் திருக்கின்றனர். தவிர, தேசத் தொழிலபிவிருத்திக்குச் சாதகமாய் நானாவிதமான சட்டதிட்டங்களையும் செய்திருக்கின்றனர்.

இந்திய ராஜாங்கத்தின் கடமை.

இத்தேசத்திலே தொழிலபி விருத்திக்கான சாதனமெதையும் கவர்ன்மெண்டார் தேடிக்கொடுக்கவில்லை. நான்றுவும சென்ற சில வருஷகாலமாக கவர்ன்மெண்டார் சிறிதளவு சிரத்தைகொண்டிருக்கின்றனர். இப்பொழுது தொழி லபிவிருத்திக் கமிஷன் ஏற்பட்டிருப்பதனால், அது காரணமாக மிக்க பலன்கள் கிடைக்குமென்று பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே அக்கமிஷனுடைய விசாரணை காரணமாக மிகவும் சௌகரியமான நன்மைகள் கிடைக்காதுபோயின், தேச ஜனங்களுக்குள்ள ஏமாற்றமோ மிகவும் அதிகரிக்கும். இந்தியத் தொழில்முயற்சியாளர் தக்கஜாமீன் கொடுப்பார்களாயின் அவர்களுக்கு ராஜாங்க பாங்கிகள் கடன்கொடுக்க வேண்டுமென்றும் முன்பே சொல்லியிருக்கிறேன்.

போக்குவரத்து வசதிகளிலும் தக்க சௌகரியங்களை கவர்ன்மெண்டார் தேடிக்கொடுக்க வேண்டும். தவிர, ஒரு தொழில் முயற்சியானது சரியான நிலைமையி லிருக்கிறதென்று தோன்றினால், அதன் மூலதனத்திற்கு இவ்வளவு விதம் லாபம் கட்டிக் கொடுக்கப் படுமென்று கவர்ன்மெண்டார் உறுதி கூறவேண்டும். இவ்விதம் செய்தால், இந்தியத் தொழில்முயற்சிகளில் பணம் போடுவதற்கு ஜனங்கள் அதிகமாக முன்வருவார்கள். புதிதாக ஒரு தொழில் ஏற்படும்பொழுது, அதற்குப் பண உதவி கிடைக்குமாயின், அதை ஜனங்கள் பாராட்டுவார்கள். தொழில்களை இன்னவாறு நடத்தவேண்டு மென்பதாக பெரிய தொழில்களைத் தங்களுடைய செலவில் கவர்ன்மெண்டார் வைத்து நடத்திக் காட்டுவார்களாயின், அதைக்கண்டு அத்துறையில் இறங்க ஜனங்களுக்கு தைரியமுண்டாகும். உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் தயாராகும்பண்டங்கள் கூடியவரையில் நன்றாக இருக்குமாயின், அவைகளை எப்பொழுதும் வாங்குவதாக கவர்ன்மெண்டார் தீர்மானிக்கவேண்டும். இது ஓர் உதவியாகும். இவ்விஷயத்திலே கவர்ன்மெண்டார் இதற்கு முன் அனுஷ்டித்து வந்த மார்க்கமானது திருப்திகரமாக இருக்கவில்லை. ஆகவே, ராஜாங்கத்திற்கு வேண்டிய சாமான்களை இங்கிலாந்தில் வாங்குவதென்று இருப்பதால், இந்தியாவிலும் அச்சாமான்களை வாங்குவதாக ஏற்பாடு செய்ய வேண்டிய தவசியம்.

கடமையை நிறைவேற்றும் வழிகள்.

இந்திய ராஜாங்கத்தார் மேலேகண்ட கடமைகளை நிறைவேற்றவேண்டுமானால், அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில் விஷயங்களைக் கவனிப்பதற்காக தொழில் இலாகா என்று ஓர் இலாகா ஏற்படவேண்டும். தொழில் விஷயங்களில் நிபுணரான ஒருவர் அந்த இலாகாவுக்குத் தலைவராக இருக்கவேண்டும். உத்தியோ

கஸ்தர்களும் அல்லாதவர்களுமாகத் திறமையுள்ளவர்க ளடங்கிய சபையொன்று அவருக்கு உதவியாக இருக்கவேண்டும். தலைதூக்கச் சிரமப்படும் தொழில்களுக்கும், புதியதொழில் முயற்சிகளுக்கும் கவர்ன்மெண்டின் ஆதரவு அவசியமே. தகுந்த ஒழுங்குடனும், ஏற்பாட்டுடனும் இந்தியாவிலே ஐரோப்பியர்களால் நடத்தப்படும் தொழில்களுக்கு கவர்ன்மெண்டி லிருந்து உதவி வேண்டியதில்லை. இதனால் ஐரோப்பியத் தொழில் முயற்சிக்காரர்களுடன் நமக்கு சச்சரவு இல்லையாயினும், இந்தியரின் பணத்தைக்கொண்டுஇந்தியராலேயே நிர்வகிக்கப்படும் தொழில் முயற்சிகளால் தேசத்திற்கு எவ்வளவு நன்மையுண்டோ அவ்வளவு நன்மையானது ஐரோப்பியத் தொழில் முயற்சிகளால் நமக்குக் கிடைப்பதில்லை யென்பதை நாம் எடுத்துக் காட்டவேண்டும். மேலே கண்டவாறெல்லாம் இராஜாங்கத்தார் உதவி செய்வது பிரயோஜனமே, ஆனால் அவர்களால்செய்யக் கூடிய மேலான உதவி யொன்றுளது.

மிகவும் மேலான உதவி.

அதாவது தொழிலுக்கும் வியாபாரத்துக்குமாகப் பாதுகாப்புவரியை விதித்துக் கொடுப்பதாகும். அத்தகைய பாதுகாப்பு அவசியமென்று முன்னேற்ற மடைந்த தேசங்களெல்லாம் நம்பி யிருக்கின்றன. இங்கிலாந்திலே அத்தகைய பாதுகாப்பு இல்லாதிருந்தும், எக்காலத்தும் அங்கே அவ்விதம் பாதுகாப்பில்லாமல் இருந்திருக்கவில்லை. அங்கே தொழில்முயற்சி ஏற்பட்ட ஆரம்பகாலத்திலே பாதுகாப்பு ஏற்பாடுகள் அனுஷ்டிக்கப்பட்டன. இந்தியாவிலே தயாரிக்கப்பட்டு இங்கிலாந்துக்குப் போய் இறக்குமதியான சாமான்களின் விஷயமாய் இங்கிலாந்தில் எவ்விதம் பாதுகாப்பு அனுஷ்டிக்கப்பட்டதென்பது பிரசித்தம். ஆகவே அதை மறுபடியும் திரும்ப உரைக்கவேண்டியதில்லை. பாதுகாப்பு இருந்தால்தான் ஜெர்மனி, அமெரிக்கா, ஜெப்பான் முதலிய தேசங்களுடன் இந்தியா போட்டிபோட்டுச் சமாளிக்க முடியும். எந்தெந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்பதைக் கவனித்து அதற்குத் தக்கவாறு பாதுகாப்புச் செய்ய வேண்டும். தேசத்தின் திரவிய நிலைமையையும் சாவதானத்தையும் கவனிக்கும்பொழுது, தொழில்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று இந்த யுத்தம் நன்கு காட்டிவிட்டது. ஆகவே அவ்விதம் பாதுகாப்புச் செய்துகொடுக்க வேண்டுமென்பதைப்பற்றி ராஜாங்கத்தினரும் ஜனத்தலைவர்களும் சிரத்தையுடன் கவனம் செலுத்தவேண்டும்.

ஏகாதிபத்தியத்துக்குள் வியாபார சௌகரியம்.

ஏகாதிபத்தியத்துக்குள் வியாபார விஷயமாய் ஒவ்வொரு பாகமும் பரஸ்பரம் மற்றொன்றுக்கு சௌகரியம் செய்துகொடுக்கவேண்டு மென்ற விஷயத்தைக் குறித்து இங்கிலாந்தில் மிக்கவிவாதம் உண்டு. ஆயினும் அவ்விதம் விவாதம் செய்வதில் எப்பொழுதும் இந்தியாவின் நன்மை கவனிக்கப்பட்டதாகவில்லை. ஏகாதிபத்தியத்துக்குள் ஒவ்வொருபாகமும் மற்றொன்றுக்கு வியாபாரசௌகரியம் செய்து கொடுக்கவேண்டு மென்பதை இந்திய ஜனத்தலைவர்கள் ஒப்புக்கொள்ளுமுன், அம்முறைமை காரணமாக இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன வென்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

வீட்டுத்தொழில்களும் குடிசைத் தொழில்களும்.

இதுவரையில் நான் பெரிய தொழில் முயற்சிகளைப்பற்றியே சொல்லி வந்தேன். ஏனென்றால் பெரிய தொழில் முயற்சிகள் பிரபல மடைந்தால்தான், இந்தியாவில் செல்வ அபிவிருத்தி நன்குஏற்படும். வீட்டுத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் அலட்சியஞ் செய்யப்படலா மென்று நாம் நினைத்துவிடக் கூடாது. மிகவும் நாஸூக்கான வேலைகளை யெல்லாம் கைபி

ஞல் தான்செய்ய முடியும்; சிறியதொழில்களை நன்கு ஒழுங்குடன் அமைத்து நடத்திவர வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள்.

சிறிய தொழில்களின் அபிவிருத்திக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய சாதனமாகும். இச்சமயம் கூட்டுறவுச்சங்கங்களோ விவசாய விஷயமாகத்தான்உழைத்து வருகின்றன. வரவர அச்சங்கங்கள் தொழில் முயற்சிகளிலும் உதவிபுரிந்து வரவேண்டும். அத்தொழில்களுக்கு ராஜாங்கமும் பல விதத்தில் உதவிபுரிந்து வரவேண்டும். உதாரணமாக, யந்திரங்களை வாங்கிக்கொடுத்து, அவைகளின் விலையைப் பலதவணைகளில் பெற்றுக் கொள்ளலாம்; மூலப் பொருள்களை அவைகளுக்கு மொத்த விலைக்கு விற்றுவரலாம். தொழிற் பொருள்களின் சம்பந்தமான காட்சிகளை நடத்தி வைப்பதில் பலனுண்டு.

துணிந்து செய்யும் ஊக்கம் வேண்டும்.

தொழிலபிவிருத்திக்கு மிகவும் அவசியமான தேவைகளிலே, தொழில் முயற்சிகளில் துணிந்து நடத்தும் ஊக்கம் நமக்கு இருக்கவேண்டு மென்பதே எல்லாத்தை வைக்கும் மேலானது. தேசத்திலே தொழிலபிவிருத்திக்கு எந்த விதமான சாதனங்களும் நிலைமையும் சௌகரியமாக இருந்தபோதிலும், தொழிலைத் துணிந்து செய்யும் ஊக்கம் தகுந்தபடி நம்மிடம் இருந்தால்தான், நமது தேசத்தில் செல்வ அபிவிருத்தி ஏற்படும். "ஊக்கமின்றேல் ஊதியமில்லை" யென்னும் வசனத்தைக்கவனிக்கவேண்டும். முயற்சியின் இடை நடுவிலே அதைரியத்துக் குரிய விஷயங்கள் சம்பவிக்குமாயினும், அதுபற்றி தளர்ச்சியடைந்துவிடக்கூடாது. ஊக்கமது கைக்கொண்டு புத்திசாலித்தனத்துடன் தொழிலை நடத்துவோமாயின், தொழிலபிவிருத்தி திட்டமாக ஏற்பட்டுவிடும்.

முடிவுரை.

நமது தேசத்திலே தொழிலபிவிருத்தி ஏற்படவேண்டும்மென்பதை யனுசரித்து, நமது ராஜீயம், ஜனுச்சாரம், கல்வி ஆகிய அம்சங்களில் சீர்திருத்தங்களைப் பற்றிய ஜீவாதாரமான பிரசினைகள் ஏற்பட்டுள்ளன. ஜன சமூகத்தினர் மட்டுமே யல்லாமல் கவர்ன்மெண்டாரும் தற்கால நிலைமையிலுள்ள தேவைகளை நன்கு கிரகித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற பல வருஷங்களாக இக்கான்பரன்ஸின் முயற்சிகளால், ஜனங்களின் மனோவேகத்தையும் உணர்ச்சியையும் கிளப்பிவிட்டிருக்கிறோம். எங்கும் அத்தகைய மனோவேகமும் உணர்ச்சியும் தோன்றியிருப்பதை நான் காண்கிறேன். இந்தியாவானது விழித்தெழுந்திருப்பதை நான் பார்க்கிறேன். இந்தியரில் லட்சக்கணக்கான பேர் சுரங்கங்களிலும் தொழிற் சாலைகளிலும் வேலைசெய்வார்களென்று எதிர் பார்க்கிறேன் இந்தியாவுக்குப் பூர்வகாலத்தி லிருந்த செல்வமும், ஏராளமான ஆடு மாடுகளும், "மறுபடியும் முன்போல பெருகுமென்று நம்புகிறேன். இந்தியாவானது பூர்வத்திலிருந்த உன்னத பதவியையும் அந்தஸ்தையும் அபிவிருத்தியையும் அடையுமென்று தோன்றும் நாளானது சீக்கிரத்தில் வருமாறு கடவுளைத் துதிப்போமாக என்று தமது பிரசங்கத்தை முடித்தார்.

***

இந்திய ஆபரணத் தொழில்.

சாஸ்திர ஆராய்ச்சியில்லாமலே அனுபவத்தைக்கொண்டே தட்டாரத்தொழில் எப்படி உற்பத்தியாகியிருக்கலாம் என்று நினைக்கும்போது, ஆதிகாலத்தில் சில்பிகள் ஆலயநிர்மாணம் செய்து அதில் ஏற்படுத்தப்பட்ட சிலைகளிடத்தில் பக்தி விசேஷித்து அதனால் பெருகிய அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு விலையுயர்ந்த ஆபரணங்களினால் அலங்கரிக்க முயன்ற காலத்தில் தட்டாரத்தொழில் ஒன்று உற்பவமாயின என்று தீர்மானிக்க இடம் கொடுக்கின்றன. ஆலயங்களில் அனுபவிக்கும் ஆபரணங்களின் தோற்றத்தினால் பக்தி விசுவாசத்துடன் பூசிக்கும் ஸ்திரி புருஷர்களும் அம்மாதிரி ஆபரணங்களை அலங்கரிக்க முயன்று, இத்தொழில் பெருகியது எனலாம் தற்காலம் தென்னிந்திய ஜனங்கள் நகைகள் அணிவதில் அதிக பிரீதியுடையவர்களா யிருப்பதினால் நகைகள்செய்யும் தொழிலானது சதா செழிப்பாகவே இருப்பதாகத் தெரிகிறது. இதனால் விஸ்வகர்ம கூட்டத்தார்களின் மற்றெல்லா தொழில் செய்பவர்களைப் பார்க்கிலும் நகை செய்பவர்கள் கொஞ்சம் வருமானமும், நாகரீகமும் உள்ளவர்களா யிருக்கிறார்களென காணப்படுகின்றது. மேலும் இத்தொழில் ஆங்கிலேய அரசாட்சியினால் யாதொரு வித்தியாசமும் அடையவில்லை. மற்றத் தொழில்களைப்போல் ஆபரணங்கள் செய்பவர்களுக்கு மாத்திரம் யாதொரு கலப்பினால் கஷ்டம் நேரிடாமலிருப்பதை யின்னும் காணலாம்.

தற்காலம் தட்டாரத்தொழில் செய்து வருகிற ஷாப்புகளிலும் அநேகமாய் விஸ்வகுலத்தார்களே வேலை செய்வதினாலும், நகைகள் வேண்டியவர்களெல்லாம் ஊர் வேலைக்காரர்களிடத்திலேயே வேண்டிய வேலைகளை செய்துக் கொள்கின்றமையாலும் நமது வம்சத்தொழில்களி லெல்லாம் இந்த ஒரேதொழில் தென்தேசம் முழுமையும் ஒரு பொது நோக்காய்ப்பார்க்கும்போது மற்றவேலைகளை விட வருமானவிஷயங்களில் கொஞ்சம் அனுகூலமான நிலைமையிலிருப்பதாகவேதெரிகிறது. இதிலொழுங்கானவர்களாயும், வேலைத்திறமை யுடையவர்களாயு மிருப்பவர்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களைவிட அதிக வருமானமுள்ளவர்களா யிருக்கிறார்கள். இப்படியிருக்கின்றமையால் இது வெகு பிரயோசனமுள்ள வருமானம் தரத்தக்க முக்கிய தொழில் என்று ஏற்படுகின்றது. இதனால் இத்தொழிலில் ஒருவிதமான பிரீதிகொண்டு நகைகளின் விபரங்களை யோசிக்கலாயினன்.

உரு, 1-ல்

காட்டிய நகைகளின் விவரங்களை யோசித்தால் கணக்கில்லாமல் வெகு அதிகமாயிருக்கின்றன. மேல்கண்ட நகைகளை ஒரு ஸ்திரியின் மங்களகரமான தோற்றத்திற்குப் போதுமானவை. இது வெகு அதிகம் என்று தோன்றியபோதிலும் புராதனமாய் ஸ்திரிகளுக்கென்று ஏற்படுத்திய ஆபரணங்களில் அநேகம் விடுபட்டேயிருக்கின்றன. இதில் காட்டியுள்ள கத்திரிப்பாகல் என்னும் காதில் அணிந்தநகையானது காதின்கீழ்தொங்கும் ஜிமிக்கைக்கு பொருத்தமாக தோன்றுகின்றமையால் ஜிமிக்கையை உபயோகிப்பவர்கள் கத்திரிப்பாவலை தள்ளப்படாது என்றது என் அபிப்பிராயம். ஆனால் ஜிமிக்கையுடன் பொருத்தமாய் உபயோகிக்கும் ஜப்பல் என்ற ஒரு நீண்டநகை யுண்டு.

உரு, 2-ல்

இதைக்காதில் அணிந்தால் அதின்பின் உள்ள மற்ற எல்லா நகைகளையும் மூடிக்கொள்கின்றன. நகையின்பேரில் நகைபோடுவதில் என்ன சிலாக்கியம். மிக்கயோசனையுள்ள நமது முன்னோர்கள் ஏன் இப்படி ஏற்படுத்தினார்கள். தொழில் பழக்கமும்

அலங்கார ஞானமுமுள்ளவர்கள் இதைப் பற்றி விரிவாய் எழுதக்கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நாம் அலங்காரப்படுத்தும் தொழிலை அனுசரித்து அனேகதலை முறையாய் நடந்து விருத்திக்கு வந்திருக்கின்றன. இதனால் பெருகிய நம்முடைய சொந்த ஞானத்தை நமக்குள் எவ்வளவு உபயோகித்து விருத்திசெய் திருக்கின்றோம் என்பதைத் தெரிய விரும்புகின்றேன். மேற்கண்ட ஆபரணங்களுடன் ஜிலுப்பா, மயிர்மாட்டி என்ற நகைகளையும் உபயோகிக்கிறோம்.

உரு, 3-ல்

இன்னம் என்னென்ன நகைகள் தலையில் அணிவது எனத் தெரியாதவைகளிருக்கின்றனவோ. சிறுவயதுள்ள பெண்கள் கூந்தலைக் கொண்டையாகவும், பின்னலாகவும் கட்டிக்கொள்கிறார்கள். கொண்டையின்மேல் உபயோகிக்கும் நகைகள் என்னென்ன? மற்றபாகங்களுக் கெல்லாம் நிறம்ப நகைகள் ஏற்படுத்தியிருக்கக் கொண்டையை மாத்திரம் காலியாய் விட்டிருக்க மாட்டார்கள்.

உரு, 4-ல்

கண்டபடி பின்னலில் ஜடை நாகம், குச்சி, குப்பி முதலியன வெகு பொருத்தமாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் விடுபட்டபாகம் ஒன்றுமேயிராது தெரிந்தவர்கள் விளக்கிவைக்க வேண்டும்.

இப்படிக் கெல்லாம் விருத்தி யடைந்திருக்கிற நமது தொழிலானது தற்கால நிலைமையிலேயிராமல் கொஞ்சம் விருத்தியடையும் பொருட்டு ஒவ்வொரு நகைசெய்பவர்களும் இராஜாங்க பாஷையாகிய இங்கிலீஷை கொஞ்சம் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டு உலகவிவகாரங்களை அப்போதைக்கப்போது அறிந்து அதற்குத் தக்கபடி நாணயமாய் தொழில்நடத்தினால் வருமானமும், கௌரவமும் அதிகம் உண்டு என்றது உண்மை. நம்மில் இங்கிலீஷ்பாஷை படித்தவர்கள்வெகுகொஞ்சம். அவர்களில் அனேகர் கொஞ்சம் படிக்க ஆரம்பித்தவுடன் தொழிலை அசட்டை செய்யவும், தொழில் செய்பவர்களை இழிவாய் நினைக்கவும் நேர்ந்து விடுகின்றமையால் நம்மில் இங்கிலீஷ் கற்றவர்களினால் நமது தொழிலுக்கு யாதொருபயன் படாமலும், தற்கால நாகரீகத்திற்கு வேண்டிய சீர்திருத்த மில்லாமலும் கஷ்டப்படுகின்றன. ஆகையால் ஆதியில் நகைத்தொழிலை அனுசரித்தவர்கள் புனப்பித்து இதுவரையிலும் நாம் அனுபவித்துவருகிற ஆபரணங்கள் இன்னின்னவென்று விபரமாய்த் தெரிவித்து அதற்குமேல் இன்ன விதவாய் விருத்திசெய்ய வேண்டுமென்றதை யோசித்தால் எதாகிலும் பலன்கிட்டும் என்ற தைரியத்துடன், அப்போதைக்கப்போது அவரவர்களுடைய வேலைத் திறமைகளை உலகத்தார்களுக்கு வேண்டியபடிக் குமாற்றவும், நாகரீகப்படுத்தவும் கொஞ்சம் சாமர்த்திய முடையவர்களாயிருக்கவேண்டும். இந்த சாமர்த்தியமானது சாதாரணத் தொழிற் பழக்கத்தின் அறிவினாலுண்டாவதுடன் சித்திரப்பழக்கம் முதலியதைப் பழக்கத்தின் அனுசரணையினாலும் சீக்கிரம் அடையலாம் என்றது மற்றதேசங்களில் நடந்தேறிவரும் தொழில் நாகரீகங்களினால் தெரியவருகிறது. (தொடரும்.)

வேல்.

நமது தற்கால நிலைமை.

நாம் சபைகளென்றும், கமிடிகளென்றும், கான்பரன்சுகளென்றும், நடத்திவருகிறோம் அவைகள்எவ்விதமிருக்கிறதென்றால் ஆகாயத்தில் கோட்டைகள் கட்டுவதுபோலும் கனவுகள் காண்பதுபோலுமிருக்கின்றன. ஓர் கூட்டம் கூடினால் அக்கூட்டத்தில் சில ஜாதிப்பித்தர்கள் சேர்ந்து சிலவிஷயங்களைப்பேசித் தீர்மானித்துவிட்டுக் கலைந்துவிடுகிறோம். மறுபடியும் அவ்விஷயத்தைப்பற்றி கவனிக்கிறதில்லை. திரும்பவும் எப்பொழுது கூடுகிறோமோ அச்சமயந்தான் பழயபடி பேசுகிறோம். இது எப்படி இருக்கிறதென்றால் ஓர் மடத்தில் ஆண்டிகள் சேர்ந்து போதை வெறியால் இம்மடத்தை இப்படி கட்டவேண்டும் அப்படி கட்டவேண்டும் என்பதாகப் பேசிவிட்டு விடிந்தவுடன் வெறி தெளிந்து அவரவர்கள் வயற்றுமானத்தைக் கவனிக்கவேண்டி வெளிச்சென்றுவிடுவதுபோல் நமது கூட்டங்களும் ஆகிறது.

இப்படிக்கெல்லாம்செய்தால் நம் விஸ்வகர்மஜாதி பழயபடி எந்தக்காலத்தில் முன் வரும்? ஒருகாலமும் முன்னுக்குவாராதென்பது திண்ணம். முன்னுக்கு வரவேண்டிய மார்க்கம் வேறு இருக்கிறது. அதுபோல் நடத்தினால் கட்டாயம் கூடிய சீக்கிரம்பழயபடி முன்வரலாம். அதாவது:—

நமது ஜாதியாருக்கென்று பொதுஇடம் ஒன்று இருக்கவேண்டும். அந்த இடத்தில் புஸ்தகசாலை (லைப்ரெரி) ஒன்று ஸ்தாபிக்கவேண்டும். வாசகசாலை (ரீடிங்ரூம்)ஒன்றுஸ்தாபிக்கவேண்டும். நம்மவர்கள்யாராயிருந்தாலும் அவ்விடத்தில் வரப்போகஇருக்கவேண்டும். அப்பேர்ப்பட்டஇடத்தில்எந்தகூட்டமாகஇருந்தாலும் எந்தக் கமிட்டியாயிருந்தாலும் கூடவேண்டும். அவ்விடத்தில் தீர்மானிக்கிற தீர்மானங்களை ஓர்போர்ட்டு பலகையில் எழுதி வைக்கவேண்டும். அக்கூட்டத்திற்கு வராதவர்களாயிருந்தாலும் மறுநாள் வந்தாலும் பார்த்துக்கொள்ளவேண்டும். வரப்பட்டவர்களுடைய அபிப்பிராயங்களையெல்லாம் போர்டுபலகையில்அவரவர்கள்எழுதிவிட்டுப்போகவேண்டும்.இந்தக்கமிட்டியார்கள்வாரம்ஒருமுறை கட்டாயம் அவ்விடத்தில் கூடவேண்டும். இதிலுள்ள அபிப்பிராயங்களையெல்லாம் யோசித்து கூட்டம் கூட்டவேண்டுமானால் நோட்டீசு மூலமாக கூட்டம் கூட்டவேண்டும். அதில் தீர்மானிக்கிறவிஷயங்களையும் பழயபடி போர்டில் போடவேண்டும். இப்படி நடத்துவதற்கு பொது இடமிருந்தால்தான் முடியும். அப்படியில்லாமல் இன்றைக்கு ஓர் இடம் அடுத்ததினம் ஓர் இடம் அதற்குள் அவ்விடத்தில் விரோதமானால் மற்றோரிடம் இப்படி மாறினால் எந்தக்காரியமும் சரிவரநடக்காது. சன்னியாசியாகத் திரிபவனுக்கு சமுசாரத்தின் பேரில் எப்படி கவனம் செல்லாதோ அதுபோல் நமக்கென்று ஓர் பொது இடமில்லாவிட்டால் நம்மவர்களுக்கு கவனம் இராது. பொது இடமிருந்தால் சாதிவிஷயமாகக் கூடும் கூட்டத்திற்கும் கவனமிருக்கும். கவனம் வந்தபோதாகிலும் அந்த இடத்தைவந்து பார்ப்பார்கள். அப்பொழுது அவர்கள் மனதில் பட்ட அபிப்பிராயத்தை எழுதி வைப்பார்கள். இதில் விரோதிகள் இடமென்று இராது. எந்த கக்ஷிகாரர்களுக்கும் பொதுவான இடமாக ஏற்பட்டுவிடும். யாவரும் வரலாம். இதைப்பற்றி இக்குலப்பித்தர்கள் சிலராகிலும் சேர்ந்து ஓர் கட்டிடம்கட்டி முடித்துவிட்டால் இக்கட்டிடத்தையாகிலும் கவனித்து வருவார்கள். இவ்வித அபிப்பிராயத்தைக் கொண்டுதான் நான் நம்முடைய இடத்தைபொதுக்காரியத்திற்குத்தக்கவற்பாடுகள் செய்யவேண்டுமென்று உத்தேசத்துடன் பல முறை நம் பத்திரிகையில் எழுதியும் யாரும்கவனிக்கவில்லை. இனியாகிலும் இவ்வித ஏற்பாடுகள்செய்து நடத்தினால் நாம் கொள்ளும் கொள்கைகள் யாவும் கூடியசீக்கிரம் பூர்த்தியாகுமென்பது எனது கொள்கை.

இது நிற்க, இவ்வித கூட்டங்கள் சபைகள் இதரவிஷயமாக இச்சென்னையில் எத்தனையோ யிருக்கின்றன. அவைகளெல்லாம் இருக்க இடம் ஒவ்வொன்று அமைத்துக்கொண்டிருக்கின்றன என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அதனால் அதற்குள்ள கௌரவமும் ஒழுங்கையும் நாம் பார்த்திருந்தும் நாம் செய்வதில் ஒழுங்குபடச் செய்யாதிருப்பது நமது குறைகளை நன்கு வெளிப்படுத்துகிற தென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

***

விஸ்வகர்ம தொழிற்சாலை.

ஊக்கமது கைவிடேல்
பருவத்தே பயிர்செய்.

என்பதாக நமது மூதாட்டியார் சொல்லியபடி நாம் ஊக்கத்தை யிழந்தும், காலத்தைக்கடந்தும் நித்திரைசெய்துவிட்டோம் இனியாகிலும் நித்திரையை விடுவோம்.

நாம் கைத்தொழிலாளர்களாக இருந்தும் நம்முடைய கைத்தொழில்களை புதுபுதுமாதிரியாகவும் சூக்ஷ்மமாகவும்செய்து காட்டி பொருள்சம்பாதியாம லிருப்பது நமதுகுறையாக இருக்கிறது. அப்படி ஒருவர் இருவர் துணிந்து செய்யலாமென்றால் பொருளில்லாம லிருக்கிறது. ஆகையால் நாமெல்லாம் (ஷேர் ஓல்டராக) பங்காளிகளாக சேர்ந்து தொழிலை ஆரம்பிக்க உத்தேசம். இதற்கு ஓர் ஷேர் ஒன்றுக்கு ரூபா 10-ஆக அவரவர்கள் சக்தி அநுசாரம் எத்தனை-ஷேர்கள் எடுத்தாலும் எடுத்துக்கொள்ளலாம். இதற்குத்தக்க ஓர் மேதாவியை முன்னிலையாகத்தெரிந்தெடுத்துத் தெரிவிக்கிறோம். யாவரும் சேரவேண்டும். அப்படி சேர்ந்துவிட்டபின் தம்முடைய ஷேர்பணத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி கேட்கக்கூடாது. இதில் சேர்ந்தவர்களுக்கு எக்காலத்தில் கொடுக்கும்படி நேருமோ அப்பொழுதுதான் கொடுக்க முடியும்.

கூடிப்பிரியேல்.

இவ்வித பொதுக்காரியத்தில் சேர்ந்துவிட்டு உடனே விலகிவிடப்படாது. அப்படி விலகுவதானால் இதனால் ஏற்படும் லாப நஷ்டங்களை நன்குணர்ந்தபிறகுதான் பிரியவேண்டும். நாம் எத்தனையோகாரியங்களில் பணத்தைச் செலவிட்டுவிடுகிறோம். இப்பேர்பட்ட நமது சொந்த தொழிலில் பணத்தை உதவி அதற்குண்டாகிய யுக்திகளைச் சொல்லி வன் கஷ்டப்பட்டுப் பார்க்கப்படாது.

ஒருவர் ஓர் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதாகஇருந்தால் சாமான்னியமாக வெளிப்படுத்தி விட்மாட்டார்கள். அந்த அபிப்பிராயம் சரியோ அல்லவோ என்பதைத்தீரயோசித்துத்தான்வெளிப்படுத்த முயலுவார்கள், அதைச் சிலர் யோசியாமல் அதற்கு உடனே ஆக்ஷேபனைசொல்லிவிடுகிறார்கள். அப்படிச் சொல்வதையும் கவனிக்கத்தான் வேண்டும். இவற்றையெல்லாம் தீரயோசித்துக் கடைசியாக எது ஸ்திரப்படுகிறதோ அதைத்தான் கைப்பற்ற வேண்டும். அதைவிட்டு அவரவர்கள் அபிப்பிராயத்திலேயே அவரவர்கள் மனதைச் செலுத்தி மற்றவர்களைத் துன்பப்படுத்தக்கூடாது. அப்படி பலருக்கும் துன்பம் உண்டாகும் காரியத்தில் ஒருவர் பிரவேசித்தால் அவருக்கும் துன்பந்தான் சித்திக்கும். இப்படிதான் நாம்கெட்டுப்போனதற்குக்காரணம் "ஊரெங்கும்வாழக் கேடொன்று மில்லை" யென்பதாக நாம் நடந்தோமானால் நமக்குயாதொரு குறையும்வாராது.

ஒற்றுமையின் வலிமை.

அற்பப் பொருளாயினும், பல ஒன்றாய்ச் சேரின், காரியம் முடிவடையும். பல துரும்பைச் சேர்த்து ஒன்றாகத்திரித்தால், அக்கயற்றினால் மதயானையைக்கூட கட்டி விடலாமல்லவா?

பலகுறிப்புகள்.

விஸ்வகர்ம கான்பரன்ஸ் ரிபோர்ட்.

தஞ்சாவூரில் நடைபெற்றஇரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்சு மஹாசபையின் சகல நடவடிக்கைகளும், உபந்நியாசங்களும், அழகிய புகைப் படத்துடன் வெளிவந்து விட்டது. இதன் விலை அணா மூன்றுதான், போஸ்டேஜ் சார்ஜ் பிரத்யேகம். வேண்டுவோர் நாலணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பிவிடுகிறோம். தங்கள் விலாசத்தை தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

***

ஜாதி ஒற்றுமை.

இராமனாதபுரம் ஜில்லா கமுதிஎன்கிற கிராமத்திலுள்ள நமது விஸ்வகர்மாக்கள் முன்னிருந்த சுஜாதி கட்டுப்பாட்டினாலும் ஒற்றுமையினாலும் மகிமைபணங்களை வசூலித்து :40000-ரூபாவரையில் செலவிட்டு ஓர் பஜனைமடங்கட்டி முடித்தபிறகு கக்ஷிகள் ஏற்பட்டு மகமைபணம் செலுத்தாமல் 7–8 வருஷகாலம் பிரிந்திருந்தவர்கள் தற்சமயம் ஒற்றுமைப்பட்டு அவரவர்களுடைய மகிமைபணத்தைச் செலுத்திவருவதாகக் கேள்விப்பட்ட எமக்கு உண்டாகிய குதூகலத்தை சொல்லமுடியாது. மறுபடியும் அதில் சிலர் மட்டிலும் கட்டுக்கட்டங்காமலும் வரி செலுத்தாமலு மிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். நாம் ஒருவம்ச சுஜாதியர்களாக இருந்து ஜாதிகூட்டத்திற்குக் கட்டுப்படாம லிருப்பது சரியல்ல வென்பதை நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

இனி அவ்வித விரோதங்க ளில்லாமல் யாவரும் ஒருமனதாகக்கலந்து உழைக்கும்படிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

***

சபை வர்த்தமானங்கள்.

சென்னை விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் கமிட்டியின் ஆதரவின் கீழ், சென்ற, டிசம்பர்மீ 17உ சென்னை முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல் ஹாலில், ஒரு பொதுஜன மீட்டிங் நடைபெற்றது. கனம் ருவ்பகதூர் P. தியாகராய செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, நமது இந்தியாவிலுள்ள, நமது ஜாதியார்களின் கல்வி, தொழில், தற்கால நிலைமையைப்பற்றியும் தற்போது, விசாரணைக்கு வந்திருக்கும் இராஜாங்க கைத்தொழில்கமிஷனில், நமது குறைகளை தெரிவித்துக் கொள்வதின், அவசியத்தைப் பற்றியும், ஸ்ரீமான் N. துறைவேல் ஆச்சாரியார் B. A., V. கல்யாணசுந்திராச்சாரியார், T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் முதலியவர்கால், உபந்நியாசம் செய்யப்பட்டு, அடியில்கண்ட கனவான்களை ஷை கமிஷனுக்கு எழுத்து மூலமாக அனுப்ப, விஷய ஆலோசனை கமிட்டிக்கு நியமிக்கப்பட்டது. கனம் M. வேலாயுதாச்சயார்; N. துரைவேலாச்சாரியார், T. M. முக்கண்ணாச்சாரியார், N. முத்தியாலு ஆச்சாரியார், N. புண்யகோடி ஆச்சாரியார், N. அய்யாகண்ணு ஆச்சாரியார், T. K. இரங்கனாத ஆச்சாரியார், சிகிரெட்டரி T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார், N. B. ஷை கமிஷனுக்கு, 21—1—17 கமிட்டியாரால் தீர்மானம் அனுப்பபட்டது.

***

இலவச இராப்பாடசாலை.

சென்னை விஸ்வகர்ம கான்பரன்சு கமிட்டியின் பிரயத்தினத்தின் பேரில், வண்ணாரப்பேட்டையில், ஒரு இராப்பாடசாலை, சுஜாதி சிறுவர்களுக்கு ஸ்தாபிக்கப்பட்டு, சுமார்-40 தொழில் செய்யும், பிள்ளைகள் வாசித்து வருகிறார்கள். இதுபோல இதர ஒவ்வொரு பேட்டைகளிலும், ஸ்தாபிக்கும் நோக்கமாய், பிரதிவாரமும் மீட்டிங் கூடி, அங்குள்ள, நம்குல கனவான்கள், தங்களுடைய குலாபிமானத்தைக் காட்டவும், ஒத்துழைக்கவும் நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. மைலாப்பூரில் 27—1—17 ஒரு மீட்டிங் இது முயற்சியாகவே கூடி, சில தீர்மானங்களும் செய்யப்பட்டது.

கவர்ன்மெண்டு இந்தியா கைத்தொழில் கமிஷன்,

கான்பரன்க.

சென்னை கமிட்டியின் காரியதரிசி மிஸ்டர் T. M. தெய்வசிகாமணி ஆச்சாரியார் வைஸ்பிரஸிடெண்டு, மிஸ்டர், N. துரைவேலாச்சாரியார் B., A. அவர்களையும், நேரில் வந்து தமது விண்ணப்பங்களில் கண்ட விஷயங்களுக்கு கமிஷன் முன்பாக சாக்ஷியம் சொல்ல, ஆர்டர் அனுப்பப்பட்டு அதன்படி, 30—1—17 பகல் 12-மணிக்குபோய் விஸ்தாரமாக, எடுத்துச்சொல்லியதும் தவிர, கனம் ஆனரபில், பண்டி மதன்மோகன் மால்வியா C. I. E., கனம் ஸர், D. N. டா. கனம் ஸர், R. N. முக்கர்ஜி அவர்களும் பிரசிடெண்டும், நமது முயற்சியை வியந்தும் இனி செய்யவேண்டிய சரியான, வழிகளையும், தெரிவித்து, வாழ்த்து கூறினார்கள் இதன் முழுவிபரம், 31உ யில் வெளியான, மெயில், டைமஸ், ஹிந்து முதலிய பத்திரிகைகளில் காணலாம். அடுத்த நமது சஞ்சிகையிலும், விபரமாக வெளிவரும்.

***

மரக்குதிரை.

சிறியோர் பெரியோர் யாவரும் வேடிக்கையாக ஏறிச்செல்லக்கூடிய ஒரு மரக்குதிரை அமெரிக்காவில் செய்யப்பட்டு உபயோகத்தி லிருந்து வருகிறது. இக்குதிரையின் கால்கள் முன்னும் பின்னும் போகத்தக்க விதமாய் இணைக்கப்பட்டுள்ளன. குதிரையின் மேற்பக்கத்திலுள்ள ஒரு பிடியைத்திருப்புவதால், அதன் கால்கள் ஒவ்வொன்றாய் எழும்பி முன்னே போகின்றன; இதனால் குதிரைசெல்லுகின்றது. இன்னும் வேறுவிதமாய்த் திருப்புவதானல், குதிரை பின்னே போகவும், தலையசைக்கவும் கூடியதாயிருக்கின்றது. இக்குதிரையின்மேல் பெரியவர்களும் ஏறலாம் விடுமுறை நாட்களில் பலர் இதை வேடிக்கையாக உபயோகிக்கிறார்கள்.

***

சுஜாதி ஏழைமாணவர்கள்.

சென்னை வி. கா. கமிட்டியாரின் நன்கொடையினுல், F. A. வகுப்பில் ஒருவருக்கும், மெட்ரிகுலேஷன் வகுப்பில் ஒருவருக்கும் உபகார சம்பளம், சென்ற 4-மாதங்களாக கொடுக்கப்பட்டு வருகிறது. "பலதுளி பெருவெள்ளம்."

நமது சுஜாதியரின் நல் வரவு.

நாம் எதிர்பார்த்தபடி பிரம்மஸ்ரீ இன்ஜினீயர் T. A. இராமஸாமி ஆச்சாரியார், அவர்கள் ஜப்பானுக்கு போயிருந்தவர் 27—1—17ல் சுகமாய் தமது சொந்த வாசஸ்தானம் வந்து சேர்ந்த நற்செய்தி கிடைத்திருக்கிறது. இனி அவருடைய சகல விபரங்களும் அடுத்த சஞ்சிகையில் எழுதப்படும்.

விநோதமான கற்கள்.

பாலக்காடு தாலூக்காவைச் சேர்ந்த மான்ஹனூர் என்னுமிடத்தில் ஓர்வித விநோதக் கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம் அவற்றைப் பரிசோதிக்குமிடத்து, முற்காலத்தில் சில சவக்குழிகளில்கிடக்கும் ஓர்வகை மணிகள்போலக் காணப்பட்டனவாம். அவற்றின் குணங்களில் ஒன்று: ஒரு கல்லை ஒரு துணியில் மூடி நெருப்பில் போட்டால் அத்துணி தீப்பிடிப்பதில்லையாம். அவைகளின் மாதிரிகள் சென்னை கவர்ன்மெண்டு பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவென்று 'வைசிய மித்திரன்' எழுதியிருக்கிறது.

அழகே 1000 பொன்.

பெண்களுக்குக் கருப்பையில்உள்ள ரோகங்களைப் போக்கிப் புத்திர சந்தானத்தையும், மார்பின் தளர்ச்சியை நீக்கிப் பலத்தையும், முகவசீகரத்தையும், ஒழுங்கான மாதவிடாயையும், நோயற்ற வாழ்வையும், ஆரோக்கியத்தையும் உண்டுபண்ணும் அற்புத ஆயுர்வேத ஔஷதம் 'அமிர்த சஞ்சீவி' பஸ்பமே. 20-நாள் மருந்தடங்கிய புட்டி 1-க்கு விலை ரூ. 1—12—0 பத்தியமே இல்லை.

கிடைக்கும் இடம் "பாரதி ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

சித்திரப் படத் தொழிற்சாலை.

ஒவ்வொரு வேலைகளும் நேர்த்தியாயும்

அருமையாயும் செய்யக்கூடியது.

ஷை தொழிற்சாலையில் இதுபோன்ற படங்கள் பொன், வெள்ளி, செம்பு, பித்தளை முதலிய தகடுகளால் க்ருஹ பூஜைக்கும், ஆலய பூஜைக்கும், உரித்தான விநாயகர், சுப்ரமண்யர், கண்ணன், ஸ்ரீராமர், லக்ஷ்மி, சரஸ்வதி முதலிய தேவதா உருவங்களை சிற்ப சாஸ்திர இலக்கணப் பிரகாரமும், ரவிவர்மா படங்கள் போலவும், மனிதர்களின் போட்டோ படங்கள்போலவும் எந்தெந்த அளவுகள் வேண்டுமோ அந்தந்த அளவுப்பிரகாரம் யாதொரு தவறுதலின்றி மிக அழகாகவும், பார்ப்போர் மனதை பரிகரிப்பதாகவும், ஆநந்தத்தை யுண்டுபண்ணுவதாகவும், நகாசுவேலை, மட்டச்சுவேலை உள்பட தீர்மானமாக செய்து கொடுக்கப்படும். இதுவன்றியும், எவ்விதமான வேலைப்பாடுள்ள நகாசுவேலைகளும், மெழுகுவேலைகளும், க்ரஹபூஜைக்குரிய பொன் வெள்ளி முதலிய விக்ரஹங்களும் கெடுவுபிரகாரம் செய்து கொடுக்கப்படும்.

ஷை வேலைகளுக்கு (டிசயின்) சார்ஜ் பிரத்தியேகம்.

மற்ற வேலைகளுக்கு கூலி விஷயங்கள் நேரிலாவது கடிதமூலமாகவாவது தெரிந்துக் கொள்ளலாம்.

இப்படிக்கு,
P. V. சபாபதி ஆச்சாரி,
நெ. 66, கிழவசெட்டி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இந்தியன் அட்வர்டைஸர்.

ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

இச்சஞ்சிகை பிரதி ஆங்கிலமாதமும் வேதாந்தம், கல்வி, விவசாயம், வியாபாரம், மதவிஷயம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், இராஜபக்தி, நன்மார்க்க நாவல்கள், உலக அற்புதங்கள், வர்த்தமானங்கள் முதலான விஷயங்களும் வெளியாகிறது.

சந்தா விபரம்.

உள்நாட்டிற்கு வருஷத்திற்கு ரூபா	1—8—0
வெளிநாட்டிற்கு வருஷத்திற்கு ரூபா	2—0—0
தனிப்பிரதி	0—2—0

விளம்பர விகிதம்.

	ஒரு வருஷத்திற்கு,	6-மாதத்திற்கு,	3-மாதத்திற்கு.
ஒரு பக்கம் ரூ.	12 0	7 0	4 0
அரைபக்கம் ,,	7 0	4 0	2 8
கால் பக்கம் ,,	4 0	2 8	1 0

Sadhu Sangha Maha Sabah

(ESTABLISHED 1902)

SOUTH INDIA

NOTICE.

The Sadhu Sangha Maha Sabah, South India, founded by His Holiness Swami Karunananda, offers two Gold and two Silver medals for the best-written Essays in English on 'Loyalty to British Government.'

2. The competition is open to all students (boys and girls) of the Secondary Schools in the Presidency and the Colleges affiliated to the Madras University.

3. Each Essay should specify the writer's name in full, the School or College in which the student is receiving instruction and should be countersigned by the head of the institution.

4. The Essays will be scrutinized by a Committee on whose recommendation the medals will be awarded at a public meeting to be held on the Sixth Coronation day celebrations of the Maha Sabha at Madras.

5. The Essays must reach the undersigned on or before the 1st December 1916.

MADRAS,
15th October, 1916

SWAMI KARUNANANDA,
President Founder,
215, Mint Street, MADRAS.

கலியுக வர்த்தமானி.

இது கடந்த 9-வருடங்களாக எல்லாம் வல்ல இறைவனருளால் நடந்துவருகின்றது. இது அறிவைப் பரவச்செய்து, ஆனந்தத்தைத் தந்து மிகுபயன்விளைவிக்கும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை. பிரதி சனிவாரந்தோறும் பிரசுரிக்கப்படும்.

இதில் ஜீவர்களின் ஜனனோற்பவத் தெளிவும், பாபபுண்ணியத் தெளிவு, ஆத்மலாப விசாரணை, தருமம், கல்வி, புராணேதிகாசங்கள் மேற்கோள்களுடன், உள்நாட்டு அயல்நாட்டு, தந்தி, தபால், விகட, வர்த்தமானங்களும், ஐரோப்பாவில் நடக்கும் யுத்த சமாச்சாரங்களும் வெகு விமரிசையாய் பிரசுரிக்கப்படும்.

சந்தா தொகையை வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொண்டு பிரதி சனிக்கிழமை தோறும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

சந்தா விபரம்.

சென்னை சந்தாதாரர்களுக்கு.		வெளியூர் சந்தாதாரர்களுக்கு.	
ஒரு வருஷத்திற்கு	ரூ 2—8—0	ஒரு வருஷத்திற்கு	ரூ 3—0—0
ஆறு மாதத்திற்கு	ரூ 1—6—0	ஆறு மாதத்திற்கு	ரூ 1—8—0
சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகளுக்கு		மூன்று மாதத்திற்கு	ரூ 0-12—0
ஒரு வருஷத்திற்கு	ரூ 4—0—0	பிரத்தியேகக் காபி	0—1—0
ஆறுமாதத்திற்கு	ரூ 2—0—0		

கொ-கன்னியப்ப ஆச்சாரி அண்டு சன்ஸ்,

வேதகிரிமேஸ்திரி தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை.

விஸ்வகர்ம தொழிற்சாலைக்குரிய ஆயுதங்கள்.

மனு, மய, த்வஷ்ட, சிற்பி, விஸ்வக்ஞ ரென்று சொல்லப்படும் ஐந்துவித தொழில்களுக்குரிய ஆயுதங்களில் சிலதைத் தருவித்துக்கொடுக்கும்படி பலர் நம்மைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனதால், அவ்வித ஆயுத வகைகளுக்கு நாம் கமீஷன் ஏஜண்டாயிருந்து இக்கம்பெனி மூலமாக எவருக்கு எவ்வித ஆயுதம் வேண்டியபோதிலும் அனுப்பச்சித்தமாகயிருக்கிறோம். ஆகையால், வேண்டியவர்கள் அட்வான்சுடன் ஆர்டர் கொடுத்தால் காலதாமதமின்றி உடனே குறித்த சாமான்களை அனுப்பப்படும்.

ஆயுதங்கள் விபரம்—1 கருமார் ஆயுதங்கள். 2 தச்சர் ஆயுதங்கள், 3. கன்னார் ஆயுதங்கள், 4 கல்தச்சர் ஆயுதங்கள், 5 தட்டார் ஆயுதங்கள்.

மேற்கண்டவைகளில் எவ்வித ஆயுதம் வேண்டுமோ அவைகளின் அளவுகளுடன் விபரமாய் எழுதவேண்டும். தவிர, இச்சாமான்கள் சீமை சாமான்களென்றும், அல்லது நாட்டு சாமான்களென்றும் விபரங்கண்டு எழுதவேண்டும்.

குறிப்பு:—கடிதம் எழுதுவோர் தங்கள் முழுவிலாசத்துடன் தெளிவாகவும் விபரமாகவும் எழுதவேண்டும். அவ்விதமில்லாத கடிதங்களுக்குப் பதில் எழுத சாத்தியப்படாது.

ரப்பர் (ஸ்டாம்பு) முத்திரை.

தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் ஆகிய இப்பாஷைகளில் எவ்விதமான ரப்பர்ஸ்டாம்புகள் வேண்டுமானாலும், சுத்தமாகவும் நேர்த்தியாகவும் செய்து அனுப்பப்படும். ஆர்டர்களுடன் அட்வான்சும் மாதிரிநிலுசும் அனுப்பவேண்டும். அட்வான்ஸ் அனுப்பாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

'பிரபஞ்ச பாஸ்கரன்'

என்னும்

ஓர் வாராந்திரத் தமிழ்ப் பத்திரிகை.

அன்பர்காள்! தேச ஊழியத்திற்காக பொதுப்படையாய் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதன்வாயிலாய் தேசப் பொதுஜன நன்மைக்குரிய வேதம், இதிகாசம், புராணம், வேதாந்தம் முதலான ஞானமார்க்கத்தைப்பற்றியும், முன்னோர் பெருமை, பக்தி, விரதம், கிரமமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய ராஜாங்கப் பொதுவிஷயங்கள், இன்னும் இதுபோன்ற அதாவது பொதுவாய் தேசக்ஷேமத்துக்குரிய அரியபெரிய வியாசங்களை வெளியிட்டுவரவேண்டுமென்ற நன்னோக்கம் நம்மனதில் நெடுநாளாய்க் குடிகொண்டிருந்தது. அக்குறை நீங்குமாறு அடுத்த 1917-ம் வருஷம் ஜனவரி மாதத்திலிருந்து "பிரபஞ்சபாஸ்கரன்" என்னும் நாமத்துடன் டெம்மி 8 பக்கம் கொண்டதாக வெளிப்படுத்த சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் ஒருவருட சந்தாரூபா மூன்று.

ஆனதால், நமது தமிழபிமானிகளனைவரும் இவ்வரிய பத்திரிகைக்கு இப்போதே சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரிக்க முன்வந்து தங்கள் முழுவிலாசத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன். அவ்வன்பர்களின் பெயர்களை நமது ரிஜிஸ்தர் புஸ்தகத்தில் பதிவு செய்துகொண்டு ஆரம்பப் பத்திரிகையை அவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். மற்ற விபரங்களனைத்தும் அப்பத்திரிகை மூலமாகவே தெரிவிக்கப்படும். நமது நன்னோக்கம் இனிதுமுடிய இறைவன் அருள்புரிவாராக.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
ப்ரோப்ரைடர்,
நெ. 5/10 வேதகிரிமேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

புதிய கம்பெனி! புதிய சாக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பிதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

---

108 உள்ள மாலை 1-க்கு 6-அணு முதல் ரூ. 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ. 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணு முதல் ரூ. 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூ. 5—8—0, ஷை. சிறுக 1-க்கு ரூ. 4-8-0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ. 6-8-0, தபால் செலவு பிரத்தியேகம்.

வெண் பட்டு வேஷ்டிகள்.

முழம்	அகலம்.	விலை ரூபா.
4	2	4-8-0 6-11
5	2½	6-முதல் 8-வரையில்
5	3	7 „ 9 „
6	2½	8 „ 9 „
6	3	9 „ 12 „
7	3	10 „ 13 „
8	3	12 „ 15 „
9	3	14 „ 16 „
10	3	15 „ 18 „

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு ...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு ...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு ...	2	0	0
சிறிது 100-க்கு	0	6	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு ...	75	0	0
„ 2 „	50	0	0
„ 3 „	40	0	0
„ 4 „	35	0	0
„ 5 „	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால்செய்த சொம்பு, குடம், கிண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி காசி,

தாராநகர் தெரு, காசி.

Manager.

SIKL PITAMBER & Co.,

Daranagar Street.

Benarse, City.

கெ. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,

பட்டு வர்த்தகம், காசி.

பல பகிரங்க கண்காக்ஷிகளில் நன்கு மதிக்கப்பெற்று பொன், வெள்ளி, மெடல்களும், நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றிருக்கின்றன.

நாணயமும் நம்பிக்கையுமான யிடம்

இதுவே யென்று தெரிந்துகொள்ளுவ தவசியம்.

காசியில் நெசவாகிற சகலவிதமான பட்டுதினுசுகளும்.

ருத்திராக்ஷம், கஸ்தூரி, குங்குமப்பூ, பால்காயம்,

காசி வயிரவர் கயிறு முதலியவைகளும்

விற்பனைக்குத் தயாராக யிருக்கிறன.

எப்பொழுதும் எங்கள் தினுசுகளும் அதன்விலைகளும்

நல்லதிருப்தியைக் கொடுக்குமென்பதை சொல்லாமலே விளங்கும்.

பட்டு தினுசுகளின் விபரம்.

புடவைகள்	பச்சகானு வேஷ்டிகள்
சால்வைகள்	மடிவேஷ்டிகள்
ரவிக்கை துண்டுகள்	நார்மடி வேஷ்டிகள்
தாவணிகள்	சுவாமிபரிவட்டங்கள்
கைகுட்டைகள்	நார்மடி புடவைகள்

விபரகேட்லாக் வேண்டுவோர் எழுதினால் இனமாக அனுப்பப்படும்,

K. S. Muthiah & Co.,

தந்தி விலாசம்
Muthiah Benares. City.

Silk Merchant,
BENARES CITY.

இன்டியன் டைப் பவுன்டரி.

ஓ. துரைசாமி ஆச்சாரி அண்டு சன்ஸ்.

நெ-7 சூலை ஹைரோட், மதராஸ்,

நானாவித அச்செழுத்துகள் தற்கால வேலைத்திறத்தின் நாகரீகத்திற்கு பாங்காகும்படி

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வார்த்து சப்ளை செய்கிறோம்.

அச்சாபீசுக்கு வேண்டிய மற்றும்

மரக்கோல வகையராக்கள், பித்தளை கம்போஸிங் ஸ்டிக், லெட், மாட்ரைஸ், பன்ச்ஸ் முதலான சகல சாமான்களும்

எங்கள் வசம்

ஸருவான விலைக்கு கிடைக்கும்.

யாவும் நல்ல வேலைப்பாட்டுடன் தயாரிக்கப்படுகின்றன.

இதன்றியும்

மதராஸில் அகப்படக்கூடிய சர்வ "ஸெகண்ட் ஹாண்ட்" பிரிண்டிங் மெஷின்களுக்கும்

நாங்கள் கமிஷன் ஏஜண்டு.

☞ எங்கள் புதிய டைப் ஸ்பெஸிமன் ஜாப்தாவுக்கு எழுதவும்.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

நவம்பர் மாதம் முதல் வெளிவரும்

கற்பகம்.

இது தமிழ் பாஷையைப்பரவச்செய்து
பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக உழைக்கும்

ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள்நாட்டிற்கு 0—12—0 வெளிநாட்டிற்கு 1—0—0

இதில் வித்யா விஷயம், கல்வி, சாஸ்த்ரம், சுகாசாரம், வைத்யம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க விஷயம், ஜனசங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பனைகள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம் வர்த்தமானம், விநோதக்கதை முதலான அரும் விஷயங்கள் வித்வத்சிரோன்மணிகளால் எழுதப்பட்டு வெளிவருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்றவரையில் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு
ஒரு வருஷப் பத்திரிகை இனாம்.

மானேஜர்,
"கற்பகம்" புதுவை.

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

18 கண்டசுத்தி மாத்திரைகள்:—டைரெக்ஷனில் சொல்லியபடி, இதை சாப்பிட்டு வந்தால் தொண்டைகட்டு, தொண்டைகம்முதல் நீக்குவதும் அன்றி, இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத்தரும். சங்கீதவித்வான்களுக்கும், பிரசங்கம் செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும், பிரசங்கித்தாலும், குரல் கம்மாது, இனிமையான ஓசையைத்தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும், பர்மாவிலும் 1-முதல் 6. சீசாக்கள் வரையில் பாக்கிங் தபால் முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

19. சுகந்த ஸ்நானப்பொடி:—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம்செய்து வந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத்தந்து, தேமல், அரிப்பு, சொரிசிரங்கு, கற்றாழை நாற்றம், கைகால் எரிச்சல், மேகசாங்கை, சரீரவரட்சி, கணைச்சூடு, வெடிப்பு, கரப்பான், தலைவரி, பொரிமேகம், படர்தாமரை, மேகஊரல், கிரந்தி முதலிய இன்னும் அநேக விததோலைபற்றிய வியாதிகள் தீரும். நல்லவாசனையும், காந்தியும் லக்ஷ்மீகரமும், ஆரோக்கியமு முண்டாகும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.

20. சஞ்சீவிமாத்திரைகள்:—இம்மாத்திரைகளினால் தலைவலி, தலைபாரம் சளி, இருமல், சுரம், மயக்கம், வாந்தி, விஷசுரம், இசிவு, வயிற்றுவலி, தெற்குத்திக்கனை முதலிய நோய்கள் தீரும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். விலை சீசா 1-க்கு அணா 10, இந்தியாவிலும், பர்மாவிலும், 1-முதல் 6-சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய செலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

21. கோரோஜனை மாத்திரைகள்:—இம்மாத்திரையினால் இருமல், சளி, சுரம், வயிற்றுப்பிசம், ஜலதோஷம், இளைப்பு வலி, மயக்கம், தெற்குத்திக்கனை, ஜன்னி, வயிற்றுப்போக்கு, தோஷம், முக்குமாந்தம், ஊதுசணம், செவ்வாப்பு, கடுவான், கரப்பான், பால்மாந்தம் முதலிய எல்லா மாந்தங்களும், கருங்கிரந்தி, செங்கிரந்தி, மலஜலக்கட்டு முதலியதுகளும் மலைசுரம், முறைசுரம், முதலான பலவித சுரங்களுக்கும் அடியோடு நீங்கும். சீசா 1-க்கு விலை அணா 10 ஒன்று முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி
ஜீரண சக்தியை விருத்திசெய்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ரத்த சுத்தி ரத்த விருத்திசெய்து
தேக பலத்தைக் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மூத்திர சம்பந்தமான பிணிகளைநீக்கி
நரம்புத்தானங்களைப் பலப்படுத்துகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

புத்தி தீக்ஷணியத்தையும்
மனோற்சாகத்தையும் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

சரீர சம்பந்தமான வியாதிகளை யெல்லாம்
குணப்படுத்துகின்றன.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா—1.

வைத்தியசாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
157-பிராட்வே, 96-மவுண்ட்ரோட், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 16 MAR 1917 MADRAS

உ

ஸ்ரீமத் விராட் விஸ்வப்பிரஹ்மணே நம:

விஸ்வகர்ம குலோபகாரி.

மலர்-4. { நளஹூ மாசிமீ 1917ஹூ பிப்ரவரிமீ } இதழ்-2.

மெய்ஞ்ஞான தீபம்.

கடவுள்தாம் உண்டாக்கிய இந்தயாக்கையைக்காக்கும்பொழுது அழிப்பவர்ஒருவருமில்லை; அக்கடவுள் அழிக்கும் பொழுது அதனை உலகில் காப்பவர் ஒருவருமில்லை. ஆதலால், தமக்கு பற்றுக்கோடாகிய கடவுளைமறந்து அசுத்தமும் அநித்தியமும் துக்கமுமாகிய தமது யாக்கையிலே அபிமானம் வைத்து, அதனைத்தாமே பாதுகாக்க வல்லமை யுடையோரென முயலுவது அறியாமையேயாம். இவ்வறியாமையுடையவர், தமது யாக்கையை எவ்விதத்தினும் தாம் காத்தல் கூடாமையால், அந்த யாக்கையும் நீங்கி மறுமையினிடத்து இழிவு தங்கிய பிறப்பையு மடைந்து துன்புறுவர். ஆதலால் கடவுளே சர்வ அதிகாரி யென்றும், அவராலே அடையப்படும் மோக்ஷமே நித்தியமும் ஆநந்தமுமாய் உள்ள தென்றும், தெளிந்த மெய்ஞ்ஞானமுடையோர் இந்த யாக்கையிலே சிறிதும் அபிமான மின்றி, மோக்ஷத்தினிடத்தே பேரவாவுடையராய் இந்த யாக்கையை கடவுள் வசத்தே ஒப்பித்து அவரையேபற்றி நிற்பர். ஆதலால் அப்பெரியோர்வழிநின்று யாக்கையில், அவாவற்றிருப்பதே மனித ஜென்மத்தின்பயனும்.

நாம் முன்னுக்கு வரவேண்டுமானால், நம்மிடத்து ஒற்றுமை அவசியம் இருக்க வேண்டும். நாம் ஆரம்பிக்கும் ஒவ்வொரு காரியமும் ஒற்றுமைக் குறைவினாலேயே முற்றுப்பெருமற் போகிறது. ஒற்றுமை என்னும் அரும்பொருள் நம்மிடத்து இருக்குமாயின், எத்தகைய பெருங்காரியங்களையும் அதிசுலபமாய்ச் செய்து சித்தி பெறலாம். ஒற்றுமையே அசாத்திய காரியங்கள் என்னும் பெருமலைகளை வெட்டித்தகர்க்கும் வச்சிராயுதம் ஆகும்.

நம்மவர், நம்மிடத்தில் நம்பிக்கை வைப்பதேகிடையாது. நம்பிக்கை யற்றபோது எங்கிருந்து ஒற்றுமை உண்டாகும். நாம் நலம் பெற்று வாழவேண்டுமாயின்; நம்மவரை விஸ்வாசிக்கவேண்டும், நம்மவரிடத்து இரக்கம் பாராட்டவேண்டும். இங்ஙனம் செய்வதால் நமது நாட்டின் முற்போக்கில் நாட்டம் இயல்பாகவே உண்டாகிறது. உண்டாக, கைத்தொழில் முதலாய முயற்சிகள் ஏற்படுகின்றன. ஏற்படும் அளவையில் ஒற்றுமை என்னும் குன்றுப்பொக்கிஷத்தை நம்மவரிடத்து, நம்மவர் சேரிவின், நாடு முன்னேற்றம் அடைதற்கு ஆக்ஷேபமே இல்லை.

நாட்டின் முற்போக்கை நாடுதற்குமுன்னே, நமது குலத்தினரது முற்போக்கை நாடுதல் நமதுமுதற் கடமையாகும். நமது குலத்தினர் மிகக்ஷீணதிசைக்குப் போயிருப்பதற்குக் காரணம் ஒற்றுமைக்குறைவேயாகும். யாராவது ஒரு நற்காரியத்தைச் செய்யப்புகின், அவர்களை ஏளனம்செய்வதும், புறங்கூறுவதும், நம்மவர் பெரும்பா

லாருடைய குணமாய் இருக்கிறதேயன்றி அந்தப் பெருங்காரியத்தைச் செய்வார்க்கு ஊக்கம் உண்டாகத் தேறுதல்கூறி ஒத்துழைக்கும் குணமே கிடையாது. இங்ஙனமாயின், எங்கே நம்மவருட் சிலர் நற்காரியங்களிலே தலையிடுவது!

ஒற்றுமை! ஒற்றுமை! ஒற்றுமை! நாம் முன்னேற்றம் அடைய ஒற்றுமை என்னும் அரியமாணிக்கத்தைத் தேடவேண்டும். நமக்கென்னவந்தது; "நாட்டின் வளப்பம் கிணற்றுத் தவளைக்கேன்" என்றபழமொழியைப்பேசி, பெண்டாட்டி பிள்ளை வயிறு நிறைந்தாற்போதும் என்ற குணத்தை அறவே விடவேண்டும். ஒற்றுமையைக் கையாடவேண்டும். நம்மவர்செய்யும் சத்காரியங்களைப் போற்றவேண்டும். அவர்களுடனும் ஒத்து உழைக்கவேண்டும். இங்ஙனம் நம்மவர் செய்யும்பக்ஷத்தில், எல்லாவற்றினும் குறைபடாதவராய், பரமானந்தத்துடன் நம்மவர் வாழ்வார்என்பது சத்தியம், முக்காலும் சத்தியம்.

***

நமது பத்திரிகை.

நமது குலோத்தாரண விஷயமாய் நாம் எவ்வித முயற்சி எடுத்துக் கொண்டோம், எந்த எந்த வழியிற்பாடுபட்டோம், எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளானோம் என்பன நமது குலச்செல்வர்கள் எல்லாம் அறிந்தனவே. நமது குலத்தின் பூர்வமேன்மையை அறியாதிருக்கும் நம்மவர் பலர்க்கும் அறிவுறுத்திப் பண்டைய நிலைமையில் அவரை நிறுத்தவேண்டி, அதற்கு ஏற்றவழியாதோ என்று பலநாள் எண்ணி, கடைசியில் நமது குலப்பெருமையைக் கூறியுள்ள நூல்களை வெளிப்படுத்தல், ஆசார முறைமை அடிப்படையாய் வர வேதாத்தியயன பாடசாலைநமது குலச்சிறுவர்களுக்கு ஏற்படுத்தல், அவ்வப்போது நமது குலப்பெருமையையும், குலத்தொழிலின் சீர்கேட்டையும் அதன் திருத்தத்தையும், அங்ஙனம் திருந்தச் செய்யும் தொழிலால் உண்டாகும் லாபத்தையும் அடிக்கடி தெரிவித்தல் என்னும் விஷயங்களால் குலம் சீர் பெறும் என்று உணர்ந்தோம். உணர்ந்து இத்துணையும் செய்தற்கு இன்றியமையாதது ஒரு அச்சுக்கூடம்என்றுதெளிந்து, 1909ம் ஆண்டில் விஸ்வகுலோத்தாரண அச்சுக்கூடம்என்ற பெயரால் அச்சுக்கூடத்தைஏற்படுத்தினோம். ஏற்படுத்தியானபின், யாம்பொருள்நிமித்தம் ஏராளமாய்ச் செய்திருந்தவெள்ளிவேலையை, மனம் பலகாரியங்களில் சென்றால், இப்பெரிய குலோத்தாரண விஷயம் முட்டுப்படுமே என்ற பயத்தால், எடுத்த கருமத்திலேயே கண்ணும் உழைக்க நிறுத்திவிட்டோம். அவ்வச்சுக் கூடத்தினின்றும் நமது சாதிய நூல்கள் பலவற்றையும் குறைந்த விலைக்கு வெளியாக்கினோம். வேதாத்தியயன பாடசாலை ஸ்தாபித்து நடத்திவந்தோம். இவைகளினால்நானாதேசத்திலுள்ளநம் சுஜாதியார்களின் அபிப்பிராயங்களை அறிந்தோம். இது போல் பலஇடங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும் மற்ற குலப் பற்றைக் கவனிக்கும் லாபலோபத்தையும் அடைந்தோம். நம்மவர் ஒவ்வொருவர்கையிலும் குலப்பெருமை விளங்க விஸ்வகர்மகுலோபகாரி என்னும் இப்பத்திரிகையும் வெளியிடலானோம். இது ஆரம்பமாய் மூன்றுவருடமும் முடிந்துவிட்டது, இவ்வளவு காரியங்களும் பிறருடைய உதவியின்றி, யாமே நம் குலத்தினர் விருத்தியா

ஞால் போதும் என்ற பேரவா ஒன்றுடனே நடத்தி வந்தோம். வருடமோ மூன்றாயின. பொருள் நஷ்டமோ ஆயிரக்கணக்காய் விட்டது. இவற்றாலுண்டான பலன்களை நாம் இவ்விடத்தில் விரித்துச் சொல்லவேண்டியதில்லை இம்மூன்றுவருடமாய்சாதி சாதி என்றுநடத்தியநமதுபத்திரிகைக்குவந்தசந்தாத்தொகை, அதன்தபாற்செலவுக்கும் கட்டாவிட்டால், காகிதச் செலவுக்கும், அச்சடிக்கும் கூலிக்கும், பைண்டு கூலிக்கும், எழுதுவோர் செலவுக்கும் எங்கேபோவது. குலச்செல்வர்கள் இப்பத்திரிகையின் பயனை அறியட்டும், என்று இத்தனை நாள்பொறுத்தோம் இப்பத்திரிகையின்கூக்குரலால் இரண்டு கான்பரன்சுகளும் நடந்தன. இந்த வருஷமும் நடக்க வேண்டிய முயற்சிக்கும் பாடு பட்டே வருகிறோம். இதனுடைய உண்மை, பத்திரிகையை வாசிக்கும் ஒவ்வொரு நண்பருக்கும் நன்றாய் தெரிந்த விஷயம் இவ்வித குலத்திற்கு உழைக்கும் சுஜாதி பத்திரிகைக்கே சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தவர்களும் தமது சந்தாப் பணத்தைச்சரிவரச் செலுத்துகிறதில்லை. இப்போதோ காகிதப்பஞ்சம் மேலிட்டு இந்தியாவில் உள்ள பிரசண்ட பத்திரிகைகளில் பல நின்றுவிட்டன. இந்தியாவில் மட்டும் அல்ல, இங்கிலாந்து முதலிய தேசத்திலும் இப்படியே. சில தமது அளவைக் குறைத்துக் கொண்டன. இத்தகைய சந்தர்ப்பத்திலும் சிரமம் பாராது நாம்பத்திரிகையை நடாத்தியும் சிலர்க்கு பொறாமையும் பொச்சரிப்பும் பொங்கிவழிகிறதேயன்றி, இரக்கம் என்பதுநம்மவருட் சிலர்க்கு இல்லாமலேபோய்விட்டது. அவர்கள் நாம் நமது சாதிவிஷயமாய் எவ்வளவு பாடுபட்டு வருகிறோம் என்பதை யோசித்தால் அங்ஙனம் செய்ய முற்படார். இனி இவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாகியும் இப்பத்திரிகையை நிறுத்த எமக்கு மனம் இல்லை. பத்திரிகையை இப்படியே நடத்தலாம் என்றாலோ அதனால் எமக்குப் பொருள் நஷ்டமே அன்றிப்பயனில்லை. என் செய்வது!

நமது பத்திரிகை இனி எவ்விதம் நடைபெற்றால் நமது குலத்தினர் பயனடைவார் என்ற விஷயமாய், நமது குலமேதாவிகள் சிலர் ஆலோசித்துக் கடைசியில் சாதி சாதி என்று ஊதும் சங்கத்வனியை அறவிட்டுத் தொழில் ஒன்றையே பிரதானமாகக் கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என்று எமக்குத் தெரிவித்தனர். அம்மேதாவிகள் கூறியது எமக்குப் பெரிதும் யுக்தமாகத் தோன்றியது. கைத்தொழில் என்றால், பொதுஜனங்களும் விரும்புவார்கள். நமது குலத்தினரும் பயன் அடைவார்கள். <u>ஆதலால் வருகிற மாதத்திலிருந்து இப்பத்திரிகையைக் கைத்தொழில் என்னும் பெயருடன் வெளியிடத் தீர்மானித்து விட்டோம்.</u> இனி இது தனது கைத்தொழில் என்னும் பேருக்கு ஏற்றவாறு சித்திரங்களுடனும், பிளான்களுடனும் நூதன கைத்தொழின் முறைமையும், பழைய கைத்தொழிலின் மர்மங்களையும் விளக்க வெளிவரும். இப்பத்திரிகையால் பலரும் பெரும் பிரயோஜனத்தை அடையலாம் ஆதலால், நமது குலச்செல்வர்கள் ஆதியில் இருந்தே இப்பத்திரிகையைத் த[illegible]று பெறுவார்கள் என நம்புகிறோம். ஒவ்வொரு மாதசஞ்சிகையிலும் பல அரியநூதன கைத்தொழில் செய்யும் முறை வெளிவருமாதலால், அவற்றின் பயனை இழந்துவிடா வண்ணம் நமது குலத்தினர்க்கு இதனால் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

கைத்தொழில்.

நம்தேச வாசிகளில் பெரும்பான்மையோர் பொது நன்மையை வேம்பாகவும் சுயநன்மையைக் கரும்பாகவும் மதித்துப் பொது நன்மையால் உண்டாகும் பயனின்னதென ஆழ்ந்தறியாமல் தமது வாழ்நாளை வீணாக்குகின்றனர். இது சுத்த மௌடீகம், ஏனெனில் சுய நன்மையை அபேட்சியாதவர்கள் ஒருவருமில்லை யென்றாலும் அவ்வொன்றிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து காலத்தைக்கழிய விடுவது அழகன்று. பொதுவாய் தேசக்ஷேமத்திற்கு ஏற்கும் விஷயங்களைத் தெரிந்தெடுத்து அவை கடைத்தேறுவதற்கான வழிவகையனைத்தையும் தவறின்றிச் செய்து முடிப்பதும் அதற்கு இடையூறாய் நிற்பவற்றை ஊடறுக்கச் சென்று விலக்கித் தேசக்ஷேம ஸ்திதியை நிலைபிறழாமல் நிறுத்தப் பார்ப்பதுமன்றோ சிறப்புடைத்து? இவை இவற்றைப்பயின்று தெளிவடைந்த வியாபகரிடம்வேரூன்றி நிற்குமென்று சான்றோர்கூறுவர். அப்படிப்பட்டவர்கள் நமது தேசத்தில் இல்லாமற்போகவில்லை. இருந்தும் அவர்களிடத்தில் இல்லை யென்றால் இருப்பது வேறு எவ்விடத்தில்? கல்விச்செல்வத்தோடு பொருட் செல்வமும் ஒருங்கே முதிரப் பெற்றவர்களே தேச க்ஷேமத்திற்கின்றியமையாத பொதுநன்மையைத்தளரவிடாமல் வளர்த்து, வளர்ப்பித்துத் தேசோபகாரிகளாய் நிற்பவர்கள். அவர்களையே தேசம் தனக்கு அடைக்கல ஸ்தானமாக்கிக்கொண்டு நிர்ப்பயமாய் நிலைபெற்றோங்கிவாழும். அம்மேம்பாடுடையோர் வேண்டுமளவிற்கு நம்தேசத்திற் கிடையார். இதர தேசங்களிலுண்டு. நம்மவர்களில் பணக்காரர் எனப்பெயர் பெற்ற கூட்டங்களில்ஒவ்வொருவராய்ப்பிரித்தெடுத்துச்சீர் தூக்குங்கால் சொற்பத்தனவான்களுக்கும் உள்ள பேதாபேதங்களை சற்றே கவனித்துப்பார்ப்போம். மேற்கண்ட வொவ்வொரு விஷயத்திலும் நமதறிவிற்குப் புலப்பட்டவரையில் ஒன்றுக்கொன்று ஒவ்வாது பேதப்படுவதால், அவ்விஷயங்களைத்தனவான்களே ஒருவருக்கொருவர் தம்மில் ஒப்பிட விளங்கும். அதில் ஒரு தனவான் தனது தேசத்தில் தன்னினும் மேலான தனவானையாவது அல்லது தன்னைப் போன்றவர்களையாவது ஒப்பிட்டுப்பார்க்கத்தானு மவர்களுடன் ஒருவனாயிருப்பதை நோக்கி மனத்திருப்தியடைகிறான். இவன் சாதுரியமும் யூகையுமுள்ள தேசங்களிலிருக்கும் தனவான்களுக்கு எவ்விதத்திலும் சமனாகமாட்டானென்பது தெள்ளிதில் விளங்குகின்றது. உதாரணமாக ஐரோப்பியரை நோக்குங்கள். எவ்வளவோ தளரா முயற்சியுடன் பற்பல தொழிற்சாலைகள் நிருமித்துக் காலக்கிரமம் தப்பாதென்றும் ஒரே சீராக அதிகச்சிரத்தையுடன் நடத்தி வருகிறார்கள். அப்படி நடத்திவருவதால் வர்வரப் பெருத்த வியாபாரிகளாகின்றனர். அதிக லாபம் பெறுகிறார்கள் பெரிய ஐஸ்வரியவான்கள் ஆகின்றார்கள்

ஜப்பானும் இந்தியாவும்.

தற்காலத்தில் ஜப்பான் கைத்தொழிலில் விருத்தியடைந்து மற்றெல்லா நாடுகளிலும் முதன்மை யாயிருப்பதின் காரணங்களைக்கவனிக்கில்கைத்தொழிலில் ஜப்பான் கவர்ன்மெண்டார் உதவும் உதவியே காரணமாகும். தொழில்களுக்கு வேண்டிய வசதியுள்ள விடங்களில் கவர்ன்மெண்டார் தங்கள் சொந்த செலவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி ஜனங்களைத் தொழிலில் பழக்கி வந்தார்கள். ஜனங்கள் தொழிலில் பழகி எங்கும் பரவிவரவே கவர்ன்மெண்டார்ஜனங்களுக்குத் தொழிலில்நிர்மாணம் செய்யவேண்டிய சாமான்களையும், முதலையும் சொற்ப வட்டிக்குக் கொடுத்து ஜனங்களுக்கு ஊக்க முண்டாக்கினர். இது காரணமாய் நாடெங்கும் கைத்தொழில் விருத்தியாகி மேனாட்டு முறைகளின்படி சகலவித சாமான்களையும் உற்பத்திசெய்ய வாரம்பித்தனர். 1880-ம் வருஷம் கவர்ன்மெண்டு மாதிரிச்சாலைகளை ஜனங்களே விற்றுவிட்டார்கள். தேச அபிவிருத்திக்காக இருப்புப்பாதைகளும் மின்சாரங்களும், விவசாயம் வியாபாரச்சட்டம், முதலான வசதிகளை முதலில் அன்னிய நாட்டாரைக்கொண்டே விருத்தி செய்தனர். ஸ்திரிகளை வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்க சிறிய தொழில்களைப் பயிற்று வித்தனர். 1896-ம் வருஷத்தில் டோசி டோவில் ஒரு கைத்தொழில் பொருட்காட்சி சாலை அமைத்து 65000 மாதிரிப் பொருள்கள் வைக்கப்பட்டன. கைத்தெழில் விவசாயம், வியாபாரக் கூட்டுறவு முதலியவைகளை இக்காட்சி சாலையில் வேண்டுவோர்க்கு தெரியச் செய்யப்படுகிறது. நம் பாரதநாட்டிலோ தற்காலம் வியாபாரம் அதிகமாய் நடந்த போதிலும் இந்திய கைத்தொழில் விருத்தியடையச் செய்யாமையால் ஏராளமான பொருள் அயல் நாடுகளுக்குச் செல்கின்றன. யுத்தம் ஆரம்பமான பிறகுதான் கைத்தொழில்களையும் செய்ற்கைப் பொருள்களையும் வேண்டியவாறு செய்து கொண்டு இந்தியாவிலேயே அவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளக் கணக்கற்ற ஜனங்கள் எண்ணினபோதிலும் ஜப்பான் கவர்ன்மெண்டைப் போல் இந்திய கவர்ன்மெண்டாரும் ஜனங்களின் விருப்பங்களை நிறைவேற்ற முன்வருவது நலம். அத்துடன்ஜன ஒற்றுமைவேண்டும். ஒற்றுமையின்றி கவர்ன்மெண்டார் உதவி மாத்திரம் இருந்தபோதிலும் தொழில் விருத்தியடையாது. ஐம்பது வருஷங்களுக்கு முன் இந்தியாவைவிட ஜப்பான் தாழ்ந்த நிலைமையிலிருந்தது. தற்போது ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைக்கவே உன்னத நிலைமையையடைந்தது. அதுபோல் இந்தியர்களும் இந்திய கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைத்துப் பொருளாதார நிலைமையை விருத்திசெய்யவேண்டும் இந்தியாவின் அபிவிருத்தி இந்தியர்களுக்கு மாத்திரமன்றி இந்திய கவர்ன்மெண்டாருக்கும் ஆதாயமென்பதையும் உணரவேண்டும்.

***

இந்திய ஆபரணத் தொழில்.

(சென்றமாத பத்திரிகையில் 32-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

சென்ற 200 வருஷங்களுக்கு முன் ஒவ்வொரு வேலைக்காரரும் சித்திரப்பழக்கத்தின் சாமர்த்தியத்தினால் தங்கள் தங்கள் மனதில்தோன்றும் புதியமாதிரிகளின் விபரங்களை ஒருவாறாய் வரைந்துபார்த்துப்பின்வேலை செய்தவர்களாகத் தெரிகிறது. இப்பொழுதுள்ளவர்களெல்லாம் அநேகமாய் வரையும் ஞானத்தைக் கைவிட்டு வேலை செய்யும் பழக்கத்தை மாத்திரம் உபயோகித்து வருவதினால் புதிதாய் செய்யும் வேலைகளில் மிக்கஷ்டப்படுகிறார்கள். இதற்குத்திருஷ்டாந்திரமாக சென்னை வண்ணாரப்பேட்டையில் காலம் சென்ற அமிர்தலிங்க ஆச்சாரியரென்பவர் அவர்வாழ்நாள் முழுமையும் நூதன தொழில்களிலேயே அபேட்சை கொண்டவராயிருந்து தட்டாரத் தொழிலுக்கு அனுகூலமான காப்புக்கட்டைகள் விலை சாசமாய் செய்தார். கவலை செய்ய அநேகப் பிரயத்தனங்கள் செய்தார். எல்லாம் ஒருவிதமான பெரும் போக்காய் முடிந்தனவே யொழிய அவர்பட்ட கஷ்டத்திற்குத் தக்கவாறு கருத்த சீர்திருத்தம் உண்டாகாமல் போயிற்று. இதனால் மற்ற தேசத்துக் கற்பனைக்காரர்களைப் போல் தீரயோசிக்கும் சக்தி அவரிடத்தில் குறைவு எனப்படாது. வேலைகளைச் சுலபமாய் யோசிக்க உதவியாயுள்ள சித்திரம் எழுதும்ஞானமும் அவரிடம் இல்லாமல் போயிற்று இதனால் மனதில்பட்டவைகளை யெல்லாம் உடனே வரைந்துபார்த்து, யோசித்து மார்க்கம் தொழில் செய்பவர்கள் ஒவ்வொருவரும் அனுசரிக்க வேண்டியது அவசிய மென்றே விளங்குகின்றது. நகைசெய்பவர்களுக்கும், மற்றவர்களைப்போல், உலகவிவகாரம் அப்போதைக்கப்போது அறியகொஞ்சம்இங்கிலீஷ்படிப்பும்,புதுப்பிக்கும் வேலைகளை வரைந்துபார்க்கச் சித்திரப்பழக்கமும், தெரிந்தே யிருக்கவேண்டும். இதை ஒப்புக்கொண்ட சிலர் தங்கள் தங்கள் பிள்ளைகளை இங்கிலீஷ் படிக்கவும், டிராயிங் பழகவும் செய்தனர். இவர்கள் அன்னியர்கள் (தொழில் சம்பந்த மில்லாதவர்களின்) சினேகத்தால் அவர்களுடைய உண்மையான நோக்கமாறி சிலர் ரயிட்டர்களாகவும், சிலர் டிராயிங் உபாத்தியாயர்களாகவும் கஷ்டப்படுகிறார்கள்.

நாம்தொழிலாளிகளாய்ப்பிறந்தமையால் தொழில் செய்தே கௌரவமடைய வேண்டியிருக்க பாரம்பரையாய் நம்மில் ஊறியுள்ளதை ஒருக்காலமும் மாற்றநினைக்கப்படாது. இத்தொழில் செய்பவர்களுக்கென்றே சென்னை சித்திரவேலை வித்தியா சாலையில் தட்டாரவேலைபழகும் சிறிய டிபார்ட்மெண்டு ஒன்று ஏற்படுத்தியிருக்கின்றது. நாகரீகமாய் வேலைக்கற்றுக் கொள்ள சம்மதமுள்ள பிள்ளைகள் இதில் சம்பளமில்லாமலே சேர்ந்து விருத்தியடையலாம் ஒவ்வொரு பிள்ளைகளுக்கும், டிராயிங், மட்டசுவேலை, நகாசுவேலை, கட்டடவேலை முதலியன கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அப்படிக்குச் செய்வதினால் பிள்ளைகள் சுலபமான நகைகளை பிளான் செய்யவும், அதை மற்றொருவர் உதவியில்லாமல் தங்கள்கையினாலேயே முடிக்கவும் பழகி

வருகிறார்கள். இப்பழக்கம் நீடிப்பதினால் நூதன நகைகள் புதுப்பிக்கவும் அதன் பிரகாரம் செய்து முடிக்கவும் பிள்ளைகளுக்குத் திறமையுண்டாகும் என்ற நம்பிக்கை உண்டு.

கல்வி கற்கும் விஷயங்களில் ஒவ்வொருவரும் பேரவாவுள்ளவர்களாகவே யிருக்க வேண்டும். அது சாதாரண கல்வியாயிருந்த போதிலும், தொழிற்கல்வியாயிருந்த போதிலும், ஆசைகொள்ளாவிடில் நேசம் உண்டாகாது.

செங்கற்பட்டில் ஆபரணத் தொழிலில் அநேக பெரிய வேலைகளைச் செய்து பிரக்கியாதி யடைந்த ம-ா-ஸ்ரீ அப்பாயி பத்தரென்பவர் இவ்வருஷம் இரண்டு அரிசியில் நமது சக்கிரவர்த்திகளின் ரூபங்களைச் செதுக்கி லால்குடி எக்சிபிஷனில் ஒரு பொன் மெடல் பெற்றதாகச் சொல்லக்கேட்டு ஆனந்தப் பட்டேன்.

இம்மாதிரி ஒவ்வொருவரும் அவரவர்களுடைய திறமையான வேலைகள் ஏதாயிருந்தபோதிலும், அவற்றை அப்போதைக்கப்போது நடைபெறும் கண்காட்சிகளின் இடங்களையும் சமயங்களையும் இப்பத்திரிகையின்மூலமாய் அறிந்து அனுப்பிகௌரவமடைவார்களென நம்புகிறேன். இஃதுடன் முக்கியமாய் ஆபரணத்தொழிலை அனுசரிக்கும் ஒவ்வொருவனும் ஆசார சீர்திருத்தங்களில் மற்றவர்களைவிட கொஞ்சம் அதிக கவனமாயிருக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். ஏன் என்றால் இவர்களால் செய்து கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வேலைகளையும் பெற்றுக்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் மிக்க சாக்கிரதையாயும் தக்க மரியாதையுடனும் உபயோகப்படுத்துகின்றமையால் இவர்கள் சிருஷ்டிசெய்து கொடுக்கும் ஸ்தானத்திலிருந்து வைதீக தோற்றத்துடனும் ஆசிர்வதித்தே கொடுப்பது கொடுப்பவர்களுக்கும் பெறுபவர்களுக்கும் லட்சுமிகரமான செயலாக, இருவர்கள் செல்வமும் ஓங்கிவளரும் என்ற நம்பிக்கை உண்டு. ஆகையால் இத்தொழிலுக்குத் தக்கவாறு வைதீக தோற்றத்தை விருத்தி செய்து கொள்வது வருமான விஷயங்களுக்கு வெகு சிலாக்கியம்.

பரமசிவமே தட்டாரக் கடைவைத்துக் கொண்டு இவ்வுலகில் ஓரிடத்தில் உட்கார்ந்தால் எவ்வளவு கூட்டங்கள் அவர்கையினால் செய்த ஆபரணத்தை அணிய அபேட்சிப்பார்களென்பதை யோசித்துப் பாருங்கள். அப்படிக்குப் பரமசிவனைப்போல் நமது நகைத்தொழிலை அனுசரிப்பவர்கள் ஆசார சீர்திருத்தங்களினாலும், உண்மையான செய்கைகளினாலும் விளங்கினால் வருமானக்குறைவுகள் ஏற்படாதென்று நினைக்கின்றேன். எல்லாத் தொழில்களிலும் பொருள் சம்பாதிப்பது முக்கிய கருத்து. பொருள் மதிப்பைப் பொருத்தது. மதிப்பு தோற்றத்தைப் பொருத்தது. தோற்றம் ஆசார சீர்திருத்தங்களினால் அல்லாமல் வேறுவிதமாய்ப் பெறுவது கூடாமை.

இவர் தட்டாரத் தொழிலில் வெகு தேர்ச்சியுடையவராய்த் தென்னாட்டில் ஓர் சிறிய கிராமத்தில் தன்மனைவியுடன் வாழ்ந்திருந்த காலங்களில் நான் ஒரு சமயம் அவர்களை சந்தித்த ஞாபகத்திலிருந்து மேற்கண்ட ரூபத்தோற்றத்தை ஒருவாருக வெளியிட்டேன். இவர் தட்டாரவேலையில் நிபுணராயிருந்த போதிலும் பொருள் சம்பாதிக்கும் பேராசை அதிகமில்லாமல் ஜீவனார்த்தத்திற்குத் தக்க வருமானம் வைத்துக்கொண்டு வைதீக விஷயங்களிலேயே பற்றுள்ளவராயிருந்தார் இதனால் இவர் தம்மனைவிக்கு இரண்டொரு ஆபரணங்கள் தவிர மற்றபாகங்களெல்லாம் காலியாய் வைத்திருந்த போதிலும் அவர்களிருவரையும் நான் பார்த்தபோது விஸ்வகர்மாவே தம்பதியுடன் விளங்கியது போல் என் மனம் பூரித்தது. இவ்வளவு உயர்ந்த தோற்றம் எதனால் உண்டாயிற்றென்று யோசிக்க, ஆசார சீர்திருத்தங்களே காரணமாகின்றன. உண்மையானவைதீகம் இவர்களிடத்திலிருப்பதை யாரும் நம்பலாம்.

இவர் பாவாடைஆச்சாரி. இவர் மனைவி மாராத்தை. இவர்களிருவரும் கடைக்குப் போய் வரும் வழியில் சந்தித்துக் கூடையில் உள்ள பதார்த்தத்தை அபேட்சையுடன் விசாரித்ததை பார்த்த ஞாபகத்தோற்றத்தை வெளியிடுகின்றேன்.

இவர்களுக்கு ஆபரணங்கள் அதிகமிருந்தபோதிலும் ஆசாரத்தினால் உண்டாகும் சீர்திருத்தக் குறைவினால் தோற்றக் குறைவு ஏற்படுகின்றது. விஸ்வகர்ம மகாஜெனகான்பரன்ஸ் நமதுஜனத்தொகையை மூன்றுலட்சம் என்று எடுத்துரைத்தார்கள். இத்தொகை மற்ற வம்சத்தர்களின் தொகைக்கெல்லாம் அதிகப்பட்ட முதல் நெம்பர் என்ற கேட்கமிக ஆனந்தப்படுகிறேன். இப்பெருங்கூட்டத்தில் விஸ்வகர்மாவைப்போல் விளங்குபவர்கள் எத்தனைபேர் விஸ்வகர்மாவின் முறையைத் தவறி நடப்பவர்கள் எத்தனைபேர்என்று அறிந்து வேண்டிய சீர்திருத்தங்கள் உண்டுபண்ணினால் அன்னியர்கள் நம்மைப்பன்றி குட்டியைப்போல் கூட்டம்பெருத்தவர்களென்று நினைக்க மாட்டார்கள்.

(தொடரும்.)

வேல்.

மேருவுக் கீசான மாசைத கிரியின்மேல்
விசிதமாய் மதி லெழுப்பி
மிக்கநவ மணிகளான் மாடமாளிகை கூடம்
வெகுசித்ர மா யமைத்தும்
சாருமரன் முப்புர மெரித்திடச் செல்லுமா
டங்கிடவு முரிய தெல்லாந்
தான்செய்து திரிபுர மெரித்திடவு முதவிசெய்
சாமர்த்திய மென்ன வெளிதோ
நேரிலாச் சத்தசா கரமெலா நிமிஷத்தில்
நினைவுமுன் னுண் டாக்கியும்
நிலமது சுமந்திடற் கரவமா ராஜனுட
னீடஷ்ட கஜ நாட்டியும்
மாருதத் தோடுபொரு வல்லமை யளித்திட்ட
வண்மைகுண சாலி யன்றோ
வாய்த்தபுகழ் சேர்நன்மதி யேய்ந்தகனமேவுநிதி
மார்கைதநக ராதி பதியே.

மது மாமிச விலக்கு.

(சென்ற மாதபத்திரிகையில் 9-வது பக்கத்துத் தொடர்ச்சி.)

கொலை செய்தவரும் புலாலை விற்றவரும், புலாலை விலைக்கு வாங்கினவரும், புலாலைப் புசித்தவரும், புலால் புசியாதவரைப் புசிப்பித்தவரும், சிலர் சொல்லுக்கு அஞ்சிப் புலாலைப் புசித்தவரும் ஆகிய எல்லாரும் நரகத்திற்கிடந்து அழுந்துவார்கள்.

“கொன்றான் கொல்லச் சொன்னான்
கூடசவழுத்தானட்டான்,
தின்றான் விலக்கிட்டான் சென்றேன்
று—கொன்றவனைக்,
குட்டவன் கட்டெரிக்க வெந்துகொடு
வெந் நரகிற்,
பட்டழுன்று வீழ்வார் பதைத்து”

என்று தனிபாடலிருக்கிறது.

சிலர் மிருகங்கள், பக்ஷிகள் முதலியவைகள் மனிதர்களுடைய ஆகாரத்திற்காகவே கடவுளாற் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன என்றும் நாம் உயிருடன் நெடுங்காலம்சுகமாய் ஜீவித்திருப்பதற்கு இன்றியமையாதவைகளைத் தரக்கூடியதுமாகிய ஊனூட்டி NitrogenSir இருந்ததைCarbon ஆகிய இவ்விரண்டும் பிராணிகளினது வாலிற்றரு ளிருக்கிறதென்று மெண்ணி அவைகளை வதைசெய்து அவைகளினது புலாலைத்தின்னுகிறார்கள். ஸர் இவிரார்ட் ஹோம் Evetardhome என்னும் டாக்டரும் இன்னுமவர்போன்ற அநேக வைத்தியர்களும் பிராணிகளினுடைய அவயவங்களைப் பரிசோதித்தபின் பேரில் அவைகளில் குன்மம் சூலை, வாதரோகம் க்ஷயரோகம், முதலிய கொடியவியாதிகளைத்தரக்கூடிய சிறு புழுக்களிருக்கிறதென்றும், அவைகளை நாம் உட்கொண்டாலப்பிணிகள் நம்மைப்பிடித்துக் கொள்ளுமென்றும், சதையின் வளர்ச்சியையும், நரம்புகளுக்குப் பலத்தையுங் கொடுக்கக்கூடிய வஸ்துக்கள் பலவிதமான காய்கள், கிழங்குகள், பழங்கள், கொட்டைகள் முதலியவைகளிலிருக்கிறதென்றும் இவைகளை நாம் புசித்தால் “நோயற்றவாழ்வே வாழ்வு” என்றபடி ஒருபோதும் வியாதிகளாற் பீடிக்கப்பட மாட்டோமென்றுஞ் சொல்லியிருக்கிறார்கள். இவ்விதம் நாமறிந்திருக்க நாம் ஏன் புலாலை யுண்ணவேண்டும்? நமது ஆகாரத்திற்காகவா? அல்லது நமது தேக ஆரோக்கியத்திற்காகவா? இல்லை. ஆனால் நமது மூடபக்தியாயும், ஜீவகாருண்ய மில்லாதவர்களாயுமிருந்த நமது முன்னோர்கள் இவைகளை யாராவது புலாலைப்புசித்ததினால், அவர்களினின்று பரம்பரையாக இவ்வழக்கம் கையாடப்பட்டது.

முற்காலத்திற் பயிற்றொழில் தெரியாதிருந்தபொழுது, மானிடர்கள் எவ்விடத்திலுமேராளமாக அகப்படக்கூடியதாய் கிழங்கு,பழம், கொட்டை முதலியவைகளைத்தின்று சுகமாய் ஜீவித்திருந்தார்கள். அப்படியிருக்கையில் மிருக ஜந்துக்கள் அதிகவிருத்தி யடைந்தவுடன் இம்மானிடர்களுக்குக் கிடைக்கக்கூடிய பழவர்க்கங்களை அவைகள் புசிக்கத் தலைப்பட்டதால், இவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆகாரங்குன்றி, கடைசியி லிம்மிருகங்களையே புசிக்கத்தலைப்பட்டனர். அன்று முதலின்றுவரை இவ்வழக்கம் அநேகரால் கையாடப்ப

ட்டுக் கொண்டுவருகிறது. மிருகத்தன்மையுள்ள கொடிய ஜாதியாரிற்சிலர் தமக்குப் போதுமான ஆகாரம் கிடைக்காதபொழுது, மனிதர்களையே பிடித்துத் தின்னத் தலைப்பட்டனர். நரமாமிசங்கூட மனிதர்களுடைய ஆகாரமா? ஆஸ்திரேலியாவிற் சிலர் சிற்சில புழுக்களையும் நீர் வாழ்வனவைகளையும், நமது இந்தியாவிலுள்ள மலைப்பிரதேசங்களில் வசிக்கக்கூடிய சிலர் அநேக விதமான விஷப்பாம்புகளை அதிக ஆவலோடு புசிக்கின்றார்கள். அதனால் நாம் இவைகளெல்லாம் மானிடர்களுடைய முக்கிய ஆகாரங்களென்று கூறலாமா? மாந்தர்களுடைய முக்கியமான ஆகாரம் காய்கள், கிழங்குகள், பழங்கள், கொட்டைகள் முதலியவைகளே யன்றி மிருக ஜந்துக்களினது புலாலல்ல.

நமது இந்துச் சிறுவர்களும் சிறுமிகளும் வித்தியாசாலைகளிற் போய்ப்பலவிதமான வித்தைகளைக் கற்கவாரம்பிக்கும்பொழுது முதலில் அவர்களுக்கு எல்லாப் பிராணிகளிடத்தும் பக்ஷமாயிரு; அவைகளை உங்களுடைய ஆகாரத்திற்காகவதை செய்யாதே. ஏனெனில் அவைகள் மனிதர்களுடைய இயற்கையான ஆகாரமல்ல என்று கற்பிக்கப்படுகிறது. ஸமஸ்கிருதமுதற் புஸ்தகத்தில் நமக்கு ஏராளமான ஆகாரம் இப்பூமியின்கண் விளையக்கூடிய காய், கிழங்கு, பழம் முதலியவைகளிருக்க, நமது வயிற்றை நிரப்பவும், நாவிற்குக் கொஞ்சம் ருசியைக்கொடுக்கவும் மிருகங்களைக் கொலை செய்தலாகிய கொடிய பாவச்செய்கையை ஒருபோதுஞ் செய்யக்கூடாதென்று சொல்லியிருக்கிறது. நாம் நமது சிற்றறிவிற்கேற்ப புசிக்கப்படுகின்ற மிருகங்களையும் அம்மிருகங்களைப் புசிக்கின்றவர்களையு மொத்துப்பார்க்குமிடத்து ஒன்று இவ்வுலகின்கணுஞ் சில காலம் அவைகளுடைய சுற்றத்தோடு சுகமாய் ஜீவித்திருப்பது ஒழிந்துவிடுகிறதென்றும் மற்றொன்று கொஞ்ச நிமிஷங்கள் தான் சந்தோஷத்தை யடைகிறதென்றும் நாமறிகிறோமல்லவா? ஸெனிக்கா Seneco என்பவரும் நாம் சுக ஜீவியாயிருப்பதற்குப் போதுமான ஆகாரம் தாவரங்களே என்று சொல்லியிருக்கிறார். நற்கதிக்குச் செல்லும் நல்லவழியில் நாற்றமுள்ள இந்தப்புலால் நமனைப்போல் நின்று நம்மை நரகத்திற் கிழுத்துத் தள்ளுகின்றது. ஒரே ஜீவனது உலோக ரூபமாயும், தாவர ரூபமாயும், நடப்பன, ஊர்வன, பறப்பன முதலிய ஜீவஜந்துக்கள் ரூபமாயுங் காணப்படுவதாயும் மிருகஜாதிகளுக்கு ஆத்மா மனது உணர்ச்சி முதலியவைகளில்லை யென்றுஞ் சொல்வது சரியல்லை யென்றும் மனமும் ஜீவனும் ஒரே நேரத்திற் பிரசன்னமாகிற தென்றும், இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஒவ்வொரு மிருகத்தினிடத்தும் ஆத்மாவுண்டு. நான் என்ற சைதன்னியம் அல்லது அறிவு துக்கத்தையுஞ்சுகத்தையுமறியக்கூடும் அவைகளுக்கு மரணபயமுண்டு. ஜீவித்திருப்பதற்குப் போராடுகிறது. ஜீவனுடைய புழு அநேகவிதரூபங்களாக மாறி கடைசியாய் மனிதரூபமாய்க் காணப்படுகிறது. நமது இந்து மதம் வேதங்கள், தத்துவ சாஸ்திரம் முதலியவைகள் நமக்கு நமது ஆத்மா எவ்வளவு அருமையோ அவ்விதமே பிராணிகளுக்கும் அவைகளினது ஆத்மாவிடத்திற்பிரியமென்றும், நாமெவ்விதம்நமதுசரீரத்தை கொலை செய்யப்படக் கூடாதென்று பயப்

படுகிறோமா அவ்விதமே அவைகளுக்கும் மரணபயமுண்டு. நமது இந்து சாஸ்திரங்களில் பிராணிகளை வதைசெய்யக் கூடாதென்றும், அவைகள் அவைகளினது கிளைகளோடு ஒற்றுவாழ நம்மாலியன்ற உதவியைச் செய்யவேண்டுமென்றுஞ் சொல்லியிருக்கின்றன. நமது வேதத்தில் எந்த ஜீவபிராணிகளையும் நமது ஆகாரத்திற்காவது அல்லது சந்தோஷத்திற்காவது கொலை செய்யக்கூடாதென்று பொருள்படக்கூடிய மஹாஹிம் ஸயாத் ஸர்வபூதானி Ma Hunsyat Sarva Bhutani வாக்கியத்தைச் சொல்லியிருக்கிறது.

நமது இந்து வீரகாவியமாகிய இராமாயணத்தில் ஸ்ரீராமரானவர் அற்பப்பிராணிகளாகிய குரங்குகளினுதவியால் அவர் மனைவியாகிய சீதையைத் திருடிக்கொண்டுபோன இலங்கைக்கரசனை இராவணன் என்னும்பெயர் பூண்ட இராக்கதனைக்கொன்று தன்மனைவியை மீட்டாரென்றும் எல்லாப்பிராணிகளையும் நமது சகோதரர்களைப்போற் பாவித்து நடாத்த வேண்டுமென்றுஞ் சொல்லியிருக்கின்றன. சிலர் ஒருமிருகம் மற்றொரு மிருகத்தையும், ஒரு பறவை மற்றொரு பறவையும் பிடித்துத் தங்களுக்கு ஆகாரமாக அவைகளைக்கொன்று புசிக்கலாமென்று சொல்லுகின்றனர். அது உண்மைதான். ஆனால் நமக்கும் அம்மிருகங்களுக்கும் வித்தியாசமில்லையா? நாம் மிருகத்தன்மையான சட்டங்களையா அனுசரித்து வருகிறோம். மனிதனானவன் மிருக ஜந்துக்களுக்குத் தலைவனாக நிற்கின்றான். ஏனெனில், அவனுக்கு மிருகத்தன்மையைத் தனது ஆத்மார்த்தமும் சன்மார்க்கமுமான வழிகளினால் நீக்கக்கூடிய சக்தியுண்டு. எவனொருவனுக்குச்சன்மார்க்கமும் ஆத்மார்த்தமுமானசெய்கைகளில்லையாயின் அவன் மிருகமேயன்றி மானிடனென்று ஒருவராலும் நினைக்கப்படமாட்டான்.

இவ்வுலகத்தின் கண்ணுள்ள கசாப்புக்கடைகளிலெல்லாம் பெரிய கடைகளாயும் பெயர் பெற்றதாயு முள்ளவைகள் சிக்காகோ (Chicago) என்னும் பட்டணத்திலுள்ளவைகளே. ஒவ்வொரு மாதங்களிலும் அநேக ஆயிரம் மிருகங்களப்பட்டணத்துக் கசாப்புக்கடைக்காரர்களால்கொலைசெய்யப்படுகின்றன, அவர்கள் செய்யக்கூடிய கொலைபாவங்களுக்கும், அதனாலுண்டாகும் சீர்கேட்டிற்கும் யார் உத்திரவாதிகளாவார்கள்? ஓர் காருண்ய முள்ள பெண்ணானவள் ஒருகசாப்புக்காரன் ஆடுகளையாவது அல்லது எந்தமிருகங்களையாவது வதைசெய்கிறபோது அவனைக்கண்டால் அவன் உடல் நடுங்குதலை யடைவதுமல்லாமல் அவனுடைய மிருகத்தன்மையான கொலைப்பாதகத்திற்கும், அதனாலுண்டாகும் அவனது சீர்கேட்டிற்கும் தானுமொரு பங்காளிதானென்றும், தனது கைகளினால் வதைசெய்வது நலமென்றும் ஏனெனில் தனக்காக மற்றொருவன் ஜீவகாருண்ய மில்லாத கொலைப்பாதகனென்னும் பெயரைப்பூண்டு எல்லாராலு மிகழப்படுகிறானென்று மறிந்துகொள்வது மல்லாமல், அன்றுமுதல் தானும் புலாலை யுபயோகிப்பதை நிறுத்திவிடுவாள். ஜீவனிடத்திற் கருணையற்றவன் கடவுளின்கருணையினின்று விலக்கப்படுகிறான். மிருகங்களை வதை செய்வதையும், அதிலாகாரத்திற்கு உபயோகமுள்ளவைகளை யெடுத்துக்கொள்வதையும், உபயோகமற்றதை நீக்கிவிடு

வதையும் அதன் புலாலைப் புசிப்பவர்கள் காண்பாராகில் அநேகர் புலாலைப் புசிப்பதை நிறுத்திவிடுவார்கள்.

ஷிக்காகோ Chicago என்னும் பட்டணத்திலுள்ள கசாப்புகடைகளையெல்லாம் சுற்றிப்பார்த்த அமெரிகாவிலுள்ள ஓர் வாலிபர்; அவ்விடத்தில் நடந்தேறிய மிருகத்தன்மையாயும், கொடூரமாயும், ஜீவகாருண்ய மில்லாதனவாகியு முள்ள செய்கைகளையுங்கண்டு நாம் அப்புலாலை புசிப்பதினாலன்றோ இப்படிப்பட்ட செய்கைகளைச் செய்கிறார்களென்றுணர்ந்து அன்றுமுதல் எந்த விதமான புலாலையு முபயோகிப்பது மில்லையாம், சிறுவயதிலிருந்தே புலாலை யுண்பவர்களையும், காய்கறி பதார்த்த முண்பவர்களையும் சண்டைசெய்ய விட்டுப்பார்த்ததில், புலாலுண்ட வஸ்தாதிகள் தோற்கப் பட்டார்களென்றும், சில பத்திரிகைகள் கூறுகின்றன. காய்கனிகளையே தின்று பலம் பெற்ற பிராணிகளைத்தின்று பலனடைவதைவிட அவைகளருந்தும் காய்கனிகளை நாம் அருந்தி பலனையடையலாகாதா? குதிரை, யானை, ஆடு, மாடு, முதலியவைகளுக்கு வியர்வை தேகத்திலுண்டாவது போல் மனிதர்களுக்கும் தேகத்தில்வியர்வை உண்டாகின்றது. ஆனால் மாமிசம் உண்ணப்பட்ட ஜெந்துகளுக்கு வியர்வை யுண்டாகிறதில்லை. வியர்வை யுண்டாகும் பிராணிகள் மாமிசவுணவை அருந்துவதில்லை. மாமிசமுண்ணப்படுவதால் நாக்கானது தடித்துவிடுகின்றது நாக்கானது தடித்து விட்டால் அக்ஷரசுத்தம் எங்ஙனம் சரிவர ஏற்படும்? கொலைசெய்கையில் அப்பிராணிகளிடம் கோரமான கூய்ச்சல் எவ்வித மிருக்கின்றது? அவைகளைக் கொலைசெய்யும் வகைகள் எவ்வித கொடூரமானவை! அவைகளின் மரண அவஸ்தையை எவ்விதந் தான்கண்டு ஆறுவது? ஹா; நினைக்கும்போதே மனம் பதறுகிறதே! எவ்விதமாகத் துடிக்கிறது. அக்கோரமான காக்ஷி மிகக்கொடிதே! அன்புடன் பிள்ளையை வளர்ப்பதுபோல் ஆடுகளையும், கோழிகளையும் வளர்த்து அதற்குப் புல்லுந் தண்ணீரும் விட்டு வளர்த்தகையைக் கொண்டே அவைகளை வதைப்பது எத்தன்மையதோ! மரஞ்செடிகளை வளர்த்து அதன் பலன்களை யனுபவிப்பது போல் என்பர். அவைகளின் பழங்களையும், இலைகளையும் மாத்திர முபயோகித்தால் அவைகளுக்கு விர்த்தியேயன்றி குறைவில்லை. அவைகளில்லா தொழிவதில்லை. மிருகங்களோ விர்த்தியின்றி அழிவடைகிறது.

மேற்கே (மேனாடுகளில்) ஒரு தேசத்திலுள்ளவர்கள், மாம்ஸத்தையும் மதுவையு முபயோகிப்பதில்லையாம். அவர்கள் மோரையும் ஒருவகைக்கிழங்கையுந்தான் ஆகாரமாய்க் கொள்ளுவதாம். அவர்களதிபராக்கிரமசாலிகளாயும் நீண்ட ஆயுளையுங்கொண்டு சுகஜீவிகளாயிருந்து வருகிறார்களாம்.

மாம்ஸ சாப்பாட்டிற்கும், சைவசாப்பாட்டிற்குமுள்ள வித்தியாசந் தெரிந்து கொள்ளக்கூடாதவரொருவருமில்லை.

ஒருவன் தன் வீட்டிலுண்டான விரதச் சாப்பாட்டை எவ்வளவு மனதிருப்தியுடனும், உற்சாகத்துடனு மருந்துகிறான். ஒருவருக்கொருவர் சில விடங்களில் அம்மாவாசைச்சாப்பாடு கிடைக்குமோ என்று நினைக்கின்றாயா என்று கூறும்போது அதன் விசேஷமதிகமே. இங்கே அம்மாவாசைச் சாப்பாடு என்பது பதார்த்தத்தின் மிகுதியைக் குறிப்பிக்கவில்லை. சுத்தி பத்தியுடன் சமைக்கும் சைவசாப்பாட்டைக் குறிக்கின்றது.

சிலர், மாம்ஸங்களைத் தாமே கடைக்குச்சென்று வாங்கி அருந்துகின்றார்கள். அவர்கள் வாங்கச்செல்வதும், சமைப்பதும் சாப்பிடுவதும் ஒருவருக்குந் தெரியாதென்று புலாலுண்டு, வெற்றிலை பாக்குத்தின்று வெளியில் டம்பமாய் வருகிறார்கள். இவர்கள் புழக்கடையில் இவர்களாலெறிப்பட்ட எச்சல் இலைகளை எடுத்துக்கொண்டுபோகிறவர்கள் இவ்வித நாற்றமுள்ள புலாலை உண்ணுவதைத்தெரிந்து கொள்ளுவார்களென்று எண்ணாமைக்கு அவர்கள் புத்தியின் தரித்திரமே காரணம். சமைக்கும்போது அதன் வாசனை அக்கம் பக்கத்துக்கு எட்டி அவதூறுக்காளாக்கும்.

உலகத்தில் அசைவர்களுக்குள் அதிக வியாதியஸ்தரைக் காண்பது கடினமல்ல சைவர்களுக்குட் காண்பது கடினம்.

சில ஆற்று ஜலத்தில் வியாதியுண்டு. காரணம் அதன் உற்பத்தி ஸ்தானத்திலும் வழிகளிலுமுள்ள இலைகளுதிர்ந்து அழுகி ஜலத்தில் ஊறிப்போதல், அவ்விதமான இலைகளைத்தின்று ஜீவிக்கும் பிராணிகளிடத்தில் அவ்வியாதியுண்டு. ஆகவே அசைவர்களுக்கு வியாதிகாண்பது கடினமல்ல.

“கொலை அகன்றதயவே குற்றமில்லாத நற்றவம், கொலை அகற்றிய நல்லறமே நாடறிந்த நல்லறம், கொலை அகன்ற உணவே ஆசாரமான அமிர்தஉணவு”

இவ்விதமான அமிர்த உணவை உண்டு நல்லறத்தைச் செய்து நற்றவம் புரிந்து நித்தியானந்த சொரூபியாகிய பரப்பிரமத்தின் நிழலை யடைவதற்கு ஏதுவான ஜீவகாருண்ய கிருபா நோக்கம் ஜீவனாஹிம்சை பரம தருமம் என்றவாக்கியத்தை மனதில் வைத்து சுகமாய் வாழ்ந்து நற்பதவியடையும்படி ஸ்ரீமத் விஸ்வேஸ்வரரின் அருள்புரிவாராக.

சைவன்.

* * *

ப்ரொபஸர் ஹாமில்டனும் இந்தியத் தொழில்களும்.

இந்தியாவின் பொருளாதாரப் பெருக்குக்குற்ற வசதிகளைச் சோதித்து அறிந்து விருத்திசெய்ய வேண்டுமென்ற நோக்கம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குப் பூரணமாயிருந்தது. அவர்கள் இப்போது ஸர் தாமஸ் ஹாலண்டின் தலைமையின்கீழ் இந்தியத் தொழில் வசதிகளையும் பொருளாதார வசதிகளையும் சோதித்து அறிய கமிஷன் ஒன்று இந்த யுத்தகாலத்திலும் நியமித்திருப்பதே அதற்குப் போதுமான சாட்சியாகும். ஸர் தாமஸ்ஹாலண்டு ஏற்கெனவே இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டார். அடுத்த அக்டோபர் மாதத்தில் அவருடைய கமிஷன் வேலைசெய்ய ஆரம்பிப்பதற்கு முன்னதாக அவர் தாம் தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டிய விஷயங்களைப் பிறர்சொல்லக் கேளாமல் தம் கண்ணாற் பார்த்து நேர்முகமாய்த் தெரிந்துகொள்ளுவதையே சிலாக்கியமாய்க் கருதி இப்போது சிம்லாவை விட்டு இந்தியாவின் பல பாகங்களுக்கும் சுற்றுப்பிரயாணம் புறப்பட்டிருக்கிறார். அவர் முதலில்

கல்கட்டாவுக்குப் போயிருக்கிறார். அங்கிருந்து மற்ற இடங்களுக்குப் போவார். இந்த மாகாணத்துக்கு அவர் அடுத்த மாதத்தில் வருகிறார். இப்படி ராயல்கமிஷனென்று இந்தியாவின் தொழில் வசதிகளையும் பொருளாதார வசதிகளையும் சோதிக்கப்போகிற தருணத்தில் பிரொபஸர் ஹாமில்டன் ஜப்பான் சென்று அந்நாட்டுத் தொழில் வளங்களைத் தாமே நேரிற் சுற்றிப்பார்த்துத் தெரிந்துகொண்டு திரும்பியிருக்கிறார். அவர் கல்கட்டா யூனிவர்ஸிடியில் பொருளாதாரப் போஷகர். அவரை இந்தியா கவர்ன்மெண்டார் சமீபத்தில் ஜப்பான்நாடு எவ்விதப் பொருளாதாரப் பெருக்கை அடைந்திருக்கிறதென்பதைக் கவனித்து அந்த நாட்டைப் பார்த்து இந்தியா பொருளாதாரப் பெருக்கையடைய படித்துக்கொள்ளக்கூடிய அம்சங்கள் இவையாகுமென்பதை நேருக்கு நேராய் அறிந்துவர நான்கு மாதங்களுக்கு முன்னே அனுப்பினார்கள். அவர் தாம் சென்ற காரியத்தைப் பார்த்துக்கொண்டு அப்போது கல்கத்தாவுக்குத் திரும்பிவிட்டார். கல்கட்டா யூனிவர்ஸிடியும் பொருளாதார சாஸ்திரப் போதகராயிருக்கும் ஒரு கனவான் 4 மாதகாலத்தில் உய்த்துணரமுடியாத விஷயங்கள் என்னவிருக்கக்கூடும்? அவர் பல விஷயங்களையும் அறிந்துகொண்டே திரும்பியிருக்கவேண்டும். அவர் இந்தியா கவர்ன்மெண்டார் தம்மை ஜப்பானுக்கு அனுப்பாமல் தாமே விடுமுறைகாலச் சுற்றுப் பிரயாணமாய்ச் சென்றுவிஷயங்களை அறிந்திருந்தாலும் அவர் தாம் கண்டுவந்தப் புதுமைகளை இந்தியர்கள் அறியட்டுமென்று ரிபோர்ட் வெளியிடுதல் சகஜம். அவரை இந்தியா கவர்ன்மெண்டாரே அனுப்பினார்களாதலால் அந்த கவர்ன்மெண்டாருக்கு அவர் காலக்கிரமத்தில் ஒரு ரிபோர்ட் அனுப்புவார். அந்த ரிபோர்ட்டில் அவர் சொல்லியிருக்கும் விஷயங்களை இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியப்பொதுஜனங்களும் வெகு கவலையுடன் படிப்பார்கள். அந்த ரிபோர்ட் வெளியாவதற்கு முன்னேயே புரொபஸர் ஹாமில்டன் இந்தியர்களுக்குச் சொல்லக்கூடிய புத்திமதிகள் சிலவிருக்கின்றனவென்று நன்றாய்த் தெரிகிறது. அவர் கல்கட்டா வந்துசேர்ந்ததும் அவரைக் கல்கட்டா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் பிரதிநிதியொருவர் போய்ப் பார்த்துப் பேசினார். அப்போது அவர் வெளியிட்ட அபிப்பிராயங்கள் பின்வருமாறு.

ஜப்பானியர்கள் இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தைத் தங்களுடைய தொழில்களையும் வியாபாரத்தையும் பெருக்கிக்கொள்ள வாய்த்த சமயமாய்க் கருதி வெகு வேலைசெய்து வருகிறார்கள். அயல்தேசத்தாருக்கு வேண்டியிருக்கக்கூடும் பல சாமான்களையும் செய்து அவைகளை அயல் நாடுகளில் கொண்டுபோய் விற்று வருகிறார்கள். அவர்கள் தங்கள் நாட்டுச் சாமான்களை இந்த யுத்தகாலத்தில் பல இடங்களிலும் விற்க முயன்றுவருகிறார்களென்பது அவர்கள் இந்தியாவில் விற்காத தங்கள் சரக்குகள் ஏதேனுமுண்டாவென்று அறிந்து தெரிவிக்க வியாபாரக் கமிஷனர்களையனுப்பி அங்கங்கே உளவு பார்த்துச் சொல்லும்படி ஏற்பாடு செய்திருப்பதனால் நன்றாய் வெளியாகிறது.

ஜப்பானியர்கள் இந்த யுத்த சமயத்தில் தங்கள் தொழில் வியாபார முறைகளில் முற்போக்கடைந்திருப்பதை நாம் இங்கு கவனிக்கவேண்டியதில்லை. இந்தியா அந்த நாட்டினிடம் படித்துக்கொள்ள வேண்டியது ஏதேனுமுண்டாவென்பதை மட்டுமே நாம் இங்கு கவனிக்கவேண்டும். அவ்விஷயத்தைக் குறித்து புரொபஸர் ஹாமில்டன் கல்கட்டா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் பிரதிநிதியிடம் ஏதேனும் சொன்னாரென்றால்? ஆம் சொன்னார், என்று நாம் தெரிவிப்போம். அவர் சொன்னதாவது:—ஜப்பான் இந்தியாவுக்குப் புகட்டக்கூடிய பாடங்கள் இந்தியாவுக்கு விசேஷ கருத்தையும் அக்கரையையும் உண்டாக்கக்கூடிய பாடங்களேயாம். சொற்ப இயற்கைச் சாதனங்களையும் தொழில் அறிவைப்பெற வெகு குறைச்சலாய் வாய்த்த சமயங்களையும் பெற்றுள்ள ஒரு தேசத்தில்கூட ஊக்கமும் முன் ஜாக்கிரதையுமிருந்தால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம். ஜப்பானில் குடிசைத்தொழில் செய்வோர் (அதாவது சிறு தொழில்கள் செய்வோர்) தங்கள் கையில் அகப்பட்ட ஒவ்வொரு இயற்கைப் பொருளையும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்வதில் உபயோகப்படுத்திவருவதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கும். இன்றைக்கும் அந்த நாட்டில் நாட்டுப்புறங்களில் பயிரிட்டுப் பிழைக்கும் குடும்பங்களைச்சேர்ந்த ஜனங்களும் பட்டணங்களிலுள்ள குடிசை வாசிகளும்தான் அந்நாட்டுத் தொழில்களில் பெரும்பான்மையான தொழில்களைச் செய்துவருகிறார்கள். இவைகளை மூலாதாரமாய்க்கொண்டு அந்த நாட்டில் பல பெரிய தொழில்களும் செய்யப்படுகின்றன. இந்தியாவில்தொழில் பெருக்குண்டாகவேண்டுமானால் ஜப்பானியர்கள் பின்பற்றி நடக்கும்வழியைப் பின்பற்றியே இந்தியர்களும்தொழில்கள் செய்யவேண்டும். பெரிய தொழில்கள் நின்ற நிலையில் இந்தியர்களுக்கு நாட்டுத்தொழில்கள் பெருகவேண்டுமென்ற நல்லெண்ணமிருப்பதாய்த் தெரிந்து இந்தியாவில் வந்து குதித்துவிட மாட்டார். இப்போதுள்ள தொழில்களிலிருந்து விரிவடைந்து வளரவேண்டும். இந்த வளர்ச்சி சாத்தியமும் லாபகரமுமாகும்படி தக்கவசதிகள் அமைத்துக் கொடுக்கப்படுவதோடு இந்தியத் தொழிலாளிகள் தைரியப்படுத்தப்படவும் வேண்டும். கடைசியில் இந்தியத் தொழிலாளிகளும் வியாபாரிகளும் ஊக்கமுடன் அக்கரையாய்ச் செய்யும் வேலையால்தான் இந்தியாவின் பொருளாதார நிலை விருத்தியாகவேண்டும்.

இப்படி பிரொபஸர் ஹாமில்டன் கல்கட்டா ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையின் பிரதிநிதியிடம் பேசினதாய்த் தெரிகிறது. இந்தியாவில் அதிக மூலதனமின்றி இந்தியர்கள் தங்கள் புத்தியையும் ஊக்கத்தையும் செலுத்திச் செய்யக்கூடிய குடிசைத் தொழில்கள் பலவிருக்கின்றன. பண்டை நாளில் அத்தொழில்கள் ஏராளமாய் நடந்தும் வந்தன. இப்போது அத்தொழில்கள் மேனாட்டு நாகரீகத்தின் பயனாக கைவிடப்பட்டுப்போயிருக்கின்றன. அம்மாதிரி தொழில்களை இந்தியர்கள் முன்னதாகச் செய்தல்வேண்டும்.

இக்கமிட்டியார்கள் சென்னைக்குவிஜயம் செய்து இவ்விடத்திலும் பலஇடங்களில் வாக்குமூலங்கள் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

இ—ன்.

CO-OPERATION,
கோவாபரேஷன்..

தச்சர்களுக்குள் கோவாபரேஷன்:— வடக்கே பாரிலி என்னும் ஊரில் 1913-ம் வர்ஷத்தில் தச்சர்களுக்காக ஒரு கோவாபரெடிவ் ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அது தற்போது ரொம்ப நன்றாய் நடந்து வருகிறதென்று தெரிகிறது. அதற்கு முன்னால் அந்த ஊரில் பணமுள்ள கண்ட்ராக்டர்களும் வியாபாரிகளும் தச்சர்களுடன் ஸாமான் செய்து கொடுக்கும்படி ஒப்பந்தம் பேசிக்கொள்வது வழக்கமாம். தச்சர்கள் ஸாமான்களை இன்னகாலத்துக்குள் இன்ன விலைக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று, நிபந்தனை ஏற்பட்டிருக்கும். இதில் தச்சர்களுக்கு வேலைக்குத்தக்ககூலி கிடைப்பதில்லை. ஏதாவது அஸந்தர்பத்தால் ஒப்பந்தப்படி ஸாமான்களைச் செய்து கொடுக்காவிட்டால், கண்ட்ராக்டர்கள் தச்சர்களை ரொம்பவும் ஹிம்ஸித்து வருவார்கள். சிலஸமயங்களில் கண்ட்ராக்டர்கள் தச்சர்களை ஜெயிலுக்கு அனுப்புவதாக பயமுறுத்தினதுமுண்டு. இவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக 1913-ம் வர்ஷத்தில் 30-தச்சர்கள் கொண்ட ஸங்கம் ஒன்று ஸ்தாபித்தார்கள்.

இந்த ஸங்கத்தில் எல்லா ஜாதித் தச்சர்களும் சேரலாம். ஸங்கத்துக்கு வேண்டிய மூலதனத்துக்கு மெம்பர்கள் ஷேர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். ஒரு ஷேரின் மதிப்பு 50-ரூபாயாகும். மெம்பர்கள் பங்கு ஒன்றுக்கு மாஸம் 1-க்கு 1. ரூபாய் வீதம் செலுத்த வேண்டும். தற்போது அதன் பங்கு மூலதனம் 885-ரூபாயாகும் இதன் ஆகாரத்தின்மேல் இந்த ஸங்கம் ஜில்லா கோவாபரெடிவ் பாங்கியிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் கடன் வாங்குகிறது. இந்த ஸங்கத்துக்கு 6-டிரெக்டர்கள் கொண்ட ஒரு மானேஜ்மெண்ட் போர்டு இருக்கிறது. அந்த ஊரில் கோவாபரேஷன் ஊக்கம் காட்டிவரும் ஒரு இங்கிலீஷ் கனவானும் அவ்வூர் தச்சுவேலை ஸ்கூலின் தலைமைஉபாத்தியாயரும் அதில் டைரக்டர்களாயிருக்கிறார்கள் மேற்சொன்ன தச்சுஸ்கூல் உபாத்தியாயர். அதில் சேர்ந்திருப்பதால் ஸங்கத்துத் தச்சர்கள் செய்யும் ஸாமான்கள் ரொம்ப நேர்த்தியாயும் வேலைப்பாடுள்ளனவாயுமிருக்குமென்றும், அவர்களுடைய தொழில்முறையில் சீர்திருத்தங்கள் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

ஸங்கத்தின் கமிட்டியார் இன்ன ஸாமான்கள் செய்யவேண்டுமென்பதை நிர்ணயித்து, தச்சர்களுக்கு வேலை கொடுத்து வேலைக்குத் தகுந்த கூலிகொடுக்கிறார்கள் வேலைக்கு வேண்டிய மரம் முதலிய மூலப்பொருள்களை ஸங்கத்தார் வாங்கிவைத்திருக்கிறார்கள். மரம் அறுக்கல் முதலிய சில்லரை வேலைகளை வெளிவேலையாட்களைக்கொண்டு நடத்திவருகிறார்கள். சென்ற வருஷத்தில் மெம்பர்களுக்கு நூற்றுக்கு பத்து விகிதம் டிவிடெண்டும், தாங்கள் செய்த வேலைக்குத் தகுந்தபடி ரூபாய்க்கு ஓரணா வீதம் இனாமும் கிடைத்தது இவ்விதம் நல்லகூலி கிடைப்பதோடு வேலை செய்வதற்கேற்ற இனாம் கிடைப்பதால் தச்சர்கள் அதிக ஊக்கமெடுத்து வேலை செய்கிறார்களாம்.

ஜகதீச சந்திர வஸுவின் நீதிமொழிகள்.

திட்டமான ஒரு எண்ணம் உன் வாழ்க்கையின் நோக்கமாக இருக்கவேண்டும் அந்த நோக்கம் கைகூடும் வரையில் சோம்பலின்றி ஊக்கத்துடன் நீ உழைக்கவேண்டும். செய்து முடித்தே தீரவேண்டும் என்கிற தீர்மானம் உனக்கு இருக்குமாகில் அசாத்தியமான காரியம் உலகில் எதுவுமேயில்லை.

கஷ்டப்படாமல் எந்தப் பெரிய வேலையையும் ஒருவன் சாதிக்கமுடியாது. தவறுதல்களும் மஹத்தான விசனங்களும் ஸகஜமானவைகள். ஆகையால் உன் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமானால் இவைகளுக்கெல்லாம் பயந்து போகக்கூடாது.

ஒவ்வொருவனுக்கும் அறிவும் பலமும் இருக்கின்றன. விவேகம் என்பதென்ன? சரியான முன்யோசனையுடன் சலிப்பில்லாமல் ஊக்கத்துடன் உழைப்பதே விவேகம்.

இந்தியாவுக்கென்று எப்படியாவது ஒரு சேவகம் செய். கோழை மனதுள்ளவனாயிராமல் மனிதனாக இரு. அப்பொழுது மனித குணங்கள் உன்னிடம் வரும். பிறரையும் மனிதராகச் செய்ய முயல்

வாழ்க்கைக் காலமோ மிகவும் சுருக்கமானது. ஆகவே ஒவ்வொரு நிமிஷத்தையும் உபயோககரமாகச் செலவிடுவாயாக

உன் வாழ்நாள் முழுவதும் பணம் சம்பாதிக்கும் மனிதனாகவே இராதே. சம்பளம் வாங்குவது பெருமையன்று.

ஒருமனிதனது யோக்கியதையும் பெருமையும் அவன் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு தீர்மானிப்பது மடத்தனம்.

ஏதாவது ஒரு உண்மையான பிரயோஜனமுள்ள தொழிலைச் செய்தால் உடனே பிரதிபலன் கிடைக்குமென்று எதிர்பார்க்காதே சாஸ்திரத்திற்காகவே பயில வேண்டும். பணத்தை எதிர்பாராமல் ஒரு உபகாரம் செய்ய முதன் முதலில் கற்றுக்கொள்.

முதலில் இந்தியனாகவிரு. அதன்பின் உன் மாகாண குறுகிய அபிமானத்தைக் காட்டிக்கொள். உன்னைப்பற்றி எப்பொழுது நினைத்தாலும் நீ "இந்தியன்" என்றே உன்னைக் கருதுவாயாக. நீ ஒரு மதராசி, வங்காளி என்ற சிறிய எண்ணத்தை அறவே மறந்துவிடு.

அமெரிக்கா நாட்டுச் சர்வகலாசாலைகளில் நமது இந்திய வாலிபர்கள் வாசிக்க வேண்டியது நல்லது என்பதே என்னுடைய அபிப்பிராயம். ஆனால் கப்பல் நிறைய நமது பிள்ளைகளை அமெரிக்காவுக்கு அனுப்புவதைக் காட்டிலும், நல்ல அஸ்திவாரக் கல்வியும் சலியாத ஊக்கமும், புகழத்தக்க குணமும் செயல்களையுமுடைய சிலரை அங்கே அனுப்புவதே உத்தமம்.

***

நன்மொழி.

ஒழிந்தன காலங்க ளூழியும் போயின
கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிட ராக்கை
யழிந்தன கண்டு மறமறி யாரே.

திருமந்திரம். (261)

கடவுள்.

ஓ "உயிர்களே, எழுந்திருங்கள் அஞ்ஞான துக்கத்தைவிட்டு விழித்துக்கொள்ளுங்கள். பிரஹ்மநிஷ்டராகிய, சிறந்த ஆச்சாரியரிடத்திற்குச் சென்று ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். விவேகிகள் இந்த வழியைத் தீட்டப்பட்ட கத்திமுனையைப் போலச் செல்வதற் கரிதானதால் நடப்பதற்குக் கடினமானதென்று உரைக்கின்றனர்."

(கடோபநிஷத்து)

"யார் ஞான ஒளியையே வடிவாக உடையவரோ, யார் அணுவிலும் அதிசூக்ஷமமானவரோ, யாரிடத்தில் உலகங்களும் உலகத்தவரும் நிலைபடுத்தப்பட்டிருக்கின்றனரோ, அவரே சத்யஸ்வரூபி, அவரே அழிவற்றவர், அவரே ஞானத்தில் அறியப்படத்தக்கவர், ஓ பிரிய, சிஷ்யனே நீ அவரை ஞானத்தினால் அறியக் கடவாய்"

(முண்டகோபநிஷத்து)

கடவுள் ஒருவர் எல்லாப்பூதங்களிலும் மறைந்திருப்பவர். யாவற்றிலும் நிறைந்திருப்பவர். எல்லாப்பூதங்களிலும் உள்ளேயிருப்பவர். சகல செய்கைகளுக்குத் தலைவர். எல்லாப் பூதங்களுக்கும் இருப்பிடமாக இருப்பவர். யாவற்றிற்கும் சாக்ஷியாக இருப்பவர். ஞானஸ்வரூபி சங்கராகிதர் படைக்கப்பட்ட பொருள்களுடைய பண் புகழற்றவர்.

(சுவேதாசுவதா உபநிஷத்து)

"ப்ராஹமத்தின் பெயர் ஆகாயம். அவர் பெயரும் உருவமுள்ள பொருள்களினுடைய நிர்வாகர் பெயரும் உருவமுள்ள பொருள்களைக் கடிலும் வேறானவர். அவர் ப்ராஹமம். அவர் அழிவற்றவர்.

(சாந்தோக்யம்)

எதனிடத்திலிருந்து (சேதசேதாத்மகாகிய) பொருள்கள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனால் நிலைபெற்றிருக்கின்றனவோ, (முடிவில்) எதை நோக்கிச் சென்று அடைகின்றனவோ அதை விசேஷமாய் அறிய விரும்புங்கள். அது ப்ராஹமம்.

(தைத்திரீய உபநிஷத்து)

யார் ஞானேந்திரியங்களுக்கு விஷயமோ, கர்மேந்திரியங்களுக்குக் கதிதோ பிறப்பற்றவரோ, வருணமற்றவரோ, கண்காதுகளில்லாதவரோ, அந்தக் கைகாலற்றவரும், என்றுமுள்ளவரும், யாவற்றிலுமுள்ளவரும் அதிசூக்ஷமமான தன்மையுடையவரும் யாவற்றிலுமுள்ளவரும் அதிசூக்ஷமமான தன்மையுடையவரும், அழிவற்றவரும் எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமுமானவரை விவேகிகள் எங்கும் பார்க்கின்றனர்"

(முண்டகோபநிஷத்து)

ஓகார்க்கி! பிரஹ்மஞானிகள் யாரைப் பணிகிறார்களோ அவர் இந்த அழிவற்ற புருஷன். அவர்ஸ்தூலரன்று, குறுகினவரன்று, நீட்சியுடையவருமன்று, அவர் வருணமுள்ள பொருளன்று, திரவியப் பொருளன்று, அவர் நிழலன்று, இருளன்று, காற்றன்று, ஆகாயமன்று, சுகதுக்கமற்றவர், இச்சேந்திரியமற்றவர், கானேந்திரியமற்றவர், காதற்றவர், வாக்கற்றவர், மிதமாகிய மனதற்றவர், மூகமற்றவர், அவருக்கு ஒப்பில்லை.

(பிரஹதாரண்யம்)

"யான் ப்ராஹமத்தை முற்றுமறிந்தேனென்று நினைக்கவில்லை, அது அறியப்பட்டதுமன்று, அறியப்படாததுமன்று என்

னும் வாக்கியப்பொருளை நமக்குள் யார் அறிகின்றனரோ, அவர்களே பிர்ஹ்மத்தையறிகின்றனர்.

(கேனோபநிஷத்து)

கடவுள் ஒருவர். அவர் அசைபவரல்லர் மனதைவிட அதிக விரைவாகச்செல்பவர் பொறிகளுக்கு முன் செல்லுகிற இக்கடவுளைப் பொறிகளிலொன்றும் அடையமாட்டாது, அவர் ஸ்திரமாக விருந்தும் விரைவாகச் செல்லுகிற மனமுதலிய பொறிகளைக் கடந்து செல்லுகிறார். காற்று அவரிடத்தில் இருந்துகொண்டு உயிர்களுக்கு உடல்களினது அசைவைத் தருகின்றது.

(ஈசோபநிஷத்து)

"ப்ராஹமஜ்ஞானிகள் ஜ்ஞான மயமாகிய கோசத்தில் நிர்மலமானதும், பெருமை பொருந்தியதும், நிர்வயவமானதும் சுத்தமானதும், ஒளிக்கு ஒளியானதுமான பரமாத்மாவை அறிகின்றனர் (முண்டகோபநிஷத்து) எல்லாபிரபுக்களுக்கும் சிறந்த பிரபுவும், எல்லாத் தேவதைகளுக்கும் சிறந்த தேவதையும், எல்லாத் தலைவனுக்கும் சிறந்த தலைவனும், சிறந்த எல்லாவற்றிலும், தானாக விளங்குகிறவரும் உலகங்களுக்கு ஈசனும், துதிக்கப்படத்தக்கவனுமானவனை யாமறிவோம்"

(முடையோபநிஷத்து.

ஒப்பற்றவரும் அறிவற்றவரும் மான கடவுளை ஒருவரென்று அறியத்தக்கவர் அவர் நிர்மலமானவர். ஆகாயத்தைவிட சூக்ஷமமானவர் பிறப்பற்றவர். பரமாத்மா பெரியவர் நித்தியமானவர்

(ப்ராஹதாரண்யம்.)

எந்தப் பூர்ணபுருஷர் எல்லா உயிர்களுக்கும் உறங்கிக்கொண்டிருக்கையிலும், தாம் விழித்துக்கொண்டிருந்து, அவைகளுக்கு வேண்டியயாவற்றையும், படைத்துக்கொண் டிக்கிறாரோ, அவர் சுத்தர், அவர் பிரஹ்மம் அவர் அழிவற்றவரென்று சொல்லப்படுகிறார்."

(கடோபநிஷத்து)

"அவருக்குக்கையில்லை ஆயினும்நடக்கிறார். அவருக்குகண்ணில்லை ஆயினும் பார்க்கிறார். அவர் அறியத்தக்க யாவற்றையும் அறிகிறார். ஆனால் அவரை முற்றும் அறிந்தவர் இல்லை. அவரை யாவற்றிற்கும் முதன்மையானவரென்றும் பூரணரென்னும், பெரியவரென்றும் உரைக்கின்றனர்."

(சுவேதாஸ்தவர உபநிஷத்து)

"இந்தப் பரமாத்மாவுக்கு பிறப்பில்லை இறப்புமில்லை இவர் எல்லாமறிந்தவர் இவர் ஒன்றிலிருந் துண்டாவதில்லை ஒன்றுமில்லை."

(கடோப நிஷத்து)

"வெளியில் ஆனந்தஸ்வ ரூபனாகிய பரமாத்மா இராவிடில் யாவருக்குச் சரீர அசைவு உண்டாகும்? யார்உயிர்வாழ்வார்? இவரேயவரவரது செய்கைக்குத்தக்க இன்பத்தைத் தருகிறார்."

(தைத்திரீயும் ஆனந்தவல்லி)

"நிச்சயமாய் இவ்வுயிர்கள் ஆனந்தஸ்வரூபனிடத்திலிருந்தே, உண்டாகின்றன. உண்டானவை ஆனந்தஸ்வ ரூபனாலேயே நிலைபெறுகின்றன. ஆனந்த ஸ்வரூபனையே நோக்கிச் சென்றடைகின்றனர்."

(தைத்திரீயும் ரூபகுவல்லி)

பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த பதவி. பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த செல்வம். பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்த உலகம் பரமாத்மாவே ஜீவாத்மாவுக்குச் சிறந்தஆனந்தம். இப்பேரானந்தத்தின் அம்சத்தையேவேறு வேறு உயிர்கள் அனுபவிக்கின்றனர்.

பிரஹதாரண்ணியம்.

தேவஸ்தான நிலைமைகள்.

சென்றமாதப் பத்திரிகையின்
ஆருவது பக்கத்தின் தொடர்ச்சி.

முற்பத்திரிகையில் நமது தேவஸ்தானமாகிய சென்னை ஸ்ரீ காளிகாம்பாளென்னும் காமாக்ஷியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையைப்பற்றித் தெரிவித்தோம் இப்பொழுது நம்ஜாதியாருக்குள்ள பக்தி விஸ்வாசங்களைப்பற்றித் தெரிவிக்கிறோம்.

இச்சென்னைமா நகரத்தில்மட்டும் நமது விஸ்வகர்ம சந்ததியார்கள் சுமார் எண்ணாயிரம் தலைக்கட்டுவரையில் இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் மொத்தத்திற்கும் குலதெய்வமாக விளங்கக்கூடிய ஸ்ரீ காளிகாம்பாளென்னும் காமாக்ஷியம்மையார் தேவஸ்தானம் இப்பேற்றேபாகும். இக்கோயிலுக்குப்போய் தரிசிக்கக்கூடிய விஸ்வகர்மாக்கள் சுமார் பத்து பேர்கள்கூட தவறாமல் ஷை தேவஸ்தானத்திற்குச்சென்று தெரிசிப்பார்களோ இல்லையோவென்று சந்தேகம் ஏற்படுகிறது. நம்மவர்களுடைய பக்திவிசுவாசம் இவ்வொன்றினாலேயே நன்கு விளங்குகின்றது. இப்பேர்ப்பட்டவர்களுக்கு நமது குலதெய்வதையாகிய ஸ்ரீகாமாக்ஷியம்மன் எப்படி கிருபை செய்வாள், குழந்தைகள் அழுதாலல்லவா தாயானவள் குழந்தையை எடுத்துப்பார்த்துப் பசியென்றும், அல்லது வியாதியென்றும் அறிந்து சிகிச்சைசெய்வாள். அப்படியில்லாவிட்டாலும் குழந்தை தாயினிடம் காட்டும் விசுவாசத்தாலாவது குழந்தைகள் அழாவிட்டாலும் தாயானவள் எடுத்து முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவுவள். இவ்விரண்டில் ஒன்றுமில்லாமலிருந்தால் யார்தான் கவனிக்கமுடியும் அதுபோலொத்த நம்விஸ்வகர்மாக்களாகிய நம் ஜாதியார்தான் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியில்லாவிட்டால் நாமிருக்கவேண்டிய உன்னதஸ்தானத்தை நம்மால் எடுத்துச்சொல்ல முடியாதென்பதாக யோசிக்கின்றோம்.

சில நாட்களுக்குமுன் இத்தேவஸ்தானங்களுக்கு உற்சவாதிகள் நடந்தால் அந்த உற்சவகாலங்களில் உற்சவத்திற்குரிய நம் தொழிலாளிகள் மறியல் வைத்துக்கொண்டு வேலைகளை நிறுத்திவிட்டு இந்த உற்சவத்திற்கு வேண்டிய பாடுகளைப்பட்டு உற்சவத்திற்கு யாவரும்வந்து கெவர்வமாக முடிப்பார்கள். கிண்ணித்தேர் உற்சவத்திற்காக 3 நாள் 4 நாள் மறியலிட்டு வேலையை நிறுத்தி அதற்குவேண்டிய பிரயத்தினங்களைச் செய்வார்கள். கன்னார் கடைகளும் (தவலை சொம்பு) கடைகளும் மூடிவிடுவார்கள். இதனாலேயே ஊரெங்கும் காளியம்மன் கோயில் உற்சவம் கம்மாளர்கோயில் உற்சவம் நடக்கிறதென்றும் இன்றையத்தினம் கிண்ணித் தேரென்றும் உலகமெல்லாம் தெரிந்துகொள்ளும். அந்தக் கிண்ணித்தேர் உற்சவத்தை தரிசிக்க பலவிடங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து வேடிக்கைப்பார்க்க வருவார்கள். இவைகளினாலேயே இக்கோயிலுக்கு நல்ல கீர்த்திகள் இருந்தது. நம்கூட்டத்தவர்களும் கோயில் நிரம்பியிருந்தார்கள். இக்காலத்தில் அவ்விதக் கூட்டங்களைப் பார்க்கலாமென்றாலும் கிடைப்பது அரிதாகயிருக்கிறது. இதை யிவ்விடத்தில் சொல்லவந்ததற்குக் காரணம் முன்னிருந்த நம்மவர்களுக்கும் இப்பொழுதுள்ள நம்மவர்களுக்குமுள்ள வித்தியாசங்களைக்காட்டவேண்டுமென்கிற அபிப்பிராயத்தினால் தெரிவித்தோம். இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் நம்மவர்கள் பக்தி சிரத்தையுடன் கண்ணோக்கமிருந்தபோது உண்டாகிய சீரும் சிறப்பும் இப்பொழுது இல்லாமல் போயிற்றென்பது நன்கு விளங்குகிறது. இதனால்தான் பார்வையி லில்லாத வஸ்துக்கள் சீர்கெட்டுவிடு மென்கிற பழமொழிகளை பெறியோர்கள் கூறியுள்ளார்.

ஷை தேவஸ்தானத்திற்கு இவ்வளவு சொத்துக்கள் இருக்கிறதென்றெவர்களுக்கும் தெரியாது. இன்னின்ன யிடத்தில் இதற்கு பூஸ்திதிகள் இருக்கிறதென்றும் தெரியாது. இதுகளுக்கெல்லாம் காரணம் நாம் அது விஷயத்தில் கவனம் செலுத்தாத தோஷமே யாகும்.

ஓர் கூட்டத்திற்கு தெரிவித்தால் அக்கூட்டத்திற்கு சிரத்தையுடன் போவது கிடையாது அப்படிபோகாம லிருப்பதால் என்ன ஏற்படுகிற தென்றால் அவ்விடத்தில் நடக்கும் விஷயம் இன்னதென்று தெரியாமல் போகிறது. தவறாமல் ஒவ்வொரு கூட்டங்களுக்கும்போய் அவரவர்களுடைய மனதில்பட்ட அபிப்பிராயங்களைச் சொன்னால்தான் எந்தகாரியங்களும் சரிவர நடக்கும் அக்கூட்டத்திற்கே போகாமல் அக்கூட்டத்தார்கள் பேரில் குறை கூறுவதால் பயனில்லை. வீண்பேச்சாகவே முடியுமாகையால் இனியாகிலும் பழயபடி நம்ம விஸ்வகர்ம சந்ததியார்கள் ஒவ்வொருவர்களும் நம் தேவஸ்தானங்களை தவறாமல் போய்க் கவனிக்கவேண்டுமென்றுகேட்டுக் கொள்ளுகிறோம்.

***

திருவண்ணாமலை விஸ்வகாம சத்திரம்.

திருவண்ணாமலையில் நமது குலத்தினர் சத்திரம் ஒன்று இருப்பது எவரும் அறிந்ததே. அந்தச் சத்திரதர்மத்தைத் தாம் பார்ப்பதாக, தாடாபட்டு வ. சுப்பிரமணிய ஆச்சாரி என்பவர் வெளியில் பணம்சேர்த்துத் தம்முடைய உபயோகத்துக்குவைத்துக்கொண்டதும் அன்றி,ஷை சத்திரப் பரிபாலர்களாகிய பிரஹ்மஸ்ரீ ச. வெங்கிடசுப்பாச்சாரி-1, செ. பாலகிருஷ்ண ஆச்சாரி-2, சீனிவாச ஆச்சாரி-3, ஆகிய மூவரையும் சத்திர சம்பந்தம் இல்லாதவர்கள் என்றும் போர்டில் எழுதி விளம்பரப்படுத்தி இருந்தார். இதைத் தவிர்த்து, தருமபரிபாலனம் சரிவரநடக்க, 1916வரு டிசம்பர்மீ 9உ சனிவாரம் பகல் 12-மணிக்கு ஷை விஸ்வபிராமண சத்திரத்தில் ஓர் கூட்டம் கூடியது. அதற்கு, சென்னை கொ. கன்னியப்ப ஆச்சாரி திருவண்ணாமலை, படிமேஸ்திரி ரெ. அருணசலாச்சாரி, வெள்ளைகுளம் பாக்ஷா ஆச்சாரி, நெல்லிக்குப்பம் க. ச. மாணிக்க ஆச்சாரி, ரெட்டேரி கா. பாலசுப்பிரமணிய ஆச்சாரி, வேலூர் சரவணாச்சாரி, கோவூர் தி. சங்கராச்சாரி, கோ. மு. மாணிக்காச்சாரி, துரிஞ்சாவரம் பெரியதம்பி ஆச்சாரி, வில்வாரணி தி. குப்புசாமி ஆச்சாரி தருமபுரி சாமண்ணாசாரி க. மு. சொக்கப்பாச்சாரி, கன்னைய ஆசாரி, பாலூர் ஈஸ்வர ஆச்சாரி, த. சுப்பராய ஆச்சாரி, சு. தங்கவேலு ஆச்சாரி, மெய்யூர் சந்தனாச்சாரி, புரோஹிதம் கோவிந்தாச்சாரி, மாதிமங்கலம் அருணஜலாச்சாரி, பெரியகாம் பட்டாச்சாரி, ஒடுவங்குளம் நல்லிய

ஆச்சாரி நல்லூர் ஸ்ரீநிவாச ஆச்சாரி, நல்லூர் பேட்டை கந்தசாமி ஆச்சாரி, பூதமங்கலம் துரைசாமி ஆச்சாரி, செங்குளம் திவ்யபாத ஆச்சாரி, மாநியமங்கலம் ஆறுமுக ஆச்சாரி, காஞ்சிபுரம் வேலப்பாச்சாரி முதலானோர் விஜயம் செய்திருந்தனர். ஷை கூட்டத்திற்கு, காஞ்சிபுரம் வேலப்பாச்சாரி அவர்களை சபாநாயகராகஇருக்க, கொ. கன்னியப்பாச்சாரியார் பிரேரேபிக்க ஷை யூர் ஷை மேஸ்திரி ரெ. அருணாசல ஆச்சாரி, கடவுள் சம்மதம் மாணிக்க ஆச்சாரி, ரங்கநல்லூர் சேஷாசல ஆச்சாரி, வேலூர் சரவண ஆச்சாரி ஆமோதிக்கச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு ஷை விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டு த. வ. சுப்பிரமணிய ஆச்சாரியைவிசாரிக்க அவர் சரியானபதில் சொல்லவில்லை தாம் மானேஜர் என்பதற்குத்தக்க ஆதாரமும் காட்டவில்லை கடைசியாய் அவர் சில ரிகார்டுகளையும் போர்டுபலகைகளையும் கொடுத்தனர். அவை, திருவண்ணாமலை படி முத்திரை ரெ. அருணாசல ஆச்சாரிடம் ஒப்புவிக்கப்பட்டன. ஷையார் மீது மோசதாவா நடவடிக்கை நிறைவேறும்வரை, அவரிடம் இனி சந்திரதர்மபணம் ஒருவரும் கொடுக்கப்படாதென்று தீர்மானம் செய்யப்பட்டது.

***

சென்னை விஸ்வகர்மவேதாத்தியயன பாடசாலையின் நிலைமை

இப்பாடசாலையை 1909வருஷத்தில் ஆரம்பித்தோம் அதுமுதல் நமதுசொந்தப்பொருளைச் செலவிட்டு நடத்திவந்தோம் பிறகு அதற்கென்று ஓர் உண்டியும் தயாரித்து தண்டலும் செய்தோம். அதைநம்மவர்கள் கவனிக்காமையாலும் ஆள்சம்பளம்கூட வசூலாவது கஷ்டமாக இருந்தமையாலும் அதையும் நிறுத்திவிட்டோம் பிறகுசபை ஸ்தாபித்து அது முகாந்திரமாக எவ்வளவோபாடுபட்டுப்பார்த்தோம். எவற்றிலும் சரிவராமையால் இப்பத்திரிகையில் வரும் லாபதனத்தைக் கொண்டாகிலும் நடத்தலாமென்று எண்ணினோம். பத்திரிகையின் வருமானத்தை (நமதுபத்திரிகை) என்னும் தலைப்பின் விபரத்தால் விபரம் தெரிந்துக்கொள்ளலாம். இவ்விதபொருள் கஷ்டத்தால் அத்தியயனபாடசாலைதற்காலம் நின்றுவிட்டது.

வித்தியாபாடசாலை(இஸ்கூல்) மட்டிலும் தவக்கமில்லாமல் நடந்துவருகிறது. அதில் நமது சுஜாதிச் சிறுவர்கள் 40-பிள்ளைகளுக்குக் குறையாமல் வாசித்து வருகிறார்கள் இதற்கு ஆரம்ப முதல் பிரஹ்மஸ்ரீ சந்தவேலூர் கோவிந்தாச்சாரியார் உபாத்தியாயராக இருந்து நடத்திவருகிறார்.

ஷை அத்தியயன பாடசாலையைப் பணமில்லாவிட்டாலும் ஒருவறாக நடத்தலாமென்றாலோ ஷை பாடசாலை உபாத்தியாயர் பிரம்மஸ்ரீ பா. சுப்பிரமணியசாஸ்திரியார் அவர்களுக்கு தேக அசவுக்கியமாக இருக்கிறது. அவரால்பிள்ளைகளுக்கு முன்போல் சிரமமெடுத்துப் பாடுபட்டுச் சொல்லிவைக்க முடியவில்லை மற்றப்படி வேறு யாரையாவது பார்த்தால் மாதம் ஒன்றுக்கு 15-20-ரூபா சம்பளம் கொடுக்கவேண்டியதிருக்கிறது. இதற்கும் பணமில்லை. இப்பாடசாலையை சிலநாளைக்கு முன்பே நமது ஸ்ரீ காளிகாம்பா ளென்னும் காமாக்ஷி அம்மன் தேவஸ்தானத்தில்வைத்து நடத்தும்படி தெரிவித்திருந்தும் ஷை தேவஸ்தான தர்மபரிபாலன சபையார் கவனிக்கவில்லை

இதற்காக நம்மவர்கள் வீட்டில் நடக்கும் சுபாசுபகாரியங்களில் ஷை பாடசாலைக்காக சிலர்கள் மட்டிலும் அவர்களைபல தானம் கொடுத்தனுப்புவதை ஷை உண்டியில் போட்டுவருகிறோம். இதற்குயாரேனும் முன்வந்து ஷை பாடசாலையை நடத்திக்கொள்வதாயிருந்தால் ஷை உண்டியை அவர்களிடம் ஒப்பிவித்து விடுகிறோம். அவர்கள் அதற்குண்டாகிய பிரயத்தனங்களைச் செய்து வசூலித்து பாடசாலையை நடத்திக்கொள்ளலாம். இவர்களுக்கு இதனால் புகழும் புண்ணியமும் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. இதற்குமுன்வரும்குலாபிமானிகள் முன்வரலாம். பிறகு எம்மீது குறைகூறுவதில் பயனில்லை இதற்குபண்டு ஏற்படுத்தி விட்டால் சுகமாக நடக்கும் நம்மவர்களில் பௌரோகிதர்களில்லாமல் அதிக கஷ்டப்படுவதை அறிந்திருந்தும் இவ்வித முயற்சியில் தலையிடாதிருப்பது சரியல்ல, இதை அவசியம் கவனிக்கவேண்டியது விஸ்வகர்மாக்களின்கடமையாகும்.

***

ஆங்கிலக்கவியாகிய டேனிஸனின் அமிர்த வாக்கு.

"அரசரை மனசாட்சியாக மதிக்கவேண்டும் மனசாட்சியை அரசராக மதிக்கவேண்டும். தெய்வத்தை நிலைநிறுத்தவேண்டும். மக்கள் படும் துன்பங்களை ஒழிக்கவேண்டும். அவதூறு செய்யக்கூடாது. பரிசுத்தமாக வாழவேண்டும். ஒரு பெண்ணையே நேசித்து அவளையே அடையவேண்டும்.

அற்ப எண்ணங்கள் உதிக்காமல் தடுக்கவும், உயர்ந்த எண்ணங்கள் தோன்றும்படி செய்யவும், நல்ல வாக்குடையவனாகவும் மரியாதை யுள்ளவனாகவும் புகழை விரும்பி சத்தியத்தைக் கடைபிடிக்கவும், காதல் ஒருவனைத் தூண்டக்கூடியதுபோல் வேறெதுவும் தூண்டாது.

***

பலகுறிப்புகள்.

இவ்விந்தியாவில் அநேக தமிழ்ப்பத்திரிகைகள் நடக்கின்றன. அவற்றையாவரும் வாங்கி வாசிக்கிறார்கள். நமது விஸ்வகர்ம சந்ததியார்களும் வாங்கி வாசித்து வருகிறார்கள். அதில் பொது விஷயங்களைப் பற்றி பேசுமேயொழிய ஒருஜாதியாரைப் பற்றியாவது அவர்களை சீர்திருத்தவேண்டுமென்பதைப்பற்றியாவது பேச முன்வராது. ஆகையால் நமது ஜாதிபத்திரிகையென்று இருந்தால் அதில் நம்ம ஜாதியார்களிலுள்ள குறைகளையும் ஜாதியார்களை திருத்தவேண்டிய மார்க்கங்களையுமெழுதித்திருத்திக்கொள்ளலாம். அப்படி யில்லாமல் ஜாதிப்பத்திரிகை என்று பெயர்மட்டிலும் வைத்துக்கொண்டு ஜாதிக்குவேண்டிய ஒத்தாசைகளையும், சீர்திருத்தங்களையும் செய்யாமலிருப்பதால் என்ன பயன் என்று உத்தேசித்தே நம் ஜாதியார்களின் தவறுதல்களை எடுத்துச்சொல்ல ஆரம்பித்ததிலிருந்து சிலர்களுக்கு நம்மீது த்வேஷமும், பொறாமையும் உண்டாகிறது. அதன்காரணம் என்னவென்றால், நாமெல்லோருமிருக்க நமக்குமுன் இவன் இவ்வித விஷயங்களில் தலையிடுகிறான்; இவனை அடக்கிவிட்டால் ஒவ்வொருகாரியமும் நம்மால் செய்துமுடித்ததாகவே பெயர் வரவேண்டுமென்கிற உத்தேசத்துடனும், இவனுக்கு சிலர் துணைபுரிகிறார்களே அவர்களை இவனுக்கு விரோதம் செய்துவிட்டு இவன்பேரில் அருவருப்புஏற்படுத்திவிட்டால்துணைபுரியாம லிருப்பார்கள் நாமெடுக்கும் காரியங்களுக்கு ஒத்தாசை செய்வார்களென்கிற எண்ணம்கொண்டு பலவாறான இடையூறுகள் செய்துவருவதால் இதை அறிந்

தே நாம் இவ்விதஜாதி விஷயத்தில் தலையிட்டது பிசகு இதையொழித்துப் பொது காரியங்களிலேயே தலையிட்டு பாடுபடலாமென்று கருதி அடுத்தமாதத்தி லிருந்து ஜாதிப்பத்திரிகையை ஒழித்துக்கைத்தொழில் பத்திரிகையாக மாற்றிக்கொள்ள முயன்றுவிட்டோமாயினும் நமது ஜாதியை அனுசரித்தே தான் நடத்த உத்தேசம். ஒரிருவருக்கு பயந்து நம் ஜாதிபற்றை ஒழிக்கவேண்டு மானாலும். மனந் துணியவில்லை பிறர்களுடைய எண்ணத்தை உத்தேசித்து விலகுவது நலமென்பதாக யோசிக்கின்றேன்.

***

திருவண்ணாமலையில் ஸ்ரீ காளிகாம்பாளென்னும் காமாக்ஷியம்மன் தேவஸ்தான நிலைமைகள்.

திருவண்ணாமலை விஸ்வகர்மாக்கள் வீதியிலுள்ள ஷை தேவஸ்தானத்தை கட்டி முடிக்க 4,000 ரூபா மதிப்பிட்டு வேலை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. இவ்வேலை கூடியசீக்கிரம் பூர்த்தியாகுமென்று நினைக்கிறேன். இதற்கு ஏஜண்டாக ஏற்பட்டவர்கள் ஷை யூரிலிருக்கும் பிரம்மஸ்ரீ பெரிய குப்புசாமி ஆச்சாரியார்-1, ஷை தேவஸ்தான தர்மகர்த்தர் பிரம்மஸ்ரீ ராயலாச்சாரியார்-2, பௌரோகிதர் பிரம்மஸ்ரீ மாணிக்காச்சாரியார்.3, பிரம்மஸ்ரீ சின்னசாமி ஆச்சாரியார்-4. இந்நால்வர்களும் ஷை தேவஸ்தான திருப்பணி கைங்கரியத்தை முன்னின்று முடிக்கத் துணிந்து நடத்துவதால் இக்காரியங்கள் முட்டுப்படாமல் கூடியசீக்கிரம் பூர்த்தியாகு மென்று நம்புகிறோம். இவர்களுக்கு விஸ்வேசர் பூரண ஆயுளையும், திடகாத்திரத்தையும் அருள்புரிவாராக.

***

தொழிற்படிப்பின் நிலைமை.

தொழிற்படிப்பின் சம்பந்தமாக 1914-15-ம் வருஷத்திய ரிபோர்ட் பிரசுரமாயிருக்கிறது, இந்தியாவில் எல்லா இடங்களிலுமே தொழிற்பாடசாலைகள் இல்லை, ஆங்காங்குச் சிற்சில மாகாணங்களில் இரண்டொரு தொழிற்பாடசாலைகள் மட்டுமே இருக்கின்றன, எஞ்சினியரிங் பாடசாலைகளிலும் ஸர்வே பாடசாலைகளிலும் மாணவர்கள் வெகு குறைவு. மேற்கண்ட பாடசாலைகளிலும் தொழிற்பாடசாலைகளிலும் 1914—15 வருஷமுடிவில் 11919-பேர் இருந்திருக்கிறார்கள். பம்பாய் மாகாணத்தில் தொழிற்கல்வியைக் கவனிக்க ஒரு கமிட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ஐக்கிய மாகாணத்திலுள்ள தாம்ஸன் ஸிவில் எஞ்சினீரிங் கலாசாலையில் உயர்தரத் தொழிற் கல்வியைக் கற்பதற்குத் தக்கமாணவர்கள் இன்மையால் அக்கலாசாலையிலிருந்த அந்தவகுப்பு எடுபட்டுப்போய் விட்டதாம். பம்பாயிலுள்ள சித்திரவேலைப் பாடசாலையில் 1881-ம் வருஷ முதல் கட்டிட நிருபணத்தைப் போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5-வருஷம் வரையில் போதிக்கப்பட்டுப் பிறகு கவர்ன்மெண்டால் பரீக்ஷை நடத்தப்படுகிறது. மொத்தத்துக்கு இந்தியாவின் விஸ்தீரணத்தைப் பார்க்கப் புகுகையில் தொழிற்கல்வியின் நிலைமை இன்னும் விசாலமும் வன்மையும் பெறவேண்டியது முக்கியமெனலாம்.

***

தேசாபிமானம்.

லண்டன் நகரில் ஆஸ்பத்திரியின் டாக்டர் ஒருவருக்கு அப்பட்டணத்திலிருந்து ஒரு சிறுமி பின்வருமாறு எழுதியிருக்கிறாளென்று ஒரு பத்திரிகை கூறுகிறது:—

யுத்தத்தில் காயம்பட்ட வீரர்களின் காயத்திற்கு மனிதர்களின் தோல்கள் தேவையென்றும், அவைகளைக்கொண்டு அக்காயங்கள் சொஸ்தம்செய்யப்படுகின்றனவென்றும் தெரிகிறது. தேசக்ஷேமத்தைபொட்டி என்னுடைய தேகத்தை நான் ஒரு பொருட்டாக எண்ணாமல் அத்தோல் கொடுக்கும் விஷயத்தில் என் தேகத்தை அர்ப்பணம் செய்கிறேன். நான் நல்ல சித்தத்துடன்தான் இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய சகோதரர்கள் அறுவர் யுத்தமுனையிலிருக்கின்றார்கள். அவர்களாலான சகாயத்தை அவர்கள் யுத்தமுனையிலிருந்துகொண்டு செய்துவருகிறார்கள். நான் மேற்கூறிய வழியிலாவது என்னுடைய தேசத்திற்கு உதவி செய்யலாமென்று எண்ணியிருக்கிறேன். ஆகலால் அம்மாதிரி உதவுவதற்கு என்னை எப்போது வரவேண்டுமென்று எழுதுகிறீர்களோ அப்போது வரச் சித்தமாயிருக்கிறேன்.

***

திருவண்ணாமலையில் விஸ்வகர்ம சமஸ்கிருத பாடசாலை.

திருவண்ணாமலையிலுள்ள விஸ்வகர்மாக்களுடைய காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்திற்கு பின்புறம் இருக்கும் கட்டடத்தில் சுமார் ஒரு வருஷகாலமாய் நம்மனோர்கள் சமஸ்கிருத பாடசாலை ஒன்று ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். இந்த பாடசாலைக்காக 1,000 ரூபாய் பண்டு ஏற்படுத்தி இருக்கிறார்கள். இன்னும் வெளியூர்களில் வசூல்செய்தும் வருகிறார்கள். இதற்கு காரியஸ்தர்களாய் இருந்து வசூல்செய்ய முன்வந்திருக்கும், நண்பர்கள் பிரம்மஸ்ரீ கீழ்ப்பாலூர் ஈஸ்வராச்சாரியார்-1, ஷை தாலூகா அம்மாம்பாளையம் இராமசாமி ஆச்சாரியார்-2, இன்னும் சிலர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இவ்வூக்கத்தில் குறையாமல் பாடுபட்டார்களானால் கூடிய சீக்கிரம் பண்டுக்கு ஏராளமாகிய பணம் சேருமென்பதில் சந்தேகமில்லை. ஷை தனவான்கள் தங்கள் குடும்பத்திற்குப் பாடுபட்டுத்தான் சாப்பிடவேண்டுமென்கிற நிபந்தனையுமில்லை. கூடியவரையில் கடவுள் கிருபை செய்திருக்கின்றார். ஆகையால், இக்காரியத்தை கூடியசீக்கிரம் பூர்த்தி செய்து முடிப்பார்கள்.

***

தேகப்பயிற்சி.

மிதம்மீறி தேகப் பயிற்சி செய்தால் தேகத்துக்குப் பற்பல கெடுதல்கள் நேரிடக்கூடும். சிலசமயம் அற்பாயுஸுக்குக் காரணமுமாகும், பயில்வான்கள் வெகுவாய் அற்பாயுஸாகவே இறந்து போகிறார்கள். தேகப்பயிற்சி செய்யும்போது நாம் நமது தசைநார்களுக்கு ரொம்ப ச்ரமம் கொடுக்கக்கூடாது. எந்தப் பயிற்சியில் தசைநார்களுக்கு சிரமம் ஏற்படும், எதில் ஏற்படாதென்பது அவரவர்களின்தேகஸ்திதியைப் பொறுத்தது. தேகப்பயிற்சி ஆரம்பித்த இரண்டொரு நாள்களிலேயே பயில்வான்களைப்போல் சிரமமான பயிற்சிகளைச் செய்யவேண்டுமென்பது பிசகான எண்ணமாகும். முதலில் சிறிதளவு செய்து பிறகு கொஞ்சங் கொஞ்சமாக தேகப்பயிற்சியை அதிகமாக்கிக் கொண்டு போகவேண்டும். எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதென்னவென்றால், தசைநார்களுக்கு சிரமமும் வலியும் உண்டாக்கக்கூடிய எந்தப் பயிற்சியையும் செய்யக்கூடாதென்பதே.

***

நிலக்கரிக்குப் பதிலாக.

ஸ்வீடன் தேசத்தில் ஒரு இஞ்சினியர் நிலக்கரிக்குப் பதிலாக ஒரு மாற்றுப் பொருளைக் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகிறது. அங்குக் காகிதச்சாலைகள் அநேகம் இருக்கின்றன. காகிதங்கள் கந்தகத்தைக்கொண்டும் மரக்கட்டைகளைக்கொண்டும் தயாரிக்கப்படுகின்றன. மரக்கட்டையில் பாதிதான் காகிதம்செய்ய உபயோகிக்கப்படுகின்றது. மீதியானவை வீணாய்ப் போகின்றன. இப்படி வீணாய்ப்போகும் மரத்திலிருந்து ஒருவிதப்பொடியைத் தயாரிக்கும் முறையை மிஸ்டர் ஸ்டிரிலெனர்டு கண்டுபிடித்திருக்கிறார். அப் பொடியானது எரியும் குணத்தில் நிலக்கரிக்குச் சமானமாய் இருக்கின்றதாம். இத்தொழிலை ஆரம்பித்துச் செய்வதற்காக நார்வே தேசத்தில் 85 லெட்சம் பவுன் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஏற்பட்டிருக்கிறது. அங்கு நிலக்கரி வெளிதேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்ததால் இத்தொழில் நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டுப் போகும் விஷயத்தில் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியில் 100-க்கு 30 பாகம் குறைந்துபோகுமென்று தெரிகிறது.

***

வாலிபருக்கு இவை கூடாது.

கடகடவென்று சத்தம் போட்டுச்சிரித்தல்

கூட்டங்கள் முடியுமுன் இடையில் குடுகுடுவென்று எழுந்திருந்தோடல்.

கூட்டத்திலே குசுகுசுவென்று பேசிக்கொண்டிருத்தல்.

அந்நியரைக்கண்டால் அவர்களை உற்றுப் பார்த்துக்கொண்டிருத்தல்,

அந்நியர் வந்துவிட்டால் அவர்களுக்கு ஆசனம் கொடாதிருத்தல்

வயோதிகரை அர்ச்சனை செய்யாதிருத்தல்,

ஒருவரும் கேட்டுக்கொள்ளாதிருக்கையில் கூட்டத்திலே சத்தமாய் வாசித்தல்.

பெரியோர் ஈயும் வெகுமதிகளை உபகாரம் சொல்லாது உணர்வின்றிப்போய் வாங்கிக்கொண்டு நடந்துவிடல்.

சம்பாஷணையில் தன்னையே மேன்மைப்படுத்தித் தற்புகழ்ச்சியாய்ப் பேசுதல்.

பிறர் குற்றங்களைப் பாராட்டிச் சிரித்துப் பரிகாசம் பண்ணுதல்.

பிறரைக்கூட்டங்களிலே பகிடிபண்ணல்.

தங்கள் வயசுக்கு மேற்பட்டவர்களை (விசேஷமாய் பெற்றோரைத்) திருத்தல்.

பிறர் பேசிமுடிக்குமுன் இடையிலே பேசுதல்.

மற்றவர்களிடத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தாங்களே படபடவென்று மாறுத்தரஞ் சொல்லிக்கொண்டு நிற்பது.

போஜனப்பந்தியில் உட்கார்ந்திருக்கையில் முன் கூட்டி கலத்திலே கைபோடல்.

முதியோர் பகரும் நல்லாலோசனைகளை அலட்சியஞ்செய்தல்.

***

"பாரத புத்ரன்"—மொழிபெயர்ப்பு.

தொழிற் படிப்புக்கு உபகாரசம்பளம்.

இந்தியாவின் தொழில்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு அன்யதேசங்களில்போய் தொழிற்கல்வி கற்க ஸ்காலர்ஷிப்பு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் வருஷந்தோறும் மொத்தம் 10-ஸ்காலர் ஷிப்புகள் கொடுப்பார்கள். வருஷந்தோறும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் குறைந்தது ஒரு ஸ்காலர்ஷிப்பு கிடைக்கலாம்.

ஸ்காலர்ஷிப்பு பெற்றவர்கள் ஸாதாரணமாக 2-வருஷம்படிக்கவேண்டும். ஆனால் சில ஸந்தர்ப்பங்களில் அவர்கள் 3-வருஷ காலம் வரையிலாவது, அல்லது இரண்டு வருஷத்துக்கும் குறைவாகவாவது வாசிக்க அனுமதிபெறலாம். இந்த ஸ்காலர்ஷிப்பின் மதிப்பு ஒரு வருஷத்துக்கு ஒரு நபருக்கு150-பவுனாகும். பள்ளிக்கூடச்சம்பளமும் அன்யதேசத்துக்குப்போய் வர ஏற்படும் செலவும் இதில் சேராது. யாராவது ஒரு மாணவருக்கு மேற்சொன்ன தொகை போதாதென்று தெரிந்தால், கவர்ன்மெண்டார் இன்னும் கொஞ்சம் அதிகமாக பணஉதவி செய்வதைப்பற்றி ஆலோசிப்பார்கள். ஸ்காலர்ஷிப் பெற்றவர்கள் க்ரேட் ப்ரிட்டனில்போய் கல்வி கற்கவேண்டும். வேறு அன்யதேசங்களுக்குப் போய் வாசிக்க வேண்டுமானால், இந்தியா மந்திரியின் அனுமதியைப் பெறவேண்டும்

***

தொழிற்சாலைகள்.

சென்ற ஜூன் மாதத்தில் வங்காளத்தில் 6-தொழிற் கம்பெனிகள் 9-லட்ச ரூபாய் மூலதனத்துடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. விவரம்:—இரண்டரை லட்சம் மூலதனத்துடன் ஒரு அச்சுயந்திரசாலை இருபதினாயிரம் மூலதனத்துடன் ஒரு வர்த்தகக் கம்பெனி, இரண்டரை லட்சம் மூலதனத்துடன் ஒரு ரப்பர்க்கம்பெனி, இரண்டு லட்சம் மூலதனத்துடன் ஒரு தேயிலைத்தோட்டக் கம்பெனி, ஒன்றரை லட்சம் மூலதனத்துடன் ஒரு நிலக்கரி சுரங்கக் கம்பெனி.

இந்தியாவில் எத்தனையோ விதமான தொழிற்சாலைகள் பலவற்றை ஸ்தாபிக்கக் கனதனவான்கள் முற்படுவார்களாயின் நமது தேசத்துக் கைத்தொழில் விர்த்தியாகும் நமது தேசத்துக் கூலியாட்களும் அந்நிய தேசங்கட்குச் சென்று அல்லல் பல அனுபவிக்கவேண்டுவ தில்லையாம். இந்துக்கள் பலர் சேர்ந்து ஒரு கம்பெனி ஸ்தாபிப்பதில்லை அவர்கட்குள் ஐக்யம் என்பது சிறிது மில்லை ஒருவரையொருவர் நம்புவதில்லை. இக்காரணங்களினால் இந்துக்கள் வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் விர்த்தியாகின்றார்களில்லை.

இவ்வித பொருளை இவ்வூரில் வைத்து கம்பெனிகள் ஸ்தாபித்து நடத்தினால் அதிகலாபம்சம்பாதிக்கலாம் இதைப்பற்றி இச்சென்னையிலுள்ள கனதனவான்கள் கவனிப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறோம்.

***

VISWAKARMA TILE WORKS.

விஸ்வகர்ம கள்ளிக்கோட்டை

ஓடு தொழிற்சாலை.

இந்தப் பெயருடன் தென்னாடெங்கும் வழங்கிவரும் ஓடுகளைப்பற்றி அறியாதார் இல்லை. இந்தக் கள்ளிக்கோட்டை ஓடுகள் அங்குள்ள காமெரூன் கம்பெனியாரால் மட்டுமே செய்யப்படுவதாகப் பலர் கருதியிருப்பர். ஆனால் இந்த ஓடுகள் செய்யும் தொழிற்சாலை பொன்று தென்மலையாளம் ஜில்லாவிலுள்ள பாளி யென்னும் இடத்தில் இருப்பதை அநேகர் அறியார். காமெரூன் கம்பெனி ஐரோப்பியர்களின் மேற்பார்வையிலுள்ளது. பாளி விஸ்வகர்மா ஓட்டுத்தொழிற்சாலையோ நம்மவர்களான ஒரு விஸ்வகர்ம குலத்தினால் நடத்

தப்பட்டு வருகின்றது. இந்தத் தொழிற்சாலை சுமார் 10 வருஷங்களாக நடந்துவந்த போதிலும் இப்பொழுதுதான் நாம் அதைப்பற்றிக் கேழ்விப்பட்டது ஆச்சரியமாயிருக்கிறது. ஆயினும் இத்தொழிற்சாலையில் இப்பொழுது நல்லவேலை செய்துவருகின்றதென்பதை அறிய மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். இந்தத் தொழிற்சாலையை நிர்வகித்து வரும் திருநெல்வேலி பிரம்மஸ்ரீ உலகநாத ஆச்சாரியாரவர்களின் ஊக்கத்தை நாம் மிகவும் கொண்டாடுகின்றோம்.

இந்தத் தொழிற்சாலையில் சகல வேலைக்கும் நீராவி எஞ்ஜினின் உதவியாலே நடைபெறுகின்றன. இதில் வீடுகளுக்கு உபயோகமான பலவகையான ஓடுகளும். கண்ணாடியோடுகள், குழாய்கள் முதலிய பலவித சாமான்களும் செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலை என்றும் வளர்ந்தோங்க வேண்டுமென்று நாம் இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இத்தகைய நூதன முயற்சிகளில் நம்மவர்கள் தலையிட்டு வேலை செய்தால் தான் நமது தேசம் மேன்மையடைதல் கூடும். இத்தொழிற்சாலை நம்மவர்களுக்கு ஒரு வழி காட்டியாயிருக்கிறது. இவ்விதவித விஶ்வகர்ம தொழிற்சாலை என்பதாக ஸ்தாபித்து பல தொழில்களையும் செய்துவந்தோமானால் நம்மவர்களுக்கு தொழிலில்லை என்னும் குறைநீங்கி சுகமடையலாம். இத்தொழிற்சாலையைப்பற்றி இன்னும் விவரங்கள் அறியவேண்டுவோர் தென்மலையாளம் ஜில்லா பாளி விஶ்வகர்ம ஓட்டுத் தொழிற்சாலை (Tile Works) மானேஜர் உலகநாத ஆச்சாரியாருக்கு எழுதிக்கொள்க.

கைத்தொழிற் குறிப்பு.

கறுப்புமை.

எட்டுபாகம் மாசிக்காயும் மூன்றுபாகம் அன்னபேதியும் ஒருபாகம் கருவாப்பிசினும் சேர்த்து இடித்து இருபதுபாகம் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கிக்கொண்டால் எழுதுவதற்கு உபயோகமாயிருக்கும்.

ரோஸ்பவுடர்.

1 இராத்தல் ஆரோரூட்மாவும் 5 கிரேயின் ரோஸ் பவுடரும் ரோஸ் அத்தர் 10 துளியும், சந்தன அத்தர் 10 துளியும், விட்டு நன்றாய்க்கலக்கி சிறுபிள்ளைகளுக்கு சரீரத்தில் போடலாம் ரோஸ் அத்தருக்கு பதில் ரோஸ் எசன்ஸ் நல்லது.

அரக்கு.

ஓர் செப்புப் பாத்திரத்தில் 5 பாகம் அவலரக்கைப் போட்டு இளந்தீயில் உருக்கி மூன்றுபாகம் (டர்பென்டைன்) கற்பூரதைலத்தை விட்டு வேண்டிய நிறைபோல் சாயப்பவுடரை சேர்த்துக் கலக்கி அதில் தூள்செய்த குங்கிலியம் 6 பாகமும், சீமைச்சுண்ணாம்பு 4 பாகமும் சாம்பிராணி 2 பாகமும், கிளைமாவு 4 பாகமும் சேர்த்து ஈபக்கரண்டியாலாகிலும் மாக்குச்சியினாலாகிலும் கிண்டி சரியான பதத்தில் எடுத்து வேண்டிய மாதிரியாய் குழிகளாகவோ உருண்டையாகவோ செய்து கொள்ளவும்.

மஞ்சள் மெழுகு.

கொழுப்பு 30 பாகம், மஞ்சள் குங்கிலியம் 70 பாகம், மஞ்சள் தூள் 4 பாகம், மஞ்சள் பவுடர் 2 பாகம், இவற்றை ஒன்றாய்ச் சேர்த்து ஒரு பெரிய பாத்திரத்தில் போட்டு உருக்கிக் கொள்ளவும் சுய மெழுகைவிட நன்றாயிருக்கும்.

ஜர்மன் சில்வர்.

செம்பு நாகம் நிக்கல் மூன்றையும் சம இடையாய் எடுத்துச் செம்பையும் நிக்கலையும் துண்டு துண்டாக்கிக்குகையிலே போட்டு உருக்கியபின் நாகத்தையும் அதில் உருக்கி தேவையான சாமான்கள் செய்து கொள்ளலாம் இது அசல் வெள்ளியைப் போலிருக்கும்.

உ

சுபமஸ்து.

"கைத்தொழில் பிராணதாரம்
கல்வி யிகபரசித்தி"

விஶ்வகர்ம தொழிற்சாலை

இப்பெயர்கொண்ட தொழிற்சாலை ஒன்று பிரபலமாய் ஏற்படுத்தி, அதில் இரும்பு, மரம், லோகம், கல், பொன் முதலிய ஐந்துவேலைகள் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது நமது ஜாதியாரின் முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் பெரிய காரியம் ஆதலால், குலாபிமானிகள் ஒரு மனதுடையவராய் இதற்குப் பங்காளிகளாகச் சேருதல் நலம். அங்ஙனம் சேரப்பிரியமுள்ள விஸ்வகர்ம சிரேஷ்டர்கள் ஒவ்வொரு ஷேருக்கு ரூபாய் 10 ஆக எத்தனை ஷேராவது சேரலாம். முதலில் சேருவதைப்பற்றி அவரவர்கள் தங்கள் அபிப்பிராயத்தையும், எடுத்துக்கொள்ளும் ஷேரின் தொகையையும், முழுவிலாசத்தையும் முன்னர் தெரிவித்தால், பிறகு ஓர் மீட்டிங்கூடி அதில் பொறுப்பாளிகளாகிய நமதுகுல செல்வவந்தரைத் தலைவராக நியமித்து, ஏற்பாடுகளானதும் அவர் கைப்பட ரசீது கொடுத்துப் பணம் வசூல் செய்யப்படும். முதலில் எத்தனை ஷேர் சேருமென்றதிடம் வேண்டியதிருப்பதால், இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் இப்பெருங்காரியம் நிறைவேறி நமது குலப்பெருமை குன்றின்மேலிட்ட விளக்காய் விளங்க ஷேர் ஹோல்டராகக் கையொப்பம் இடவேண்டுகிறேன்.

இங்ஙனம்,

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
விஶ்வகர்ம. குலோபகாரி ஆபீஸ்,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.

14—3—17

இன்டியன் டைப் பவுன்டரி.

ஒ. துரைசாமி ஆச்சாரி அண்டு சன்ஸ்.

நெ-7 சூளை ஹைரோட், மதராஸ்,

நானுவித அச்செழுத்துகள் தற்கால வேலைத்திறத்தின் நாகரீகத்திற்கு

பாங்காகும்படி

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய

பாஷைகளில் வார்த்து சப்ளை செய்கிறோம்.

அச்சாபீசுக்கு வேண்டிய மற்றும்

மரக்கோல வகையராக்கள், பித்தளை கம்போஸிங் ஸ்டிக், மவுல்ட்,

மாட்ரைஸ், பன்க்ஷ் முதலான சகல சாமான்களும்

எங்கள் வசம்

லகுவான விலைக்கு கிடைக்கும்

யாவும் நல்ல வேலைப்பாட்டுடன் தயாரிக்கப்படுகின்றன.

இ த ன் றி யு ம்

மதராஸில் அகப்படக்கூடிய சர்வ "ஸெகண்ட் ஹாண்ட்" ப்ரின்டிங் மெஷின்களுக்கும்

நாங்கள் கமிஷன் ஏஜண்டு.

☞ எங்கள் புதிய டைப் ஸ்பெஸிமன் ஜாப்தாவுக்கு எழுதவும்.

விஸ்வகர்ம குலோபகாரி.

1917

புதிய புஸ்தகம் தயாராயிற்று

"வாழ்வின் மேன்மை"

---:o:---

கிடைத்தற்கரிதான மானிடதேகத்தைப் போற்றி நீடித்தகாலம் சுகமாக வாழ்வதற்கு அனுகூலமான அநேக விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்ளும் வண்ணம் எழுதி வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டியது அவசியம். யுத்தகாலம் காகிதப் பஞ்சம் சொற்பப் பிரதிகள்தான் கைவசம். முந்துங்கள், உங்கள் விலாசத்தை எழுதியனுப்புங்கள், இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

175, பிராட்வே, மதராஸ்.

இரத்னபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான புதுநாவல்: 2 பாகங்கள்.

இதில் மிக்கஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளது. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருட்டாந்தப் பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதற்பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூற வேண்டுவதின்றும். இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன என்றுமட்டும் கூறுகின்றோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. டபிள் கிரௌன் 1-க்கு 16 கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது. 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது விலை 2 பாகங்களும் ரூ. 3 4 0

2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்களுக்கு மட்டும்) ரூ. 1 12 0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக் கடைசிவரையில் இரண்டு பாகமும் ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்தபோதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத்தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷசந்தா விகிதம்.

இந்தியா பர்மா ஸிலோனுக்கு ரூ. 1—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.

ஆனந்தபோதினி மாதிரிகாப்பிக்குக் கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,

நெ. 6. வெங்கிடேச மேஸ்திரி வீதி,

சௌகார்பேட்டை, மதராஸ்.

உ
சுபமஸ்து.

"விஸ்வகர்ம குலோபகாரி" என வழங்கிவந்த

கைத்தொழில்.

மலர்-4. { பிங்கள௵ சித்திரைமீ 1917௵ ஏப்ரல்மீ } இதழ் 3.

OFFICE OF THE REGISTRAR ... 13 APR 1917 ... MADRAS

நமது பத்திரிகை.

நமது பத்திரிகையைத் 'தொழில்' என்ற புதிய பெயருடன் தொடங்கியதற்குக் காரணங்கள் பல.

நமது தேசத்தில் உள்ளவர்களுக்குத் தொழில்ஞானம் அதிகரித்தால்தான் நமது தேசம் மேலான நிலைமைக்கு வரும். இதுவரை நாம் நமது தேசத்திலே செய்யக்கூடிய பல தொழில்களை அந்நிய நாட்டாரிடம் ஒப்புவித்து விட்டு அவர்களை எதிர்பார்த்திருந்தோம். இனி, அவ்விதம் இல்லாமல் நாமே அந்தத்தொழில்களைச்செய்து லாபமடைவது அவசியமாகும். நம்மால் செய்யமுடியாத தொழில்களை அந்நியரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டுவது அவசியமாகும். இதுவரை யாவராலும் செய்யப்படாத புதியதொழில்களையும் முயற்சித்தல் அவசியமாகும். இவ்வித முயற்சிகளுக்கு அநுகூலமான விஷயங்களைக் குறித்துப் பேசும் பொருட்டு இப்பத்திரிகை 'தொழில்' என்ற பெயருடன் தொடங்கப்படுகிறது. இதனை நமது தேசத்தார் ஆதரிக்க முன்வருவார்களாயின் நாம்கொண்ட கருத்துக்க ளெல்லாம் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

***

சென்னை கைத்தொழிற்சாலை.

இந்தத் தொழிற்சாலை நூதன முறையைத்தழுவி நடைபெறும். இதில் இரும்பு, மரம், தாமிரம், கல், பொன்முதலிய ஐந்து லோகங்களிலும் அதை அநுசரித்த பல தொழில்களை நடத்தப்படும். இதில் பலவகுப்பாரும் ஜாதிமத வித்தியாசமின்றி வேலை செய்வார்கள். இதில் தற்காலம் நடக்கக்கூடிய தொழில்களை நடத்திக்கொண்டு, பின் காலக்கிரமத்தில் பல தொழில்களையும் கைக்கொண்டு நடத்தப்படும். இந்தத் தொழிற்சாலையில் பலஜாதிச் சிறுவர்களுக்கும் தொழில் கற்பித்துக் கொடுக்கப்படும்.

இது மேல்நாட்டு முறையைப்பின்பற்றி, கூட்டுவர்த்தகச் சங்கமாக நடத்தப்படும். இதன் (மானேஜிங் கமிட்டி) நிர்வாக சங்கத்தில் சென்னையிலுள்ள பல பிரமுகர்கள் சேருவார்கள். தேச நன்மையையும் கைத்தொழில் அபிவிர்த்தியையும் விரும்பும் நம்மவர்கள் இதில் பங்குகள் எடுத்துக்கொண்டு நம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இத்தொழிற்சாலையில்சேருபவர்களுக்கு பங்கு ஒன்றுக்கு 10-ரூபா ஆகும். எத்தனை பங்கெடுத்துக்கொள்ளப்பிரியமிருந்தாலும் எடுத்துக்கொள்ளலாம். இதில் வேலைசெய்பவர்களுக்கும் லாபத்தில்பங்குகிடைக்கும்.

கைத்தொழிற் கல்வியும், வியாபாரமும்.

கல்வி பலவிதமாயிருக்கிறது. அதாவது பயிர்த்தொழில், கைத்தொழில், சித்திரத்தொழில், வர்த்தகம் முதலியவைகளைக் குறித்து பலவித்வான்களால் எழுதப்பட்டிருக்கும் நூல்களை வாசித்து இத்தொழில்களைவிருத்தி செய்வதே முக்கியமானது.

1. பயிர்த்தொழிலைக்குறித்து ஜனங்கள் வாசித்துப் பாண்டித்தியமடைந்துஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் பிரமுகர்கள் நூதனமான ஜலவசதிகள் உண்டாக்கி சைன்ஸ் முறைப்படி செய்யும் பயிர்வகைகளைக் குறித்துப் போதிப்பதற்காக "அக்ரிகல்சரல் காலேஜ்" என்று ஒரு வித்தியாசாலை சென்னையைச் சார்ந்த சைதாப்பேட்டையில் ஏற்படுத்தப் பட்டு அநேக வருஷங்களாகிறது. இக்காலேஜியில் வாசித்துப் பரீட்சையிற் றேர்ந்தவர்களை கிராமங்களுக்கு அனுப்பி கிராமத்தவர்களை ஒன்றுசேர்த்துப் பள்ளிக்கூடங்கள் வைத்து அவர்களுக்கும் நூதனமான பயிரிடும் வகைகளைப் போதித்துப் பயிர்த்தொழிலை விருத்தி செய்யாமல், "ஆடுமாடுகளுக்கு உண்டாகும் நோய்களைக்கண்டு பரிகாரஞ் செய்யும் இன்ஸ்பெக்டர் உத்தியோகம்" "Inspector of Cattle Diseases" "ரெவினியு இன்ஸ்பெக்டர் உத்தியோகம்", முதலிய உத்தியோகங்கள் அவர்களுக்குக் கொடுப்பதால் பெருத்தபிரயோஜனம் ஒன்றும் ஏற்படுகிறதில்லை. ஆகையால் "அக்ரிகல்சரல் ஸ்கூல்கள்" என்று இச்சென்னை இராஜதானியில் ஒவ்வொரு ஜில்லாவிலும், முக்கிய பட்டணங்களிலும், பெரியகிராமங்களிலும், கவர்ன்மெண்டாராவது, பணக்காரர்களாயிருக்கிற நாட்டுக்கோட்டைச் செட்டிகள் முதலிய பிரபுக்களாவது பல பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்து ஜனங்களுக்கு நூதனமாகப் பயிர் செய்யும் வகைகளைப் போதித்து வந்தால் வெகு சீக்கிரத்தில் நம்முடையதேசம் விருத்தியடையும்.

2. கைத்தொழிலையும் சித்திரத்தொழிலையும் ஜனங்களுக்குப் போதித்து இவற்றை விருத்தி செய்வதற்காக கவர்ன்மெண்டார் "ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ்" என்னும் ஒரு வித்தியாசாலை சென்னப்பட்டணத்தில் ஏற்படுத்தி அநேக வருஷங்களாகிறது. ஆயினும் இந்த ஒரு வித்தியாசாலையினால் பெருத்த பிரயோஜனம் ஒன்றும் ஏற்பட்டிருப்பதாகக் காணப்படவில்லை. "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்" என்கிற தெய்வப் புலமை திருவள்ளுவநாயனார் வாக்கியப்படி நம்மவர்களில் தனவந்தர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு ஜில்லாவின் முக்கிய பட்டணங்களிலும், பெரிய கிராமங்களிலும் அநேக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நம்முடைய சிறுவர்களுக்குப் பத்துபன்னிரண்டு வயது வரையில் கல்வியோடு சித்திரமெழுதலும், கைத்தொழிலின் முறைமைகளையும் போதித்து வரவேண்டும். இப்படிச்செய்தால் தான் நம்முடையதேசம் முன்னுக்குவரும். தேசாபிமானம், குலாபிமானம் முதலியவைகள் இல்லாமல் "மனமின்டிகி மனமே பெத்தா பில்லிக்கு பெட்ரு பங்காமம்" என்னும் ஆந்திர பழமொழிப்பிரகாரமும் "கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்னும் தமிழ்ப் பழமொழிப்பி

ரகாரமும் நாமே எல்லாரைக்காட்டிலும் மேலானவர்கள், நாமும் நம்முடையபெண்சாதி பிள்ளைகளும் நல்லஅந்தஸ்திலிருந்தாற்போதும், மற்றவர்களைக் குறித்து நமக்கென்ன கவலையென்று வாய்வேதாந்தம் பேசிக்கொண்டு சுயநலப்பிரியர்களாக வாழ்ந்து வருவதால் நமக்கும் பசு பட்சிகளுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? அவைகளும் அருந்தல் பொருந்தல்களைச் செய்கின்றன. "அரிது அரிது மானிடராதலரிது" என்கிற ஆன்றோர் வாக்கியப்பிரகாரம் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியைப் பெற்றுகிருகஸ்தாசிரமிகளாகிய நாம் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய காரியங்களென்னவெனில், நம் குலமக்கள்யாவரும் கல்வியிலும், சித்திரமெழுதுதலிலும், கைத்தொழிலிலும், மேம்பாடடையச் செய்வதேயாம். நம்மவர்களில் ஏழைகளாயுள்ளவர்கள் தங்கள்பிள்ளைகளைச் சிறுவயதில் பள்ளிக்கூடங்களுக்கனுப்பிக் கல்விகற்பிப்பதற்குச் சக்தியற்றவர்களாயிருப்பதால் துருத்தி ஊதுதல், சக்கரம் சுற்றுதல் முதலிய வேலைகளுக்கனுப்பி தினம் ஒன்றுக்குஇரண்டு அல்லது மூன்றணா கூலி சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுக்கும்படியாய் விட்டு விடுகிறார்கள். அதனால் இச்சிறுவர்கள் கல்வி வாசனையில்லாதவர்களாய்க் கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து பீடி, சிகரெட்டு, சுருட்டு பிடிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். வேறுசில பிள்ளைகள் கள், சாராயம் முதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகிக்கக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படியெல்லாம் கெட்டுப்போவதால் நம்மக்கள் மேல்நிலைமையடைவது எப்படி சாத்தியமாகும்? கல்வியில்லாக் குறைவால் நம்மக்கள் வரவுக்குத் தகுந்த செலவு செய்யாமல் அதிகச் செலவு செய்வதால் பெருத்த கடன்காரர்களாகி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏன் இப்படி கஷ்டப்படுகிறீர்களென்று கேட்டால், நம்முடைய ஜாதிக்குப் பரமசிவத்தின் சாபமேற்பட்டிருக்கிறது. அதனால் நாமெவ்வளவு சம்பாதித்தாலும் தரித்திரத்தையே அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதற்கு கர்ணபாரம் பரியமாய் ஒரு சிறு கதையும் சொல்லுகிறார்கள். அது நிஜமோ பொய்யோ வென்பதை இதை வாசிக்கும் நண்பர்கள் தெரிந்துகொள்வார்கள். அக்கதை என்னவென்றால், ஒருகாலத்தில் பரமசிவமும் பார்வதியும் ஏகாந்தமாயிருக்கும்போது தங்களில் யார் அழகாயிருக்கிறோமென்று கேட்டுக்கொண்டதாகவும் அதை விஸ்வகர்மாவால் தெரிந்து கொள்ளலாமென்று அவரை வரவழைத்துக் கேட்டபோது அவர் தம்மகிமையால் கண்ணாடியொன்று நூதனமாய் சிருஷ்டித்துக் கொடுத்து அதன் மூலமாய் உங்கள் அழகை நீங்களே பார்த்து தெரிந்து கொள்ளுங்களென்று சொன்னதாகவும், பரமசிவம் பார்த்தபோது ஆலால சுந்தரர் உண்டானதாகவும், பார்வதி பார்த்தபோது அனிந்திதை, கமலினி என்பவர்கள் உண்டானதாகவும், பிறகு பரமசிவன் விஸ்வகர்மாவின் சிருஷ்டிக்கு மெச்சினவராய் உமக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டபோது என் சிருஷ்டியில் அடங்காதவஸ்து ஏதாவதிருந்தால் அதை எம்மக்களுக்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்றுசொல்ல, அவர் தரித்திரத்தை பிரசாதித்தருளினாரென்பதாம். இது எப்படி இருக்கிறதென்றால் "ஆடமாட்டாத தேவடியாள் இடம் போதாதென்று சொன்னாள்" என்னும் பழமொழிக்கிணக்கமாயிருக்கிறது. நம்மவர்கள் கூத்து, பை

யாஸ்கோப்பு, முதலியவற்றைப் பார்க்கப் போய் அனாவசியமாய்ச் செலவு செய்யும் பணத்தை ஒரு உண்டியில் போட்டுவைத்து தற்காலத்தில் நம் ஜாதிப்பிள்ளைகள் விருத்தி அடைவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

அவ்வேற்பாடுகள் செய்ய நம்மால் முடியாவிட்டால் சென்னையிலும் மற்றவிடங்களிலும் நம்குலாபிமானிகள் ஏற்படுத்தியிருக்கும் வித்தியாசாலைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் உதவிசெய்ய வேண்டும். ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலுள்ள சில தேசங்களும் ஆசியா கண்டத்தில் ஜப்பான் தேசமும், சில நூற்றாண்டுகளுக்குமுன் கல்வி, கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளில் குறைவாயிருந்தன. அத்தேசத்தவர்கள் தேசாபிமானத்தால் தாங்களும் தந்தேசத்தவர்களும் விருத்தியடைவதற்குத் தகுந்தவேற்பாடுகள் என்னென்ன உண்டோ, அவைகளையெல்லாம் காலதேசவர்த்தமானங்களுக்கு ஏற்றபடி செய்தபடியாலும், இப்போதும் செய்துவருகிறபடியாலும் விருத்தியடைந்து வருகிறார்கள். நம் இந்தியா தேசமானது மேற்கூறிய தேசத்தவர்களுக்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முந்தியே கல்வி, தொழில், வர்த்தகம், நாகரீகம் முதலியவைகளில் மேம்பட்டிருந்தும், தற்காலத்தில் கல்வி, ஒற்றுமை முதலியவைகள் இல்லாதபடியால் எல்லாருக்குந் தாழ்ந்த நிலைமையில் இருக்கிறோம். நம்தேசத்தவர்கள் கோவில்களில் சுவாமிகளை வீதிப் புறப்பாடு செய்யும் போது எவ்வளவோ பணத்தை அனாவசியமாய்ப் பாணவேடிக்கை முதலியவைகளில் செலவழிக்கிறார்கள். இக்காலத்தில் முக்கியமாய்ச் செய்யவேண்டிய தருமம் இன்னதென்று யோசித்துக் கல்வி, கைத்தொழில் முதலியவைகளை நம்தேசத்துச் சிறுவர்களுக்கு இலவசமாகக் கற்றுக்கொடுப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் வெகு சீக்கிரத்தில் செய்யவேண்டும். இப்படிச் செய்யாமல் இதுகாறும் தூங்கிக்கொண்டிருந்தது போல் இனிமேலுமிருக்கப்படாது. கும்பகர்னனுக்குத் துணைபோகாதீர்கள். விழித்துக்கொள்ளுங்கள்! விழித்துக்கொள்ளுங்கள்!!

3. வர்த்தகம் இத்தேசத்தில் விருத்திக்கு வாராததற்குக்காரணமென்னவென்றால் நம்மவர்களுள் ஒற்றுமை, சத்தியம், சாந்தம், வைராக்கியம் முதலியவைகள் இல்லாமையே. நாட்டுக்கோட்டை செட்டிமார்கள், மடாதிபதிகள் முதானவர்களிடத்தில் எவ்வளவு பணமிருந்தும் காலத்திற்கேற்ற ஏற்பாடுகள் செய்யாமையால் நம் இந்தியாதேசமானது வரவரத்தாழ்ந்த நிலைமையையடைந்து க்ஷீணித்து வருகிறது. ஆகையால் மற்ற தேசத்தவர்களைப்போல் நம்மவர்களில் தனவந்தர்களெல்லாமொன்று சேர்ந்து இதுவரையில் தம் திரவியத்தைச் சேமித்துவைத்திருந்தவைகளெல்லாம் வெளியிலெடுத்துப் பல கம்பெனிகள் சேர்த்து தொழிற்சாலைகள் ஏற்படுத்தி கண்ணாடி, குண்டூசி, தீப்பெட்டி, ஆடைகள் முதலியவைகளை இவ்விடத்திலேயே செய்து விற்பனை செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் வெகு சீக்கிரத்தில் செய்யவேண்டும். கண்ணாடி முதலியவைகள் செய்வதற்கு மூலப் பொருள்களெல்லாம் கிடைக்காத தேசத்தவர்கள் அவைகள் எங்கு சுலபமாய்க் கிடைக்கின்றனவோ அத்தேசங்களிலிருந்து வரவழைத்துக் கண்ணாடி முதலியவைகளைச் செய்கிறார்கள். ஆனால் நம்மிந்

தியாதேசத்தில் மூலப்பொருள்களெல்லாம் யதேஷ்டமாயிருக்கிறபடியால் அவைகளைக்கொண்டு நமக்கு அத்தியாவசியமாய் வேண்டிய வஸ்துக்கள் அனைத்தையும் இதுவரைக்கும் அன்னிய தேசங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்ததுபோல் இராமல் நம்தேசத்தில் நாமே செய்யும்படியான ஏற்பாடுகள் வெகு சீக்கிரத்தில் செய்யவேண்டும். தற்காலத்தில் ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும் நடக்கும் யுத்தகாரணமாக ஜர்மனி, ஆஸ்டிரியா முதலிய தேசங்களிலிருந்து இதுவரைக்கும் இத்தேசத்திற்கு அனுப்பப்பட்டு விற்பனையாய்க்கொண்டிருந்த சாமான்கள் யாவும் வருவது தடைப்பட்டுப் போய்விட்டது. இதுவே நல்ல சமயம். "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுங்கள்," "Make hay when the sun shines" என்னும் பழமொழிகளின் பிரகாரம் நம்மவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து நம்மிந்தியாதேசத்தில் வர்த்தகசாலைகளும், தொழிற்சாலைகளும் அநேகமாய்வேற்படுத்த வேண்டும்.

கு. குமாரசாமி ஆச்சாரி,
சென்னை.

ஆபரணத்தொழில்.

ஸ்திரீகளுக்கும் புருஷர்களைப் போல் வேலைத்திறமையுண்டு. தட்டாரத்தொழிலில் தேர்ச்சியடைந்தமாதர்கள் ஐரோப்பாவில் அநேகருண்டு என்பதை அவர்களின் சஞ்சிகையிலிருந்து அறிகிறோம். அம்மாதிரி இவ்வூரிலும் ஒரு குலஸ்திரீ வேலை செய்து ஜீவனம் செய்கிறதைப் பார்த்திருக்கிறேன். இவள் சாதாரண சில்லரை நகைகளைத் திறமையாய்ச் செய்வதுடன் சேதாரம், பொடிவாசி, கூலி முதலியவைகளைத் திட்டமாய்க் கணக்கிடும் சாமர்த்தியமும் இவளிடமிருந்ததைக்கண்டு ஆனந்தித்தேன். இம்முறையை எல்லாக் குலப் பெண்களும் அனுசரிப்பது வெகு சிலாக்கியம் என்று எண்ணுகிறேன்.

சென்னையில் நகைசெய்பவர்களில் அநேகர் கெட்டிக்காரர்களாகவே யிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் எல்லோரையும் எனக்கு நேராய்த் தெரியாமையால் அவர்களின் வேலைகளின் விபரங்களை எழுதச் சாத்தியப்படவில்லை. பத்திராதிபர் அவர்களை யெல்லாம்கண்டு அவர்களின் அனுபவங்களை இப்பத்திரிகையில் எழுதும்படிச்செய்வது மிக அனுகூலமாயிருக்கும். கல்விஞானம் குறைவாயிருந்த போதிலும், அவர்களின் தொழில்ஞானத்தை வெளியிட எந்தத்தமிழாய் இருந்த

போதிலும் குற்றமில்லை. கல்வியும், தொழிலும் பூரணமாய் அறிந்த ஒருவன் உலகத்திலேயே கிடையாது. ஆகையால் ஒவ்வொருவரும் பயப்படாமல் எழுதவேண்டும். தொழில் விஷயங்களில் நாமெல்லோரும் ஒருவருக்கொருவர் நேராய்ச் சந்திக்காமல் போனபோதிலும் சஞ்சிகையின் மூலமாயாகிலும் பேசினால்தான் நம்மிடத்திலுள்ள குற்றங்கள் வெளியாகும். அதிலிருந்து சீர்திருத்தங்கள் உண்டாகும். எல்லாமறிந்து குற்றமில்லா ஞானமுள்ளவர்கள் என்று நாமே நினைத்திருந்தாலும் ஒருவரும் நம்பமாட்டார்கள். கடவுள் நமக்கென்று சிருஷ்டித்த மூளையின் அளவே நமக்குற்ற அறிவென்று நிச்சயமாய் ஒவ்வொருவரும் நம்பவேண்டும். அதை விசாலப்படுத்த அப்பியசிப்பதனால் மற்றவர்களைவிடக் கொஞ்சம் விரிவாகும். இப்படிக்கு அனுகூலப்பட்டாலும் அது ஒரு நோக்கமாய்த்தான் பிரதிபலிக்குமேயொழிய எல்லாமறிந்த இறைவனைப்போல் அசாத்திய சக்திக்கு இடங்கொடாது. ஆகையால் பல மூளைகள் ஒற்றுமையால் ஒரு காரியத்தைப்பற்றி உழைப்பதிலும், பலர் பலகாரியங்களைப்பற்றி உழைப்பதையும் ஒரு பத்திரிகையில் வெளியானால் பலவித அனுகூலங்களுக்கு இடங்கொடுக்கும். இவ்வித அனுகூலங்கள்தான் நாளாவட்டத்தில் பெருகி அநேக சீர்திருத்தமான நாடுகளில் தொழில் விருத்தியைப் பெருகச்செய்தன.

இத்தேசத் தொழில்ஞானிகளில் சிலர் சில சமயங்களில், தொழில் விபரங்களை வெளியிடுவதனால் அவர்களின் தொழிலுக்கே ஆபத்து வந்ததாக நினைக்கின்றார்கள். அப்படிக்கு நினைப்பதனால் தொழில் விருத்திக்கு அனுகூலமாயிராது. தொழில் விஷயத்தில் இரகசிய பாகங்கள் தொழில் அனுபவத்தினால் சிலசமயம் நேரிடலாம். அவைகளை அவர்களே அனுபவிக்கலாம். அதை மற்றொருவருக்கு வெளியிடுவதனால் அனுபவப் படாதவர்கள் அனுகூலப் படமாட்டார்கள். அனுபவப்பட்டவர்களாயிருந்தால் அதைச் சீர்திருத்தமாய் உபயோகிக்கும் அனுபவம் அவர்களிடத்தில் நேரிடும். அதனால் பலரும் விருத்தியடைந்து பொதுவாய்த் தொழில்விருத்திக்கு தோள் கொடுத்ததாக ஆரம்பிக்கலாம். தட்டாரத் தொழிலில் இம்மாதிரி இரகசிய விஷயங்கள் ஏதாகிலும் பலருடைய அனுபவத்திலிருக்கின்றனவா என்று யோசித்துப் பார்த்தால் எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. சாதாரணத் தட்டாரத்தொழிலில் முக்கியமாய் அடிக்க நீட்டத் தெரிவதுமுதல் அப்பியாசம், ஆபரணங்களுக்குத் தக்கபடி ஏற்பாடாய் அடித்து நீட்டுவதும், ஒரே கனதியாய் தகடு அடிப்பதும் ஒருவிதப் பழக்கம். இந்த அனுபவக் கைப்பழக்கத்தினால் சுத்தம் அருமலே வேலைசெய்து பிழைப்பவர்கள் அநேகமிருக்கலாம். இவர்கள் வேலைத்திறமையை அஸ்திவாரமில்லாத கட்டடம்போல் நினைக்கவேண்டும். ஆனால் தற்கால ஆங்கிலேயத்தொழில் நாகரீகத்தின்படிக்கு சுத்தி அடியின் நுட்பம் அறிந்திருக்கவேண்டுமென்ற அவசியமில்லாமல் சமமாய் அடிக்கும் தகடுகளுக்கெல்லாம் சில இடங்களில் ஆலையை உபயோகித்தே வேலை செய்து வருகிறார்கள். சில சமயம் ஆலையினால் செய்யக்கூடாதவைகளுக்குக் கொஞ்சம் கஷ்டப்படுகிறார்கள். ஆகையினால் சுத்தியினால் தட்டும் ஞானம் பெருகச்செய்து பின் சிரமக்குறையை யோசித்து ஆலையை உபயோகிப்பது

வேலைக்காரர்களுக்கு ஒழுங்கு எனப்படும். அடிக்க நீட்டத் தெரிந்தபிறகு பத்தவைக்க அனுபவப்படவேண்டியது. இதில் அநேகர் மிகக் கஷ்டப்படுகிறார்கள். முடிந்த நகையைக்கூடத் தீர்மானப் பத்தவைப்பில் ஜாக்கிரதையாய்ப் பத்தவைக்கத் தெரியாது உருக்கிவிடுகிறார்கள். இது பொடிகளின் படித்தரம் தெரியாதகுற்றமோ? அல்லது பதமாய் ஊதி எடுக்கத்தெரியாத பிசகோ தெரியவில்லை. தட்டாரத்தொழிலில் அடிக்க நீட்டத் தெரிவதும், நகைகளுக்குத் தக்கபடி பொடிவைத்துப் பத்தவைக்கவும் நன்றாய்த் தெரிந்துகொண்டாலே வேலையில் அரைப்பங்குத் தேர்ச்சியடைந்தவனாகிறான். பின் நகைக்குத் தக்கபடி சவைகள் பிடிக்கவும், நகாசுள்ள இடங்களில் தகுதியாய் நகாசு செய்யவும் தெரிந்து கல்லிழைத்துப் பூர்த்திசெய்தானானால் முழு வேலைக்காரன் எனலாம். இவர்களில் எந்த வேலையையும், திறமையாயும் அழகமையும் மார்க்கமாயும், சுத்தமாயும் வேலைசெய்பவனானால் தொழில் ஞானமுள்ளவன் எனலாம். இப்படிக் கிருக்கும் தொழில் ஞானிகள் வெகு அபூர்வம். சென்னையில் திறமையாய்ச் செய்யும் வேலைக்காரர்கள் ஒவ்வொன்றில் மாத்திரம் தேர்ச்சியடைந்திருக்கிறார்களேயொழிய, எல்லாம் ஒருவர் கையினால் முடிக்கக்கூடிய வழியாகக்காணோம். ஒருவேளை தொழில் வர்த்தக நிலைமையில் அப்படிக்கிருக்கச் சாவகாசப்படாமல் போனபோதிலும் வேலைக்காரராக வேண்டிய சிறு பிள்ளைகளும் எல்லாக் கிளை வேலைகளிலும் பழகியிருக்க வேண்டியது மிக அவசியம். நகாசு செய்கிறவர்கள் நகாசு வேலையையே செய்துகொண்டு வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் கஷ்டப்பட்டுக்கொண்டே சர்பாதனைக்குறைவினால் வருந்துவதைவிடச் சமயத்திற்குத்தக்கபடி எந்த வேலை வந்தபோதிலும் முடிக்கப் பயின்று வருமானக்குறைவுஉண்டாக்காமலிருப்பது வேலைக்காரர்களுக்கு ஒழுங்கு. இப்படிக்கு ஒவ்வொரு கிளை வேலைக்காரர்களும் அவரவர்களுடைய வேலையிலேயே வருமானம் எதிர்பார்த்துக் கண்டிப்பாய்மற்றவைகளில் சம்பந்தப்படாம விருப்பதினால் எல்லாம் கலப்படமாயுள்ள ஒரு வேலையை ஒரு ஆபரணத்தொழிலாளி செய்துகொடுக்க ஒப்புக்கொண்டால் அவர் மற்றவர்களிடம் முறையாய்த் திரிவதும் இதனால் உண்டாகும் தவக்கத்திற்காக நகை கொடுத்தவர்கள் படும் ஆயாசமும் சொல்லமுடியாது. ஒருவேளை மற்ற வேலைக்காரர்கள் ஏறக்குறைய சமயத்திற்குக் கொடுத்து விட்டாலும் இவைகளை எல்லாம் ஒன்றுபடுத்தி பூர்த்திசெய்யும் போது ஏதாகிலும் பின்னம் நேரிட்டுவிட்டால்மறுபடியும்ஒவ்வொருவேலைக்காரர்களிடத்திலும் முன்போலத் திரிந்து பூர்த்திசெய்து கொடுப்பதற்குமுன் நகை கொடுத்தவர்களுக்கு என்ன பதில் சொல்லுவது. இம்மாதிரி தவக்கங்களினால்தான் தட்டாரத்தொழிலைக்கொஞ்சம் கேவலமாய் பலர் எண்ணுவது. எல்லா விஷயங்களிலும் உண்மையாய் நல்லது கெட்டது கலந்துள்ளதுபோல் இத்தொழில் செய்பவர்களிலும் யோக்கியதைதவறி நடப்பவர்கள் சிலர் இருப்பார்கள். அவர்களுடைய செய்கையினால் எல்லாம் முழுமோசமெனப்படாது. இதனால்தொழில் அயோக்கியதையானதென்று பலர் சொல்வதை நாம் சம்மதிக்கப்படாது. வாசித்தவர்களும்தப்பான அபிப்பிராயப்படுகிறார்கள். நம்முடைய குலத்தொழிலைத் தாழ்வாய்ப் பேசுவதினா

னும், யோக்கியதைக்கு விரோதமாய் நடத்துவதினாலும் குலத்திற்கே குறைவு உண்டாகிறது. இவைகளையெல்லாம் சீர்திருத்தம் செய்யவும், நமது தொழில்களின் விசேஷத்தைக்காட்டி அவைகளை நடத்தும் முறைகளை விளக்கிவைக்கவும்.

ஸ்திரீகளும் கல்விகற்று, வேலைத்திறமையை யடைந்து புருஷர்களுக்கு உதவியாய் வேலைசெய்யவும் இன்னும் பலவித நாகரீக மடையுமார்க்கம் தேடவும் விஸ்வகர்ம கான்பரன்ஸ் கமிட்டி ஒன்று சென்னையில் ஏற்பட்டிருக்கின்றது. அதின் அனுசரணையை நாடி கௌரவமாய்ப் பிழைக்கும் வழி தேடுவோம்.

வேல்.

பழைய விஜயநகரத்தின் பெருமை.

விஜயநகரமென்பது ஒரு புராதன ஹிந்து ராஜ்யம். அது இப்பொழுது காலக்கொடுமையால் பழாகிக்கிடக்கின்றது. ஹம்பி என்கிற கிராமத்திலிருந்துதான் இந்த விஜயநகரத்தை நாம் இப்பொழுது காணலாம். இந்த ஊர் பல்லாரிக்கு 32 மைல் மேற்கே இருக்கிறது. இந்த ஹம்பிதான் இராமாயணத்தில் பம்பை என்று வருணிக்கப்பட்ட பிரதேசம். வால்மீக மகரிஷியால் வெகு அழகாய் வருணிக்கப்பட்ட 'பம்பாஸரஸ்' என்ற குளமும் இங்குதான் இருக்கிறது பாழடைந்துபோன இந்தக் காலத்திலுங்கூட அதில் அழகிலும், பரிமளத்திலும், காத்திரத்திலும் முதல்தரமான தாமரைப்புஷ்பங்கள்மலர்கின்றன. வாலி சுக்கிரீவன் ஆண்ட கிஷ்கிந்தையும் இதுதான். ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் தசக்கிரீவனான ராவணனை ஸம்ஹாரம் செய்யவும் சீதையை மீட்கவும் உத்தேசித்து லங்கைக்குச் செல்வதற்குமுன் இந்தக் கிஷ்கிந்தையில்தான் வாசஞ்செய்தனர். ஸ்ரீமந் நாராயணன் அவதாரமெடுத்துச் சஞ்சரித்த பிரதேசத்தின் அலங்காரத்தையும் பெருமையையும் சொல்லவும் வேண்டுமோ?

ஹரிஹரன், புக்கன் என்ற இரண்டு ஹிந்து அரசர்கள் 14-வது நூற்றாண்டில் விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். பல துறைகளிலும் இந்த ராஜ்யம் உன்னத பதவியை யடைந்திருந்தது. சுமார் 250 வருஷகாலம்வரை ராஜ்யம் நிலைத்திருந்து கடைசியில், மகம்மதியர்களால் பாழாக்கப்பட்டுப்போயிற்று. விஜயநகரத்திலுள்ள கட்டடங்களின் அழகு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லத்தரமல்ல. அந்தக் கட்டங்களின் அழகைப்பார்த்துத்தான் சென்னபட்டணம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள் அக்கட்டடங்களிலமைக்கப்பட்ட ஜன்னல்கள், கதவுகள் இவைகளை வைத்துக்கொண்டுதான் சிஷோம் (Chisholm) முதலான ஆங்கிலேய வஸ்து சாஸ்திர பண்டிதர்கள் நமது சென்னைநகரத்தில் அழகாய் அமைக்கப்பட்டிருக்கும் 'ஜெனரல் போஸ்டாபீஸ்' 'செனெட் ஹவுஸ்' முதலிய கட்டடங்களை

ஒருவாறு கட்டியிருக்கிறார்கள். விஜயநகரத்தின் பெருமைகளைக் கண்ணால் நேரிடக் காணவேண்டுமென்று ஆசையுள்ளவர்கள் சென்னைப் பொருட்காட்சிச்சாலைக்குச் (Museum) சென்று காணலாம். அங்கு விஜயநகரத்திலிருந்து இரண்டொரு கல்நிலைகளைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். அவைகளின் மேலிருக்கும் சிற்ப வேலையை ஒரு வருஷம் முழுமையும் பார்த்தாலும் நமது கண்ணின் ஆத்திரம் குறையாது. மனமும் சோர்வடையாது. ஒரு விரல் நீளத்தில் புருஷஉருவம் செதுக்கப்பட்டு, அதற்குத் தகுந்தபடியே கை கால் முதலிய உறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே நிலையில், இராமாயண கதையில் வருகிற சகல சங்கதிகளும் சித்திர ரூபமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஆஹா! இம்மாதிரி சிற்பவேலையை எப்படி முடித்தார்கள்? இதை வேலை செய்ய எத்தனைநாள் பிடித்திருக்கும்? யாரால் இந்தச் சிற்பவேலைகள் செய்தவர்களுக்குக்கூலி கொடுத்து நிர்வாகம் செய்யப்பட்டது? என்று வெகு யோசனைகள் சகஜமாகவே ஒவ்வொரு மனிதருக்கும் தோன்றும்.

இவ்விதமாகப் பலயோசனைகள் ஒரு ஆங்கிலேய சிற்ப சாஸ்திரியின் மனத்திலுதித்தன. அவர், "இந்தச் சிற்ப வேலைகள் கூலிக்குச் செய்யப்பட்டதல்ல, எந்த ராஜன் காலத்திலோ அல்லது ராஜாக்கள் காலங்களிலோ தங்கள் திறமையை அந்நாட்டுச் சிற்பிகள் காட்டச் செய்த சிற்பவேலையா யிருக்கவேண்டுமே யல்லாது கூலிக்குச் செய்தவையாகத் தோன்றவில்லை" யென்று சொல்லியிருக்கிறார். மேலும் தற்காலத்திய கூலி நிர்ணயத்தை வைத்துக் கணக்கிட்டுப்பார்த்தால் ஒவ்வொரு கல்தூணுக்கும் அதன்மீது செதுக்கப்பட்டிருக்கும் சிற்ப வேலைக்குமாகச் சுமார் அரை லக்ஷம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டும் என்று அதே ஆங்கிலேய சிற்பசாஸ்திரி சொல்லியிருக்கிறார் பாழாய்க்கிடக்கும் காலத்திலேயே அதன் அழகையும் வேலைப்பாட்டையும் புகழ்கிற நாம் அவைகள் செவ்வையாக இருந்தகாலத்தில் எப்படிப் புகழ்வோமோ? அதை யோசித்து நாமே அறிந்துகொள்ளவேண்டியது.

விஜயநகரத்துக் கட்டடங்கள் அதிகமானவை. ஆகையால், நாம் அவைகளை வருணிக்க ஆரம்பிக்குமுன் அங்கிருக்கும் கட்டடங்களை வகுத்தறிந்து இவ்வளவு விதம் என்று ஒரு வரம்பு ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவைகளைப் பெரும்பாலும் கோவில்கள், கடைத்தெருக்கள், அரண்மனைகள், கோட்டைகள், சமாதிகள் என்று பலவிதமாகப் பிரிக்கலாம்.

கோவில்கள்: விஜயநகரத்தில் அநேக ஜயினக் கோவில்கள் இருக்கின்றன. இந்த ஜயினக் கோவில்களுக்கு அடுத்தபடியாக விஜயநகர வம்சத் தரசர்கள் கட்டின கோவில்களைச் சொல்லலாம் விஜய நகரம் என்ற இந்த ராஜதானியின் முக்கிய பட்டணமும் முதன் முதலில் சிறியபட்டணமாக இருந்தது அது துங்கபத்ரைநதிக்கரையில் கட்டப்பட்டு அப்புறம்நாலு பக்கத்திலும் நம் சென்னபட்டணத்தைப்போல அங்குத்தெருக்கள். எல்லாத் திக்கிலும் பெருகின; அப்படிப் பெருகி வரும்போது ஒரு பக்கத்தில் குடிகள் குறைய ஆரம்பித்தன. இதற்குச் சில ஆதாரங்களிருக்கின்றன. இவ்வித ஆதாரங்களைக்கொண்டும் வாஸ்து சாஸ்திரக் கண்ணைக்கொண்டும் பார்த்தால் ஹம்பிதான் முதல் முதலில் விஜயநகர அரசர்களால் அமைக்கப்பட்டதாக ஏற்படுகிறது. அந்த ஊரிலிருக்கும் தேவஸ்தானத்து தர்மகர்த்தர்கள் அவ்வூர் கோவில் கி. பி 1195-ம் வருஷத்தில் கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அது ஒருவாறு நிஜமாயிருக்கலாம்

ஹம்பியில் இப்பொழுதும் பூஜை உத்ஸவம் முதலானவை நடந்துகொண்டிருக்கும் பம்பாதீச்வரர் ஆலயம் ஒன்று இருக்கிறது, இதன் கர்ப்பக் கிருஹம் மிகவும் பழமையானதாகத் தோற்றுகிறது. இந்த பம்பாதீச்வரர் கோவிலைப் பரிசோதித்துப் பார்த்தால் 12, 13 14 நூற்றாண்டுகளில் நடந்தசெயல்கள்காணப்படும். இந்தக் கோவிலிலுள்ள கறுப்புக் கல்லில் நமது பழைய சிற்பிகள் செய்திருக்கும் சிற்பவேலைகளின் திறத்தைக்கண்டு நாம் களிக்கவேண்டும். வெகு அழகாய் வழவழவென்று எண்ணெய் பூசியிருப்பதுபோலவே சிற்பங்கள்நமது கண்ணுக்குத் தோற்றப்படும்.

ஊருக்குத் தென்கிழக்கு மூலையில் மால்யவானம் என்ற ஒரு பர்வத உச்சியில் ரகுநாதஸ்வாமி கோவில் இருக்கிறது. எல்லாக் கோயில்களைக் காட்டிலும் இது சிற்பத்தில் சிறந்து விளங்குகிறது. இந்தக்கோவில் விஜயநகரத் தாசர்கள் அரண்மனைக்குச் சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஓர் அற்புதக் கட்டடம். அதில் ஒரு மண்டபம் உண்டு. அதன் நான்கு கருப்புத்தூண்கள் இனிமேலும் உண்டோ என்று எண்ணும்படி அக்காலததுச் சிற்பிகள் தங்கள் வேலைப்பாட்டைத் தூணில் ஒவ்வொரு பாகங்களிலும் காட்டியிருக்கிறார்கள். மதம், சரித்திரம், கூத்து, பாட்டு, சண்டை முதலியவைகளை எடுத்துக்காட்டும் ஒவ்வொரு சித்திரமும் இந்தக் கோயிலில்தான் நாம் விசேஷமாய்க் காணலாம். ஊருக்குக் கிழக்கே துங்கபத்திரை நதிக்கரையில் விட்டலஸ்வாமி கோயிலிருக்கிறது. இந்தக்கோவில் காணும் சித்திர வேலை மிகவும் அற்புதம். இந்தக் கோயிலில் ஒரே கல்லால் செய்யப்பட்ட அதியுன்னதமான ஒரு ரதம் இருக்கிறது. அதன் அழகு இவ்வளவு அவ்வளவென்று சொல்லத்தரமன்று.

இவைகளல்லாது அநேக ஹனுமார் கோயில்கள் இருக்கின்றன. வாலி சுக்ரீவன் இவர்கள் ஆண்ட கிஷ்கிந்தை இந்த ஹம்பியானதால் ஹநுமார் கோயில்கள் இவ்விடத்தில் அவ்வளவு அதிகமாக ஏற்பட்டன ஹநுமாருக்குக் கோயில்கள் மாத்திரமல்ல. ஹநுமார் சிலைகள் ஆங்காங்கு மலைமலையாய் வெட்டப்பட்டிருக்கின்றன ஒரு பெரிய ஹநுமார் விக்கிரகம் 20 அடி உயரமுள்ளதாக இருக்கிறது. இது ஹம்பிக்கு மேற்கே ஒரு வயல் மத்தியில் வெகு உன்னதமாக நிற்கின்றது. வால்மீக மகரிஷி எழுதிய ராமாயணவசனத்தை மெய்ப்பிக்க மால்யவான் பர்வதத்தில் பெரிய பெரிய குரங்குகள் கூட்டங் கூட்டமாய் வாழ்கின்றன.

கடைத்தெரு:—800 கஜம் நீளமுள்ள அழகான கடைத்தெருக்களை இங்குக்காணலாம். பழைய காலத்தின் அழகைப் பார்க்கவேண்டுமானால் வருஷத்தில் ஒருதடவை வரும் ஹம்பி ஜாத்ரா என்ற உற்சவத்தில் தான் காணலாம் தெருவின் இருபக்கங்களிலும் விசித்திரமான வீடுகள் அநேகம் உண்டு இந்தக் கடைத்தெரு கோடியில் குளங்களும், குளத்திற்குப்போகும் விசித்ர வீதிகளும், வழிகளும் பார்க்கிறவர்கள் மனதை ரமிக்கச் செய்யும்.

அரண்மனை:— பழைய அரண்மனையைப் பற்றி அப்துல் ரஜாக் என்ற ஒரு மகம்மதியர் வருணித்திருக்கிறார். அக்காலத்தில் அரண்மனையைச் சுற்றி ஏழு மதில்களிருந்ததாகவும், நாலுபக்கங்களிலும் கடைவீதிகளிருந்ததாகவும் ஊரைச்சுற்றிச் சிறுவாய்க்கால்களில் துங்கபத்திரை நதியின் தண்ணீர் ஓடினதாகவும், அரண்மனைக்கு வலதுபக்கத்தில் கச்சேரி மண்டபம் சிம்மாசனம் முதலியவை இருந்ததாகவும் இடதுபக்கம் தங்கசாலை இருந்ததாகவும்—நாணயங்கள் அச்சடிக்குமிடம்— அங்குமொகரா வராகன் இவைகள் அச்சடிக்கப் பட்டதாகவும் வருணித்திருக்கிறார்.

கோட்டைகள்:—கோட்டையின்மதில் பதினறுமைல் நீளமுள்ளது அந்த மதில்கள் எல்லாம் இப்போது நாசமாகிவிட்டன.

காலத்தின் கொடுமையாலே விஜயநகர ராஜ்ஜியம் பாழாகிவிட்டது விஜய நகரத்தின் தேவாலயச் சிறப்பும், சிற்ப வேலைப்பாட்டின் திறமையும் அதன் பெருமையும் சுமார் 350 வருஷங்களுக்கு முன் மேலோங்கி இருந்தனவென்று தெரிகிறது.

பொன்நல்வி.

***

தொழில் கற்பித்தல்.

தொழில்கள் பலவிதமுண்டு. முக்கியமாய்க்கையினுல் செய்யப்பட்டது கைத்தொழிலென்றும் யந்திரங்களின் உதவியால், வர்த்தக விருத்திக்குச் செய்யும் தொழிலுக்கு யந்திரத் தொழிலென்றும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதில் கைத்தொழிலுக் கென்றே சென்னை சித்திர வித்தியாசாலை என்று வழங்கும் ஒரு தொழிற்சாலை கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டு, சென்ற 50-வருஷகாலமாய் நடந்துவருகின்றது. இதில் கைத்தொழில்தவிர மற்றவைகளைக் கவனிப்பதே இல்லை. இது மற்றெல்லாத் தொழில்களுக்கும் மூலாதாரமாகையால் தொழில் கல்வி கற்க அபேட்சிக்கும் ஒவ்வொருவரும், கைத்தொழிற்கல்வி முன்னதாகப் பழகிப் பின் மற்றெந்தத் தொழிலிலாவது வருமான அபேட்சை கொண்டு புகுவது ஒழுங்கு எனப்படும், இவ்விதக் கைத்தொழில் பழக்கத்தினுல் கண்களினுல் பிசகில்லாமல் பார்க்கவும், கைகளினுல் குற்றமில்லாமல்செய்யவும், மனதினுல் ஒவ்வொன்றின் உண்மையை ஊகிக்கவும் கூடுமாகையால் இந்த முக்கியமான அப்பியாசங்களின் ஆதாரத்தினுல்தான் மற்றெல்லாத் தொழில்களும் வேண்டியவரையில்விருத்தி செய்யக்கூடும்.

இப்படிக்கில்லாமல் உயர்ந்தபரிட்சைகள் செய்து புஸ்தகம் படிக்கவும் அதிலுள்ளவைகளைப் பிசகில்லாமல் பேசவும் பழகியவர்களைத் தொழிற்கல்விக்காக எவ்வளவு பணம் செலவழித்துத்தொழில் கற்பித்துக் கொடுத்தாலும் அவர்களுடைய சொந்தப் பழக்கத்தின் மார்க்கத்தை விட்டு மாறி தொழில் ஞானம் பெற்று விருத்தியடைவது மிகக்கஷ்டம். இக்குற்றம் மனிதஜென்மத்துக்கு சகஜம். மனிதர்களுக்கு சிருஷ்டியின்படி ஒவ்வொன்றில் தான் பூரண அறிவு எட்டும், படிப்பவன் படித்தேதான் பிழைக்கவேண்டும், பேசுபவன் பேசியேதான் பிழைக்கவேண்டும். வேலைசெய்பவன் வேலைசெய்தேதான் பிழைக்கவேண்டும். ஒருவேளை தகுந்த அநுகூலமாகிய ஆதாவின் நிமித்தம் ஒன்றைவிட்டு மற்றொன்றில் ஒருவன் செல்லுவானுகில் அவன் பிரயோசனமற்றவனுகிறான். குலைக்கும் நாய் வேட்டைபிடிக்காது என்ற சாதாரணப் பழமொழியின்படி ஒன்றில் சுபாவீகமாய் அறிவுள்ளவன் மற்றொன்றில் ஞானவானுகமாட்டான். அதாவது பேசுபவன் வேலை செய்யமாட்டான். வேலை செய்பவன் பேசமாட்டான்; ஒன்றில் அறிவுள்ளவன் மற்றொன்றில் மூடனுப்தா.. னிருக்கவேண்டும். இப்படிக்கு அறிந்து யார்யாருக்கு எந்தெந்த விஷயங்களில் அறிவு தகுதியோ அவரவர்களை அந்தந்தத் தொழிலிலேயே விருத்திசெய்ய கனவான்கள் உதவி செய்வார்களானுல் ஐரோப்பாவைப் போல் இந்தியாவும் எல்லா விஷயங்களில் ஞானமடையும் என்பதற்கு யாதொருசந்தேகமுமிராது. இதில் எவ்விதத்திலாவது ஒவ்வொருவர்களுக்குத்தவறுதல் உண்டாவதனுல்தான்தொழில்கற்க அன்னியதேசம்செல்பவர்கள் சர்ட்டிபிகேட்டுகளைப்பெற்றுக்கொண்டு உண்மையான தொழில் அப்பியாசமில்லாமல் தன்னுடைய சொந்தநாட்டின் நிலைமைக்குதன்தொழிலை எவ்விதம்உபயோகிப்பதுஎன்றதையும் கவனியாமல் புஸ்தகம் படித்தவர்களைப்போல் ஊரைப்பார்த்து விட்டும் அவர்கள் சொன்னபடிக்குச்செய்துவிட்டும் திரும்பிவிடுகிறார்கள். இம்மாதிரி தொழிற் கல்வி எவ்விதமாய்ப் பயன்படும்? ஆங்கிலேயமுறைப்படிக்கு சோப்செய்வதும், மெழுகு வத்தி செய்வதும், சாயம்காய்ச்சுவதும், எண்ணை எடுப்பதும், சோடாவாட்டர் செய்வதும், மிளகாய்த் தண்ணீர்பவுடர்செய்வதும்போன்றமற்றத்தொழில்களும் நம்மூரில் அப்பம் சுடும் தொழிலுக்குச் சமானம் என்றே நினைக்கவேண்டும். இந்தசொல்பத்தொழில்

களிலெல்லாம் ஒவ்வொருவரும் அப்பியாசமில்லாமலே பணம் செலவழிக்காது லாபம் சம்பாதிக்கலாம். ஆனால் சிலர் திறமையாய்ச் செய்யத்தெரியாமல் நஷ்டமடைந்திருக்கலாம். மூக்குத்தூளிலும், தலைவலி மருந்துகளிலும், வாசனை எண்ணெய்களிலும் லாபம் கண்டால் மற்றவைகளுக்குச் சொல்வானேன்.

(தொடரும்.)

***

கைத்தொழில் விருத்தி.

சுதேசிகளால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளில் செய்யப்படும் பென்சில், நிப் முதலியன வெளிப்பட்டு நாடெங்கும் பரவி வருகின்றன. பட்டிணத்தில் அவை திறமை பூண்டிருப்பதாக அனுபவசாலிகள் கூறுகிறார்கள். நாமும் அவைகளைப் பார்வையிட்டோம். விலையும் சரசமாயுள்ளது. இதேமாதிரியான பல கைத்தொழில் சாலைகள் ஏற்பட்டு பலவகையான பென்சல்களும் நிப்புகளும் வெளிப்படுமாயின் நாட்டுக்கு நன்மை பிறக்குமென்பதில் சந்தேகமில்லை. சுதேசகைத்தொழில் சாலைகளில் செய்யப்படும் சோப்புக்கட்டிகளும் வெளிப்பட்டு வருகின்றன. அவற்றின் குணத்தை சிலாகித்து அனுபவசாலிகள் பேசுகிறார்கள். கண்காட்சி சபைகளிலும் அவற்றிற்குப் பரிசு அளிக்கப்பட்டுள்ளன. அவையும் தேசத்தில் பரவி வருகின்றன. சோப்பை உபயோகிப்பதால் தோலுக்கு பலவிதமான தீங்கு உண்டாகுமென்று சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். முற்காலத்தில் தேகத்தில் உள்ள அழுக்கைப் போக்குவதற்காக அறப்புப் பொடியைப் பெண்மக்கள் உபயோகித்து வந்தார்கள். ஆண்மக்கள் தைல ஸ்நான காலத்தில் அதை உபயோகிப்பதேயன்றி மற்றைய காலங்களில் அதை அபேட்சிப்பதில்லை. சாவகாசமாய் ஸ்நானஞ் செய்வது வழக்கம். பெண்மக்கள் காலையிலெ பூந்து கொஞ்சம் நல்லெண்ணெய் யெடுத்து உச்சியில்வைத்துத் தேய்த்துக் கொள்ளுதும் வழக்கமாதலால் எண்ணெய் நீவு தேகத்தில் உண்டாவது வழக்கம். அதற்கு அறப்பு நல்லது. அல்லாமலும் ஆறு குளங்களில் ஆண்மக்கள் ஸ்நானஞ் செய்வதுபோல் பெண்மக்கள் அங்கே சௌகரியமாய்க் குளிக்க முடிகிறதில்லை. அச்சமும் நாணமும் கூட்டுறவாகி அவர்களைத் துரிதப்படுத்துகின்றன. ஆகவே தேகத்தின் அழுக்கைப் போக்குவதற்கு ஸ்திரீகள் வேறு பொருளைத் தேடுவதற்கு நியாயமுண்டாகிறது. இக்காரணம் பற்றியே அறப்புப் பொடி ஸ்திரீகள் உபயோகப்படுத்த ஏதுவாயிற்று. பணக்காரராயுள்ளவர்கள் சிகைக்காய் என்னும் சீயக்காயை உபயோகப்படுத்துவார்கள். சிகைக்காய் என்னும் பெயரைக்கொண்டு அது தலைக்கு உபயோகப்படுத்தப்படும் பொருள் என்று விளங்குகிறது. இவற்றோடுகூட ஸ்திரீகள் தேகத்திற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும்படியான பல பொருள்களைக் கூட்டிக்கொள்வதுண்டு. இது நிற்க, இவ்வழக்கம் தற்காலம் மாறலாயிற்று. நாடோ நகரமோ எங்கும் சோப்பு வழங்குகிறது. குக்கிராமங்களுக்குள்ளும் புகுந்து விட்டது. பறைச்சேரிக்கும் எட்டி விட்டது. எங்கும் சோப்புமயமாகிறது. சிறுவர் சிறுமியர் பாலர் யௌவனர் விருத்தர் எவரும் சோப்பை அபேசிக்கிறார்கள். மனிதர் உபயோகிக்கத்தக்க சோப்பிருப்பதுமல்லாமல் துணி

களுக்குப் போடும்படியான சோப்புக் கட்டிகளுமுள்ளன. சோப்பு உபயோகப்படுத்திவரும் துணிகளில் அழுக்கு சீக்கிரம் பிடிக்கிறதென்றும் மீண்டும் சோப்பு உபயோகப் படுத்தினாலன்றி அவை விடுகிறதில்லை யென்றும் துணி சீக்கிரம் கிழிந்து போகிறதென்றும் அநுபோகஸ்தர் சொல்லுகிறார்கள். இதனால் சோப்பிற் கலக்கும் பொருள்கள் கடுங்கார முள்ளவையென்றும் வெளிப்படுகிறது. சோப்பின் தாய்ச்சரக்குகள் இரண்டு. சுண்ணும்பும்சோடா உப்புமாம். எந்தச் சோப்புகட்டி யெடுத்தாலும் ஐந்திலொருபாகத்திற்கு மேற்பட்டே சுண்ணும்பு இருக்குமென்பதில் சந்தேகமில்லை. சோப்பு உபயோகப்படுத்துகிறவர்கள் சுண்ணும்போடு பலபொருள்களைக் கலந்து தேகத்தில் தடவிக் கொள்கிறார்கள். நன்றாய்ச் சொரியும்போது தோலிலுள்ள மயிர்க்கண்கள் வழியாய்த் தேகத்திற்குள்ளே காரஞ்சென்று நாளடைவில் தோலைக் கெடுப்பதற்கு ஏதுவாகிறது. சிறு குழந்தைகளும் அதை வழங்குவதினால் அதனாலுண்டாகும் கேட்டை நாம் விசேடிக்கவேண்டியதில்லை. தோலில் வறட்சி உண்டாக்காமல் பதப்படுத்துவதற்காக வாரம்மும்முறை, அல்லது இருமுறை எண்ணெய் தேய்த்துக் கொள்ளவேண்டும். சுண்ணும்பை வாரித்தினந்தோறும் பூசிக் கொள்பவருக்கு எண்ணெய் என்னசெய்யும்? இதை நமது நாட்டார் அறிகிறதில்லை. அல்லாமலும் எண்ணெய்க்குப் பதிலாக சோப்பில் கொழுப்பு கலப்பதுண்டு. எண்ணெயைவிடக் கொழுப்புமலிவாயிருப்பதாலும் வேண்டியமட்டும் கிடைப்பதாலும் அதை உபயோகப்படுத்தி வருகிறார்கள். எண்ணெய் கலந்தாலும் கொழுப்பும் கலப்பதுண்டு. கொழுப்பு கலவாத சோப்பு இல்லை யென்றே பொதுவாய்க்கூறலாம். பிராமணர்களுடைய குலமென்ன, கோத்திரமென்ன, ஆசாரமென்ன, அனுஷ்டானமென்ன, கொழுப்பைக் கண்ணால் பார்க்கப் பொறாத பிராமணோத்தமர்கள் சோப்பை விலைக்குவாங்கி அது உத்தமமான பொருளென்று மதித்து கண்ணில் ஒத்திக்கொள்கின்றார்கள். சிலர் முத்தமிடுகிறார்கள். சோப்பு உபயோகப்படுத்தாதவர்கள் அருமையறியாத மூடர்களென்றும் ஏளனம் பண்ணுகிறார்கள். பிராமணோத்தமர்கள் செய்வதுமன்றி பிராமண ஸ்திரீகளும் உபயோகிக்கிறார்கள். இது கெட்ட வழக்கம். தேகத்தைக் கெடுக்கும் வழக்கம். மாமிசத்தைக் கண்ணினால் காணக்கூசப்படுகிறவர்கள் கொழுப்பையெடுத்துத் தேகம் முகம் இவை எங்குந்தடவி ஸ்நானஞ் செய்து குதூகலிக்கிறார்கள். இந்தப்பேச்சு நிற்க. சோப்பு வழங்கத் தலைப்பட்டு விட்டது. எவ்வருணத்தாரும் அதைத் தேடுகிறார்கள். அது இன்றியமையாத பொருளாகிவிட்டது. நமதுநாட்டில் வியாபாரப் பொருள்களில் அது தலைப்பீடம் பெற்று விளங்குகின்றது. அது அந்நிய நாட்டுப்பொருள். இந்நாட்டிலும் சில இடங்களில் சோப்புச்சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. அதற்கு விசேஷமான முதல் வேண்டியதில்லை யென்று கூறியிருக்கின்றோம். வேலைத்திறமை பூண்ட தொழிலாளிகளை ஜப்பானிலிருந்து நாம் வரவழைக்கலாம். அவ்வாறில்லாவிட்டாலும், ஜப்பான் முதலிய நாடுகளடைந்து தொழில்கற்று வந்துள்ள சுதேசிகளிருக்கிறார்கள். அவர்களையும் வேலையில் அமைத்துக் கொள்ளலாம். தஞ்சாவூர் ஜில்லாவில்

பெரிய சோப்பு கைத்தொழில் சாலை ஏற்படுத்தினால் நன்றாயிருக்கும். அதற்கு வேண்டிய தேங்காயெண்ணெயும் மிகுதியாகக் கிடைப்பதாகும். அரும்பெருங் காரியங்களையும் செய்து முடிக்க வல்லவர்கள் நம்முடைய ஜனத்தலைவர்கள், அவர்கள் மனத்தில் இப்படிப்பட்ட காரியம் தோன்றுதிருப்பது நற்காலம் இன்னும் பிறக்கவில்லை யென்பதற்கு ஏதுவாகும். வியாபாரம் முதல் நமது நாட்டைவிட்டுச் செல்வதில்லை. கூலிவேலை செய்பவரெல்லாம் நம்முடைய நாட்டார். லாபத்தை அடைபவர்கள் நம்முடைய முதலாளிகள். வியாபாரம் செய்பவர் நம்மவரே ஆட்சேபனைக்கிடமாயுள்ள கொழுப்பை விலக்கி எண்ணெயை உபயோகப் படுத்தலாம். இது ஆசாரத்திற்கு ஆசாரம், சுகத்திற்கு சுகம், குலத்திற்கும் பெருமை இதை நமது நாட்டார் கவனிப்பாராக. நம்முடைய ஜில்லாவில் நீரோட்டம் சமர்த்தியாயுள்ளது. இருப்புப்பாதை எங்குமுள்ளது. போக்குவரவுச் சாதனங்கள் மிகுதி, கூலியாள்கள் கிடைப்பது இலகு, எவ்வகைத் தொழிற்சாலை வைப்பதாயிருந்தாலும் சௌகரியமான வசதி கிடைப்பதாகும். இவ்வகையான சௌகரியங்கள் இதர ஜில்லாக்களில் கிட்டா. அன்றியும் கல்விமான்கள் மிகுதி, புத்திமான்கள் மிகுதி, பணக்காரர்கள் மிகுதி. பென்ஷன்காரரும் மிகுதி. அன்றியும் நம்முடைய ஜில்லா கடலோர நாடு. இவையெல்லாம் சாமான்ய சௌகரியங்களல்ல. ஜனசமுகத் தலைவர்கள் எவ்வகையான கைத்தொழிற்சாலையையாவது நம்முடைய ஜில்லாவில் ஸ்தாபிப்பாரானால் அது விர்த்தியாகவாக வேறுவிதமான சாலைகளுமேற்பட்டு நமது ஜில்லாவிற்குப் பெருமை கூட்டுவதாகும்.

ய—ணி.

முயற்சி.

விதிப்படி நடக்குமென்றெண்ணி யாதொரு காரியத்திலும் முயற்சி செய்யாமலிருத்தலே வறுமையை யடைதற்கு முக்யகாரணமாம்.

சாத்யப்படாத பொருளையடைய முயல்கின்றவன் மேன்மையை யுடையவனாயினும் பேயர்களில் முந்தினவனாகக் கருதப்படுவான்.

யாதொருகார்யத்தினிடத்துஞ் சோம்பலின்றித் தக்கமுயற்சி செய்பவனை வறுமை நெருங்குதற் கஞ்சும்; ஆகலால் சோம்பலுக்கிடங்கொடாது முயற்சிசெய்யவேண்டும்.

மேலாகிய விரதங்களை யிடையூறின்றி நடத்த முயல்கின்றவன் சிறியவனாக விருப்பினும் தபசியெனப் பெயர்பெறுவான்.

பயிர் என்பது பயிற்சியெனவும் முயற்சியெனவுங் கொள்ளப்படும். ஆதலால் பயிர் செய்வதி லியற்றப்படும் முயற்சியே செல்வப்பேற்றிற்கு முதற்குறியாம்.

உழவுமுதலியவைகளில் வருத்தமுற்று இட்டபயிர் பலனைக் கொடுக்குங்காலத்தில் சோம்பலால் தக்கபடி நடத்தவறியாதவன் தரித்திரத்தை யடைவான்.

எல்லாக்கார்யங்களுக்கும் அவைகளால் அடையும் பயனுக்கும் தெய்வகாரணத்தைப்பார்க்கிலும் புருஷகாரணமே மேலானதாகும்; எங்ஙனமெனின், ஒற்றைத்தேர் உருளையால் ரதம் நடவாத் தன்மைபோற் புருஷகாரமில்லாமல் தெய்வசங்கல்பத்தினாலொன்று முடியாது.

எள்ளும் அதற்குள்ளெண்ணெயும் பகவானாலுண்டாக்கப்பட்டிருந்தாலும் புருஷ

காரமென்ற முயற்சியினாலல்லாமல் எண்ணெய் வெளிப்படுவதில்லையே! ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறைவேறாது; அஃதில்லாமற் சோம்பலுற்றவன் பயனையடைவான்.

முயற்சியில்லாவிடின் கல்வியில்லை கல்வியில்லாவிடின் புத்தியுமில்லை, பராக்ரமுமில்லை; இவைகளில்லாவிடின் பொருளுமில்லை; பெருமையுமில்லை, சிலவேளை பொருள்மாத்ர மிருந்தாலும்பயன்படாது; ஆதலால் முயற்சியில்லாவிடி லொன்றும் சித்திக்காது.

முயற்சியுள்ள புருஷ ஸிம்ஹத்தையே மஹாலக்ஷ்மி யடைகிறாள். தெய்வத்தினால் பாக்யங் கொடுக்கப்பட வேண்டுமென்று அலஸ்யமாகிய சோம்பலும் அவிவேகமாகிய தெரியாமையுமுள்ள புருஷர் நினைக்கின்றனர். ஆகையால், தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையைவிட்டு ஸொந்த சக்தியினாலே முயற்சிசெய்வதும் ஒருவேளை கார்யம் ஸாதிக்கப்படாமற் போனால் குற்றமென்ன வென்று ஒரு வித்வானுரைத்திருக்கிறார். அதையோசித்தால் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

தெய்வத்தால் யாவும் நடக்குமென்று முயற்சியைக் கைவிட்டவன் கெட்டுப்போவான். புருஷகாரமில்லாமல் தெய்வம் ஸித்திக்கிறதில்லை யென்பதை யறிந்தவனே புத்திமான்.

பல வற்றினுஞ் சென்றுழன்றலைகின்ற மனத்தை விவேகத்தால் தடுத்து நிலைக்கச்செய்வதே மோக்ஷத்திற்கு முக்ய காரணமான முயற்சியாம்.

கஷ்டதசையிலிருக்கும் ஒருவன் அக்கஷ்டத்தைப் பாராட்டாமல் ப்ரயோசனத்தைக் கொடுக்குந் தொழிலின்னதென்றும் அதனிடத்து மனதைச் செலுத்தி முயற்சி செய்தால் ப்ரயோசனத்தைப் படையலாகுமென்றும் புத்தி கூர்மையால் பகுத்தறிந்து நடப்பானாயின் அவனுக்குச் செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற்போகும்? உண்டாவது ஸித்தமே.

செய்யத்தக்க கார்ய மின்னதென்றும் அதனிடத்து புத்தியைச் செலுத்தி முயற்சி செய்தால் பலனுண்டாகுமென்று தெரிந்திருந்தும் சோம்பலால் அதைக்குறித்து முயற்சி செய்யாமல் தரித்திரத்தால் வருந்துவோன் கல்வியிற் சிறந்தவனாகவிருந்தாலும் அவனை அப்ரயோசகனென்று உலகம்பழிக்கும். இவ்விதப்பழிப்புக்காளாவதை விட இறத்தல் நலமாகவிருக்கும்.

பிறர்க்கு உபகாரஞ் செய்வதினிடத்து புத்தியைச் சோரவிடாமலிருப்பவன் பல நன்மைக்கும் ஆகாரமாகிய முயற்சியினிடத்து சிந்தையுடையவனாக விருப்பான்.

முயற்சி செய்வதில் சிரத்தையில்லாதவன் பரோபகாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தை மாத்திரங்கொண்டிருந்தால் அவ்வெண்ணம் முடிவுபெறாது.

எளிதில்பெறத்தக்க பலநன்மைகள் தனக்கெதிராகவிருந்தும் முயற்சியின்மையால் சோம்பலுற்று அவைகளைப் பெறாமல் விட்டுவிடுகிறவன் யாதொரு பயனும் அடையமாட்டான். அஃதெவ்வாறெனில் எல்லாவுயிரையும் வதைப்பதற்குக் காரணமாகிய கூர்மையுடையவாளாயுதம் பேடி கையில் விளங்கிக்கொண்டிருந்தால் அதனால் யாது பயன்?

உபகாரிகளாக விருக்கின்ற நல்லோர்கள் தங்களுடைய சௌக்கியத்தை விரும்பாமலே ஒரு கார்யத்தில் ப்ரவேசித்து அதனை

லாகிய திரவிய சம்பாதனையைத் தன் சுற்றத்தார் நட்பினர்முதலாகியவர்களுக்குண்டாகிய துன்பங்களைமாற்ற உபயோகப்படுத்தி அவர்களுக்குச் சௌக்கியத்தை யுண்டாக்குவார்களென்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அஃதெவ்வாறெனின், மாளிகை முதலாகிய வீடுகளினாலே தூண்களுக்கு யாதொரு நன்மையுமில்லாதிருந்தாலும் அத்தூண்கள் தங்கள் வருத்தத்தை நினையாமலே அம்மாளிகையைத் தாங்கிக் காப்பாற்றுவதுபோலவாம். ஆகலால் இவர்களைத் தாங்குவோரென்று நாயனாருஞ் சொல்லியிருக்கின்றார்.

முயற்சியினிடத்து மனத்தளர்ச்சியில்லாதவனுக்குச் செல்வம் வளர்ந்தேறுமென்றும், அம்முயற்சியில் மனவூக்கமில்லாதவனிடத்து வறுமை திரக்காரங் குடிகொண்டிருக்குமென்றும் சொல்லப்படும். இந்த நீதியையறிந்து நடக்கின்றவனுக்கு எல்லா நன்மையும் எளிதில் வந்து கைகூடும்.

மூதேவி சோம்பலையுடையவனிடத்து வாசஞ்செய்து கொண்டிருப்பாளென்றும், சோம்பலையகற்றி நன்முயற்சி செய்பவனிடத்து ஸ்ரீதேவி நர்த்தனஞ் செய்துகொண்டிருப்பாளென்றும் முன்னோர்கள் சொல்லிய நீதிவாக்யம் இப்போது அநுபவத்திற்கும் சரியாகவிருப்பதால் யாவரும் முயற்சிசெய்வதில் சிரத்தையுடையவர்களாக விருத்தல் வேண்டும்.

ஒரு தொழிலினிடத்து முயற்சி செய்வதும் ஊழினாலாயினும் தெரியாத மற்றக் காரணத்தினாலாயினும் பலன் கிடையாமற்போனால் குற்றமொன்றுமில்லை; இதற்காக உலகம் பழித்துக்கூறாது. ஆனால் விதியில்லையென்று முயற்சியைக் கைவிட்டுச் சோம்பலுற்றவனை உலகம் பழிக்கும்.

ஊழினாலே ஒன்றுமடைவதற் கிடமில்லாதிருந்தாலும் மனவுறுதியுடையவன் தனது நன்முயற்சியால் அவ்வூழையுங் கடந்து நடப்பானென்று அறிவுடையோர் சொல்லியிருப்பதற்கு நிதர்சன மென்னவெனில், பதினாறுவயதிற் கதியில்லாத மார்க்கண்டேயன் தன்னுடைய மனவூக்கத்தின் முயற்சியால் என்றும் பதினாறு வயதினையுடையவனாயிருந்தானென்கிற ப்ரமாணமிருக்க வில்லையா?

ஒரு கார்யத்தை முயன்று நடத்திவரும் போது அதற்குப் பல விகாதங்கள் மேன்மேலும் வருமாயினும், அவைகளுக்கு இடங்கொடாமலும் மனங்கலங்காமலும் தான்தொடங்கிய கார்யத்திற்குப் பங்கம் வாராமல் நிறைவேற்றுகிறவனுக்குலகத்திலொருவனும் சமமாக மாட்டான்.

கரைபுரண்ட வெள்ளம்போல் பலதுன்பம் வந்தாலும் அவற்றை உள்ளத்தில் உன்னிப்பார்த்து மனமகிழ்ச்சி கொண்டிருப்பவனுக்கு அத்துன்பம் ஊழினாலே வந்ததானாலும் உடனே கெடுமென்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

உளையிலழுந்திய வண்டியைக் கடா தன் வருத்தத்தைப்பாராட்டாமல் உரங்கொண்டிழுப்பதுபோல நன்முயற்சியில் புத்தியுடையவன் தான் நடத்துங்கார்யத்தில் இடையூறுவருமாயின் தன்னுடல் வருத்தத்தைப் பாராட்டாமல் கூடியமுயற்சி செய்து நிறைவேற்றுவான். இவ்வகையோருக்குப் பலதுன்ப முண்டாயிருந்தாலும் அவையுடனே அவர்களைவிட்டு நீங்கிப் போய்விடும்.

ஆகலால், உயிர்க்குத் துணைக் காரணமாகவிருக்கும் முயற்சியினிடத்தில் மனத்தளர்ச்சி செய்யாமல் ஜாக்ரதையாயிருத்தல் வேண்டும்.

சக்ரவர்த்தினி.

தீக்குச்சி செய்வதற்கான யந்திரம்.

வங்காள மாகாணத்தைச் சேர்ந்த டிப்பாரா என்னும் ஜில்லாவிலுள்ள காளிகச்சா என்ற கிராமத்தில் வசித்துவரும் டாக்டர் மகேந்திரசந்திரநந்தியென்பவர் தீக்குச்சி செய்வதற்கான யந்திரமொன்றைக் கண்டுபிடித்து அமைத்திருக்கிறாரென்றும் அதை லார்டு கார்மிகேல் பார்வையிட்டாரென்றும் முன்னம் மித்திரனில் குறிப்பிட்டிருந்ததை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். நேற்றைய தினம் நமக்கு எட்டிய "அம்ருதபஜார்" பத்திரிகையில் அந்த யந்திரத்தைப் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. அவைகளில் ஸாராம்சம் என்னவென்றால்:—

"வங்காளமாகாண நிருவாக சபையின் பிரதம மெம்பராகிய கனம் பீட்சன்பெல் கனம் மகேரசன் ஆகிய இருவரும் அந்த யந்திரத்தைப் பார்வையிட்டிருக்கிறார்கள். ரங்கபுரம் பரீத்புரம் என்ற நகரங்களிலே தொழிற் காட்சி நடைபெற்றபொழுது அதில் மேற்படி யந்திரத்தைப் பலர் பார்வையிட்டனர். லார்டுகார்மைகேலும் மகாராஜா ஸர் மணீந்திரநந்தியும் அதனை நன்கு கவனித்தனர். பரீட்சைபார்க்குமாறு 3யந்திரங்களை மகாராஜா வாங்கியிருக்கிறார். தீப்பெட்டியின்மேல்மூடிக்காகும் மரச்சிம்புகளையும், உள்பெட்டிக்காகும் மரச்சிம்புகளையும் பெட்டிக்குள் வைக்கப்படும் குச்சிகளையும் அந்தயந்திரத்தினால் அளவுப்படி நறுக்கிவிடலாம். அச்சிம்புகளையும் குச்சிகளையும் அறுப்பதற்காக அந்த யந்திரத்திலுள்ள சாதனங்களை அப்போதைக்கப்போது ஏற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்." இதில் காலதாமதமும் வேலையும் அதிகமாகும். ஆகவே மூன்று விதமான மரத்துண்டுகளிலிருந்து அறுக்கவேண்டியிருப்பதால் மூன்று யந்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டால் நலம். மூன்று யந்திரங்களால் வேலை விரைவில் நடக்கும். அம்மூன்று யந்திரங்களோடு அவைகளுக்கு வேண்டிய இதர உபகரணங்களையும் வாங்கி வைத்துக்கொண்டால் 8 மனிதர்களும் 10 பையன்களும் சேர்ந்து தினமொன்றுக்கு முப்பது குரோஸ் தீக்குச்சிகளை விற்பனைக்குத் தயார் செய்துவிடலாம். ஒரு யந்திரத்தின் விலை முன்னூறு ரூபாய். எனவே மூன்று யந்திரங்களுக்கும் இதர உபகரணங்களுக்குமாக 1300 ரூபாய் முதல் வேண்டும்.

சு—ன்.

***

சராஜனகம் உப்புவாயுவின் சக்தி.

(அப்சர்வர் பத்திரிகை எழுதுகிறது.)

சுரங்கங்களில் வேலைசெய்வதில் நிபுணரான அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்தவரொருவர் இப்பொழுது இங்கிலாந்திற்குப் போயிருக்கிறார். அவர் நிலக்கரி முதலியவைகளுக்குப் பதிலாக இன்னும் மிகவும் குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய ஓர் உபாயத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். அதை அவர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறதாகச் சொல்லுகிறார்.

ஆகாயத்தில் 4000 மிலியன் டன் அளவு இந்நூதன சக்தி வியாபித்திருக்கிறதென்றும், இது நிலக்கரி முதலானவைகளைப்போல் சாம்பலாகப் போவதினால் அழிந்து போவதில்லையென்றும் ஒரு தடவை நூதன உபாயத்தைப் பிரயோஜனப்

படுத்தினபோதிலும் மறுபடியும் அதையே உபயோகிக்கலாமென்றும் சொல்லுகிறார். நிலக்கரி, மண் எண்ணெய், பெட்ரோல் எண்ணெய் இவைகள் எந்தெந்த விதமாக உபயோகப்படுகின்றனவோ அவ்வளவே விதமாக இந்நூதன சக்தியை உபயோகிக்கலாம். இரும்பு முதலாகிய லோகங்களை உருக்குவதற்குக்கூடப் பிரயோஜனப்படுத்தலாம். இப்பொழுது இவரால் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட உப்புவாயுவின் சக்தியில் ஒரு டன் 1300 டன் நிலக்கரிக்குச் சமானமாயும் உபயோகிப்பதற்குப்பெட்ரோல் எண்ணெய் அவ்வளவு அபாயகரமுமில்லாதது. இந்தச் சக்தியிலிருந்து மின்சார சக்தியைச் சுலபமாக உண்டாக்கிக்கொள்ளலாம். சாதாரணமாக மின்சார சக்தியையுண்டாக்க இப்பொழுது நமக்கு எவ்வளவு பிடிக்கிறதோ அதில் 50-ல் ஒருபங்குதான் செலவாகும். 5, 6 இடங்களில் இந்நூதன சக்தியை உண்டாக்க ஸ்தலங்களை ஏற்படுத்திவிட்டால் அவ்விடங்களிலிருந்து தேசத்தின் எல்லாப் பாகங்களுக்கும் இந்நூதன சக்தியைப்பிரயோஜனப்படுத்திக்கொண்டு விளக்கு, அடுப்பு முதலியவைகளுக்குத் தேவையான சமையல்வேலைக்கு அவசியமான அக்கினியை உண்டாக்கிக்கொள்ளலாம்

சண்டையில் உபயோகப்படுத்தும் விஷயத்தில் இந்நூதன சக்தியை இன்னும் 3 மாதத்திற்குள் சண்டைக்கப்பல்களில் பிரயோஜனப்படுத்த இடமிருக்கிறதென்றும் 6 அங்குல பீரங்கிகளை ஏற்றிச்செல்லும் சப்மரீன்கள் இந்த நூதனசக்தியின் ஒரே பிரயோகத்தால் உலகத்தை இரண்டு தட்வை சுற்றிவரக் கூடுமென்றும் சப்மரின்களிலிருக்கும் மனிதர்களுக்குத் தேவையான பிராணவாயு, இருக்கும் வரையில் சப்மரீன்கள் இந்நூதன சக்தியினால் ஜலத்தின்கீழே யிருக்கலாமென்றும் கீழே இருக்கும் காலத்தில் ஜலத்தின் மேல்மட்டத்தில் ஒருவிதமான குமிழிகளும் உண்டாகாவென்றும், ஆகையால் அவைகளிருக்குமிடத்தை எதிரிகள் சுலபமாய் அறிய முடியாதென்றும் இந்நூதன சக்தியைப் பிரயோகித்தால் ஒருவிதமான மின்சார யந்திரமும் அவசியமில்லையென்றும் அவைகளிருக்குமிடத்தில் கப்பல்களை உடைக்கும் யந்திரங்களை சப்மரின்களில் அமைக்கலாமென்றும் 35-மைல் வேகத்துடன் சப்மரின்கள் இச்சக்தியால் செல்லக்கூடுமென்றும் சொல்லுகிறார்.

ஒரு வருடம்வரையில் ஒரு சண்டைக் கப்பல் இச்சக்தியால் ஜலத்தில் ஓடும். புகை போவதற்கு ஒருவிதமான புகைப் போக்கியும் வேண்டியதில்லை. உப்புவாயு சக்தியில் அரை டன் இருந்தால் அது 600 டன் நிலக்கரி செய்யும்வேலை செய்யக்கூடும். கப்பலை நடத்துவதற்கு 1 அல்லது 2 மனிதர் இருந்தால் போதும்.

இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் ஆகாயமார்க்கமாய்ப் போவது இனி சுலபமாய்விடும். சண்டைக்காலத்தில் இங்கிலாந்திலிருந்து ஆகாயவிமானங்கள் பர்லினுக்குப் பறந்துபோய்க் கீழே இறங்காமலும் இச்சக்தியின் ஒரே பிரயோகத்தால் திரும்பிவிடக்கூடும்.

இவருடைய நூதன பிளானை அனேக சாஸ்திர நிபுணர்கள் பார்த்துச் சந்தோஷிக்கிறார்களாம்.

தி—னி.

* * *

இந்திய கைத்தொழில் விருத்தியாகும் வகை.

“அவாங் மனோகோசரம் அதாவது மனம், வாக்கு காயங்களுக்கு எட்டாத ஸ்வரூபரான கடவுள் பிரபஞ்சத்தில், மலைகள், நதிகள், சமுத்திரங்கள் முதலானவைகளையும் இவற்றில் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் முதலான பலவித லோகங்களின் சுரங்கங்களையும் முத்து, பவளம், கெம்பு, ரவை, ஸ்படிகம், பச்சை, கோமேதகம், புஷ்பராகம், மரகதம், நீலம் முதலிய நவரத்தினங்களையும் சிருஷ்டித்திருக்கிறார். இவைகளைக்கொண்டு, மநு, மய, த்வஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ என்னும் பஞ்ச கிருத்தியங்கள் செய்யும் ஆசாரியர்களாகிய நாம் சிற்பசாஸ்திரங்களைச் சந்தேகவிபரீதமில்லாமல் தக்க ஆசாரியர்களை (குருமார்களை) அடுத்து வாசித்து மேற்சொன்ன சாஸ்திரங்களிற் கூறியிருக்கிற பிரகாரம் ஆகாரம், அனுஷ்டானம் முதலியவைகளுடன் தொழில்களை நம்முன்னோர்கள் செய்து வந்த பிரகாரம் செய்துவரவேண்டும். இவ்வாறு செய்துவருவதோடு கூட காலதேசவர்த்தமானங்களை அனுசரித்து நங்குலங்சிறுவர்கள் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய பாஷைகளை இலவசமாகவாவது அல்லது சொற்ப சம்பளங்கொடுத்தாவது வாசிக்கக்கூடிய வித்தியாசாலைகள் எல்லாப்பட்டணங்களிலும் கிராமங்களிலும் அனேகமாய் ஏற்படுத்தவேண்டும். பெற்றோர்கள் ஏழைகளாயிருந்தால் தம்மக்களைச் சிறுபிராயத்திலேயே ஏதாவதொரு கைத்தொழில் கற்றுசொற்பகூலி சம்பாதிக்கும்படிவிட்டுவிடுகிறார்கள்.

இப்பேர்க்கொத்த பிள்ளைகள் இராக்காலங்களிலும், ஓய்வுநாட்களிலும், மேற்கூறிய பாஷைகள் இலவசமாய்க் கற்றுக்கொள்வதற்கான இராப்பள்ளிக்கூடங்கள் முக்கியமாய் ஆபிரக்கணக்காய் எல்லாகிராமங்களிலும்பட்டணங்களிலும் ஏற்படுத்தவேண்டும். இதுவேயு மன்றி நங்குலச் சிறுவர்களுக்கு (1) செகண்டரி பாடசாலைகளிலும் காலேஜிகளிலும் பாதிச்சம்பளத்திற்குச்சேர்த்துக் கொள்ளும்படியாயும்(2) உயர்தரக் கல்விக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துதவும்படியாயும், (3) நமது வம்சச் சிறுவர் சிறுமிகளுக்கு எலிமெண்டரி படிப்பை கட்டாயப் படுத்தும்படியாயும், (4) ஜப்பான், அமெரிக்கா முதலிய தேசங்களுக்கு நூதனமான கைத்தொழில்களைக் கற்றுவருவதற்கு நங்குலச் சிறுவர்களை அனுப்பும்படியாயும் நம்மவர்கள் அடிக்கடி ஒருங்குசேர்ந்து அனேக இடங்களில் விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்சுகள் கூடி நங்காருண்ய கவர்ன்மெண்டாரைக் கேட்க வேண்டும். “Ask, it shall be given; knock, it shall be opened” “கேட்டால் கொடுக்கப்படும். இடித்தால் திறக்கப்படும்.” என்னும் பைபில் வாக்கியப் பிரகாரம் நாம் அடிக்கடி கேட்டால்தான் எதுவுங்கிடைக்கும். காங்கிரஸ் மகாசபை சென்ற 32-வருஷங்களாய் மதராஸ், பம்பாய், கல்கத்தா, லக்னோ முதலிய பட்டணங்களில் கூடி கவர்ன்மெண்டாரை நமக்குப் பல சுதந்தரங்கள் கொடுக்கும்படியாய் ஓயாமல் கேட்டுவருவதால் தான் நங்கவர்ன்மெண்டாரும் சிற்சில சுதந்தரங்கள்

கொடுத் திருக்கிறார்கள்; மற்றவற்றையும் நாளடைவில் கொடுப்பதற்காக யோசித்து வருகிறார்கள். "ஒருகை தட்டினால் ஓசை பிறுதியாயிராது. பல கைகள் தட்டினால் ஓசை மிகும்" என்பதற்கிணங்க நம்மவர்களெல்லாம் ஒரேமனதாய் ஒற்றுமையுடன் உழைத்தால் தான் நம்மிஷ்டசித்தியடையலாம். நம்மாற்கூடியமட்டும் பிரயாசைப்பட்டு நம்முடைய சிறுவர்களைச் சிறுவயதிலேயே தொழில்களில்விடாமல் பத்து பன்னிரண்டு வயது வரையிலாவது அவர்களுக்கு வித்தையைக் கற்பித்துக்கொடுக்கவேண்டும். சென்னை சித்திரவேலை வித்தியாசாலை (The Madras School of Arts) யைப்போன்ற தொழிலும் வித்தையும் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் அநேகமாய் நம்மவர்களை ஏற்படுத்தி நம்குலச் சிறுவர்களுக்குத் தொழிலும் வித்தையும் போதிக்கவேண்டும். "சொல்வது யார்க்கும் சுலபம், செய்வது அரிது" என்பது வாஸ்தவமாயினும் நாமெல்லோரும் ஒன்று கூடிச் சபைகள் ஏற்படுத்தி ஷை கொள்கைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

கம்மாளன் கட்டுப்பட்டால் கதிர் ஆயிரம் பொன் பெறும் என்னும் பழமொழிப் பிரகாரம் நம்மவர்களில் பொருட் செல்வமும் கல்விச்செல்வமும் பெற்றவர்கள் யாவரும் சாதுரியமும் ஒற்றுமையுமுடையவராய் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தவர்களைப்போல் ஊக்கம், விடாமுயற்சி முதலிய நற்குணங்களுடன் பற்பல தொழிற்சாலைகள் நிறுவித் தக்க காலக்கிரமம் தப்பாது ஆரம்ப சூரத்தனமின்றி என்றும் ஒரே சீராக அதிகச் சிரத்தையுடன் நடத்திவரவேண்டும். அப்படி நடத்தி வருவதால் நம்குலச்சிறுவர்கள் யாவரும் வெகுசீக்கிரத்தில் கல்வி கைத்தொழில் முதலியவைகளில் மேம்பாடடைவார்கள். நந்தேயத்துக் கைத்தொழிலை விருத்தியடையச் செய்யாமையால் ஏராளமான பொருள் அயல் நாடுகளுக்குச் செல்கின்றது. தற்காலம் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தங்காரணமாக அந்நிய தேசத்துச் சாமான்கள் இத்தேசத்திற்கு வருவதில்லை. இதுதான் நல்ல சமயம். கைத்தொழில்களையும் செயற்கைப்பொருள்களையும் நமக்குவேண்டியவாறு செய்துகொண்டு அந்நியதேசங்களுக்கு அனுப்பாமல் நந்தேசத்திலேயே அவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளும்படியான கட்டுப்பாடுகள் செய்யவேண்டும். ஜப்பான் கவர்ன்மெண்டார் அந்தேசத்து ஜனங்கள் செல்வத்திலும் கல்வியிலும் விருத்தியாகும்படியான ஏற்பாடுகள் செய்து வருவதுபோல இந்தியா கவர்ன்மெண்டாரும் நந்தேசத்து ஜனங்கள் கல்வியிலும் கைத்தொழிலிலும் வியாபாரத்திலும், செல்வத்திலும் விருத்தியடையும்படியான ஏற்பாடுகள் செய்யும்படியாக. நாம் அவர்களைக் காண்பரன்சுகள் மூலமாக அடிக்கடி கேட்டு வந்தால் நந்தேசத்து ஜனங்களின் விருப்பங்களை நிறைவேற்ற முன்வருவார்கள். எல்லாவற்றிற்கும் நம்மிடத்தில் ஒற்றுமையிருக்கவேண்டும். ஒற்றுமையின்றி கவர்ன்மெண்டார் உதவிமாத்திரம் இருந்தபோதிலும் கைத்தொழில் முதலியவைகள் விருத்தியடையமாட்டா.

சில காலத்திற்கு முன் சீர்கேடான நிலைமையிலிருந்த ஜப்பான்தேசம் அந்தேசத்து ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைத்து வருவதினால் உன்னத

நிலைமையையடைந்து வருகிறதோடுகூட தற்காலத்தில் நம்மிந்தியா தேசத்தில் செலவாகக்கூடிய சிம்னி முதலிய கண்ணாடி சாமான்கள் குண்டூசி, கத்தி, பேனா, கத்தரி, தொழிற்குரிய ஆயுதங்கள் முதலிய இரும்பு சாமான்கள் எல்லாவற்றையும் செய்து அனுப்பி வர்த்தகத்தையும், கைத்தொழிலையும் விருத்திசெய்து வருகிறார்கள். இதேமாதிரியாக நாமும் நம்கவர்ன்மெண்டாரும் ஒத்து உழைத்து வருவோமானால் நந்தேசத்திலும் கைத்தொழில் வர்த்தகம் முதலியவைகள் விருத்தியடையும். அவிழ்த்துவிட்ட மூட்டையிலிருந்த நெல்லிக்காய்கள் பலபக்கத்திலும் சிதறிப்போவதுபோல் நாம் ஒற்றுமைப்படாமலிருந்தால் ஒருக்காலும் விருத்தியடையமாட்டோம். அநேக நூற்றாண்டுகளாக நந்தேசத்தார் கைத்தொழில், கல்வி, வியாபாரம் முதலியவைகளில் மேம்பட்டிருந்தார்கள் என்று நாம் வீணாக வாய்ப்பேச்சாக சொல்லிக்கொண்டிருப்பதினால் ஒரு பிரயோசனமும் உண்டாகாது. காகமுறவு கலந்துண்ணக்கண்டீர். என்று ஸ்ரீமத் தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கிற பிரகாரம் நாம் ஒற்றுமையுடன் பொது நன்மையைக்கருதி நம்குலச் சிறுவர்களும் தாமும் கூடிய சீக்கிரத்தில் மேம்பாடடையக் கூடிய விஷயங்களைத் தெரிந்தெடுத்து அவை விருத்தியடைவதற்கான வகைகளனைத்தையும் தவறின்றிச் செய்து முடிக்கவேண்டும். நாம் ஏதாவது ஒரு காரியம்செய்ய ஆரம்பித்தால் அதற்கு அநேக இடையூறுகள் உண்டாவதுசகஜம். ஆகையால் அப்பேர்க்கொத்த இடையூறுகளுக்கஞ்சி எடுத்த காரியத்தை விட்டு விடக்கூடாது. இடையூறாய் நிற்பவற்றை ஊடறுத்தும் சென்று நம்குலம் க்ஷேம ஸ்திதியை அடைவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும். காங்கிரஸ் மகாசபை முதன் முதலில் கூடினபோது மகம்மதியர்களும் இந்திய கிருஸ்தவர்களும் அதற்கு விரோதிகளாயிருந்தார்கள். இப்பொழுது அவர்களும் ஒத்து உழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதேமாதிரியாக நாமும் நம்குல விருத்தியைக் குறித்துச் சில ஏற்பாடுகள் செய்தால் மற்றஜாதியார் முதலில் விரோதபாவங் காட்டுவார்கள். ஆனால் நாம் ஊக்கமும் விடாமுயற்சியுமுடையவராய் ஒற்றுமையுடன் எடுத்த காரியத்தை நழுவவிடாமல் ஒரேமனதுடன் உழைத்து வருவோமானால் அவர்களும் நம்முடன் சேர்ந்து உழைப்பார்கள். இதனால் நம்குலத்தவர் மேம்பாடடைவதுடன் மற்ற குலத்தவர்களும் மேம்பாடடைவார்கள். காலக்கிரமத்தில் நம்மிந்தியா தேசமும் பூர்வஸ்திதியை யடையும்.

கோ. குமாரசாமி ஆச்சாரி.
5—4—17.

***

ஜால வித்தைகள்.

உலகத்தில் ஜாலவித்தை என்பதாக (மாஜிக்) அனேகம் நடக்கிறது. ஆனால் இப்பொழுது வந்திருந்த சைனாதேசத்தவர்கள் மவுண்டுரோட்டு எல்பிடென் ஹாலில் நடத்திய ஆட்டத்திற்கு இச்சென்னையிலுள்ள ஜனங்கள் அனேகமாகப்போய் டிக்கட்டு கிடைக்காமல் திரும்பிவிட்டார்கள். 8-அணா டிக்கட்டு கிடைக்காமல் ஒரு ரூபா டிக்கட்டு வாங்கினார்கள். ஒரு ரூபா டிக்கட்டு கிடைக்காமல் 2-ரூபா டிக்கட்டு வாங்கினார்கள். அனேகர்கள் அப்படியும்

டிக்கட்டுவாங்குவதற்குப்போய் ஜனக்கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு மூச்சு விடவும் திரும்பவும் முடியாமல் கஷ்டப்பட்டவர்கள். அநேகர்கள் இவ்விதகஷ்டப்பட்டுப் போய் பார்க்கும்படியாக அபேக்ஷை வந்ததற்குகாரணம் அத்தொழிலாளிகள் எழுதிய விளம்பரத்தினாலும் படங்களினாலும் ஏற்பட்ட படாடோபத்தினாலும் யாவருக்கும் ஓர்வித பிரீதியுண்டாகிப் போய்பார்க்கத்தான் வேண்டும் என்னும் அவா ஏற்பட்டு விட்டது. இவ்வித அவாவுடையவர்களில் நானும் ஒருவனாயிருந்து போய் பார்த்தபோது அவ்விடத்தில் நடந்தஜால வித்தையில் என்ன ஏற்பட்டதென்றால்,

கைத்தொழில்தான் முதன்மையாக விளங்கியது வேறொன்றுமில்லை. அவர்கள் செய்த வேலைகளுக்குச் சாமான்களெல்லாம் கைத்தொழிலினால்தான் முடிந்திருக்கிறது. அவைதக்கொண்டும். அந்தஇடத்தில் அவர்கள் செய்ததும் கைத்தொழில்களேதான். அவ்வித கைத்தொழில்களால் செய்த சாமான்களில்லாமல் வெறும் ஆள்நின்று அப்பேர்ப்பட்ட ஜாலவித்தைகளைச்செய்ய முடியாது. இதுதவிர வேறொன்றுமில்லை வீணே கொண்டுபோய்ப்பணங்களை கொட்டவேண்டியதாக ஏற்பட்டது. இவ்வித பணங்களை வேறு ஓர் காரியங்களில் செலவிட்டால் எவ்வளவோ மேன்மையடையலாம். இதனுடைய ரகசியம் தெரியாதவர்கள் அதை அடிக்கடி போய்ப்பார்த்து வந்தார்கள். இது கடவுள் சிருஷ்டியைப் போலொத்தசிருஷ்டியல்ல. எல்லாம் கைத்தொழில் சிருஷ்டியேதான். இவ்வித கைத்தொழில் சிருஷ்டி செய்வதற்கு பொருளுதவிசெய்து உதவி புரிந்தால் கைத்தொழிலும் விருத்தியாகும். பொருளுதவியவர்களுக்கும் லாபமும் கிடைக்கும். இதற்கு கொண்டுபோய் கொடுத்த பணங்களை எல்லாம் நம் இந்தியர்கள் கைத்தொழிற்சாலைகளுக்கு கொடுத்தால் இதைப்போலொத்த ஜாலஞ்செய்யக்கூடிய சாமான்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கும்வீட்டைவிட்டு போகாமலே அவரவர்கள் வீட்டிலேயே பெண்டு பிள்ளைகளெல்லாம் பார்த்துக்கொள்ளலாம். இவ்வித வேலைகளெல்லாம் இப்பொழுது ஏற்படுத்தவேண்டுமென்ற சென்னை கைத்தொழிற்சாலையில் செய்துகொடுக்கலாம் இவ்விதம் எழுதியது அவர்கள் விஷயத்தில் பொறாமைகொண்டெழுதியதல்ல. இவ்வித பொருள்களை ஒன்றுசேர்த்து நம்மிந்தியாவில் ஏன் நல்ல விஷயத்தில் உபயோகப்படுத்தி இவ்விந்தியாவை கடிமைப்படுத்தக்கூடாது. ஏழைகளை ஏன் காப்பாற்றப்படாது என்னும் அபிப்பிராயத்தினால்தான் இதை எழுத நேர்ந்தது, நல்ல விஷயங்களுக்கு யாராவது முயற்சித்தால் அதற்கு நம்மவர்கள் பொருளுதவி செய்கிற வழக்கமில்லை என்பதைப்பற்றி இவ்விடத்தில் சொல்லவந்தோம்.

நந்தேசத்தவர்கள் மாஜிக்கிற்கும் பையாஸ்கோப்பிற்கும், நாடகங்களுக்கும்,ஓட்டலுக்குமாகச் செலவிட்டு ஓட்டாண்டிகளாகபோகாமல் நல்லதொழிற்சாலைகளுக்கு உதவிபுரிந்து லாபமடையும்படி இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருக்கிறோம்.

***

இந்தியாதேசத்து ஐஸ்வர்யம் 1650.

தற்காலத்தில் நமது தேசமெங்கும் பஞ்சமும் பிணியும் குடிகொண்டு நம்மை வருத்தி வருகின்றபடியால், முற்காலமும் இக்காலத்தைப் போலவேதான் இருந்திருக்குமோவென்று சிலர் ஐயுறலாம்.

இக்காலத்தைப்பார்க்கிலும் முற்காலத்தில் தேசம் செழித்து ஐஸ்வர்யம் மிகுந்து அந்நிய நாடுகளெல்லாம் நம்மைப்பார்த்து ஆச்சரியமும் பொறாமையும் அடையும்படியாக நாம் அவ்வளவு தனவந்தர்களாயிருந்தோமென்பதில் சந்தேகமில்லை. அக்காலத்து மேனாட்டுக் கவிகள்கூட நமது அப்போதிய ஐஸ்வர்யத்தை வர்ணித்திருக்கிறார்கள் நாம் நமது தேசம் தனத்தில் பெருத்திருந்தது என்று காட்டுவதற்கு நாம் வெகுதூரம் போகவேண்டாம். சுமார் 265 வருடங்களுக்கு முந்தியுள்ள நமது தேசசரித்திரத்தை யெடுத்து ஆராய்ந்து பார்த்தால், நாம் கூறியதின் உண்மை நன்குபுலப்படும். அக்காலத்து ஒரு ரூபா இக்காலத்து ஒரு ரூபாய் பதினொரு அணாவுக்குச் சரியான மதிப்புள்ளது.

அக்காலத்தில் டில்லி அரசாங்கத்திற்கு குடிகளிடமிருந்து வசூல் வருமானம் இருபதுகோடி ரூபா. இந்த அரசாங்கத்துடன் அப்பொழுதுதான் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள தௌலத்தாபாத், தேலிங்கானா, பாக்லானா இம்மூன்று நாடுகளின் வருமானம் மாத்திரம் ஒன்றரைக்கோடி ரூபா. சக்கரவர்த்திக்குச் சொந்தமாகப் பிரத்தியேக நிலங்கள் உண்டு. அந்நிலங்களிலிருந்து சக்கரவர்த்திக்கு வருமானம் மூன்றுகோடி ரூபா.

“ஷாஜஹான்” சக்கரவர்த்தி தான் ராஜ்யபாரஞ்செய்ய ஆரம்பித்து இருபது வருஷங்களுக்குள் தானதருமங்களிலும் வெகுமதி கொடுப்பதிலுமாக ஒன்பதரைக் கோடி ரூபா செலவழித்தான். ரொக்கமாக நாலரை கோடியும் வேறு பலவிதங்களில் ஐந்துகோடியும். அவன் கட்டிய கட்டடங்களுக்கு மாத்திரம் இரண்டரைக் கோடி செலவாயிற்று. அவை பின்வருமாறு.—

ஆக்ரா நகரத்தில்.		
மணிமுத்துப் பள்ளிவாசல், அரண்மனைகள், கோட்டையிலுள்ள தோட்டங்கள்	60	லட்சம்
தாஜ்மஹால்	50	,,
டில்லி நகரத்தில்.		
அரண்மனைகள்	50	,,
ஜம்னுமஸ்கித் என்ற பள்ளிவாசல்	10	,,
டில்லியைச்சுற்றிப் புதியமதில்	4	,,
டில்லிக்கு வெளியே ஒரு கட்டிடம்	½	,,
லாகூர் நகரத்தில்.		
அரண்மனைகள், தோட்டங்கள், வாய்க்கால்	50	,,
காபூல் தேசத்தில்.		
பள்ளிவாசல், அரண்மனை, கோட்டை, நகர்மதில்	12	,,
காஸ்மீர் தேசத்தில்.		
அரண்மனைகள், தோட்டங்கள்	8	,,
காந்தார நகரத்தில்.		
காந்தாரம், பஸ்த், ஜமீந்தாவார் இம்மூன்று இடங்களிலும் கோட்டைகள்	8	,,
ஆஜ்மீர் முதலிய தேசங்களில்.		
ஆஜ்மீர், ஆமதாபாத், இவ்விடங்களில் கட்டிடங்கள்	12	,,
முக்லீஸ் புரத்தில்		
அரண்மனைகள்	6	,,
இளவரசரின் அரண்மனை	2	,,
மொத்தம்	272½	லட்சம்

அரண்மனையில் 5 கோடிரூபா விலைபெற்ற ஆபரணங்கள் இருந்தன. சிற்றரசர்களுக்கும், மற்றவர்களுக்கும் இரண்டு கோடிரூபா விலைபெறுமான ஆபரணங்கள் இனாமாக அளிக்கப்பட்டன. அரண்மனையிலிருந்த ஐந்துகோடி ரூபா ஆபரணங்களில் சக்கரவர்த்தி தமது தலையிலும் கழுத்திலும், கைகளிலும், இடுப்பிலுமாக இரண்டுகோடி ரூபா ஆபரணங்களை யணிந்துகொள்வது வழக்கம். இவ்வாபரணங்கள் அந்தபுரத்திலுள்ள ஸ்திரீ வேலைக்காரர்கள்வசம் இருந்தன. பாக்கி 3 கோடி ரூபா ஆபரணங்கள் அரண்மனை யடிமைகள் வசம் இருந்தன. சக்கரவர்த்தியின் கழுத்தில் அணியும்மாலை பொன்னுமாத்திரம் 5 ரத்தினங்களாலும் 36 முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டு எட்டு லட்சம் ரூபாவிலை பெற்றது. அரசர்கள் அணியத்தகுந்ததான 125 பெரிய, சக்கராகாரமான ரத்தினங்களால் கோர்க்கப்பெற்ற இன்னும் இரண்டு மாலைகளும் இருந்தன. ஒவ்வொரு மாலையினும் நட்டநடுவில் வைக்கப்பட்டிருந்த மணியான்று ரூபா 40000 விலைபெற்றது. இரண்டு மாலைகளும் சேர்ந்து ரூபா இருபதுலட்சம் விலைபெற்றன. இவை யெல்லாம் "அக்பர்" சக்கரவர்த்தியால் சேர்த்துவைக்கப் பட்டவை.

என்றாலும், சக்கரவர்த்தி யினுடைய கழுத்துஹாரத்தில் இடப்படும் இரத்தினங்கள் இரண்டாந் தரமானவைதாம். மிக மிக சீர்த்தியான, பெரிய ரத்தினங்களெல்லாம் கிரீடத்தில் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கிரீடத்தில் 5 பெரிய ரத்தினங்களும் 24 முத்துக்களும் பதிக்கப்பட்டிருந்தன. இவற்றில் எல்லாவற்றிலும் பெரிய ரத்தினமானது இரண்டு லட்சம் ரூபா மதிப்பிடப்பெற்றது; ஆயினும் அது வெளியில் நான்கு லட்சத்திற்குக்குறையாது விலைபோகும். கிரீடத்தின் மொத்த மதிப்பு பன்னிரண்டு லட்சம். அரண்மனைக்கஜானாவில் இருந்த இரத்தினங்களுக்குள் மிகப்பெரியது இரண்டுலட்சம் ரூபா விலைபெற்றது.

மொகலாயச் சக்கரவர்த்திகள் மயிலாசனம் ஒன்று செய்வித்து அதில் வீற்றிருந்து அரசு செலுத்தினார்களென்று கேள்விப்படுகிறோம். மயிலாசனத்தில் முதன் முதலாவதாக 1635-ம் வருஷம் மார்ச்சு௴ 12-ம் தேதியன்று ஷாஜஹான் சக்கரவர்த்தி ஏறினார். இந்த மயிலாசனம் தயார் செய்வதற்கு ஷாஜஹான் தீர்மானித்து. தனது கஜானாவிலுள்ள ரத்னங்களை யெல்லாம் தனக்குக் காண்பிக்கும்படி உத்தரவுசெய்து, அவற்றைத்தானே பார்வையிட்டு, அவற்றினின்றும் 86-லட்சம் ரூபாய் பெறும்படியான அழகிய ரத்தினங்களைத் தானே பொறுக்கியெடுத்து மயிலாசனம் கட்டுவித்தாரென்று சொல்லப்படுகிறது. வேலைக்காரர்களுடைய சம்பளம் நீங்கலாக, இந்த மயிலாசனத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகள் மாத்திரம் ஒரு கோடி ரூபா பிடித்தனவாம்.

இவ்விபரீதமான சொத்துக்களைக் கைப்பற்றுவதற்காக அந்நிய நாட்டினர் படையெடுப்பது ஆச்சரிய மன்றாகையால், இச்சொத்துக்களைக் காப்பாற்றி வைத்துக்கொள்வதற்கு ஒரு பெரும்படை அவசியமாயிற்று. அந்த சேனையின் கணக்கு பின் வருமாறு:— குதிரைப்படை 200, 000; சைந்நியத்தலைவர்கள் 8000; காவற்படை 7000; காலாட்படையும் பீரங்கிப்படையும் 40000; இன்னும் சிற்றரசர்களிடத்திலும் ஜமீந்தாரர்களிடத்திலுமாக 185000 குதிரைப்படை இருந்தது. ஆகமொத்தம் 440000. இந்தப்படை டில்லியில் மாத்திரம் இருந்தது.

இவற்றையெல்லாம் அக்காலத்தில் நமது முன்னோர்கள் எந்த ஸ்திதியிலிருந்தார்களென்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

ஞானபானு.

***

பலகுறிப்புகள்.

விஸ்வகர்ம மஹாஜனகான்பரன்ஸ் இந்த ஏப்ரல்௴ ஈஸ்டரில்நடைபெறவேண்டியது. இவ்வருட கான்பரன்ஸை திருச்சி ஜில்லா காரர்களாகிய விஸ்வகர்மாக்கள் சென்ற வருடத்திலேயே தமது ஊராகிய திருச்சிராப்பள்ளியில் நடத்துவதாக ஒப்புக்கொண்டார்கள். அதில் முக்கியஸ்தர்களுக்கு ஏதோ சில தேகஅசௌக்கியத்தால் குறித்தகாலத்தில் நடத்தமுடியாமல் தடைப்பட்டதாகக் கேள்விப்படுகிறோம். இக் கான்பரன்ஸ் மே௴ ஆரம்பத்தில் கூடுமென அறிய சந்தோஷிக்கிறோம்.

***

விஸ்வகர்ம குலோபகாரி என வழங்கி வந்த நமது பத்திரிகை தொழில் பத்திரிகையாக மாற்றப்பட்டது. இப்பொழுது புது வருஷம் பிறந்தபடியால் இங்கிலீஷுக்கு 1917ஞு ஏப்ரல்௴ முதலாகவும் தமிழுக்கு பிங்களஞு சித்திரை௴ முதலாகவும் மாற்றப்பட் டிருக்கிறது. சந்தாநேயர்கள் இதை அங்கீகரிப்பார்களென்று நம்புகிறோம். இனி இப்பத்திரிகை முன் பணமில்லாமல் எவருக்கும் அனுப்பப்படமாட்டாது. கைத்தொழில் அபிமானிகள் முன்பணம்கட்டி பத்திரிகை பெற்று சந்தாதாரர்களாகச் சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

***

நமது பத்திரிகைக்கு விஷயதானம் புரிந்துவந்த நண்பர்கள் இனி கைத்தொழிலை அனுசரித்த பலதொழில்களை அனுசரித்து அதற்குவேண்டிய சாஸ்திரங்களையும் அனுபவங்களையும் எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்வதுடன் ஒவ்வொரு இங்கிலீஷ்௴ முதல் தேதிக்குள்ளாக தாங்கள் எழுதும் வியாசத்தை அனுப்பி விட்டால் நலமென்பதாயும் தெரிவித்துக் கொள்கிறோம்.

***

வெள்ளிவேலை.

முன் நாம் செய்திருந்த வெள்ளிவேலைகளை நிறுத்தி 6-வருஷகாலமாகிறது. மறுபடியும் வெள்ளி தொழிற்சாலையை ஆரம்பித்து நடத்திவருகிறோம். இதில் இந்துக்களின் சாமான்களும், இங்கிலீஷ்காரர்களுடைய சாமான்களும் செய்யப்படும். வேண்டியவர்கள் நமக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

***

இரும்புவேலை.

இவ்விடத்திலேயே வேலூர் பிரம்மஸ்ரீ முத்தாச்சாரியா ரென்பவர் எல்லாவிதமான தொழிலுக்குறிய ஆயுதங்களைச்செய்துவருகிறார். இவருடையவேலை வெகு திறமையாயுள்ளது. மற்றவிபரங்களுக்கு நமக்கு எழுதவும்.

மரவேலை.

இவ்விடத்திலேயே பிரம்மஸ்ரீ குழந்தை வேலாச்சாரியா ரென்பவர் தச்சுவேலைகள் பீரோ, நாற்காலி, மேஜை முதலிய பர்னீசர்வேலைகள் செய்துவருகிறார். மவுனுக்காக வேண்டியமாதிரிகளும், பல் சக்கரங்களின் அளவுகளும்வெகுநேர்த்தியாய் பிரித்துச்செய்யக்கூடியவர். இவருக்கு பவுண்டரி அனுபவம் அதிகம். இவருடைய உதவி வேண்டியவர்கள் நம்மை எழுதிக் கேட்கலாம்.

***

சிற்றுளிவேலை.

இவ்விடத்திலேயே பிரம்மஸ்ரீ பு. கு. சிங்காரவேலாச்சாரியார் விமானம் வாகன வேலைகள் முதலிய தேவஸ்தான வேலைகளையும் வீடுகளுக்கு வேண்டிய சிற்றுளி வேலைகள் செய்து வருகிறார். இவர்வேலையில் வெகுபாராப்புள்ளவர். கூடிய வரையில் சொல்லிய சமயத்திற்குத் தவராமல் ஒழுங்காய்ச் செய்துகொடுக்கும் சுவாபிகம் இவரிட மிருக்கின்றமையால் இவரால் செய்துக்கொடுக்க வேண்டிய வேலைகள் எதாயிருந்த போதிலும் நம்மை எழுதிக் கேட்கவும்.

***

இவ்விதத் தொழில் செய்பவர்கள் முன்னதாக ஒவ்வொருவராய்ச் சேருவதால் தொழிற்சாலை ஸ்தாபித்த உடனே கூடிய சீக்கிரம் வேலைகள் நடைபெறும். இத்தொழிற்சாலைகளுக்கு ஆயுதங்களும் உதவியாகக்கிடைக்கும். முதலில் ஆயுதங்களுக்கு பணத்தை செலவிட வேண்டியதில்லை. முக்கியமாக வேண்டியதற்கு மட்டிலும்தான் பணச்செலவுநேரிடும். இன்னும் இதைப்போலொத்த பல தொழிற்சாலைக்காரர்களும் இதில் பங்குக்காரர்களாகசேர பிரியமுள்ளவர்களாக யிருக்கிறார்கள். இதுவரையில் ஷேர் ஹோல்டர்களாக சம்மதப்பட்டவர்களின் தொகை-100வரையிலிருக்கிறது. ஒரு கூட்டம்கூடி இதற்கு டிரஸ்டிகள் ஏற்படுத்தி விட்டால் பிறகு அநேகர்கள் சேருவார்கள். உடனே தொழிற்சாலைக்கு இடம் ஏற்படுத்த முயலுவார்கள். ஆகையால் கூடியசீக்கிரம் ஓர் கூட்டம் கூடி இதற்கு ஓர் பிரசிடெண்டையும், டைரக்டர்களையும், பொக்கிஷதார்களையும் ஏற்படுத்திவிட்டால் ஷேர் ஹோல்டர்களுடைய ஷேர்பணத்தை வசூல்செய்யவும் பங்குக்காரர் சேகரிக்கவும் முடியும். தொழிற்சாலையும் கூடியசீக்கிரம் ஆரம்பமாகி வேலைசெய்யும். இதைப்பற்றிப் பிரியமுள்ளவர்கள் ஊக்கமெடுத்து வேலைசெய்ய வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

நோட்டீஸ்.

விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் கமிட்டி சென்னை.

ஐயா,

நெசவு, சாயத்தொழில் முதலியவைகளில் கீர்த்தியுடன் பயின்று ஜப்பான் தேசத்தினின்றும் தமது ஜென்மதேசத்திற்கு திரும்பியுள்ள Mr. T A. இராமஸ்வாமி ஆச்சாரியாரவர்கள் தற்காலம் சென்னைக்கு விஜயமாருயிப்பதை முன்னிட்டு, நமது கமிட்டியார் நிகழும் 1917ஞ் ஏப்ரல்மீ 9உ திங்கட்கிழமை சாயங்காலம் $4\frac{1}{2}$-மணிக்கு சென்னை ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி ஜவுளிக்கடைக்காரர் வஸந்தமண்டபத்தில் (கந்தசுவாமிகோவில்) ஒரு பொதுக்கூட்டம்கூடி வந்தனோபசார வாழ்த்துப் பத்திரம் அளிப்பர். சில கனவான்களால் சங்கீதக் கச்சேரிகளும், பிரசங்கங்களும் நடத்தப்படும்.

ராவ்பகதூர், P. தியாகராயச் செட்டியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க தயவுடன் இசைந்திருக்கிறார்கள்.

அன்பின்மிக்க தங்கள் வருகையைக் கோரும்,

தங்கள் விதேயன்,

T. M. தெய்வசிகாமணி ஆச்சாரி,

செக்ரடரி.

1917

புதிய புஸ்தகம் தயாராயிற்று

"வாழ்வின் மேன்மை"

கிடைத்தற்கரிதான மானிடதேகத்தைப் போற்றி நீடித்தகாலம் சுகமாக வாழ்வதற்கு அனுகூலமான அநேக விஷயங்களை எளிதில் தெரிந்துகொள்ளும் வண்ணம் எழுதி வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டியது அவசியம். யுத்தகாலம் காகிதப் பஞ்சம் சொற்பப் பிரதிகள்தான் கைவசம். முந்துங்கள், உங்கள் விலாசத்தை எழுதியனுப்புங்கள், இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

175, பிராட்வே, மதராஸ்.

இரத்னபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான புது நாவல்: 2 பாகங்கள்.

இதில் மிக்கஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளது. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருட்டாந்தப் பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப் பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதற்பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூற வேண்டுவதின்றும். இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன என்றுமட்டும் கூறுகின்றோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. டமிள் கிரௌன் 1-க்கு 16 கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது. 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது.

விலை 2 பாகங்களும்	ரூ. 3	4	0
2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்களுக்கு மட்டும்)	ரூ. 1	12	0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக் கடைசிவரையில் இரண்டு பாகமும் ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்தபோதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை. சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத்தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷசந்தா விகிதம்.

இந்தியா பர்மா ஸிலோனுக்கு ரூ. 1—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.

ஆனந்தபோதினி மாதிரிகாப்பிக்குக் கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6. வெங்கிடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

வஜ்ரதேகாநந்த லேகியம்.

பத்தியமே இல்லை! பத்தியமே இல்லை!!

உலகத்தில் தேகபலத்தையும் நோயற்ற வாழ்வையும் விரும்புவோர்கள், இந்த வஜ்ரதேகாநந்த லேகியத்தை சிறுவர்முதல் விருத்தாப்பியர் வரையில் கொட்டைப்பாக்களவு காலை மாலை உண்டு வந்தால் மலச்சிக்கலை நீக்கி, நாபி வெட்டையைத் தணித்து, இரத்தத்தைச் சுத்திசெய்து, கவனசக்தியைக் கொடுத்து, தேகபுஷ்டியையும் தாது புஷ்டியையுந் தந்து, நரம்புகளுக்கு வலிவை யீந்து, ஆண்சிங்கத்துக் கொப்பான பலத்தைக் கொடுத்து, தேகத்தை வஜ்ஜிரஸ்தம்பம்போலாக்குவதுந் தவிர, சகலமான வியாதியையுங் கண்டிக்கும். இது உண்பதற்கு மிகுந்த ருசிகரமுடையது. இதில் கஞ்சா, அபினிமுதலிய கெட்ட வஸ்துக்கள் சேர்க்கப்படவில்லை. இதில் அதிகவிலையுயர்ந்த சரக்குகளும், சாஸ்திர முறைப்படி புடந்தீர்ந்த அயம், காந்தம், தங்கம், வெள்ளி, கல்னர், முதலிய சிந்தூர பஸ்பங்களும் சேர்த்து, குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறோம். இதை 10-நாள் வரை டைரக்ஷனில் சொல்லியபடி கிரமமாக உண்டுவந்தால் இதன் பெருமையையும், இதைச் செய்தவரின் கீர்த்தியையும் நீங்களே நன்குணர்ந்து, ஆரோக்கியத்தையும் ஆநந்தத்தையும் அடைந்து வேறு லேகியத்தை வாங்கி உண்பதற்கு மனமே வராது. இந்த லேகியத்தைச் சிறந்த ஆயுள்வேத பண்டிதர்களெல்லாம் பரிசோதித்து அங்கீகாரம் செய்திருக்கிறார்கள் இதை ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கலாம்.

டப்பி 1-க்கு விலை ரூ. 1—8—0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

அம்பிகாசாலை,
நெ. 2/25, வேதகிரி மேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இன்டியன் டைப் பவுன்டரி.

ஓ. துரைசாமி ஆச்சாரி, அண்டு சன்ஸ்.

நெ-7 சூளை ஹைரோட், மதராஸ்,

நாளுவித அச்செழுத்துகள் தற்கால வேலைத்திறத்தின் நாகரீகத்திற்கு பாங்காகும்படி

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வார்த்து சப்ளை செய்கிறோம்.

அச்சாபீசுக்கு வேண்டிய மற்றும்

மரக்கோல வகையராக்கள், பித்தளை கம்போஸிங் ஸ்டிக், மவுல்ட், மாட்ரைஸ், பன்க்ஷ் முதலான சகல சாமான்களும் எங்கள் வசம்

லகுவான விலைக்கு கிடைக்கும்,

யாவும் நல்ல வேலைப்பாட்டுடன் தயாரிக்கப்படுகின்றன.

இ த ன் றி யு ம்

மதராஸில் அகப்படக்கூடிய சர்வ "ஸெகன்ட் ஹான்ட்" ப்ரின்டிங் மெஷின்களுக்கும் நாங்கள் கமிஷன் ஏஜண்டு.

எங்கள் புதிய டைப் ஸ்பெஸிமன் ஜாப்தாவுக்கு எழுதவும்.

பல கண்காட்சிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய், ஆயூர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயூர்வேத ஔஷதங்கள்.

22 **காப்பானுக்கும் சொரி சிரங்குக்கும் மருந்து:**—இம்மருந்தை டைரெக்ஷனில் சொல்லியபடி மேலுக்குமட்டும் உபயோகித்து வந்தால் வெகு சீக்கிரத்தில் எவ்வித நமச்சல்களும், சொரி சிரங்கு, வாட்டுச் சொரி, அநேக குழந்தைகளுக்கு தேகமெங்கும் அல்லது சில பாகங்களில் கண்டு அதிக நமச்சலையும், தொந்திரவையும் தருகின்ற எவ்வித காப்பான்களையும், வெகு சீக்கிரத்தில் ஆற்றிவிடும். விலை சீசா 1-க்கு அணா 8. இந்தியாவிலும் பர்மாவிலும் அனுப்ப வி. பி. செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

23. **கேசஸுவாசனி:**—உசிதமான வாசனை சாமான்கள் சேர்த்து செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும் கண்கள் குளிரும், தலைநோய் போகும் மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம் சீசா 1-க்கு ரூபா. 1. வி. பி செலவு 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. **இக்ஷாமிருதம்:**—தாவரவர்க்கத்தைச் சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூரணம், காபி, தேயிலைக்குப் பதிலாக உபயோகப் படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது காபி தேயிலைக்குள்ள அர்த்தனங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அரைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில், எல்லோரும் உபயோகிக்கலாம் சுரம் ஜன்னி, சர்ப்பம், பிரசவம், காலரு முதலிய காலங்களில் ஷை சூர்ணத்தின் கஷாயத்தை பாலுடன் அல்லது பாலை சேர்க்காமல், சமயத்திற்கு தக்கபடி உபயோகிக்க, ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவதுமன்னியில், நோய், வராமல் காக்கும். பித்தவாயு, காசம், க்ஷயம், அஜீர்ணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளை போக்கும் இரத்தத்தை சுத்திசெய்து, தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும் அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மதுமூத்திரம், அதிமூத்திர ரோகிகளுக்கும் அருமையான வஸ்து இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும் நீரின் அளவையும் குறைத்து, மூத்திரரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தை சாந்தி செய்யும். மூளையை பலப்படுத்தி, ஞாபகசக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள் உத்தியோகஸ்தர்கள், பகைக்கத்தக்க குணமுள்ள காபி, தேயிலையை விட்டு விட்டு, இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6. வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

புதிய கம்பெனி! புதிய சாக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்து இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள். 6-முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூ 5—8—0, ஷை சிறுசு 1-க்கு ரூ 4–8–0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ 6–8–0, தபால் செலவு பிரத்தியேகம்.

வெண் பட்டு வேஷ்டிகள்.

முழம்	அகலம்.	விலை ரூபா.
4	2	4-8-0 6-11
5	$2\frac{1}{2}$	6-முதல் 8-வரையில்
5	3	7 ,, 9 ,,
6	$2\frac{1}{2}$	8 ,, 9 ,,
6	3	9 ,, 12 ,,
7	3	10 ,, 13 ,,
8	3	12 ,, 15 ,,
9	3	14 ,, 16 ,,
10	3	15 ,, 18 ,,

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு		...	75	0	0
,, 2 ,,	...	...	50	0	0
,, 3 ,,	...	...	40	0	0
,, 4 ,,	...	...	35	0	0
,, 5 ,,	...	...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம், காண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி காசி,

தாராநகர் தெரு, காசி.

Managar,

SILK PITAMBER & Co ,

Daranagar Street,

Benarse, City.

உ

சுபமஸ்து.

"விஸ்வகர்ம குலோபகாரி" என வழங்கிவந்த

தொழில்.

மலர்-4. { பிங்களஸு வைகாசிமீ 1917ஸு மேமீ } இதழ்-4.

பத்திராதிபர் குறிப்புகள்.

நமது பத்திரிகை தேசநன்மை ஒன்றையே கருதி நடத்தப்படுகிறது. இதனுல் நாம் நஷ்டத்தையும் கஷ்டத்தையுமே அடைந்து வருகிறோமாயினும் எடுத்த காரியத்தை இடையில் விடுத்தலாகாதென்னும் ஒரே பிடிவாதத்துடன் இதனை நடத்திவருகின்றோம். இதனைத் தமிழ்நாட்டார் கவனித்து நமது பத்திரிகை அபிவிருத்தி யடையுமாறு பல வழிகளிலும் ஆதரிப்பார்களென்று பிரார்த்திக்கிறோம்.

***

நமது பத்திரிகையின்பெயரைக்கொண்டு சிலர் அது கைத்தொழிலைப் பற்றிமட்டும் பேசுமென்ற கருதக்கூடும். தொழில்என்ற பகுதியில் கைத்தொழில் மட்டுமல்ல, உலகத்திலுள்ள ஸகல தொழில்களும் அடங்கும் 'கலை' என்ற வடமொழிக்கு நேரான தொழில் என்னும் தென்மொழியில் அறுபத்துநான்கு கலைகளும் அடங்கும். எனவே விவசாயமும், வியாபாரமும், சமுத்திரத்திலே கப்பலோட்டலும், ஆகாயத்திலே விமானம் செலுத்தலும், சம்மட்டியடிப்போன் தொழிலும், கொல்லத்துக்காரன் தொழிலும், சாஸ்திரவிசாரணை செய்வோன் தொழிலும், சங்கீதவித்வான் தொழிலும், பார்ப்பார்து வேதமோதலும், பாதநாட்டியக்காரனது ஆட்டபாட்டங்களும், இன்னும் இவைபோன்ற எண்ணிறந்த தொழில் (கலை) களும் தொழில் என்ற பகுதியி லடங்கியதே. சிற்பசாஸ்திரங்களில் சொல்லிய பலவிதத் தொழில்களான கிராமப்ரதிஷ்டை, ஆலயப்ரதிஷ்டை, மாடமாளிகை கூடகோபுர ப்ரதிஷ்டை முதலியனவும் தொழில்களேயாம். சேனாதிபதிகள் சேனை நடத்தலும், தேசாதிபதிகள் (அரசர்கள்) ராஜாங்கம் புரிதலும் தொழில்களேயாகும். இத்தகைய பல தொழில்களையும், அத்தொழில்களை நடத்தக்கூடிய வழிகளையும், அவற்றின் யுக்தா யுக்தங்களையும் பற்றி இப்பத்திரிகையில் வியாசங்கள் எழுதப்படும்.

***

தொழில் முயற்சிகள்.

சென்ற ஏப்ரல்மீ 25௳ மாலை ஐந்து மணிக்குப் பச்சையப்பன்காலேஜில்ஸ்ரீமத் கருணானந்தசுவாமிகள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சாதுசங்க மகாசபையாரால் ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்காலத்தில் ஜப்பானுக்குப் போய் வந்த பிரம்மஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரியார் அவர்கள் ஜப்பான்தேசத்திலிருந்து தான் கொண்டுவந்திருந்த பட்டு, பருத்தி, கம்பிளி முதலியவைகளால் நெய்யப்பட்ட வஸ்திரங்களின் பலவிதமான தினுசுகளைக் காண்பித்ததுடன் கைத்தொழில்கள் சம்பந்தமான பல விஷயங்களையும் அவற்றின் விருத்திக்கு கவர்ன்மெண்டார் செய்து வந்த பல நன்முயற்சிகளைப்பற்றியும் சங்கிரகமாக ஒரு வியாசம் எழுதி வாசித்தார். பின்னர் சபாநாயகராக வீற்றிருந்த (டைரக்டர் ஆப் இண்டஸ்டிரீஸ்) கைத்தொழில் இலாகாத் தலைவர் மிஸ்டர் இன்னெஸ்துரை அவர்கள் பிரசங்கியார் வாசித்த விஷயத்தில் சில கேள்விகள் கேட்டார். அதற்குப் பிரசங்கியார் தக்க சமாதானங்கள் சொன்னபிறகு சபாநாயகர் ஜப்பான்தேசத்திற்கும் சென்னை இராஜதானிக்குமுள்ள தாராதம்மியங்களைச் சொன்னார். பிறகு ஸ்ரீமத் கருணானந்த சுவாமிகள் அவர்கள் பிரசங்கியாருக்கு ஒரு தங்கமெடல் பரிசளித்தார். சபாநாயகர் ஸ்ரீமத் சுவாமிகள் முதலானவர்களுக்கு வந்தனமளிக்கப்பட்டுச் சபை கலைந்தது.

நம்தேசத்தில் கைத்தொழில் விருத்தியடைவதெப்படி.

ஜப்பான் தேசத்தில் ஐம்பது வருஷங்களுக்குமுன் நெசவுத்தொழில் முதலாகிய பல தொழில்களும் ரொம்பவும்நேர்த்தியான நிலைமையில் இல்லாதிருந்தபடியால் அப்பொழுது அத்தேசத்தை அரசாண்டு கொண்டிருந்த சக்ரவர்த்தியானவர் கல்வியில் வல்லவர்களாயிருந்த சிலரை இங்கிலாந்து, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குஅனுப்பி பலதொழில்களின் நுட்பங்களையும் அதற்குரிய உயர்தரக் கல்வி வகைகளையும் சரியாய்க்கற்றுக்கொண்டு வரும்படியாய் அனுப்பி அவர்கள் திரும்பி வந்தவுடன் ஜப்பான் தேசத்தில் அநேக பட்டணங்களில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தித் தந்தேசத்து ஜனங்கள் யாவருக்கும் ஷை தொழிற்களைக் கற்றுக்கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்தபடியால் தற்காலத்தில் ஜப்பானில் அநேகர் ஷை தொழில்களில் வல்லவர்களாகி ஒவ்வொரு வீடுகளிலும் பலதொழில்கள் புரிந்து அற்புதமான வஸ்திரங்கள் நெய்தும் சாயம் போட்டும் வருகிறார்கள். தற்காலத்தில் அத்தேசத்து ஜனங்கள் பலர் ஒன்றுகூடிச் சங்கங்கள் ஏற்படுத்தி கவர்ன்மெண்டாரின் உதவியை எதிர்பாராமல் தங்களுக்குச் சொந்தமாக அநேகம் தொழிற்சாலைகள் ஏற்படுத்திப்பலவிதமானபட்டாடைகளும் பஞ்சுநூற்களினால் நெய்யப்பட்ட வஸ்திரங்களும் கம்பளி சால்வைகள் முதலிய பல தொழில்களும் செய்து தங்களுடையசொந்தத்தேசத்தில் விலை நயமாய் விற்பதோடு

கூட இந்தியா முதலிய அந்நியதேசங்களுக்கும் அனுப்பி அதிக விலைக்குவிற்று மிகுந்த லாபமடைந்து வருகிறார்கள்.

ஜப்பான் தேசத்தில் ஷை தொழில்கள் அதிசீக்கிரத்தில் விருத்தியானதற்குக் காரணமென்னவென்றால் அவர்களிடத்தில் கல்வி, ஒற்றுமை, விடாமுயற்சி, மனந்தளராமை, வைராக்கியம் ஒருவரையொருவர் நம்புதல், தேசாபிமானம் முதலான நற்குணங்கள் இருப்பதேயாம். இதோடு கவர்ன்மெண்டாரும் தகுந்த சமயத்தில் தகுந்த உதவிசெய்து வருகிறார்கள். ஆனால் நம்மிந்தியா தேசத்தில் கல்வி நூற்றுக்குப் பத்துபேருக்குக்கூட கிடையாது. ஒற்றுமையோவென்றால் ஒருவர் போகிற வழி இன்னொருவர் போகிறது கிடையாது. ஒவ்வொருவரும் தமக்கே பேரும் புகழும் கிடைக்க வேண்டுமென்று பாடுபடுகிறார்களே யொழிய யெல்லாரும் ஒன்றுசேர்ந்து ஜாதியபிமானம், தேசாபிமானமுடையவராய்ப் பொதுவாக நம்தேசம் கைத்தொழில் முதலியவைகளில் விருத்தியடையவேண்டுமென்ற நன்னோக்கமுடையவராய் ஒத்து உழைக்கிறதில்லை. எவ்வித இடையூறுகள் வந்தாலும் மனந்தளர்ச்சியின்றி ஊக்கமும் விடாமுயற்சியோடும் எவ்விதத்திலாவது செய்து முடிக்க வேண்டுமென்கிற வைராக்கியமுடையவராய் எடுத்த காரியத்தைச் செய்துமுடிப்பதில்லை. ஆரம்பசூரத்தனத்தோடு முதன்முதலில் இப்படிச் செய்யவேண்டும் அப்படிச்செய்ய வேண்டுமென்று பெரிய பெரிய ஏற்பாடுகளெல்லாம் செய்து பின்னர் ஒவ்வொருவராய் மூட்டையிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய்கள் மூலைகொன்றாய்ச் சிதறிப்போவதுபோல இவர்கள் ஒற்றுமையின்றிப் பிரிந்துபோகிறார்கள். இதனால் எடுத்தகாரியம் நிறைவேறுவதில்லை. "கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம், காமுற்ற பெண்ணுக்கணிகலம் நாணுடைமை, நண்ணும் மறுமைக்கணிகலம் கல்வியிம் மூன்றும், குறியுடையார்க் கண்ணேயுள." "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக." என்னும் ஆன்றோர் வாக்கியப்பிரகாரம் இம்மையிலும் மறுமையிலும் நாம் சுகமடைவதற்குச் சிறந்த காரணமாயிருப்பது கல்வியேயாம். இப்படிப்பட்ட கல்வி நம்மிந்தியா தேசத்தில் ஜாதி மத வித்தியாசமின்றி யாவரும்வாசித்துத் தேர்ச்சியடையும்படித் தக்க ஏற்பாடுகள் நாம் சீக்கிரத்தில் செய்யவேண்டும். ஒவ்வொரு காரியத்திற்கும் கவர்ன்மெண்டாரையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் எந்தக் காரியமும் நிறைவேறாது. நம்மாற் கூடியவரைக்கும் பாடுபட்டு நம்தேசத்து ஜனங்கள் விருத்தியடைவதற்கான ஏற்பாடுகள் நாமே செய்யவேண்டும். நாம் எதுவரைக்கும் பிறர் உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோமோ அதுவரைக்கும் நாமும் நம்தேசத்து ஜனங்களும் விருத்தியடைய முடியாது.

ஒரு வயலில் ஒரு வானம்பாடிக் குருவி கூடுகட்டி முட்டையிட்டுக்குஞ்சுகள் பொரித்து அவைகள் பறக்கக்கூடிய நிலைமையில் இருக்கும்போது வயலுக்குச் சொந்தக்காரனும் அவன் குமாரனும் பயிரை வந்துபார்த்து நாளையதினம் நமது அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களை அழைத்துக் கொண்டுவந்து பயிரை அறுவடை செய்துபோடலாமென்று பேசிக்கொண்டதைக் குஞ்சுகள் தாய்க்குத் தெரிவிக்க அவர்கள்

எதுவரைக்கும் அன்னியருடைய உதவியைக் கோரியிருக்கிறார்களோ அதுவரைக்கும் நாம் வேறு இடம் தேடிக்கொண்டு போக அவசியமில்லை, பயப்படாதேயுங்கள் இன்றையதினம் அவர்கள் இவ்விடம் வந்து என்ன பேசிக்கொள்ளுகிறார்களோ அதை எனக்குத் தெரிவியுங்கள் என்று சொல்லிவிட்டு தாய்ப்பறவை இரைதேடப் போனதாகவும் பின்னர் வயலுக்குச் சொந்தக்காரனும் அவன் குமாரனும் வந்து நாம் பிறருடைய உதவியை நாடுவதில் பயனில்லை நாளையதினம் நாமேவந்து நம்மாற் கூடியமட்டும் கொஞ்சங் கொஞ்சமாக நம்மாற் கூடியமட்டும் கொஞ்சங்கொஞ்சமாக அறுவடை செய்யலாமென்று பேசிக்கொண்டதைக் கேட்டிருந்த குஞ்சுகள் தாய்ப்பட்சிக்குத் தெரிவிக்க அது அவர்கள் தாங்களே அறுக்கத் தீர்மானித்துவிட்டபடியால் இனி தாமதிக்கமாட்டார்கள். ஆகையால் நாம் வேறிடம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தன் குஞ்சுகளை வேறோரிடத்துக்குக்கொண்டுபோய்ச் சேர்த்ததாக ஒரு சிறுகதை நாம் சிறுவயதாயிருந்தபோது வாசித்திருக்கிறோமல்லவா? அதே பிரகாரம் நாம் அன்னியருடைய உதவியைநாடிக்கொண்டிருக்கிறவரையில் விருத்தியடையமாட்டோம். நம் சம்பாதனையையும் நம்முடைய பெரியோர்கள் கஷ்டப்பட்டுச்சேர்த்துவைத்த ஆஸ்திகளையும் எத்தனையோ காரியங்களில் வீணாகச்செலவழிக்கிறோம். அவ்வாறுசெய்யாமல் நம்மவர்கள் விருத்தியடையக்கூடிய காரியங்களில் செலவுசெய்யவேண்டும். எப்படியென்றால் நம்முடைய சிறுவர்களும் சிறுமிகளும் கல்வி இலவசமாய்வாசிக்கக் கூடிய வித்தியாசாலைகள் பல பட்டிணங்களிலும், கிராமங்களிலும் ஏற்படுத்த வேண்டும். பகற்காலத்தில் வேலைசெய்யும் ஏழைப்பிள்ளைகள் இராக்காலத்தில் இலவசமாய் கல்வி கற்றுக்கொள்வதற்கு சாத்தியப் படும்படியான தர்ம இராப்பள்ளிக்கூடங்களை வைக்கவேண்டும். இப்பள்ளிக் கூடங்களுக்கு உபாத்தியாயர்கள் பொது நன்மைக்காகப் பாடுபடும புண்ணியசீலர்களையே நியமிக்கவேண்டும். இப்பள்ளிக் கூடங்களிலேயே சித்திரமெழுதுதலும் போதிக்கவேண்டும். இதோடு கூட ஏதாவதொரு கைத்தொழிலும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பெரிய நன்மையான காரியங்கள் செய்வதற்கு நாமெல்லாம் ஒற்றுமையுடனும், ஊக்கத்துடனும், வைராக்கியத்துடனும் உழைத்தால்தான் நல்லது. தற்காலத்தில் ஐரோப்பாவில் பல தேசங்களிலும் மெசபொட்டேமியாவிலும் நடக்கும் யுத்தம் முடிவானபிறகு இந்தியாவில் கைத்தொழில்கள் விருத்தியாவதற்கு ஏற்றதான ஏற்பாடுகள் செய்யப்படுமென்று நமது ராஜப்பிரதிநிதி லார்டு செம்ஸ் போர்டு உறுதியாய் சொல்லியிருக்கிறார். அவர் தமது சட்டசபையில் 150 கோடி ரூபாய் நன்கொடையைப் பற்றிப் பேசியகாலத்தில் இப்பெருந்தொகையை இந்தியா ஈடுசெய்துகொள்ளும்படி அதனுடைய இயற்கை வளப்பங்கள் விருத்திசெய்யப்பட்டுக் கைத்தொழில்கள் யாவும் அதிகமாய் விருத்தியாகும்படி செய்யப்படுமென்று சொன்னார். அவர் சில மாதங்களுக்கு முன்னர் பர்மா தேசத்தில் சுற்றுப் பிரயாணஞ்செய்து திரும்பிவந்தபொழுது கல்கத்தா நகரத்திலும் அதே மாதிரியாகச் சொன்னார். அவர் லாகூர் நகரத்தில் சென்ற பதின்மூன்றாந் தேதி

பின் வருமாறு சொல்லியிருக்கிறார்: "ஐரோப்பியருக்கு மாத்திரம் நன்மையை விளைவிக்கும்படியான தொழில் அபிவிருத்தியை கவர்ன்மெண்டார் உத்தேசிக்கிறார்கள் என்று சிலர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். அது பெரியதப்பு. கவர்ன்மெண்டின் உத்தேசம் அதுவானால், தொழிலபிவிருத்திக் கமிஷனை நியமித்தது பிரயோஜனமற்ற காரியம். இந்த வேலையைச் செய்ய இந்தியர்கள் தங்களைத் தயாராகச்செய்துகொண்டு முற்போக்கடைவர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்." ஆகையால் இந்தியாவின் தொழில் அபிவிருத்தியாவதற்கு நம்மிந்தியர்களையும் கவர்ன்மெண்டார் நம்பியிருக்கிறார்களென்பது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. கவர்ன்மெண்டார் பிரியப்பட்டால் எப்பேர்க்கொத்த காரியமானாலும் செய்து முடிப்பார்கள். எவ்வகையான தொழில்கள் செய்வதற்கும் மூலப்பொருள்கள் இந்தியாவில் ஏராளமாயிருக்கின்றன. தொழில்செய்யும் திறமையுடையவர்கள் நம்மவர்களில் அனேகர் இருக்கிறார்கள். பணமும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார் முதலிய பிரமுகர்களிடத்தில் ஏராளமாயிருக்கிறது. ஆகையால் இது தான் தக்க சமயம். நம்மவர்கள் யாவரும் ஒவ்வொரு பிரதான பட்டணத்திலும் கிராமங்களிலும் பல சபைகள் ஏற்படுத்தி மூலதிரவியத்தைச்சேர்த்து விடாமுயற்சியுடன் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி நம் தேசத்துக் கைத்தொழில்களை விருத்திசெய்யவேண்டும். ஜப்பான் தேசத்தில் ஒவ்வொருவீடும் ஒரு சிறு தொழிற்சாலையாயிருப்பது போல நாமும் நந்தேசத்தில் ஒவ்வொரு வீட்டிலும் சிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தி கைத்தொழில்களை விருத்திசெய்யவேண்டும். சீனாவில் ஒவ்வொருவீட்டுக்காரனும் தன் வீட்டுக்கெதிரிலுள்ள முற்றத்தைப்பெருக்கிச் சுத்திசெய்தால் பட்டணம் முழுமையும் சுத்தியாய் விடும் என்னும் பழமொழிப் பிரகாரம் நம்முடையவீடுகள் ஒவ்வொன்றிலும் ஏதாவதொரு கைத்தொழில் செய்துவந்தால் தாமும் நம்முடைய ஜனங்களும் வெகு சீக்கிரத்தில் விருத்தியடைவோம் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

கோ. குமாரசாமி ஆசாரி.

* * *

நமது கைத்தொழில்கள்.

கைத்தொழிலென்றால் கையினாலேயே யந்திர உதவியின்றிச் செய்யும் தொழிலுக்குக் கைத்தொழிலென்றசாதாரணமாய்ப் பொருள்கொள்ள வேண்டும். ஆனால் நாம் தற்போது கைத்தொழிலென்று எதைச் சொல்லுகிறோமென்றால் மனிதர்களின் தினசரி உபயோகத்திற்கு முக்கியமாய் வேண்டிய சாமான்களைச் செய்துகொள்வதே. கையினாற் கஷ்டப்பட்டுச் செய்தாவது அல்லது யந்திர உதவியினால் நமக்கு வேண்டிய பொருள்களை ஏராளமாகச் செய்து எளியவர்களும் எளிதில் அடையும்படிசெய்வதே கைத்தொழில்விருத்தி.

பூர்வத்தில் நம்முன்னோர்கள் கைத்தொழில் செய்யாமலிருக்கவில்லை, இயற்கையாகவே அவரவர்களுக்கு உபயோகமுள்ள சாமான்களைச்செய்துகொள்ள கடவுள் புத்திகொடுத்திருக்கிறார். கேவலம் பட்சிஜாதிகளும் தங்களுக்கு வேண்டிய கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன. எந்த மனிதனுக்கும் ஆவசியகமானது உண்டு, உடுத்து,

உறங்குவதே. இதற்குவேண்டிய சாதனங்களைத் தேடிக்கொள்வதே கைத்தொழிலின் கருத்து. நிலத்தைத் திருத்தி ஆகாராதிகளுக்குவேண்டிய தானியம், கிழங்கு முதலியவைகளைச்சேர்த்து, பக்ஷி, மிருகங்கள்போலல்லாது, அக்னிஉண்டாக்கி அதில் பாத்திரத்தின் வழியாக மேற்சொன்னவைகளை சமைத்து உண்பதும், பருத்தியைக்கொண்டாவது மரங்களின் பட்டை அல்லது நார்களைக் கொண்டாவது அல்லது பட்டுப்பூச்சியினின்று உண்டாகும் பட்டைக்கொண்டாவது நூல்களை நூற்று வஸ்திரங்களைச்செய்து உடுப்பதும், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட விருக்ஷங்களைக் கொண்டு வீடுகட்டிக்கொண்டு உறங்குவதும் மனிதர்களின் சுபாவமே. நம்மிந்தியர்கள் இவ்விஷயத்தில் வெகு காலமாக மிகவும் நாகரீகமுள்ளவர்களென்று யாவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நம்நாட்டில் நம்முன்னோர்களுக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் தொழில்ஞானமுள்ள சிலரால் போதுமானவளவுசெய்யப்பட்டுச் சுகமாகவே காலங்கழித்து வந்திருக்கிறார்கள். அக்காலத்தில் நம்மவர்கள் அன்னியநாடென்பது அறியாதவர்களாயிருந்தபடியாலும் அன்னியர்களும் வெகுகாலம் இந்தியாவுக்குள் பிரவேசியாதிருந்ததாலும் நம்மவர்செய்த கைத்தொழிற் சாமான்கள் போதுமானதாகவேயிருந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக அயல்நாட்டார் வியாபார விஷயமாக இந்தியாவில் பிரவேசிக்க அவர்கள் வியாபாரத்தை விருத்தி செய்யும்பொருட்டு நம்மவர்களுக்கு வேண்டிய சாமான்களையே அவர்களும் செய்து தந்திருக்கிறார்கள். பிழைக்கவேண்டி அயல்நாட்டுக்கு வந்தவர்கள் லாபத்தைக் கண்டதும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று நமக்கு வேண்டியமாதிரி சாமான்கள் பலவாறு செய்து வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். பணத்தில் ருசிகண்ட பாக்கியவான்கள் நம்மிந்தியாவில் விளையும் பருத்தி, பஞ்சு முதலானவைகளைக் குறைந்த விலைக்கு நம்மிடமிருந்து வாங்கி அவர்கள் நாட்டிற்குக் கொண்டுபோய் யந்திரங்களின் உதவியால் ஏராளமாகச்செய்து நம்நாட்டில் கையினால் கஷ்டப்பட்டுச் செய்த துணிமணிகளைக் காட்டிலும் மிக்க சகாயமான விலைக்குக் கொடுத்தார்கள். இந்தவிதமாகவே எல்லா சாமான்களும் செய்யப்பட்டு வந்திருக்கிறது. நேர்த்தியாயும், பார்வைக்குப் பளபளப்பாயும், சகாயமாயுமிருக்கும் சாமான்களை நாமெல்லோரும் வாங்கத்தலைப்பட்டோம். நம்நாட்டுக் கைத்தொழில் கடுகவே மறைந்தது. நமக்கு வாழைப்பழத்தைத் தோலுரித்து வாயில் ஊட்டுகிறார்களென பூர்ணத் திருப்தியடைந்து யாதொரு பிரயாசமின்றி நாம் சுகமாய்க் காலங்கழிக்கலாமென்று எண்ணி நம்நாட்டுக் கைத்தொழிலை முற்றும் கவனியாதிருந்துவிட்டோம். அன்னியநாட்டுச் சாமான்கள் சற்றுதடைபட நாம் கண்விழித்துப்பார்த்துச் சோம்பற்றனத்திற்கு இடங்கொடுத்து கஷ்டப்படலாயினோமெனச் சிலர் கருதலானார்.

நிற்க, கைத்தொழிலை யேவிரும்பி அதில் நாட்டமுற்ற அமெரிக்கர், ஜெர்மானியர், ஜப்பானியர்கள் மற்றெல்லோரைக் காட்டிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களென்பது யாவரும் அறிந்தவிஷயம். கைத்தொழிலை விரும்பாத எந்நாடும் விருத்தியடையமாட்டாது. நமது நாடானது நில

வளம், நீர்வளம் எல்லாம் பொருந்தியிருந்தும் க்ஷீணிப்பதற்கு காரணம் கைத்தொழிலை விருத்தி செய்யாததே. தற்காலத்தில் நம்மில் பெரும்பாலோர் தொழில்ஞானமில்லாத கல்விகளைக் கற்று சோபா, நாற்காலியிலுட்கார்ந்தபடியே இரண்டொரு வார்த்தைகள் பேசியோ, அல்லது இரண்டொரு வார்த்தைகள் பேனாக்கொண்டு எழுதியோ 10, 100, ஆயிரம் அவரவர்கள் அதிர்ஷ்டத்திற்கு தக்கவாறு பொருள் சம்பாதித்தால் போதுமென்றே எண்ணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். மேலும் கைத்தொழிலென்பது ஒரு வகுப்பினர்கட்கு மாத்திரம் உரியதென்றும் அத்தொழிலைச் செய்பவர் மேலேசொன்னவர்களைக் காட்டிலும் புத்தியிலும் நாகரீகத்திலும் கீழ்ப்பட்டவரென்று எண்ணப்படுவதாலும் கீழ்வரிசையில் தோன்றும் ஒவ்வொருவரும் ஒரு ஆபீஸில் ரூபாய் ஐந்துக்கு ஒரு சேவகத்தொழில் செய்தாவது வயிறு வளர்க்கத் தீர்மானித்து அதேவிதமாக நடந்துவருகிறார்கள். தனக்கென்றுபிரயாசைப்பட்டுத் தொழில்செய்து ஜீவிப்பது ஒருவனிடத்தில் தொண்டூழியம் செய்து ஜீவிப்பதைக் காட்டிலும் கேவலமாவென்று வாசிப்போர்கள் சற்று கவனிக்கவேண்டும்!

எவன் ஒருவன் தொழிலை அபிவிருத்தி செய்கின்றானோ அவன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் ஜீவனோபாயம் தேடிக்கொள்வதுமன்னியில் அவன் பிறந்த தேசத்திற்கும் ஜனங்களுக்கும் பரோபகாரம் செய்யக்கூடியவனாகிறான். கைத்தொழிலைச்செய்வதால் தேகப்பயிற்சியும், மனோற்சாகமும், புத்திநுட்பமும் உண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை. ஆதியில் திருவள்ளுவர்போன்ற ஞானிகளும்கூட வஸ்திரம்நெய்து அதைவிற்று ஜீவனம்செய்து வந்ததாக வாசிக்கிறோம். மேல்நாட்டைப்போல் ஆகாயக்கப்பல்களும், விமானங்களும் நாம் செய்யவேண்டுமென்பது நமது கோரிக்கையன்று. சாதாரண உபயோகத்திலிருக்கிற சாமான்களை நாமே இங்குசெய்து குறைந்த விலைக்குக் கிடைக்கும்படியாய்ச் செய்யவேண்டியதே நமது எண்ணமாயிருக்கவேண்டும். நெருப்புக்குச்சி நமக்கு எவ்வளவு இன்றியமையாததாக இருக்கிறது. அன்னிய நாட்டிலிருந்து தற்போது நெருப்புக்குச்சிகள் இறக்குமதி செய்யாவிட்டால் நாம் அடுப்பு மூட்டிச் சமைத்து சாப்பிடக்கூடாமலும் தீபம் இல்லாமல் பெரிய இருளிலேயும் இருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பாடுபடாமல் அன்னியரைச் சார்ந்திருப்பதால் நமக்கு என்றும் கஷ்டமே. அன்னியநாட்டு நாகரீகத்தையும் அவர்கள் நடை யுடை பாவனைகளையும் நாம் நடித்துவந்ததால் அதற்காக வேண்டிய சாமான்களும் தற்போது அத்யாவசியமாய்ப் போய்விட்டது. காகிதம் செய்யும் முறையும், பேனா, பென்சல்செய்யும் வழிகளும், கண்ணாடிச் சாமான்கள் செய்யும் மார்க்கமும் நமக்கு தற்போது அவசியமாகத் தோன்றுகிறது.

இதுபோன்ற இன்னும் சில கைத்தொழில்களும் நம்கவனத்திற் வைக்கற்பாலதே. தற்காலத்தில் எந்த மருந்துக்கடைகளிலும் அமெரிக்கர், ஜெர்மானியர்செய்த (Patent Medicines) மருந்துகளைத்தவிர இந்தியர்கள் செய்த மருந்துகளைக் காண்கிலோம். அன்னியநாட்டு மருந்துகள் இந்தியாவிற்கு வருவதற்குமுன் இந்தியாவில் நோய் என்பது கிடையாதா? பரிஹாரம் அல்லது

ளடதம் என்பதை நம்முன்னோர்கள் அறியாமலிருந்தார்களா? காட்லிவர் ஆயில், விரோல்முதலிய மீன் எண்ணெய்கள் நானு நம் நாட்டு சீதோஷ்ணத்திற்கென்று சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது? இந்தியாவில் அவ்வித குணம் தரத்தக்க மூலிகைகளாவது அல்லது மீன்களாவது இல்லாமற்போயிற்று?

உண்மையாகவே, வெளிநாட்டிலிருந்து வரும் எவ்விதமருந்துகளும், திரவரூபமாகவும், உப்புரூபமாகவும் சாரங்களாகவும் (Essence or Extract) வடிகட்டப்பட்டு நேர்த்தியாய்க் குப்பிகளி லடைக்கப்பட்டு இருக்கிறதென்பதை நாம் ஒருக்காலும் ஆட்சேபிக்க முடியாது நாமும்நமது வைத்திய நிபுணர்களைக்கொண்டு ஏன் அங்ஙனம் செய்யப் பிரயத்தனப்படலாகாது?

இவ்வாறு நமக்கு தினப்படி உபயோகத்திலிருக்கிற சாமான்களை நாமேசெய்து கொள்ள யோக்யதையுடையவர்களாக வேண்டும். ஐரோப்பிய துணிமணிகள் இந்தியாவில் குறைந்த விலைக்குக்கிடைப்பதால் நெசவுத் தொழிலென்பதே இந்தியாவில் சாலவும் குன்றிப்போய்விட்டது. நெடுநாள் நெசவுத்தொழில் செய்துவந்த பட்டு நூற்காரர்கள் (சௌராஷ்டிரர்கள்) கைக்கோளர், சேடியர் முதலியவர்கள் வீதிகளில் வேலைகிடைக்காமல் பிச்சையெடுக்கப் புறப்பட்டிருக்கிறதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம். சாயமிடும் தொழிலும் இவ்வாறே போய்விட்டது. முக்கியமான கைத்தொழிலே இவ்விதமிருக்க மற்றத் தொழிலைப்பற்றி கேட்பானேன்? நாம் வரவரச் செல்வத்தையும் அந்தஸ்தையும்நம்பி கைத்தொழிலில் சூன்யமானோம்.

ப்ரான்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஜப்பானியர்கள், டச்சுக்காரர்கள் இவர்களெல்லோரும் ஒருக்கணமேனும் வீண்காலம் போக்கார்கள். நம்மைப்போல் டம்பத்திற்கும் வீண்கௌரவத்திற்கும் பிரியப்பட்டவர்களல்ல. எல்லோருமே உயர்வு தாழ்வின்றி தொழில் செய்யசம்மதமுள்ளவர்கள். ஒற்றுமையிருந்தாலல்லது எந்தநாடும் முன்னேற்றமடைய முடியாது.

இந்தியாவின் கைத்தொழில் விருத்திக்குப் பங்கம் உண்டாக்கினவர்கள் இந்தியக் கம்மியர்களென்றே ஒருவாறு சொல்ல நான் முன்வருகின்றேன். உலகில்பிரதமத் தொழிலையுடைய மநுவாச்சாரியார் (ஜனங்களுக்கு ஆசாரியர் அல்லது குரு) காலநாகரீகத்திற்குத் தக்கவாறு தங்கள் புத்திகளைச் செலுத்திப் பற்பல தொழிலுக்கு சாதனமாக யந்திரங்களைச் செய்து கொடுத்திருக்கும் பட்சத்தில் நாம் இப்போது இருக்கும் நிலைமையை அடைந்திருக்கமாட்டோம்.

நீர் இறைக்கும் சூஸ்திரங்கள், வெட்டு அரைப்பு யந்திரங்கள், மற்றவியவசாயக் கருவிகள் (Agricultural implements) நெசவுத் தொழிலுக்குரிய இயந்திரங்கள் (Weaving & Spinning Machines) மருந்து இறக்கும்சாமான்கள் (Distillary Apparatus) முதலிய மெஷீன்களை இந்தியாவில் பெரும்பாலும் செய்யவேண்டியது அவசியம். இரும்புவேலை இந்தியாவில் ஏராளமாக நடைபெற்றாலொழிய கைத்தொழிலென்பதை நாம் கனவிலும் நினைக்கவேண்டுவதில்லை. இந்தியாவில் விற்பனையாக்கப்படும் ஆணிகள் ஒன்றே நமக்கு எவ்வளவோ லக்ஷக்கணக்கான ரூபாயை ஆதாயமாக்கும். கொல்லவேலைதான் செல்லவேலை, இதை அலட்சியம் செய்பவர்கள் ஒருக்காலும் விருத்தியடையாரென்பது சத்தியம். ஆகையால் கைத்தொழில் அபிவிருத்திக்குரிய இரும்புவேலையை ஏராளமாகச் செய்ய தனவான்களும் ஜமீன்தார்களும் மற்ற லட்சுமிகடாக்ஷம்பெற்ற செட்டி நாட்டாரும் இது விஷயமாகப் பெருநிதியை ஏற்படுத்தி தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க விரைவில் முன்வாருங்கள். தொழில்ஞானமும் செல்வப்பெருக்கமுமில்லாத என்போன்றவர் வாய்ப்பேச்சினால் ஒன்றுமே சித்திக்காது. வெறுங்கை ஒருநாளும் முழம்போடாது.

மேலும் உள்நாட்டில்செய்யப்படும் வஸ்துக்களையே நாம் ஒவ்வொருவரும் வாங்கி உபயோகிக்க வேண்டுமென்ற வைராக்கியமில்லாவிடில் நாம் செய்யவற்படும் எவ்வித கைத்தொழிலும் பயன்படவேமாட்டாது.

த. ப. வே. ஆச்சாரியார்.
திருச்சி.

***

கற்பூரம்.

கற்பூரமரம் சீனாவுக்குத் தெற்கே பசிபிக்மகா சமுத்திரத்திலுள்ள பர்மோசாத் தீவில் மலைப்பிராந்தியங்களில் வளர்கிறது. இந்தத்தீவு நாகரீகமற்ற ஜாதியார் வசிக்கிற இடம். அவர்கள் கொலைத்தொழிலை உடையவர்கள். அந்தத்தீவுக்கு வரிசைக்கிரமமாக எத்தனைபேர்படையெடுத்துச்சென்றும் அத்தீவின் குடிகளை அடக்கமுடியவில்லை. இந்த அநாகரீக ஜாதியார் இந்த மரங்களின் உபயோகத்தை நன்றாய் உணர்ந்திருக்கிறார்கள். அக்காடுகளை யாரடையப் பிரயத்தினப்பட்டாலும் அப்பிரயத்தினங்களையெல்லாம் வியர்த்தமாக்குகிறார்கள். சென்ற நூற்றாண்டுகளில் ஜப்பானியர் சீனதேசத்திற்கு எதிராக நடத்திய அநேகம் படையெடுப்புக்களில் மெல்லமெல்லப் பிரவேசிக்கும் வழியை ஜாக்கிரதையாய் யோசித்தறிந்து அதை நிறைவேற்றுகிறார்கள். இதுவரை மனிதர் பிரவேசியாத காடுகளின் மூலமாய் ஆறு அடி அகலமுள்ள பாதைகளை உண்டாக்குகிறார்கள். நூற்றிருபது கஜத்திற்கு ஒரு இடத்தில் ஒரு காவலாளியின் வீடு நிற்கிறது. ஒவ்வொரு நாலாவது அல்லது ஐந்தாவது காவலாளியின் வீடு ஓர் சிறு கோட்டையிலிருக்கிறது. அக்கோட்டையைச் சுற்றிப் பள்ளம் வெட்டப்பட்டிருக்கிறது கம்பிவேலியால் அக்கோட்டை காக்கப்பட்டிருக்கிறது. டெலிபோன் சமாசாரப் போக்குவரவும் யந்திர பீரங்கிகளும் எல்லா மேல்நாட்டுப் போர்ச்சேகரங்களும் உபயோகப் படுத்தப்படுகின்றன. கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே பிரவேசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஜாக்கிரதையெல்லாம் எடுத்துக்கொண்டும் வருஷத்தில் கற்பூரத்தைச்சேகரிக்கிறவர்களில் அநேகர் இறந்துபோகிறார்கள். பர்மோசாத் தீவில் சுமார் பத்துலட்சம் கற்பூரமரங்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதில் ஒவ்வொரு வருஷமும் பத்தாயிரம் மரங்கள் வெட்டப்படுகின்றன. இம்மாதிரி செய்தால் நூறு வருஷங்களில் எல்லா மரங்களும் ஒழிந்து போகும். ஆனால் தீவு முற்றிலும் வசப்பட்டபோது ஜப்பானியர் கற்பூரச்செடிகள் எப்போதும் இருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்வார்கள். இப்போது அந்தத்தீவில் ஒருலட்சம் அநாகரீகமான ஜாதியார் இருக்கிறார்கள். அவர்களை மேற்கொள்வதற்கு இன்னும் பன்னிரண்டு வருஷம் பிடிக்குமாம்.

***

கையினால் செய்யப்பட்ட மரம்.

அமெரிக்காவில் வைக்கோலினால் மரப்பலகைக்குச் சமமான பலகைகளை உண்டாக்குகிறார்கள். 12 அடி முதல் எத்தனை அடி வேண்டுமோ அவ்வளவு நீளமாகவும் 32 அங்குல அளவு அகலமுள்ளதாகவும் செய்கிறார்களாம். இந்தமரம் அநேக சௌகர்யங்களை உடையதாயிருக்கிறது. சாதாரண மரத்தைக்காட்டிலும் நன்றாய் ஆணியைப் பிடித்துக்கொள்ளுகிறது. முடிச்சுகள் கிடையாது. சொத்தை கிடையாது. போரை கிடையாது. அது அதிகமாய்த் தேய்த்து மெருகிட அனுகூலமாயிருக்கிறது. அமெரிக்காவில் இந்தப்பலகை மரப்பலகைக்குச் சமானமானால் இங்கே அதிக சரசமாயிருக்கும்.

* * *

சாயச்சரக்குகள்.

ஐரோப்பாவில் நடக்கும் சண்டை பூலோகமெங்கும் சாயக்கருப்பை உண்டாக்கியிருக்கிறது. ஏனென்றால் லோகத்திற்கு வேண்டிய சாயச்சாமான்களில் 5-ல் 4 பங்கு ஜெர்மனி தேசம் உண்டாக்கிக் கொடுத்தது. அந்தச் சாமான்கள் இப்போது வருகிறதில்லை. அந்தச் சாமான் வாங்கும் தேசத்தார்கள் தாங்களே தங்களுக்குவேண்டிய சாமான்களைச் சேகரித்துக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். அத்தேசத்தார்கள் எல்லாம் எக்காரணத்தால் தாங்கள் தேசத்திற்கு அந்தச் சாமான்களைச் செய்யச் சௌகரியமில்லையோ அந்தச்சௌகரிய குறைப்பாட்டை நிறைவாக்கிக் கொள்வதற்கு வேண்டிய பிரயத்தினங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் வர்ணமானது ஒவ்வொரு இடத்திலேயும் அவசியப் பொருளாய்விட்டது. வர்ணத்தைக்கொண்டுதான் அநேக முக்கியமான தொழில்களை நடத்தவேண்டியதாயிருக்கிறது. அத்தொழில்களெல்லாம் அதிகப் பணத்தைச் சம்பாதித்துக் கொடுக்கத்தக்கவையாயிருக்கின்றன. வர்ணம் பருத்தி நூல் சாயம்போடுவதில் அதிக உபயோகமாகிறது. அதற்கு அடுத்தாற்போல் மரத்திலேயும், தோலிலேயும் சாயம்போடும் தொழில் வருகின்றது. இவைகளெல்லாம் இப்போது வர்ணக்குறைவை அடைந்திருக்கின்றன. ஆகையால் அவ்வேலைகளெல்லாம் நின்றுபோகும்போலிருக்கின்றன. அந்த வேலைகளை மேற்கொண்டொழுகும் ஷாப்புக்காரர்களும், தொழிலாளிகளும் அதிக கஷ்டத்தை அடைந்திருக்கிறார்கள். வர்ணத்தின் விலையோ நாளுக்குநாள் ஏறிக்கொண்டிருக்கிறது. கடைத்தெருவில் 10-அணவுக்கு விற்ற வர்ணப்பெட்டி இப்போது 20-ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 30-வருடகாலமாய் ஜர்மென் தேசம் எல்லா தேசங்களுக்கும் வர்ணத்தை தயாரித்துக் கொடுத்துக்கொண்டிருந்தது. வில்லியம் ஹென்ரி பர்கின் என்பவர் இங்கிலாந்தில் கோல்தார் (Coal tar dye) வர்ணத்தைக் கண்டுபிடித்தவராயிருந்தும் உலகத்தில் எல்லாச்சாஸ்திரிகளும் வர்த்தகர்களும் ஜர்மெனியின் மேன்மையை இது விஷயத்தில் குறைக்கக்கூடாமலிருக்கிறது பர்கின். ஊதா (Violet) ஊதாநிற வர்ணத்தைக் கோல்தாரிலிருந்து கண்டுபிடித்த காலம் 1856. கோல்தாரிலிருந்து வர்ணங்களை உண்டாக்கும் தொழிலை முதல்முதல் மேற்கொண்டு செய்த தேசம் பிரான்சு. இஃது 1858ஞல் நடந்தது. கோல்தார் வர்ணம் சேகரிக்கும்தொழில் முதலில் இங்கிலாந்திலிருந்தும் பிறகு பிரான்ஸிலிருந்தும் ஜர்மெனிக்குப் போயிற்று. ஜர்மெனி தேசத்தின் மேன்மை எதிலிருக்கிறதென்றால், அவ்விடத்தில் மேலான கைத்தொழில் கல்வியில் தேர்ந்த ரசாயன சாஸ்திரிகள் பலர் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் கவர்ன்மெண்டார் ஆதரணையிருந்தது. அதனால் நூதனவழியில் பொருள்களின் குணத்தை அறியும் ஆராய்ச்சிசெய்ய வல்லவர்களாயிருந்தார்கள். கோல்தாரிலிருந்து எடுக்கப்பட்ட பென்ஸீன் (Benzene) இன்னும் இதர ஹைட்ரோ கார்பன் (Hydro carbon) களிலிருந்து மத்தியதரமான சரக்குகளைக்கண்டுபிடிப்பதில் மிகுந்த ஆராய்ச்சி செய்திருக்கிறது. இதரதேசங்களுக்கு இந்தச் சௌகரியமில்லை. ஆகையினால் இப்போது மற்றதேசங்களெல்லாம் வர்ணங்களுக்கு ஜர்மெனிதேசத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. அதனால்தான் ஜர்மெனி மேன்மையை அடைந்தது. இதர தேசங்களில் உள்ளவர் கைத்தொழிற்சாலைகள் மத்தியதரமான வர்ணச்சரக்குகளை உற்பத்தி பண்ணுவதில் வல்லவையாயிருக்கவில்லை. ஜர்மெனி தேசத்தை நம்பிக்கொண்டிருக்கின்றன. ஜர்மெனியின் சிக்கனமாதிரிகள் அந்த மத்தியதரமான வர்ணச்சரக்குகளைக் கண்டுபிடித்து உற்பத்திசெய்வதில் எல்லாதேசங்களைக் காட்டிலும் மேன்மையாயிருக்கின்றன. இந்தச் சண்டைக்காலத்தில் இங்கிலாந்தும் அமெரிக்காவும் அவ்வித மத்தியதரமான வர்ண சாமான்களுக்கு ஜர்மெனியை நம்பிக்கொண்டிராதபடி தங்கள் வர்ணம் தயாரிக்கும் முயற்சிகளைப் பலப்படுத்திக்கொண்டிருக்கின்றன. சண்டைக்குப்பின் வர்ணம் தயாரிக்கும் வேலை இங்கிலாந்தில் வர்த்தக (போர்டார்) சபையார் ஜாதி ஆதாரத்தின் மேல் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் தயாளமான உதவியைக்காட்டி ஆராய்ச்சி வேலையைச் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டினால் வர்ணத்தைச் செய்கிறவர்களும் உபயோகிக்கிறவர்களும் பணசேகரத்திற்கு உதவி செய்யவேண்டியவர்களானார்கள். ஆகையால் இந்த முயற்சி சகலரும் கூடி ஒத்து உழைக்கிறதினால் பலப்படுகிறது. தமது ஜீவகாலமெல்லாம் வர்ணச்சாமான் ஆராய்ச்சியிலேயே காலத்தைக் கழித்த க்ரீன் துரை அவர்கள் பின்னும் வேண்டிய ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறார். அவர் இதுவரைக்கும் ஜர்மெனியின் மேன்மைக்கு ஆதாரமாயிருந்த வர்ணரகசியங்களைக் கண்டுபிடிக்கிறார்.

பிரான்சு தேசமும் இங்கிலாந்தைப் பின்பற்றிச் சிறிது காலத்திற்குமுன் பிரெஞ்சு ஜாதி வர்ணச்சாமான் ஸிண்டிகேட்டார் கூடினார்கள். அவர்கள் முதல் பணம்வைத்து பிரிட்டிஷ் வர்ணக்காரரோடு ஒத்து உழைக்கிறார்கள்.

அமெரிக்காவும் வர்ணத்தொழிலை விருத்தியாக்க ஆரம்பித்தது. இப்போது அமெரிக்கா ஐக்கியமாகாண கவர்ன்மெண்டார் வர்ணநிபுணர் டாக்டர் தாமஸ் எச் நாட்டன் அவர்களைக்கொண்டு புது வர்ணவழிகளை (முறைகளை) கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் முன்மாதிரிகளெல்லாம் எடுபட்டுப்போகுமென்று நம்புகிறார்கள். பெட்ரோலியத்தில் கழிந்துபோகும் சாமான்களிலிருந்து ஜெர்மனிதேசத்து வர்ணங்களோடு ஒப்பாகப் பளபளப்பிலேயும் கெ-

ட்டியிலேயும் மிருந்த வர்ணங்களை அவர் உண்டாக்கி யிருக்கிறார். நமது கண்டத்தில் வழிகாட்டியாகவுள்ள பிரதம கைத்தொழில் தேசமாகிய ஜப்பான் ஒன்றரைக் கோடி ரூபாயைக்கொண்டு வர்ணச்சாமான்களை உற்பத்தியாக்கும் கம்பெனியைத் துவக்கியது. டோக்யோ, ஓஸாகா, புகுகோகா முதலிய இடங்களில் வர்ணத்தொழிற்சாலைகள் கட்டப்பட்டன. இதுவரை மருந்தையும், வாசனைத்திரவியத்தையும், ஆவியை அல்லது காற்றையும் உண்டுபண்ணும் கம்பெனிகள் அதில் பங்குவைத்தன.

கவர்ன்மெண்டார் முதல் வர்ணத்தின் மேல் நூற்றுக்கு 8 வீதம் லாபம் கொடுப்பதாக முன்வந்தார்கள். கவர்ன்மெண்டு எழுது வேலையில் உண்டான 2400 டன் பென்சோலை (Benzole) அந்தக் கம்பெனியிடத்தில் ஒப்புவித்தது. இம்மாதிரியாக இப்போது இவ்வுலகத்திலெல்லா முக்கிய கைத்தொழில் தேசங்களிலேயும் இந்த முக்கியமான கைத்தொழிலில் சிரத்தை வைக்கக் காண்கிறோம். இந்தியாவானது வர்ணச்சரக்குகள் அதிகமாய் வேண்டிய தேசமாயிருந்தும் வர்ணத்தை உண்டாக்கும் முறைகளைக் கண்டுபிடிக்கும் வழியில் ஒரு பிரயத்தனமும் எடுத்துக் கொண்டதாகக் காணப்படவில்லை. இறக்குமதிக் குறைவால் சேகரக்குறைவு நேரிட்டதின்மேல் நாம் பூர்வத்தில் மூலிகைச் சரக்கில் உண்டாக்கும் வர்ணமுறைகளை உபயோகிக்கும் நிலைமைக்கு வந்திருக்கிறோம் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்த மூலிகை வர்ணமுறைகள் நமக்கு வேண்டிய அளவு வர்ணங்களை உண்டாக்கித்தரும் என்று நம்பிக்கையில்லை எவ்வளவு நமது முழுப் பிரயத்தனத்தை மூலிகையிலிருந்து வர்ணங்களை அடைவதில் உபயோகித்தபோதிலும் இப்போது நமக்குவேண்டிய வர்ணச் சாமான்களின் அளவில் ஒரு சிறு பகுதியையுங்கூட அடைய முடியாதென்பது நிச்சயம். மூலிகைவர்ணத்தொழிலை மறுபடியும் ஆரம்பிப்பதில் இரண்டுவருஷமாய் இப்போது செலுத்தப்பட்ட கவனமானது மூலிகை வர்ணச் சாமான்களின் உபயோகத்தைப் பற்றி ஜனங்களின் சிரத்தையை மாத்திரந்தான் உண்டாக்கியது. இறக்குமதியாகும் வர்ணக்குறைவால் நேரிட்ட கஷ்டத்தை நீக்க அது உதவி செய்ததென்று ஒருவராலும் சொல்லமுடியாது.

கோல்தார் வர்ணங்களை உபயோகிப்பதில் நெசவுக்காரர்களும் பட்டுநூல்காரர்களும் அதிக சாகசத்தை அடைந்திருக்கிறபடியால் முடிவில் ஜெர்மனி தேசத்து கோல்தார் வர்ணங்களின் சௌகரியத்தை உடையதாயிராத எந்த மூலிகை வர்ணத்தையும் சாயக்காரர்கள் உபயோகிக்கிறதில்லை. இதுவல்லாமல் இந்தச் சாயச்சாமான்களின் உற்பத்தி சென்ற 20 அல்லது 30 வருடமாய் கோல்தார் வர்ணங்கள் இறக்குமதியாவதில் எவ்வளவு விர்த்தியாயிற்றோ அவ்வளவு குறைந்துகொண்டே வந்துவிட்டது. இந்தச் சண்டைக் காலத்தில் அவுரிப் பயிருக்கு அதிக உற்சாகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதில் கூட பலனைத்தரும் விருத்தியில்லை. சண்டைக்குப்பின் கூட்டு வர்ணங்கள் இந்திய மார்க்கட்டில் அதிகமாய் வந்துவிழும் என்னும் காரணத்தின்மேல் அவுரிப் பயிர் விஷயத்தில் அதிக கவனத்தைச்செலுத்த நிலக்காரர்களும் பணக்காரர்களும் பின்வாங்குகிறார்கள். இப்போது மூலிகை வர்

ணங்கள் சேர்மான வர்த்தக வர்ணங்களுடன் போட்டிபோடுவதற்கு ஆகாதென்பது ஸ்திரமாயிற்று.

ஆகையால் சேர்மான வர்ணங்களின் உற்பத்திக்குரிய நமது தேசத்து சௌகரிய ஆதாரங்களை உபயோகிக்கச் சக்தியற்றவர்களாக இருக்கிறவரையில் நாம் நமக்கு வேண்டிய வர்ணங்களுக்கு அன்னியதேசத்துச் சேகரத்தை நம்பிக்கொண்டுதானிருக்கவேண்டும். இந்தியாவில் யந்திர நெசவுத்தொழில் அதிகமாகிக்கொண்டிருக்கிறபடியாலும் தொழில்களிலேயும் வீடுகளிலேயும் உபயோகத்திற்கு வர்ணச்சாமான்கள் அதிக நிரந்தரமாய் வேண்டியிருக்கிறபடியாலும் இந்த தேசத்து நெசவுத் தொழிலாளர்கள் சேர்மான வர்ணங்களை உண்டாக்கும் வழிகளை இந்தியாவுக்குச் சேகரித்துவைக்கும் முக்கிய விஷயத்தில் அதிக கவனத்தை செலுத்துவதும் அதற்காக இந்த தேசத்திலுள்ள ஆதாரங்களை விசாரித்து ஆராய்ந்தறிவதும் அதிக அவசியமாகிறது. இந்தியாவில் கூட்டு வர்ணச் சாமான்களை உற்பத்தியாக்கும் விஷயத்தை நிலைநிறுத்தும் சௌகரிய மார்க்கங்களை ஆலோசிப்பதற்கு முன்னேயும் நமது தேசத்தில் நமக்குள்ள விஸ்தாரமான ஆதார சௌகரியங்களை யோசிப்பதற்கு முன்னேயும் சாஸ்திர உணர்ச்சியில்லாத மனிதர்களுக்குக் கோல்தார் வர்ணமென்றால் என்னவென்று விவரிக்கவேண்டும். கோல்காஸ் (நிலக்கரி ஆவிக்காகவாவது) அல்லது கோல்கோக் (நிலக்கரி சிட்டத்திற்காகவாவது) நிலக்கரியை எரிக்கும்போது நாசவடிக்கட்டென்று சொல்லப்படுகிற வழியில் நாம் கோல்தார் என்னும் ஓர் மத்திய உற்பத்தியை அடைகிறோம்.

கோல்தாரைக் கொஞ்சங் கொஞ்சமாய் காய்ச்சித் தைலம் இறக்குவதால்எண்ணைப் பசையான அனேக சாமான்களை (பென்ஜீன் டொலூன் பினைல் நெப்தலீன் ஆன்த்ராசீன் முதலியன அடைகிறோம்.

இந்த ஹைட்ரோ கார்பன்கள் சல்பூரிக் ஆஸிட் (கந்தக) திராவகத்தோடும் நைட்ரிக் ஆஸிட் அக்னிதிராவகத்தோடும் இன்னும் இதர ரசாயனங்களோடும் சேர்த்தால் சில உப்புகள் உண்டாகின்றன. இந்த மத்தியதரமான உற்பத்திப் பொருள்களிலிருந்து கோல்தார் வர்ணங்கள் என்கிற வர்ணசேர்மானங்கள் உண்டாகின்றன. கோலிலிருந்து வர்ணங்களை உண்டாக்க நாம் மூன்று நிலைமைகளைக் கடக்கவேண்டும். அப்படித் தரங்களாவது

1. வடிகட்டல் காய்ச்சிக் குளிரச்செய்தல் முதலிய வழிகளில் கோல்தாரிலிருந்து பொருள்களை உண்டாக்கல்.

2. வர்ணங்களுக்கு முன்னுகவுள்ள மத்தியதாப் பொருள்களை கோல்தாரில் ரசாயனங்களைவிட்டு உண்டாக்கல்.

3. இம்மத்தியதரப்பொருள்களை வர்ணங்களாக்குதல்.

இப்போது கடைத்தெருவில் கோல்தார் வர்ணங்களெனச் சொல்லப்படுவனவற்றில் சல்பைட் வர்ணங்கள் அல்லது கந்தக வர்ணங்கள் என்று ரசாயன சாஸ்திரிகள் பேர்வைத்த ஓர்விதமான வர்ணங்கள் இருக்கின்றன. இந்த வகுப்பில் முதல்வர்ணம் கோல்தாரிலிருந்து உண்டாகவில்லை. ஜீவராசிகழிவோடு (Organic waste) பாலிசல்பைட் (Poly sulphide) கலப்பதால் உண்டாகிறது. இப்பரீக்ஷையின் பின்பாகத்தில் இந்த வகுப்பில் ஜீவராசிகழிவுக்கு பதிலாகக் கோல்தாரிலிருந்து உண்டாகும்

மத்தியதார பொருள்களோடு சம்பந்தப்படுவதால் அநேகம் வர்ணங்கள் உண்டாகின்றன. இந்நிகழ்வு என்னை இன்னும் வரிசையான பரீக்ஷைகளைப் பார்க்கச் செய்தது. கோல்தாரிலிருந்து உற்பத்தியாகும் மத்தியதாரப் பொருளகளில்லாமலே கருப்பு, மங்கல், மஞ்சள், புட்டி பச்சை நிறங்களை உற்பத்தி செய்ய வல்லனானேன். இவ்வர்ணங்கள் எல்லாம் கெட்டியாயும் ஆழ்ந்ததாயுமிருக்கிறது.

சிவப்பு வர்ணந்தவிர இந்தியாவிலுள்ள நெசவுயந்திரச் சாலைகள் இறக்குமதியாகும் சல்பைட் வர்ணங்களைத்தான் உபயோகப்படுத்துகின்றன. இவ் வர்ணங்களெல்லாம் கோல்தார் மத்தியதாரப் பொருள்களின் உதவியில்தான் உண்டாகின்றன. சல்பைட் வர்ணங்களைப்பற்றி மாத்திரம் கவனித்தால் கொஞ்சகாலம் வரைக்கும் கோல்தார் மத்தியதாரப் பொருள்களைப் பிரித்தெடுக்கும் சௌகர்யங்கள் நமக்கு இல்லாமல்போனாலும் சுதேசப் பொருள்களிலிருந்து உண்டாக்கும் நிலைமையிலிருக்கிறோம்.

இந்தியாவில் அதிக நிலக்கரியிருப்பதால் அதிலிருந்து நிரந்தரமாயும் அபரிமிதமாகவும் தாரும் பென்சோலும் சேகரமாகுமென்று நினைக்கப்படுகிறது. நமது காஸ்வேலைகள், அதிகக் கொஞ்சமாய்ச் செய்யப்பட்டாலும் அதிகமாய் தாரைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. கோல் வெட்டியெடுக்கும் இடங்களிலேயும் டாடா இரும்புவேலை இடத்திலேயுமுள்ள கோக் அடுப்புகள் தார் கொடுக்கக் கூடியனவாய் மெதுவாய் விருத்தியாகின்றன. ஒருடன் கோல் ஒருபவுன் வர்ணம் கொடுக்கிறது. இந்தியாவுக்கு வேண்டிய வர்ணம் அதின் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் 200 லட்சம் டன் கோலிலிருந்து உண்டாகும்.

இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் முதலிய தேசங்களெல்லாம் இந்தச் சண்டைகாலத்தில் தங்களுடைய வர்ணத்தொழிலை பலப்படுத்தப்பார்க்கின்றன. அந்த தேசங்களில் அதிகப்பணம் முதல் வைக்கிறார்கள். ஆனால் இந்தியாவோ கையைக்கட்டிகொண்டு இருக்கிறது. இந்தியன் இண்டஸ்ட்ரியல் கான்பரன்ஸார் இந்தியன் இண்டஸ்ட்ரியல் கமிஷன் துரையவர்கள் கவனத்திற்கும் இந்தியா கவர்ன்மெண்டார் கவனத்திற்கும் இந்த முக்கியமான தொழிலைக் கொண்டுவர வேண்டியது. இந்தியாவிலுள்ள பஞ்சுநூல் அதிகாரிகள் எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து இந்தச் சண்டையில் தாங்கள் எவ்வளவு கஷ்டத்திற்குள்ளானார்கள் என்பதைப்பற்றியும் இந்தியாவில் இந்த முக்கியத் தொழில் இருக்கும் சௌகரியங்களைப்பற்றியும் இது விஷயத்தில் ஆராய்ச்சிக்கு ஆதரணை காட்டவேண்டும். நிலக்கரியைச் சார்பொடியாக்கும் அடுப்பை நூதன மாதிரியில் செய்யச் சாதனங்களைத்தேடவேண்டும். அதனால் இப்போது விருதாவாய்ப் போகிற விலையுள்ள கோல்தார் உப உற்பத்தியாவதுமல்லாமல் விவசாயத்திற்கு வேண்டிய எரு உண்டாக்குவதில் அதிக உபயோகித்திருக்கும் அமோனியாவும் உண்டாகிறது.

***

சிறு வர்த்தக சமாச்சாரங்கள்.

1. மார்பிலை சுத்தப் படுத்தும்போது சாதாரண உப்பை உபயோகப்படுத்து. அதை அழுத்தமாய்ப் பூசவேண்டும். பிறகு உதிர்த்துவிட வேண்டும்.

2. தோற்பையிலிருந்து எண்ணெய்ச் சிக்கையெடுக்கச் சிறிதுமுட்டை வெள்ளையை மேலே தடவு. வெய்யிலில் உலர்த்து.

3. ரத்தினக் கம்பளியை சுத்தமாக்க உப்பைக் கரைத்துத் தெளித்துவிடு. பிறகு புருசினால் தேய். அதினுடைய சுயநிறம் மறுபடியும் உண்டாகும்.

4. பெல்ட்ஹாட் மழைத்துளியால்புள்ளி பட்டபோது நேர்த்தியான உப்புக் காகிதத்தை உபயோகி. அதின் பளபளப்பும் மிருதுவும் உண்டாகும். நரம்பின் மார்க்கமாய்த்தான் தேய்க்கவேண்டும் குறுக்காய்த் தேய்க்கக்கூடாது.

5. ஒவ்வொரு மேஜோடின் ஒண்டியையும் பத்திரப்படுத்து. அவை இரும்பைப் பிடிப்பதற்கு உபயோகமாகிறது. இரண்டு மேஜோடின் கால்களையும் பிரித்து இணைத்தால் அழுக்கையும் தும்மையும் துடைப்பதற்கு உதவும்.

6. சுத்தமான ஆம்பரினால் (சிவப்பு அரக்கு)செய்யப்பட்ட சாமான்களை வளைக்கவேண்டுமானால் உருக்கியத் தேன்மெழுகில் அவற்றை விடவேண்டும். சில நிமிஷங்கள் வரையில் அவைகள் அமிழ்த்தப்பட்டபோது வெளியே எடு. நெருப்பில் காட்டு, எவ்வளவு அளவு வேண்டுமோ அவ்வளவுக்கு வளைத்துக்கொள்.

7. புட்டியைச் சுத்தமாக்கும்போது ஓர் உருளைக்கிழங்கைப் பொடியாக அரிந்துவிடு. அவைகளைப் புட்டியில்போடு. தேயிலைக்கரண்டி உப்பு சேர். மேஜைக்கரண்டியில் இரண்டத்தனை நீர் சேர். ஒவ்வொரு மலினப் புள்ளியும் போகிறவரையில் எல்லாவற்றையும் குலுக்கு.

8. பின்வரும் விதத்தில் ஓர் நேர்த்தியான வாசனைத் திரவியம் உண்டாக்கப்படுகிறது:—லாவண்டர் எண்ணெய் பர்கோமாட் எண்ணெய், லெமன்எண்ணெய், கிச்சிலிப்பழரசம் இவைகளை ஒரு பைண்ட் ஆல்கஹாலுடன் கலந்து காரக்கினால் மூடி நன்றாய்க் குலுக்கவேண்டும்.

***

அத்திமரம்.

மிஸ்டர் .சி. ஜி, சக்கரபாணி அய்யங்கார் வெல்த் ஆப் இந்தியா என்ற சஞ்சிகைக்கு அடியில் வருமாறு எழுதுகிறார்.

அத்திப் பழத்துக்கு சம்ஸ்கிருதத்தில் உன்ஜீரம் என்றும், தெலுங்கிலும் கன்னடத்திலும் அஞ்சூர் என்றும் தமிழில் சீமை அத்தி என்றும் பெயர்.

சரித்திர வரலாறு.

இது ஆப்கானிஸ்தானத்திலும், பூர்வகாலத்தில் காந்தார தேசம் என்று சொல்லப்படும் காந்தஹாரிலும் ஏராளமாய் வளருகிறது. அது தேகத்திற்கு அவ்வளவு உஷ்ணமுமல்ல. அவ்வளவு குளிர்ச்சியுமல்ல, அது தேகத்தை சம தாதுவில் இருக்கச் செய்யும். ஆதாமும் ஏவாளும் இம் மரத்தின் இலைகளை வஸ்திரமாக தரித்து வந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இதனால் இம்மரம் அனாதிகாலமாக இருந்து வருகிறதென்பது வெளியாகிறது.

பூசாரம்.

அது வளருவதற்கு அதிக நல்ல பூசாரமும் இருக்கக்கூடாது. பூமிக்கடியில் அதிக ஈரமுமிருக்கக்கூடாது. அடைமண் தரை அல்லது நெறுக்கலான களிமண்தரைபூமியின் கீழ் மூன்றடி கற்படையான பூமியே அது வளருவதற்கு சரியான பூமியாகும். நல்ல பூசாரம் இருக்கும் பூமியில் அதை

வளரவிட்டால் அது உயரமாயும், தழைகள் அடர்ந்ததாயும் வளருமேயன்றி, பழம் தாராது. அதற்கு விடாமல் தண்ணீர்பாய்ச்சி வரவேண்டும்.

சீதோஷ்ண நிலைமை.

சமர்ண பாக்டாட்டைப் போன்ற மிதமான சீதோஷ்ணமுள்ள தேசங்களில் தான் அத்திமரம் செழித்துவளரும். மேற்கண்ட இடங்களிலிருந்து தான் சிறந்த அத்திப்பழங்கள் வருகின்றன. சென்னை ராஜதானியில் சமுத்திர மட்டத்திற்கு மேல் 1000-அல்லது 2000-அடி உயர்ந்திருக்கும். பெங்களூர், கிருஷ்ணகிரி, ஹொசூர், கோயமுத்தூர் முதலிய தேசங்களில் அத்திமரம் நன்றாகவளரும். கர்நூல் பட்டணத்திலும், சைதாப்பேட்டைக் கருகிலிருக்கும் என்னுடைய சொந்தத் தோட்டத்திலும் அத்திமரம் வளரும். இவைகள் சம நிலங்களிலும்கூட பயிராகும்.

பரவச்செய்தல்.

இம்மரத்தின் விதையைக் கொண்டும் உற்பத்தி செய்யலாம். கொடியைக்கொண்டும் உற்பத்திசெய்யலாம். இம்மரத்தின் கொடியைக்கொண்டு வளரச்செய்வதுதான் சுலபமானமுறை. அத்திமரம் புதராயிருக்கும்பொழுது சிறந்த கொடிகளை வெட்டியெடுத்து அவைகளை பயிர்செய்ய வேண்டும். ஒவ்வொருகொடிகளையும் 7 அல்லது செ அங்குலம் நீளத்திற்குமேல் இருக்கக் கொடாது. மூன்றுகணுக்கள் இருக்கவேண்டும். கொடிகளை பாத்திகளில் நட்டுப் பயிர் செய்யலாம். கொடிகளை மட்கலத்தில் நட்டு பயிர்செய்யலாம். மட்கலத்தில் சுத்தமானமணலை நிரப்பிவைக்கவேண்டும் அதில் கொடிகளை நடவேண்டும் அதன் கணுக்களில் ஒன்றுவது மணலில் புதைந்திருக்கவேண்டும் பிறகு தினமும் ஜலத்தை விடவேண்டும் அம் மட்கலங்களை நிழலில் வைத்திருக்கவேண்டும். ஒரு மாத காலத்திற்குள் கொடிகள் துளிர்த்து இலைகளை விடும். 5-6 மாதத்திற்குப் பிறகு அவைகளை வேறிடத்தில் நடவேண்டும் கொடிகளை எடுப்பதற்குத் தகுதியான காலம் பிப்ரவரி மாதம் செடிகளை ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்தில் நடவேண்டும். நட்டு 4-5 மாதத்திற்குள் பழங்கள் தரும்.

நடும்முறை.

கொடிகளை நட்டுப்பயிர் செய்யும்முறை பலஸ்தலங்களில் பலவிதமாக இருக்கின்றது. சிலஸ்தலங்களில் 9 அடி தூரத்தில் செடிகள் நடப்படும். வேறு சில இடங்களில் 12அடிதூரத்தில் செடிகள் நடப்படுகின்றன. 9 அடி அல்லது 10 அடி தூரத்தில் செடிகளை நடும்முறைதான் சிரேஷ்டமானது. 2 அடி, நீளம் 2 அடி ஆழமுள்ள குழிகள் வெட்டப்படவேண்டும் அதில் செம்மண்ணையும் மணலையும் உட்கலான எருவையும் கலக்கவேண்டும். சிறிது எலும்பையும் சேர்ப்பது நலம். ஜலம விடவேண்டும் ஒரு ஏக்ரா விஸ்தீரணமுள்ள பூமியில் 300 250 செடிகளை நடவேண்டும்.

எருப்போடுதல்.

அத்தித்தோட்டம்ஏற்பட்டபிறகு, செடிகளைச் சுற்றிலுமுள்ள நிலத்தைமாதத்திற்கொரு முறையாவது வருஷத்திற்கு இரண்டு முறையாவது கொத்தவேண்டும். ஆகஸ்டு, செப்டம்பர், பிப்ரவரி மாதங்களில் பயிர்செய்திருக்கும் நிலங்கள் முழுவதையும்கொத்தி களை பிடுங்கவேண்டும். பிறகு அடியிற்குறித்தபடி எருபோடவே

ண்டும். கொடியைச் சுற்றிலும் இருக்கும் மண்ணைத் தாளிலிருந்து ஒருஅடிமுதல் 2 அடி தூரம் வரையிலும் 1 அல்லது 2 அடி ஆழத்திற்கு எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். நாருள்ள வேர்களை வெட்டி விடவேண்டும். ஒரு வாரம்வரையிலும் மண்ணை வெயிலில்காயப்போடவேண்டும். அதன்பிறகு மண்ணையும் எருவையும் கலந்து குழியில் நிரப்பவேண்டும். பிறகு தண்ணீர் விடவேண்டும். அத்தி மாத்திற்கு எரு அதிகமாய்ப்போட வேண்டும் அதற்கு இரும்பு வேண்டியிருக்கிறபடியால் செம்மண்ணை அதிகமாகச்சேர்க்க வேண்டும். மணல் செம்மண் பதனிட்ட தோல்களின் குப்பை மலம் முதலியவைகள் சிறந்த எருவாகும். ஏராளமாய்ப் பலனைத்தரும்.

நீர்ப்பாய்ச்சல்.

அத்திமாத்திற்கு ஜாக்கிரதையாக நீர்ப்பாய்ச்சவேண்டும். எருப்போட்டு முடிந்த பிறகு மரங்களுக்குத் தண்ணீர் அதிகமாக விடவேண்டும். காய்க்கும் சமயத்தில் சரியான ஜலம் விடாவிட்டால் அதிகப்பழமும் காய்க்காது. பழங்களின் உருவும் குன்றி விடும்; கட்டியாயும் ஆய்விடும். ஆகையால் அதைப் பயிர்செய்வோர்கள் தண்ணீர் பாய்ச்சுவதில் நிரம்ப சிரத்தையாயிருக்கவேண்டும்.

கிளை நறுக்குதல்.

கிளைகளை நறுக்கும் விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிளைகளை நறுக்குதல் மரங்களின் வளர்ச்சிக்கே கெடுதலாகுமென்று சிலர்சொல்லுகிறார்கள். அப்படி நறுக்கினால் சிலவேளைகளில் செடிகளை வளராமல் நாசமடைந்து போகும். மற்றவர்கள் வேர்களை நறுக்குவது சிரேஷ்டமென்று சொல்லுகிறார்கள் நல்ல பலனைத்தாவேண்டுமானால் கிளைகளையும் வேர்களையும் நறுக்கவேண்டும். அத்தி மரங்களுக்கு வேரோட்டம் அதிகம். வேர்களை நறுக்கிவிட்டால் செடியில் கிளைகளும் கொப்புகளும்தான் அதிகமாயிருக்கும். வேர்களை அதிகமாக ஓடவிடாமல் கொஞ்சமாக இருக்கும்படி செய்தால் மலர்களும் துளிர்களும் அதிகமாய் இருக்கும். நறுக்கும் கிளைகளை நார்த்து நடும் கொடிகளாக உபயோகப்படுத்தலாம்.

மரங்களுக்கு நோய்கள்.

அத்திமரம் பூகிதரோகத்திற்கு உள்ளாவது வழக்கம். இந்தநோய்க்கு உள்ளாகும் மரங்களில் உண்டாகும் பழங்கள் சாம்பல் நிறமாக இருக்கும். இந்த நோய்க்குப் பரிகார வழி இல்லை. இவ்வித நோய் என் தோட்டத்தில் பயிர்செய்யப்பட்டிருக்கும் அத்திமரங்களுக்கு வந்ததேயில்லை. வேரில் துவாரத்தை உண்டாக்கும் புழுக்கள் இருக்கும். அந்த துவாரத்தில் மண்ணெண்ணையைவிட்டால் அப்புழுக்கள் செத்துப்போகும். கம்பளிப் பூச்சிகளைப் போன்ற புழுக்கள்தோன்றி மரங்களின் இலைகளை அழித்துவிடுகின்றன. அவ்வித இலைகளைக் கொய்து அவைகளைச் சுட்டெரித்து விடுவதே இதற்குப்பரிகார வழியாகும். அத்திமரங்களின் பழங்களைப் பறவைகளும அணிற்பிள்ளைகளும் எலிகளும் தின்றுவிடுகின்றன. பழங்களை மேற்கண்டவைகள் தின்னாமல் இருப்பதற்குத் தகரமூடிகளைக்கொண்டு அவைகளை மூடிவிடவேண்டும். அதற்கு நிரம்பச்செலவாகும். பழங்களைச் சுற்றிலும் தாழை ஓலைகளால் மூடிவிடவேண்டும்.

விளைச்சல்.

அத்திமரங்களுக்குச் சரியாக எருக்கள் போட்டு காப்பாற்றிவந்தால் 12, 15 வருஷம் வரைக்கும் பலம் தரும். ஜூலை செப்டம்பர் மாதத்திலும் பிப்ரவரிமாதத்திலும் மாசூலகொடுக்கும், பழங்கள்பழுப்பதற்கு இரண்டுமாதகாலஞ் செல்லும். நல்லமரங்கள் ஒருவருஷத்தில் 500பழங்களைத்தரும். இந்த ராஜதானியில் செம்மண் பூமிகள் விஸ்தாரமாக இருக்கின்றன. கிருஷ்ணகிரி கோயமுத்தூர் முதலிய ஸ்தலங்களிலும் செங்கல்பட்டு ஜில்லாவைப்போன்ற மைதானங்களிலும் இம்மரங்கள் செழித்து வளரும். அத்திப்பழங்கள் உணவுப்பொருளாகஉபயோகப்பட்டுவருவதால் இம்மரங்களை ஏராளமாகப் பயிர்செய்வதுநலமாகும்.

சு—மி.

* * *

5

ஆபரணத் தொழில்.

நீண்ட காலமாய் இந்தியர்கள் நகைகள் அணிந்து வருகிறார்கள். கணக்கிடக்கூடாத பலவித ஆபரணங்களையும் உற்பத்தி செய்திருக்கிறார்கள். தற்காலத்திய வேலைகளைக் கவனித்துப்பார்த்தால் அனேகமாய்ப் புஷ்பங்கள், விதைகள் முதலியவைகளின் மாதிரிகளினின்று இவ்விதமான ஆபரணங்கள் ஏற்பட்டனவென்று தெரிகிறது.

வேப்பங்காய் மாலை, தேத்தங்கொட்டை கொலுசு, மோஹனமாலை, மாங்காய்மாலை, கோதுமைமணிமாலை, லவங்கப்பூக்கொப்பு, நெல்லிக்காய்மணி மாலை யெனப் பலவிதமான ஆபரணங்களை உபயோகித்து வருகிறார்கள். இதனால் பூர்வீக புதிய வேலைகளும் தற்கால நூதனவேலைகளும் கடவுள் சிருஷ்டியால் ஏற்பட்டுள்ள கணக்கில்லாத விதவிதமான வித்தியாச ரூபங்களினின் மாதிரிகளினின்று எல்லா நகைகளும் புறப்படுகின்றனவென்று அறியலாம்.

உலகத்தில் இந்தியர்களைப்போல் நகைகளில் பிரீதியுடையவர்கள் வேறு ஜாதியார்களில்லை. நகைகளும், உடுப்புகளும் அவரவர்களின் மனைவிகளுக்கு ஏற்பாடு செய்வதே ஒரு வைதீகத் தொழிலாக நினைக்கப்படுகின்றது. மனையாளும் புருஷன் முன்னிலையில்கூட ஆபரணங்களைக் கழற்றிய காலத்தில் வரப்படாது என்பது இந்தியர்களுக்குள் ஒரு ஏற்பாடாம். புருஷன் உள்ளவரையில் நகைகளுடனிருக்க வேண்டுமென்றும், புருஷன் இறந்த காலத்தில் நகைகளை விலக்கவேண்டுமென்ற அநுபவத்தை இன்னும் அநுசரித்தே வருகிறார்கள். ஆகையால் நகைகள் இல்லாதவர்கள் விதவைகளென்றும், நகையுள்ளவர்கள் சுமங்கலிகளென்றும் தோற்றத்திலிருந்தே தெரிந்துகொள்ள வேண்டிய அடையாளங்கள் ஆபரணங்களென்றே அறியலாம். இதனால்தான் எவ்வளவு ஏழையாயிருந்தபோதிலும் சுமங்கலிகளாயுள்ளவர்கள் நகைகளில்லாமலிருப்பதற்குப் பிரியப்படுவதில்லை. தகுந்த அந்தஸ்துள்ள குடும்பங்கள் நகைத்தொழில் செய்பவர்களை வீட்டில் வைத்துக்கொண்டு பரம்பரையாய் வேண்டிய நகைகளையெல்லாம் செய்துகொள்வது வழக்கமாம். ராஜாக்களாயிருந்தால் அவர்களின் அந்தஸ்துக்குத் தக்கபடி விசேஷ ஆபரணங்களைச் செய்வது வழக்கமாம். ஒரு பொக்கிஷதாரரின் குமாரத்திக்கு ஆபரணம் செய்ய நினைத்து சுமார் 500 தட்டார்களை ஆறு மாதம் வரையில் சம்ரட்சணை செய்து தலைமுதல் கால் வரையில் அணியக்கூடிய எல்லா நகைகளையும்செய்து முடித்துக்கொண்டார்களாம். இதன் விலையைச் சுமார் பதினாயிரம் லட்சம் வராகன் என்றும், இதற்காகச் செலவிட்டகூலி ஆயிரக்கணக்காயுள்ளதென்றும் ஒருவர் எழுதியிருக்கிறார். இதனால் ஒரு ஸ்திரீக்கு வேண்டிய நகைகளின் விதங்கள் எவ்வளவு இருக்கலாம் என்பதை நாமே மதிப்பிட்டுக்கொள்ளலாம்.

முக்கியமாய்த் தென்னிந்தியாவில் பரம ஏழையாயுள்ள கூலிக்காரர்கள்கூடப் பொன் ஆபரணம் அணிவதுண்டு. இந்தச் செல்வப்பெருக்கை ஒரு நூலாசிரியர் வர்ணிக்கும்போது "மாதர்கள் உலாவும் இடங்களைச் சுற்றிலும் சிதறும் ஆபரணங்களின் பிரகாசத்தைத் தானியங்கள் இரைப்பது போலெண்ணிப்பறவைகள்பின்தொடர்ந்து

ஏமாறும்". என்று அவ்வளவு நகைகளின் மிகுதியையும், பிரகாசத்தையும் விளக்கி எழுதியிருக்கிறார். முற்காலத்தில் விஜயநகர சமஸ்தானத்திலுள்ள தாதிகளின் பட்டாடைகளில் முத்துகளும் வைரங்களும் இழைத்திருப்பதுடன் தலையில் நிறைய ஆபரணங்களும், கழுத்துகளில் பலவிதமான மாலைகளும், மார்பில் பதக்கங்களும், இடுப்பில் துடைவரையில் தொங்கும் பலவித ஒட்டியாணங்களும், காலில் பாதம்வரையில் விதம் விதமான தங்கக்கொலுசுகளும், விரல்களில் மோதிரங்களும்அணிந்துள்ள 16 வயதுக்கு மேல் 20வயதுக் குள்பட்ட தாதிகள் சுமார் 60 பேர்கள் இருப்பார்களாம்.

தாதிகளுக்கே இவ்வளவு ஆடை, ஆபரணங்களிருக்க மற்றவர்களின் ஆபரணங்களை நாமே மதிப்பிட்டுக்கொள்ளுவோம். அக்காலத்தில் ராஜாக்களும் ஏராளமாய் ஆபரணம் அணிவார்களாம். சில ராஜாக்கள் கவசம்போன்ற கல்லிழைத்த உடுப்பாகவே செய்து போட்டுக்கொள்வார்களாம். அவர்களின் சிங்காசனமும் பொன்னினால் செய்யப்பட்டு விலையுயர்ந்த நவரத்தினங்களினால் இழைக்கப்பட்டிருக்கும். இவர்களின் யானை, குதிரைகளுக்கும் தக்க ஆபரணங்களைச் செய்து அலங்கரிப்பார்களாம். இவைகளினால் பூர்வகாலத்தில் இந்தியர்களின் அந்தஸ்தை அவர்களின் ஆபரணங்களின் விசேஷத்தால் காட்டிவந்தார்களென்றே விளங்குகின்றது. இதனால் தட்டாரத்தொழில் செய்து வந்தவர்கள் அக்காலத்தில் எவ்வளவு செல்வவந்தர்களாயும் செல்வவந்தர்களின் அபிமானம் பெற்றவர்களாயுமிருந்திருக்கவேண்டுமென்று நினைக்க மிகச் சந்தோஷப்படுகிறேன். அப்படிக்குச் செழிப்பாயிருந்த ஆபரணத்தொழில் தற்காலம் முன் போலிராமல் குறைந்த நிலைமையின் காரணமென்ன? சிலர் சாபம் என்கிறார்கள். சிலர் இவர்கள்செய்த பாவம் என்கிறார்கள். எதுவாயிருந்தபோதிலும் விமோசனம் செய்ய மார்க்கம்தேடச் சென்னை விஸ்வகர்மகான்பரன்ஸ் கமிட்டியார் முன்வந்திருக்கின்றனர். அவர்களை நாடி சீர்திருத்தமடைவோம்.

வேல்.

கைத்தொழிலும் கவர்ன்மெண்டாரும்

இந்தியர்களுக்கு இதுவே நல்ல காலமென்பதற்கு ஒரு அத்தாட்சி என்னவென்றால் இந்தியக் கவர்மெண்டார் இத்தேசத்தின் தொழிலபிவிருத்தியைக் குறித்து இதுவரைக்கும் கவனிக்காமலிருந்தது போலிராமல் இப்பொழுது யுத்தங் காரணமாக இத்தேசத்தின் தொழில்கள் அபிவிருத்தியடைந்தால் ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் மிகுந்த நன்மையைத் தருமென்று கண்டுகொண்டார்கள். பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இந்தியர்கள் இதுகாறும் இந்தியாவில் ஏராளமாய்க் கிடைக்கும் மூலப்பொருள்களை ஜெர்மனி, ஆஸ்டிரியா, அமெரிக்கா முதலிய அந்நிய தேசத்தாரின் விருத்திக்காக ஏற்றுமதி செய்து அனுப்பிவந்தது போலிராமல் கைத்தொழில்களை இந்தியாவிலேயே விருத்தி செய்வதில் முயற்சியுள்ளவர்களாயிருத்தல் வேண்டுமென்று கூறுகிறார்கள். இந்தியர்கள்கூலிக்காரர்களைப்போல்காடுவெட்டிகளாகவும், நீரிறைப்போர்களாகவும் வேலை செய்துவருதல் கூடாதென்று பிரிட்டிஷ் பிரதமமந்திரி கூறியிருக்கிறார். பிரிட்டிஷாரதும், குடியேற்ற நாட்டாரதும் நன்மையை நாடியே இந்தியர்கள் உழைத்துவருதல் வேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுவது தவறென்றும் இந்தியாவில் கைத்தொழில்கள் விருத்தியாகுமாயின் அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மைக் கேதுவாகுமென்றும், இந்தியாவில் கைத்தொழில்கள் விருத்தியாவதைக் குறித்துசில ஆங்கிலேயர்கள்பொறாமைகொள்வது பிரிட்டனுக்கும் இந்தியாவிற்கும்விரோதபாவத்தை உண்டாக்குமென்றும் இந்தியாவின் நன்மையைநாடி அங்கு கைத்தொழில்கள் விருத்திசெய்யப் படுமாயின் அது இங்கிலாந்தில் லாங்காஷயர் முதலிய இடங்களிலுள்ள ஆங்கிலேயருக்கும் மற்றவர்களுக்கும் நஷ்டத்தை உண்டாக்குமென்று நினைத்தல் கூடாதென்றும், இந்துக்களும் பிரிட்டிஷாரும் தத்தம் நலங்களை விருத்தி செய்துகொள்ள இந்தியா இடந்தருமென்றும், இன்னும் வேறு சில விஷயங்களும் இந்தியா மந்திரி மிஸ்டர் சேம்பர்லேன் கூறியிருக்கிறார். இங்கிலாந்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு இந்தியாவில் வரும் பருத்தித் துணிகளின் மீது விதித்துள்ள அதிக வரியைக் குறித்து ஏற்பட்ட விவாதத்தில் லாங்காஷயர் வர்த்தகர்கள் இந்த வரியை ரத்துசெய்துவிட வேண்டுமென்று கூறுவது நியாயமுடையதன்றென்றும் மிஸ்டர் சேம்பர்லேன் கூறியிருக்கிறார். தாயில்லாப் பிள்ளைகளைப்போல் மிகுந்த கஷ்ட நிலைமையில் இருக்கும் இந்தியர்களின் விர்த்தியைக் குறித்து இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தங்கள் கவனத்தைச் செலுத்துவார்களாயின் இந்தியர்கள் தற்காலத்திலுள்ள சீர்கேடான நிலைமையை நீக்க முற்படாமலிருக்கமாட்டார்கள். இப்பொழுது நடக்கும் யுத்தத்திற்கு முன்னர் ஜெர்மனியரும், ஆஸ்டிரியரும் இன்னும் வேறு சில தேசத்தவரும் இந்தியாவுக்கு தங்கள் தேசத்தில் செய்யப்படும் கத்தி, கத்திரி, பேனா, குண்டூசி, பென்சல், சிம்னி, நெருப்புப்பெட்டி, துணிகள், சாயச்சாக்குகள் முதலிய சாமான்களை ஏராளமாக அனுப்பிப் பெருத்த லாபமடைந்து வந்தார்கள். யுத்தம் நடக்கும் இச்சமயத்தில் மேற்படி தேசங்களிலிருந்து சாமான்கள் இத்தேசத்திற்கு வருவது நின்றுவிட்டபடியால் ஜப்பானியர் மேற்படி சாமான்களை யெல்லாம் செய்தனுப்பி வர்த்தக வாயிலாக இந்தியாவில் அனுபவித்துவரும் லாபத்தை இந்துக்கள் இந்தியாவிலேயே பெரிய பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி மேற்படி சாமான்களை யெல்லாம் செய்து சொற்பவிலைக்கு விற்று வரும்படி கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்வார்களானால் இந்துக்கள் பெருத்த லாபமடைவார்கள். இவ்வேற்பாடுகள் பிரிட்டிஷார்க்குப் பிரதிகூலமுடையதாகாதென்பது இந்துக்களின் கருத்தாம். ஜப்பான் முதலிய தேசங்கள் சற்றேறக்குறைய ஐம்பது வருஷங்களாக கைத்தொழில்களில் விருத்தியடைந்த முறைகளை யெல்லாம் ஜப்பான் தேசத்திற்குப்போய்வந்த நம்மவர் ஒருவர் பச்சையப்பன் காலேஜில் பிரசங்க வாயிலாகத் தெரிவித்தார். அம்முறைகள் யாவும் இந்தியாவில் அனுசரிக்கப்பட்டு வருமாயின் இந்தியர் வெகு சீக்கிரத்திலேயே கைத்தொழில்களில் விருத்தியடையும். ஆகையால் இந்திய கவர்ன்மெண்டாரும் இத்தேசத்திலுள்ள தனவான்களும் இந்தியாவில் கைத்தொழில்கள் மேலும் மேலும் விருத்தியடைவதற்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் ஜனங்கட்குச் செய்து வர வேண்டும். நந்தேசத்து தனவான்களும் மற்றவர்களும் இதுகாறும் பராமுகமாயிருந்ததுபோலிராமல் காலதேசவர்த்தமானங்களுக்கேற்றவாறு தற்காலத்தில் எந்தெந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவ்வேற்பாடுகளெல்லாங் காலதாமதமின்றி உடனே செய்யவேண்டும். அப்படிச் செய்யாமலிரு

ப்போமானால் ஜப்பான்முதலிய தேசத்தவர்கள் நந்தேசத்தில் வர்த்தகஞ்செய்து பெருத்த லாபமடைவதைப்பார்த்து நாம் ஏக்கங்கொண்டிராதிருக்கவேண்டும். நம்மவர்கள் இன்னமும் தூங்கிக்கொண்டிராமல் விழிப்புடனும் மிகு ஜாக்கிரதையுடனும் தக்க ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய்யவேண்டும். நாம் அடிக்கடி எழுதிவரும் விஷயங்கள் "காட்டிலெரித்த நிலவுபோலும், கடலில் பெய்த மழைபோலும் வீண் போகவிடாமல் கொஞ்சங் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய் செய்வார்களென்று எல்லாம் வல்ல இறைவனைச் சதாகாலமும் தியானிப்போமாக.

கோ. குமாரசாமி ஆச்சாரி.

***

நத்தை, சிப்பி, சங்கு முதலிய ஜந்துக்கள்.

கட்டோரங்களில் பலவிதமான கிளிஞ்சில்கள் கிடப்பதை எல்லோரும் பார்த்திருப்பார்கள். ராமேஸ்வரத்திற்குப் போய்வருகிறவர்கள் அங்கிருந்து பலவிதமான அழகிய கிளிஞ்சில்களை வாங்கிவருவது வழக்கம். ஆனால் அவை என்ன வென்பதைச் சிலரே விசாரித்திருப்பார்கள். அவைகள் எல்லாம் மிருதுவான ஒருவகை ஜீவராசியின் மேல் கூடுகள். இக்கூடுகளுக்குள் ஒருகாலத்தில் பிராணிகள் வாழ்ந்து காலகதியடைந்தன. இதை யோசிக்கையில் தரையில் வாழும் பிராணிகளின் கணக்கைக் காட்டிலும் கடலின் வாழும் பிராணிகளின் சங்கியை பலமடங்கு பெரிதென்று தெரியும். இப்பிராணிகளில் பல, பலதேசங்களில் மக்களுக்கு வெகு ருசியான ஆகாரமாக இருக்கின்றன. மீன், ஆமை முதலிய பிராணிகளை இந்தியா முதலிய எந்தேசத்தினரிலும் சிலர் தின்கிறார்கள். ஆனால் அவை தவிர்த்த கள்ளிக்காய் அல்வர்மட்டி, பாட்டி, மட்டி, பஞ்ச மட்டி, முறல், வாழிமட்டி, சங்கு, இவிரல் சங்கு, நத்தை, தலைப்பாய்கட்டி, கோவஞ்சி, பார் அட்டை வகை, கூந்தல் கணவாய், சக்கிக் கணவாய், பேய்க்கணவாய், சங்குக் கணவாய், ஓட்டுக்கணவாய், விஷக்கணவாய், முத்துச்சிப்பி முதலியன பல நீர்வாழ் ஜந்துக்கள் மனிதருக்கு ஆகாரமாகின்றன. மேலே நாம் குறிப்பிட்ட இனங்களெல்லாம் இந்தியாவின் கடலில் வாழ்கின்றவைகள். ஆனால் மலையாளம், சென்னை நகர் முதலிய இரண்டோரிடங்களில் மேற்சொன்ன பிராணிகளில் இரண்டொன்றே பிடிக்கப்பட்டுக் கடைகளில் விற்கப்படுகின்றனவேயல்லாமல், மற்றவை ஜனங்களால் மதிக்கப்படவில்லை. இதர தேசத்தார்கள் இவைகளைத் தின்பதாலும் இவை ருசியாயிருப்பதாலும், ஆகாரகுணம் பொருந்தியவையாக இருப்பதாலும், இவைகளை ஊன் தின்னும் ஜனங்கள் ஆகாரமாக உபயோகிக்கும்படி செய்ய வேண்டுமென்று நினைத்து, கவர்ன்மெண்டு மீன் இலாகாவில் உயிர் சாஸ்திர நிபுணராக விருக்கும் மிஸ்டர் ஜேம்ஸ் ஹோர்னல் ஒரு சிறு புத்தகத்தை எழுதி வெளியிட்டிருக்கிறார். மேலேசொன்ன பிராணிகளின் ரூபத்தையும், குணத்தையும் அவைகள் ஒவ்வொன்றும் கிடைக்குமிடத்தையும் அவைகளைச் சமைக்கும் விதத்தையும் அச்சிறு புத்தகத்தில் வர்ணித்திருப்பதுடன் ஒவ்வொரு பிராணியின் படமும் காட்டப்பட்டிருக்கிறது. மிகவும் தெளிவாய் எழுதப்பட்டுள்ள மேற்கண்ட வர்ணனைகளை மிஸ்டர்

ஹோர்னலின் உதவியாகிய மிஸ்டர் எம். ராமஸ்வாமி நாயுடு பி. ஏ. என்பவராலே எழுதப்பட்டதாக மிஸ்டர் ஹோர்னல் சொல்லுகிறார்.

உயிர்வாழ் ஜந்துக்களைப் பிடித்து ஆகாரமாகத் தயார்செய்து டப்பிகளில் அடைத்து ஏற்றுமதி செய்து இதர தேசங்கள் பெருத்தலாப மடைகின்றன. இந்தத் தொழில் சமீபகாலம் வரையில் இந்தியாவில் கவனிக்கப்படாதிருந்துவந்த காரணத்தால் இந்தியாவின் கடற்செல்வம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஆனால் மீன் இலாகா தனியாக ஏற்பட்டது முதல் இவ்விஷயம் கவனிக்கப்படவே கொஞ்சங்கொஞ்சமாய் அபிவிருத்தி உண்டாகி வருகிறது. சிறுமீன்களை எருவாகத் தயார்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். மீன் எண்ணெய் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இப்பொழுது நத்தை வகைகளையும் உபயோகத்திற்குக் கொண்டுவரவும் அவைகளை விருத்தி செய்யவும் உத்தேசித்திருக்கிறார்கள். இதர தேசங்களிலிருந்து பெரிய இனங்களைக் கொண்டுவந்து கடலில் விட்டு வளர்க்கவேண்டுமாம். பெரிய பட்டணங்களின் ஓரமாயுள்ள கடலில் சாக்கடைஜலம் விழுவதால் அந்தஜலத்திலுள்ள விஷத்து மேற்சொன்ன பிராணிகள் உட்கொள்ளப்பட்டுப் பிறகு அவைகளைத்தின்னும் மனிதருக்குக் கெடுதலை உண்டுபண்ணுமாம். ஆகையால் சாக்கடை ஜலத்தால் அந்த விபரீதம் நேரிடாமல் சட்டம் செய்ய வேண்டியிருக்கும். நத்தை முதலிய இனங்களை ஊன் தின்னும் இந்தியரும் ஆகாரமாக உட்கொள்ள உடன்படுவார்களா வென்பது சந்தேகமாயினும், இதர தேசத்தார்களுக்கு அனுப்பக் கூடியதை உத்தேசித்து, இப்பிராணிகளை அபிவிருத்தி செய்வதும், அவைகளைப் பிடிப்பதுமாகியத் தொழில் விருத்தியடையுமானால், எத்தனையோ லட்சக்கணக்கான ஜனங்களுக்குச் சுகஜீவனம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. மிஸ்டர் ஹோர்னலுடைய உத்தேசம் நிறைவேறும் காலத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

சுதேசமித்திரன்.

***

தொழிற்சாலை அமைப்பு.
Factory Organization.

மானிடர் செய்யும் ஒவ்வொரு செய்கையையும் பொதுவாகத் தொழிலெனச் சொல்லலாமெனினும் இங்கு நான் எடுத்துக்கொண்டது விவசாயப்பொருள், சுரங்கப்பொருள், கடற்பொருள் ஏனைய இயற்கை செயற்கையாம் இருவகையில் கிடைக்கும் பல்பொருள் ஆகிய இவைகளைக்கொண்டு சிறு ஆயுதங்களின் உதவியால் கையினாலும், பவரின் (Power) உதவியால் (அதாவது நீராவி, மின்சாரம், தண்ணீர், எண்ணெய், ஆகாயம் முதலியவற்றின் சக்தியால் நடக்கும் இஞ்சின், மோட்டார், மில் ஆகிய இவைகளின் உதவியால்) பெரிய யந்திரங்களினாலும், மானிடர் உபயோகத்திற்கும், சுகவாழ்வுக்கும் மற்றும் பலவற்றிற்கும் வேண்டிய சாமான்களைச் செய்யக்கூடியத் தொழில்களே. இத்தொழில்களில் முற்கூறியன வேலைக்காரர்கள் தங்கள் தங்கள் வீடுகளிலோ, அல்லது இதர இடங்களிலோ தனியாகவோ, குடும்பத்தார்களுடன் கலந்தோ, அல்லது சில வேலைக்காரர்களைவைத்துக்கொண்டோ, இயல்புக்கும், சாமர்த்தியத்திற்கும் தக்கபடி

சிறுகவோ, பெருகவோ வேலைசெய்துவருவது இதுதான் கைத்தொழில். இதைத்தான் ஆங்கிலேயத்தில் (ஹோம் இண்டஸ்ட்ரி, காட்டேஜ் இண்டஸ்ட்ரி, மைனர் இண்டஸ்ட்ரி) என்று அழைக்கிறார்கள். இத்தொழில்முறை ஆங்கிலத்தில் (ஹான்டிக் க்ராப்ட் ஸிஸ்டம் (Handy-craft system) எனப்படும். இதில் சாதாரண ஆயுதங்களைவிட வேறு பெரிய யந்திரங்களை உபயோகிக்க இயலுவதில்லை இதில் தொழிற் பிரிவு அநேகமாயில்லை. இதைத் தொழில், ஞானம், அதிகமின்றிப் பழக்கத்தால் யூகமாய்ச் சித்திரப்பாடாக செய்துவருவது இயல்பு. இத்தகைய தொழில் ஓங்கி வளர்ந்து ஓர் பேருருப் பெறுவது மிகக் கடினமென்றாலும் இக்கைத்தொழிற் சங்கங்கள் (Guilds) அமைக்கப்பட்டு அதனால் பல வசதிகளைத் தேடிக்கொண்டு காலத்தையொட்டி மானிடதேவைக்கு வேண்டியவைகளைச் செய்ய ஒத்துழைப்பார்களேயாகில் இத்தொழிலுக்கும் இத்தொழில் புரிவோருக்கும் ஒரு கஷ்டமும் ஏற்படாது. இத்தொழில்களில் அநேகம் ஓங்கிவளர்ந்து பெருந்தொழிலாகும் காலம் வரினும் வரும். இதற்கு ஜப்பானிய தொழில்களே தகுந்த உதாரணமாக விருக்கின்றன.

மற்றொரு தொழில் தொழிற்சாலைத் தொழில (Factory industry) எனப்படும். இது ஒருவர் தனியாகவோ, சிலரோடு கலந்தோ அல்லது பலர் ஒன்று சேர்ந்தோ பெருமுதல் வைத்துத் தொழிலை நடத்துவது. முதலாவது ஒருவனது சொந்தத் தொழிலாகிறது. இரண்டாவதும் மூன்றாவதும் கூட்டுத்தொழிலாகிறது. ஆங்கிலத்தில் இரண்டாவதை பார்ட்னர்ஷிப் (Partnership) என்றும் மூன்றாவதை ஜாயிண்ட் ஸ்டாக் (Joint-stock) தொழில் என்றும் உரைப்பர். இத்தகைய தொழிலில், தொழிற் பிரிவுக்கும், தொழில் வன்மைக்கும், யந்திரப் பெருக்குக்கும், பல பொருள் ஆராய்ச்சிக்கும், தொழில் நிர்வாகத்திற்கும் அநேக ஏதுக்களிருப்பதோடு கூடத்தொழிற் சங்கங்களும், பாங்கிகளும் பலவகையாக அநேகம ஏற்பட அவசியம் ஏற்படுகின்றது. இத்தகைய தொழில் முறைமை (Factory system) ஆரம்பித்தது ஐரோப்பாவில் 18-வது ஆண்டின் ஆரம்பத்திலென்று தெரிகிறது. ஜப்பானில் இந்த எண்ணம் உதித்தது சென்ற 19-வது நூற்றாண்டின் கடைசியேயன்றி அதற்கு முன் எள்ளளவுங் கிடையாது. சரியாகச் சொல்லில் சென்ற நாற்பது வருஷத்துக்குள்தான் ஜப்பான் இத்தொழில் முறையில் உலகம் புகழும்படியான இத்தகைய உன்னத நிலைமையைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரண கர்த்தாவாகவும் உயிர்நிலையாகவுமிருந்துவந்தவர் ஜப்பானில் அநேகருளர் என்றாலும் அதில்திலகம்போல் விளங்கி பலராலும் கொண்டாடப்பட்டு வருபவர் ஒருவரே. அவர் பெயர் பேரன் ஷிபுசாவா (Baron Shibusawa.) நாகரீகமும், தொழிலும் பெருகிவிளங்கும் இந்தக் காலத்திலும் இவ்வெண்ணங் கொண்டுள்ளவர் நம்மவருட் சிலரே எனினும், அதிலும் தொழில் முறைகளை நன்கு அறிந்து புரியுந்தொழிலை ஒழுங்காய் நடத்திவருபவர்கள் மிகவுஞ் சிலரே என்றும் தெரிகிறது. அன்றியும் நம்மிந்தியாவானது பழமையையும், பூர்வீக நாகரீகத்தையும், விளைபொருள் பெருக்கையும், ஜனத்தொகையையும் மிக வுடையதெனினும்

தொழில் ஞானமும், தொழில் முயற்சியும் அதிகக் குறைவாக விருப்பதைக்காண மனம் மிகத் தளர்கின்றது. விஷயம் இவ்வாறிருக்க இந்திய ஷிபுசாவா யார்? அவர் போன்றோர் எத்தனைபேர்? என்பதை எப்படியறியக்கூடும்? தூரத்திலிருந்து கேட்போர்களுக்கும், மேற்பார்வையாகப் பார்ப்போர்களுக்கும் இந்தியாவில் ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கிறதாகவும் தொழில் ஏராளமாக நடந்து அதனால் இந்தியா மட்டற்ற லாபத்தை அடைகிறதென்றும் புலப்படுகிறது. இது எதுவரையில் உண்மையெனப் பின்னர் கூறுவாம்.

சூரியோதயம்.

***

பல குறிப்புகள்.

சென்னைக்கைத்தொழிற் சாலை.

இப்பெயர்கொண்ட தொழிற் சாலை பலபேர் ஆதரவைக்கொண்டு ஸ்தாபிக்கவேண்டுமென்று பிரயத்தனப்பட்டுவருகிறோமல்லவா? அத்தொழிற்சாலையைக்கூடிய சீக்கிரம் ஸ்தாபித்துத்தொழிலை நடத்திவந்தால் உலகத்தவர்களுக்கு அநேக அனுகூலங்களும், லாபங்களு மிருக்கிறது என்பதாக தெரிவித்துக்கொள்ளுகிறோம். அதாவது இப்பொழுது இவ்வூரிலுள்ள வர்த்தகர்கள் அதிக லாபத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்று கருதி வேலைகளை எல்லாம் நாசஞ்செய்கிறார்கள். அது எப்படியென்றால்

பத்துரூபாய் பெறும்படியான சாமான்களை ஐந்துரூபாயில் முடிக்கவேண்டுமென்பதாக வேலை செய்யப்பட்ட வேலைக்காரர்களைக் கேட்கிறார்கள். அதற்கு வேலைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அது ஏனென்றால் வர்த்தகர்கள்பணம் வைத்துக்கொண்டு ஏராளமாகிய சாமான்களைச் செய்யக் கொடுப்பதாலும் இவர்களுக்கும் செலவுக்குக் உடனுக்குடன் பணங்கொடுப்பதாலும் அவர்களுடைய சொல்லுக்குக்கட்டுப்பட்டு நடக்கிறார்கள்.

இதில் சாமான்கள் எப்படி முடிகிறதென்றால் கூலியிலும் குறைக்கவேண்டும் சரக்குகளையும் மட்டமாக்கவேண்டும். இப்படிப் பலவிதத்திலும் குறைத்தால்தான் பாதிவிலைக்கு முடியும். அப்படி முடித்துக்கொடுத்தச் சாமான்களை அந்த வர்த்தகர்கள் எப்படி விற்கிறார்களென்றால் சரியானவிலைக்குத்தான் விற்கிறார்கள், ஏதோ சிலர்கள் குறைத்துக்கேட்டால் ஒன்றுக்கு இரண்டுரூபாய்க் குறைத்துக் கொடுத்துவிட்டார்களென்று நினைத்துக் கொண்டு சந்தோஷமாகப் போகிறார்கள். அதிலுள்ளது பாதி விலைதான் பெறும். இதைக் கடைசியாகச் சாமான்களை மற்றொருவருக்கு விற்க வரும்போது மதிப்பிடுகிறார்கள். அச்சமயம் ரொம்பக் குறைவாக விருந்தால் வேலைக்காரர்கள்பேரில் அவநம்பிக்கை யாகிறது. வேலைக்காரன் மோசஞ்செய்தான் வேலைக்காரர்கள் அயோக்கியர்கள் என்பதாகஉலகத்தில்பெயர்வருகிறது. வேலைக்காரர்கள் கூலியுங்குறைத்துச்செய்துகொடுத்ததும் அல்லாமல் வர்த்தகன் செய்யச்சொன்ன மோசம் வேலைக்காரர்களைச் சார்கிறது. லாபமடைந்து பணக்காரனானது வியாபாரியும் கூலியைக்குறைத்துச் செய்து கெட்டபெயரெடுத்ததுதொழிலாளியுமாகிறது.

இதற்கு திருஷ்டாந்தம் சிலது மட்டிலும் சொல்லுகிறோம் கவனித்துப்பாருங்கள். கைத்தொழில் களாகிய ஐந்து

தொழில்களும் அநேக இடங்களில் நடக்கிறது. தொழிலாளர்களை தக்க கூலி பேசிக்கொண்டு செய்து கொடுக்கும் சாமான்களையும், ஒத்தவாடை சாமான்கள் குஜிலிக்கடை சாமான்கள் குஜராத்திப்பேட்டை சாமான்கள் முதலிய சாமான்களினால் தெரிந்துகொள்ளலாம்.

அதாவது குஜராத்திப்பேட்டை வெள்ளிச்சாமான்களைச்சேர்க்கவெள்ளி அதற்கு காரண்டி என்றதாக ரசீது கொடுத்து விற்கிறார்கள். நல்ல வெள்ளி என்பதாக ரசீது கொடுக்கும் சாமான்கள் சரியான வெள்ளியோ வென்றால் அல்ல மட்டந்தான். வாங்குபவர்களெல்லாம் அவர்களிடத்திலேயே திருப்பிகொடுப்பவர்களாயிருந்தால், அப்படி ரசீது கொடுக்கமாட்டார்கள். சாமான்களை வாங்கிக்கொண்டு போகும் ஜனங்கள் ஒவ்வொருவர்களும் பிறருக்குமரியாதைசெய்யவும் பிரஸெண்டு செய்யவும் வாங்குவதால் திரும்புவதில்லை செல்வவந்தர்கள் வாங்குவதும் திரும்பி வருவதில்லை. நூற்றுக்கு ஒருவர் யாரோ வாங்கியவர்களில் விற்க நேர்ந்தால், அப்பொழுதும் அவர்கள் கொடுத்த காரண்டி ரசீதும்இருந்து எடுத்துக்கொண்டுபோய்க் கேட்டால் வேலைக்காரன் மோசஞ்செய்து விட்டான் என்று அவன் எதிரில் வேலைக்காரர்களைத்திட்டிவிட்டு அந்த ஒருவருக்கு திருப்பி நல்ல வெள்ளி கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள் சிலர் அதுவும்கூட கொடுக்காமல் விட்டு விடுவார்கள்.

திரும்பவும் வியாபாரம்கெட்டுப்போகப் போகிறதென்று நாணயத்தைக் காப்பாற்றிக்கொள்கிறார்கள். அது எப்படி இருக்கிறதென்றால் மோசத்தில் நாணயமாக லாபம் சம்பாதிக்கிறவர்கள் வர்த்தகர்கள்.

வேலைக்காரர்களை கூலியைக்குறைத்து வேலைசெய்வதும் தவிர மோசம் செய்கிறவர்களென்று அபக்கியாதியாகிய பெயர்களை எடுத்துக் கொள்கிறார்கள். இதை அநுபோகத்தில் பார்த்தால் நன்கு விளங்கும். ஆற்றில் நிறைய ஜலம்போனாலும் நாய் நக்கித்தான் சாப்பிடவேண்டும். அதுபோல வேலைக்காரர்களுக்கு யாதொருபயனும் கிடையாது. ஆகவே வேலைக்காரர்களெல்லாரும் சேர்ந்து பங்கு எடுத்துக்கொண்டு முதல்வைத்து கைத்தொழிலைச் செய்தால் சரியான கூலியும் கிடைக்கும். ஜனங்களுக்கும் கஷ்டமில்லாமலிருக்கும் தொழிலாளிகளின்பேரில்வரும் அபக்கியாதிகளும் நீங்கிவிடும்.

இவ்விதத்தொழில் செய்வதுடன் இவ்விடத்தில் நிரும் சாமான்களை விற்பனை செய்யவும் ஓர் இடமிருக்கவேண்டும். அவ்விடத்திற்கு நம் சுஜாதியார்கள் எவ்விடத்தில் செய்யும் வேலைகளையும் வரவழைத்து அவைகளை விற்பனைசெய்து கமிஷன் எடுத்துக்கொண்டு மற்ற பணத்தை அவர்களுக்கு அனுப்பிவிடல் வேண்டும். இப்படிச் செய்துவந்தால் நாம்கொண்ட கருத்துகள் எல்லாம் கூடிய சீக்கிரம் பூர்த்தியாகுமென்பது எனது கொள்கை.

* * *

“தொழிற்சாலை அமைப்பு” என்றதலைப் பெயருடன் விஷயதானஞ் செய்து “சூரியோதயம்” என்று கையொப்பமிட்டிருப்பவர் 50-வருஷத்தில் அபாரச்செய்கைகளால் உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ள சூரியோதயபூமியாகிய ஜப்பானுக்குச் சென்று தொழிற்கல்வி பயின்று வந்திருக்கும் ஸ்ரீமான். T. A- இராமசுவாமி ஆச்சாரியாரவர். இவரிடம் சம்பாஷித்த காலத்துப்

பல விஷயங்கள் தெரியவந்தன. அவற்றில் முதன்மையாக நம்மனதில் தங்கியிருப்பது கைத்தொழில் விர்த்தியும் சங்கங்கள் ஏற்படுத்தலுமே. (Development of cottage industries, formation of industrical guilds & organizations) ஜப்பானியரின் கைத்தொழிற் சிறப்பையும், கைத்தொழிற் சங்கங்களால் விளையும் நன்மையையுங் கேட்கக்கேட்க அதிக ஆச்சரியத்தை விளைவிக்கிறது. சங்கத்தின் அங்கத்தினர்களாயுள்ள கைத்தொழிலாளிகளுக்குள் ஒற்றுமையும் நம்பிக்கையும் நாணயமுமிருப்பதால் தொழிற்பிரிவுடனும் (division of labour) நல்ல வேலைப்பாட்டோடும் (skilled or efficient workmanship) சாமான்கள் குறிப்பிட்ட காலத்தில் அநேகமாகத் தயாராகிவிடுகின்றதாகத் தெரிகிறது. இத்தகைய தொழில் முறைமையை நாம் நன்கறிந்து சங்கங்களை ஸ்தாபித்து ஒழுங்காய் நமது கைத்தொழிலை நடத்தவேண்டிய தவசியம். தொழில் விர்த்தி செய்ய வேண்டும், தொழில் விர்த்தி செய்யவேண்டும் என்று வீணில் சொல்லிக் கொண்டும் எழுதிக் கொண்டுமிருப்பதுமாத்திரம் போதாது. ஒவ்வொரு ஊரின் தொழில் நிலைமைகளையும், தொழிலாளிகளின் கஷ்டங்களையும் அறிந்து அவ்வவ்விடங்களுக்குத் தகுந்தபடி தொழிலை விர்த்திசெய்து தொழிற் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டும். இது விஷயமாக நல்ல ப்ளான்கள் (Plans and schemes) தயாரிக்கவேண்டும். தொழிலபிவிர்த்திக்காகவும் தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளை விளைவித்துத் தருவதற்காகவும் உண்டாக்கப்பட்ட சித்திர வித்தியா சாலை (School of Arts) ஒன்றும் தொழில் இலாக்கா)Department of Industries) ஒன்றும் நாஷனல்பண்டு அண்ட் இண்டஸ்ட்ரியல் அசோசியேஷன் (National Fund and Industrial Association), ஒன்றும் சென்னையில் வெகுகாலமாக ஏற்பட்டிருக்கின்றன. இவைகளின் உதவியை நாம் இதுவரையில் எவ்வளவு, எவ்விதமாகப் பெற்றிருக்கிறோமென் அறியவேண்டும். இதுவரையில் பெற்றிருப்பினும்பெறாவிட்டாலும் இனி வேண்டியவற்றை இவற்றின் மூலமாகக்கூடியவரையில் பெறமுயலவேண்டும். இவைகளை நம்பிக்கொண்டு நாம் சும்மா தூங்கிக்கொண்டிருக்கக்கூடாது. இதை உத்தேசித்து சென்னை பிரதானபட்டணமாகையால் இங்கே மாதிரித்தொழிற்சாலை (Model workshop). ஒன்று பல பேருடன் கூட்டாகச் சேர்ந்து கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்த முயற்சிக்கிறோம். இது போல் திண்டுக்கல்லில் பூட்டுவேலைசெய்ய ஓர் கம்பெனி ஐக்கிய நாணயச்சங்கமுறைமையில்(Cooperative credit system) ஏற்படுத்த முயற்சிகள் நடந்துகொண்டிருக்கிறது. அன்றிச்சென்ற நான்கு வருஷங்களாய் வடக்கே பாரிஷி என்னும் ஊரில் ஐக்கிய நாணயச் சங்க முறைமையில் 30 தச்சர்கள் சேர்ந்து தச்சத்தொழிலை வெகு சிறப்புடன்நடத்துவதாகவும், கும்பகோணத்தில் ஓர் நால்வர் சேர்ந்துகூட்டாக (Partnership) வெள்ளி வேலையையும் பொன்வேலையையும் பலர் புகழ நடத்தி வருவதாகவும் கேட்க நம்மவர்கள் மேன்மையுறுங்காலம் கிட்டிவிட்டதென்பதற்குத்தடையில்லை. எங்கேபார்த்தாலும் நம்மவர்களின்மனதில் இத்தொழிலபிவிர்த்தி உணர்ச்சியானது பாதாளக் கிணற்றின் ஊற்று நீர் போல் பெருகித் ததும்ப வேண்டுகிறோம்.

* * *

3-வது 'விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ்' திருச்சிறுப்பள்ளி.

1. நிகழும் பிங்கள௵ வைகாசி௴ 13, 14, 15உ (1917௵ மே௴ 26,27,28உ.) களில் திருச்சி நேஷனல் ஹைஸ்கூல் சரஸ்வதிஹாலில் ஷை கான்பரன்ஸ் மஹாசபை அதிவிமரிசையாக நடைபெறும்.

2. நமது குறைபாடுகளை உள்ளவாறு உணர்ந்து திருத்தவும், பரஸ்பர சந்தேக விபரீதங்களை அகற்றி, நேசப்பான்மையை விருத்திசெய்யவும், கல்வி, கைத்தொழில ஆசார சீர்திருத்த முதலியவைகளைக் கைக்கொள்ளவும், நமது என்றுமுள்ள இராஜபக்தியை நிதரிசனப்படுத்தவும் இக் கான்பரன்ஸ் மஹாசபை கூடுகிறது.

3. இதற்குச் சென்னை ராஜதானியைச் சார்ந்த ஜில்லா, தாலூகா, கிராமாந்தரங்களிலுள்ள, நம் வம்சாபிமானிகளும், உன்னத பதவியிலுள்ள உத்தியோகஸ்தர்களும், வைதீக பண்டிதர்களும், நம்மீது கருணைவாய்ந்த இதர பிமுக சகோதரர்களும் பத்திரிகாசிரியர்களும் மற்பல இதர மாகாணங்களிலுள்ள நம் வம்சத்தினர்களும் விஜயம் செய்வார்கள்.

4. இந்த 3-வது கான்பரன்ஸ் மஹாசபைக்கு சிலோன் ஹைக்கோர்ட்டுவக்கீல் ஸ்ரீமான் யாழ்ப்பாணம் N. சிவக்கொழுந்தாச்சாரியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க இசைந்திருக்கின்றனர்.

5. ஒவ்வொரு நகரவாசிகளும் சபைத் தலைவர்களும், இதர மாகாணங்களில் வசிக்கும் நம்மவர்களும் அவ்வவ்விடங்களில் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டுமெனக் கோரப்படுவதுடன், திருச்சி ஜில்லாவாசிகளை மட்டும் உபசரணைக் கமிட்டி மெம்பர்களாக அங்கீகரிக்கப்படுமென்பதைத் தெரிவிக்கப்படுகிறது.

6. ஷை பிரதிநிதிகளாக வரும் கனவான்கள் மேற்கண்ட விஷயங்களைப்பற்றி உபந்நியாசிக்க விரும்பினால் அவைகளைச் சுருக்கமாக எழுதி, நாளது மே௴ 22உக்குள் செக்ரிட்டரிக்கு அனுப்பினால் அவைகளைக் கால அளவிற்கேற்ப கமிட்டியாரால் யுக்தானுசாரமாய் ஏற்பாடு செய்யப்படும்.

N. B—அடியிற்கண்ட ஸ்தானங்களை வகிப்பவர்கள் கீழ்கண்ட கட்டணங்களை முன்னதாக அனுப்பி டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம். போஜன முதலிய வசதிகள் கமிட்டியாரால் சரிவர உபசரிக்கப்படும்.

மற்ற விபரங்கள் அடுத்த நோட்டீஸில் வெளியாகும்.

கட்டண விகிதம்.

உபசரணை கமிட்டி மெம்பர்களுக்கு	ரூ	3
பிரதிநிதி (டெலிகெட்)	,, ரூ	2
விஸிட்டர்கள்	,, ரூ	1

T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார், செக்ரிடெரி.

K. வைத்திலிங்கப்பத்தர்.
R. பெருமாள் ஆச்சாரியார்,
அஸிஸ்டெண்ட் செக்ரிடரிகள்.

3வது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் கமிட்டி ஆபீஸ், திருச்சி.

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

25. சர்பத்துகள்:—திராக்ஷைப்பழம், நன்னாரிவேர், ரோஜா, வாழைப்பழம், எலுமிச்சம்பழம், மாதளைப்பழம், கிச்சிலிப்பழம், பாதம், அன்னாசிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிப்பழம், சீமை இலந்தைப்பழம், தாமரைபுஷ்பம், இஞ்சி, சந்தனம், மாம்பழம், சர்பத்துகள், பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள்கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது, சோடாவாட்டரிலாவது, சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும், எந்த பழசர்பத்து உபயோகப்பட்டதோ, அந்த பழத்தின் மதுரமான வாசனையோடுகூடிய சர்பத்தாகும். ½-அவுன்சு சீசாக்களில் விற்கப்படும். இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது, சோடாவாட்டராவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும் அறை அவுன்சுள்ள சீசா 1-க்கு அணா 8, வி. பி. செலவுகள் 1 முதல் 3-சீசாக்கள் வரையில் அணா-5 பிரத்தியேகம்.

26. சுகந்த மூக்குத்தூள்:—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ, அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய் கலந்து கொண்டால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருப்பதுமன்றி சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர் நாற்றத்தை நீக்கி, சதா கம கமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம் போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து, கடைசியில் சிலர் தூள் போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும் ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்கு போதுமானது சீசா 1-க்கு விலை அணா 4.

1 முதல் 3 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.
4 முதல் 5 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.
7 முதல் 12 சீசாக்கள்வரையில் வி. பி செலவு அணா 7 பிரத்தியேகம்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

வஜ்ரதேகாநந்த லேகியம்.

பத்தியமே இல்லை!　　　　பத்தியமே இல்லை!!

உலகத்தில் தேகபலத்தையும் நோயற்ற வாழ்வையும் விரும்புவோர்கள், இந்த வஜ்ரதேகாநந்த லேகியத்தை சிறுவர்முதல் விருத்தாப்பியர் வரையில் கொட்டைப்பாக்களவு காலை மாலை உண்டு வந்தால் மலச்சிக்கலை நீக்கி, நாபி வெட்டையைத் தணித்து, இரத்தத்தைச் சுத்திசெய்து, கவனசக்தியைக் கொடுத்து, தேகபுஷ்டியையும் தாது புஷ்டியையுந் தந்து, நரம்புகளுக்கு வலிவை யீந்து, ஆண்சிங்கத்துக் கொப்பான பலத்தைக் கொடுத்து, தேகத்தை வஜ்ஜிரஸ்தம்பம்போலாக்குவதுந் தவிர, சகலமான வியாதியையுங் கண்டிக்கும். இது உண்பதற்கு மிகுந்த ருசிகாமுடையது. இதில் கஞ்சா, அபினிமுதலிய கெட்ட வஸ்துக்கள் சேர்க்கப்படவில்லை. இதில் அதிகவிலையுயர்ந்த சரக்குகளும், சாஸ்திர முறைப்படி புடம்போட்ட அயம், காந்தம், தங்கம், வெள்ளி, கல்னார், முதலிய சிந்தூர டஸ்பங்களும் சேர்த்து, குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறோம். இதை 10-நாள் வரை டைரக்ஷனில் சொல்லியபடி கிரமமாக உண்டுவந்தால் இதன் பெருமையையும், இதைச் செய்தவரின் கீர்த்தியையும் நீங்களே நன்குணர்ந்து, ஆரோக்கியத்தையும் ஆநந்தத்தையும் அடைந்து வேறு லேகியத்தை வாங்கி உண்பதற்கு மனமே வராது. இந்த லேகியத்தைச் சிறந்த ஆயுர்வேத பண்டிதர்களெல்லாம் பரிசோதித்து அங்கீகாரம் செய்திருக்கிறார்கள் இதை ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கலாம்

டப்பி 1-க்கு விலை ரூ. 1—8—0
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

அம்பிகாசாலை,
நெ. 2/25, வேதகிரி மேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இண்டியன் டைப் பவுன்டரி.

ஓ. துரைசாமி ஆச்சாரி, அண்டு சன்ஸ்.

நெ. 7 சூளை ஹைரோட், மதராஸ்,

நானாவித அச்செழுத்துகள் தற்கால வேலைத்திறத்தின் நாகரீகத்திற்கு பொருந்தும்படி

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வார்த்து சப்ளை செய்கிறோம்.

அச்சாபீசுக்கு வேண்டிய மற்றும்

மரக்கோல வகையராக்கள், பித்தளை கம்போஸிங் ஸ்டிக், மெடல், மாட்ரைஸ், பன்க்ஷ் முதலான சகல சாமான்களும்

மலிவான விலைக்கு கிடைக்கும்.

யாவும் நல்ல வேலைப்பாட்டுடன் தயாரிக்கப்படுகின்றன.

இதன்றியும்

மதராஸில் அகப்படக்கூடிய சர்வ "ஸெகண்ட் ஹாண்ட்" ப்ரின்டிங் மெஷின்களுக்கும் நாங்கள் கமிஷன் ஏஜண்டு.

☞ எங்கள் புதிய டைப் பெஸிமன் ஜாப்தாவுக்கு எழுதவும்.

இரத்னபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான புது நாவல்: 2 பாகங்கள்.

இதில் மிக்கஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளது. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்தப் பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப் பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதற்பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூற வேண்டுவதின்று. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன என்றுமட்டும் கூறுகின்றோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. டபிள் கிரௌன் 1-க்கு 16 கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது. 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது. விலை 2 பாகங்களும் ரூ. 3 4 0
2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்களுக்கு மட்டும்) ரூ. 1 12 0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக் கடைசிவரையில் இரண்டு பாகமும் ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்தபோதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத்தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷசந்தா விகிதம்.

இந்தியா பர்மா சிலோனுக்கு ரூ. 1—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.
ஆனந்தபோதினி மாதிரிகாப்பிக்குக் கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

புதிய கம்பெனி! புதிய சரக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும்; 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும் வாசம் சேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள். 6-முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூ 5—8—0, ஷெடி நிறச 1-க்கு ரூ 4-8-0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ 6-8-0, தபால் செலவு பிரத்தியேகம்.

வெண் பட்டு வேஷ்டிகள்.

முழம்	அகலம்.	விலை ரூபா.
4	2	4-8-0 6-11
5	$2\frac{1}{4}$	6-முதல் 8-வரையில்
5	3	7 „ 9 „
6	$2\frac{1}{2}$	8 „ 9 „
6	3	9 „ 12 „
7	3	10 „ 13 „
8	3	12 „ 15 „
9	3	14 „ 16 „
10	3	15 „ 18 „

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி பைரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6	0

நாபம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு	...	75	0	0
„ 2 „	...	50	0	0
„ 3 „	...	40	0	0
„ 4 „	...	35	0	0
„ 5 „	...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம், கரண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் சேர்த்தியும் வாசம் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி காசி,

தாராநகர் தெரு, காசி.

Managar,

SILK PITAMBER & Co,

Daranagar Street,

Benarse, City.

இந்தியக் கைத்தொழிலை
விருத்தி செய்யுங்கள்.

பல்லிற்கு வலிவையும், வாய்க்குச் சுகந்த வாசனையும் தந்து பல்கூசல், பல்வலி, வாய் துர்நாற்றம் முதலியவைகளை நீக்கக்கூடிய,

கல்நார் பல்பொடி.

இந்தியாவில் கிடைக்கப்பட்டச் சரக்குகளைக்கொண்டே செய்யப்பட்டது.

இதன் குணத்தை ஒருதரமாவது வாங்கி அநுபவத்தில் அறியவேண்டிய நன்மை.

சற்று விலை அதிகமாக இருப்பதாகத் தோன்றினாலும் மற்றப் பல்பொடிகளைக் காட்டிலும் சிரேஷ்டமானதென்றே திண்ணமாய் எண்ணலாம்.

சிறியடப்பி அணா-4 பெரியடப்பி அணா-8 ஒரேதடவையில் சிறிய டப்பி 6 வாங்கிக் கொள்பவர்கட்கு ரூ 1-4-0

வெளியூர்கட்கு தபால்சார்ஜ் பிரத்தியேகம்

கு. ப. வே. ஆச்சாரிய,
நெ. 90, ஆண்டார்வீதி,
தெப்பக்குளம் போஸ்ட்.

குறிப்பு:—வியாபாரம் அதிகமாகும் பட்சத்தில் இன்னும் விலை சாசமாக்கப்படும்.

வர்த்தமானங்கள்.

12000 ரூபாய் நஷ்ட ஈடு வாதிக்குத் தீர்ப்பு.

மைலாப்பூரிலிருக்கும் மாதவப் பெருமாள் கோவிலின் டிரஸ்டியான மிஸ்டர் விநாயகம் முதலியார், மேற்கண்ட தேவஸ்தானத்தின் கதவைச் சீர்படுத்தாமல் அலக்ஷியமாக விட்டுவிட்டார் என்றும் அக்கதவு திடீரென்று கீழே விழுந்ததினால் பார்த்தசாரதி அய்யங்கார் என்ற வாலிபனுக்குப் பெருத்த காயத்தை உண்டுபண்ணிற்றென்றும் அச்சிறுவனுக்குக் கார்டியன் ஆராவமுது அய்யங்கார் என்பவர் கோவில் டிரஸ்டியின் அஜாக்கிரதையினால் இக்கஷ்டம் நேரிட்டபடியால் அவரால் தமக்கு 12000 ரூபாய் நஷ்டஈடு வரவேண்டுமென்றும் சென்னை ஹைக்கோர்ட்டில மிஸ்டர் ஜஸ்டிஸ் சிடிநாட்டரின் முன்பாக வியாஜ்ஜியம் செய்தார்.

அக்கதவு உறுதியாக இருந்ததென்றும் அக்கதவு சுலபமாக விழுந்துவிட மாட்டாதென்றும் சென்ற வருஷத்தில் கார்பொரேஷன் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்களென்றும் பிரதிவாதி எழுத்து மூலமாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

இந்தக்கேசை ஜட்ஜ் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முந்தி ஜட்ஜ் தாமே நேராக அக்கோவிலைப் பார்த்துவர வேண்டுமென்று சொல்லிக் கட்சிக்காரர்களின் வக்கீல்களுடன் அவ்விடத்திற்குப் புறப்பட்டுப்போய், அதைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தார்.

வாதியின்பக்கம் மிஸ்டர் நீயூஜெண்டு கிராண்டும், பிரதிவாதியின்பக்கம் மிஸ்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யரும் வக்கீலாக ஆஜரானார்கள். சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டதின்மேல் வாதிக்கு 12000 ரூபாய் நஷ்ட ஈடும் செலவுத் தொகையும் கொடுக்கும்படி பிரதிவாதிகளின்மேல் தீர்ப்பு சொல்லப்பட்டது.

***

ஆக்ராநகரில் ஒரு புதிய குடிசைத் தொழில்.

ஆக்ரா நகரில் ஒரு புதிய குடிசைத் தொழிலொன்று ஏற்பட்டிருப்பதை இங்கே குறிப்பிடுவோம். சாஸ்திர ஆராச்சி சாலைகளிலே கண்ணாடிக் குழாய்களின் மீது வர்ணப்பசைக்கொண்டு எழுதுவதற்காக ஒருவகைப் பென்சில் உபயோகப்படுகிறது. அப்பென்சில் ஒருவகை உலோகத்தால் செய்யப்படும். கண்ணாடிக் குழாய்களின்மீது எழுதும்போது, அக்குழாய்க்குப் பாதகம் நேராதவாறும், வர்ணப்பசையானது அக்குழாயின்மீது நன்குபடும்படியும் அப்பென்சில் அவ்வளவு நாஸூக்காக இருக்கவேண்டும். அத்தகைய பென்சில்களை இதற்கு முன்னும் ஆஸ்டிரிய ஜெர்மன் தேசங்களிலிருந்துதான் வெகுவாக அன்னியத் தேசங்களுக்குப் போயின. இப்பொழுது அம்மாதிரிப் பென்சில்கள் ஆக்ரா நகரில் தயாரிக்கப்படுவதாகவும் அதை இங்கிலாந்திலுள்ள சாஸ்திரச் சபையார் வெகு சிலாக்கியமானதென்றுப் பாராட்டியதாகவும் அறிகிறோம்.

உத்தராயணம் [illegible] பிங்கள௵ வைகாசி௴ [illegible] ஆதிவாரம் [illegible] வசந்தருது.

யோகம்	சாரங்கள்	நா-வி	இங்	தமிழ்	வார	
சி	வி	4—45	14	1	திங்	அஷ் 31-3, அவி 31-19, ரா 16-45
ம		4 36	15	2	செ	கவ 25-35, சத 27-47, ரா 11-22
அ—சி	பு—சு	4 27	16	3	புத	தச 20-13, பூட் 34-20, ரா 15-30
அ	கு-செ-பு	4 18	17	4	வியா	ஏகா 15-5, உட் 21-12, ரா 18-11 ஏகாதசி
சி	சு	4 8	18	5	வெள்	த்வா 10-23 ரே 18-28
சி		3 59	19	6	சனி	த்ர 6-22, அசு 16-28, தி 6-45 ரா 8-19,
(க) சி	கு—பு	3 50	20	7	ஞா	*கிரு சசி 3-15, பர 15-24, ரா 13-42, அமாவாசை.
ம—அ	செ—சு	3 41	21	8	திங்	● 1-16, கிரு 15-32, ரா 24-45, மிதுனயனம் 38-55
அ—சி	கு	3 34	22	9	செ	ப்ர 0-40, ரோ 17-1, சே 0-22, தி 31-35, ஜ்யேஷ்டசத்தம்
சி		3 2[illegible]	23	10	புத	த்வி 1-34, மிரு 20-1, ரா 10-47, ரம்பாவிரதம்
ம—அ	கு-வி-சு	3 13	24	11	வியா	த்ரி 4-3, திரு 24-33, ரா 26-39
சி—ம		3 4	25	12	வெள்	சது 7-59, புன 30-27, சே 1-19, ரா 20-58
சி—ம	செ-பு-சு	2 55	26	13	சனி	பஞ் 13-9, பூச 37-22
சி—ம	கு—சு	2 46	27	14	ஞா	ஷஷ் 19-5, ஆயி 44-52, தி 13-19
ம	வி	2 36	28	15	திங்	ஸப் 25-16, மக 52-23, தி 18-40
(க) ம	சு	2 27	29	16	செ	அஷ் 31-5, பூர 59-16, தி 14-46
(க) அ சி	பு	2 18	30	17	புத	நவ 35-56, உத் 60-0 தி 19-9
ம—சி	கு—செ	2 9	31	18	வியா	தச 39-25, உத் 5-5, தி 27-47
அ	சு	2 0	1	19	வெள்	ஏகா 41-15, ஹ 8-25, தி 30-29, நிர்ஜல ஏகாதசி
சி—அ	பு	1 50	2	20	சனி	த்வா 41-19, சித் 12-4, தி 26-26
சி—ம	கு	1 41	3	21	ஞா	த்ர 39-41, சுவா 13-4, தி 26-44
ம—சி	பு—சு	1 32	4	22	திங்	சசி 36-33, விசா 12-22, தி 22-7
சி	செ	1 23	5	23	செ	○ 32-9, அனு 10-22, தி 23-32, வடசாவித்ரீ விரதம், பூர்ணிமை
சி—ம	சு	1 13	6	24	புத	ப்ர 26-44, சே 7-45, தி 26-1, ரா 27-44, ஜ்யேஷ்டப
சி	கு—பு	1 4	7	25	வியா	த்வி 20-35, மூல 3-18, பூரா 58-54, சே 3-35, தி 25-35
சி		0 55	8	26	வெள்	த்ரி 14-6, உரா 54-14, தி 17-22
சி	பு-சு-சனி	0 46	9	27	சனி	சது 7-25, சிர 49-37, தி 3-27, ரா 27-0
சி	கு-செ	0 37	10	28	ஞா	பஞ் 0-50, ஷஷ் 54-31, அவி 45-14, சே 2-52,
சி	பு	0 28	11	29	திங்	ஸப் 48-40, சத 41-18, தி 2-0, ரா 24-28
ம	வி—சு	0 18	12	30	செ	அஷ் 43-23, பூட் 37-54, சே 0-20,
சி	பு	0 9	13	31	புத	நவ 38-50, உட் 35-14, தி 0-44

	செ வி-பு.	கு சு	கே
	15-ரிஷ-வி 18- ,, செ 22-மிது-சு 22-ரிஷ-பு		சனி
ரா			

உ

சுபமஸ்து.

"விஸ்வகர்ம குலோபகாரி" என வழங்கிவந்த

தொழில்.

மலர்—4. { பிங்கள௵ ஆனி௴ 1917௵ ஜூன்௴ } இதழ்—5.

நம்மவர்களின் சிரத்தைக்குறை.

நமது இந்துக்கள் அதிக ஏழைகளாகவும், கூலிக்காரர்களாகவும் இருப்பதற்குக் காரணங்கள் பல.

நாம் ஓர்சபையோ அல்லது ஓர்தொழிற்சாலையோ ஒரு வியாபாரமோ மற்ற வேறு காரியங்களோ நடத்த முன்வந்தால் யாவரும் அதில் கலந்து ஒத்துழைப்பது கிடையாது. இதற்கு முன்வந்தவர்களையே விட்டுவிட்டு மற்றவர்கள் தூரத்திலின்று குறைகூறுவது வழக்கமாயிருக்கிறது. இதுதவிர முன்னின்று ஆரம்பித்தவர்களும் இது பொதுகாரியம் இக்காரியம் யாவருக்கும் பாத்தியமுள்ளது, மற்றவர்களைப்போல நானொருவன் என்று நினையாமல் அவர்களுடைய சொந்தக்காரியமாகவும் அவர்கள் வீட்டு விஷயமாகவும் நினைத்து மற்றவர்களுடைய அனுமதிகளை நிராகரித்து நடத்திக்கொள்கிற வழக்கமாயிருக்கிறது. இதைக் கருதித்த புத்திசாலிகள் இதில் சேருவதில்லை. இப்படி யிருந்தால் எடுத்தகாரியங்கள் எப்படி சரிவரமுடியும்? எந்தக்காரியங்களும் முடிவுபெறுகிறதில்லை. இதனாலேயே இவர்கள் மேன்மையடையாமல் ஏழ்மைஸ்திதியிலேயேயிருந்துகொண்டு "நாங்கள் ஏழைகள், எங்களுக்குத் துணைபுரியுங்கள்" என்பதாக வாய்கூசாமல் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

"கட்டேபலம் சர்வசித்தி" என்னும் வாக்கியப்பிரகாரம் நாம் கட்டுப்பாடாக இருக்கவேண்டும். நாம் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டும். தொழிற்சாலைகள் வைக்கவேண்டும். வியாபாரங்கள் செய்யவேண்டும் என்னும் ஊக்கம்வைத்து வேலைகள் செய்துவந்தால் ஏன் பணக்காரர்களாக மாட்டோம்? ஏன் முன்னுக்கு வரமாட்டோம்? நாம் கதறிக்கொண்டேயிருந்தால் எந்தக்காரியம் நடைபெறும்? பொருள் எங்கிருந்து கிடைக்கும்? இதை யெல்லாம் திருத்துவதற்கல்லவா பத்திரிகைகளென்றும், கூட்டங்களென்றும், கான்பரன்சுகளென்றும் ஏற்பட்டு உழைப்பது?

நம்மிடத்தில் பணமில்லை என்றால் பலர் ஒன்றுசேர்ந்து பங்குக்காரர்களாக (ஷேர் ஹோல்டர்களாக)ச் சேர்ந்து தொழிற்சாலைகளையும், வியாபாரங்களையும் நடத்தி ஏன் லாபமடையக்கூடாது என நாம் பல்முறை எழுதிவந்தும் அதைக் கவனித்து நான் முன்வருகிறேன் நான் முன் வருகிறேன் நான் இத்தனை பங்கு எடுத்துக்கொள்ளுகிறேன்; என்பதாக எவர்களும் முன்வரவில்லை. மற்றப்படி எவ்விதம் மேன்மையடையமுடியும்? ஒருகாரியத்தை ஆரம்பித்தால் அக்காரியம் முடிவு பெறவேண்டு

மென்கிற கவலை யிருந்தாலல்லவா எடுத்தகாரியம் பூர்த்தியாகும்.

முற்காலத்தில் நம் பெரியோர்கள் மகத்தாகிய காரியங்களை ஆரம்பித்து நடத்திப் பூர்த்திசெய் திருக்கிறார்கள். அதாவது பெருத்த தேவஸ்தானங்களெல்லாம் 10, 20, 30, 40, 50 வருடங்கள் வேலைகள்செய்து பூர்த்தியாயிருக்கிறது. அதையெல்லாம் மனம்சலியாமலும் தீக்ஷைவைத்துக் கொண்டும் அரிகண்டம் பூண்டுகொண்டும் உபவாச மிருந்துகொண்டும் பூர்த்தி செய்திருக்கிறார்கள். இவ்வேலைகள்செய் துவந்த ஸ்தபதிகளும் தீக்ஷைவைத்துக் கொண்டு எடுத்த தொழில்களைப் பூர்த்திசெய் திருக்கிறார்கள். அவர்கள் அக்காலத்தில் ஒற்றுமையாகவும் பிடிவாதத்துடனும் முடித்திருக்க இப்போது நாம் சிறிய வேலைகளுக்கே சிரத்தையாக முன்வராவிட்டால் நம் கொண்டகருத்துக்கள் எப்படிமுன்னுக்கு வரும்? ஓர் காரியத்தை ஒருவர் ஆரம்பித்தால் மற்றவர்களுக்கு அது யுக்தமாகத் தோன்றினால் உடனே அவர்களுடன் கலந்து உழைக்கவேண்டுமல்லவா? நம்மனம் ஓர் வழியில் நில்லாமையால் ஓர் பிரதிக்ஞை செய்துகொண்டு எடுத்தக் காரியத்தைப் பூர்த்தி செய்துவிட்டுத் தான் மற்றவேலை பார்க்கவேண்டும். அப்படிப்பட்டபிடிவாத மில்லாத பக்ஷத்தில் எந்த காரியத்தையும் சாதிக்க முடியாது. ஆரம்பித்தவர்களை முடிக்கவேண்டு மென்கிற பிடிவாதமும் கூடாது.

ஆரம்பித்தவருடைய மனம்சலித்தாலும் மற்றொருவர் அதைப் பூர்த்திசெய்ய முன்வரவேண்டும். அப்படிக்கில்லாமல் நானெடுத்த காரியத்தை நான்தான் முடிக்கவேண்டும் என்னும் பிடிவாதமிருந்தாலும் பூர்த்தியாகாது. மனிதர்களுடைய காயம் நிலையில்லை. எடுத்தகாரியங்கள் குறையாக நின்றுவிடும் ஆகையால் யாவரும் ஓர் மனதாகக்கலந்து வேலைசெய்து முன்னுக்குவர வேண்டியது நமது கடமை யென்பதை நாம் வற்புறுத்தி சொல்லுகிறோம்.

* * *

மூன்றாவது

விஸ்வகர்ம மஹாஜனகான்பரன்ஸ்

1917வது மேமீ 26, 27, 28உ களில் திருச்சியில் நடைபெற்றது.

இக்கான்பரன்சுக்கு சிலோன் ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் யாழ்ப்பாணம் N. சிவக்கொழுந்து ஆச்சாரியர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

இம்மூன்று நாட்களிலும் அநேக தீர்மானங்கள் செய்யப்பெற்றனவாயினும் அவைகளில் முக்கியமான தீர்மானமொன்று.

அதாவது: தொழிற் கல்விச்சாலை யொன்று விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு அத்யாவசியமென்றும், அவ்வித தொழிற்சாலையைக் கூடியசீக்கிரம் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், அதற்குப்பொருளாதாரவு அதிகமிருந்தால்தான் தேச முழுமையு முள்ள சுஜாதி சிறுவர்களுக்குப் பூர்வீகத் தொழில்களையும், தற்கால நாகரீகத் தொழில்களையும் கற்பித்துக் கொடுத்து விருத்தி செய்யலாமென்பது.

இதற்காக இக்கான்பரன்ஸில் விஜயஞ்செய்திருந்த கனவான்கள் நபர் ஒன்றுக்கு ஐந்து ரூபா விகிதம் நன்கொடை அளித்தால் அப்பொழுதே ஏராளமாகிய பொருள்சேரும், இதைக்கொண்டு பல இடங்களிலும் வசூல்செய்து இந்தத்தொழிற் கல்விச்சாலையை நடத்தலாமென்று பேசிய

தில் அதற்கு சம்மதித்து அச்சமயம் வந்திருந்த கனவான்கள் மூலமாக ரொக்கம் ரூபா 70, கையொப்பம் ரூபா 600-மாக ஏற்பட்டது. இன்னும் அநேகர்கள் பணம் கொடுக்க முன்வரத் தயாராயிருக்கிறார்கள்.

இதற்கு 6 பெயர்கள்கொண்ட ஓர் கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் இதுவோ பெருத்தகாரியம். இதற்குமுன்வரும் கமிட்டியார்கள் சத்தியமாகவும் உள்ளன்போடும் பாடுபட்டால்தான் அதிசீக்கிரம் பொருளும் சேரும். ஷை தொழிற்சாலையை சீக்கிரம் ஸ்தாபிக்கவும் முடியும்.

இவர்களிடத்தில் சில துர் அபிப்பிராய மிருப்பதாகத் தெரிய வருகிறது. அதாவது பொருள் சேகரமாவதற்குமுன் இத்தொழிற் கல்விச்சாலையை எந்த இடத்தில் ஸ்தாபிப்பது? நம்மூரில் ஸ்தாபிப்பதாகவிருந்தால் பணம் கொடுக்கலாம், வேறிடத்தில் ஸ்தாபிப்பதாக இருந்தால் நாம் ஏன் பணம் கொடுக்கவேண்டு மென்கிற கெட்ட அபிப்பிராயம் ஏற்படுகிறது. இதுபோல் பணம் கொடுப்பவர்கள் ஒவ்வொருவரும் கேட்கும்பக்ஷத்தில் ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகளை ஸ்தாபித்தாலும் திருப்திகரமாயிராதென்று நினைக்கிறேன்.

இவ்விதம் சொல்லப்பட்டவர்கள் பணம் சேர்ந்தபிறகும் ஷை சாலை ஆரம்பிக்கும்போதும் தொலைதூரத்திலிருந்தால் எமக்குப் பிரயோஜனமில்லாமற்போகிறது. எங்களுக்கும் அருகாமையில் யிருக்கும்படியாக ஓர் பிராஞ்சு (கிளை) ஏற்படுத்தினால் நலமென்று கேட்டால், சவுகரியத்தை அனுசரித்து நடந்துகொள்ள முடியும்.

அரசமரத்தைச் சுற்றிவந்தால் புத்திரன் பிறக்கும் என்று சொன்னதைக் கேட்டு முதல் பிரதக்ஷணத்திலேயே வயிற்றைத் தடவிப்பார்த்துக்கொண்டவள்போல் இன்னும் பணம் சேரவில்லை. பணம் சேர்ந்த பிறகு எந்த இடம் முக்கியமானது? எது யாவருக்கும் பிரயோஜனத்தை தரக்கூடியது எந்த இடம் தழைத்தோங்கி வளரக்கூடியது? எந்த இடத்தில் பாதுகாக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள்? என்னும் பலவித சௌகரியங்களையும் அனுசரித்துச் செய்யக்கூடிய காரியத்தை அலக்ஷியமாகப் பேசிவிட்டுக் கட்டைக்கலைப்பது அறிவீனமென்றே நினைக்க இடமுண்டாகிறது.

இப்பொழுது நடக்கிற ஜாதி கான்பரன்ஸில் இதுதான் சரியான தீர்மானம். இது ஒன்று சரியாக நடந்தால் இக்கான்பரன்ஸின் பெயரைச்சொல்லச் சரியான சத்புத்திரன் பிறந்துவளர்வதாக நினைக்கமுடியும். இதைக் கவனியாமல் விட்டுவிட்டால் யாவரும் இக்கான்பரன்ஸினால் என்னநடந்தது? யாதொன்றுமில்லை. இது வீணே என்று சொல்ல இடந்தரும். அப்படிச் சொல்ல இடந்தாமல் முயற்சிக்கவேண்டியது இக்கான்பரன்ஸ்நடத்த முன்வந்தவர்களுடைய கடமை என்பதை நாம் வற்புறுத்திச்சொல்லக் கடமைப் பட்டுள்ளோம். இது சத்தியம்.

இக்கான்பரன்ஸில் தீர்மானித்த இத்தொழிற் கல்விச்சாலை விஷயமாகச் சரியான கமிட்டி யொன்றை ஸ்தாபித்து அவர்களையே அதற்குப் பொருள் சேகரிக்கவும் அப்பொருளுக்கு ஜவாப்தாரிகளாகவும் இத்தொழிற் கல்விச்சாலையை ஸ்தாபிக்கவும், அதை விருத்திசெய்யவும், அதை இன்னின்ன விதமாகத்தான் நடத்தவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் செய்து ஓர் காலத்தைக்குறித்து அக்கமிட்டியார் மூலமாகவே விடவேண்டும். இக்கான்

பான்ஸ் அதிகாரிகள் மேல் விசாரணையில்தான் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் நாமே இவ்வித சுதந்தரங்களை பார்க்க வேண்டும், நர்மாலேயே நடத்த வேண்டும் என்கிற எண்ணம் கொண்டால் ஒன்றும் நடவாது. இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தினால்தான் கூடிய சீக்கிரம் முன்னுக்குவரும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

***

சிறு தொழில் விஷயங்கள்.

எப்படி ரப்பரை உலோகத்தோடு இசைவிப்பது.

ப்ரஸ்னை:—ரப்பரை உலோகத்தோடாவது அல்லது மரத்தோடாவது ஒட்ட வைக்கும் வழியை எடுத்துச் சொல்லுவீர்களா? காற்றுப்போகாத அல்லது நுழையாத சம்பந்தம் பூர்த்தியற்றதாயிருக்கிறபடியால், நீராவிக் குழாய்களுக்கும் ரப்பர் வட்டங்களுக்கும் சம்பந்தத்தை உண்டாக்குவது மிருந்த கஷ்டத்தை உண்டாக்குகிறது.

உத்தரம்:—ரப்பரோடும் உலோகத்தோடும் மரத்தோடும் ஒட்டிக்கொள்ளத்தக்க ஒட்டும் பசையை உபயோகிக்கிறதினால் கஷ்டத்தை நீக்கலாம். (Gum shellac) என்பதைத் தூளசெய்து அதின் எடைக்கு பத்தத்தனை, சுருக்கான அமோனியாவில் நனைய விடுவதால் ஓர் ஒட்டிக்கொள்ளும் பசை உண்டாகிறது. அது மூன்று முதல் நான்கு வாரங்களில் வெந்நீரின் உதவி இல்லாமலே நீராய்விடுகிறது. இது ரப்பரை மிருதுவாக்குகிறது. அமோனியாவின் த்ருவகுணம் மாறுபட்டபோது கடினமாயும் வாயுபதார்த்தத்திற்கும் த்ருவ பதார்த்தத்திற்கும் இடம் கொடுக்காததாய்விடுகிறது.

***

தந்தத்தின்மேல் வரிகள் செய்வது.

ப்ரஸ்னை:—தந்தத்தின்மேல் எப்படி ஒரு மாதிரியைக் கீறுகிறது.

உத்தரம்—கீறப்படவேண்டிய தந்தத்தைத் தேன்மெழுகினால் லேசாய்ப் பூசவேண்டும். உனக்குவேண்டிய மாதிரியை அதின்மேல் கீறவேண்டும். அதின்மேல், சுருக்கான நைட்ரேட்சில்வர்சொல்யூஷனை வார்க்கவேண்டும். போதுமான காலம் வரைக்கும் அப்படியேயிருக்கவேண்டும். பிறகு சுடுகிற நீரால் கழுவுவதால் அதை மெழுகோடுகூட எடுத்துவிடவேண்டும். மாதிரியானது கருப்புக்கோடுகளாகத் தந்தத்தின்மேல விழுந்திருக்கும்.

***

மாட்டுக்கோம்புக்குச் சாயமேற்றல்.

பிரஸ்னை—மாட்டுக்கொம்புக்கு எப்படி கருப்பு சாயம் ஏற்றுகிறது? எப்படி மாட்டுக்கொம்பும் மாட்டுக்கொம்பு ஜாமான்களும் கருப்பு சாயத்தை அடையும்?

உத்தரம்—வேலை பூர்த்தியான சாமானை எடுத்துக்கொள். காஸ்டிக் பொட்டாஷில் அல்லது சோடாவில் அமிழ்த்து. மாட்டுக்கொம்பின் மேல்பாகப்பரப்பு கரைந்துபோகிற வரையில் அப்படியேயிருக்கவேண்டும். கரைந்துபோனது வழவழப்பாயிருப்பதால் அறிந்துகொள்ளவேண்டியது. ஜாக்ரதையாய் சேர்த்தியான சிறு பற்களையுடைய சீப்புகள் ஒரு கெடுதியுமில்லாமல் சாயமேற்றப்படலாம். பிறகு அவைகள் கழுவப்படவேண்டும். பின்பு

அனிலேன் கறுப்பு வர்ணத்தில் அமிழ்த்தி மெதுவாய் உலர்த்தப்படவேண்டும். பிறகு மறுபடியும் கழுவப்படவேண்டும். வெளிச்சம் அதின்மேல் விழும்படி செய்தால் கொம்பானது கருத்து மங்கலான நிறத்தையுடையதாகிறது. ஆனால், பிரதிபலிக்கப்பட்ட ஒளி விழுந்தால் அது அழுத்தமான கருப்பாக இருக்கிறது.

***

பென்சல் செய்யும் வகை.

பிரஸ்னை—கருப்பு ஈயபென்சல் எழுதுகோல் எப்படி செய்வது? ஈயஎழுதுகோல் யந்திர உதவி யில்லாமல் செய்யப்படலாமா! ஈயம்எப்படி செய்யவேண்டும்.

உத்தரம்:—வெள்ளைக் களிமண்ணை எடுத்துக்கொள். அது நனைந்துபோகும்படி சுத்தநீருள்ள தொட்டியில் 12 மணி நேரம் வை. பாலைப்போல் காணப்படுகிற வரையில் எல்லாவற்றையும் குலுக்கு. இரண்டு மூன்று நிமிஷம் சும்மாயிருக்கட்டும். பிறகு வேறொரு பாத்திரத்தில் பால்போன்ற த்ருவபதார்த்தத்தை வார். அதில் தெளியும்படி விடு. சுத்தநீரைக் கீழே ஊற்றிவிடு. மீதியாயுள்ளவற்றை வடிகட்டுவதால் உலரவிடு. பிறகு எவ்வளவு கருப்பு ஈயத்தை என்றாலும தூளாக்கி சேர். ஓர் குகையில் போட்டு தளத்தியாய் மூடிச்சூடேத்த வேண்டும். குளிரச்செய்து ஜாக்ரதையாய் அரைக்கவேண்டும் பிறகு தயாரித்த களிமண்ணையும் தயாரித்தஈயத்தையும் சரிபாகமாய்ச்சேர். அது கலக்கும்படி நீரைவிடவேண்டும். அதைப் பசையாக்கு. எண்ணை தடவப்பெற்ற வேண்டிய ப்ரமாணமுள்ள அச்சில்போடு. மெதுவாய் உலரவிடு. எவ்வளவு கடினம் வேண்டுமோ அதற்குப் போதுமான சூட்டை ஏற்று கடைசியாய் அச்சிலிருந்து ஜாக்ரதையாய்த் துண்டுகளை எடுக்கவேண்டும். தயாரித்த கட்டையின் துவாரத்தில் விடவேண்டும்! அதிக களிமண்ணையும் சூட்டையும் உபயோகப்படுத்தினால் கம்பி அதிகக் கடினமாயிருக்கும். கொஞ்சம் களிமண்ணையும் சூட்டையும் உபயோகித்தால்முன் சொன்னதற்கு மாறான குணத்தை யுடையதாகும். கருப்பு வர்ணம் கூட அதே மாதிரியில் வித்தியாசப்படலாம். ஒவ்வொரு அச்சும் நான்கு மரத்துண்டுகளால் ஆகவேண்டும். அவைகள் நேர்த்தியாய் சேர்க்கப்படவேண்டும்.

***

நீர்தாரை கண்டு பிடித்தல்.

(1) கிணறு இல்லாதஇடத்தில் பிரம்பு செடியிருந்தால் அதற்கு மேற்கே $4\frac{1}{2}$ அடி ஆழத்தில் தண்ணீர் அகப்படும்.

(2) ஜம்புமரத்திற்கு கிழக்கே பள்ளங்கள் இருந்தால் அந்த மரத்திற்கு தெற்கில் $16\frac{3}{4}$-அடி ஆழத்தில் தண்ணீர் அகப்படும்.

(3) இரண்டாவது சொன்ன சந்தர்ப்பங்களில் எலும்பும் ஆகாயநிறமான கீழ்வரிசை மண்ணும் புறாவின்நிறம் வாய்ந்த கற்களும் அகப்படும்.

(4) நாகதாளிப் புதருக்குத் தெற்கில் $4\frac{1}{2}$ அடிக்கு அப்புறம் ஓர் பள்ளம் இருந்தால் கொஞ்சம் ஆழத்தில் தண்ணீர் கிடைக்கும்.

(5) போர்மரத்திற்கு கிழக்கே அநேகம் பள்ளங்கள் இருந்தால் அதற்கு மேற்கே $16\frac{3}{4}$ அடிஆழத்தில் தண்ணீர் கிடைக்கும்.

(6) போர்மரத்திற்குத்தெற்கே ஓர்பள்ளம் இருந்தால் அதற்குக்கிழக்கே 8 அடி $4\frac{1}{2}$ அங்குல ஆழத்தில் நீர்தாரை யிருக்கும்.

(7) கரைமட்டத்திற்கு $1\frac{1}{2}$ அடி ஆழத்தில் எந்த மரத்தின் வேர்களிலாவது தவளைகள் இருந்தால், 25 அடி $1\frac{1}{2}$ அங்குலத்திற்குக்கீழ் அதேமரத்தின் கீழ் தண்ணீர் அகப்படும். இந்த குணத்தை அறிந்துகொண்டுதான் கிணறு தோண்ட வேண்டும்.

(8) மௌரா மரத்திற்கு வடக்காக பாம்பின் பள்ளம்இருந்தால் $7\frac{1}{2}$ அடிக்குக் கீழ் தண்ணீர் அகப்படும்.

(9) உலர்ந்த நிலத்தில் தாரோ, வீரன், செடிகள் எப்போதும் பச்சென்றிருந்தால் அங்கே $4\frac{3}{4}$ அடிக்குக் கீழே தண்ணீர் அகப்படும்.

***

தகரத்தகடு செய்தல்.

எல்லாத் தகர சாமான்களும் முன்னைக் காட்டிலும் அதிக விலைக்கு விற்கவேண்டுமென்று விளம்பரப் படுத்தியிருப்பதால் தகரத்தகடு இந்தியாவிலேயே ஏன் செய்யக்கூடாது என்பதைப்பற்றி யோசிப்பது இப்போது அத்தியாவசியமாகிறது. தகரத்தகடு உற்பத்தியாக்கும் தொழில் அதிக லாபத்தைக் கொடுக்கத்தக்கது. அநேகருக்கு வேலையையும் கொடுக்கும். அன்னிய தேசத்துத் தகரத்தகடை ஏன்வாங்கவேண்டும்? இந்த தேசத்தில் தகரத்தகடு செய்யும் எல்லா சௌகரியங்களும் இருக்கின்றன. ஒத்து உழையுங்கள். கைத்தொழில் விர்த்தி அடையும்.

"Tata iron & Steel Co., Ltd. வேண்டிய தாகதியான எழுகைச் சேகரித்துக் கொடுக்கட்டும் அல்லது அவர்களே தகரத்தகட்டை உண்டாக்கட்டும், அல்லது யாராவது சிலர் எழுகுக் கம்பிகளை வாங்கித் தகடு செய்யலாம். இன்னும் சிலர் தகரப்பெட்டி முதலியவைகளை செய்யட்டும். ஆனால் சிலர் முக்கியமாய் வேண்டிய (Tin) வெள்ளீயம் எங்கே யிருக்கிறதென்றும் தகரத்தகடு செய்கிறதென்றும் கேட்கலாம்.

***

பின்வருவது தகரத்தகடு செய்யும்விதம்.

நூற்றுக்கு 0. 1 கார்பன்உள்ள மிருதுவான எழுகுக் கம்பிகளை திரைப்பதிலிருந்து தகரத்தகடு செய்தொழில் ஆரம்பமாகிறது. இவைகள் 6 முதல் 10 அங்குல அகலமும், 3/8 முதல் 7/8 அங்குலகனமுமுள்ளவையாகின்றன. அவைகள் சிறு துண்டுகளாக வெட்டப்படுகின்றன. 3/4 அங்குல ஆழமுள்ள உருக்கு இரும்பு திரணைகளுக்கு மத்தியில் செலுத்தப்படுகின்றன. இந்தத் திரணைகள் நெடுக்களவில் 19 அங்குலம் இருக்கின்றன. வழக்கமாய் 26 அங்குலம் நீளமுள்ளவை திரளும் வேகம் குறைச்சலாயிருக்கிறது. ஒரு நிமிஷத்திற்கு 40 சுற்றுக்கு மேலாகிறதில்லை. ஒவ்வொரு யந்திரத்திற்கும் 4 பேர் இருக்கிறார்கள். திரணையின் இரண்டு பக்கத்திற்கும் இரண்டு பேர்கள். உலைக்கூடத்தில் ஒருவன், நான்காவது மனிதன் மடிக்கிறவனுடைய கத்தரிப்பைப் பார்க்க வேண்டியது. உலோகமானது காய்ச்சப்பட்டு 5 முறை திரைக்கப்படுகிறது. முதல் தடவைக் காய்ச்சினதும் நீண்டஓரம் காடுமுரடைச் சரிப்படுத்துகிற திரணைகளின்

முனையில் வைக்கப்படுகின்றது. அதினால அகலவழியாய் உலோகம் நிமிர்த்தப்படுகிறது. இரண்டு துண்டுகள் மாற்றி மாற்றி வைக்கப்படுகின்றன. ஒன்றாத் திரைக்கப்பட்டபோது திரணைக்குமேலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அப்போது மற்றொன்று திரணைகளுக்கு மத்தியில் திரைக்கப்பட்டுச் செல்லுகின்றது. இரண்டு துண்டும் நாலைந்துதடவை இம்மாதிரியாக திரைக்கப்படுகிறது. இரண்டாவதுமுறை காய்ச்சினதும் ஒவ்வொரு துண்டும் இரண்டுமுறை திரைக்கப்படுகிறது அதற்குள் அது 14பிஜக்குக் கொண்டுவரப்படுகிறது. அப்போது அது மடிக்கப்படுகிறது. மடித்த ஓரம் நெருக்கப்படும் யந்திரத்தால் தட்டையாகச் செய்யப்படுகிறது. ஒருதடவை மடிக்கப்பட்ட ஒவ்வொரு துண்டும் மறுபடியும் காய்ச்சப்படுகிறது. கடைசியாகத் திரைத் திரணைகளில் நீட்டப்படுகிறது. மறுபடியும் மடிக்கப்படுகிறது. அதினால் இப்போது அது நாலு அடுக்கு ஆகிறது. நெருக்கும் ஆயுதம் மடிக்கப்பட்ட ஓரத்தைத் தட்டையாக்கின உடனே முதல் மடித்தபோது ஒன்றாய்வந்த ஓரங்கள் கத்திரியால் கத்திரிக்கப்படுகிறது. துண்டுகள் கடைசியாக காய்ச்சப்படுகிற உலையில் போடப்படுகிறது. நான்காம்முறை காய்ப்பு ஆனதும் முன் செய்தமாதிரியே செய்யப்படுகிறது. இரண்டுமுறை மடித்ததுண்டு நீட்டப்படுகிறது, மடிக்கப்படுகிறது. அப்போது எட்டு மடிப்பு ஆகிறது. வெளியாகவுள்ள முனைகள் கடைசிமுறைக் காய்ச்ச உலைக்குப் போவதற்கு முன்னமே கத்தரியால் கத்தரிக்கப்படுகின்றன. அவைகள் இப்போது ஒவ்வொன்றும் எட்டு அடுக்குகளை உடையதாகின்றன. திரணைகளில் கடைசியாகப் பாய்ச்சி எடுக்கப்படுகின்றன. உலைக்கு வெகுதூரத்தில் யந்திரத்தின் பக்கத்தில் அடுக்கப்படுகின்றன.

ஏன் மடிக்கப்பட வேண்டுமென்றால் திரணைகள் உறுத்துவதற்கு வேண்டிய கனத்தை அப்படிச் செய்வதால்தான் அடையக்கூடும். சில யந்திரங்களில் இப்போது விவரிக்கப்பட்ட செயல்கள் வித்தியாசப்படுகின்றன. விவரிக்கப்பட்டமுறை சௌத்வேல்ஸில் நடக்கும் மாதிரி. பிறகு தகடுகள் வேண்டிய அளவுக்குக் கத்தரிக்கப்படுகின்றன. பிறகு தகடுகள் நீர் கலந்த கந்தகத்திராவகத்தால் தடவப்படுகின்றன. திரைக்கப்பட்டபோது உண்டான கருத்த துரு பொரசல் அதினால் போகின்றன. பிறகு எழுகை மயப்படுத்துவதற்காக அதிக சூட்டில் தோய்த்தெடுப்பதினால் தகடுகள் ஓர் பளபளப்பான கருநிறத்தை யடைகின்றன. பிறகு காய்ச்சாமல் திரைக்கப்படவேண்டியது. நீர்தோய்த்த கறையடையாளங்களெல்லாம் மாறுகின்றன. காய்ச்சாமல் திரைக்கும்போது நல்ல மேல்பாப்பை உண்டாக்கிறது. 26 அங்குல நீளமும் 19 அங்குல நெடுக்களவுமுள்ள இந்தத் திரணைகள் எல்லா விதங்களிலும் யந்திரத் திரணைகளைப் போல்தான் இருக்கிறது. ஆனால் ஆழிமாத்திரம் $\frac{1}{2}$ அங்குல ஆழமாயிருக்கிறது. ஒரு நிமிஷத்திற்கு 50 சுற்றுள்ள வேகத்தை உடையது. ஒவ்வொரு ஜதை திரணையிலும் ஒரு பையன் முட்டி போட்டுக்கொண்டு தகடுகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்கிறான். ஒன்றின்பின் ஒன்றாய் அதிக வேகமாய்த் தகடுகளைத் திரணைகளுக்கு மத்தியில் கொடுக்கிறான். அவன் கையை

யும் கட்டை விரலையும் தகடுகளைத் தனித் தனியாய்ப் பிரிப்பதற்கும் கொடுப்பதற்கும் உபயோகப்படுத்துகிறான். பின்னை இன்னொரு பையன் அந்தத் தகடுகளைப் பொறுக்கிக் கடைசி திரணைப் பந்திக்கு எடுத்துக்கொண்டு போகிறான். ஒவ்வொரு தகடும் இம்மாதிரியாக மூன்று தடவை திரைக்கப்படுகிறது. ஒவ்வொரு திரணைப் பந்தியிலும் ஒருமுறை திரைக்கப்படுகிறது. குளிர்ந்த திரைப்பு மிருதுவான தகடுகளைக் கடினமாயும், நெருக்கமாயும் செய்கிறது. ஆகையால் மறுபடியும் திரைக்கப்பட்டதினால் உண்டான கடினத்திலிருந்து நீங்கித் தகட்டில் வேண்டிய மெதுவான வளையும் தன்மையை அடையவேண்டியதாயிருக்கிறது. இதைத்தான் Annealing என்பது. Black என்பதில் உள்ள செய்கைதான். இதில் அனுசரிக்க வேண்டியது. இதற்கு 7 மணி சாவகாசம் தான் வேண்டியது. தகடுகள் கடைசியாக துருமுதலியன இல்லாமல் தேய்க்கப்படுகிறது. அப்போது வெள்ளீயம்பூச சரியாயிருக்கிறது. நன்றாய் வெளுக்கத் தேய்த்தபிறகு தகடுகள் உலருவதற்கு முன்னாக டின் பானையில் வைக்கப்படுகின்றன. அந்த பானை இரண்டு பாகமாக இருக்கின்றது. முதல் பாகத்தின் உருக்கிய ஈயத்தின் மேல் பாப்பு மூன்று அறைகளாக தடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பாகத்தின்மேல் பாம் (Palm) எண்ணெய் நிறைந்த வழவழுப்பான பானை வைக்கப்பட்டிருக்கிறது. பானையண்டை இரண்டுபேர் வேலை செய்கிறார்கள். ஒருவன் தகடுகளை ஈயத்தில் கொடுக்கிறான். மற்றொருவன் குறடு வைத்துக் கொண்டு எண்ணெய் பசைப் பாகனையிலிருந்து வெளியே வரும்போது எடுத்து சுத்தப்படுகிற யந்திரத்திற்கு கொடுக்கிறான். தகடுகள் இதின் மூலமாக கொடுக்கப்பட்டு கைமுட்டுகோலினால் ஈயத்தின் மூலமாய்த் தள்ளப்படுகின்றன. கடைசியாகத் திரணைகள் அவைகளை கிரகித்துக் கொள்ளுகின்றன. பானையின் முதல் பாகத்திலிருந்து தகடுகள் வெளியாகும் போது வெளியில் வாங்கிக் கொள்ளும் வழிக்கு சரியாய் வருகின்றன. இரண்டாவது திரணைகளில் வளைத்துக் கொடுக்கப்படுகின்றன. இம்மாதிரியாக தகடுகள் பானையின் 2-வது பாகத்தின் மூலமாய்ச் சென்று மேலே (Palm) பாம் எண்ணெயின் மூலமாய்ச் செல்லுகிறது. ஈயத்தில் பாய்ந்து தகடுகள் செல்லும்போது ஓர் கனமான ஈய பூச்சை எடுத்துக் கொள்ளுகிறது. ஜாஸ்தியான ஈயம் எண்ணெய்ப் பானையின் திரணைகளால் வழித்தெடுக்கப்படுகின்றது. பாம் எண்ணெய் என் சூடாக இருக்க வேண்டும் என்றால் அதிகமான ஈயத்தை வழித்தெடுக்கும்போது ஈயத்தை நீராகவே வைத்துக் கொண்டிருக்கும் பொருட்டுத் தான். கடைசியான திரணைகளை உருட்டும் சூஸ்திரத்தின்மேல் கொஞ்சம் பலத்தைச் செலுத்தினாலும் அதிக வேகத்தை திரணைகளுக்கு கொடுப்பதினாலும் ஈய கனப்பூச்சு உண்டாகும். கடைசியான திரணைகளை உருட்டும் சூஸ்திரத்தின்மேல் அதிக பலத்தைச் செலுத்துவதினாலும் கொஞ்சம் வேகத்தைத் திரணைகளுக்குக்கொடுப்பதினாலும் இலேசான ஈயப்பூச்சு உண்டாகும். ஈயம் பூசப்பட்ட மேல் பாப்பில் எண்ணெய் பசையிருக்க விடக்கூடாதென்பது எல்லாருக்கும் ஸ்பஷ்டமான விஷயம். சுத்தப்படுத்தும் யந்திரத்திற்கு தகடுகள் எடுத்துக் கொண்டு

போகப்படுகின்றன. அந்த யந்திரம் தகடுகளை எண்ணெய்ப் பசையை போக்குகிற குணமுள்ள கூட்டுஜலத்தில் தள்ளுகிறது. உமி தவிட்டையாவது கல்பொடியையாவது கிளாஸ் தூளையாவது சுத்தப்படுத்த உபயோகிக்கிறார்கள். கடைசியாக முடிந்த தகடுகள் தரகதி பிரிக்கிற அறைக்கு கொண்டு போகப்படுகின்றன. அங்கே தகடுகளை தனித்தனியாயும் ஜாக்கிரதையாயும் பார்க்கிறார்கள். பழுதுள்ளவைகளை குறைந்த விலைக்கு விற்று வருகிறார்கள். தகடுகளை எண்ணுகிறார்கள், எடைபோடுகிறார்கள். கடினமான மரப்பெட்டிகளில் போட்டு ஆணி தைத்து மூடிவிடுகிறார்கள் அவைகளைக் கப்பலேற்றுகிறார்கள்.

***

முட்டையைப் பாதுகாக்கும் புதுமாதிரி.

நீடித்த காலத்திற்கும், தொலை தூரத்திற்கும் வெளி தேசத்திற்கும் அனுப்புவதற்கும் முட்டைகள், அகப்படாத போது புசிக்க வைப்பதற்கும் அநேக பாதுகாப்பு மாதிரிகள் பரீக்ஷிக்கப்பட்டன. அவைகளில் சிலவற்றை ரிஜிஸ்தரும் செய்து கொண்டார்கள். ஆனாலும் ஒன்றும் கெடுதலைக்கு கெட்டுப்போகாமல் முட்டையைப் பாதுகாக்கும் வழி இது வரைக்கும் உண்மையாய்க்கண்டுபிடிக்கவில்லை. இப்போது இந்த குறை நீங்க க்வீன் ஸ்லாண்டு விவசாய பத்திரிகையில் ஒரு நூதன சுலபமான வழியை பிரசுரப்படுத்தியிருக்கிறது. அதை இங்கே சுருக்கமாய் விவரிப்போம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் முட்டைக்குள் காற்று பிரவேசிக்காதபடி பார்க்க வேண்டியது. இது மாத்திரம் அழுகிப் போதலை நிறுத்தாது. ஏனென்றால் அழுகலுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் ஓட்டின் துவாரங்களிலேயே இருக்கிறது. அதினால் பூரணமான பாதுகாப்பை அடைய முட்டைக்குள் காற்றுபோகாமல் பார்ப்பதோடு ஜீவசக்தியை நிலைநிறுத்த வேண்டியதும் அவசியம். முதலில் முட்டைகளை விரிந்தாவது உடைந்தாவது இருக்கிறதாவென்று ஜாக்ரதையாய்ப் பார்க்கவேண்டும். விரிந்த அல்லது உடைந்த முட்டைகளை விலக்கவேண்டும். பிறகு 95 டிக்ரி பாரின்ஹேட் உள்ள சுட்டநீரில் வைக்க வேண்டும். அதில் பதினைந்து நிமிஷம் இருக்கவேண்டும். வெளியே எடுத்த பிற்பாடு ஓட்டிலிருந்து அழுக்கை நீக்க சிறு கந்தையால் துடைக்கவேண்டும். சுத்தமானபிறகு ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொதிக்கிறத் தண்ணீரில் நாலைந்து விநாடி வரைக்கும் முழுகவைக்க வேண்டியது. அந்த காலத்திற்குப் பிறகு அவைகளை எடுத்துக் குளிர்ந்த ஜலத்தில் ஆரவைக்க வேண்டும். காற்றில் உலரும்படி வஸ்திரத்தின்மேல் வைக்கவேண்டும். இப்போது துணியால் முரட்டுத்தனமாய் தேய்க்கப்படக்கூடாது. உலர்ந்ததும் அவைகளைப் பெட்டியில் போடவேண்டும். உமியால் மூடிவைக்க வேண்டும். வைக்கோல் துண்டுகளில் மூடிவைக்கவேண்டும். உலர்ந்த குளிர்ச்சியான இடத்தில் வைக்க வேண்டும். எதினால் மூடுகிறோமோ அந்த வஸ்து முழுவதும் உலர்ந்திருக்கவேண்டும். ஐந்து விநாடிவரைக்கும் கொதிக்கிற தண்ணீரில் முழுக வைக்கிறதினால் ஸ்தாவர சிவவர்க்கம் எல்லாம் நாசமாகிறது. அதே வேளையில் அதிக உஷ்ணத்தால் முட்டையின் ஓட்டை அதின் தோலோடு ஒட்டிக்கொண்டிருக்கும்படிச் செய்

கிற முட்டையின் உள்ளிருக்கிற மாமிசப் பற்று கெட்டியாய் விடுகிறது. அதினால் ஓட்டின் துவாரங்கள் அடைப்பட்டுப்போகிறது. கெடுதியான வஸ்துக்கள் ஒன்றும் சேராதபடி தடைசெய்யப்படுகிறது. இந்த விதத்தில் முக்கியக் கஷ்டம் என்னவென்றால் கொதிக்கிற நீரில் முட்டைகளை அமிழ்த்தும்போது ஐந்து விநாடியைக் கணக்கிடுவதுதான். அவைகளைக் கட்டுகட்டும் சாமான்கள் உலர்ந்ததாயிருக்கவேண்டும். முட்டைகளை ஐந்து விநாடிக்குமேல் வைத்திருந்தால் முக்கியமாய் அச்ச ஓடுள்ள முட்டைகள் ஓட்டுக்கு அடியிலுள்ள மாமிச பற்றில் ஒரு பாகமாத்திரம் கட்டிப் போகிறது, ஸ்தாவர்க்கம் நாசமாகிறதில்லை. ஆகையால் எல்லா முட்டையையும் 3 முதல் 5 விநாடி (நான்கு விநாடி உத்தமம்) வரையில் முட்டையைக் கொதிக்கும் நீரில் அமிழ்த்துவதில்தானிருக்கிறது. இந்தவிதம் சுலபமாயும் பணச்செலவில்லாததாயும் இருக்கிறது. ஆகையால் வீட்டுக்காரர்களும குடியானவர்களும் மாத்திரமல்ல, ஏராளமாய் முட்டை வியாபாரம் செய்கிறவர்களும கையாடுகிறார்கள். இந்த விதத்தில பாதுகாக்கப்பட்ட முட்டைகள் அதிக புதிதாயும நல்லதாயுமிருக்கக் கண்டிருக்கிறோம். இவைகளுக்கும் இப்போது வைத்த முட்டைகளுக்கும் ருசியிலேயும் வாசனையிலேயும் ஒரு வித்தியாசமும் காணப்படவில்லை. எகிப்திலிருந்து இங்கிலாந்திற்கு முட்டைகளை ஏராளமா யனுப்பும வியாபாரிகள் இந்த சுலபமான மாதிரியைக் கையாடுகிறார்களோ இல்லையோ தெரியாது. முட்டை வியாபாரம் செய்கிறவர்களிடத்திலிருந்து இந்த முறையின் பலனை தெரிந்துகொள்ள ஆசையுள்ளவர்களாயிருக்கிறோம்.

ஜப்பான் தீக்குச்சித்தொழில்.

(Tokugawa) டொகுகாவா அரசின் பின்பாகம் வரைக்கும் ஜப்பான்தேசத்தில் தீக்குச்சி உபயோகத்திற்கு வாயில்லை. அந்த காலம்வரைக்கும் நெருப்பு சக்கிமுக்கிக்கல்லில் எழுகை அடித்து அதன் பொறியைத் தேங்காய் நாரில் பிடிக்கிறதினால் உண்டாக்கப்பட்டது. மெய்ஜி இராஜ்யபாரகாலத்தின் முதல் பாகத்தில் தீக்குச்சியின் உபயோகம் சாதாரணமாய்விட்டது. படிப்பதற்காக 1870ஹில் பிரான்சு தேசத்திற்குச் சென்ற Makoto Shimidozu என்பவரால்தான் மேல்நாட்டுத் தீக்குச்சி ஜப்பானுக்கு வந்தது. என்ஜினியரிங் வாசிப்பிற்காக அவர் கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்டார். 1875-ம் வருஷத்தில் சுதேசத்திற்கு வந்தபோது தீக்குச்சி வேலையைத் துவக்கினார். ஜப்பானில் இதுவரைக்கும் இந்தப் பிரயத்தினம் கிடைக்காது. டொக்கியோவில் ஹொஞ்ஜெ என்னும் ஊரில் அவர் தொழிற்சாலையை ஸ்தாபித்தார். முதலில் தீக்குச்சிகள் செய்ய வெள்ளை போபலர் மரம் போதுமான அளவு சேகரமில்லாததால் அதிக கஷ்டத்திற்குள்ளானார். ஆனால் நீக்கோவிலேயும் ப்யூஜி மலையின் அடிவாரத்தைச் சுற்றியும் வேலைக்குத் தகுந்த மரம் இருக்கக்கண்டார். பின்னால் ஏராளமான சேகரம் ஹொக்கெஸ்டோவிலிருந்து வந்தது. 1878-ம் வருஷத்தில் ஷிமிட்சு என்பவர் மறுபடியும் மேல்நாட்டுக்குச் சென்று தீக்குச்சி செய்யும் தேசங்களுக்கெல்லாம் சென்று பார்த்தார். திரும்பி வந்தபோது ஒஸாகா, கோப், நகோயா என்னுமிடங்களில் தீக்குச்சிச் சாலைகளை ஏற்படுத்தினார். முதல் முதலில் ஜப்பானியரை தீக்குச்சிகளை உபயோகிக்கச் செய்வது அதிக கஷ்டமாயிருந்தது. ஏனென்றால் அதினால் உண்டாகும் நெருப்பு பரிசுத்தமற்றதென்றும் தெய்வீக மற்றதென்றதென்றும் பெரும்பாலும் பூலோகத்திற்குரியதென்றும் நினைக்கப்பட்டது. அநேக வருஷம் வரைக்கும் கோயில் பலிபீடம் அல்லது பெரியவாள் சமாதி இவைகளின் முன்னே பரிசுத்த நெருப்பை உண்டாக்குவதற்குத் தீக்குச்சியை உபயோகிக்க ஒரு ஜப்பானியனாவது நினைக்கவில்லை. பூர்வீக மாதிரியாகவே சக்கிமுக்கிக் கல்லில் எழுகைத் தாக்குவதால் நெருப்பு உண்டாக்கப்பட்டது. அந்த அபிமானம் நெடுநாள் வரைக்கும் இருந்தது. கொஞ்ச காலத்திற்கு முந்திதான் அது பற்றறத் தொலைந்தது.

ஜப்பானியர் மூன்றுவித தீக்குச்சிகளைச் செய்கிறார்கள். 1-வது சேப்டி மாட்ச். 2-வது பாஸ்பரஸ் மாட்ச். 3-வது கந்தக மாட்ச். இந்தத்தொழில் பல பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. குச்சி மாத்திரம் செய்கிறவர்கள். பெட்டி மாத்திரம் செய்கிறவர்கள், தீக்குச்சிகளின் முனையில் நெருப்புப்பற்றும் மருந்தை தோய்க்கிறவர்கள், தீக்குச்சிகளைச் செய்கிறவர்கள் மரத்தைச்சரசமான கடைத்தெருவில் வாங்குகிறார்கள். மற்ற வேலைகளை செய்கிறவர்களுக்கு சம்மந்தப்படாமலே தங்கள் வேலையைச் செய்கிறார்கள். வெள்ளை அல்லது சிகப்பு போப்லர் மரமும் லார்ச் மரமும் உபயோகப்படுகின்றன. மரங்களை வெட்டி 7 முதல் 10 அடி நீளமுள்ள துண்டுகளாக அறுக்கிறார்கள். 8 அங்குலத்திற்குக் கொஞ்சம் அதிகமான துண்டுகளாக மறுபடியும் துணிக்கப்படுகின்றன. பட்டையை எடுத்துவிடுகிறார்கள். இந்தத் துண்டுகளை யந்திரத்தில் இடுகிறார்கள். தீக்குச்சிகள் இம்மாதிரியாகின்றன. தீக்குச்சிகள் உலர்த்தப்பட்டுகட்டுகட்டப் படுகின்றன. விறகுவெட்டிகள் காட்டில் இலைதுளிர் காலத்தில் ஏப்ரல்மீத்தில் வழக்கமாய்ப் போகிறார்கள். ஹொக்கேஸ்டோதான் உத்தமமான மரக்காடு.

தீப்பெட்டிகளைச் செய்வதுகூட பிரத்தியேகமான தொழில். அதற்கு வேண்டிய மரம் லார்ச் அல்லது ஹினோகி. மரவர்த்தகர்களிடத்திலிருந்து வாங்குகிறார்கள். மரப்பலகைகள் இரண்டு பிரமாணமாக வெட்டப்படுகின்றன. ஒன்று பெட்டியின் பக்கங்களுக்கும் அடிப்பக்கத்திற்கும். மற்றொன்று தீக்குச்சிகள் இருக்குமிடம். மரம் பலகைகளைக் கையினால் ஆக்கப்படுகின்றன. பெட்டிகளும் கையினால் ஆக்கப்படுகின்றன. அவைகளை ஒட்டுவதற்கு அரிசிமாவுப் பசையை உபயோகிக்கிறார்கள். வர்ணக்காகிதங்களை ஒட்டுவதற்கும் அதுதான் உபயோகம். இவ்வேலைகளெல்லாம் பட்டணத்தில் ஏழை ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. ஆகையால் ஜப்பானில் தீப்பெட்டி செய்வதற்கென்று ஒரு தொழிற்சாலையுமில்லை. தீர்மானமான பெட்டிகள் பதினாயிரம் கணக்காய்ப் பிரித்து அடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னொரு வேலை என்னவெனில் பாக்கிங் பெட்டி செய்வது. இந்தப் பெட்டியில்தான் தீக்குச்சிகள் நிறைந்த பெட்டிகளை வைக்கிறார்கள். இந்தப் பெட்டிகள் வெளிதேசத்திற்கு அனுப்படுவதற்கு போதிய பலத்தை உடையதாயிருக்க வேண்டும். இந்தத் தொழிலில் வியாபாரச் சம்

பந்த வகுப்பினர் பூர்த்தியான தீக்குச்சிகளை செய்வதைத்தான் மேற்கொண்டிருக்கிறார்கள். இங்கே ஆயிரக்கணக்கான ஆட்கள் எப்போதும் வேலை செய்கிறார்கள். சிலர் குச்சிகளை உலர்த்துகிறார்கள். உலர்த்துவதற்கு காயவைத்த இரும்புத் தகட்டின்மேல் போடுகிறார்கள். தேய்க்கப்படும்போது வெளிச்சத்தை உண்டாக்குகிற ரசாயனத் திரவியத்தைப் பிடித்துக்கொள்ளத் தகுந்ததாயிருக்கும் முனைகளைக் காய்ச்சுகிறார்கள். ரசாயனத் திரவியம் வைப்பதற்கு முன்னமே குச்சியானது பாரபின் (Parafin)ல் தோய்க்கப்படுகிறது. பிறகு முனையில் மருந்தை வைக்கிறார்கள். இது நன்றாய் ஒட்டிக்கொண்டதும் சூரிய வெப்பத்தில் உலர்த்தப்படுகிறது. பாஸ்பாஸ் தீக்குச்சிகள் மாத்திரம் நிழலில் உலர்த்தப்படுகிறது. அப்படிச் செய்வதால் புகைந்துபோதல் தடுக்கப்படுகிறது. அநேகமாய் வேலைசெய்கிறவர்களெல்லாம் ஸ்திரீகள். இவர்கள் பூர்த்தியான தீக்குச்சிகளைத் தொட்டியில் எடுத்துக்கொண்டுபோய் அவைகளுடைய பெட்டிகளில் நிரப்புகிறார்கள். எல்லா வேலையும் கையால்தான் ஆகிறது. தீக்குச்சிகள் மாத்திரம் யந்திரத்தால் ஆகிறது. யந்திரத்தில் செய்வதைவிட ஜப்பானியர் வேலை அதிக சுலபமாயும் சரசமாயுமிருக்கிறது. அன்னிய தேசத்தார்கள் ஜப்பான் தொழிற்சாலைகளை நோக்கும்போது அவைகள் முப்பது வருஷகாலமாயிருந்து இன்னும் பிரதமஸ்திதியிலேயே யிருக்கிறதென்று நினைக்கிறார்கள். யந்திர உபயோக மில்லையென்று குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் இந்தச் சிறுத் தொழிற்சாலைகள் மேல் நாட்டில் கையினால் செய்யும் தொழிற்சாலைகளைக்காட்டிலும் அதிகமாயும் நல்லதாயும் தீக்குச்சிகளை உண்டாக்கித் தருகின்றன. 1902 ம் வருஷத்தில் 28 தீக்குச்சித் தொழிற்சாலைகள்தான் ஜப்பான் முழுவதுமிருந்தது. ஒரு மிலியன் முதல் பணமிருந்தது. அப்படி யிருந்தும் 4000000 யன்க்குக் குறையாமல் தீக்குச்சிகள் ஏற்றுமதியாகிறது. இப்போது ஜப்பானில் நடக்கும் தீக்குச்சி உற்பத்தி முழுவதும் வருஷத்திற்கு 8½ மிலியன் யன் ஆகிறது. இந்த வருஷத்தில் சண்டையினால் தீப்பெட்டிக்குக் கிராக்கி அதிகமாய் விட்டது. இப்போது முதல் பணமே 14 மிலியன் யன் ஆகிறது. தொழிற்சாலைகள் 250 ஆய்விட்டது. அவற்றில் 20000 பேர் வேலை செய்கிறார்கள்.

* * *

ஜப்பான் தீக்குச்சி ஏற்றுமதி.

ஹங்காங், பம்பாய், கல்கத்தா, ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டுகள், சீனா, டச்சு, இண்டீஸ் முதலிய தேசங்களுக்குப் போகிறது. சீனதேசத்துத் தொழிற்சாலைகள் பலமாகிக்கொண் டிருக்கின்றன. ஜப்பானுக்கு சீனா போட்டியாக வரும். ஜப்பான் தேசத்துத் தீக்குச்சிகள் ஒடிந்து போகின்றன என்று குற்றம் கூறுகிறார்கள். குணத்தில் வேற்றுமையும் இருக்கிறதாம். இத்தச் சீர்கேடு எல்லாம் அநேகமாய் இந்தத் தீக்குச்சிகளைச் செய்யும் சிறு வீடுகளினால் உண்டாகின்றன என்று நினைக்கிறார்கள். ஜப்பானில் தீப்பெட்டியின் மேல்காகிதம் அநேக விதமா யிருக்கின்றன. முத்திரை ஸ்டாம்புகளை சேர்க்கிறதுபோல இக்காகிதங்களையும் சேர்க்கிறவர்கள் இருக்கிறார்கள். இது விஷயத்தில் சிலர் அதிகப் பொறுமையாக யிருக்கிறார்கள். அவர்கள் கையில் ஒரு கூரிய இரும்பை எடுத்துக்கொண்டு போகிறார்கள். பாதையில் எங்காவது ஒரு தீப்பெட்டியின்மேல் ஒட்டும் காகிதம் அகப்படும்போது அதைத் திருப்பி முன்பார்த்ததா பாராததா என்றுபார்க்கிறார்கள். இப்படி ஏன் செய்கிறார்கள் என்றால்? இன்னொருவர் வேண்டாமென்று அகற்றிவிட்டதை எடுத்துப் பார்க்கக் குனிய அன்னியர் அவர்களைப் பார்ப்பது அவர்களுக்கு வெட்கக்கேடா யிருக்கிறது. இம்மாதிரியாக லேபில்களை சேகரிக்கிறவர்கள் வருஷத்தில் ஒரு கூட்டம் கூடித் தாங்கள் சேகரித்ததைப் பரிசோதிக்கிறார்கள். டோக்யோவிலேயும் அதற்கு பக்கத்திலேயும் உபயோகிக்கும் லேபில்கள் மஞ்சளாயும், சிவப்பாயும், கருப்பாயும் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று ஒத்துமையில்லை, ஒவ்வொன்றுக்கு வர்த்தக அடையாளங்கள் இருக்கின்றன. ஓஸாகாவில் செய்யப்படுவன சிவப்பாயும், பச்சையாயும், அல்லது நீலமாயுமிருக்கின்றன. அவை மனக்கவர்ச்சியை யுடையவையாய்க் கருதப்படுகின்றன.

ஜப்பானியர் யார் யாருக்குச் சரக்கு அனுப்புகிறார்களோ அவர்களுடைய இஷ்டப்பிரகாரம் பெட்டியின்மேல் ஒட்டும் காகிதத்தைச் செய்கிறார்கள். சீன தேசத்தாருக்கு எம்மாதிரி மனோரம்யமா யிருக்குமோ அம்மாதிரியாக அவர்களுக்கு அனுப்பும் சாமான்களின்மேல் ஒட்டுகிறார்கள். அதாவது பாம்பு முதலிய குறிகளை யுடையவைபாயிருக்கின்றன. மேல் நாட்டு வர்த்தக அடையாளங்களை அத்தேசத்திற்குப் போகும் சரக்கிற்கு ஒட்டியனுப்புகிறார்கள்.

* * *

நாகப்பூர் கிச்சிலி மரம்.

நாகப்பூர் கிச்சிலிமரம் வளர்வதற்கு சௌகர்ய சந்தர்ப்பங்கள் சமுத்திர மட்டத்திற்குமேல் 900—3000 அடி உயரத்தில் உலர்ந்த ஆகாய நிலைமையும், நன்றாய் நீர் வற்றிய நிலமும் சீதோஸ்ணஸ்திதி ஒத்ததாயிருந்தால் கருவடி மிஸ்ரமம் முதல் மணல் மிஸ்ரமம் வரையில் எந்த நல்ல நிலத்திலும் பயிராகும். தண்ணீர்த்தேக்கம் மாத்திரம் இருக்கலாகாது. வேரைச் சுற்றிலும் நீர் இருந்தால் கிச்சிலி மரம் அதை உணர்கிறது. தோட்டத்தில் நிலம் தண்ணீர் தேங்குவதாயிருந்தால் ஆழமான பள்ளம்வெட்டி நீர் வற்றும்படிச் செய்கிறார்கள். அவாரம் பொருந்திய மண்குழைகள் அதிக விலையானபடியால் அதை உபயோகிக்கிறதில்லை. மழை காலந்தான் நடுவதற்குத் தகுந்தகாலம். ஆனால் தண்ணீர் ஏராளமாய் இருக்கும்போது குளிர் காலத்தில் எப்போதாகிலும் மரத்தை நடலாம். ஒரு வரிசையில் மரத்திற்கும், மரத்திற்கும் 18 அடி இடமும் ஒரு வரிசைக்கும் மற்றொரு வரிசைக்கும் இடையில் 18 அடி யிருக்கும்படியாகவும் நாகப்பூர் கிச்சிலி மரங்களை நடவேண்டியது. ஒரு புதிய கிச்சிலித் தோட்டத்தை உண்டாக்கும்போது புதிய மரங்களுக்கு வெட்டும் குழிகள் மூன்றடி நீளமும், இரண்டடி அகலமும், மூன்றடி ஆழமும் இருக்கவேண்டியது. அப்படி யிருந்தால்தான் புதிய மரத்தின் வேர் பரவப் போதுமான இடமிருக்கும். குழி தோண்டி நட்டுப் பயிர் ஆவதால் அநேகக் கிளைகளை விடுகிறது. செடி சின்னதா யிருக்கும்போதும் தரைக்குமேல் 3 அல்லது 4 அடி உயரம் வரையில் கிளைகளில்லாமல் கன

மான அடிமரம் உண்டாகிற பரியந்தம் கத்தரிக்கப் படவேண்டும். இந்த மரங்களெல்லாம் பெரிதாய்விட்டால் கத்தரிக்க முடியாது. ஓர் மனோபாவ சிச்சிலிமரம் பூமிக்குச் சம்பந்தமில்லாமல் 3 அடி அடிமரத்தை யுடையதாய் ஓர் குடையைப் போலவும் கவிந்தரூப உச்சியையுடையதாயும் இருக்கவேண்டும்.

இப்போதிருக்கிற நீர் பாய்ச்சும்முறை சரியானதில்லை யென்று ஸ்தாவர சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அநேகத் தோட்டங்களில் மரத்தின் அடியில் ஒரு சட்டியில் தண்ணீர் வைத்துப் பாய்ச்சுகிறார்கள். இதின்பலன் என்னவெனில் எல்லா வேர்களும் ஒரு சிறிய இடத்தில் பரவியிருக்கிறது. கால்வாய் வெட்டி நீர் பாய்ச்சும் முறை அதிக உத்தமமானது. இந்த முறையில், நீர் மரத்தைச்சுற்றிலும் வட்டமாய்ப்பாய்கிறது. மரம் பெரிதாகப் பெரிதாக இந்தவட்டமும் பெரிதாகிறது. கடைசியாக நீரானது கோணக் கால்வாய்களில் மர வரிசைகளுக்கு மத்தியில் பாய்கிறது. மரத்தின் ஆகாரமான வேர்கள் இந்த விதமாக அதிகமாய்ப் பரவுகின்றன. மரத்திற்கு ஜீவாதாரமான வஸ்துக்கள் அதனிடத்திற்குக் கொண்டுவரப் படுகிறது. வயலெல்லாம் மரத்திற்கே உபயோகமாகிறது. கால்வாய்த்தோண்டி நீர் பாய்ச்சும் முறையினால் உண்டாகிற சௌகர்யம் என்னவென்றால், நீர் சிக்கனமாகப் பாய்வதுதான். தொட்டிவைத்துப் பாய்ச்சும் முறையோடு கால்வாய் வெட்டி பாய்ச்சும் முறையை ஒத்திட்டுப் பார்த்தால் முன்னையதிலும் இதில் கால்பங்கு ஜலந்தான் பிடிக்கிறது. நீர் பாய்ச்சல் ஆனதும் கால்வாயை மண்ணில் மூடுவதாகிய இன்னொரு சௌகர்ய மிருக்கிறது. நல்லாவிலுள்ள விடுதிமண் கம்பலத்தைப்போல் இருக்கிறது. நீரை வற்றுதபடியும், விருதா வாகாதபடியும் தடுக்கிறது. மறுபடியும் நீர் பாய்ச்சுங்காலம் வரும்போது இந்த ஒட்டாதமண்ணை நீக்குவது அதிக சுலபம். மறுபடியும் மறுபடியும் நல்லாவை திறப்பது சுலபம். இப்படிச் செய்வதால் 5, 7 நாளைக்குள் ஒருமுறைத் தண்ணீர்ப் பாய்ச்சுவதற்குப் பதிலாக வெயில் காலத்தில்கூட 3 வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சுவது அவசியமாகிறது.

சிச்சிலிமரம் இயற்கையாய் புஷ்பிப்பது பிப்ரவரியீ". மழை ஆரம்பத்திற்கு முன்னே 5, 6 வாரம் நீரை நிறுத்துவதாலும் தரை மட்டத்திலுள்ள வேர்களைத் தெரியும்படி வைப்பதினாலேயும் நாகபூர் மாகாணத்தில் ஜூன் மாதத்தில் புஷ்பிக்கும்படிச் செய்யப்படுகிறது. இந்தக் கெட்ட வழக்கம் மரத்தைப் பட்டுப்போகும் ஸ்திதிக்குக் கொண்டுவருகிறது. இந்தப் பயிரின் பூச்சடிப்பையும், அதின் பரிகாரமும் இந்தப் பயிரைச் செய்கிறவர்களுக்கு பலனைக் கொடுக்கும்.

***

ரசாயன பரிசோதக சௌகர்ய ஏற்பாடு.

தொழில் கற்கிறவர்களுக்கு இலவச உபயோகத்தி லிருக்கும்படி ஓர் ரசாயன பரிசோதகசாலை இருக்கவேண்டிய ஆவசியத்திற்கு இதர காரணங்கள் ஒன்றும் வேண்டியதில்லை. அநேகர் இதன் அவசியத்தை உணர்ந்து அங்கீகாரம் செய்வார்கள். ஒரு அநுபோகமுள்ள ரசாயன சாஸ்திரியின் பொறுப்பிலுள்ள-

ரசாயனச்சாலையின் உபயோகமும் உதவியும் இல்லாமையால் சிறு ரசாயனத்தொழிலின் மேல் வரும்படியை உத்தேசித்து செய்ய விருப்பமுள்ள அநேகர் வருந்துகிறார்கள்.

ரசாயனத் தொழிலாளர்களுக்கு உபயோகமாக ரசாயன பரிசோதகம் செய்கிற பேர்போன ரசாயன சாஸ்திரிகள் இருக்கிறார்கள். ஆனால் ஏழைத் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கட்டணம் அதிகமாயிருக்கிறது. நாம் சொல்லுகிற ரசாயன பரிசோதக ஆராய்ச்சிச் சாலை பொது நன்மையை நாடினதாகவும் சர்வத்தாருடைய ஒத்துழைப்பிற்குச் சாதகமாயுமிருக்கும்

நமது தேசம் விருத்தியை உத்தேசிக்கும் பலவித சாதனங்களுக்கு அநுகூலமான இதுவரைக்கும் தெரியாதவும் கண்டுபிடிக்கப் படாதவுமான வருவாய்களை இன்னும் பூரணமாய் வைத்துக்கொண்டிருக்கிறது. சுரங்கப்பொருளிலேயும் ஸ்தாவரத்திலேயும் நமது தேசம் ஏராளத்தைக் காட்டுகிறது. காரிய சாதகமில்லாதவும் பரிசோதகத்தின் பொருட்டு திரவியச் செலவு செய்ய மனமில்லாதவுமான ஸ்திரமற்ற, சாஸ்திர க்ஞானமில்லாத மனிதர்கள் கையில் நமது வருவாய்களெல்லாம் விருதாவாய்ப் போகிறது. நமது ஜனங்கள் சாப்பாடு இல்லாமல் பட்டினியாயிருக்கிறார்கள். நாம் விவரிக்கிற இந்த ஏற்பாட்டினால் நமது தொழில்களின் விருத்தியின் மார்க்கமாய் எந்தப் பெரிய காரியத்தையாவது செய்து முடிக்கும் ஆற்றலுள்ளவனொன்றுச் சொல்லிக்கொள்ள வில்லை, ஆனால் நமது சிறிய பிரயத்தினம் கொஞ்சமாவது நமது தேசத்தின் கைத்தொழில் வேண்டுதல்களை முன்னுக்குக் கொண்டுவர சக்தியுள்ள சிரத்தையான ஏழை ஜனங்களுக்கு உபயோகமில்லாமல் போகாது. ரசாயன பரிசோதகசாலையை ஸ்தாபிப்பதில் நம்முடையகருத்து என்னென்றால் முதலாவது பரிசோதகசாலையில் நாம் செய்வதற்கு சக்தியுள்ளமாதிரி பார்த்து பரீக்ஷித்தமுறைகளை தொழிலில் செலுத்தல்; இரண்டாவது யார் யாருக்கு தங்கள் பொருட்டு எதையாவது செய்ய இஷ்டமிருக்கிறதோ அவர்களுக்கு பிரிவினையினாலும் மாதிரி பரிசோதகத்தினாலும், ரசாயன பரீக்ஷையினாலும் ரசாயன நிபுணர்களைக் கொண்டு உதவிசெய்தல். மூன்றாவது உபயோகமான ரசாயனங்களைத் தயாரித்துக் கொடுத்தல். அதாவது பரிசோதனைக்கு ஆதாரமான சாமான்களை. அதன சமாச்சாரம் இன்னதென்று தெரியாதவர்களுக்குச் சேகரித்துக் கொடுத்தல் முதலியன. இந்தப் பரிசோதக சாலையைக்கொண்டு நாம் எல்லாவித ஆராய்ச்சியையும் பிரிவினை வேலையையும் நம்முடைய சௌகர்யத்திற்குத் தக்கபடி செய்துகொள்ள வல்லவராவோம்.

***

ஈச்சமரமும் அதன் பலன்களும்.

ஈச்சமரம்; தென்னை, பனை, கமுகு முதலிய வகுப்பில் சேரும். அதன் பழத்திலிருந்து அடையும் சத்தானப் பொருள் கொஞ்சமா யிருக்கிறபடியாலும், அதன் அடிமரம் அதிக முட்செறிவாயிருக்கிறபடியாலும் வேறு விதத்தில் உபயோகமற்றதாகையாலும், மனுஷ பிரயத்தினமில்லாமல் சுலபமாயும், அபரிமிதமாயும் உண்டாவதினாலும் ஈச்சமரம் இதுவரைக்கும்

இந்தியாவில் கவனிக்கப்படாமலும் கொஞ்சமேனும் உபயோகப் படுத்தப்படாமலும் இருக்கிறது. உண்மையாகவே இந்த தேசத்தில் உபயோகத்திற்குக் கொண்டுவராத வருவாய்களில் இது ஒன்றாகயிருக்கிறது. சண்டை காரணமாய் ஆஸ்திரியாவிலிருந்தும், ஜெர்மெனியிலிருந்தும் சரசமான பீட் சக்கரையின் சேகரம் திடீரென்று நின்றுபோகாதிருந்தால் நெடுங்காலம் வரைக்கும ஈச்சமரம் அப்போது போலவே கவனிக்கப்படாமல்தான் இருக்கும். ஈச்சமரம் அதினுடைய இனிப்பும் வாசனையுமுள்ள ரசத்தால்தான் உண்மையாக எல்லாராலும் கவனிக்கப்படத் தக்கதாயிருக்கிறது.

ஈச்சமரம் மானிட உதவியில்லாமலே வங்காளதேச முழுவதிலும் பம்பாய் மதராஸ் இராஜதானிகளின் சமுத்திரக்கரை ஓரத்திலும் மத்திய மாகாணங்களிலும், மத்திய இந்தியாவிலும், பர்மாவிலும் செழுமையாக வளருகிறது. மத்தியமாகாணங்களில் பெரிய விசாலமான காடுகளில் அபரிமிதமாக ஈச்சமரம் காணப்படுகிறது. அங்கேஉள்ள சுதேசிகள் அதின் சாற்றையும் கள்ளையும் பாளையை வெட்டி இறக்குவதற்குத் தெரியாமல் இருக்கிறார்கள். மரங்களை, அவைகளினின்று ஒரு பிரயோசனமும் அடையாமலே, இருக்கிற ஸ்திதியிலேயே விட்டுவிடுகிறார்கள். தற்காலத்திய இந்தியர்கள் சிக்கனஸ்திதிகளை அனுசரித்துப் கடைத்தெருவில் சர்க்கரை அதிக கிராக்கியாயிருத்தலை அனுசரித்தும் உபயோகப்படுத்தப்படாத, பாளைதட்டப்படாத, ஈச்சமரங்களிலிருந்து சாத்தியமாய் அடையக்கூடிய முழுபலத்தை உண்டாக்குவது அவசியமாகிறது. ஆகையால் பங்காளம், மதராஸ, பம்பாய் இராஜதானிகளில் ஈச்சமரத்தைக் களர் நிலத்திலும், கரம்பு நிலத்திலும் நடவேண்டியது அவசியமாகிறது.

ஈச்சமரத்திலிருந்து உண்டாகக்கூடிய முக்கியமான விலைபொருள்கள் பின் வருவன.

(1) இலைகள், மட்டைகள் எங்கே உண்டாகிறதோ அந்த மேல்பாகத்தில் பாளை தட்டுவதால் அடையும் சாறு. (2) பழம் (3) இலைகள் பாளைகள். (4) அடி மரத்திம்மை. (5) அதின் உட்பாகத்திலுள்ள மிருதுவான பாகங்கள். இவைகளில் முக்கியமானது ஈச்சரசம். இந்த ரசத்திலிருந்து பச்ச வெல்லக்கட்டியும் ஈச்சஞ் சர்க்கரையும் தயாரிக்கப்படுகின்றன. இதைப் பற்றி பின் விவரிப்போம். ஈச்சமரம் ஐரோப்பாவின் மத்தியதரைக் கடலின் கரைகளில் விசேஷமாய்வளருகிறது. கானரித் தீவுகளிலும் வடக்குத் தென்கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இந்தியாவில் எப்பாகங்களிலும், அரேபியாவிலும் விளைகிறது. அது 20 முதல் 50 அடி வரையில் வளரும் அழகுள்ளமரம். அதின் மரத்துண்டம் பழைய மட்டைகளின் அடையாளங்கள் பலமாய் பதிவு செய்யப்பட்டு அந்த மரகப்பிரகாசிக்கிற ஓர்மட்டை இலைகூடிய முடியை உச்சியில் உடையதாயிருக்கிறது. மட்டைகளின் அடியில் உண்டாகும் பாளைகள் வெடித்து அதிலிருந்து சாம் சாமாகப் பூ உண்டாகிறது. இவை மரங்களின் ஐக்கிய புணர்ச்சியாலானவை. பெண்மலர்களைப் பிரயத்தனத்தால் விருத்தியாக்குவது அவசியம். இந்த விருத்தி வேறு மரங்களிலிருந்து ஆண்மலரின் கொத்துகளை பெண்மலர்களுக்கு அருகாமையில் வைக்கிறதினால் உண்டாகிறது. பழம் நீட்டு வாட்ட சதுரமாயிருக்கிறது. அது உருவிலும், நிறத்திலும், குணத்திலும் வித்தியாசப்பட்டிருக்கிறது. அரேபியா ஜாதி பெரிதானதும் உத்தமமானதுமா யிருக்கிறது. சஹாரால் வனாந்தரத்தின் புல் நீருள்ள திட்டுகளிலும், வட ஆப்பிரிக்காவிலும், இதர பாகங்களிலும் ஈச்சம்பழத்தை உண்டாக்கி ஆகாரத்திற்காக அவைகளை ஓர் அப்பம்போல் நசுக்குகிறார்கள். பழம் மனிதனுக்கும், குதிரைகளுக்கும், ஒட்டகங்களுக்கும், நாய்களுக்கும் ஆகாரமாகிறது. தென்னிந்தியாவின் மலைநாட்டில் உண்டாகும் ஒருவகையான ஈச்சமரத்திலிருந்து ஈச்சம் ஆகாரம் கிடைக்கிறது. பஞ்சகாலத்திலும், கஷ்டகாலத்திலும் அபூர்வமாய் அதை உபயோகிக்கிறார்கள். ஈச்சமரத்தின் எல்லா பாகமும் சிக்கனத்திற்குரிய விலையுயர்ந்த பொருள்களைக் கொடுக்கின்றன. அதன் அடிமரம் வீடுகட்டச் சாமான் தருகிறது. வீட்டு மரச்சாமான் ஆகிறது. இலைகள் கீத்து ஆகிறது. அது கூரைக்கு மூட ஆகிறது. மட்டை விறகு ஆகிறது, நாறு ஆகிறது. கிழக்கு இந்தியத் தீவுகளில் ஈச்சம் சக்கரை விலையான வர்த்தகப் பொருளாகிறது. அது ஈச்சங்கள்ளிலிருந்து உண்டாகிறது. இங்கேயிருக்கும் ஈச்சமரந்தான் எல்லா ஈச்சமர விகற்பங்களுக்கும் மூலமாகிறது. ஈச்சம் ரசம் காய்ச்சப்படாதபோது புதிதாகவும் புளிப்பேறியும் குடிக்கிறார்கள். அந்த ரசத்திலிருந்து ஓர் சத்தானமருந்து இறக்கப்படுகிறது. முன்னே சொன்னப்பிரகாரம் ஈச்சஞ்சாறு மானிட உபயோகத்திற்காக மரவளகார்களிலிருந்து உண்டாகும் அதிகமுக்கியமானவும், அதிக உபயோகமானவுமான ஓர் பொருளாகிறது. இந்தச்சாற்றை அடையும்வழி அதிக விநோதமாயிருக்கிறது. ஈச்சமரத்திலிருந்து உண்டாகும் இதர பொருள்களாகிய பழம், மரம், இலை இவைகளின் மதிப்பு நீங்கலாகச் சாற்றின் மதிப்பு மாத்திரம் கள்ளிறக்கும் காலம் ஒருறக்கு ஓர் பைகாவிஸ்தீரண மாத்திற்கு 1000 ரூபாயாகிறது. இந்தக் கஷ்டகாலத்தில் இது அற்ப தொகைபல்ல. ஓர் மதிப்பான வருமானத்தை யடையும் நிச்சயமான வழியாக ஈச்சமரப்பயிர் சீக்கிரமாயாகும் என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை.

மரத்திலிருந்து சாற்றை இறக்குவது சுலபமாயிருந்தாலும் அதிக முக்கியமானது. ஈச்சமரம் நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சாறு கொடுக்கிறது. 4, 5 வருஷமான மரம் பாளை தட்டிக் கள்ளிறக்கத் தகுதியானது. ருசியானசாற்றை அதுமுதல் 20 வருடம் வரைக்கும் கொடுக்கும். நல்லசாறு ஒரு நாள்விட்டு ஒருநாள் ஒரு மரத்திலிருந்து 2 முதல் 4 சேர்வரையில் உண்டாகிறது. சான்றோர் ஜாதிதான் கள்ளிரக்குவதில் சாமர்த்தியமானவர். இச்சாதியார் ஒவ்வொருநாளும் காலையில் சிக்கிரமாய் ஈச்சம் ஓலையால்செய்த புட்டிகளைப் பின்னால் இடுப்பில் கட்டிக்கொண்டு போகிறார்கள். அந்தப் புட்டியில் அதன் மாதிரியான பாளைதட்டும் கத்தி யிருக்கிறது. அந்த அரிவாள் ஒரு அடி நீளமாயிருக்கிறது. உள்பக்கத்தில் வளைவான மேல்பரப்பையுடையதாயிருக்கிறது. கூரான ஓரத்தை யுடையதாயிருக்கிறது. மட்டையின் நாரினால் செய்யப்பட்ட ஒரு கனத்த சிறு கயிற்றைத் தங்களுடன் எடுத்துக்கொண்டு

போகிறார்கள். அது அதிக பலமானதாகவும் நெடுநாளைக்கிருக்கத் தகுந்ததாகவும் இருக்கின்றது. அவர்கள் மரத்தில் தொத்தி ஏறும்போதும் பாளையைக் கட்டும்போதும் தங்களுடைய பாதங்களுக்கும், தங்களுடைய தேகங்களுக்கும் பாதுகாப்பாக அக்கயிற்றை உபயோகிக்கிறார்கள். பாளை தட்டுகிறவன் மரத்தின்மேல் ஏறி சில பழுப்பு ஓலைகளைக் களைந்து போடுகிறான். மரத்தின் உச்சியில் ஓலைகள் உண்டாகிறயிடத்தில் சில பாகத்தைச் செதுக்கிவிடுகிறான். மரத்தின் மிருதுவான உட்செறிவு மேல்பரப்பு கண்ணுக்குப் புலப்பட்டதும் கத்தியைக்கொண்டு மேல் கீழதாய் ஒரு வெட்டை வெட்டுகிறான். ஒரு நெருக்கமான மூங்கில்குழாயை அந்த வெட்டின் அடிபாகத்தில் நுழைக்கிறான். அந்தக் குழலின் முனையில் ஒரு மண் பானை மாட்டிவைக்கிறான். அந்தப் பானையை மரத்தோடு சேர்த்து கயிற்றினால் கட்டுகிறான். இப்படிச் செய்வதனால் அந்த வெட்டிலிருந்து சொட்டும் ஒவ்வொரு துளியும் அந்தப்பானையில் விழுகிறது. மறுநாள் காலையில் சான்றான் வரும்போது பானைநிறைய ஈச்சஞ்சாறு இருக்கிறது. இந்த ரசத்தைக் காய்ச்சினால் வெல்லமாகிறது. வெல்லம் ஒருசேர் 3 அணாமுதல் 5 அணாவரையில் விற்கிறது. ஒருசேர் ரசம் $\frac{1}{8}$ முதல் $\frac{1}{4}$ சேர் வெல்லம் வரையில் தருகிறது. இந்த வெல்லத்திலிருந்தாவது அல்லது ரசத்திலிருந்து நேராகவாவது கரும்பிலிருந்து உண்டாகும் மாதிரியாகச் சர்க்கரையை உண்டாக்குகிறார்கள்,

மாதிரிக்காக ஈச்சமரம்வளர்த்த செலவு வரவுகளைச் சிறிது விலைவாரியாய் விசாரிப்போம்.

ஒரு பைகா நிலத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதில் ஒன்றுக்கொன்று சிறிது தூரத்தில் 6 வரிசைகள் நடலாம். ஒரு மரத்திற்கும் மற்றொரு மரத்திற்கும் 5 அடிதூரம் இருக்கட்டும். இப்படி ஒரு பைகா நிலத்தில் 500 மரம் நிற்கும். நாட்டுப்புறத்தில் பயிர் வைக்காத 1 பைகா நிலவாடகை சற்றேறக்குறைய சராசரி வருஷத்திற்கு 5 ரூபாய்க்கு அதிகமாகாது. ஆகையால் முதல்செலவு 500 செடி வாங்கும் தொகை, நடும்தொகை, முதல் ஐந்து வருஷத்திற்கு நிலவாடகை இவற்றின் நிர்த்தாரணம் செய்யப்பட்ட வரவு செலவு ஜாப்தா பின்வருவது.

செலவு.

பிரதம செலவு.

500 ஈச்சஞ்செடிகளை வாங்கி 1 பைகா நிலத்தில் நடசெலவு	5—0—0
முதல் 5வருஷத்திய 1 பைகா நிலத்து வாடகை	25—0—0
	30—0—0

அடிக்கடி நேரிடும் செலவு.

மரத்தைப் பாளைகட்டி கள் ளிறக்கி காய்ச்ச ஒரு மாசத்திற்கு 1 ஆளுக்கு 10 ரூபா விதம் 10 கூலியாளுக்கு 4 மாதத்திற்கு ஆயுதனிலை	400—0—0
10 அரிவாள் 500 மண்பானை	15—0—0
சாற்றைக்காய்ச்ச இருப்புத் தொட்டி	5—0—0
கவனக் குறிப்பு.	
மரத்தில் உண்டாகும் உலர்ந்த ஓத்துகள் மட்டைகள் விறகாகும்	425—0—0

வருஷம் 1-க்கு நிலவாடகை	5—0—0
பிரதமச்செலவு 30 ரூபாயை 10 வருஷத்திற்குப் பங்கிட்டுச் செலவழிக்கலாம். அப்போது வருஷச்செலவு	3—0—0
மொத்தம்	428—0—0

வருமானம்.

1 மரத்திற்கு சராசரி 3 சேர்விதம் 500 மரத்தில் உண்டாகும் 1 நாள் சாறு	சேர் 1500

சராசரியில் 1 நாள்விட்டு ஒருநாள் சாறு கிடைக்குமென்று கவனிக்க வேண்டியது. இம்மாதிரியாக மரத்தில் கள் உண்டாகிற 4 மாத பனிக் காலத்தில் 60 நாளைக்குத்தான் கள் கிடைக்கும். அப்படியானால் ஒவ்வொரு வருஷமும் பைகா நிலத்தில் 500 மரங்கள் 1500×60—90000 சேர் சாறு. இது குறைந்தது 11250 சேர் வெல்லத்தை உண்டாக்கும்.

ஒருசேர் வெல்லம் 3 அணாவாக 11250சேர் வெல்லத்திற்கு 33750 அணாவுக்கு	2109—5—0
கமிஷன் விருதாச் செலவு முதலியன 100 க்கு 25 கு குறைக்க	527—5—6
முன் விவரித்த செலவு	428—0—0
செலவுபோக லாபம்	1504—0—6

இம்மாதிரியாக 1 பைகாநிலத்தில் ஈச்சமரம் நடுவதினாலேயே எப்படி சுலபமாய் எல்லா செலவும்போக வருஷத்திற்குக் குறைந்தது 1000 ரூபா வருமானத்தைப் பெறலாமென்றுக் கண்ணாடியைப்போல் காணலாம். 10 பைகா நிலத்தில் ஈச்சமரம்நட்டால் வருஷத்திற்கு 10000 ரூபா வருமானம் கிடைக்கும். அதாவது ஒரு ஜமீனிலிருந்து வரும் வருமானம். எத்தனை ஏகர் நிலம் பயிர் வைக்காமல் தரம்பாய் இருக்கிறதென்று சற்று யோசித்து 30 முதல் 50 ரூபா வரையிலுமே கிடைக்கக்கூடிய வேலைகளில் எப்படி நமது சிறுவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது ஏன் நமது ஏழைக்கும் பணக்காரர்களுக்கும் மத்தியிலுள்ள ஜனங்கள் இந்த அழகானத் தொழிலை செய்யக்கூடாதென்பது புதுமையாக யிருக்கிறது. ஏனெனில் இத்தொழிலுக்கு முதல் பணம் வேண்டியதில்லை.

மேற்கண்ட மதிப்பில் ஈச்சமரம் நடுகிற பூமியை வருஷத்தில் 4 மாதந்தான் உபயோகிக்கிறோம். மற்ற எட்டு மாதத்தில் அந்தம் பூமியை உபயோகப்படுத்துவதால் வரத்தக்க லாபத்தைக் கருதவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டியது. 20 வருடம் சென்றதும் மரங்கள் உபயோகமற்றுப் போகிறபோது மரத்தின் லாபத்தையும் வருஷப் பிரதிவருஷம் அதின் ஓத்துமட்டையின் லாபத்தையும், அதின் பழத்தின் லாபத்தையும்; நாம் நமது மதிப்பில் கவனிக்கவில்லை. அப்படிப்பட்ட வருமானம் அசிரத்தைகொள்ளத் தக்கதல்ல. நாம் சாற்றின் மூலமாய்வரும் லாபத்தை மாத்திரம்தான் கவனித்தோம். இத்தொழில் எவ்வளவு ஊதியத்தைக் கொடுக்கிறது என்பதைத் தெரிவிக்க அவ்வித பிரத்தியேக மதிப்பைப் போட்டோம்.

ஈச்சமரத்திலிருந்து உண்டாகும் இதர மாசூல்களும் கூட சாற்றைப் போலவே ஏராளமா யிருக்கின்றன. இந்தியாவில் கள்ளிறக்கிவிடுவதால் பழம் பெரிதாயும் மதுரியமாயும் இருக்கிறதில்லை. அரேபியாவில் ஈச்சமரம் பழங்களைப் பெரிதாயும்

மாதுரியமாயும் கொடுக்கிறது. அப்படியிருந்தும் இந்தியாவில் பழக்கத்திற்குத் தகுந்த விலை இருக்கிறது. கடைத்தெருவில் விற்பனையாகிறது. ஓலைகளைக் கூரைமூட உபயோகிக்கிறார்கள். பாய் பின்னுவதில் ஓலையை ஏராளமாய் உபயோகிக்கிறார்கள். நேர்த்தியான பாய்களும், தடுக்குகளும் ஓலைக்குச் சாயம் பலவிதமாய் ஏற்றிப் பின்னப்படுகின்றன. துடைப்பமும் தூசுதட்டும் புருசும் ஈச்சம் இலையிலிருந்து செய்யப்படுகின்றன. மட்டைகள் நல்ல நார் கொடுக்கிறது. இதனால் உறுதியான கயிறு திரிக்கப்படுகிறது. தென்னை நாரினும் சணல் நாரினும் திரிக்கப்படுகிற கயிற்றைக்காட்டிலும் மிருதுவாயும் உறுதியாயும் இருக்கிறது. ஈச்சமரத் துண்டுகள் வீடுகட்டுவதற்கு அதிக உபயோகமில்லை யென்றாலும் அவைகளைப் பிளந்து உலர்த்தியபோது நல்ல விறகு ஆகிறது.

கடைசியாக நாம் தெரிவிக்கிறதென்னவென்றால் நாம்போட்ட வரவு செலவு மதிப்பு ஏட்டுச் சுரைக்காயல்ல. சாத்தியமாகக் கூடிய மதிப்பே. கரம்பு நிலத்தையுடைய அநேகர் அறுவெறுப்பின்மேல் ஈச்சமரத்தையாவது நடலாமென்று நட்டு நாம் மதிப்பிட்ட வருமானத்தை 45 வருஷத்தில் அடைந்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது 1-வருஷத்திற்கு 1 ஏகரா நிலத்திலிருந்து 1000 ரூபா. கருப்பஞ்சாற்றிலிருந்து கற்கண்டும் சர்க்கரையும் செய்யப்படுவதுபோல ஈச்சஞ்சாற்றிலிருந்து சர்க்கரையும் கற்கண்டும் செய்தல், அது வருமானத்திற்கு புதிய மார்க்கமாகும். இந்த விஷயத்தில் தகுந்த கவனம் செலுத்தப்படும் என்று எண்ணுகிறோம்.

***

மூன்றாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸில் செய்யப்பட்ட தீர்மானங்கள்.

(1) இராஜ விஸ்வாசம்:—விஸ்வகர்ம சந்ததியார் பிரிட்டிஷ் ராஜ்யாதிபத்தியத்திலுள்ள விஸ்வாசத்தைக் குறிப்பிட்டு மாட்சிமைபொருந்திய நமது சக்ரவர்த்தியாரவர்கள் இப்பொழுது நடாத்திவரும் யுத்தத்தில் சீக்கிரம் வெற்றியடைந்து ஜெயப்பிரதாபம் பெறவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தது.

(2) தமது அருமைப்புதல்வரை யுத்தத்தில் இழந்த நமது இராஜப்பிரதிநிதியவர்களுக்கு இக்கான்பரன்ஸ் மிக்க அநுதாபங்காட்டியது.

(3) இராஜ விஸ்வாசிகளாகிய தென்னிந்திய விஸ்வகர்ம சந்ததியார்களாகிய நாங்கள் இந்தமகாயுத்தத்தை முன்னிட்டு கவர்ன்மெண்டு ஆயுதச்சாலைகளிலும் தொழிற்சாலைகளிலும் சேர்ந்துகொள்ள ஆயத்தமாயிருப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

(4) கல்வி:—தென்இந்தியாவின் கைத்தொழில் வகுப்பார்களாகிய விஸ்வகர்ம சந்ததியாரின் சிறுவர்களுக்கு செகண்டரி பாடசாலைகளிலும் உயர்தரக்கலாசாலைகளிலும் அரைச்சம்பளம் பெற்றுக்கொண்டு சேர்த்துக்கொள்ளும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு அளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(5) அன்னிய நாடுகளுக்குச் சென்று தொழிற்கல்வி சிற்பம் முதலியவைகளைக் கற்றுவரக் கொடுக்கின்ற கவர்ன்மெண்டு உபகாரச் சம்பளங்களைத் தகுந்த நமது ஜாதிச்சிறுவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் மீண்டும் தீர்மானிக்கப்பட்டது.

(6) கல்வி—கைத்தொழில் சிற்பம் ஆசாரம் முதலியவைகளை சுஜாதிச்சிறுவர்கள் ஒருங்கே பெறுவதற்கான வசதிகளுடன் பாடசாலைகளை இக்கான்பரன்ஸ் மகாசபையார் ஏற்படுத்துவது அவசியமென இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கப்பட்டது. மேலே காட்டியவைகளை நிறைவேற்றுவதற்கு கீழ்கண்ட கனவான்களடங்கிய ஓர் கமிட்டியை நியமித்து அவர்கள் வசூலுக்கு செல்லுமிடங்களில் தகுதியுள்ளவர்களையும் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்ளும் பாத்தியத்தையும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கப்பட்டது.

(7) எலிமெண்டெரி பாடசாலைகளில் நமது சிறுவர்களையும் சிறுமிகளையும் கட்டாயமாய்ப் பெற்றோர்கள் வாசிக்கச் செய்யவேண்டுமென்றும், தங்கள் சிறுவர்களை 12 வயதுக்குள் ஜாதித்தொழில்களில் பெற்றோர்கள் பிரவேசிக்கச் செய்யலாகாதென்றும் தீர்மானிக்கப்புட்டது.

(8) வேலையிற் பழகுகிற சிறுவர்களுக்கான இராப்பாடசாலைகளை ஆங்காங்கு சுஜாதி அதிகாரிகள் தீவிரமாக ஏற்படுத்துவது அவசியமென இக்கான்பரன்ஸ் தீர்மானித்தது.

(9) கைத்தொழில் அபிவிர்த்தி சம்பந்தமாக ஆங்காங்கு சுஜாதியாரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுடன் கலந்துழைக்க சென்னை கவர்ன்மெண்டு ஐக்கிய சங்க ரிஜிஸ்டிரார் முன்வரவேண்டுமென இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தது.

(10) சென்னை கவர்ன்மெண்டு கைத்தொழில் இலாகா டைரெக்டர் தென்னிந்தியாவிலுள்ள விஸ்வகர்ம சந்ததியார்களின் தொழில் நிலைமையையும் அவர்கள் சிறுவர்களின் தொழிற்கல்வி சம்பந்தமான தேவைகளையும் விசாரித்தறிந்து அவைகளின் விர்த்திக்கான மார்க்கங்களை செய்து கொடுக்கும்படி இக்கான்பரன்ஸ் வேண்டிக்கொள்ள தீர்மானித்தது.

(11) இந்திய கைத்தொழில் இராஜவிசாரணை சங்கத்தார் இக்கான்பரன்ஸில் பிரதிநிதிகளின் வாக்குமூலங்களின் வழியாகத் தெரிவித்துக்கொண்ட நமது சுஜாதியரின் குறைபாடுகளை நன்கு கவனித்து தக்க பரிகாரம் அளிக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீமானித்தது.

(12) முனிசிபல் டிஸ்டிரிக்ட்போர்டு ஆக்டுகளை அநுசரித்து அச்சங்கத்தார்கள் தங்கள் நகரிலுள்ள கைத்தொழில் அபிவிருத்தியைக்கோரி கல்வி, தொழிற்கல்வி சம்பந்தமான பாடசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென இக்கான்பரன்ஸ் மீண்டும் வேண்டிக்கொள்ள தீர்மானித்தது.

(13) முதலிரண்டு கான்பரன்ஸ்களில் தீர்மானித்தனுப்பிய நியாயமான வேண்டுகோளுக்கிசைந்து சென்னை கவர்ன்மெண்டார் நாளதுவரையில் ரத்து செய்யாது நம்மீது சுமத்தியிருக்கும் ஆஸாரிப்பட்டத்தை இனிக் காலதாமதமின்றி மாற்றவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தது.

(14) ஆச்சாரியப்பட்டம் நமக்கு உடன்பிறப்பென்று சாஸ்திர சரித்திர சாஸனவாயிலாக நிரூபிததும் தற்கால ஆராய்ச்சி முறையை அநுசரித்தும் ஒரு ரிபோர்ட் தயாரிக்க ஓர் கமிட்டியை செண்ட்ரல் கமிட்டியார் விரைவில் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்தது.

(15) நமது குலத்தினர் ஆசரிக்கவேண்டிய வைதிக விஷயங்களைக் கூடியவரையில் தவறாமல் அனுஷ்டித்து வரவேண்டியது அத்தியாவஸ்யமென்றும், நம் குலத்தவருள் சகோத்திரவிவாகமும் கனன சமஸ்காரமும் (சமாதிக்கிரியை) சாஸ்திர சம்பதம் பெற்றதல்லவென்பதையும் இக்கான்பரன்ஸ் தீர்மானித்தது.

(16) கான்பரன்ஸுக்கு உபசபைகளாக ஏற்பட்டிருக்கிற கல்வி கைத்தொழில் வைதிக ஆலோசனைச் சங்கங்களின் மெம்பர்களை விர்த்திசெய்து ஆவசியகமான உத்தியோகஸ்தர்களையும் விரைவில் சென்ட்ரல் கமிட்டியார் ஏற்படுத்த வேண்டுமென்று இக்கான்பரன்ஸ் தீர்மானித்தது.

மற்ற விபரங்கள் கான்பரன்ஸ் ரிபோர்ட்டில் அச்சிட்டு வெளிவரும்.

***

ஆசாரி.

(Asari)

ஆச்சாரி என்னும் நமது பட்டத்தை நீக்கி ஆசாரி (ஆஸாரி) என்னும் பட்டத்தை நம்மீது கவர்ன்மெண்டார் சுமத்திவிட்டார்களே, ஆசாரி என்னும் மொழிக்கு அர்த்தமில்லையேயென விஸ்வகுலமக்கள் பலர் சொல்லக்கேட்டு இது உண்மைதானோ? காரணமின்றி அர்த்தமில்லாப் பெயர்களை இந்துக்கள் வைத்தழைத்து அழைக்கமாட்டார்களே! வழக்கத்தால் பெயரின் உச்சரிப்பு மாறினாலும் மாறபட்டுள்ள பெயர் சென்னை ஹாமில்டன் வாராவதி (Hamilton Bridge) அம்பட்டன் வாராவதியாக (Barber's Bridge) மாறினது போலவிதுவும் மாறியிருக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு தமிழிலும் சமஸ்க்ருதத்திலும் இந்த வார்த்தை இல்லையென்கிறார்களே; ஜப்பான் பாஷையிலாவது ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். அந்த பாஷையில் ஆசாரி (Asari) என்பதற்கு உணவுக்கலைகிற (Searching for prey) (Asari mowaru going round for food) என்கிற அர்த்தமிருப்பதைக் காண ஆச்சரியம் ஒருபக்கம் விசனம் ஒருபக்கம் என் மனதில் குடிகொண்டது. உணவுக்கலைபவன் ஆசாரி! உண்மையாக உணவுக்கலைபவர் யார்? பல தொழிலுக்கு ஆதித் தொழிலாயுள்ள பஞ்சத் தொழிலுக்குரிய விஸ்வகர்ம ஜாதியர்களா தொழிலுக்கும் உணவுக்கும் அலைபவர்களாகிவிட்டார்கள்! என்ன காலம்!! என்ன விபரீதம்!!! ஜப்பானிய லகத்தொழிலாளர்கள் நாளுக்குநாள் செல்வவந்தர்களாகிச் சுகவாழ்வு வாழ்ந்து மேன்மையடைந்து வருகையில் நம் தேசத்தில் நம்மனோர் நலிந்துவருவது யாது காரணம்பற்றியென விசனத்துடன் சிந்தித்தேன். பண்டுதொட்டு இகபரத்துக்கு வேண்டுவனவற்றைப் புரிந்து ஆசானாகி ஆச்சரிய பதவிபெற்று இயல்புடன் வாழ்ந்த நம் குலமக்கள் கால மாறுபாட்டின் காரணத்தாலும் கவர்ன்மெண்டாரின் அலக்ஷியத்தாலும் கல்வியறிவில்லாமையால் ஞானங்குறைந்தும் தொழில்விர்த்தியில்லாமையால் வறுமை மேலிட்டும் நாணயமும் கட்டுப்பாடுமில்லாமையால் மதிப்புக்குறைந்தும் போய்விட்டபடியாலல்லவோ ஆச்சாரிய பதவி நீங்கி ஆசாரியானார்கள். இவர்கள் மறுபடியும் ஆச்சாரியாகும் மார்க்கம் எதுவென யோசிக்கப் பலமார்க்கங்கள் மனதில் தோன்றின. அவைகளிற் பின்வருவன சிலவாம்:—

(1) ஆச்சாரம் (Principles of caste) சுத்தம் (Cleanliness) சத்தியம் (Truth) ஆகிய இவைகளைக் கைப்பிடித்தொழுகுதல். இவைகள்தான் உத்தம புருஷலக்ஷணம்,

(2) கூலி வேலைக்கு ஆயுதங்களை எடுத்துக்கொண்டு அவசியமின்றி அயல் மனைச் செல்லாமை.

இப்படிச் செய்வதால் நம்மைத் தேடிக்கொண்டு பலர்வரவும் நம்மை நம்பிப் பல வேலைகளைக் கொடுக்கவும் நம்மை மதிப்பாகப் பிறர் நினைக்கவும் பேசவும் நடத்தவும் ஏதுவுண்டாகும். அன்றிப் பல பொருளை உண்டாக்கவும் அதன் அம்சங்களை அர்த்தப்பாடாக உரைக்கவும் வேண்டிய வன்மையும் பெறக்கூடுமாகையால் முறையே விஸ்வப்ரம்மாவாகவும் ஆச்சாரியாராகவும் ஆகிறோம். இதுவன்றி வேலைக்காக வெளியே சென்றால் கூலிக்காக ஒடிப்பிழைக்கும் கூலிகள் (ஆசாரி) ஆகி நமக்கும் அவமதிப்பைத் தேடிக்கொள்கிறோம். நம் குலத்துக்கும் இழிவை விளைவிக்கிறோம்

(3) ஒரேவிதத் தொழில்புரிபவர்கள் தங்கள் தங்களுக்குள் கட்டுப்பாடாக நடந்துகொள்ளவேண்டியதோடுகூட நாணயத்தவறாக நடந்து தொழிலுக்குக் கெட்ட பெயரை விளைவித்துக் கொள்ளாமை.

(4) காலங்கழிக்கக் கைத்தொழிலென்றிராது கூடியவரையில் தனியாகச் செய்யக்கூடிய தொழிலைத் தனியாகவும் கூட்டாகச் செய்யவேண்டிய தொழிலைக் கூட்டாகவும் தொழில் வசதிக்குச் சிறுமுதலோ பெருமுதலோ வைத்துச் சாதாரண ஆயுதங்களின் உதவியாலும் யந்திரத்தின் உதவியாலும் சாஸ்திர விதிதமாய்ச் செய்து தொழில் விருத்திக்கும் நல்வாழ்வுக்கும் ஆசித்தல்.

(5) ஜாதிப் பெருமையையும் ஜாதியின் உயர்வு தாழ்வையும்பற்றிப் பெரிதாகப் பேசாது ஜாதித்தொழிலின் பெருக்கையும் தொழில்புரியும் வகை வேறுபாடுகளையும் அறியுமாறு சாஸ்திர ஆராய்ச்சி, தொழில்விஷய ஆராய்ச்சி (Scientific & Industrial Researches) முதலியன புரிவது இவையே நமது தொழில்விர்த்திக்கு ஆதாரமாகும்.

(6) பொது நன்மையான காரியங்களில் இதரஜாதி மக்களுடன் ஒத்துழைத்தல் அனைவருடனும் அந்நியோன்யமாக நடந்து அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றுச் சமத்துவமாக வாழ்தல்.

மேற்கூறிய வண்ணம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் யார் மனதில் உதிக்கிறதோ, யார் அவ்விதம் நடக்கத் தலைப்படுகிறார்களோ நடந்துகாட்டுகிறார்களோ அவர்கள்தான் உண்மையான ஆச்சாரி. அவர்களை நமது சென்னை கவர்ன்மெண்டின் "ஆசாரி" ஆக்கினை பாதிக்காது. அவர்கள் ப்ராமண போலி ஆச்சாரிகளால் புடைசூழ்ந்துள்ள இந்த கவர்ன்மெண்டாரை ஆச்சாரி பட்டப் பிச்சை கேட்கவேண்டுவதில்லை. உலகத்தாரும் அவர்களை ஆசாரி என ஒருக்காலும் நினையார், இது உண்மை.

சூரியோதயம்.

கங்கைகண்ட சோழபுரத்தின் சரித்திரம்.

(ஒரு நிருபர் எழுதுகிறார்.)

கங்கைகண்ட சோழபுரம் என்பது திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஒரு சிறிய ஊர். ஜெயங்கொண்ட சோழபுரத்துக்குச் சுமார் 5 மைல் கிழக்கே யிருக்கிறது. திருப்பனந்தாளுக்கும் ஜெயங்கொண்டசோழபுரத்திற்குமுள்ள ரஸ்தாவின்மே லிருக்கிறது. இங்கே புராதன சிவாலயம் ஒன்று இருக்கிறது. சுமார் 1000 வருஷங்களுக்குமுன்னே இப்பிரதேசங்களை ஆண்டுவந்த சோழராஜக்களுள் கங்கைகண்ட சோழனுமொருவன். இம்மன்னன் கங்காயாத்திரை புரிந்துவந்த காலத்திற்குப் பின்னரே இவ்வூரும் இங்குள்ள கோயிலும் ஏற்பட்டன. இவ்வூரைக் கங்கைகண்ட புரமெனவும், கங்கைகண்ட சோளேச்சரமெனவும், கங்கைகண்ட சோழபுரமெனவும் அழைப்பார்கள். சோழராஜ்யத்துக்கு ஒரு பெரிய ராஜதானியா யிருக்கிறது. இப்பட்டணத்தைச் சுற்றிலும் அநேகம் கோட்டைகளும் அகழ்களு மிருந்தனவென்று சொல்லப்படுகிறது. சுற்றுப் பக்கத்திலுள்ள குக்கிராமங்களையும் அவைகளின் சரித்திர வரலாற்றையும் சற்று கவனித்தால் உண்மையில் எல்லாம் இவ்வூரைச்சார்ந்தே இருந்தனவென்று நன்கு ஊகிக்கலாம். கொசவம்பேட்டை, கொல்லாபுரம், செங்கல்மேடு, மெய்காவத்தூர், உள்கோட்டை, ஆயிரக்கலம், கூழுகொடுப்பை எனப் பல சிற்றூர்களிருக்கின்றன. அவைகளெல்லாம் இரண்டு மூன்று மைல்களுக்குள்தான் இருக்கின்றன. அக்காலத்திலிருந்த ராஜாக்களின் உத்தரவுக்கிணங்கி கொசவம்பேட்டையிலிருந்து குசவர்கள் சட்டி பானை முதலிய மட்பாண்டங்களை ஏராளமாய் சப்ளை செய்ததாகவும், கொல்லாபுரத்திலிருந்து கொல்லர்கள் மண்வெட்டி கோடரி முதலிய இரும்பு சாமான்களை வேண்டியபோதெல்லாம் கொடுத்து வந்ததாகவும், செங்கல் மேட்டிலிருந்து கட்டடங்களுக்குத் தேவையான செங்கல், மண் முதலியன அனுப்பப்பட்டு வந்ததாகவும் அக்காலத்திலே இம்மாநகரைக் காத்துவந்த காளிதேவிகள் எண்மரும் இம்மேட்டிலேயே வசித்து வந்தனரென்றும் மெய்காவத்தூரில் நகர் காப்பாளர் பலர் வாசஞ் செய்ததாகவும் உள்கோட்டையிலே தேசப் பாதுகாப்புப் பட்டாளங்கள் இருந்ததாகவும், ஆயிரக்கலமென்னுமூரில் முற்காலத்தில் தானதருமங்களுக்காக நாளொன்றுக்கு ஆயிரக்கலம் நெல்தானம் செய்துவந்ததாகவும், முன்னொருசமயம் எதிர்பாராத பஞ்சம் தோன்றியவளவில் கூழுகொடுப்பை என்னுமிடத்தில் வறியர்களுக்கும் ஏனையோர்களுக்கும் கூழுவார்த்ததாகவும் மற்றும் பல காரணங்களுடனும் சொல்லப்படுகிறது. இங்ஙனமாயின், இவ்வூர் சோழராஜர்கள் காலத்திலே சுமார் 5 மைல் நீளமும், 4 மைல் அகலமும், குறைந்தது 20 மைல் சுற்றளவுள்ளதா யிருந்திருத்தல் இன்றியமையாதது. இப்போதுள்ள சிவன் கோவிலுக்குத் தென்மேற்கே இரண்டு பர்லாங்கு தூரத்தில்தான் சின்ன அரண்மனையென்பதும், மூன்று பர்லாங்கு தூரத்தில் பெரிய அரண்மனையென்பதும் இருந்தனவென்று கருதப்படுகிறது. அங்கே பூமியினடியில் கட்டடச்சின்னங்களையும் பாழடைந்த குளங்களின் அடையாளங்களையும் காணலாம். கோவில் கட்டப்படுவதற்குமுன் இவ்வூர் ஒரு சிறிய கிராமம். இவ்வூருக்கு அக்காலத்திலே வன்னிவனம் என்றோர் பெயர் உண்டு. அந்நாட்டிலேயே உடையார்பாளையம் ஓர் பாளையப்பட்டா யிருத்தல்வேண்டும். பற்பல சமயங்களில் மண்மாரி பெய்தபடியால் பூமி மேடிட்டுப் போயிற்று.

சிவன்கோவில்.

தஞ்சாவூர் திருபுவனம், கங்கைகண்ட சோழேச்சரம் ஆகிய இம்மூன்று கோயில்களிலும், சாயாக் கோபுரங்களிருக்கக் காணலாம். 'தன்னிழல் தன்னைச்சுற்றும்' என்றபடி கோபுரநிழல் கோபுரத்தைவிட்டுக் கீழ் நோக்காது. இம்மூன்று கோபுரங்களும் ஒரே அரசன் காலத்தில் கட்டப்பட்டனவாம். கோயில் சுமார் $2\frac{1}{2}$ பர்லாங்கு நீளமும், $1\frac{1}{2}$ பர்லாங்கு அகலமுமுடையது. வெளிமதிலின் அகலம் 5 அடி. வெளிப் பிரகாரத்தில் நந்தியும், பாழடைந்த மண்டபங்களும் சிறு கோயில்களும், விநாயகர் கோவிலும், ஒரு சிறு தோட்டமும் ப்ரகன்னாயகி ஸன்னதியும், காளி கோவிலும், சிங்கக்கிணறும் இருக்கின்றன. தஞ்சாவூர் நந்தியைப்போலவே இக்கோவிலிலுமிருக்கிற நந்தி காம்பீரமான தோற்றமுடையது. ஆனால் சுண்ணாம்புப் பூச்சுப் பெற்றுள்ளது. அம்பாள் ஆறு அடி உயர மிருப்பதோடு ப்ரஸன்ன முகத்துடனும் அடியார்களை ஆதரிக்கிறாள். ஜகத் ரக்ஷகியும், ஜகன்னாகியுமான பரமேஸ்வரியைத் தரிசித்து வருவோர் சுகம் பெறுகின்றனர். நந்திஹேஸ்வர மண்டபத்திலேறி மஹாமண்டபம் சென்றால், அந்த நவக்கிரஹ மண்டபம் வடபுறத்திலிருக்கிறது. ஒரே கல்லில் நவக்கிரகங்கள் செய்யப்பட்டிருப்பதுடன் சூரிய பகவான் நடுவிலிருக்க, மற்ற அஷ்டமூர்த்திகளும் அஷ்ட திக்குகளையும் நோக்குகின்றனர். சனிவாரந்தோறும், இங்கு விசேஷ மதிகம். வேலைப்பாடுகள் அதிக நேர்த்தியா யிருக்கின்றன.

மண்டபம் கண்ணுக்கு அலங்காரமா யிருக்கும். இம்மண்டபத்திலேயே உத்ஸவ விக்ரஹங்களும் மற்றத் தேவதைகளின் ஸன்னதிகளும் இருக்கின்றன. அர்த்த மண்டபத்தின் வாசற்படியின் இருபுறத்திலும் இருக்கின்ற துவாரபாலகர்கள் சுமார் 14 அடி உயரமிருக்கலாம்.

அர்த்த மண்டபத்திலுள்ள தூண்கள் ஒவ்வொன்றும் சுமார் 16 அடி உயரமிருக்கும். கர்ப்பக் கிரஹவாசற் காப்பாளர்களின் உயரம் 16 அடியே. கர்ப்பக்ரஹத்தைச் சுற்றிலும் உள் பிரகாரங்கள் இருக்கின்றன. அவ்விரண்டிலும் சுரங்கவாசற்படிக ளிருந்ததாகவும் அவைகளைப் பிற்காலத்தில் மூடி விட்டதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் அவைகளுக்குத் தகுந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. கர்ப்பக்கிரஹத்திலுள்ள சிவலிங்கம் தஞ்சாவூரிலிருப்பது போலவே மிக்க உயரமுள்ளது. சிவலோகநாதன் லிங்கரூபமாய் விளங்குகிறார்.

ஸ்வாமியினது கம்பீர தோற்றத்தை மட்டும். அளந்தால் பீடம் $1\frac{1}{2}$ உயரம். ஆவிடையார் $4\frac{1}{2}$ அடி. லிங்கம் 6 அடி ஆகவே 12 அடி உயரமிருக்கக் காணலாம். கோமுகம் 15 அடி நீளமிருக்கலாம். ஆவிடையாரின் குறுக்களவு 15 அடி, சுற்றளவு 32 முழம் அல்லது 45 அடி எல்லாம் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது என்பதுமட்டும் நேயர்கள் கவனிப்பது அவசியம். வேலைப்பாடுகள் திறமையாய்ச் செய்து ப்ரதிஷ்டை செய்திருக்கின்றனர். ஸர்வேஸ்வரன் விஸ்வரூபமயமாக விளங்குகின்றார். அத்திருச் சந்நிதானத்திலிருந்து ஈசனை மனமாரத் துதிசெய்து பேரானந்தங்கொண்டு ஸ்வாமியின் ப்ரஸாத மஹிமையின் குணவிசேஷத்தால் மனம் பூரித்தேன். சர்வலோக நாதனாய் அனாதரக்ஷகராய், ஆத்மஸ்வரூபியாய், நித்யானந்தஸ்வரூபியாய், பரமதயாநிதியாய் விளங்கும் பரமசிவனுடைய பாதாரவிந்தங்களின் தூளிக்கு அடியேன் பன்முறையும் சாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து ஈசுவர கடாக்ஷவீக்ஷண்யம் பெற்றுத் திரும்பினேன்

கோபுரம்.

இக்கோபுரம் சுமார் 200 அடி உயரமிருக்கும். அக்காலத்திய ஹிந்துக்களின் சிற்பவேலைச் சிறப்புகளை நன்கு காட்டுகிறது, தமிழ்நாட்டுச் சிற்பசாஸ்திரிகள் தங்கள் திறமையை அதிகமாய்க் காட்டியிருக்கின்றனர். 8 ஸ்தம்பங்களின்மேல் இக்கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிற விஷயம் கவனிக்கத்தக்கது. உள்பக்கம் கூடாயிருக்கிறதுமன்றி வட்டமாயு மிருக்கும். நான்கு புறத்திலும் நாட்டப்பட்டிருக்கும் பிம்பங்களும், சித்திர அமைப்பும் தனித்தனி நோக்கங்களுடன் விளங்குவதுடன் காம்பீரத் தோற்றத்தைப் பெற்றுமிருக்கின்றன. கீழ் மண்டபங்களைப் போலவே இரண்டு மேல்மெத்தைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டடங்கள் யாவும் பார்க்க வெகு நேர்த்தியா யிருப்பதுமன்றி மனதுக்கு அதிக ரம்யத்தைத் தருகின்றன.

கோபுரச் சிகரக்கல்லும் ஒரே கல்தான். இவ்வூருக்கு மேற்கே 10 மைல் தூரத்தில் பாண்

ஒன்று கட்டி அங்கிருந்து பஞ்சின் உதவியால் இக்கல்லைக் கோபுர உச்சியில் கொண்டுவந்து சேர்த்தனர். இதனை நன்கு உணர்த்தும்பொருட்டு இப்பொழுதும் உடையார் பாலயத்திற்கு வடமேற்கே பரண் என்னுமோர் சிற்றூர் இருக்கக் காணலாம்.

சரித்திர மூலமாயும், தமிழ்நாட்டு வேந்தர்களாலும் பழைய சோழ ராஜாக்களாலும் நிரம்பவும் மேன்மையுற்ற இக்கோயில் விளங்கிவந்து இக்காலத்திலோ அதிக ஜீரணதிசை யடைந்திருக்கிறது.

வேண்டுகோள்.

இப்பெரும் சிவாலயத்தை சிவபக்த சிரோன்மணிகளாவது, பெருஞ் செல்வவான்களாவது நாட்டுக்கோட்டை செட்டிமார்களாவது, தமிழ்நாட்டு ஜமீன்தார்களாவது, ராஜாக்களாவது கொஞ்சம் பாடுபட்டு பக்தியுடனும் சிரத்தையுடனும் ஜீர்ணோத்தாரணம் செய்து முன்போல் பழையஸ்திதிக்குக் கொண்டுவந்து அதற்காக ஏற்பட்டிருக்கும் நன்செய், புன்செய், தோப்பு வகையறு 350 ஏகர் நிலங்களையும் நன்கு கவனித்து பழைய திட்டப்படி பூஜை நைவேத்தியாதிகளுக்குக் குறை ஏற்படாது நடத்திக் காலாகாலங்களில் ஏற்படக்கூடிய ரிபேர்களைச்செய்து மேலும் மேலும் கவனித்தால் இகபரமிரண்டிலும் பக்தர்களுக்கு க்ஷேமமுண்டாகுமென்பது ஸர்வ நிச்சயம். கவர்ன்மெண்டார் சுமார் 3000 ரூபாய் செலவுசெய்து கோபுர ரிபேர் செய்தபோதிலும் அது முற்றுபெறவில்லை போலும். பெரிய செடி கொடிகள் கோபுரத்தின்மேல் முளைத்திருக்கின்றன. அவைகளால் கோபுரத்திற்குக் கெடுதி யுண்டாகலாம்.

கோவில் பெரியநந்தி வெயிலிலும் மழையிலும் இருக்கிறது மறைவாக ஒரு சாதாரணக் கொட்டகைகூடக் கட்டப்படாதது ஒரு பெருங்குறையே சிங்கக் கிணற்றையும் சிங்கத்தின் முகத்தையும் அவசியம் மராமத்து செய்யவேண்டும் சிறு சிறு ரிபேர்களும் முக்கியமானவையாயும் அவசியமானவையாயுமிருக்கின்றன இவ்வளவு பெரிய கோவிலுக்கு இத்தனை ஏகர் நிலங்கள் இருந்தும் இப்பேர்பட்டக் கேவலஸ்திதியிலிருப்பது உண்மையில் விசனிக்கத்தக்கது தேவஸ்தான கமிட்டி மெம்பர்களும் கவர்ன்மெண்டும் இதுவிஷயமாய் ஊக்கமெடுத்துக்கொள்ளுதல் இன்றியமையாதது. ஆஸ்திக சிகாமணிகளே! நண்பர்களே! தெய்வபக்தியில் மேன்மையான நிலையை யடைந்த ஹிந்துக்களாகிய நாம் ஒருங்கே பாடுபட்டுப் புராதன காலத்திய ஹிந்து நாகரீக சிற்பசாஸ்திர கலைஞான மகிமைகளையும் அவற்றின் சின்னங்களையும் கூடியவரையில் பாதுகாப்பது நமது பிரதம கடமையே. இப்பெரிய தர்ம காரியத்தில் யாவரும் மனமுவந்து முன்வந்து ஈசுவர கைங்கரியம் செய்து நற்பதவியை யடைய விருப்பங்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

* * *

பலகுறிப்புகள்.

ஓர் முக்கியமான குறிப்பு.

கைத்தொழிலில் தேர்ச்சி யடைந்த அநேக விஸ்வகர்ம சந்ததியார்கள் அவர்களுடைய வேலைத்திறமைகளைக் காட்டிப் பல இடங்களிலும், பல கண்காக்ஷி ஸ்தலங்களிலும், பரிசுகளும் மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றுக்கொண்டு மேற்படி மெடல், சர்டிபிகேட்டு பரிசுகளை தமக்கு ஜீவாதாரமென்று மனப்பால் குடித்து வறுமையில் வருந்துகிறார்கள். இவர்களுடைய வேலைத்திறமைகளைக் காட்டி இப்பேர்ப்பட்ட வேலைகள் செய்ய என்னால் முடியும், இதை விருத்திசெய்யப் பொருட்சகாயம் செய்யுங்கள், வேலைகளை நடத்தி அதனால் வரும் லாபத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று முயற்சிப்பதில்லை. அப்படி யாரோ இரண்டொருவர் முயற்சித்தாலும் பொருள் வைத்திருக்கும் மேதாவிகளும் அப்பொருளைச் சகாயஞ்

செய்வதுமில்லை. பொருளுள்ளவர்களிடத்தில் பொருள் மக்குகிறது. வேலையுள்ளவர்களிடத்தில் வேலை மக்குகிறது. இவ்விருவர்களால் அவ்வித அருமையான வேலைகளெல்லாம் மற்றவர்களுக்கு பிரயோஜனமில்லாமல் போகிறது. ஈசன் பொருளையும் புத்தியையும் ஒருவரிடத்திலேயே கொடுக்காமல் போனதற்குக் காரணம் நம் இந்தியாதேசம் வறுமையில் வருந்தவேண்டுமென்கிற எண்ணமோ தெரியவில்லை. மற்றைய தேசங்களில் இப்படியிருப்பதாகத் தெரியவில்லை. பொருளும் புத்தியும் ஒருவரிடத்திலேயே இருப்பதாகத் தெரிகிறது. அப்படி யில்லாவிட்டாலும் ஒற்றுமையாவது இருப்பதாக தெரிகிறது. அவ்வித ஒற்றுமையில்லாவிட்டால் பெருத்த காரியங்கள் ஒன்றும் நடவாது. பெருத்த காரியமாவது யாது? இப்பொழுது இவ்விந்தியாவுக்கு வெளி தேசங்களிலிருந்து வந்து குவிந்து மலியப்பட்ட பலவித சாமான்கள் சரக்குகள் முதலியனவாம். இவடத்தில் ஒற்றுமையிருந்து பணக்காரர்களும் வேலைக்காரர்களும் கலந்து பொருளும் புத்தியும் ஒன்று சேர்ந்தால் நம் இந்தியா தேசத்தில் ஆகாத காரியம் என்ன இருக்கிறது? இப்பொழுது நடக்கும் இந்தக் கொடும் யுத்தத்தினால் நம் இந்தியா தேசத்திற்கு வரும் சாமான்கள் தடைப்பட்டதால் நாம் என்ன கஷ்டத்தை அநுபவிக்கிறோம். நம் ஊரிலேயே நாம் அந்த தொழில்களை யெல்லாம் செய்துகொண்டோமானால் ஏன் மற்றவர்களை எதிர்பார்க்கப் போகிறோம். இவ்வித கஷ்டத்தை ஏன் அநுபவிக்கவேண்டும். நம்மிடத்தில் அந்த ஒற்றுமைதானில்லை. இவ்விந்தியாவில் எத்தனையோ பத்திரிகைகள் நடக்கின்றன. அவையெல்லாம் வீண் விவகாரங்களைப் பேசாமல் இவ்வித அநுகூலமான விஷயங்களைப் பற்றியே எழுதி உழைத்து வந்தால் இதுபரியந்தம் எவ்வளவோ அநுகூலமாயிருக்கும். பத்திரிகைகள் ஆரம்பிக்கும்போது உலக பொது நன்மைக்கென்று ஆரம்பித்துப் பிறகு பொருள் சம்பாதிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்துவிட்டால் உலக நன்மை எப்படி நடக்கும்? தேச க்ஷேமம் எப்படி ஏற்படும்? முதல்ஜீவாதாரமாகிய உலகக்ஷேமத்தைக் கோரிக்கொண்டு அல்லவா பிறகு மற்ற விஷயங்களைக் கவனிக்கவேண்டும். ஜீவனில்லாத சரீரத்துக்கு எத்தனை அலங்காரமாகிய ஆபரணத்தை தரித்தாலென்ன தரிக்காவிட்டாலென்ன? யார் ஆனந்தமடைவது? அதுபோல் நமக்கு ஜீவாதாரமாகிய நம் தேசக்ஷேமம் முன்பாகவேண்டும்? அதற்கு பாடுபடவேண்டும். உழைக்கவேண்டும். முன்னுக்கு வரவேண்டும். அப்படி யில்லாமல் தற்காலம் நமக்குப் பொருள்வருகிறது நம்மிடம் பணமிருக்கிறது நமக்கென்ன குறை என்பதாக நினைத்திருப்போமானால் நம்மிடமுள்ள பொருள் செலவாய்விட்டால் மறுபடியும் பொருள் எந்தஇடத்தில் சம்பாதிக்கவேண்டும். திரும்பவும் இந்த உலகத்தில்தான் பொருள் சம்பாதிக்கவேண்டும். அப்பொழுது உலகத்தவர்கள் க்ஷேமமாக யிருந்தாலல்லவா திரும்பவும் இவர்களிடத்தில் பொருள் கிடைக்கும். இது ஒன்றுமில்லாவிட்டால் பொருள் எங்கிருந்து கிடைக்கும் ஆகவே, முன் உலகத்தை க்ஷேமமடையச் செய்துவிட்டு அந்த உலகத்தில் நாம் பொருளைச் சம்பாதிக்க வேண்டும்.

ஓர் மரத்தை ஒருவர் வைத்தால் அதை

விருத்திக்கு வரும்படி பாதுகாத்து அதற்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து நல்லநிலைமைக்கு கொண்டுவந்துவிட்டால் பிறகு அந்த மரத்தில் காய்க்கும் காய்களையும் பழங்களையும் வைத்தவர்கள் அனுபவிக்கிறார்கள். அதுபோல் தேசக்ஷேமத்தை செய்துவைத்து அத்தேசத்திலுள்ள பலன்களை நாம் அனுபவிக்கவேண்டியது நமது கடமையல்லவா.

***

சந்தா நேயர்களுக்கு அறிக்கை.

விஸ்வகர்ம குலோபகாரி என வழங்கிவந்த நமது பத்திரிகையைச் சென்ற ஏப்ரல் மாதம்முதல் "தொழில்" என்னும்பெயருடன் நடத்திவருகிறோம். இப்பத்திரிகையில் எழுதிவரும் விஷயங்கள் முழுவதும் நமது தேசாபிவிர்த்தியைக்கருதியும் தொழில் க்ஷேமத்தைக் கோரியும் உழைக்க முன் வந்திருக்கிறதென்பதை இப்பத்திரிகையைப் பெற்று வாசிக்கிற ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்கும். இப்பத்திரிகைக்கு தொழில் அநுபோகமுள்ளவர்கள் அவர்களுடைய யுக்தி அநுபோகங்களை வியாசரூபமாக எழுதி அனுப்பினால் அவைகளை இப்பத்திரிகை வாயிலாக பலருக்கும் விளங்கும்படி தெரிவிக்கலாம். இதுதவிர சிலர் தொழிலென்று இப்பத்திரிகைக்கு பெயர் வைத்துவிட்டார்கள் இதிலென்ன எழுதமுடியும் என்பதாகச் சந்தேகப்படுகிறார்கள். இப்பொழுது எழுதிவரும் விஷயங்களைக் கவனித்தால் நன்கு விளங்கும்.

இப்பத்திரிகைக்கு பழைய சந்தாதாரர்களில் சிலர் பாக்கிப்பணத்தை செலுத்தாமையால் அவர்களை யெல்லாம் சந்தா மெம்பர்களில் இருந்து விலக்கப்பட்டிருக்கிறது. இப்பத்திரிகையைப் பெறும் சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்களுக்கு காட்டிச் சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

***

பத்திராதிபர்களுக்கு.

நாம் இந்திய கைத்தொழிலை விருத்திசெய்து நமது தேசத்தை க்ஷேமமடைய செய்யவேண்டுமென்று எழுதிய விஷயங்களைப் பார்த்து புதுவைச் சுகாபிவிர்த்தினி மிகவும் ஆதரித்து பேசியதைப்பற்றியும் அதற்குள்ள தேசாபிமானத்தைப்பற்றியும் நாம் நன்றி பாராட்டுகிறோம்.

சென்னை லோகோபகாரி பத்திரிகையும் மேற்படி விஷயத்தை எடுத்துச் சொல்லியது. வேலூர் ஜனாபிமானி பத்திரிகையும் விளம்பரத்தைப் பிரசுரித்தது. மற்றும் நாட்டில் அநேக பத்திரிகைகள் நடக்கின்றன. பெயர்மட்டிலும் உலக நன்மைக்குப் பத்திரிகை நடத்துவதாகத் தெரிகிறதேதவிர உண்மையில் பலஜனங்களின் சௌகரியத்திற்கு பத்திரிகைநடத்துவதாகத் தெரியவில்லை. உலக நன்மைக்காகவும், தேசாபிமானத்தைக் கருதியும், ஒரு விளம்பரம் எழுதினால் அதற்கு சார்ஜ்கொடுத்தால் தமது பத்திரிகைகளில் எழுதுவதாக தெரிவிக்கிறார்கள். பணமும் சம்பாதிக்க வேண்டியதுதான். தேசாபிமானத்திற்கு உழைக்கவேண்டியதுதான். பணம்சம்பாதிப்பதிலேயே மனதைச் செலுத்திவிட்டால தேசாபிமானம் எங்ஙனம் வரும்? பணம் வந்தால்போதும் உலகக்ஷேமம் எதற்கு? பணமிருக்கும்போது உலக க்ஷேமத்தை ஏன் கவனிக்க வேண்டுமென்று

நினைப்பார்கள். எல்லா பத்திரிகைகளையும் நாம் அப்படிச் சொல்ல வரவில்லை. தேசாபிமானத்தையும் உலக க்ஷேமத்தையும் கோரி அனேகப் பத்திரிகைகள் இருக்கலாம். பொருள் விஷயத்திலேயே ஊக்கமுடைய நண்பர்கள் என்மீது வருத்தம் கொள்ளலாம். பொருளும் சம்பாதிக்கவேண்டும் பொதுக்காரியங்களையும் கவனிக்கவேண்டும். அவர்கள்தான் தேசாபிமானிகளென்றும் உலக க்ஷேமத்தைக் கோறியவர்களென்றும் உலகத்திற்கு உழைப்பவர்களென்றும் கருதப்படுவார்கள்.

***

தொழில் ஞானிகளுகதுப் பரிசு கொடுக்கப்படும்.

நமது கைத்தொழிலை விருத்தி செய்ய வேண்டிய நோக்கத்துடன் **நெட்டாலிலுள்ள வாலீப விஸ்வப்பிரம்ம குலாபிமான சபையார்** நமக்கு 7 பவுன் அதாவது 105ரூ. அனுப்பியிருக்கிறார்கள் இதைஇப்பொழுது சென்னை கோவாப்ரேடிவ் பாங்கியில் வைக்கப்பட்டிருக்கின்றது. இப்பணத்தை விஸ்வகர்ம தொழில் கண்காக்ஷி நடந்தால் அக்கண்காக்ஷியில் வரும் பொருள்களிலுள்ள வேலைப்பாட்டின் திறமைக்குத் தக்கபடி ஷை சபையார் பெயரால் பரிசுகள் கொடுக்கும்படி எழுதியிருக்கிறார்கள். இவ்வருடம் திருச்சியில் நடந்த மூன்றாவது விஸ்வகர்ம மஹாஜனகான்பரன்சில் தொழில்காக்ஷி நடத்துவார்களென்று எதிர்பார்த்திருந்தும் நடத்தவில்லை. இப்பொழுது நமது தொழில் பத்திரிகையொன்று நடப்பதால் அப்பத்திரிகையில் அப்போதைக்கப்போது நடைபெற்று வரும் நூதனதொழில்முறைகளை விபரமாய் ஒவ்வொருமாதமும் தவாமல் எழுதிவருபவர்களில் தக்க அருமையான விஷயங்கள் எவர்களுடையதில அதிகப்படுகின்றனவோ அவர்களுக்குத் தக்க பரிசுகள் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தமையால் தொழில் ஞானிகளாயுள்ளவர்கள் தயவுசெய்து நமது தொழில் பத்திரிகையின் முன்னேற்றத்தைக்கோரி, அவரவர்களின் அனுபவத் தொழில் எதுவாயிருந்தபோதிலும் யாதொரு அஞ்சுதலில்லாமல் வெளியிட கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

இப்பரிசு சென்னை விஸ்வகர்ம மகாஜனகான்பரன்ஸ் கமிட்டி மெம்பர்களில் தொழில் தேர்ச்சியுடைய சிலரைக்கமிட்டியாக ஏற்படுத்தி வருஷாவருஷம் அவர்களின் தீர்மானத்தின்படிக்கும், நெட்டால் மேற்படி சபையாரின் சம்மதத்தின்படிக்கும் கொடுக்கப்படும். இப்பொருள் அனுப்பிய சபையாரின் ஊக்கம் குலாபிமானத்தை நன்குவிளக்குகிறது. இதுபோல் மற்றைய விஸ்வகர்ம சகோதரர்களுக்கும் அபிமானமிருந்து பொருள் சகாயஞ்செய்தால் நம்முடைய கைத்தொழில்களை எவ்வளவோ விருத்தி செய்யலாம். இவ்வித பொது நோக்க முடையவர்களுக்குக் கடவுள் கிருபை புரிவாராக. சுபம்! சுபம்! சுபம்!

***

மாமிசம் உண்பதின் கெடுதி.

மனித வர்கத்திற் பிறந்த நமக்கு மாமிச ஆகாரம் சுபாவத்திற்கு விரோதமானது. சரீரசுபாவத்தை யறிந்தநிபுணர்கள் நமது சரீர அமைப்பின் படிக்கு பழவர்க்கங்களே தகுந்த ஆகாரம் என்று வெளியிட்டிருக்கிறார்கள். ஆகையால் மிருகங்களைப்

போல் கொன்று ஜந்துக்களை புஜிப்பது சிருஷ்டி செய்தவரின் எண்ணத்திற்கு விரோதமாய் நடத்தல் மாமிச ஆகாரமே அனுவசியம் தற்காலம் உலகத்தில் அனேகர் அதைப் புஜிப்பதில்லை. பழங்கள் முதலிய கந்தமூல பதார்த்தங்களைத் தின்று ஜீவித்திருப்பவர்கள் உண்மையாகவே திரேக சௌக்கியத்துடனிருப்பதாக அனேக திருஷ்டாந்தங்கள் உண்டு. மாமிச ஆகாரம் திரேகசௌக்கியத்திற்கு வெகு அபாயமானது. பெருங் கட்டிகள் கை, கால், பிடிப்பு, க்ஷயம் முதலிய வியாதிகள் அனேகமாய் செத்தப்பிணங்களின் மாமிசத்தைத் தின்பதில் உண்டாவது. மாமிசம் தின்னாத ஊர்களில் கள், சாராயம் முதலியவை குடிப்பவர்களும் குறைவுபட்டிருக்கின்றனர். நம்முடைய வறுமையும் தாழ்மையும் மாமிசம் தின்பதினால் என்று ஒரு துரை சென்னை பாபுலர் ஸைண்டிபிக் ஜர்னலில் எழுதியிருக்கின்றார். நாம் எல்லோரும் இதை கவனிக்கவேண்டியது அவசியம்.

***

கடிதங்கள்.

திருவனந்தபுரம் இராப்பாடசாலை.

திருவிதாங்கூர் ஸமஸ்தானத்திற்குத் தலைஸ்தானமாய் விளங்கும் இத்திருவனந்தபுரத்திலுள்ள சாலையில் விஸ்வகர்ம ஸ்வஜாதிச் சிறுவர்களுடைய முயற்சியால் பிங்களஹு சித்திரைமீ 25வ திங்கட்கிழமையன்று விஸ்வப்பிர்ம்ஹ ஸஹோதர சங்கம் என்னும் பெயருடன் ஒரு சங்கமானது ஏற்படுத்தப்பட்டது. இதைச் சங்கத்தின் லக்ஷியமாக ஸ்வஜாதிச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்படியாக ஒரு இராப்பள்ளிக்கூடமும் ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இச்சங்கத்தில் பிங்களஹு வைகாசிமீ 7உ மாலை 7-மணிக்கு ஒரு விசேஷகூட்டம் கூடப்பட்டது. அப்போது இவிடம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ T. R.. ராமன்பிள்ளை அவர்கள் B. A. 'ஒற்றுமை' என்னும் விஷயத்தைப்பற்றி மிகவும் விரிவாகவும் சாரமாகவும் ஒரு பிரசங்கம் செய்தார். அத்தருணம் இந்நகர் வாசிகளாகிய ஸகல ஸ்வஜாதி கனவான்களும் மற்ற வம்ஸத்தினரும் விஜயம்செய்து கேட்டானந்தித்து நம்குல மேம்பாட்டிற்கு உழைக்கிற எண்ணத்துடன் சுமார் இரவு 9 மணி வரையில் விஜயஞ்செய்திருந்தார்கள். இனி இச்சங்கம் மேலுமேலும் விருத்திக்கு வரும்படி பிரார்த்திக்கப்படுகிறது.

எம். முத்துஸ்வாமி,
காரியதரிசி.

***

திருவண்ணாமலை ஸமஸ்கிருத பாடசாலை.

1917ஹு மேமீ 6உ ஆதிவாரம் காலை 8-மணிக்கு திருவண்ணாமலை ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தானத்தில் விஸ்வப்பிரம்ம வம்சஸ்தர்களுடைய சமஸ்கிருத பாடசாலை ப்ரதாம வருஷோற்சவ கொண்டாட்டம் நடைபெற்றது அச்சமயம் பிரம்மஸ்ரீ வக்கீல், விஜயராகவ ஆச்சாரியார் பி.எ. அவர்கள் அக்ராசனம் வகித்தனர்.

ஷை பாடசாலைப் பிள்ளைகளால் நமது காருண்ய சக்ரவர்த்தியவர் அவர்கள்பேரில் வாழ்த்துகள் பாடி ராஜ விஸ்வாஸத்தைப்பற்றிக் கொண்டாடினார்கள். பிறகு விஸ்வப்பிரம்ம புராணத்தைப் பற்றியும் சோடசகர்ம கிரியைகளைப்பற்றியும் எடுத்துப்பேசி மனக்களிப்புற்றனர்கள். பிறகு அக்கிராசனாதிபதி அவர்கள் இந்த விஸ்வகர்ம வம்சத்தைப்பற்றி சுமார் 1½ மணி காலம் பிரசங்கமாரி பொழிந்தனர். அதில் விஸ்வகர்மாக்களுடைய தொழிலாகவே எங்குபார்த்தாலுமிருக்கிறது. சர்வமும் அவர்களுடையதாகவேயிருக்கிறது. ஆனால் தற்காலம் உங்களில் ஒற்றுமைக்குறைவும் கல்விக்குறைவுமிருந்து உங்களைக் கெடுக்கிறது. இனியேனும் ஓர் ஐக்கிய சங்கம் ஒன்று ஏற்படுத்தி அது மூலமாக நீங்கள் விருத்திக்கு வரவேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி பேசினார். சபையோர்கள் யாவருக்கும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தினார்கள். பிள்ளைகளுக்குச் சொல்லிவைத்த தெலுங்கு கிரந்தம் முதலிய பாடங்களையும் அச்சபையில் தெரிவித்தார்கள்.

ஷை பாடசாலை எட்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ கோ. ஆறுமுக தேசிகர் அவர்கள் இப்பிள்ளைகளுக்காகச் சிரமமெடுத்துப் பாடம் சொல்லிவைத்ததைப்பற்றி அக்கிராசனாதிபதி அவர்களும் எடுத்துச்சொல்லி இந்த இஸ்கூலுக்கு முதன்மையாகப் பாடுபட்டு உழைத்த பிரம்மஸ்ரீ பாலூர் ஈஸ்வராச்சாரியாரும் ஷை திருவண்ணாமலை விஸ்வப்பிராம்மணர்களும் சேர்ந்து ஷை உபாத்தியார் அவர்களுக்கு 25 ரூபாய் பொருமானப் பட்டுசால்வை ஒன்று இனாம் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் ஒவ்வொருவர்களுக்கும் புஸ்தகம் ஒன்றும் பக்ஷணங்கள் அளிக்கப்பட்டுச் சபைபூர்த்தியானது. இன்னும் அடுத்த வருடத்தில் ஷை பாடசாலை விருத்திக்கு வருமென்று நினைக்கிறேன்.

G. போ. அருணாசல ஆச்சாரி,
படிமேஸ்திரி,
திருவண்ணாமலை

பம்பாயின் நாகரீகமும். அதின் ஆபரணத்தொழிலும்.

நமது தேசத்தில், பம்பாய் ஒரு முக்கிய பட்டணம். அதில் வர்த்தகம் நாகரீகம், ஜனக்கூட்டம் முதலியவைகள் மற்றபட்டணங்களைவிட அளவுக்குத் தக்கபடி வெகு அதிகமாயிருக்கின்றன. சுற்றிலும் சமுத்திரமுள்ள பட்டணம். சௌபதி என்ற மேற்கு சமுத்திரக்கரையோரம் 1½ மயில் தூரம் வரையில் முழங்கால் அளவு ஜலந்தான் நிற்கிறது. இது, காலையில் குறைந்தும், மாலையில் பெருகியும் இருப்பதாக காணப்படுகின்றது. இதில் அனேகர் குளங்களில் ஸ்நானஞ் செய்வதுபோல் செய்கிறார்கள். பக்தியுள்ள ஸ்திரீ புருஷாள் அவரவர்களின் ஜபங்களை காலையிலும், மாலையிலும், வாசிக்கிறார்கள்.

புஷ்பங்களைச் சமுத்திரத்தில் எறிகிறார்கள். எல்லாம் பக்தி மார்க்கமாய்த்தான் காணப்படுகின்றன. காலில் ஜோடும் தலையில் டொப்பியும் அல்லது தலைப்பாகையும் இல்லாதவர்கள் அநேகர் காணும் கோயிலுக்குள் நுழைந்தாலும் விக்ரகங்களுக்கு முன்னின்று ஜெபித்தாலும், சிநேகர்கள் வீட்டிற்குள் சென்றாலும் இவைகளை அநேகமாய்க் கழற்றுவதில்லை. உண்மையான மனோபக்தியில் பற்றுள்ளவர்கள் என்றே காணப்படுகின்றன.

வேஷ்டி கட்டுவதில் குழந்தை முதல் கிழவன் கூலிக்காரன் வரையில் எல்லாம் இப்படத்தில் காட்டியது போல்தான் ட்டுகிறார்கள்.

விஸ்வகர்ம சாதியில் அநேகர் விவாகமாகி, போன், பேத்தி, யுடையவர்களாகியும் ஒருதடவையாகிலும் இம்மாதிரி கட்டிப் பழகாதவர்கள் அநேகரிருக்கின்றார்கள். இது நாகரீகத்தின் முதல் குறைவு.

பெண்களின் உடைகள் வெகு அழகாய் அமைந்துள்ளன. அநேகர் காலில் திருச்சிஜோடு போட்டுக்கொண்டு சுருசுருப்பாய் வீதியில் வெகு அழகாய்ப் போவதைக் காணலாம்.

வீதிகளின் அகலத்திற்கும் கட்டிடங்களின் உயரங்களுக்கும், ஜனக் கூட்டங்களின் நடமாட்டத்திற்கும் பொதுதோற்றம் வெகு அழகாகவே யிருப்பதுடன் சுரு சுருப்புள்ள நாடு என்று நினைக்க இடம் தருகின்றன. கூடைத் தூக்கும் கூலிக்காரர்கள் அநேகர் பெண்களாகவும் மற்ற அதிக கஷ்டமுள்ள வேலைகளுக்கு புருஷாள் கூலியாகவும் வீதி தோறும் ஓடிக்கொண்டே யிருக்கின்றார்கள். முக்கிய வீதிகளில் டிராம்வண்டிகளும் மோடார் வண்டிகளும் பீடன் வண்டிகளும் சுமை தூக்கும் இரட்டை மாட்டு வண்டிகளும் வெகு அதிகம். கையினால் இழுக்கும் வண்டிகள் சென்னையில் உள்ளது போல் ஒரு வண்டியாகிலும் காணோம். மணல் வண்டி கல்வண்டி மூட்டைவண்டியெல்லாம் மாட்டு வண்டியாக இருக்கின்றன. மனித ஜென்மங்கள் மாட்டு வேலைக்குப் போகாததே நாகரீகத்தின் விருத்தி எனலாம், அல்லது சென்னையிலுள்ள கூலியாளர்களைப்போல் வேலையில்லாதவர்கள் அவ்வளவு அதிக மில்லாமையினால் என்றும் நினைக்கலாம்.

மணல் இவ்விடத்தியதைப்போல் வெண்மையும் பழுப்பாயுமில்லை. கிளிஞ்சல் கலந்த கருப்பு மண்ணாயிருக்கின்றன. அஸ்திவாரத்தில் அநேகமாய் கருங்கல், துண்டுகளையும் மணல் கலந்த சிமிட்டியையும் போட்டு கெட்டி செய்கிறார்கள். மலை பூமியாகையால் வெகு வலிவாய் அடுக் கடுக்காய் கட்டிடம் கட்டுவதற்குப் போதுமான வலி வுடையதாயிருக்கின்றன. கட்டிடங்களுக்கு வீதிப் படிகள் வீதிகளில் முன்வந்தில்லை. சென்னையிலும் இச்சட்டம் இப்பொழுது தான் உபயோகிக்கிறார்கள். ஆனால் பால்கனி என்ற கட்டிடங்களின் முன்பிதுக்கம் மூன்றாவது அடுக்குக்குமேல் மூன்று அல்லது நான்கு அடிவரையிலும் முனிசிபல் நிலத்தில் முன்வரச் செய்திருக்கிறார்கள். அம்மாதிரி சென்னையில் செய்ய அனுமதி கொடுப்பார்களோ தெரியவில்லை. சென்னை சிந்தாதிரிப் பேட்டை ஐயாமுதலி வீதியில் ஒருவர் முதல் அடுக்கில் பால்கனி போடப் பிரயத்தனப்பட்டு கூடாதென்று தீர்மானிக்கப்பட்டு பாதி கட்டி முடிந்ததையும் இடித்து விடப்பட்டது. உயரத்தில் பால்கனி யிருப்பதால் எல்லாவித அனுகூலங்களு முண்டு. சென்னை கார்பொரேஷன் அதைத் தடுக்காம லிருப்பது வெகு சிலாக்கியம்.

கொல்லை முதலியவைகளுக்கு தோட்டியின் உதவி யில்லாமலே சுத்தி செய்து கொள்ளுமார்க்கம் பம்பாயில் வெகு சிலாக்கியம். ஆனால் காற்றில்லாமல் அடைபட்ட சிறு அறையாகையால் பழக்கமில்லாதவர்களுக்கு உள்ளே நுழையும்போது திரேகம் சிலுக்கும். தென்தேசத்தார்கள் சென்னைக்கு வந்தால் கொல்லை கஷ்டம் உணர்கிறார்கள். இவர்கள் பம்பாயிக்குப்போனால் மிகக் கஷ்டப்படுவார்கள் ஆனால் பம்பாயின் கொல்லை கஷ்டங்கள் முன்போல் அவ்வளவில்லை. என்று தோன்றுகின்றன. முன் ஒருவிசை போனபோது பெரும் நரகமாயிருந்தன. இப்பொழுது சானிடெரி டிபார்ட் மெண்டின் அனுசரணையினால் இடம் விசாலமில்லாமல் போன போதிலும் சுத்தமாய் பீங்கான் கல்லுகளினால் பதித்து வைத்திருப்பதினால் அசுத்தங்கள் தங்கயிடமில்லாமல் சுத்தமாகவே காணப்படுகின்றன.

சில இடங்களில் முதல் வகுப்பு இரண்டாவது வகுப்பு ரயில் வண்டியி லுள்ள கொல்லை அறையைப்போல் நாகரீகமாயும் வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு அடுக்குக்கும் ஒன்று இரண்டு கொல்லைப் பிரத்தியேக மாகவே யிருக்கின்றன. அளவு மூன்றடி சதுரத்திற் குள்ளடங்கிய தாயிருந்தபோதிலும் சுத்தமா யிருப்பதினால் கஷ்டம் தோன்றவில்லை. மேலும் ஒவ்வொரு கட்டடங்களின் பக்கங்களிலும் தவராமல் இரண்டடி சந்து ஏராவிடு பட்டிருக்கின்றன.. இது வெகு அனுகூலம்.

ஆபரணத்தொழில் நாகரீகத்தின் உயர்வின் அளவு குறைவுபட்டே யிருக்கின்றுப்போல் காணப்படுகின்றன. வெளியே போகும் ஸ்திரீகள் நீர்மையாயும் அழகமைந்தவர்களாயு மிருந்த போதிலும் முத்துகள் பதித்த காதோலையும் கையில் வளையல்களும் தவிர மற்ற நகைகள் ஒன்றும் காணோம். சில வைதீகர்களாயுள்ள ஸ்திரீகள் மூக்கில் நத்துபோட்டுக் கொள்கிறார்கள். நகைத்தொழில் செய்யும் கடைகளிலும் அனேகமாய் வளையில்களும் மோதிரங்களும் காலில் அணியும் வெள்ளி ஆபரணங்கள்தான் காணப்படுகின்றன. வளையல்கள் அனேகவிதங்கள் செய்கிறார்கள் பித்தளை பொன் வெள்ளி இம்மூன்று உலோகங்களைத்தான் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். பித்தளையில் ஜதை இரண்டணா முதல் எட்டணா வரையிலும், பொன்னில் ஜதை ரூபாய் பதினைந்துக்குமேல் பொன்னுக்குத் தக்கபடியும், வெள்ளியில் ஜதை இரண்டு ரூபாய்க்கு மேல்இடைக்குத் தக்கபடியும் விலையிட்டிருக்கிறார்கள். முத்தினால்செய்த காதோலை விலை 200 ரூபாயிக்குக் குறையாது என்கிறார்கள் அம்மாதிரிக் கம்மல்கள் பிரகாசக் குறைவு பட்டமையால் நம்மவர்களுக்கு சம்மதப்படாது. பத்து ரூபாய்க்குமேல் மதிப்பிடவும் மாட்டார்கள்.

சிலபெண்கள் மசமதியர்போல்படத்தில் காட்டியபடி தொங்கட முள்ள தோடு போட்டுக்கொண்டு அதிலிருந்து நீண்ட சங்கிலி போன்றதைகாதிற்குமேல் உயரத்தில் மாட்டிக்கொள்கிறார்கள் அது சிலருக்கு அழகாகவேயிருக்கின்றன. ஸ்திரீகள் ஆடைகட்டும்விதம் சென்னையில் பண்டித பிராமணாள் கட்டுவதுபோல் பாதத்தின் மேல்பாகம் அதிகமாய்த் தெரியாமல் வெகு நாகரீகமாய்க் கட்டுகிறார்கள்.



1. 2. 3.

1. சிலர் இம்மாதிரி கட்டுகிறார்கள். இவைகளை ஏழை நிலைமையுள்ள சாதாரணக் கில்ஸ்திரீகள் என்கிறார்கள்.

2. சிலர் கொஞ்சம் தூக்காய்க் கட்டுகிறார்கள். இவர்களை மில் முதலிய இடங்களில் கூலிவேலை செய்பவர்களென்கிறார்கள். மீன் வியாபாரம் செய்யும் செம்படவர்களின் கூலியாட்கள் வேகமாய் ஓடுவதற்குத் தக்கபடி, அதிக தூக்காய்க் கட்டுகிறார்கள்.

3. எல்லாம் நாகரீகக் குறிப்பாய்தான் காணப்படுகின்றன. ஆனால் தென்னிந்திய விஸ்வகர்ம வம்சத்தில் ஸ்திரீகளும், புருஷாளும் ஏன் அனேகமாய்த் தோற்றக் குறைவுடன் தாழ்மையான நிலைமையிலேயே வாழ்ந்துகொண்டு விஸ்வப்பிராமணன் என்ற அவர்களின் உயர்ந்தப் பூர்விகப் பதவியை அபேட்சிக்கிறார்கள். சீக்கிரம் அவர்களின் சில்பத்தின் உயர்வுக்கு தக்கவாறு திருத்தமுடன் முன்வருவார்களென்று நம்புகிறேன். வேல்.

உபயோகமற்றப் பொருளின் உபயோகம்.

உபயோகமற்றவையென்று பல பொருள்களை ஜனங்கள் குப்பையில் எறிந்துவிடுவதுண்டு. ஆயினும் சாஸ்த்திர ஞானத்தைக்கொண்டு பார்த்தால், அத்தகைய உபயோகமற்ற பொருள்களின் விசேஷத்தைக்கண்டுகொண்டு அதைப் பணமாக்கிவிடலாம். இதற்கு ஓர் உதாரணத்தை இங்கு எடுத்துச் சொல்லுவோம். துருப் பிடித்துவிட்டத் தகரங்களை உபயோகமற்றவையென்று கருதி அவைகளை நாம் குப்பையில் போட்டுவிடுகிறோமல்லவா? அம்மாதிரியே ஜெர்மெனியரும் தங்களிடமுள்ள பழையத் தகரங்களைக் குப்பையில் எறிந்துவந்தனர் அதை அங்குள்ள அதிகாரிகள் பார்த்து அத்தகரத்தின்மீது படிந்துள்ளத் துருவைப் போக்கிவிட்டபின் அத்தகரத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று கண்டுகொண்டதும் அவ்விதமே செய்யத் தலைப்பட்டனர். ஜெர்மனியிலே ஒரு முனிசிபாலிடியாரே தினந்தோறும் ஜனங்களால் குப்பையில் எறியப்படும் பழையத் தகரங்களைச் சேகரித்து ஏழாயிரம் ரூபாய் லாபமடைந்ததாக அறிகிறோம். தவிர உபயோகமில்லையெனப்படும் சாமான்களோ சுமை சுமையாக யுத்தத்திற்குமுன் இதர தேசங்களிலிருந்து ஜெர்மெனிக்கு அனுப்பப்பட்டு வந்தனவென்றும், அவைகளை மறுபடியும் உபயோகமுள்ள சாமான்களாக ஜெர்மெனியர் செய்து அவைகளைத் திருப்பி யனுப்பினரென்று தெரியவருகிறது எனவே தினந்தோறும் ஜனங்களால் உபயோக மற்றவையென்று குப்பையில் எறியப்படும்சாமான்களை முனிஸிபல் அதிகாரிகள் சேகரித்து அவைகளின் உபயோகத்தைக் கண்டுபிடித்து தங்களது வருமானத்தைக் கண்டுபிடித்து அதிகரித்துக் கொள்ளலாமென மைசூர் பத்திரிகையொன்றில் ஒருவர் எழுதியிருக்கிறார் அவ்விதம் செய்வதாயின் அதற்குத் தகுந்த சாஸ்திர ஞானம் அவசியம்.

யுத்த ஆபீஸின் கைகண்டபலன்,

உபயோக மற்றவையென்று கருதப்பட்டு வந்த சாமான்களிலிருந்து யுத்த ஆபீஸாருக்கு இச்சமயம் கிடைத்திருக்கும் கைகண்ட பலனை இங்கே குறிப்பிடுவோம். துருப்புகளுக்குத் தினந்தோறும் ஏராளமான இறைச்சி செலவாகி வருகிறதல்லவா? இறைச்சியைக் கண்டதுண்டம் செய்யும் பொழுதும், அதைச் சாப்பிடும் பொழுதும் சிதறிப்போகும் மிகச் சிறிய துண்டங்களைச் சேகரித்துச் சொற்ப விலைக்கு முன்னம் விற்றுவந்தனர் தவிர அவைகளைப் பூமியில் புதைத்தும் எறிந்தும் வந்தனர் அவ்விதம் அலட்சியம் செய்யப்பட்டு வந்த இறைச்சித் துண்டுகளில் கொழுப்பு இருக்கிறதென்பதும் அக்கொழுப்பினால் கிளிஸரீன் என்ற ஒருவகைச் சரக்கு செய்யலாமென்பதும் கவனிக்கத்தக்கன. கிளிஸரீன் என்ற சரக்கானது ஸோப் செய்வதற்கு உபயோகமாவதோடு பிரிட்டிஷ் மருந்துகளுக்கு ஒரு விதத்தில் தாய்ச் சரக்காகவும் இருக்கிறது. மேலும் வெடிகுண்டுகளைச் செய்வதற்கு அது மிகவும் அவசியமானது ஆகவே அலட்சியஞ் செய்யப்பட்டு வந்த இறைச்சித் துண்டுகளிலிருந்து கிடைக்கக்கூடிய அபாரமான உபயோகத்தை யுத்த ஆபீஸர் தெரிந்துகொண்டு, அத்துண்டுகளை எறிந்து விடாமல் அவைகளைச் சேகரித்து அவைகளிலிருந்து கிளிஸரீன் என்ற சரக்கைத் தயார்செய்து வருகிறார்கள். இதற்காக பிரான்ஸிலே போர்முனைக்குப்பின் பெரியத் தொழிற்சாலையொன்றும் இங்கிலாந்தில் ஒன்றும் ஏற்பட்டிருக்கின்றன இன்னும் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்த முயன்றுவருகிறார்கள். இப்பொழுது அந்த இறைச்சித் துண்டுகளிலிருந்து மிகவும் சுத்தமாக ஓராயிரம் டன் எடையுள்ள கிளிஸரீன் என்ற சரக்கை யுத்த ஆபீஸர் தயாரித்து அதை டன் ஒன்றுக்கு 50 பவுன் வீதம் தளவாட இலாகாவுக்கு விற்று வருகிறார்கள். அச்சரக்கை அமெரிக்காவிலிருந்து வாங்குவதானால் டன் ஒன்றுக்கு 240பவுன் விலையாகும். அலட்சியம் செய்யப்படும் சாமான்களிலிருந்து கிடைக்கும் உபயோகத்தை இவ்வுதாரணத்திலிருந்தே நன்கு கண்டுகொள்ளலாம். இங்கே பல சாமான்களை ஜனங்கள் அலட்சியஞ்செய்து குப்பையில் போட்டுவிடுகின்றனர். அவைகளின் உபயோகத்தைக் கண்டுபிடித்து உபயோக மடையக்கூடிய சாஸ்திரஞானமும் முயற்சியும் இங்கேயெப்பொழுது ஏற்படுமென்பதை எதிர்பார்த்திருக்கின்றோம்.

பஞ்சப்பிரமான்வய தீபிகை.

நாகர காண்டம் உரை.

விஸ்வகர்ம மஹாஜனங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுவது என்னவென்றால் சென்னை சூளையில் நிவாசமாயிருக்கும் ஸ்ரீமத் மாணிக்கசுவாமிகள் சில நாளைக்கு முந்தி அதிகப்பிரயாசை எடுத்துக்கொண்டு பணச்சிலவிட்டு எழுதிவைத்திருந்த முக்கியமான கிரந்தங்களாகிய பஞ்சப்பிரம்மான்வய தீபிகை 1, நாகரகாண்டம் 1, ஆக இரண்டு புஸ்தகங்களையும் இது பரியந்தரம் அச்சிடவேண்டும் என்று வைத்திருந்தும் அச்சிட முடியாமல் போய்விட்டது. தற்சமயம் அன்னவருக்கு தேக அசவுக்கியம் நேரிட்டிருப்பதால் எப்படியாகுமோ என்று அவரிடம் சிலர்களை அழைத்துக்கொண்டு போய் கேட்டதற்கு என்னால் முடியவில்லை நீங்கள் அச்சிட்டுக்கொள்வதாகயிருந்தால் அச்சிட்டுக் கொள்ளுங்கள் என்பதாக மேற்படி இரண்டு கிரந்தங்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டார். இப்பொழுது அவைகளை அச்சிடவேண்டுமானால் கடிதமும் கிராக்கியாகயிருக்கிறது. இதுகளைப் பரிசோதிக்க சமஸ்கிருத பண்டிதராகிய சாஸ்திரக்ஞர் ஒருவாயிருந்து புரூப் முதலியவைகளைப் பார்த்து முடிக்கவேண்டும். இதுகளுக்கெல்லாம் பொருள்தான் ஆதாரம். பொருளிருந்தால் எல்லாக் காரியமும் சீக்கிரம் முடியும். இது தவிர இரத காராதிகாரண விசாரம் என்னும் கிரந்தம் தெலுங்கிலிருப்பதை அனேகர்கள் தமிழில் அச்சிடும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள். அதற்கும் பொருள்தான் வேண்டும். இதுகளுக்கெல்லாம் பொருள் சகாயஞ்செய்தால் அச்சிட்டு முடித்து விடலாம். இதற்குப் பணச் செலவுசெய்ய முன்வரும் குலாபிமானிகள் நமக்கு எழுதி விபரம் தெரிந்துகொள்ளலாம்.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
5/10 வேதகிரிமேஸ்திரிவீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பட விளம்பரம்.

இவை சில பக்திமான்கள் வேண்டுதலால் மிக அழகாயெழுதி ஆப்டோன் பிளாக்கு செய்து உயர்ந்த கிளேஸ் மெருகு கடிதத்தில் போட்டோ படத்திற்குச் சமானமாய் பார்ப்பவர் மனம் பூர்க்கும் வண்ணமாக அச்சிட்டுக் குறைந்த விலை ஒரு படம் இரண்டணாவாக விலை ஏற்படுத்தியிருக்கின்றனன். அச்சிட்டபடம் கொஞ்சமாக விருப்பதால் வேண்டுவோர் அடியிற்குறிப்பிட்ட விலாசத்திற்கு எழுதியாவது நேரிலாவது வி. பி. யிலாவது பெற்றுக்கொள்ளலாம். 10 படம் மொத்தமாக வாங்குபவர்கட்கு ஒருபடம் இனாமாகக் கொடுக்கப்படும். வெளியூர்களுக்கு வி. பி. சார்ச்சுபிரத்தியேகம்.

P. V. சபாபதி ஆச்சாரி,
66-கெ. கிழவப்பசெட்டி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

“கைத்தொழில் பிராணாதாரம் - கல்வி மிகபாசித்தி”

சென்னை கைத்தொழிற்சாலை.

இப்பெயர்கொண்ட தொழிற்சாலையொன்று சென்னையில் ஸ்தாபித்துப் பிரபலமாக நடத்தவேண்டுமென்கிற எண்ணம் கைத்தொழில் அபிமானிகளுக்கு ஏற்பட்டிருக்கிறபடியால் பொருள் சகாயத்திற்காக (ஷேர்ஹோல்டர்) பங்குக்காரர்களாக ஷேர் ஒன்றுக்கு ரூபாய் 10 விகிதம் அவரவர்கள் சக்தியானுசாரம் எத்தனை ஷேர்களிலும் எடுத்துக்கொண்டு நடத்த உத்தேசம். இதற்குச் சம்மதமுள்ள நண்பர்கள் அவரவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் ஓர் கூட்டங்கூடி மஹா ஜனங்களுடைய தீர்மானத்தின்படி நடத்த உத்தேசம்.

இவ்விடத்தில் முடியும் சாமான்களையும் மற்றய ஊர்களில் வரும் சாமான்களையும் இச்சங்கத்தார் கமிஷனுக்கு இவ்விடத்திலேயே விற்பனைகள் செய்யவேண்டுமென்கிற எண்ணமிருக்கிறது.

கொ. கன்னியப்ப ஆச்சாரி,
தொழில் ஆபீஸ்,
5/10, வேதகிரி மேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

புதிய கம்பெனி! புதிய சாக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்த இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

---

08 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும்: 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள். 6-முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூ 5—8—0, ஷை சிறுசு 1-க்கு ரூ 4-8-0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ 6-8-0, தபால் செலவு பிரத்தியேகம்.

முழம்	அகலம்.	விலை ரூபா.
4	2	4-8-0 6-11
5	2½	6-முதல் 8-வரையில்
5	3	7 ,, 9 ,,
6	2½	8 ,, 9 ,,
6	3	9 ,, 12 ,,
7	3	10 ,, 13 ,,
8	3	12 ,, 15 ,,
9	3	14 ,, 16 ,,
10	3	15 ,, 18 ,,

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6.	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு		...	75	0	0
,, 2 ,,	...	...	50	0	0
,, 3 ,,	...	...	40	0	0
,, 4 ,,	...	...	35	0	0
,, 5 ,,	...	...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம், காண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி காசி,
தாராநகர் தெரு, காசி.

Managar,
SILK PITAMBER & Co.,
Daranagar Street,
Benarse, City.

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்,

பி. சுப்பராய் ஆயூர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

27. **அசோககிருதம்:**—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பஹிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பஹிஷ்டையாகுதல், பஹிஷ்டைகாலங்களில் வெகுகடினமான சூலைநோயுண்டாகுதல், பஹிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு, தேகங்கனத்தல் வாந்தியாகுதல், பஹிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப் போகுதல் முதலிய ரஜோதோஷங்களும் யோனிச்சுருக்கம், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் முதலிய ஸ்திரி சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம், சூதகசூலை, ரோகங்களுக்கும் மற்றும் அநேக யோனி சம்பந்தமான ரோகங்களுக்கும், அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி செலவு அணா 5 பிரத்தியேகம்.

28. **பிரசந் சந்திரோதய மகரத்வஜம்:**—தாதுநஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மையில்லாமை, இந்திரிய நஷ்டம், சொர்ப்பனஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்து க்ஷீணம் சீக்கிரஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று, அபரிமிதமான புருஷத்தன்மையைத்தரும், சந்தேகமில்லை இம்மருந்து சாப்பிடத் தொடங்கின நாள் முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக்காட்டும் பாலியத்தில் சிற்றின்பத்தில் உழைத்து புருஷத்தன்மையை சீக்கிரத்திலிழந்து, பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டால், வெகு சீக்கிரம் பூரண புருஷத்தன்மையை திரும்பப் பெற்று சுகிக்கலாம் என்பது நிச்சயம். எழுசேவை ஔஷதம் ரூபா 3 வி பி, செலவு அணா 5 பிரத்தியேகம்

29. **சவனபிராசம்:**—இம்மருந்தினால் ஈளை, இருமல், சுவாசகாசம், க்ஷயம், தொண்டைரணம், கபம் இன்னும் நுரைசரலைப்பற்றிய எல்லா வியாதிகளும் வெகு சீக்கிரத்தில் தடையின்றி தீரும், இம்மருந்து பலஹீனத்தைப்போக்கி, தேகத்திற்கு வலுவையும், தேஜஸையும் காந்தியையும் தரும். சவனமகாரிஷியவர்களுக்கு இம்மருந்து தேவர்களால் செய்து கொடுக்கப்பட்டு ருஷி பாலியத்தை யடைந்ததாக ஆயுர்வேத சாஸ்திரத்தில் கொண்டாடப்பட்ட சவன்பிராசனம் என்னும் சிறந்த ஔஷதம் டப்பா 1-க்கு ரூபாய் 2 வி பி செலவு அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில், அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன், பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

குடும்ப சஞ்சீவி.

இது ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது. இதில் அடங்கியிருக்கும் ஐந்து மருந்திரத்தினங்களும் ஐந்து சஞ்சீவிகளென்றே சொல்லத்தக்கன இவை இருந்தால் வயித்தியரை அடிக்கடி தேடவேண்டியதில்லை. சில கிராமங்களில் ஜனங்கள் வயித்தியரில்லாது கஷ்டப்படுவதை எண்ணியே இது தயார் செய்யப்பட்டது. இவைகளை உபயோகித்தவர்களுக்கே இவைகளின் அருமையும், பெருமையுந் தெரியவரும். இந்தப்பெட்டியைப் பின்னால் உண்டியற்பெட்டியாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். சிறுவர் சிறுமியர்களுக்கு இது பரிசாகக்கொடுக்க உபயோகமானது. இந்தப் பெட்டிகளில் நூற்றுக்கு ஒருபெட்டியில் ஒரு இனாம்சீட்டு வைத்திருக்கிறது. கிடைக்கப் பெற்றவர்கள் அதை ரிஜிஸ்டர்செய்து எங்களுக்கு அனுப்பினால் ஐந்து ரூபாய் விலையுள்ள சுத்தப் பவுன்மோதிரம் ஒன்று அனுப்புவோம் விலை ரூபாய்-2.

1. பாலரக்ஷாமணி.

இது சிறந்த மூலிகை. வேர்களாலும் நயமான சரக்குகளாலும் செய்யப்பட்டது. இது குழந்தைகளுக்கு இன்றியமையாதது. 50 மாத்திரையுள்ள புட்டி 1-க்கு விலை அணா-8.

2. இராஜ சுகபேதி மாத்திரை.

இரவில் போஜனத்திற்குப்பிறகு படுக்குமுன் தனியே சாப்பிட்டு உடனே கொஞ்சம் சுத்தஜலமாவது இளவெந்நீராவது குடிக்கவும் காலையில் வழக்கம்போல் ஆகாரம்செய்து எந்த வேலையும் பார்க்கலாம். மருந்து சாப்பிட்ட உடம்பாகத் தெரியாது. அதிகம் பேதியாகவேண்டுமானால் 3 மாத்திரைவரையில் சாப்பிடலாம் பாலர்முதல் விருத்தர்வரை உபயோகிக்கலாம்

50 மாத்திரையுள்ள புட்டி 1-க்கு விலை அணா-8.

3. சுரகேசரி குளிகை.

சுரங்களுக்கு உபயோகமானது. 50 மாத்திரையுள்ள புட்டி 1-க்கு விலை அணா-8.

4. டைகர் பில்ஸ் என்னும் தாதுவிருத்தி மாத்திரை.

இது அயசத்து முதலியவைகள் சேர்ந்தது. உஷ்ணத்தினாலும், பித்தத்தினாலும், அதிக போகத்தினாலும் இரத்தங்கெட்டுச் சரீரம் வெளுத்துக் கைகால் ஓய்ந்துநடப்பதற்கு என்ன செய்வோமென்று ஏங்கி யிருப்பவர்களையும், அவர்களுக்கு ரத்தத்தை விருத்திசெய்து முககாந்தி முதலியன உண்டாக்கி ஆண்புலிபோல் உலாவச்செய்வது இதுவே. இதை யாவரும் உபயோகிக்கலாம். இதன் குணத்தை விசேஷித்துக்கூற இங்கே இடம் போதாது "இளைத்தவன் இரும்பைத் தின்" என்னும் பழமொழியே இதன் குணங்களை நன்றாய் அறிவிக்கிறது. இதை ஒன்று இரண்டு மாத்திரை காலை மாலை சாப்பிடவும். இரவில் பால் சாப்பிடவும் சோகை, காமாலை முதலியனவும் தீரும், பத்தியமில்லை. 50 மாத்திரையுள்ள புட்டி 1-க்கு விலை அணா-8.

5. கபாடச்சூரணம்.

இந்தச் சூரணத்தில் ஆறில் ஒருபாகத்தைத் தயிரிலாவது வாழைப்பூச் சாற்றிலாவது குழப்பிச் சாப்பிடச் சீதபேதி உஷ்ணபேதி, அதிசாரக்கிராணி, மூலக்கிராணி, வாய்வுக்கிராணி, ஜலக்கிராணி முதலியன தீரும். இப்படி மூன்றுவேளை சாப்பிடவும். காரமான உணவு ஆகாது. $\frac{1}{2}$ அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை அணா-4. ஷை 5-ம் அடங்கியதே குடும்ப சஞ்சீவி பெட்டி.

ஷர்பத்துகள்.—நன்னாரிவேர், நார்த்தம்பழம், எலுமிச்சம்பழம் இவற்றின் ஷர்பத்துகள் கைபடாமல் செய்யப்பட்டவை. நன்னாரி ஒன்றுக்கு ஆறுபங்கும் மற்றவை பத்துப்பங்கும் ஜலம் விட்டுச் சாப்பிடத்தக்கன. நன்னாரியில் ஒன்றுக்குப் பத்துபங்கு பாலும்விட்டுச் சாப்பிடலாம்.

விலை சிறியபுட்டி ரூபா 1—0—0, பெரிய புட்டி ரூபா 1—14—0

ரணசஞ்சீவி.—ரணங்களுக்கு இது மிகவும் மேலானது. மாடு, குதிரை, நாய் முதலிய சகல மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உண்டான ரணங்களை மிகவிரைவில் சுகப்படுத்தும். மனிதர்களின் குஷ்டரண முதலிய எவ்வகை ரணங்களுக்கும், கட்டிகள், புரைகள், காயங்கள் முதலியவைகளுக்கும் ஸஞ்சீவி. ஆயிரக்கணக்காய்ச் செலவாகிறது. விலை புட்டி 1-க்கு அணா-8.

பரமானந்த பற்பொடி.—ஆயிரக்கணக்கான டின்கள் செலவாயிருக்கின்றன. இதன் விலை டப்பி 1-க்கு அணா-3

கணபதி அன்கோ,

4/22, உலகப்பமேஸ்திரி வீதி, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

இரத்னபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான புது நாவல்: 2 பாகங்கள்.

இதில் மிக்கஆச்சரியமும் நெஞ்சு திளக்கிடக்கூடியவைவயும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளது. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருட்டாந்தப் பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. நமது சிறுவர் சிறுமிகளும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் முதற்பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதின்றும். இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன என்றமட்டும் கூறுகின்றோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப்பட்டது. டபிள் கிரௌன் 1-க்கு 16 கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது. 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது விலை 2 பாகங்களும் ரூ. 3 4 0

2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்களுக்கு மட்டும்) ரூ. 1 12 0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக் கடைசிவரையில் இரண்டு பாகமும் ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்தபோதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத்தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷ சந்தா விகிதம்.

இந்தியா பர்மா ஸிலோனுக்கு ரூ. 1—0—0. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0.
ஆனந்தபோதினி மாதிரிகாப்பிக்குக் கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

வஜ்ரதேகாநந்த லேகியம்.

பத்தியமே இல்லை! பத்தியமே இல்லை!!

உலகத்தில் தேகபலத்தையும் நோயற்ற வாழ்வையும் விரும்புவோர்கள், இந்த வஜ்ரதேகாநந்த லேகியத்தை சிறுவர்முதல் விருத்தாப்பியர் வரையில் கொட்டைப்பாக்களவு காலை மாலை உண்டு வந்தால் மலச்சிக்கலை நீக்கி, நாபி வெட்டையைத் தணித்து, இரத்தத்தைச் சுத்திசெய்து, கவனசக்தியைக் கொடுத்து, தேகபுஷ்டியையும் தாது புஷ்டியையுந் தந்து, நரம்புகளுக்கு வலிவை யீந்து, ஆண்சிங்கத்துக் கொப்பான பலத்தைக் கொடுத்து, தேகத்தை வஜ்ஜிரஸ்தம்பம்போலாக்குவதுந் தவிர, சகலமான வியாதியையுங் கண்டிக்கும். இது உண்பதற்கு மிகுந்த ருசிகரமுடையது. இதில் கஞ்சா, அபினிமுதலிய கெட்ட வஸ்துக்கள் சேர்க்கப்படவில்லை. இதில் அதிகவிலையுயர்ந்த சரக்குகளும், சாஸ்திர முறைப்படி புடந்தீர்ந்த அயம், காந்தம், தங்கம், வெள்ளி, கல்நார், முதலிய சிந்தூர பஸ்பங்களும் சேர்த்து, குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறோம். இதை 10-நாள் வரை டைரக்ஷனில் சொல்லியபடி கிரமமாக உண்டுவந்தால் இதன் பெருமையையும், இதைச் செய்தவரின் கீர்த்தியையும் நீங்களே நன்குணர்ந்து, ஆரோக்கியத்தையும் ஆநந்தத்தையும் அடைந்து வேறு லேகியத்தை வாங்கி உண்பதற்கு மனமே வராது. இந்த லேகியத்தைச் சிறந்த ஆயுர்வேத பண்டிதர்களெல்லாம் பரிசோதித்து அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். இதை ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கலாம்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

அம்பிகாசாலை,
நெ 2/25, வேதகிரி மேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

இன்டியன் டைப் பவுண்டரி.

ஓ. துரைசாமி ஆச்சாரி, அண்டு சன்ஸ்.

நெ-7 சூளை ஹைரோட், மதராஸ்,

நாளுக்கு அச்செழுத்துகள் தற்கால வேலைத்திறத்தின் நாகரீகத்திற்கு பாங்காகும்படி

ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய பாஷைகளில் வார்த்து சப்ளை செய்கிறோம்.

அச்சாபீசுக்கு வேண்டிய மற்றும்

மரக்கோல வகையராக்கள், பித்தளை கம்போஸிங் ஸ்டிக், மவுல்ட் மாட்ரைஸ், பன்ச் முதலான சகல சாமான்களும்

லகுவான விலைக்கு கிடைக்கும்,

யாவும் நல்ல வேலைப்பாடுடன் தயாரிக்கப்படுகின்றன.

அன்றியும்

மதராஸில் அகப்படக்கூடிய சர்வ "ஸெகண்ட் ஹாண்ட்" ப்ரிண்டிங் மெஷின்களுக்கு நாங்கள் கமிஷன் ஏஜண்டு.

☞ எங்கள் புதிய டைப் ஸ்பெஸிமன் ஜாப்தாவுக்கு எழுதும்.

...யாஷமருது

யோகம்	சாரங்கள்.	நா—வி		இங்	தமிழ்	வார	
(ஃ)சி அ	கு	5	15	14	1	வியா	தச 35-7, ஜே 33-22, தி 4-12, மிதுனரவி 10-17
அ—சி	செ-பு-சு	5	5	15	2	வெள்	ஏகா 32-16, அசு 32-23, தி 22-31, கா 24-22, ஏகா
சி—அ		4	55	16	3	சனி	த்வா 30-27, பா 32-26, சே 0-17, சனிப்பிரதோஷம்
சி—அ	கு-பு-சு	4	46	17	4	ஞா	த்ர 29-45, * இரு 33-34, தி 2-53
அ		4	36	18	5	திங்	சசி 30-11, ரோ 35-49, தி 14-58, கா 18-27 போ-அ.
(ஃ)சி ம	பு	4	26	19	6	செ	● 31-55, மிரு 40-19, அமாவாசை
சி	சு	4	16	20	7	புத	ப்ர 34-48, திரு 43-59, தி 1-50, ஆஷாடசுத்தம்
அ	கு—செ-பு	4	6	21	8	வியா	த்வி 38-53, புன 49-47, தி 16-45, கடகாய 59-30
ம		3	56	22	9	வெள்	த்ரி 43-58, பூச 56-30, தி 11-55
ம	கு—பு-சு	3	47	23	10	சனி	சது 49-47, ஆயி60-0 கா 0-25
சி—ம	கு	3	37	24	11	ஞா	பஞ் 55-56, ஆயி 3-52, கா 5-44
ம—சி	பு	3	27	25	12	திங்	ஷஷ் 60-0, மக 11-27, கா 2-0
சி—அ	செ—சு	3	17	26	13	செ	ஷஷ் 1-56, பூர 18-47, கா 6-56
அ—ம	பு—வி	3	7	27	14	புத	ஸப் 7-18, உத் 25-22, கா 26-17, புதாஷ்டமி ஆனித்திருமஞ்சனம்
சி	கு-பு-சு	2	57	28	15	வியா	அஷ் 11-30, ஹ 30-42, கா 20-12
சி		2	47	29	16	வெள்	நவ 14-8, சித் 34-26, கா 17-7
அ—சி	பு	2	37	30	17	சனி	தச 14-57, சுவா 36-23, கா 18-41
ம	கு-செ-சு	2	28	1	18	ஞா	ஏகா 13-55, விசா 36-28, கா 14-25, சயன ஏகாதசி கோபத்மவிரதம்
சி	பு—சனி	2	18	2	19	திங்	த்வா 11-1, அனு 34-46, கா 16-16,
சி—ம்		2	8	3	20	செ	த்ர 6-27, கே 30-29, கா 18-14
ம	பு—சு	1	58	4	21	புத	சசி 0-26, ○ 53-19, மூல 26-57, தி 23-17, கா 16-57, பூர்ணிமை வியாஸபூஜை
சி	கு	1	48	5	22	வியா	ப்ர 45-27, பூரா 21-26, கா 7-35, ஆஷாடபகுளம்
சி	செ-பு	1	38	6	23	வெள்	த்வி 26-12, உரா 15-22, தி 24-17
சி	பு-சு-சனி	1	29	7	24	சனி	த்ரி 28-55, சிர 9-7, தி 18-5
ம	கு	1	19	8	25	ஞா	சது 20-56 அவி 3-3, சத 57-29 தி 19-19
சி	பு—சு	1	9	9	26	திங்	பஞ் 13-33 பூட் 52-56 தி 12-8
ம		0	59	10	27	செ	ஷஷ் 6-56 உட் 49-7 தி 15-9
சி	செ-பு-ரா	0	49	11	28	புத	ஸப் 1-45 அஷ் 57-42 ரே 46-43 தி 17-46
அ	கு-சு	0	39	12	29	வியா	நவ 55-3 அசு 45-42 கா 3-58
சி	பு	0	30	13	30	வெள்	தச 53-49 பா 46-4 தி 9-41
சி	வி	0	20	14	31	சனி	ஏகா 53-57 * இரு 47-49 தி 16-45 ஏகாதசி
அ	பு-சு	0	10	15	32	ஞா	த்வா 55-23 ரோ 50-52 தி 29-43 தக்ஷி-புண்-க-ரவி. 37-17

		செ புவி.	கு-சு சே
		10 மிது-பு 15-கட-சு 26-கட-பு	சனி
ரா			

உ

சுபமஸ்து.

"விஸ்வகர்ம குலோபகாரி" என வழங்கிவந்த

தொழில்

THE REGISTRAR OF ... REGISTERED ... -AUG 1917 ... OFFICE ... MADRAS.

மலர்-4. { பிங்களஸு ஆடிமீ 1917ஸு ஜூலைமீ } இதழ்-6.

தொழில் விஷயங்கள்.

இந்தியாவிலிருந்து அநேகர் வெளிதேசம் சென்று தொழில் கற்றுக்கொண்டு வருவதாகப்போய்ச் சிரமப்பட்டுத் தொழிலைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் அவ்வளவு பிரயாசைப்பட்டுக் கற்றுக்கொண்டுவந்த தொழில்களை இங்கு செய்யவேண்டுமானால் சாத்தியப்படவில்லை. அதன் காரணம் யந்திரங்கள் வேண்டும். அவ்வியந்திரங்களை அவர்கள் படித்த இடங்களிலிருந்தே கொண்டுவரலாமென்றால் அதற்கு அவர்களிடத்தில் பொருளில்லை. பொருளுள்ளவர்கள் அவ்விதத் தொழில் கற்றுக்கொள்ளப் போவதில்லை. அப்படிப் போனாலும் அதற்கு வேண்டிய மிஷின் முதலிய ஆயுதங்களைக் கொண்டுவருவதில்லை. இவ்விதமிருக்கிறது நம்மவர்களுடைய கதி.

நமது காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள்நமக்கு ஸ்காலர்ஷிப்பு கொடுத்து அன்னிய நாட்டிற்குப்போய் வேலையில் தேர்ச்சியடைந்து வரும்படி அனுப்புகிறார்கள். இவர்கள் போய் நுனிப்புல் மேய்வதுபோல் மேல்வேலைகளை மாத்திரம் பார்த்துக் கற்றுக்கொண்டு வருகிறார்களே தவிர வேலைகளின் சூக்ஷ்மங்களைக் கற்றுக்கொண்டு வருகிறதில்லை. நமக்கு நல்லகாலம் எங்கிருந்துவரும்? ஆகையால்நமது கவர்ன்மெண்டாருக்கு இந்துக்கள் நல்ல நிலைமைக்கு வரவேண்டுமென்று எண்ணமிருந்தால் இவ்விந்தியாவிலேயே இரும்பு மண் எடுத்து உருக்கிக் கம்பிகள் தகடுகள் முதலிய சாக்குகளைச் செய்யவும் இவ்விடத்திலேயே சிறிய ஆணிகள்முதல் பெரிய சாமான்கள் வரையிலும், அதாவது ஊசிகள்முதல் இஞ்சின் வரையில் செய்யக்கூடிய தொழிற்சாலையை ஸ்தாபித்து அதற்குவேண்டிய இஞ்சின் முதலிய ஆயுதங்களை வரவழைத்து அந்த வேலைகளைச் செய்யக்கூடிய வேலைக்காரர்களையும் வரவழைத்து இவ்விடத்திலேயே நடத்திக் காட்டினால் இவர்களும் வேலைக்காரர்களாய்விடுவார்கள். அவ்விடத்திலிருந்து வரும் சிரமமும் நீங்கிவிடும். இதுதான் சுலபமான வழி. இதைவிட்டு அவ்வளவு தூரம்போய் கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொண்டு வந்தாலும் வேலைகளை நடத்துவதற்கு ஆயுதங்களில்லாமல் காத்திருக்கவும் நேரிடுகிறது. அப்படிக் கில்லாமல் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு வேலை கற்றுக்கொள்வதற்கும் பொருள் செலவில்லாமல் இருப்பதற்கும் நன்மையாயிருக்கும்.

இதன் மொத்தக் கருத்தாவது வேலை கற்றுக்கொள்வதென்றால் வேலை செய்யக்கூடிய ஆயுதங்களைச் செய்யக் கற்றுக்கொள்வதுதான் வேலை. மேல்வேலைகளை மாத்திரம் கற்றுக்கொண்டு வந்துவிட்டால் ஆயுதமில்லாமல் என்ன செய்யமுடியும்? ஒன்றும் முடியாது. வேலையில் நல்ல திறமையுடையவரென்று எத்தனை 'சர்ட்டிபிகேட்'கள் வாங்கினாலும் எத்தனைமெடல்கள் வாங்கினாலும் அவைகள் ஒன்றும் வேலைகளை நடத்தாது. ஆயுதமிருந்து வேலைகள் செய்தால்தான் வேலைகள் நடக்கும். ஆகையால் ஆயுதங்களைச் செய்யக்கூடிய வேலைகளைத்தான் முன் கற்றுக்கொள்ள வேண்டும்.

***

கைத்தொழில் செய்வோரின் தற்கால நிலைமை.

இந்துக்கள் ஒன்றுசேர்ந்து ஒருதொழிற்சாலையோ அல்லது ஒரு வியாபாரச்சாலையோ ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்று பாடுபட்டு வருகிறோமல்லவா? இவ்விதச் சாலைகளில் வேலைசெய்யக்கூடிய வேலைக்காரர்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டியது முக்கியமான கடமையாயிருக்கிறது.

இந்துக்களாயுள்ளவர்கள் ஒருதொழிற்சாலை ஆரம்பித்து அதில் வேலை செய்வதற்கு வேலைக்காரர்களை அழைத்தால் வேலையில்லாமல் திண்ணையில் தூங்கிக்கொண்டிருக்கிறவரா யிருந்தாலும் எனக்கு அவ்விடத்தில் இவ்வளவு கூலி கொடுக்கிறார்கள். நீங்கள் இவ்வளவு கொடுத்தால் தான் வேலைக்கு வரமுடியும். அட்வான்சும் இவ்வளவு கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடைய நிலைமை எப்படி யிருக்கிறதென்றால், அன்னிய நாட்டிலிருந்து வந்தவர்கள் ஒரு கம்பெனி ஏற்படுத்தி அதில் வேலைசெய்வதற்கு வேலைக்காரர்கள் வேண்டுமென்று நோட்டீசுகள் தெரிவித்த மாத்திரத்தில் 10 பேர் வேண்டுமானால் 100 பேர்கள் போய் விழுகிறார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களென்றால் மற்றோரிடத்தில் வேலை செய்துகொண்டிருப்பவர்கள் கூடப் போகிறார்கள். இவர்களையெல்லாம் வேலையில்விட்டுத் தேர்ச்சியுள்ளவர்களை மட்டிலும் எடுத்துக்கொண்டு மற்றவர்களைத் தள்ளிவிடுகிறார்கள். இவர்களுக்கு வேலை வைத்து ஒருவாரம் கழித்து வெளியில் 12 அணாக்கூலி வாங்கினவனுக்கு 10 அணா கூலியாகவும், 10 அணாக் கூலிக்காரனுக்கு எட்டு அணாக் கூலியாகவும் போடுகிறார்கள். அதற்கும் அவர்கள் சம்மதித்து இருக்கிறார்கள். சம்பளம் கொடுக்கும்போது கொஞ்சங் கொஞ்சமாகப் பிடித்து ஒரு மாதச் சம்பளம் அட்வான்ஸாகப் பிடித்துவைத்துக் கொள்ளுகிறார்கள். அதற்கும் சம்மதப்பட்டு இருக்கிறார்கள். பிறகு இவர்கள் ஒருநாள் சொல்லாமல் நின்றுவிட்டால் இரண்டு நாள் சம்பளத்தைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள். ஐந்து நிமிஷம் தாமதமானால் நான்கு அணா அபராதம் போடுகிறார்கள். ஏதேனும் கொஞ்சநேரம் வேலைசெய்யாமலிருப்பதைக் கண்டால் வேலையை விட்டு விலக்கிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட இடத்தில் வேலைக்குச் சரியாகப் போகிறார்கள்.

மேற்சொல்லிய இந்துக்கள் வைத்திருக்கும் சிறு தொழிற்சாலைகளில் வேலைக்காரர்களுக்குக் கேட்டபடி சம்பளம் கொடுத்தாலும் அட்வான்சுகள் கொடுத்தாலும் இவர்

கள் காலக்கிரமம்போல் வேலைக்குப் போவதில்லை. சொல்லாமல் நின்றுவிடுகிற வழக்கம். வேலைகளும் சரியாகச் செய்கிறதில்லை. இப்படிச் செய்தால் எப்படி இந்துக்கள் தலையெடுக்கமுடியும்? இந்துக்களால் ஏற்படும் ஒவ்வோரிடங்களிலும் இப்படித்தானிருக்கும்.

கம்பெனி வைக்கும் முதலாளிகளும் சில இடங்களில் சரியானபடி சம்பளம் கொடுத்து வேலைவாங்குவதுமில்லை. இதற்கெல்லாம் காரணம் எதுவென்றால் ஒற்றுமையில்லாக் குறைவேயாகும். ஒற்றுமை இருக்கும் பக்ஷத்தில் நமது ஜாதியார் வேலை ஆரம்பித்தால் அதை எந்தவிதமாகிலும் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற எண்ணம் இருக்குமல்லவா? அந்த எண்ணத்திற்குத் தக்கபடி பாடுபடமாட்டார்களா? அது கிடையாது. இவன் என்ன கம்பெனி வைக்கிறது; அவனிடத்தில் நாமென்ன போய் வேலை செய்வது; அவனும் நம்மைப்போலொத்தவன்தானே இவனுக்குஅடங்கியிருப்பதாவது? அவனிடத்தில் பேச்சுகள் கேட்பதாவது? என்னும் துர்அபிப்பிராயம் நம்மவர்களுக்கு வந்துவிடுகிறது. எஜமானுக்கும் ஓர்விதக் குறைவு ஏற்பட்டுவிடுகிறது. இவன் நம்மிடம் கூலிக்கு வேலைசெய்ய வந்தவன்தானே இவனைநாம்ஏன் மதிக்கவேண்டும்? என்பதாகப் பெரியவர்களா யிருந்தாலும் சுற்றத்தார்களா யிருந்தாலும் இவர்கள் அலட்சியமாக இருப்பது வழக்கம். இவ்விரண்டு விதத்திலும் ஒற்றுமைகெட்டுப் பரஸ்பரம் கலக்காமல் பொருமைகொண்டு கெட்டுவிடுகிறது.

இங்கிலீஷ்காரர்களிடத்தில் அப்படியில்லை. தொழில் செய்யும் சமயத்தில் தொழிலாளிகளாகவும், மற்றச் சமயத்தில் சிநேகிதர்களாகவும், பந்துக்களாகவும் மதித்துக் கலந்திருக்கிறார்கள். அதனாலேயே அவர்கள் ஒற்றுமையாயிருந்து முன்னுக்கு வருகிறார்கள். அவர்கள் எந்தக் காரியத்தை எடுத்தாலும் கூடிவருகிறது. இதுதான் உண்மையான இரகசியம்.

இப்போது நடக்கும் யுத்தத்தினால் வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகள் அதிகக் கிராக்கியா யிருக்கின்றன. அவ்விதச் சரக்குகளை நமது நாட்டிலேயே ஏன்செய்துக்கொள்ளக்கூடாது? இவ்விடத்தில் செய்யமுடியாதா? இவ்விடத்தில் செய்யக்கூடிய சாமான்களைக்கூடச் செய்யாமலிருப்பதற்குக் காரணமென்ன? இவ்விடத்தில் நெசவுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அதில் ஏன் மல்பீசுகள் செய்யக்கூடாது? சன்னநூல்களை ஏன் செய்யக்கூடாது? இவைகளிலெல்லாம் நம் இந்துக்கள் தலையிடாமல் மற்றக் காரியங்களில் தலையிட்டுப் பாடுபடுவதால் என்ன பயன்? நமக்கு வேண்டியது நம் ஊரில் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி நாம் கஷ்டமெடுத்து உழைத்துவர வேண்டும். அதனால் பிரயோஜனமடையலாம்.

இப்பொழுது நம் தேசத்தில் நீக்குச்சிகள், சன்ன நூல்கள் முதலியவைகளைச் செய்வதற்கு வேண்டிய மிஷின் ஆயுதங்களை வரவழைத்து வேலை செய்யவேண்டும். வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். முதலில் சிறிய மிஷின்களை வரவழைக்கலாம். அதற்கு நம்மவர்கள் தயாராகயிருக்கிறார்களா? அப்படித் தயாராக யிருந்தால் ஏன் எழுதி வரவழைக்கக்கூடாது? அவ்வித மிஷின்களை ஏன் நாம் செய்யக்கூடாது? துணிகளுக்குச் சாயம் போடு

வ்துபழையகாலத்துச் சாயத்தைச்சீர்திருத்தம்செய்து உள்ளூரிலேயே ஏன்போடக்கூடாது? அன்னியநாட்டுச் சாயச்சரக்குகளை ஏன் எதிர்பார்க்கவேண்டும்? இவைகளிலெல்லாம் நாம்ஏன் தலையிடக்கூடாது?

***

ஓர் விண்ணப்பம்.

தொழில் சஞ்சிகை 31-வது பக்கத்தில் நமது கைத்தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் தொழிற்சாலைகள் அவசியம் ஏற்படுத்தவேண்டுமென்றும் அது விஷயமாகத் தனவான்கள் பொருளுதவிசெய்ய விரைவில் முன்வர வேண்டுமென்றும் எழுதியிருந்தேன். நான் இவ்வியாசம் எழுதுவதற்கு முன்னரே நமது உத்தமகுணப் பத்திராதிபரே உண்மையன்போடு குலாபிமானத்தின் பொருட்டும், தேச க்ஷேமத்தின் நிமித்தமும் மிகக் கருணைபூண்டு தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொண்டவராய் முன்வந்து தொழிற்சாலைகள் ஏற்படுவதால் உண்டாகும் லாபத்தில் அனைவரும் பங்குக்காரர்களாக இருக்க வேண்டுமென்று காகமானது தான் அடையப்புகும் உண்பொருளைபகிர்ந்து உண்ணவேண்டுமென்று கத்தித் தன் இனத்தாரைக் கூவியழைப்பதுபோல் நமது 'தொழில்' பத்திரிகை வாயிலாகவும், துண்டு நோட்டீஸ்கள் மூலமாகவும் நம்மவரையும், நமது நாட்டார்களையும் கூவியழைத்தும், இதுகாறும் உதவிபுரியப் பங்குக்காரர்களாகச்சேர ஒப்புக்கொண்டவர்களின் தொகை அதிகமில்லையென விசனிக்கத் தக்கதாயிருக்கிறது. பத்திராதிபருடைய தேசாபிமான நெறியை மற்றத் தேசாபிமானிகளெல்லாம் கடைப்பிடித்தொழுகத் தலைப்படுவாராயின் நமது அருமையான கைத்தொழில்களும், கைத்தொழிலாளர்களும் இன்றே நாம் கோரிய உன்னதநிலையை அடைந்துவிடலாமென்பது எனது துணிபு. அவர் விளம்பரம் செய்திருக்கும் தொழிற்சாலைக்கு மிக்க தனவந்தர்களே உதவிபுரிய வேண்டுமென்பது அவசியமல்ல. சாதாரண அந்தஸ்துள்ள ஒவ்வொருவருமே ஒருபங்கு (ரூபாய் பத்து) கொடுத்தால் 'பலதுளி பெருவெள்ளம்' போல் ஏராளமாய் குவிந்துவிடும்.

அந்நிலையைக்கொண்டே சிறுகச் சிறுக நாம் கோரிய காரியங்களைச் செய்யவல்லவராவோம். 'தொழில்' பத்திரிகை பிறந்து மாதங்கள் மூன்றாயின. வீணே காலதாமதம் செய்வதில் பயனில்லை. 'காலத்தாற் செய்தவுதவி ஞாலத்தின் மாணப்பெரிது' என்பதை நம்நாட்டு நண்பர்கள் இவ்விஷயத்தில் நன்குணரவில்லையோ? நம்மவர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வது நன்முயற்சிகளில் ஒன்றல்லவென்று கருதுகின்றனரோவெனச் சந்தேகிக்க இடம் தருகிறது. இச்சந்தேகத்தை நிவர்த்திக்கும்பொருட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியில் கலந்துழைக்க மனமுள்ளவர்களும் தேசப் பொது நன்மையையே தேடும் தேசாபிமானிகளும், பெருத்த முதலில்லாமல் லாபத்தையடைய விரும்புவோரும் பணத்தை அதிக வட்டிக்குக் கொடுத்து ஏழைகள் வயிறெரிய அநியாயவழியில் சம்பாதிக்க இஷ்டமில்லாதவர்களும், பணத்தைப் புதைத்து வைத்து ரூபாயைக் காவல்வைத்துப் பாசிபிடிக்கப் பார்க்கப் பிரியமில்லாதவர்களும் ஒன்றுகூடி ஒற்றுமையுடனுழைக்க ஒருவரே கைத்தொழிலபிமானியும், தேசாபிமானியும், தனவந்தராகவும் பரோபகாரியும், தர்மிஷ்டராகவும் ஆகக்கூடுமென்பதை உணர்ந்து இயன்றமட்டும் விரைவில் உதவிபுரியக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோலவே நமது பத்திரிகையை வாசிக்கும் ஒவ்வொருவரும் தமது பந்துமித்திரர்கட்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச்சீக்கிரம் அவர்களாலானபங்குக்காரர்களைச் சேர்த்து லாபத்தையும், பலனையும் அடையச் செய்வார்களென நம்புகிறேன்.

நிற்க, ஜனங்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் விளைவிக்கும்பொருட்டுப் பத்திராதிபர் இனிவரும் பிரசுரங்களில் பிரதிமாதம் சேர்ந்துவரும் பங்குகளையும், பங்குக்காரர்களின் மொத்த எண்ணிக்கையையும் தெரிவிப்பார்களென நம்புகிறேன்.

து. ப. வே. ஆச்சாரிய,
திருச்சி.

***

கைத்தொழில்.

கைத்தொழில் அநேகவிதமாயிருக்கின்றது. ஆதியில் மநு, மய, துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஞ என்னும் ஐந்து பிரம்மாக்கள் ஸ்ரீ விராட் விஸ்வபிரம்மத்தின் ஐந்து திருமுகங்களினின்றும் உண்டானார்களென்றும் அவர்கள் இரும்புவேலை (கொல்லுவேலை) மரவேலை (தச்சுவேலை) செம்பு, பித்தளை, ஈயம், வெண்கல முதலிய உலோகங்களைக்கொண்டு பாத்திரங்கள் செய்யும் வேலை (கன்னாரவேலை) கருங்கல், பலப்பக்கல் முதலியவைகளால் கோவில்கள் கட்டுவதும் விக்கிரகங்கள் செய்வதுமான வேலை (சிற்பவேலை) பொன், வெள்ளி முதலிய உயர்ந்த உலோகங்களில் நகை நாணயங்கள் செய்யும் வேலை (தட்டாரவேலை) முதலிய அரிய பெரிய வேலைகள் சாஸ்திரவிதிப்படி செய்துவந்தார்கள். இந்தவேலைகளையெல்லாம் காலக்கிரமத்தில் ஐரோப்பியர், அமெரிக்கர் முதலிய அன்னிய தேசத்தவர்கள் சூட்சும புத்தியினால் யந்திரங்களைச்செய்து அவைகளின்மூலமாக மேற்கண்ட தொழில்களை வெகு நயமாகவும், நாணயமாகவும், அதிசீக்கிரமாகவும்செய்து வருவதால் கையினால் வேலை செய்பவர்களுக்கு வேலைகிடைப்பது கஷ்டமாய்விட்டது. காலதேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு இத்தேசத்தவரும் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து நூதனமானயந்திரங்களைத் தங்கள்சொந்தமாக வரவழைத்து மேற்படி வேலைகளைச் செய்தால் தாங்களும் லாபமடையலாம். இத்தேசத்தவருடைய செல்வத்தினாலும் வியாபாரத்தினாலும் வரும் லாபத்தை இத்தேசத்தவரே அடையலாம். துணிமணிகளும் நகை நாணயங்களும் அதிக சொற்பமான விலைக்கே கிடைக்கும். இவ்வாறு ஒற்றுமையுடன் கூட்டு வர்த்தகங்கள் கூட்டுவேலைகள் முதலிய செய்யாமல் தனித்தனியாகவே பெருத்த வேலைகள் செய்யவும் வியாபாரம் நடத்தவும் மூலதனமின்றிக் கூலிக்கே வேலைசெய்துவந்தால் இவர்கள் எந்தகாலத்திலும நன்னிலைமைக்கு வரமாட்டார்கள். சற்றேறக்குறைய நானூறு வருஷங்களுக்குமுன் ஐரோப்பா கண்டத்தில் ஸ்பெயின், போர்த்துகல், ஆலண்டு, டென்மார்க்கு, பிரான்சு, இங்கிலாந்து முதலிய தேசங்களில் பல பிரமுகர்கள் பாஷை, ஜாதி, மதம் முதலிய வித்தியாசங்களைப் பாராட்டாமல் பல வர்த்தக சங்கங்கள் சேர்ந்து பொன் விளையும் பூமியென்று மதிக்கப்பட்ட இந்தியா தேசத்

திற்கு வந்து பல இடங்களில் அநேக வர்த்தகசாலைகள் ஏற்படுத்திப் பெருத்த லாபம் அடைந்ததுடன் பல பட்டணங்களை முதலில் விலைக்குவாங்கிப் பின்னர் பலவிதமாகப் பல இடங்களைக் கைப்பற்றினார்கள். இவ்வாறு அவர்கள் மேல்நிலைமைக்கு வந்ததற்குச் சிறந்தகாரணம் அவர்களிடத்திலிருந்த ஒற்றுமையே. ஆனால் இந்துக்கள் அன்னியோன்னிய அபிப்பிராய பேதம், குடும்பம், குலம், ஜாதி, பாஷை, மதம் முதலிய வேறுபாடுகளினால் ஒற்றுமை யில்லாமல் இத்தகைய சீர்கேடான நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் இனிமேலாவது ஒற்றுமையுடன் அநேகர் ஒருங்குசேர்ந்து கூட்டுத் தொழில், கூட்டு வியாபாரம் முதலியவைகள் செய்து மேல்நிலைமைக்கு வரவேண்டுமென்கிற ஊக்கமும், விடாமுயற்சியும், நன்னோக்கமுமின்றி சோம்பிக்கிடக்கிறார்கள். இவர்கள் விழிப்படைவது எக்காலமோ அறியோம்.

எந்தத் தேசத்தாராயினும் எந்த மதஸ்தராயினும், எந்த ஜாதியாராயினும் எந்தக் குலத்தவராயினும், எந்தப் பாஷை பேசுகிறவர்களாயினும் தம்மில் ஒற்றுமை யில்லாதவர்கள் ஒருக்காலும் மேம்பாடு அடைய மாட்டார்கள். ஆகையால் இந்தியா தேசத்தவர்கள் தங்களுக்குள்ள ஜாதிமத பாஷை முதலான வித்தியாசங்களைப் பாராட்டிக்கொண்டு வேறுபட்டிருப்பதை இக்கணமே விட்டுவிட்டு எல்லோரும் க்ஷேமமடைய வேண்டுமென்ற நன்னோக்க முடையவராய் ஊக்கமும் விடாமுயற்சியு முடையவராய் ஒற்றுமையுடன் பல சங்கங்கள்கூடி வியாபாரம் தொழில் பயிர் முதலியவைகள் செய்ய வேண்டும். "பலதுளி பெருவெள்ளம்" என்னும் பழமொழியைக் கவனித்துப் பலர் ஒன்றுகூடிச் சொற்பத் தொகையாயினும் ஒவ்வொருவரும் போட்டு அநேக பங்குகள் சேர்த்துக்கொண்டு பெரியமுதல் சேர்த்து ஒற்றுமையுடன் ஒத்து உழைக்கவேண்டும். ஆனால் இத்தேசத்தவர்கள் எப்படி யிருக்கிறார்களென்றால் ஒருவர் போனவழி இன்னொருவர் போகிறதில்லை; ஒருவர் ஒரு நற்காரியத்தைப்பற்றி சொன்னால் இன்னொருவர் அதை ஆமோதித்துப் பேசுகிறதில்லை. ஒவ்வொருவரும் தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று பிடிவாதம் செய்து மற்றவர்களுடைய அபிப்பிராயத்திற்கு முற்றும் விரோதமாய்ப் பேசிக்கொண்டு ஒருவரோடொருவர் ஒன்றுசேர வொட்டாமல் அவனுக்கென்ன தெரியும்! நான் சொல்லுகிறபடி செய்தால்தான் சரி; எல்லோரும் என் பேச்சைக்கேட்டு நடவுங்கள். இதெல்லாம் நம்மால் முடியுமா? இதற்கு ஐரோப்பியர், அமெரிக்கர் முதலிய அன்னிய நாட்டாரே சரி; நம்மிடத்தில் பணம் எங்கிருக்கிறது? அன்றன்றைக்கு வயிற்றுப் பிழைப்பிற்கே கஷ்டமாயிருக்கிறதே; நாம் எங்கே பெருத்த மூலதனம் சேர்க்கிறது? நம்மில் பணக்காரரெல்லாம் மூலையில் கிடக்கிறார்களே; நாம் ஒருங்கு சேர்ந்தால் நம்மாலென்ன முடியுமென்று சொல்லிக்கொண்டு யாராவதொருவர் நாமெல்லாம் கூடி வியாபாரஞ் செய்யலாம், தொழிற்சாலை ஏற்படுத்தலாமென்று சொன்னால் அவர் பேச்சை யாரும் கேட்டு நடக்கவொட்டாமல் கெடுத்துவிடுகிறார்கள். "ஊக முளதேல் சிறுவர் உரையுங் கொள்ள இலதேல் அயனுரை யாயினும் கொள்ளற்க" என்ற ஆன்றோர் வாக்கியத்தைப் பின்பற்றி வயதிற்சிறியவராயிருந்தாலும், செல்வத்திற் குறைந்தவர்களாயிருந்தாலும், ஜாதி, மதம் பாஷை முதலியவற்றில் வேறுபட்டவர்களா யிருந்தாலும் இவைகளை யெல்லாம் பொருட்படுத்தாமல் அவர்களுடைய நல்லபிப்பிராயத்தைக் கவனித்து நாம் அவர்சொல்லும் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நாமும் அவர்களோடு சேர்ந்து உடனுக்குடன் காலதாமதஞ் செய்யாமல் பொதுநன்மையான காரியங்களில் பிரவேசித்து நம்முடைய தேசம் பூர்வீகத்திலிருந்த சிறந்த நிலைமைக்கு வரும்படியான முயற்சி செய்யவேண்டும். "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்." "தெய்வம் காட்டும், ஊட்டுமா?" என்னும் மூதாதையர் வாக்கியங்களைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும். "படைக்கொருத்தன் கொடைக்கொருத்தன்" என்னும் வாக்கியப்பிரகாரம் நம்மில் சிறந்த மதியூகியாயிருப்பவர் செய்யும் ஏற்பாட்டிற்கு நாமெல்லோரும் கட்டுப்பட்டு அவர் சொற்கடவாமல் அவர் வாக்கியத்தை வேதவாக்கியமாகவும் குரு உபதேசமாகவும் கொள்ளவேண்டும்.

நாமேன் அவன் பேச்சைக் கேட்கவேண்டும்? இதெல்லாம் நமக்குத் தெரியாதா? "ஐந்து மூன்றும் சரியாயிருந்தால் அறியாத பெண்ணும் கறி சமைப்பாள்" நம்மிடத்தில் பணமிருந்தால் நாம் செய்ய மாட்டோமா?, செல்வந்தான் நம்மிடத்தில் குதிரைக் கொம்பாயிருக்கிறதே யென்று வாய் வேதாந்தம் பேசிக்கொண்டு காலத்தை வீணே போக்கிக்கொண்டு அடிமைத்தொழில், அடிமை வியாபாரம் கூலி வேலையே செய்துகொண்டு சோம்பேறிகளாய்த் திரிவதினாலென்ன பிரயோஜனம்? நாம் மானிடர்களாய்ப் பிறந்து ஆறறிவுடையவர்களா யிருப்பதால் "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்கிற பிரகாரம் ஐரோப்பாவில் யுத்தம் நடக்கும் இக்காலத்தில் அன்னிய தேசத்துச் சாமான்கள் இத்தேசத்திற்கு வராதிருக்கிறபடியால் எல்லா மூலப்பொருள்களும் இத்தேசத்தில் கிடைக்கிறபடியால் அவைகளைக்கொண்டு நமக்கு அத்தியாவசியமாக வேண்டிய சாமான்கள் யாவும் இத்தேசத்திலேயே பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தி நம் தேசத்திய ஜனங்களைத் தொழிலாளிகளாகச் சேர்த்து ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களுக்குப் போய் பெருத்தத் தொழில்களைக் கற்றுக்கொண்டு வந்திருக்கும் பிரமுகர்களைக்கொண்டு நடத்தவேண்டும். "பன்னியுரைக்கில் பாரதமாகும்" சொன்னதையே அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதற்கு எமக்கு அருவெறுப்பாயிருக்கிறது. ஆயினும் நம்தேசம் நன்னிலைமைக்கு வரவேண்டுமென்கிற நன்னோக்கம் நமக்கிருக்கிறபடியால் இவ்வாறு எழுதிவருகிறோம். இதைக் கவனியுங்கள். காலத்தை வீண்போக்காதீர்கள்.

கோ. குமாரசுவாமி ஆச்சாரி.

***

உபயோகமான சிறு விஷயம்.

மரத்தூளினால் ரம்பத்தூளினால் நெருப்பை அவித்தல்.

நிலக்கரியால் வேலைசெய்யு மிடங்களில் உண்டாகக்கூடிய எண்ணெ, கொழுப்புஇவற்றின் சிறுதீயை அவிப்பதில் மணல் அல்லது (சிலிகா) நீரைக்காட்டிலும் அதிக மேன்மையானதென்று கருதப்படுகிறது. நனை

ந்தது இருந்தாலும் சரி; உலர்ந்தது இருந்தாலும் சரி. ரம்பத்தூள் எரிகிற திரவ பதார்த்தத்தின்மேல் தூவப்பட்டால் கம்பளத்தை அல்லது ஜமுக்காளத்தை விரித்ததுபோல் பரவுகிறது. அந்தத் திரவ பதார்த்தத்தின் மேல் மிதந்துகொண்டு வாயுவைப் பிரவேசிக்காதபடி செய்கிறது. அதினால் அது நிதர்சனமாய்த் தீயை அடக்குகிறது. மணல் திரவபதார்த்தத்தில் மூழ்கிப்போகும் குணமுடையதாதலால் அதிக உபயோகமாயில்லை. ரம்பத்தூளின் தீயையவிக்கும் சக்தியை ஒருபுஷல் ரம்பத்தூளுக்கு 10 பவுன் சோடியம் கார்போனேட்டைச் சேர்ப்பதால் விருத்திப்பிக்கலாம். சூட்டினால் பைகார்போனேட் கார்பன்டையாக்ஸைட் வாயுபதார்த்தத்தை வெளிப்படுத்துகிறது. இந்த வாயுபதார்த்தம் தீயை அவிக்கிறது. மின்சார வேலையில் உண்டாகும் நெருப்பை அவிக்க ரம்பத்தூள் அதிக உபயோகமாகிறது. ஏனென்றால் அதைக்கொண்டு பரிசிப்பது சுலபமாயிருக்கிறது. மேலும் அது மணலைக்காட்டிலும் ஒரே கனமாகப் பரவுகிறது. மோட்டாரில் நெருப்பு உண்டாகும்போது மணலை உபயோகித்தால் எங்கே எரிகிறதோ அந்த இடத்திற்குக் கீழே போகிறது. அந்தத்தீ மணலை மேலே பரக்கும்படி செய்கிறது. அல்லது காய்ச்சுகிறது. ரம்பத்தூளை உபயோகப்படுத்தினால் இந்தக் கஷ்டமில்லை. ஏனென்றால் ரம்பத்தூள் எண்ணெய்த் தொட்டிக்குமேல் வேலைசெய்கிறது.

* * *

ஒளி உண்டாக்குவதில் ஓர் பரீக்ஷை.

தீக்குச்சியின் உபயோகமில்லாமலும் பக்கத்திலுள்ள வஸ்துக்களைத் தீ மூட்டாமலும் வெளிச்சத்தை உண்டாக்கவேண்டுமானால் வெண்மையும் சுத்தமுமான ஒரு நீளவாட்டச் சரிகோண சாற்பக்க கிளாஸ் புட்டியை எடுத்துக்கொள். பட்டாணிப் பிரமாணம் பாஸ்பரத்துண்டை அதில் வை. அதன்மேல் ஒலிவை யெண்ணை கொஞ்சம் வார். அந்த எண்ணை கொதிக்கிறவரையில் சூடேற்றப்பட்டிருக்கவேண்டும். புட்டியில் மூன்றில் ஒருபங்கு எண்ணை யிருக்கவேண்டும். புட்டியில் காற்று போகாதபடி மூடவேண்டும். அதை உபயோகிக்கக் கார்க்கைத் திறந்து காற்றை உட்புகச் செய்யவேண்டும். மறுபடியும் கார்க்கு போடவேண்டும். புட்டியில் வஸ்துவில்லா வெறும்பாகமுழுதும் வெளிச்சமாயிருக்கும். அதன் பிரகாசம் மங்கலான விளக்கின் பிரகாசத்திற்குச் சமானமாயிருக்கும். பிரகாசம் குறைந்துபோவதாகத் தெரியும்போது அதன் சக்தி, புட்டியைத்திறந்து சிறிது புதிய காற்றை உட்புகும்படி செய்வதினால் அதிகரிக்கச் செய்யலாம். குளிர்காலத்தில் புட்டியைக் கையில் வைத்துக்கொண்டு எண்ணையின் திரவத்தன்மை அதிகரிக்கும்படி சில வேளைகளில் காய்ச்சுவது அவசியமாயிருக்கிறது. இந்த மாதிரியாகத் தயார் செய்தால் புட்டியை ஆறுமாதம் உபயோகிக்கலாம். இந்த சூக்ஷ்மமான ஏற்பாட்டை எங்கெங்கே வெடிமருந்தாவது அல்லது தீப்பற்றும் சரக்காவது சேகரித்து வைத்திருக்கிற கிடங்குகளிலெல்லாம் பாரீஸ் நகரக் காவல்காரர்கள் நெடுநாள் வரைக்கும் உபயோகித்தார்கள்.

* * *

கத்தரிச் செடி.

கத்தரிச்செடி தானாகப் பயிராவதில்லை. இரண்டு தீபகல்பங்களிலெங்கும் பயிராக்குகிறார்கள். பூலோகத்தில் உஷ்ணப் பிரதேசங்களிலெல்லாம் பயிராகிறது. கத்தரிச்செடி தானாய்ப் பயிராகாது. சென்னை ராஜதானியிலேயும், பர்மாவிலேயும் மாத்திரம் காணப்படுவதால் தாவர சாஸ்திரிகள் கத்தரி ஆசியாகண்டத்தை ஜன்மபூமியாகக் கொண்டிருக்கிறதென்கிறார்கள். சில தாவர சாஸ்திரிகள் அதின் மூலஸ்தானத்தை அரேபியா என்று நிர்ணயிக்கிறார்கள். ஆனால் தாவர சாஸ்திரிகளில் ஒருவர் ஆதியில் முதலில் உற்பத்திஸ்தானம் எதுவென்று நிர்ணயிக்கக் கூடவில்லை என்று சொல்லுகிறார். அதைப் பயிர் செய்யாமல் தானாய் வளர்கிறபோது ஒரு காம்பில் 1 முதல் 5-காய் வரையில் காணப்படுகிறது.

பயிர் செய்தல்.

சாதாரணத் தோட்டக்கால் பயிரில் விதையானது மழைகால ஆரம்பத்திலும் செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலும் விதைக்கப்படுகிறது. செடிகள் 1½ முதல் 2 அடி தூரத்தில் நடப்படுகின்றன. எல்லாப் பயிரைப்போல் கத்தரிக்காய் நிலத்தின் வளப்பத்தால் நன்மையடைந்தாலும் அது சாதாரணத் தோட்டக்கால் நிலத்தில்தான் நன்றாய் வளர்கிறது. பயிர் ஆகஸ்டு மாசத்தில் பலனைக்கொடுக்க ஆரம்பிக்கிறது. அதுமுதல் குளிர்காலம் கடைசிவரையிலும் பலித ஸ்திதியிலேயே இருக்கிறது. அந்தக் காலத்தில் வேறொரு பயிரும் ஆகாததினால் மூன்று மாதகால பரியந்தம் அதுதான் காய்கறி ஆதாரமாகிறது.

வங்காளம், சென்னை, பம்பாய் ராஜதானிகளின் ஜில்லாக்களில் முக்கியமாய்ப் பட்டணங்களின் அருகாமையில் வயல் கத்தரிக்காய் பயிராக ஆகிறது. வங்காளத்தில் கத்தரிக்காய் அதிக முக்கியப் பயிராக கருதப்படுகிறது. அது ஏறக்குறைய நமது தேசமுழுவதும் பயிராகிறது. ஆனால் பாத்வான், ஹூக்ளி ஜில்லாக்களில் மாத்திரந்தான் வயல் பயிராகச் செய்கிறார்கள். தமோதரின் இரண்டு பக்கங்களிலும் பயிராவதுதான் முதல்தரமான கத்தரிக்காய்.

நிலம்.

கத்தரிப் பயிராக உத்தமமான பூமி உயர்ந்தும் நன்றாய் நீர் வற்றியுமுள்ள மணல் பாங்காயுமுள்ள நிலம். களிமண் நிலத்தில் செடியும், காயும் ஆகாரக்குறைவாயிருக்கிறது. ஜீவாதார வஸ்துக்கள் அதிகமாயுள்ள பூமியில் கத்தரிச்செடிகள் அதிகச் செழிப்பாய் வளர்ந்து அதிக மாசூலைக் கொடுக்கிறது.

விதங்கள்.

வங்காளத்திலுள்ள விதங்கள். 1 முக்தகேசி, இலோகேசி, சாடோ, சிஞ்ஜியா, ரங்கபௌ, ராஜபோக்மாக்ரா என்பவை. இவற்றில் முதலாவதும் கடைசியதும் அதிகச் சிரேஷ்டமானது. டௌகோ அல்லது குளிகத்தரிக்காய் என்று ஒரு ஜாதியிருக்கிறது. அதின் காய்கள் சின்னராசியாயிருக்கிறது. அது கொத்துக் கொத்தாய்க் காய்க்கிறது. வெளி தேசத்து "பீகின் கருத்த பெருங்காய்" "குவாட்லூப் பெரியகாய்" "நியூயார்க் சிவப்புக்காய்" "நீண்ட வெள்ளை டேனிஸ்காய்" "நீண்ட சிவப்புக்காய்" "கருத்த நாகசாகிகாய்" முதலியவை. சென்னை ராஜதானியில் கண்டங்கத்தரிக்காய் என்று நிலத்

தில் தானாகவே படர்ந்து பயிராகிறது. அது முட்களை யுடையது. காய்கள் கொத்துக்கொத்தாய்க் காய்க்கிறது. முட்களுள்ளது. இந்த வகையிலேயே பயிராக்கப்பட்டப் பெரிய செடிகள் உண்டு. அதில் முட்கள் இல்லை. அதிலேயும் காய்கள் கொத்துக் கொத்தாய்க் காய்க்கிறது. பெங்களூர் கத்தரிக்காய் என்பது காயின் ரூபத்திலேயும் ருசியிலேயும் நிறத்திலேயும் மற்றக் காய்களைவிட வேருக இருக்கிறது. மேற்சொன்ன கண்டங்கத்தரிக்காய்கள் சுண்டக்காய் பிரமாணந்தானிருக்கும். காய்கறிக்கு அவ்வளவு சிரேஷ்டமானதல்ல. பெங்களூர்க் கத்தரிக்காய்ப் பச்சை நிறமா யிருக்கிறது. மேற்பார்வைக்குப் பட்டை பட்டையாய் உப்பிக் கவிந்திருக்கிறது. கொஞ்சம் நீளவாட்டமாயிருக்கிறது. மற்றக் கத்தரிக்காய்கள் சென்னை ராஜதானியில் பலவர்ணங்களை உடையதா யிருக்கிறது. சில வெள்ளை நிறமாய்ப் பசந்து நீண்டதாக இருக்கிறது. அதில் வித்து அவ்வளவாயில்லை. சில சுத்த வெண்மையா யிருக்கின்றன. அதிக விரை யிருக்கிறது. சில கருஞ்சிவப்பா யிருக்கிறது. அதில் வித்து காணப்படும். சில சிறு ராசியாய்க் கருப்பு நிறமாயிருக்கும். அதில் வித்து கொஞ்சமா யிருக்கும். சென்னைக்கடுத்த பூந்தமல்லிக்காய் ரோஜா ரங்கை உடையதாயிருக்கிறது. பார்ப்பதற்குக் கண்ணை கவரத்தக்கதா யிருக்கிறது. திருவள்ளூர் காய் அதிகப்பெரிதாயும் சதைப்பற்றுகவும், வித்துகள் சிறிதாகவும் இருக்கிறது. வடதேசங்களில் தெலுங்கு ஜில்லாக்களில் முக்கியமாய் நெல்லூரில் கத்தரிக்காய் ஏராளமாய் பயிராகிறது. அவைகளை வற்றல்போட்டு அகப்படாத காலத்திற்கு உபயோகமாகும்படி வைத்துக்கொள்ளுகிறார்கள். விற்பனைக்குச் சரக்கு அனுப்புகிறார்கள். தென் தேசங்களில் தமிழ் ஜில்லாக்களில் கத்தரிக்காய் நீண்டதாய் அகப்படும். சிவப்பு வெண்மை நிறத்தை யுடையதாயிருக்கும்.

விதையும் நாற்றும்.

சாதாரணமாய் முன் மாசூலி லிருந்து தங்கள் உபயோகத்திற்காக பயிர் செய்யும் குடிகள் விதையைச் சேகரித்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இதற்காக காய்களைப் பழுக்கும்படி விடுகிறார்கள். அவை பொன் போன்ற மஞ்சள் நிறத்தை யுடையதாய் ஆகின்றன. அவை முற்றினதும் அவைகளை அறுத்துச் சிறிது அழுகவைக்கிறார்கள். காய்களை மத்தியிலறுத்து 1-நாள் அல்லது 2-நாளைக்கு குவியலாய் வைக்கிறார்கள். பிறகு விதையை எடுத்து நீரில்கழுவுகிறார்கள். வெயிலில் உலர்த்துகிறார்கள். விதையை முதலில் பாத்தியில் நாற்று விடுகிறார்கள். அதற்குக் குளிர்ந்த நிழலான இடம் தேர்ந்தெடுக்கிறார்கள். நிலம் மணல் மிஸ்ரமமா யிருக்கவேண்டும். அந்த நிலத்தை அடிக்கடி உழுகிறார்கள். அல்லது மண்வெட்டியால் கொத்துகிறார்கள். மண் கட்டிகளை நன்றாய் உடைக்கிறார்கள். சாம்பல்கொட்டி மண்வபணத்தை வளப்பமாக்குகிறார்கள். நன்றாய் மக்கிப்போன சாணத்தையும் மாட்டுக் கொட்டகைத் தரையிலிருந்து எடுத்த மண்ணையும் சேர்த்து வளப்பமாக்குகிறார்கள். நிலமானது காற்றுவீசப்பட்டதாகவும் சூரியஉஷ்ணம் தாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டியது. அதிக முக்கியமான விஷயம். பூமியானது நாற்றிற்காக நன்றாய் தயார் செய்யப்பட்டபோது அந்த இடத்தை ஐந்து சதுர அடி

யுள்ள சிறு பாத்திகளாகப் பாகிக்கிறார்கள். நாற்றுவிதைத்தல் மார்ச்சுமாதம் மத்தியிலிருந்து மேமாதம், மத்திவரைக்கும் ஆகிறது. மேமாதம் ஆரம்பத்தில், அதற்கு முன்னும் பின்னும் விதைக்கிற விதையைவிட அதிக விதை விதைக்கப்படுகிறது. விதைகள் முளை எடுக்கப் போதுமான ஈரம் நிலத்தில் இல்லாவிட்டால் (இந்தக் காலத்தில் சாதாரணமாய் ஜலம் இல்லாமற்போகிறது.) நிலத்திற்கு நீர்பாய்ச்சுகிறார்கள். அதிகமாயுள்ள ஈரம் வற்றிப்போனதும் சாயுங்காலத்தில் விதையை ஜாக்கிரதையாய் விதைக்கிறார்கள். கூடிய வரையில் விதையைச்சமப்பரவலாய் விதைக்கவேண்டும். அதைக்கொஞ்சம் மூடி வைக்கவேண்டும். கத்தரிநாற்று அதிகநெருக்கமாய் உண்டாகிறது. ஒரு அவுன்சுவிதை 1000 நாற்றை உண்டாக்கும். ஒரு ஏகருக்கு 8 அவுன்சு விதை வேண்டியிருக்கிறது. சிலநாள் வரைக்கும் அந்தப் பூமிக்குப் பிரதிமாலையும் நீர்பாய்ச்சவேண்டுவது அவசியமாகும். ஆனால் அதிக ஈரம் இருக்கக்கூடாது. நாற்று விடுகிற இடம் அதிக சூரியவெப்பம் படத்தக்கதாயிருந்தால் பூமியானது ஈச்சம் ஓலையாலாவது அல்லது வைக்கோலினாலாவது மூடப்படுகிறது. நாலைந்து தினத்தில் முளைகிளம்பும். எத்தனை தடவை நீர் வேண்டியிருக்கிறதோ அத்தனை முறையும் நீர் பாய்ச்சிக்கொண்டே இருக்கவேண்டும். அதிக மழைபெய்தால் நீர் வற்றும் ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நிலம் சரியாய்த் தயார்செய்யாதிருந்தால் களை பிடுங்குவது அவசியமாகும். நாற்றுகள் சில வேளைகளில் அநேக ஜந்துக்களால் நாசத்தை அடைகிறது.

***

நிலம் கொத்தல்.

கத்தரி நடுவதற்குரிய நிலத்தைத் தயார் செய்வது டிசம்பர்மாத மத்தியில் மண்வெட்டியால் கொத்துவதால் நன்றாய் முடியும். கொத்தல் கூடியசீக்கிரத்தில் செய்வது அவசியம். ஏனென்றால் வெட்டி எடுத்த புதியமண் காற்றுடப்பட வேண்டும். மண்வெட்டியால் கொத்துவது அதிக செலவானது. ஒரு பைசாநிலத்திற்கு 8முதல் 16 ஆள் வைக்கவேண்டியதாகிறது. ஆனால் அனுபோகமுள்ள விவசாயிகள் கொத்தும் முறை இன்றியமையாதது என்று கருதுகிறார்கள். ஏனென்றால் ஏர்கட்டி உழுதல் அதிக ஆழமாக செல்வதில்லை. ஆனால் கொத்தல் அபூர்மாய்த்தான் செய்யப்படுகிறது. கத்திரி வயலைத் தயார்செய்தல் சாதாரணமாய் வயலிலிருந்து பட்டாணி முதலிய பயிர்கள் மாசூலான பிறகுதான் ஆரம்பமாகிறது. அப்போது நிலம் ஒருவார இடைக்காலங்களில் உழப்படுகிறது. இரண்டாமுறை உழுதானதும் ஒவ்வொருமுறை சீர்திருத்தும் பலகையை அதன்மேல் செலுத்துகிறார்கள். அதிக சீக்கிரமாய் ஆகாவிட்டாலும் மேமாத மத்தியில் நாற்றுநடுவதற்குநிலம் தயாராகவேண்டும்.

நாற்றுப் பிடுங்கி நடல்.

வயலைச் சுற்றிலும் மடைவெட்டுகிறார்கள். வயல் அதிக நீளமுள்ளதாயிருந்தால் அதின் குறுக்காய்ச் சில நீர்க்கால்வாய்கள் வெட்டப்படுகின்றன. இப்போது மண்வெட்டியால் 36-அங்குலம் விட்டுப் பாத்தி கோலுகிறார்கள். இந்தப் பாத்தியின் அடியில் தோண்டப்பட்ட பள்ளங்களில் கத்திரி நாற்றைச் சுமார் 30 முதல் 36 அங்குலம் வரையில் விட்டுவிட்டு நடுகிறார்கள். கூடுமானல் நாற்று நடல் நல்லமழை பெய்

X9E m21,N14Y 161166
N14Y

தயிற்பாடு நடக்கவேண்டும். சில இடங்களில் நிலம்தயாராக்கி மட்டமானதும் நாற்றுகளை மட்டத்தரையில் அகல நீளவாட்டில் 36 அங்குலம் விட்டுவிட்டு நடுகிறார்கள். நீர்க்கால்வாய்கள் பிற்பாடு செய்யப்படுகின்றன.

எருப்போடல்.

சாணத்தை எருவாகப் போடும்போது அது நன்றாய் மக்கி யிருக்கவேண்டும். ஒருபைகாவுக்கு 2 மணங்குவீதம் பழைய கடுகு புண்ணாக்கு தூளாக்கி சில வேளைகளில் வயல்களில் பரப்புகிறார்கள். ஒவ்வொரு செடிக்கும் தனித்தனியாய் பரப்ப வேண்டும். வயல் முழுவதிலும் பரப்புவதால் பிரயோஜனமில்லை. சித்தாமணக்கு, புண்ணாக்கு, கத்தரி வயலுக்கு உபயோகிக்கிறதில்லை. எருவும் சாணமும் புதிதாயிருந்தால் செடியின் வளர்ச்சியை விர்த்தி செய்து பலனளிக்கும் சக்தியை அடக்கி விடுகிறது.

பின் உழைப்பு.

செடிகள் வேர் ஊன்றினதும் வரிசைகளுக்கு மத்தியிலுள்ளஇடம் மண்வெட்டியால் கொத்தப்படுகிறது. பின்பு இரண்டு வாரம் கழிந்தது வயல் இரண்டாவதுமுறை கொத்தப்படுகிறது. செடிகளுக்கு மண் அண்டைகட்டி முன் பாத்தியின் பள்ளம் மேட்டை மேடுபள்ள மாக்குகிறார்கள். கார்த்திகை மாதகடைசிக்குமுன் சாதாரணமாய் நீர்ப் பாய்ச்சல் வேண்டியதில்லை. ஆனால் சிலகாலம் வரை மழை இல்லாவிட்டால் ஒருதடவை நீர் பாய்ச்சவேண்டும். பிறகு கொத்திச் செடியண்டை மண் பறிக்கவேண்டும். கார்த்திகை மாதத்திலும் அதன்பிறகும் மாதம் ஒருமுறை நீர் பாய்ச்சவேண்டும். செப்டம்பர் மாதத்தில் செடி காய்க்க ஆரம்பிக்கிறது. மார்ச்சு மாத மத்தியகாலம் வரை பலம் கொடுத்துக்கொண்டிருக்கும். நாள்கழித்து நடவு நட்டச்செடி ஏப்ரல் மாத மத்தியகாலம் வரைக்கும் உலர்ந்து போகிறதில்லை.

கத்தரிச்செடியை வெவ்வேறு காலங்களில் நடுவதால் வருஷமுழுமையும் மாகுல் பெறலாம்:—

விதம்.	விதை விதைக்கும் காலம்.	நாற்றுநடுங் காலம்.	பலன் கொடுக்குங் காலம்.
சாதாரணமானது முன்பாகத்தில்	பிப்ரவரி மார்ச்	ஏப்ரல் மே	ஆகஸ்டு ஜனவரி
ஷை பின்பாகத்தில்	ஏப்ரல் மே	செப்டம்பர் அக்டோபர்	அக்டோபர் மார்ச்
குளி.	செப்டம்பர் அக்டோபர்	அக்டோபர் நவம்பர்	பிப்ரவரி மே

மே மாதமுதல் செப்டம்பர் மாதவரைக்கும் பலத்தையடைய சீக்கிரமாய் பலன் நின்றுபோன செடிகளைக் கத்தரித்து எருபோட்டு நீர் பாய்ச்சவேண்டும். புதிய கிளைகள் விடும். அது பூத்துக் காய் காய்க்கும். ஆனால் காய் என்னமோ சிடாய்த்தான் இருக்கும்.

நோய்கள்.

நாற்றுகள் நாற்றுக் குளத்திலிருக்கும்போதே, கோவ் முட்டையைத் தின்றுவிடுகிறதே, அந்தப்புழுவை உருவத்தில் அநேகமாய் ஒத்திருக்கிற ஒருவிதமானப் பச்சைநிறப் புழுவால் சிலவேளைகளில் நாசத்தை அடைகின்றன. செடிகள் சிறிதாயிருக்கும்போதே சிலவேளைகளில் நாசத்தை யடைகின்றன. செடிகள் சிறியதாயிருக்கும்போதே சிலவேளைகளில் சிவப்பு எறும்பால் முழுவதும் நாசத்தை யடைகின்றன. இன்னொரு புழு செடியையும் காயையும் நாசப்படுத்துகிறது. செல்லுதற் கிடமில்லாமல் தேங்கியிருக்கும் நீர் கத்தரிச்செடிக்குக் கேட்டைத்தரும். கத்தரிச்செடிக்கு ஜர்விதமான நோய் உண்டாகிறது. பயிரிடுவோர் அதற்கு "துளசிக்ராசா" என்று பேர்வைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அந்த நோய்வந்த செடிகளின் இலைகள் பார்ப்பதற்குத் துளசிச் செடியின் இலைகள்போல் இருக்கின்றன. அப்படிப்பட்டச் செடிகள் பலனைக் கொடுக்காது. நோய் வந்ததும் அந்தச்செடிகளைப் பிடுங்கி எறிந்துவிடுகிறார்கள்.

பயிரிடுவதில் நேரிடும் செலவு.

ஒருதடவைக்கு 6 அணாவாக 10 தடவை உழுவதற்கு	3-12—0
ஆள் ஒன்றுக்கு 3 அணாவாக 6 ஆட்களுக்கு கூலி	1—2—0
ஒருதடவைக்கு 4 ஆட்களாக 4 தடவை கொத்துதற்கு 16 ஆட்களுக்குக் கூலி	4—0—0
புண்ணாக்கு 8 மணங்கு	2—6—0
ஒருதடவைக்கு 2 ஆட்களாக 3 தடவை நீர் பாய்ச்ச 6 ஆட்களுக்குக் கூலி	1—8—0
காய் பறித்தல்	1—0—0
நிலவாடகை	2—0—0
ஆக மொத்தம்	16—2—0

மருந்து.

கத்தரி இலை—பிரமை உண்டாக்கும் குணமுடையது.

கத்தரி ரசம்—Auodyne property.

கத்தரி விதை—தீபன குணமுடையது.

ஆகாரம்.

இந்தியாவில் எல்லா ஜாதியாரும் அகப்படும்போதெல்லாம் கத்தரிக்காயைப் புசிக்கிறார்கள். இந்தியாவிலுள்ள ஐரோப்பியர் மற்றக்காய்கறிகள் அகப்படாதபோது வேனிற்காலத்தில் கொஞ்சமாய்ப் புசிக்கிறார்கள். இந்தியர்கள் (1) கறிகளாகவும் (2) கும்பியில் வதக்கி நசுக்கி உப்பு வெங்காயம் மிளகாய் எலிமிச்சம் ரசம் அல்லது கடுகெண்ணெய் கலந்தும், (3) பலகை பலகையாய் அறுத்து எண்ணெயில் வறுத்தும், (4) புளிசேர்த்துக் குழம்பாக்கியும், (5) இளங்காயா யிருக்கையிலேயே கடுகெண்ணெய் மிளகாய் உப்பு இவைகளில் ஊறுகாய் போட்டும் உபயோகிக்கிறார்கள். ஐரோப்பியர் வழக்கம்போல் பாதி வேகவைத்து உள்பதார்த்தை வெளியாக எடுத்து நசுக்கி மிளகு உப்பு வெண்ணெ சேர்த்து பறுபடியும் அதன் தோலிலேயே வைத்து சூடேற்றிப் பதஞ்செய்து புசிக்கிறார்கள்.

***

புதிய உலகம்.

நாம் இப்பொழுது புதிய உலகத்திலே வாழ்ந்து வருகிறோம். இப்பொழுது நடப்பதும் ஒரு புதியகாலம்.

காவேரி முதலிய பெரிய நதிகளிலே வெள்ளம் வரும்பொழுது மேடாயிருந்த இடங்கள் பள்ளமாய் விடுகின்றன. பள்ளமாயிருந்த இடங்கள் மேடாய்விடுகின்றன. மேடும் பள்ளமுமாயிருந்த சிலவிடங்கள் சமபூமிகளாய் விடுகின்றன. அதுபோலவே காலமாகியப் பேராற்றிலே வெள்ளம் வரும்பொழுது உலகத்திலே மிகப்பெரிய மாறுதல்களெல்லாம் ஏற்படுகின்றன.

சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய பெல்ஜியர்கள் இன்று தங்கள் நாடிழந்து வீடிழந்து தவிக்கிறார்கள். பார்ப்போர் கண்ணையும் கருத்தையும் கவர்வனவாயிருந்த பட்டணங்கள் பல இன்று பாழடைந்த காடுகளாய் ஓநாயும் நரியும் வாழ்வதற்கு உரியனவாய்க் கிடக்கின்றன.

நேற்று முடியரசாயிருந்த ருஷியா இன்று குடியரசாய்விட்டது. சில மாதங்களுக்கு முன்வரை 17 லட்சம் ஜனங்களுக்குச் சக்ரவர்த்தியாய் இந்தப் பூலோகத்திலே மிகப்பெரிய தேசத்தை ஆண்டுவந்த நிக்கலஸ் ரொமநாப் என்னும் ஸார்ச் சக்ரவர்த்தியார் இன்று சாதாரண மனிதராய் விட்டார்!

முன் சாதாரண மனிதர்களாயிருந்த அநேகர் இப்பொழுது யுத்தத்தில் வீரர்களாகத் திகழ்கின்றனர். பலர் சேனைத் தலைவர்களாய் விளங்குகின்றனர்.

இந்தப் பத்திரிகை அச்சிடப்படும் காகிதம் ஒன்றுக்கு நாலுவீதம் உயர்ந்திருக்கின்றது. சாயச்சரக்குகள் ஒன்றுக்கு நூறுவீதம் உயர்ந்திருக்கின்றன. சிலச் சரக்குகள் கிடைப்பதேயில்லை

ஜனசமூகத்தில் உயர்வு தாழ்வு என்ற வித்தியாசங்களிலும் ஜாதிமத பேதங்களிலும் மிகப்பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. வாழ்க்கையைப் பற்றிய அபிப்பிராயங்களிலும் ராஜாங்கம், கல்வி, வியாபாரம், விவசாயம் முதலியவொவ்வொரு விஷயத்திலும் பல புதிய மாறுதல்களும் புதிய அபிப்பிராயங்களும் ஏற்பட்டு வருகின்றன.

தந்தி ஒருபுறமிருக்க இப்பொழுது கம்பியில்லாத் தந்தி வந்துவிட்டது. நிலத்திலே செல்லும் ரயிலும், நீரிலே செல்லும் கப்பல்களும் ஒருபுறமிருக்க இப்பொழுது ஆகாயத்திலே 'ரதங்கள்' செல்லுகின்றன. ஆகாய ரதங்கள் வாயிலாகவே ஜனப் போக்குவரவும், சமாச்சாரப் போக்குவரவும் நடத்துவதற் குரிய யோஜனை இப்பொழுது நடந்து வருகின்றது. இப்பொழுது காசிக்கு ரயில் மார்க்கமாகச் செல்வோர் இன்னும் பத்துவருஷ காலத்திற்குள் ஆகாய 'ரத' வாயிலாகச் செல்வர் என்பது நிச்சயம். காசியிலே காலையிற் புறப்பட்டு மாலையில் ராமேஸ்வரம்போய்ச் சேரும் விஷயத்தை நாம் விரைவில் கேட்கலாம். சில மாதங்களுக்கு முன் டில்லியில் பிரசங்கஞ் செய்த ஓர் ஆங்கிலப் பிரமுகர் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஆகாயவாயிலாய் 3 தினங்களில் செல்லலாம், அது பத்து வருஷங்களுக்குள் நடைபெறலாம் என்று கூறினார்.

மின்சாரசக்தியினால் மழைபெய்விக்கும் வித்தையை இப்பொழுது ஒருவர் கண்டுபிடித்து விட்டார். இந்த வித்தையில் பூரணத்தேர்ச்சி ஏற்பட்டுவிடின் ஸஹாராப் பாலைவனம் கங்காதீரமாய்விடும். ஏன்? பூலோகமே சுவர்க்கலோகமாய் விடும். பொன் உற்பத்தி செய்யும் வித்தையை மனிதன் கண்டுபிடித்து விடுவான்; அதனால் பங்கமற்ற தங்கம் இரும்புபோலச் சாதாரணமாய்விடும் என்று தாமஸ் எடிஸன் என்ற ஒருசாஸ்திரியார் கூறுகின்றார்.

முடியரசாயுள்ள சில ராஜ்யங்கள் குடியரசாய்விட முயல்கின்றன. கெய்ஸரைத் தள்ளிவிட்டுக் குடியரசு ஸ்தாபிக்கவேண்டுமென்ற உணர்ச்சி ஜெர்மனியில் கூட ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஸெர்வியா, மாண்டிநீக்ரோமுதலிய ராஜ்யங்கள் சுதந்தரம் இழந்து தவிக்கின்றன. இதே சமயத்தில் போலந்து, பின்லந்து முதலிய நாடுகளுக்குச் சுயராஜ்யம் கொடுப்பதாக ருஷியாவின் புதியராஜாங்கத்தார் தீர்மானித் திருக்கின்றனர். பிலிப்பைன் தீவுகளுக்குச் சுயராஜ்யம் கொடுப்பதாக அமெரிக்கா தீர்மானித்து ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. அயர்லாந்துக்குச் சுயராஜ்யம் கொடுத்துவிடுவதாக இங்கிலாந்து தீர்மானித்திருக்கிறது.

இந்தியாவுக்குத் தென்கிழக்கில் இந்துமகா சமுத்திரத்திலுள்ள ஜாவா என்னும் சிறிய தீவில் 'வால்க்ஸ்ராத்' என்னும் ஜனப்பிரதிநிதிசபை ஏற்படுத்துவதற்கு உலாந்தாதேசம் அனுமதி கொடுத்துவிட்டது. அடுத்தவருஷத் தொடக்கத்தில் மேற்குறித்த சபையின் முதற்கூட்டம் நடக்குமென்று தெரிகிறது. இன்று உலகத்திலே சுதந்தர பேரிகை என்றுமில்லாதபடி பலமாக அடிபடுகிறது. நமது இந்தியாவிலும் இப்பொழுது சுயராஜ்யப் பேச்சு வழங்கிவருகிறது. பொதுவாக உலகத்திற்கும் முக்கியமாக ஐரோப்பாவிற்கும் அளவிறந்த கஷ்ட நஷ்டங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் இந்த ராக்ஷஸ யுத்தம் முடிந்தபின் இந்தியாவுக்கு அநேக பெரிய நன்மைகள் ஏற்படக் கூடுமென்று நமது தேசாபிமானிகள் நம்புகிறார்கள்.

இவ்வாறாக உலகத்திலே புதிய புதிய சம்பவங்களும், புதிய புதிய உற்பத்திகளும், புதிய புதிய யோசனைகளும் ஏற்பட்டு வருகின்றன. இன்னும் பல ஏற்படல்கூடும்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது, எல்லாம்வல்லக் கடவுளானவர் தமது மக்களுக்கு ஓர் புதிய உலகத்தையும், ஓர் புதிய காலத்தையும் அருளிச்செய்கிறார். இந்தப் புதிய உலகத்தில், இந்தப் புதிய காலத்தில் இந்துக்கள் எவ்வளவு தூரம் அறிவும், திறமையும் பெற்று மேன்மையடைகிறார்களென்பதே நாம் ஆவலுடன் நோக்கும் விஷயமாகும். அதற்கு ஈசன் திருவருள் புரிவாராக.

***

வலையை பாதுகாத்தல்.

எந்த வலையாயிருந்தாலும் தகுந்தமாதிரியாய் பாதுகாக்கப்பட்டால் அப்படிபாதுகாக்கப்படாத வலையைக்காட்டிலும் அதிக காலத்திற்கு இருக்குமென்று அநேகர் அறியமாட்டார்கள். பாதுகாத்தால் ஒவ்வொரு தடவையும் ஓர் புதியவலையை செய்வதின் அல்லது வாங்குவதின் செலவை குறைக்கும். ஏனென்றால் வலையின் அறுந்துபோன பாகங்களை பழுதுபார்க்கலாம். அப்படி பாதுகாக்கப்பட்ட வலை இன்னொரு வருஷத்திற்கு உபயோகமாகும்.

மீன்பிடிக்கும் வலைகள் நனைந்திருக்கும்போது குவியலாக இருக்கவிடக்கூடாது. அப்படி விட்டால் அவைகள் அழுகி நைந்துபோகும். அவைகள் கொடியில் தொங்கவிட்டிருக்கவேண்டும். அல்லது ஒவ்வொரு தினமும் திருப்பப்பட்டு காற்றாடவேண்டும்.

சமுத்திரத்து அல்லது குளத்துமீன்களை பிடிக்கும் வலையை (அல்லது படுதாவை) பாதுகாக்க சாதாரண உப்பு 4-பவுனும் 4-பவுன் பொடாஷ் அல்லது சாதாரண படிகாரமும் 2-பவுன் க்ரோம் படிகாரமும் எடுத்துக்கொண்டு 8-காலன் தண்ணீரில் கொதிக்கவை. அந்தநீர் ஆறினதும் 24 மணிநேரம் வலையை அதில் அமிழ்த்திவை. மூன்று நான்குமுறை அதைத் திருப்பிப்போடு. இந்த நீர் வேறு வலைகளை அமிழ்த்திவைப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். ஆனால் முன் விவரித்த எடைக்கு ½ பங்கு உப்பும் படிகாரமும் சேர்க்கவேண்டும்.

வலைகளையாவது படுதாக்களையாவது சாயம் (மங்கல் சிவப்பு) தோய்க்கவேண்டுமானால் வலை பிடிக்கும்படியான பெரிய இருப்புபாத்திரத்தை எடுத்துக்கொள். இதிலுள்ள நீருடன் 8-பவுன் கட்சு அல்லது ஓக் மரப்பட்டையை சேர். இரண்டுமணி நேரம் நன்றாய்க்காய்ச்சு. புதியவலையானால் இந்த தயாரிசெய்த நீரில் (குளிர்ந்தபோது) இரண்டுமணிநேரம் இருக்கவிடு. அதை வெளியே எடுத்து ஒருநாள் முழுவதும் வெயிலில் உலரவிடு. வலையில் கட்சுசாயத்தை நிறுத்துவதற்கு வெயில் அவசியம். இரண்டுவாரம் அந்த வலையை உபயோகித்த பிறகு மறுபடியும் அந்தசேர்ப்பு நீரில் தோய். ஆனால் ஒரு சிறிதுகாலந்தான் இருக்கலாம். மறுபடியும் வெயிலில் உலர்த்து.

மீன் பிடிக்கும் கயிறு புதிதாயிருக்கும்போதுகூட சிலநிமிஷங்களுக்குமேல் அந்த பட்டை சேர்மானநீரில் இருக்கவேண்டியது அவசியமில்லை. சில நிமிஷங்களுக்குப் பின் உலர்த்தவேண்டியது. பூர்வீககாலம் தொடங்கி நமது சுதேச செம்படவர்கள் முதிராத ஜப்பாவிதை தோய்த்த குளிர்ந்த நுரைத்த நீரில் சாயம் தோய்த்துவந்தார்கள்.

ராபிட் (ஓர்வகை முசல்) அல்லது இதர நிலவலைகள் அல்லது பாட் (வௌவால்) அல்லது இதர ஆகாயவலைகள், இப்போது விவரித்த மாதிரி பாதுகாக்கப்படலாம். ஆனால் வலைகள் மாத்திரம் முதலில் சுத்த ஜலத்தில் நன்றாய் நனைக்கப்படவேண்டும். முதலில் வலைகளை நீரில் நனையச்செய். 100-க்கு 10-கட்சு அல்லது காம்பியர் சேர்மான நீரை உண்டாக்கு. வலை முழுகும்படி நீருள்ள பாத்திரத்தில் இதைவை. அதில் நனைந்த வலைகளை வைத்த பிறகு எல்லாம் இராமுழுவதும் அப்படியே இருக்கட்டும். மறுநாளைக்கு அந்த வலைகளை எடுத்துவிடு. சோடா அல்லது பொடாஷ் பைக்ரோமேட் 100-க்கு 4 சேர்மான நீரில் அமிழ்த்து. கொஞ்சம் சூடாகயிருக்கவேண்டும். அரைமணிநேரம் அதில் அப்படியும் இப்படியும் அசை. இது ஆனதும் வலைகளை சுத்தநீரில் அலம்பு. காற்றில் உலர்த்து. அவைகள் மங்கலான சிவப்புடான் நிறத்தை அடைந்துகொள்ளும். "சரக்குகளின் பளுவின்மேல் நூற்றுக்கு இவ்வளவு என்கிற கணக்கு ஏற்படும்" கவனிக்கவேண்டிய முக்கியவிஷயங்கள். முதலில் வலைகளை நன்றாய் நனைத்தல். அதிகமான ஜலத்தை பிழிந்தெடுத்தல். முதல் சேர்மான ஜலத்தோய்ப்பிலிருந்து இடைகாலம் இல்லாமல் உடனே இரண்டாம் சேர்மான ஜலத்தில் தோய்க்கவேண்டும் (கட்சு அல்லது காம்பியர் சேர்மான நீரிலிருந்து சோடா அல்லது பொடாஷ் சேர்மான நீருக்கு) மத்தியில் தண்ணீரில் வைக்கக்கூடாது. டென்னிஸ் க்ரிகட் வலைகள் தாரில் காப்பாற்றப்படலாம். 1 பாகம் (Wood Tar) மரத்தார் எடுத்துக்கொள். 4-பாகம் (Benezine) பெனிசினோடு ஒரு தொட்டியில் கரைக்கவேண்டும். வலைகளை அதில் அமிழ்த்தவேண்டும். அந்தச்சேர்மானநீரில் நனையும்படி நன்றாய்ப் பிசைய வேண்டும். பிறகு காற்றில் உலர்த்தவேண்டும். அமெரிக்கா பேபர் ஒன்று மீன்பிடிக்கும் வலை உருக்கின பாரபின் (Paraffin) மெழுகில் தோயவைத்தலால், பாதுகாக்கப் படும் என்றுகூறுகிறது.

***

பட்டு முதல் முதல் கண்டுபிடிக்கப்பட்ட விபரம்.

சீனாவில்தான் முதல் முதல் பட்டுப் பூச்சி கண்டுபிடிக்கப் பட்டதாம். அங்குதான் முதலில் பட்டு நூலெடுத்து நெய்ய ஆரம்பித்தார்களாம். அது முதலில் கண்டுபிடிக்கப்பட்ட விவரம் சீனர்கள் சொல்லுகிறபடி பின் வருமாறு:—

சுமார் 4550 வருடங்களுக்கு முன்னால் சீனாவில் சக்கிரவர்த்தினியாயிருந்த ஸிலிங்கி என்பவர் ஒருநாள் தமது அரண்மனைத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் ஒருபசுமையான புழு முசுக்கட்டைச் செடியின் இலையில் ஊர்ந்து அதைத்தின்றுகொண்டிருக்கக் கண்டார். அதைக்கண்டு ஆச்சரியமடைந்து தினந்தோறும் அவர் அங்கே வந்து அந்தப்புழு இலைதின்பதை பார்த்துக்கொண்டிருந்தார். அந்தப்புழு தினந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து கடைசியில் ஒரு பட்டுக்கூடு செய்து தன்னை மூடிக்கொண்டது. இதை அவர் சக்கிரவர்த்தியிடம்தெரிவிக்க அவர் அந்தப் பட்டுக்கூட்டை எடுத்து நூலைப் பிரித்து வஸ்திரம் நெய்ய உபயோகிக்கும்படி செய்தார். அதுதான் முதல் பட்டு வஸ்திரம் ஆகும்.

அதுமுதல் சீனர்கள் பட்டுத்தொழிலை ஒருவருக்கும் கற்றுக்கொடுக்காமல் ரகஸ்யமாய் வைத்திருந்தார்கள். இதர தேசங்களிலிருந்து வியாபாரிகள் அந்த தேசத்திற்குவந்துப் பணங்கொடுத்துப் பட்டு வாங்கப்போனார்கள்.

ஆறும் நூற்றாண்டில் இரண்டு ஐரோப்பிய சந்நியாசிகள் சீனாவுக்குப்போய் அங்கிருந்து சில பட்டுப்புழு முட்டைகளைத் தமது தடிகளில் மறைத்து வைத்துக்கொண்டு ஐரோப்பாவுக்குப் போய் அவைகளைக் கிழக்கு ரோமன் ராஜ்யத்துச் சக்கிரவர்த்தியிடம் கொடுத்தார்கள். அந்தச் சக்கிரவர்த்தி அந்த முட்டைகளிலிருந்து பட்டுப்புழுவும், பட்டும் உற்பத்திசெய்து, பட்டுத் தொழிலை விருத்தி செய்தார். அந்தச் சக்ரவர்த்தி பட்டுத்தொழில் பிற தேசங்களுக்குப் போகாதபடி பார்த்து வந்தார். அவர் இறந்துபோன பிறகு ஐரோப்பா கண்டத்தில் பட்டுத் தொழில் பரவி விருத்திபடையலாயிற்று.

பட்டுப்புழுக்களில் அநேகவிதம் உண்டு. இங்கு சொன்னது முசுக்கட்டைப் பட்டுப் புழுவாகும். இந்தப் பட்டுப்புழு பட்டுக்கூடு கட்டினதும், புழு பூச்சியாக வெளி வருவதற்கு முன்னால், கூட்டைவெந்நீரில் போட்டு புழுவைக்கொன்று கூட்டின்பட்டு இழையைப் பிரித்தெடுக்க வேண்டும்.

எரி அல்லது எண்டிபட்டுப் புழு என்று ஒரு பட்டுப் புழு இருக்கிறது. இதன் ஆகாரம் சாதாரண ஆமணக்கின் இலையாகும். இந்தப் புழுவின் கூட்டிலிருந்து பட்டெடுக்க புழுவை வெந்நீரில்போட்டுக் கொல்லவேண்டியதில்லை. புழு தானாகவே பூச்சியாக வெளியில் வந்தபிறகு பட்டுக் கூட்டைச்சுத்தம்செய்து பட்டைஎடுத்து, நூல்நூற்கும் கதிரியினால் பட்டுநூல் நூற்றுக்கொள்ளலாம். அல்லாமலும் வேறு சில இந்திய ஜில்லாக்களிலும் உள்ள ஸாமான்ய ஜனங்கள் தங்கள் வீடுகளில் எரி பட்டுப் புழுவை வளர்த்து லாபமடைகிறார்கள். டஸ்ஸர் பட்டென்று ஒருவிதப் பட்டும் இருக்கிறது.

ஜ—னி.

துறவித்தொழில்.



இத்தொழில் அநேகமாய் ஆண்டி வேஷம் பூண்டவர்களும், அநாதியாய் நின்றவர்களும், சோம்பல் குடிகொண்டவர்களாலேயுமே அனுசரிக்கப்படுகின்றது என்று உலகத்தில் அநேகர் சொல்லக் கேள்வி; ஆனால் நாம் பிரத்தியட்சமாய்க் கண்டவரையில் மூன்றுவிதத் துறவிகள் உண்டெனக் கணக்கிடலாம். முதலாவது உலக விவகாரங்களில் பெருமையுடன் பொருள் சம்பாதிப்பதிலும், அழகாய் வீடுகட்டிக்கொள்வதிலும், மக்கள் மனையாளுடன் உல்லாசமாய் வாழ்வதிலும், பெருமைகொண்டாடுவதிலும், பேரானந்தமாய்ப் பேசுவதிலும் பயனில்லை என்று உணர்ந்து இவைகளைப் படிப்படியாய் விட்டு கோமணாண்டியாய் நின்று, பின் பஞ்ச பூதங்களின் இம்சைகளைத் தவிர்க்க ஊரை விட்டு விலகி நின்றார்கள் சிலர்; காட்டுக்குச் சென்றார்கள் சிலர்; காவிவேஷ்டி தரித்தார்கள் சிலர்; இப்படிக்குத் தனிமையாய் நின்று ஆத்மார்த்த மோட்சத்தைக்கருதி சிந்தித்த சிலகாலத்தில், கர்மேந்திரியங்களின் இம்சைகளினால் நீண்ட உறக்கத்திலிருந்து கனவுகண்டு எழுந்தவர்கள் போல், சிவன் தன் மனையாளுடன் சதா பிரியாமலிருப்பதையும்,

விஷ்ணு கணக்கில்லாத கோபிகா ஸ்திரீகளின் நேசத்தில் கலந்து உல்லாசமாய் இருப்பதையும் மனதில்கொண்டு மோட்ச சுகம்என்ற முடிவு உலகத்தின் கண்ணே உளது என்று உண்மையாய் அறிந்து, மாதர்கள் உள்ள இடமே தபசுக்குப் பொருந்திய இடம் என்று உறுதியாய் நினைந்து வீதிகள்தோறும் திரிந்து பைரவ மூர்த்திகளைப்போல் வாசனைகண்ட இடங்களிலெல்லாம் வைபோகமாய் வாழ்ந்து மற்ற மானிட ஜென்மங்களைப்போல் ஊழ்வினையின்படிக்கு உடலை விட்டு நீங்குபவர்கள் ஒருவிதத் துறவிகள்.



இரண்டாவது பக்தியுடன் பஜனை செய்து தன் மனைவியுடன் உபாசனை மூர்த்தியைப் பூஜிக்கும் பற்றற்றப் புண்ணியர்களைப் புராணங்கள் விளக்கிக் காட்ட, பொய் சொல்லாதிருத்தலும், பசித்தவர்களுக்கு அன்ன மளிப்பதும், பதிவிருதா தர்மத்தை விடாதிருப்பதுமே பெருந் தவம் என்று அறிந்து சிலர் உலகத்தை விடாமலும் பாபச்செயலின் மனக்கவலை இல்லாமலும் ஒருவருக்கும் தெரியாமலும் உல்லாசமாய் முடிவுவந்தகாலத்தில் உடலைவிட்டு நீங்குபவர்களும் ஒருவிதத்துறவிகள் எனலாம். மூன்றாவது எல்லாம் துறந்து ஒரே மனதுடையவர்களாகி, செத்தாரைப்போல் பற்றில்லாமல் உலகத்தை மறந்து தபோநிலை பெருகி ஒரே நோக்கமாய் மனம் அறிவைப் பற்றி, சரீரம் அசைவற்று நிற்பவர்களின் நிலையே சூரியனைப்போல் ஒளியைக் காட்டி உண்மையான ஆத்மார்த்த வழியை அறிவிப்பதாம். இவ்வுண்மையை அறிந்த

வர்கள் உலகத்தை முற்றும் மறந்தவர்களாகி அவர்களின் பேர் ஊர் இல்லாமலே ஒருவர்கண்ணிலும் காணுமல் மறைந்தவர்கள்போல் யோக சாதனையின் தொழிலிலேயே இருப்பார்களாம். இம்மூவகைத் துறவிகள் எனப்படுபவர்களில் எவர்களைச் சிரேஷ்டமாக நினைப்பது என்றும், எம்மார்க்கம் உண்மையானபலன் தரத்தக்கதென்றும், முக்திமார்க்கத்திற்கு ஒழுங்கானவழியென்றும் யோசிக்கும்போது ஒன்றையும் குறைவாக நினைக்கச் சாத்தியப்படாமல் படிப்படியாய் கிரகஸ்தனாயிருந்து சன்னியாசியாகி பின்தேகம்எடுத்தது முக்தியமாய் மோட்சத்தை அடைவதற்கென்று தெரிந்து, உலக வியாபாரங்களை எல்லாம் வெறுத்து, எல்லாம் துறந்தவர்களின் தொழிலாகிய யோகசாதனையினுல் பஞ்சேந்திரியங்களின் இம்சைகளினின்று கொஞ்சம் கொஞ்சமாய் விலகி, பரிபூரணபக்குவமடைந்து அறிவு சிவன்மயமாகி நின்றவர்களை பேரானந்தக்கடலில் மூழ்கியவர்கள் எனலாம்; முக்தியடைந்தவர்கள் எனலாம். ஜனன மாரணமில்லாத பரிசுத்த ஆத்மஸ்வரூபிகள் எனலாம் என்றார்கள். இப்படி யோக மார்க்கத்தில் உழைப்பவர்கள் பலவித ஆசனங்களை அனுசரிக்கின்றார்களாம். சிலர் உட்கார்ந்தும் சிலர் நின்றும் சிலர் ஒருகால் தூக்கியும், சிலர் தலைகீழாய்த் தொங்கியும் பலவித சாதனங்களினுல் கஷ்டப்பட்டு மனதை லயிக்கச்செய்யும் மார்க்கம் தேடுகிறார்களே, நாம் பிராம



ணுள் என்று சண்டைபோட்டுக்கொண்டு பிரம்ம ஞானமடையவேண்டிய பிரயத்தனமில்லாமல் 'ஆச்சாரி' என்ற பிராமண பட்டம்மாத்திரம் வேண்டுமென்று கான்பரன்ஸ் கூடி பேசி வேண்டிய வழி தேடுகின்றோம். நாம் இவ்விதத் துறவிகளின் மார்க்கத்தை அனுசரித்து மகரிஷிகள் போல் வலி உடையவர்களாகி நமது வம்சவிருத்திக்கு வேண்டிய வழிகளை நாமே ஏன் தேடிக்கொள்ளக்கூடாது? நமக்குவேண்டிய சீர்திருத்தங்களை அன்னியர்களின் சம்மந்தமில்லாமல் நாமே ஒழுங்குபடுத்திக்கொள்வது நம்முடைய உயர்குலத்தின் குணத்தைக்காட்டும். நமது கூட்டப்பெருக்கத்தின் பலத்தை காட்டும். நமது தொழில் ஞான விருத்தியின் பெருமையைக்காட்டும். இவைகளினுல் நமது குலத்திற்கென்றே உழைக்கும் கனவான்களின் பெயரும் விளங்கும். அப்படிக்கில்லாமல் உயர்குலம் என்று நினைத்துக்கொண்டு நமது சீர்பாட்டிற்கெல்லாம் அன்னியர்களின் உதவியை எதிர்பார்த்தால் அன்னியர்கள் நம்மை பஞ்சமர்களைப்போல் தாழ்மையானவர்கள்என்பதற்கு சந்தேகமில்லை.

பொருள்விஷயங்களில் நமது ஏழ்மை விளங்கினுலும் உயர் குலத்தின் குணத் தாழ்வு நமக்கு ஏற்படக்கூடாது.

குலத்தளவேயாகுமாம் குணம் என்றபடி நமக்கும் தற்கால பிராமணுளுக்கும் உள்ள குணபேதங்களினுல் யாவரும் உயர்வு தாழ்வு தீர்மானித்துக்கொள்ளக்கூடும். ஆகையால் கான்பரன்ஸ் சுருசுருப்பாய்விஸ்வபிரம்ம குலத்திற்கு வேண்டிய குறைவுபாடுகளை சீர்திருத்தம் செய்துக்கொள்ள வேண்டியமார்க்கம் தேடினபின் மேல்மேலும் விருத்தி யடையவேண்டிய மார்க்கங்களை யோசித்தால் பலன் அடையலாம்.

நமது வம்சம் விஸ்வபிரம்ம வம்சம் என்று பெயர் பெற்றமையால் நமது தொழிலும் பிரம்ம சிருஷ்டியின் தொழிலாகவே இருந்திருக்கவேண்டும். யோகிகளாயுள்ள விஸ்வ பிரம்மாக்கள் நினைத்தமாத்திரத்தில் சிருஷ்டிசெய்யும் சக்தியுள்ளவர்களா யிருந்திருப்பார்கள். சிலர் கண்ணினுல் உற்றுப் பார்த்தமாத்திரத்திலும், சிலர் காதில் கேட்டமாத்திரத்திலும் மற்றவர்கள் கையினுல்தொட்டமாத்திரத்திலும் தக்கபடி வேலைசெய்தும் சிருஷ்டித்திருப்பார்கள். தற்காலத்திய விஸ்வப்பிரம்மாக்கள் இக்கடைசி மார்க்கத்தை சீர்திருத்தமில்லாமல் உபயோகித்து அதனுல் வரும் வருமானத்தைக்கொண்டு ஜீவித்து வருகிறார்கள். இவ்வளவு தாழ்வு இச்சாதிக்கு ஏன்வந்தது? இவர்களுடைய சக்திகளெல்லாம் என்னவிதமாய் ஒழிந்தது? இப்படிக்கெல்லாம் ஒழித்துவிட்டு அநாதியாய் துறவிகளைப்போவிருக்கும் விஸ்வகர்மாக்களுக்கு ஜாதி உயர்வுமாத்திரம் தாழாமலிருக்கின்றனவா என்றதை நம்முடைய கான்பரன்சுடன் கலந்துயோசித்து அவர்கள்ஏற்படுத்தும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஆதியாயுள்ள பிரம்மாக்களைப்போல் தொழில் உற்பவிக்கும் சக்தியைப் பெற்று பெருமையுடன் வாழ்வோமாக.

தொக்க வழகிற்கழ குறுத்தழகு மொளிபெறு சுடர்க்கிரு னகற்றுசுடரும், சூழ்கடலி னுக்கறலளிக்குமொரு வாவியுந் துருவனை நடத்துமீனும், இக்கனை மயக்கு மொருமோக னுங்கமலைக் கிரங்கிநிதி யருள்செல்வனும், இசைதெரிநடன்பினிசை காட்டுமொரு குழையு மெழிற்கலந் தாங்குபுனையும், பக்குவமதைக்குறு முனிச்குறுசெய் பிடகனும் பாரதிக்குரைகவிஞனும், பார்க்கிலில் லாமைபோன் மாந்தர்க்கு நீதொழில் பயிற்றியருள் செய்ததல்லால், வித்தமுனக்குரைத் தெதிருதவி செய்கைபுவி மேலான போதுமிலைகாண் வீரமாருதியைப் பதாகையா கப்பெற்ற விபுலமுறு விஸ்வகுருவே.

அன்பு.

(ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள் எழுதியது.)

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாயைங் கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமாற் செல்வமுமொன்
றோவென்னச் செய்யுந் தேவே (1)

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந்
தறிநிறுவி யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைக டீர்ப்பாம். (2)

மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங்
கரைகாண்பான் முதிர்ந்த காலம்
பாகமெனும் மலர்கொண்டு பத்தியெனும்
புனலாட்டிப் பரிந்து சாத்திச்
சோகமெனப் பாவித்துத் துரியமெனும்
விளக்கேற்றிச் சோகம் நீங்கி
யாகமெனுங் கோயிலின்க ணறிவென்னுங்
கணபதிக்கே யன்பு செய்வாம். (3)

அன்பாவது அருளுக்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம். அதுவே ஒருவர்க்கு இம்மைப் பயனும் மறுமைப் பயனுந் தருவது. அதுபற்றியன்றே ஒருவர்க்கு அரிதினும் அரிதான மானுட தேகத்தோடுண்டாகிய சம்பந்தத்தை அன்போடு பொருந்துவதற்கு வந்தவழியின் பயனென்று அறிந்தோர் சொல்லுகிறார்கள்.

அன்பானது தன்னையுடையவர்க்கு அவரோடு தொடர்புடையார்மாட்டு விருப்பத்தைத் தந்து அதன்வழியே பிறர்மாட்டு விருப்பமுடைமையையுந் தரும். அவ்விருப்பமுடைமைதான் ஒருவர்க்குப் பகையும் நொதுமலுமின்றி யாவரும் நட்பாகும் சிறப்பினைத் தருவது. அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடல் முதலிய இரகந்த தருமங்களுக்குக்காரணம் அன்பேயாகும். இதனை வலியுறுத்தவே பிரபுலிங்க லீலையில்—

"துறவறமனையறஞ்சேர் தூய்மைநற்கல்விநல்லோர், உறவொடுமகங்கடான மொண்டவம்விரதம்பூசை, அறிவிவை யனைத்துமில்லை யாதரவில்லையாயின்."

என்றும், திருக்களிற்றுப்படியாரில்:

அன்பேயென்னன்பேயென்றன்பாலழுதரற்றி
அன்பே யன்பாக வறிவழியும்—அன்பன்றித்
தீர்த்தந்தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றே தான்.

என்றும், கூறியதுமென்க.

அன்பில்லார் யாவரும் பிறர்க்குப் பயன்படாமையால் எல்லாப் பொருள்களாலுந் தமக்கே யுரியராவார். அன்புடையாரோ அப்பொருள்களை மாத்திரமல்லாமல் தம்முடம்பாலும், எலும்பாலும் பிறர்க்குரியராவார். அதற்குச் சிபிச்சக்கிரவர்த்தி "தன்னகம்புக்க குறுநடைப்புறவின் றபுதி கண்டஞ்சித் துலைபுக்"கதும், விருத்திராசுரனை வெல்லும்பொருட்டு யாசித்த இந்திரனுக்குத் ததீசிமாமுனிவர் தமது முதுகெலும்பைத் தந்ததும், கன்னன் தனது மரணத்தைக் கருதாது தன்னுடன் பிறந்த கவச குண்டலங்களை அந்தண வடிவங்கொண்டுவந்து யாசித்த இந்திரனுக்குக் கொடுத்ததும் சான்றாகும்.

அன்பில்லையேல் ஒருவர்க்கு இடம்பொருள் ஏவல் செய்வார் முதலிய உறுப்பெல்லாம் என்ன பயனைத் தரும்? அன்பானது உள்ள நிகழ்ச்சியாகையால் அது எப்பொழுதும் யாவர்க்கும் புலனாவதின்றாம். ஆனால் அது முதிர்ந்தவழியும் அன்புடையார்க்குத் தம்மால் அன்பு செய்யப்பட்டாருடைய துன்பங் கண்டபோதும் பொழிகின்ற கண்ணீரே அவ்வன்பை யெல்லோரும் அறியும்படி செய்யும். இத்தகைய அன்பு ஒருவர்க்கில்லையேல் அவரை அறக்கடவுள், புழு முதலான என்பில்லாத பிராணிகளின் உடம்பை வெயில் தகித்து வருத்துவதுபோலத் தகித்து வருத்தும்.

அன்பை முதலாகக்கொண்டு அதன் வழியாக நின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பெனப்படும். அல்லாதார்க் குளவான உடம்புகள் உயிர்நின்ற உடம்பாகாது என்பினைத் தோலாற் போர்த்தனவாம்; எனவே நடைப்பிணமெனப்படுமென்க.

அன்பானது தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப்படும். தலையன்பாவது தன்னால் அன்புபாராட்டப் பட்டாரது பெயரைக் கேட்டமாத்திரையே தன்வசமழிதல். இடையன்பாவது அவரைக் கண்டவுடன் தன்வசமழிதல். கடையன்பாவது அவரைப் பரிசித்ததுந் தன்வசமழிதல்.

கடவுள் ஆன்மாக்கள் மாட்டுக்கொண்ட அன்பும், ஒருவர் தமக்கு இவை தொடர்புடையவை இவை தொடர்பில்லாதவை என்று நோக்காது இயல்பாகவே எல்லாவுயிர்கள் மேலும் பிரதி பலன் கருதாது கொண்ட அன்பும் அருளெனப்படும். அருள், இரக்கம், கருணை, கிருபை யென்பன ஒரு பொருட்கிளவி.

உலக வின்பத்துக்குக் காரணம் பொருளேயாதல்போல மோட்சவின்பத்துக்குக் காரணம் அருளேயாம். "எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும். இலங்குமுயிருடலனைத்து மீசன்கோயில்" என்றபடி உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள். அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம்கடவுளுக்குஆலயங்கள். ஆதலால் கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்புபற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களே யாவர்கள். உயிர்களிடத் தன்பில்லாதபொழுது கடவுளிடத்து அன்புடையவர்போல் ஒழுகுதல்நாடகமாத்திரையேயன்றி உண்மை யன்றென்பது தெளிவாய் உணரப்படும்.

பிறவுயிர்களிடத்து இரக்கமில்லாதவர் தம்முயிருக்கு உறுதி செய்துகொள்ளமாட்டார். ஆதலால் அவர் இரக்கமில்லாதிருப்பது பிறவுயிர்களிடத்து மாத்திரமா? தம்முயிரிடத்தும் இரக்கமில்லாதவரே யாவர். அவர் தமக்குத்தாமே வஞ்சகர்.

அருளென்னுங் குணம் யாவரிடத்திருக்குமோ அவரிடத்தே பழி பாவங்களெல்லாஞ் சிறிதும் அணுகாது நீங்கிவிடும். மரணபரியந்தம் தன்னுயிரை வருந்திப் பாதுகாத்தல்போலப் பிறவுயிர்களையும்வருந்திப் பாதுகாப்பவன் எவனோ அவனே உயிர்களுக்கெல்லாம் இதஞ்செய்பவனாகித் தான் இன்பமே வடிவமாக இருப்பன்.

மேலும் சிவபெருமான் கண்ணப்பநாயனாருக்கு ஆறுநாளில் முத்திகொடுத்தருளியதும், சேந்தனார் நிவேதித்த களியை உண்டருளியதும் அன்பின் செயலா லன்றோ? ஆகையால் பிறவிப்பயனை விரும்பிய ஒவ்வொருவரும் இறைவன்மாட்டு அன்புடையவரா யிருத்தல்வேண்டும். அங்ஙனம் இறைவன்மாட்டுச் செய்யப்படும்

அன்பிற்குப் பத்தியெனப்படும். இவ்வன்பு இல்வழி இறைவனை ஒருவாற்றானும் அடைதல் முடியாது. அது,

உள்ள முள்கலந் தேத்தவல் லார்க்கலாற்
கள்ள முள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்ப னவர்தமை நாணியே.

எனவருந் திருநாவுக்கரசுநாயனார் தேவாரங்களானும்,

தேவதேவன்மெய்ச்சேவகன்
றென்பெருந்துறை நாயகன்
மூவராலு மறியொணாமுத
லாயவானந்த மூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றி
யறியொணாமலர்ச் சோதியான்
றூயமாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னிமன்னிச் சுடருமே.

என்னுந் திருவாசகத்தானும்,

என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி யகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியினை யெய்தவொண் ணாதே.

என்னுந் திருமந்திரத்தானும்,

கருமமா தவஞ்செ பஞ்சொல்
காசறுசமாதிஞானம்
புரிபவர் வசமதாகிப்
பொருந்திடேம் புரையொன்றின்றித்
திரிவறு மன்புசெய்வோர்
வசமதாய்ச் சேர்ந்துநிற்போம்
உரைசெய்வோ மவர்முனெய்தி
யவருளத் துறைவோமென்றும்.

என்னும் வாயுசங்கிதையானும் அறியப்படும். ஆதலினலன்றோ சிவஞானசித்தியாரில் "அறியாமையறிவகற்றி யறிவினுள்ளே யறிவுதனை யருளினனறியாதே யறிந்து, குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருப்பையாயின்." என்றுங் கூறியதுமென்க.

இவ்வன்பானது ஒருவர்க்கு, அவர் பல பிறவிகளிலே பயன் குறியாது செய்த புண்ணிய மிகுதியினாலே சிவபெருமானருளிச் செய்யவரும். அவனருளின்றி இவ்வன்பு ஒருவாற்றானும் நிகழாது. இத்தகைய அன்பானது இடையறாது முறுகிவளரின். அம்முதிர்ச்சியிலே சிவம் விளங்கும். ஆகலால் அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் நிற்கும். திருவாசகத்தில்,

"பத்திவலையிற் படுவோன் காண்க."

எனறும், திருக்களிற்றுப்படியாரில்,

"ஆரே னுமன்புசெயி னங்கே தலைப்படுங்கா
ணாரேனுங் காணாவரன்."

என்றும், திருமந்திரத்தில்,

"அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலர்
அன்பே சிவமாவ தாரு மறிகிலர்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே."

என்றும, திருவாசகத்தில்,

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
யீறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
வின்பமே யென்னுடை யன்பே"

என்றும் கூறியிருக்கல் அதுபற்றியேயாம்,

இதுகாறுங் கூறியவற்றால் அன்பே இம்மைப்பயனையும், மறுமைப்பயனையுந் தருவதான சிறந்த சாதனமாயிருப்பதால் காரைக்காலம்மையார் "இறவாத வின்ப வன்புவேண்டி". வினைப்பித்துக் கொண்டதுபோல், நாமும் அதைப் பெறுவதற்கு எல்லாம்வல்ல முழுமுதலை இரந்து இறைஞ்சுவோமாக.

நமப்பார்வதி பதயே.
சுபம்.

ஹிந்துக்கள் அனைவரும் ஒன்று.

தெலுங்கர் தங்கள் நாட்டை வேறு தனி மாகாணமாகப் பிரித்துவிட வேண்டுமென்று செய்யும் முயர்ச்சியைப்பற்றிச் சுதேசமித்திரனில் 'தெலுங்க மகாசபை என்னும் தலைப்பில் எழுதும் நிருபர் ஒருவர் பின் வருமாறு கூறுகிறார். அவர் அபிப்பிராயம் பெரிதும் மதித்தற்குரியது.

இந்தச் சமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும் ஆசேது ஹிமாசல பரியந்தம்உள்ள ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரேக்கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய்வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம், ஜாதிபேதம், குலபேதம், பாஷாபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக்காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே உயிர்; ஒரே உடம்பு; ஒரே ரத்தம்; ஒரே குடர்.

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வரவேண்டுமானால் ஐக்கிய நெறியை உடனே அனுசரிக்கவேண்டும். போனவருஷம் கீழ் கடலோரத்திலே பெரிய புயற்காற்றடித்தது. ஒன்று கூடியிருந்த வீடுகள் பிழைத்தன. தனிக் குடிசைகளெல்லாம் காற்றிலே பறந்து போயின. உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய நெறி தோன்றக்கூடிய காலம் பிறந்து விட்டதென்று மேதாவிகளெல்லோரும் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம்பிறக்கவேண்டுமானால் அதற்கு இந்துமதமே முக்கிய ஸாதனமென்று நாம் சொல்லுகிறோம். ஸ்வாமி விவேகாநந்தர், ரவீந்திரநாத டாகூர், ஜகதீச சந்திர வஸு முதலிய பெரியோர்களும் அங்ஙனமே சொல்லுகிறார்கள். இந்த ஸமயத்தில் ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால் இந்துமதத்தின் மகிமையை உலகத்தார் காண்பதெப்படி?

இந்து தர்மம் பெருமாள் கோயிலைப் போல நிற்பது எங்கே நின்றாலும் அத்தனை பேருக்கும் பிரசாத முண்டு. பகவத் ஸந்நிதியில் ஜாதி பேதம் இல்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம். இந்து தர்மம் சிதம்பரத்தைப் போல அதனுள்ளே பறைபரும் ஒளியில் கலந்து விடலாம். மேலும் தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ் பாஷையில் கற்றுக்கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும்பொழுது இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர் தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி. தமிழில் அபிமானமுள்ளவன் இந்து தர்மத்தைக் கைக்கொண்டு நிற்பான். அதுவே. தமிழபிமானியைச் சோதிக்கும் வழி. ஏனென்றால் தேவாரத்திலும், திருவாசகத்திலும் திருவாய் மொழியிலும், திருக்குறளிலும்,

கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை. ஷை நூல்களை நன்றாக உணர்ந்தவன் இந்து தர்மத்தாலேயே இந்த உலகம் நிலைபெற்று நிற்குமென்பதை அறிவான்; ஸர்வ தர்மங்களுக்கும் இந்து தர்மமே வழிகாட்டியென்பதைக் காண்பான். ஹிந்து தர்மத்தை நிலை நிறுத்தினால் ஆந்திரர், கன்னடர், மராட்டியர், ஹிந்துஸ்தானிகள், குஜராத்தியர்கள், வங்காளிகள், தமிழர், மலையாளர் எல்லோருக்கும் நல்லகாலம் பிறக்கும்.

* * *

ஒரு சம்ஸ்கிருத பண்டிதர்.

பஞ்சாப் வாசியான ஹரிச்சந்து என்னும் இந்து பாரிஸ் (யூனிவர்ஸிட்டி) சர்வ கலா சாலையில் டாக்டர் என்னும் கௌரவப் பட்டத்தைப் பெற்றிருக்கிறார். பாரிஸ் சர்வகலாசாலையில் மிகுந்த கௌரவத்துடன் இந்தப் பட்டத்தைப் பெற்ற முதலாவது இந்தியர் இவரே. இவர் பஞ்சாபிலுள்ள ராவல் பிண்டி கார்டன் மிஷன் காலேஜில் ஸம்ஸ்கிருத போதகராயிருக்கிறார். இவர் ஆங்கில பாஷை அதிகமாய் கற்பதற்காக இந்தியா ராஜாங்கத்தாரின் உதவி பெற்று ஐரோப்பாவுக்குச் சென்றார். இவர் முதலில் பாரிஸிலும் பின் ஆக்ஸ்போர்டிலும் படித்தாரென்று தெரிகின்றது. சென்ற வருஷத்தில் பாரிஸ் சர்வகலாசாலை அதிகாரிகள் இவருக்கு டாக்டர் என்னும் உயர்ந்த பட்டத்தை அளித்தனர் சரியான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் வித்யா விஷயத்தில் இந்துக்கள் ஐரோப்பியர்களை விட மேன்மையடைவார்களென்னும் விஷயத்தை இந்த விஷயமும் விளக்கிக்காட்டுகிறதென்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

இந்தியக் கைத்தொழில் கமிஷன்.

இந்தியக் கைத்தொழில் கமிஷன் 1916 ஞு அக்டோபர்மீ கடைசியில் டெல்லியில் வேலை ஆரம்பித்தது. அதுமுதல் அநேக பட்டணங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள முக்கிய ஸ்தலங்களின் வாக்குமூலத்தை எடுத்துக்கொண்டார்கள்.

கொடுக்கல் வாங்கல் இலாவாதேவி சௌகர்ய ஏற்பாடுகள்.

ராய்பஹதூர் லாலா சூல்தான்ஸிங் பாங்கருடைய வாக்குமூலத்தை டெல்லியில் எடுத்தார்கள். அவர் வாக்குமூலத்தின் சாராம்சம்:—வாசிப்புக்குப் பிறகு தேசத்தின் சிக்கன விருத்திக்கு வேண்டியது நல்ல ஏற்பாடான இலாவாதேவி சௌகர்யம். ஒவ்வொரு மாகாணத்திலும் பெரிய கைத்தொழிற்குரிய இலாவாதேவி பாங்கு இருக்கவேண்டும். அது கவர்ன்மெண்டாரின் நிரம்பிய ஆதரவைப் பெறவேண்டும். அதின் கொடுக்கல் வாங்கல்கள் கவர்ன்மெண்டாரால் நேமிக்கப்பட்ட நிபுணர்களால் மேற்பார்வை பார்க்கப்படவேண்டும். அவர்கள் கவர்ன்மெண்டாருக்கும் பாங்கியை நடத்துவதில் உத்திரவாதம் வகித்தவர்களுக்கும் பரிசோதக விவரத்தைத் தெரியப்படுத்த வேண்டும். இந்த பாங்கிக்கு கிளை பாங்கி ஒவ்வொரு மாகாணத்திலும், ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கவேண்டும். மற்ற விபவகாரங்களெல்லாம் ஒருபுறமிருக்க இந்த பாங்கியின் வேலை கைத்தொழில் பயிரீட்டின் மேலும், ஸ்டாக்ஸ், ஷேர்கள் இவைகளின் ஈட்டின்மேலும் கடன் கொடுக்கவேண்டும்.

தொழில் பாங்கிகள்.

அத்தகைய முயற்சிகள் தொழில்களுக்குப் பண உதவிசெய்ய அவசியமானவை அவ்வித உதவியில்லாமல் மேற்சொன்ன தொழில் முயற்சிகளெல்லாம் நாசத்தையடைந்திருக்கின்றன. ஐக்கிய நாணய பாங்கிகளின் தொகையும் விபவகார விஸ்தீரணமும் அதிகப்படலாம். என் அபிப்பிராயத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ஐக்கியநாணய பாங்கிகள் இருக்க வேண்டும். ஜில்லாவிலுள்ள பேர்பெற்ற வியாபாரிகளின் விபவகார ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் அடைந்திருந்தால் அந்த ஜில்லாவில் முதலில் பணம் வசூலித்துத் தொழில் பாங்கிக்கும், ஐக்கிய நாணய பாங்கிக்கும் போஷகத் திரவியமாக்கலாம். அந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் அந்த பாங்கிகளின் நிர்வாக விஷயத்தில் ஜனங்களோடு ஐக்கியமாய் பாடுபடவேண்டும். கவர்ன்மெண்டு வசூல் பணத்தில் ஒரு போகத்தை அதில் முன்பணமாக வைக்கவேண்டும். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைக் கொண்டு கணக்குகளைப் பரிசோதனை செய்யவேண்டும். வரவு செலவு தணிக்கை செய்யவேண்டும்.

என்னுடைய அபிப்பிராயத்தில் ஓர் பாபத்திலேயும் வேண்டியிருக்கிற உத்திரவாதம் செய்திருக்கிற வீதம் லாபத்தை பங்கிட்டுக் கொடுப்பதினால் செலவான பணம் கவர்ன்மெண்டாருக்குப் பின்னுக் திருப்பவேண்டும் என்னும் நிபந்தனையைக் கொண்டாவது கொஞ்சகால வரைக்கும் லாபத்தைப் பங்கிட்டுக்கொடுக்கும் உத்திரவாதம் அளிப்பதால் எல்லோராலும் லாபகரம் என்று கருதப்பட்ட வர்த்தக முயற்சிகளுக்கு கவர்ன்மெண்டார் உதவவேண்டும். அப்படிப்பட்ட பாங்கிகள் ஸ்தாபிக்கப்பட்டன என்று வைத்துக்கொண்டால், அப்போது கவர்ன்மெண்டார் நேராக வட்டிக்காவது வட்டியில்லாதாவது அவ்வித வர்த்தக முயற்சிகளுக்குக் கடன் கொடுக்க வேண்டியதில்லை. விவசாயக் குடிகள் அதிக ஏழ்மையிலிருக்கிற பிராந்தியங்களிலும் அவ்விடத்தில் வேண்டுதல்களுக்கு ஐக்கிய நாணய ஏற்பாடு தகுதியற்றதாக யிருக்கிற பிராந்தியங்களிலும், உபகார நன்கொடைப் பணத்தாலும், வாடகை ஏற்பாட்டின்மேல் செடிகளையும், யந்திர உபகாரங்களையும் தயாரித்துக் கொடுப்பதினால் கிராமாந்திர தொழில்களை பலப்படுத்தலாம். சாதாரண ஜனங்கள் எந்த ஏற்பாட்டின்மேல் தங்கள் பணத்தை வர்த்தக முயற்சிகளில் முன் பணமாக வைக்கிறார்களோ அந்த ஏற்பாட்டின் மேலேயே கவர்ன்மெண்டாரும் தங்கள் பணத்தை அவ்வித வர்த்தக முயற்சிகளுக்கு முன்பணமாக வைக்கலாம். ஆனால் எந்தெந்த முயற்சிகளில் கவர்ன்மெண்டார் அவ்வித முதற் பணஉதவி செய்ய வருகிறார்களோ அவைகளிலெல்லாம் குறைந்தது பாதிபணமாவது இந்தியர்களுடையதாயிருக்கவேண்டும். இப்படி யில்லாவிட்டால் அமெரிக்கா புகையிலை கம்பெனியைப்போன்ற அன்னிய நாட்டுக் கம்பெனிகள் இந்த தேசத்து உளவுகளைக் கண்டு பிடித்துக்கொண்டு வர்த்தக முயற்சியைத் தங்களுடையதாக ஆக்கிக்கொள்வார்கள் என்று பயப்படுகிறேன்.

கவர்ன்மெண்டார் பிரைவேட் கம்பனிகளுக்கு வர்த்தக முயற்சிகளில் நிபுணர்களுடைய உதவியைக் கொடுக்கிறதாக

யிருந்தால் அந்த நிபுணர்களால் தெரிவிக்கப்பட்ட வர்த்தக லாபங்களின் விபரங்களைப் பிரசுரிப்பதினால் அந்தக் கம்பெனியின் லாபத்திற்கு இடைஞ்சலாயிராதா என்று ஊகிக்கும் பாத்தியதையைத் தங்களுடைய தாக்கிக்கொள்ள வேண்டும்.

***

சாஸ்திரப் பயிற்சியின் பெருமை.

எந்த விஷயத்திலும் விந்தையான புதுமைகளைக் கண்டுபிடிப்பதில் மேல் நாட்டார் விசேஷ ஊக்கம் காட்டுகிறார்கள். பலன்தரும் மரங்களுக்கும் செடிகளுக்கும் மின்சார சக்தியை ஏற்றுவதால் மிகுதியான பலனடையும் உபாயத்தை இங்கிலாந்தில் சில பண்டிதர்கள் கண்டு பிடிக்கிறார்கள். மின்சார சக்தியை ஏற்றி அவற்றை விரைவில் செழித்துவரச் செய்து மிகுந்த பலன் அளிக்கச் செய்யும் முயற்சியை ஹெர்போர்டு ஷயர் என்னும் இடத்தில் ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த யுக்தியை ஸர் அலிவர் லாட்ஜ் என்னும் மகாபண்டிதர் சிலவருஷங்களுக்கு முன்னமே கண்டு பிடித்தார். கம்பிகளை வலைபோலப் பரப்பி அவைகளின் வாயிலாகத் தரையிலுள்ள செடிகளுக்கு மின்சார சக்தியை ஏற்றுவதால் சாதாரண காலத்தில் கிடைக்கும் பலனைவிட மூன்றில் ஒருபங்கு மிகுதியாகக் கிடைத்தது. ஆனால் இப்பொழுது செய்யும் முயற்சியில் ஒன்றுக்கு ஒன்றரைப்பங்கு கிடைத்திருக்கிறதென்று தெரியவருகிறது. செடிகளுக்கு விடும் தண்ணீரில் மின்சார சக்தியை ஏற்றுவதாலும் அவற்றின் பலன் மிகுதிப்படுகிறது. பயிருள்ள இடத்தில் இரவில் மின்சார விளக்குகளை ஏற்றிவைத்து அவற்றின் பிரகாசம் வீசும்படிச் செய்வதாலும் மிகுந்த நன்மை ஏற்படுகிறது. சூரிய ஒளியே செடி கொடிகளின் வளர்ச்சிக்கு ஆதாரம். இரவிலே ஷை விளக்குகளை ஏற்றி வைப்பதால் இரவும் பகலும் சூரியன் பிரகாசித்துக்கொண்டிருப்பதால் அவை எவ்வாறு மிகுதியாக வளருமோ அவ்வாறு மிகுதியாகவளர்ந்து மிகுந்தபலனைத் தருகின்றன

மின்சார சக்தியால் மழை பெய்விக்கும் வித்தையையும் ஓர் பண்டிதர் கண்டுபிடித்து ஆராய்ச்சி செய்துவருகிறார். இந்த விஷயங்களெல்லாம் நம்மவர்களுக்கு ஒருவித ஊக்கத்தை உண்டுபண்ணவேண்டும். விறகும் நெருப்புமின்றி சூரியப்பிரகாசத்தால் ஏற்படும் உஷ்ணத்தாலேயே யந்திரங்களைச் செலுத்தும் தொழிற்சாலைகளை நடத்தும் முறையையும் வடநாட்டிலே ஸ்ரீ கிருஷ்ணஜோஷி என்ற பண்டிதர் கண்டுபிடித்திருக்கும் விஷயம் இங்கே குறிப்பிடத்தக்கது.

***

பெரு மழை.

சென்ற 50 வருஷங்களுக் கிடையில் உலகத்தில் பெய்யாத பெருமழை சில மாதங்களுக்குமுன் ஆஸ்ட்ரேலியாவிலுள்ள நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் பெய்தது. சுமார் 4 லட்சம் சதுரமயிலுள்ள பிரதேசத்தில் பத்துநாளாக பெய்த மழையின் அளவு 40 அங்குல வீதம் இருக்குமாம். அதாவது ஒரு ஏக்கருக்கு 40 டன் மழை! அல்லது பதினாயிரம் கோடி டன் மழை! இந்த மழை ஜலத்தில் 500 மயில் நீளமும், 20 மயில் அகலமும் 133 அடி ஆழமுள்ள ஒரு ஏரியாகும்! இந்த ஜலம் உலகத்திலுள்ள மிகப்பெரிய ஏரியான நீலத்தையுள்ள அஸ்ஸோன் ஏரியிலுள்ள ஜலத்தைவிட 100மடங்கு மிகுதியாயிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

***

நம்மவர்கள் ஏன் செய்யக்கூடாது?

லெவர் ப்ரதர்ஸ் என்னும் இங்கிலீஷ் வியாபாரக் கம்பெனியார் மலையாளக்கரையிலே ஸோப் செய்வதற்காக ஒரு ஸோப்புத் தொழிற்சாலை ஏற்படுத்தப் போகிறார்கள். இந்த வேலையை நம்மவர்கள் ஏன் செய்தல்கூடாது? நம்மவர்களிடம் பணம் இல்லையா? சாமர்த்தியமில்லையா? ஏது இல்லை? எல்லாம் இருக்கிறது. ஊக்கந்தான் இல்லை. ஊக்கமுடையவர்களே உலகத்தில் உயர்வடைவார்கள்.

நமது தேசத்திலே சென்னை, சென்னையடுத்த மாம்பலம், நாகப்பட்டணம், கள்ளிக்கோட்டை, பெங்களூர்; பம்பாய், கான்பூர், கல்கத்தா முதலிய பல இடங்களில் ஸோப்புத்தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் ஐரோப்பாவிலேயிருந்து நமக்குவரும் ஸோப்புகளை யொத்த பலவித ஸோப்புகள் செய்யப்படுகின்றன. இவற்றில் ஒன்றிரண்டு தவிர மற்றவையெல்லாம் நம்மவர்களாலேயே நடத்தப்படுகின்றன. ஸோப்பு செய்வதற்குரிய சகல வஸ்துக்களும் சகல வசதிகளும் நமது தேசத்திலே ஏராளமாக அமைந்திருக்கின்றன. அதிலும் மலையாளப்பகுதி இந்தியாவிலே ஸோப் செய்வதற்கு மிகவும் தகுதியான இடம். அப்படியிருந்தும் நம்மவர்கள் அவ்வம்சங்களைக் கவனியாமலிருப்பது மிக்கபரிதாபம். ஓர் நிருபர்.

***

சேலத்தில் சுதேசியபண்டசாலை.

சென்றமாதத்தில் சேலத்தில் ஒருசுதேசிய பண்டசாலை திறக்கப்பட்டது இதற்கு மூலதனம் 25000 ரூபாய். 25 ரூபாய் கொண்ட 1000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இதுவரை சுமார் 300 பங்குகள் சேர்ந்திருக்கின்றன. இதுபோல இன்னும் சிலஇடங்களில் சுதேசிய பண்டசாலைகள் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் நடந்துக்கொண்டிருக்கின்றன.

பலகுறிப்புகள்.

தொழில் விஷயங்கள்.

நமது இந்துக்கள் தொழில் முறையில் பிரவேசித்து அதனால் பிரபல மடைய வேண்டுமென்று சொல்லுகிறார்களே தவிர அதுபோல் யாவரும் செய்ய முன்வாரமல் வீண்பேச்சுகளையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். வெளிதேசங்களிலிருந்து வரும் தொழில் சாமான்கள் மிஷின்முதலிய ஆயுதங்களால் செய்யப்பட்டவை. அவ்விதச் சாமான்களைச் செய்வதற் குமிஷின்களிருந்தால் அதற்கு ஓர் ஆள்தன் வேண்டும், அவன் மிஷின் ஓடுகிறவரையில் வேலைகளை முடிப்பான். மிஷின் ஓடாமல் நின்றுவிட்டால் அவன் அதை ஒன்றும் செய்ய முடியாது. வேலைகள் அப்படியே நின்றுவிடும். நம்முடைய கைத் தொழில்கள் அப்படியல்ல. தொழில்களை செவ்வனே கற்றுக் கொண்டால் எவ்வித வேலைகளையும் எந்தக் காலத்திலும் தடையின்றி செய்து முடிக்கலாம். ஆனால் அவ்வித மிஷின்களிருந்தால் வேலைகள் சுறுசுறுப்பாகவும், ஓரேவிதமாகவும் செய்யமுடியும் அதற்குப் பணச்செலவு அதிகமுண்டு. நமதுகைத்தொழிலுக்கு அதிகச் செலவில்லாமல் தாமசமாக முடியும். இதற்கும் அதற்கும் உள்ள பேதத்தை யோசிக்கும் பொழுது நமது நாட்டுக் கைத்தொழில் தான் விசேஷமென்று தெரிகிறது. இதற்குள்ள தாரதம்மியம் அதற்குக்கிடையாது. அவ்வித மிஷின்களைச் செய்வதும் கைத்தொழிலேயாகும். கையினால்செய்து மிஷினைப் பூட்டின பிறகுதான் மிஷின் தொழிலாக முடிகிறது. கைத்தொழிலில்லாமல் மிஷின்தொழில் கிடையாது.

வைத்தியத் தொழில்களிலும் அப்படியேதானிருக்கிறது. தமிழ் வைத்தியர்களுக்கும், இங்கிலீஷ் டாக்டர்களுக்கும் உள்ள பேதம் அனேகம். இந்துக்கள் நோயாளிகளுக்குக் கைநாடியைப் பார்த்து இன்னின்ன வியாதியென்று விபரமாக சொல்லுகிறார்கள். இங்கிலீஷ் டாக்டர்கள் தேகத்தைச் சோதிக்கும் கருவிகளில்லாமல் வியாதியினுடைய குணத்தை சொல்ல முடியாது. ஒருவருக்குச் சுரம்வந்தால் இந்தியர்கள் பச்சிலை மூலிகைகளைக்கொண்டு கியாழம் வைத்தும், அல்லது புடமிட்டும், அல்லது கல்வத்திலிட்டு அரைத்தும் மாத்திரைகள் செய்து கொடுத்து சொஸ்தப் படுத்துகிறார்கள். இங்கிலீஷ் டாக்டர்கள் திராவகங்கள் இருந்தால்தான் சொஸ்தப்படுத்தமுடியும். இல்லாவிட்டால் செய்யமுடியாது. அவர்களுக்குச்செய்யும் முறைகள் தெரிந்தாலும் அதைச் செய்வதற்கு மிஷின்கள் யந்திரங்கள் வேண்டும். நம்மைப்போல் கல்வத்திலிட்டு அரைத்துக் கொடுக்கமுடியாது. புடம் வைத்துக் கொடுக்க முடியாது. ஆகையால் கைத்தொழில்தான் விசேஷமென்பதை இவ்விடத்தில் காட்டுவதற்கு இங்கு சொல்ல நேர்ந்தது. நம்முடைய பழயகாலத்து கைத்தொழில்களை அலக்ஷியஞ்செய்யாமல் கவனிக்க வேண்டியது அவசியம்.

* * *

தொழிற் கல்விச்சாலை.

திருச்சியில் நடந்த விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸில் தீர்மானித்த தொழிற் கல்விச்சாலை விஷயத்தைப்பற்றி என்ன செய்தார்களென்பது இன்றுவரையிலும் யாதொன்றும் தெரியவில்லை. மற்றவர்கள் நமக்கு அடிக்கடி கடிதம் எழுதிக் கேட்கிறார்கள். அதற்கு என்னபதில் எழுதுவதென்றும் எமக்கு தெரியவில்லை.

இவர்கள் விஷயந்தான் மடத்தாண்டிகள் போல் இருக்கிறது. கூட்டம் கூடியபோது இப்படிச்செய்யவேண்டும் அப்படிச்செய்யவேண்டுமென்று சொல்வது வழக்கம். அக்கூட்டம்கலைந்தால் அவ்விஷயம் ஞாபகமே வாராது. இதை உத்தேசித்தே நாம் கான்பரன்ஸ் மேடையில உடனே முடிக்கவேண்டுமென்றும், அந்தக் கமிட்டியைத் தெரிந்தெடுத்துத் தீர்மானிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தியும் நமது வார்த்தையைத் அலட்சியஞ் செய்துவிட்டு கும்பகோணம் சென்ட்ரல் கமிட்டியார் இதற்கு வேண்டிய கமிட்டியை ஏற்படுத்துவார்களென்று தீர்மானித்து விட்டார்கள் மஹாஜன சமுகத்திலேயே பல ஊர்களிலிருந்து வந்திருக்கும் கனவான்களில் கமிட்டிக்கு தெரிந்தெடுத்துத் தீர்மானம் செய்யாதவர்கள் தனியே என்ன செய்யப் போகிறார்களென்பது எமக்குத் தெரியவில்லை. கன்றுள்ளபோது துளிப்பால் கரவாதபசு கன்றிழந்த பின்னு கலப்பால் காக்கப்போகிறது? குலாபிமானிகளெல்லாம் ஒன்றுசேர்ந்த இடத்தில் முடியாத காரியம் தனியாய் என்ன செய்ய முடியுமோ தெரியவில்லை.

இதுவரையில் மூன்று மாதமாகியும் அதைப்பற்றி சிரத்தை எடுக்காம லிருப்பது சரியல்ல. ஷை தொழிற் கல்விச்சாலைக்காக கான்பரன்ஸ் மேடையில் வசூலான தொகையையும், எந்த இடத்தில் வைக்கப்பட் டிருப்பதும் தெரியவில்லை. அவைகளின் விவரம் தெரிந்தால் இன்னும் அதற்கு வேண்டிய காரியங்களுக்கும் மற்றவர்களைத் தூண்டி முன்வரச்செய்யலாம். அப்படிக்கில்லாவிட்டால் அடுத்த வருடம் கூடும் கான்பரன்ஸில்தான் யோசிப்பார்கள் போலும். கூட்டங் கூடியபோதுதான் நம்மவர்களா கூத்தாடுவது பழக்கம். இப்படிச்சொல்லுவதால் நம்மீது வருத்தமிருக்கலாம். நான் என் வீட்டுக் காரியத்தைப் பற்றி இவ்விடத்தில் சொல்ல வரவில்லை. பொது விஷயத்தைப்பற்றி சொல்ல நேர்ந்தது.

* * *

ஸ்ரீமத், யோகி, மாணிக்க சுவாமிகள் விதேகமுக்தி.

நிகழும் 1917௵ ஜூலை௴ 11௳க்குச் சரியான பிங்கள௵ ஆனி௴ 28௳ புதவாரம் காலை 10-மணிக்கு ரேவதி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் ஷை சுவாமிகள் விதேக முத்தியானபடியால் அன்றிரவு 9-மணிக்குமேல் சென்னை சூளை ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி வீதி 32-வது நெம்பரிடத்தில் அபிஷேக அலங்கார ஆராதனைகள்செய்து அவ்விடத்திலிருந்து இரதாரோகணஞ்செய்வித்துவெகு ஆரம்பரத்துடன் ஓட்டேரி ஸ்ரீமதி வெங்கடம்மாள் சமாதி தோட்டத்தில் ஷை சுவாமிகளைச் சமாதி செய்தார்கள். (22—7—17) ஆதிவாரம் காலை 10-மணிக்கு குருபூஜா வைபவ அபிஷேக அலங்கார ஆராதனையும், 12-மணிக்கு மேல் மஹேஸ்வரபூஜையும், பகல் 4-மணிக்குமேல் உபந்நியாசங்கள் ஆரம்பித்து இரவு 9½-மணி பரியந்தம் பல வித்வசிகாமணிகளால் ஷை சுவாமிகள்மீது இயற்றப்பட்ட ஸ்தோத்திர மஞ்சரியை உபந்நியாசங்கள் செய்யப்பட்டன.

மேற்சொல்லிய சுவாமிகள் தஞ்சை ஜில்லா வலங்கைமான் அமராவதி வாசி என்பதாகத் தெரிகிறது. இவர் இச்சென்னைக்கு விஜயஞ்செய்து சுமார் 40 வருடகாலமாக சந்நியாசி ஆசாரம் பூண்டிருந்தவர். இவர் அநேக நாளாக எச்சுவையுமின்றி ஒரே வேளை தன் கையினால் பொங்கி சாப்பிட்டிருந்து தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய பலகலைகளையும் கற்றுணர்ந்தவர். இவர் அத்துடன் நில்லாமல் ஒவ்வோர் பாஷைகளிலும் பல நூல்களை இயற்றியவர். இவருக்கு அநேக சிஷ்யர்களுமுண்டு. இவர் யோகாப்பியாசத்தைக் கைபண்டிருந்தவர். அநேக வைத்திய சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து தக்க ஔஷதங்களையும் செய்து அனுபவித்தவர். பொதுநூல்கள் பலவிபற்றி அச்சிட்டுமிருக்கின்றனர். இவர் ஆதியில் விஸ்வகர்ம வம்சத்தில்பிறந்தவராகையால் விஸ்வகர்ம வம்சத்தினர்களுக்குரிய பலநூல்களையும் எழுதிவைத்திருக்கின்றார். அவையாவன நாககாண்டம் (உரை) பஞ்ச பிரம்மான் வபதீபிகை ஸ்தோத்திர காண்டம் விஸ்வகர்ம சஹஸ்ரநாமம் இன்னும் பல. அவையெல்லாம் இன்னும் அச்சிடவுமில்லை. கையெழுத்துப் பிரதியாயிருக்கிறது. அவைகளையெல்லாம் யார் பணச்செலவிட்டு அச்சிடப் போகிறார்களோ தெரியவில்லை. சன்னியாசியானாலும் ஜாதி அபிமானம் விடாது என்னும் பழமொழிக்கிணங்க இவர் சன்னியாசி ஆசிரமம் பூண்டும் தாம் பிறந்த வம்சத்தை அபிமானித்து அதற்கு வேண்டிய சாஸ்திரங்களைத் தேடி எடுத்து பிரயாசையும், பணச்செலவும், தேக கஷ்டமுமெடுத்து எழுதிவைத்த நூல்களை வீணாக்காமல் அச்சிட்டு முடிக்க வேண்டியது விஸ்கர்ம வம்சத்தவர்களின் கடமை என்பதை நாம் வற்புறுத்தி சொல்லுகிறோம்.

"விஸ்வகர்ம மஹாஜன கான்பரனஸ் கமிட்டி" தஞ்சாவூர்.

1917ளு ஜூலைமீ 7வ மாலை 6 மணிக்குத் தஞ்சாவூர் கோட்டை காணாக்கார செட்டித்தெரு ஸ்ரீதொப்புள் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் ஓர் ஜெனரல் மீட்டிங்கு நடைபெற்றது. ஷை மீட்டிங்குக்கு தஞ்சை கோட்டை, கருந்தட்டான்குடி, மகர்நோன்புச்சாவடி முதலான விடங்களிலிருந்து விஸ்வகர்ம ஜாதியார்களனைவரும் விஜயமானார்கள். மகர்நோன்புச்சாவடி பிரம்மஸ்ரீ S. குப்புசாமிப்பத்தர் அவர்கள் அக்கிராசனம் வகித்தனர். நம்குலச்சிறுவர்களுக்குக் கட்டாயம் படிப்பு முக்கியமென்பதைப்பற்றி விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸ் சென்டரல் கமிட்டி பிரசிடென்டு பிரம்மஸ்ரீ தி. மு. முத்தண்ணாச்சாரியார் அவர்களால் விஸ்தாரணமாய்ப் பிரசங்கஞ் செய்யப்பட்டு பிறகு தங்கள் தங்கள் பிள்ளைகளை 12 வயதுவரையில் கட்டாயமாய் படிக்க வைக்கிறதென்று எல்லோருமேகோபித்துத் தீர்மானம் பெற்றது. கல்வி பழக்கமில்லாமல் தொழிலைமட்டும் பழகுகிறவர்களுக்கு ஓர் இராப்பாடசாலை ஏற்படுத்துவதாகத் தீர்மானித்தார்கள். (Reading Room) வாசகசாலை நமது குலத்தார்களுக்கு அத்தியாவசியமென்றும், ஷை வாசகசாலை ஒன்று ஏற்படுத்தி கமிட்டியாரின் மேற்பார்வையில் நடத்தி வருகிறதென்றும் தீர்மானித்தார்கள். ஷை ரீடிங் ரூமுக்குத் தெற்கு ராஜவீதி பிரம்மஸ்ரீ S. முத்தையா பத்தரவர்களைச் செக்ரட்டெரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டது. ஜப்பான்தேசம் சென்று தொழில் கல்வி பயின்று இங்கு விஜயமாகியுள்ள பிரம்மஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரியாரவர்களுக்கு நல்வரவு வந்தனோபசாரம் செய்தார்கள். ஜாதி பொது நன்மைக்காக ஓர் உண்டியல் ஏற்படுத்தி மாதம் இருமுறை அதாவது அமாவாசை பௌர்ணமி முதலான நாட்களில் வீடுகள் தோறும் வசூலிக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டுடன் வசூலித்தார்கள்.

இராப்பாடசாலையை பிரம்மஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரியரவர்களால் திறக்கப்பட்டது. ஷைநூர் சோழியப்பாசந்து பிரம்மஸ்ரீ வீராசாமி ஆச்சாரியர் அவர்கள் கிரகமாகிய விட்டோபா விலாசத்தில் நமது குலத்தாருக்காக "விஸ்வகர்ம குலோத்தாரண ரீடிங்ரூம் பிரம்மஸ்ரீ T. A. இராமசாமி ஆச்சாரியாரவர்களால் திறக்கப்பட்டது. ஷை இராப் பாடசாலையைக் கமிட்டியாரால் சப்ஸ்கிரிஷன் மூலமாயும், உண்டியல் மூலமாயும், வேறு பல வழியாலும் வசூலித்து நிறைவேற்றுகிறதென்றும் தீர்மானித்தார்கள். ஷை ரீடிங் ரூமுக்கு மெம்பர்கள் சப்ஸ்கிரிப்ஷனைக்கொண்டும், டொனேஷனைக்கொண்டும், வசூலித்து நடத்துகிறதென்றும் தீர்மானித்தார்கள்.

K. P. கோபாலசாமி ஆச்சாரி,
உதவி செக்ரட்டெரி.

முக்கிய கவனிப்பு.

மேற்சொல்லியத் தீர்மானங்களைப்போல் எத்தனைத் தீர்மானங்கள் வேண்டுமானாலும் செய்துவிடலாம். அதுகளை நடத்துவதற்குப் பொருள் சேகரம் செய்பவர்களையும், பொருள் கொடுப்பவர்களையுங்காணோம். அதற்கு ஒருவரும் முன்வந்ததாகத் தெரியவில்லை

ஜப்பானுக்குச் சென்று பொருள் செலவும் அநேக கஷ்டமுமெடுத்துக்கொண்டு வேலை கற்றவர்களைப்பற்றி நல்வரவு கூறுவதற்கும், வந்தனோபசாரப் பத்திரம் வாசிப்பதற்கும் குறைவில்லையாது. அவர் வந்து இத்தனை நாளாகியும், யாரும் முன்வந்து பொருள் செலவிட்டுத் தொழிற்சாலை ஸ்தாபிக்க முன்வராமல் இப்பொழுது வீண் படாடோபம் செய்தால் என்னவாகும்.

அவருக்குச் சாப்பாடு கிடைக்குமா? அவர் கற்றுக்கொண்டு வந்தத் தொழில்கள் விருத்தியாகுமா? காரியமாகிய வேலைகளைச் செய்யாமல் இதை யெல்லாம் செய்வதில் என்னபயன்; உடனே தொழிற்சாலையை ஸ்தாபித்து வேலைகளை நடத்தவேண்டுமென்பது எமது கொள்கை. ப—ர்.

புதிய கம்பெனி! புதிய சாக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 - முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூ 5—8—0, ஷை சிறுச 1-க்கு ரூ 4–8–0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ 6–8–0, தபால் செலவு பிரத்தியேகம்.

முழம்	அகலம்.	விலை ரூபா.
4	2	4-8-0 6–11
5	2½	6-முதல் 8-வரையில்
5	3	7 ,, 9 ,,
6	2½	8 ,, 9 ,,
6	3	9 ,, 12 ,,
7	3	10 ,, 13 ,,
8	3	12 ,, 15 ,,
9	3	14 ,, 16 ,,
10	3	15 ,, 18 ,,

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு		...	75	0	0
,, 2 ,,	...	...	50	0	0
,, 3 ,,	...	...	40	0	0
,, 4 ,,	...	...	35	0	0
,, 5 ,,	...	...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம், காண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பேனி காசி;
தாராநகர் தெரு, காசி

Managar,
SILK PITAMBER & Co.,
Daranagar Street,
Benarse, City.

பாலாஜி அண்டு கம்பெனி

காசி.

சகாயமாகவும் நவீன மாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபலப்பட்டு வர்த்தகர்களாகிய பாலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்களின் பட்டாடைகளின் உயர்வுக்கும், அதன் நேர்த்திக்கும், பகிரங்க பொருள் காட்சிகளில் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசுகள் தயாரில் சித்தமாக விருக்கின்றன. சிறு ஆர்டர்செய்து தருவித்துப் பார்த்தால், விலைகளின் நோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்துகொள்வீர்கள்.

விளையாட்டுப் பாத்திரம்.

32 விதமான விளையாட்டு சாமான்கள் அடங்கியது. குழந்தைகளை மகிழ்விப்பதில் மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ் செட் ஒன்றுக்கு	3—8—0
மத்தியசயிஸ் ,,	2—0—0
சிறுசயிஸ் ,,	1—8—0

முதல்தரமான கஸ்தூரி ஒரு ரூபாய் இடைகொண்ட தோலா ஒன்றுக்கு ரூபா ... 10—0—0

குங்குமப்பூ முதல்தரம் தோலா ஒன்றுக்குரூபா ... 2—8—0

காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0

பட்டுக் கைக்குட்டை.

நேர்த்தியான தினுசு.

18இஞ்சு சச்சதுக்கும் 1க்கு ரூ			0-10—0
20	,,	,,	0-14—0
24	,,	,,	1—2—0

விஷ்ணுபாதத் தட்டு.

இது சுத்தமான தாம்பிரத்தில் செய்யப்பட்டது, தாம்பாளம் போன்ற வடிவுள்ளது. இதன் மத்தியில் விஷ்ணுபாதம் செதுக்கப்பட்டிருக்கும். தட்டு 1-க்கு விலை ரூபா 1½-முதல் 2-வரை.

காசி வயிரவர் கயறு.

1-நெ. பெரியகபர் 100-க்கு ரூ.			2—8—0
2	,,	,,	2—0—0
3	,,	,,	1—8—0
4	,,	,,	0—6—0

விலை விபரங் காட்லாக் இனாம்.

BALAJEE & Co., Benares City, U. P.

அடர்ந்த கூந்தல்! அடர்ந்த கூந்தல்!!

கருமையும், செழுமையும், ஸ்திரீகளுக்கு அழகையும் அதிகப்படுத்துகிறது.

அப்படிச்செய்வது அசாத்தியமானக் காரியமல்ல.

எங்கள் **மணித்தைலம்** போதுமானது.

தற்காலம் வெளிவந்துலாவும் நவீன தைலத்தைப்போல் நமது தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்த்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தில் சுமார் 35 வருஷமாய் விற்பனையாகி வருகிறது. இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்? இன்னும் சந்தேகமாயின் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களில் ஒன்றாகிய கீழ்கண்டதை வாசித்துப்பாருங்கள்.

அன்புள்ள ஐயா,

ஒரு மாதத்திற்குமுன் தங்களிடமிருந்து தருவித்த மணித்தைலம் அற்புத குணத்தைக் கொடுத்துவருகிறது. இன்னும் 5 புட்டி மணித்தைலமும், ஒரு டப்பி ஆ. நி. மாத்திரையும் வி. பி. யில் அனுப்பவும்.

ஜி. வாசுதேவராவ், வக்கீல்,
(பெசவாடா,) மர்காப்பூர்.

இந்தப் பரிமளமிகுந்த வாசனைத்தைலம் புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இந்தத்தைலம் மனோற்சாகத்தைக் கொடுக்கிறது. ஸ்நானத்திற்குச் சுகந்தருவது.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரியப் பல விஷயங்கள், இந்திய விவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜன ஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம்தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்து சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது, சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

இந்தியா, பர்மா, சிலோனுக்கு ரூ. 3—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும், தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்யசரித்திரம். பலநூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அநுசரித்தும் வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாச்சாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.

"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவரும் தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,
ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

பல கண்காட்சிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி, சுப்பராய் ஆயூர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்க காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

30. மகரத்துவஜம்:—இம்மருந்திற்கு ஒப்பான ஔஷதம் ஆயுர்வேதத்தை தவிர வேறெந்த வகை மருந்து சாஸ்திரத்திலேயும் கிடையாது. இம்மருந்தினால் தீராத வியாதியாவது, குணமடையாத வியாதியாவது கிடையாது. அநேக வியாதிகளுக்கு, இதுகைகண்ட ஔஷதம் எக்கிராணத்திலுண்டாகும் தாதுநஷ்டம் பலஹீனம் மதுமூத்திரம், அதிமூத்திரம், மூத்திர அடைப்பு, பிரமேகம் முதலிய இன்னும் அனேக மூத்திர நோய்களும் எல்லாவித சுரங்களையும், ஜலுப்பு, இருமல், க்ஷயம், காசம், அஜீர்ணம், நீர் கோர்வை, பாண்டு சோகை, காமாலை, மயக்கம், சித்தபிரமை, காலரு, பிளேக் ஆண் தறி துவளல், ஸ்திரீகளுக்கு கர்ப்பமா யிருக்கும்பொழுது பிரசவித்தபின்பும், காணும் சகலநோய்களையும் நரம்புகளின் புலஹீனம் முதலிய இன்னும் அனேக வியாதிகளையும் குணமாக்கும். மூளையைப் பலப்படுத்தும். இம்மருந்து தங்கம் முதலியவைகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. விலை தோலா ஒன்றுக்கு ரூபாய் 24 எழுவேளை ஔஷதம் ரூபா ஒன்று வி, பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

31. வசந்த குசுமாகரம்:—சர்க்கரையோடு கூடியதும் அதாவது மதுமேகம், சர்க்கரையில்லாததுமாகிய நீரிழிவு, பிரமேகம், மூத்திரகிருச்சிரகம், தாது நஷ்டம் பலஹீனம், உடல்வெளுப்பு இந்திரியநஷ்டம், அதிதாகம், இருமல், நாக்குவரண்டுபோகுதல், களைப்பு, மயக்கம் அசதி, கைகால் எரிச்சல் அடியோடு குணமாகும். மிகவும் விலையுயர்ந்த ஔஷதம் இது செய்வதில் முத்து, தங்கம், கஸ்தூரி, முதலிய இன்னும் விலைபெற்ற சாமான்கள் சேருகின்றன. எழுவேளை ஔஷதம் விலை ரூபா 5 வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

32. இரத்த சுத்தி:—தேகத்தில் இரத்தம் கெட்டுப்போவதால் உண்டாகும் வாய்ப்புண் கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேகதடிப்பு, அரிப்பு, படை குஷ்டம், முதலிய சருமவியாதிகள்; பலஹீனம், அசதி வாதப்பிடிப்பு, தலைவலி அக்கினிமாந்தம், அரோசிகம் வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல் நிறம்மாறுதல், தோலில் சொரணையற்றுப்போகுதல், புத்திமந்தம், முதலிய பற்பலவியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி சுத்தப்படுத்தி தேகவலிவு, தேஜஸ், நல்லபசி தாதுபுஷ்டிவுண்டாக்கும். 20 நாளைக்கு போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபா 2 வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பரங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

சித்தாந்தப்படமும் சித்தாந்தப்பட விளக்கமும்

இவற்றில் தத்துவங்களின் தோற்றம், அவற்றின் வர்ணரூபாதிகள், அவற்றின் தொழில்கள், மந்திரம், பதம், வன்னம், புவனம், கலை முதலியவைகள், அண்டபகிரண்டங்களின் அமைப்பு, பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் முதலிய லோகங்களின் அமைப்பு, சிவலிங்கத்திலும் மனித சரீரத்திலும் ஷடத்துவாக்கள் வியாபித்திருக்கு முறை, சிவபேதம், சத்திபேதம், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்களின் பகுப்பு, பாசபேதம் முதலியவைகள் நன்றாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. சித்தாந்தப் படம் பலவர்ணமுள்ள ஓர் அழகிய படம். புத்தகத்தில் பல படங்களும் வர்ணப் படங்களுமிருக்கின்றன. இவை சித்தாந்தசாஸ்திரம் படிப்பவர்களுக்கு இன்றியமையாதவை. இரண்டுஞ் சேர்ந்து விலை ரூபா 4—0—0. தபால் சார்ஜ் வேறு.

ஷர்பத்துகள்.—நன்னாரிவேர், நார்த்தம்பழம், எலுமிச்சம்பழம் இவற்றின் ஷர்பத்துகள். கைபடாமல் செய்யப்பட்டவை நன்னாரி ஒன்றுக்கு ஐந்துபங்கும் மற்றவை பத்துப்பங்கும் ஜலம் விட்டுச் சாப்பிடத்தக்கன. நன்னாரியில் ஒன்றுக்குப் பத்துபங்கு பால்விட்டுச் சாப்பிடலாம்.

விலை சிறியபுட்டி ரூபா 1—0—0. பெரிய புட்டி ரூபா 1—14—0

ரணசஞ்சீவி.—ரணங்களுக்கு இது மிகவும் மேலானது. மாடு, குதிரை, நாய் முதலிய சகல மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் உண்டான ரணங்களை மிகவிரைவில் சுகப்படுத்தும். மனிதர்களின் குஷ்டரண முதலிய எவ்வகை ரணங்களுக்கும், கட்டிகள், புரைகள், காயங்கள் முதலியவைகளுக்கும் ஸஞ்சீவி. ஆயிரக்கணக்காய்ச் செலவாகிறது. விலை புட்டி 1-க்கு அணா 8.

பரமானந்த பற்பொடி —ஆயிரக்கணக்கான டின்கள் செலவாயிருக்கின்றன. இதன் விலை டப்பி 1-க்கு அணா-3

எங்களிடம் விஷபேதி மருந்து கிடைக்கும் அதின் விலை விராகனிடை 1-க்கு ரூ 15-0-0.

விலாசம்

கணபதி அண்டு கோ.,
4/22 உலகப்பமேஸ்திரி வீதி
சிந்தாத்திரிப்பேட்டை, சென்னை.



பட விளம்பரம்.

இதில் காட்டிய படம்போல் 12×10 இஞ்சி அளவில் புகைப் படத்திற்குச் சமானமாகிய விஸ்வேஸ்வரர் [பஞ்சமூர்த்தி] படம் வெகு அழகாய் செய்யப்பட்டிருக்கிறது. விலை 0—4—0

ஷை அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவநாகர அக்ஷரம் அடைத்து சுத்தமாய் செய்திருக்கிறது. விலை 0—4—0

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது ஒவ்வொருவரும் அவஸ்யம் வாங்கலாம். வி. பி சார்ஜ் பிரத்தியேகம்.

விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

என்னும் ஓர் இனிய புத்தகம் அச்சிட்டிருக்கிறது. அதில் 12-பக்தர்களுடைய சரித்திரம் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் செய்யுள்களும், வசனமும். தனித்தனி எழுதப்பட்டிருக்கிறது. புராணப் பிரசங்கத்திற்கு தகுதியானவையாயிருக்கும். விலை 1—0—0

விஸ்வேஸ்வரபகவான் கீர்த்தனை.

இந்த கீர்த்தனை பஜனைசெய்பவர்களுக்கும், பாராயணஞ் செய்பவர்களுக்கும் தகுதியானவை. விலை 0—2—0

வி. பி சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:— "தொழில் ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

யோகம்	சாரங்கள்	நா-வி	இங்	தமிழ்	வார	
சி	செ	5—30	16	1	திங்	த்ர 58-6, மிரு 55-5, தி 5-45
ம	பு	5 16	17	2	செ	சவி 60-0, திரு 70 0, தி 17-49
சி	பு	5 9	18	3	புத	சவி 1-49, திரு 0-21, ரா 1-36, ஆடி அமாவாசை
அ	கு	4 48	19	4	வியா	● 6-28, புன 6-30, தி 28-43
ம	பு—சு	4 48	20	5	வெள்	ப்ர 11-52, பூச 13-22, ரா 17-34, சிராவணசுத்தம்
ம	செ-பு	4 37	21	6	சனி	த்வி 17-46, ஆயி 20-43, ரா 22-51
ம	கு-பு	4 26	22	7	ஞா	த்ரி 23-58, மக 28-21, ரா 19-14
அ	சு	4 16	23	8	திங்	சது 30-5, பூர 35 52, ரா 24-26, சிங்காயன 26-22, சுக்கதுர் ஆடிப்பூரம்
(க) ம	பு	4 5	24	9	செ	பஞ் 32-48, உத் 42 57, சே 0-4, நாகபஞ்சமி
சி	கு	3 54	25	10	புத	ஷஷ் 40-41, ஹ 49-12, தி 6-15
சி	கு	3 44	26	11	வியா	ஸப் 44-19, சித் 54-12, தி 11-2, சீதளாவிரதம்
சி		3 33	27	12	வெள்	அஷ் 46-23, சுவா 57-38, தி 9-9, வரலக்ஷ்மி விரதம்
ம	பு	3 22	28	13	சனி	நவ 46-36, விசா 59-14, தி 12-11
சி	கு-சு	3 12	29	14	ஞா	தச 44-53, அனு 58-55, தி 9-19
அ		3 1	30	15	திங்	ஏகா 41-16, கே 56-43, தி 12-34, ஏகாதசி
அ	செ-பு-சு	2 50	31	16	செ	த்வா 35-50, மூல 52-27, தி 15-35, ரா 17-38
சி	சனி	2 40	1	17	புத	த்ர 28-55, பூரா 47 26, தி 14-47
ம	கு-பு-வி	2 29	2	18	வியா	சது 20-46, உரா 40-56, ரா 13-24, பூர்ணிமை யஜுருபாகர்மம்
(க) சி	சு	2 18	3	19	வெள்	○ 11 47, திரு 33-51, ரா 11-12, காயத்திரிஜப ருக்-உபா.
சி	பு	2 8	4	20	சனி	ப்ர 2-22, த்வி 52-58, அவி 26-29, ரா 10-55, சிராவணபகுளம்
	சூ—செ	1 17	5	21	ஞா	த்ரி 43-58, சத 19-19, ரா 2-6
ம	சு	1 46	6	22	திங்	சது 35-50, பூட் 12-47, ரா 3-5, மகா சங்கட ஹர சதுர்த்தி
சி	பு	1 36	7	23	செ	பஞ் 28-53, உட் 7-19, ரா 3.3
ம		1 25	8	24	புத	ஷஷ் 23-28, ரே 3-15, ரா 19-52
அ	கு-சு	1 15	9	25	வியா	ஸப் 19-47, அசு 0-52, தி 24-25, கோகுலாஷ்டமி
சி	பு	1 4	10	26	வெள்	அஷ் 11-57. பர 0-16, தி 30-40
அ	செ-சு	0 53	11	27	சனி	நவ 17-57, கிரு 1-31, ரா 12-8
அ	கு	0 43	12	28	ஞா	தச 19-42, ரோ 4-33, தி 19-28
* அ	பு	0 32	13	29	திங்	ஏகா 24-56, மிரு 8-59, ரா 0.38, ஏகாதசி
* ம	சு	0 21	14	30	செ	த்வா 27-18, திரு 14-40, ரா 16-42
* சி		0 10	15	31	புத	த்ர 32-35, புன 21-15, ரா 12-28, சிம்மரவி 55-1

1917௵ ஜூலைமீ — ஆகஸ்டுமீ

[illegible]

சே செ	வி		
கு-பு சு-சு	சு-மி-செ அ-சிம்-சு 11-சிம்-பு		
			ரா

உ

சுபமஸ்து.

“விஸ்வகர்ம குலோபகாரி” என வழங்கிவந்த

தொழில்

மலர்—4. { பிங்கள௵ ஆவணிமீ 1917௵ ஆகஸ்டுமீ } இதழ்—7.

OF THE REGISTRAR 17 SEP 1917 MADRAS

இந்தியர்கள் கடைத்தேறுவதெப்படி?

நம்மிந்தியா தேசம் பூர்வத்திலிருந்த உன்னத ஸ்திதியை அடையவேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கடமைகளைக் கொஞ்சங்கூட ஏற்றத் தாழ்வில்லாமல் செய்துவர வேண்டும். பூர்வத்தில் ஆரியர்கள் யாவரும் ஒரே தன்மையாயிருந்ததாகவும், கொஞ்ச காலத்திற்குப் பின்னர் வேதம் ஓதுதல், கடவுள் பூசை செய்தல், வேதம் ஓதுவித்தல், கல்வி கற்பித்தல், ஆலயத்தீர்மானம், விக்கிரகங்கள், விமானங்கள் செய்தல், உலகக்ஷேமத்திற்குரிய சுருவிகரண ஆபரணங்களைச் செய்தல், கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் செய்தல், யாகஞ் செய்தல், கல்யாணம், ஸ்ரீமந்தம், புண்ணியாஹவாசனமுதலிய சுபகாரியங்கள் செய்வித்தல். கருமாதிமுதலிய அசுபகாரியங்கள் செய்வித்தல் முதலியவைகளை வேதோக்தமாய் நடத்திவதற்காக தம்முள் புத்திசாலியாகிய சிலரை பிராமணராகவும், அரசுசெய்தல், வழக்கு வில்லங்கங்களை விசாரித்து நியாயத் தீர்ப்புசெய்தல், ஊர்காத்தல், பகையாளிகளோடு சண்டைசெய்தல் முதலியவைகளை மனுநீதி தவறாமல் நடத்துவதற்காக தம்முள் புஜபலபராக்கிரமமுடைய சிலரைக்ஷத்திரியராகவும், வியாபாரஞ்செய்தல், பயிரிடுதல், பசுக்களைப் பரிபாலஞ் செய்தல் முதலியவைகளை சாஸ்திர விதிப்பிரகாரம் செய்வதற்காக தம்முள் சில்லரை வைசியராகவும், மேற்கூறிய 3 குலத்தவருக்கும் ஊழியஞ் செய்வதற்காக தம்முள் குறைந்தபலமும், குறைந்த ஆசாரமும், குறைந்த நடவடிக்கையுமுடைய சிலரை சூத்திரராகவும், ஏற்பாடு செய்தார்களென்று இந்து தேச சரித்திரத்திலும் இன்னும் மற்ற சாஸ்திரங்களிலும் காணலாம். இதே மாதிரியாக நம்முடைய அரசர்கள் காலத்திலும் நடந்துவந்தது.

கர்மத்தால் ஜாதியேயன்றி ஜன்மத்தால் ஜாதியில்லை யென்று நூல்களைக் கற்றுணர்ந்த புண்ணிய புருஷர்கள் அறிவார்கள். 'ப்ரம்மஹக்ஞானேன ப்ராம்மஹணா' என்னும் வாக்கியப்பிரகாரம் பிரஹ்மக்ஞான முடையவனே பிராமணன். பிரஹ்மக்ஞானமில்லாதவன் பிரஷ்டன். சூத்திரனிலும் தாழ்ந்தவன்.

அசுசமாகிய கள், சாராயம், சூதாட்டம், விபசாரம், கூடாவொழுக்கம் முதலிய அநுசாரங்களில் பிரவர்த்திக்கிறவர்கள் பிராமணரென்று சொல்லிக்கொள்வது மயிலைப் போன்று நடிப்பதற்கு வான்கோழி முயல்வதும் போலும், புலியைப் போன்று பாய்வதற்குப் பூனை முயல்வதும் போலுமேயாம். “அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்” என்னும் திருக்குறள் வாக்கியமே தக்க சான்றாகும்

யுத்தத்தில் நின்று பகையாளியை யெதிர்த்து சண்டை செய்ய வலிவில்லாமல் புறமுதுகு காட்டி ஓடுகிறவன், நான் க்ஷத்திரியன் என்று சொல்லிக்கொண்டால் யார் ஒப்புவார்கள். தேசிங்கு இராஜன் சண்டைக்குப் போகும்போது அவருடைய பெண்சாதி, தாங்கள் சண்டையில் முகம் முதலிய பாகங்களில் காயம் பட்டால் மறுபடி என்முகத்தைவந்துபார்க்கலாம். முதுகில் காயம்பட்டால் ஊருக்குள் வரவே கூடாதென்று சொல்லி யனுப்பிய கதையை வாசித்தவர்களும், கேட்டவர்களும் அறிவார்கள். அந்தந்தஜாதிக்குரியத் தொழிலை அந்தந்த ஜாதியாரே செய்துவந்தால் தேசம் க்ஷேமகரமா யிருக்கும். அவ்வாறின்றி பிராமணன் அரிசிவிற்றல், சாராயம், கள், முதலிய லாகிரிவஸ்துக்கள் விற்றல், வாங்கல், இன்னொருவருக்கு வாங்கிக் கொடுத்தல், கூத்தாடுதல், புள்ளாங்குழல் ஊதுதல், மத்தளமடித்தல் முதலிய காரியங்கள் செய்வது கூடாது. இதே மாதிரியாக ஒரு ஜாதியார் செய்யும் தொழிலை இன்னொரு ஜாதியார் மாறி செய்துவருகிறபடியால் தேச க்ஷேமம் கெட்டுப்போய் விட்டது. பலதொழில்களையும் பலர்முறை மாறி செய்யாமல் வேஷ்டி, சேலைமுதலியவைகள்நெய்பவர்கள்நெசவுத்தொழிலும், பயிரிடுபவர்கள் பயிர்த்தொழிலும், வர்த்தகஞ் செய்பவர்கள் வர்த்தகத்திலும், இராஜாங்கத்தில் உத்தியோகஞ் செய்பவர்கள் அதே தொழிலும், ஊழியஞ் செய்பவர்கள் ஊழியத்திலும் பிரவர்த்தித்துவந்தால் தேசம் எப்பொழுதும் க்ஷேமகரமாகவே யிருக்கும். இம்மாதிரியாக நம்முடைய சுதேச ராஜாக்கள் காலத்தில் அந்தந்த ஜாதியார்கள் அந்தந்த ஜாதிக்குரியத் தொழிலையே செய்துவர வேண்டுமென்கிற கட்டுப்பாட்டின் பிரகாரம் நடந்துவந்தமையால் நம்முடைய இந்த தேசம் பொன் விளையும் பூமியென்கிற பேரைப் பெற்று க்ஷேமகரமா யிருந்துவந்ததென்பது நம்மனோர் யாவருக்குந் தெரிந்த விஷயம். நாம் ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்டபின்னர் அவ்விதக் கட்டுப்பாடில்லாமையால் உயர் குலத்தோரென்று சொல்லிக்கொள்ளுகிற பிராமணர்கள் மெடிகல் காலேஜில் சேர்ந்து வாசித்து பரீட்சைகளில் தேறியபின்னர் டாக்டர் உத்தியோகங்களைப்பெற்று பிணத்தை அறுத்துப் பரிசோதிக்கும் தொழிலும், சானிடெரி இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் அமர்ந்து ஆட்டுமாமிசம், மாட்டிறைச்சி முதலியவைகள் விற்கும் கடைகளில் போய் ஷெ மாமிசங்களைக் கையால் தொட்டுப் பார்த்து இவைகள் நேற்று அறுத்தவைகள். இவைகளை உபயோகிக்கிறதால் நோயுண்டாகுமென்று கையாலெடுத்தெறிகிறார்கள். இப்படிப்பட்ட உத்தியோகங்களை சூத்திரர்கள்கூட வெறுக்கிறார்கள்.

அந்தந்த ஜாதிக்குரிய ஆசார அனுஷ்டானங்களை அனுசரித்து நடவாமல் தாழ்ந்த ஜாதிக்குறிய வேலைகளைச் செய்துவந்தால் தேசம் எப்படி க்ஷேமத்தை யடையும். உயர்குலமக்கள் தாழ்ந்த குலத்தவர்களுக்குரிய வேலைகளைச் செய்யப் பிரவேசித்தால் (நாவிதன் தொழில்) க்ஷவரம் செய்யும் தொழில்களை அவரவர்களே செய்துகொள்வதால் தாழ்ந்த வகுப்பார்கள் என்ன வேலைகள் செய்வது? அவர்கள் உயர்ந்த வகுப்பார்களுக்குரிய தொழில்களைத்தான் செய்ய வேண்டியதாக நேரிடும். அதற்கு மற்றவர்கள் பொறுமைகொள்ளாமய விருப்பார்களா? வேதம் ஓதுதல், ஓதுவித்தல், பௌரோகிதஞ்

செய்தல் முதலிய தேவஸ்தான பூஜை முதலியவைகளை சூத்திரர்கள் செய்தால் உலகத்தார் ஒப்புவார்களா? இதென்ன விபரீதம்! உயர்ந்த குலத்தவர் தாழ்ந்த வேலைகளைச்செய்தால் மற்ற குலத்தவர்கள் அவர்களை நேரில் கேட்க அஞ்சுகிறார்கள். ஆனால் அவர்களைக் காணாவிடங்களில் குறை கூறுகிறார்கள். தர்மவிராதன் மஹா ஞானியாயிருந்தும் தன் குலத்துக்குரிய இறைச்சி விற்கும் தொழிலையே நடத்திவந்ததாக நாம் வாசித்தும் கேட்டுமிருக்கிறோமல்லவா? அந்தந்த ஜாதிக்குறியத் தொழிலை அந்தந்தஜாதியாரே செய்யாமல் முறைமாறிநடப்பதற்கு ஒருவிதசமாதானம் சொல்லுகிறார்கள். அதென்னவென்றால் கிரேதாயுகத்தில் தர்மதேவதை நான்கு பாதத்திலும், திரேதாயுகத்தில் மூன்று பாதத்திலும், துவாபரயுகத்தில் இரண்டு பாதத்திலும், இந்த கலியுகத்தில் ஒரே பாதத்திலும் நடக்குமென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. அதே பிரகாரந்தான் நடந்துவருகிறது, அதற்கு நாம் என்ன செய்யலாம், நம்மால் ஒன்றுஞ் செய்ய முடியாதென்று சொல்லுகிறார்கள். இது சரியல்ல. மற்ற தேசததவர்கள் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும், பெருத்த காரியங்களை யெல்லாம் செய்து முடிக்கிறார்கள். (Where there is a will there is away) "எங்கே காரியசித்தி பெறவேண்டு மென்கிற பிரிய மிருக்கிறதோ அங்கே அதற்குறிய சாதனமிருக்கும்" என்கிற பழமொழிப் பிரகாரம் நம்மிந்தியா தேசத்து ஜனங்கள் ஒற்றுமை, கட்டுப்பாடு, வைராக்கியம், ஊக்கம், விடாமுயற்சி முதலியவைகளுடன் பூர்வ காலத்திலிருந்த பிரகாரம் அந்தந்த ஜாதியிலும் மேதாவிகளா யிருப்பவர்களைக்கொண்டு ஒற்றுமையுடன் அந்தந்த ஜாதியார் அந்தந்த ஜாதிக்குரியத் தொழில்களையே செய்துவர வேண்டுமென்கிற ஏற்பாடுகள் செய்து கட்டுப்பாடாக நடந்துவந்தால் நாம் காரியசித்தி யடையலாம். மனிதர்களாலாகாத காரிய மொன்றுமில்லை.

(Nothing is impossible to man) ஆகையால் உயர்ந்த குலத்தவுர்களென்று பேச்சு மாத்திரமாகச் சொல்லாமல் நடக்கையிலும் உயர்ந்த குலத்தவருக்குரிய ஆச்சார அனுஷ்டானங்களை கைகொண்ட மற்ற தேசத்தவர்கள் நம்மைக்கண்டு அஞ்சும்படியாக நடந்துவரவேண்டும். கைத்தொழில் செய்பவர்கள் தங்கள் தொழில்களைக் காலதேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு சீர்திருத்திக்கொண்டு கொஞ்சம் ஆங்கிலேயப் பாஷையைப் பேசவும், எழுதவும் கற்றுக்கொண்டு நாணயத்துடனும், ஒற்றுமையுடனும் செய்துவந்தால் இந்தியர்களாகிய நாம் கடைத்தேறலாம். இதனால் நம்மிந்தியா தேசமும் பூர்வஸ்திதியை யடையுமென்பதில் சந்தேகமே கிடையாது.

இப்பொழுது நாம் சொல்வது ஒருவர் செய்யும் தொழிலை மற்றொருவர் செய்யக்கூடாதென்பது நமது கருத்தல்ல இக்கலியுகத்தில் யாராயிருந்தாலும் அவரவர்கள் புத்திக்குத்தக்க தொழிலைச் செய்தால் மற்ற ஜாதியார்கள் தடுக்கப்படாது என்பது எமது கருத்து. தோட்டி குமாரன் மேலான வேலைகள் செய்தாலும் ஒப்புக்கொள்ளவேண்டும். பிராமணன் குமாரன் தாழ்மையான வேலைகள் செய்தாலும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் பொறாமை கூடாதென்பது எமது கொள்கை· யாவரும் ஒரு சகோதரர்களென்பதை கவனத்தில் வைத்து நடப்பதற்காக இவ்விதம் எழுத நேர்ந்தது. புத்திபுள்ளவன் பெரியவன்.

***

சிலோன் ஹைகோர்ட்டு வக்கீல் பிரம்மஸ்ரீ

யாழ்ப்பாணம் - N. சிவக்கொழுந்து ஆச்சாரியார்

அவர்களால் எழுதப்பட்டவைகள்.

வெண்பா.

விச்சுவப்பி ராமணர்க்கு மெய்யா முபகாரம்
இச்சகத்திற் செய்யவந்த வந்திழா அய்—முச்சுடரோன்
பேரருளா மைந்தொழிற்கும் பேதமிலா வோர்தொழிலாம்
பேரருளப் பெற்றாய் பெறும்.

என்னை விஸ்வகர்ம குலோபகாரி ஸ்ரீ பரசிவ விராட் விஸ்வப் பிரம்மத்தின் கிரியாசக்தி, இக்கிரியாசக்தி பஞ்சகிருத்தியத்தையும் செய்கின்றாள். பஞ்சகிருத்தியத்தையும், கிரியா அல்லது தொழில் என்ற ஒரு மொழியினாலேயே தெரியப்படுத்தலாம். தொழில் என்பது தொழில் ஆகு பெயராகித் தொழிலைச் செய்பவள் அல்லது கிரியாசக்தி எனப் பொருள்பட்டு விஸ்வகர்ம குலோபகாரி என்றே முடிவது நோக்கற்பாலதாம். ஆதலால் இப்பத்திரிகைக்கு தொழில் என்ற பெயர் வந்தது தக்கதேயாம்.

சிறு வர்த்தக விஷயங்களும் முறைகளும்.

1. குச்சிகளெல்லாம் கிழித்தாய் விட்ட தீக்குச்சிப் பெட்டிகளை என்னசெய்கிறாய்? நீ அதை வாஸ்தவமாகவே எறிந்து விடுகிறாய். அவைகளை ஊறவைத்து கூழாக்கி வேறு விதத்திற்கு ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? அல்லது வேறு மாதிரியாய் ஏன் உபயோகிக்கக்கூடாது. வருஷத்தில் எவ்வளவு தீக்குச்சி பெட்டிகள் வீணாவாய் எறிந்துவிடப் படுகின்றன என்பதை ஞாபகப்படுத்திப்பார்.

2. புளியம் பழத்திலிருந்து டார்டாரிக் ஆஸிட் உண்டாக்குவாயா? இக்காலத்தில் புளியம்பழம் அதிக உற்பத்தியாகிறது. புளியம்பழத்திலிருந்து டார்டாரிக். ஆஸிட் செய்வது பழைய முறை பிரகாரம் அதிக விலையானது. புதிய மாதிரியை கண்டுபிடிக்க கூடுமா? ஏன் கொட்டையைக் கூட எறிந்து விடுகிறாய்? அரக்கின் நிறத்தையுடைய வாசனையில்லாத இனிப்பான எண்ணையை அதிலிருந்து பிழிந்து எடுக்கலாம். இந்த எண்ணெய் விளக்கு எரிய உபயோகமாகும். வார்னிஷ் போடவும் வர்ணம் வைக்கவும் உபயோகமாகும். கொதிக்கவைத்து வடித்தெடுக்கும் லின்ஸீட் எண்ணெயைக் காட்டிலும் உலர்த்துகிற குணம் அதிகமாயிருக்கிறது.

வெள்ளி ரிப்பன்கள்.

3. ஸில்வர் நைட்ரேட் சேர்மான நீரை உண்டாக்கு. அதில் கொஞ்சம் கம் அராபிக் (Gum Arabic) சேர். இதினால் த்ருவ பதார்த்தம் சிறிது கெட்டியாகிறது. பிறகு ஒட்டகமயிர் எழுதுகோலினாலாவது அல்லது ஒரு புதிய பேனாவினாலாவது மேற் சேர்மான நீரில் தோய்த்து எந்தவித அலங்கார பூவேலைகளையாவது பட்டு ரிப்பன் (Ribbon) மேல் எழுது. எழுதினது உலர்ந்ததும் கொஞ்சம் கந்தகத் திராவகமும், தண்ணீரும், துத்தநாகத்தோடு கலந்திருக்கிற ஒரு பாத்திரத்தின்மேல் பிடித்துக்கொண்டிரு. கைக்குட்டைகளைக்கூட இதேமாதிரி செய்யலாம்.

கொள்ளின் சத்து.

4. பொடியாக்கிய ஒரு பைண்டு என்றால் சுமார் 1½-ஆழாக்கு கொள்ளை ஏறக்குறைய நான்கு மணிநேரம் வரையில் 160 முதல் 170 டிக்ரீ (பாரின்ஹீட்) உஷ்ணமுள்ள மூன்று பைபின்ட் நீரில் கலக்கச் செய். பிறகு தடை இல்லாமல் நீரைக் கொட்டிவிடு. தேன்போன்றிருக்கும் த்ருவ பதார்த்தத்தைச் சுண்டவை.

உத்தமமான வெளுக்கும் நீர்.

5. 190 முதல் 212 டிக்ரீ (பாரின்ஹீட்) உஷ்ணமுள்ள 5½ பைண்ட் நீரில் பொடியாக்கிய முத்துச்சிப்பி 3½ அவுன்ஸ் போடு. அதன்பின் நீலிமருந்து 0–75 கிரெயின் போடு. அதன்பின் 150 கிரெயின் சோடா க்ரிஸ்டல் சேர். அதன்பின் பொடாஷ் கார்ப் (Carb) 150 கிரெயின் சேர். பின்பு அரை மணிநேரம் கொதிக்க வை. இப்போது இந்நீர் வெளுக்கும் உபயோகத்திற்குத் தயாராக யிருக்கும்.

ஈக்களை ஓட்ட.

6. (Eucalyptol) யூகாலிப்டல் 10 பாகம். பர்கோமாட் (Bergamot) எண்ணெய் 3 பாகம், (Acetic ether) ஆஸ்டிக் ஈதர் 10 பாகம், (Eau-de-colougne) யூ டி கொலூன் 50 பாகம், (Alco hol) ஆல்கோஹால் 100 பாகம், எல்லாவற்றையும் ஒன்றாய் சேர். இந்த சத்தை பத்து பாகம் நீரில் ஒரு பாகம் சேர். இந்த நீரை அடிக்கடி அறையைச்சுற்றித் தெளி.

வண்டிக்குக் கருப்பு வார்னிஷ்.

7. (As phaltum) ஆஸ்பால்டம் 7½ அவுன்ஸ் (Amber) ஆம்பர் 40 அவுன்ஸ் (Resin) ரீசின் அல்லது பிசின் 7½ அவுன்ஸ், வற்றுகிற (Linseed) லின்ஸீட் எண்ணெய் 1¼ பயின்ட். எல்லாவற்றையும் ஒரு இருப்புப் பானையில் போட்டு உருக்கு. குளிர்ந்ததும் குளிராததுமாயிருக்கும்போது 1¼ பயின்ட் சூடான (Turpentine) டர்பன்டைன் தைலத்தைச் சேர். மூடிவிடு.

கிச்சிலிச் சாராயம்.

8. இரண்டு கிச்சிலிப்பழத்தை உரி. ரசத்தைப் பிழி. ஒரு புட்டியில் ரசம் இருக்கட்டும் தானாய் சத்தெல்லாம் அடியில் இறங்கட்டும். தோலை நசுக்கி ஒரு புட்டியில் போடு. அதன்மேல் பதினைந்து (Kelogram) கிலோக்ராம் நல்ல சாராயத்தை வார். கிச்சிலி ரசத்தையும் வார். வடிகட்டு. சந்தில்லாமல் நன்றாய் மூடப்பட்ட புட்டியில் வைக்கவேண்டும்.

கையினால் செய்யப்பட்ட புஷ்பமும் பழமும்

ரொட்டித் துண்டுகளையும் (Magnesia) மாக்னீசியத்தையும். சன்னமாய் பொடியாக்கிய (Starch) ஸ்டார்ச்சையும் ஒன்றாய் சேர். புளிப்பினால் நுரை கிளம்பியதும் எந்த ரூபத்தையும் அதைக்கொண்டு செய்து வர்ணமிடலாம். வர்ணப் பலகைகளை வர்ணத்திற்காக வைத்துக்கொள். ஆல்கோஹாலில் (Alco hol) (Gamboge) கம்போஜ் கரைந்த சேர்மான த்ருவபதார்த்தத்தை வார்னிஷாக வைத்துக்கொள்.

Substitute for Pharaohs' Serpents

பாரோபாம்புக்கு வேறோர் முறை.

பைக்ரோமேட் ஆப்பொடாஷ் Bichro mate of Potash) 2 பாகம், நைட

(nitrc) 1 பாகம், சர்க்கரை 3 பாகம், இவைகளை யெல்லாம் தனித்தனியாகப் பொடியாக்கு. எடை போடு. எல்லாவற்றையும் நன்றாய் கலந்துவிடு. காகிதத்தை மிட்டாய் பொட்டளம்போல் சுருட்டு. எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு பெரிதாகச் சுருட்டு. பொடியைச் சிறிதுநீரில் ஈரமாக்கி பொட்டளங்களில் போடு. மேல் பக்கத்தில் மூடிவிடு. நன்றாய்க் காய்ந்ததும் உபயோகிக்கத் தயாராயிருக்கும். ஈரம் படக்கூடாது. வெளிச்சம் படக்கூடாது.

புதிதாக அடையாளம் போடும் மை.
New marking Ink.

(Anacar dim) அனகார்டியம் வித்திலிருந்து உண்டாகும் ரசத்திலிருந்து ஒரு நேர்த்தியான அடையாளம் வைக்கும் இங்கி உண்டாக்கலாம். இந்த ரசத்தில் எண்ணெய்ப் பசையான வஸ்து இருக்கிறது. அது காற்றில் திறந்துவைத்தால் கருப்பாய்விடுகிறது எந்தெந்த வஸ்து நிறத்தைப் போக்கடித்துச் சுத்தப்படுத்துகிறதோ அவற்றின் வலிமையை எலலாம் தாங்கிநிற்கும். ஆஸிட்களுக்கு நிறத்தை மாற்றுகிறது, அல்லது போக்குகிறது. ஆல்காலிகள், க்ளோரைன், லிமோனேட், ஆப்பொடாஸியம் இவற்றின் நிறத்தையும் போக்கும். அல்லது மாற்றும். லினன் வஸ்திரத்தில் இந்த இங்கியினால் மார்க்கு செய்து கொஞ்சம் அமோனியாவால் ஈரமாக்கினால் அதிக கருப்பு உண்டாகிறது. அது எப்போதும் மாறாதிருக்கிறது.

***

உபயோகமுள்ள சிறு விஷயங்கள்.

1. சோப்பு ஸ்டார்ச் சோடாபால் கலந்தால் லினன் துணியில் மழைத் தண்ணீர் கறையைப் போக்கும்.

2. பாகு ஆகாவிட்டால் எலிமிச்சம் பழம் ரசத்தையாவது, அல்லது கொஞ்சம் வெள்ளை (Venigar) வினிகாராவது சேர்ந்தால் உடனே பாகுபடும்.

3. பாத்திரங்கள் வைக்கும் அலமாரியிலும், பண்டங்கள் வைக்கும் இடத்திலும் வண்டுகளை ஓட்ட பெனிசன் (Benezene) கொஞ்சம் அவைகளின்மேல் தெளித்தால் வண்டுகளும், அவைகளின் முட்டையும் நாசத்தையடையும்.

4. பழைய உருளைக்கிழங்கிற்கு ருசியை அதிகப்படுத்தவும், அவைகளைக் கருப்பாகாமல் காக்கவும், அவை வேகும் நீருக்கு கொஞ்சம் பாலைச் சேர்க்கவேண்டியது.

5. செம்புக்குப் பளபளப்பு உண்டாக்க சன்னமாய்ப் பொடிசெய்த செங்கற்பொடியை எடுத்துக்கொள். அதில் வினிகர் போட்டு ஈரமாக்கு. அது பசையைப் போல் கலந்தபோது கொஞ்சம் எடுத்துச் செம்பில் தேய். கொஞ்சநேரம் அப்படியேயிருக்கட்டும். பிறகு தேய்த்து மெதுவான வஸ்திரத்தால் துடைத்துவிடு.

6. வீட்டில்(Lemonade)லெமொனேட் செய்ய 2½பவுன் சர்க்கரை எடுத்துக்கொள். எலுமிச்சம்பழம் 2½ குவார்ட்ஸ் கொதித்த நீர் 2 ஔன்ஸ் ஸிட்ரிக் ஆஸிட் எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் போடு. அவற்றின்மேல் கொதித்தநீரை வார். சர்க்கரை கரைகிறவரையில் கலக்கிக்கொண்டேயிருக்கவேண்டும்.

மரச்சாமான்களை சுத்தஞ்செய்ய.

7. 3 பாகம் லின்ஸீட் எண்ணெய் 1 பாகம் டர்பன்டைன் எண்ணெய் சேர்மானவஸ்து அதிக உத்தமமானது. ஒரு வேளையில் கொஞ்சம் சேர்மான வஸ்துவைத்தான் உபயோகிக்கவேண்டும். நன்றாய்த் தேய்க்கவேண்டும். ஒரு உலர்ந்த வஸ்திரத்தால் துடைத்துச் சுத்தமாக்க வேண்டும். எண்ணெயெல்லாம் மரத்தில் ஊறிப்போகிற வரையிலுமாவது அல்லது எண்ணெயெல்லாம் துடைத்தெடுத்துவிடுகிற வரையிலாவது தேய்க்கப்பட வேண்டும். உல்லன் கந்தையை உபயோகப்படுத்து.

எபோனி புருசுகள்.

8. எபொனி புருசுகளைப் பிற்பக்கம் சுத்தம்செய்ய அவைகளைக் கழுவவேண்டும். கொஞ்சம் கொதிக்க வைத்தலின்ஸீட் எண்ணெயால் தேய்க்கப்பட வேண்டும். எண்ணெயால் தேய்த்தது தெரியாதபடி தூசு நீக்கும் துணியால் துடைத்து எண்ணெயைப் போக்கவேண்டும். வெள்ளி எழுத்துகள் கொஞ்சம் ஈரமான வெள்ளை வர்ணத்தால் சுத்தப்படுத்தப்பட வேண்டும். அது மரத்தில் படக்கூடாது.

செப்புநீர்ப்பானை.

9. செப்பு வெந்நீர்ப்பானை அல்லது எந்தப் பாத்திரமாவது நெருப்பிற்கு அருகாமை விருப்பதால் மங்கலாகவாவது கருப்பாகவாவது போகுமானால் ஒரு எலிமிச்சம்பழத்தை இரண்டாகத் துண்டித்து உப்பில் தோய்த்து மேல்பரப்பு பாகமெல்லாம் தேய்க்கப்பட வேண்டும். ஆனால் நீர் உடனே கழுவவேண்டும். இல்லாவிட்டால் ஆஸிட் உலோகத்தை மென்றுவிடும்.

இரத்தினக் கம்பளங்களைச் சுத்திசெய்தல்.

10. கம்பளங்களை வெளியில் கொண்டுபோய் அடித்துத் தூம்புபோக்கி மறுபடியும் அதன் இடத்தில் போட்டபிறகு ஒரு பைண்டுநீருக்கு ஒருடேபில்ஸ்பூன் அமோனியா சேர்ந்த தண்ணீரில் நனைத்து பிழிந்துவிட்ட சுத்தமான பிளானல் துணியால் மேல்பரப்பு பாகத்தைத் துடைக்கவேண்டும். பிளானல் வஸ்திரம் அழுக்கானதும் கழுவ வேண்டும். இந்த மாதிரியாகக் கம்பளமுழுதும் துடைத்தானபிறகு கதவையும் சன்னலையும் திறந்து வை. நன்றாய்க் காற்றுபடட்டும். கம்பளம் உலருகிற வரையில் அதன்மேல் நடக்கக்கூடாது.

11. கோல்தூளை யெல்லாம் உபயோகப்படுத்த வேண்டுமானால் கடிதப்பைகளில் கோல்தூளை நிரப்பவேண்டும். நெருப்பு அதிகமாய் எரியவேண்டுமானால் நெருப்பின்மேல் ஒரு பையைப்போடு. அதன் மேல் நிலக்கரித் துண்டுகளைபோடு. இந்த விதம் உத்தமமானது. தூவுகிறதைவிட இது நல்ல மாதிரி. உலையின் கீழ்வழியாய்ப் போடுகிறதாயிருந்தால் வழியில் போய் மூடிக்கொள்ளும். அந்த கஷ்டம் நீங்கிவிடுகிறது. கரி போடுகிறவனுக்குக் கை அழுக்காகிறதில்லை. ஏனென்றால் கடுதாசி பையில் கோல்தூளை நிரப்பிச் சௌகர்யமான இடத்தில் வைத்து வைக்கலாம். வேண்டியது எடுத்துக்கொள்ளலாம்.

க்ளிஸ்ரைனுடைய உபயோகங்கள்.

12. சுத்தமான க்ளிஸ்ரைன் காயத்தை சுத்தமாக்கும். அதிக சீக்கிரத்தில் சொஸ்தமாகும்படிச் செய்யும். க்ளிஸ்ரைன் நீரை மெதுவாக்கும். மாத்தை வெளுக்கிறது. பிளானல் துணியால் கொஞ்சம் க்ளிஸ்ரைன் எடுத்து நனைத்துக் கடினமாயிருக்கிற சோடுகளுக்கும் செருப்புகளுக்கும் தேய்த்தால் தோலை மிருதுவாக்குகிறது. துணியை வெளுக்கும்போது 3 டேபில்ஸ்பூன் க்ளிஸ்ரைனைச் சாதாரண தண்ணீர்த் தொட்டியில் போடு. அது மிருதுவை உண்டாக்கும். வஸ்திரத்தை

தண்ணீரில் கொதிக்கவைப்பது அவசியமாகிறபோது செப்புக் கொப்பரையில் 2 டேபில்ஸ்பூன் க்ளிஸரைனைப் போடு. 1 பவுன் பழத்திற்கு ஒரு டேபில்ஸ்பூன் க்ளிஸரைன் போட்டால் அதை கெடாமல் பாதுகாக்கிறது. மேலே உப்புபூக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறது. பழங்களைப் பதப்படுத்திவைக்க 2 டேபில்ஸ்பூன் க்ளிஸரைன் ஒருபிடி உப்பு கொஞ்சம் சர்க்கரை அதிகலத்தைக் கொடுக்கும்.

ஸ்டார்ச் (Starch) உபயோகம்.

ஸ்டார்ச் பழக்கறையை உடனே தடவினால் எடுத்துவிடுகிறது. சுத்தமான ஸ்டார்ச் நீர் சேர்த்து அலங்கார வஸ்துக்கள் மார்புவரையிலும் செய்துள்ள பிரதிமைகள் தண்ணீர்த் தொட்டிகள் பூத்தொட்டிகள் உப்பு முதலானவைக்கும் தொட்டிகள் இவைகளுக்கு பிளாஸ்டர் செய்ய உதவுகிறது. அவைகள் உலர்ந்தபிறகு புருசினால் துடைத்துவிட்டால் புதிதாய் விடுகிறது. குளிர்ந்த ஸ்டார்ச்சை உபயோகப் படுத்தினபிறகு இராத்திரியில் அப்படியே யிருக்கட்டும். காலையில் நீரை கீழே கொட்டிவிடு. ஸ்டார்ச்சை மாத்திரம் நிறுத்திக்கொள். தேவையானபோது கொதிக்கவைத்து உபயோகப் படுத்து. கொஞ்சம் உலர்ந்த ஸ்டார்ச்சை சுத்தமான உஷ்ணநீரில் சேர்த்து ஜன்னல்களை துடைத்தால் அதிகப் பளபளப்பு உண்டாகிறது. நன்றாய் உலர்ந்தபிறகு மெதுவான வஸ்திரத்தால் தேய்க்கவேண்டும். இரும்பில் ஸ்டார்ச்சு ஒட்டிக்கொள்ளாதிருக்க ஒரு குவார்ட்டு ஸ்டார்ச்சுக்கு ஒரு பட்டாணி அளவு பன்றிக்கொழுப்பைச் சேர்க்கவேண்டும் ஸ்டார்ச்சில் வெள்ளாவி வைத்த வஸ்திரங்கள் சுலபமாய் இஸ்திரி போட ஆகும்.

ஒரு நல்ல ஸ்டார்ச் பாலிஷ்.

13. அரைகுறையாய்ச் செய்த லினன் வஸ்திரத்திற்கு நல்ல சரசமான ஸ்டார்ச் பாலிஷ் இந்தியாவிலேயே செய்துகொள்ளலாம். வெள்ளை மெழுகு ஒரு ஔன்ஸ். 2 ஔன்ஸ் (Spermacetic) ஸ்பர்மாஸிடிக் எடுத்துக்கொள். இரண்டையும் கொதிக்கிற நீருக்குமேல் சிறு சூட்டினால் உருக்கவேண்டும். அதற்கென்று வைத்திருக்கும் ஒரு மேசையில் ஆறவை. ஒரு டஜன் லினன்பீஸுக்குச் சாதாரண வழியில் போதுமானதை கொதிக்கவை. ஸ்டார்ச் தயாரானதும் முறையில் உருக்கிவார்த்த மெழுகில் ஒரு பட்டாணி அளவு போடு. இதை உபயோகித்தால் லினன் வஸ்திரம் அதிகமிருதுவாக இஸ்திரி ஆகும். வஸ்திரங்களுக்கு நேர்த்தியான பளப்பளப்பைக் கொடுக்கிறது.

வேண்டுமானால் இதே பலனைக் குழம்பான கம் அரபிக் (Gum arabic) சேர்மான த்ரவ பதார்த்தத்தை உபயோகிப்பதால் அடையலாம். நல்ல கம் அரபிக் க்ரிஸ்டல்மேல் கொதிக்கிற நீரை வார்க்கிறதினால் அந்தப்பலனைச் சுலபமாய் அடையலாம். ஒரு பைண்ட் ஸ்டார்ச்சில் 1 டேபில்ஸ்பூன் கம் அரபிக் சேர்மான த்ரவ பதார்த்தத்தைச் சேர்த்தால் எப்போதும் இருக்கும்படியான நேர்த்தியான பளபளப்பைக் கொடுக்கும். கம் அரபிக்கை வெந்நீரோடு கலந்து தனியாய் உபயோகித்தால் வளையத்தக்க வஸ்துவைக் கடினமாக்கி ஒடியத்தக்கதாக்கும். சாதாரணமாய்க் கொதிக்கவைத்த ஸ்டார்ச் திருப்திகரமான பலனைக் காட்டாதபோதும் அல்லது அதை உபயோகிக்கச் சௌகர்யமில்லாதபோதுந்தான் கம் அரபிக் சேர்மானத்தை உபயோகிக்கிறார்கள்.

14. உருளைக்கிழங்கை ஆவியல்வைத்து வேகவைக்கும்போது பாத்திரத்தின் மேல் மூடியை வைப்பதற்கு முன்னமே ஓர் துணியைக் கிழங்கின்மேல் மூடு. அப்போது சீக்கிரத்தில் வெந்துபோய் விடும். சாதாரணவழியில் வேகவைத்ததைக் காட்டிலும் அதிகப் பதமாக வெந்திருக்கும்.

15. படிக்கட்டு கம்பளத்தை வாங்கும்போது ஒருகஜம் அதிகமாக வாங்கவேண்டும். கோடியில் சுலபமாய் மடிக்கலாம். ஓரங்கள் தேய்ந்து கிழிந்துவிட்டால் புதிதாய்க் கம்பளம் வாங்குவதைவிட படிக்கட்டின்மேல் பரப்பியிருக்கிற கம்பளத்தை சௌகர்யப்படி ஏற்றவாவது இறக்கவாவது செய்துகொள்ளலாம்.

ப்ரஷ்யன் ப்ளு

ஐரன் சல்பேட் 6-பாகம் மஞ்சள் ப்ரஸியேட் ஆப்பொடாஸ் 6 பாகம் இவைகளை தனித்தனியாய் 15 பாகம் நீரில் கரையச் செய்யவேண்டும். இரண்டு சேர்மானநீரையும் ஒன்றாய்க் கலக்கவேண்டும் பிறகு 1 பாகம் சல்பூரிக் ஆஸிட் 20 பாகம் நுரைக்கும் ஹைட்ரோ க்ளோரிக் ஆஸிட் சேர்க்கவேண்டும். சில மணிநேரம் மூடாமல் இருந்தபிறகு வெளுக்கும் தூளின் ஜலத்தை விட்டு விட்டு கொஞ்சம் கொஞ்சமாய் நீலவர்ணம் பூரணமாய் உண்டாகிறவரையில் சேர்க்கவேண்டும். இன்னம் சிலமணிநேரம் அப்படியே யிருக்கவிடவேண்டும் ஆனால் கூடும்போதெல்லாம் கலக்கிக்கொண்டிருக்கவேண்டும். நீராக உள்ளபாகம் ஜாக்ரதையாய் வெளிப்படுத்தப்படுகிறது. பிறகு அதிக ஜலம் கொட்டி பலமாய்க்கலக்கவேண்டும். மறுபடியும் நீரை கொட்டிவிடவேண்டும். அடியிலுள்ள வஸ்து மெதுவாக வற்றவிடப்படுகிறது. அப்போது கெட்டியாகிறது.

சில்வர் நைட்ரேட்

504 பாகம் நைட்ரேட் ஆஸிட் 504 பாகம் ஜலம் இவற்றை ஒன்றாய்ச் சேர்க்கவேண்டும். இந்த சேர்மான நீரில் 648 பாகம் வெள்ளியைக் கரையச் செய்யவேண்டும். வெள்ளியில் செம்பு இருந்தால் சேர்மான ஜலத்தை உலரும்படி வற்றவிடப்படுகிறது. பிறகு 250 டிக்ரீ சென்டிக்ரேட் உஷ்ணம் உண்டாகிறவரையில் சூடேற்றப்படுகிறது: இந்த உஷ்ண நிலையில் செம்பு நைட்ரேட் செம்பு ஆக்ஸைட் ஆகவும் நைட்ரிக் ஆக்ஸைட் ஆகவும் ஆக்ஸிஜன் ஆகவும் பிரிகிறது. சில்வர் உப்பு மாத்திரம் அப்படியே யிருக்கிறது. அடியில் தங்கிய வஸ்துவை தண்ணீர் விட்டுப் பிரித்தால், சில்வர் நைட்ரேட் ஜலத்தில் கரைந்துபோகிறது செம்பு ஆக்ஸைட் தனியாகநின்றுவிடுகிறது. இந்த சேர்மான ஜலம் வற்றச் செய்யப்படுகிறது. அப்போது சில்வர் நைட்ரேட் உப்பு உண்டாகிறது.

சித்திரத்தை நீலக்கச்செய்யும் முறை.

40 பாகம் படிகாரத்தையும் 20 பாகம் ஐஸிங்கிளாஸையும் 2000 பாகம் லேசான நீரில் கொதிக்கவைப்பதினால் கரையும்படிச்செய்யும். இந்த சேர்மானஜலத்தை லினன்வஸ்திரத்தில் வடிகட்டு. 220பாகம் ஆல்கோஹால் சேர். கடிதத்தை அந்த ஜலத்தில் தோய்க்கலாம் அல்லது கடிதத்தின் மேல் ஜலத்தை ஊற்றலாம். பிறகு காயவைக்கலாம்.

வர்ணங்களும் வர்ணம் தோய்த்தலும்.

இப்போது சண்டை நடப்பதினால் ஜர்மனி தேசத்திலிருந்து வர்ணங்கள் வருவதில்லை. அதினால் வர்ணங்களின் விலை அதிகமாய் விட்டது. இப்போது பூர்வீக வர்ணமாதிரியைக் கைப்பற்றலாம் என்கிற எண்ணம் அநேகருக்குஉண்டாய்விட்டது.

பின்வருது இந்தியாவில் உண்டாகும் சரக்கைக்கொண்டே வர்ணம் தோய்க்கும் முறைகளை விவரிக்கும்.

வர்ணமிடுவதில் உபயோகமாகும் வஸ்துக்கள் உலோகங்கள், மரங்கள், பழங்கள், புஷ்பங்கள், இலைகள், வேர்கள், பட்டைகள், பூச்சிகள் மண்.

(Colouring Substances.)

வர்ணம்கொடுக்கும் சரக்குகள்.

1. கொம்பரக்கு:—இந்தியவர்ணம்தோய்க்கிறவர்களுக்கு இது எதிலிருந்து உண்டாகிறதென்று தெரியாது. சிலர் அதை தப்பாக பிசின் என்கிறார்கள். சிலர் பூச்சின் மலம் என்கிறார்கள். பலானதென்று நிர்ணயிக்க சிரத்தை யாரும் எடுத்துக் கொள்ளவில்லை. அரக்கு, கொம்பரக்கு அவலரக்கு என்று இருவகைப்படும். கொம்பரக்கிலிருந்து சாயம் எடுத்துவிட்ட பிறகு உண்டாவது அவல் அரக்கு. நேர்த்தியான கிரிம்சன் வர்ணத்தைக் கொடுக்கிறது. இது கொக்கினியல் பூச்சிலிருந்து உண்டாகும் வர்ணத்தைப்போல் அவ்வளவு பிரகாசமாயிருக்கிறது அதைக்காட்டிலும கெடுநாளைக் கிருக்கும்படியான வர்ணத்தை கொடுக்கிறது. விலை மணங்கு 6 முதல் 8 ரூபா.

2. க்ரிம்ஜி அல்லது க்ரிம்ஸன் (மதராஸ் ஜனங்கள் க்ரிம்ஜி க்ரிம்ஸனை என்பார்கள் கோக்கினியலுக்கு பேர்க்ரிம்ஜி என்று மகருஸ் ஜனங்கள் வைத்தார்கள். இந்த வர்ணம் பட்டுக்குத்தான் உபயோகிக்கிறார்கள். அதிக விலையானது. விலை 8 முதல் 9 ரூபா ஆகிறது.

3. நுணா:—இது ஒருமரமும்செடியுமாக இருக்கிறது. இரண்டும் சிவப்பு வர்ணத்தைக் கொடுக்கிறது. பருத்திநூலுக்குத் தான் உபயோகிக்கிறார்கள். நுணாமரத்தின் பட்டை நுணாச் செடியின் வேர் வர்ணத்திற்கு உபயோகம். நுணாச்செடியைத்தான் வர்ணத்திற்காக விஸ்தாரமாக பயிராக்குகிறார்கள். நுணாவேர், சிறு நுணாவேர், சிறுவேர் எல்லாம் ஒரே வஸ்துதான். சிறு நுணாச்செடி 3 அடி உயரம் மணல்பாங்கில் தானாய் உண்டாகிறது. அதை பயிரும் செய்கிறார்கள். தானாய் உண்டாவதுதான் வர்ணத்திற்கு சிறந்தது. வேர் நீண்டதாய் நேர்த்தியானதாயிருந்தால் அதிக வர்ணத்தைக் கொடுக்கிறதாகக் கருதுகிறார்கள். அதை உலர்த்தி தூளாக்குகிறார்கள். அது இப்போது பொடியைப்போலிருக்கிறது. நீரில் கலந்தால் பொன்போலும் மஞ்சள் வர்ணத்தைக் கொடுக்கிறது. சுண்ணாம்பாவது கள்ளிச்செடி சாம்பலையாவது சேர்த்தால் நேர்த்தியான சுத்த சிவப்பு நிறம் உண்டாகிறது. நீரில் கலந்த கந்தகத்திராவகத்தை கொஞ்சம் வார்த்தால் மறுபடியும் மஞ்சள் நிறமாகிறது.

4. பொரசம்பூ (பூவாசம்பூ) மலர் பிரகாசமான மஞ்சள் நிறமாக இருக்கும். உலர்ந்த போது கிச்சிலி வர்ணத்தைப்போலிருக்கும். படிகாரம் சேர்த்தால் மஞ்சள் நிறமாகிறது. சோடா கொஞ்சம் சேர்த்தால் மறுபடியும் கிச்சிலி வர்ணமாகிறது. உரோமத்தில்தான் இந்த வர்ணம் கெட்டியாக இருக்கிறதென்கிறார்கள். மஞ்சளிலிருந்து உண்டாகும் மஞ்சள் வர்ணம் உரோமத்தில் கெட்டியாகிறதில்லையாம். மஞ்சளோடு கூட பொரம்பூவைச் சேர்த்தால் மஞ்சளின் பச்சைநிறம் மாறி அதிக கெட்டிசாயமாகிறது.

5. வாத்தங்கி:—ஹிந்துஸ்தானி பேர் பாடங். இங்கிலீஷ் பேர் சாப்பன். மரத்திலிருந்து வர்ணம் உண்டாகிறது. உபயோகத்திற்கு சௌகர்யமாய் சிறுதுண்டுகளாக கடையில் விற்கிறார்கள். வெண்மையான துண்டு மங்கலான கிச்சிலி வர்ணத்தை யுடையது. கருத்த துண்டு அதிக சிவப்பு வர்ணத்தை யுடையது. வாத்தங்கி மரத்தை கொதிக்கவைத்த நீர் வெண்மையான கிச்சிலிவர்ணத்தை யுடையது. படிகாரம் சேர்த்தால் கனத்த கிச்சிலி நிறமாகிறது.

6. கபில பொடி இந்த பொடி:— சிவப்பு நிறமுடையது. விரல்களுக்கு மத்தியில் தேய்த்தாலும் ஒரு கடிதத்தில் தேய்த்தாலும் பொன் நிறத்தைக் கொடுக்கிறது. குளிர்ந்த ஜலத்தில் கரைகிறதில்லை. நீர் கலந்த கந்தகதிராவகத்தில் கரைகிறதில்லை. பட்டுக்கு கிச்சிலிவர்ணம்உண்டாக்க, கபில பொடியை எண்ணெயோடு சேர்க்கவேண்டும். ஒட்டு பசையைப்போலாகும். பிறகு எலுமிச்சம்பழமும், ஒரு ஆல்காலியும் சேர்த்து நீரில் கரைக்கவேண்டும். இந்த பொடி மரத்திலிருந்து உண்டாகிறது. அந்த மரம் சென்னை இராஜதானியில் முக்கியமாய் மைசூரில் உண்டாகிறது. இந்த பொடி பூவிலிருந்து விழுகிறதாம். மரத்தின் கீழ் சுண்ணாம்பு லேசாய் பரப்பி அதின்மேல் விழும்பொடியை சேர்த்தெடுக்கிறார்கள்.

7. ஜாபிராவிரை:—ஜாப்ரா செடியின் விதை அல்லது வித்து. இது ரூபத்திலேயும் ஆகாரத்திலேயும்தகர விரையைப்போலிருக்கிறது. இந்த விரையின் வெளிப்புற மேல்பரப்பில்தான் வர்ணம் கொடுக்கும் வஸ்து இருக்கிறதாம். விதையை காய்ச்சின நீரில் போட்டால் வெளியாகிறது. பட்டுக்கு பலவிதமான மஞ்சள் நிறத்தையும் கிச்சிலி வர்ணத்தையும் ஏற்ற உபயோகிக்கிறார்கள். இந்த சாயம் கெட்டியானதல்ல. அதிகமாய் உபயோகப்படுத்துகிறதில்லை. பக்கிரிகள் பைராகிகள் முதலிய மதவைராக்கிய பிச்சைக்காரர்களுடைய கிச்சிலி வர்ணம் தோய்த்த வஸ்திரங்கள் இந்த விதையின் வர்ணத்தில்தான் தோய்க்கிறார்கள். இடையர்கள் வெண்ணெய்க்கு மஞ்சள் நிறம் கொடுக்க உபயோகப்படுத்துகிறார்கள். அதினால் அதற்கு வெண்ணெய்விரை என்றும் பெயர் உண்டு. ஐரோப்பாவில் பட்டையும் உரோமத்தையும் வர்ணம் தோய்க்க உபயோகித்தார்கள். அங்கே அது ஒட்டு பசையைப்போலவும் கட்டிகளாகவும் கிடைத்தது.

8. அவரி:—நீலிச்செடிக்கு தமிழ்பெயர் அவரி. இதன் பயிர்செய்யும் முறையைப்பற்றியும் வர்ணம் உண்டாக்கும் முறையைப்பற்றியும் உபயோகிக்கும் முறையைப்பற்றியும் விஸ்தாரமாய் எழுதலாம். அதைப்பற்றி எல்லாருக்கும் தெரியும் இங்கு எழுதினால் விரியும். அதினால் இதன் விவரம் அவசியமில்லை. இது எல்லா வர்ணங்களைவிட முக்கியமானது. அவரி நீலம் மாலாநீலம் என்று இரண்டுவிதமுண்டு.

9. காசா இலை:-ஓர் மரத்தின் இலை. சிறுசெடி காட்டில் அகப்படும் விறகுக்காக கட்டையைக் கொண்டுவருகிறார்கள். படிகாரத்திற்கு பதிலாக காசா இலையைச் சேர்த்தால் நுணாவிலிருக்கும் சாயத்தை வெளிப்படுத்தும் படிகாரம் சேர்த்தால் நூலைகெடுத்துவிடுகிறது. காசா இலையை குளிர்ந்த ஜலத்தில் போட்டால் ஓர் விதமான மஞ்சள் வர்ணம் உண்டாகிறது அது எப்போதுமிராது.

அன்னபேதி.

(10) பருத்தி பட்டு உரோமம் சணல் இவைகளுக்கு கருப்புவர்ணத்தை உண்டாக்க இதை உபயோகப்படுத்துகிறார்கள். இந்த சரக்கு இறக்குமதி ஆகாதகாலத்தில் சுதேச சாயக்காரர்கள் துருபிடித்த இரும்பை புளித்த கஞ்சித்தண்ணியில் தோயவைப்பதினால் வர்ணத்தை உண்டாக்கினார்கள். இப்போதுகூட சிலர் இந்த முறையை உபயோகிக்கிறார்கள். சில கிராமங்களில் அன்னபேதி (Sulphate of Iron) வாங்க சக்தியில்லாதவர்கள் இரும்பு சேர்மான பழயமுறையை உபயோகிக்கிறார்கள்.

மஞ்சள்.

(11) இது பிரகாசமான மஞ்சள் நிறத்தை உண்டாக்குகிறது. ஆனால் எப்போதும் அந்த நிறம் இராது. செடிசாயமல்ல இது உபவஸ்து சேராமலே வர்ணத்தைக் கொடுக்கிறது. பதார்த்தத்திற்கு உபயோகப்படுத்துகிறார்கள் ஸ்திரீகள் சருமத்திற்கு வர்ணத்தையும் மிருதுவையும் கொடுக்க உபயோகிக்கிறார்கள், வர்ணம் உண்டாக்க மஞ்சளை ஜாக்ரதையாய் பார்த்து எடுக்க வேண்டும். அறுத்தாவது அல்லது ஒடித்தாவது பார்க்கும் போது மஞ்சள் நிறத்தை அதிகமாய்க்காட்டினால் அது வர்ணத்திற்கு உபயோகப்படும். அப்படிக்கில்லாமல் நிறம் மட்டமாயிருந்தால் அது வர்ணத்துக்கு உதவாது மதராஸ் மஞ்சள்தான் உயர்ந்தது.

செம்பூரம் பட்டை.

(12) இது ஓர்மரத்தின்பட்டை நூலின் வர்ணத்தை மாற்ற இந்தபட்டையை உபயோகப்படுத்துகிறார்கள் முற்காலத்தில் பட்டணத்திலேயும் தற்காலத்தில் சீமைச் சாயம் எங்கெங்கே பரவியில்லையோ அந்த பட்டணங்களில் நூலுவர்ணம் பிடுமென்று நினைக்கப்படுகிறது. ஆகையினால் செடி வர்ணமல்ல. சாயக்காரர்கள் நூலு வர்ணம் செடி சாயம் என்பதையும் அந்த வர்ணத்தின் மேல் செம்பூரம் பட்டை வர்ணம் கெட்டியாயிருக்கவில்லை என்பதையும் ரகசியத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில சலவைகளுக்கு பின் வர்ணம் மறைந்து போகிறது. இதற்கு வேறு பெயர்கள் குதாக்பட்டை சுருள்பட்டை, பப்ளிக்கா, வேப்பம்பட்டை.

குஸும்பா.

(13) வடக்கே ஏராளமாயிருக்கப்பட்ட மரம் விதை ஓர் எண்ணெயைத்தருகிறது. பூ இரண்டு வர்ணத்தைக் கொடுக்கிற (1) மஞ்சள் நிறம் உபயோகமற்ற (2) சிவப்பு. வெகு சேர்த்தியானது புஷ்பத்தை சேர்த்து ஆளாக்கி விடுகிறார்கள். சாயமாக உபயோகிக்கும்போது ஒரு வஸ்திரத்தில் வைத்து நெடுநேரம் வரைக்கும் குளிர்ந்த நீரில் அலம்பப்படுகிறது. அப்போது மஞ்சள் நிறத்தைக் கொடுக்கும் வஸ்து வெளியாய்விடுகிறது. பிறகு அதைகொதிக்கவைக்கிறார்கள், அப்போது சிவப்பு வர்ணம் கொடுக்கிறது. ஆனால் இந்த வர்ணம் கெட்டியல்ல,

சிவப்புச் சந்தனம்.

பழவேற்காட்டிலும் திருப்பதிமலையிலும் இந்தமரம் உண்டாகிறது. 2, 3 அடி துண்டுகளாகவிற்கிறார்கள். கனத்த சிவப்பு வர்ணம் கொடுக்கிறது வர்ணம் எடுப்பது மிகுந்த கஷ்டம் சுதேசிகள் கெட்டி சாயமல்லவென்று நினைக்கிறதினால் உபயோகப்படுகிறதில்லை. யூரோப்பாவுக்கு ஏற்றுமதி ஆகிறது. அவ்விடத்தில் ரசாயனச் சேர்மானத்தால் உரோமத்திற்கு வர்ணம் கொடுக்க மங்கலான வர்ணம் உண்டாகிறது.

ப்ளூப்ளாக் இங்கிபௌடர்.

இங்கி பௌடரில் மேலான விதங்களெல்லாம் கோல்தார் வர்ணங்கள் கலந்திருக்கின்றன. இப்போது கோல்தார் வர்ணங்கள் அகப்படாது. ஆகையால் இங்கிபௌடர் உத்தமகுணத்தில் சிதைந்திருக்கின்றது. பின்வரும் முறையைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம்.

லாக்வுட் மரத்தின் எக்ஸ்ட்ராடு	ஔன்ஸ் 4
பொடாஸியம் டைக்ரோமேட்	க்ரேயின் 192
சோடியம் கார்பொனேட் க்ரிஸ்டல்ஸ்	ட்ராம்ஸ் 14
புல்வ் கம் அகேஷியா	ட்ராம்ஸ் 8
இண்டி கார்மைன்	ட்ராம் 1

இவைகளையெல்லாம் 4 கார்ட்ஸ் வெந்நீரில் கரையவைத்து சில மணிநேரம் வரைக்கும் திறந்து வைக்கப்பட்டிருப்பதால் எழுதுவதற்கு நல்ல இங்கி ஆகும். உபயோகிப்பதற்கு முன்னும் தயார் செய்த பிறகும் இங்கி திறக்கப்பட்டிருக்க வேண்டுவது அதிக அவசியமானது.

தேங்காய் எண்ணெயிலிருந்து வெண்ணெயுண்டாக்கல்.

எல்லா காய்கறி பதார்த்தவகைக் கொழுப்பிலேயும் வழவழப்பான திரவ பதார்த்தங்கள் (Glycerine) என்னும் முக்கிய வஸ்துகளுக்குள் ரசாயனச் சேர்மானம் உண்டாகிறது. அப்போதுதான் உண்டானபோது இந்தசேர்க்கை கொஞ்சம் வாசனையும் ரம்மியமான ருசியையும் பொருந்தியதான ஓர் சம்பந்தமில்லாத கொழுப்பை உண்டாக்குகிறது. ஆனால் காற்று பட்டபோதும் அதைப் பிரிக்கும் குணமுள்ள வஸ்துக்கள் இருக்கும்போதும் பூதக்கண்ணாடி திருஷ்டியில்தெரியகூடியக் இயங்கும் வஸ்துகள் அந்த எண்ணெய் (Glycerine) கிளிஸரைனாகவும் கொழுப்பு ஆஸிட்டாகவும் (fat aiud) பிரிக்கிறது. அவற்றில் சில உலர்ந்த கசப்பு ருசியையுடையதாகின்றன. தேங்காய் எண்ணெயிலிருந்து வெண்ணெயை உண்டாக்கும்போது இந்த சேர்மானத்தை ஜாக்கிரதையாய் பாதுகாக்கவேண்டும். ஆனால் ஸ்டீரைன் என்னும் பதார்த்தத்தை உண்டாக்குவதில் கொழுப்பானது ரசாயன வகையில் பிரிக்கப்படுகிறது. கெட்டியான பதார்த்தம் சுத்தப்படுத்தும் வகையில் பிரித்தெடுக்கப்படுகிறது.

இந்த வேலைகளுக்கு உபயோகப்படத்தக்கக் காய்கறி பதார்த்தக் கொழுப்புகள் அநேகமிருக்கின்றன. இவற்றில் முக்கியமானவையும், வர்த்தக ஆதாரமானவையும் பின் வருவன:—

தேங்காய் எண்ணெய் அல்லது கொப்பரை கொழுப்பு. இது தேங்காயிலிருந்து உண்டாகிறது. பாம் எண்ணெய் (palm oil) ஷிலோம் அல்லது ஜிஞ்ஜலி அல்லது டில் எண்ணெய்; ஒலிவை எண்ணெய், பருத்தி எண்ணெய், இந்தியத் தேங்காய் எண்ணெய் அதிகமாய் அகப்படுவதாலும் இயற்கை அசுத்தங்கள் இல்லாதிருத்தலாலும் ஒரு வேளை அதிக முக்கியமானதாகலாம். தேங்காய் முதிர்ந்தபோது ஒரு ஆயுதத்தால் உடைக்கிறார்கள். நார் கயறுக்கு உதவுகிறபடியால் தனியாகப் பிரித்துவைக்கப் படுகிறது. தேங்காய்த் தண்ணீரைக் கொட்டிவிடுகிறார்கள்; அல்லது மாட்டுக்கு ஆதாரமாக் குகிறார்கள். சதைப்பற்றான வெள்ளிய தேங்காய் சிலநாள் காயக் கொட்டாங்கச்சி.

யிலிருந்துச் சுலபமாய்ப் பிரிந்துவிடுகிறது. பின்னும் அதை வெயிலில் உலர்த்துகிறார்கள். அல்லது காற்றூட்டி உலர்த்துகிறார்கள். அப்போது அது கொப்பரை ஆகிறது. கொப்பரையை உலர்த்தி எடுத்துவைப்பது அதிக ஜாக்கிரதையாய் மேற்பார்வையில் ஆகவேண்டும். ஏனெனில் தூசியிருந்தாலும் ஈரம் இருந்தாலும் அழுகிப்போகும். வெண்ணெய் எடுப்பதற்குமுன் நெடுநாள் வரைக்கும் கொப்பரையைக் குவித்துவைக்கிறத் தொழிற்சாலைகளில் அவை பூர்ணம் பூக்காமலிருக்க அவற்றைத் திருப்பிவைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. எண்ணெயை எடுப்பதற்காகச் சித்தப்படுத்தப்பட்ட கொப்பரையைத் துண்டிக்கும்யந்திரத்தின் மூலமாயும் அதன்பிறகு திரிகைகளுக்கு மத்தியிலேயும் செலுத்தப்படுகிறது. அப்போது அதுமாகவப்போகிறது தூளாக சப்பட்ட வஸ்து குதிரைமயிர் பெட்டியில் போட்டு கட்டி 20 முதல் 22 டிக்ரீ சூடுள்ள எண்ணெயெடுக்கும் பிரஸில் கொடுக்கப்படுகிறது. 100-க்கு 20 கொழுப்பு இருக்கிறவரையில் நசுக்கப்படுகிறது. முதலில் உண்டாகும் எண்ணெய்தான் முதற்றரமானது பிரஸிலிருந்து புண்ணாக்கை எடுக்கிறார்கள் சுக்குகிற. ஆயுதத்தில் தூளாக்கி மறுபடியும் அரைக்கப்படுகிறது. இது மறுபடியும் பிரஸில் அழுத்தப் படுகிறது. ஆனால் அப்போது 60முதல் 70டிக்ரீ சூடுஇருக்கவேண்டும். இரண்டாவது உண்டாகும் எண்ணெய் குணத்தில் சிரேஷ்டமானதல்ல. ஏனென்றால், உஷ்ணத்தினாலேயும் அதிகமாய் அழுத்தப்படுவதாலும் வெளிப்படுத்தப்படுகிற சில அன்னிய வஸ்துக்களை உடையதாகிறபடியால் குணத்தில் குறைவையடைகிறது நூற்றுக்கு 6. கொழுப்புள்ள அப்போதுண்டாகும் புண்ணாக்குஅதிகமாய் மாட்டுக்கு ஆகாரமாகிறது. அப்போதப்போது விற்கப்படுகிறது.

இப்போது இந்த எண்ணெய் இரண்டு வித பொருள் செய்வதில் உபயோகமாகிறது. (1) கைப்பாகமான வெண்ணெய் உண்டாக்கல். (2) மற்றொன்று ஸ்டீரைன் செய்வது கைப்பாகமான வெண்ணெய்க்கு எண்ணெய் முதலில், வடிகட்டப்படுகிறது. இரண்டாவது சுத்தப்படுகிறது. (3) அது உருகும் சூட்டளவு உயர்த்தப்படுகிறது. முதல் நிலைமையில் வடிகட்டுகிற பிரஸில் அழுத்தப்பட்டு எடுக்கப்படவேண்டியது. சுத்தப்படுத்துகிற இரண்டாவது வேலை ஓர் ஆல்காலியின் உதவியால் எல்லாவிடுதலையாகக்கூடிய கொழுப்பு ஆஸிட் பதார்த்தங்களை வெளிப்படுத்தல் இப்போது ஆல்காலி கொழுப்பு ஆஸிட்களை சோப்பாக மாற்றுகிறது. கரைக்கப்பட்ட சுண்ணாம்பு இந்த வேலைக்கு சாதாரணமாய் உபயோகப்படுத்தப்படுகிறது. எண்ணெய் 50 முதல் 60 டிக்ரீ வரையில் சூடேற்றப்படுகிறது. தண்ணீரில் கரைத்த சுண்ணாம்பை மெதுவாய் சேர்க்கிறார்கள் சில மணிநேரம் கழித்து அது வடிகட்டப்படுகிறது. சோப்பு வடிகட்டுகிற பிரஸில் நின்றுவிடுகிறது. கெட்ட நாற்றத்தை நீக்க கால்போனேட் ஆப்சோடா சோடு 100 டிக்ரீ சூடேற்றவேண்டியது சுண்ணாம்புக்குபதிலாக யாதோ ஒரு சிலிகேட்டை சில வேலைகளில் உபயோகப்படுத்தப்படுகிறது. அது, ஒரு கனமான சோப்பை பாத்திரத்தின் அடியில் சீக்கிரமாய் இறங்கும்படி செய்கிறது. இரண்டு மூன்று மணியில் அதிகபாரமான ஆவியை வீசச் செய்வதால் எண்ணெய் இன்னும் சுத்தப் தப்படுத்தப்படுகிறது. இது ஓர் உலோக சல்லடையில் ஆகிறது. அதில் எண்ணெய் அடுக்காயுள்ள துவாரம் பொருந்திய தட்டுகளின் மூலமாய் சொட்டுகிறது. அப்போது. கீழேயிருந்து மேல் நோக்கி ஆவி செல்கிறது. இதில் உண்டாகிற வெள்ளைக் கொழுப்பு 23 டிக்ரீ சூட்டில் உருகுகிறது. ஆனால் இப்போதும் கூட வர்த்தக விஷயத்திற்கு அதிக மெதுவானது. கொழுப்பை இன்னும் கெட்டியாக்க 23 டிக்ரீஉஷ்ணத்தில் வைக்கப்படுகிறது அப்போது ஒன்றன்மேல் ஒன்றுகளிலேயாவது அடுக்கிவைத்திருக்கிற தட்டையான தாம்பாளங்களிலேயாவது அல்லது இரும்புத் தகட்டின் மேலாவது திறந்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த உஷ்ணத்தில் 48 மணி நேரம் வைத்திருந்தால் எண்ணெயின் பாகங்கள் முக்கோண நாற்கோண உருவங்களாக கெட்டியாகிறது. 200பவுன் பாரத்திற்கு உட்படுத்தி அழுத்துவதால் பிரித்தெடுக்கலாம். இப்போது உண்டான கொழுப்பு 22 டிக்ரீ உஷ்ணத்தில் உருகுகிறது. அதுதான் வெண்ணெய்க் கொழுப்பு உருகும் உஷ்ணஅளவு அப்போது விற்பனைக்குதயாராகிறது. அது ருசியாயிருக்க நூற்றுக்கு இரண்டு அல்லதுமூன்று உப்பும், முட்டையின் மஞ்சள் பாகமும் தயிரும், பாலும், சிலவேளைகளில் கொழுப்பும் சேர்க்கப்படுகின்றன. இந்த சாக்கின் வர்த்தக ரூபங்கள் பலவிதமாயிருக்கின்றன, சேர்மானத்தில் உபயோகப்படுத்தப்படுகிற பொருள்களின் குணத்திற்கும் அளவிற்குந் தகுந்தபடி ருசியிலேயும் வாசனையிலேயும் வித்தியாசங் காணப்படுகிறது. இந்த மாதிரியாகச் செய்யப்பட்ட வஸ்துவானது ஓர் யந்திரத்தில் வார்க்கப்படுகிறது. அந்த யந்திரத்திலுள்ள முருக்காணி ஒரு சதுர துவாரத்தின் மூலமாய் ஒரு வட்டக் குழாவில் அந்த வஸ்துவைத் தள்ளுகின்றது, வெளியில் அது வரும்போதுச் சரி பாகங்களாக ஒரு எழுகுக் கம்பியால் துண்டிக்கப்படுகிறது. இந்த பாகங்கள் ஒரே எடையையுடையதாயிருக்கிறது. அதைக் கட்டுகட்டி அநேக கம்பேர் வைத்து வெளியே அனுப்பிவிடுகிறார்கள்.

(தொடரும்.)

***

பாரிலிக்கு கமிஷன் போதல்.

நவம்பர் மாதம் 3உ பாரில்லிக்கு இந்தியன் இண்டஸ்டிரியல் கமிஷன் சென்றது. அங்கே இருவர்களுடைய சாக்ஷியங்களை பெற்றது கவர்ன்மெண்டு தச்சவேலை பள்ளிக்கூடத்தையும் தீக்குச்சி கிடங்கையும், ஐக்கிய வீட்டு மரச்சர்மான் வேலை ஷாப்புகளையும் போய் பார்வையிட்டார்கள்.

கவர்ன்மெண்டு தச்சவேலை பாடசாலையின் பிரதம உபாத்தியாயராய மிஸ்டர் எச். ஈ. கின்ஸ், என்பவர் தமது சாக்ஷியத்தை சொல்லும்போது, தொழில் முயற்சிகளுக்கு பணஉதவியைக் குறித்து பேசினார். இப்போதுநடக்கிற இந்திய மாவேலை வர்த்தகங்களை விர்த்தியாக்கவும்பலப்படுத்தவும் செய்கிற பிரயத்தனங்களுக்கு கவர்ன்மெண்டார் சுலபவட்டிக்கு பணங்கடன் கொடுத்து உதவிசெய்யலாம். புதிதாய் துவக்கியிருக்கிற மாவேலைகளுக்கு வட்டியில்லாமல் கொஞ்சம் கொஞ்சமாய் திருப்பிக் கொடுக்கும்படிக்கு ஏற்பாடுசெய்து

கடன் கொடுத்து உதவிசெய்யலாம். மதிப்பான சாலைகளில் தேர்ந்த மனிதர்களுக்கு வாடகைக்கு ஆயுதங்களையும் யந்திரங்களையும் சேகரித்துக் கொடுப்பதால் சாமான் தயாராக செய்கிறவர்களுக்கு புதுமாதிரியில் வேலைசெய்ய ஓர் தூண்டுதலை உண்டாக்கலாம். தகுதியாக தேர்ச்சியடைந்த மனிதர்களுக்கு வேலை முகாந்திரத்தை உண்டாக்குவதால், தொழிற் கல்வியை விர்த்திக்கு கொண்டுவந்து பலப்படுத்தலாம். இந்த மாகாணத்தில் துவக்கத்திலிருக்கிறயந்திர மரவேலைவர்த்தகங்களில் சாத்தியமாகும் பல வேலைகள் நடக்குமா நடகாதா என்பதை அறியும் பொருட்டு கவர்ன்மெண்டார் ஆரம்பத்தில் வழிகாட்டியாக தொழிற்சாலைகளை ஏற்படுத்திக் கொடுப்பது உசிதமாக இருக்கிறது. செய்த சாமான்களை விற்பனை செய்வதில் உதவிசெய்தலைக் குறித்து சாக்ஷிபக்காரர் சொன்னதாவது:—

இந்தியாவில் செய்யப்படும் சாமான்களை பிரசுரப்படுத்தவும் வாங்குகிறவர்களுக்கு அவர்கள் வேண்டிய சாமான்கள் எங்கெங்கே கிடைக்கும் என்பதைத் தெரிவிக்கவும் வர்த்தக சாமான் சேகரிப்பு காக்ஷி சாலைகள் ஒவ்வொரு மாகாணத்திலேயும் ஏற்படுவது உசிதமாகும். கொஞ்சமாய்ச் சாமான்செய்து விற்கிறவர்களுக்குத் தங்கள் சரக்கைப் பிரசுரப்படுத்தி விற்பதற்குச் சௌகர்யமாய் மேற்கண்ட வர்த்தகச் சாமான் சேகரிப்புக் காக்ஷி சாலைப் பெரும் வர்த்தகத் தாக்குகளில் இருக்கவேண்டுவது முக்கியம். வர்த்தகப் பிரதிநிதிகளை இந்தியாவைப்பற்றி பிரசாரம் சொல்லச் சீர்மையிலும் குடியேற்ற தேசங்களிலும் சௌகர்யமாய் ஏற்படுத்துவது வேண்டற்பாலது. என்னுடைய அபிப்பிராயத்தில் கவர்ன்மெண்டு முக்கிய இலாக்காக்கள் இரக்குமதியாகும் சாமான்களின் ஜாபிதாவைப் பிரசுரிப்பதும் சாத்தியமானவரையில் அவ்விதச் சாமான்களை வர்த்தகச் சாமான் சேகரிப்புக் காட்சிச்சாலைகளில் தருவித்து மாதிரிக்காக வைப்பதும் தகுதியானது. தேவையிருக்கிறதாகத் தெரிந்தால் இரக்குமதியாகும் சாமான்களில் அநேகம் இந்தியாவிலேயே செய்யப்படலாம்.

வேலையில் தயார்செய்வதைக் குறித்தும் அதன் மேற்பார்வையைக் குறித்தும் சாக்ஷியக்காரர் பின்வருமாறு சொல்லுகிறார்:—

இந்தியாவில் கைதேர்ந்த வேலையில்லாதிருந்தற்குக் காரணம் அநேகமாய் கைத்தொழில் வேலைக்குத் திருப்திகரமில்லாமல் ஆட்களைச் சேர்த்துக்கொள்ளும் ஏற்பாடாகும். எந்தெந்த வேலைக்காகப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளுகிறார்களோ அந்த வேலைகளுக்கு அவர்கள் தகுதியானவர்களா என்று தேர்ந்தெடுப்பதில் பாடசாலைத் தலைவர்கள் வேண்டிய கவனத்தைச் செலுத்துகிறதில்லை; சாதாரணமாய்ப் பள்ளிக்கூடத்தில் விருத்தியை யடையாத பையனை அவனுடைய சக்தியை யோசிக்காமலே வேலையில் போட்டுவிடுகிறார்கள். இது கைத்தேர்ந்த வேலையில் பழக்கும் பிரயத்தனத்திற்குக் கெடுதலாக யிருக்கிறது. இந்த ஏற்பாட்டில் சீர்திருத்தம் பெரியக் கைத்தொழில் கலவிச்சாலைகளைச் சார்ந்த பிரதமக் கைத்தொழில் வித்தியாசாலையின் மூலமாய்த்தான் நடக்கவேண்டும். அவ்விதப் பாடசாலைகள் எல்லாவற்றிலும் கைத்தொழில் வித்தையைக்

கட்டாயம் பாடமாக்குவதாலும் மேற்சொன்ன சீர்திருத்தம் நடக்கலாம்.

மிஸ்டர் கின்ஸ்லுரை பிறகு சாதாரண உத்தியோக நிர்வாகத்தைப் பற்றியும் ஏற்பாட்டைப் பற்றியும் பேசினார். இனி ஆகவேண்டும் தொழில் அபிவிருத்திக்கு கைத்தொழிலை ஒழுங்குபாட்டில் வைக்கும் டைரக்டர் உத்தியோகஸ்தரும் கைத்தொழில் நிபுணர்களும் ஏற்பட்டதல் திருப்திகரமாயிருக்கும், அப்படிப்பட்ட ஏற்பாடுகள் சிறு கைத்தொழிலுக்குப் பணவுதவி செய்ததைப் போலாகும். ஆனால் இச்செலவுக ளெல்லாம் பிரேரேபனைகளின் யோக்யதையைச் சார்ந்திருக்க வேண்டும். சாமான்களை நிர்வகிக்கும் கைத்தொழில் நிபுணர்கள் அவசியமானத் தேர்ந்த வேலையில் பழக்குவதை மேற்கொள்ளலாம். கமிஷன் நவம்பர்மீ 4வ லக்னௌக்குச் சென்றது. அதின் அங்கத்தினர் கவர்ன்மெண்டு கைத்தொழில் பாடசாலையையும், தொழிற்சாலைகளையும் காகிதத் தமிழ்களையும் பார்வையிட்டார்கள்.

கவர்ன்மெண்டுத் தொழிற்பாடசாலையின் பிரதம உபாத்தியாயர் மிஸ்டர் பி. எச். ஸ்வின்சாட என்பவர் தமது வாக்குமூலத்தில் வேலையில் பழக்குவதைப் பற்றியும் அதன் மேற்பார்வையைப்பற்றியும்சொன்னதாவது:—

சாதாரணமாய் வேலைக்காரனுடைய வன்மையையும் தேர்ச்சியையும் விருத்தியாக்க முதலில் செய்ய வேண்டியதாவது: அதிக ஆசையுடையவனாகச் செய்யப் பிரயத்தனப் படுவதும் நல்ல வேலைக்கு அதிகச் சம்பளத்தைக் கொடுப்பதுமாம். பொதுக்கல்வி அதிகமாய் விஷயங்களை விருத்திக்குக் கொண்டுவரும். தொழில் பள்ளிக்கூடங்களின் உதவியினால் வேலைக்காரர்கள் எல்லா விதங்களிலும் அதிக புத்திசாலிகள் ஆவார்கள். தகுதியாக சேகரமானத் தொழிற் கிடங்குகள் அநேகம் ஏற்பட்டுச் சாமார்த்தியமான மேற்பார்வைச் செய்வோரால் முழுதும் நூதனமார்க்கத்தில் நடத்தப்பட்டால் அதிக தொழில் தேர்ந்த மனிதர்கள் உண்டாவார்கள். இந்த நிலைமையை உண்டாக்க நிரந்தரமாயுள்ள வேலைச்சாலைகளில் வேலையை விவரித்துக்காட்டி கற்பிக்கும் வகுப்புகள் நடத்தப்படவேண்டும். அல்லது இப்போது வன்மையோடும் தேர்ச்சியோடும் செய்யப்படாத வேலைகளில் ஆங்கிலக் கைத்தொழில் போதகர்களால் புதுமாதிரியாகக் கற்பிக்கப்படும் கைத்தொழில் பாடசாலைகளிலாவது அத்தகைய வகுப்புகள் நடத்தப்படவேண்டும், விருத்திக்கு வரக்கூடிய வேலைக்காரர்கள்தான் இந்த நூதன பழக்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். நல்ல வேலைக்குத் தகுந்த அதிக சம்பள ஆதாயத்தைக் காட்டவேண்டும்.

வேலைச்சாலைகளி லிருந்து இப்போது செய்யப்படுகிற வேலைகளின் மாதிரிகளையும், தேவையான மாதிரிக்கிணங்கச் செய்யப்படும் வேலைகளின் ரதங்களையும் வரவழைக்க வேண்டும். அதனால்தான் வேலைக்காரர்களுக்கு எவ்வித போதனை வேண்டியதென்றும் தெரியும். போதகர்களும் இன்னமாதிரியான போதனைத்தான் செய்யப்பட வேண்டுமென்று அறிவார்கள். எண்ணெய் யந்திரங்களும் ஆவியந்திரங்களும் அதிகமாவதோடு வேண்டியபோதுச் சாதாரண மராமத்து செய்ய அவசியமான அறிவையும் அனுபவத்தை

யுமுடைய மனிதர்கள் அதிகமாய் கிடைக்கக்கூடுமானால் யந்திர சக்தியை உபயோகிக்கும் தொழில்களுக்கெல்லாம் உதவியாயிருக்கும். மேலும் அநேக ஜில்லாக்களில் மராமத்து சௌகர்யமே யில்லை. இந்த மாதிரியான வேலை நன்றாய் கற்பிக்கப்படும். சாலைகள் ஏற்பட்டு அவற்றில் போதனைக் கட்டணம் நியாயமானதாயிருந்தால் மேஸ்திரிகளாகவும் கூலியாட்களாகவும் வேலைசெய்யும் மனிதர்கள், இந்த மாதிரியான வேலைகளில் போதனையை யடையும் பொருட்டு அந்த போதனு சாலைக்கு அனுப்பப் படுவார்கள். இப்போது விவரிக்கப்பட்டப் போதனுசாலை ஒரு தொழில் வித்தியா பாடசாலையோடு சேர்ந்ததா யிருக்கவேண்டும். ஆனாலதில் வேலை செய்வோர் வித்தியா சாலையில் வேலை செய்யக்கூடாது. அன்னிய தேசத்து மாதிரிகளையும் நிலைமைகளையும் தெரிந்துகொள்ள மேற்பார்வை செய்வோரும் நிர்வகிக்கிறவர்களும் தொழில் நிபுணர்களும் வேண்டுகிற ஒரே உதவி யென்னவென்றால்:—

அவைகளை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்களை அடைவதுதான். இதை நேரில் ஏற்படுத்தல் மிகக் கஷ்டமாயிருக்குமென்று நம்புகிறேன். மேலும் நூதன மாதிரிகள் கற்கப்படவேண்டிய சாலைகளில் நெடுங்காலம் வேலைசெய்வது அவசியமாகும் ஏதாவது நன்மை உண்டாவதற்கு முன்னமே உண்மையாகவே வேலை செய்வதும் அவசியமாகும். அநேக பிரைவேட் சாலைகள் தங்களுக்காக இதர தேசங்களின் நிலைமைகளையும் தொழில் மாதிரிகளையும் அறிய ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரை விடுக்கும் மாகாணங்களில் தொழில் விஷயங்களில் நல்ல நன்மைகள் உண்டாகுமென்று நினைக்கவேண்டும். அன்னிய தேச நிலைமைகளை யறிய உத்தியோகஸ்தரை எல்லோருக்கும் பொதுவாக விடுப்பதால் எல்லாத் தொழிற்சாலைகளும் நன்மையை யடையும். ஒரு ப்ரைவேட் தொழிற்சாலை ஒரு நிபுணரை இந்த வேலைக்கு விடுப்போமானால் அந்த நிபுணர் அடையும் தொழில் வியாபார ரகசியச் சமாசாரங்களை அதற்கு எதிராக அதே தொழிலை நடத்தும் தொழிற்சாலைக்குத் தெரிவிக்கும் என்பது சந்தேகந்தான்.

நவம்பர் மீ 5உ கான்பூருக்கு இந்திய இண்டஸ்டிரியல் கமிஷன் வந்தது. மறுநாள் சாக்ஷியம் எடுக்க ஆரம்பித்தார்கள். அலஹாபாத் மூர்செண்ட்ரல் காலேஜில் ரசாயன ஸாஸ்திரத்தில் பிரதம ப்ரொபசராகிய மிஸ்டர் ஈ. ஜி. ஹில் டி. ஸி என்பவர் தொழிற்சாலைகளைப் பற்றிதான் அபிப்பிராயத்தைச் சொல்லும்போது பின்வருமாறு பேசினார்:—

முன்னமே விவரித்த காரணங்களுக்காகத் தொழிற் சாலைகளையும் நூதன விஷய ஆராய்ச்சிச் சாலைகளையும் தனித்தனியாக விருத்தியாக விடக்கூடாது. 5 சாலைகளில் ஒவ்வொன்றிலும் 20 பேர் முயற்சி செய்வதைவிட ஒரே சாலையில் 100 மொத்தமாய் முயற்சி செய்வது லாபகரமானது. ஐரோப்பாவிலேயும், அமெரிக்காவிலேயும் அனுபோகம் சந்தேகத்திற் கிடங்கொடாமல் இதை நிரூபணம் செய்திருக்கிறது. பெங்களூர் அதிக மத்தியஸ்தானமா யில்லை. டாடா சாலையானது அதிக உன்னதமான வேலைப்பாடானுலொழிய அந்தச் சாலையை வட இந்தியாவில் விருத்தியாக்கினால் நன்றாயிருக்கும். தொழிலிலும் சாஸ்திரத்திலும் நிபுணரான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் அன்னிய தேசங்களின் மாதிரிகளையும் நிலைமைகளையும் அறிய எல்லா ஆதரணையையும் காட்டவேண்டும். இங்கிலாந்தில் இருப்பதைக் காட்டிலும் இந்தியாவில் நூதன விஷய ஆராய்ச்சிச் சாலையை நடத்தினால் மிகநல்லது. இந்த தேசத்தில் வர்த்தகக் கைத்தொழில் ஹிதாஹிதங்களைத் தெரிவிக்கும் ஆலோசனை சபை ஒன்று இருக்கவேண்டும். அதின் அங்கத்தினர் சீர்மையில் அப்படிப்பட்ட சங்கத்தின் அங்கத்தினர்களோடு ஐக்கியபாவங்கொண்டு விஷயங்களை நடத்தவேண்டும். அந்தந்தத் தொழிலிலுள்ளவர்களிடத்தில் அவர்களுக்கு என்ன வேண்டியதென்பதைக் கேட்டுத் தெரிந்துகொண்டால் மிகவும் நன்மை உண்டாகும். போர்ட் ஆப் சயண்டிபிக் அட்வைஸ் (Bourd of Suentific adrice) ஒரு நன்மையும் செய்யாது. ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் சப்கம்மிட்டி இருந்தால் அப்போது அவர்கள் காரியத்திற்கு ஒருவாறு சரியாயிருக்கும். ஆராய்ச்சிச்சாலை முக்கியமாய்க் கவர்ன்மெண்டாரால் ஆதரிக்கப்படவேண்டும். ஒரு ஆராய்ச்சிச் சாலைப் பொதுவான சாஸ்திரக் கல்வியை முக்கியமாய் நாடவேண்டும். ஒன்றையே நாடிச் சிறப்புக் கல்வியை விருத்தி செய்தல் கூடாது. மேற்பார்வையிலிருந்தால் இந்தியர்கள் நன்றாக சாஸ்திர நூதன விஷய ஆராச்சிசெய்ய வல்லவராவர்.

* * *

கவர்ன்மெண்டு திரவிய சகாய விஷயம்.

ஐக்கிய மாகாணங்களில் தொழில் இலாகா டைரக்டர் ஆனரபில் மிஸ்டர் வ. எச். சில்வர் என்பவர் தொழிலில் திரவிய உதவியைப்பற்றிப் பேசினார். தான் அனுபோகம் வரைக்கும் ஓர் தீர்க்காலோசனையுள்ள வியாபாரத் தொழில் முயற்சியுடையோனால் ஆதரிக்கப்பட்ட ஒரு தீர்க்காலோசனையால் உண்டாகிய வியாபாரத் தொழில் முயற்சிக்கு அவனவனுக்குச் சக்தியான திரவியத்தை முற்பணமாக வைப்பதினால் அவனுக்கு அந்த வியாபார தொழிலில் ஊன நம்பிகைக்கையைத் தெரிவித்தால் அந்த வியாபாரத் தொழிலுக்கு முதற்பணத்தைக் காண்பதில் ஒரு கஷ்டமும் யிராது என்றார். சில முயற்சிகளில் சீக்கிரமாய் லாபத்தை யடைய அகாரணமாய் எதிர்பார்த்தலும் உண்டு. தொழிற் சங்கங்களை உண்டாக்குவதில் முழுவதும் கட்டிவிட்டப் பங்குகளை மாத்திரந்தான் அங்கீகரிக்க வேண்டுமென்று அந்த முயற்சியை ஆதரிக்கிறவர்கள் அதிக ஜாக்கிரதையோடு இவ்வளவு பணந்தான் முதல் வைப்பது என்று மதிப்பிட வேண்டியதென்றும் சொல்லுகிறார். வட்டி யில்லாத கவர்ன்மெண்டு கடனை அவர் அங்கீகரிக்கவில்லை. ஆனால் விருத்தியின் இப்போதைய சந்தர்ப்பத்தில் சில முயற்சிகளில் வட்டியோடு கடன் கொடுக்கலாம். முதற் பணசேகரத்தின் ஆதாரங்கள் பலப்படுத்தப்பட்டால் இதனுடைய அவசியத்தைக்கூட நிராகரிக்கலாம். சில வழிக்காட்டியாக வுள்ளத் தொழில் முயற்சி சங்க விஷயத்தில் சிலகாலம் வரைக்கும்

சரக்குகளைக் கவர்ன்மெண்டார் வாங்குவதாக உத்தரவாதமிருந்தால் அது அதிக நன்மையைப் பயக்கும். அதுதான் கவர்ன்மெண்டார் செய்யத்தக்க மகா உத்தமமான உதவி. ஏறக்குறைய எல்லா முயற்சிகளிலேயும் கவர்ன்மெண்டார் அதிகாரம் இருக்கக்கூடாதென்கிறார்.'

கவர்ன்மெண்டு ஆதரணையைப்பற்றிப் பேசும்போது சென்ற வருஷத்தில் வாங்கின எல்லா இறக்குமதி சாமான்களின் ஜாபிதாவை எல்லாரும் தெரிந்துகொள்ளும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் பிரசுரிக்கலாம் என்றார். அந்த ஜாபிதா எல்லாரும் விலைக்குக் கொள்ளத்தக்கதாக வேண்டும். அந்த ஜாபிதா இறக்குமதிச் சாமான்களுக்கு என்ன விலை கொடுக்கப்பட்டதோ அதைத்தான் காட்டவேண்டும். மாதிரிகள் குணங்கள் முதலியவற்றைப்பற்றிய விபரங்கள் சாமான்களைத் தயார்செய்கிற எவருக்காவது வேண்டும்போது தடையில்லாமல் கிடைக்கக்கூடியதாயிருக்கவேண்டும். அன்னிய தேச மாதிரிகளைக் கற்றுக்கொள்வதைப்பற்றிப் பேசும்போது தொழிலிலேயும் சாஸ்திரத்திலேயும் நிபுணரான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு அடிக்கடி சீர்மைக்குப்போகும் ரஜா சந்தர்ப்பங்களைக் கொடுப்பதால் இதர தேசத்து மாதிரிகளையும் நிலைமைகளையும் அறிந்துகொள்ளும் ஆதரணையைக் காட்டவேண்டும். பலவிதக் கைத்தொழிற்சாலைகளின் பிரதம உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு வருஷத்திற்கும் நான்கு மாதம் ஐரோப்பிய ரஜா எடுத்துக்கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் இங்கிலாந்தில் தொழில் பழக்கத்தின் விருத்தி விஷயத்தில் தற்கால நிலைமையை அடைவார்கள் என்றுசொன்னார்.

இண்டஸ்ட்ரியல் கமிஷன் ஆக்ராவுக்கு சமீபத்தில் பரோஸபாடில் 14உ வந்தது. அவ்விடத்தில் வளையல் முக்கியமாய் செய்யப்படுகிறது. ஐக்கிய மாகாண கவர்ன்மெண்டுத் தொழில் இலாகா டைரக்டராகிய ஆனரபில் மிஸ்டர் சில்வர் என்பவர் முக்கியமான மூன்று கண்ணாடி செய்யும் சாலைக்கு அழைத்துக்கொண்டு போனார். அந்த சாலைகளில் வளையல் செய்வதற்கு உபயோகமான பலவித கருப்பு கிளாஸ் செய்கிறார்கள். ஒரு மாசத்தில் 6000 மணங்கு சாமான் செய்கிறார்கள். கமிஷன் அங்கத்தினர் பின்பு வளையல் செய்கிற ஷிகுர்ஸ் ஜாதியாரின் வேலையிடத்திற்கு சென்றார்கள். சண்டை ஆரம்பமான காலமாய் ஷிகுர்ஸ் ஜாதியார் இது வரைக்கும் ஆஸ்ட்ரியாவிலேயே செய்யப்பட்டுவந்த வளையல் வேலையை ஜயத்துடன் செய்துவந்தார்கள். அவர்கள் அதிக சரசமாய் செய்து கொடுக்கிறார்களாம். இனி ஆஸ்திரியாவின் சாத்தியமான போட்டியைத் தடைபடுத்தத் தவறிப்போக மாட்டார்களாம். இவர்களுக்குச் சிறிது பண உதவி யிருந்தால் சண்டைக்குப் பின்னும் தங்கள் தொழிலை இப்போதைய நிலைமையிலேயே வைத்திருக்கச் சக்தியுடையவர்களா யிருப்பார்களாம்.

* * *

பட்டுத்தொழில்.

இந்தியன் இண்டியஸ்ட்ரியல் கமிஷன் நவம்பர் மீ 14உ பாங்ளூரில் வந்தது. மிஸ்டர் சீப்ராய் என்பவர் சாக்ஷியம் கொடுத்தார். இந்தியப் பட்டு வர்த்தகத்தில் ஜப்பான் போட்டியாக இருக்கிறது. ஜப்பான் பட்டு சரக்குகள் அதிக சரசமாயிருக்கிறபடியால் இந்தியப் பட்டு வர்த்தகம் அதிகமாய்க்குறைந்துபோய்விட்டது. வேலைசெய்யாத பட்டு உற்பத்தியாக்க தகுதியான இடங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இந்தியா இப்போது உண்டாக்குகிற பட்டைக் காட்டிலும் 100-க்கு 30, 40 அதிக பட்டை நிச்சயமாய் உண்டாக்கும். பட்டை உண்டாக்குவதற்கு அவசியமான கவர்ன்மெண்டு ஏற்பாடு இன்னவிதமாக இருக்கவேண்டுமென்று மிஸ்டர் சீப்ராய் விவரித்தார். நல்ல மாதிரியைப்பற்றி போதிக்க நிபுணர்களுடைய சகாயத்தின் அவசியத்தைப்பற்றித் தெரிவித்தார். ஒவ்வொரு மாகாணத்திலும் டிப்டி டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் இருந்து காரியத்தை நடத்தவேண்டும். பட்டு உண்டாக்கும் வேலை செய்யும் சிப்பந்திகள் இப்படியிருக்க வேண்டுமென்றும் சொன்னார். தன் அபிப்பிராயத்தில் வெளியிலிருந்து கிராக்கி வருகிறபக்ஷத்தில் பட்டுத்தொழில் விருத்திக்காக ஓர் கவர்ன்மெண்டு இலாகா, எவ்வளவு செலவு பிடித்தாலும், காரணத்தைக் கொண்டதாகவே யிருக்கும். அது விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைக் கலக்க வேண்டியதில்லை. இத்தொழிலை விருத்தி செய்வதில் ஜனங்களுக்கு மிகுந்த ஆக்ஷேபனை செய்கிறார்கள். புழுக்களைக் கொல்ல வேண்டியிருக்கிறதென்னும் ஆக்ஷேபனைதான் முக்கியமானது. பங்காளத்தில் அந்த ஆக்ஷேபனை யில்லை. காஸ்மீர் தேசத்திலும், மைசூரிலும் இன்னும் இரண்டொரு தேசங்களிலும் இந்த ஆக்ஷேபனை இருக்கிறது.

பீஹார் சர்க்கரைத் தொழில்.

இந்தியன் இண்டஸ்ட்ரியல் கமிஷன் நவம்பர் மீ 21உ முசப்பர்பூருக்குச் சென்றது. அக்ரிகல் சர்மியூஷியத்தில் சாக்ஷியம் எடுத்தது. டார்பங்கா சர்க்கரை கம்பெனியாராகிய மிஸ்டர் ஜே. ஹென்றி என்பவர் போக்குவரவு சௌகர்யத்தைக் குறித்து சிறு இருப்புப்பாதைகள் டிராம் பாதைகள் போடுவதால் அநேக காரியங்கள் அநுகூலமாகலாமென்றும் பங்கால் வடமேற்கு ரயில்வே முசப்பர்பூருக்கு வரக்கூடுமென்றும் சொன்னார்.

பாராபாக்டொரியை நிர்வகிக்கிறவரான மிஸ்டர் ஜி, டப்ல்யூ ரெய்னே மாக்டோனல்ட் நீலிமருந்துகிடங்குகள் க்ஷீணமாகவே பீஹாரில் சர்க்கரைகிடங்குகள் வைக்கப்பட்டனவென்றும் சொல்லி இடம் முதலியவற்றை ஏற்பாடுசெய்து அமுலுக்கு கொண்டுவர அதிகாரஸ்தானம் இருக்கவேண்டுமென்றும் சாமான் அனுப்ப ரயில்வே கட்டணங்களைப் பற்றியும் இடத்தை அதிகப்படுத்திக்கொள்ளவும் இடத்தை வாங்கவும் வேண்டிய சௌகரியங்களைப்பற்றியும் பேசினார். வர்த்தக சௌகரிய சமாச்சாரங்களைச் சேகரித்துத் திரட்டிப் பிரசுரப்படுத்துவதால் இந்தக் கமிஷன் உதவி புரியலாமென்றும் சர்க்கரைத் தொழில் சம்பந்தமாய் நூதன வழிகளைப் பரிசோதித்துக் கண்டுபிடிக்கும் ஏற்பாடுகளைச் செய்தால் நன்மை உண்டாகுமென்றும் சொன்னார். தங்களுக்கு பூசாவிலிருந்து ஒரு உதவியும் கிடைக்கவில்லையென்றும், தாங்கள் ஒன்றையும் கேட்கவில்லையென்றும் பூசாவில் செய்யப்பட்ட பரிசோதித்த மாதிரிகளைத் தாங்கள் உபயோ

சிக்கவில்லை யென்றும் சொன்னார். ரயில்வே கட்டணத்தைக்குறித்த புகார்கள் யுத்த நிலைமையைச் சார்ந்ததாகயில்லை யென்றும், ஆனால் ரயில்வே கட்டணத்தை ஜாஸ்தி செய்வதாகப் பயமுறுத்தல் யுத்த காரணங்களைக் கொண்டுதான் நடக்கிறதென்றும் ரயில் கட்டணத்தை சௌகரியமாய் ஸ்திரப்படுத்தினால் அதிக நன்மை உண்டாகுமென்றும் சொன்னார்.

***

நாடகத்தொழில்.

தேவர்கள் நான்கு வேதத்தின் ..சாரத்தைக்கண்ணினால் பார்த்தும், காதினால் கேட்டும், அனுபவிக்கும் பொருட்டு ஐந்தாவது வேதம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று பிரமாவைக் கேட்டுக்கொள்ள அவர் அதற்கு இணங்கி நற்குணம், நற்செய்கை, ஐஸ்வர்யம், பக்தி, பெருமை மோக்ஷம் முதலியவைகளின் சாரமான புராதனக்கதைகளை ரிக்வேதத்திலிருந்த வார்த்தைகளினாலும், சாமவேதத்திலிருந்த சங்கீதங்களினாலும், யசுர்வேதத்திலிருந்த அபிநயங்களினாலும், அதர்வணவேத சாரங்களுடன் சேர்த்து ஐந்தாவது வேதம் என்ற நாட்டிய (டிராமா) சாஸ்திரத்தை பரதருக்கும் அவரின் 100 குமாரர்களுக்கும் அனுக்கிரகிக்க அவர்கள் அதை முதல் முதல் இந்திரன் சபையில் உபயோகித்தார்களாம். இந்த ஆட்டமானது தேவர்களுக்குச் சந்தோஷத்தை விளைவித்ததுடன் மூன்று உலகத்தின் பாவனைகளையும் வெளியிட்டதாம். இது விசனித்துத் தளர்ந்து அலுத்து அதிருப்தியடைந்து மனத்தவலை யுற்றவர்களுக்கு ஒருவித ஆறுதல் தரத்தக்கதென்றும் அதனால் உலகத்திற்கு வேண்டிய நீதி நியாயம், புகழ், ஐஸ்வர்யம், நீண்ட ஆயுள் முதலியவைகளைப் பெறுவார்களென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றனவாம். இவ்விதத் தொழில் உலகத்திலுள்ள மனதைக் களிக்கத்தக்கத் தொழில்களிலெல்லாம் விசேஷமானது. இதில் பிரீதி யில்லாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள், இவ்வித நாடகங்களினால் சென்றுபோன எல்லா விஷயங்களையும் தற்காலம் நிஜரூபமாய் நடப்பதுபோல் காட்டி இப்பிரத்தியட்சத்தினால் சரித்திரங்களின் உண்மை அறிந்து ஆனந்திக்கத் தகுதியானது. இதனால் வாசிப்பு அதிகமில்லாதவர்களும் சிறு பிள்ளைகளும், கல்வியில்லாத ஸ்திரீகளும் வெகு சுலபமாய் சரித்திர உணர்ச்சியைப் பெறுவார்கள். கற்றோரைப் போல் பேசுவார்கள். விவகார விஷயங்களில் நாகரீகமாய் நடந்துகொள்ளும் மார்க்கம் தெரிந்தவர்களாயு மிருப்பார்கள்.

இவ்வித சிரேஷ்டத்தில் நாடகத்தின் கல்வி ஊட்டும் பிரயோஜனத்தை அளவிடக்கூடாது, அவ்வளவு பயன்பட்டுள்ளது என்று எல்லோரும் நாப்பத் தகுந்தது. பாடசாலைகளில் வாசிக்கும் சிறு பிள்ளைகளுக்கும் நாடகமூலமாய் சரித்திர விளக்கம் உண்டுபண்ணுவது வெகு சிலாக்கியம் இம்மார்க்கத்தை அனுசரித்துக் கல்வி கற்றுவரும் சிறு பிள்ளைகள் வெகு சீக்கிரத்தில் நிபுணர்களாவதுடன் ஒவ்வொரு பிள்ளைகளும் மிகச் சந்தோஷத்துடன் பாடசாலையின் படிப்பை விரும்புவார்கள். இதன் பிரயோஜன மிப்படியிருக்க நாடகம் நடத்துபவர்களில் அநேகர் பணம் வசூலிக்க முயன்றவர்களாகக் காணப்படுகிறார்களே தவிர சரித்திர உணர்ச்சியுடன் உண்மையை வெளியிட்டு ஜனங்களுக்குப் பிரயோஜனப்படும் மார்க்கம் தேடியவர்களாகத் தோன்றவில்லை. அப்படிக்குச் சில கம்பெனிகள் வெளிவருவது சிலாக்கியம். இக்கம்பெனியில் சேருபவர்கள் ஒவ்வொருவரும் தகுந்த டிராமாடிக் ஸ்கூலில் வாசித்தவர்களாயு மிருக்கவேண்டும். மேலும் சில கம்பெனிகளில் சந்தர்ப்பங்களுக்குத் தக்க இராகங்களில்லாமலும், சமயத்திற்குத்தக்க நடிப்பு இல்லாமலும் தாருமாறாவதினால் விஷயம் விளங்காமல் நுட்பம் அறியாமல் வேடிக்கையாய் காலம் போக்கியவர்களைப்போல் ஒருவாறான சம்மதத்துடன் சந்தோஷிக்கிறார்கள். நாடகத் தொழிலுக்கென்று ஸ்கூல்கள் ஏற்படுத்தி அதில் ருசியுள்ள சிறு பிள்ளைகளைத் தக்கபடி சங்கீதத்திலும், நடிப்பிலும் பழக்கிக் கல்வி சாதுரியத்துடன் வெளிவருபவர்கள் கம்பெனிகளில் உத்தியோகமாய்ச் சேர்ந்து நாடகம் நடத்தினால் உண்மை விளங்கும். அதனால் நன்மை உண்டாகும்.

இப்படிக்கு ஆடவும் பாடவும் தேர்ச்சியடைந்த பிறகு தோற்றக் குறைவு யேற்பட்டால் சமயத்திற்குத் தக்கவாறு உடுத்தவும் நாடகத்திற்குத் தக்க ஸ்டேஜ் யேற்படுத்திக்கொள்ளவும் திறமை யுண்டாய்விட்டால் நாடகத்தொழில் குறைவுபடாமல் விளங்கும். ஸ்திரீ வேடம்பூண்ட ஒருவனை நாம்ஸ்டேஜில் கண்டால் அவனை நாம் ஆண்பிள்ளை யென்று சந்தேகிக்க யிடமில்லாத அவ்வளவு சாமர்த்தியமாய் மறையும்படி அலங்கரிக்காவிட்டால் அவ்வேஷத்தின் பிரயோஜனம் வீணாகும். சிலசமயம் ஸ்டேஜில் வரும் பெண்வேஷம்

பூண்டவர்கள் பொடிபோடும் மூக்கையும், அருட்டு பிடிக்கும் வாயையும் கனத்த கழுத்தையும், அகண்ட தோளையும், ஒட்டிய புட்டத்தையும் உடைய கோண்ட உருவமாகக் காணப்பட்டால் அவளை ஸ்டேஜில் சந்திரமதி யென்றால் நம்புவார்களா? அவள் புலம்பினால் விசனிப்பார்களா? அவள் நடித்தாலும் நாட்டியமென்பார்களா? இம்மாதிரி ஆபாசங்கள் அநேகம் காணப்படுகின்றன. இவைகளன்றி ஸ்டேஜ் அலங்காரங்களும் பொருந்தப்படாமல சீர்மையிலுள்ள ஓர் அரண்மனை வீதியை பின்வைத்துக் கொண்டு இந்திய நாடகம் முன்நடந்தால் ஒத்துமையாகுமா? இப்படிக்குள்ள எல்லாகுற்றங்களையும் விலக்கி ஆட்டக்காரர்கள் எல்லோரும் கல்விமான்களாகி பொருத்தமாய் நாடகம் நடத்தினால் ஊர்பணமெல்லாம் நமதாவதற்குச் சந்தேகமேயில்லை. விஸ்வகர்மாக்கள் பொருளில்லாமல் ஏன் விசனிக்கிறார்கள். இத்தொழிலாகிலும் திறமையிருந்தால் ஏன் முன்வரப்படாது அல்லது அவர்களுடைய மற்ற தொழிலுடன் இதையும் ஏன் அநுசரித்து பொருள் தேடப்படாது. இதில் சிரத்தையுள்ளவர்கள் உடனே இப்பத்திராதிபருக்கு எழுதி ஏற்பாடுசெய்துகொள்ளுங்கள். ஒருவேளை நாடகத் தொழிலில் பிரவேசிப்பது அயோக்கியதையானது என்பார்கள் சிலர். அது சில நாடகத்தாரின் நடவடிக்கையின்படி உண்மைதான்.

இதனால் நாடகம் அயோக்கியமானது என்பது பிசகு. ஐரோப்பா முழுமையும் நாடகத்தினால் பிரக்கியாதி யடைந்தவர்கள் அநேகர். அவர்களின் கல்வியும், பெருமையும் மெச்சத் தகுந்ததென்றே கேள்விப்படலாம். இராஜாக்கள் முதலியவர்களும் சந்தோஷிக்கக்கூடிய தொழில் என்றே நினைக்கிறார்கள். இதை வெறுப்பவர் உலகத்தில் மிருகங்களுக்குந் தாழ்ந்தவர் எனலாம். இந்தியாவிலும் நாடகம் எழுதியவர்கள் இராஜாக்கள் சந்தோஷிக்க நடத்தியே யிருந்திருக்க வேண்டும். இப்பொழுது அதிகமாய் எழுதுபவர்களையும் காணோம். ஒழுங்காய் நடத்துபவர்களையும் அநேகமாய் காணோம். இக்குறைவு பாடுகளெல்லாம் சீக்கிரம் சீர்திருத்தப்படவேண்டும். வாசிப்புள்ளவர்கள் வாசித்ததின்படிக்குப் பேசவும் அதன்படிக்கு நடக்கவும், இன்னும் கூடிய உயர்ந்த நாகரீகங்களுக்கு எட்டவும் அவாகொள்ளாமையால் நாடகத் தொழிலின் விருத்தி குறைந்து தாழ்ந்த நிலைமையில் எதையாகிலும் ஆடிக்கொண்டு எந்தபாட்டையாகிலும் பாடிக்கொண்டு சரித்திரப் பேரைமாத்திரம் வைத்துக்கொண்டு பூர்வீகநாடகங்களைவிடப் புதிதாய் ஒன்றும் ஏற்படுத்தச் சாத்தியப்படாமல் ஆடியதையே ஆடிக்கொண்டும் பாடியதையே பாடிக்கொண்டும் ஸ்டேஜில் படித்தோர் அந்தஸ்தில்லாமல் ஏதோ ஒருவித சந்தடிசெய்துவிட்டுப் பணம் வசூலிக்கும் ஆட்டங்களை டிராமா எனலாமா? உயர்ந்த டிராமாவில் உண்மை விளங்கும். இக்காட்சியைக் கண்டவர்கள் பயித்தியம் பிடித்தவர்கள் போல் அடுத்ததை எதிர்பார்ப்பார்கள். ஒவ்வொரு ரூபங்களையும் கண் இமையிடாமல் கவனிப்பார்கள். அவ்விஷயங்களுடன் ஆனந்திக்கும் சமயத்தில் ஆனந்திப்பார்கள். விசனிக்கும் சமயத்தில் விசனிப்பார்கள். கோபிக்கும் சமயத்தில் கோபிப்பார்கள். ஸ்டேஜில் இவ்விதமாய் நடக்கும் ஒவ்வொரு விஷயங்களுடன் ஒத்

துமையாய் மனதைச்செலுத்தி மெய்மறந்து மனமும் அறிவும் கலந்து அநுபவிக்கும் செயலுக்கே பிரத்தியட்சமான பேரானந்தம் எனலாம். இவ்விதப் பேரானந்தத்தினால் உலகத்திலுள்ள மானிட ஜென்மங்களை யெல்லாம் மயக்கி நமது வசமாக்கி உலக விவகாரங்களுக்கு வேண்டிய குறைவுபாடுகளை யெல்லாம் பூர்த்திசெய்துகொள்ள சாத்தியப்படும்.

கவனியுங்கள். இப்படிப்பட்ட மயக்கத்தக்கத் தொழில் நமது தொழில் செய்யும் ஜாதியர்க்குள்ளே நிறம்பி யிருக்கின்றனவாகையால் உலகவதந்தியின் விகர்ப்பம் மனதில் கொள்ளாமல் எத்தொழிலைச் செய்தாலும் உண்மை தவறாமல் செய்வதே உயர்ந்த தொழில் என்று உறுதிகொண்டு நாடகத் தொழிலுக்குத் தகுதியுள்ள விஸ்வகர்மாக்கள் உடனே இப்பத்திராதிபருக்கு எழுதுங்கள்.

* * *

வார்ப்படத் தொழில்.

சாதாரணமாய் வார்ப்புவேலைகள் கருவு சம்பந்தமான வேலைகள் (1) என்றும், சரக்கு சம்பந்தமான வேலைகள் (2) என்றும், இரண்டு முக்கியப் பிரிவினைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய ஷாப்புகளில் இரண்டு கூட்டமானத் தனித்தனி வேலைக்காரர்கள் உண்டு. சிறிய யிடங்களில் மவுல் செய்கிறவர்களே சரக்குகளை உருக்கிக்கொள்வது வழக்கம். சரக்குத் தயாராய்க் கலந்துக் கட்டிக்கட்டியாய் விற்கிறதிலிருந்து வாங்கி உபயோகிப்பதும் அல்லது வார்ப்பிக்கிறவர்களே கலந்துக் கொள்வதும் வழக்கம். தயாராயிருக்கிற சரக்குகளை வாங்கி வார்ப்படம் செய்வது சௌகரியம். ஆனால் நாமே கலந்துகொள்வது வெகுசகாயமாய் முடியும். அநுபவமுள்ள வேலைக்காரர்கள் வேலைக்குத் தக்கபடி முன்பின் மிகுதியாயுள்ள துண்டு துணிக்கைகளை யெல்லாம் உபயோகப்படுத்தி வேலைக்குத் தக்க உலோகக்கலப்பை ஏற்படுத்திக் கொள்வார்கள். ஐரோப்பியர்கள் அலுமினியம் பிரான்சு என்ற கலப்பைப் பலவிதமாய் உபயோகப்படுத்துகிறார்கள். அதில் அலுமினியம், செம்பு, பலவிதமான அளவுகளாகக் கலக்கப்படுகின்றன. மெத்த கெட்டியான கலப்பு வேண்டுமானால் 100-க்கு 11 அலுமினியமும் மற்றதுகளுக்கு ஒன்றேகாலிலிருந்து 10 வரையிலும் சேர்க்கப்பட்டு வருகின்றன.

100,க்கு 10 சேர்க்கிற் கலப்பு 1 சதுர இஞ்சுக்கு நூறாயிரம் பவுன் உறுதியைக் கொடுக்கின்றன. ஆனால் பித்தளையைப் போல் இரண்டுபங்கு அதிகமாய்ச் சுருங்கும். இந்தச்சரக்கு சீக்கிரம் கட்டிப்போகின்றபடியால் வார்ப்பட வாய்கள் பெரிதாய் வைக்கவேண்டியது அவசியம். சரக்குகள் முழுமையும் ஊற்றியாகும் பரியந்தரம்சரக்கு வார்ப்புவாயில் கட்டிப்போகாமலிருக்கவேண்டிய முன்சாக்கிரதையுடன் வார்ப்பிக்கவேண்டியது. பெரிய உள்ளுண்டை வைக்கும் கருக்கள் வார்க்கும்போது சரக்குகள் வெடிப்பதைத் தடுப்பது மிகக் கஷ்டம். இது மணல், சாம்பல் இரண்டை அறைத்துக் கொஞ்சம் பசையினால் கலந்து ஏற்படுத்தப்பட்ட உள்ளுண்டையை நன்றாய் வேகவைத்து வார்ப்பதினால் தடுக்கலாம். மேற்சொல்லிய அலுமினியம் கலப்பு வெண்கலம், மூசையிலிருந்து கருவில் ஊற்றும்பொழுதே வெகுசீக்கிர

த்தில் அலாம்பரப் தெளிவுமாறி ஏடுகட்டுவதுண்டு. இந்த ஏடு அல்லது தோல் போன்ற சிட்டம் மவுலினுள் புகுந்தால் மேல்மட்டத்தில் அழுக்குப் படிந்தாற் போலிருக்கும். இது அநேகமாய் வார்ப்படத்தைக் கெடுக்கும். ஊற்றுகிறவர்கள் ஜாக்கிரதையா யிருந்தால் சரக்கில் உண்டாகும் ஆடையை விலக்கியே ஊற்றலாம். அலுமினியமும் தாமிரமும் உருக்கும்போது உயர்ந்த காய்ச்சலில்தான் ஆவியாகின்றமையால் வார்ப்படத்தில் சேதாரக்குறைவு அதிகமாயிராது. அலுமினியமும், செம்பும் கலந்த உலோகம் அநேகமாய் வெட்டையாய்தான் இருக்கும். அதை அநேக விசை உருக்கும் வரையில் அந்த கலப்பினுடைய சிரேஷ்ட குணங்களைப் பெறுவதில்லை. வார்ப்படம் லேசாயும் எங்கும் ஓரே கனமாயு மிருந்தால் சுத்தமாய்ப்பாயும். ஆனால் சில யிடங்களில் கனதியாயும் சில யிடங்களில் இலேசாயுமிருப்பதால் கனத்த யிடத்திலிருந்து சன்னமான யிடத்திற்குச் சரக்குகள் தாராளமாய் ஓடும்படி வழிகள் ஏற்படுத்தவேண்டியது. மெஷீன், இஞ்சின் முதலியவைகளின் பித்தளை பேரிங்குகள் மேற்கண்ட அலுமினியம் பிராஞ்சினால் செய்யப்படுகின்றன. அதன் கலப்பு அலுமினியம் 5 பாகம், செம்பு 95 பாகம் இத்துடன் வெள்ளீயம் 8 பங்கு சேர்ப்பதுமுண்டு.

சரியானவழி என்னவென்றால் 140 பவுன் மூசை உபயோகித்தால் 124 பவுன் செம்பை முன் உருக்கவேண்டியது. பிறகு 6½ பவுன் அலுமினியம் துண்டு துண்டாய்ச் சேர்க்கவேண்டியது. சரக்கு உருகி அடங்கி யிருக்கும்போது 10½ பவுன் சாதாரண வெள்ளீயக்கட்டியை சேர்த்து நன்றாய்க் கலக்கிக் கட்டிக்கட்டியாய் வார்த்துவிடவேண்டியது.

பித்தளை வார்ப்படங்கள் செய்யும்போது எவ்வளவு சரக்கு வேண்டுமோ அவ்வளவில் பாதிகத்தரிப்புத் துண்டுகள் எடுத்துக்கொண்டு மிச்சத்திற்கு உருக்கி ஊற்றியக் கட்டிகள் சேர்க்கவும். இதை உருக்கினால் நன்றாய்க் கலக்கி ஊற்றவேண்டியது. ஊற்றியக் கருவை நன்றாய் ஆறும் வரையில் தொடக்கூடாது. இது மற்றச் சரக்குகளைப்போல் சீக்கிரம் ஆறாது.

***

தேய்வுக்கு அறாத கலப்பு.

தேய்வுக்கு சீக்கிரம் அறாத பேரிங் முதலியதுகளுக்குத் தகுந்த கலப்புச் செம்பு வெள்ளீயம், அண்டிமொனி, துத்தநாகம், காரீயம் இவைகளில் எந்த மூன்றும் ஒரு கலப்பில் சேர்ப்பது அபூர்வமாயிருந்தபோதிலும் இருசுகளின் தேய்வைக் குறைக்கும்பொருட்டு பித்தளை பிரான்சு அல்லது வெங்கலத்தினால் செய்த உள்வாய்களை உபயோகிப்பது வழக்கம். உள்வாய்களின் உள்பாகத்திலும் ஒருவிதமான கொஞ்சம் மிருதுவான வெண்மை நிறமுள்ள கலப்பினால் லயனிங் செய்துமூடப்பட்டுமிருக்கும். அதினுடைய சீக்கிரம் உருகும் சுபாவீகத் தன்மையினால் அந்த வெண்மையான பேரிங் தேய்வடைந்ததாகக் காணப்பட்டால் அந்த லயினிங்கை மாத்திரம் உருக்கிவிட்டு மற்றொன்றை பரித்திசெய்வது வழக்கம். அதனால் பித்தளையோ அல்லது பிரான்சினாலோ செய்யப்பட்ட பேரிங்குகள் அநேககாலம் நீடிக்கும். சரக்குகள் காண்டிபோன்ற

இரும்பினில் உருக்கப்படும். சர்க்கரை அதிகச் சூடாக்கிவிட்டால் ஆவியாகி உலோகத்தின் சுபாவீகம் மாறித் தேய்ந்து சிட்டமாகும். அதுகளைப் பேரிங்குகளினுள் ஊற்றப்படாது.

இந்த வெள்ளை பேரிங்குகள் சாதாரணமாய் அதிக வேகமாய் ஓடும் யந்திரங்களுக்கு உபயோகிப்பதினால் இருசுகள் தேயாமலும், பித்தளைகள் சூடாகி ஒட்டிக்கொள்ளாமலும் தடுக்கின்றன. தேய்வுக்கு இடங்கொடாத இரண்டு நல்ல உலோகங்கள் 4 பவுன் செம்பு, 2 பவுன் அண்டிமொனி, 24 பவுன் வெள்ளீயம் இவைகளை ஒன்றாய் உருக்கியது ஒன்று, மற்றொன்று ஏறக்குறைய 78 பாகம் காரீயம், 21 பாகம் அண்டிமொனி, 1 பாகம் இரும்பு இவைகள் கடோரமான வேகத்திலும் அதிக சூடாவதில்லை.

வெண்கலம்.

வெண்கலம் மணி வார்ப்பிப்பதற்கு அநேகமாய் உபயோகப் படுத்துவது. இதில் முக்கியமாய்த் தாமரம், வெள்ளீயந்தான் சேரும். ஆனால் சாதாரணச் சரக்குகளில் இரும்பு, ஈயம், நாகம், அண்டிமொனி, மாங்கனீஸ் முதலியதுகளும் சேருவதுண்டு. வெண்கலம் கெட்டியாயும், அழுத்தமாயும், நெருக்கமாயும், பலமாயுமுள்ளது.

இதைப் பிரான்ஸ் வார்ப்பதுபோல் உபயோகப்படுத்தவேண்டும். செம்பை முதலில் உருக்கவேண்டியது. பிறகு ஈயம் சேர்க்கவேண்டியது. இவைகளிரண்டையும் நன்றாய்க்கலந்து பிறகு ஊற்றவேண்டியது.

பித்தளை.

வியாபாரத் தொழிலுக்குத்தகுந்த கலப்புப்பித்தளை எனப்படும். இவை செம்பும், நாகமும் பலவித அளவுகளில் சேர்க்கப்பட்டவை. சாதாரணமாய் உபயோகிக்கும் பித்தளையில் 60 பாகம் செம்பும் 40 பாகம் நாகமும், சிலசமயம் மற்ற உலோகங்களையும் வேலைக்குத் தக்கபடி வெகு கொஞ்சமாய்ச் சேர்ப்பதுண்டு. இந்த கலப்பினால் குற்றமில்லா வார்ப்படங்கள் செய்யக்கூடும். இது செம்பைப் போல் சீக்கிரம் கருக்காது. கெட்டியாயும், நெருக்கமுள்ளதாயுமிருக்கும். அதிக வேலைசெய்யத் தகுதியாயுமிருக்கும். சீக்கிரம் உருகும்.

செம்பிலும், நாகத்திலுமுள்ள அசுத்தங்கள் பித்தளை வேலையில் யாதொரு கஷ்டமும் கொடுப்பதில்லை. கடைச்சல் வேலைகளுக்கு 100 பவுன் சரக்கிற்கு ஒரு பவுன் காரீயம் சேர்த்துக்கொள்வது நலம். காரீயஞ் சேர்த்து உருக்கியச் சரக்கை ஊற்றும்போது ஒவ்வொரு தடவையும் நன்றாய்க் கலக்கவேண்டியது. இல்லாவிடில் ஈயம் பிரிந்துவிடும். சாதாரணத் தாழ்ப்பாள் ஆணித்தலை, கடைச்சல் முதலியவைகளுக்கு உபயோகிக்கும் சாதாரண பித்தளை 60 பாகம், செம்பு 42 பாகம், நாகம் நூற்றுக்கு ஒன்று ஈயம் சேர்த்து உருக்கவேண்டும். இது சூட்டிலும் சூடு தணிந்தபோதும் வேலைசெய்யும். இதை பிரென்சு கலப்பு எனப்படும். இங்கிலீஷ் கலப்பல் பித்தளையானது சாதாரண பித்தளையைவிட வலியுள்ளது. இதற்கு இரண்டு குணங்கள் உண்டு. கம்பி இழுக்கவும், தகடு செய்யவும் தகுதியாயிருப்பது

ஒன்று. குழாய் செய்வது மற்றொன்று. முதல் சொல்லியதற்கு 62 பாகம் தாமரம் 37 நாகம், வெள்ளீயமும், மற்றதற்கு 70 செம்பு, 29 நாகம், வெள்ளீயமும் சேர வேண்டியது. ஊற்றுவதற்குமுன் நன்றாய்க் கலக்கவேண்டியது.

***

பவுண்டரி வேலை பித்தளை.

பித்தளையின் கலப்புகளெல்லாம் அனுபவத்தில்தான் தெரியவேண்டும். ஆனால் அடியிற் கண்டவைகள் அனுகூலமாகவேயிருக்கும்.

சரக்கு உருகும்போது எவ்வளவு தெளிகிறதோ அவ்வளவு கஷ்டமாய் முடியும். (செம்பு கலப்பதற்கு) ஆகையால் மெதுவான பித்தளையைவிடக் கடினமான வெண்கலம் சேர்ப்பது சுலபம். ஏனென்றால் பித்தளையிலுள்ள நாகம் சீக்கிரம் ஆவியாய்ப் பிரிந்துவிடுகின்றது. எடையில் குறைவுபடுவதுடன் உருக்கிவந்த சரக்கின் சேர்மான அளவும் நிதானமில்லாமலிருக்கிறது. ஆனால் வெள்ளீயமும், செம்பும் சேதாரமில்லாமல் கலக்கும் அனுபவத்தில் சந்தேகமில்லாமல் ஒத்துவரும்.

மெதுவான பித்தளைகள் வேண்டுமானால் நேராய் நாகமும், செம்பும் கலப்பதைவிட, செம்புடன் பித்தளை சேர்ப்பது நலம். நாகத்துடன் செம்பு கலக்கவேண்டுமானால் செம்பை முன் உருக்கிக் கொஞ்சங் கொஞ்சமாய் நாகஞ் சேர்த்து ஒவ்வொரு தடவையும் கரித்தூளை மேலே தூவவேண்டியது. உடைந்தக் கண்ணாடியைக் கரித்தூசுக்குப் பதிலாக உபயோகித்தால் உருகியப் பித்தளை குறையாமலிருக்கும். சுலபமாய் உருகக்கூடிய உலோகங்களைத் துண்டு துண்டாய் உருகிய செம்பில் சேர்க்கும்போது ஒவ்வொரு துண்டும் ஈரமில்லாமல் சூடாயிருக்கவேண்டும். நீல புகைகளைக் கண்டவுடனே நிறுத்தாமல் உபயோகித்துவிடவேண்டும். உலோகங்களை முதல் கலந்து உருக்கிக் கட்டியாக்கிக்கொண்டு பிறகு உருக்கியவுடனே கருவில் ஊற்றிவிடவேண்டும். இந்தக் காரணத்தினால்தான் போதுமான அளவு பழய சரக்குகளைப் புதிதுடன் சேர்த்து உருக்குவது நல்ல வழக்கம் என்பது. நாகம் சேர்ந்தவுடனே கொஞ்சம் வெங்காரத்துண்டு மூசையில் போடுவதனால் நாகம் ஆவியாய்ப்போவது குறையும்.

பித்தளை கடைச்சல்களை உருக்கும்போது அதில் இரும்பு கடைச்சல் கலந்திருந்தால் நீக்கவேண்டும். அவைகளுடைய சேர்மானத்தால் பித்தளையைக் கடிசாகவும் மேல்மட்டம் சுத்தமில்லாமலும் செய்யும். ஆகையால் முன்னதாக காந்தக்கட்டியினால் அதிலுள்ள இரும்புகளையெல்லாம் எடுத்துவிட வேண்டியது.

***

பித்தளைக் கலப்புடன் உபயோகிக்கும் உலோகம்.

அலுமினியம் மற்றெல்லா உலோகங்களைவிட இலேசானது, மிருதுவானது, நன்றாய்ப் பாயும் சுபாவிகமுள்ளது. இதினுடைய வளையும் சுபாவிகமும், ஒட்டும் சுபாவிகமும் வெள்ளிக்குச் சமானம். எவ்வளவு காய்ச்சினாலும் குறைவதில்லை. காற்றினால் மாறுதலடைவதில்லை. விஷசம்பந்தமில்லாதது. கடுசாக்கும் குணம் இதில் உள்ளமையால், இது மிகப் பிரயோஜனமுள்ள கலப்பாகின்றது. இதனால் மிருதுவாயுள்ள உலோகங்கள் கடினமாயும் வெட்டையாயுமிருக்கின்றன. பிஸ்மத் என்னும் உலோகம் கடினமான பழுத்த வெண்மை நிறமுள்ள உலோகம். குறைந்த தீயில் உருகும். சுருக்காய் உருகும். கலப்புகளுக்கு இது வெகுப் பிரயோஜனமுள்ளது.

செம்பு—சிவந்த நிறமுள்ளது. வேலைக்கு இணக்கமுள்ளது. இது நெருப்பைப்போல் காய்ந்திருந்தால் ஆக்ஸிஜன் என்ற சத்துடன் சுருக்காய்ச் சேர்ந்து சிட்டமாகின்றன. இதனால் உருகியச் செம்புப் போர் போராய் ஊற்றுவதற்குத் தகுதியற்றவையாகின்றன. அன்டிமொனி, நிக்கல், ஈயம் முதலியவைகளின் கலப்பினால் தாமரம் வெட்டையாயும், கடினமாயுமாகின்றன.

ஈயம்—நீலப்பழுப்புள்ள நிறமுள்ளது. இது பாரம் உள்ளதாயும், மிருதுவாயும், சுலபமாய் உருக்கக்கூடியதாயுமுள்ளது. வெள்ளி, செம்பு முதலியவைகள் கொஞ்சம் இதில் கலந்திருந்தபோதிலும் அநேகமாய்க் கடையில் கிடைப்பது சுத்தமாகவேயிருக்கும்.

நிக்கல்—என்பது பிரகாசமான வெண்மை நிறமுள்ளது. மிருதுவானது. வேலைகளுக்கு இணக்கமானது. நெருப்பில் சீக்கிரம் கருப்பதில்லை. விலைக்குக் கிடைக்கும். நிக்கல் அநேகமாய் சுத்தமாயுள்ளது. ஆனால் கொஞ்சம் இரும்பு, கந்தகம் முதலியன கலந்துள்ளவையாயுமிருக்கும்.

வெள்ளீயம்—பிரகாசமான வெண்ணிறமுள்ளது. அதிக மிருதுவானது. நன்றாய் உருகும் சுபாவிகமுள்ளது. இது மூன்றுவித மாதிரிகளாக அனுப்பப்படுகின்றன. சாதாரணமாகவும் சுத்தப்படுத்தியதாகவும், பொரபொரப் புள்ளதாயும் வர்த்தக ஈயமானது அநேகமாய்க் கொஞ்சங் கலப்பாய்தானிருக்கும்.

நாகமானது வெண்நீலமுள்ள உலோகம். சாதாரணமாய்க் கடினமாயும் வெட்டையாயும் உடைத்தால் பட்டைகள் அமைந்துள்ள சிறு பொடிகளாகக் காணப்படும். சாதாரணமாய் நாகத்தைப் பரிசோதிக்க வேண்டுமென்றால் உடைத்தே பார்க்கவேண்டும். உடைத்த கண்ணறு பிரகாசமாயும், நன்றாய்ப் பட்டைகள் ஏற்பட்டுள்ளதாயுமிருந்தால் நல்லசரக்கு எனலாம். சாதாரண வர்த்தக நாகத்திலுள்ள ஈயமானது அநேகமாய் 100-க்கு ஒன்று எனக் கணக்கிடப்படுகின்றது.

(தொடரும்.)

***

சோம பசுபந்த யாகம்.

விஸ்வகர்ம சங்கதியாராகிய பிரம்மஸ்ரீ ரா. சதாசிவ உபாத்தியாயர் அவர்கள் சோம பசுபந்த யாகமென்று சொல்லப்பட்ட யாகம் ஒன்று கும்பகோணத்தில் பிங்கள௵ ஆவணிமீ த்தில் நடத்தப்போவதாக பத்திரங்கள் அச்சிட்டு வெளிப்படுத்திப் பல பட்டணங்களிலும் பல கிராமங்களிலுமுள்ள விஸ்வகர்ம வம்ஸத்தவர்களிடத்தில் பணம் வசூல்செய்து வருகிறார்கள். இந்த யாகத்தைப் பூர்த்தி செய்வதற்கு (5000) ஐயாயிரம் ரூபாய் பிடிக்குமென்று சொல்லுகிறார்கள். விவேகிகளாயுள்ளவர்கள் எந்தக்காலத்தில் எந்தக் காரியம் செய்தால் சர்வத்திராளுக்கும் க்ஷேமம் உண்டாகுமென்று யோசித்து அப்படிப்பட்ட காரியத்திற் பிரவேசிப்பார்கள். இந்த யாகம் நடத்துவதினால்

யாருக்கு என்ன பிரயோஜனத்தைத் தருமென்று உத்தேசித்து இவ்வளவு பெருத்தப் பணச்செலவு செய்ய ஆரம்பித்திருக்கிறார்களென்பது எமக்குத் தோன்றவில்லை. ஊரார் பணத்தை வசூலித்து அனுவசியமான காரியங்கள் செய்வதைவிட சும்மாயிருந்தால் ஜனங்கள் தாங்கள் கஷ்டப்பட்டுச் சேகரித்தப் பொருளை வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தி தாமும் தமது பந்துமித்திரர்களும் க்ஷேமமடைவார்கள். 1914௵ ஆகஸ்டு௴ 4௳ முதல் மூன்றுவருஷ காலமாய் ஐரோப்பாவில் நடக்கும் யுத்தக் காரணமாக இத்தேசத்தில் அரிசி முதலிய தான்யங்களும் மற்ற சாமான்களும் ஒன்றுக்கு இரண்டாக விலை ஏற்றமடைந்திருப்பதினால் தனவந்தர்கள் முதல் சாதாரண ஜனங்கள் ஈறாக யாவரும் மிகுந்த கஷ்டத்தை அனுபவிக்கும் இக்காலத்தில் ஐய்யாயிரம் ரூபாய் செலவுசெய்து இந்த யாகம் செய்வதினால் விஸ்வகர்ம வம்சஸ்தர்களாவது மேன்மை யடைவார்களா? இதற்கு முந்தி இவர்கள் ஊர்பணத்தை வசூலித்து எவ்வளவோ பணச்செலவு செய்து இரண்டு யாகங்கள் நடத்தினார்கள். இந்த யாகங்கள் செய்ததினால் விஸ்வகர்ம சந்ததியார்கள் என்ன மேன்மை அடைந்தார்களென்று எமக்குத் தோன்றவில்லை. இப்படிப்பட்ட அதிகப் பணச்செலவான யாகங்கள் நடத்தக்கூடிய பிரபுக்கள் தற்காலத்தில் யார் இருக்கிறார்கள்? சாதாரணமாக விஸ்வகர்ம வம்சத்தவர்கள் செய்யவேண்டிய ஆசார அனுஷ்டானங்களையும் மற்ற வைதீகக் காரியங்களையும் சரிவர நடத்துவதற்கு யோக்கியதையுள்ள பௌரோகிதர்கள் பண்டிதர்கள் முதலானவர்களில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இவ்விதப் பெரிய யாகத்தைச்செய்யப் பிரவேசித்திருப்பது என்ன காரணமோ தெரியவில்லை. சற்றேறக்குறைய ஐம்பது வருஷங்களுக்குமுன்னர் யிருந்த விஸ்வகர்ம சந்ததியிலுதித்த புண்ணியவான்கள் வைதீகக் காரியங்களை சரிவர நடத்தக்கூடிய யோக்கியதை யுள்ளவர்களாக யிருந்தார்கள். அவர்கள் இவ்வித வைதீகக் கர்மங்களைச் செய்யத் தொடங்கிய காலத்தில் இவர்களுக்கு விரோதிகளா யிருந்த சிலர் ஒன்றுசேர்ந்து பொறாமை யென்னுந் துர்க்குணத்தினால் நீங்கள் வேதோந்தகமமாகியக் காரியங்களைச் செய்யக்கூடாதென்று ஆட்சேபித்தார்கள். அவ்வித ஆக்ஷேபணைகளுக்குக் கொஞ்சங்கூட அஞ்சாமல் திடவைராக்கியத்துடன் அவர்களிடத்தில் சாஸ்திரோத்தமமாக வாதஞ்செய்தும், போலீஸ் கோர்ட்டு முதலிய நியாயஸ்தலங்களுக்குச் சென்று வியாஜ்யஞ்செய்தும் வைதீகக் கர்மங்கள் செய்வதற்கு விஸ்வகர்மாக்கள் யோக்கியதை யுள்ளவர்களென்று தீர்ப்புப்பெற்று ஜயமடைந்திருக்கிறார்கள். அதுகள் சம்பந்தமாக அச்சிட்டுள்ள நூல்கள் இரதகாராதிகரண விசாரமென்றும் சித்தூர் ஜில்லா அதாலத்து கோர்ட்டு தீர்ப்பு யென்றும் சேலம்ஜில்லா தீர்ப்பு யென்றும், பங்கர் அபிஷேகத் தீர்ப்பு யென்றும், வேலூர் தீர்ப்பு யென்றும் விஸ்வகர்மான்வய பூஷணம் யென்றும் இன்னும் இவைபோன்ற பல நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். இவர்கள் குலாபிமானிகளாகவும், வேத சாஸ்திரங்களைச் சந்தேக விபரீதமில்லாமல் கற்றுணர்ந்த பண்டிதர்களாயு மிருந்த

படியால் தமக்கு விரோதிகளாய் இருந்தவர்களுக்குச் சற்றேனு மஞ்சாமல் வெகு சிரமப்பட்டு அவர்கள் தடுத்தபோதெல்லாம் தக்க சமாதானங்களைச் சொல்லி ஜெயமடைந்து காரியசித்தி பெற்றார்கள்.

இக்காலத்தில் சாதாரணமாகிய பௌரோகிதங்கூட செய்வதற்குத்தகுந்த உபாத்தியாயர்களில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பது யாருக்குந் தெரியும். ஆகையால் விஸ்வகர்ம குலத்துச் சிறுவர்களுக்கு சமஸ்கிருத பாடசாலைகள் பல பட்டணங்களிலும் கிராமங்களிலும் யேற்படுத்தித் தக்க பண்டிதர்களை உபாத்தியாயர்களாக நியமித்து பௌரோகிதம் முதலிய காரியங்கள் செய்வதற்கும் கோவில்கள் குளங்கள் மண்டபங்கள் கட்டுவதற்கும் வாகனங்கள் தேர்கள் செய்வதற்கும் எந்தெந்த சாஸ்திரங்களைப போதிக்கவேண்டுமோ அவைகளைப் படிக்கும்படிச்செய்து தக்கவாறு கற்பித்து விருத்தி செய்தால் புகழும் புண்ணியமும் உண்டாகும். முற்காலத்தில் எல்லா தானியங்களும் மற்றச் சாமான்களும் நயமாயிருந்தபடியால் ஜனங்கள் யாவரும் கரும்பு யென்பது இன்னதென்று தெரியாமல் தங்கள் தொழிலைச் சரியாய் நடத்தித் தக்கச் சம்பளம்பெற்று க்ஷேமமா யிருந்தபடியால் நமது ராஜாக்கள் காலத்திலும் மற்றஜமீன்தார்கள் முதலானவர்கள் காலத்திலும் கட்டப்பட்ட கோவில்கள், மண்டபங்கள், குளங்கள் முதலானவைகள் கிலமாய்ப் போனவைகளை புதுப்பித்து வந்தார்கள். அவ்வாறில்லாமல் எல்லா வஸ்துக்களும் கிராக்கியாய் விற்கப்படுகின்ற இக்காலத்தில் நடத்தவேண்டிய தர்மம் என்னவென்றால் ஏழைச் சிறுவர்களுக்குத் தர்ம இலவசமாய்க் கல்வி போதித்தல். பகற்காலத்தில் தங்களுடைய ஜீவனத்திற்காக ஏதாவதொருத் தொழிலைச் செய்துப் பிழைக்கும் சிறுவர்களுக்குத் தர்ம இராப்பாடசாலைகள் வைத்துக் கல்வி போதித்தல், தொழிற்சாலைகள் ஏற்படுத்தி நூதனமான தொழில்களைக் கற்பித்தல், இத்தொழில்களில் விருத்தியடைந்தச் சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் தக்க சம்பளங் கொடுத்து நூதனமானச் சாமான்கள் செய்து இத்தேசத்தாருக்கும் அன்னியதேசத்தாருக்கும் விற்றுக் கூட்டு வியாபாரம் முதலானவைகளை விருத்திசெய்தல் முதலியனவாம்.

இவ்வாறான காரியங்கள் செய்வதைவிட்டு ஏழை ஜனங்களைக் கஷ்டப்படுத்தி பணத்தை வசூல்செய்து ஆடம்பரமாகச் செலவுசெய்து ஒருயாகம் செய்துவிட்டால் விஸ்வகர்ம வம்சத்தாராவது மற்றவர்களாவது என்ன மேன்மை யடைவார்கள்? இப்படிப்பட்டக் காரியங்கள் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னர் எம்மாற் கூடிய மட்டும் சொல்லித் தடுத்துப்பார்த்தும் கேட்காமல் ஷை யாகம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

முதலாவது இந்த யாகத்தைச்செய்ய ஆரம்பித்தவர்கள் வேதாகம சாஸ்திரப் பண்டிதர்களையும் மற்ற கனதனவான்களையும் தக்கவாறு யோசித்து ஆரம்பித்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாமல் மற்றவர்களை யோசிப்பது அனுவசியமென்று கருதித் தாங்களே ஆரம்பித்தது அவர்களுடைய குற்றமாகும். இரண்டாவது ஷை சாஸ்திரப் பண்டிதர்களையும் மற்ற தனவந்தர்களையும் யோசிக்காமல் இப்படிப்பட்ட பெருத்தப் பணச்செலவான யாகத்தைச்செய்ய ஆரம்பித்தவர்

களுக்குத் திரவிய சகாயஞ்செய்ய முற்பட்டவர்களின் குற்றமாகும். "சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதி யில்லையா" வென்கிற பழமொழியின்படி யாதாவொரு காரியத்தைச் செய்ய முன்வந்தவர்கள் பலவித லாபங்களைக்கருதியே யிருப்பார்களென்பது திண்ணம்.

ஆகையால் அப்படிப்பட்ட சுயநலப்பிரியர்களுக்குப் பொருட்சகாயஞ் செய்வது மற்றவர்களுடைய தப்பிதமென்பதற்கு ஆட்சேபமில்லை. மதியூகிகளாயுள்ளவர்கள் இப்படிப்பட்ட அனுவசியமான காரியங்களிற் பிரவேசிப்பவர்களுக்கு ஒருகாலும் எவ்வித சகாயமுஞ் செய்யமாட்டார்களென்பது நாம் சொல்லாமலே அமையும். யாராவதொருவர் உலோகோபகாரமான காரியங்களைச் செய்யவேண்டுமென்னும் நல்லெண்ணத்துடன் ஆரம்பித்தால் அவருக்கு ஒற்றுமையாக யாருந் துணை சேருவது கிடையாது. அப்படி ஒருவரிருவர் துணை சேர்ந்தாலும் மற்றவர்கள் அவர்களுக்கு ஷை காரியஞ்செய்ய ஆரம்பிக்கவும் மேல் பலவித குற்றங்களைச் சுமத்திச் சகாயஞ் செய்யவொட்டாமல் தடுத்துவிடுகிறார்கள். இவர்கள் சொல்லுக்குச் செவி கொடுக்காமல் சேர்ந்தவர்களும் ஒற்றுமையுடன் அந்தக் காரியம் முடியும்வரையில் சகாயஞ் செய்வதில்லை. ஏனென்றால் இந்தக் காரியம் சரிவர நடக்கும்பட்சத்தில் இதை ஆரம்பித்தவருக்குப் பேரும் புகழும் உண்டாகுமேயன்றி நமக்கென்ன பிரயோஜனமுண்டாகப் போகிறதென்கிற கெட்ட எண்ணமுடையவராய் பின்வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட துர்எண்ணங்கள் துர்அபிப்பிராயங்களை யெல்லாம் வேரோடு களைந்துவிட்டு நல்லெண்ணம் நல்லபிப்பிராயமுடையவர்களாய் நம்மவர்கள் ஒற்றுமையுடனும், விடாமுயற்சியுடனும், ஒன்று சேர்ந்து உழைத்தால்தான் இந்த தேசம் முன்னுக்குவரும்.

சென்னைமாநகரில் பதினெட்டு பேட்டைகளிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். இவற்றில் திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம் முதலிய ஊர்களில் சுஜாதியைச்சேர்ந்த பௌரோகிதர்கள் போதுமானவர்கள் இல்லாக்குறைவினால் விப்பிராமணர்களைக்கொண்டே சுபாசுப காரியங்களை நம்மவர்கள் நடத்தி வருகிறார்கள். இந்த மாதிரியாக இன்னும் எந்தெந்த ஊர்களில் நடக்கிறதோ நமக்குத் தெரியாது. இதைப்பற்றி அதிகமாய்க் கவனித்துக் கூடிய சீக்கிரத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்யும்படியாய் வேண்டுகின்றோம்.

***

பலகுறிப்புகள்.

பத்திரிகை தவறி விடுதல்

நமது தொழிற் பத்திரிகை காகிதம் முதலியவை சுலபத்தில் அகப்படக்கூடாத இவ்வளவு கஷ்ட காலத்தில் கூட பிரதி மாதமும் தவறாமல் பத்திரிகையை அச்சிட்டு அனுப்பினால் போஸ்டாபீசுக்காரர்கள் விலாசக்காரர்களுக்கு கிரமமாய் சரிவர செலுத்தாமல் நமது சந்தாதேயர்கள் தமக்கு பத்திரிகை இம்மாதம் கிடைக்கவில்லை யென்பதாக கம்பிளெய்ண்டு செய்கிறார்கள். இதற்குக் காரணம் போஸ்டு பியூன்களோ மற்றெவர்களோ, அனுப்பப்படுகிற பத்திரிகைகளை தமது உபயோகத்திற்கோ அல்லது தம்முடைய சிநேகிதர்களின் உபயோகத்திற்கோ எடுத்துக் கொள்ளுகிறார்கள் போல் தோன்றுகிறது. இன்னார் தான் இப்படி செய்கிறார்கள் என்று கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. யாராயிருந்தாலும் நமக்கென்ன மானிடராய்ப் பிறந்தவர்கள் யாவரும் நமது சகோதரர்கள் தான் இவர்கள் இந்த சுவற்ப விஷயத்திலே நடுவு நிலைமைதவறி நடப்பார்களாயின் இவர்கள் வேறு விஷயங்களில் எப்படி உண்மையாய் நடப்பார்கள் இதனால் தான் மணி ஆர்டர்கள் பார்சல்கள் முதலானவைகளை விலாசக்காரர்களுக்கு சரியாய் செலுத்தாமல் போஸ்டு மாஸ்டர்களும் பியூன்களும் அடிக்கடி அகப்பட்டுக்கொண்டு தண்டனை யடைகிறார்கள். அவ்வாறு தண்டனை அடைந்தும் மற்றவர்களுக்கு தாங்கள் செய்கிற காரியம் சரியல்லவென்று தோன்றுகிறதில்லை. அகப்பட்டுக் கொண்டவர்கள் முட்டாள்கள் நாம் ரொம்பவும் கெட்டிக்காரர் நாம் ஒருக்காலும் அகப்படமாட்டோமென்று எண்ணிக் கொண்டு இவ்விதம் நடத்துகிறார்கள். மனிதர்களுக்கு தெரியாமல் செய்கிற தவறுகள் கடவுளுக்குக் கூடவா தெரியாது? அரசன் அன்று சொல்லுவான் தெய்வம் நின்று சொல்லும் என்னும் பழமொழிப்படி கடவுளுக்கும் பொறுக்காத அக்கிரமங்கள் செய்தால் மேல் அதிகாரிகளிடத்தில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அகப்பட்டுக்கொண்டு தகுந்த தண்டனை யடைவார்களென்பது திண்ணம்.

***

நம்மவர்களின் நிலைமை.

ஒவ்வொருவரையும் மாத சம்பளத்திற்கு யாதாவதொரு வேலை பார்க்கும்படி வைத்துக்கொண்டால் அவர்கள் தங்கள் வேலைகளைச் சரியாக செய்கிறார்களா வென்று தாம் மிகுந்த கவனத்துடன் பார்த்துவரவேண்டியது நமது கடமையாயிருக்கிறது. சம்பளம் வாங்குகிறோமே நம்மாற் கூடிய மட்டும் நமது வேலைகளை சரியாய் செய்து விட்டுப்போவோமென்கிற வெண்ணமே யில்லாதவர்களா யிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு கடவுள் சகாயம் எப்படி கிடைக்கும். ஓர் ஆள் வேண்டுமென்று அழைத்தால் அந்த உத்தியோகம் நடத்துவதற்கு அதிக வேலையிருக்குமா? சம்பளத்திற்கு அதிகமாக மேல் வரும்படி என்ன கிடைக்கும் எத்தனை மணி காலம் வேலைசெய்ய வேண்டும் வேலை கஷ்டமா யிருக்குமா? அல்லது சுலபமா யிருக்குமா? என்பதாக பல எண்ணங்களுடையவரா யிருக்கிறார்கள். இவர்கள் உண்மையாகக் கஷ்டப்பட்டு சம்பாதித்து தாமும், தம்மைச் சேர்ந்த பெண்சாதி பிள்ளைகளையும் சம்ரட்சணை செய்ய வேண்டுமென்கிற வெண்ணம் கொஞ்சங்கூட கிடையாது. ஒரு வேலையும் செய்யாமல் சும்மாய் போய் உட்கார்ந்திருந்தாவது தூங்கி விட்டாவது சம்பளம் மாத்திரம் தவறாமல் வாங்கி வரவேண்டுமென்கிற வெண்ணம் நம்மவர்களில் அநேகரிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு பரம கருணாநிதியாகிய கடவுளின் கிருபை எப்படி கிடைக்கும்.

இப்படிப்பட்டவர்களுக்கு உபதேசிக்க வேண்டிய முறைப்படி தக்கவாறு உபதேசித்து சத்தியத்தைச் சொல்லி பட்சபாதமில்லாமலும் மோசமில்லாமலும் ஒத்துமையாகவும் உண்மையாகவும் நடக்கும்படி சீர்திருத்தம் செய்து அவ்வித நிலை

மைக்கு வந்த பிறகுதான் நம்மவர்களுக்கு சர்வ சுதந்தரமும் கடவுளாலும், இராஜாங்கத்தாராலும் கொடுக்கப்படும் நடுவு நிலைமை தவறாமல் நடக்காதவர்களுக்கு சுயஆட்சி கொடுத்தால் அநேக உட்கலகங்களும் அதனால் ஜனங்களுக்கு பலவிதமான கஷ்டங்களும் ஏற்படும் எல்லாம் வல்ல இறைவனாகிய கடவுள் கண் திறந்துபார்த்தால் நமக்கு எல்லா நன்மையும் வெகு சீக்கிரத்தில் உண்டாகுமென்பதற்கு சந்தேகமே கிடையாது. பாரபட்சமாய் நடப்பவர்களை உயர்ந்த அந்தஸ்தில் பெரிய உத்தியோகஸ்தராக ஏற்படுத்தி விட்டால் அவர்கள் தமக்குத் தாழ்ந்த அந்தஸ்தி லுள்ளவர்களையும் மற்றவர்களையும் தாம் நியாயப்படி நடத்தாமல் பல அதிக்கிரமங்களையே செய்து கஷ்டத்தை உண்டு பண்ணுவார்கள். பசுக்கூட்டத்திற் சேர்ந்து அவற்றைக் கொன்று தின்பதற்கு புலியானது பசுத்தோலை போர்த்துக் கொண்டு தினம் ஒவ்வொரு பசுவாகக் கொன்று கடைசியில் எல்லாவற்றையும் நாசம் செய்வது போலாகும்.

***

சாமியார்கள்.

விஸ்வகர்ம வம்சத்தில் பிறந்த குலச் சிரேஷ்டராயுள்ள அநேகர்கள் சந்நியாசிகளாகவும் சாமியார்களாகவும் இருக்கிறார்கள். "சந்நியாசிக்கும் ஜாதி அபிமானம் போகாது" என்னும் ஆன்றோர் வாக்கியப் பிரகாரம் இவர்கள் தாம் பிறந்த ஜாதியின் முன்னேற்றத்திற்காக யாதொன்றும் செய்து வருவதாகத் தோன்றவில்லை. இவர்கள் தக்க குருமார்களை அடுத்து நற்சாஸ்திரங்களை வாசித்திருப்பதினால் என்ன பிரயோஜனம்? அந்தரங்கத்தில் ஆத்ம தெரிசனம் செய்யும் மார்க்கத்தில் தியானம் சமாதி முதலியவைகளை அப்பியசித்து வந்தாலும் பகிர்முகத்தில் சுயதேசத்தார் சுயஜாதியார் முதலியவர்கள் மேல் நிலைமையை யடையவேண்டிய மார்க்கங்களை அவர்களுக்குப் போதித்துச் சீர்திருத்தும்படியான மார்க்கங்களில் பிரவர்த்திக்கவேண்டும்.

இவர்களிற் சிலர் வெளிவேஷதாரி (இராவண சந்நியாசி)களாயில்லாமல் உண்மையாக நல்லொழுக்க முடையவர்களாய் இருந்தால் அவர்களுக்கு மற்ற இல்லறத்தவர்கள் சகாயஞ்செய்வது கிடையாது. சில நாட்களுக்கு முன்னர் சமாதியடைந்த ஸ்ரீமத் மாணிக்கசுவாமிகள் இந்த விஸ்வகர்ம வம்ஸத்திற்காக எவ்வளவோ சிரமமெடுத்துப் பல சாஸ்திரங்களை தேக கஷ்டமும் பணச்செலவும் பாராமல் தமிழில் எழுதிவைத்திருக்கிறார்கள். அச்சாஸ்திரங்களை அச்சிடும் விஷயமாக நமது பத்திரிகையில் பலதரம் எழுதியிருந்தும் அவைகள் என்ன சாஸ்திரங்கள், அவைகளைப் பார்க்கவேண்டும் எமக்குக் காட்டுங்களென்று எம்மை இதுவரையிலும் விஸ்வகர்ம வம்சத்திற் சேர்ந்த புண்ணிய புருஷர்கள் நேரிலாவது கடித மூலியமாகவாவது கேட்கவில்லை. இப்படிப்பட்ட குலாபிமான மில்லாதவர்களால் நம்ஜாதியும் நம்தேசமும் எவ்வாறு மேல் நிலைமையை யடையும்? இவர்களுடைய குணமறிந்துதான் நன்றாய் வாசித்து உணர்ந்தவர்களுங் கூட ஒரு சாஸ்திரமும் எழுதாமல் சும்மாயிருக்கிறார்கள். நம்மவர்களிற் சிலர் தேக சிரமத்திற்கஞ்சினாலும் திரவிய சகாயமாவது செய்கிறார்களா வென்றால் அதுவுமில்லை. பொருட்சகாயமும் செய்யாமல் தேக கஷ்டமும் படாமலிருந்தால் எந்த காரியந்தான் சித்திபெறுமென்பது எமக்குத் தோன்றவில்லை. இனிமேலாவது நங்குலத்தவர்கள் இப்படிப்பட்ட விஷயங்களில் ஊக்கத்துடன் உழைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

***

ஓர் குலாபிமானியின் உதவி.

பிரம்ஹஸ்ரீ T. S. சுகானந்த ஆச்சாரியார் அவர்கள் பொன்வேலை வைத்திய லிங்கம்பிள்ளை வீதி, குண்ணூர்.

இப்பெருந்தகையார் மிக்க குலாபிமான முள்ளவராகத் தோன்றுகிறது. இவருடைய குணநலமும் குலாபிமானமும், நன்னோக்கமும், ஒத்துமையும் திருச்சினாப்பள்ளியில் நடத்தி விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்சுக்கு விஜயமாயிருந்தபோது அவர்செய்த சுருங்கச்சொல்லல் விளங்க வைத்தலாகிய சிறிய உபந்நியாசத்தினால் எமக்கு நன்றாய்த் தோன்றியது. அக்கான்பரன்சில் செய்த சில தீர்மானங்களில் தொழிற்கல்விச்சாலை ஏற்படுத்தவேண்டுமென்பது ஒன்று அதற்காக திரவிய சகாயம் வேண்டுமென்று கேட்டபோது ஐந்து ரூபாய் கொடுப்பதாக வாக்களித்திருந்தனர். கான்பரன்சு டெலிகேட்டு கட்டணம் இரண்டு ரூபாயும் சேர்த்து ஆகஸ்டு மாசம் 8உ ஏழு ரூபாய் நம் விலாசத்திற்கு மணியார்டர் செய்திருக்கிறார். கான்பரன்சு கமிட்டியார் ஏன் பணம் அனுப்பவில்லையென்று ஒருவரும் கேட்காமலே இவ்பணம் அனுப்பியிருப்பதினால் இவருடைய நற்குணம் நன்றாக விளங்குகிறது.

ஷை தொழிற் கல்விச்சாலைக்கென்று ஷை விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்சு சபையார்களால் ஏற்படுத்தப்பட்ட கனவான்கள் இப்படிப்பட்ட குலச் சீர்திருத்தமான பொது விஷயத்திற்கு உதவக்கூடியப் பொருளை வசூலிப்பதற்கு முயற்சி செய்யாமலிருப்பதற்குக் காரணம் தெரியவில்லை. யாவரும் இவரைப்போல் கேட்காமலே பணம் அனுப்புவார்களென்கிற நம்பிக்கையோ வென்னமோ தெரியவில்லை. மேற்கூறியத் தொழிற் கல்விச்சாலையை ஏற்படுத்தி நடத்துவதற்கு ஜவாப்தாரர்கள் இன்னாரென்று தெரியாமலேயே ஷையார் பணத்தை எமக்கு அனுப்பியிருக்கிறார். இதற்குக் கமிட்டிமெம்பர்களும் பொக்கிஷதாரரும் காரியதரிசியும் இன்னாரென்று தெரிந்தால் எம்மிடம் வந்திருக்கும் ரூபாய் ஏழையும் அவர்களுக்கு அனுப்பிவைக்கத் தயாராக இருக்கிறோம்.

ஷை T. S. சுகானந்தம் ஆச்சாரியார் குலவிஷயமாக உபந்நியாசம் செய்யப்போவதாயும் குலத்தைச் சீர்திருத்தம் செய்யப்போவதாயும் தெரிவித்திருக்கிறார் எவ்வூரிலேனும் யாரேனும் அழைத்தால் அவர் வந்து நங்குல விஷயத்தைப்பற்றி உபந்நியாசம் செய்து சீர்திருத்துவாரென்று நினைக்கிறோம்.

***

நமது பத்திரிகையின் சந்தாநேயர்களாயுள்ள புண்ணிய புருஷர்கள் ஒவ்வொருவரும் இந்த பத்திரிகையை மென்மேலும் விருத்திசெய்ய வேண்டுமென்கிற நல்லெண்ணத்துடன் தங்களாற் கூடிய உதவிசெய்ய வேண்டியது அத்தியாவஸ்யமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். சென்ற மூன்று வருஷ காலமாக

ஐரோப்பாவில் நடக்கும் யுத்தம் காரணமாக காகிதம், பேனா, பென்சல், மை, ஆயுதங்கள் முதலிய சகல சாமான்களும் அதிக விலை யேற்றமடைந்து மிக்க கிராக்கியாய் விற்கும் இக்காலத்திலும் நமது பத்திரிகையின் சந்தாவை உயர்த்தாமலும், பத்திரிகையின் பக்கங்களையும் அதில் எழுதிவரும் விஷயங்களையும் குறைக்காமலும் நாம் நமது கஷ்டங்களையும் பணச்செலவையும் பாராமல் நடத்திவருகிறோம். இதைக் கொஞ்சம் கவனித்து சந்தா நேயர்கள் தம்முடைய பந்து மித்திரர்களுக்கு இப்பத்திரிகையைச் சாண்பித்தும் இதில் எழுதிவரப்பட்ட விஷயங்களின் மேன்மையையெடுத்துச் சொல்லியும், ஒவ்வொருவரும் இரண்டு மூன்று சந்தாதாரர்களை புதிதாகச் சேர்த்துக் கொடுத்தால் "பல துளி பெரு வெள்ளம்" என்பதுபோல நமது பத்திரிகைக்கு சந்தா நேயர்கள் அதிகமாய்ச் சேர்ந்து விட்டால் நம்முடைய சிரமம் நிவிர்த்தியாய் விடும். பத்திரிகையும் மேன்மையடைந்து அதிக விருத்திக்குவரும். இவ்வாறு விருத்தியடைந்து சந்தாதாரர்கள் இன்னும் அதிகமாகச் சேருவார்களானால் தற்காலத்தில் மாதத்திற் கொருமுறைபிரசுரமாகும் இப்பத்திரிகையை இனிமேல் பட்சத்திற் கொருமுறை பிரசுரிக்கும்படியான ஏற்பாடுகள் செய்யலாம். முன்னர் "விஸ்வகர்ம குலோபகாரி" என்னும் பெயரோடு பிரசுரித்த காலத்திலும் கூட இதில் பலபொது விஷயங்கள் எழுதி வெளியிட்டிருந்தும் இது ஒரு ஜாதியைக் குறித்த பத்திரிகை யென்று இதனுள் அடங்கியிருக்கும் விஷயங்களை வாசித்துப் பாராமலே வாங்காமல் விட்டு விட்டார்கள். ஆகையால் நாம் இப்பத்திரிகையின் பெயரை மாற்றி யாவருக்கும் பொதுவாகயிருக்கும்படி தொழில் யென்று பெயரிட்டு பிரசுரித்து வருகிறோம். தொழிலென்று பெயர் வைத்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அனேக பத்திரிகைகளில் தொழிலில் அனுபோக மில்லாமல் தொழிற் சாஸ்திரங்களை மாத்திரம் வாசித்து தொழிற் சம்பந்தமான வியாசங்களை எழுதுகிறார்கள். அவ்வாறின்றி தொழிலில் அனுபவ முடையவர்களே தொழிலைச் சேர்ந்த விஷயங்களை யெழுத வேண்டுமென்று தொழிலில் அனுபவமுடையவர்களைக் கொண்டே பல விஷயங்களை எழுதி பிரசுரித்து வருகிறோம். ஷை தொழிலில் அனுபவமுடையவர்கள் யாராவது தம் சொந்தமாக வியாசங்கள் எழுதியனுப்பினால் அவற்றையும் யாதொரு தடையுமின்றி நமது பத்திரிகையில் பிரசுரிக்கத் தயாராக யிருக்கிறோம். சாஸ்திரங்களை வாசித்த பண்டிதர்கள் தான் யெழுதவேண்டு மென்கிற நிபந்தனைகிடையாது. எழுதி யனுப்பும் விஷயங்கள் தொழிலின் சீர்திருத்தத்தைக் குறித்தும் அபிவிருத்தியைக் குறித்தும், தொழிலைச் சுலபமாகவும் அதிக பணச்செலவில்லாமலும் எண்ணிக்கையில் மிகக் குறைச்சலான ஆயுதங்களுடனும் மிகவும் அழகாயும் அதிக வேலைத்திறத்துடனும் பார்ப்போர்கள் சபாஷ் மிக நன்றாயிருக்கிற தென்று மெச்சும்படியானதாகவும் செய்யும் விதங்களைக் குறித்தும் கற்றவரும் மற்றவரும் சுலபமாகத் தெரிந்துக்கொள்ளக் கூடியதுமாக இருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட வியாசங்களிலுள்ள எழுத்துப்பிழை சொற்பிழை, வாக்கியப்பிழை முதலானவைகளைத் திருத்தி, எழுதி அனுப்பியவர்

களின் நாமதேயம் முதலானவைகளுடன் நமது பத்திரிகையில் பிரசுரிக்கத் தடையில்லை. ஆகையால் சொற்பிழை முதலானவை குற்றங்கள் இருக்குமென்று அஞ்சி கைத்தொழிலைச் சீர்திருத்தும்படியான விஷயங்களைக் குறித்து எழுதாமலிருக்க வேண்டிய அவசியமில்லை. ஏதாவதொரு விஷயத்தைக் குறித்து பலதரமும் எழுதிக் கொண்டேவந்தால் 'சித்திரமுங் கைப்பழக்கம் செந்தமிழும் நாவ்பழக்கம்" என்னும் ஆன்றோர்வாக்கியப்ரகாரம்குற்றமில்லாமல் எழுதவும் பேசவும் பழக்கம் தானே விருத்தியாகும். இத்தேசத்திலுள்ள ஜனங்கள் யாவத்திராளுடைய நன்மையைக்கருதியே இப்பத்திரிகையை நடத்தி வருகிறோம். பொது நன்மையான விஷயங்களைக் குறித்து பண்டிதர்களும் மற்றவர்களும் வியாசங்கள் எழுதி அனுப்பலாம். ஆனால் இங்கிலீஷ் மாதம் முதல் தேதிக்குள் வியாசங்களை எழுதி யனுப்பினால் மிக்க நலமாயிருக்கும்.

கைத்தொழில் விருத்தியைக்குறித்ததாகவும் சொல்நயம் பொருள்நயம் முதலானவைகளுடையதாகவுமிருந்தால் எழுதி அனுப்பியவர்களுக்கு நம்மாற் கூடிய சன்மானம் அளிப்பதாகவும் தெரிவித்திருக்கிறோம்.—

***

ஓர் குலாபிமானியின் மரண அறிக்கை.

இராய வேலூருக்கடுத்த கணிபம்பாடி யென்னும் கிராமத்தில் விஸ்வகர்ம சந்ததியில் உதித்தவரும் சித்தூர் ஜில்லா அதாலத்து கோர்ட்டு தீர்ப்பு பெற்ற ஸ்ரீமத் பண்டிதர் மார்க்க சகாய ஆச்சாரியார் புத்ர தமிழ் வித்வானும் வேதாந்த போதகாசிரியராகிய பிரம்மஸ்ரீ அத்தியாபக இலிங்காச்சாரியார் அவர்கள் சென்ற ஆனி மாதம் 4-ந்தேதி ஆதிவாரம் அருணோதயத்தில் சிவ ஐக்கியமடைந்ததாகக் கேள்விப்பட்டு மெத்தவும்விசனிக்கிறோம். இவர் குலவிஷயமாக அநேக கிரந்தங்களை ஆராய்ச்சிசெய்து தாம் பிறந்த குலமாகிய விஸ்வகர்ம வம்சம்மேலானது என்பதற்கு தக்க ஆதாரங்களை எடுத்துவைத்திருந்தும் அவைகளை அச்சிட்டு வெளிப்படுத்தாமல் யாது காரணத்தினாலேயோ ஒருமூலையில் வைத்துவிட்டு காலஞ்சென்றார்.

இலக்கண இலக்கிய நூல்களை ஆராய்ந்தறிந்தவர். அநேகருக்கு இலக்கண இலக்கிய தத்துவசாஸ்திர போதகாசிரியராக இருந்தனர். இவரது சீடர்கள் இவர்பால் குருவிஸ்வாசமாய் குருபூஜையை விமரிசையாய்ச் செய்தனர். அவர் ஞாபகார்த்தமாய் இரங்கற்பாக்கள் பாடி பிரசுரித்தனர்.

***

திருச்சி நகாசு வேலை சீர்திருத்த சங்கம்.

இப்பெயர் பெற்ற சங்கத்தவர் 1917 வது வருஷம் ஆகஸ்டு மாதம் முதல்தேதி மாலை ஐந்து மணிக்கு திருச்சிக்கோட்டை பெரிய கம்மாளத் தெருவில் 96 வது கெம்பர் ஸ்கூல் கட்டடத்தில் ஒரு மீட்டிங்கு கூடி "சங்கத்தின் நூல்களை வாசித்தல்" என்னும் விஷயத்தை நடத்தினதாக நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இச்சங்கத்தின் நோக்கங்களாவன: நம் தொழிலின் அபிவிருத்திக்குரிய பொது நலம், நாணய ரக்ஷணை, கட்டணை நிர்ணயம், வேலைத்திறமையின் உன்னதம், இராஜபக்தி முதலியவைகளாம். இச்சங்கம் அதி பால்ய திசையிலிருப்பதால் நம்மவர்களு

க்கு இயற்கை குணமாகிய ஆரம்பசூரத்தனமும் என்னுங் குணக்கேடு முதலிய அப்படி செய்யலாம். இப்படி செய்யலாமென்று பல பல பெருத்த ஏற்பாடுகளெல்லாம் செய்து பின்னர். இருக்குமிடம் தெரியாமல் மூலையில் அடங்கிப்போவதுபோல் பிறர் பழி கூறும்படியாகச் செய்யாமல் தங்களால் கூடிய வரைக்கும் ஷை சங்கத்தின் செக்ரிடெரிகளாகிய பிரம்மஸ்ரீ T. R. T. S. அடைக்கலமாச்சாரியார் முதலியர்கள் தேக சிரமம் பொருட்செலவு முதலியவைகளைப் பாராமல் தக்க ஏற்பாடுகளெல்லாம் சரியாய் செய்து ஷை சங்கம் என்றென்றைக்கும் நிலையாயிருந்து குலச்சீர்திருத்தமான காரியங்கள் செய்து வரும்படி கடவுள் கருணை புரிவாராக.—

திருச்சியில் நடந்த மூன்றாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரன்ஸின் காப்டனும் வாலண்டியர்களும் 1917-வது வருஷம் ஆகஸ்டு மாதம் 11-ந்தேதி இலட்சுமி விலாசத்தில் கும்பகோணத்திலும் தஞ்சாவூரிலும் கூடிய முதலாவது இரண்டாவது விஸ்வகர்ம மஹாஜன கான்பரென்சுகளின் காப்டன்களுக்கும் வாலண்டியர்களுக்கும் வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்தும் விருந்தளித்தும் வாத்தியக் கச்சேரிகள் நடத்தியும், புராதனமான தேவாலயங்கள், மண்டபங்கள், முதலானவைகளைக் காண்பித்தும் வந்தன. வழிபாடுகள் செய்து உபசரித்ததாக ஒரு கார்டு நமக்கனுப்பினார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் செய்வது சொம்பவும் சிலாக்கியமானதென்பது நாம் சொல்லாமலே விளங்கும். புத்திமான்களெப்போதும் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு நடப்பார்களென்பது இதனால் யாவருக்கும் தெரியவரும்.

கடிதங்கள்.

திருவண்ணாமலை காமாக்ஷியம்மன் தேவஸ்தான வேலையும் அதன் முயற்சியும்.

ஷை தேவஸ்தானத்தை முன் மண்டபம் புதுப்பித்து வேலை அதி தீவிரமாக முடிவு பெற்றுக்கொண்டு வருகிறது. இதற்கு திருவண்ணாமலை விஸ்வப்பிரம்மவம்சஸ்தரில் பிரம்மஸ்ரீ வா. மாணிக்க ஆச்சாரி 1. பிரம்மஸ்ரீ வா. பச்சையப்ப ஆச்சாரி 2. பிரம்மஸ்ரீ ஏழுமலை ஆச்சாரி 3. பிரம்மஸ்ரீ அ. குப்புசாமி ஆச்சாரி 4. பிரம்மஸ்ரீ வெங்கடாசல ஆச்சாரி 5. பிரம்மஸ்ரீ துரைசாமி ஆச்சாரி 6. பிரம்மஸ்ரீ ஷராப்புக்கடை சீனிவாச ஆச்சாரி 7. இவர்கள் இந்தக் காமாக்ஷி அம்மன் திருப்பணி வேலையை சொந்த வேலையாகப் பாவித்து நடத்தி வருகிறார்கள். இன்னும் ஒரு மாதத்திற்குள்ளாக வேலைப் பூர்த்தியாகும். ஸ்தபதி வேலையை ஷை டவுனிலுள்ள பிரம்மஸ்ரீ சின்னகுப்புசாமி ஆச்சாரியாரும் பிரம்மஸ்ரீ அரங்கசாமி ஆச்சாரியாரும் பிரம்மஸ்ரீ அப்பாதுரை ஆச்சாரியாரும் பிரம்மஸ்ரீ வேலாயுத ஆச்சாரியாரும் ஷை வேலையை சுமார் 1200 ரூ. க்கு மதிப்பிட்டு வேலைநடந்து வருகிறது பூசுவேலை நடக்கிறது. இவர்களுக்கு பிரதி தினமும் வேலைசெய்து தான் ஜீவனம்செய்ய வேண்டுமென்கிற பிரயத்தனத்தை பகவான் அருள் செய்யாமல் நல்ல அந்தஸ்தும் அதற்குத் தகுந்த பொருளும் மதிப்பும் அமைந்திருக்கிறது. ஆகையால் விஸ்வேஸ்வரர் இவர்களுக்கு ஆயுளையும் திடகாத்திரத்தையும் அருள் புரிவாரென்று சதா விஸ்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றனம்.

திருவண்ணாமலை தேவார சபையின் அறிக்கை.

1917-ம் வருஷம் ஜூலைமீ 23௳ சோமவாரம் இரவு 8 மணிக்கு திருவண்ணாமலை விஸ்வப்ரம்ம பாடசாலையில் தேவார சபை ஒன்று ஏற்படுத்த வேணுமென்கிற அபிப்பிராயம் கொண்ட பிரம்மஸ்ரீ பெரும்பேறு அ. கிருஷ்ண மாச்சாரியார் அவர்கள் ஷை திருவண்ணாமலையிலுள்ள விஸ்வப் பிரம்ம சிறுவர்களைக் கொண்டு சுமார் 3 மாத காலமாய் தேவாரங்களை ஷை சிறுவர்களுக்கு படிப்பித்து வந்தார். ஷை பெ. அ. கிருஷ்ணமாச்சாரியாருக்கு குருவாயுள்ள சென்னை பிரம்மஸ்ரீ தேவாசம் அப்பாதுரை ஆச்சாரியாரைக்கொண்டு மேற்படி சபையை நல்ல அந்தஸ்தா ஏற்பாடு செய்ய மேற்படியாரை சென்னையிலிருந்து 22-7-17 ல் வரவழைத்து ஷை தேதியில் தேவாரப் பிரசங்கம் நடைபெற்றது. அச்சமயம் டவுனிலுள்ள விஸ்வப் பிராமணர்களும் வெளியூர் வாசிகளும் இன்னும் மற்ற பிரபுக்களும் சபை நிறைந்து இருந்தார்கள். சபையில் பிரம்மஸ்ரீ அப்பாதுரை ஆச்சாரியார் அவர்கள் தேவாரத் திருமுறைகளை இசைக்கருவிகளுடன் பாராயணம் செய்தார். அதற்குத் தகுந்த மேளக்கட்டுகளும் அமோகமாய் இருந்தன. ஷை சபை இரவு 2 மணிக்கு பாராயணம் நிறுத்தப்பட்டது. பிரம்மஸ்ரீ அப்பாதுரை ஆச்சாரியார் அவர்களுக்கு சபையார் சுமார் 15 ரூபாய் பெறுமான சரிகை துப்பட்டா 2. இனும் அளித்தார்கள். அவருடைய மாணாக்கராகிய பெ. அ. கிருஷ்ணமாச்சாரியாருக்கும் தகுந்த சன்மானம் செய்தார்கள். சபையோர்களுக்கும் சந்தனாதி வகைபராக்களை சம்பூரணமாய் அளித்த பிறகு சர்வஜன மனக்களிப்புடன் சபை கலைந்தது. நம் குலம் விளங்குவதற்கு இந்த இந்தியாவில் நம் குலத்தில் அநேக கல்விமான்கள் ஏற்பட்டு நம் குலம் முன்னுக்கு வரவேண்டுமென்று மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் கூடிய சீக்கிரத்தில் நம் சஜாதியர்கள் விஸ்வேஸ்வரர் அருளால் முன்னுக்கு வருவார்களென்று சதா விஸ்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றேன்.

***

பேரிடியால் விளைந்த ஆபத்து.

பிங்கள வருஷம் ஆடி மாதம் 19-ந்தேதிக்குச் சரியான 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 3-ந்தேதி வெள்ளிக்கிழமை இரவு 12 மணிக்கு திருவண்ணாமலையில் பெருமழை பெய்து இடி முழக்கம் அதிகரித்து முதல் இடியில் திருவண்ணாமலையில் ரயில் ஸ்டேஷனண்டையில் ஓர் புளிய மரத்தின்மேல் விழுந்து ஷை மரம் தரைமட்டமாயிற்று. இரண்டாவது இடி திருக்கோயிலூர் ரோட்டில் ஓர் ஆலமரத்தின் மேல் விழுந்து ஷை மரம் நிலைபற்றுப் போயிற்று. மூன்றாவது திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசல ஈஸ்வரர் பெரியதேரின் மேல் நெருப்பிடி விழுந்து தேர் பூராவும் எரிந்து சாம்பலாய்விட்டது. அதில் இரும்பு தவிர மற்றவை ஒன்றும் காணப்படவில்லை. காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் அதை அணைக்கும்பொருட்டு எவ்வளவோ பிரயத்தனங்களைச்செய்தும் அணைக்க முடியவில்லை. எரிந்துபோன தேரின்வேலைப்பாடுகளையும் அந்தஸ்தையும் பார்க்க இனி அம்மாதிரி வேலைகளும் அந்தஸ்தும் எப்

போது சுவாமிக்கு ஏற்பட்டு பிரம்ம உற்சவம் நடக்குமென்று நமது இந்துக்கள் எல்லோரும் வருத்தமடைந்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த மஹான் மனதில் புகுந்து முடியப் போகிறதோ தெரியவில்லை. இதற்கு முன் திருவண்ணாமலை தாலூக்கா செங்கம் டிவிஷன் சந்தப்புதுப்பாளையத்தி லிருந்த மஹான் அப்பாவு ரெட்டியார் அவர்கள் சுமார் 60,000 ரூபாய் செலவிட்டு இந்தத்தேரை செய்து முடித்தார். அந்த அப்பாவு ரெட்டியாரும் இதற்கு முந்தியே காலமாய்விட்டார். தேர் அழிந்துவிட்டபடியால் அவருடைய பேரும் மாறிவிட்டதென்று இந்துக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் ஷை ரெட்டியாரின் பேரப்பிள்ளை யாகிலும் ஷை தேர் செய்து வைத்தால் நீடூழி காலம் பேரழியாமல் இருக்குமென்று அருணாசல ஈஸ்வரரைப் பிரார்த்திக்கிறேன். ஷை அப்பாவு செட்டியார் திருவண்ணாமலை தேவஸ்தானம் கமிட்டி மெம்பரா யிருந்தவர்.

செ. பெ. அருணாசல பூசாரி.
படி மேஸ்திரி திருவண்ணாமலை.

இனிய தமிழ் நாவல்கள்.

மீனாட்சி (அல்லது) மலாய் நாட்டு மங்கை	2	4	0	பிரஹ்லாதன்	0	8	0
தனபாலன் I - II பாகங்கள்	1	8	0	தசகுமாரன் சரித்திரம்	0	4	0
சிங்கார சந்திரவதனி	1	4	0	அநியாயபுரம் அகட விகட கோர்ட்டு விசாரணை	0	8	0
குசேலர்	1	0	0	சந்திரசேகரன் சரித்திரம்	0	6	0
மதனகாந்தி	1	0	0	கற்பகவல்லி	1	0	0
கண்மணி	0	14	0	சுந்தராங்கி	0	14	0
மனோன்மணி	0	12	0	ஸ்வர்ண காந்தி	0	12	0
செல்வராஜன்	0	12	0	ரோஜாவி	0	12	0
ஜயகாந்தன்	0	10	0	வனரோஜா	0	12	0
மெய்யறிவு	0	8	0	லலிதாங்கி	0	8	0
பாஞ்சாலி சபதம்	0	8	0	மெய்யறம்	0	8	0
மாணிக்கவல்லி	0	8	0	சுகமேபுறம்	0	8	0
பத்மினி	0	3	0	இன்பவல்லி	0	3	0
நான்கு மந்திரி	0	2	0	நவநீதம்	0	3	0
ருக்ஷ்மதரிசினி	0	4	0	மருணாசினி	0	2	0
குணபூஷணி	1	0	0	மதமாந்தி	0	10	0
சுசீலா	1	0	0	சத்தியசீலன்	0	10	0
ஜெயசேகர சத்தியவதனி சரித்திரம்	0	12	0	கமலநேசை	0	12	0
				தமயந்தி	0	2	0

இன்னும் அநேக நாவல்களும் விலைக்குக் கிடைக்கும்.

மானேஜர்,

கற்பகம் ஆபீஸ், புதுவை.

பாலாஜி அண்டு கம்பெனி
காசி.

சகாயமாகவும் நவீன மாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபலப்பட்டு வர்த்தகர்களாகிய பாலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்களின் பட்டாடைகளின் உயர்வுக்கும், அதன் நேர்த்திக்கும், பகிரங்க பொருள் காட்சிகளில் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசுகள் தயாரில் சித்தமாக விருக்கின்றன. சிறு ஆர்டர்செய்து தருவித்துப் பார்த்தால், விலைகளின் நோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்துக்கொள்வீர்கள்.

விளையாட்டுப் பாத்திரம்.

32 விதமான விளையாட்டு சாமான்கள் அடங்கியது. குழந்தைகளை மகிழ்விப்பதில் மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ் செட் ஒன்றுக்கு	3—8—0
மத்தியசயிஸ் ,,	2—0—0
சிறுசயிஸ் ,,	1—8—0

முதல்தரமான கஸ்தூரி ஒரு ரூபாய் இடைகொண்ட தோலா ஒன்றுக்கு ரூபா ... 40—0—0

குங்குமப்பூ முதல்தரம் தோலா ஒன்றுக்குரூபா ... 2—8—0

காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0

பட்டுக் கைக்குட்டை.

நேர்த்தியான நிசவு.

18இஞ்சு சச்சவுக்கும் 1க்கு ரூ.			0-10—0
20	,,	,,	0-14—0
24	,,	,,	1—2—0

விஷ்ணுபாதத் தட்டு.

இது சுத்தமான தாம்பிரத்தில் செய்யப்பட்டது, தாம்பாளம் போன்ற வடிவுள்ளது. இதன் மத்தியில் விஷ்ணுபாதம் செதுக்கப்பட் டிருக்கும். தட்டு 1-க்கு விலை ரூபா 1½-முதல் 2-வரை.

காசி வயிரவர் கயறு.

1-நெ. பெரியகயர் 100-க்கு ரூ.			2—8—0
2	,,	,,	2—0—0
3	,,	,,	1—8—0
4	,,	,,	0—6—0

விலை விபரக் காட்லாக் இனாம்.

BALAJEE & Co., Benares City, U. P.

புதிய கம்பெனி! புதிய சரக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ 12-வரை விலை, அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முககண்டிகள் 33, உள்ளது, கண்டி 1-க்கு ரூ 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள். 6-முழம் நீளம் 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூ 5—8—0, ரெடி சிறுசு 1-க்கு ரூ 4-8-0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ 6-8-0, தபால் செலவு பிரத்தியேகம்.

முழம்	அகலம்.	விலை ரூபா.	
4	2	4-8-0	6-11
5	2½	6-முதல் 8-வரையில்	
5	3	7 ,, 9	,,
6	2½	8 ,, 9	,,
6	3	9 ,, 12	,,
7	3	10 ,, 13	,,
8	3	12 ,, 15	,,
9	3	14 ,, 16	,,
10	3	15 ,, 18	,,

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி பயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு	...	75	0	0
,, 2 ,,	...	50	0	0
,, 3 ,, ...	...	40	0	0
,, 4 ,, ...	...	35	0	0
,, 5 ,, ...	...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம, காண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி காசி,

தாராநகர் தெரு, காசி.

Managar,

SILK PITAMBER & Co ,

Daranagar Street,

Benarse, City.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரியப் பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜன ஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம்தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்து சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது, சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

இந்தியா, பர்மா, சிலோனுக்கு ரூ. 3—0—0

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0

ஔவை

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும், தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்யசரித்திரம். பலநூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாச்சாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.

"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும் தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மை யென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,

ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

அடர்ந்த கூந்தல்! அடர்ந்த கூந்தல்!!

கருமையும், செழுமையும், ஸ்திரீகளுக்கு அழகையும்

அதிகப்படுத்துகிறது.

அப்படிச்செய்வது அசாத்தியமானக் காரியமல்ல.

எங்கள் **மணித்தைலம்** போதுமானது.

தற்காலம் வெளிவந்துலாவும் நவீன தைலத்தைப்போல் நமது தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தில் சுமார் 35 வருஷமாய் விற்பனையாகி வருகிறது. இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்? இன்னும் சந்தேகமாயின் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களில் ஒன்றாகிய கீழ்கண்டதை வாசித்துப்பாருங்கள்.

அன்புள்ள ஐயா,

ஒரு மாதத்திற்குமுன் தங்களிடமிருந்து தருவித்த மணித்தைலம் அற்புத குணத்தைக் கொடுத்துவருகிறது. இன்னும் 5 புட்டி மணித்தைலமும், ஒரு டப்பி ஆ. நி. மாத்திரையும் வி. பி. யில் அனுப்பவும்.

ஜி. வாசுதேவராவ், வக்கீல்,
(பெசவாடா,) மர்காப்பூர்.

இந்தப் பரிமளமிகுந்த வாசனைத்தைலம் புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இத்தைலம் மனோற்சாகத்தைக் கொடுக்கிறது. ஸ்நானத்திற்குச் சுகந்தருவது.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, மதராஸ்.

புதிய தமிழ்ப் புத்தகங்கள்.

கண்ணன் பாட்டு.

உன்னொடு புறங்கீழ் மேலாய் உயிர்தோறும் ஒளிக்கும் கள்வக் கண்ணனின் லீலா விநோதங்களைப் புகழும் இச்சிறியநூல் நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கக்கூடியது. இதனை மிக மேதாவிகளான பண்டிதர்களும் புகழ்ந்து பேசுகிறார்கள். சிறுவர்களுக்கும் சிறுமியருக்கும் பண்டிதர்களுக்கும், பாமரர்களுக்கும் தெளிவாய் விளங்கக்கூடியது. இதிலுள்ள பாடல்களின் அழகும், இனிமையும், தெளிவும் வாசித்தவர்களுக்கே விளங்கும். இந்நூலாசிரியரின் பாடல்களில் சில ராஜபாஷையான ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன வென்றால் இவற்றின் பெருமையை நாம் கூறுவது மிகையாம்.

இதன் விலை அணா 4.

நாட்டுப் பாட்டு.

நமது நாட்டார் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய நூல். விலை அணா 2.

பாப்பா பாட்டு.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் பாடவேண்டியது. விலை அணா 1.

முரசு.

இது மிகவும் பெருமை பொருந்தியது. தமிழர் ஒவ்வொருவரும் படித்துத் தீரவேண்டியது. விலை அணா 1.

பாஞ்சாலி சபதம்.

இஃது ஓர் அற்புதமான புதிய காவியம். விலை அணா 8.

வேறு என்ன புத்தகம் வேண்டுமானாலும் கிடைக்கும்.
தபாற் செலவு வேறு.

பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பட விளம்பரம்.

இதில் காட்டிய படம்போல் 12×10 இஞ்சி அளவில் புகைப் படத்திற்கு சமானமாகிய விஸ்வேஸ்வரர் [பஞ்சமூர்த்தியின்] படம் வெகு அழகாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

விலை 0—4—0

ஷை அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவனாகர அக்ஷரம் அடைத்துச் சுத்தமாய் செய்திருக்கிறது.

விலை 0—4—0

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது ஒவ்வொருவரும் அவஸ்யம் வாங்கலாம். வி. பி சார்ஜ் பிரத்தியேகம்

விஸ்வப்பிராம்மணப் பட்டம்.

சேலம் ஜில்லா கடத்தூர் வி. வரதாசாரியாரென்பவர் 1911ஆ பிப்ரவரிமீ 25உயில் தஞ்சை ஜனனுகூலன் பத்திரிகையில் கம்மாளர்களை விஸ்வபிராம்மணர்கள் என்று சொல்வதற்கு சாஸ்திர புராணாதிகளில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதுகளை தெரிந்துக்கொள்ள மஹாஜனங்கள் விரும்புகிறார்களென்று எழுதியதற்கு, தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரியாரும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ த கு. சுந்தராச்சாரியாரும் தக்க ஆதாரத்துடன் நீதியாக பதிலெழுதி ஷை ஜனனுகூலன் பத்திரிகைகளிலேயே வெளியிட்ட விஷயங்களை தற்காலம் புத்தகரூபமாக அச்சிட்டாகிறது. இதன் விலை அணா 4.

விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

என்னும் ஓர் இனிய புத்தகம் அச்சிட்டிருக்கிறது. அதில் 12-பக்தர்களுடைய சரித்திரம் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் செய்யுள்களும், வசனமும். தனித்தனி எழுதப்பட்டிருக்கிறது. புராணப் பிரசங்கத்திற்கு தகுதியானவையாயிருக்கும். விலை 1—0—0

விஸ்வேஸ்வரஸ்வாமி கீர்த்தனை.

இந்த கீர்த்தனை பஜனை செய்பவர்களுக்கும், பாராயணஞ் செய்பவர்களுக்கும் தகுதியானவை. விலை 0—2—0

வி. பி சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:— "தொழில் ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

தமிழ் நவீன கதைகள்.

பக்தவிஜயம்	3	0	0	பத்மலோசனி	0	12	0
தியாகராஜ கீர்த்தனைகள்	1	0	0	கன்னியின் முத்தம் (முதற்பாகம்)	0	12	0
சுகுணதீரன் (முதற்பாகம்) ...	1	0	0	,, (இரண்டாம்பாகம்)	0	12	0
,, (இரண்டாம் பாகம்)	1	4	0	இந்திரஜித்தன்	0	12	0
ஞானசம்பந்தன்	1	0	0	நாட்கம்ஞ்சரி	0	12	0
பிருதிவிராஜன் (நாடகம்) ...	1	0	0	இராமாயண சாரம்	0	10	0
மனோரஞ்சிதம் (முதற்பாகம்)	1	0	0	புருஷோத்தமன் சரித்திரம்	0	10	0
பழமொழித் தொகுதி	1	0	0	பன்னிரு நீதிக்கதைகள்	0	10	0
திரிலோக மோஹனாங்கி	1	0	0	மாலிகா பூஷணி ...	0	10	0
அஞ்சனாக்ஷி	1	0	0	ரம்பை	0	10	0
ஜெயசீலன்	1	0	0	சாரதாம்பாள் சரித்திரம்	0	8	0
மங்கையர்க்கரசி	0	12	0	வத்ஸலா	0	8	0
லீலா ...	0	12	0	காந்தாமணி	0	6	0
சுந்தரன்	0	12	0	காஞ்சனவல்லி	0	5	0
ஆனந்தசுந்தரி	0	12	0	சிந்தாமணி	0	5	0
கீசகன் (நாடகம்)	0	12	0	யோஹனா	0	5	0
ஆங்கில சிரோமணிகள்	0	12	0	இராபின்ஸன் குருஸோ	0	4	0
நீதிபாலன் ...	0	12	0	வசந்தசேனை	0	4	0
அயாஷா (முதற்பாகம்)	0	12	0	சின்னத்தம்பி	0	4	0
,, (இரண்டாம் பாகம்)	0	12	0	காணாமற்போன கண்மணி	0	3	0

சிறுவர்களுக்கான கதைகள்.

லிலிபுட் யாத்திரை	0	4	0	சண்டமாருதம்	0	1	0
பஞ்சதந்திரம்	0	4	0	நடுவேனிற் கனவு	0	1	0
விவேக சந்திரிகை	0	4	0	கடற்கரை வாஸம்	0	1	0
நாற்பது திருடர் கதை	0	3	0	கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல்	0	1	0
கதைக்கொத்து மலர் 1	0	3	0	அதிசயமான கிளி	0	1	0
ஷை மலர் 2	0	3	0	நாய்கட்டிய நல்லறிவு	0	1	0
அல்லாவுதீன்	0	2	6	தாளில்லாக் கதவு	0	1	0
விக்டோரியா கல்லாசி	0	2	6	அன்புள்ள சகோதரி	0	1	0
இரட்டை பிள்ளைகள்	0	2	0	மூன்று பூதங்கள்	0	1	0
டிக் உட்டிங்க்டன்	0	2	0	பச்சை தேவதை	0	1	0
மாயூரம் இடபதீத்தம்	0	2	0	நல்ல பிள்ளைகள்	0	1	0
தெனாலிராமன் கதை	0	2	0	நல்ல சிநேகிதர்கள்	0	1	0
நற்பழக்கம்	0	2	0	மூன்று தங்கமாம்பழங்கள்	0	1	0
மாயத்தாமரை	0	2	0	மூன்று குமாரர்கள்	0	1	0
மாயப்பொம்மை	0	2	0	வெள்ளைப்பூனை	0	1	0
நீதிக்கோபுரம்	0	2	0	தோட்டக்காரன்	0	1	0
பல்லிகா	0	2	0	நான்கு பாடகர்கள்	0	1	0
இரண்மயி	0	2	0	நைட்டிங்கேல் அம்மையார்	0	1	
இராதா இராணி	0	2	0	பால நியாயாதிபதி	0	1	0
அரிச்சந்திரன்	0	1	6	மறுபடி முயற்சிசெய்	0	1	0
ஆபத்தில் நேசன்	0	1	6	நளன்	0	1	0
செங்கை வளவன்	0	1	6	கம்பன்	0	1	0
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6	குசேலன்	0	1	0
போலிராஜகுமாரன்	0	1	6	புலவர் வறுமை	0	1	0
நல்ல பாடம்	0	1	6	விநோதக் கூற்றுகள்	0	1	0
செம்படவன்	0	1	6	கண்ணப்பன்	0	1	0
வர்த்தகன்	0	1	0	காதர் அலி	0	0	0

பி. வி. கண்ணன் அண்டு கோ, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

பல கண்காட்சிகளில் மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி, சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்க கொடுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

33. சித்த மகரத்துவஜம்:—இது மகரத்துவஜத்தை விட சிறந்த ஔஷதம். இதனால் நீராதவியாதி ஒன்றுமில்லை சர்வசுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினி, மந்தம், காலரா, சீதபேதி, ரத்தபேதி, சகலவாயு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்தவருக்கு ஆயுசு 100 வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80, 7 வேளைக்குள்ள மருந்து ரூபா 3. வி பி. செலவு பிரத்தியேகம்.

34. வாயு சம்ஹாரி:—கை, கால், கண்களின் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால்முடக்கு தேகத்தில் உளைச்சல், குத்தல், குடைதல், தலைநோய், பக்கசூலை, பார்சுவாயுவு, திமிர் வாயுவு அஜீரணம், குன்மம். அண்டவாயு, சூலைவாதம், மலஜலகட்டு முதலிய அநேகவித வாயுரோகங்களும் தீரும். டப்பா I-க்கு விலை ரூபா I- வி.பி. செலவு 1 முதல் 6.டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்,

35. காலரா என்னும் வாந்திபேதிக்கு மருந்து.—இக்கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம், டப்பா I-க்கு ரூபா ஒன்று வி பி- செலவு I முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

36, மலபந்த நிவாரணி:—மலஜலக்கட்டு, அக்கினி மாந்தம். வாயு, குடல் பிரட்டல். மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை, புளித்த யேப்பம், தீரும் தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா I-க்கு விலை அணா 10, வி, பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியோகம்.

37. சந்திராமிருதரசம்:—அசாத்தியமான காசம், இருமல். க்ஷயம் முதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளை குணப்படுத்தும் நல்லபசியும். தேகபலமும் உண்டாக்கும் டப்பா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு I முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து:—எத்தனைநாள் பட்டதானாலும் இம்மருந்தினால் வயிற்று கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி கிராணி, வயிறுகடிப்பு, முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

சுபமஸ்து.

வகர்மகுலோபகாரி” என வழங்கிவந்த

தொழில்.

மலர்—4. { பிங்களஹு புரட்டாசிமீ 1917ஹு செப்டம்பர்மீ } இதழ்—8.

5 OCT 1917

ஆதியில் தொழில் ஏற்பட்ட முறை.

ஸ்ரீ விராட் விஸ்வப்பிரஹ்மத்தின் ஐந்து திருமுகங்களிலிருந்து ஸானக, ஸனாதன, அபுவனஸ, பிரத்னஸ, சுபர்னஸ என்னும் ஐந்து மஹரிஷிகளுண்டானதாக அவர்களிடத்திலிருந்து மநு, மய, துவஷ்ட, சில்பி, விஸ்வக்ஞ என்னும் பஞ்சப் பிராமணர்களுண்டானதாகவும், ஸ்ரீ விராட் விஸ்வப் பிரஹ்மம் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம்என்னும் பஞ்ச கிருத்தியங்கள் நடத்தி பல லோகங்களிலுள்ள சகல ஜீவராசிகளையும் சிருஷ்டித்து ஆதரித்து சம்மரித்து, மறைத்து அனுக்கிரகித்து வருவதுபோல இப்பஞ்ச பிராமணர்களும் எல்லா லோகங்களிலும் மிக்க உபயோகமானதும் கரும்பொன் என்று சொல்லப்படுவதுமான இரும்பினால் குழந்தை பிறந்தவுடன் நாபியைத் துண்டிக்குங் கருவியான கத்தி முதல் நாமெல்லோரும் ஒவ்வொருவரும் குடும்ப சம்ரட்சணைக்காகவும் உத்தியோகம்; தொழில் முதலியவைகள் நடத்தும்போது உபயோகப்படுத்தக்கூடியதுமான மற்ற ஆயுதங்கள் பலவற்றையும் செய்துக்கொடுப்பவரான கருமானும், தாவரம் என்று சொல்லப்பட்ட மரத்தில் ஷை கத்தி முதலிய ஆயுதங்களுக்கு பிடிகளும் அரசன் முதல் சாமானிய குடிகள் ஈறாயுள்ள நம்மெல்லோரும் குடியிருந்து வாழ்வதற்கான வீடுகளும், அவ்வீடுகளில் உபயோகப்படும்படியான பலவிதமான நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள், மணைகள், வடிதட்டு, அகப்பை, மத்துமுதலிய பலவித சாமான்களையும் செய்துக் கொடுப்பவரான தச்சனும் பித்தளை, செம்பு, ஈயம், வெண்கலம் முதலிய லோகங்களில், தேக்சா, குண்டான், அண்டா, லோட்டா, குவளை, சொம்புமுதலிய சமயலுக்கும் இன்னும் மற்ற காரியங்களுக்கு உபயோகமான பாத்திரங்களும், கோவில்களிலுள்ள பூஜா விக்கிரகங்கள், மணிகள், வாகனங்கள், கலசங்கள் முதலிய சகலமான சாமான்களையும் செய்துக்கொடுப்பவரான கன்னானும், கருங்கல்லினால் அம்மி, யந்திரம், உரல், படிக்கல் முதலிய வீட்டுக்குபயோகமான கருவிகளும் கோவில், மண்டபம், மூலவிக்கிரகம் முதலியவற்றைச் செய்துக்கொடுப்பவரும் சிற்பசாஸ்திர ரீதியாக கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், அஷ்டபந்தனம், கோயிற்பூஜை முதலியவை செய்பவருமான சிற்பி (கல்தச்சன்) யும், எல்லாலோகங்களிலும் சிரேஷ்டமானதும் விலையுயர்ந்ததுமான பொன்னினால் மாங்கல்யம், கைகா

ப்பு, கொலுசு, அட்டிக்கை, கொப்புமுத
லிய நகைகளும், வெள்ளியினால் கால்காப்பு
கொலுசு, தீர்த்தம் சாப்பிடும் குவளை (டம்
ளர்) யும் இன்னும் மற்ற சாமான்களையும்
செய்து கொடுப்பவருமான பொற்கொல்ல
னும் (தட்டானும்) தங்களுடைய பஞ்சவி
ருத்தியங்களினால் லோகாக்ஷணை செய்து
வருகிறார்களென்பது சாஸ்திர சம்மதமும்
லோகானுபவமுமான விஷயம். "கைப்புண்
ணுக்கு கண்ணாடி வேண்டுவதேன்" என்
னும் பழமொழிப்பிரகாரம் ஒருவராலும்
ஆட்சேபனை யில்லாமல் ஒத்துக்கொள்ளக்
கூடிய விஷயமென்பதற்கு சந்தேகமில்லை
இவ்வளவு சிரேஷ்டமாய் மேலே சொல்லப்
பட்ட ஐந்து தொழில் காரணமாக ஐந்து
பெயரையுடையவர்கள் ஒரேஜாதியா ரென்
பதில் சந்தேகமில்லை. மேற்கூறிய ஐந்து
தொழிலும் ஒவ்வொருவரும் கற்றுக்கொ
ண்டு சமயோசிதமாக வேண்டும்போது
அவசியமான தொழிலை செய்துவருவது
உத்தமமானது. சில கிராமங்களில் ஒரே
வீட்டுக்காரரிருந்தால் பயிர்த்தொழில் செ
ய்பவர்களான குடியானவர்களுக் குபயோ
கமான சாமான்கள் செய்துகொடுக்கவே
ண்டியது அவசியமானதையால் கருமார
வேலை, தச்சவேலை முதலிய வேலைகளை
அவரே செய்துக்கொடுப்பதை நாம் பார்த்
தும் கேட்டுமிருக்கிறோம். நாகரீகமும் புத்
திசாதுர்யமும் மிகுந்த இக்காலத்தில் எல்
லாவேலையும் ஒவ்வொருவருக்கும் தெரிந்
திருந்தால் ஒரு வேலைக்காரர் இன்னொரு
வேலைக்காரரை எதிர்பார்த்துக்கொண்டிரு
க்கவேண்டிய அவசியமில்லை. ஆனாலும்
"Jack of all trades master of none"
"எல்லாவேலையும் தெரியும் ஆனால் ஒரு
வேலையும் நன்றாய்த் தெரியாது" என்னும்

பழமொழிப்பிரகாரம் நம்முடைய அற்ப
ஆயுளை பல தொழிலும் செய்யக் கற்றுக்
கொள்ளவேண்டுமென்று முயற்சிசெய்து
ஒன்றையும் பூரணமாய் கற்றுக்கொள்ளா
மல் புத்தியை வீணில் செலவழித்து முட்
டாள்பட்டம் பெறுவதில் ஒரு பிரயோசன
முமில்லை. தச்சவேலை செய்பவர் அதற்கு
அத்தியாவசியமான கொல்லுவேலை தெரி
ந்தவராயிருந்தால் மிகவும் சிரேஷ்டமே.
ஏனென்றால், தச்சவேலையில் நாற்காலி,
மேஜைமுதலிய வீட்டுக்குரிய சாமான்கள்
செய்பவரும், தேர், மர வாகனங்கள், மர
விக்கிரகங்கள், பொம்மைகள், கடைச்சல்
வேலைகள் செய்பவருமாகிய இவர்களுக்கு
நாணயமானதும், சின்னஞ்சிறியதும் கூர்
மையானதுமான அநேக இரும்பு ஆயுதங்
கள் வேண்டியிருக்கின்றன. இதேமாதிரி
யாக செம்பு, பித்தளை, வெண்கலம் முத
லிய லோகங்களில் உற்சவ விக்கிரகங்கள்
கலசங்கள், மணிகள், திருவாட்சிகள், வாக
னங்களுக்கு மேற்கவசங்கள்முதலிய அரு
மையான வேலை செய்பவர்களுக்கும் அ
நேக இரும்பு ஆயுதங்கள் வேண்டியிருக்
கின்றன. சிற்பிகளுக்கும், மூலவிக்கிரகங்
கள், மண்டபங்கள், கற்களில் மகாபலிபுரம்
இராயவேலூர் முதலிய ஊர்களில் செய்தி
ருக்கும் அதி அற்புதமான சித்திர விசித்
திர வேலைகள்செய்வதற்கு அநேக நாணய
மான சிற்றுளிகள் வேண்டியிருக்கின்றன.
பொற்கொல்லரென்று சொல்லப்பட்ட தட்
டாரில் மட்டசுவேலை, நகாசுவேலை (Metal
Carving) இழைப்புவேலை பிடிபோகரை
வேலை (Engraving) என்று பலவிதமான
அருமையான வேலைகளிருக்கின்றன. இதி
ல் நகாசுவேலைக்கு (Metal Carriug) மாத்
திரம் நூற்றுக் கணக்கான போகரைகள்

என்று சொல்லப்படும்படியான சிறு ஆயுத
ங்கள் இரும்பினாலும் வெண்கலத்தினாலும்
செய்யப்பட்டவைகள் அத்தியாவசியமாக
வேண்டியிருக்கின்றன. இப்படிப்பட்ட
ஆயுதங்கள் அனேகமானவைகள் கடைக
ளில் அகப்படமாட்டா. ஆகையால் மன
தில் நினைத்தவண்ணம் நிருமிக்கக்கூடிய
சாமர்த்தியமுடைய சிற்பிகள் முதலான
வர்கள் தாங்கள் ஒருவேலைசெய்ய ஆரம்பி
ப்பதற்குமுன் அதற்கு வேண்டிய ஆயுதங்
களை தாங்களே செய்துகொள்வார்கள்.
இதற்கு நிதரிசனமாக நாட்டுப்புறங்களில்
கல்தச்சர்கள் மலைகளில் போய் கல் உடை
த்து அம்மி யந்திரம் முதலியவைகள் செ
ய்ய ஆரம்பிப்பதற்குமுன் சிற்றுளிகளை
தங்களுக்கு இஷ்டமான பிரகாரம் தாங்
களே செய்துக்கொள்ளுகிறார்கள். சற்
றேரக்குறைய நாற்பது வருஷங்களுக்கு
முன் சென்னை யுத்த ஆயுதசாலை (Madras
Arsenal) யில் மேஸ்திரியா யிருந்த
வேலூர் சங்கிராச்சாரியார் என்பவர் ஒரு
வரிருந்தார். இவர் துப்பாக்கி கட்டைகள்
(Bodies of rifles) செய்யவேண்டியதா
யிருந்தால் அதற்கு வேண்டிய நாணய
மான ஆயுதங்களெல்லாம் தானே செய்
துக்கொள்வார். துப்பாக்கி, பீரங்கி முத
லியவைகளில் ஸ்பிரிங்ஸ், ஆமர்ஸ், லிவ
ர்ஸ் என்று சொல்லப்பட்ட எஃகினால்செய்
யப்பட்ட (Components) முக்கியமான
சாமான்களை தானேசெய்து வேண்டிய
அளவுபதமாக துவைப்விட்டுக்கொள்வார்.
அந்த யுத்த ஆயுதசாலையில் உத்தியோக
ஸ்தராயிருந்த ஆங்கிலேய துரைமார்களுக்
கும் அவர்களுடைய பெண்சாதி பிள்ளை
களுக்கும் பொன், வெள்ளி மோதிரங்கள்,
லாக்கட்டுகள்; காதணிகள், கடியாரச்சங்கி

கள் முதலிய நகை நாணயங்கள் செய்துக்
கொடுப்பார். இந்த நகைகள் செய்வதற்கு
வேண்டிய ஆயுதங்களும் தானே செய்துக்
கொள்வார். இப்படிப்பட்ட அதிக புத்தி
சாதுரியமானவர்கள் இக்காலத்திலும் இ
ருக்கிறார்கள். இனிமேலும் இருப்பார்க
ளென்பதில் சந்தேகமே யில்லை. நமது
காருண்ணிய ஆங்கிலேய ராஜாங்கத்தார்
இவ்விந்தியா தேசத்துச் சிறுவர்களெல்
லாம் கைத்தொழிற்களில் தேர்ச்சியடைய
வேண்டுமென்கிற நன்னோக்கத்துடன் செ
ன்னை, கல்கத்தாமுதலிய நகரங்களில் சித்
திர கலாசாலைகள் (School of arts) ஏற்
படுத்தி யிருக்கிறார்கள். இக்கலாசாலைக
ளில் சேர்ந்து வாசிக்கும் சிறுவர்கள் யாவ
ருக்கும் சில வருஷங்களுக்கு முந்தி) Free
hadd drawing) சாதாரணமான டிராங்
கிளை கற்றுக்கொடுத்து வந்தார்கள். இப்
பொழுது அப்படியில்லை. பிள்ளைகள் தங்
களுடைய பெற்றோர்களின் சம்மதிப்படி
எந்தெந்த வேலைகளைச் கற்றுக்கொள்ளப்
பிரியப்படுகிறார்களோ அந்தந்த வேலைகளு
க்கு அவசியமான டிராங்கிளை மாத்திரம்
எழுதக் கற்றுக்கொடுக்கிறார்கள். இதைப்
போலவே அந்தந்த வேலைகளுக்கு அத்
தியாவசியமாக வேண்டிய ஆயுதங்களும்
இன்னொருத்தரை எதிர்ப்பார்க்காமல் தா
ங்களே செய்யக் கற்றுக்கொடுத்தால்
ரொம்பவும் சிலாக்கியமாக விருக்கும்.
தற்காலத்தில் நடந்துவரும் யுத்தங்கார
ணமாக அநேக அருமையான ஆயுதங்
கள் அன்னிய தேசங்களில் இருந்து வரு
வது தடைப்பட்டிருக்கிறது. இப்படிப்
பட்ட காலத்தில் அந்தந்த தொழிலுக்கு
வேண்டிய ஆயுதங்களை அந்தந்த தொழி
லாளிகள் கற்றுக் கொண்டிருப்பது மிக்க

மேம்பாடுடையதாகும். இவ்விஷயத்தை மேற்படி சித்திரகலாசாலை மேலதிகாரிகளும் நம்மவர்களும் கவனிக்கும்படியாய் கேட்கிறோம். இவ்விஷயத்திற்கு சிலர் பலவிதமான ஆட்சேபனைகள் சொல்லுகிறார்கள். அவைகளை நாம் மெத்தவும் கூர்மையாக யோசித்து பார்த்தோம். ஆனாலும் God helps those that help themselves" "யார் பிறருடைய சகாயத்தை விரும்பாமல் தாமே தமக்குரிய காரியங்களைச் செய்கிறார்களோ அவர்களுக்கு கடவுள் சகாயம் செய்கிறார்" என்னும் பழமொழிக்கிணங்க கூடுமானமட்டும் நமக்கு அவசியமானவைகளை நாமே செய்துகொள்ளத் தெரிந்திருப்பது மிக்க நலமுடையதாகுமென்று நமக்குத் தோன்றுகிறது. "இக்தும் மூன்றும் சரியாயிருந்தால் அறியாத பெண்ணும் கறி சமைப்பாள்" என்னும் பழமொழியும் இதற்குச் சாட்சி பகரும். நாமிப்பத்திரிகையில் நம்மித்திரர்கள் முன்னேற்றமடையவேண்டுமென்கிற நன்னோக்கத்துடன் அநேகஅரியபெரிய விஷயங்கள் எழுதி வருகிறோம். நம் பத்திரிகாநேயர்களும் மற்றவர்களும் கொஞ்சம் கவனித்து காலத்திற்கேற்ற கோலம் காற்றுள்ள போது தூற்றிக்கொள்ள வேண்டும். என்னும் பழமொழிகளை கவனித்து அத்தியாவசியமாய் தற்காலத்தில் ஏற்படுத்தவேண்டிய, நீக்குச்சி, குண்டூசி, பேனா, பென்சல், கத்தி, கத்திரி, சிமனி, கண்ணாடி, குடைமுதலிய எல்லாருக்கும் அவசியமாய் வேண்டிய சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகளை பலநகரங்களிலும் பட்டணங்களிலும்அநேகமாய் ஏற்படுத்தவேண்டும். நம் சிறுவர்களில் அநேகர் கல்விப்பயிற்சி யில்லாமல் கெட்டுப்போகிறார்கள். அவர்களெல்லாம் பதினான்குவயது வரையில் வாசிப்பதற்கு கட்டாயக் கல்விகற்பிப்பதற்காக வித்தியாசாலைகளும், பகலில் வேலைசெய்யும் ஏழைப்பிள்ளைகளுக்கு கல்விகற்பிப்பதற்காக இராப்பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தவேண்டும். இவைகளெல்லாம் ஏற்பாடுசெய்வதற்கு நமது இராஜாங்கத்தாரை எதிர்பார்த்திருந்தால் கூடாது. நம்மவர்களில் பணக்காரராயுள்ள புண்ணியசீலர்கள் நாமெழுதுவதை கொஞ்சம்கவனித்து சாற்காலத்து மின்னல் போன்ற இத்தேகத்தைச் சதமெனநம்பி தாம் சேமித்து வைத்திருக்கும் பொருள்களை ராவ் பகதூர் ஸ்ரீ கண்ணன் செட்டியார் ஸ்ரீ இராமாநுஜம் செட்டியார் என்பவர்களைப் போன்ற இக்காலத்திற்கேற்ற தர்ம காரியங்களிலேயும் மேற் குறிக்கப்பட்ட தொழிற் சாலைகள் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதிலேயும் செலவழித்து நம் தேசத்தவர்கள் முன்னேற்றமடையும் படியான காரியங்கள் செய்வார்களென்று நம்புகிறோம். டாக்காமஸ்வின்போன்ற அநேக நம் தேசத்துக்குச் சொந்தமான அதாவது அதைப்போல மற்ற தேசத்தவர்கள் செய்ய முடியாதிருந்த நெசவுத் தொழில்களும் இன்னும் மற்ற அரிய பெரிய தொழில்களும் இக்காலத்தில் இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டன. அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு இத்தேசத்திலுள்ள பிரமுகர்கள் தக்க உதவி செய்யாமையே காரணமாகும். சுயநலப்பிரியர்களாக நம்மவர்களிருக்கிறவரையில் இந்தியாதேசம் முன்னேற்றமடையாது. நம்வாழ்நாட்களோ கொஞ்சம் நீர்மேற்குமிழி. நிலையில்லா காயம் ஆகையால் நாம் ஜன்மாந்திரங்களில் எத்தனையோ தாய்தந்தையார்களையும் பெண்

சாதி பிள்ளையும் உடைத்தாயிருந்தோம். இனிவரும் ஜன்மங்களிலும் அவ்வாறே அநேக தாய்தந்தை முதலானவர்களை அடைவோம் ஆகையால் கர்மங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த தர்மமாகக் கருதப்படும்படியான தேச முன்னேற்றத்தைக் குறித்து' உழைக்கும்படியாக நம்மவர்கள் அனைவரையும் மிகவும் வணக்கமாக வேண்டுகிறோம். நாமெழுதுவதைக் காற்றில்தூற்றப்பட்ட பதர்போலும், காட்டிற் காய்ந்த நிலவுபோலும், கடலிற்பெய்த மழைபோலும் வீணாக்காமல் நம்தேசத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்லெண்ணமும் நன்னோக்கமும் உண்டாக்கச் செய்யும்படி பரம கருணாநிதியான எல்லாம்வல்ல இறைவனை சதா தியானிக்கிறோம்.

முதலுகதினோர் திரண்டிற் சொலிச்சித்தரித்து மூன்றினான்கிற்செய்யவே, முற்றுமின் சிருஷ்டியென் றியற்றும முறையினீ முளரிநிகரிருகைசேப்ப, வதனவெயர்நீர்ததும் பிச்சிதற மெய்சோர்ந்து வாடநெடு மூச்செறிதரா, வன்றெழி லியற்றிமனை வாழ்க்கையுயர் மோக்ஷமெய்ம் மார்க்கமு மளித்துநரர்பால், இதமருளுறுத்தமற் றவருனைப் புகழா திகழ்ந்திரு பிறப்பினர்களோ, ஈனசாததானியமை வாழ்த்தியெதிரோடிவீழ்ந் தேத்தியொரு ளுதவலுணரிற், கதழ்விரெறு தாசன்மனை மேலன்பு வைக்கவள் கழுதைமேல் வைத்தவறிவும், காய்முடத் தெங்குக்கு நீர்வார்க்க வுதவிபிறர் காண்டல்நிகர் விஸ்குருவே.

***

ஆயுதங்களின் உபயோகம்

மனிதன் ஆயுதம் உபயோகிக்கும் பலக் குறைவு உள்ளவன், அளவு குறைந்தவன், அஸ்திவாரப் பலமில்லாதவன், காற்றின் அசைவிற்குப்பயந்துகால்களைவிரித்தூன்றி நிற்பவன் ஜீவன்களுக்கெல்லாம் குறைந்த வலியுள்ளவன், மூன்று குண்டிடை பாரத்தினால் அழுத்தப்படக்கூடியவன், வெட்டவெளியின்காற்றினால் கந்தைத்துணியைப்போல் கீழும் மேலுமாக உருளப்பட்டவன் இப்படிக் கெல்லாமிருந்தபோதிலும் இவன் ஆயுதம் உபயோகத்தினால் இவனுடைய பலவீனங்களைச் சரிசெய்து கொள்ளக்கூடும் புதிய ஆயுதங்களையும் கற்பனை செய்யக்கூடும் இவ்வாயுதங்களினால் கிருங்கல் மலைகளெல்லாம் தூசுதூசாக்கி இவன் முன் விழுகின்றன நன்றாய்க் காய்ச்சிய இரும்பை வேண்டியபடி களிமண்ணைப் போல் உபயோகிக்கின்றான். காற்றையும் நெருப்பையும், களைப்பில்லாமல் ஓடும் குதிரைகளைப்போல் உபயோகிக்கின்றான், சமுத்திரங்களை பாதையாக உபயோகப்படுத்துகின்றான். இவனை ஆயுதங்களில்லாமல் எங்கும் காணுவதில்லை. இவன் ஆயுதங்களில்லாமல் பிரயோசன மற்றவனாகின்றான். ஆயுதங்களுடன் எல்லாம் வல்லவனாய் நிற்கின்றான். என்று ஒருவர் எழுதியிருக்கின்றார். இப்படி விசேஷித்துச்சொல்வதினால் ஆயுதங்களைத் திறமையாய்ச் செய்வதிலும் உபயோகிப்பதிலும உள்ள உயர்ந்த பிரயோசனத்தை கவனியுங்கள். இவ்வாயுதங்களினால்தான் ஐரோப்பா பூரணநாகரீகமடைந்து இவ்வாயுதங்களினாலே தான் மனித ஜென்மங்களின் பிரயோசனத்திற்கும், இன்பசுகத்திற்கும் வேண்டிய சாமான்களைச் செய்யக்கூடியதாயிற்று. இவ்வாயுதங்களினாலே தான் இன்னும் வேண்டிய பலவித ஆயுதங்களைக் கற்பனைசெய்யவும் நேரிட்டது. எதனால் தச்சன் மரத்தைப்பெட்டியாக்குகின்றான் தோட்டக்காரன் தரையை மட்டமாக்கி கொத்துகிறான்.

தையற்காரன் உடுப்புகள் தைக்கிறான். அவைகளை ஆயுதங்கள் என்றால் அப்படியே வாள்பட்டரை ஸ்டீம் சம்மட்டி. மோட்டார் கலப்பை அரவடையந்திரம், நெசவு யந்திரம், நெல்லுகுத்தும் மெஷின் இன்னும் ஆயிரக்கணக்கான வேலைகளுக்குத் தக்க யந்திரங்களும் ஆயுதமென்றே சொல்லப்படும். எப்படியென்றால் நமது சிறு ஆயுதங்களைக் கொண்டு கையினால் செய்யும் வேலைகளுக்குப் போதுமான வலிவு குறைவு ஏற்பட்டால் அக்குறைவை ஒழுங்குப்படுத்த யந்திரம் அல்லது வலிவு கொடுக்கும் ஆயுதம் உபயோகிக்கின்றோம். இவ்வித யந்திரங்கள் இந்தியர்கள் உற்பத்தி செய்து கொள்ளாமையாலும் அல்லது இதர தேசங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளாமையாலும் தொழில் விஷயங்களில் துரிதக்குறைவினால் சக்தியற்றவர்களாயிருக்கின்றார்கள். இந்தியர்கள் தங்களுடைய சிறு ஆயுதங்களினாலேயே செய்யும் கைவேலைகளில திறமையடைந்தவர்களாயிருந்த போதிலும் தற்கால நாகரீகத்திற்குத் தக்கவாறு சுமார் முப்பது கோடி தொகைக்கு மேல்பட்ட இந்திய ஜனங்களுக்கு வேண்டிய எல்லாவற்றையும் கவனிக்க இச்சிறு ஆயுதங்களின் உதவியால் சாத்தியப்படாமல் அன்னிய நாட்டிலிருந்து வரும் சாமான்களை ஏராளமாய் உபயோகிக்கலாயிற்று. இதனால் ஆயுதங்களில்லாதது குறை என்றே ஏற்படுகின்றது. தற்காலம் இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் தொழில் விஷயங்களில் இதுதான் முக்கிய வித்தியாசம். அதாவது இந்தியர்கள் எல்லாம் கையினாலேயே செய்யும் வலிவுகுறைவுள்ள இடங்களில் நிறுத்திவிடுகிறார்கள், ஐரோப்பியர்கள் எவ்வளவு வலிவு வேண்டுமானாலும் அதற்குத்தக்க வலிவுள்ள மெஷின்கள் என்ற யந்திர ஆயுதங்களை உற்பத்தி செய்து வேலைகளை முடிக்கின்றார்கள். இவ்வித உற்பத்தியின் அநுகூலங்களினாலேயே தான் இதர தேசங்களில் தொழில் விசேஷித்தது இதுவன்றி தொழில்நாகரீகமடைந்த இதர தேசத்தவர்கள் செய்ததையே செய்து கொண்டிருப்பதிலும் அடிமையாய் மூளையில்லாதவர்கள் போல் உழைப்பதிலும் திருப்தி கொண்டவர்கள் அல்லவா ஆகையால் எந்த விதத்திலாகிலும் எதையாகிலும் தலையில் நுழைத்துக் கொண்டு அதைவழிப்படுத்தும் குணம் அவர்களுக்குச் சகஜமாய் அமைந்துள்ளது இந்தியர்களும் அப்படியே தொழில் விஷயங்களில் புராதீனமாய் நாகரீகம் பெற்று, கையினால் செய்யக்கூடியவைகளை யெல்லாம் திறமையாய் முடிக்கும் ஞானம் அடைந்து பேர் பெற்று வந்திருந்த காலத்தில் உலகவிவகாரங்களில் சில மாறுதலடைந்து இதனால் தொழில் உற்சாகம் குறைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில் படிப்படியாய் இதரதேசத்துச்சரக்குகள் வரநேரிட்டது. இவைகள் அதிகமாய் வரநேரிட்டதினால் இந்தியர்கள் பயந்து இவர்களின் தொழில் இனிமேல் நாட்டுச் சாமான சாமான்களுக்கு முன் பயன்படாது என்ற அதிருப்தியினால் தொழில் விஷயங்களில் சரக்குக்குறைவு ஏற்பட்டனவென்று ஒருவாறாய் யூகிக்கலாம். இக்கஷ்டம் விளைந்திராவிட்டால் மிஷின் முதலிய ஆயுதங்கள் இந்தியாவில் பெருகி இருக்கும் இவர்களின்நிலைமை தொழில்விஷயங்களில் மற்றெல்லா தேசங்களையும்விட நாகரீகம் பெற்றே இருந்திருக்கும் எவ்விதத்

திலே நமது துர் அதிர்ஷ்டத்திற்குதக்கபடி தொழில் விஷயங்கள் தாழ்மை யடைந்து விட்டன. இனியாகிலும் விஸ்வகர்மாக்கள் உற்சாகத்துடன் குறைபாடுகளைக் கவனித்தால் சீரடையலாம். மற்ற தேசத்தார்களைப்போல் நாகரீகம் பெறலாம்:—

மனிதர்களுக்கு உதவியாக வலிவுகொடுக்கும் யந்திரம் அல்லது ஆயுதம் இஞ்சின் என்று நெடுநாள் உபயோகத்திலிருந்து வருகின்றன. இனி இதனுடைய உதவி அடங்கி மின்சாரத்தின் உதவியால் மனிதர்கள் அநேக தொழில் நாகரீகமடைவார்கள் போல் காணப்படுகின்றன. இம்மாறுதலின் சந்தர்ப்பத்தில் நாம் சீர்திருத்திக்கொள்வதே நல்ல சந்தர்ப்பம் என்று நினைக்கப்படுகின்றன.

* * *

ஆபரணத்தொழில்.

நமது விஸ்வகர்மஜாதியார்கள் தொழில் ஞானம் பெற்றவர்களாயிருந்து மற்றவர்களைவிட எல்லாத் தொழில்களிலும் பிரக்கியாதிபெற்று இன்னும் கைத்தொழிலையே தங்களது சொந்தமாக பாவித்து ஜீவனத்திற்கு ஆதாரமாய்ப் பாதுகாத்துவருபவர்கள் தொழில் விஷயங்களில் புதிதாய்ப் பிரவேசிக்கும் மற்ற ஜாதியார்களைப் போல் அவ்வளவு லாபமடையாததற்குக் காரணமென்னவென்று நெடுநாளாய்க்கவலையுற்று கவனித்ததில் எல்லாம் நாகரீகக் குறைவு என்று ஏற்படுகின்றன. தொழில்செய்வதை மாத்திரம் கவனித்தால் போதாது. தற்கால நாகரீகத்திற்குத் தக்கவாறு தொழில் செய்யும் இடம் நாகரீகமாய் பலமரியாதையுள்ள கனவான்கள் வரத்துபோக்குக்கு தகுதியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதை முதல் கவனிக்கவேண்டியது. அம்பட்டர்களெல்லாம் ஷாப்பு வைத்துக்கொண்டு நாற்காலிபோட்டு க்ஷவரம் செய்யும்போது திண்ணையின் மேல் ஆபரணம் செய்கின்றவர்களும், கொல்லை சாக்கடைக்கு அருகாமையில் வேலைசெய்பவர்களும் ஆபாசமான சந்துகளுக்குள் சந்தில் நகை வியாபாரம் வைததுக்கொண்டிருக்கிறவர்களும் தகுந்த கனவான்களின் கவனத்திற்குள் வரமாட்டார்கள். அவர்களை அலட்சியமாய் அந்தஸ்தில்லாமல் தொழில்நடத்துகிறவர்களென்று இகழ்ந்தும், அவர்களுடைய தொழில் திறமை எவ்வளவு விசேஷமாயிருந்தபோதிலும் சற்றும் கண்ணோக்காமல் பெருமையுடன் தொழில் நடத்துபவர்கள் யாரென்று பார்த்து அவர்களுடைய கூலி முதலியவைகள் இரண்டுபங்கு அதிகமாயிருந்தபோதிலும், அவர்களின் வேலைத்திறமை தாழ்ந்திருந்த போதிலும் கவனியாமல், மரியாதையாய்ப் போகவும் மரியாதையாய்ப்பேசவும் நம்பிக்கையுள்ள இடங்களை விசேஷமென்று நினைப்பார்கள் அநேகமாய் உலகம் சீரடைந்து வருங்காலத்தில் ஆபரணத்தொழில் செய்யும் கனவான்கள் இதைகண்ணோக்காமல் நெடுங்காலத்திற்கு முன்னிருந்தது போலவே நாகரீகக்குறைவு இருப்பது என்னகாரணம்? யார் எந்தத்தொழிலைச் செய்தாலும் மரியாதை விளைவித்துக் கொள்ளும் மார்க்கமாய்ச் செய்யவேண்டும். இந்த ஒரு இரகசியத்தினால் அநேக கம்பெனிகள் ஏராளமான லாபத்தை, அடைகின்றன. இதை அறிந்தவர்கள் விஸ்வகர்மாக்கள் அல்லாத மற்ற ஜாதியார்கள்தான். ஆகையால் மற்ற ஜாதியார்கள் ஏற்படுத்திருக்கும் தொழில் வியாபாரங்கள் செழித்து வளர்கின்றன.

இதனால் நம்மவர்கள் அறியவேண்டியது என்னவென்றால் தொழில் ஞானம் எவ்வளவு பூர்த்தியாயிருந்தாலும் போதாது, பிரகாசிக்காது, மரியாதை யுண்டாகாது, பிரக்கியாதி யடையாது, நமது தாழ்ந்த நிலைமை மாறாது, லாபங்காணாது இவ்விதமான திருப்தியும் தோன்றாது. இத்துடன் தொழிலை மரியாதையுடன் உபயோகிக்கும் ஞானம் ஒவ்வொருவரும் பழகி அதின் அனுசாரணையினால் தன் தொழிலை மற்றவர்கள் கவனிக்கச்செய்து வார்த்தை தவறாதவர்கள்போலும், நம்பிக்கை யுள்ளவர்கள்போலும், எல்லோருக்கும் காணப்பட்டால் நமதுதொழில்வித்தைகளெல்லாம் லாபம் லாபமாய்க் குவியும். கவனியுங்கள் கூலிக்காரவேஷமாய்த்தொழில்நடத்தப்படாது. கேவலமானஇடத்தில் மரியாதையுடன் வேலைநடத்தவேண்டும். நாம் கையில் காப்பு முதலியன போட்டுக் கொண்டு நாகரீகமாய்க் காணப்பட்டாலும் நம்பிக்கை உண்டாகாது. எல்லாம் நற்குண நற்செய்கையால் காட்டவேண்டும் நம்பிக்கை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும் நகை செய்பவர்களை மரியாதையுடன் அழைக்கவேண்டும் தற்கால நாகரீகத்திற்குத் தக்கவாறு நாற்காலி போட்டு உட்கார வைக்கவேண்டும். நல்லவார்த்தைகளைப் பேசவேண்டும் சொன்ன கெடுவுக்குக் கொடுத்துவிடவேண்டும் திருகாணியாயிருந்தாலும் மரியாதையாய்ப்பேசியனுப்பவேண்டும். "என்ன மகாவேலையோ ஐயா" என்றதை உபயோகிக்க கூடாது. வார்த்தை நயமாயிருந்தால் யாரும் மயங்குவார்கள் சிடுசிடுப்பு சினத்திற் குரிய அலட்சியம் முதலிய அல்பத்தனம் நமக்குக் கூடாது. நம்மிடத்தில் ஒருவரும் நெருங்கமாட்டார்கள். நமது ஜீவனம் கெட்டுப்போகும் இவைகளையெல்லாம் நன்றாய்ப் பகுத்தறிந்து யாரொருவர் ஒழுங்காய் தொழில் நடத்துகின்றாரோ அவர் பூரண ஜெயமடைவதற்கு யாதொரு சந்தேகமில்லை. தற்காலம்சிலருக்கு நடக்கும் வேலையின் சொல்பலாபத்தினால் மேற்சொல்லியவைகளெல்லாம் அனாவசியமென்பார்கள். அதமிசகு அப்படிக்குள்ளவர்கள் மேற்சொல்லியபடி சில அம்சங்களில் ஒழுங்கமைந்தவர்களாகவே யிருந்திருக்க வேண்டும் ஆனாலும் எல்லாம் பூரணமாய் அனுசரித்து வருவதில் எத்தனையோ பங்கு அதிகலாபம் கொடுக்கக்கூடியதை வீணாய் இந்தக்கொஞ்சலாபத்திலேயே திருப்தியடைகிறார்களே? லாபத்தின் அளவு இவ்வளவு என்று ஒரு அத்துக்குள் அடங்கியதல்லவே சமுத்திரம் போன்றதாச்சுதே. கண்திறந்து பார்க்காமல் கொஞ்சம் லாபத்திலேயே மயங்கி விடுகின்றவர்கள் எப்படிக் கரை சேருவார்கள். உலகமுழுவதும் நம்மதாயிருந்தால் கூட திருப்தியடையக்கூடாது. மேல் உலகம் கீழ் உலகம் எப்படி நம் வசமாவது என்று நினைக்க வேண்டும். அப்படிக் கெல்லாம் அவா கொண்டால்தான் அருள் கிடைக்கும். நமது வல்லமை யெல்லாம் பணமாக்க முடியும் பிரக்கியாதியாய்வாழலாம் பெரும் பேர் எடுக்கலாம் இரண்டணாவில் திருப்தியடைவதாயிருந்தால் காட்டுக்குச் செல்லலாம் காஷாயத்தை தரித்து விடலாம்.

***

கண்ணாடி செய் முறை

கண்ணாடி அல்லது பளிங்கு சிலிகா ஆல்காலி என்கிற இரண்டு வஸ்துக்களும் அநேகமாய் உஷ்ணத்தால் கலந்துண்டாகும் ஓர் பொருள். கண்ணாடியின் முக்கியமான அம்சம் என்னெனில் அது உருகியிருக்கும்போது வச்சிரம்போல் ஒட்டிக்கொள்ளும் ஒருவித புதுமையான குணத்தை அடைகிறது. அக்குணத்தினால் அது ஓர் குழையின் முனையைச்சுற்றி திரண்டு ஒட்டிக்கொள்ளுகிறது. குழையின் மற்றொரு பக்கமாய் ஊதினால் உள்பக்கமாய் விசாலித்ததுபோலாகிறது. அப்போது எந்த ரூபமாகவாவது அல்லது எந்த அளவாகவாவது செய்துகொள்ளலாம். குளிர்ந்தபோது கடினமாய் விடுகிறது. உடைந்துபோகும் குணத்தை அடைகிறது. உஷ்ணமாயிருக்கும்போதே எந்தப்பிரகாசமான மழமழப்பான பளபளப்பான தோற்றத்தை அதில் உண்டாக்குகிறோமோ அத்தோற்றத்தை எப்போதும் உடைத்தாயிருக்கிறது. கண்ணாடிக்கு எந்த நிறத்தையாவது எந்த வர்ணத்தையாவது உண்டாக்கலாம். உருவங்களைப் பிரதிபலிக்கும்படியாகவாவது அல்லது பிரதிபலிக்காதிருக்கவாவது செய்யலாம். சீதோஷ்ண ஸ்திதி அதில் கேட்டை உண்டுபண்ணுகிறதில்லை. காலக்கிரமத்தால் அழிகிறதுமில்லை.

செய்யப்படும் கண்ணாடி தவிர, ஒருவிதமான சுதேசக்கண்ணாடி அக்னி பர்வதங்களின் சமீபத்தில் சில வேளைகளில் கண்டு பிடிக்கப்படுகின்றது. அக்னிபர்வதத்தின் எரிபொருள்கள் குளிர்ந்தபோது கண்ணாடியாகிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக் கண்ணாடியை ரசாயன பரிசோதனை செய்தார்கள். அப்பரிசோதனையில் அலுமினியம், இரும்பு, பொடாஷ் அல்லது சோடா முதலியவற்றின் எரிந்த சிட்டமென கண்டுபிடித்தார்கள். இது முதல் முதல் எத்தியோபியாதேசத்தில் ஆப்ஸிடியாஸ் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது என்று யாத்திரைக்காரரும் பேர்போன பூர்வீக சரித்திரக்காரருமான ப்ளினி என்பவர் சொல்லுகிறார்.

பூர்வீகசரித்திரக்காரர்கள் இந்தியாவில் பளிங்கு சாமான்கள் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஈஜிப்தில் கண்ணாடித்தொழில் ஆச்சரியமான விருத்தியை அடைந்திருந்து அக்காலத்தில் கண்ணாடியால் அநேக உருக்கள் உண்டாக்குகிறார்கள் அவைகளெல்லாம் இப்போது பூமியில் புதையுண்டிருந்தன. வெளியில் எடுக்கப்பட்ட சில அதிக தொழில் சாமர்த்தியத்தையும் பூரணத்தையும் காட்டுகின்றன. அவ்வேலைப்பாடு இக்காலத்திலும் கூட மீறப்படாமல் இருக்கிறது.

***

கண்ணாடி உற்பத்தியில் சேரும் சாமான்கள்.

முக்கியமான வஸ்து மணல் அல்லது சிலிகா. மணலின் குணம் மாத்திரமே கண்ணாடியின் குணத்தை நிர்ணயப்படுத்துகிறது மணலில் அநேக விதமான அசுத்தங்கள் காணப்படுகின்றன. மணலில் எந்த வஸ்து சேர்ந்திருந்தாலும் கண்ணாடி உற்பத்தியில் அதிக கெடுதலை உண்டாக்காது. இரும்பு சம்பந்தப்பட்டிருந்தால் மாத்திரம் அதிககேடு உண்டாகிறது. இரும்பு சம்பந்தப்படாமல் மணல் அபூர்வமாய்த்தான் கிடைக்கும். இரும்பின் கெடுதலையான குணத்தை மாற்ற சில வேளைகளில் ஆர்சனிக்கை உபயோகிக்கிறார்கள். ஆனால் அது எப்போது காரிய சித்தியாயில்லை இது வல்லாமலும் ஆர்சனிக் அதிக விலையானதாகையால்

அதிகமாய் உபயோகிக்கக் கூடுகிறதில்லை. ஆகையால், கண்ணாடி உற்பத்தி செய்வோர் இரும்பு சம்பந்தமில்லாத மணலைக் கண்டுபிடிக்கப் பார்க்கிறார்கள். இரும்பு சம்பந்தப்பட்டிருப்பதை மணலை முதலில் (Muridic acid) மியூரியாடிக் ஆஸிட்டில் கரையச் செய்து பிறகு அதன்மேல் தண்ணீரில் கரைந்துள்ள (Potassium ferrocyauide) பொட்டாசியம் பர்ரோனியா ஸினட்டில் சில துளிகளை நீலப்புகை உண்டாகும். இது பலமான பரீக்ஷை இந்த பரீக்ஷையில் 20o பாகத்திற்கு ஒருபாகம் உள்ளதாக அவ்வளவு கொஞ்சம் இரும்பு இருந்தாலும்கூட அதை வெளிப் படுத்துகிறது. மணல் ஆஸிட்டில் கரையும்போது ஏதாவது நுரைகிளம்புமானால் அது மணலில் சீமைச்சுண்ணாம்பு அதாவது ஒரு கார்போனேட் சேர்ந்திருக்கின்றது என்பதை தெரிவிக்கிறது. கொஞ்சம் இரும்பு சேர்ந்த சாதாரண மணல் பச்சைப் பளிங்கு புட்டி செய்வதற்கு உபயோகமாகிறது. வெண்ணிற கண்ணாடி செய்வதற்கு, நல்ல மணல் அகப்படாவிட்டால், மணலை நன்றாய் சுடவேண்டியது (அதாவது மணல் பொடி எதிலிருந்து உண்டாக்கப் படுகிறதோ அந்த கற்களைச் சுடவேண்டியது) அப்படிச் சுடுவதால் சிலிகாவுக்கு அன்னியமான வஸ்துக்கள் காற்று ரூபமாகப்பிரிந்து போகின்றன. அடுப்பின் மேல்பாகத்தில் கற்களை வைத்து நெருப்புள்ள கீழிடத்திலிருந்து சுவாலையை கத்களின் மூலமாய் போகவிடுவதால் சுடும் வேலை ஆகிறது. வெள்ளைக் கண்ணாடிச்செய்ய உத்தமமான மணல் என்று கருதப்பட்டன ஒரு விதமான பிரான்சுமணல், ரசாயன பரிசோதனத்தில் பின்வரும் பொருள்களை உடையதாக தெரிய வருகிறது.

சிலிகா .... 395 பாகம்
மாங்கனீஸ் அலுமினியம், இரும்பு
ஆக்ஸைட்கள்.................... 2 பாகம்
ஈரம் .... 3 பாகம்
ஆக 400 பாகம்

கண்ணாடி உற்பத்தியில் சிலிகாவைப் போல் அவ்வளவு முக்கியமான வஸ்து ஆல்காலி, ஆல்காலியின் உதவியால்தான் சூட்டில் மணல் முதலிய வஸ்துக்கள் உருகி கண்ணாடியாகிறது. இரண்டு ஆல்காலிகள் தான் இப்போது கண்ணாடி செய்வதில் முக்கியமாய் உபயோகிக்கிறார்கள். அவை பொட்டாஸியம் ஸோடியம் கார்போனேட்கள் (Potassium & sodium Curdonales)

இது பரிபந்தம் பொட்டாஸியம் கார்போனேட்மரச்சாம்பலிலிருந்து உற்பத்தி செய்தார்கள். மரத்துண்டுகளை அடுக்கி எரித்து சாம்பலாக்கி அதின்மேல் நீர் வார்ப்பதால் நீரில் கரையும் பாகம் வெளியாகிறது. மிகுதியாயுள்ளவற்றை மறுபடியும் நீரில் கரையச்செய்து காய்ச்சுவதால் கடையில் விற்கும் பொட்டாஸியம் கார்போனேட் இப்போது உண்டாகிறது. இவ்விடத்தில் உற்பத்திசெய்வதில்லை. இப்போது ஜெர்மனி முதலிய தேசங்களில் காணப்படும் பொடடாஸியம் க்ளோரைட் என்னும் வஸ்துவிலிருந்து உண்டாகிறது. பொடாஸியம் கார்போனேட் அதிக விலையானதால் சோடியம் கார்போனேட்தான் இப்போது உபயோகிக்கப் படுகிறது. சோடியப் க்ளோரைட் கூட தாவர வஸ்துக்களிலிருந்து அதே விதத்தில் முன்னே உற்பத்தியாக்கப்பட்டது. இப்போது சாதாரண உப்பிலிருந்து உண்டாக்கப்படுகிறது. உப்பிலிருந்து சோடியம் கார்போனேட்டை உண்டாக்குவது கஷ்டமாயும் அதிக செலவானதாகவும் இருப்பதால் சில வேளைகளில் உப்பையே உபயோகிக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஆவியாக்கப்பட்ட கால்ஷியம் க்ளோரைடை காய்ச்சப்பட்ட மணல்கள் நிறைந்த பாத்திரத்தில் பிரவேசிக்கச்செய்வதால் கிளாஸ் செய்யப் பிரயத்தனப்பட்டதாக கேள்விப் பட்டிருக்கிறோம். இந்த விதத்தில் உண்டாகிற சோடா சிலிகேட் உபயோகமுள்ளதாக இருக்கிறதில்லை. இந்த விதம் எல்லாராலும் உபயோகப்படுத்தப்படவில்லை. பின்பு கிளாஸ் பானையிலேயே சோடா சிலிகேட் செய்ய பிரயத்தனப்பட்டார்கள். மணல் சீமைச் சுண்ணாம்பு, உப்பு இவைகளைச் சேர்த்து கண்ணாடி ஆக்கினார்கள். இவற்றிலிருந்து, அதிக சூடிருந்தால்தான் ஆவியானது வெளியாகும். உப்பின் பிரிவினைக்குவேண்டிய சௌகர்யங்களெல்லாம் கூடியிருக்க வேண்டும். இந்த விதத்தில் சுத்த கிளாஸ் ஆகிறது. ஆனால் அதிக செலவானதால் யாரும் செய்கிறதில்லை. சோடிய க்ளோரைட் ஒரு காலத்தில் நல்ல ஜயமுள்ள ஆல்கலைன் ஏஜண்டாகும். மணலும் ஆல்காலியும்சேர்ந்து கண்ணாடி ஆகிறதாயிருந்தாலும் சுண்ணாம்புக் கல் கொஞ்சம் சேர்த்தால் தான் கண்ணாடி உறுதியாயும் பளபளப்பாயுமிருக்கும் சில வேளைகளில் காரீயத்தை சுண்ணாம்பு கல்லுக்குப் பதிலாக உபயோகிக்கிறார்கள். அல்லது சுண்ணாப்பு கல்லோடு கூடவும் உபயோகிக்கிறார்கள். இப்போது அதிக பளபளப்பாகிறது. எந்தநிறத்தையாவது கண்ணாடிக்கு கொடுக்கவேண்டுமானால், நீல நிறமுண்டாக்க (Ohidi of Cofalt) ஆக்ஸைட் ஆப்கோபால்ட் சேர்க்கவேண்டும். பச்சை நிறம் உண்டாக்கவேண்டுமானால் (Ohidi-of Chtomium) ஆக்ஸைட் ஆப்க்ரோமியம் செம்பு இரும்பு சேர்க்கவேண்டும். மஞ்சள் நிறம் உண்டாக்க (Ohidi of Uarnium) ஆக்ஸைட் ஆப்யுரானியம் சேர்க்கவேண்டும். ஊதா நிறமுண்டாக்க ஆக்ஸைட் ஆம் மாங்கனீஸ் சேர்க்கவேண்டும். சிவப்பு நிறம் உண்டாக்க ஆக்ஸைட் ஆப்கோல்ட் (Cold) சேர்க்கவேண்டும், கண்ணாடிக்கு நிறம் கொடுப்பது அதிக நுட்பமும்கஷ்டமுமானது. எல்லாம் கண்ணாடி செய்கிறவர்களுடைய சாமர்த்தியத்தின்மேலிருக்கிறது. உஷ்ணத்தின் அளவை சரிப்படுத்துவதிலும் சேர்மானவஸ்துக்களை வேண்டிய அளவாக போடுவதிலும் நிறம் சரியாக உண்டாகும். சிறிது வித்தியாசமிருந்தால் கூட நிறத்தில் வித்தியாசப்படும். ஆக்ஸைட் ஆப் ஐரனை (Ohidi of Irni) பலவித அளவாக சேர்ப்பதாலும் பலஅளவான உஷ்ணத்தை உண்டாக்குவதாலும் எல்லா நிறங்களையும் உண்டாக்கலாம் என்று சாஸ்திரிகள் விவரிக்கிறார்கள். உஷ்ணத்தை அளவாக உயர்த்துவதினாலும் குறைப்பதினாலும் பலவித நிறங்கள் அவைகளின் இயற்கை குணத்தில் உண்டாகின்றன. பூர்வகண்ணாடித் துண்டுகளை ரசாயன பரிசோதகம் செய்வதால் மேல் விவரித்த விஷயம் ஸ்திரப்படுகிறது. ஏனென்றால் அந்த பரிசோதத்தில் ஒரே விதமான வஸ்துக்கள் தான் பலவித நிறங்களையுடைய கண்ணாடிகளில் சேர்ந்திருப்பதாக காணப்படுகிறது. இந்த விஷயத்தில் ரசாயன சாஸ்திரம் உரித்தான அம்சங்களை கண்டுபிடிக்காதிருக்கிற வரைக்கும், கண்ணாடி

செய்கிறவர்கள் இந்த நூதன முறைகளை உபயோகிப்பது சாக்கிரதைக்குரியது என்று கண்டு பிடிக்கிறவரைக்கும் பலவித நிறங்களை உண்டாக்க பலவித ஆக்ஸைட்களைத் தான் உபயோகித்துக்கொண்டிருப்பார்கள்.

கண்ணாடி செய்வதில் 1-பங்கு ஆல்காலி இரண்டு பங்கு மணல் சேர்க்கவேண்டும். மணலை விட ஆல்காலியின் விலை தான் அதிகம். ஆல்காலன் சோடா கண்ணாடி செய்வதில் சேர்வதே அல்லாமல் அபரிமிதமாய் சோப்பு செய்வதிலும் காகிதம் செய்வதிலும் கொஞ்சமாய் பஞ்சு நூல் ஆக்குவதிலும் வர்ணம் போடுவதிலும் சேர்கிறது. ஆகையால் ஆல்கலைன் சோடாவிற்கு இந்தியாவில் அதிக கிராக்கி இருக்கிறது. ஆல்கலைன் சோடா அதிகமாய் இறக்குமதியாகிறது. ஆல்கலைன் சோடா உண்டாக்கவேண்டிய இயற்கை ஆதாரங்களும் சௌகர்யங்களும் இந்தியாவில்இருக்க ஆல்கலைன் சோடா உண்டாக்க இதுவரைக்கும் ஒருபிரயத்தனமும் செய்யப்படவில்லை. இது ஆச்சரியம்! ஒருசோடியம் க்ளோரைட் நிலைகளும் அதிக சரசமான வஸ்துவாகிய வட இந்தியாவில் அதிகமாய் இருக்கிறபடியால் அதிக நேர்த்தியான சோடியம் கார்போனேட்கள் உண்டாகும் என்று நம்பிக்கை இருக்கிறது. விலையில் சரசமாயும் ஆல்கலைன் குணத்தில் பலத்ததாயும் இருக்குமென்று கருதப்படுகிறது. ஆனால் சரியாக மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இந்தியாவில் ஆல்காலி உற்பத்தி செய்கிறவர் அத்துடன் உண்டாகும் உபப்பொருள்கள் சங்கையிலும் அளவிலும் குறையப் பார்த்தாலொழிய, அவ்வுபப்பொருள்களுக்கு நல்ல விலை வந்து விற்பனையானாலொழிய, இருந்த இடத்திலேயே கிடைக்கக்கூடிய சரசமான சாக்குகளை கண்ணாடி-உற்பத்தியில் உபயோகித்தாலொழிய ஐரோப்பாவிலிருந்து ஆல்கலைன் சோடாவை தயாரித்து அனுப்புவோரோடு நாம் போட்டி செய்ய முடியாது.

இமாசலத்தில் கோபால்ட் சுரங்கங்கள் இருக்கின்றன. முயற்சியுள்ள மேல்நாட்டார் ஒன்றைக் கண்டு பிடித்து தங்களுக்கு எப்போதும் பூர்ண சொந்தமாக்கிக்கொண்டு குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். இந்தியாவில் உபயோகமாகும் கோபால்ட் ஆக்ஸைட் எல்லாம் இந்திய சுரங்கங்களில் வெட்டி எடுத்து இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு அங்கே சுத்தமாகி ஏற்றுமதியாகி இந்தியாவில் இறக்குமதியானது தான். இதற்கு மணங்குக்கு 700 அல்லது 800 ரூபாய் கொடுத்து வாங்குகிறோம். நம்முடைய சாக்கையே நாம் விலை கொடுத்து வாங்குகிறோம். இந்தியர்கள் நிலைமை இப்படி இருக்கிறது.

கண்ணாடி உற்பத்தியில் சேரவேண்டிய சாக்குகளை யெல்லாம் சரியான அளவில் சேர்த்தபோது கண்ணாடி வேலைக்காரனுடைய வேலையில் கொஞ்சந்தான் ஆயிற்று என்று நினைக்க வேண்டும். வேலைக்காரன் பிறகு அத்யந்த சூட்டுக்கு தாளும்படியான விறகு கொஞ்சமாய் உபயோகமாகக்கூடிய காளவாயைச் செய்ய வேண்டும்.

காளவாய் செங்கல் செய்வதற்கு சாக்குகள் தேர்ந்தெடுப்பதில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். கண்ணாடி உருகவேண்டிய சூட்டைத்தாளும்படியாக செங்கலும் களிமண்ணும் இருக்கவேண்டுவதும் தவிர மெட்டாலிக் ஆக்ஸைட் சோதகதாயிருக்க வேண்டும். இங்கிலாந்திலும் ஜர்மனியிலும் அகப்படும் (Dinas) என்கிற செங்கல் இது விஷயத்தில் மேன்மையானது என்று நினைக்கிறார்கள். அவைகளில் விசேஷமாக நல்ல சிலிகாவும் கொஞ்சம் சுண்ணாம்பும் தான் சேர்ந்திருக்கிறது. சிவப்புக்களிமண் (ஸ்டோர் ப்ரிட்ஜ்) இங்கிலாந்து மகா சிரேஷ்டமானது. ஜப்பல்பூர் (இந்தியா) சிவப்பு செங்கல் சாதாரண வேலைக்கு போதுமானது. ரசாயன பரிசோதகத்தில் ஜப்பல்பூர் களிமண் ஐரோப்பிய மண்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல.

காளவாயின் மேல் பாகத்தைக் கட்டும்போது தான் அதிக நல்லசாமான்களை உபயோகிக்க வேண்டும்.

சாதாரணமாய் உபயோகத்திலிருக்கிற காளவாய் விவரம்:—நெருப்பு உண்டாகும் இடத்திற்கு மேல் ஒரு பானை கவிந்திருக்கிறது. சுவாலை கீழே இருந்து பானைக்குள் மேல் நோக்கிச் செல்கிறது. இது சுலபமானது செலவில்லாதது. கொஞ்சமாய்க்கண்ணாடி செய்யவேண்டுமானால் அதிக தகுதியானது உயர்ந்த கண்ணாடி செய்யவேண்டுமானால் காற்றுக்(ஆவி)காளவாய் உத்தமமானது. இதில் ஆவி கொஞ்சம் தூரத்தில் உண்டாக்கப்படுறது மூசையைக் கிட்டுவதற்கு முன்னமே ஆவியானது சுத்தமாகி எரியாத கார்பன் பொடிகள் நீங்கி, வருகிறது. காளவாயில் தான் கண்ணாடிச் சாக்குகள்உருகுகின்றன. அதின்குணம் அதிக சூட்டின்மேலிருக்கிறது. சூடு போததாயிருந்தால் குறைபாடுகள் உண்டாகின்றன. முட்டைகள் விடுதலையாகாத காற்றிருப்பதினால் உண்டாகின்றன. புள்ளிகள் கலக்காத கார்பன் இருப்பதால் உண்டாகின்றன. சூடு போதாததாயிருந்தால் நிறமும் மங்கலாகிறது. சுத்தமான பிரதிபலிக்கிற கண்ணாடி செய்யவேண்டுமானால் காளவாயின்தீ கனத்ததாயும் ஒரே மாதிரியாயும் காலக்கிரமமாயும் இருக்கவேண்டும்.

காளவாய்கள் இரண்டு விதம்.

(1) குளக்காளவாய். இதிக், கண்ணாடி-உருக வெற்றிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் காளவாய்விஷயத்தில் அதிக கவனத்தை செலுத்த வேண்டியிருக்கிறபடியாலும் அதிக முதல் பணம்வைக்கவேண்டியதிருக்கிறபடியாலும் சாதாரணமாய்க் காளவாய் இவ்விதத்தில் கட்டுவதில்லை. ஒரேவிதமான கண்ணாடி ஏராளமாய்ச் செய்யவேண்டியிருந்தால் மாத்திரம்தான் இத்தகைய காளவாய் கட்டுகிறார்கள். ஐரோப்பாவிலும் இதர இடங்களிலும் குளக்காளவாய் கண்ணாடி புட்டிகள் செய்யும் வேலை யிடங்களில் தான் கட்டுகிறார்கள். சாதாரணமாய் உபயோகப்படும் காளவாய் பானைக் காளவாய் தான். இதற்கு அதிகபணச்செலவில்லை. இதில் மூசைகளை வேண்டும்போது வைக்கவும் வேண்டியபோது எடுக்கவும் சௌகரியமிருக்கிறது.

மூசைகள் இரண்டு முதல் ஆறு மணங்கு சரக்கு பிடிக்கும்படியாக சின்னதாயும் பெரிதாயுமிருக்கின்றன. அநேகமூசைகளை ஒரே தட்டையில் வைக்கலாம். கையில், ஒரே தட்டையில் பலவிதமான கண்ணாடிகள் செய்ய சௌகரியமாயிருக்கிறது. இது பல காளவாய் இருக்க வேண்டுமென்கிற அவசியத்தை நீக்குகிறது. அவரவர்கள் மனோரம்மியத்திற்கு தகுந்த மாதிரி வேலை செய்யத் தகுதியாயிருக்கிறது. பல

வித நிறக் கண்ணாடிச் சாமான்கள் செய்ய சௌகர்யமாயிருக்கிறது.

மூசைகள்—நெருப்பு களி மண்ணால் தான் செய்கிறார்கள். சாதாரண சுட்ட களி மண்களைத் தூளாக்கி 7-க்கு 9 அளவாகச் சேர்க்கப்படுகிறது. சேரப்பட்ட களி மண்களின் விதத்திற்குத் தக்கபடி அளவு வித்தியாசப்படுகிறது. உலர்ந்து இருக்கும் போதே களிமண்கள் கலக்கப்படுகின்றன. அதன்மேல் ஜலம் போடுகிறார்கள். கையில் பிசைகிறார்கள். அல்லது காலால் மிதிக்கிறார்கள். காலின் சூடும் சுருங்கி நீளும் சக்தியும் மண்ணுக்கு செல்லுகிறதென்றும் அதினால் வச்சிரத்தின் குணம் இந்த பசைக்கு வருகிறதென்றும் ஓர் நம்பிக்கை ஜனங்களுக் குள்ளிருக்கிறது. இந்தப்பசை மண் ஒருவாரம்வரைக்கும் பிசைந்த மாதிரியாகவே வைக்கப்படுகிறது.

சாதாரண கண்ணாடிக்கு உபயோகிக்கும் மூசை உச்சியில் திறந்திருக்கிறது. அதின் பக்கங்கள் கீழிருந்து மேலே போகப்போக விரிந்திருக்கிறது. சேர்த்தியான கண்ணாடி செய்வதற்கு மூடிய பானையை உபயோகிக்கிறார்கள். இதனால் உச்சியிலிருந்து களி மண் துண்டுகளும் எரிக்கப்படாத கார்பன் தூளும் கண்ணாடி சரக்கில் விழுந்து குணம் கெட்டுப்போவதை நீக்குகிறது. இந்த மூடிய பானைக்கு ஒரு பக்கத்தில் ஓர் துவாரம் இருக்கிறது. அதின் மூலமாய் சரக்குகளை உள்ளே வைப்பதற்கும் கண்ணாடியை வெளியில் எடுப்பதற்கும் உபயோகமாகிறது. மூசை செய்கிற அறையில் ஒரே மாதிரியான உஷ்ணம் இருக்க வேண்டும், குளிர் காலத்தில் ஒரே மாதிரியான உஷ்ணமிருக்க அறையைச் சூடேற்றுகிறார்கள். பானைகள் செய்தான பிறகு அவற்றை உலரும்படி விடுகிறார்கள். உபயோகப்படுவதற்கு முன்னே 45 மாத வரைக்கும் முதிரும்படி செய்கிறார்கள். அப்போது அவைகள் சுடுவதற்குள்ள அடுப்பின் மேல் வைக்கப்படுகின்றன. சூடு ஜாக்கிரதையாய் உயர்த்தப்படுகிறது. படிப்படியாய் கண்ணாடி உருகும் காளவாய்க்கு எவ்வளவு சூடு வேண்டுமோ அவ்வளவு சூடு உயர்த்தப்படுகிறது. அப்போது உருகும் காளவாயிலிருந்து பழைய பானைகளை எடுத்து விட்டுப் புதிதாய்ச்சுட்ட பானைகளை வைக்கிறார்கள். பழைய பானையை எடுப்பதும் புதிய பானையை வைப்பதும் அதிக தைரியத்தையும் சாமார்த்தியத்தையும் சார்ந்திருக்கிறது. பானைகள் பெரிதாய் இருப்பதும் தவிர, அதிக சூடாயுமிருக்கின்றபடியாலும் உருகும் காளவாயின் சூடு அதிக பலத்ததாயுமிருக்கிறபடியாலும் காளவாயிலிருந்து மூசைகளை எடுப்பது அதிக கஷ்டமாயிருக்கிறது. காளவாயில் வைத்தபிறகு உருகிய கண்ணாடியால் மூசைகளுக்குப் பளபளப்பான மேல்பூச்சு செய்கிறார்கள். அதினால் ஆல்காலியின் சக்தியால் பின்னப்படுகிறதில்லை. மூசைகளுக்கு ஆல்காலி பெரிய பயங்கரமான சத்துரு மூசைகளின் பக்கங்களிலாவது அடியிலாவது பலஹீனமாயிருந்தால் அந்த இடத்தில் ஆல்காலியின் சக்தி பிரவேசித்து விரிந்து அல்லது சிட்டங் கட்டிப்போகிறது. ஆல்காலி மூசையில் சிறிது விரிவையோ அல்லது துவாரத்தையோ ஏற்படுத்தினதும் இன்னும் தன்னுடைய வலிமையை மூசையின்மேல் இடைவிடாமல் பிரயோகித்து துவாரத்தை அல்லது விரிவைபெரிதாக்கிக் கொண்டே இருக்கிறது. கடைசி

யில் மூசையிலுள்ள உருகிய கண்ணாடி ஒழுகி அந்த மூசைக்கு துவாரத்தை அடைக்கப் பல பிரயத்தனத்தைச் செய்கிறார்கள். ஆனால் ஒரு தடவை மூசையில் துவாரம் உண்டானால் அதோடு அந்த மூசை பின்பு உபயோகமாகிறதில்லை. கண்ணாடி சரக்குகள் உருகுவது மூசையின் பரிமாணத்தின் மேலும் சூட்டின் மிகுதியின் மேலும் நிற்கிறது. அம்பாலா கண்ணாடி உற்பத்தி சாலையில் 5 மணங்கு சரக்கு பிடிக்கும்படியான மூசைகள் உபயோகத்தி லிருக்கின்றன. 1110 டிக்ரீ பாரன்ஹீட்சூடு ஏற்றுகிறார்கள். ஒரு மூசை நிறையவுள்ள கண்ணாடிசரக்கு உருகப்பதினான்கு மணி நேரம் ஆகிறது. உருக்கு வேலை ஆனதும் சூட்டைக் கொஞ்சம் குறைக்கிறார்கள். அதினால் கண்ணாடி கொஞ்சம் கெட்டியாகிறது. பிறகு அதை எடுத்து வேண்டிய மாதிரிகளில் கண்ணாடி சாமான்களை செய்கிறார்கள். இந்தச் சாமான்கள் அதிக சூடாக இருக்கும். திடீரென்று சூட்டைக் குறைத்தால் சாமான்கள் விரிந்து போய்விடும். அல்லது உடைந்து போய்விடுகிறது. ஆகையால் படிப்படியாய் சூட்டைக் குறைக்கிறார்கள். அதற்காக குளிர்ச்சியாகிற அடுப்புகளின்மேல் வைக்கிறார்கள். அவ்வடுப்புகளில் கொஞ்சம் நெருப்பு எப்போதும் எரிந்து கொண்டே இருக்கிறது. அந்த நெருப்பு படிப்படியாகக் குறைந்து கடைசியில் அவிந்துபோகிறது. ஜப்பானில் குளிரச்செய்யும் வேலை மணலையாவது சாம்பலையாவது பரப்பி அதின்மேல் கண்ணாடி சாமான்களை வைப்பதினால் ஆகிறது. அதிக செலவில்லாமல் மணலை காய்ச்சும் முறையைக் கண்டு பிடித்தால் மணலில் ஆறவைக்கும் முறை அதிக பயனுள்ளதாகும். சாமான்கள் குளிர்ந்ததும் வேண்டிய கடைசி அந்தப் பாடான வேலை செய்கிறார்கள். பிறகு விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

தொடரும்.

⁂

வார்ப்பட வேலை.

சுத்தமான வார்ப்படங்களுக்குத் தக்க பித்தளை.

சுத்தமாய்ப் பாயும் வார்ப்படங்களுக்கும், சுலபமாய்க் கடையவும், ராவவும் தகுதியான பித்தளை சாதாரண பித்தளையைவிட தெளிவாய் உருக்கக்கூடியதாயிருக்கவேண்டும், மொத்தையாய் உருகப்படாது நன்றாய்க் கலந்துருகவேண்டும். இந்த வார்ப்படங்களெல்லாம் குற்றங்களில்லாமலிருக்க வேண்டுமாகையால் கொதிப்பு அடங்கி கட்டிப்போவதற்கு முந்தி எவ்வளவு தாழ்ந்த சூட்டில் பதமாய் ஊற்றக்கூடியதோ அவ்வளவு வரையில் சரக்கு நீர்த்திருக்கவேண்டியது. சாதாரணமாய் வார்ப்படக் காரர்கள் வார்ப்பிப்பதற்கு முந்தி உருகிய சரக்கு தெளியும் பொருட்டும், சிட்டங்களைக் குறைப்பதற்கும், இன்னும் பலவிதமான அசுத்தங்களை நிவர்த்திப்பதற்கும் தகுந்த மாத்து (Fluz) உபயோகிக்க நினைப்பதேயில்லை. இதற்காக சோடா, உப்பு, வெண்காரம், அடுப்புக்கரி இவைகளைக் கலந்து எண்ணெயுடன் பிசைந்து கொஞ்சம் கொஞ்சமாய் உபயோகித்தால் சரக்கு வெகு சேர்த்தியாகக் காணப்படும் கிலிட்டு செய்யத் தகுதியுள்ள அருமையான பதிப்பு வேலைகளுக்கும் கம்பி வேலைகளுக்கும் உயர்ந்த கலப்புகள் உபயோகிக்க வேண்டியது மிக அவசியம்.

ஏன் என்றால் செம்பு அதிகப் படுவதினால் கிலிட்டிற்குச் சுலபமாயிருக்கும். கிலிட்டு சாதாரணமாய்ச் செம்பு நிறத்தில் பிடிப்பதுபோல் பித்தளை நிறத்தில் பிடிப்பதில்லை.

உருக்கக்கூடிய கலப்புகள்.

உருக்கக்கூடிய கலப்புகள் முக்கியமாய் வெள்ளீயம், பிஸ்மத், காரீயம், காட்மியம் இவைகளை அளவாய்ச் சூடுகாட்டும் சந்தர்ப்பங்களிலும், சீக்கிரம் உருகும் பொடி பயிலர்களுக்கு ஆப்பு, அவசரமாய் அடைக்க வேண்டிய துவாரம் முதலியவைகளுக்கு உபயோகப் படுகின்றன. இவைகளெல்லாம் தனித்தனியாய் உருகுவதைவிடக் கலப்பில் மிகவும் தாழ்ந்த சூட்டில் உருகும் 15 பாகம் பிஸ்மத், 3 பாகம் ஈயம், 4 பாகம் வெள்ளீயம், இக்கலப்பை தாழ்ந்த சூடு வேண்டிய உலோகங்களையும், வெண்மை நிறமுள்ளதையும் பத்த வைக்க உபயோகிக்கிறார்கள்.

ஜெர்மன் சில்வர்.

ஜெர்மன் சில்வரானது முக்கியமாய்ச் செம்பு, நாகம், நிகல் கலந்துள்ளது. ஜெர்மன் சில்வரானது வெண்ணிறத்திற்கும், பிரகாசத்திற்கும், தெளிவிற்கும், ஓட்டும் குணத்திற்கும், நயத்திற்கும் பேர்போனது இது உப்பு புளி முதலியவைகளின் செய்கையைத் தடுக்கக்கூடியது. சாதாரணமாய் இதைத் தகடுகளாக இழுக்கப்பட்டிருந்தபோதிலும் அநேகமாய் பவுண்டரி முதலிய இடங்களில் உப்புத் தண்ணீருக்கு வேண்டிய காரக் முதலிய பாகங்கள் உயிர்ப்பிக்க உபயோகிக்கிறார்கள். ராவவும் கடையவும் வேண்டிய சாதாரண வார்ப்படங்களை யெல்லாம் இதனால் வார்ப்பிக்கிறார்கள். கலப்பு சரக்கு உருகும்போது மூசைக்கு அடியில் நிகலைவைக்க வேண்டும், அதின்மேல் செம்பும் மற்றவைகளும் வைத்து அடுக்கவேண்டும்.

செம்பு முதல் உருகும் கரித்தூள் மேல் தூவி சிட்டம் கட்டாமலிருக்கச் செய்ய வேண்டும். ஒருமணி நேரத்திற்குப் பின் பித்தளையை நன்றாய் உருக்கிக் கலக்கவேண்டும். பிறகு கரி, வெண்காரம், உப்பு சரியளவாய்க் கலந்ததை ஒரு அவுன்சு சேர்க்கவேண்டும். பின் வெள்ளீயம், காரீயம் சேர்த்து கண்ணாடித்தூளினால் மூடப்படவேண்டும். இது நன்றாய் ஊடும் மூசையிலும் கெடாமல் பாதுகாக்கும் சரக்கின்மேல் மட்டத்தில் சிறிய நீலத்துளிகள் காணப்பட்டால் சரக்கை ஊத்துவதற்கு பக்குவமான சமயம் என்று அறியவும்.

வெகு சாக்கிரதையாய் ஒவ்வொரு மவுலிலும் சரக்கை ஊத்திய பிறகு மூசையில் கரித்தூள் தூவவேண்டும். மவுல்களும், அதின் உள்ளுண்டைகளும் உபயோகிப்பதாயிருந்தால் அதுகள் நன்றாய்க் காய்ந்திருக்கவேண்டும். நிகல் சில்வர் என்ற சரக்கை ஊத்துவதாயிருந்தால் மவுல்களை ஒழுங்கில்லாமல் நிறப்ப நேரிடுமாகையாலும் அதிக சூட்டில் வார்ப்பித்தால் இரைச்சலாய் பாயுமாகையாலும், சரியான சூட்டில் ஒழுங்காய் உபயோகிக்க வேண்டியது மிக அவசியம். ஒரு தேக்கரண்டி அளவு பார்ப்பரஸ் நூறு பவுன் சரக்கில் சேர்த்து உருக்கினால் சரக்கு நன்றாய் நீர்த்து சிட்டங்களில்லாமல் சுத்தமாய்ப்பாயும் ஜெர்மன் சில்வர் கலப்பு வார்ப்பு வேலைக்கு வேண்டுமானால் கொஞ்சம் ஈயம் சாதாரணமாய்ச் சேர்ப்பதுண்டு. இதனால் வேலை செய்யத் தகுதியாயிருக்கும்

சரக்கையும் மேன்மைப்படுத்தும். மிகக்கடினமான கலப்பு வேண்டுமானால் இரும்பு சேர்ப்பதுண்டு மாங்கனீஸ் என்ற உபயோகம் சேர்த்தாலும் இரும்புசேர்த்தாற்போல் குணங்கள் காட்டும்.

ஜெர்மன் சில்வரை அடிக்கடி உருக்குவதினால் அதில் உள்ள நாகம் தீஞ்சு சரக்கு மாறி விடுகின்றமையால் அப்போதைக்கப்போது நாகம் கொஞ்சம் சேர்க்கவேண்டியது மிக அவசியம். ஒவ்வொரு உருக்களுக்கும் சுமார் 100-க்கு 2-பாகம் நாகம் சேர்த்தால் போதும்.

கன் மெட்டல்.

கன்மெட்டல் என்பது பொதுவாய் உபயோகிக்கும் பெயர். அநேகமாய் பீரங்கி முதலியதுகள் செய்வதற்கே உபயோகிப்பது. செம்பு, மற்ற உலோகமும் கலந்து கடுசாலையும், கெட்டியாயும் உள்ள சரக்குகளுக்கே இப்பெயரை உபயோகிப்பது. இச்சரக்கைச்சாதாரணமாய் மிஷின்களின் பேரிங்குகள் அல்லது உளுவாய்கள் செய்வதற்கே உபயோகிப்பது. இவ்வித உபயோகத்திற்கு உழைப்பிற்குத் தாங்கக்கூடியதாகவும் சுலபமாய்க் கடைய ராவ, வேலை செய்ய அதிக பலமுள்ளதாயுமிருக்கும். பலவித பித்தளைகளுடனும் பிரான்சுகளுடனும் உருக்கி ஊத்தும் சமயத்தில வெகு கொஞ்சம் அளவு பாஸ்பரஸ் (நூற்றுக்கு ஒரு கரண்டி அளவு) சேர்த்துக்கொள்வது நேர்த்தியான ஏற்பாடு இதனால் சரக்கு நீர்த்து ஜலம்போல் ஓடும் சுவாபீகத்தை விருத்திசெய்யும் ஒருவேளை கொஞ்சம் அதிகமாய்ச் சேர்த்துவிட்டாலும் யாதொரு பின்னமும் நேரிடாது.

தொடரும்.

***

சாயத்தைப் பிடிக்கச்செய்து கெட்டிப்படுத்தும் உபசரக்குகள்.

(MORDANTS).

இவற்றில் சாயமில்லை. ஆனால் சாயத்தை துணிகளிலோ அல்லது நூலிலோ பட்டிலோ, ரோமத்திலோ, அல்லது சாயத்தை ஒட்டவைத்து சாயம் கெட்டியாக்குங் குணமுடையன. சாயங்கொடுக்கும் சரக்குகளுக்கு ஒட்டிக்கொள்ளும் சக்தி கிடையாது. சாயத்தை ஒட்டிக் கொள்ளச் செய்யும் சரக்குகள் காரம் என்று சொல்லப்படும். காரம் இல்லாமல் சாயம்போட்டால் சாயம் நன்றாய் பிடிக்காது. பிடித்தாலும் ரங்காயிராது. காரத்தை வர்ணத்தோடு சிலவேளையில் கலந்து விடுகிறார்கள். சில வேளைகளில் சாயம் தோய்க்கவேண்டிய சரக்குகளுக்கு முதலில் காரத்தை ஏற்றுகிறார்கள். பிறகு சாயத்தில் தோய்க்கிறார்கள். சில வேளைகளில் இந்த இரண்டு முறையையும் சேர்த்துக் கையாடுகிறார்கள். அரக்கு சாயம் போடும்போது இரண்டு முறையையும் சேர்க்கிறார்கள். பின் வருவன உபசரக்குகள்.

(1) அப்பளாகாரம்.—இது எகாலியர் உபயோகப்படுத்தும் ஆல்காலைன் மண். அதற்கு பெயர் சவுட்டுமண், உழமண், சாயக்காரர்களுக்கு இது இன்றியமையாதது சாயத்தில் தோய்ப்பதற்கு முன்னே சரக்குகளைத் தயார்படுத்துவதற்கு மாத்திரமல்ல, சரக்கில் சாயம் பிடிக்கச்செய்யவும் சாயத்தை கெட்டியானதாக செய்யவும் கூட அப்பளாகாரம் அவசியமானது. தென் இந்தியாவில் ஏராளமாய் எங்கும் கிடைக்கும். மஞ்சள் கலந்த வெ

ன்மை நிறத்தையுடைய மணல்போன்றிருக்கும். அந்த மண்ணில் நூற்றுக்கு 13 முதல் 25 வரை கார்பனேட் ஆப் சோடா இருக்கிறது. மழை பெய்த பிறகு வெயில் காயும்போது உண்டாகிறது. வெள்ளை கிராணைட்கற்கள் உள்ள பூமியில் மயில் கணக்காய் பரவியிருக்கும். பூமியிலிருந்து இரண்டு மூன்று அங்குலம் ஆழம் சுண்டித்தான் எடுக்கவேண்டும். இந்த வஸ்துவைச்சேகரித்துச் சுண்ணும்பு கற்களோடு சேர்த்துக் கொதிக்கவைக்க வேண்டும். பிறகு பலகைபலகையாகச்செய்து கடைத்தெருவுக்கு அனுப்புகிறார்கள்.

படிகாரம்.—சுதேசிகள் அதிகமாய் ஐரோப்பியரைப்போல்உபயோகிக்கிறதில்லை. (1) அப்பளாகாரத்தை விட அதிக விலையானது (2) அது சுத்தமாய் அகப்படாது. இரும்பு கலந்ததாய்த்தான் அகப்படும் வர்ணத்தின் பிரகாசத்தை குறைக்கிறது கடைசியாய் நூலைக்கெடுக்கிறது. முன்னைக்காட்டிலும் இப்போது அதை அதிகமாய் உபயோகிக்கிறார்கள்.

தகரவிரை:—ஓர் செடியின் வித்து அதின் இலை முட்டை வீத்தாயிருக்கும். புஷ்பம் மஞ்சள் நிறமுள்ளது. நான்கு இதழ் உள்ளது. புஷ்பத்தின் மத்தியிலிருந்து ஓர்காய் உண்டாகிறது. அதில் வித்துகள் இருக்கின்றன. அவை அதிக நெருக்கமாயிருப்பதினால் நேராயிராத குழைகளைப்போலிருக்கின்றன. உலர்ந்த வித்துகள் பசுமை கலந்த மங்கலான நிறமாயிருக்கின்றன. கொதிக்க வைத்தால் அவைகள் பருத்து வச்சிரம் போன்ற ஒட்டிக்கொள்ளும் பசை மொத்தமாகின்றன. அதை நீலவர்ண தோய்ப்பு சேர்க்கிறார்கள், இதனால் வர்ணம் கெட்டுப்போகிறதில்லை. சுண்ணும்பு சேர்த்தால் கெட்டியாய்விடும்.

சுண்ணும்பு.—சாதாரண சுண்ணும்பு கிளிஞ்சலைச் சுடுவதால் உண்டானது அதைக் கொஞ்சமாய்உபயோகிக்கிறார்கள்.

கடுக்காய்.—படிகாரம் சேர்த்தால் நல்ல மஞ்சள் நிறம் உண்டாகிறது. அய உப்புகள் (salts of iron) சேர்த்தால் கரும்பு வர்ணமுண்டாகிறது. (ongall) ஓக்கால் கரும்பு வர்ணத்தைவிட பிடாகத்தான் இருக்கும். ஓக்கால் மரத்தின் பழமல்ல கிளைகளில் சிறு ஜந்துக்கள் செய்யும் துவாரங்களிலிருந்து உண்டாகும் ரசம். இந்த ரசம அந்த ஜந்துக்கள்வைக்கும் முட்டைகளுக்கு பாதுகாப்பு இடமாகஇருக்கிறது. (Myrabolan) மைராபோலன் என்பது ஓர் பெரிய மரத்தின் பழம் இதை இந்துக்கள் சாயம் போடுவதிலும் தோல் பதனிடுவதிலும் தொன்று தொட்டு உபயோகிக்கிறார்கள்.

பிஸ்தா.—(Myrabolan) மைரா போலன் மரத்தின் மொக்கு என்றுகருதுகிறார்கள். இது சரியல்ல. இந்த மரத்தின் இலையில் ஓர்வித பூச்சு அடிக்கிறதினால் உண்டாகும் ரசமாகத்தான் இருத்தல் வேண்டும். இதை கோக்கினியலோடு சேர்த்து சாயம் தோய்த்து சுதேசிகள் உபயோகிக்கிறார்கள்.

ஆட்டுச்சாணி.—சுதேசிகள் பூர்வகாலந் தொடங்கி இதை சுதேசிகள் உபயோகித்து வந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு முந்தியும் இப்போதும் கூட ஐரோப்பியர் சிவப்பு வர்ணம் தோய்ப்பதற்கு பருத்தி நூலை சரிப்படுத்த சாணத்தை உபயோகித்து வந்திருக்கிறார்கள். இந்துக்கள் நுணுவேர் சாயத்துடன்சேர்க்கிறார்கள். ஐரோ

ப்பியர் (Turky red) சிவப்புக்கு சேர்க்கிறார்கள்.

நல்லெண்ணெய்.—வர்ணத்தில் இதை கொஞ்சமாய் சேர்க்கிறார்கள். வர்ணந்தோய்ப்பதற்கு முன்னே சரக்கை வர்ணத்தை ஏற்றுக்கொள்ள தயாராக்குவதில் நல்லெண்ணெயை உபயோகிக்கிறார்கள். வர்ணத்திற்கும் நூலுக்கும் சம்பந்தம்உண்டாக்க உபயோகிக்கிறார்கள். எண்ணெய் சேர்ந்தால் சாயம் கெட்டியாகிறது.

கொடிக்கள்ளி.—(Milk hedge) கொட்டை முத்து (ocastor seeds) முள்ளுதண்டு இவைகளை எரிக்கிறார்கள். இவைகளில் எதினுடைய சாம்பலையாவது ஆட்டுச்சாணியோடு கலந்து சிவப்பு வர்ணம் தோய்ப்பதற்கு முன் பருத்திநூலை தயாராக்க உபயோகிக்கிறார்கள். சாயத்தை கெட்டிப்படுத்த எலுமிச்சம்பழ ரசம் சோடா சோரான்கொட்டை (marking nuts) இவைகளை உபயோகிக்கிறார்கள்.

வர்ணம் தோய்க்கும் முறை.

இந்தியாவில் பருத்திநூல் பட்டு உரோமம் சணல் இவற்றிற்கு சாயம் ஏற்றுகிறார்கள். இவைகளுக்குள்ளே பருத்தியை சாயம்போடுதல் தான் சென்னை இராஜதானியில் பூர்வகாலந் தொடங்கி செய்யப்பட்டுவந்தது பருத்தியைத்தா ஏராளமாய் சாயம்போடுகிறார்கள். இந்தியாவில் தான் அந்த வேலை முதல்முதல் உண்டாயிற்று. பட்டையும் உரோமத்தையும் இந்தியர்கள் உபயோகிக்கிறதில்லை ஏனென்றால் பட்டு விலையானது. உரோமம் சீதோஷ்ண ஸ்திதிக்கு ஒத்ததல்ல. உரோமத்தை இந்தியர்கள் முக்கியமாய் போர்வை கம்பளத்திற்காகவும் மிதிகம்பளமாகவும் இரத்தின கம்பளமாகவும் ஆக்குகிறார்கள். சணல் பாயாகவும் படுதாவாகவும் உபயோகிக்கிறார்கள். ஒவ்வொரு வஸ்துவின் விஷயத்திலும் நூல்முதலில் சாயத்தில் தோய்க்கப்படுகிறது. பிறகு வஸ்திரமாக நெய்யப்படுகிறது.

பருத்தியை சாயம் தோய்த்தல்.

சிவப்பு:—இந்த வர்ணத்தில முக்கிய வஸ்து நுணுவேர். காசா இலை நுணுவேர் வர்ணத்தில் கொஞ்சம் வித்தியாசத்தை உண்டாக்க உபயோகப் படுத்தப்படுகிறது. காசா இலையை தனியாகவும் உபயோகிக்கிறார்கள். உபயோகப்படும் இதர வஸ்துக்கள் ஆட்டுச்சாணம், கொடிக்கள்ளி சாம்பல், நல்லெண்ணெய் செம்புராம் பட்டை. சாயவேலை பருத்தி நூலை முதலில் சாயம் ஏற்றுக்கொள்வதற்காக தயாராக்குவதில் ஆரம்பமாகிறது. தயாராக்கும் முறை ஒரு வீசை பருத்திநூலுக்கு

கொடிக்கள்ளி சாம்பல்	5 படி
நல்லெண்ணெய்	1 வீசை
ஆட்டுச்சாணி.	2 பலம்

போதுமான சுத்தஜலத்தில் இவைகளை ஒன்றாய் கலக்கச்செய். ஜலம் நூல் மறைவதற்கு போதியதாயிருக்கவேண்டும். இந்த சேர்மான நீர் சில மணி நேரம் அப்படியேயிருக்கட்டும். பிறகு தெளிந்த ஜலத்தை கீழே கொட்டிவிடு. பருத்தி நூலை இதில் அமிழ்த்து. கையில் நன்றாய் பிசைந்து சேர்மான ஜலம் முழுவதும் நூலில் ஏறும்படிச் செய்யவேண்டும். அதில் ஊறும்படி செய்யவேண்டும். மறுநாள் வெளியே எடுத்து, வெயிலில் உலர்த்தல் வேண்டும். ஜலத்தில் அமிழ்த்தி உலர்த்துவதை 8முறை செய்யவேண்டும். ஒவ்வொருதடவையும் முன் செய்தது போல் ஜலத்தை உண்டாக்கவேண்டும். முதல் நாள் நின்றபோ

ன வண்டலோடு புதிய சாக்குகளை சேர்க்கவேண்டும், முக்கியமாய் கொடிக் கள்ளி சாம்பலும் எண்ணெயும்சேர்க்கவேண்டும். ஒவ்வொருதடவையும் சுத்த ஜலம்தான் உபயோகிக்க வேண்டும். வெயில்காலத்தில் இப்படி அமிழ்த்தி உலர்த்தும் தொழில் நாளைக்கு இரண்டு தடவைக்கு மேல் ஆகாது. ஆகையால் சாயம் போடுவதற்கு நூலை தயாராக்குவதற்கே நான்கு தினம் ஆகும். எட்டாவது தடவை அமிழ்த்தி 2 வாரத்தின் பிறகு சுத்த நீரில் அலசவேண்டும். பிறகு சாயத்தண்ணீர் உண்டாக்க வேண்டும்.

சாயநீர் உண்டாக்கு முறை.

5 பலம் பொடி செய்த நுணலேர் எடுத்து தட்டையான பாத்திரத்தில் (சாலில்) ஜலத்தில் கலக்க வேண்டும். நூலை இதில் அமிழ்த்து. அப்படி கொஞ்ச நேரம் ஊறட்டும். பிறகு வெளியில் எடுத்து வெயிலில் காயப்போடு. இப்படி அமிழ்த்தி உலர்த்துவதைப் பத்துமுறை செய். பிறகு நூலை அந்த ஜலத்திலேயே கொதிக்க வைக்க வேண்டும். கொஞ்சம் காசா இலையை கொதிக்கும்போது போடவேண்டும், கடைசிமுறையில் செம்புராம் பட்டையைப்போட்டு கொதிக்க வைக்க வேண்டும். இப்படி எறியசிவப்பு நிறம்(Turkey Red) டர்க்கி சிவப்பு வர்ணத்தைப்போல் அவ்வளவு பிரகாசமாயில்லை. ஆனால் அது ஓர் நேர்த்தியான ஆழ்ந்த கனத்த நிறம். கருத்த சிவப்பு முத்திரைபோடும் அரக்கு போன்றிருக்கும்.

மஞ்சள் நிறம்:—மஞ்சள் வேக வைத்த நீர் புளித்த கஞ்சி நீர் இவைகளை சேர்த்து நூலைத் தோய்ப்பதால் மஞ்சள் நிறம் பூர்வீகத்தில் உண்டாக்கப்பட்டது. இந்த நிறத்தைக் கொடுப்பதில் இப்போதைய மாதிரி விருத்தியைக் காட்டுகிறது. இப்போது மஞ்சள் சேர்ப்பதோடு (Butea Frendosa)பூரசம்பூ என்னும்மலரையும் காசா இலையையும் (Myrapolans) மீராபோலன்களையும் உபயோகிக்கிறார்கள். பின்னால் சொன்ன மூன்றும் மஞ்சள் நிறத்தை கொடுக்கின்றன. கடைசியாக சொல்லப்பட்ட வஸ்து மஞ்சளில் உள்ள நிறத்தை வெளிப்படுத்தும் உபவர்க்கமாயும் நிறத்துக்கும் நூலுக்கும் சம்பந்தத்தை உண்டாக்கும் வஸ்துவாகவும் நிறத்தை என்றைக்கும் நிற்கச் செய்யும் வஸ்துவாகவும் ஆகிறது. படிகாரம் மேற்சொன்ன செயல்களைச் செய்யும் வஸ்துவாக உபயோகப்படுத்தப்படுகிறது. ஒருவீசை நூலுக்கு மஞ்சள் நிறம் கொடுக்க போதுமான நீரில் ஒடிக்க மிராபோலன் ஒரு வீசை போட்டு நூலையும் போட்டு கொதிக்க வைக்க வேண்டியது. கொதிக்கும்போது ½ வீசை மஞ்சள் 1 வீசை பூரசம்பூ ½ வீசை உலர்ந்த காசா இலை ¼ வீசை படிகாரம் இவைகள் ஒவ்வொன்றையும் தூள் செய்து எல்லாம் ஒன்றாய் சேர் நெருப்பின் மேலுள்ள நூலை எடுத்துவிட்டு கொதிக்கிற மிராபோலன் சேர்மான நீரில் தூள்களையெல்லாம் போடு நூலை மறுபடியும் அதில் வை, பிற்பாடு இரண்டு மணிநேரம் கொதிக்கவை. தண்ணீர் சுண்டி நூல் அமிழ்ந்திருக்க போதாததாயிராவிட்டால் இன்னும் அதிக ஜலத்தை சேர். இந்த கொதிக்கும் தண்ணீரிலிருந்து அடிக்கடி நூலை எடுத்து வேண்டிய நிறம் பிடித்ததா என்று பார்க்கவேண்டும். இது செய்தானதும் நூலைநன்றாய்க் கழுவவேண்டும். வெயிலில் உலர்த்த வேண்டும். மேல் விவ

ரித்த முறையில் நல்ல மஞ்சள் நிறம் உண்டாகிறது. சாயம் மாத்திரம் கெட்டியானதல்ல.

கிச்சிலி நிறம்:—இங்கு விவரிக்கப்படுகிற கிச்சிலி நிறம் கபிலத்தூளினால் பட்டுக்கு ஏற்றும் கிச்சிலி நிறமல்ல. மங்கலான மஞ்சள் சிவப்பு நிறம் இங்கு விவரிக்கப்படுகிறது. நூலை முதலில் மேலே சொன்னபடி மஞ்சள் நிறம் ஏற்றி பிறகு பின் விவரித்துள்ள முறையில் தயார் செய்யப்பட்ட (Sappan Wood) சாப்பன் மரக்கியாழத்தில் கொதிக்க வைப்பதினால் உண்டாவது. ஒரு வீசை நூலுக்கு சாப்பன் மாத்தூள் 1 வீசை போதுமான நீரில் கலந்து 24 மணி நேரம் அப்படியே இருக்க வேண்டும். பிறகு இந்த சேர்மானநீரை, கொதிக்க வைத்து வடிகட்ட வேண்டும். பிறகு குளிர்ந்ததும் ஒருபலம் படிகாரம் சேர்க்க வேண்டும். இதனால் உபயோகமற்ற வஸ்துக்களெல்லாம் வெளியே வந்து விடுகிறது. கனத்த கிச்சிலி நிறசுத்த ஜலம் நிற்கிறது, இந்த ஜலத்தை சாக்ரதையாய் வார்த்துக்கொண்டு, முன் சொன்ன பிரகாரம் மஞ்சள் தோய்த்த நூலை அதில் கொதிக்க வைக்க வேண்டியது. சில சாயக்காரர்கள் கிச்சிலி நிறத்தை உண்டாக்க மஞ்சள் தோய்த்த நூலை குளிர்ந்த குசும்பா கியாழத்தில் நனைத்து வைக்கிறார்கள். முந்திய முறையைக்காட்டிலும் இந்த முறையில் அதிக பிரகாசமான கிச்சிலி நிறம் உண்டாகிறது. ஜாப்ரா விதையை உபயோகித்தால் இன்னும் பிரகாசமான கிச்சிலி நிறம் உண்டாகும். ஜாப்ரா விதையை ஒரு துணியில் முடிந்து பன்னிரண்டு மணி நேரம் நீரில் ஊறவைக்கவேண்டும். சுத்த ஜலமும் இளநீர் ஜலமும் கலந்திருக்கிற ஓர் தட்டையான பாத்திரத்தில் மேல்படி முடிச்சியி லிருக்கிற வஸ்துவை பிழிய வேண்டும். எலுமிச்சைரசமும் படிகாரமும் சேர்க்க வேண்டும். நூலை இதில் அமிழ்த்த வேண்டும். ஒரு மணிநேரம் காய்ச்ச வேண்டும்.

நீல நிறம்:—நீலி மருந்தொன்றுதான் சுதேசிக்குத் தெரியும். நீலி மருந்தினால் கொடுக்கத்தகுந்த தேலிகையான வர்ணங்கள் கெட்டியானவை அல்ல. ஆகையால் நீலி மருந்து நீலக்கருப்பு வர்ணத்திற்குத்தான் முக்கியமாய் உபயோகமாகிறது. நீலி மருந்து தோய்ப்பில் அப்ளாகாரத்தையும் இன்னும் சுண்ணும்பு தகர விதையும் சேர்ப்பதால் நீலகருப்பு வர்ணம் உண்டாகிறது, நீலி மருந்தில் சுண்ணும்பையும் தகர விதையையும் சேர்ப்பதால் நீல நிறம் உண்டாகிறது. சாயம் நமக்கு எவ்வளவு கெட்டியாக யிருக்கவேண்டுமோ, அதற்கு தக்கபடி தோய்ப்பை அதிகப்படுத்த வேண்டும். சில வேளைகளில் இடத்தில் வித்தியாசப்பட்ட அநேகம் தோய்ப்பு நீர் தயாரிக்கப்படுகிறது. சாயத்தை கெட்டிப்படுத்துவதற்கோ அல்லது சாயத்தை மாற்றுவதற்கோ வெவ்வேறு வஸ்துக்கள் சேர்ந்த பல தோய்ப்பு நீர் உண்டாக்கப்படுகிறது. ஒவ்வொரு தோய்ப்பு ஆனதும் நூலை உலர்த்த வேண்டும். சிலவேளைகளில் நூல் ஒவ்வொரு தோய்ப்புக்கு முன்னே அலம்பப்பட வேண்டும். நீலி மருந்து தோய்ப்பு பருத்திக்கும் பட்டுக்கும் உரோமத்திற்கும் எப்போதும் குளிர்ந்ததாயிருக்க வேண்டும். அவரியும் பாலாவும் நீலகருப்பு வர்ணம் தோய்ப்பதற்கு உபயோகமாகின்றன. அவரிதான் மேலானது.

பச்சை:—நீலம் தோய்த்த நூலை

மேல் விவரித்த மஞ்சள் தோய்ப்பில் அமிழ்த்தினால் பச்சை வர்ணம் உண்டாகும்.

ஒரு வீசை பருத்தி நூலுக்கு நீலி மருந்து 2 பலம் சுண்ணாம்பு 2 பலம் வேக வைத்த தகர விதை 4 பலம் தண்ணீர் 12 படி இவைகளை நன்றாய் கல. இதில் சில மணிநேரம் நூலை அமிழ்த்து. சாயம் எவ்வளவு கனத்ததா யிருக்க வேண்டுமோ அவ்வளவு நேரம் அதிகமாய் அமிழ்த்திருக்கவேண்டும். இந்த நிலையில் நூல் எவ்வளவு நீல நிறமாயிருக்கிறதோ அவ்வளவு பச்சை நிறம் உண்டாகும். பின்பு முன் விவரித்த மஞ்சள் தோய்ப்பில் அமிழ்த்த வேண்டும். மஞ்சள் தோய்ப்பு ஆவதற்கு முன்னே நீலவர்ணம் ஏறிய நூல் உலர்த்தப்பட வேண்டும். சிலநாள் வரைக்கும் காற்றாட வேண்டும்.

கருப்பு:—இதில் முக்கியவஸ்து இரும்பு. உபவர்க்க வஸ்து கடுக்காய். 1 வீசை நூல் கருப்பு தோய்க்க துருப்பிடித்த இரும்புத்துண்டுகளை போதுமான கஞ்சித்தண்ணீரில் அமிழ்த்த வேண்டும். குறைந்தது மூன்றுநாள் அப்படியே இருக்கவேண்டும். மேல் தண்ணீரை கொட்டி விட வேண்டும். ஒரு வீசை கடுக்காய் நறுக்கிப் போட வேண்டும். நூலை அதில் போட வேண்டும். 15 நிமிஷம் கொதிக்க வைக்க வேண்டும். நீர் கொதிக்கிற வரையில் காயவேண்டும். பின்பு நூலை எடுத்துவிட்டு ஒரு வீசை அன்னபேதி சேர்க்க வேண்டும். நூலை மறுபடியும் போடவேண்டும். மறுபடியும் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் கொதிக்க வைக்கவேண்டும். இதனால் நேர்த்தியான ஓர் கருப்பு வர்ணம் உண்டாகும். கடைசியாக நூலை நீரில் அலச வேண்டும்.

நீல சிவப்பு :—(Purple) இந்த வர்ணத்தில் பலவிதங்கள் இருக்கின்றன. சில அதிக கருப்பாயிருக்கின்றன. ஆனால் ஒன்றும் பிரகாசமாயிராது. கருப்பு நீல சிவப்பு வர்ணம் உண்டாக்கும் முறை முன்சொன்ன பிரகாரம் நூல் நுணாவேர் சிவப்பு வர்ணத்தில் தோய்க்கப்பட வேண்டும். பிறகு நீலி மருந்து சேர்மான நீரில் அமிழ்த்த வேண்டும்.

வேறொரு முறை.

இடித்த கடுக்காய் படிகாரம் வெல்லம் நுணாவேர்தூள் இவற்றை நீரில் கலக்க வேண்டும். இந்த நீர் ஓர் மூடிய பாத்திரத்தில் ஒரு மாதம் வரைக்கும் இருக்க வேண்டும். பிறகு வர்ணம் தோய்க்க உபயோகமாகும் சிவப்பு வர்ணம் தோய்ப்பதற்கு முன் நூலை தயார் செய்கிற மாதிரியாய் தயார் செய்தால் ஒரு லேசான நீல சிவப்பு வர்ணம் உண்டாக்கலாம். பிறகு காலையும் மாலையும் 5 நாளைக்கு சுருள் பட்டை அல்லது செம்பு ராமபட்டை கியாழத்தில் நனையவைக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் அமிழ்த்தி ஆனதும் உலர்த்த வேண்டும். கடைசியாக சேர்மான நீரில் கொதிக்க வைக்க வேண்டும்.

ரோஜா வர்ணம் :—(Pink or Rose Colour) இதற்கு குசும்பா உபயோகமாகின்றது. உலர்ந்த மலர்களை இடித்து தண்ணீரில் கழுவ வேண்டும். அப்ளாகாரம் சேர்மான நீரில் கலக்க வேண்டும். மேலே தெளிந்த நீரை கொட்டிவிட வேண்டும். பிறகு எலுமிச்சம்பழ ரசம் அதற்கு சேர்க்க வேண்டும். வெளுக்க வைத்த நூலை இதில் நனைத்தெடுத்தால் ஓர் நேர்த்தியான ரோஜா கலர் உண்டாகிறது.

மேலே சொன்ன வர்ணங்கள் எல்லாம் சுதேச சரக்குகளிலிருந்தே உண்டாகின்றன. பூர்வகாலத்தில் செய்த மாதிரியில் தான் செய்யப்படுகின்றன. இவைகளுக்குள் நீல வர்ணமும் நுணாவேர் வர்ணமும் கெட்டி சாயம். இதர வர்ணங்களின் கெட்டி சாயம் நூலை வர்ணத்திற்கு தயார் செய்யும் முறையையும் சாயத்தை நூலில் பிடிக்கச் செய்வதற்காகவும் சாயத்தை கெட்டியாக்குவதற்காகவும் சாயச்சரக்குகளிலிருந்து வர்ணத்தை வெளிப்படுத்துவதற்காகவும் சேர்க்கும் உபவர்க்க சரக்குகளையும் சார்ந்திருக்கிறது. பல இடங்களில் பற்பல உபவர்க்க சரக்குகளை சேர்க்கிறபடியால் வர்ணத்தின் குணமும் பற்பல இடங்களில் வித்தியாசப்படுகிறது.

(Brown) மங்கல் நிறம்.—இது சிவப்பு வர்ணத்திலாவது அல்லது நீல சிவப்பு வர்ணத்திலாவது சேர்ந்தது. அதற்கு தனியாக ஒரு பெயர் சுதேச பாஷையில் இல்லை. சிவப்பு வர்ணத்திற்கு உபயோகமாகும் சரக்குகளைக் கொண்டே அநேகவிதமான மங்கல் நிறத்தை உண்டாக்குகிறார்கள்.

பட்டை சாயந் தோய்த்தல்.

பட்டு மதராசுக்கு சுதேச சரக்கல்ல. வங்காளத்திலிருந்து கோராபட்டு வருகிறது (கோரா-வெளுக்கப்படாத) அதை சுருள் சுருளாக விற்கிறார்கள் (Skins). மட்டி தாராவான மஞ்சள் நிறத்தையுடையது. சணல்போலவும் குதிரை மயிர் போலவும் இருக்கும். இதைவிட வெண்மையான பட்டு சீனதேசத்திலிருந்து பம்பாய் மூலமாய் வருகிறது. அது பம்பாய் பட்டு என்கிறார்கள். இரண்டுபட்டும் எடை அதிகமாவதற்காகவோ அல்லது நூல்கள் நைந்துபோகாமலிருப்பதற்காகவோ ஸ்டார்ச்சில் (Stareh or size) அமிழ்த்தி எடுக்கப்பட்டவையா யிருக்கின்றன. இந்த பட்டுகளை வர்ணம் தோய்ப்பதற்கு முன்னமே வெளுக்க வேண்டும். அவைகள் முடிச்சுகளா இருக்கிறபடியால் வெளுக்க சாத்தியப் படுகிறதில்லை. ஏனென்றால், பட்டுப்பூச்சி செய்த (Cocoon) பட்டு உருண்டையி லிருந்து ஓர் இழையை பிரித்து எடுத்து கைராட்டினத்தில் சுற்றும் போது அவைகள் முடிச்சுகள் ஆகின்றன. அதாவது சுருள்கள். அதற்கு பேர் கண்டி என்கிறார்கள். இவைகளை வெளுக்கிறதானால் நெசவுத் தொழிலுக்காக சுருளைப்பிரிக்கும்போது இழை அடிக்கடி அறுந்து போய்விடும். ஆகையால் இப்படிப்பட்ட 4, 5, சுருளைகளிலிருந்து இழைகளைப் பிரித்து ஓர் இழையாக கைராட்டினத்தில் சுற்றி ஒரு சுருளை அல்லது கண்டி ஆக்குகிறார்கள். தமிழில் இந்த வேலைக்கு பேர் "தாட" என்கிறார்கள். பீதாம்பரங்கள் நெய்யும்போது 5, 6, இழை சேர்ந்த கனத்த இழையான பட்டு வேண்டியதாயிருக்கிறது. கோராபட்டை, பட்டு எவ்வளவோ அதில் 5-ல் 1 பங்கு அப்ளாகாரத்தை தண்ணீரில் போட்டு கொதிக்க வைப்பதினால் வெளுக்கிறார்கள். சூடு நிதானமாய் ஏறவேண்டும். அதிக சூடு ஏறினால் பட்டு கெட்டுபோய் கூழாய் மொத்தையாகிவிடும்.

அடிக்கடி ஒரு பாகத்தை எடுத்து கைவிரல்களால் நிமிட்டி கடையில் விற்கும் பட்டின் நிலைமையை அடைந்ததா என்று பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும். கைக்கு வழவழப்பாயும் நழுவத் தகுந்ததாயும் இல்லாதபோது பட்டை கொதிப்பிலிருந்து

எடுத்து சுத்தமாய்க் குளிர்ந்த சுத்த நீரில் அலசவேண்டும். இந்த வேலை ஆனதும் பட்டு வெள்ளியைப்போல் வெண்மை நிறத்தை அடைகிறது. சாயம் போடுவதற்காகவாவது அல்லது நெய்வதற்காகவாவது தயாராகிறது. பட்டு உரோமத்தைப்போல் ஜீவவர்க்கத்தின் உற்பத்தியானதால் பருத்தியைவிட ஜீவவர்க்க உற்பத்தியான உலோக உற்பத்தியான தாவர வர்க்க உற்பத்தியான எந்த வர்ணங்களையும் ஏற்று எப்போதும் வைத்துக் கொண்டிருக்கத் தகுதியாயிருக்கிறது.

பிரகாசமான சிவப்பு (க்ரிம்சன்.)

இந்தவர்ணம் ஏற்றுவதற்குகோகினியில் (க்ரிம்ஜி) என்னும் ஜீவவர்க்க வஸ்துவை உபயோகிக்கிறார்கள். இந்த வர்ணத்திற்கு உபவர்க்க வஸ்துக்கள் படிகாரமும் பிஸ்தாவும் (பிஸ்தா—கடுக்காய் மரத்தின் இலைகளில் உள்ள பிசின். இலையை பூச்சி கடிக்கிறதினால் உண்டாகிறது.) ஒரு வீசை வெளுத்த பட்டை சாயம்போட 1/8 வீசை படிகார நீரில் ஒரு நாள் நனைத்து வைக்க வேண்டும். பிறகு ½ வீசை கோகினியலும் 1/8 வீசை பிஸ்தாவும் எடுத்துக் கொள். கோகினியலை உலர்ந்த வண்ணமாய் அரைக்க வேண்டும். பிஸ்தாவை நீர் விட்டு அரைக்க வேண்டும் போதுமான நீரில் இவை இரண்டையும் கரைக்க வேண்டும். இந்த நீரை கொதி கிளம்புகிற வரையில் சூடேற்ற வேண்டும். படிகாரத் தண்ணீரில் தோய்த்தெடுத்த பட்டை அதில் போடு. இரண்டுமணி நேரம்கொதிக்கவை. இது நடக்கும்போதே, தூள் செய்த க்ரிம்ஜி அல்லது கோகினியலையும் நீர்விட்டு அரைத்த பிஸ்தாவையும் முன் போட்ட அவ்வளவு எடுத்துக்கொண்டு முன்னிலும் கொஞ்சம் தண்ணீரில் கரைத்து வைத்திருக்க வேண்டும். பட்டை எடுத்து நன்றாய் அலச வேண்டும். புதிதாய் தயார் செய்த கோகினியல் சேர்மான நீரை முன்னமே கொதிக்கிற சேர்மான நீரில் சேர்த்து பட்டை மறுபடி போட வேண்டும். பாத்திரத்தை மூடு. ஒரு மணி நேரம் காய்ச்சு. கடைசியாய் சுத்த நீரில் பட்டை அலச வேண்டும். ஏன் கொஞ்சம் கொஞ்சமாய் கோகினியல் சேர்மான ஜலத்தை இரண்டு முறை உபயோகிக்க வேண்டும். ஏன் ஒரே தடவையில் போதுமான நீரை உபயோகப்படுத்தக் கூடாது என்றால், அப்படி கொஞ்சம் கொஞ்சமாய் இரண்டு தடவை உபயோகித்தால் தான் பட்டில் ஒரே மாதிரியா வர்ணம் பிடிக்கும்.

இருண்ட சிவப்பு:—கொம்பு அரக்கை வெந்நீரில் ஊற வைத்தால் வர்ணம் இறங்குகிறது.

வர்ணம் தோய்க்கும் முறை:—ஒரு வீசை வெளுத்த பட்டை வர்ணம் தோய்க்க, 2 வீசை கொம்பு அரக்கு வேண்டும். கொம்புகள் பிரத்தியேகப் படுத்தப்படுகின்றன. அரக்கு துண்டுகளாக இடிக்கப்பட வேண்டும். சன்னமாய் பொடியாக்கக் கூடாது. இதை ஓர் மூட்டுத்துணியில் கட்ட வேண்டும். வெந்நீர் பாத்திரத்தில் அமிழ்த்த வேண்டும். ஏதோ ஒருதடவை மரச்சுத்தியினால் நசுக்கி இங்குமங்கும் தள்ளிக் கலக்க வேண்டும். இப்போது உண்டாகிற நேர்த்தியான சிவப்பு வர்ண நீரை இன்னொரு பாத்திரத்தில் வார்த்து இன்னும் அதிக வெந்நீரை அரக்கின்மேல் வார்க்க வேண்டும். இந்தவேலையை 5, 6 முறை செய்ய வேண்டும். அரக்கில் உள்ள எல்லா சாயமும் வந்து விடு

கிறவரையில் இம்மாதிரி செய்யவேண்டும். கொஞ்சம் புளிக்குழம்பும் பொடி செய்த படிகாரமும் இந்த நீரில் சேர்க்கவேண்டும் பட்டு அதில் வைக்கப்பட வேண்டும். 3 அல்லது 4 மணி நேரம் கொதிக்கவைக்க வேண்டும். பிறகு அலசவேண்டும். சில சாயக்காரர்கள் படிகாரம் போடுகிறதில்லை.

கோகினியல் வர்ணம் தோய்க்கும்போது செய்ததுபோல படிகார சேர்மான தண்ணீரில் நனைத்து வைத்து வர்ணம் தோய்ப்பதற்கு முன்னே பட்டைத் தயார் செய்கிறார்கள். கொஞ்சம் மஞ்சள் பொடியைக் கூட சில சாயக்காரர்கள் படிகாரத் தோய்ப்பு நீரில் சேர்க்கிறார்கள். அதினால் இந்த வர்ணம் சுத்தமாக மாற்றப்படுகிறது. வர்ணம் எடுத்துவிட்ட பிறகு இருக்கும் அரக்கு அவல் அரக்கு எனப்படும்.

கனத்த மஞ்சள் நிறமும் கிச்சிலி நிறமும்.

கனத்த மஞ்சள் நிறம் இன்னும் கனத்தால் கனத்த கிச்சிலி நிறமாகிறது. வர்ணத் தோய்ப்பில் பட்டை அதிக நேரம் வைத்திருப்பதால் உண்டாகிறது. எவ்வளவு நேரம் வர்ணத்தோய்ப்பில் அதிகமாய் வைத்திருக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு மஞ்சள் நிறம் சிவப்பு வர்ணமாக மாறுகிறது. தாவர வர்க்க வர்ணங்களில் பலவற்றில் அதிக நேர வர்ணத்தோய்ப்பு மஞ்சள் நிறத்தை மாற்றி சிவப்பு நிறத்தைக் கொடுக்கிறது. மேற்கண்ட வர்ணங்களுக்கு கபிலத்தூளை உபயோகிக்கிறார்கள். இதற்கு வெளுக்கப்பட்ட பட்டு வேண்டியதில்லை. கோரா பட்டு போதும். கோரா பட்டு, வர்ணத்திற்கு, பின்வரும் விதத்தில் தயாராகிறது.

ஒரு வீசை பட்டுக்கு ஒரு வீசை அப்பளாகாரம் கியாழம் செய்யவேண்டும். கொஞ்சம் சுண்ணாம்பு பட்டு முழுகும்படியான நீரில் கரைக்கவேண்டும். வண்டல் அடியில் தங்கினதும் தெளிந்த நீரை கொட்டி விடவேண்டும். பிறகு காய்ச்ச வேண்டும். இதில் பட்டை அமிழ்த்துகிறார்கள். ஒரு தடியால் நன்றாய் கலக்குகிறார்கள். பிறகு வெளியே எடுத்து உலர்த்துகிறார்கள். நீரில் அலசாமலே உலர்த்துகிறார்கள். இந்த முறையில் பட்டு முழுவதும் வெளுக்கப்படுவதில்லை. ஆனால் பட்டு மெதுவாகவும் தூசுகளற்றதாயும், ஸ்டார்ச்சு (Starch) இல்லாததாயும் ஆகிறது. பிந்தி வர்ணத்தோய்ப்பு தயாராகிறது. அரை வீசை கபிலபொடியை கொஞ்சம் நல்லெண்ணெய் போடும்படி காரத்தோடும் கலந்து கெட்டியான பசையாகச் செய்கிறார்கள். முன்னமே ஒரு வீசை அப்பளாகாரத்தை போதுமான ஜலத்தில் கொதிக்க வைத்த சேர்மான ஜலத்தில் இந்த பசையை கரைக்கிறார்கள். இப்போது ஓர் அழகான கிச்சிலி நிற வர்ணம் உண்டாகிறது. இதில் தயாராக்கப்பட்ட பட்டை அமிழ்த்தி நனைக்கிறார்கள். மஞ்சள் நிறம் வேண்டுமானால் சில மணி நேரம் தோய்ந்திருக்க வேண்டும். கனத்த கிச்சிலி நிறம் வேண்டுமானால் இரவு முழுவதும் இருக்க வேண்டும். இன்னும் அதிக நேரம் இருந்தால்வர்ணத்தில் வித்தியாசம் ஒன்றும் காணப்படுவதில்லை. ஏனென்றால், மேலே விவரித்த மாதிரியில் வர்ணத்தோய்ப்பு நீர் தயாரிக்கப்பட்டால் பட்டு, குறித்த காலவரைக்குந் தான் வர்ணத்தை ஏற்றுக்கொள்ளும். அதற்குமேல் ஏற்றுக் கொள்ளாது. ஆனால் வேறு உபவர்க்க வர்ண சாக்குகளை

உபயோகித்தால் இன்னும் சிவப்பான வர்ணத்தை உண்டாக்கலாம்.

நீல நிறம் பச்சை நிறம்:—பருத்திக்கு சொன்ன முறைதான் பட்டுக்கும். நீல வர்ணத்திற்கு நீலி மருந்து நீரில் தோய்த்தெடுக்க வேண்டும். பச்சை வர்ணத்திற்கு நீலப்பட்டு மஞ்சள் கலந்த நீரில் தோய்த்தெடுக்க வேண்டும். மஞ்சள் நிறத்திற்கு மஞ்சளை மாத்திரம் உபயோகிக்கிறதில்லை. ஏனென்றால் இந்த வர்ணம் கெட்டியானதல்ல.

கருப்பு:—பருத்திக்கு எப்பொருள் கருப்பு வர்ணத்தை கொடுக்கிறதோ அப்பொருள்தான் பட்டுக்கும் கருப்பு வர்ணம் கொடுக்கிறது. செய்முறையும் ஒன்றுதான். பட்டு, வர்ணத் தோய்ப்புக்கு முன் தயாராக்கப்படாமலே, வர்ணத் தோய்ப்பு நீரில் தோய்த்தெடுக்கலாம். தோய்ப்பு நீர் இரும்பும் கடுக்காயும் சேர்ந்த சேர்மான நீர்.

சுதேச சரக்குகளைக் கொண்டு சுதேச முறைகளின்படி பட்டுக்கு உண்டாக்கும் வர்ணங்கள் மேற்சொன்னவைகளே. மூன்று முதன்மையான வர்ணங்கள் விவரிக்கப்பட்டன. அவற்றில் கோகினியல் சிவப்பு வர்ணம்தான் சுத்தமானது. இரண்டாவதான கிச்சிலி பச்சை வர்ணங்கள் அழகாயிருக்கின்றன. ஐரோப்பியரால் மதிக்கப்படுகிற பர்பில், ப்ரௌன் வர்ணங்கள் கிடையாது. ஆனால் பருத்திவர்ணத்தோய்ப்புக்கு உபயோகமாகும்சரக்குகளிலிருந்து ப்ரௌன் வர்ணம் உண்டாக்கலாம். உண்டாக்கப்பட்டும் இருக்கிறது. சாதாரணமாய் நெசவுக்காரர்கள் அதை உபயோகிக்கிறதில்லை.

***

உரோமத்திற்கு வர்ணம் கொடுத்தல்

ஆடுகள் எங்கெங்கே இருக்கிறதோ அவ்விடங்களிலெல்லாம் பயிர் உண்டாகிறது. விற்பனைக்குவருகிற மேலான உரோமம் மைசூரிலிருந்து வருகிறது உரோமம் இரண்டுவகையுள்ளது. (1) ஆடு உயிருள்ள போதே கத்தரிக்கும் உரோமம். (2) இறந்தபிறகும் வெட்டின பிறகும் கத்தரிக்கும் உரோமம், காலக்கணக்காய் மயிர்கத்தரிக்கப்படுகிறது. இரண்டாவது உரோமத்தில் நெடியான வெறுக்கத்தக்கவாசனை இருக்கிறது. உரோமம் வர்ணத்தால் வித்தியாசத்தைக்காட்டும். இயற்கையான வர்ணங்கள் வெள்ளை (Fawn)பான் இருண்டநிறம்சாம்பல்நிறம் கருப்பு. இவற்றில் வெள்ளைமயிரிலே அதிகம்(Fawn &gray) அபரிமிதமாய் அகப்படும். கருப்பு மயிர்கிடைத்தற்கு அபூர்வம் கம்பளங்கள் நெய்வதற்காகத்தான் உரோமம்இந்தியாவில் உபயோகமாகிறது. அதற்காக ஏதை வர்ணமிடுகிறார்கள். கம்பளங்கள்.நெல்லூர் ஐயம்பேட்டை பெங்களூர் மதராஸ் வேலூர். இன்னும் சில இடங்களில் நெய்யப்படுகின்றன. கவர்ன்மெண்டு ஜெயில்களில் கெடுகாலைக்கு காவலில் வைக்கப்பட்டிருக்கிற கைதிகளால் செய்யப்படும் கம்பளங்கள்தான் முதல் தரமானவை. அத்தகைய சிறைசாலை இடங்களில்தான் நெய்வதற்கு உயர்ந்த சரக்கும் யந்திர உபகரணங்களும் சேகரித்துக் கொடுக்கப்படுகின்றன. நெடுநாள் பழக்கத்தால் குற்றவாளி உயர்ந்த வேலைக்காரன் ஆகிறான். கம்பளம் நெய்யும் சுதேசிகள் சாதாரணமாய் ஏழைஜனங்கள். விசாலமான வெளிச்சமுள்ள இடம் அவர்களுக்கு கிடைத்தல் அசாத்தியம். அதிகசாமர்த்தியமுள்ள வேலை ஆட்கள் அகப்படுவது

தூர்லபம். அவர் தங்கள் சிறுவர்களையே இந்த தொழிலுக்கு வைத்துக்கொள்ளுகிறார்கள். பெங்களூரிலும் பட்டணத்திலும் சீமை சாயத்தை உபயோகிக்கிறார்கள். நெல்லூரிலும் ஐயம்பேட்டையிலும் சுதேசச்சரக்குகளையும் சுதேச முறைகளையும் கையாடுகிறார்கள். பட்டு சாயத்திற்கு என்ன சரக்குகளை உபயோகிக்கிறார்களோ அச்சரக்குகளைத்தான்உரோமச் சாயத்திற்கும் உபயோகிக்கிறார்கள். உயிர்வர்க்க சாயச்சரக்குகள்தான்உபயோகமாகின்றன. பலவித நீலவர்ணங்களுக்கு நீலிமருந்தை உபயோகிக்கிறார்கள். சிவப்புக்கும் ரோஜா வர்ணத்திற்கும் கொம்பு அரக்கை உபயோகிக்கிறார்கள். கருப்புக்கு (Sulphate of iron) கந்தக அயம். பச்சைக்கு நீலிமருந்தும் மஞ்சளும் பூரசம்பூ அல்லது பாலாமலர் பட்டுக்கு உபயோகிக்கும் வர்ண முறைகள்தான் உரோமத்திற்கும் உபயோகமாகிறது. பட்டுக்கு மஞ்சள் கிச்சிலி வர்ணங்களை கொடுக்க கபிலதூளைஉபயோகிக்கிறார்கள். உரோமத்திற்கு அந்த வர்ணம் கொடுக்கும்போது கபிலத்தூளை உபயோகிக்கிறதில்லை. இந்த வர்ணங்களுக்கு மஞ்சளையும் பூரசம்பூவையும் உபயோகிக்கிறார்கள். மஞ்சள் நிறத்திற்கு உபயோகிக்கும் பூரசம்பூவைக் காட்டிலும் அதிகப்பூவின் உபயோகமும் பிறகு அப்பளகார சேர்மான நீரில் அமிழ்த்தலும் கிச்சிலி நிறத்தை உண்டாக்குகிறது. கோகினியல் அதிக விலையானதால் உரோம வர்ணத்திற்கு உபயோகிக்கிறதில்லை. கொகினியலுக்கு பதிலாக அரக்கை உபயோகிக்கிறார்கள். உரோமத்தில் பட்டைக் காட்டிலும் இரண்டு வர்ணம் அதிகமாயிருக்கின்றன. அவைகள் இயற்கை வர்ணங்கள் (Fawn & gray) கோரை சணல் இவைகள் தாவரவர்க்கவஸ்துக்கள் ஆகையால் தாவரசாயச்சரக்குகளையே அவைகளை வர்ணமிட உபயோகிக்கிறார்கள். பருத்திக்கு உபயோகிக்கும் முறைகள்தான். பின் வரும் ஜாப்தா அந்தந்த ஜில்லாக்களில் சுத்தபனை பட்டணங்களில் எல்லா கிராமங்களில் பட்டு, பருத்தி உரோமச் சாயவேலை நடக்கிறதென்பதை தெரிவிக்கிறது.

ஜில்லா பெயர்.		பருத்தி சாயவேலை	பட்டு சாயவேலை	உரோம சாயவேலை
விசாகப்பட்டணம்	...	26	1	...
கர்நூல்	...	8	7	1
அனந்தபூர்	...	43	3	...
கடப்பை	...	36	5	...
நெல்லூர்	...	36	...	...
செங்கல்பட்டு	...	18	1	...
பல்லாரி	...	52	80	...
வட ஆற்காடு	...	44	15	1
தென் ஆற்காடு	...	67	...	...
சேலம்	...	36	14	...
கோயம்புத்தூர்	...	30	2	...
தஞ்சாவூர்	...	30	9	1
திருச்சினாப்பள்ளி	...	22	1	...
மதுரை	...	26	2	...
மலையாளம்	...	2	...	...
தென் கன்னடம்	...	1	...	...

உரோமச் சாயக்காரர்கள் என்று பிரத்தியேகமாக ஒருவரும் இல்லை. கம்பளம் நெய்கிறவர்கள் தங்கள் உரோமத்தை பருத்தி, பட்டு சாயக்காரர்களிடம் கொடுத்து வர்ணம் போட்டுக்கொள்ளுகிறார்கள்.

***

பல குறிப்புகள்.

இந்தியதேசம் முன்னேற்றம் அடைவதற்குரிய வழிகள்.

நாம் இத்தொழில் பத்திரிகை ஆரம்பித்ததற்குக் காரணம் நம் இந்தியாதேசம் க்ஷேமமடைவதற்கும் இந்தியர்கள் முன்னேற்றமடைவதற்கும் இது ஓர் பாதையாகும். இவ்வித பாதையில் இந்தியசகோதரர்கள் நடப்பார்களானால் கூடிய சீக்கிரம் க்ஷேமமடையலாம்.

பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை அருளில்லார்க்கு அவ்வுலக மில்லாகியாங்கு" என்று சொல்லிய வாக்கியத்தின் பிரகாரம் இவ்வுலகத்திற்குப் பொருள்தான் வேண்டும். அப்பொருளைச் சம்பாதிப்பதற்கு மார்க்கம் தொழில்தான். இவ்விதத்தொழில்களை நம் இந்தியாதேசத்தில் செய்யாமல் நாம் தூங்கியிருந்தமையால அன்னியநாட்டார்கள் அவைகளைச்செய்து விருத்தி அடைந்து இவ்விந்தியா தேசத்தில்வியாபாரஞ்செய்து இவ்விந்தியாவிலுள்ள பொருள்களைஎல்லாம் அந்நியநாட்டுக்கு குவித்துக்கொண்டுபோகிறார்கள். நாம்தூங்காமல் அவ்வித தொழில்களைச் செய்து வியாபாரஞ் செய்திருந்தோமானால் நம் தேசத்து பொருள் நம் தேசத்திலேயே இருக்குமல்லவா?

இதைவிட்டுவிட்டுநாம் இந்தியசகோதரர்களாகிய நாம்வீண்பிரயாசையிலும்வீண் காரியத்திலும் பிரவேசித்து உழைப்பது எப்படியிருக்கிறதென்றால், முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலும் கையில் வெண்ணையைவைத்துக்கொண்டு நெய்யிக்கு அலைவதுபோலு மிருக்கிறது. கையிலிருக்கும் வெண்ணையை காய்ச்சி நெய்யாக்கிக்கொள்ளச் சக்தியற்ற நம்மிந்துக்கள் மற்றெந்த காரியங்களைச் சரிவர செய்யப்போகிறோ மென்பதுநமக்குத் தெரியவில்லை.

இவ்வித சீர்திருத்தங்களுக்காகவே நாம் தொழில் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து அதன் மூலமாய் அநேக சிறுதொழில்களை எழுதிவருகிறோம். அவைகளை ஆரம்பித்துச் செய்துவந்தால் பிறகு மற்ற அருமையான வேலைகளாகிய சிற்பத்தொழில்கள் முதலிய பலவித தொழில்களைப் பணச்செலவிட்டு மொழிபெயர்த்து எழுதலாம். இவ்வித சுலபமாகிய தொழில்களைச் செய்வதற்கே இவ்விந்தியாவிலுள்ள இந்துசகோதரர்கள் பிரவேசித்து எத்தொழிற்சாலைகளையும் ஆரம்பிக்காதிருப்பது வெட்கத்தக்கதாகயிருக்கிறது.

இவ்விந்தியாவிலுள்ள அநேகர்கள பொய்சொல்லிப்பொருளைச்சம்பாதிப்பதற்குமாத்திரம் கற்றுக்கொண்டார்களேயொழிய உண்மையாக பணம் சம்பாதிக்க கற்றுக்கொள்ளவில்லை. அதன் காரணம் இப்பொழுது இவ்விந்தியாவில் சுதேசசாமான்கள் என்பதாக போர்டுகள் போட்டு அன்னிய தேசசாமான்களைக்கொண்டு விற்பனைகள் செய்து பொருளைச் சேகரித்துக் கொள்கிறார்கள் இதற்குக் காரணம் சுயராஜ்யக் கிளர்ச்சியின் சம்பந்தமாக அன்னியநாட்டுச் சாமான்களை வாங்கப்படா தென்றும், வந்தேமாதரமென்றும், கூக்குரலிட்டுத் தெரிவிக்கிறார்கள். இப்பொழுது சுதேச கம்பனி என்று போர்ட்டு போட்டு விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும்வர்த்தகர்கள் எந்த இடத்தில் எந்தத்தொழிற் சாலைகளை ஸ்தாபித்து எந்த இடத்தில் முடியும் சாமான்களை விற்பனைகள் செய்கிறார்களென்பது எமக்குத் தெரியவில்லை. இது பரியந்தம் இவர்களால் எத்தனை சுதேசதொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கிறது எத்தனை இந்து ஜனங்கள் அதனால் ஜீவிக்கிறார்கள். அதற்காக எவ்வளவு முதல்வைத்து வேலைகள் நடத்துகிறார்கள். இந்த காரியங்கள் ஒன்றும் செய்யாமல் அன்னிய தேசசாமான்களை யெல்லாம் சுதேசசாமானகளென்று விற்பனைகள் செய்து பொருளைச்சம்பாதிப்பது சரியல்ல வென்பதை தெரிவிக்கின்றேன். அப்படியில்லை என்றால் இப்பொழுது சுதேசகம்பெனி என்றுசொல்லப்பட்ட இடங்களில் விற்பனை செய்துவரும் சாமான்கள், இதுபரியந்தம் விற்கவில்லையா? அப்படி விற்பனை செய்துவந்த சாமான்களுக்கு இப்பொழுது மாத்திரம் சுதேச சாமானென்று எப்படி பெயர் வந்தது? பொய்சொல்லி பணம் சம்பாதிக்க மனம் துணிகிறதே யொழிய உண்மையில் பொருள் சம்பாதிக்கத் தெரியவில்லை. பொருள் சம்பாதிப்பது எந்த விதத்திலும் சம்பாதிக்கலாம். அவைகளெல்லாம் எப்பொழுதும் நிலைபெறாது. கள்ளுவித்து கலப்பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் கற்பூரம் வித்து கால்காசு சம்பாதிப்பது நல்லதென்பதாகப் பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம்.

நாம் நம் தேசத்திலேயே பொய்யைச் சொல்லி பணத்தைப்பறிப்பது உண்டவீட்டில் ரெண்டகம் செய்பவனென்று சொல்லும்பழிக்கு ஆளாகுவோமென்பதைகவனித்து நம்மிந்திய சகோதரர்கள் ஒருவருக்கொருவர் யாதொரு தீங்கும் எண்ணாமல் கூடிவாழ்வதுநலமென்பதாக எழுதினோம்.

***

8

நமக்கு அநேகர்கள் பலவித கடிதங்களெழுதுகிறார்கள் அக்கடிதங்களில்பிரயோஜன மல்லாத விஷயங்களையும் இல்லாத புஸ்தகங்களையும் கேழ்க்கிறார்கள். முக்கியமாகிய கடிதங்களுக்கு பதிலெழுதிவிட்டு மற்றவைகளுக்கு எழுதாமலிருந்தால் புஸ்தகம் வேண்டுமென்று எழுதினால் உடனே புஸ்தகங்களை அனுப்புவிக்கிறீர்கள். மற்றவைகளுக்கு பதில் எழுதுவதில்லை. உங்களுடைய குலாபிமானம் இப்படியிருக்கிறதென்று எழுதுகிறார்கள்.

வேலை யற்றவர்கள் பலர் பல கடிதங்களை வீணாக எழுதினால் நாம் ஒருவர் பலர்க்கும் பதிலெழுதுவதென்றால் சாத்தியப்படுமா? 100 பேர்கள் நூறுகாலணா கார்ட்டு எழுதினால் 100 பேருக்கும்பதில்கார்ட்டு எழுதுவதென்றால் நமக்கு எவ்வளவு செலவாகுமென்பதை ஏன் அறியவில்லை ஒவ்வொருவருக்கும் ஐந்துநிமிஷம் வேலைகெட்டால் நம் ஒருவனுக்கு எத்தனைநாள் வேலைகெடுமென்பது ஏன் இவர்களுக்கு தெரியவில்லை? எழுதுபவர்களானாலும் ரிப்ளை கார்டு அல்லது ஸ்டாம்புவைத்து அனுப்பினாலும் நமக்கு வேலை கெட்டாகிலும் பதில் எழுதலாம். ஒன்றுமில்லாமல் எழுதிவிட்டு அதற்கு பதிலில்லை என்று கேழ்ப்பவர்களுக்கு இனி அவ்விதமெழுதாதிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகுறோம் இதுநிற்க.

நமக்கு நம் ஜாதியார்கள் ஜாதி விஷயத்தைப்பற்றி உழைப்பதற்குமான்னியம்விட்டதில்லை. சம்பளமும்கொடுத்து வைத்ததில்லை. முன்பணம் அனுப்பி இவ்விதகாரியத்தைச் செய்யென்றும் திட்டம் செய்ததுமில்லை. நாம் இக்குலத்தில் பிறந்து இக்குலத்தைப்பற்றி நம்மால் கூடுமானவரையில்

உழைத்து சீர்திருத்தம் செய்து பார்ப்போம் என்கிறநோக்கத்தோடு நம்முடைய சொந்தப் பொருள்களை செலவிடுவது மல்லாமல் நம்முடைய தொழிலையும்விட்டு ஒரு நிமிஷமேனும் ஓய்வு யில்லாமல் இதில் உழைத்துவரும் எம்மை பதிலெழுதவில்லை, உடனே எழுதவில்லை, என்பதாக அதிகாரத்துடன்கேழ்ப்பதுசரியன்று. இனி அவ்வித கடிதங்களெழுதும் நண்பர்களுக்கு இது மூலமாக எச்சரிக்கை செய்கிறோம்.

இத்துடன் கடிதங்களெழுதுபவர்களும் ரொம்பவும் புத்திசாலிகள் கடிதத்தில் இவர்களுக்கு வேண்டிய புஸ்தகம் முதலியதுகளை எல்லாம் விபரமாக எழுதிவிட்டுதங்களுடைய விலாசத்தை எழுதாமல் பெயரை மட்டிலும் எழுதிவிடுகிறார்கள். இவர்களுக்கு எப்படி அனுப்புவது இவர்களுடைய புத்திசாலி தனத்தை கடிதத்தை பார்த்தவர்கள்தான் தெரிந்துக் கொள்ள வேண்டும். இனிகடிதம் எழுதுகிறவர்கள் தங்களுடைய விலாசங்களை தெளிவாகவும் விபரமாகவும் எழுதி அனுப்பும்படி கோருகிறோம்.

***

பிரம்மஸ்ரீ K. சுப்பிரமணி ஆச்சாரியவர்களுக்கு நமஸ்காரம்—தங்கள் பட்சமுள்ள கடிதம் கிடைத்தது வார்ப்படவேலையைப் பற்றி சஞ்சிகையில் எழுதியது இங்லீஷ் முறையை நமது வம்ச வார்ப்பு வேலைக்காரர்களுக்கு அறிவித்திருந்தால் அதனால் அவர்களின் வேலையை அனுகூலமுற்ற பாகங்களில் விருத்திசெய்துக் கொள்வார்கள் என்ற நோக்கங்கொண்டது. அதில் விக்கிரகவேலையைச்சேர்க்க ஒழுங்குபடவில்லை விக்கிரகவேலை முக்கியமாய் இந்தியர்களின் வார்ப்படத் தொழிலாகையால் இவர்களுடையவார்ப்பட முறைகளை எழுதுங்காலத்தில் இதை அநுசரித்தாவது நாகரீகம் பெற்ற சீர்மை முதலிய இடங்களிலும், களிப்புள்ள செம்பு, பித்தளை சேர்ந்த சாக்குகளெல்லாம் என்னவிதமான காய்ப்பாயிருந்தாலும் கருத்தேதீரும் என்றகொள்கையுண்டு. பொன், வெள்ளி உபயோகத்தில் கருக்கின்றமையால் மற்றவைகளுக்கு சொல்லவேண்டுவதில்லை. இங்கிலீஷ்முறையின்படிக்கு வார்ப்படவேலையில்வேலையின் நுட்பங்கெடாமல் சுத்தமாய் பாயும் மார்க்கம் மிக அவசியம். ௨-வது சுலபமாய் வார்பிக்கும் விதம் மிக அவசியம். இவ்விரண்டினுக்குப்பிறகு நிறம் குறையாமலிருக்க நினைப்பதுண்டு. பொன்னும் வெள்ளியும் கருப்பதினால் இதுகளுக்கு மட்டமாயுள்ள களிம்பு அதிகப்பட்ட உலோகங்களைக் களிம்பில்லாமல் செய்தால் கருக்காமலிருக்கும். அப்படிக்குச் செய்யக்கூடுமானால் அவைகளையும் பொன் வெள்ளி என்றே நினைக்கவேண்டும். இது சாத்தியபட்டதல்ல. இவ்விஷயங்களைப்பற்றியும் விக்கிரகவார்ப்படங்களைப பற்றியும் எழுதுங்காலத்தில்விரிவாய்எழுதுவோம். இதுவன்றிவிஷயதானங்கள் பலருடையதாயிருக்கின்றமையால் அவரவர்களின் நோக்கப்படி எதை அனுப்பினாலும் பிரயமாயுள்ளதுகளையெல்லாம் வெளியிட்டு வருகின்றன.

ஜப்பானியர்கள் அவர்கள் விக்கிரகமாகிய புத்த உருவத்தை வார்ப்பித்தபோது—

செம்பு	...	...	98 பங்கு
வெள்ளீயம்		...	$1\frac{1}{2}$,,
ரசம்	...	...	$\frac{1}{4}$,,
பொன்	...	...	$\frac{1}{4}$,,
			100

மேல்கண்ட கலப்பை உபயோகித்தார்களாம் இந்த உருவத்தின் மொத்த இடை 456டன் என்று எழுதப்பட்டிருக்கிறன. இதிலிருந்து, ரசம், பொன் சேர்வதினால் நிறத்தை விருத்திசெய்யும் அனுகூலம் உண்டென்று அறியலாம். மற்றவிதமாய் பிரகாசமாய் துலக்கியதை கருக்காமலிருக்கமார்க்கங்கள்சொல்லியிருக்கின்றன. அவ்விதமாய்ச் செய்தால் கைபடாமலுள்ளவிக்கிரகங்கள் நிறம் மாறாமல் செய்யமுடியும். ஆனால் உலோகத்திற்கே நிறம்மாறாத குணம் எப்பொழுதும் உண்டாகமாட்டாது. உலோகத்தின் படித்தரத்தினபடி நிறத்தின் வித்தியாசம் நீங்காமல்தானிருக்கும். அப்படிக்குக் கூடுமானால் செம்பெல்லாம் பொன்னாய்விடும். வாதம் செய்யும் சிரமம் வேண்டுவதில்லை.

***

நமது தொழில் பத்திரிகை சந்தாதொகைகளை வசூலிக்கவும் சந்தாகாரர்களை சேர்க்கவும் தக்கபில்கலெக்டர்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவர்களை வைத்தால் அவர்கள் சம்பளம் வாங்குவதில்லாமல் சந்தா தாரர்களிடத்தில் தப்புயில் கொடுத்து சந்தாதொகைகளை வசூலித்து தங்கள் சொந்த உபயோகத்திற்குவைத்துக்கொள்கிறார்கள்நம்மிடம் வந்து சந்தாதாரர்கள் கிடைக்கவில்லை என்றும் பணம் கொடுக்கவில்லை என்றும்சொல்லிக்கொண்டே வருகிறார்கள். நாம் அடிக்கடிசந்தாதாரர்களை காணுவது கிடையாது. மத்தியில். யாரோ ஒருவரை கண்டுவிட்டால் இவர்களுடைய மோசம் வெளியாய் விடுகிறது. அவர்களை போலீஷ்சார்சுச்செய்தால் சிக்ஷை அடைவார்கள். நம்மபணம் போனால் போகிறதென்று அவர்களை விலக்கிவிட்டு மற்றொருவரை நேமிக்கவேண்டியதாக யிருக்கிறது. இப்படியே அடிக்கடி செய்யநேரிடுகிறது. ஆகையால் இனி நாம் வைக்கும் பில்கலெக்டரிடம் டிபாஸிட்வாங்கிக் கொண்டுதான் வைத்துக்கொள்ள வேண்டியதாக யிருக்கிறது. சந்தாதாரர்கள் தங்களுடைய சந்தா தொகைகளை நேரே மணியாடர் மூலமேனும் ஆள்வசமேனும் அனுப்பிவிட்டால் நமக்கு சகாயமாக யிருக்கும். நேரே பத்துதடவை கேட்டாலும் கொடாதவர்கள் அவர்களே அனுப்புவார்களா. அனுப்பமாட்டார்கள். மொத்தத்தில் நம்ம இந்துசகோதரர்கள் ஒருவரை ஒருவர் மோசம்செய்யக்கூடாதென்று எண்ணமிருக்கும் பக்ஷத்தில் இவ்வித கஷ்டங்கள் ஒன்றும் ஏற்படாதென்பதுதிண்ணம். அப்படியிருந்தால் போலீஸ் ஏன் கோர்ட்டுகள் ஏன்? சுயராஜ்யம்யேன் எல்லோரும்ஒருவிதமாகயிருக்கமாட்டோமா? எல்லோரும்ஒரே விதமாகயிருக்கவேண்டும். ஒருவரை ஒருவர் மோசம் செய்யக்கூடாது என்பதாகதான் இவ்வித பத்திரிகைகள் நடத்துவது.

பத்திரிகையை யாவரும் வாசித்தாலல்லவா அதிலுள்ளதை அவர்கள் கையாளுவார்கள் ஏதோ சிலர்கள் மட்டிலும் பார்த்தால் என்ன பயன்தரும் ஒன்றும் பயன்தராது ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். அப்பொழுதுதான் பத்திரிகையின் பயன் யாவருக்கும் சித்திக்கும். ப—ர்.

***

கடிதம்.

தஞ்சாவூர்.

தொழிற்சாலை நம்ஜாதியாருக்கு முக்கியமாய் ஏற்படுத்த வேண்டிய தென்பதைப் பற்றி 3 கான்பரன்ஸ்களிலும் தீர்மானித்தார்களே யொழிய அதன் விஷயமாய் நாளது வரையில் என்னசெய்தார்களென்று தெரியவில்லை என்ற விஷயத்தைப் பற்றி

சென்ற ஜூலை மாத தொழில் பத்திரிகையில் 120, 122 பக்கங்களில் ஷை எடிடர் எடுத்துச் சொல்லியது முற்றிலும் வாஸ்தவமே. தொழிற்சாலை இன்னதென்றும் அதனால் அடையும் பயன் இன்னதென்றும் தெரிந்து அதை நடத்தி நிறைவேற்ற போதுமான கற்றுணர்ந்த பெரியோர்களிருக்கிறார்களா? பெரியோர்களென்பது வயதிலாவது, செல்வத்திலாவது, உத்தியோகத்திலாவது பெரியோர்களாய்விடமாட்டார்கள். நாம் முன் பெரியவர்களென்றுகருதப்படுபவர்கள் நம் புராதனப் பெரியோர்கள் போன்ற ஞானமும், நன்னடக்கையும் தன்னலம்கருதாமையும், உலகவாழ்வில் பற்றின்மையுமாகிய குணங்கள் மிகுந்து விளங்குபவர்களுமல்ல. நவீன நாகரீகத்தையும் இலட்சியங்களையும் ஏற்றமேனாட்டாரைப் போல் பொதுப்பான்மை, பொதுவிற்கு உழைப்பதிற் பிரியம், ஒற்றுமைப்பு பரஸ்பர நம்பிக்கை, ஜனாபிமானம் இவற்றில் முற்பட்டவர்களாய்க் காணப்பட்டவர்கள் நம் ஜாதியில் குறைவு. ஏதோ அப்படி ஜாதி பொது நன்மையில் ஊக்கம் கொண்டு உழைக்க முன் வரும் சிறுவர்களை வீட்டிலுள்ள வயது முதிர்ந்தோர்கள் வீணான துர் உபதேசத்தை புகட்டி தடுத்துவிடுகிறார்கள்: நம பிழைப்பையும், வீட்டுக் காரியங்களையும் கவனிப்பதில் முழு காலத்தை செலவழித்தாலும் ஜாதியின் முன்னேற்ற விஷயமாய் சொற்ப காலத்தைக் கழித்தால் சீக்கிரம் நம் குலத்தவர்கள் முன்னுக்கு வருவது திண்ணம். ஒவ்வொருவரும் தன் சுய நலத்தை பாராட்டுதல் பிசகல்ல மற்றவர்களுடைய சுகத்தைப்பாராமல் தன்னுடைய சுகத்தையே பெரிதாக நினைத்து ஆயுளைகழிக்கும்போது சுய நலம் பாராட்டும் வழக்கம் இழிகுணமாகிறது. இவ்விதமாய் தான்தான் சுகமாயிருப் பதிலேயே கருத்தாயிருந்தால் ஜாதி முன்னுக்குவந்து ஒரே சமுகமாய் வாழ்வது கூடாமையாகி விடுகிறது. இவ்விதமான பொதுகாரியங்களில் சிறுவர்களை பழக்கினால் அவர்களாவது நாளடைவில் விருத்தியடைவார்களென்று நினைக்கிறேன். சிறுவர்கள் ஜாதி முன்னேற்ற விஷயமாய் ஏதேனும் நற்காரியம் செய்வார்களானால் பெரியோரானவர்கள் ஸ்தோத்தரித்து விடுவார்களானால் சிறுவர்களுக்கு உற்சாகத்தையும் மேலும் மேலும் முயற்சியை உண்டாக்குமே யல்லாமல் தளர்ச்சியடையாது. தஞ்சையில் வீண்படாடோபத்தை முன்னிட்டு இராப்பாடசாலையும் வாசகசாலையும் ஏற்பட்டதென்று சொல்லும்படியாய் தாங்களே சீக்கிரத்தில் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். ஏனென்றால் ஷை வாசகசாலைகளினுடைய அனுபோகத்தைப்பாவது, இன்னவிதமாய் தற்கால நாகரீகத்திற்கு தக்கவாறு நடத்திக் காண்பிக்கவாவது, தெரிந்தவர்களுடைய ஆலோசனைகளை யொட்டி நடக்கவாவது, திறமையில்லாத உத்தியோகஸ்தர்களாய் அமைவதாலும், உத்தியோகத்திற்கு ஆசைப்பட்டு அவ்வுத்தியோக முன்னவரையில் உழைத்துவிட்டு பிறகு கைவிடுகிறவர்களுமாய் அமைகிறார்கள். அப்படி அமைவதுடன் மெம்பர்களின் அபிப்பிராயத்தை யொட்டி நடக்காமல் தான் பிடித்த "முயலுக்கு கால் மூன்று" என்று ஸ்தாபிக்க முன்வருவதுடன் வண்டியில்கட்டின லகானில்லாத குதிரையைப்போல் நடக்கிறார்கள். ஆகையால் விஸ்வகர்ம ஜாதியர்களனைவரும் தங்கள் தங்கள் உத்தியோகத்திற்கு மட்டும் ஆசைப்பட்டு நடக்காமல், உத்தியோகமில்லாதவர்களும் தன் மனப்பூர்வமாய் முன்னேற்றத்துக் குண்டான வழியைத் தேடுவார்களானால் ஒரே சமுகமாய் வாழலாம்.

K. P. G. Achari.

தமிழ் நவீன கதைகள்.

பக்தவிஜயம்	3	0	0	பத்மலோசனி	0	12	0
தியாகராஜ கீர்த்தனைகள் ...	1	0	0	கன்னியின் முத்தம் (முதற்பாகம்)	0	12	0
சுகுணதீரன் (முதற்பாகம்) ...	1	0	0	,, (இரண்டாம்பாகம்)	0	12	0
,, (இரண்டாம் பாகம்)	1	4	0	இந்திரஜித்தன்	0	12	0
ஞானசம்பந்தன்	1	0	0	நாடகமஞ்சரி	0	12	0
பிருதிவிராஜன் (நாடகம்) ...	1	0	0	இராமாயண சாரம்	0	10	0
மனோரஞ்சிதம் (முதற்பாகம்)	1	0	0	புருஷோத்தமன் சரித்திரம்	0	10	0
பழமொழித் தொகுதி	1	0	0	பன்னிரு நீதிக்கதைகள்	0	10	0
திரிலோக மோஹனாங்கி	1	0	0	மாலிகா பூஷணி ...	0	10	0
அஞ்சனாக்ஷி	1	0	0	ரம்பை	0	10	0
ஜெயசீலன்	1	0	0	சாரதாம்பாள் சரித்திம்	0	8	0
மங்கையர்க்கரசி	0	12	0	வத்ஸலா	0	8	0
லீலா ...	0	12	0	காந்தாமணி	0	6	0
சுந்தரன்	0	12	0	காஞ்சனவல்லி	0	5	0
ஆனந்தசுந்தரி	0	12	0	சிந்தாமணி	0	5	0
கீசகன் (நாடகம்)	0	12	0	யோஹனா	0	5	o
ஆங்கில சிரோமணிகள்	0	12	0	இராபின்ஸன் குருஸோ	0	4	o
நீதிபாலன் ...	0	12	0	வசந்தசேனை	0	4	o
அயாஷா (முதற்பாகம்)	0	12	0	சின்னத்தம்பி	0	4	o
,, (இரண்டாம் பாகம்)	0	12	0	காணமற்போன கண்மணி	0	3	o

சிறுவர்களுக்கான கதைகள்.

லிலிபுட் யாத்திரை	0	4	0	சண்டமாருதம்	0	1	0
பஞ்சதந்திரம்	0	4	0	நடுவேனிற் கனவு	0	1	0
விவேக சந்திரிகை	0	4	0	கடற்கரை வாஸம்	0	1	0
நாற்பது திருடர் கதை	0	3	0	கூண்டுவிட்டுக் கூண்டுபாய்தல்	0	1	0
கதைக்கொத்து மலர் 1	0	3	0	அதிசயமான கிளி	0	1	0
ஷை மலர் 2	0	3	0	நாய்கட்டிய நல்லறிவு	0	1	0
அல்லாவுதீன்	0	2	6	தாளில்லாக் கதவு	0	1	0
விக்டோரியா நல்லரசி	0	2	6	அன்புள்ள சகோதரி	0	1	0
இரட்டை பிள்ளைகள்	0	2	0	மூன்று பூதங்கள்	0	1	0
டிக் உட்டிங்டன்	0	2	0	பச்சை தேவதை	0	1	0
மாயூரம் இடபதீர்த்தம்	0	2	0	நல்ல பிள்ளைகள்	0	1	0
தெனாலிராமன் கதை	0	2	0	நல்ல் சிநேகிதர்கள்	0	1	0
நற்பழக்கம்	0	2	0	மூன்று தங்கமாம்பழங்கள்	0	1	0
மாயத்தாமரை	0	2	0	மூன்று குமாரர்கள்	0	1	0
மாயப்பொம்மை	0	2	0	வெள்ளைப்பூனை	o	1	o
நீதிக்கோபுரம்	0	2	0	தோட்டக்காரன்	o	1	o
பல்லிகா	0	2	0	நான்கு பாடகர்கள்	o	1	o
இரண்மயி	0	2	0	நைட்டிங்கேல் அம்மையார்	o	1	o
இராதா இராணி	0	2	0	பால நியாயாதிபதி	o	1	o
அரிச்சந்திரன்	0	1	6	மறுபடி முயற்சிசெய்	o	1	o
ஆபத்தில் நேசன்	0	1	6	நளன்	o	1	o
செங்கை வளவன்	0	1	6	கம்பன்	o	1	o
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6	குசேலன்	o	1	o
போலிராஜகுமாரன்	0	1	6	புலவர் வறுமை	o	1	o
நல்ல பாடம்	0	1	6	விநோதக் கூற்றுகள்	o	1	o
செம்படவன்	0	1	6	கண்ணப்பன்	o	1	o
வர்த்தகன்	0	1	0	காதர் அலி	o	6	o

பி. வி. கண்ணன் அண்டு கோ, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

அடர்ந்த கூந்தல்! அடர்ந்த கூந்தல்!!

கருமையும், செழுமையும், ஸ்திரீகளுக்கு அழகையும்

அதிகப்படுத்துகிறது.

அப்படிச்செய்வது அசாத்தியமானக் காரியமல்ல.

எங்கள் **மணித்தைலம்** போதுமானது.

தற்காலம் வெளிவந்துலாவும் நவீன தைலத்தைப்போல் நமது தைலத்தை எண்ணிவிடக்கூடாது. நமது தைலம் சாஸ்திரோக்தமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மணித்தைலம் நமது ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயத்தில் சுமார் 35 வருஷமாய் விற்பனையாகி வருகிறது. இதைவிட உங்களுக்கு என்ன அத்தாட்சி வேண்டும்? இன்னும் சந்தேகமாயின் நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களில் ஒன்றாகிய கீழ்கண்டதை வாசித்துப்பாருங்கள்.

அன்புள்ள ஐயா,

ஒரு மாதத்திற்குமுன் தங்களிடமிருந்து தருவித்த மணித்தைலம் அற்புத குணத்தைக் கொடுத்துவருகிறது. இன்னும் 5 புட்டி மணித்தைலமும், ஒரு டப்பி ஆ. நி. மாத்திரையும் வி. பி. யில் அனுப்பவும்.

ஜி. வாசுதேவராவ், வக்கீல்,
(பெசவாடா,) மர்காப்பூர்.

இந்தப் பரிமளமிகுந்த வாசனைத்தைலம் புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இத்தைலம் மனோற்சாகத்தைக் கொடுக்கிறது. ஸ்நானத்திற்குச் சுகந்தருவது.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

157, பிராட்வே, மதராஸ்.

புதிய கம்பெனி! புதிய சரக்குகள்!! புதிய ஏற்பாடு!!!

பழய ஸ்டாக்கு கிடையாது.

பட்டு பீதாம்பர கம்பெனி காசி.

திருப்தியில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுபீதாம்பரம் காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள்

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூ. 12-வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முககண்டிகள் 33-உள்ளது, கண்டி 1-க்கு ரூ. 1-முதல் 10-வரை. 5-முககண்டி 32 உள்ளது கண்டி 1-க்கு 10 அணா முதல் ரூ. 10-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாக இருக்கும்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி, ரோமத்தால் செய்த உறுதியும் நைசும் நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள். 6-முழம் நீளம 3-முழம் அகலம் செகப்புமுதலிய சகல நிறத்திலும தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூ. 5—8—0, ஷை சிறசு 1-க்கு ரூ. 4-8-0 மேகவர்ணபோர்வை 1-க்கு ரூ. 6-8-0, தபால் செலவு பிரத்தியேகம்.

முழம்	அகலம்.	விலை	ரூபா.
4	2	4-8-0	6-11
5	$2\frac{1}{2}$	6-முதல் 8-வரையில்	
5	3	7 ,, 9	,,
6	$2\frac{1}{2}$	8 ,, 9	,,
6	3	9 ,, 12	,,
7	3	10 ,, 13	,,
8	3	12 ,, 15	,,
9	3	14 ,, 16	,,
10	3	15 ,, 18	,,

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 1000-க்கு	...	3	0	0
2-வது நெம்பர் 1000-க்கு	...	2	8	0
3-வது நெம்பர் 1000-க்கு	...	2	0	0
சிறிது 1000-க்கு	...	0	6	0

நயம் கஸ்தூரி.

நம்பர் 1 தோலா 1-க்கு	...	75	0	0
,, 2 ,,	... ...	50	0	0
,, 3 ,,	... ...	40	0	0
,, 4 ,,	... ...	35	0	0
,, 5 ,,	... ...	32	0	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால்செய்த சொம்பு, குடம், காண்டி முதலிய 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள

சிறு செட்டு 1-க்கு	2	0	0
பெரிய செட்டு 1-க்கு	4	0	0
பால்காயம் தோலா 10-க்கு	1	0	0

உடனே எழுதுங்கள்.

விலாசம்—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி காசி,
தாராநகர் தெரு, காசி.

Managar,
SILK PITAMBER & Co.,
Daranagar Street,
Benarse, City.

பாலாஜி அண்டு கம்பெனி

காசி.

சகாயமாகவும் நவீன மாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபலப்பட்டு வர்த்தகர்களாகிய பாலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்களின் பட்டாடைகளின் உயர்வுக்கும், அதன் நேர்த்திக்கும், பகிரங்க பொருள் காட்சிகளில் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசுகள் தயாரில் சித்தமாக விருக்கின்றன. சிறு ஆர்டர்செய்து தருவித்துப் பார்த்தால், விலைகளின் நோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்துகொள்வீர்கள்.

விளையாட்டுப் பாத்திரம்.

32 விதமான விளையாட்டு சாமான்கள் அடங்கியது. குழந்தைகளை மகிழ்விப்பதில் மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ் செட் ஒன்றுக்கு		3—8—0
மத்தியசயிஸ்	,,	2—0—0
சிறுசயிஸ்	,,	1—8—0

முதல்தரமான கஸ்தூரி ஒரு ரூபாய் இடைகொண்ட தொலா ஒன்றுக்கு ரூபா ... 40—0—0

குங்குமப்பூ முதல்தரம் தோலா ஒன்றுக்குரூபா ... 2—8—0

காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0

பட்டுக் கைக்குட்டை.

நேர்த்தியான தினுசு.

18இஞ்சு சச்சதுரக்கும் 1க்கு ரூ.		0-10—0
20 ,,	,,	0-14—0
24 ,,	,,	1—2—0

விஷ்ணுபாதத் தட்டு.

இது சுத்தமான தாம்பிரத்தில் செய்யப்பட்டது. தாம்பாளம் போன்ற வடிவுள்ளது. இதன் மத்தியில் விஷ்ணுபாதம் செதுக்கப்பட்டிருக்கும். தட்டு 1-க்கு விலை ரூபா 1½-முதல் 2-வரை.

காசி வயிரவர் கயறு.

1-நெ. பெரியகயிர் 100-க்கு ரூ.		2—8—0
2 ,,	,,	2—0—0
3 ,,	,,	1—8—0
4 ,,	,,	0—6—0

விலை விபரக் காட்லாக் இனாம்.

BALAJEE & Co., Benares City, U. P.

பல கண்காட்சிகளில மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி, சுப்பருயி ஆயூர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசபெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்க காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

37. சந்திராமிருதரசம்:—அசாத்தியமான காசம், இருமல், க்ஷயம் முதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளை குணப்படுத்தும் நல்லபசியும், தேகபலமும் உண்டாக்கும் டப்பா 1-க்கு விலை ரூபா 1. வி. பி. செலவு I முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து:—எத்தனைநாள் பட்டதானாலும் இம்மருந்தினால் வயிற்று கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி கிராணி, வயிறுகடிப்பு, முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. செலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

39. விஷ்ணுதைலா:—எப்பேர்க்கொத்த தலைவலிக்கும் நெற்றியின் இரண்டு பொட்டுகளிலும் இம்மருந்து கொஞ்சம் தடவி நன்றாகத் தேய்க்கவேண்டும். இடுப்புநோய், கழுத்து நோய், பக்கசூலை கைகால்பிடிப்பு, முதலியவும் இன்னும் தேகத்தில்காணும் மற்றுமுள்ள சகல வலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ள இடத்தில் நன்றாக தேய்க்க சுகமாகும். தேள் நட்டுவாக்களி, பூரான், இதுகள் கொட்டின அல்லது கடித்த விடத்தில் இம்மருந்தைத் தடவி நன்றாய் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா 1 க்கு அணா 8, வி. பி சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

40. சுதுமாதைலா:—இதை பிரதிதினமும் ஆண்குறியின்மேல் பூசிவந்தால் லிங்கத்தின் சோர்வு, ஆண்குறி துவளல், கோணல் நரம்புகளின் தளர்ச்சி நீங்கி, நீண்டு, கெட்டிப்பட்டு, மிகுந்த வலிவுகொள்ளும் இழந்துபோன போகசக்தி முற்றிலும்பெற்று சுகிக்கலாம் விலைசீசா 1-க்கு ரூபா I, வி பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

41. நாக்குப்பூச்சி மருந்து :—குடலிலுள்ள எல்லாவித கிருமிகளையும் வெளியாக்கி நாக்குப்பூச்சிகளால் உண்டாகும் எல்லாவித பாதைகளையும் நிவாரணம் செய்யும் தேக ஆரோக்கியத்தை தரும். நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால் அடிவயிற்றில் கனம், பசியின்மை, அபரிமிதமான பசியைப்போல் தோற்றல் சாப்பிட்டபின் வயிற்றுநோவு வயிற்றுபோக்கு, வாய் நாற்றம், வாந்தி, வெகுட்டல், சுரம், தலைவலி, மூக்கிலும், ஆசனத்திலும் அரிப்பு வாயில் உமிழ் நீரூறல், நாக்கு இழுத்துக்கொள்ளல், சிலசமயம் மலச்சிக்கல், சிலசமயம் மலக்கழிச்சல், முதலிய பற்பல நோய்கள் நாக்குபூச்சிகளால் உண்டாவதை இம்மருந்து முற்றிலும் குணமாக்கும் விலை சீசா I-க்கு அணா 10, 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப வி பி சிலவு அணா 5 பிரத்தியேகம்

என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை, பாங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப்பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரியப் பல விஷயங்கள், இந்திய விவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜன ஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம்தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல கற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்து சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது. சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

இந்தியா, பர்மா, சிலோனுக்கு ரூ. 3—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0

ஔவை

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும், தனிப் பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்யசரித்திரம். பலநூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாச்சாரியாரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.
"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை

கற்பினும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவரும் தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மை யென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,
ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

தந்திபோதினி.

என்னும் இங்கிலீஷ் சுலபமாக கற்றுக்கொள்ளக்கூடிய புஸ்தகம் இருக்கிறது. அதில் இங்கிலீஷ் முதல் எழுத்து தொடங்கி பெரியவார்த்தைகள் வரையில் எழுதப்பட் டிருக்கிறது. இங்கிலீஷுக்கு சரியான தமிழும் போடப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் எழுத்துகள் மட்டிலும் தெரிந்திருந்தாலும் அதைக்கொண்டு பெரியவார்த்தைகள் பரி யந்தம் அடங்கியிருக்கிறது. சீக்கிரம் கற்றுக்கொள்ளக்கூடும் இதன் விலை ரூபா ஒன்று. வாங்கி வாசிக்கவேண்டியது நம்மவர்களின் முக்கிய கடமையாகும்.

விலை ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:— "தொழில் ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இனிய தமிழ் நாவல்கள்.

மீனாட்சி (அல்லது) மலாய் நாட்டு மங்கை	2	4	0	பிரஹ்லாதன்	0	8	0
தனபாலன் I - II பாகங்கள்	1	8	0	தசகுமாரன் சரித்திரம்	0	4	0
சிங்கார சந்திரவதனி	1	4	0	அநியாயபுரம் அகட விகட கோர்ட்டு விசாரணை	0	8	0
குசேலர்	1	0	0	சந்திரசேகரன் சரித்திரம்	0	6	0
மதனகாந்தி	1	0	0	கற்பகவல்லி	1	0	0
கண்ணகி	0	14	0	சுந்தராங்கி	0	14	0
மனோன்மணி	0	12	0	ஸ்வர்ண காந்தி	0	12	0
செல்வராஜன்	0	12	0	ரோஜாலி	0	12	0
ஜயகாந்தன்	0	10	0	வனரோஜா	0	12	0
மெய்யறிவு	0	8	0	லலிதாங்கி	0	8	0
பாஞ்சாலி சபதம்	0	8	0	மெய்யறம்	0	8	0
மாணிக்கவல்லி	0	8	0	அகமேபுறம்	0	8	0
பத்மினி	0	3	0	இன்பவல்லி	0	3	0
நான்கு மந்திரி	0	2	0	நவநீதம்	0	3	0
சூக்ஷ்மதரிசினி	0	4	0	மருணாளினி	0	2	0
குணபூஷணி	1	0	0	மத்மநிதி	0	10	0
சுசீலா	1	0	0	சத்தியசீலன்	0	10	0
ஜெயசேகர சத்தியவதனி சரித்திரம்	0	12	0	கமலரேகை	0	12	0
				தனபதி	0	2	0

இன்னும் அநேக நாவல்களும் விலைக்குக் கிடைக்கும்.

மானேஜர்,
கற்பகம் ஆபீஸ், புதுவை.

விஸ்வப்பிராம்மணப் பட்டம்

சேலம் ஜில்லா கடத்தூர் வி. வரதாசாரியாரென்பவர் 1911ஞு பிப்ரவரிமீ 25உயில் தஞ்சை ஜநாநுகூலன் பத்திரிகையில் கம்மாளர்களை விஸ்வப்பிராம்மணர்களென்று சொல்வதற்கு சாஸ்திர புராணாதிகளில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதுகளை தெரிந்துகொள்ள மஹாஜனங்கள் விரும்புகிறார்களென்று எழுதியதற்கு, தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரியாரும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ த. ரு. சங்கராச்சாரியாரும் தக்க ஆதாரத்துடன் நீதியாக பதிலெழுதி மேற்படி ஜநாநுகூலன் பத்திரிகைகளிலேயே வெளியிட்ட விஷயங்களை தற்காலம் புத்தகரூபமாக அச்சிட்டாகிறது. இதன் விலை அணா 4.

பட விளம்பரம்.

இதில் காட்டிய படம்போல் 12×10 இஞ்சி அளவில் புகைப் படத்திற்கு சமானமாகிய விஸ்வேஸ்வரர் [பஞ்சமூர்த்தியின்] படமொரு அழகாய்ச் செய்யப்பட்டிருக்கிறது.

விலை 0—1—0



மேற்படி அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவநாகர அக்ஷரம் அடைத்தாசுக்கமாய் செய்திருக்கிறது.

விலை 0—4—0

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது ஒவ்வொருவரும் அவசியம் வாங்கலாம். வி. பி சார்ஜ் பிரத்யேகம்.

விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

என்னும் ஓர் இனிய புத்தகம் அச்சிட்டிருக்கிறது. அதில் 12-பக்தர்களுடைய சரித்திரம் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் செய்யுள் கதையும், வசனமும், தனித்தனி எழுதப்பட்டிருக்கிறது. புராணப் பிரசங்கத்திற்கு தகுதியானவையாயிருக்கும்.

விலை 1—0—0

விஸ்வேஸ்வரபகவான் கீர்த்தனை.

இந்த கீர்த்தனை பஜனை செய்பவர்களுக்கும், பாராயணஞ் செய்பவர்களுக்கும் தகுதியானவை.

விலை 0—2—0

வி. பி சார்ஜ் பிரத்யேகம்.

விலாசம்:— "தொழில் ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

உ

சுபமஸ்து.

"விஸ்வகர்மகுலோபகாரி" என வழங்கிவந்த

தொழில்.

மலர்—4. { பிங்களஞு ஐப்பசிமீ 1917ஞு அக்டோபர்மீ } இதழ்—9.

10 NOV 1917 MADRAS

நமது நோக்கம்

நாம் இதுபரியந்தம் நமது பத்திரிகையில் தொழில்களை விருத்தி செய்வதைப் பற்றி எழுதியிருக்கிறோம். அதே மாதிரியாக நம்மவர்கள் செய்துவருவார்களேயானால் இத்தேசத்தில் கைத்தொழில்கள் யாவும் விருத்தியடைவதினால் இத்தேசத்து சாமான்களை அன்னிய தேசங்களுக்கனுப்பாமல் இத்தேசத்திலேயே சொற்ப விலைக்கு விற்றால் நம்மிந்தியர்கள் யாவரும் நல்ல லாபம் கிடைப்பதினால் கூடிய சீக்கிரத்தில் சுகப்படுவார்கள். இத்தேசமும் நாகரீகம், வர்த்தகம், விவசாயம், கைத்தொழில், யந்திரத்தொழில் முதலியவைகளில் சிறந்து விளங்கும். ஐரோப்பா அமேரிக்கா கண்டங்களிலுள்ள பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்டிரியா, கனடா, யுனைடட் ஸ்டேட்ஸ் முதலிய தேசங்களைப்போல மிகவும் உந்நதமான நிலைமை அடையும். தற்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் பிரான்சு, ரஷ்யா, இட்டலி, ஆஸ்டிரியா முதலிய தேசங்களில் நடக்கும் யுத்தங் காரணமாக அத்தேசத்து சாமான்கள் இத்தேசத்திற்கு வருவது நின்றுவிட்டபடியால் ஜப்பானியர் அம்மாதிரியான சாமான்களை யெல்லாம் தம்முடைய தேசத்தில் செய்து இத்தேசத்திற்கனுப்பி வியாபாரஞ் செய்வதால் பெருத்த லாபத்தை அடைந்து வருகிறார்கள். நாம் எழுதிவந்த எல்லா தொழில்களையும் நமது தேசத்தில் செய்யாவிட்டாலும் இரண்டொரு தொழில்களை மாத்திரமாவது செய்யும்படியான ஏற்பாடுகள் செய்து வருவதாக நமக்குத் தோன்றும்பட்சத்தில் அதற்கடுத்தாப்போல் செய்யவேண்டிய வேறுதொழில்களைப்பற்றி எழுதுவதற்கு நமக்கு சந்தோஷமும் ஊக்கமும் உண்டாகும். அவ்வாறு தொழில்கள் யாதொன்றையும் நம்மவர்கள் இதுவரையில் செய்யாதிருக்கிறபடியால் நாம் எழுதியதெல்லாம் "காட்டிற் காய்ந்த நிலவுபோலவும்" "கடலில் பெய்த மழைபோலவும்" நிஷ்பிரயோஜனமாய் விட்டதே யென்கிற துக்கமே பெரியதாக இருக்கிறது. இனிமேலாவது நம்மவர்கள் காலத்தை வீண்போக்காமல் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்னும் பழமொழியைக் கடைப்பிடித்து இதுவே தக்க சமயமென்று தம்மாற் கூடிய முயற்சிசெய்து நம்முடைய தேசம் சீக்கிரத்தில் முன்னுக்கு வரவேண்டுமென்கிற நன்னோக்கத்துடனும்

அதிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் விடாமுயற்சியுடையவராய் கத்தி கத்திரி, குண்டூசி, பேனா, பென்சில், சிம்னி முதலிய மிகச் சிறியனவும் தனவந்தர்கள் முதல் ஏழைகள் ஈறாக யாவரானும் உபயோகிக்கும்படியான சாமான்களை இத்தேசத்தில் பல பட்டணங்களிலும் கிராமங்களிலும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தி செய்து வருவார்களானால் தற்காலத்தில் அன்னிய தேசத்து சாமான்கள் விற்கப்படும் விலையில் நான்கிலொருபங்குக்கு சரசமாக நமக்குக் கிடைக்கும். அப்படி கிடைத்தாலும் பணச்செலவு செய்து தொழிற்சாலைகள் ஏற்படுத்தினவர்களுக்கும் அவைகளில் வேலை செய்கிறவர்களுக்கும் அந்த சாமான்களை கொண்டுபோய் விற்கிறவர்களுக்கு நல்ல லாபங் கிடைக்குமே யொழிய நஷ்டம் ஒருகாலத்திலும் வராது. இப்பேர்க்கொத்த சாமான்களெல்லாம் செய்யும்படியான தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டு மென்று பலகாலமாக யெழுதிவரும் எமக்கும் சந்தோஷமும் உற்சாகமும் உண்டாவதால் நாம் இன்னும் வேறுவித தொழில்களைப் பற்றி எழுதிவருவதற்கு சாத்தியமாகும். நாம் எழுதி வருவதைப்பார்த்து நம்மவர்களும் மேலும் மேலும் தூண்டப்பட்டவர்களாய் பைசிகல், டிரைசிகல், மோட்டார்சைகில், மோட்டார்கார், துப்பாக்கி, பீரங்கி, கத்தி, சட்டி, இன்ஜின், முதலிய பெரிய சாமான்களையும் இத்தேசத்திலேயே செய்வதற்கான தொழிற்சாலைகள் ஏற்படுத்துவார்கள். அவ்வாறு செய்வதினால் இத்தேசத்து செல்வம் அன்னிய தேசங்களுக்குப் போகாமல் இத்தேசத்திலுள்ளவர்களை அனுபவிப்பார்க ளென்பதற்கு சந்தேகமில்லை. எப்படியென்றால் மேற்குறித்த பெரிய சாமான்களும் சிறிய சாமான்களும் செய்யும் தொழிற்சாலைகள் வெவ்வேறாக ஆங்காங்கு ஸ்தனமாய் ஸ்தாபிப்பதற்கு இத்தேசத்தில் தனவந்தர்கள் பலர் ஒன்று சேர்ந்து பங்கொன்றுக்கு இத்தனை ஆயிரம் ரூபா யென்பதாக நியமனஞ் செய்துகொண்டு அநேக பங்குக்காரர்களைச் சேர்த்து கம்பெனிகள் ஏற்படுத்தவேண்டும். இவ்வாறு ஏற்பட்ட கம்பெனிகளின் மானேஜர்கள் டைரக்டர்கள் முதலிய உத்தியோகஸ்தர்களும் மற்ற தொழிலாளிகளும் இத்தேசத்தவர்களாகவே யிருக்கிறபடியால் இவர்களுக்கு சம்பளமாகவும் லாபமாகவும் கொடுக்கப்படும் பணமெல்லாம் இத்தேசத்திலேயே யிருக்கும். ஆனால் நம்மவர்கள் யாவரும் ஏக மனதுடையவராய் சுதேசத்தில் செய்யப்பட்ட சாமான்களையே வாங்கி உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அன்னிய தேசத்து சாமான்களை வாங்கக்கூடாதென்றும கண்டிப்பான ஏற்பாடுகள் செய்துக்கொள்ளவேண்டும். பெண்மக்களும் சுதேசத்து சேலைகள், பாத்திரங்கள் முதலானவைகளையே வாங்கி உபயோகப்படுத்தும்படியாக அவர்களுக்கும் பலகாலும் போதித்து வரவேண்டும். இவ்வாறான ஏற்பாடுகளெல்லாம் நாம் சரியாய் செய்து வருவோமானால் நம்முடைய தேசத்தாரும் நாமும் வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வருவோமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் ஒரு கம்பெனிக்காரர் கத்தி, கத்திரி, குண்டூசி முதலிய சாமான்கள் செய்யும்படியான தொழிற்சாலை ஏற்படுத்தினால் இன்னொரு கம்பெனிக்காரர் அந்த சாமான்களையே செய்யும்

படியான வேறொரு தொழிற்சாலை அந்த ஊரிலேயே ஏற்படுத்தி போட்டி போட்டுக்கொண்டு பலவித இடைஞ்சல்களை உண்டு பண்ணாமல் தீப்பெட்டி களாவது அல்லது சிம்னி, டம்ளர் முதலிய கண்ணாடி சாமான்களாவது பலவிதமான ஸைகில்களாவது அல்லது அரிசி குத்தும் யந்திரம், மாவரைக்கும் யந்திரம் முதலிய யந்திரங்களாவது செய்யும்படியான வேறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டும். நம்மவர்களில் அநேகர் பணக்காரராயிருப்பவர்கள் தாங்களாவது தங்களுடைய முன்னோர்களாவது வெகு கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இவ்விதமான நூதன தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதில் செலவு செய்தால் எப்படி யாகுமோ, லாபம் வருமோ நஷ்டம் வருமோ நம்மோடு பங்கு சேருகிறவர்கள் என்ன மோசஞ் செய்வார்களோ வென்று பயந்து தம்முடைய பணத்தை வெகு பத்திரமாய் சேமித்து வைப்பதும் அல்லது சொற்ப வட்டிக் காசைப்பட்டு பாங்கிகளில் கட்டிவைப்பதும் அல்லது ஏழைகளுக்கு ரூபாய்க்கு இரண்டணா விகிதம் அதிகவட்டிக்கு கொடுத்து அவர்களை கஷ்டப்படுத்தி வட்டி வாங்குவதும் சுகமாய் சாப்பிட்டுவிட்டு கும்பகர்ணனைப்போல் தூங்குவதுமாக காலங்கழிக்கிறார்கள். வேறு சிலர் "அப்பன் தேடிவைத்த அரும்பொருள்தனை மெத்த அழிக்கவந்த சிகாமணிக ளென்பதாக" கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் குடித்தும், தாசி வேசிகள் ஆட்டக்கச்சேரி, பாட்டுக்கச்சேரி வைத்தும் அல்லது இப்பேர்க்கொத்த ஸ்திரீகளோடு சகவாசஞ்செய்தும், கூத்து கம்பெனிகள் ஏற்படுத்தியும், கோழி, ஆடு, மாடு, குதிரை முதலானவைகளை வளர்த்து பந்தயங்கள் விட்டும் திரவியத்தை வீண்செலவு செய்கிறார்கள். கிடைத்தற்கரிய மானிட தேகத்தைப் பெற்றும் ஆறறிவுடையவராயிருந்தும் இப்பேர்க்கொத்த அநியாயமான காரியங்களைச் செய்வது எவ்வளவு மதியீன மென்பதை நம் பத்திரிகா நேயர்கள் அறிவார்கள். மற்றுஞ் சிலர் ஆடுகள் ஒன்றுபோன வழியே மற்றவைகளும் போவதுபோல் கண் மூடித்தனமாக ஒருவர் ஒரு அரிசி குத்தும் யந்திரத்தை வரவழைத்து வேலை செய்துவந்தால் மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக அதேமாதிரி யந்திரத்தை வரவழைத்தவனுக்கு லாபம் வராவொட்டாமல் போட்டிபோட்டு கூலி முதலானவைகளைக் குறைத்து அவனுடைய கௌரவத்தையும் ஊக்கத்தையுஞ் சம்பாத்தியத்தையுங் கெடுப்பதாகிய பலவிதமான இடைஞ்சல்களை உண்டுபண்ணுகிறார்கள். இன்னொரு இடத்தில் இன்னொருவர் மாவரைக்கும் யந்திரமாவது, தகடடிக்கும் யந்திரமாவது பொன், வெள்ளி கம்பி இழுக்கும் யந்திரமாவது வரவழைத்து வேலைகள் செய்துவந்தால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வேறு யந்திரங்களை வரவழைத்து வேறு வேலைகள் செய்யாமல் பொறாமையினால் அதேமாதிரியான யந்திரங்களையே வரவழைத்து தாமும் லாபமடையாமல் முந்தி வரவழைத்தவருக்கும் நஷ்டத்தை யுண்டாக்குகிறார்கள். நன்னோக்க முடையவர்கள் இப்பேர்க்கொத்த காரியங்களைச் செய்யமாட்டார்கள். "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" யென்னும் பழமொழிக்கிணக்கமாக நம்முடைய தேசத்தவர்களும் நாமும் நல்ல நிலைமை யடையும்படியான விஷயங்களை நாம் எழுதிவருவது

போல மற்ற பத்திரிகாசிரியர்களும் தம்து பத்திரிகைகளில் இவ்விந்தியா தேசத்தில் பல ஊர்களிலும் பலிதமான தொழில்கள் முற்காலத்தில் நடந்து வந்ததுபோல் தற்காலத்திலும் நடந்துவருதற்கான தொழிற்சாலைகள் ஏற்படுத்தும்படியாக எழுதி வரவேண்டும். சில இடங்களில் சிலர் ஒன்று சேர்ந்து யாதாவதொரு யந்திரத்தை வரவழைத்து நூதனமான வேலை செய்து வந்தால் அதைப்பற்றி பத்திரிகையில் புகழ்ந்துபேசி அவர்கள் அதிக லாபமடைந்ததாக பிரசாரஞ் செய்வதால் மற்றவர்களும் அதே யந்திரத்தை வரவழைக்கிறார்கள். அப்படி செய்யாமல் இன்னார் இன்னவிடத்தில் இன்ன யந்திரத்தை வரவழைத்து வேலை செய்து லாபமடைந்தார்கள் மற்றவர்கள் இன்னின்ன யந்திரங்களை வரவழைத்து இன்னின்ன தொழில்களைச் செய்து வந்தால் அதற்குமேல் பதின்மடங்கான லாபங் கிடைக்குமென்றும் எழுதினால் மற்றவர்கள் அம்மாதிரியான யந்திரங்களை வரவழைத்து பலிதமான தொழில்களைச் செய்வார்கள். "பலதுளி பெருவெள்ளம்" என்பதுபோல பலரும் பலிதமான தொழில்களைச் செய்துவந்தால் இத்தேசத்தில் எல்லா தொழில்களும் நாளுக்கு நாள் விருத்தியாகி யெல்லா ஜனங்களும் விருத்தியடைவார்கள். இனிமேலாகிலும் மற்ற பத்திரிகாசிரியர்கள் நம்முடைய தேசம் அதி சீக்கிரத்தில் மேல்நிலை யடையும்படியான விஷயங்களை நன்றாங் கருத்தாமாய் விசாரித்து தமது பத்திரிகைகளில் எழுதி வருவார்களென்று நம்புகிறோம். பத்திரிகாசிரியர்களும் மற்றவர்களும் ஒன்று சேர்ந்து நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் மார்வாடிகள் முதலிய தனவந்தர்களுக்கு தொழில்கள் பலவற்றையும் விருத்தி செய்வதற்கு பல தொழிற்சாலைகள் அத்தியாவசியமாய் ஏற்படுத்தவேண்டி யிருக்கிறபடியால் பல கம்பெனிகள் சேர்ந்து நடத்தும்படி பலதாரமும் வற்புறுத்துவார்களென்று நம்புகிறோம். நாமும் நம்முடைய பத்திரிகையில் இது விஷயமாக எழுதிக்கொண்டே வருவோம். எழுதினதையே எழுதுகிறார்களென்று நமது நண்பர்கள் கோபிக்காமல் நமது கோரிக்கைகளை தம்மால் கூடியமட்டும் பிரயாசைப்பட்டு நிறைவேற்றும்படியாய் மிகவும் வந்தன பூர்வமாய் வேண்டுகிறோம். கருணாநிதியான கடவுள் நமக்கும் நம்முடைய தேசத்தவருக்கும் கிருபை செய்வாராக. நமது நோக்கம் நன்னோக்க மாகையால் தடையின்றி நிறைவேறுமென்றே நம்புகிறோம். "நம்மால் செய்யமுடியாத காரியம் ஒன்றுமில்லை, ஊக்கமும், விடாமுயற்சியும் ஒற்றுமையும் நம்மிடத்தில் இருக்குமாயின் எல்லா காரியமும் ஒருவித குறைச்சலுமின்றி செய்து முடிக்கலாம். இதற்கு ஜப்பான் தேசமே சாட்சியாகும், வேறு சாட்சி அவசியமில்லை. கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டியதில்லை. ஜப்பான் தேசத்தில் பழைய பாதரட்சைகளை பொறுக்கிச் சேர்த்து சுட்டெரித்து பூட் பாலிஷ் செய்கிறார்கள். கரும்பு ரசத்தை யெடுத்துக்கொண்டு சக்கையைச் சேர்த்து காகிதம் செய்கிறார்கள். கிச்சிலி முதலாகிய பழத்தோல்களை சேகரித்து லாஸஞ்சு ஷர்பத்து செய்கிறார்கள். கிழிந்த வஸ்திரங்கள் காகிதத்துண்டுகளைச் சேகரித்து கனமான காகிதங்கள் அட்டைகள் செய்கிறார்கள். ஜப்பான் தேசத்தில் நம்முடைய தேசத்தில் உபயோக மற்றவை யென்று குப்பை

யில் எரிந்துவிடும் வஸ்துக்களைக்கொண்டு வேறு வஸ்துக்கள் செய்கிறார்கள். அத்தேசத்தில் எந்தவஸ்துவும் உபயோகமற்றதென்று எரிந்து விடுவது கிடையாது. ஆகையால் அத்தேசத்தைப் பின்பற்றி நாமும் நன்னிலமைக்கு வரும்படியான ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்தில் செய்யவேண்டியது நம்முடைய கடமையாகும் மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார், கண் துஞ்சார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார் " என்னுஞ் செய்யுளுக்கிணங்க நம்முடைய தேசம் மேல் நிலமை யடையும் வரையில் நாம் ஒரே மனதாய் ஒற்றுமையுடன் உழைத்து வரவேண்டும். விரிவஞ்சி இம்மட்டோடு நிறுத்தினோம், பன்னியுரைக்கில் பாரதமாகுமென்பதற் கையமில்லை. நண்பர்களே கவனியுங்கள், கவனியுங்கள். தூங்காதீர்கள், தூங்காதீர்கள். விழித்துக்கொள்ளுங்கள், விழித்துக்கொள்ளுங்கள். இக்காலத்தில் எது செய்யத் தக்கதோ அதைச் செய்யுங்கள் கடவுள் நமக்குத் துணை புரிவார் என்பதை மறக்காதீர்கள், மறக்காதீர்கள்.

***

மேம்பாடடையும் வழிகள்.

ஜனனம், மரணம், அஞ்ஞானம், விகற்பம் என்னுமிவைகளில்லாத மெய்ஞ்ஞான சொரூபியாகிய ஸ்ரீ விஸ்வேஸ்வரருடைய சத்யோஜாதம், வாமதேவம், அகோரம் தற்புருஷம், ஈசானன மென்னும் ஐந்து திருமுகங்களிலிருந்து உதித்தவராகிய ஸானக ஸனாதன, அபுவனச, பிரத்னச, ஸ்வர்ணச என்னும் ஐந்து மஹாரிஷிகளின் கோத்திரத்திலுதித்த அயசிருஷ்டி, தாருசிருஷ்டி, தாம்பிர சிருஷ்டி, சிலாசிருஷ்டி, சுவர்ண சிருஷ்டி யென்னும் பஞ்ச சிருஷ்டிகளைச் செய்பவராகிய மனுப்பிர்மா, மயப்பிர்மா, த்வஷ்டப்பிர்மா, சிற்பிப்பிர்மா, விஸ்வக்ஞப்பிர்மா என்று சொல்லப்படுகின்ற மேன்மை தங்கிய பிர்ம குலத்தவர்கள் "தவத்தளவே யாகுமாந் தான் பெற்றசெல்வம் குலத்தளவேயாகுமாங் குணம்" என்னும் ஆன்றோர் வாக்கியப்பிரகாரம் பொய், கொலை, களவு, கள், காமம், என்னும் பஞ்சமகா பாதகங்களினின்றும் நீங்கியவராக யொழுக வேண்டுவது அத்தியாவசியமாகும். அவ்வாறின்றி பொய் பேசுதலும், ஜீவ இம்சை செய்தலும், மோசஞ் செய்தலும், கள், சாராயம் முதலான லாகிரி வஸ்துக்களை குடித்தலும், தத்தமக்கு வேதவிதிப்படி கிரமமாய் கலியாணஞ் செய்யப்பட்ட மனைவியைவிட்டு அன்னிய ஸ்திரீகளோடு சாங்கித்யஞ் செய்தலும் உயர்குலத்திற் பிறந்தவருடைய செய்கைகளன்று. இப்படிப்பட்ட நியமத்தினின்றும் தவறி ஒழுகுகிறவர்கள் உயர் குலத்திற் பிறந்தவராயினும் கீழ்மக்களென்றே அறிவால் நிறைந்த பெரியோர்களால் மதிக்கப்படுவார்கள். பெறுதற்கரிய மானிட ஜன்மத்தைப் பெற்று அதிலும் உயர்ந்த குலத்திற் பிறந்தவர் தங்குலத்திற்கேற்ற பரிசுத்தமான காரியங்களில் பிரவர்த்திக்காமல்கெட்டகாரியங்களைச்செய்து கீழ்மக்களென்று பிறர் சொல்லும்படியாய் நடந்துகொள்வது மிகவும் அவமானத்தையும் அவமதிப்பையுந் தருவதாகும். நல்ல ஜாதிப்புஷ்பம் நல்ல வாசனையைத் தருமேயன்றி துர்வாசனையைத்தராது. "கோடரிக்காம்பு குலத்திற்கீனம்" என்னும் பழமொழிக்கிணங்க தாம் பிறந்த குலத்திற்

தே அவமானத்தையும், அபக்கியாதியையு முண்டாகும்படியாய் நடப்பது எவ்வளவு மதியீனமான காரியமென்று சற்றுநிதானமாய் யோசித்துப்பார்த்தால் கற்றவருக்கும் மற்றவருக்கும் நன்றாய் விளங்கும். தாழ்ந்த குலத்தவர்கள் விதி விலக்கான கெட்ட காரியங்களைச் செய்தால் அதைக் குறித்து யாருங் கவனிக்கமாட்டார்கள். "கம்மாளன் ஜெகத்குரு" என்கிற பழமொழி உலகப்பிரசித்தியாயிருக்கிறது. முற்காலத்தில் ஆங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட பிரஜைகள் கடன் அதிகப்பட்டால் கடன் கொடுத்தவர்களுக்குப் பயந்து பிரெஞ்சுக்காரரின் அரசாட்சிக்குட்பட்ட புதுவையாகிய நகரத்திற் போய்ச் சேர்ந்தால் அந்த கவர்ன்மெண்டார் அவர்களை ஆதரிப்பதுந் தவிர கடன்காரர் கையில் காட்டிக் கொடுக்காமலிருந்தார்கள், ஆகையால் எந்த ஜாதியாராயிருந்தாலும் கடன்பட்டவர்கள் புதுச்சேரிக்குப்போய் தப்பித்துக்கொள்வது வழக்கமாயிருந்தது. அப்படியிருக்க கடன்பட்டு கம்மாளன் புதுச்சேரிக்கு போவதைக் குறித்து மாத்திரம் பழமொழி யேற்படுவானேனென்கிற காரணத்தை யோசித்து பார்த்தால் நன்றாய் விளங்கும். அதாவது லோக குருவென்று பிரசித்திபெற்ற உயர் குலத்திற் பிறந்தவராகிய கம்மாளர் தமது வருமானத்திற்கேற்ற செலவு செய்யாமல் அதிக செலவு செய்து கடன்பட்டு ஊரைவிட்டு அயலூருக்கு ஓடிப்போவது தமது நற்குலத்திற்கேற்ற காரியமல்லவென்று காண்பிப்பதற்காக மேற்கூறிய பழமொழி யேற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. இதை புத்திமான்கள் நன்று அறிவார்கள். கம்மாள ஜாதியை இழித்துக் கூறுவதற்காக அப்பழமொழி யேற்பட்டிருந்தால் "ஜெகத்குரு" என்னும் அடைமொழி சேர்க்கப்படாமல் கம்மாளன் கடன்பட்டால் கெடுங்கம்பி புதுச்சேரி யென்று ஏற்பட்டிருக்கும். உயர் குலத்திற்கேற்ற நன்னடக்கை யிருக்கவேண்டுவது அத்தியாவசியமாகும். அக்டோபர் மாசம் 16 தேதி வெளியிடப்பட்ட பிரபஞ்ச மித்திரனில் கந்தசாமி ஆச்சாரி என்னும் பழைய ஆசாமி ஒருவருடைய சட்டைப் பையிலிருந்து திருட யத்தனித்ததற்காக தண்டனை யடைந்ததாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இம்மாதிரியான கெட்ட நடவடிக்கைகள் உயர் குலத்திற் பிறந்தவர்களுக்குத் தகுந்ததல்ல. மற்ற குலத்தவர்கள் கெட்ட காரியங்கள் செய்வதில்லையா வென்றால் ஒவ்வொருநாளும் கோர்ட்டுகளிலும் கச்சேரிகளிலும் போய் பார்த்தால் பிரத்தியட்சமாய் விளங்கும். அப்படியிருக்க ஏன் இவர்கள்மாத்திரம் கெட்ட காரியங்கள் செய்யப்படாதென்றால் தாய் தந்தையர்கள் தம்மக்களில் நல்ல பிள்ளைகள் துஷ்காரியங்களைச் செய்தால் மிக்க சினங்கொண்டு கடுமையாகத் தண்டிக்கிறார்கள். கெட்ட பிள்ளைகள் துஷ்காரியங்களைச்செய்தால் தங்கள் பேரையும் தங்கள் குலத்தின் நற்பேரையுங் கெடுக்கப்பிறந்து வீட்டிலடங்காத பிள்ளைகளை ஊரார் அடக்கி விடுவார்களென்று தாங்கள் தண்டிக்காமல் 'சும்மாய் எக்கேடாவது கெட்டுப் போகட்டு' மென்று விட்டு விடுவார்கள். "தெய்வமுளதென்பார் தீயசெயப்புகின் தெய்வமே கண்ணின்று தின்றொக்கும் தெய்வமில தென்பார்க்கில்லை" என்னும் செய்யுளின் கருத்துப்பிரகாரம் தெய்வமும் உலகத்தாரும் நடக்கிறார்கள்,

விஸ்வ கர்மாக்களால் செய்யப்பட்ட தாலிக்காப்பு, கை கொலுசு, கம்மல், அட்டிகை முதலான பொன் ஆபரணங்களையும், கால் காப்பு, கொலுசு, ஒட்டியாணம், சாவி கொலுசு முதலிய வெள்ளி ஆபரணங்களையும் சுப தினங்களில் தம்மிஷ்ட தேவதைகளுக்கு பலகார பட்சணங்கள் செய்து வைத்து பூஜை நைவேத்தியங்கள் செய்து சந்தோஷகரமாக போஜனஞ்செய்து அவ்வாபரணங்களை குடும்பத்தில் பெரியோர்கள் கையில் கொடுத்து அவர்கள் பாதங்களில் விழுந்து நமஸ்காரஞ்செய்து அவர்கள் ஆசீர்வதித்துக் கொடுத்த பின்னர் சிறியவர்கள் தரித்துக்கொள்வது தற்காலத்திலும் நடந்து வருவது யாவருக்குந் தெரிந்த விஷயம். தேவாலயங்களைச் சேர்ந்த மரம், இரும்பு, பொன், வெள்ளி முதலியவைகளாற் செய்யப்பட்ட வாகனங்கள் தேர்கள், முதலானவைகளும் கருங் கல்லினாலும், பொன், வெள்ளி முதலிய பஞ்சலோகங்களாலும் செய்யப்பட்ட விக்கிரகங்களும் யாவராலும் பூஜிக்கப்படுவதும் நம்மனோர் அனைவருக்கும் தெரிந்த விஷயம். இவர்களால் செய்யப்பட்ட நகை நாணயங்களுக்கே இவ்வளவு மதிப்பிருந்தால் இவர்களுக்கு எவ்வளவு மதிப்பிருக்கவேண்டு மென்பது சொல்லாமலே விளங்கும். அப்படியிருக்க விஸ்வகர்ம சந்ததியார்களிற் சிலர் கெட்ட சகவாசம் கெட்ட நடவடிக்கை முதலானவைகளால் தாம் கெட்டபேரை யடைவதுடன் தான் கெட்டதுமன்றி சந்திர புஷ்கரணியையுங் கெடுத்தான் என்பதுபோல தமது குலத்துக்கும் கெட்டபேர் வரும்படியாய்ச் செய்கிறார்கள்.

கவர்ன்மெண்டு பாங்கிகளிலாவது சேவிங்ஸ் பாங்கிகளிலாவது வேறு பாங்கிகளிலாவது அல்லது விவசாயம், வர்த்தகம் முதலானவைகள் செய்கிறவர்களிடத்திலாவது பணம் கட்டினாலும் அல்லது வாங்கினாலும் ரசீதுகள், பத்திரங்கள், பிராமிசரி நோட்டுகள் முதலானவைகள் இல்லாமல் கொடுத்தல் வாங்கல் முதலிய வியவகாரங்கள் செய்வது அசாத்திய மென்று யாவருக்குந் தெரிந்த விஷயம். இஃதிவ்வாறிருக்க கம்மாளர்களிடத்தில் தனவந்தர்களாலும் மற்றவர்களாலும் நகை நாணயங்கள் செய்யும்படியாக கொடுக்கப்பட்ட விலையுயர்ந்த கெம்பு, வைரம், வைடூரியம் புஷ்பராகம் முதலிய நவரத்தினங்களுக்கும் ஆயிரக்கணக்கான சவரன், ரூபாய் முதலியவைகளுக்கும் ரசீது கேட்பதும் கொடுப்பதும் கிடையாது ரசீதில்லாமலும் சாட்சி யில்லாமலும் கொடுக்கப்பட்டவைகளை நகை நாணயங்கள் செய்வதற்காக வாங்கிக்கொண்டவர்கள் இல்லையென்று சொல்வதும் இதுவரையிலும் நாம் பார்த்ததும் கேட்டதுங் கிடையாது. இதனாலேயே இவர்கள் உண்மையும் நாணயமும் நன்கு மதிப்பு முடையவர்களென்று சொல்லாமலே விளங்கும். இவ்வளவு உயர்வான அந்தஸ்திலுள்ளவர்கள் தங்களால் கூடிய மட்டும் பிரயாசைப்பட்டு தங்களுடைய நாணயத்தையும் பெருமையும் புகழையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது இவர்களுடைய கடமையாகும்.

கோர்ட்டு கச்சேரி முதலிய நியாயஸ்தலங்களில் வழக்குகள் கொண்டு போகப்பட்டால் நகை நாணயங்கள் கொடுத்ததற்கு சாட்சிருசுக்களிருக்கிறதா, ரசீது, பாண்டுகள், பத்திரங்கள் இருக்கின்றனவா வென்று விசாரித்து மனவில் ஒரு ஆதார

161166
சென்னை-600 0..

யில்லாமற் போனாலும் தாங்கள் வாங்கினதில்லை யென்று பொய் பேசுவது கிடையாது. ஆகையால் கோர்ட்டுக்குப் போனாலும் கொடுத்துவிடும்படி தீர்மானித்து விடுகிறார்கள். மற்றவர்களைப்போல் இதற்கு கொஞ்சம் கொஞ்சமாக கொடுக்க வாய்தாவுமில்லை. கம்பளாராய்ப் பிறந்தவர்கள் மேலுமேலும் தாங்கள்செய்யும் உயர் தொழிலுக்கு யாதொருகெடுதியும், கௌரவக் குறைவும் வாராமல் பாதுகாத்து விருத்தியாகும்படியான ஏற்பாடுகளை செய்யும்படியாய் கோருகிறோம்.

***

கல்வி.

சென்னை மாகாணத்தில் சற்றேறக்குறைய 54000 கிராமங்களிருக்கின்றன. அவற்றில் ஆண் பிள்ளைகள் சேர்ந்து வாசிப்பதற்கு 4000 பிரைமரி பாடசாலைகளும் பெண் பிள்ளைகள் வாசிப்பதற்கு 1000 பிரைமரி பாடசாலைகளும் இருக்கின்றன. இத்தொகையில் நகரங்களிலுள்ள பிரைமரி பாடசாலைகளை நீக்கினால் மூன்று கிராமத்திற்கொரு பிரைமரி பாடசாலை இருக்கிறதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இக்கணக்கினாலே கல்வி நம்முடைய தேசத்தில் எவ்வளவு குறைவாகப் போதிக்கப்படுகிறதென்பது நன்றாய்த் தோன்றுகிறது. ஒரு தேசம் மற்ற நாகரீகம், செல்வம், வர்த்தகம், கைத்தொழில் முதலியவைகளிற் சிறந்த தேசங்களைப்போல் முன்னேற்ற மடையவேண்டியதானால் அத்தேசத்தில் ஆண்மக்கள் பெண்மக்கள் யாவரும் கட்டாயமாய் கல்விகற்கவேண்டும். "கற்க கசடறக் கற்றபின் நிற்கவதற்குத் தக" "கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க் குற்ற துணை" யென்னும் ஆன்றோர் வாக்கியங்களின் பிரகாரம் கல்வி அத்தியாவசியமாய் யாவருக்கும் கற்பிக்கப்படவேண்டும். ஆகையால் நமது ஜனப்பிரதிநிதிகளாயுள்ள பிரமுகர்கள் சென்னை மாகாணத்திலும் மற்ற மாகாணங்களிலும் கவர்னர்களின் சட்ட நிரூபண சபைகளில் இவ்விந்திய தேசத்து ஜனங்களில் ஆண் மக்கள் பெண்மக்கள் யாவருக்கும் ஜாதி மத வித்தியாசங்களைப் பாராட்டாமல் கட்டாயமாக ஆரம்பக் கல்வியை அவ்வவர்களுக்குச் சொந்தமான பாஷைகளிலும் ஆங்கிலேய பாஷையிலும் போதிப்பதற்கான பாடசாலைகள் எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்தும்படியாய் பிரேரேபணைகள் செய்து அவ்வித சட்டம் பாஸாகிறவரையில் "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார் எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்" என்னுஞ் செய்யுளிற் குறிப்பிட்டிருக்கிற பிரகாரம் தம்முடைய சுய நலங்களைக் கருதாமல் தம்மாற் கூடிய பிரயத்தனங்கள் யாவையும் பாரபட்சமில்லாமல் செய்து வரவேண்டும். கல்வியில்லாதவர்கள் கண்ணில்லாதவர்களுக்கு சமானமென்று எல்லாருக்குந் தெரிந்த விஷயம். எல்லா ரூபங்களைப்பாப்பதற்கும் எல்லா காரியங்களைச் சரியாய் செய்வதற்கும் புருஷர்களுக்கு எப்படி கண் அத்தியாவசியமா யிருக்கிறதோ அதே பிரகாரம் இது நல்லது கெட்டதென்றும் புண்ணியம் பாவமென்றும் பகுத்தறிந்து நல்ல காரியங்களைச் செய்வதற்கும் தீய காரியங்களைச் செய்யாமலிருப்பதற்கும் கல்வி அத்தியாவசியமாயிருக்கிறது. எண்சாண் உடம்பிற்கு சிரசு பிரதானம் சிரசிலுள்ள

அவயவங்களிலெல்லாவற்றுள்ளும் நயனம் (கண்) பிரதானம் என்னும் வாக்கியத்தை அறியாதவர்கள் உலகில் ஒருவருமில்லை. ஆகையால் கல்வி யறிவில்லாத புருஷரும் பெண் மக்களும் நிறைந்துள்ள ஒரு தேசம் காட்டு மிருகங்கள் மிகுதியாயுள்ள காட்டிற்கு சமானமாகும். "கண்ணுக்கணிகலம் கண்ணோட்டம், காமுற்ற பெண்ணுக் கணிகலம் நாணுடைமை - நண்ணும் மறுமைக் கணிகலம் கல்வி யிம்மூன்றும் குறியுடையார் கண்ணேயுள" என்னும் இச்செய்யுளாலும் மேலே விவரித்துக்காட்டியிருக்கும் விஷயங்களாலும் கல்வியானது மக்களுக்கு அத்தியாவசியமாய் போதிக்கப்படவேண்டு மென்பது நன்கு விளங்கும். இந்தியா தேசத்திலுள்ள பரோடா தேசத்து அரசரும் இன்னும் மைசூர் முதலிய தேசங்களிலும் எல்லா ஜனங்களுக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமாய்க் கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சரியாய் நடந்து வருகிறது. அதுபோலவே ஆங்கிலேய அரசாட்சிக் குட்பட்ட மற்ற தேசங்களிலுள்ள எல்லா கிராமங்களிலும் ஜாதிமத வித்தியாச மில்லாமல் எல்லா ஜனங்களுக்கும் ஆரம்பக்கல்வியை கட்டாயமாய் கற்பிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படியாக நாமெல்லோரும் நமது ஜனப்பிரதிநிதிகள் மூலமாய் கேட்டுக் கொள்வதோடு நாமும் நம்மில் தனவந்தவர்களாயுள்ள புண்ணிய புருஷர்களைக் கொண்டு ஆங்காங்கு தர்மபாடசாலைகள் ஏற்படுத்தி ஆண் பெண் யாவருக்கும் கல்வி இலவசமாய் கற்பிப்பதோடு புஸ்தகம், பேனா, பென்சல், நோட்டு புஸ்தகங்கள் முதலான சாதனங்களையும் இலவசமாய் மக்களுக்கு கொடுக்கவேண்டும்.

ஏழ்மைகாரணமாக பகற்காலத்தில் பாடசாலைகளில் சேர்ந்து வாசிக்க சக்தியில்லாமல் கைத்தொழிற்களில் பயின்று வரும் சிறுபிள்ளைகளுக்கு இராக்காலத்தில் இரண்டு மூன்று மணிகாலம் கல்வி போதிப்பதற்கு தர்ம இராப்பள்ளிக்கூடங்கள் ராவ் சாகிப் கலவல கண்ணன் செட்டியார் முதலான பிரபுக்கள் நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு, திருவல்லிக்கேணி முதலிய இடங்களில் ஏற்படுத்தி யிருக்கிற பிரகாரம் மற்ற தனவான்களும் எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்தவேண்டும். இப்போர்க்கொத்த ஏற்பாடுகளெல்லாம் சரியாய் நடந்தால்தான் நம்முடைய தேசம் நன்னிலைமைக்கு வரும். "பலதுளி பெருவெள்ளம்" என்பதுபோல ஒவ்வொரு கிராமத்தில் ஒவ்வொருவர் முன்னுக்குவந்து கல்வி போதித்தல்முதலிய நற்காரியங்களைச் செய்துவந்தால் மற்றெல்லா கிராமங்களிலும் ஒருவரைபார்த் தொருவர் இதேமாதிரியான நற்காரியங்களைச்செய்வார்கள். காலக்கிரமத்தில் எல்லா பட்டணங்களிலும், கிராமங்களிலும் இவ்வித நல்லஏற்பாடுகள் செய்யப்பட்டு நம்மிந்தியா தேசம் நன்னிலமை யடையும். "England escpects every man to do his duties" என்னும் வாக்கியத்தை "India escpects every man to do his duties" (ஒவ்வொரு மனிதனும் தன் கடமையைச் செய்யும்படியாக இந்தியா எதிர்பார்க்கிறது) என்பதாக மாற்றிக்கொண்டு நம்மிந்தியா தேசத்திற் பிறந்துள்ள ஒவ்வொருவரும் கால தேச வர்த்தமானங்களுக்கேற்றவாறு தற்காலத்தில் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தம்து கடமையை பூர்த்திசெய்யவேண்டும். முற்கா

லத்தில் கோவில்கள், மண்டபங்கள், குளங்கள், வாகனங்கள், தேர்கள், விக்கிரகங்கள், சத்திரங்கள், சாவடிகள் முதலியவைகளை நூதனமாய் கட்டவேண்டியது அவசியமாயிருந்தது. தற்காலத்தில் பாடசாலைகள், தொழிற்சாலைகள், வர்த்தகசாலைகள் முதலியவைகள் ஏற்படுத்துவது அத்தியாவசியமாயிருக்கிறதென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். ஆகையால் தற்காலத்தில் முக்கியமாய் பாடசாலைகள் ஏற்படுத்தும்படியான காரியங்களை யாவரும் செய்யும்படியாய்க் கோருகிறோம்.

“சுட்டர்விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டும்” என்னும் பழமொழிப் பிரகாரம் நம் தேசத்தவர்கள் எவ்வளவு கல்வியறிவில் மிகுந்தவர்களாயிருந்தபோதிலும் நம்மில் ஒருவர் மற்றவர்களுக்கு நம்முடைய கடமைகள் இன்னின்னவென்றும், அவற்றை இன்னின்ன காலங்களில் இன்னின்ன மாதிரியாகச் செய்யவேண்டுமென்றும் ஞாபகப் படுத்தவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறபடியால் மேற்கண்ட விஷயங்களை எழுதியிருக்கிறோம். அவற்றை நம்மவர்கள் ஒவ்வொருவரும் கவனித்து நடப்பார்களென்று நம்புகிறோம்.

ஐரோப்பிய தேசத்தவர்களில் அநேகர் கைத்தொழிற்களில் மிகுந்த தேர்ச்சியும் திறமையும் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆயினும் கைத்தொழிற் பயிற்சி மாத்திரம் இருந்து கல்வி அறிவில்லாதவர்கள் அநேகமாயிருக்கிறார்களென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். ஆகையால் பொன் ஆபரணங்களிற் பதித்த மாணிக்கம்போல பிரகாசிக்க வேண்டுமானால் கைத்தொழிற்களில் வல்லவர்களாயிருக்கிறவர்கள் தம் சுய பாஷையாவது ஆங்கிலேயபாஷையாவது வாசித்து கல்வி அறிவில் மிகுந்தவர்களாயிருப்பது நந்தேசத்தவர்கள் மேல் நிலை யடைவதற்கு தகுந்த சாதனமாகும். எந்தெந்த காலங்களில் என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளை கவனித்து சரியாய் செய்பவர்கள் தான் அறிவாளிகளென்று மதிக்கப்படுவார்கள். ஆகையால் நம்மிந்தியா தேசம் மற்ற தேசங்களைப்போல் மிகுந்த செல்வாக்கடைய வேண்டிய சாதனங்கள் யாவற்றையும் நாம் சீக்கிரத்தில் சரியாயும் பூர்த்தியாயும் செய்யவேண்டியது நம்முடைய கடமை யென்பதை நம் பத்திரிகா நேயர்கள் அனைவரும் கவனிக்கும்படியாய்ப் பிரார்த்திக்கிறோம்.

இரும்பு எழுகுத் தொழிலின் சரித்திரம்.

இந்துதேச சரித்திரம் கிருஸ்து சகாப்தத்திற்கு முன்னும் மகம்மதிய அரசாக்ஷிக்கு முன்னும் எழுதப்படவில்லை. இந்த பூர்வீக காலத்தின் ஞானம் வேதங்களிலிருந்தும் மனு தர்ம சாஸ்திரத்திலிருந்தும் பிற்காலத்திய ஞானம் புராணங்களிலிருந்தும் உண்டாகவேண்டியதாயிருக்கிறது. சிலாசாசன பரிசோதன இலாகா பிரசுரங்களும் இது விஷயத்தில் உபயோகமுள்ளதாகும்.

வேதங்கள்தான் கிடைக்கக்கூடிய பூர்வீக தஸ்தாவேஜுகள். வேதங்கள் கிருஸ்துவுக்கு 1400 வருஷம் முன்னதாக எழுதப்பட்டதாக கொள்ளவேண்டும். இந்த புஸ்தகங்கள் இரும்பைப்பற்றியும் எழுகைப்பற்றியும் அநேக விஷயங்களை எடுத்துச் சொல்லுகின்றன. ஆயுதங்களைப்பற்றியும் விவரிக்கின்றன. விவரிக்கப்பட்ட முக்கியமான ஆயுதங்கள் வில்லும் அம்பும், கத்திகள், ஈட்டிகள், பிச்சுவாய்கள், எறி ஈட்டிகள், கோடரிகள், கேடயம், தேகபாது காப்பிற்குரிய இரும்பு அங்கி, சாணைக் கல்லில் கூராக்குவதைப்பற்றியும் விவரம் காணலாம். அதிகமாய்ப் பளபளப்பாக பாலிஷ் செய்தார்கள். இருக்கு வேதத்தில் அம்பட்டன் கத்தியைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. அப்படி யிருந்தால் அக்காலத்தில் எழுகில் வேலை செய்திருக்கவேண்டும். கத்திகளைக் கடினமாக்க தோய்த்தெடுப்பதைப்பற்றி விஸ்தாரமாய் விவரித்திருக்கிறது. அதினால் என்ன தெரிகிறதென்றால் இரும்புக்கும் எழுகுக்கும் வித்தியாசம் கண்டு பிடித்திருந்தார்கள் என்பதும் கடினமாக்க தோய்த்தெடுக்கும் வேலை அவர்களுக்கும் நன்றாய்த் தெரிந்திருந்தது என்பதுமே. இந்த வேலையில் கொஞ்சம் வித்தியாசம் இருந்தால்கூட பலனில் அதிக வித்தியாசத்தைக் காட்டும். கடினமாக்க தோய்த்தெடுக்கும் வேலை ஏன் செய்யப்படுகிறது என்றால் கத்தியானது யானையின் கழுத்தையும் வெட்டத் தகுந்ததாயிருத்தற்கும் கல்லையும் துளைக்கத் தகுந்ததாயிருத்தற்கும் சாணைக்கல்லில் கூராக்கப்படாமலிருத்தற்கும் இதர இரும்பு ஆயுதங்களால் மழுங்காமலிருத்தற்குமேயாம். கடினமாக்க தோய்த்தெடுக்கத்தக்க பொருள்கள். இரத்தம், நெய், நீர், பெட்டைக்குதிரைப்பால், ஒட்டகப்பால், யானைப்பால், மீனின் பித்தப்பை த்ருவ பதார்த்தசேர்மானம், மான்பால், குதிரைப்பால், வெள்ளாட்டுப்பால் (கள்ளோடு கலந்து) (calotrapis) காலோட்ராபிஸ் (பால் போன்ற) ரசத்தின் சேர்மான வஸ்து (இதில் தோய்ப்பதற்கு முன் கத்தியை எண்ணெயில் தோய்க்க வேண்டும்) வெள்ளாட்டுக் கொம்பு இங்கி(மை) புருப்பீ சுண்டெலிப்பீ வாழைப் பழ பொடாஷ் (மோரோடு கலந்து) சேர்மானம் வஸ்து.

இரும்பு எழுகுத் தொழிலின் தொன்மை கிறிஸ்துவுக்குமுன் 9-வது நூற்றாண்டில் எழுதப்பட்ட மனு தர்ம சாஸ்திரத்திலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. பூர்வீக இரும்பு எழுகுத்தொழிலின் விவரத்தைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் பூர்வீகபோர் ஆயுதங்களைப்பற்றிய ஆராய்ச்சி செய்யவேண்டும். அத்தகைய ஆயுதங்கள் பூர்வீக சாமான் சேகர காக்ஷி சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களில் கற்சுவர்களில் போர்வீரர்கள் உருவம் ஆயுதங்களின் உருவம் இவைகளைக் கண்டு ஆராய்ந்தறிதல் வேண்டும். இரும்புத் தொழிலின் தொன்மை விவசாய ஆதங்கள் விசாரத்தால் புலப்படும். சில கோயில்களில் இரும்பு உத்தரங்கள் தூலங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. டில்லி நகரத்து இரும்புத்தூண் மூர்ஷிடாபாட்டு பீரங்கிகள் இவைகளெல்லாம் இரும்புவேலையின் இந்திய மேன்மையை தெரிவிக்கும்.

காந்தம் ஊட்டிய இரும்பு மஞ்சள் காமாலை முதலிய நோய்களைத் தீர்க்கும். மகம்மதிய அரசாக்ஷி மகம்மதிய இரும்புவேலையை இந்தியாவுக்கு கொண்டுவந்தது. அதினால் இப்போது இந்தியமாதிரி ஆயுதங்கள் அபூர்வமாய்விட்டன. அரேபியா, பர்ஷியா, பஞ்சாப் இத்தேசங்களில் செய்யப்பட்ட ஆயுதங்களுக்கும் பாட்ணா, மங்கிர், டக்கா, மூர்ஷிடா பாட், பர்ட்வான் முதலிய இடங்களில் செய்யப்படும் ஆயுதங்களுக்கும் வித்தியாசம் காணப்படும். ஆக்பர் காலத்தில் துப்பாக்கி பீரங்கி செய்யும் வேலை அதிகமாய் கவனிக்கப்பட்டது. ஆக்பருக்கே பீரங்கி செய்யத்தெரியுமாம். பீரங்கி செய்யும் ஐரோப்பிய நிபுணர்கள் தருவிக்கப்பட்டார்கள். கைத்துப்பாக்கிகள் செய்யப்பட்டன. பீரங்கிமாத்திரம் பித்தளையில் உருக்கி வார்த்தார்கள். பொன், வெள்ளி, செம்பு காரீயம், துத்தநாகம், பாதரசம், இரும்பு, வெள்ளீயம் இவைகளெல்லாம் சேர்ந்த உலோகத்தில் பீரங்கிகள் செய்யப்பட்டன. முக்கியமான உலோகம் இரும்புதான். இந்த உலோகம் துரு பிடிக்கிறதில்லையாம். இது இக்காலத்தில் முக்கியமான விஷயம். இப்பீரங்கிகள் உருக்கி வார்த்தன வல்ல. அடித்து இணைத்துச் செய்யப்பட்டன. தகடுகள் மடித்த கீற்று அடையாளங்கள் காணப்படுகின்றன. ரசாயனப் பிரிவினைக்கும் கைவேலைப்பாட்டின் பரிசோதகத்திற்கும் இந்த உலோகத்தை உட்படுத்தி

ளுல் பீரங்கிகள் இந்த வகையில் செய்யபபட்டனவென்று தெரிந்து கொள்ளலாம். ஆனுல் மேலே காட்டிய அடையாளங்கள் அவைகள் கையில் அடித்து இணைத்தவை என்றே புலப்படுத்துகிறது. பீரங்கிகளின்மேல் செய்திருக்கும் அலங்கார வேலைகள் கையிற்செய்த வேலைகள்தான். அலங்கார வேலைகள் மத்திய தரைக்கடல் மாதிரியாக எனக்கு காணப்படுகின்றன.

Kamars or Lohars
காமார் or லோஹார் என்பவர்கள் கம்மாளர்கள்.

உலோகப்பிரிவினை யாக்கும் காளவாய் களிமண்ணினுல் கட்டப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய திரணைக்குழையைப்போலிருக்கிறது. மூன்று முதல் நான்கு அடி உயரமிருக்கிறது. உச்சியின் வெளி குறுக்களவு இரண்டு முதல் இரண்டரை அடிவரையிலு மிருக்கிறது அடியில் கொஞ்சம் அகன்றிருக்கிறது. உச்சியில் உள் குறுக்களவு சில அங்குல அளவாகத்தான் இருக்கிறது. அடிக்குப் போகப்போக ஏறக்குறைய ஒரு அடிவரைக்கும் அதிகரிக்கிறது. அடியில் சுவரின் மூலமாய் களிமண் குழை செருகப்பட்டிருக்கிறது. ஓர் புதுமையான மாதிரியாயுள்ள ஒரு ஜதை துருத்தியிலிருந்து காற்று உட்செல்லுகிறது. ஒவ்வொரு துருத்திக்கும் ஒருவன் ஒற்றைக்காலில் நின்றுகொண்டு மற்றொரு காலால் துருத்தியை அசைக்கிருன் பூமியில் அகப்படும் இரும்பு உலோகத்தையும் அடுப்புகரியையும் ஒன்ருய்சேர்த்து உலோகப்பிரிவினைக் காளவாயில் போடுகிருர்கள். அடியிலிருந்து கொஞ்சம் உருகிசேர்ந்தும் சேராததுமாய் உலோகக்கட்டிகளை அடைகிருர்கள். அதை சாதாரண உலையில் பலமுறை காய்த்து அடிப்பதால் அது சுத்தத்தை அடைகிறது. சூடுகையிலேயே அடித்தால் சந்துகளிலுள்ள சிட்டங்கள் வெளியாகும்:

பர்பம் ஜில்லாவில் அய் உலோகப்பிரிவினை காளவாய் 7 அல்லது 8 அடி உயரமும் 5 அடி குறுக்களவும் உடையதாயிருக்கிறது. குறுக்களவின் உருவம் ஆங்கில D யைப்போலிருக்கிறது. தட்டையான பாகம் முன்பாகம். இந்த பக்கத்தில்தான் துருத்திவைத்து காற்றை உட்செலுத்துகிருர்கள். இதர ஜில்லாக்களில் உள்ள துருத்திகளைப்போல் தான் இங்கேயும் இருக்கிறது. ஆனுல் கொஞ்சம் பெரிதாயிருக்கிறது. அவற்றை அசைத்து காற்றுண்டாக்க அநேக ஆள்கள் வேண்டியதாயிருக்கிறது. உலோகப் பிரிவினை காளவாய்களைச்சுற்றி திண்ணைபோட்டிருக்கிறது. அதின்மேல் விறகும் பூமியில் எடுக்கப்பட்ட மண் கலந்த இரும்பும் வைக்கப்பட்டிருக்கிறன. காளவாயில் இரும்பையும் விறகையும் அல்லது அடுப்புக்கரியையும் போடுகிற மனிதர்கள் அந்த திண்ணையின்மேல் நிற்கிருர்கள்.

சர்தோல் பர்க்கானுவில் டும்காவிலிருந்து சிறிது தூரத்தில் ஓர் காட்டில் கோல்ஸ் என்னும் பூர்வீக ஜாதியாரால் செய்யப்படுகிற இரும்பு உலோகப்பிரிவினையின் முறை :—

இரும்பு உலோகப்பிரிவினைக் காளவாய் ஓர் ஆலமரத்தின் நிழலில் ஓர் சிறிய குன்றின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. அது களிமண்ணுல் செய்யப்பட்டிருக்கிறது. உபயோகப்படுத்துவதற்கு முன்னமே உலர்த்திருக்கிறது. அது ரூபத்தில் திரணைக் குழையைப் போலிருந்தது. உயரம் 34 அங்குலம், அடியில் வெளி குறுக்களவு 26அங்குலம், உச்சியில் உள் குறுக்களவு 22 அங்குலம், அடுப்புக்கு சமீபத்தில் உள் குறுக்களவு ஏறக்குறைய 1அடி, உச்சியில் 5 அங்குலம்,ஒருபக்கத்தில் அர்த்தவட்டச்சந்து (குறுக்களவு 1 அடி) காளவாயின் சுவரின் அடியில் செய்யப்பட்டிருந்தது. இந்த சந்தில் காற்று குழை வைக்கப்பட்டிருந்தது. குழையின்கீழ் ஓர் செங்கல் இருந்தது. இந்த குழை முன்னதாகவே களிமண்ணினுல் செய்து சிவக்க சூளை போடப்பட்டது. அக்குழை 7 அங்குல நீளமிருக்கிறது. அகன்ற பக்கத்தில் குழையின் குறுக்களவு 1 அங்குலம் கொஞ்சம் மிட்டாய் பொட்டலம்போல் குவித்திருக்கிறது அந்த குழையைச் சுற்றி ஈரமணல் சேர்ந்த களிமண் அப்பியிருந்தது. அந்த சுவரில் அந்த சந்து இந்த மண்ணுல் முழுவதும் மூடியிருக்கிறது. பிறகு துருத்திகள் வைக்கப்பட்டன. ஒவ்

வொரு துருத்திக்கும் ஒருகுழைபோன்ற சிறிய மரத்துண்டு இருந்தது. அது குறுக்களவில் 16 அங்குலம், உயரத்தில் 5அங்குலம், உச்சி பாகத்திலிருந்து உள்ளே தோண்டப்பட்டிருந்தது. அது உருவத்தில் மாத்திரை பெட்டிகளைப்போலிருந்தது. வாய் வெள்ளாட்டுத் தோலால் மூடப்பட்டிருந்தது. அந்த குழைபோன்ற மரத்துண்டின் பக்கத்தில் ஓர் மூங்கில் குழை மூன்று அடி நீளமுள்ளதாய் செருகப்பட்டிருந்தது. அந்த மூங்கில் குழையின் மற்றொரு கோடியில் ஒரு சிறிய இரும்புக்குழை பிடியப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட இரண்டு துருத்திகள் வைக்கப்பட்டன. காளவாயின் மண் குழையில் இந்த இரும்புக்குழை சேர்க்கப்பட்டிருந்தது. இரண்டு துருத்திகள் ஒன்ருய்ச் சேர்கின்றன அதினுல் மூங்கில்குழைகள் மண் குழையோடு கூடிய வரையில் ஒரே கோட்டில் ஒன்றுக்கொன்று சமீபத்திலிருந்தன. பூமியில் காளவாயின் இரண்டு பக்கத்திலேயும் ஓர் வளையத்தக்க கொம்பு 8 அல்லது 9 அடி நீளமுள்ளதாய் புதைத்திருந்தது. இவைகள், இப்போது துருத்திகள் பக்கமாய் வளைக்கப்பட்டிருந்தன. இடது பக்கத்தில் அந்த கொம்புக்கு ஓர் கயிறு கட்டியிருந்தது இந்த கயிறு இடது பக்கத்து துருத்தியின் வெள்ளாட்டு தோலோடு சம்பந்தப்பட்டிருந்தது. ஆகையால் கொம்பு தன்னிடத்திற்கு வர முயலும்போது துருத்தியின் தோலை இழுத்தது. இதே மாதிரி இந்த கொம்பு வலது பக்கத்து துருத்திகளோடு சம்பந்தப்பட்டிருக்கிறது தோல்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் துவாரம் இருந்தது. பிறகு ஒரு மனிதன் துருத்திகளின்மேல் நின்றுகொண்டு, ஒவ்வொரு காலை ஒவ்வொன்றின் மேல் வைத்துக்கொண்டு வலதுபக்கத்து கொம்பை வளைத்தான். அதேகாலத்தில் அவன் காலினுல் வலது பக்கத்து துருத்தியின் தோலிலுள்ள துவாரத்தை மூடினுன். அவன் தேகபாரத்தை சுமத்துவதால் துருத்தியிலுள்ள காற்றை காளவாய்க்குள் போகும்படிச் செய்தான். பிறகு அவன் இடதுபக்கத்தில் சாய்ந்து அதே மாதிரியாய்ச்செய்து முயற்சியை இடதுபக்கத்துருத்தியின்மேல்செய்து காளவாய்க்குள் இடது பக்கத்து குழாயிலிருந்து காற்று போகும்படிச்செய்தான். இம்மாதிரியாக அவன் மாற்றி மாற்றி செய்கிறதினுல் அவனுடைய தேகபாரத்தை வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கு யந்திரத்தை மிதிக்கிற ஓர் மனிதனைப்போல் அடிக்கடி வரிசைக்கிரமமாய் மாற்றினுன். அதினுல் ஒரே மாதிரியாக காற்றை காளவாய்க்குள் போகும்படிச் செய்தான். தோலின்மேல் அப்போதைக்கப்போது நீர் தெளித்தார்கள். காளவாய்க்குள் கரியை நிரப்பி தீப்பற்றவைத்து காற்றுவிடப்பட்டது. (சால் மரத்தை அர்த்தகோண பள்ளம்தோண்டி அதில் எரிப்பதினுல் கரியை உண்டாக்குகிருர்கள்). காளவாயின் சுவரில் இரண்டு கீற்று சிவப்பு இட்டார்கள் இது உலோகப் பிரிவினை நன்ருக முடியவேண்டுமென்று கடவுள் அனுக்கிரகத்தைப் பெறுவது. பிறகு காளவாயின் உச்சியிலிருந்துகரியும் உலோகப்பொடியும் சேர்த்து போடுகிருர்கள் (உடைந்துபோன தண்ணீர் பானையை அளவாக வைத்துக்கொள்ளுகிருர்கள்). துருத்தியை நிதானமாய் விடாமல் ஊதிக்கொண்டேயிருந்தார்கள் முன் போட்ட கரியும் உலோகத்தூளும் காளவாயின் அடியில் இறங்கின உடனே புதிதாக கரியையும் உலோகத்தூளையும் சேர்த்துக் கொட்டிக்கொண்டிருந்தார்கள். பூமியில்அகப்படுகிற இரும்பு உலோக உருண்டைகளை உலோகப்பிரிவினை செய்கிறவர்களுடைய குடும்பத்தில் ஓர் கிழவி காளவாயில் போடுவதற்கு முன்னமே பொடியாக்குகிருள். காளவாயின் உச்சியில் (Carbon Monoxide) கார்பன் மானுக்ஸைட் என்பது நீல வர்ண சுவாலையோடு எரிகிறது. காளவாய்க்குள் வெண்மையான தீ உண்டானது காளவாயின் அடியில் மண்குழையின் மூலமாய் பார்த்தால் தெரியும். அரைமணி நேரம் பொறுத்து, மண் குழையைச் சுற்றிலும் அப்பியுள்ள ஈரமான மணல் சேர்ந்த களிமண்ணிற்குள் ஒரு மெல்லிய கொம்பு செலுத்தப்படுகிறது. இம்மாதிரியாகச்செய்த துவாரத்திலிருந்துஉருகின வஸ்துவில் சிறிதுபாகம் வெளியே தள்ளப்படு

கிறது. அவை கெட்டியாகின்றன. ஒவ்வொரு அரைமணிக்கு ஒருதடவை இம்மாதிரியாக சக்தின் வழியாய் உருகின பதார்த்தம் வெளிக்கு கொண்டு வரப்படுகிறது. உருகின பதார்த்தம் கிட்டம்போலிருக்கிறது. கருப்பாயிருக்கிறது. கண்ணாடியைப்போலிருக்கிறது. ஆறினதும் ஆயிரம் சக்கலாய் பிளக்கிறது. கரியெல்லாம் எரிகிறவரைக்கும் துருத்திகள் ஊதப்படுகின்றன. ஒரு மணங்கு கரியும் 20 சேர் உலோகத்தூளும் உபயோகப்பட்டது. இது செய்ய 3 முதல் 4 மணி ஆகிறது. காளவாயின் உச்சியிலிருந்து எல்லா வஸ்துக்களும் போனபிறகும்கூட துருத்திகள் சிறிது நேரம் வரைக்கும் ஊதப்படுகின்றன. பிறகு மண் குழையை எடுத்து விடுகிறார்கள். அடுப்பிலிருந்து அப்பியிருந்த மணல் களிமண் முதலியன அப்புறப்படுத்தப் படுகின்றன. கரியை கொம்பினால் தள்ளி அவிக்கிறார்கள். கடைசியாக பாதி ஒன்றாய் சேர்ந்த இரும்பு மொத்தத்தை வெளியே எடுக்கிறார்கள். குறட்டினால் எடுக்கிறார்கள். அந்த குறட்டிற்கு நீண்ட மரக் கைப்பிடி இருக்கிறது. இரும்பு மொத்தத்தை புல்லுள்ள இடத்தில் சாத்துப்போடுகிறார்கள். கிட்டங்கள் போகும்படி மெதுவாய் சம்மட்டியால் அடிக்கிறார்கள். எல்லா கிட்டமும் போக்கடிக்கிறதில்லை. ஏனென்றால் விற்கும் போது எடை குறைந்துவிடும். இப்படி அடைகிற இரும்பு 6 அல்லது 7 சேர் ஆகிறது. இந்த இரும்பு ரூபாயிக்கு 20 25 சேர் விற்கப்படுகிறது. வேலை செய்வோர் கஷ்டத்திற்கு 4 அணா தினத்திற்கு அகப்படுகிறது.

இரும்பு உலோகத்தூள்கள் எரிக்கப்பட்ட கிட்டத்தை ரசாயன பரிசோதம் செய்ததில் உண்டான வஸ்துகள்:—

	இரும்பு	சுண்ணாம்பு.	சிலுவை பதார்த்தம் முக்யமாய் மணல்.
மணற்கல் உலோகம் ... Sand stone ore.	55·45	6 18	38 37
ஹேமடைட்டு Haematite ore	54·00	8 43	37·57

இப்படி உண்டான இரும்பின் குணம். இதை வெட்டுளியால் வெட்டினால் ஒடியத்தக்க அதிகமான கிட்டத்தைப்பார்க்கலாம் அதில்கொஞ்சம் வலைபோல் கொடிக்கொடியாய் இரும்பு இருக்கிறது. அதற்கும் உள்ளே இருக்கும் இரும்பு வளையத்தக்கதாயும் சம்மட்டியால் அடித்து செய்யும் வேலைக்கு உபயோகமானதாயும் இருக்கிறது. வெளிப்பாகத்தில் இருக்கிற இரும்பு அதிக கொஞ்சமாயிருக்கிறபடியால் அதை உலைக்கூடத்தில் வேலைசெய்ய முடியாது. உள்ளே இருக்கிற இரும்பு உலைக்கூடத்தில் வேலைக்கு உதவுகிறது. பூரணமாய் இணைக்கக் கூடியதாயிருக்கிறது. உத்தம குணமுள்ள அடுப்புக்கரி போட்டு எரித்தெடுத்த இரும்பு போல் இருக்கிறது. மெதுவான இரும்புதான் இந்தியாவில் உண்டாக்கப்படுகிறது. இந்த இரும்பு ஆங்கிலேய இரும்பிலிருந்து வித்தியாசப்பட்டிருக்கிறது இருப்புப்பாதை வேலைகளுக்கு அதைப்போல் உபயோகப்படாதபோதிலும் எந்தெந்த வேலைகளுக்கு வளையும் தன்மையும் மிருதுவும் சம்மட்டியால் அடித்து வேலை செய்யப்படும் தன்மையும் வேண்டியிருக்கிறதோ அவைகளுக்கெல்லாம் மிகுந்த உபயோகமாகிறது. ஓர் ஜில்லாவில் உண்டாக்கப்படும் இரும்பு உத்தமகுணமுடையது அதனுடைய வளையும் தன்மைக்காக மிக்க மதிப்புடையது. இதுதான் உத்தமகுணமுடைய அடுப்புக்கரி போட்டு எரித்துண்டாக்கிய இரும்பு இந்தியாவில் உண்டாக்கப்படும் இரும்பெல்லாம் இம்மாதிரியாகத்தான் இருக்கிறது இந்த இரும்பு சுத்தப்படுத்தப்படாதபோது போரையாயும் ஒடியத்தகுந்ததாயு மாகிறது. அசுத்தங்கள் இருக்கிறபடியால் முதலில் உண்டாக்கப்பட்ட இரும்பு ஒருபாகமும் மற்றொருபாகமும் சேராததாயும் ஒடியத்தகுந்ததாயு மிருக்கிறது இந்த அசுத்தங்கள் சுத்தப்படுத்தற்குரிய உலையில் வைத்து காற்று நேராக அவைகளின்மேல் படும்படி துருத்தியால் ஊதுவதால் உருகியாவது போகின்றன, அல்லது எரிந்தாவது போகின்றன. அடிக்கடி சம்மட்டியால் அடிப்பதால் அசுத்தங்கள் விலகுகின்றன. அசுத்தங்கள் உருகிப்போகின்றனவா அல்லது எரிந்து போ

கின்றனவா என்பது சந்தேகத்தில் இருக்கிறது சுத்தப்படாத இரும்பின் பாளமெங்கும் கிட்டம் உட்செறிவாய் விரவியிருப்பதால் ஒடியுந் தன்மை உண்டாகிறது என்று முன்னமே போதுமானவரையில் விவரிக்கப்பட்டது சுத்தப்படாத இரும்பில் உள்ள அசுத்தங்கள் (கார்பன் முதலியவை) இருக்கின்றன என்று எண்ணுவது அனுவசியம். ஏனென்றால் கார்பன் முதலியவை எரிந்து போயிருக்கவேண்டும். சுத்தப்படாத இரும்பில் கார்பன் (Carbon) இருக்கிறதென்று கொண்டால் சுத்தப்படுத்தும் வழியில் எல்லா கார்பனும் விலக்கப்பட்டது என்னும் சந்தர்ப்பத்தை விளக்குவது கஷ்டமாயிருக்கும். சுத்தப்படாத இரும்பின் மத்தியிலிருக்கும் இரும்பு கிட்டமில்லாதிருக்கிறதென்றும் வளையத்தக்கதாயும் அடித்து வேலை செய்யத்தகுந்ததாயும் இருக்கிறதென்றும் முன்னமே தெரிவித்திருக்கிறோம். ஐரோப்பிய மாதிரியில் காளவாயின் அடியிலிருந்து இரும்பானது உருகிய ஜலரூபமாய் பாளமாக வார்க்கப்படுகின்றன. இந்திய மாதிரியில் காளவாயின் அடியிலிருந்து இரும்பானது கட்டியாய் எடுக்கப்படுகின்றன. இந்தியாவில் வார்ப்பட இரும்பும் எழுகும் உண்டாக்கப்பட்டன. (Kamis=காமிஸ்=கம்மாளர்கள்).

பூர்வீக ஜாதியாராகிய கோல் ஜாதியார் உலோகப்பிரிவினை செய்கிறார்கள். அவர்கள் மாயை தமிழிற்கும் கன்னடத்திற்கும் சம்மந்தமுள்ளதாயிருக்கிறது. முக ஜாடையில் சேர்ந்தாலியர்போ விருக்கிறார்கள். ஆனால் இப்போது சேர்ந்தாலியர் கோல் ஜாதியாரை அறவெறுக்கிறார்கள்.

***

கதை

சிங்போங்கா அல்லது கடவுள் ஒரு பையனையும் பெண்ணையும் சிருஷ்டித்தார். அவர்கள் மனிதனாகவும் ஸ்திரீயாகவும் வளர்ந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு பிறகு அவர்கள் ஒன்றாய் வசித்தார்கள். ஒருவரை ஒருவர் அறிந்தார்கள் சிங்போங்கா மறுபடியும் இறங்கிவந்து என்ன சந்ததி உண்டானது என்றார். அவர்கள் தாதா நாங்கள் 12 குமாரரும் 12 குமாரத்திகளும் இருக்கிறோம் என்றார்கள். இந்த 24 பேர்களும் தாதா எப்படி நாங்கள் சகோதரர்களும் சகோதரிகளுமாய் வசிப்போம் என்றார்கள். சிங்போங்கா நீங்கள்போய் ஓர் பெரிய விருந்தை தயார் செய்யுங்கள் என்றார். சாதம், எருமை மாமிசம், எருது மாமிசம், வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி, ஆகாயத்திலுள்ள பறவைகள், காய் கறி சாமான்களை அவர்கள் அப்படியே தயார் செய்தார்கள். சிங்போங்கா நீங்கள் இருவரிருவராய் ஆணும் பெண்ணுமாய் உங்களுக்கு என்ன விருப்பமோ அதை எடுத்துக்கொள்ளுங்கள், நீங்கள் எதை எடுத்துக் கொள்ளுகிறீர்களோ அதுதான உங்கள் பங்கு. அதைத்தான்நீங்கள் ஜீவகாலபரியந்தம் சாப்பிடவேண்டும். மற்றொருவருடன் சேரக்கூடாது. ஒருவனும் தன் சகோதரனுடைய பங்கை அபகரிக்கக்கூடாது என்றார். முதல் ஜதையும் இரண்டாம் ஜதையும் எருமை மாமிசத்தையும் எருது மாமிசத்தையும் எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் கோல் பூமிஜி ஜாதியார்கள் ஆனார்கள். மற்றொரு ஜதை சாதத்தை எடுத்துக்கொண்டார்கள். இதர ஜதைகள் ஆணும் பெண்ணுமாய் சாதத்தையும் காய்க்கறியையும் எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் பிராமணர்களாவும், ராஜ புத்ரர்களாகவும், க்ஷத்திரியர்களாகவும் இதர இந்துக்களாகவும் ஆனார்கள். இன்னும் சிலர் வெள்ளாட்டு மாமிசத்தையும் மீனையும் எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் இன்னும் வேறு இந்துக்கள் ஆனார்கள். பூமியர் ஒட்டு மீனை எடுத்துக்கொண்டார்கள். கடைசியாக ஒருஜதை ஆண்பெண் பன்றி மாமிசத்தை எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் தற்காலத்திய சோதோலியர், கூர்மியர், ஒரு ஜதை ஆண் பெண்ணுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இவர்களுக்கு கோல் ஜாதியார் தங்கள் பாகத்தைக் கொடுத்தார்கள் அவர்கள் தற்காலத்து காஸ்ஸியர்கள்.

***

கதை.

பூர்வத்தில் வானத்தில் சிங்போங்கா அல்லது கடவுளைச் சுற்றி பணி செய்துகொண்டு தேவர்கள் இருந்தார்கள். ஓர் நாள் அவர்கள் கண்ணாடியில் தங்கள் முகத்தைப்பார்க்க நேரிட்டது தாங்கள் தேவ உருவத்தை உடையவர்கள் என்று கண்டார்கள். அதுமுதல் தேவனுக்கு பணிவிடை செய்ய மறுத்தார்கள். தாங்களும் தேவனுக்கு சமானமானவர்கள் என்றார்கள். அவர்கள் தேவனால் வானத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். இதை பூமியை மண்டியர்கள் தொராசி பிர்ஹி வகாசி பாசி என்றார்கள். இந்த பூமியில் இரும்பு அகப்பட்டது. அவர்கள் இரும்பை உண்டாக்க இரும்பு காளவாயை செய்துக்கொண்டு அய உலோகப்பிரிவினை செய்தார்கள்.

கோல் சாதியாரைத் தவிர வேறு ஒரு ஜாதியார் இரும்பில் வேலை செய்கிறார்கள். அவர்கள் அகாரியரும் லொஹாரியரும், ஆகாரியர்கள், அக்ரியர், அகூரியர், அகோரியா அகியர் அருர்கள் என்னப்படுகிறார்கள். அவர் திராவிட பூர்வீக ஜாதியருக்கு சம்பந்தப்பட்டவர்கள் அல்ல. அவர் வெருசாய் ஆரியர்கள்தான். அவர் ஏழைகள் அவர்கள் நிலைமை கேவலமாகயிருக்கிறது. அகாரியர் சுத்தப்படாத இரும்பைத் தான் பிரிவினை செய்தெடுக்கிறார்கள் அதை லொகாரியர் சுத்தப்படுத்துகிறார்கள். பிறகு கொல்லர் வேலைக்கு உபயோகமாகிறது.

அகாரிய நாமமூலம்.

(1) அங்=நெருப்பு. அகூரி=நெருப்பண்டை வேலை செய்கிறவன் என்று அருத்தமாகிறது.

(2) சிந்தனை நாமம். அ=அல்ல சுரா=கடவுளர் அல்லது தேவர்கள் அல்லாதவர்கள்,

(3) புகழ்ச்சியான நாமம். அகாரியருடைய வேலைத்திறத்தைப்பற்றி பிறந்த நாமம். அசுரா=கடவுளுக்கு ஓர் பெயர். இந்துக்களல்லாத ஜாதியார் அகாரியரை கடவுளர் என்று அழைத்தார்கள்.

•

கதை.

ஓர் காலத்தில் பர்ட்வான் மகாராஜாவினிடத்தில் காமார் பாரா கிராமத்திலிருந்து ஓர் கொல்லர் ஓர் கத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தார். ஆனால் அதிக விலை சொன்னதினால் அவரை பரிகாசம்செய்து அகற்றிவிட்டார்கள். கொல்லர் அரண்மனையைவிட்டு நீங்கிப்போகும்போது இந்த கத்தியின் ஓர் வீச்சில் அரண்மனைவாயிலுக் கருகிலிருந்த ஒரு பெரிய மரத்தின் அடிப்பாகத் திம்மையை இரண்டு துண்டாக்கினார். கொஞ்ச நாளைக்கெல்லாம் மரம் பட்டு இறக்க ஆரம்பித்தது. விசாரணையில் மரம் உலர்ந்துபோனதின் காரணத்தைக் கண்டுபிடித்து கொல்லரை வரவழைத்து முன்கேட்ட பணத்தைக் கொடுத்து கத்தியை வாங்கினார்.

கொல்லர், காமார், கர்மகார் அல்லது லோஹார் ஜாதியார் இவர்கள் தலைமுறை தலைமுறையாய் கொல்லர் காமார்களுக்கு பட்டப்பெயர் பால், டி, தாஸ், டட் முதலியன்வ மிஹாரில் காமார்களுக்கு லோஹார் என்று பேர். காமார்கள் நான்கு வகுப்பினரா யிருக்கின்றனர். 1. ஜல்சாரி, 2. சாக்லேய், 3 சப்தசெயின், 4 மாம்டோபீடே இப்போது எல்லா ஜாதியாரும் அயத்தொழிலை செய்கிறார்கள்.

காமாருக்கும் லோஹாருக்கும் மூக ஜாடையில் வித்தியாசமே யில்லை.

கொல்லவேலை அசவுக்கியமான வேலையாம். கொல்லர்களுக்கு பருதக புஜமும் அகன்ற மார்புமில்லை கொல்லன் தேகம் கட்டுமஸ்தாயில்லை. முக காந்தி வெளுத்திருக்கும். அவன் முகம் பலஹீனத்தைக் காட்டுகிறது. நேபாள கொல்லருக்கு பெயர் காமிஸ் என்பது.

கொல்லனுக்கு முதல்பணம் உலைக்கூடம் துருத்திகள், பணை, குறடுகள், சம்மட்டிகள் குளிர்ந்த வெட்டுளி 10 அடிக்கு 10 அடி கொட்டகையில் வேலை செய்கிறவன் உலை தரைமட்டத்திற்கு சமானமாயிருக்கிறது அதினின் பக்கத்தில் ஓர் மண் சுவர் எழுப்பியிருக்கிறது. 6 அங்குலம் முதல் 1 அடி உயா

1 முதல் $1\frac{1}{2}$ அடி நீளம் ஆனது. இந்த சுவரின் மூலமாய் அல்லது அதன் கீழ் பூமியில் ஆழ்ந்து ஓர் இரும்புக் குழை போகிறது இதன்மூலமாய் துருத்தியிலிருந்து காற்று உலைக்குச் செல்லுகிறது. துருத்திகள் ஆங்கில சமையல் அறை துருத்திகள் போன்றிருக்கின்றன. மேல் புறத்துப் பலகை நிலையாயிருக்கிறது. கீழ்ப்புறத்து பலகை மாத்திரம் மேலும் கீழுமாய் அசைக்கப்படுகிறது. அசைத்தல் கம்பியாலாவது சங்கிலியாலாவது அல்லது கயிறாலாவது ஆகிறது. அந்த கம்பி சங்கிலி அல்லது கயிறு அசைக்கும் கோலின் ஒரு முனையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அசைக்கும் கோல் தரைக்கு மேலே அகலவாட்டத்தில் இரண்டு நெடுக்கான கம்பிகளால் தாங்கப்பட்டு அல்லது ஒரு பக்கத்தில் ஒரு நெடுக்கு கம்பத்தினாலும் மற்றொரு பக்கத்தில் கொட்டகையின் சுவரினாலும் தாங்கப்பட்டிருக்கிறது அசைக்கும் கொம்பின் மற்றொரு முனை ஏறக்குறைய உலைக்கு மேலேயே வருகிறது. அதில் ஒரு சங்கிலி சேர்த்திருக்கிறது கொல்லன் உலைக்கருகில் குந்திக்கொண்டு நெருப்பிலிருக்கிற இரும்புத் துண்டை ஒரு கையால் குறட்டைக்கொண்டு எடுத்து மற்றொரு கையால் சங்கிலியை அசைத்து துருத்தியை ஊதுகிறான். இரும்புத்துண்டு போதுமானவரையில் காய்ந்தபோது அதை குறட்டினால் எடுத்து பணையின்மேல் வேண்டியஉருவமாக சம்மட்டியால் அடிக்கிறார்கள் பணை இங்கிலீஷ் மாதிரியாக இருக்கிறது. சில வேளைகளில் இருப்புப்பாதை கம்பி ஒரு சிறிய பணையாகிறது. சம்மட்டி அநேகவிதமா யிருக்கிறது, அவைகளுக்கு பேர் 1. மார்தால் 2. ஹாத்தாரி அல்லது ம்ராத்துலி.

உலைக்கூடத்தின் அமைப்பு வெவ்வேறு விதமாயிருக்கின்றன. மேலே விவரித்த மண் சுவரே யல்லாமல் இன்னொரு சிறிய சுவர் அதற்கு நேராகவும் உலைக்கு முன்பக்கமாயும் எழுப்பி யிருக்கிறது. சிலவேளைகளில் தனித்தனிக் கல்லை அடுக்கி இருந்தச்சுவரைஎழுப்புகிறார்கள். இது $1\frac{1}{2}$ அல்லது 2 அடி உயரமிருக்கிறது.

சில சமயத்தில் உலைக்கூடமே 1 அல்லது 2 அடி உயரமாகச் செய்கிறார்கள் இப்போது சுவர்கள் இருந்தாலும் இராவிட்டாலும் வித்தியாசமாயிராது

பர்ட்வான் உலைக்கூட மாதிரி.

பர்பம் ஜில்லாவில் துப்ராஜ்பூரில் உலைக்கூடம் நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கிறது. உலைக்கூடத்தரை 1 அல்லது $1\frac{1}{2}$ அடி உயர்த்தப்பட்டிருக்கிறது, மண்ணினால்தான் உயர்த்தப்பட்டிருக்கிறது பக்கங்களில் வரிசையாய் கொம்புகள் நாட்டியிருப்பதால் ஆதரிக்கப்படுகிறது. இந்த உயர்ந்த இடத்தில் உலை போடப்பட்டிருக்கிறது. சுற்றிலும் நான்கு சுவர்கள் காளவாய்போல் உயர்ந்திருக்கிறது. $2\frac{1}{2}$ அல்லது 3 அடி உயரம் இருக்கிறது. அடியிடம் 18 சதுர அங்குலமிருக்கிறதாம். முன் சுவரில் ஓர் துவாரம் இருக்கிறது பக்கத்து சுவரில் வளைவான சந்து இருக்கிறது அதின் மூலமாய் நெருப்பில் ஆகவேண்டிய கைவேலை ஆகிறது இந்த உலையின்மேல் வாயகன்ற மண் பாத்திரம்போல் செய்து வைத்திருக்கிறது. அந்த உயர்ந்த திண்ணையின்மேல் உலையின் பக்கமாக கொல்லன் உட்காருகிற யிடமிருக்கிறது. அநேகம் பணைகள் அநேகம் அர்த்தகோள வடிவான சால்கள் அந்த திண்ணையின்மேல் புதைக்கப்பட் டிருக்கின்றன. காய்ச்சின இரும்பை நனைப்பதற்கும் கடினமாக்க எழுகை காய்ச்சி தோய்த்தெடுப்பதற்கும் அவைகளில் ஜலம் வைத்திருக்கிறது. எல்லாம் கொல்லனுடைய கைக்கு எட்டும்படியாக ஏற்பாடுசெய்து வைத்திருக்கிறது.

வண்டி சக்கரத்திற்கு கட்டு காய்ச்சி சேர்ப்பதில் வேலையாயிருக்கும் கொல்லனுக்கு இடம் விஸ்தாரமாய் வேண்டியிருக்கிறது. உலைக்கூடத்திற் சேர்ந்ததுபோல் ஓர் புறக்கடையிருக்கிறது. கட்டு காய்ச்சி சக்கரத்தில் சேர்ப்பதற்கு ஓர் வட்ட வடிவான பள்ளம் தோண்டி வைத்திருக்கிறான் சக்கரத்திற்கு சரியாய் ஆகிறவரையில் கட்டைக் காய்ச்சுகிறான். சக்கரத்தில் சேர்த்தபிறகு பிகிந்துக்கொள்வதற்

காக சக்கரத்தின்மீதும் கட்டின்மேலும் நீர் வார்த்து குட்டைத் தணியச்செய்கிறான்.

கத்திகள், கத்தரிகள், அம்பட்டன் கத்திகள் முதலியவற்றை செய்வதில் சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது. கொல்லர்களில் சிலரே இவ்வேலையைச் செய்கிறார்கள். இக்கொல்லர்களுக்கு உலையும், துருத்திகளும், பணையும், சம்மட்டியும், சுத்தியும், குறடும், வெட்டுளிகளும் கடினமுண்டாக்க தோய்த்தெடுப்பதற்கு நீரும், அரமும், அவைகளைப்போலும் ஆயுதமும் தீட்டுக்கல்லும் சாணைக்கல்லும் நயமாக்கும் சக்கரங்களும் வேண்டியதாயிருக்கிறது. கொல்லக்கூடத்தில் தரையில் புதைத்திருக்கும் சாலில் உள்ள நீர் எஃகை கடினமாக்க தோய்த்தெடுக்க உதவுகிறது. சில வேளைகளில் கைப்பாத்திரத்தில் நீரை இதற்கு உபயோகிக்கிறார்கள். சில இடங்களில் மூங்கில் குழைகளைப் பாத்திரமாக உபயோகிக்கிறார்கள். கசருவலையை உபயோகிக்கிறார்கள். தோய்த்தெடுத்தல், அதிக சாமர்த்திய வேலையாகவும் கருதப்படுகிறது. முக்கியமான வேலைகளுக்கு அடுப்புக்கரியைத்தான் உபயோகிக்கிறார்கள். கத்திகள் முதலிய செய்வோருக்கு சாணைபிடிக்கும் கல்லும் நயப்படுத்தும் சக்கரங்களும் முக்கியமான ஆயுதங்கள். அவைகள் குருந்தக்கல் மணலும் அரக்கும் சேர்த்து செய்யப்பட்டவை. வட்டமாயிருக்கின்றன. அரை அங்குலம் கனமானது. 1 அடி அல்லது 1½ அடி வட்டத்தின் குறுக்களவு ஓர் மரகிளைத் துண்டில் மாட்டியிருக்கிறது. அது 3 முதல் 4 அங்குலம் குறுக்களவுடையது. இந்த இருசுபோன்ற கழி ஒரு பள்ளத்தில் நீட்ட வாட்டத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த சக்கரம் சுழல்வதற்கு போதுமான ஆழத்தையுடைய பள்ளம் வெட்டப்படுகிறது. மரக்கொம்பில் கயிறு சுற்றி இரண்டு முனையையும் கயிரைப் பிடித்துக்கொண்டு மாற்றி மாற்றி விட்டு விட்டு வலிப்பதால் அந்த சக்கரம் சுழல்கிறது அல்லது வேறொரு பெரிய சக்கரத்தில் கயிறு பூட்டியிருப்பதால் மரத்துண்டும் சக்கரமும் சுழல்கிறது.

கத்தி அல்லது கத்தரியின் இலை வடிவம் முதலில் கொல்லனால் ஆகிறது. அவனுடைய ஆயுதங்கள் பணை சம்மட்டி அல்லது சுத்தி துருத்தி, வெட்டுளி, குறடு, ஆணியை எடுக்கும் ஆயுதம் முதலில் இரும்பைக் காய்த்து அல்லது எஃகைக் காய்த்து வேண்டிய ரூபமும் அளவும் பரிமாணமும் உண்டாக பணையின்மேல் வைத்து அடிக்கிறான். ஓர் தேர்ந்த கொல்லன் ஒரு நாளைக்கு 72 கத்தியின் இலை வடிவத்தைச் செய்வான். அவை இரண்டு முதல் மூன்று அங்குல நீளமுள்ளவை. கால் அங்குலம் அகலம். கொல்லன் இவ்விலை வடிவங்களை சாணை பிடிக்கிறவர்களுக்கும் நயமாக்குகிறவர்களுக்கும் கொடுத்துவிடுகிறான். சாணை பிடிக்கவும் நயமாக்கவும் கூராக்கவும் இரண்டுவித தீட்டும் கல் சாணைக்கல் இருக்கின்றன. ஒன்று ஆற்றுமணல் இது முரட்டு வேலைக்குத்தான் உபயோகம் இரண்டாவது குழாங்கல்லைப் பொடி செய்ததுதான். இதை அரக்கோடு சேர்த்து கட்டுகிறார்கள். கூட்டளவு ஒரு சேர் மணலுக்கு கால் சேர் அரக்கு இந்த இரண்டு வஸ்துவையும் நெருப்பின்மேல் வைத்து கூட்டுகிறார்கள். பிறகு வேலைக்காரன் ஓர் பலகையின்மேல் தன் கைகளினால் சாணை சக்கரத்தை உண்டாக்குகிறான். இந்த சக்கரம் 15 அங்குலம் குறுக்களவுள்ளது. அதினுடைய சுத்தப்படுத்தும் ஓரம் கால் அங்குல அகலமுள்ளது. குழாங்கல் பொடியைக்கொண்டு செய்யும் சுத்தமாக்கும் சக்கரம்கூட இதேமாதிரியாகத்தான் செய்யப்படுகிறது. முதலில் குழாங்கல்லை சன்னமாய் பொடிச் செய்கிறார்கள். அதை ஜாக்கிரதையால் வஸ்திரத்தில் போட்டு சலிக்கிறார்கள். அதிக சேர்த்தியாகவுள்ள கல்பொடிதான் அரக்கோடு சேர்க்கப்படுகிறது. முன் சொன்ன அளவில்தான் சேர்க்கப்படுகிறது இது ஓர் மரத்தடியில் சேர்க்கப்படுகிறது இந்த தடி 12 அங்குலம் சுற்றளவுள்ள பரிமாணத்தையுடையது. இரண்டு அடி நீளமுள்ளது சாணைச் சக்கரத்தின் மத்தியில் தடி செல்லுகிறது அதற்கு சக்கியை மாட்டினால் சாணையோடுகூட

சுழல்கிறது. வேலைக்கூடத்தின் தரையில் ஓர் பள்ளம் வெட்டப்பட்டிருக்கிறது. இதில் தடியும் சக்கரமும் பிகியப்பட்டிருக்கிறது. அதனால் அவைகள் சுலபமாய் சுழல்கின்றன. தடி நிலத்திற்கு குறுக்காக இருக்கிறது. சக்கரம் நெடுக்காக இருக்கிறது. இதற்கு சுழல்கிற சக்தி இன்னொரு சக்கரத்திலிருந்து வருகிறது. அது 10 அடி தூரத்திலிருக்கிறது. அது குறுக்களவில் 3 முதல் 4 அடி வரையில் இருக்கிறது. இந்த பெரிய சக்கரத்தின் வாமயில் வெட்டப்பட்டிருக்கும் ஆழியில் மாட்டியிருக்கிற கயறு சுத்தமாக சக்கரத்தின் தடியைச் சுற்றி வருகிறது. பெரிய சக்கரத்தின் கூடத்தில் இருக்கிற கைப்பிடி ஆணியைப் பிடித்துக்கொண்டு ஒருவன் சுற்றுகிறான் பெரிய சக்கரம் சுற்றும்போது சுத்தப்படுத்தும் சக்கரம் அதிக வேகமாயும் பலமாயும் சுழல்கிறது. இந்த பெரிய சக்கரம் ஐரோப்பாவில் செய்த இரும்பு வார்ப்பட சக்கரம். மரத்தினால் செய்யப்பட்ட சக்கரம் முற்காலத்தில் உபயோகப் பட்டது போல் இப்போது இல்லை இரும்பு சக்கரம் பளபளப்பாயும் நெடுநாளைக்கு மிருக்கிறபடியால் அதைத்தான் இப்போது உபயோகிக்கிறார்கள். தன் துடையின்மீது உட்கார்ந்துகொண்டு சுத்தப்படுத்துகிற சுழலும் சக்கரத்திற்கு மேல் கவிந்து கொண்டிருக்கிறான், அவன் இரண்டு கையிலேயும் கத்தியையாவது கத்தரியையாவது எடுத்துக்கொண்டு சுத்தபடுத்தி கூராக்கும் சக்கரத்தின் சுழல்கிற ஓரத்தில் வைத்து சுத்தப்படுத்திக் கூராக்குகிறான் கையில் பிடிக்கக்கூடாதபடி சூடேறிவிட்டால் குளிர்ந்த ஜலத்தில் அமிழ்த்துகிறான். சாமர்த்தியமுள்ள வேலைக்காரன் சுத்தப்படுத்தி சாணை பிடிக்கும் வேலையை பிரதமத்தில் மணல் சக்கரத்தில் செய்கிறான் பிறகு கத்தியையும் கத்தரியையும் இன்னொருவன் கையில் கொடுக்கிறான் அவன் கற்றூளையும் அரக்கையும் சேர்த்து செய்த சுத்தப்படுத்தி கூராக்கும் சக்கரத்தில் வேலைசெய்கிறான். கத்தி அல்லது கத்தரியின் இலை வடிவம் போதுமான வரையில் சுத்தமாய் கூரானபோது, இன்னொரு வேலைக்காரனிடத்தில் கொடுக்கிறான். அவன் ஓர் யந்திரத்தில் கடிக்கவிடுகிறான். அந்த நிலையில் அதை துளைபோடுகிறான். கைப்பிடிக்கு வேண்டியபித்தளையோ தந்தத்தையோ அல்லது மிருகக் கொம்பையோ வேண்டிய உருவாக்குகிறான். இலைவடிவ கத்தியையாவது அல்லது கத்தரியையாவது அதில் பிகியச்செய்கிறான் பித்தளை மெல்லிய தகடாயிருக்கிறது. அந்த தகடு வேலைக்கூடத்தில் செய்த ஓர் எஃகு கத்தரிக்கும் ஆயுதத்தால் வெட்டப்படுகிறது. கொம்பும், தந்தமும் சுதேசத்தில் செய்து அல்லது இறக்குமதி செய்த வாளினால் துண்டிக்கப்படுகிறது.

அது ஒரு அரத்தினால் உருவாக்கப்பட்டு இலைவடிவ கத்தரி அல்லது கத்தியோடு சேர்க்கப்படுகிறது. கொம்பும் தந்தமும் செங்கல் தூள், அடுப்புக்கரி, எண்ணெய் இவைகளைச் சேர்த்த வஸ்துவால் தேய்ப்பதினால் அதிக சுத்தத்தை அடைகின்றன கடைசியாய் கத்தி மறுபடியும் கல்தூளும் அரக்கும் சேர்த்துச் செய்த சாணையில் பிடித்து சுத்தமாக கூராக்கப்படுகிறது கைப்பிடி பின்பக்கம் முதலியவை ஒழுங்கில்லாதிருப்பின் அவைகளும் சாணையில் பிடித்து நீக்கப்படுகின்றன இப்போது கத்தியோ கத்தரியோ பிரகாசமாயும் அழகாயுமிருக்கிறது விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. சாமர்த்திய வேலைக்காரனுடைய சாமான்கள் சுத்தப் படுத்தப்பட்டபோது கண்ணாடியைப் போலிருக்கின்றன. இறக்குமதியாகும் சாமான்களைப்போலவே இருக்கின்றன. ஓரம்கூட கூராயும் நேர்த்தியாயும் இருக்கிறது கத்தரி இலை வடிவத்தைச்செய்யுமுறை சிறிது வித்தியாசப்பட்டிருக்கிறது. இலைவடிவமும் விரல் பிடியும் சுத்தப்படுத்தப்பட்டு சுழல்கிற சக்கரத்தில் மழுக்கப்படுகின்றன. இலைவடிவம் ஓர் யந்திரத்தில் கடிக்கவிடப்படுகிறது. வேலைக்காரன் வளையத்தை சுத்தப்படுத்தப் பார்க்கிறான். அடிப்பாகத்தையும் சுத்தப்படுத்துகிறான். நெருக்கிடும் ஆயுதம் ஓர் தட்டையான இலைவடிவ எஃகு ஓரங்கள் திரண்டிருக்கின்

றன. முனைகூட் டிரண்டிருக்கிறது. ஓர் மரகைப்பிடியில் சேர்த்திருக்கிறது. இந்த ஆயுதத்தை வேலைக்காரர்களே செய்துகொள்ளுகிறார்கள். இந்த ஆயுதத்தைக்கொண்டு கத்தரியினுடைய வளையமும் அடிபபாகமும் நன்றாய் எல்லாப்பக்கங்களிலும் தேய்த்து சுத்தப்படுத்தப்படுகிறது. முடிந்த சாமானுக்கு இந்த ஆயுதம் அதிக சுத்தத்தைக் கொடுக்கிறது. மழமழ வென்றும்படியாகச் செய்யப்படுகிறது விரல்களுக்கு சுலபமா யிருக்கும்படிச் செய்கிறது. முருக்காணிக்கும் ஆணிக்கும் வேண்டிய துவாரங்கள் துளையிடும் கருவியால் செய்யப்படுகின்றன. இந்த திருகுஆணி எழுகாலாகியது வேலைக்கூடத்திலேயே செய்யப்பட்டது, அது இரண்டு மூன்று அங்குலம் நீளமுள்ளது. அது நிரளையான கைப்பிடியில் சொருகப்பட்டிருக்கிறது. இந்த பிடி 8 அல்லது 10 அங்குலம் நீளமுள்ளது. அது ஓர் கூரிய முனையுள்ள ஆயுதம், ஓர் வில்லின் கயிற்றில் சுற்றி முன்னும் பின்னும் இழுத்து வேலைசெய்யும்போது பித்தளையையும், மாட்டுக்கொம்பையும், தந்தத்தையும், இரும்பையும், எழுகையும் துளைபோடுகிறது.

அம்பட்டன் கத்தியின் இலைவடிவம்செய்யும்முறை மேற்சொன்ன முறையைப்போலவேதான் இருக்கிறது. கொல்லன் முதலில் பனையில் அடித்து உருவாக்குகிறான். பிறகு சுத்தப்படுத்துகிறவனுக்கும் துலை போடுகிறவனுக்கும் முறையே கொடுக்கப்படுகிறது. கொல்லர்களில் சிலரே அம்பட்டன் கத்தியைச் செய்கிறார்கள். இரண்டொருவர்தான் உத்தம குண அம்பட்டன் கத்தியைச் செய்யக்கூடியவர்கள் எழுகின் ஒடியும் தன்மையும் கத்தியின் இலை வடிவத்தின் குணமும் சுழல்கிற சக்கரத்தின்மேல் வேலை செய்யும்போது அதிக உயர்வான பகுத்தறிவும் நாகரீக வேலைப்பாடும் வேண்டி யிருக்கிறது. நூர் நல்ல அம்பட்ட கத்தியின் இலை வடிவம் அதிக பொறுமையோடு கையினுல் செய்யவேண்டி யிருக்கிறது. வெட்டிக்கார வேலைக்காரன் காலைமுதல் சாயங்காலத்திற்குள் இரண்டு கத்தியைத் தான் செய்து கொடுக்கக்கூடும். அவனுடைய வருவாய் ரூபாய்க்கு கால்ரூபாய். இந்த கத்திகளின்விலை பரிமாணத்திற்கும் உயர்வான குணத்திற்கும் தக்கபடி 0-4-0 ரூபாய்க்கு அதிகமாகிக்கொண்டே யிருக்கிறது.

மிருகக் கொம்பும் தந்தமும் ஓர் ஆயுதத்தால் சீவி எடுக்கப்படுகிறது. இந்த ஆயுதம் நான்கு மூலையுடைய ஓர் எழுகுத்துண்டு. அதின்பரிமாணம் 3 அங்குல உயரம், ஓர் மர கைப்பிடியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. கடைசி சுத்தம் செங்கல்தூள் அடுப்புக்கரி எண்ணெய் இவைகளின் சேர்மான வஸ்துவால் செய்யப்படுகிறது. மணலும் அரக்கும் சேர்ந்து ஆன சாணைச்சக்கரம் 1 மாதம் வரையில்தான் இருக்கும். கல்தூளும் அரக்கும் சேர்ந்து செய்த சுழல்கிற சாணைச்சக்கரம் 8 மாதம் இருக்கிறது. பெரிய வேலைக் கூடங்களில் ஏறக் குறைய அரை டஜன் சக்கரம் சுழல்கின்றன. ஆகையால் கொல்லர்கள் அடிக்கடி புதிய சக்கரம் செய்துகொள்ள வேண்டியதா யிருக்கிறது. வேலைக்காரன் பேரையும் வர்த்தக அடையாளத்தையும் அழுத்தும் சாபாமுத்திரை எழுகினுலேயே சுதேசத்திலேயே செய்துக்கொள்கிறார்கள்.

சில கொல்லர்கள்தான் கத்தியின் இலை வடிவத்தின்மேல் அலங்கார பூவேலையை பதிப்பிக்கிறார்கள். பலிபீடத்தில் எப்போது அலங்கார பூவேலையை யுடையன. கத்தியின் இலை வடிவம் காய்ச்சப்பட்டு மெதுவாயுள்ளபோது தான் சேர்த்தியான கடினமாகத் தோய்த்தெடுக்கப்பட்ட போர்வையாலும் ஓர் சிறிய சுத்தியாலும் பூவேலைகள் பதிப்பிக்கப்படுகின்றன. அத்தகைய அலங்கார வேலையின்மேல் சிறிது பித்தளை உட்பதிவுவேலையும் செய்யப்படுகிறது முதலில் பூவை வெட்டிக்கொண்டு பிறகு பித்தளை உட்பதிவு செய்யப்படுகிறது.

177-வது பக்கத்தின் தொடர்ச்சி.

கண்ணாடி தொழில்.

இந்த தேசத்தில் கண்ணாடித்தொழில் அதிக விர்த்தியை அடையவேண்டியிருக்கிறது. அதற்குள்ளாக அநேக கஷ்டங்களை மேற்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. கைதேர்ந்த வேலைக்காரர்களை தருவிப்பது அதிக கஷ்டத்திலிருக்கிறது. வேலைக்காரர்களை வெளி நாட்டிலிருந்து வரவழைக்கிறதா யிருந்தால் கண்ணாடி வேலையில் அன்னிய நாட்டாரோடு போட்டிபோட இயலாது. அன்னிய நாட்டு வேலைக்காரர்களுக்கு அவர்கள் தேசத்தில் கிடைக்கக்கூடிய கூலியைக்காட்டிலும் இரட்டத்தனை கொடுக்கவேண்டியதா யிருக்கிறது. அந்த மாதிரியாய் அதிகக்கூலி கொடுத்தாலொழிய வெளிநாட்டு வேலைக்காரர்கள் தங்கள் பந்து மித்திரர்களை விட்டு தொலைதூரம் நம் தேசத்தில் வேலைக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்பது அசாத்தியம்.

கண்ணாடித்தொழிலுக்காக இங்கே அகப்படக்கூடிய வஸ்துக்கள் மணலும் விறகும் இவற்றில்கூட சுத்தமாகக் கருதக்கூடிய பலவித மணல்கள் அகப்படுவது கஷ்டம். கற்களை பொடியாக்கி மணல்கள் உண்டாக்குவது அதிக செலவானது. விறகைப்பற்றி பேசவேண்டுமானுல் நமது நிலக்கரியாவது அல்லது கட்டையாவது வெளிதேசத்து சரக்குகளைவிட சாசமாக யில்லை. மேலும் வர்ணம் கொடுக்கும் ரசாயனங்களும் கண்ணாடி உருகவேண்டிய உபவர்க்க ஆல்கலைன் வஸ்துக்களும் இதர சரக்குகளும் இதர தேசங்களிலிருந்து வரவழைக்க வேண்டியதா யிருக்கிறது. இந்த விஷயங்களில் இந்தியா அன்னிய தேசங்களை நம்பிக்கொண்டிராதிருக்க அநேக வருஷங்கள் பிடிக்கும். இந்த கஷ்டங்களோடு அன்னிய நாட்டு வேலைக்காரர்களை வரவழைக்கும் கஷ்டத்தையும் சேர்த்தால் நம்முடைய சிக்கனம் எங்கிருந்துவரும். நம்முடைய ஜயம் நம்முடைய ஆட்களை வேலைக்காரர்களாய் தயாராக்குவதிலிருக்கின்றது. இதற்காக நமது சிறுவர்கள் அன்னிய நாட்டுக்குப் போய் வேலையைக் கற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது. இந்த மார்க்கத்தில் கைத்தொழில் அபிவிர்த்திக்காக ஏற்பட்ட கல்கத்தா சங்கத்தின் பிரயத்தனங்களும் இன்னும் தேச க்ஷேமத்தைக்கோரிய கனவான்களுடைய பிரயத்தனங்களும் அதிக நன்மையை உண்டாக்கியதென்று நன்றி பாராட்டுபவரா யிருக்கிறோம். ஆகையால் தற்போதைக்கு வேண்டிய காரிய சித்தியை இன்னும் நாம் அடையவில்லை. நமது தேசத்து இயற்கை சௌகர்ய சாதனங்களை பலப்படுத்தும்பொருட்டு அன்னிய நாடுகளில் தொழிற் கல்வியைக் கற்கும் சிறுவர்களுடைய தொகையை அதிகமாய் பலப்படுத்தவேண்டும்.

வெளி தேசத்தில் தொழிற் கல்வி கற்கிறதுகூட சுலபமானதல்ல. அன்னிய நாட்டார் தொழிற் கல்வியை நமக்கு கற்றுக்கொடுத்தால் அவர்களுடைய வர்த்தக ஊதியத்திற்கு பங்கம் வரும் என்று நன்றாய் அறிவார்கள். சிக்கன வழிகளின் பிரதம ஞானத்தையும் வர்த்தக தொழில் வியாபக மாதிரிகளையும் தெரிந்து கொள்வதற்கு அறிவு குறைந்திருப்பதால் நமது தேசத்தவர்களின் கையிலிருந்த சிற்சில வேலைகள்கூட சீர்கெட்டு போயிற்று. அன்

னிய தேசத்திற்கு தொழிற் கல்விகற்கப் போகும் நமது சிறுவர்கள் தங்கள் தாழ்ந்த நிலைமையை கவனப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விடத்தில் நேரத்தக்க எல்லா அவமானத்திற்கும் கஷ்டங்களுக்கும் சகித்துக் கொண்டிருக்க தயாராயிருக்கவேண்டும். ஆனால் கொஞ்சம் நம்பிக்கை யிருக்கிறது. வேலைப்பாடுகள் தொழில்கள் இவற்றின் ஞானம் மனதிலிருந்து புஸ்தகத்திலும் எழுதப்படுவதில்தான் அந்த நம்பிக்கை இருக்கிறது. இத்தொழில் ஞான ரகசியம் வேலைக்காரர்களுடைய இருதயத்தில் புதைபட்டிருந்த வரையில், அவைகளை அறிந்து கொள்வது அதிக கஷ்டமாயிருந்தது. அவைகள் இப்போது பிரசுரிக்கப்பட்டிருப்பதால் அவைகளைத் தெரிந்து கொள்வது சிறிது சுலபமாயிருக்கிறது. நமது சிறுவர்கள் பிரதமனைத்தொழில் ஞானத்தை மாத்திரம் அடைவதாயிருந்தால்கூட அவ்விஷயங்களைப்பற்றி விவரிக்கும் புஸ்தகங்களை கவனமாய்ப் படிப்பார்களே யானால் அவர்கள் அன்னிய நாட்டில் கற்றுக்கொண்ட தொழில் ஞானத்தை விருத்தியாக்கிக் கொள்ளலாம். ஆனால் நமது துரதிர்ஷ்டம் கண்ணாடித் தொழிலைப்பற்றிய புஸ்தகங்களெல்லாம் ஐரோப்பிய பாஷையிலிருக்கிறபடியால் நமது தேசத்து வேலைக்காரர்கள் சாதாரணமாய் அறிந்து கொள்வதற்கு கூடாமையா யிருக்கிறது.

இப்போது சர்வகலாசாலை வாசிப்பு முடிந்ததும் சிறுவர்களை அன்னிய தேசத்திற்கு தொழிற் கல்வி கற்க அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. அவர்கள் அன்னிய தேசம் போவதற்கு முன் வியாபார வாசிப்பு கற்பது வழக்கத்திலில்லை. அவர்களுடைய உயர்தரப் படிப்பின் வன்மையால் தொழில்களின் ஞானத்தை மாத்திரம் கற்றுக்கொள்ளுகிறார்கள். வியாபார விஷயமான ஞானம் கற்றுக் கொள்ளப்படாமலே இருக்கிறது. அதாவது அவ்விடத்தில் கற்கப்படுகிற தொழில் ஞானம் இந்து தேசத்திற்கும் இந்து தேச பொருளாதாரங்களுக்கும் தகுதியானதா? நமது ஜனங்களின் நிலைமைக்கும் நாகரீகத்திற்கும் ஒத்திருக்கிறதா? என்பவைகள் அறியப்படாமலே இருக்கிறது. ஆகையால் தொழிற்கல்வி கற்ற சிறுவர்கள் சுதேசத்திற்குத் திரும்பி வந்தும் அவர்களுடைய ஞானத்தை பயனளிக்கும்படியாக உபயோகப்படுத்துவதற்கு சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். அவர்களால் துவக்கப்படும் அநேக வர்த்தக ஏற்பாடுகள் இடையூறு படுகின்றன. ஏனென்றால் அந்த வர்த்தக ஏற்பாடுகளெல்லாம் வர்த்தக விஷயத்தில் ரகசியார்த்தங்களை அறிந்துக்கொள்ளாதவர்களால் நடத்தப்படுகின்றன. மேலும் சிக்கன வழியில் சௌகர்ய மில்லாத மார்க்கங்களில் நடத்தப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் வர்த்தக முயற்சியின் உயர்வு காணப்படுகிற இக்காலத்தில் ஜாதீய நாகரீகத்தில் நமது விருத்தி, திரவிய விருத்தியாகும் சௌகர்யங்களின்மேல் நிற்கிறது. இப்போது நாம் வர்த்தக முயற்சிகள் நாங்கும் உன்னத நிலையிலிருக்கிற காலத்தில் இருக்கிறோம். பூலோகத்திலுள்ள எல்லா இதரவிடா வர்த்தக முயற்சியுள்ள ஜாதியார்களும் நமது தேசத்தை அவர்களுடைய சரக்கு விற்கும் கடைத்தெருவாக்கப் பார்க்கிறார்கள். நம்முடைய பலமான போராட்டங்கள் வர்த்தகத்திலேயும் தொழிலி

லேயும் நடக்கவேண்டியதாக யிருக்கிறது. அநேகம் ஆயிரம் வருஷங்களாக பயங்கரமான துன்பங்களிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் போராட்டங்களினின்றும் தப்பிப்பிழைத்துவந்த இந்தியாவானது இந்த கடைசியான துன்பத்திற்கு பின்னிடைய வேண்டியதாகவரும். இதரதேச வர்த்தகச் சந்தைகளில் வியாபார விஷயத்தில் வர்த்தக முதன்மையை அடையாவிட்டாலும் நமது தேசத்திலேயாவது சந்தைகளில் வியாபார முதன்மையை அடைந்தாலொழிய நமது தேசம் முன்னுக்கு வரவே வராது.

ஓர் முக்கிய விஷயம்.

இவ்வளவு நன்மையைப் பயக்கக்கூடியது என்று நம்பிக்கையையுண்டாக்காத அற்ப செய்கையிலிருந்தும் கவனிக்கப்படாத தற்செயலான செய்கையிலிருந்தும் மகத்தான நன்மைகளும் ஆச்சரிய அற்புதச்செய்கைகளும் உண்டாவதற்கு கண்ணாடியைக் கண்டு பிடித்த செய்கையே சாக்ஷியமாகும். தற்செயலாக சூடேறியதால் மணலும் சாம்பலும் உருகி உலோகரூபமடைந்து அசுத்தங்கள் மேலே படர்ந்தது பாயப்பார்த்தபோது யார் அந்த உருவில்லாத மொத்தத்தில் உலகத்தார்க்கு சந்துஷ்டியைக் கொடுக்கவல்ல அநேகம் சௌகர்யங்கள் மறைந்து கிடந்தனவென்று நம்பினார்கள்? யார் எதிர் பார்த்தார்கள்? அப்படியிருந்தும் அத்தற்செயலான உருகிய பதார்த்தத்திலிருந்து தான் மனிதனுக்கு அதிக உயர்வான கெட்டியான பிரதி பிம்பத்தைத் தரத்தக்க வஸ்து உண்டாகியது. அந்த வஸ்து சூரிய உஷ்ணத்தை நீக்கி ஒளியை மாத்திரம் உட்செலுத்த தக்கதாயிருக்கிறது. நவநவமான பொருள்களையும் உலகங்களையும் காண்பதற்கு தத்துவ சாஸ்திரியின் திருஷ்டியை அதிகப்படுத்துகிறது. ஒரு சமயத்தில் சிருஷ்டிப் பொருள்களின் எல்லையின்மையைக்காட்டி அவரை பிரமிக்கச் செய்கிறது. மற்றொரு சமயத்தில் ஜீவராசிகளின் முடிவில்லா நுட்பமான பேதாபேத வகையராக்களைக் கண்டுபிடிக்க சக்தியை அவருக்கு உண்டாக்குகிறது. இன்னும் அதிக முக்கியமாய் என்ன செய்யக்கூடியதென்றால் இயற்கை அழிவை உண்டாக்காமலும் விருத்தாப்பிய வயதிற்கு உதவிப் பிரகாசத்தை கொடுக்கக்கூடியதாயுமிருக்கிறது. முதல் முதல் கண்ணாடி உருகிப் பாயப்பார்த்தவன் புத்திக்கு இந்த சௌகர்யமான நன்மைகளெல்லாம் எட்டவில்லை. அவைகளை அவன் எதிர்பாக்கவுமில்லை. ஒளியின் அனுபவங்களை அவன் சுலப சாத்தியமாக்கினான். நீடித்திருக்கும்படிச் செய்தான். சாஸ்திர ஆராய்ச்சியின் வழிகளை அதிகப்படுத்தினான். அதிக மேன்மையாகவும் நீடித்திருக்கக் கூடியவுமான சந்தோஷங்களை உண்டாக்கினான். சாஸ்திர ஆராய்ச்சியுள்ள மாணாக்கனை உலகங்களைப்பற்றிய நவ நவமான இயற்கையை யோசித்துக் கண்டுபிடிக்க சக்தியுள்ளவனாக்கினான், உலகின் அந்தப்பாட்டை கவனிக்கும்படிச் செய்தான்.

கண்ணாடித்தொழில் முற்றிற்று.

* * *

வங்காளத்தில் பலவித புற்கள் இருக்கின்றன. அவைகள் அதிக விஸ்தாரமாயும் செழுமையாயும் வளர்கின்றன. அவைகளிலிருந்து எலுமிச்சம்பழ சத்தையும் பெப்பர்மிட்டின் சத்தையும் உண்டாக்கலாம். அதற்கு வேண்டிய செலவு சொற்

பந்தான். அந்த சத்துக்கு எலுமிச்சை வாசனையும் பெப்பர்மிட் வாசனையும் பலமாயிருக்கிறது. அந்த புற்களை வெட்டினாலும் உலர்த்தினாலும் அந்த வாசனை நீங்குகிறதில்லை.

பாதி ஜலம் நிரம்பிய மண் பானையில் அந்த புல்லைப்போடு. ஓர் மூடியால் வாயை மூடிவிடு. மாவின் பசையால் அவகாசமில்லாமல் கட்டி மூடிவிடு. இந்த மூடியின் மத்தியில் ஓர் துவாரமிருக்கிறது. புகையிலையின் புகையைப் பிடிக்கும் குழாய் தலைகீழாய் திருப்பியதைப்போல் ஓர் குழாய் அதில் செருகப்பட்டிருக்கிறது. அந்த வாயைக்கூட அந்த பசையாலேயே சந்தில்லாமல் மூடப்பட்டிருக்கிறது. இவை யெல்லாம் அடுப்பின்மேல் வைக்கப்படவேண்டும். அந்த குழாயின் முனையில் கழுத்து நீண்ட கண்ணாடி புட்டி செருகப்பட்டிருக்கிறது. அந்த புட்டி குளிர்ந்த நீர் தொட்டியில் அமிழ்ந்து இருக்கிறது. சூடான நீர் ஆவி (அத்துடன் அத்தர் அல்லது புல்லின் சத்து) மேலே எழுந்து புட்டியில் இறங்கி குளிர்ந்து நீராகிவிடுகிறது. கடைசியில் புட்டியில் தண்ணீரின்மேல் அதிக வாசனையான த்ருத பதார்த்தம் தனியாக மிதக்கப் பார்ப்பாய். இவைகளை நுந்து காகிதத் துண்டினால் ஒத்தி பிரித்தெடுக்கவேண்டும். இதுதான் எலுமிச்சை சத்து. இதுதான் பெப்பர்மிண்டு. இதைத்தான் கடைத்தெருவில எலுமிச்சை சத்தென்றும் பெப்பர்மின் டென்றும் விற்கிறார்கள். இந்த அத்தரை ஈதரிலேயாவது ஆல்கோஹாலிலேயாவது கலந்தால் சந்து தயாராகிறது.

தேங்கா எண்ணெயிலிருந்து வெண்ணெயுண்டாக்கல்.

ஸ்டீரைன் வஸ்துவை உண்டாக்கும்போது, எண்ணெயை க்ளிஸரைன் ஆகவும் கொழுப்பு ஆஸிட்களாகவும் பிரிப்பது இரண்டுவிதத்தில் ஆகிறது. பூர்விகமானவிதம் கந்தக த்ராவகத்தை உபயோகிப்பதனாலவது, ஒரே பக்கத்தில் வாயுள்ள பாத்திரத்தில் மூடப்பட்டு கொதிக்க வைப்பதினாலாவது பிரிவினை சீக்கிரமாக ஆகிறது. பூர்த்தியானபோது இரண்டு திரவகங்கள் அடியில் தங்குகின்றன. அவைகளின் சலத்தில் போடும் எடை வித்தியாசப்பட்டிருப்பதால் இரண்டு த்ருத பதார்த்தமும் இரண்டு அடுக்காக இருக்கிறது. கீழ் அடுக்கிலுள்ளது கந்தக த்ராவகமும் க்ளிஸரைனும் மேல் அடுக்கு கொழுப்பு ஆஸிட்கள்.

புதிய பிரிவினை விதம் சித்தாமணக்கு விதைகளிலிருந்து செய்யப்படும் கொதித்தலை உண்டுபண்ணும் வஸ்துவின் செயலினால் ஆகிறது. இந்த வஸ்து கொதிநீரின் சூட்டளவில் வேலை செய்ய பிடிக்கப்படுகிறது. ஆஸிட் விதத்தைக் காட்டிலும் இது வேலை செய்ய சுலபமானது குறைந்த அபாயத்தையுடையது. நீர்கலந்த இரண்டு தான் க்ளிஸரைன் தாளித்த தண்ணீரை சேர்ப்பதாலும் த்ராவகத்தை 23 டி. வி. நெருக்கத்திற்கு ஆவியாய்ப்போக காய்ச்சுவதாலும் அது பிரிக்கப்படுகிறது.

இந்த இரண்டு விதங்களில் எதினால் உண்டானாலும் அந்த வெள்ளைக் கொழுப்பானது சாதாரண உஷ்ண அளவுகளில் கட்டியாக இருக்கிறது. இன்னும் காய்ச்சி ஆவியைக் குளிரச் செய்வதால் சுத்-

தப்படுத்தப் படுகிறது. வளைந்த செப்புக் குழாய் பாத்திரம் உபயோகப்படுத்தப் படுகிறது. ஆவி குளிர்ச்சியால் நீராக்கப் படுகிறது. அந்த த்ருவ பதார்த்தம் தட்டையான சட்டிகளில் அல்லது தாம்பாளங்களில் தட்டுகளில் கைப்பாக வெண்ணெய் செய்யும் மாதிரியில் வார்க்கப்படுகிறது. கொழுப்பின் புண்ணாக்கை குளிரச் செய்தபிறகு குதிரை மயிர் பையில்போட்டு பளுவின்கீழ் அழுத்தப்படுகிறது. புண்ணாக்கு மஞ்சள் நிறம் நீங்கி வெண்மையாகிறது.

இன்னும் சுத்தமான வஸ்துவை அடையவேண்டுமானால் முன்செய்த செயல் இன்னும் அதிக உஷ்ணத்தில் அடிக்கடி செய்யப்படுகிறது. மெழுகு வர்த்தி செய்ய தேங்காய் எண்ணெயோடு கொழுப்பை சேர்க்கிறார்கள். அல்லது பாம் எண்ணெயோடு கொழுப்பைச் சேர்க்கிறார்கள். அல்லது சுத்தப்படுத்துவதற்கு முன்னாவது சுத்தப்படுத்தின பின்னாவது இரண்டும் சேர்க்கப்படலாம்.

கைப்பான வெண்ணெய் ஸ்டீரைன் இவைகளில் எது செய்யப்படவேண்டுமென்றால் எதற்கு கடைத்தெருவில் அதிக கிராக்கியும் அதிக விலையும் இருக்கிறதோ அதை செய்யவேண்டுமென்று சொல்லாமலே விதிதமாகும்.

சாமான்கள் உண்டாகிற தேசங்களில் லாபகரமாய் ஓர் தொழிற்சாலையை நடத்தவேண்டுமானால் சாமான்கள் பின் விவரிக்கப்படும் மார்க்கத்தில் உபயோகிக்கப்படவேண்டும். மட்டைகள் தேங்காய் நாராக விற்கப்படுகிறது. முதலில் உண்டாகும் எண்ணெய் கைப்பான வெண்ணெய் செய்வதற்கு உபயோகப்படுத்தப் படுகிறது.

சுத்தப்படுத்துவதில் உண்டாகும் கழிவு சாமான் சோப்பு செய்வதற்கு உபயோகம். புண்ணாக்கு மாட்டுக்கு ஆகாரமாக விற்கவேண்டும். இரண்டாமுறை உண்டாகும் எண்ணெய் ஸ்டீரைன்செய்வதற்கு உபயோகம் கழிவு த்ருவ பதார்த்தம் க்ளிஸரைன் பதார்த்தத்தை கொடுக்கிறது. சோப்புக்காக அழுத்தப்படும்போது உண்டான கழிவு சாமான் ஓலீன் ஆகிறது (Oleine) ஸ்டீரைன் மெழுகு வர்த்தி ஆகிறது.

இந்த தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்கள் தேங்காய் உடைக்க கத்திகள் கொப்பரையை காயவைக்க சல்லடை காற்று அடுப்பு, துருத்தி, கொப்பரையிலிருந்து அசுத்தங்களை நீக்க ஆயுதம்கொப்பரையை துண்டித்து நசுக்க கத்திகளும் திரிகைகளும் முதல் நசுக்கு ஆனபிறகு புண்ணாக்கை ஆவியால் சூடேற்ற தொட்டிகளும் புண்ணாக்கை உடைக்கிற ஆயுதம் பிரிக்கிற ஆயுதம் நீர் அல்லது சூடுபோக்க யந்திரம் வடிகட்டும் யந்திரம் ஆவியோடு சூடேற்றும் யந்திரத்தோடு சுத்தமாக்கும் தொட்டி தட்டைத் தாம்பாளத்தோடு முக்கோண நாற்கோண உருவு உண்டாகும் தட்டுமுட்டு சுளியம் யந்திரம் உப்பு முதலியவை கலக்க தொட்டி வெண்ணெயை துண்டித்து கேக்குகளாக்க யந்திரம் க்ளிஸரைனை பிரிக்க ஒரே பக்க வாயையுடைய பாத்திரம் புளித்து நுரைக்கும்படி செய்வதினால் பிரிவினை செய்யும் பாத்திரம் கொதிக்கும் பாத்திரம் ஆவி யந்திரம் காற்றை சுருக்கும் யந்திரம் பனிக்கட்டியை சுருக்கும் யந்திரம் பம்புகள் குழாய்கள் இணைக்-

கும் சபான்கள் இவைகளெல்லாம் (a) (b) என்று குறிப்பிட்ட யந்திரங்களுக்கு உபயோகம்.

இந்த தொழிற் சாலைகளை நடத்துவதின் செலவுருபா 120000 முதல் 150000 ஆகிறது. இத்தொழிலுக்கு வேண்டிய யந்திரங்களை தயார்செய்து கொடுப்பதில் நிபுணத்வத்தையுடைய ஓ உலாக்கு யந்திர சாலைக்காரரிடத்திலிருந்து இந்த விவரங்கள் எல்லாம் தெரிந்தது. இந்திய நிலைமையை யோசித்து இந்திய மியூசியத்தில் குயூரேடர் உத்தியோகத்திலுள்ள டாக்டர் ஓ ஹூபர் எப். வி. எல். என்பவர்கள் திருத்தப்பாடு செய்த பிரகாரம் இங்கு விவரிக்கப்பட்டது. ஆகையால் இவ்விவரங்களில் சந்தேகத்திற்கு இடமிராது. இத்தொழிலை ஜயமாய் செய்து முடிக்கலாம்.

மெழுக்கு வர்த்தி செய்வதில் முக்கியமான பாகம் ஸ்டீயரைன் உண்டாக்குவதுதான் அதாவது எண்ணெய்களிலிருந்தும் கொழுப்புகளிலிருந்தும் ஸ்டீரிக் ஆஸிட் உண்டாக்குவதுதான். ஸ்டீரைன் உண்டு பண்ண தற்காலம் மூன்று விதத்தை உபயோகிக்கிறார்கள். 1. தாழ்ந்த வஸ்துக்களை சேர்ப்பதால் சோப்பாக்கல். 2. ஆஸிட் சேர்ப்பதால் சோப்பாக்கல் 3. இரண்டும் கலந்த விதம்.

(1) இந்தவிதத்தில் ஈயத்தகடு தைத்துள்ள தொட்டியில் கொழுப்பை தண்ணீரில் கலந்து திறந்துள்ள சுற்று வளையத்தின் மூலமாய் பால்போல ஓர் சேர்மானமாக ஓட்டத்திலுள்ள ஆவியின் உதவியால் கடையப்படுகிறது. அந்த சாக்கின் மொத்தம் நுரைத்துக்கொண்டிருக்கும்போது முன்னதாகவே தயாரித்த சுண்ணாம்பை பால்போல் தண்ணீரில் கலந்து மெதுவாய் வார்க்கப்படுகிறது. சோப்பு உண்டாதல் பூர்த்தியாகிற வரையில் கொதித்துக்கொண்டேயிருக்கவேண்டும். தண்ணீரிலிருந்து தயிர் மாதிரியாய் சுண்ணாம்பு சோப்பு பிரிகிறதினால் சோப்பு ஆய்விட்டதென்று நிரூபித்துக் கொள்ளுகிறார்கள். இந்த க்ளிஸரைன் நீரை (அல்லது "தித்திப்புத் தண்ணீர்") கொட்டிவிடுகிறார்கள். கெட்டியான சோப்புக்கட்டியை கழுவுகிறார்கள். அதைத் தூளாக்குகிறார்கள். கந்தக திராவகம் விட்டு பிரிக்கிறார்கள். அப்போது கால்ஸியம் கந்தக உப்பாக கீழே தங்குகிறது. அதே சமயத்தில் விடுவிக்கப்பட்ட கொழுப்பு ஆஸிட்கள் சுத்தமான எண்ணெயைப் போன்ற அடுக்காக மேலே மிதக்கின்றன. தித்திப்புத் தண்ணீரை க்ளிஸரைனை அடையும் பொருட்டு ரசாயன பிரிவினைத் தொழில் செய்கிறார்கள். சுத்தமான எண்ணெய்போன்ற அதிக ஸ்டீரிக் ஆஸிட் ஆக்ளிக் ஆஸிட்கள் இவைகளை அடக்கிக் கொண்டிருக்கின்றன. மெழுக்கு வர்த்திகள் செய்வதற்கு உபயோகமில்லாத ஆக்ளிக் ஆஸிட் பிரிந்து போவதற்காக சுத்தப்படுத்தப்பட்ட பிறகு கொழுப்பு ஆஸிட்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கிற தொட்டிகளில் வார்க்கப்படுகின்றன. அந்த ஸ்திதியில் முக்கோண சற்கோண முதலிய உருக்களுடைய கட்டிகளாக ஏற்படுவிக்கப்படுகிறது. கட்டியான வஸ்துவை தொட்டிகளிலிருந்து எடுத்து ஆகாயத்தின் சாதாரண உஷ்ண நிலையில் நீரைப் போக்கும் யந்திரங்களில் அழுத்தப்படுகிறது. அப்போது ஆக்ளிக் ஆஸிட் பிரிந்து போகிறது. அப்போது உண்டாகிற

உறுதியான கட்டிகளில்கூட இன்னும் அதிக ஆக்ளிக் ஆஸிட் சேர்ந்திருக்கிறது. அதின் காரணமாக இரண்டாம்முறை இன்னும் சூடானபிரசில் அழுத்துகிறார்கள். இந்த சமயத்தில் கட்டிகளை குதிரை மயிர் பைகளில் போட்டு அல்லது அதைப்போன்ற வஸ்துவில் போட்டு ஓடவிட்ட ஆவியால் சூடேற்றப்பட்ட இரண்டு அழுத்துவதற்குரிய தகடுகளுக்கு மத்தியில் வைக்கிறார்கள். கட்டிகள் போதுமான அளவு ஆக்ளிக் ஆஸிட் பிரிந்துபோகிறவரையில் அந்த சூட்டு பிரஸிலேயே அழுத்தப்பட்டு இருக்கின்றன. இப்போது கட்டிகள் வெண்மையாகவும் உருக்கி மெழுக்கு வர்த்திகளாக அச்சுகளில் வார்ப்பதற்கு தயாராகவும் ஆகிறது.

இச்செய்கைகள் பின்வரும் வஸ்துக்களை நூற்றுக்கு இவ்வளவு என்னும் கணக்கில் வெளிபடுகின்றன.

(Stearine) ஸ்டீரைன் நூற்றுக்கு 45 முதல் 47 வரையில்

(Oelic acid) ஆலிக் ஆஸிட் 47 முதல் 48 வரையில்

(Crude glycerine) சுத்தப்படாத க்ளிஸரைன் நூற்றுக்கு 10

(2) இந்த விதத்தில் கொழுப்பு 120 டிக்ரீவரையில் சூடேற்றப்படுகிறது. நூற்றுக்கு 4-முதல் 6-வரையில்சுண்டச்செய்த கந்தக த்ராவகத்தோடு மிஸ்ரமிக்கப்படுகிறது. கொழுப்பு த்ராவகத்தோடு கூடுமான சீக்கிரத்தில் நன்றாய் கலந்ததாவென்று ஸ்திரப்படுத்தும்பொருட்டு அநேக மிஸ்ரமப்படுத்தும் யந்திரங்களை உபயோகிக்கிறார்கள். கந்தக மிஸ்ரம மொத்தவஸ்துவை கொதிக்கிற நீரில் வார்க்கிறார்கள். ஓடுகிற ஆவியில் கலக்கப்படுகிறது. கந்தக மிஸ்ரம சேர்மான வஸ்து நீர்ப்பசை கழிகிறவரையில் இதே நிலைமையில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மொத்த வஸ்துவை அப்படியே இருக்கச்செய்வதில் இரண்டு அடுக்காக பிரிகிறது. பிரயோகப்படுத்தப்பட்ட கந்தக த்ராவகத்தையும் க்ளிஸரைனையும் உள்ளாக்கிக் கொண்டிருக்கும் கீழேதங்கும் நீர் அடுக்கு ஒன்று. மற்றொன்று மேலேமிதக்கும் கொழுப்பு வஸ்து. மேல் அடுக்கு அதிக கருப்பாய் இருக்கிறபடியால் ஆலிக் ஆஸிட் பிரிவதற்காக அழுத்தப்படுவதற்கு முன்னமே ஆவியாக்கப்பட்டு மறுபடியும் குளிரச்செய்வதால் த்ருவபதார்த்த மாக்கப்படவேண்டும். இந்தவிதம் முதல் விவரித்த விதத்தைக் காட்டிலும் அதிகமாய் கெட்டியான வஸ்துவைத் தருகிறது. ஏனெனில் இந்த விதத்தில் நூற்றுக்கு 15-முதல் 17-வரையில் ஆலிக் ஆஸிட் கெட்டியான மெழுகு வர்த்தி வஸ்துவாய் விடுகிறது. இந்த விதத்தில் நூற்றுக்கு இவ்வளவென்று பின்வரும் சாமான்கள் உண்டாகின்றன.

	100-க்கு	முதல்.	வரை.
மெழுகுவர்த்திவஸ்து	,,	61	63
ஓலிக் ஆஸிட்	,,	30	32
சுத்தப்படாத க்ளிஸரைன்		8	9
தார்கழிவு	,,	2	3

(3) இந்தவிதத்தில் கொழுப்பை Bases தாழ்ந்த வஸ்துக்களைக்கொண்டு ஒரேபக்கம் வாயுள்ள பாத்திரத்தில் கரைத்து இரண்டாவது முறையில் விவரித்துள்ள பிரகாரம் கந்தக த்ராவகம்விட்டு வஸ்துக்களை உண்டாக்குகிறார்கள். இந்த முறையிலிருந்து உண்டாகும் வஸ்துக்கள்.

		100-க்கு முதல்.	வரை.
மெழுகுவர்த்திவஸ்து	,,	61	63
ஒலிக் ஆஸிட்	,,	30	32
சுத்தப்படாத க்ளிஸரைன்	...		10
தார் கழிவு	,,	2	3

விவரிக்கப்பட்ட மூன்று விதத்திலேயும் மூன்றாவது விவரித்த முறைதான் மேலானது. ஏனென்றால் இந்த முறைதான் எவ்வளவு அடையக்கூடுமோ அவ்வளவு மெழுக்குவர்த்தி வஸ்துவைக் கொடுக்கிறது. க்ளிஸரைன் உற்பத்தியில் குறைவுகிடையாது.

இந்த மூன்று முறைகளிலேயும் உண்டாகும் முக்கியமான (stearine) வஸ்துவைத்தான் மெழுகுவர்த்தி உண்டாக்குவதில் உபயோகப்படுகிறது. ஒலிக் ஆஸிட் வஸ்திரத்திற்கு போடும், சோப்பு உண்டாக்க உபயோகமாகிறது. அல்லது மாசெண்ணெயாக உபயோகிக்கிறார்கள். சுத்தமாகாத க்ளிஸரைனை சுத்தப்படுத்தி மருந்துக்கு உபயோகமாகிறது. வெடிமருந்து உண்டாக்குவதில் உபயோகிக்கிறார்கள். பாத்திரத்தில் கீழே அடியிலிருக்கும் தார் மெழுவாயிருந்தால் பாரமான எழுதுகட்டு மிஷின்களுக்கு போடும் மசகு எண்ணெயாக உபயோகப்படுத்துகிறார்கள். கடினமாயிருந்தால் கப்பல் தக்கர்களுக்கு தடவுதற்கும் எலக்ட்ரிக் ஆயுதங்களுக்கும் பாத்திரங்களுக்கும் (Cables) கேபில்களுக்கும் விடுதியாக யிருக்க உபயோகமாகிறது. தண்ணீர் படாமலிருக்க கூரைகளுக்கும் காகிதத்திற்கும் கருப்பு வார்னிஷ் செய்வதற்கும் துருப்பிடிக்காமலிருக்க மேல் பூச்சுக்கும் உபயோகமாகிறது.

மெழுக்கு வர்த்தி செய்வதில் சாதாரணமாய் உபயோகமாகும் சுத்தப்படாதவஸ்துகள் கொழுப்பும் (Tallow) Palm Oil) பாம் எண்ணெய் இன்னும் கந்தமூல கொழுப்பு (Shea Butter) ஷியா வெண்ணெய் (Mowrah Oil) மௌரா எண்ணெய் முதலிய (Vegetable fats) கந்தமூல கொழுப்புகளாம். வேறுவிதமான கந்தமூல விதை வெண்ணெய்களும் உபயோகிக்ககூடும்.

(Stearine) ஸ்டீரைன் இல்லாமலும் (Paraffin wax) பாரபின் மெழுக்கும் மெழுக்கு வர்த்தி செய்வதில் அதிகமாய் உபயோகிக்கிறார்கள். (Paraffin) பாரபின் மூன்று விதத்தில் உண்டாகிறது. 1. பெட்ரோலியம் 2. ஷேல் 3, இக்னேட் இவைகளிலிருந்து உண்டாகிறது. சுத்தப்படாத பெட்ரோலியத்தை காய்ச்சி ஆவியாக்கி ஆவியை ஜலபதார்த்தமாக்குவதில் அடியில் நின்ற வஸ்துவிலிருந்து உண்டாகிறது. இந்த கெட்டை வெளுக்கச் செய்து மறுபடியும் காய்ச்சி ஆவியாக்கி ஜலபதார்த்தமாக்குவதாலும் வேண்டியவரையில் சுத்தப்படுத்துவதாலும் (Paraffin Wax) பாரபின் மெழுக்கு உண்டாகிறது.

மெழுகு வர்த்தி தொழிலில் பாரபின் மெழுகை ஸ்டீரைனோடு கலக்கிறார்கள். எந்த விதமான மெழுக்கு வர்த்தி வேண்டுமோ அதற்கு தகுந்த மாதிரியாக ஸ்டீரைனுக்கும் பாரபின் மெழுகுக்கும் உள்ள சேர்மான முறை. நூற்றுக்கு 5 முதல் 75 வரையில் வித்தியாசப்பட்டிருக்கிறது.

மெழுகுவர்த்தி செய்வதில் முக்கியமான அம்சம் வர்த்திசெய்வதும். 1825 வருஷத்தில் பிரான்ஸில் காம்பிரஸ் துளை பின்னவிட்ட வர்த்தியை உண்டாக்கும் விதத்தை ஆசாரத்திற்குகொண்டுவந்தார்.

1830 வருஷத்தில் இங்கிலாந்தில் இதை ஆசாரத்திற்கு கொண்டு வந்தார்கள். நல்ல குணத்தை யுடைய பருத்தி ஜாக்கிரதையாகவும் அநேகமாதிரியாகவும் நூர்க்கப்பட்ட நூலினால் செய்யப்படுகிறது. நூல்களை மூங்கில் குழைமேல் சுற்றி யந்திரத்தில் முறுக்கிறார்கள். ராட்டினத்தில் முறுக்குகிறார்கள். பின்னவிட்ட வர்த்தி சாரக உப்புகளின் சேர்மான ஜலத்தில் 24 மணிநேர தோய்க்கப்பட்ட பிறகு உலர்த்தப்படுகிறது. இப்படி செய்வதினால் எரியும்போது வர்த்தி வளைகிறது. அதினால் சாம்பல் கண்ணாடியாகாதிருக்கிறது. அதிக சீக்கிரமாய்எரிந்துபோவதைக்கூட நிறுத்துகிறது. மெழுக்கு வர்த்தி செய்கிற யந்திரம் அநேகம் நிற்கவைத்திருக்கும் குழாய்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த குழைகளின் முனைகள் தட்டையான தொட்டியின் அடிப்பாகத்தில் சேர்ந்திருக்கிறது. ஒவ்வொரு குழையும் ஒரு போலான பிஸ்டனை உடைத்தாயிருக்கிறது. அந்த பிஸ்டனுடைய சிகரம் மெழுக்குவர்த்தியின் முனையை உருவாக்குகிறது. அந்த போலான பிஸ்டன் குழைகளின் உள்ளே போக்குவருத்தாயிருக்கிறது. போக்கு வருத்தாயுள்ள பிஸ்டன் மூலமாய் ஓர் குழையில் சுற்றியிருக்கிற வர்த்தியை நுழைத்து வைக்கிறார்கள். அந்த வர்த்தி சுற்றிய குழைகள் கொக்கிகளில் மாட்டி வைத்திருக்கின்றன. அந்த கொக்கிகள் ஓர் பலகையின் கீழே இருக்கிறது. அந்த பலகையில்தான் பிஸ்டனுடைய கீழ் ஓட்டு பாகம். அந்த பலகை இரண்டு முனைகளின் பக்கமாயும் உயர்த்தவும் தாழ்த்தவும் கூடியதாயிருக்கிறது. உயர்த்தவும் தாழ்த்தவும் மறை வைத்திருக்கிறது. ஒரு யந்திரத்தில் 24 முதல் 580 குழைகள் இருக்கின்றன. இந்த குழைகளைச் சுற்றிலும் தொட்டியிருக்கிறது. அந்த தொட்டி ஆவி குழைகள் நீர்க் குழைகளோடு சேர்ந்திருக்கிறது. இந்த ஆவி நீர்க்குழைகள் வர்த்தி வார்க்கும் குழைகளை சூடாக்கவும் குளிரச்செய்யவும் உதவுகின்றன.

பாரபினும் ஸ்டீரைனும் தகுந்த அளவில் ஆவியினால் ஆவி அங்கி போர்வை போட்ட பாத்திரத்தில் உருக்கப்படுகின்றன. ஈயம் பூசிய இரும்பு பாத்திரத்தினால் குழைகளில் வார்க்கிறார்கள். அந்த உருக்கிய வஸ்துவை வார்ப்பதற்கு முன்னமே வர்த்தி ஊசியில் போலான பிஸ்டன் மூலமாய் வர்த்தியை இழுத்துக்கொள்ளுகிறார்கள். தகுந்த மாதிரியில குழைகளுக்கு மேல் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. வார்க்கப்பட்ட வஸ்து கெட்டியாகிறவரையில் நீரைச் சுற்றிவர விடுகிறார்கள். மேல் பாகம் ஓர் எழுது துண்டிக்கும் ஆயுதத்தால் பிரித்தெடுக்கப்படுகிறது. மெழுக்கு வர்த்திகள் முனையில் சேர்ந்திருக்கிற ஓர் கைப்பிடியினால் தூக்கப்பட்ட மெழுக்கு வர்த்திகள் குழைகளுக்குமேல் வைக்கப்பட்டிருக்கிற சட்டங்களின் துவாரங்கள் மூலமாய் செலுத்தப்படுகின்றன. அந்த யிடத்தில் அவைகள் ஓர் இரும்பினால் கெட்டியாய் பிடிக்கப்படுகின்றன. கைப்பிடியை மாற்றுவதால் பிஸ்டன் கீழே கொண்டுவரப்படுகிறது. அப்போது யந்திரம் வேறு சரக்கை ஏற்றுக்கொள்ள தயாராகயிருக்கிறது. இந்த சரக்கு கெட்டியானதும் ஆகாததுமா யிருக்கும்போதே மேல் சட்டங்களில் இருக்கிற மெழுக்கு வர்த்திகள் வர்த்தியை துண்டிக்கும் கத்தியால் துண்டிக்கப்படுகின்றன. அதன் பிறகு வர்த்திகள் வெளியூருக்கு அனுப்ப கட்டும அறைக்கு எடுத்துக்கொண்டு போகப்படுகிறது.

சென்ற 25 வருடங்களாய் இந்தியாவில் இறக்குமதியாகிற வெளிதேசத்து மெழுக்கு வர்த்திகளின் விலை ஒரு வருஷத்திற்கு 8 முதல் 12 லக்ஷ ரூபாவரையில் வித்தியாசப்பட்டிருக்கும். இறக்குமதியாகி வர்த்திகள் முக்கியமாய் ஐக்கிய ராஜாங்கமும், பெல்ஜியமும், மதராஸில்தான் அதிக மெழுக்கு வர்த்தி செலவாகிறது. இரண்டாவது பம்பாய், மூன்றாவது வங்காளம், கடைசியாய் பர்மா, 1900 வருடத்தில் பாரபின் மெழுக்கினால் செய்த மெழுக்கு

வர்த்திகளை பர்மா ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தது. இந்த ஏற்றுமதி சரக்கின் விலை வருஷத்திற்கு வருஷம் அதிகமாகிக் கொண்டே யிருக்கிறது. 1901 வருடத்தில் விலை 15157 ரூபா 1905-6 வருடத்தில் 1653640 ரூபா மதராசும் இதர ராஜதானிகளும் பர்மாவிலிருந்து பாரபின் மெழுக்கினால் செய்யப்பட்ட (மெழுகுவர்த்திகள்) இறக்குமதி செய்கின்றன. இந்தியாவில் ஒவ்வொரு வருஷமும் மெழுகு வர்த்திக்கு கிராக்கி அதிகமாகிக்கொண்டிருந்தும் இந்தியாவானது மெழுகு வர்த்திகள் செய்யும் கிடங்குகளை ஸ்தாபித்து வேலை செய்வதில் இதர தேசங்களுக்கு பின் வாங்குகிறது.

முன்னே ஓயலிக் ஆஸிட் வஸ்திரத்துக்கு போடும் சோப்புக்கும் மெதுவு சோப்புக்கும் உபயோகப்படுத்தப் படுகிறது என்று விவரிக்கப்பட்டது. ஆகையினால் தான் மெழுகு வர்த்தி தொழிலும் சோப்புத் தொழிலும் சம்பந்தப்பட்ட தொழில்கள் என்னப்படுகின்றன. ஸ்டீரின் உற்பத்தியின் இரண்டு பிரிவினைகள்.

பின்வருவன ஒரு நாளைக்கு 2 டன் ஸ்டீரினை உண்டாக்கி அதைக்கொண்டே வர்த்திகள் செய்ய மதிப்பிட்ட தொகை :—

யந்திரம் வாங்கும் முதல்செலவு.	ரூபா.
ஸ்டீரின் உற்பத்தியாக்க யந்திரம்	150000
வர்த்திகள் உற்பத்தியாக்க யந்திரம்	40000
கட்டடம்	... 30000
மொத்தம்	... 2,20,000

ஒருநாள் உற்பத்திக்குச் செலவு.	ரூபா.
1 டன் 400 ரூபா வீதம் 2½ டன் வேர்க்கடலைக் காய் எண்ணெய்	1000
வேண்டிய கொழுப்பும் இதர எண்ணெய்களும்	450
வர்த்திக்கு வேண்டும் மெழுக்கு	1000
வர்த்தி செய்வதற்கு வேண்டிய இதர சரக்குகள்	400
ரசாயனங்கள்	25
விறகு	35
சம்பளமும் கூலியும்	100
முதல் பணத்திற்கு 100 க்கு 12 வீதம் வட்டி	100
இதர செலவுகள்	40
மொத்தம்	... 3150

ஒரு நாளைக்கு உற்பத்தியான சரக்கின் விற்பனை வசூல் பணம்.	ரூபா.
செலவுபோக ஒரு பெட்டியின் விலை 7 ரூபா வீதம் 380 வர்த்தி பெட்டிகளுக்கு ...	... 2660
1 டன் ஒயலிக் ஆஸிட் ...	... 330
1—3 டன் க்ளிஸரின் ...	... 250
மொத்தம்	... 3240

ஒரு நாளைக்கு லாபம்	90
300 வேலை செய்யும் நாட்களுள்ள ஒரு வருஷத்திய லாபம்	...18000

***

பல குறிப்பு.

மிஸ்டர் மாண்டேகு இந்தியாவிற்கு வருதல்.

இங்கிலாந்து பார்லிமெண்டு சபையில் லிபரல் கட்சி யென்றும், கன்ஸர்வேடிவ் கட்சியென்றும், இரண்டு கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னர் லிபரல் கட்சியைச் சேர்ந்த லார்டு மார்லே யென்பவர் இந்திய செக்ரிடெரியாக விருந்தபோது அவருக்கு உதவி செக்ரிடெரியாக விருந்த மிஸ்டர் மாண்டேகு என்பவர் இப்பொழுது இந்திய செக்ரிடெரியாக இருக்கிறார். இவர் அடுத்த டிசம்பர் மாசம் காங்கிரஸ் மகா சபை கூடும் சமயத்தில் இந்தியாவிற்கு வருவதாக ஓர் வதந்தி உலாவி வருகிறது. அவர் இந்தியா முற்றும் சுற்றுப்பிரயாணஞ் செய்து இந்தியர்களுடைய தற்கால நிலைமையை நேரில்கண்டு கொண்டு போய் பார்லிமெண்டு சபையாருக்கும் நமது காருண்யமுள்ள ஐந்தாவது ஜார்ஜ் சக்கிரவர்த்தியாருக்குந்

தெரிவித்து நமக்கு பல நன்மைகள் செய்யும்படியாய் உத்தேசித்திருப்பதாகவுந் தெரியவருகிறது. இவரையும் தற்காலத்தில் நம்மிந்தியாவிற்கு இராஜப்பிரதிநிதியாயிருக்கும் லார்டு செம்ஸ் போர்டையும் காங்கிரஸ் மகாசபைக்கு வரவழைத்து வந்தனோபசாரங்கள் செய்து நமது குறைகளை நேரில் சொல்லவேண்டுமென்கிற ஏற்பாடுகள் நடந்துவருகிறது. சென்னையில் கார்பரேஷன் சபையாரும் அவருக்கு வரவேற்பு உபசாரஞ் செய்வதற்காக செய்யவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து ஆலோசித்து வருகிறார்கள். இதுதான் தக்க சமயம் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்கிற பழமொழிப் பிரகாரம் அவர் இச்சென்னைக்கு வரும்போது நாமும் நமது குறைகளை அவருக்கு மிகவுந் தெளிவாகத் தெரிவித்து அவைகளை பரிகரிக்கும் உபாயங்களை சீக்கிரத்தில் செய்யும்படியாக கேட்க வேண்டும். இத்தேசத்து சிறுவர் சிறுமிகளுக்கு ஆரம்பக்கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் கற்பிப்பதற்கேதுவான தர்ம பாடசாலைகள் எல்லா பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் ஏற்படுத்தும்படியாய் கேட்கவேண்டும். நாம் நமக்கு அத்தியாவசியமாய் வேண்டிய சாமான்களுக்கு அன்னிய தேசங்களை எதிர்பாராமல் இத்தேசத்திலேயே செய்துக் கொள்வதற்காக தொழிற்சாலைகள் பல இடங்களில் ஏற்படுத்தும்படியாய் கேட்கவேண்டும். வர்த்தகம் விருத்தியாவதற்கான ஏற்பாடுகள் செய்யும்படியாயும் கேட்கவேண்டும். நம்மிந்திய சகோதரர்களிடத்தில் ஒற்றுமையும் சகோதர வாஞ்சையும் நம்பிக்கையும் சொல்லளவாக இருக்கிறதே யொழிய உண்மையில் இல்லை. அப்படி உண்மையா யிருக்கும் பட்சத்தில் ராஜாங்கத்தாருடைய உதவியை எதிர்பாராமல் நாமே அநேக முக்கியமான காரியங்களை செய்துக்கொள்ளலாம். நம்மிடத்தில் ஒற்றுமை யெப்படியிருக்கிற தென்றால் நெல்லிக்காய்களை ஒரு மூட்டையாக கட்டி வைத்திருக்கிறதுபோ லிருக்கிறது. இந்த மூட்டையை அவிழ்த்து விட்டால் அதிலிருக்கும் நெல்லிக்காய்கள் நாலாபக்கத்திலும் சிதறிப்போவதுபோல்ஒரு கூட்டமாய் சேர்ந்திருக்கிற நம்மவர்களுக்குள் ஏதாவதொரு விஷயத்தில் அபிப்பிராய பேதமுண்டானால் எல்லாரும் ஒருவர்போகிறவழி மற்றவர்கள் போகாமல் வெவ்வேறு ஏற்பாடுகளை தனித்தனியாய் செய்யவேண்டுமென்று பிரிந்து விடுகிறார்கள். இவர்கள் இதற்கு முந்தி எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்தபோது செய்யவேண்டுமென்று தீர்மானித்திருந்த ஏற்பாடுகளெல்லாம் வீணாய்ப்போய் விடுகிறது. நம்மிந்திய தேசத்திலுள்ள எல்லா மதஸ்தரும் எல்லா ஜாதியாரும் ஒன்றுசேர்வது கஷ்டமாயிருந்தால் ஒவ்வொரு ஜாதியார்களாவது ஒன்றுசேர்ந்து தங்களுடைய குறைகளைத் தெரிவித்து தங்களுக்கு அனுகூலமான காரியங்களைச் செய்யும்படியாய் தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாய் மனு செய்துக்கொள்வது மெத்தவும் உத்தமம். அவ்வாறு செய்யாமல் தக்க சமயத்தில் சும்மாயிருந்துவிட்டால் நம்முடைய காரியம் சித்தியாகாது. (Ask it shall be given knock it shall be opened) கேட்டால் கொடுக்கப்படும் இடித்தால் திறக்கப்படும் என்னும் பைபில் வாக்கியப் பிரகாரமும் அழுங்குழந்தைக்குத்தான் பெற்ற தாயும் பால் கொடுப்பாள் என்னும் ஆன்றோர் வாக்கியபிரகாரமும் நாமும் நம்மிந்தியா மந்திரியாகிய மிஸ்டர் மான்டேகு இவ்விடத்திற்கு வரும்போதுநம்முடைய குறைகளைத் தெரிவித்தால்தான் அவைகளை பரிகரிக்கும்படியான ஏற்பாடுகளெல்லாம் நடக்கும்பொதுவாக சென்னைப்பட்டணத்தில் ஒரு கூட்டங்கூடி நம்மவர்களின் குறைகள் இன்னின்னவென்றும் அவைகளை இன்னின்ன மாதிரியாக நிவிர்த்திக்க வேண்டுமென்றும் தெரிவிப்பதற்காக ஒரு மகஜர் தயாரிப்பதற்கு முன்னர் ஒவ்வோர் ஜில்லாவிலும் தாலூக்காவிலும் பெரிய கிராமங்களிலும் கூட்டங்கள்கூடி அவர்களுடைய தீர்மானங்களை சென்னையிலுள்ள

சென்டிரல் கமிட்டியாருக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவித்த பின்னர் எல்லாருடைய அபிப்பிராயத்தையும் ஒன்று சேர்த்து நம்முடைய ஜனத்தலைவர்கள் அல்லது ஜாதித் தலைவர்கள் மூலமாக சென்னை சென்டிரல் கமிட்டியார் இந்தியசெக்ரிடெரியாகிய மிஸ்டர் மான்டேகுவிற்கு தெரிவிக்கும்படிக்கு தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். தற்காலத்தில் சென்னை சட்ட சபையில் கவர்னர் நீங்கலாக உள்ள 48 மெம்பர்களில் 27 பேர் ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டவர்களாகவும் மற்றைய பேர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுள் விஸ்வகர்ம வகுப்பினரின் பிரதிநிதி ஒருவருமில்லை. இதைக்குறித்து சென்ற மூன்று வருஷமாக நடந்துவரும் விஸ்வகர்ம கான்பரன்சுகளில் பேசி நமது காருண்யமுள்ள கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கும்படியாய்த் தீர்மானங்கள் செய்யப்பட்ட பிரகாரம் தெரிவித்திருக்கிறார்கள். தற்காலத்தில் பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் தொகை கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் மெம்பர்களின் தொகைக்கு குறைந்திருப்பதால் ஜனப்பிரதிநிதிகளின் தொகையை அதிகப்படுத்தவேண்டுமென்பது நமது தேசாபிமானிகளின் முக்கியமான கொள்கைகளில் ஒன்றாயிருக்கிறது. ஆகையால் சட்ட நிருபண சபை திருத்தியமைக்கப்படும்போது மகம்மதியர்களைப்போலவே நம் ஜாதியார்களின் பிரதிநிதிகளின் தொகையும் 8 பேர்களுக்கு அதிகப்படாமலிருக்க வேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. இவர்களில் வடஜில்லாக்களுக்கு மூவரும் தென் ஜில்லாக்களுக்கு மூவரும் மத்திய ஜில்லாக்களுக்கு இருவரும் தெரிந்தெடுக்கப்படுபவர்களாயிருக்க வேண்டும்.

1857 வது வருஷம் இந்தியாவில் பல இடங்களில் கலகங்கள் நடந்தன. அக்காலத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அக்கலகங்களை அடக்கினார்கள். பின்னர் இந்திய அரசாட்சியை மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் மேற்கொண்டபோது தமது இராஜ விளம்பரத்தில் இந்தியர்களின் ஜாதி சமயங்களில் தலையிடமாட்டோமென்று வாக்குறுதி செய்தார்கள். அதற்கு மாறாக சென்னை கவர்ன்மெண்டார் சில வருஷங்களுக்கு முன்னர் ஒரு காரணமுமின்றி ஜாதி விஷயத்தில் தலையிட்டு விஸ்வகர்ம ஜாதியார்களுக்கு பூர்வீகமாக வழங்கிவந்த "ஆச்சாரி" என்னும் பட்டப்பெயரை "ஆஸாரி" என்பதாக மாற்றிவிட்டார்கள். ஆச்சாரி என்னும் பட்டப்பெயரே தமக்குரியதென்று சுருதி பிரமாணங்களைக் காட்டி அதை மாற்றப்படாதென்று சென்னையிலும் மற்ற ஊர்களிலும் விஸ்வகர்ம சந்ததியார்கள் பல கூட்டங்கள்கூடிப்பேசி தீர்மானங்கள் செய்து மகஜர்கள் அனுப்பியிருந்தும் சென்னைக் கவர்ன்மெண்டார் இதுவரையில் கவனியாதிருக்கிறார்கள். பொன் சவரன்களையும் வெள்ளி ரூபாய்களையும் உருக்கி நகைகள் செய்யக்கூடாதென்று சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் கல்வி கைத்தொழில் சம்பந்தமாக அநேக சீர்திருத்தங்கள் அத்தியாவசியமாய் செய்யவேண்டியிருக்கிறபடியால் நம்மவர்கள் தங்களுக்குள்ள அபிப்பிராய பேதங்களையும் ஜாதி, மதவித்தியாசங்களையும் பொருட்படுத்தாமல் ஒற்றுமையுடன் ஒரே மனதாக பொது நோக்கமுடையவர்களாய் இந்த சமயம் அசட்டையாயிராமல் உடனே ஒரு பொதுக்கூட்டம் சேர்ந்து ஒரு மகஜர் தயார்செய்து நம்முடைய குறைகளையும் அவைகளை நிவர்த்திக்கும் உபாயங்களையும் இச்சென்னை ராஜதானியின் கவர்னர் அவர்கள் மூலமாய் இந்தியமந்திரியாகிய மிஸ்டர் மான்டேகுவுக்கு தெரிவிக்கும்படியான ஏற்பாடுகள் யாவும் சீக்கிரமாய் செய்யவேண்டும். இப்படிப்பட்ட சமயம் மறுபடி வாய்ப்பது வெகு கஷ்டம். ஆகையால் நம்மவர்கள் யாவரும் மிகவும் கவனிக்கும்படி வேண்டுகிறோம்.

***

தந்திபோதினி.

என்னும் இங்கிலீஷ் சுலபமாக கற்றுக்கொள்ளக்கூடிய புஸ்தகம் இருக்கிறது. அதில் இங்கிலீஷ் முதல் எழுத்து துடங்கி பெரியவார்த்தைகள் வரையில் எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலீஷுக்கு சரியான தமிழும் போடப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் எழுத்துகள் மட்டிலும் தெரிந்திருந்தாலும் அதைக்கொண்டு பெரியவார்த்தைகள் பரியந்தம் அடங்கியிருக்கிறது. சீக்கிரம் கற்றுக்கொள்ளக்கூடும் இதன் விலை ரூபா ஒன்று. வாங்கி வாசிக்கவேண்டியது நம்மவர்களின் முக்கிய கடமையாகும்.

விலை ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—"தொழில் ஆபீஸ்"

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இனிய தமிழ் நாவல்கள்.

மீனாட்சி [அல்லது] மலாய் நாட்டு மங்கை	2	4	0	பிரஹ்லாதன்	0	8	0
தனபாலன் I - II பாகங்கள்	1	8	0	தசகுமாரன் சரித்திரம்	0	4	0
சிங்கார சந்திரவதனி	1	4	0	அநியாயபுரம் அகட விகட கோர்ட்டு விசாரணை	0	8	0
குசேலர்	1	0	0	சந்திரசேகரன் சரித்திரம்	0	6	0
மதனகாந்தி	1	0	0	கற்பகவல்லி	1	0	0
கண்ணகி	0	14	0	சுந்தராங்கி	0	14	0
மனோன்மணி	0	12	0	ஸ்வர்ண காந்தி	0	12	0
செல்வராஜன்	0	12	0	ரோஜாலி	0	12	0
ஜயகாந்தன்	0	10	0	வனரோஜா	0	12	0
மெய்யறிவு	0	8	0	லலிதாங்கி	0	8	0
பாஞ்சாலி சபதம்	0	8	0	மெய்யறம்	0	8	0
மாணிக்கவல்லி	0	8	0	அகமேபுறம்	0	8	0
பத்மினி	0	3	0	இன்பவல்லி	0	3	0
நான்கு மந்திரி	0	2	0	நவநீதம்	0	3	0
சூக்ஷ்மதரிசினி	0	4	0	மருணாலினி	0	2	0
குணபூஷணி	1	0	0	மத்மநிதி	0	10	0
சுசீலா	1	0	0	சத்தியசீலன்	0	10	0
				கமலரேகை	0	12	0
ஜெயசேகர சத்தியவதனி சரித்திரம்	0	12	0	தனபதி	0	2	0

இன்னும் அநேக நாவல்களும் விலைக்குக் கிடைக்கும்.

மானேஜர்,

கற்பகம் ஆபீஸ், புதுவை.

பாலாஜி அண்டு கம்பெனி

காசி.

சகாயமாகவும் நவீன மாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபலப்பட்டு வர்த்தகர்களாகிய பாலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்களின் பட்டாடைகளின் உயர்வுக்கும், அதன் நேர்த்திக்கும், பகிரங்க பொருள் காட்சிகளில் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசுகள் தயாரில் சித்தமாக விருக்கின்றன. சிறு ஆர்டர்செய்து தருவித்துப் பார்த்தால், விலைகளின் கோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்துகொள்வீர்கள்.

விளையாட்டுப் பாத்திரம்.

32 விதமான விளையாட்டு சாமான்கள் அடங்கியது. குழந்தைகளை மகிழ்விப்பதில் மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ் செட் ஒன்றுக்கு	3—8—0
மத்தியசயிஸ் ,,	2—0—0
சிறுசயிஸ் ,,	1—8—0

முதல்தரமான கஸ்தூரி ஒரு ரூபாய் இடைகொண்ட தோலா ஒன்றுக்கு ரூபா ... 40—0—0

குங்குமப்பூ முதல்தரம் தோலா ஒன்றுக்குரூபா ... 2—8—0

காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0

பட்டுக் கைக்குட்டை.

நேர்த்தியான தினுசு.

18இஞ்சு சச்சவுக்கும் 1க்கு ரூ	0-10—0
20 ,, ,,	0-14—0
24 ,, ,,	1—2—0

விஷ்ணுபாதத் தட்டு.

இது சுத்தமான தாம்பிரத்தில் செய்யப்பட்டது, தாம்பாளம் போன்ற வடிவுள்ளது. இதன் மத்தியில் விஷ்ணுபாதம் செதுக்கப்பட்டிருக்கும். தட்டு 1-க்கு விலை ரூபா 1½-முதல் 2-வரை.

காசி வயிரவர் கயறு.

1-வது, பெரியகயர் 100-க்கு ரூ.	2—8—0
2 ,, ,,	2—0—0
3 ,, ,,	1—8—0
4 ,, ,,	0—6—0

விலை விபரக் காட்லாக் இனாம்.

BALAJEE & Co., Benares City, U. P.

இந்தியாவில் மிகப் பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஹில் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

இந்த ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம் பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும், திறமைவாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான மருந்து சென்ற 35-வருஷ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும் புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

32 மாத்திரையின் விலை ரூபா-1.

எங்கள் கியாட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

45, மேலக் கோபுர வீதி, மதுரை.

96, மவுண்ட் ரோட், மதராஸ்.

157, பிராட்வே, மதராஸ்.

சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்.

ஔவை — 0 6 0
நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும், தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்யசரித்திரம். பு. க. ஸ்ரீநிவாஸாச்சாரியர் எழுதியது.

பொற்கொடி — 0 13 0
ஓர் இனிய தமிழ் நாவல் வக்கீல் சுந்தரம்பிள்ளை எழுதியது.

சுந்தரவல்லி — 0 8 0
வாகனி. திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது.

அன்புக்கும் அழிவோ? — 0 4 0
இது சோகரஸம் பொருந்திய ஒரு இனிய தமிழ் நாவல்

ராஜாமணி — 0 8 0
ஓர் உயர்ந்த துப்பறியும் தமிழ் நவீனம்.

கனிஜாக்ஷி — 0 5 0
அதில் சிறு பெண்களைக் கிழவர்களுக்கு மணம் செய்விப்பதால் நேரும் கெடுதல்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

ஸரோஜா. — 0 5 0
ஓர் இனிய தமிழ் நாவல்.

"கோகலே" மான்ஜீவிய சரித்திரம் — 0 8 0
"சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் மிஸ்டர். K. விசுவநாதய்யர் எழுதியது.

ஐரோப்பிய யுத்தம் — 1 8 0
ஜி. எ. வைத்யராமன் எழுதியது யுத்தத்தைப்பற்றி அறியவேண்டிய பல விஷயங்களும் மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளன.

சாரங்கதர ஸம்ஹிதை — 3 0 0
பண்டித எம். துரைசாமி ஐயங்கார் எழுதியது. ஆயுர்வேத சம்பந்தமான பல விஷயங்கள் இதில் கூறப்பட்டுள்ளன. சுமார் 300 பக்கங்கள் கொண்டது.

காரைக்காலம்மை சரிதை — 0 1 0
சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும் தெய்வக்கனிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

மனம்போல் வாழ்வு — 0 8 0
இம்மை யின்பத்தையும் மறுமையின்பத்தையும் அடைவதற்குரிய நெறிகளை மிக்க தெளிவாகக் கூறுகின்ற ஓர் அரிய நூல். வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மானேஜர்,
ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

OFFICE OF THE REGISTRAR ...
5 - DEC 1917
MADRAS

உ
சுபமஸ்து.
"விஸ்வகர்மகுலோபகாரி" என வழங்கிவந்த

தொழில்.

மலர்—4. { பிங்கள ௵ கார்த்திகை ௴ 1917 ௵ நவம்பர் ௴ } இதழ்—10.

அற்ப விஷயங்களை மேற்கொளல்.

அற்ப விஷயங்கள் எப்போதும் அற்ப விஷயங்கள்தான். எப்பெருங் காரியங்கள் கூட்டமாகிய அற்பவிஷயங்களை மேற்கொள்ளுவதினால் ஆகாதன? பூலோகத்தில் உயிர் வாழ்க்கை மார்க்கங்களில் எந்தக் காரிய சித்தியான செயலும் அற்ப விஷயங்களை ஜயப்பிரதாபமாய் மேற் கொள்ளுவதினால்தான் உண்டாகிறது. பல துறைப்பட்ட அற்ப விஷயங்களெல்லாம் மொத்தமாய்ச் சேர்ந்துதான் ஓர் பெரிய காரியமாகிறது. ஒவ்வொரு வேலை முகாந்திரத்திலும் முதற்றரமான வேலைக்கும் இரண்டாந்தரமான வேலைக்கும் வித்தியாசம் அவற்றில் சேர்ந்துள்ள அற்ப காரியங்களை ஜாக்கிரதையாய் செய்து முடிப்பதில்தான் காணப்படுகிறது. காரிய சித்தியை அடையும் மனிதர்கள் பொதுவான காரிய விசாலத்திற்கும் திடத்திற்குமே யல்லாமல் ஒவ்வொரு விஷயத்திலும் அவர்களுடைய முழு கவனத்திற்கும் பேர்போனவர்களாயிருக்கிறார்கள். யானையைப்போல் அவர் பெரிய பாரங்களையும் தள்ளுவார்கள். சிறு ஊசியையும் எடுப்பார்கள்.

நெப்போலியன் என்பவர் அற்ப விஷயங்களை யெல்லாம் மேற்கொண்டவர். தன்னுடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் அற்பமாகக்கொண்ட ஒவ்வொரு சிறு விஷயத்திலேயும் மிகுந்த கவனத்தைசெலுத்தினார். அவருடைய கவனத்திற்கு ஒன்றும் அற்பமானதல்ல. அவர் எப்போதும் சந்தர்ப்பங்களுக்கு தலைவராயிருந்தார். சந்தர்ப்பங்களை மேற்கொண்டார். எந்த விஷயத்தையும் தானாக நடந்தேறட்டும் என்று விடவில்லை. அவர் சுபாவத்தில் அஜாக்ரதை என்பது இல்லவேயில்லை.

பத்தாயிரம் காலத்தை விருதாவாக்கும் அற்ப விஷயங்களைக் கவனித்தால், பத்தாயிரம் உத்திரவுகளைக் கொடுத்தால், பத்தாயிரம் நமது நோக்கத்திற்கு விரோதமான காரிய நிகழ்ச்சிகளை சகித்தால், ஓர் ஐயம் உண்டாகிறது. அப்படியிருந்தும் சாதாரண ஜனங்கள் பெரிய மனிதர்கள் எப்போதும் பெரிய காரியத்தையே செய்கிறார்கள் என்று நினைக்கிறார்கள். அநேக அபஜயங்களின் சரித்திரம் மூன்று வார்த்தையில் எழுதப்படலாம். "அற்ப விஷயங்களை கவனியாமை" எத்தனை நியாயவாதிகள் பத்திரங்களிலேயும் முக்கியமான தஸ்தாவேஜுகளிலேயும் திருத்தப்பாட்டைக் கவனியாததினால் தவறிப்போகிறார்

கள். அதிகம் என்று காணப்படுகிற சிறு வார்த்தைகள் பத்திரத்தில் விட்டுவிடப்படுவதினாலேயே அநேகம் கக்ஷிக்காரர்கள் வியாச்சியத்தில் தலையிட்டுக்கொள்ளவேண்டியதாகிறது. அதிக நஷ்டம் உண்டாகிறது. அஜாக்கிரதையால் சில வார்த்தைகளை விட்டுவிடுவதால் அநேகம் உயில் பத்திரங்கள் எழுதி வைத்தவன் இறந்தபிறகு மறுக்கப்படுகின்றன. அஜாக்கிரதையாய் இருபொருள்படும்படியான வார்த்தைகளை உபயோகிப்பதால் காரியம் கெட்டுப்போகிறது.

வைத்தியர்கள் சிகிச்சா முறைகளை எழுதுவதில் அஜாக்கிரதையாயிருப்பதால் வழக்கப்பாடாய்த் தவறுதலாக எழுதுவதால் சிகிச்சா முறைகளைப் பெற்றவர் ஒன்றுக்கொன்று வாங்கிச் சாப்பிட்டு வியாதி போகாததினாலே வைத்தியர்களுக்கு நல்ல பெயர் இல்லாமற் போகிறது. மருந்து சாப்பிடும் விதத்தை சரியாய் சொல்லாமற் போவதினாலேயே வைத்தியர்களுக்கு கியாதி கிடைக்கிறதில்லை. பூலோகத்தில் தவறுதல்கள் நிரம்பியிருக்கின்றன. வர்த்தகர்கள் சிறு விஷயங்களை கவனியாததினாலே நஷ்டத்தை அடைகிறார்கள். அவர்கள் பாங்கிக்கு ஒரு பத்திர விஷயமாய் பணம் செலுத்த அப்பத்திரத்தை அனுப்பிவிட்ட மறுநாள் செல்கிறார்கள். தங்கள் பில்களை பணமாக்க காலத்தில் செல்கிறதில்லை. அவர்களுடைய கடிதங்களுக்கு சீக்கிரமாய் பதில் எழுதுகிறதில்லை. கடிதங்களை ஜாக்கிரதையாய் சேர்த்து வைக்கிறதில்லை. அவர்களுடைய கணக்கு புஸ்தகங்கள் வரவு செலவு கணக்கை சரியாய்க் காட்டுகிறதில்லை. கணக்கு எந்த விதத்தில் இருக்கிறதென்றுகூட அவர்களுக்கு தெரிகிறதில்லை. விவரங்கள் என்றால் அவர்களுக்கு அருவருப்பாயிருக்கிறது. அவர்கள் அற்ப விஷயங்களின் முக்கியத்தையும் கண்ணியத்தையும் தெரிந்துகொள்ளுகிறதில்லை. வர்த்தகத்தில் ஒழுங்கின்மையினாலேயே அநேகர் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

தன் சுபாவத்தில் விவரத்தை கவனிக்காதவனும் சிறு விஷயங்களுக்கெல்லாம் மேலானவன் என்று எண்ணுகிறவனும், எதிலேயும் ஜயத்தை எப்போதும் அடையமாட்டான். "அற்ப விஷயங்கள் சேர்ந்து பூரணமாகிறது. பூரணம் அற்ப விஷயமல்ல".

உயர்ந்த மனோசக்தி என்பது என்ன? அற்ப விஷயங்களை கவனித்தல்தான். புது உலகத்தைக்கண்டு பிடிக்கவேண்டுமென்ற கொலம்பஸ் என்று தன்னுடனிருந்தவர்களோடு கருதி சுதேசத்திற்குத்திரும்பிவிடுவதற்குக்கூடச் சம்மதித்தார் அப்போதும்கூட அவர் சிறு சந்தர்ப்பங்களை திட்டி கவனித்துப் பார்த்தார். அச்சிறு சந்தர்ப்பங்களையும் அற்ப விஷயங்களையும் கவனியாமல்போனால் அவர் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க மாட்டார். அற்பவிஷயங்கள் தான் அவருக்கு ஜய முண்டாகுமென்கிற நம்பிக்கையை உண்டாக்கியது. நம்பிக்கை புது உலகத்தை உண்டாக்கித் தந்தது. ஓர் மகாத்மா சிறு விஷயங்களைப் பார்க்கிறபோது அவைகள் பெரு விஷயங்கள் ஆகின்றன. அற்ப விஷயங்கள் காற்றைப்போல் லேசாக இருந்தாலும் உலக மாறுதலைய உண்டாக்கக் கூடிய பெரு விஷயங்களை யோசனையுள்ள மனிதர்களுக்கு விளங்கச்செய்யும். பெரிய கோயில்கள் சிறிய கற்களால்தான் கட்டப்படுகின்றன.

பெரியவர்களுடைய உயிர் வாழ்க்கை சிறு அற்ப விஷயங்களாலும் சந்தர்ப்பங்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது.

ஓர் அற்புதமான சிலா விக்ரகத்தை முடித்துக்கொண்டிருக்கும்போது மேதாவியான சுனோவா சிற்பியை ஒருவன் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த சிற்பியின் பொடி சுத்தியின் தாக்குகள் (அடிகள்) அதிக அற்பமாயும் அர்த்தமில்லாததாயும் காணப்பட்டதாலே அந்த சிற்பி வேலையில் விளையாட்டாய் அடித்துக்கொண்டிருக்கிறார் என்றான். அந்த சிற்பி பின்வரும் வார்த்தையைச்சொல்லி அவனை கண்டித்தார். உன் அறியாமையினால் இலேசாக நினைக்கிற என் பொடிசுத்தியின் தாக்குகள் அறை குறையான வேலைக்காரனுடைய வேலைக்கும் நிபுணருடைய பூர்ண வேலைக்கும் உள்ள வித்தியாசத்திற்குக் காரணமாயிருக்கின்றனர். மகா பேர்போன ஓர் மாணிக்கத்தில் பார்வைக்குக் கூட தெரியாத மலினமானது அதின்விலையை ஆயிரம் பவுன் கணக்காகக் குறைத்தது. இங்கிலாந்தில் இராஜ கிருக ஆபரணங்களில் பதிக்காமல் நீக்கிவிட்டார்கள்.

கனோவர் கெப்போலியனுடைய பேர்போன பிரதிமையை செய்யத் தொடங்கும்போது அவருடைய கூர்மையான கண் அதிக விலை கொடுத்துத் தருவித்த அழகான சலவைக்கல் திம்மையில் கண்ணுக்குப் புலப்படாத ஓர் சிவந்த ரேகையை கண்டுபிடித்தார். அதில் சிற்றுளியைத் தாக்கமாட்டேன் என்று மறுத்துவிட்டார்.

பென்தம் சொல்லுகிறார் "ஒரு வாக்கியத்தின் முடிபுதான் சிநேகங்களை உண்டாக்குகிறது. நமக்கு தெரிந்தவரையில் அநேக இராஜாங்கங்களை நிலை நிறுத்தவும் ஒழிக்கவும் செய்கிறது."

ஓர் அழகானமுகமும் மனதைக் கவரத்தக்க சிரிப்பும் பத்து வருஷத்திய டிராய் முற்றுகைக்குக் காரணமாயிருந்து ஹோமர் கவி சக்ரவர்த்தியை உலகத்தில் காவியங்களிலெல்லாம் மகத்தான காவியத்தை செய்யச்செய்தது.

மெடீனா சுயஆக்ஷியின் இராணுவ வீரர்கள் சிலர் பெலோனா ராஜ்யத்திற் குரிய பொதுவான கிணற்றிலிருந்து ஓர் நீர் தொட்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அந்த தொட்டி ஒரு ஷிலிங்கு தான் பெறும். ஆனால் அது ஒரு பெரிய விவாதத்தை உண்டாக்கியது. அதின் பொருட்டு ஓர் சண்டை இருபது வருஷம் நடந்தது.

க்ரிமியன் சண்டையில் திடுக்கிடத்தகுந்த உயிர்ச்சேதமும் பணச்சேதமும் உண்டாகியது. அதில் நான்கு பெரிய ராஜாங்கத்தார் சண்டைசெய்தார்கள். இங்கிலாந்து, பிரான்சி, டர்கி, ரஷ்யா, தலையிட்டுக்கொண்டிருந்தது. ஓர் சாவியை கொடுக்க மறுத்ததினாலே இந்த சண்டை உண்டாயிற்று. ஜெருசலேம் நகரத்தில் பரிசுத்தமான கல்லறையின் மாதாக்கோயிலில் ஓர் ஆலயத்தை கிரேக்கிய கிருஸ்தவர்கள் தங்களுடையது, என்று பாத்தியதையைக் கொண்டாடி பூட்டிவிட்டார்கள். சாவியைக் கொடுக்க மறுத்து விட்டார்கள். இம்மறுப்பு லாடின் சர்ச்சுக்காரர்களுக்கு கோபம் மூட்டியது. விவாதம் பலத்தபடியால் கிரேக்கிய சர்ச்சுக்காரருக்காக ரஷ்யா பரிந்துக்கொண்டுவந்தது. பிரான்சு லாடின் சர்ச்சுக்காக பரிந்துக்கொண்டு வந்

தது. விவாதம் பலத்தது. சர்ச்சுக்கு கொஞ்சம் மராமத்து செய்யவேண்டுமென்று துர்க்கியை ரஷ்யாகேட்டது. டர்க்கி மாட்டேன் என்றது. இங்கிலாந்து எப்போது டர்க்கிக்கு உதவி புரிந்துகொண்டு வந்தபடியால் அது டர்க்கிக்காக விவாதத்தில் பிரவேசித்தது. பிரான்சோடு சிநேகபாவ உடன்படிக்கை செய்து கொண்டது. அந்த அற்பமான அறுவெறுக்கத் தக்கஆரம்பித்ததிலிருந்து அறு நூற்றுவர் எதிர்ப்பும் அதிக செலவான மலாக்காவ் எதிர்ப்பும், சபாஸ்டபூலுக்கு எதிரில் டிரஞ்சுகளில் இறந்த ஆயிரக்கணக்கான வீரர்களின் நாசமும் அநேக ஆபத்தான சண்டைகளில் நடந்த உயிர்க்கொலையும் வந்தது.

எல்லா ஜீவ வர்க்கம் பூதகண்ணாடியில் பார்ப்பதற்கும் அருமையான நுண்ணிய வஸ்துவிலிருந்துதான் ஆரம்பமாகிறது. ஓர் அணுப்பிரமாணதூசு ஓர் உத்தமமான கடிகாரத்தை கெடுத்துவிடும். கண்ணின் உருண்டையில் ஓர் கரித்தூள் நெப்போலியனை ஜெயித்துவிடும். சில விநாடிகள் வருஷங்களுக்கு சமானமாய் நீடித்திருக்கின்றன. சில விநாடிகள் முக்கியத்தில் வருஷங்களுக்கு சமானமாயிருக்கின்றன. ஒரு நிமிஷத்தின் செயல் ஓர் உயிர் வாழ்க்கையின் விசனத்தை உண்டாக்குமென்று யார்க்குத்தெரியும்.

“சிறியவிஷயங்களில் உண்மையாயிருக்கிறவன் பெரிய விஷயங்களிலும் உண்மையாயிருப்பான்” ஏசுநாதர் “நமக்கு சம்பவிக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஓர் அடையாளத்தை செய்துவைக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பமும் யாதொரு தடையுமின்றி நமது தற்கால நிலைமையை உண்டாக்குகிறது.”

கியூடி.

“நாம் இன்றைக்கு தப்பாய் நடந்தாலும், சரியாய் நடந்தாலும் காலாகாலத்திற்கும் வித்தியாசத்தைக் காட்டிக்கொண்டே இருக்கும்.

ஜேம்ஸ் ப்ரீமன் க்ளார்க்.

***

பனிக்கட்டி செய்தல்.

வேனிற்காலத்தில் அதிக லாபகரமான வேலை பனிக்கட்டி செய்தல். அமோனியாவை சுருக்கும் மாதிரியைத்தான் பனிக்கட்டிசெய்வதில் உபயோகமாகிறது. ஜலரூபமாயிராத அமோனியா மெதுவாய் உருக்கும்சக்தியையுடையது. அதிக உயர்வானமாறுதலுக்குரிய சூட்டையுடையது. கடைசியாக சொல்லப்பட்டகுணத்தால்தான் இந்தியாவைப்போன்ற சூடான தேசங்களில் உபயோகத்திற்குரியதாயிருக்கிறது. இத்தேசங்களில் குளிர்ச்சியாக்க உபயோகிக்கும் நீர்கூட அதிக உஷ்ணமாயிருக்கிறது. பனிக்கட்டி செய்வதில் உபயோகமாகும் ரசாயன வஸ்து ஜலரூபமாகாத அமோனியா. ஜலரூப அமோனியா அல்ல. அமோனியாவை வைக்குமிடம் ஓட்டையில்லாமலிருக்கவேண்டியது. இல்லாவிட்டால் ஓட்டைவழியாக அமோனியா இழந்துபோய்விடும். குளிர்ச்சியாக்கும் சுருளில் அதிகரிப்பால் உண்டாகும் குளிர்ச்சியை உபயோகப்படுத்துவதில் கால்ஸியம் க்ளோரைட் கரைந்த நீர் அல்லது உவர்நீர் வேண்டியது. உவர்நீர் சுருள்களையும் கொப்பரையையும் கெடுக்கும் குணமுள்ளதாயிருக்கிறபடியால் அதை உப

யோகிக்கச் சொல்லக்கூடாது. கரைந்த நீரை நாம் தனியாக தயார்செய்ய வேண்டும். எல்லா அசுத்தங்களையும் போக்கடிக்க வேண்டும். கரைந்த நீரின்திடம், 60 பாரின் ஹீட்டில் 1·009 ஸ்பெஸிபிக் கிராவிடியோடு எடையில் 100-க்கு 1 முதல் 60 பாரின் ஹீட்டில் 1·234 ஸ்பெஸிபிக் கிராவிடியோடு எடையில் 100-க்கு 25வரையிலிருக்கலாம். இந்த யந்திரம் வேலைசெய்ய ஆரம்பமானதும் எப்பொழுதாவது ஒரு முறை உவர்நீரை பரிசோதிக்கவேண்டும். அமோனியா உவர்நீரில் ஒழுகாதிருக்கிறதா வென்று பார்க்கவேண்டும். இந்த விஷயத்தை நெஸ்லர்ஸ் ரீஏஜன்ட் (Nesslers Reagent) டைக்கொண்டு தெரிந்துகொள்ளலாம். (எந்த ரசாயன ஷாப்புகளிலும் இது அகப்படும்.)

***

யந்திரம்.

யந்திரம் வேலைசெய்யும் விதம் பின்வருமாறு விவரிக்கப்படுகிறது:—ஓர்பாரத்தின் கீழுள்ள ஜலரூப அமோனியாவை ஒரு பாத்திரத்தில் அதிகரிக்கச் செய்தால் ஜலரூபம் ஆவியாகிறது. மேலுள்ள பாரம் கீழே விழுகிறது. அச்செய்கை அதிக குளிர்ச்சியை உண்டாக்குகிறது. அதை பனிக்கட்டி செய்வதில் உபயோகிக்கலாம். அமோனியா ஆவியை இப்போது சுருக்கி உண்டாகும் சூட்டை நீரால் குளிரச்செய்து போக்கினால் அது மறுபடியும் ஜலரூபமாகிறது. இச்செய்கை இடைவிடாது நடந்துகொண்டே இருக்கிறது. ஆவியை சுருக்கும் யந்திரத்திற்கு (Compressor) கம்ப்ரஸ்ஸர் என்றுபெயர். சூடான அமோனியாவைக் குளிரச்செய்யும் யந்திர ஏற்பாட்டிற்கு (Condenser) என்று பெயர். குளிர்ச்சியை உண்டாக்கும் பாத்திரத்திற்கு பெயர் ரீப்ரிஜரேடர் (Refrigerator) என்று பெயர். கண்டன்சருக்கும் ரீப்ரிஜரேடருக்கும் மத்தியில் ஓர் துவார மூடியைக்கொண்டு திறப்பதினாலும் மூடுவதினாலும் விசாலிக்கும் தொழிலை (அதிகரித்தலை) வித்தியாசப்படும்படி செய்வதால் சூட்டின் அதிகரிப்போ அல்லது சமனமோ உண்டாகிறது.

***

வேலையை நடத்தும் சக்தி.

சுருக்கும் பம்பை கிடைக்கத்தக்க எந்த சக்தியைக்கொண்டும் இயங்கச்செய்யலாம். வழக்கமாய் கிடைக்கும் சக்திப்பொருள், நிலக்கரி, ஆவி, எண்ணெய், நீர், மின்சார சக்தி. சாதாரண அளவுள்ள சுருக்கும் ஆவி யந்திரத்திற்கு ஒருமணிநேரத்திற்கு ஓர் குதிரை சக்தியை உண்டாக்க 2 பவுன் நிலக்கரி வேண்டியதாயிருக்கிறது. சுருக்காத யந்திரமாயிருந்தால் 2 முதல் 2½ பவுண்டு நிலக்கரி வேண்டியது. சுலபமான அதிக பாரத்தை உண்டாக்கும் ஆவி யந்திரத்திற்கு 4 முதல் 5 பவுண்டு நிலக்கரி வேண்டியது. இந்த செய்கைகளையெல்லாம் விசாலிக்கச் செய்வதாலும், விசாலிக்கச் செய்யாமலும், அதிக பாரமான அபரிமித சூடேற்றிய ஆவியை உபயோகிப்பதால் அதிகமாய்ப் பலப்படுத்தப் படலாம்.

ஒரு குதிரை சக்திக்கு ஒருமணி நேரத்திற்கு 15 கனஅடி ஆவி வேண்டியிருக்கிறது. ஒரு குதிரை சக்திக்கு ஒருமணி நேரத்திற்கு 1 பைண்டு எண்ணெய் வேண்டியது. ஒரு குதிரை சக்தியை உண்டாக்க ஒரு யூனிட் மின்சாரசக்தி வேண்டி

பது. மேலே குறிப்பிடும் 24-மணி நேரத்தில் உண்டாக்கவேண்டிய பனிக்கட்டி பாரத்திற்கு நிதானமாய் கணக்கிட்டுள்ள குதிரை சக்திகளை அடியில் குறிப்பிடுகிறோம்.

அண்டர்வெயிட். டன்ஸ்.
10, 18, 1½, 3, 5, 10, 15 20, 25.
குதிரை சக்தி.
2½, 4, 8, 12, 18. 25, 32, 42, 52.

நீரைச் சுருக்கும் வழியில் சுத்தமான பனிக்கட்டியை உண்டாக்க வேண்டுமானால் சுருக்காத ஆவியந்திரத்தை உபயோகிக்கலாம். சுத்தமான பனிக்கட்டியை உண்டாக்க முன் உபயோகித்த ஆவியையே உபயோகிக்கலாம்.

பனிக்கட்டியை சேகரம்செய்து வைக்க விரும்பினால் மின்சாரம்தான் சரசமாய் உபயோகிக்கக்கூடிய சக்தி. நல்லநீர் சேகரமிருந்தால் அது ஓர் யந்திரத்தை ஓட்டும் சக்தியாகும். யந்திரத்திலிருந்து ஆவியை சுருக்கவாவது அமோனியா சுருக்க யந்திரத்திற்காகவாவது நீர்தான் ஓட்டும் செலவைக் குறைக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு ஜலம் குளிர்ச்சியாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு யந்திர ஏற்பாடு குறைச்சலாகிறது. இறைக்கும் செலவோடே ஜலம் கிடைக்கிறதாயிருந்தால் சுருக்கும் யந்திரத்தையும் உள்ளடக்கிய ஆவியை சுருக்கும் யந்திரத்தையும் சுருக்காத யந்திரங்களையும் ஓட்ட உபயோகமாகும்.

சுருக்கும் யந்திரம் கையினால் அடித்து இணைத்த இரும்புக்குழைகளால் ஆக்கப்பட்டிருக்கிறது. தொட்டியில் வைத்து ஜலத்தால் குளிர்ந்திருந்தால் அதற்கு உள்ளடக்கச் சுருக்கு யந்திரம் (Subrinerged Condenser) என்று பெயர். ஜலம் அதின் மேல் விழுந்துகொண்டிருந்தால் அப்போது அதற்கு ஆவியாக்கும் யந்திரம் (Evaporating Condenser) என்றுபெயர். குளிர்ச்சியாக்கும்யந்திரம் (Refrigerator) கையினால் அடித்து செய்யப்பட்ட இரும்பு குழைச் சுருள்களாக இருக்கிறது. இவைகள் உவர் நீரில் வைக்கப்பட்டாவது (பனிக்கட்டி செய்வதற்கு) நீரில் வைக்கப்பட்டாவது (ஜலம் குளிர்வதற்கு) உபயோகப்படுத்தப்படுகின்றன. அல்லது அவைகள் காற்றை குளிரச் செய்வதற்காக நேராய் ஓர் அறையில் வைக்கப்படலாம்.

ஓர் யந்திர ஏற்பாடு செய்வதற்கு முன் நமக்கு என்னசெய்து முடிக்கவேண்டும்; அதற்கு எந்தமாதிரி செய்கைகளைச் செய்ய எந்தமாதிரியான யந்திரங்கள் வேண்டுமென்று நாம் நிர ஆலோசிக்கவேண்டும். பனிக்கட்டிசெய்வதா? உறையச்செய்வதா? குளிரச்செய்வதா? வஸ்துக்களின் குளிர்ச்சியான சேகரிப்பா? குளிர்ச்சியான பனிக்கட்டியின் சேகரிப்பா? என்ன நமக்குத் தேவை என்பதை நிர்ணயிப்பது அவசியமாகும். அதற்குத் தகுந்த யந்திரத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

செய்யப்படுகிற பனிக்கட்டிகள் மூன்று விதமாக செய்யப்படுகின்றன. அவைகள் வெவ்வேறு பரிமாணத்தை உடையவையாயிருக்கின்றன, அவைகள் இரண்டுவகையாயிருக்கின்றன. அதாவது முகம் துலங்காதது-1. முகம்துலங்குகிற முக்கோண நாற்கோண வடிவை அடைந்தது. 2.

கோப்பை பனிக்கட்டி - முகம் துலங்குவது, அல்லது முகம் துலங்காதது. குலைப்பனிக்கட்டி-முகம் துலங்குவது, தட்டுப் பனிக்கட்டி-முகம் துலங்குவது.

கோப்பை பனிக்கட்டி.

இந்த (செலவில்லாத) விதத்தில் உறையவேண்டிய ஜலம் உலோக அச்சுகளில் வைக்கப்படுகிறது. அந்த உலோக அச்சுகள் மின்சாரமேற்றிய இரும்பினாலானது அல்லது ஈயம் பூசிய இரும்பினாலானது. பின்னது அதிக சரசமானது. ஆனால் நெடுநாளைக் கிருக்காது. இந்த உலோக கோப்பைகளில் சாதாரணநீர் உறைந்து கட்டியாகும்போது உண்டாகும் பனிக்கட்டி கடினமாயும் முகம் துலங்காததாயும் இருக்கிறது. குளிர்ச்சி உண்டாக்கமாத்திரந்தான் இந்தபனிக்கட்டி உபயோகம். அதாவது மீனைப்பாதுகாப்பதற்கும், ஐஸ்க்ரீம் செய்வதற்கும், ஐஸ்பெட்டி செய்வதற்கும் உபயோகம். சுத்தமான பனிக்கட்டியும் கோப்பைகளில் செய்யலாம்.

ஐஸ் கோப்பைகளில் செய்யப்படும் பனிக்கட்டிகளின் கட்டிகள் 17 பவுண்டு முதல் 200 பவுண்டு வரையில் வித்தியாசப்படுகிறது. கட்டிகளின் சாதாரண பரிமாணங்களும் அவைகள் செய்யப்படுவதற்கு வேண்டிய காலமும்,

கட்டிகளின் எடை.	கோப்பையின் உச்சிபரிமாணம் அங்குலம்,	நீளம். அடி.	நீளம். அங்.	கட்டியாகும் காலம்.
17	7×3	2	6	3
56	$7\frac{1}{4} \times 7\frac{1}{2}$	3	7	12
50	$22 \times 3\frac{1}{2}$	2	5	12
112	22×5	3	$10\frac{1}{2}$	50
112	22×5	3	$10\frac{1}{2}$	24
200	22×8	3	$10\frac{1}{2}$	50
224	18×9	4	7	60

மேல்கண்ட விவரத்திலிருந்து பனிக்கட்டியின் பரிமாணம் எவ்வளவு அதிகப்படுகிறதோ கட்டியாவதற்கு அவ்வளவு காலம் பிடிக்கும். முதலில் கோப்பைசெய்வதற்கும் அதிக செலவாகும். முதலில் நாம் இவ்விஷயங்களை கவனிக்கவேண்டியது. பனிக்கட்டியின்பரிமாணம் சிறியதாயிருந்தால் யந்திர ஏற்பாடும் அதிக சரசமாயிருக்கும்.

* * *

சுத்தமான கோப்பை பனிக்கட்டி.

சுத்தமான பனிக்கட்டி அச்சுகளில் செய்யப்படலாம். அதில் இருவகையுண்டு. (1) கட்டியாகும்காலத்தில் நீரைக்கலக்கல். (இது ஆவி குளிர்வதால் ஆகிய நீரல்ல.) (2) ஆவி குளிர்வதாலாகிய நீரை அச்சில் நிறப்பி உபயோகித்தல். (யந்திரத்தில் தளர்ந்த ஆவியை நீராக்கப்பட்டது.) முதல் மாதிரியை கோப்பை விதத்தை உபயோகப்படுத்த நிச்சயித்தபோதுதான் உபயோகப்படுத்தவேண்டியது. ஆவி குளிர்ந்தநீர் அகப்படாத இடத்தில்தான் முதல்மாதிரி உபயோகம் (உதாரணமாக காற்றையாவது எண்ணெயையாவது யந்திரங்களுக்கு உபயோகித்து ஆவியில்லாதபோது) இந்த விதத்திற்கு அநேக யந்திர ஏற்பாடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவைகளின் உபயோகம் திருப்திகரமாயிருக்கின்றன. சாத்தியப்பட்டால் ஆவி குளிர்ந்த நீரை உபயோகித்து 2-வது விதத்தில் சுத்தமான பனிக்கட்டியை செய்கிறோம். சுருக்கும் யந்திரத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிற யந்திரத்திலிருந்து வரும் ஆவியானது குளிர்ந்து நீராகிறது. பிறகு அந்த நீர் கொதிக்கும் பாத்திரத்தில் செல்லுகிறது. அவ்விடத்திலுள்ள காற்றெல்லாம் வெளிப்படுத்தப்படுகிறது. சுட்ட நீர் குளிர்ந்த நீருக்கு கொண்டுபோகப்படுகிறது. அவ்

விடத்தில் கூடிய வரையில் உண்மை ஞாணிகிறது. பிறகு அடுப்பு கரியில் வடிகட்டப்படுகிறது. பிறகு அந்த நீரை பனிக்கட்டியாகும் கோப்பைகளில் நிரப்புகிறார்கள். தொடும்போது மலினமாகாதிருந்தால் உற்பத்தியான பனிக்கட்டி சுத்தமாயும் பிரகாசமாயும் முகம் துலங்கக்கூடியதாயும் தெளிவாயும் தேகத்திற்கு ஆரோக்யமாயும் இருக்கிறது. அது சாப்பாட்டு மேஜையின்மேல் வைக்கப்படுகிறது. புஷ்பமோ மீனோ அல்லது வேட்டை பறவைகளோ பனிக்கட்டி ஆகும் கோப்பையில் வைக்கப்பட்டால் பனிக்கட்டி ஆகும்போது அவைகளும் உறைந்து போகின்றன. பனிக்கட்டி ஆனதும் பனிக்கட்டியின் மூலமாய் அவைகளின் பிம்பங்கள் தோன்றுகின்றன. முகம் துலங்கா பனிக்கட்டியைச் செய்வதிலும் இந்த விதத்தில் பனிக்கட்டியை செய்வதின் பிரதமச் செலவு அதிகமாயிருக்கிறது.

***

குகை பனிக்கட்டி.

இந்த விதத்தில், உறைந்தபோது 5 அல்லது 6 டன் பிடிக்கக்கூடியதாய் தனித்தனியாய் சாதாரணமாய் செய்யப்படுகிற பனிக்கட்டி. தொட்டிகள் 12×30×40 அங்குல அளவுள்ள 5 அண்ட்ரட் வெயிட்டாவது 12×33×51 அங்குல அளவுள்ள 6 அண்ட்ரட் வெயிட்டாவது எடையுள்ள சுத்தமான பனிக்கட்டிகளை உண்டாக்கித் தருகின்றன. தொட்டிகள் மரத்தினால் செய்யப்படுகின்றன. உலோகத்தாலாகிய குழிந்த உவர்நீர் பள்ளங்களை நெடுக்காகவும் குறுக்காகவும் அந்த தொட்டிகளில் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

அவைகளின் மூலமாய் குளிர்ந்த உப்பு ஜலம் (உவர்நீர்) இடைவிடாது பரவும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆவிபடிக்கு குளிரச் செய்யவேண்டாது. உறைவதற்குரிய (கட்டியாதற்குரிய) ஜலம் இந்த பள்ளங்களுக்கு மத்தியில் வைக்கப்படுகிறது. கட்டியாகும் சமயத்தில் அலைக்கப்படுகிறது. அதினால் உண்டாகும் பனிக்கட்டி அதிக சுத்தமாயிருக்கிறது. பெரிய பரிமாணத்தையுடைய கட்டிகளாகும் அநுகூலங்கள் வாய்ந்திருக்கின்றன. அதற்கென்று செய்யந்திர ஏற்பாட்டைக் கொண்டு பிற்பாடு சுட்ட உவர்நீரை பள்ளங்களின் மூலமாய் பரவும்படிச் செய்யலாம். இப்படி அந்த பள்ளங்களிலிருந்து பனிக்கட்டிகளை வெளிப்படுத்துகிறார்கள். அப்பொழுது அவைகளை தூக்குவதற்கு சௌகர்யம் ஏற்படுகிறது. சராசரியில் 5 அண்ட்ரட் வெயிட் கட்டியை உண்டாக்குகிற 5 டன் தொட்டி. உறைந்து கட்டியாவதற்கு 4-மணிநேரம் செல்கிறது. ஆகையால் 24-மணி நேரத்தில் 5 டன் பனிக்கட்டி செய்யவேண்டிய யந்திர ஏற்பாட்டிற்கு 4 தொட்டிகள் வேண்டியதாயிருக்கும். ஆகையால்தான் இந்த விதத்தில் பனிக்கட்டி செய்யும்போது 5 டன் பெருக்கலான தொட்டிகளையுடையதாய் முதலிலேயே யந்திர ஏற்பாட்டை செய்து முடிக்கிறார்கள். 5 டன் எடைக் குறைவான கட்டியை உண்டாக்கும் யந்திர ஏற்பாடு இருக்கும்போது மேல்விவரித்த வரையில் பனிக்கட்டி. செய்ய இயலாது. இந்தவரையில் பிரதமச் செலவு முன் விவரித்தவகைகளின் செலவைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறது. ஆனால் அதிக பெரிய சுத்தமான பனிக்கட்டியை உண்டாக்கும் பெ

ரும் சௌகர்யத்தை யுடைத்தாயிருக்கிறது. வேலை நடத்தும் செலவு கோப்பை பனிக்கட்டி வேலையை நடத்தும் செலவுதான்.

***

தட்டு பனிக்கட்டி.

இந்த விதத்தில் எவ்வளவு உத்தமமாய் உண்டாக்கக் கூடுமோ அவ்வளவு உத்தமமான பனிக்கட்டியைச் செய்து முடிக்கலாம். பனிக்கட்டிகள் 16 அடி நீளம் 8 அடி அகலம் 10 முதல் 14 அங்குல கனமுள்ளவாய்ச் செய்யலாம். நீரை ஆவியாக்கி குளிரச் செய்யவேண்டிய அவசியமில்லை. சாதாரண நீரை உபயோகிக்கலாம். அசுத்தங்களெல்லாம் தொட்டியின் அடியில் தங்கிப்போகின்றன. இரும்பினால் செய்துள்ள தொட்டிகள் அறை அறையாக குழிந்த சுவர்ப்பலகைகளினால் தடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் மூலமாய் குளிர்ந்த உவர்நீர் பரவும்படி செய்யப்படுகிறது. மத்தியிலுள்ள ஜலம் அசைந்துகொண்டிருக்கும்படி செய்கிறார்கள். அதினால் எல்லா காற்றும் வெளியேவந்துவிடுகிறது. அசுத்தங்கள் தொட்டியின் அடியில் விழுந்துவிடுகின்றன.

பனிக்கட்டியை சூடேற்றி வெளிப்படுத்த அந்த குழிந்த சுவர்ப் பலகைகளில் சூடான உவர்நீரை பரவச் செய்கிறார்கள். இம்மாதிரியாக உறையும் தட்டுகளிலிருந்து பனிக்கட்டி அப்புறப்படுத்தப்படுகிறது. இந்தவகை 12 டன்னுக்கு மேலாகவுள்ள அதிக பெரிய யந்திர ஏற்பாட்டிற்குத்தான் தகுதியானது. முதற்பணமும் வேலைநடத்தும் செலவும் குகை பனிக்கட்டி செய்யும்விதத் துள்ளதுபோல்தான். இந்த இரண்டுவிதத்திலும் ஆவி குளிர்ந்த நீர் வேண்டியிராததினாலே யந்திரம் குளிரச் செய்யும் யந்திரமாகவே செய்துகொள்ளலாம். அதற்குத் தக்கபடி நிலக்கரி எண்ணெய் காற்று விறகு இவற்றின் செலவை மீற்றலாம்.

எந்த விதமான பனிக்கட்டிகள் செய்யப்படவேண்டுமோ அது அந்தந்த இடத்தின் சௌகர்யங்களைச் சார்ந்தது. எந்த விதமான பனிக்கட்டிசெய்தால் விற்பனையாகுமோ அதற்குத் தக்க யந்திர ஏற்பாட்டை தேடிக்கொள்ளவேண்டும்.

குளிரச்செய்யும் வேலைகளுக்கு மட்ட பனிக்கட்டிப் போதுமானது. இப்பனிக்கட்டிகள் செலவு குறைச்சலாய் கோப்பைகளில் செய்துகொள்ளலாம்.

அப்போதே உபயோகப்படுவதற்கு சிறு கட்டிகள்தான் தேவை. தூரப் பிரயாணங்களுக்கும் உடனே உபயோகப்படுவதற்கில்லாதபோதும் பெரிய கட்டிகள் வேண்டும். சுத்தமான பனிக்கட்டி கொஞ்சமாய் வேண்டியபோதும் ஆவியந்திரம் உபயோகப்படாதபோதும், கோப்பைகள் நீரைக் கலக்கும் யந்திர ஏற்பாட்டோடு உபயோகிக்கலாம்.

***

சிறு வர்த்தகந் தொழில் முறை.

மழை காலம் வரும்போது நீ எருவைத் தேடுகிறப அல்லது உன்னுடைய சிநேகிதர்களும் அயலார்களும் எருவை வேண்டுகிறார்கள் அவர்களுக்கு நீ உதவிசெய்ய வேண்டியது. அவர்களுக்கு நல்ல சரசமான எருவை தேடிக்கொடுத்து உதவுவது உனது கடமையாகும். (Super phosphate of lime) சூபர் பாஸ்பேட் ஆம்லைம்

என்பதைப்பற்றி கேள்விப்பட்டிருப்பாய். இக்காலத்தில் அதை நல்ல எருவாக கண்டு பிடித்திருக்கிறார்கள். அது கொழுமையான எரு. உன்னுடைய உபயோகத்திற்காகவும் விற்பனைக்காகவும் அதை நீயே வீட்டில் தயார்செய்துக் கொள்ளலாம். செய்யும் முறை சுலபமானது.

ஒரு பீப்பாயை வாங்கிக்கொள். பரிசுத்தப்படுத்தப்பட்ட தார் பீப்பாய் இந்த வேலைக்கு உபயோகமாகும். அதில் 200 பவுண்டு ஜலம் வார். அதில் அதிக மெதுவாயும் ஜாக்கிரதையாயும் 100 பவுண்டு கந்தக திராவகத்தை மெல்லிய தாரையாக வார். வார்க்கும்போது அந்த திராவகம் உன் தோளிலேயாவது அல்லது வஸ்திரத்திலேயாவது படக்கூடாது. அப்போது அதிக கொதிப்பு உண்டாகிறது. அதில் 200 பவுண்டு எலும்பைப்போடு. எலும்பு எவ்வளவு பழையதாயிருந்தாலும் உபயோகமற்றதாயிருந்தாலும் பாதகமில்லை. கந்தக திராவகம் அதைக்கரைத்து அத்துடன் சேர்ந்து ஓர் வஸ்துவாகிறது. முழுவதும் கரைந்து ஓர் பசையைப்போலாகிறது. இந்த காரியம் நடக்கும்போது பீப்பாயை மூடிவை. ஏதோ ஒரு தடவை கிண்டவேண்டும். முடிந்ததும் எல்லா சரக்கையும் வெறும் தரையிலேயாவது பலகை மேடை மீதாவது தோண்டித் தள்ளு. அதோடுகூட 4 பங்கு உலர்ந்த களி மண்ணோடாவது அல்லது உலர்ந்த ரோட்டு புழுதியோடாவது கலக்கவேண்டும். சேர்த்து தூளாக்கவேண்டும்.

களி மண்ணுக்கு கிரகிக்கிற அல்லது உலர்த்துகிற குணம் உண்டு. சேர்மானப் பொருள்களின் வளப்பத்தைத்தரும் குணங்களையெல்லாம் நிறுத்திக்கொள்ளுகிறது. அதை எங்கும் ஒரே மாதிரியாய் பரவச் செய்கிறது. முழு எலும்புகள் உபயோகித்தால் கலக்க ஆறு அல்லது எட்டு வாரம் பிடிக்கும். கத்தியால் வெட்டிப்போட்டால் மூன்று வாரத்தில் ஒன்றாய் கலந்துபோகும். அவைகள் எலும்பு யந்திரத்தில் அரைத்து போட்டால் எல்லாம் ஒன்றாய் கலப்பதற்கு நான்குநாள் போதுமானது. இப்போது இருக்கிற எருக்களைக்காட்டிலும் அதிக கொழுமையானது. இப்போது விவரித்தமாதிரியில் உண்டாக்கப்பட்டால் அதிக சாரமானது. இதில் ஒருவண்டி எரு புறக்கடையில் கழிவிடையான புழுதி எருவில் 32 வண்டி எருவுக்கு சமானம். புல்லுள்ள நிலத்தில் மேலே தெளிப்பதற்கு ஒரு பைகா நிலத்திற்கு 1 மணங்கு எரு போதும். ஒரு இங்கிலீஷ் ஏக்ராவுக்கு 300 பவுண்டு எரு போதும். நெல்லுக்கும் உருளைக் கிழங்கிற்கும் பட்டாணிக்கும் 400 பவுண்டு எருவை 1 ஏகர் நிலத்தில் ஏர்காலில் மண்ணோடு சேர்த்து தெளிக்கவும். கோதுமைக்கும் கொள்ளுக்கும் பார்லிக்கும் ஏக்ராவுக்கு 400 பவுண்டு எருவை ஏர்காலில் வித்தோடு தெளிக்கவும்.

எருவைப்பற்றிப் பேசும்போது மீன் எரு எப்படி ஆகிறது என்று தெரிந்து கொள்ள அநேகர் சிரத்தையுள்ளவர்களாகிறார்கள். கடையில் விற்பதற்கு அதிகமாக ஆற்றில் மீன் உற்பத்தியாகிறது. விற்பனைக்குப் பிடித்துபோக பிடிக்காத மீன் எல்லாம் ஆற்றங்கரையில் அழுகிப்போக விடுகிறோம். வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோக விடுகிறோம். நமது வயல்களின் வளப்பத்தை உண்டாக்க இம்மீனை உபயோகிக்கலாம். மீனிலுள்ள மாமிச வஸ்து

வும் எலும்பு மண்ணும் செழிப்பிக்கும் குணமுள்ளது. மாமிசவஸ்து ரத்தத்திற்கும் மாமிசத்திற்கும் சமானம். அவைகளின் எலும்பு நிலமிருகத்தின் எலும்புக்கு சமானமானது. செழுப்பிக்கும் வேலையில் மிருகங்களின் தேகாஇரத்தத்தைப்போல் அதிககொழுமையானது. அழுகும்போது 100 பவுண்டு மாமிசவஸ்து $2\frac{1}{2}$ பவுண்டு அமோனியாவைக் கொடுக்கிறது. 400 பவுண்டு அழுகின மீன் ஒரு ஏகருக்குப் போதுமானது. அதிக கொழுமை அதில் உண்டாகும் அமோனியாவுக் குரியது. பயிரை கனத்த பச்சையாகச் செய்கிறது. அதிகவளப்பமாக வளரச்செய்கிறது. பின், விவரிக்கப்படுவது மீன் எருவை உண்டாக்குவதில் ஓர் மாதிரி.

ஏழுபீப்பாய் களிமண், வண்டல் மிஸ்ரமத்தை எடுத்துக்கொள். இரண்டு பீப்பாய் கெட்டியான மரச்சாம்பல். ஒரு பீப்பாய் மீன். ஒரு புஷல் தாளித்த சுண்ணாம்பு. இவைகளை தயார்செய்துக்கொள். அடியில் களிமண்ணை கனமாய்ப் பரப்பு. அதன்மேல் மீனைப் பரப்பு. பிறகு சுண்ணாம்பு நீரைத்தெளி. பிறகு ஒருபரப்பு சாம்பலைக் கொட்டு. அதன்மேல் களிமண் பரப்பு உண்டாக்கு. மறுபடியும் மீன், சுண்ணாம்பு நீர், சாம்பல் வரிசைக்கிரமமாய் ஒன்றின் மேலொன்று பரப்பு. சாமான் எல்லாம் ஆகிறவரையில் இதேமாதிரி செய். அதன் செழிப்பிக்கும் ஆவிகளை வெளிவிடாது தன்னுள் அடக்கிக்கொள்ள களிமண்ணை கனமாய்ப் பரப்பு. மீன் சீக்கிரமாய் மக்க ஆரம்பிக்கும். அதிகமேலான எரு உண்டாகும். அதைக் கிண்டிக்கிண்டி தூளாக்கவேண்டும். 400 பவுண்டு ஒரு ஏகருக்கு உபயோகப்படுகிறது.

சர்க்கரை மிட்டாய்கள்.

ரொட்டிக்கு உபயோகப்படுத்தும் சர்க்கரையை சன்னமாய்த் தூளாக்குவதினால் உண்டாகும் வஸ்துவினாலும் இன்னும் இதரமான த்ருவ அல்லது பஸ்மப் பொருள்களின் சேர்மானத்தாலும் ஆவது சர்க்கரை மிட்டாய்கள். இப்பொருள்கள் பிசின் சம்பந்தமான கரைந்த த்ருவ பதார்த்தத்தால் உண்டாகும் பசையில் இச்சக்கரைத் தூள்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றை பின்பு மெல்லிய பலகைகளாக உருட்டுகிறார்கள். திரைக்கப்பட்ட சரக்கரை பலகையை அச்சிலிட்டு சிறு மிட்டாய்களாக்குகிறார்கள். இதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய முன் ஜாக்ரதை என்னவென்றால், பிசின் நாரைப்போல் வளையும்படி பாகாகவேண்டியதுதான். பின்வருவன் மிட்டாய் செய்வதில் உபயோகமாகும் கரைந்த த்ருவ பிசின் பதார்த்தங்கள். (1) 2. அவுன்ஸ் ட்ராஜஸாந்த கோந்து (Gum tragacanth) I. பைண்டு ஜலம் இவைகளை 36 மணி நேரம் ஓர் சூடான அறையில் ஊறவேண்டியது. முரட்டுத்துணியில் வைக்கவேண்டியது. கோந்தெல்லாம் பிழியப்படுகிறவரையில் துணியை முடிந்து முறுக்கவேண்டியது. இத்தகைய கரைந்த கோந்தில் Iஅவுன்சு நாலைந்து பவுன் சர்க்கரைக்கு போதுமானது.

(2) கரைந்த அரபிக் கோந்து (Gum Arabic) 24 அவுன்ஸ் சர்க்கரைக்கு போதுமானது.

(3) ட்ராஜஸாந்தகோந்து 2 அவுன்சு 6 அவுன்சு கம் அரபிக் (Gum Arabic)

(4) 2பைண்டு ஜலத்தில் கரைந்த 2பவுன் கம் அரபிக் (Gum Araric) இது எல்லா வித மிட்டாய்களுக்கும் உபயோகமானது. மருந்து குளிகை மிட்டாய்க்கு மாத்திரம் ஆகாது (5) 2 குவார்ட்ஸ ஜலத்தில் கரைந்த 5 பவுன் கம் அரபிக்கு Iபைண்டு ஜலத்தில் கரைந்த 2 அவுன்ஸ் ட்ராஜசாந்தி (Gum tragacnnth) ம் எல்லாவித முட்டாய்களுக்கும் உபயோகமாகும்.

*

பெப்பர் மிண்டு.

(1) இருமுறை சன்னமா தூளாக்கப்பட்டு அரைக்கப்பட்டு ஜல்லித்த ரொட்டி அல்லது அப்பத்துக்கு உபயோகமாகும் சர்க்கரையை ஓர் சலவைக்கல் பலகையின்மேல் பரப்பி மத்தியில் பள்ளமாக்கு. கரைந்த கோந்தை அதில்வார். பெப்பர்மிண்டு எண்ணெயோடு பசையைப்போல் பிசைந்துவிடு. சிலர் ஓர் உரலில் அல்லது கல்வத்தில் சக்கரையையும் கோந்தையும் கலக்கப் பிரியப்படுவார்கள். 1 அங்குல கனமாகிறவரையில் அதை ஓர் சலவைகல் பலகையின்மேல் உருட்டித்திரை. கற்பலகையில் ஒட்டிக்கொள்ளாதபடி தவிட்டை உபயோகப்படுத்து. அதை துண்டிக்கிறதற்கு முன்னே அதின்மேல் தூளைத்தூவு உள்ளங்கையால் தேய். அப்படித்தேய்ப்பதால் மெதுவான மேல்பரப்பு உண்டாகும். அதை துடைத்துவிடு. மறுபடியும் ஸ்டார்ச் தூளைத்தூவு. துண்டுபண்ணி மரத்தொட்டிகளில் போடு. உலருவதற்கு ஸ்டோவ்மேல் வை. எல்லா மிட்டாய்களும் இம்மாதிரிதான் செய்யப்படுகின்றன.

(2) ஆங்கிலமுறை. 14 பாகம் வெள்ளை தோய்ச்சலை 150 பாகம் நீரில் 4000 பாகம் அப்ப சர்க்கரையோடு கல. 300 பாகம் ஸ்டார்ச் 1 பாகம் தூளாக்கிய இஞ்சி 20 பாகம் பெப்பர்மிண்டு எண்ணெய் இவற்றோடு கல. இப்படி ஆக்கப்பட்ட பசை சலவை கல்லில் ஒட்டிக்கொள்ளாதபடி போதுமான அளவு உலர்ந்திருக்கவேண்டும். அவைகள் சீமைச் சுண்ணாம்பைப் போல் அவ்வளவு வெண்மையாயிருக்கும்.

(3) முதல் சொன்ன விதத்தில் கோந்து பசைக்கு சேர்ப்பதுபோல இந்த பசைக்கு இன்னும் கொஞ்சம் ஸ்டார்ச்சு சேர்க்க வேண்டும். எல்லா சர்க்கரையையும் உபயோகப்படுத்துகிறதில்லை.

(4) அளவுக்குத் தக்கபடி இன்னும் அதிக ஸ்டார்ச்சு தூளை சேர்க்கவேண்டும். சிறுசிறு துண்டுகளாக்கவேண்டும் கண்ணாடிப் பலகையின்கீழ் உருட்டப்படவேண்டும். இவைகள் பெரும்படி பத்தாய் மாவுசெய்த அப்பத்திற்கு உபயோகப்படும் சர்க்கரையிலிருந்து செய்யப்படுகின்றன. கரைந்த கம் அரபிக் (Gum Arabic) ஜலம்சேர்த்து பசையாக்கு. எலுமிச்சம்பழ ரசம் சிறிதுவார். பெப்பர்மிண்டு எண்ணெய் சேர்த்து ருசியை உண்டாக்கு.

(6) அதிக நேர்த்தியான பளபளப்புள்ள பெப்பர்மிண்டு. இதில் சர்க்கரை இன்னும் பெரும்படிபத்தாய் தூளாக்கப்படவேண்டும் முன்போலவே கலந்து ருசி யுண்டாக்கு. சர்க்கரைதான் எவ்வளவு பெரும்படி பத்தாயிருக்கிறதோ மிட்டாய் அவ்வளவு பளபளப்புள்ளதாயிருக்கும். அதிகமாய் மாவாக்கினால் பளபளப்பு உண்டாகாது. சர்க்கரை எவ்வளவுக் கெவ்வளவு மாவாகாமலிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிசின் கரைந்த நீர் குழம்பா யிருக்கவேண்டும். சாதாரணமாய் கிடைக்கும் பெப்பர்மிண்டு மிட்டாய் இரண்டாந்தரமான பாதி பரிஞ அல்லது ஸ்டார்ச்சு (Farina or Starch) அதற்கு நல்ல நிறம் உண்டாவதற்காக சிறிது நீலத்தைச் சேர்க்கவேண்டியது.

***

இஞ்சி (சுக்கு).

அதிக சன்னமாய் பொடிசெய்த இஞ்சி (சுக்கு) சர்க்கரை ட்ராஜுலாந்த் பிசின் (Gum tragacauth) சேர்த்து சுக்கு பப்பர்மிண்டு மிட்டாய் ஆகிறது. ஒவ்வொரு மிட்டாயிலேயும் 20-ல் 10 கிரெயினுக்கு அதிகமாக்கக் கூடாது.

***

ஆரஞ்சு கிச்சிலிப்பழ மிட்டாய்.

பெப்பர் மிண்டுக்கு சேர்த்த சரக்குதான் இதில் உபயோகமாகிறது அதற்கு வாசனை கொடுக்கும் வஸ்துமாத்திரம் கிச்சிலிப்பழசத்து.

பஞஞ (Banana) மிட்டாய் இதற்கு வாசனை கொடுக்கும வஸ்து பஞஞ (Banana) சத்து.

எலுமிச்சை மிட்டாய் (Lemon) இதற்கு வாசனை கொடுப்பது எலுமிச்சை ரசம். அதிக பாகமான பிசின் கரைந்த நீரையும் சர்க்கரையையும் உபயோகப்படுத்த வேண்டும். எலுமிச்சை ரசத்தில் பிசினை கரைத்துக்கொள்ளலாம்.

***

ரோசா மிட்டாய்.

நெ. I. மிட்டாய்க்கு செய்ததுபோல சர்க்கரை பசையை செய்துகொள். இதற்கு வாசனை உண்டாக்க ரோஜா அத்தரைச்சேர். அல்லது பிசினை ரோஜாநீர் அல்லது பன்னீரில் கரைத்துக்கொள்ளலாம். கொஞ்சம் ரோஜா அத்தரையும் அல்லது சத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் நிறம் உண்டாக்க சிவப்புத்தூளை சேர்க்கலாம்.

***

சிறுவர்த்தகத் தொழில் முறைகள்.

(1) அமெரிக்கா பிஸ்கோத்து, 1 பவுன்மாவு, 2 டிராம் சுடும் மாவு, $\frac{1}{4}$ பவுன் வெண்ணெய் கொஞ்சம் உப்பு. வெண்ணெயை மாவில் சேர்த்து பிசை. பாலை வார்க்கிற மாவில் பிரட்டிக்கொள்ளவேண்டும். பால் சேர்த்து நேர்த்தியான மிருதுவான பிசைந்த மாவாக்கு. $\frac{1}{2}$ அங்குலம் கனமுள்ளதாக திரைக்கவேண்டும். பில்லை பில்லையாக வட்டமாய் வெட்டு. அதிக சூடான அடுப்பில் சுடு. உபயோகிக்கும்போது அறுத்து வெண்ணெயில் தோய்த்துக்கொள்,

***

சுவாசத்தில் வாசனை உண்டாக்கும் வஸ்து.

(2) முட்டை வெள்ளையை எடுத்துக்கொள் எலுமிச்சை ரசம் 2 டிராம் சர்க்கரை கொஞ்சம் இனிப்பான பாதம் எண்ணெய் பன்னீர் கொஞ்சம் இவைகளை யெல்லாம் சேர்த்து பலமணிநேரம் இடித்து நன்றாய்க் கலக்கவேண்டும், புட்டியில் நிரைத்துக்கொள்ளவேண்டும். ஒரு ஒயின் கிளாஸ் நீரில் மேல் சொன்னதில் ஆறு துளி சேர்த்து வாயைக் கொப்பளித்தால் வாய் நாற்றம் நீங்கி சுகமான பரிமள சுவாசமுண்டாகும்.

***

லாவண்டர் வாசனை உப்புகள்.

இவைகளுக்கு அதிக கிராக்கி இருக்கிறது. அமோனியா கார்போனேட்டை சவுக்கம் சவுக்கமாய் வெட்டியது 8 அவுன்சு, லாவண்டர் எண்ணெய் 4 டிராம், இலவங்க தைலம் I அவுன்சு, காசி (Cassie) எண்ணெய் 4 டிராம். எண்ணெய்களை சேர்த்து ஒன்றாய்த் தேய்க்கவேண்டும் பச்சை புட்டியில் அமோனியா சவுக்க பில்லைகளைப்போடு. உப்புகள் அமிழும்படி மேல் சொன்ன எண்ணெய்க் கலப்பை அதின்மேல் வார். அமோனியா காற்றாய்ப் போய் பலம் குறைகிறபோது இன்னும் கொஞ்சம் அமோனியா கார்போனேட்டையாவது அமோனியா க்ளோரைடையாவது அமோனியா திராவகத்தோடு எண்ணெய்களில் சேர்க்கலாம்.

***

அழகு ஜலகம் (குளிக்கும் நீர்.)

இந்த அழகு உண்டாக்கும் குளிக்குநீர் நோயால் தோல் வெளுத்துப் போனவர்களுக்கு அதிக உபயோகம். அதின்முறை. கூடுமானால் மழை ஜலம் அல்லது வெங்காரத்தால் சமனப்படுத்திய வெந்நீரை எடுத்துக்கொள். பின்வரும் மாதிரியில் சிகிச்சா ஸ்நான ஜலத்தை உண்டாக்கு. 4 அவுன்சு ரோஜா நீரோடு 1 அவுன்சு பன்சாயன் (Benzain) டிங்சர் சேர்க்கவேண்டும். உபயோகப்படுத்துவதற்குமுன் ஒருவாரம் வரைக்கும் அப்படியே இருக்கவேண்டும். ஏதோ ஒருவேளை சேர்மான வஸ்துக்கள் நன்றாய்க் கரையும்பொருட்டு கலக்கவேண்டும். கடைசியில் 2 அவுன்சு பனி நீர் சேர்க்கவேண்டும்.

***

பளபளப்பான சோப்பு.

சாதாரண சோப்பை ஆல்கோஹாலில் பதப்படுத்தினால் பளபளப்பு உண்டாகிறது. சாதாரண வகைகளான சோப்புகளில் சர்க்கரையையும் க்ளிஸரைனையும் சேர்ப்பதால் பளபளப்புண்டாகிறது. கொழுப்பினால் உண்டாக்கும் சோப்புதான் இதற்கு அடுத்தது.

ஆல்கோஹாலில் கரைப்பதற்குமுன்னே சோப்பு உலர்த்தப்படவேண்டும். சோப்பை கொப்பரையில் போட்டு காய்ச்சவேண்டும். காய்ச்சும்போது சாராயத்தை உபயோகிக்கவேண்டும். (Spinit) 0849 ஸ்பெஸிபிக் கிராவிடி (Specific gravity) உள்ள 7 காலன் ஆல்கோஹால் 110 பவுன் சோப்புக்கு உபயோகிக்க வேண்டும். பிறகு சோப்பிலிருந்து அசுத்தம் நீக்கப்படுகிறது. மறுபடியும் அதிகபாகம் ஆல்கோஹால் ஆவியாய் போகிறவரையில் சூடேற்றவேண்டும். உருகிய சோப்பை அச்சில் வார்க்கவேண்டும். ஆவியாய்ப் போன ஆல்கோஹாலை மறுபடியும் குளிரச்செய்து ஜலரூபத்திற்குகொண்டுவருகிறார்கள். ஆவியாய்ப் போனதில் மூன்றில் இரண்டு பங்கு மறுபடியும் ஜலரூபமாகிறது. மறுபடியும் உபயோகிக்கிறார்கள். இந்த சோப்பிற்கு வழக்கமாய் நிறத்தை உண்டாக்குகிறார்கள். நிறத்தை உண்டாக்க 100 பவுன் சோப்புக்கு ½ முதல் 1 பவுன் வரையில் மஞ்சளை சேர்க்கிறார்கள் சோப்புக்கு வாசனையும் ஏற்றுகிறார்கள்.

•*•

பெப்பர்மின்டு ஜுஜிபிகள்.

தூளாக்கிய சர்க்கரையில் 45 எலுமிச்சம் பழத்தை பிழியவேண்டும். மரதுடுப்பினால் நன்றாய் கலக்கு. அதில் பெப்பர்மின்டு எண்ணெயில் 20 துளிகள் வார்க்கவேண்டும். மரக்கரண்டியால் நன்றாய் கலக்கு. 3 அல்லது 4 நிமிஷம் கிண்டிக்கொண்டிருக்கவேண்டும். எலுமிச்சம்பழ ரசத்துளியளவு கத்தியால் துண்டு செய். அவைகளை உருட்டு. ஆறுகிறவரைக்கும் அப்படியே இருக்கட்டும். அவைகளை எழுதுகிற காகிதத்தின்மேல் வைக்கவேண்டும்.

***

வச்சிரக்குழம்பு.

வச்சிரம், நீர், வினிகர் சாராயம், ஒவ்வொன்றும் 2-பாகம். இவற்றைக் கரைக்கவேண்டும். ஒருபாகம் ஆல்கோஹால் சேர்க்கவேண்டும். அது நல்ல வச்சிரமாகும்.

•*•

ஊசி செய்முறை.

இப்போது சாமான்களை செய்கிறவர்கள் அவர்களுடைய வேலை ஆகவேண்டிய பல நுட்பமான செய்கைகளையும் காரியங்களையும் விவரித்து எழுதும்படியாக அவ்வளவு தயாள குணத்தை உடைத்தாயிருப்பது நமது அதிர்ஷ்டவந்தான். முற்காலத்தில் சாமான்களை செய்யும் தொழிலாளர்கள் அவர்களுடைய வேலையின் நுட்பங்களின் விவரங்களை இரகசியத்தில் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஆச்சர்யம் என்பது தொழிலாளர்களிடத்தில் குடிகொண்டிருந்தது. போட்டி ஏற்பட்டுப்போகிறதென்கிற பயத்தினால் சாதாரண ஜனங்களுக்கு சாமான்களை செய்வதிலுள்ள விவர ஞானத்தை எட்டாதபடி வைத்திருப்பது மகா உசிதம் என்று கருதப்பட்டது. இம்மாதிரியாக சரித்திரக்காரர்களுக்கு அதிக உபயோகமான சிரத்தையை எழுப்பக்கூடிய தொழில் விவரங்கள் கிட்டாமற் போயிற்று. ஆகையால் நமக்கு ஊசியின் உற்பத்தி எப்போது ஏற்பட்டது அல்லது அந்த விகாரபெரும்பற்றான துவாரம் செய்யும் ஆணிக்குப் பதிலாக இலேசான அழகுள்ள ஊசி எப்போது உபயோகத்திற்கு வந்ததென்பது நிச்சயிக்கப்படத்தக்க சரித்திரக்காரர் வெகுகால ஊசியைப்பற்றி பிரஸ்தாபம் செய்திருக்கிறார். இங்கிலாந்தில் தைக்கும் கம்பியும்

துவாரம் செய்யும் ஆணியும் எலும்பினாலும், தந்தத்தினாலும் இருந்ததாம். அவைகள் இப்போது அநாகரிக ஜாதியார் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற ஊசியைப் போன்றிருக்கின்றன. நூலுக்கு பதிலாக ஓர் மானின் நரம்பை உபயோகித்தார்களாம். ஓர்வித மீனின் விழுங்கு குழையை வேலைக்குத்தக்கபடி வாராகக்கிழித்து சரடாக உபயோகித்தார்களாம். விரலுக்கு போட்டுக்கொள்ளும் மூடி தோலினால் ஆக்கப்பட்டதாம். அவர்கள் அதை தைக்கும்போது முதல் விரலில் மாட்டிக்கொண்டார்களாம். தைக்கும்போது ஊசியை வைத்து தங்களுடைய தேகத்தின் மார்க்கமாய் இழுத்துக்கொண்டார்களாம். தேகத்திற்கு புறம்பாகவும் பக்கமாகவும் இழுக்கவில்லையாம். நிற்க தேர்த்தியான தைக்கும் எஃகுஊசி ஸ்பெயின்தேசத்தில் முதல்முதல்கண்டுபிடித்துசெய்தார்களாம். இங்கிலாந்தில் எலிஜபெத் இராணியின் இராஜ்யபார காலத்தின் 8-வது வருஷத்தில் இலியாஸ் க்லௌஸ் என்ற ஜர்மெனி தேசத்தார் ஸ்பெயின் ஊசி செய்யக் கற்றுக்கொடுத்தாராம். மேரி இராணி காலத்தில் ஒரு நீக்ரோஜாதியான் ஸ்பெயின் ஊசியை சீப் ஸைடில் செய்துக்கொண்டிருந்தானாம். அவன் வேலையை ஒருவருக்கும் கற்றுக்கொடுக்க இஷ்டமில்லையாம். வேறொரு சரித்திரக்காரர் சொல்லுகிறபடி ஊசிமுதல் முதல் இங்கிலாந்தில் 1545வருடத்தில் இந்தியாதேசவாசி ஒருவன் செய்தானாம். அவன் இறந்ததும் அந்த வேலையும் ஒழிந்ததாம். 1650 வருடத்தில் க்ரிஸ் டபர் கிரீனிங் என்பவர் தமது மூன்றுபிள்ளைகளோடு பக்கிங்காம்ஷைரில் லாங்க்ரனிடன் என்கிற இடத்தில் ஊசித்தொழிலை ஆரம்பித்தாராம்.

**

கம்பியை அளவாக வெட்டுதல்.

இப்போது இங்கிலாந்தில் ஊசி செய்யும் இடம் ரெட்டிச் என்பது. அது ஊர்ஸ்டர் ஷைரில் பர்மிங் ஹாமுக்கு 14 மைல் தெற்கே யுள்ளது. அது ஓர் அழகான கிராமம். ஊசிதான் அதில் முக்கியமாய் செய்யப்படுகிறது. எல்லாகுடிகளுக்கும் ஏறக்குறைய ஊசி செய்வதில்தான் உயிர் வாழ்க்கை நடக்கிறது. அநேக வர்த்தகத் தொழில்கள் அவைகளின் இடத்தைப்பற்றி பரம்பரைச் சரித்திரத்தை உடையனவாயிருக்கும், ஆனால் ரெட்டிச்சில் அப்படிப்பட்ட சரித்திரம் ஒன்றும் காணோம். இங்கிலாந்தில் ஓர் மூலையில்தனித்திருக்கும் ஓர் கிராமத்திலிருந்து நமது தேசத்திற்கும் ஐரோப்பா கண்டத்தில் பெரும்பாகத்திற்கும் பிரிடிஷ்குடி ஏற்ற தேசங்களுக்கும் போதுமான ஊசி தயாராவது மிகுந்த ஆச்சரியமே.

ஊசி உற்பத்திசெய்வதில் நடக்கவேண்டிய காரியங்களையெல்லாம் மில்களில்தான் செய்கிறார்கள். ரெட்டிச்சில் ஒரு டஜன் மில்கள் அல்லது பாக்டெரிகள் இருக்கின்றன. அவைகளில் மனிதர்களும் ஸ்திரீகளும் பாலர்களுமாய் ஆறு ஏழு ஆயிரம் ஜனங்களுக்கு வேலை நடக்கிறது. பாக்டெரிகளின் தோற்றத்தில் மேன்மை ஒன்றும் காணப்படவில்லை. அறைகள் அநேக வரிசையான பல கணிகளால் ஒளி நிறைந்திருக்கின்றன. ஊசியை கடைச்சல் செய்வதற்கோ அல்லது தேய்த்து மெருகாக்குவதற்கோ வேண்டிய யந்திர ஏற்பாட்டின் சக்கரங்கள் ஓடுவதற்கு வேண்டிய ஆவி சக்தி அல்லது நீர் சக்தி பூரணமாக சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி

யிருந்தும் அநேகம் சிறு காரியங்கள் கையினால்தான் செய்யப்படுகின்றன. சில காரியங்கள் மாத்திரம் யந்திரங்கள் இருக்குமிடத்தில் நடத்தப்படுகின்றன. ஊசி உற்பத்தியில் செய்யவேண்டிய வேலைகள் அநேகமிருக்கின்றன. வேலைப்பாகுபாட்டை அவை நன்றாய் புலப்படுத்துகின்றன. அற்பவிலையான சரக்கிற்கு தொழிலினால் உண்டாக்கப்படும் மேன்மைக்கு ஊசி உற்பத்தி சாக்ஷியாகிறது. சில நேர்த்தியான ஊசி வகைகள் எடைக்கு எடை பொன்னுக்கு மாறுகின்றன. ஊசி வேலைக்காரனுக்கு உலோகச் சரக்கு ஷெப்பீல்ட் அல்லது பர்மிங்ஹாம் என்னுமிடங்களிலிருந்து வருகிறது. அது மெதுவான சுத்தமான எஃகு கம்பியாக விருக்கிறது. பல பரிமாணத்தையும் பாரத்தையும் உடைய சுருளைகளாக கம்பிகள் இருக்கின்றன. கம்பிகளின் பரிமாணங்கள் அவைகளுக்கிட்ட நெம்பர்களினால் தெரிந்துகொள்ள வேண்டியது. இந்த நெம்பர்கள் சில வெட்டுகளுக்கு சரியாக இருக்கின்றன. இந்த வெட்டுகளும் இலக்கமிடப் பட்டிருக்கின்றன. இதற்கு பேர் காஜ். ஓராவது நெம்பருள்ளது கனத்தில் 1 அங்குலத்தில் 22.ல் ஒரு பாகம் முதல் வெட்டில் சரியாய்ப்பிடிக்கிறது. 12-வது நெம்பருள்ளது குறுக்களவில் ஒரு அங்குலத்தில் நூற்றில் ஒரு பாகம். மத்தியிலுள்ள நெம்பர்கள் கனத்தில் இவ்விரண்டு அளவிற்கும் மத்திய தரமாயிருக்கிறது. சுருளைகள் முதலில் அளவாக இரண்டு ஊசி செய்யப் போதுமானதாக வெட்டப்படுகின்றன. துண்டுகள் கம்பியை கத்தரியின் இலைகளுக்கு மத்தியில் வைப்பதால் ஆகிறது. வெட்டுகிற ஷாப்பின் சுவர்களில் இந்த கத்தரி பிடிப்பட்டிருக்கிறது. வேலைக்காரன் தன்னுடைய துடையால் கத்தரியை அழுத்துகிறான். இம்மாதிரியாகத் தரித்து சேகரித்த துண்டுகளின் நெம்பர்கள் செய்யப்படவேண்டிய ஊசிகளின் பரிமாணத்தைச் சார்ந்திருக்கிறது. ஆறுவது நெம்பர் கம்பி வெட்டப்பட்டால் இருபத்தைந்து அல்லது முப்பது துண்டுகளுக்குப் போதுமானக் கம்பிச் சுருளையை பிரிக்கிறார்கள். ஒவ்வொரு துண்டும் ஏறக்குறைய மூன்று அங்குல நீளமுள்ளது. அதாவது இரண்டு ஊசிகள் செய்வதற்குப் போதுமானதாக இருக்கிறது. இந்த துண்டுகள் சுருளையிலிருந்து துண்டிக்கப்படுவதால் அநேகமாய் வளைவாகத்தான் இருக்கும். அவைகள் நிமிர்த்தப்படவேண்டும். அல்லாமற் போனால் பின் செய்யும் வேலைகளுக்கு சரிப்பட்டு வராது.

நிமிர்த்தும் மாதிரி சுளுவானதும் சாமர்த்தியமானதுமாக இருக்கிறது. அநேக ஆயிரம் துண்டுகளை ஒன்றுச்சேர்த்து இரண்டு விசாலமான கனத்த வளையங்களுக்குள் நுழைக்கிறார்கள். அவைகள் விறகு கட்டைப்போல் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகின்றன. இப்போது உலையில் ஓர் தொட்டியில் இந்த கட்டை வைக்கிறார்கள். அதில் சிவக்கக் காய்கிறது. பிறகு அதை எடுக்கிறார்கள். இரும்பு தகட்டின்மேல் வைக்கிறார்கள். இப்போதுகூட துண்டுகள் வளையங்களில்தான் இருக்கின்றன. வேலைக்காரன் மெதுவாக்கும் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு இரண்டு வளையத்திற்கும் மத்தியில் வைத்து முன்னும் பின்னுமாக உருட்டுகிறான். இம்மாதிரியாக துண்டுகள் ஒன்றின்மேலொன்று உருளும்படிச் செய்கிறான். ஒன்றோடொன்று உருய்வதினால் நிமிர்கின்றன. இப்போது உண்டாகும் சப்தம் முதலில் கடினமாகயிருக்கிறது. பிறகு சீக்கிரமாய் குறைந்த சப்தமாய்விடுகிறது. அப்போது வேலைக்காரன் தான்உத்தேசித்த காரியம் முடிந்தது என்று தெரிந்துகொள்ளுகிறான்.

இரண்டு ஊசி ஆகிறது. இந்த வேலையின் ஜயந்தான் வேலைக்காரர்களுடைய காலம் பயனுள்ளதாகும் அதினால்தான் அவர்களுக்கு சந்துஷ்டி உண்டாகும் ஊசியை உண்டாக்குவோன் இந்த வேலையின் ஜயப்பிரதாப முடிவின்மேல்தான் சாட்டை அறுத்துவிடாதென்று உத்திரவாத வார்த்தைகளை ஊசி வேலைக்காரன் பகிரங்கப்படுத்த வேண்டியது. ஒருகாலத்தில் பொன் வெள்ளி ஊசி காதுகளை உபயோகித்தார்கள். அதைக்காட்டிலும் நன்றாயிருக்கும் என்று உத்திர வார்த்தைகளை ஊசியின் மேல் பொறித்து வைப்பான்.

(தொடரும்.)

***

விஸ்வகர்மாக்களுக்கு அறிக்கை

வெளிதேசங்களிலுள்ள விஸ்வகர்ம சந்ததியைச் சேர்ந்த கனவான்களிற் சிலர் நமது இந்திய மந்திரியாகிய மிஸ்டர் மான்டேகு துரையவர்கள் சென்னப்பட்டணத்திற்கு விஜயஞ்செய்யும்போது விஸ்வகர்ம வம்சத்தின் சீர்திருத்தவிஷயமாய்என்னென்ன ஏற்பாடுகள் செய்யும்படியாய் கேட்க வேண்டுமென்பதாய்வெளியூர் களிலிருந்து நமக்குபலகடிதங்கள்எழுதியிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி கடிதங்கள் எழுதுவதற்கு நமக்கு தேக அசௌக்கியத்தால் போதுமான சாவகாசமில்லாதபடியால் எல்லாருக்கும் ஒரே பதிலாக நமது தொழில் பத்திரிகையில் பின் வருமாறு தெரிவிக்கின்றோம்.

(1) விஸ்வகர்ம சந்ததியார்கள் இச்சென்னை ராஜதானியில் சற்றேறக்குறைய பதினைந்து லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களில் நூற்றுக்கு இரண்டு பேர் விகிதமாத்திரமே ஏதாவதொரு பாஷையைக் கற்றவர்களாயிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் கல்வி வாசனையே இல்லாதவர்களாயிருக்கிறபடியாலும் இவர்கள் மிகுந்த ஏழைகளா யிருக்கிறபடியாலும் இந்த விஸ்வகர்ம சந்ததியைச்சேர்ந்த சிறுவர்களுக்கும் சிறுமியர்களுக்கும் பிரைமெரி ஆரம்பக் கல்வியை ஆந்திரம் தமிழ், கன்னடம், மலையாளம் முதலிய சுய பாஷைகளிலும், இராஜாங்க பாஷையாகிய ஆங்கிலேய பாஷையிலும் கட்டாயமாகவும், இலவசமாகவும் கற்பிப்பதற்கு கவர்ன்மெண்டு பாடசாலைகளிலாவது மற்ற மிஷனரிகள் முதலானவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாடசாலைகளிலாவது சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவளிக்க வேண்டுமென்றும், இப்படிப்பட்ட பாடசாலைகள் இல்லாத பட்டணங்களிலும் பெரிய கிராமங்களிலும் நூதனமான பாடசாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்றுங் கேட்க வேண்டும்.

(2) இச்சென்னை இராஜதானியின் முக்கிய பட்டணமாகிய சென்னைப்பட்டணத்தில் பீ.ஏ. வுக்குப்பின்னுள்ள இண்டர்மீடியேட் வகுப்புகளில் ஐந்து பிள்ளைகளும் சகண்டரி வகுப்புகளில் சுமார் ஐம்பது பேர் மாத்திரமும் வாசித்து வருகிறார்களாகையால் மற்ற பட்டணங்களில் இதற்கும் குறைவாகவே இருக்குமென்பது நிதர்சனமாம். ஆகையால் படிக்கக்கூடிய சிறு

வர் பலரிருந்து தாய் தந்தைகளுடைய ஏழ்மையாலும் இன்னும் வேறு சில காரணங்களாலும் புஸ்தகங்கள், புதுவிதமாய் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் நோட் புக்குகள் முதலிய சாதனங்களை வாங்குவதற்கும் ஆறுமாதத்திய சம்பளத்தை நான்கு மாதங்களிற் செலுத்தி வாசிப்பதற்கும் வேண்டிய திரவிய சகாயமில்லாமையால் படியாமல் நிறுத்திவிடுகிறார்கள். இவர்களுக்கு வேண்டியவாறு பொருட்சகாயஞ் செய்ய வித்தியாநிதி ஒன்று ஏற்படுத்தும்படி கேட்கவேண்டும்.

(3) ஜப்பான், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குப்போய் நூதனமான தொழில்களைக் கற்றுக்கொண்டு வருவதற்கு கவர்ன்மெண்டார் ஸ்காலர்ஷிப்புகள் ஏற்படுத்தும்போது இந்த ஜாதியார் தொழிலாளிகளாகையால் இந்த ஜாதிச் சிறுவர்களுக்கே அந்த ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுக்கும்படியாய் தக்க ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கவேண்டும்.

(4) கவர்ன்மெண்டாராலும் மற்றவர்களாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் அன்னியஜாதியார் முன்னிட்டு அதிகமாய்ச் சேர்ந்திருக்கிறபடியால் இந்த விஸ்வகர்ம ஜாதியாரைச் சேர்க்காமல் புறக்கணிக்கிறார்கள். ஆகையால் இச்சாதியாரை சேர்த்துக்கொண்டு அவர்கள் வேலைத்திறமைக்குத் தகுந்த கூலியாவது சம்பளமாவது கொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்யும்படியாய் கேட்கவேண்டும்.

(5) விஸ்வகர்ம சந்ததியாரில் ஆங்கிலேய பாஷையை வாசித்தவர்கள் மிகச் சிலரே யிருக்கிறார்கள். இவர்களும் பிராமணருடைய கொடுமையாலும் மற்ற காரணங்களாலும் மிகத்தாழ்ந்த உத்தியோகங்களிலேயே இருக்கிறார்கள். ஐரோப்பியரையும், மகம்மதியரையும் மெடிகல் காலேஜ் முதலிய வித்தியாசாலைகளிலும் கவர்ன்மெண்டு உத்தியோகங்களிலும் யூனிவர்ஸிட்டி பரீட்சைகளில் தேறாதவர்களாயிருந்தாலும் சேர்த்துக் கொள்ளுகிறது போல் இந்த சந்ததியாரையும் சேர்த்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்யும்படி கேட்கவேண்டும்.

(6) யுத்தங்காரணமாக ஜர்மனி, ஆஸ்டிரியா, ஸ்வீடன் முதலிய தேசங்களிலிருந்து இத்தேசத்தார் யாவருக்கும் தினசரி உபயோகத்திற்கு வேண்டிய கத்தி, கத்திரி, சிம்னி, மாச்சுபெட்டி, குண்டூசி முதலிய சாமான்கள் வருவது நின்றுவிட்டபடியால் இத்தேசத்தில் மெட்ராஸ் முதலிய பட்டணங்களில் பல தொழிற்சாலைகள் ஏற்படுத்தி மிஷின் முதலிய ஆயுதங்களைச்செய்யவும், மேற்படி சாமான்கள் செய்வதற்கான தொழிற்சாலைகள் ஏற்படுத்தி விஸ்வகர்ம சந்ததியாரை அனேகமாய் வேலைகளில் அமர்த்திக்கொண்டு தக்க சம்பளம் கொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்யும்படியாய் கேட்கவேண்டும்.

(7) சென்னை மாகாண சட்ட நிரூபண சபை திருத்தியமைக்கப்படுவதாயிருந்தால் விஸ்வகர்ம சந்ததியாரின் பிரதிநிதிகள் ஒருவர்கூட தற்காலத்தில் மேற்படி சபையில் இல்லாதபடியால் இச்சென்னை ராஜதானியின் வடபாகத்திலிருந்து இருவரையும் தென்பாகத்திலிருந்து இருவரையும் மத்திய பாகத்திலிருந்து ஒருவரையுமாவது விஸ்வகர்ம மகாஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை சேர்த்துக்கொள்ளும்படி கேட்கவேண்டும்.

(8) ஜில்லா, தாலூக்கா போர்டுகளிலும்

யூனியன்களிலும் முனிசிபாலிடிகளிலும் விஸ்வகர்ம சந்ததியாரின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கவேண்டும்.

(9) தொன்றுதொட்டு இந்த ஜாதியாருடைய பட்டப்பெயராகிய ஆச்சாரி யென்பதை சென்னை கவர்ன்மெண்டார் ஒரு காரணமுமின்றி மாற்றிவிட்டதை ரத்து செய்து பழையபிரகாரமிருக்கும்படி ஏற்பாடு செய்யும்படி கேட்கவேண்டும்.

இன்னும் இவைபோன்ற சீர் திருத்தங்கள் முக்கியமானவைகளாய் தோற்றுவதையும் சேர்த்துக்கொள்வது நலமாகும்.

இனிமேல் காலதாமதஞ் செய்யக்கூடாது. மதுரைவாசிகளும், தெலுங்கு தேசங்களிலுள்ளவர்களும் பிரத்தியேகமாக மகஜர்கள் தயார்செய்து விட்டார்கள். மற்றவர்களும் உடனே தக்கபடி தயார்செய்து கொடுக்கவேண்டும். உடனே ஒரு பொதுக் கூட்டம் கூட்டவேண்டும்.

* * *

தேசோத்தாரண தத்வம்.

விஸ்வநாதன் என்ற ஜேஷ்டன்
இராமச்சந்திரன் என்ற கனிஷ்டன் ஆகிய
இவர்களுக்கும் நடந்தான
சம்பாஷணை.

இராமச்சந்திரன்—பெரிய தேசாபிமானியான ஒருவர் நம்நகரமண்டபத்தில் இன்று சுதேசியத்தைப்பற்றி பிரசங்கஞ் செய்வாராம். நாம் முந்திபோகவேண்டுமண்ணா!

விஸ்வநாதன்—அதிலென்ன பிரயோஜனம் விடு. வேலைக்குப் போகலாம் வா.

(மற்றொரு சமயத்தில்)

இராம.—நம் விஸ்வகர்ம ஜாதியார் நம் ஊரில் கான்பரன்ஸ் கூட்ட யோசித்திருக்கிறார்களாம், அதற்கு நாம் வேண்டிய வேலைசெய்ய வேண்டா? அண்ணா!

விஸ்வ.—ஏன் வீணாய் அலைகிறாய்? நம் வேலையைப்பார்.

(மற்றொரு சமயத்தில்)

இராம.—ஊரெங்கும் சுதேசியம் என்றும் சுயராஜ்யம் என்றும் வழங்கிவருகிறதே நாமும் அந்த உத்ஸாகத்தில் நிற்கவேண்டாமா?

விஸ்வ.—அதிலென்ன பிரயோஜனம் வீண் கிளர்ச்சி, எனக்கு அவைகளில் நோக்கமில்லை.

(இவ்வாறு பலசமயம் நிராகரித்ததின்மேல்)

இராம.—ஊரெல்லாம் கொண்டாடுகிறதை நிராகரிக்கிறீர்களே! உங்களுக்கு தேசாபிமானத்தில் பற்று இல்லையா? நம் குலோத்தாரணத்தில் பற்று இல்லையா? நம் வேலை ஒன்றுதானா பெரிது! ஹோம் ரூல்காரர் சொல்லுகிறதையும் ஓரே அடியாய்த் தள்ளுகிறீர்களே! இப்படியாக இருக்கிற விஷயமென்ன சொல்லவேண்டுமண்ணா!

விஸ்வ.—தேசோத்தாரண மானாலும் குலோத்தாரண மானாலும் அதனுடைய தத்வ மார்க்கங்களைக் கடைப்பிடித்தாலன்றி அக்காரியம் சித்திப்பதின்று. நீயோ அநுபவமுதிர்ச்சிப் பெறாமல் வீண் ஆடம்பர காரியங்களுக்கு முற்படுவதாகிறாய். அப்படிப்பட்ட வெறும் உத்ஸாக காரியங்களுக்கு அதாவது பிரயோஜனத்தை விளைவிக்காத காரியங்களுக்கு, என் மனம் செல்லவில்லையாதலால் நம் வேலையை மாத்திரம் கவனிப்பதாயினேன்.

இராம.—அப்படிப்பட்ட தத்துவமார்க்கங்களை இதுகாறும் சொல்லாமலிருந்த

தென்ன? இப்பொழுதாவது சொல்லவேண்டுமென்று!

விஸ்வ.—எந்த விஷயமானாலும் சமயமறிந்துச் சொல்லவேண்டு மென்றும், சமயந்தவறின காலத்தில் சொல்வது வீணாகு மென்றும்; சாஸ்திர சம்மதம். ஆதலால் தக்க சமயத்தில் சொல்லலா மென்றிருந்தேன். இப்பொழுது தக்க சமயந்தானாயினும் இன்னும் சில கனவான்களைக் கூட்டிவை. அப்பொழுது பேசுவோம்.

(அப்படியே கூட்டப்பட்டது)

இராம.—(கூட்டத்தின் முன்பாக) கனவான்களே! இன்று கூடிய கூட்டமானது வீண் உத்ஸாகத்திற்காக ஏற்பட்டதல்ல. இதில் பேசப்படும்விஷயம் வெறும் மனோகிளர்ச்சியானதுமல்ல; தத்துவமான விஷயம் பேசப்படும். அந்த தத்துவம் தேசோத்தாரணத்தைப் பற்றியதாயிருக்கும். ஆனதால் சாமான்ய ஜனங்களைக் கூட்டி வைக்காமல் கனவான்களையே கூட்டிவைத்துள்ள மகா சபையாக இங்கு மதிக்கற்பாலது. கவனியுங்கள்! கவனியுங்கள்!!

விஸ்வ.—(எழுந்திருக்கவும் கூட்டத்தார் ஒரே கவனமாயிருத்தல்.) கனவான்களே! இங்கு பேசப்படுவது தேசோத்தாரணத்தைப் பற்றிய தத்துவமேயாகும். அனுபவமில்லாமல் காதால் கேட்டவரையினும், படித்தவரையினும் உண்டான மனக்கிளர்ச்சியைக் கொண்டு இராமாயணஞ் சொல்வதுபோல் சொல்லவும் அதற்கு யாவரும் கைகொட்டிவிட்டு இல்லஞ்சென்றதும் மறந்து என்ன நடந்தது என்று வீட்டிலுள்ளவர் கேட்டால் ஒருவர் பிரசங்கம் செய்தார், அநேகர் வந்திருந்தார்கள், நன்றாய்ப் பிரசங்கித்தார், அவருக்குப் பூமாலை போடப்பட்டது, என்று சொல்லிக் கழிப்பதுபோ லில்லாமல், உங்கள் மனதில் பதிந்திருக்கவேண்டிய விஷயமே நான் கூறப்போவதாகும், கவனியுங்கள்.

தேசோத்தாரண மென்றால், அதற்குள் குலோத்தாரணமும் அடங்கி யிருக்கிறது. குலங்கள் பிரஷ்டமடைவதான மார்க்கமுடையதா யிருந்தால், அது தேசோத்தாரணமாகமாட்டாது. அந்தப் பெரிதான தேசோத்தாரணத்தைக் கவனிப்பதைப் பார்க்கினும், குலோத்தாரணத்தைக் கவனித்தல் போதுமானதென்றாலோ, தேசோத்தாரணம் நிலைபெற்றால்தான், குலோத்தாரணமும் நிலைபெறும். ஜாதிக் கட்டுகள் நீங்கி ஒன்றாய்விட்டால் நலமென்று எண்ணி சில தேசாபிமானிகள் குழப்ப மார்க்கத்தைப் பற்றாதலையும், நான் ஒவ்வோர் சமயத்தில் கவனித்ததுண்டு, அப்படிக் குழப்பம் ஏற்படுமாகில் அதனால் மனுஷனுடைய சுகிர்தஜீவன மார்க்கத்திற்குந் தடுமாற்ற மேற்படலாம். சமயாசாரங்களை ஒருவாறு சீர்திருத்தலாமே யன்றி வர்ணாச்சிரமக் கட்டுகளைப் பிளவிடக்கூடாது. ஆனதால் நான் தேசோத்தாரணத்தைப் பற்றிக் கூறுவதாயினும், அது குலோத்தாரணத்தைத் தழுவியதாகவும் சர்வஜாதியாருக்குப் பொருத்தமாகவும் இருக்கும்.

நாம் கவனிப்பதாயிருக்கிற தேசோத்தாரணமானது மூன்று தத்துவங்களாலே நிலைபெறக் கூடியது. மூன்று தத்துவங்களாவன:—1, ஸ்திரீமணிகள்

2. தொழில் வளமை

3. நாகரீகச் சிறப்பு

முதலாவதைப் பற்றியும், மூன்றாவதைப் பற்றியும் பின்னொரு சமயம் கூறுவாம். இரண்டாவதான தொழில் வளத்தைப்பற்றி இங்கு கூறுவோம். இந்த தொழில் வளமானது கம்மாளருடைய மொறுப்பிலிருக்கிறது. கம்மாளர் என்பது ஜகத்குரு எனப் பொருள்படும். ஜகத்குரு என்றதினால் உலகத்திற்கு அதிபதியா யிருக்க வேண்டிய அவசியமில்லை. பின் என்னவிதமா யிருக்கவேண்டு மெனில், பூபதிகளைக் கண்காணித்துக்கொண்டு (அதாவது துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனமுறைமைக்கு ஹிதகாரர்களாயிருப்பது) பின்னும் உலக ளத்துக்குதான் காரணமா யிருப்பது. இந்த நுட்பத்தைப் பற்றாமல் விஸ்வகர்மாக்கள் இப்போது அஸ்தமன நிலையில் இருக்கிறார்கள். அந்தோ! விஸ்வகர்மாக்கள் அஸ்தமன நிலைமையிலிருந்தால் தொழில்வளம் எவ்வாறு சித்திக்கும்? தொழில்வளமில்லையேல் உலகம் எவ்வாறு சுகிர்த நிலைமையை அடையும் (இங்கு உலகமென்றது பாரத பூமி (Iidin) எனலாம்.) தொழில்வளமில்லாமல் சுதேசியம் என்று பேசிவிட்டதினாலும், சுயராஜ்யம் என்று கேட்டுவிட்டதினாலும், வந்தேமாதரம் என்று கூவிவிட்டதினாலும் தேசோத்தாரணம் சித்திக்கமாட்டாது. ஆனதால் தேசோத்தாரணத்திற்கு ஆதாரமான தொழில் வளத்தைப் பற்றி விஸ்வகர்மாக்களும் மற்ற கனவான்களும் கவனிக்கத்தக்கசமயமிதுவாகும். அயல்நாட்டுச் சாமான்கள் கப்பல்மூலமாய் வந்துகொண்டிருப்பதெல்லாம் இறக்குமதி செய்யும் நாட்டிற்குக் கேடேயாகும். அந்தந்த நாட்டிலேயே விலைபடுவதுதான் யுக்தம். பண்டமாற்று வியாபாரத்திற்கும் ஜனசஞ்சாரத்திற்குமே கப்பல் போக்குவரத்து உரியது. இனி தொழில்முறையைப்பற்றிக் கூறுவோம். தொழில்முறைகளில் சுமார் எழுபது விதங்கள் இருக்கின்றன. எழுபது விதங்களினும் அநேக

உட்பிரிவுகள் இருக்கின்றன. ஷை விதங்களைப் பார்த்தால், அவ்வளவும் தேவையாகத் தோன்றுவதோடும், அவ்வளவு தொழில் முறைகளும் ஒரு தேசத்தில் நடைபெறுமானால், அத்தேசம் உத்தாரணமாயிருக்குமென்று வெள்ளிடை மலைபோலத் தோன்றுவதாகும்.

(தொடரும்)

ஸ்ரீ. சா. பு. த—தி.

திருநெல்லை.

***

தேகப்பயிற்சியின் மேன்மை.

நந்தேசத்துச் சிறுவர்கள் ஒவ்வொருவரும் அதி காலையிலும், மாலையிலும் தேகப்பயிற்சி செய்து தேகத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமான காரியமென்று நம்மவர்கள் அனைவருக்குந் தெரிந்த விஷயமே. இதற்கு ஆட்சேப மொன்றுமில்லை. தேகப்பயிற்சியுள்ளவர்களையும் தேகப்பயிற்சி யில்லாதவர்களையும் நாம் நிதரிசனமாகப் பார்த்து வருகிறோம். அவர்களுடைய தேக வன்மைக்கும் இவர்களுடைய தேக வன்மைக்குமுள்ள வித்தியாச மென்னவென்றால் தேகப்பயிற்சி கிரமமாய் செய்து தேகவன்மையுள்ளவர்கள் தற்செயலாய் கல்விடறி காலில் காயம்பட்டாலும் கீழே விழாமல் முன் செய்திருக்கும் தேகப்பயிற்சியின் காரணத்தால் சமாளித்துக்கொள்வார்கள். அவ்வித பயிற்சியில்லாதவர்கள் எவ்வளவு பலசாலிகளா யிருந்தாலும் ஸ்தூல தேகத்தவர்களாயிருந்தாலும் காலில் கல் தாக்கியவுடன் கீழே குப்புறவிழுந்து பலத்த காயமடைந்து ரொம்பவும் கஷ்டப்பட்டு ஆஸ்பத்திரி முதலான சிகிச்சை செய்யு

மிடங்களுக்குப்போய் அதிக பணச்செலவு செய்து சௌக்கியப்படுத்திக்கொள்ள வேண்டியதாய் நேரிடும். தேகப்பயிற்சியுள்ளவர்கள் எவ்வளவு தூரமான ஊர்களுக்கு போகவேண்டியதா யிருந்தாலும் வண்டி முதலிய சாதனங்களை விரும்பாமலும் ஆயாசப்படாமலும் கால் நடையாகப் போவார்கள். சென்னையிலிருந்து காஞ்சிபுரம் முதலான ஊர்களுக்கும் நடந்து போய் சீக்கிரத்தில் திரும்பி வருவார்கள். தேகப்பயிற்சி யில்லாதவர்கள் அரை மைலுக்குக் குறைந்த தூரமான இடத்திற்கு போகவேண்டி யிருந்தாலும் டிராம்வண்டி, ஜட்கா, ஒத்தைமாட்டுவண்டி, பைசைகில் முதலிய சாதனங்களைத் தேடுவார்கள். இச்சாதனங்களில்லாவிட்டால் குறித்த இடங்களுக்குப் போகமாட்டார்கள். கொஞ்சதூரம் நடந்தால் அதிக ஆயாசமும் இளைப்பும் அடைவார்கள். இவர்கள் வயிறு நிறைய ஆகாரம் உண்டிருந்தாலும் கொஞ்சதூரங்கூட நடக்கமாட்டார்கள். அப்படி நடந்தால் பெருமூச்சும், இறைப்பும் உண்டாகும். தேகப்பயிற்சி யுள்ளவர்கள் ஆயாசம், இளைப்பு, இறைப்பு, பெருமூச்சு, கால் அசதி முதலியவைகளில்லாமல் சுகமாய் வாழ்வார்கள். இவற்றை நன்றாயறிந்த நமது காருண்யமுள்ள கவர்ன்மெண்டாரும் மற்ற ஸ்கூல் மேல் அதிகாரிகளும் ஒவ்வொரு வித்தியா சாலைகளிலும் ஜிம்னாஸ்டிக்ஸ் என்னும் தேகப் பயிற்சியை ஒவ்வொரு பிள்ளையும் கட்டாயமாய் செய்யவேண்டுமென்கிற நிபந்தனைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்கு தேகப்பயிற்சி செய்விக்கத்தக்க உபாத்தியாயர்களையும் நல்ல சம்பளங்கொடுத்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வித ஏற்பாடுகளில்லாத பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பிள்ளைகளின் தாய் தந்தையர்கள் அவர்களை வேறு தேகப்பயிற்சி சாலைகளுக்கு அனுப்பி அவர்கள் தகுந்த தேகப்பயிற்சி காலையிலும், மாலையிலும் தவறாமல் தினந்தோறும் செய்யும்படியான ஏற்பாடுகள் செய்யவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் நஞ்சிறவர்கள் கொஞ்சகாலத்திற்கு பின்னர் நடக்கவே முடியாமல் குந்தின விடத்திலேயே யிருந்துகொண்டு எந்தவேலையும் செய்ய வலுவில்லாதவர்களாய் விடுவார்கள். நாமே நம்முடைய பிள்ளைகளை கெடுத்துவிடுவது போலாகும். எக்காலத்திலும் எத்தேசத்திலும் பிள்ளைகளைப் பெற்றவர்கள் தாங்கள் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய ஏற்பாடுகள் தங்கள் பிள்ளைகளுக்கு கட்டாயமாய் செய்யவேண்டும்.

வீட்டில் கர்லா, ஜோடி, செக்கோலா என்னும் சாமான்களை வாங்கி வைத்து காலை மாலைகளில் கால்மணி அரைமணி நேரம் அதுகளை உபயோகித்து வந்தால் தேகத்திற்கு சுகமாகயிருக்கும். ஆனால் இவ்வித நற்காரியங்களைச் செய்யச்சொன்னால் சில நற்குணம் வாய்ந்த பிள்ளைகள் கொடிக்குப்போய் போக்கிரி பிள்ளைகளுடன் சேர்ந்து வீண் வம்புக்கும் குத்து சண்டை போடுவதற்கும், குஸ்தி பிடிப்பதற்கும் கோல் விளையாடுவதற்கும் சென்று கெட்ட சாவகாசத்தில் நுழைந்து விடுவார்கள். அவ்வித துர்ப்பழக்கத்திற்கும் விடக்கூடாது. எதுசெய்தாலும் தான் அடக்கத்திலிருக்கும்படி பெரியோர்கள் போதிக்கவேண்டும்.

பல குறிப்புகள்.

சென்னையில் கைத்தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அநேக நாட்களாக முயற்சித்தும் எழுதியும் விளம்பரப்படுத்தியும் யாரும் கவனிக்கவில்லை. அதன் காரணம் தொழில்களைச்செய்து முன்வரவேண்டுமென்கிற ஊக்கமின்றில்லாமையாயிருக்கவேண்டும். கஷ்டத்திலேயே ஆழ்ந்திருக்கும் நம்மவர்களுக்கு சுகம் எதற்காக என்பதாக நினைத்து இதை இவர்கள் கவனிக்கவில்லைபோலும். அன்றி பலர் இவ்விளம்பரங்களையும் பத்திரிகைகளையும் வாசிக்கவில்லைபோலும். அப்படியுமில்லாவிட்டால் ஏன் இவர்கள் அது விஷயத்தில் கவனிக்கப்படாது? கூலிக்காரராக வேறொருவரிடத்தில்போய் கைகட்டி வேலைசெய்து பயந்து கூலி வாங்கிவரும் ஆசாமிகள் தங்கள்தங்கள் சக்தியானுசாரம் ஷேர் அதாவது பங்கு சேர்ந்து தொழில்செய்து அதனால் வரும் லாபத்தை ஏன் தெளவமாக அடையக்கூடாது? நாம் செய்யும் சாமான்களை நாமேஏன் வியாபாரம் செய்யக்கூடாது? கூட்டுறவுச்சங்கங்கள் சேர்ந்தால் எப்பேர்ப்பட்ட தொழில்களையும் சுலபமாக செய்து முடிக்கலாமல்லவா? எப்பேர்க்கொத்த வியாபாரங்களையும் செய்து முடிக்கலாமல்லவா? இது விஷயத்தில் ஏன் நம்மவர்கள் கவனித்து முன்வரக்கூடாது? ஒவ்வொருவரும் முன்வராவிட்டாலும் முன் வரப்பட்டவர்களுக்கேனும் ஒத்தாசைகள் செய்து உற்சாக மூட்டினாலும் எடுத்த காரியம் பின்னடையாமல் முன்வருமல்லவா? இவ்விஷயத்தில் இனியேனும் கவனம் செலுத்திப் பாடுபடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தவர்கள் ஒற்றுமையும், ஊக்கமும், தளராத முயற்சியும், கல்வியும் உடையவர்களா யிருக்கிறபடியால் எந்த காரியத்தைச்செய்ய நினைத்தாலும் ஆரம்ப சூரத்துவமாய் முதலில் மாத்திரம் அப்படிச் செய்யவேண்டும் இப்படிச் செய்யவேண்டுமென்று பெரிய பெரிய யோசனைகளும் ஏற்பாடுகளும் செய்துவிட்டு பின்னிட்டு ஒருவர் போகிறவழி மற்றொருவர் போகாமல் ஒற்றுமைக் குறைவால் எடுத்த காரியத்தை தளரவிட்டுவிடும் நமது தேசத்தவர்களைப்போல் செய்யாமல் அவர்கள் எடுத்தகாரியத்தை பூர்த்தியாயும் ஒழுங்காயும் நால்வர் மெச்சத்தகுந்ததாயும் செய்து முடிக்கிறார்கள். ஆகையால்தான் அவர்கள் மற்ற தேசத்தவர்களைக் காட்டிலும் தொழிலிலும், விவசாயத்திலும், வர்த்தகத்திலும், செல்வத்திலும் நாகரீகத்திலும் மேம்பாடடைகிறார்கள். இத்தேசத்தார் மேற்கூறிய ஒற்றுமை ஊக்கம் முதலிய நற்குணங்கள் இல்லாமையால் வரவர க்ஷீணதசையை அடைந்து வருகிறார்கள்.

நம்மவர்கள் மற்ற தேசத்தார்களைப்பார்த்தாவது இனிமேல் மேற்கூடிய நற்குணங்களுடையவர்களாய் நம்மிந்தியா தேசம் மேல்நிலைமை யடையக்கூடிய ஏற்பாடுகளை சீக்கிரத்தில் செய்யும்படியாய் நம்முடைய தொழில் பத்திரிகையில் நாம் அடிக்கடி எழுதி வருவதை ரொம்பவும் கவனிக்கும்படியாய்க் கோருகிறோம். எல்லா ஜாதியாரும், எல்லா மதஸ்தரும் எல்லா பாஷைக்காரரும் ஒன்றாய் சேர்ந்து ஏக மனதுடையவராய் ஒற்றுமையுடன் இந்த காலத்தில் நாம் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய காரியங்களாகிய கூட்டுத் தொ

ழில், கூட்டு விவசாயம், கூட்டு வர்த்தகம் முதலியவைகளைச் செய்தால் நம்மிந்தியா தேசம் அதி சீக்கிரத்தில் மிகவும் உன்னதமான நிலைமைக்கு வரும்.

அப்படி செய்ய முடியாமற்போனாலும் ஒவ்வொரு ஜாதியாராகிலும் தங்களுக்குள் கல்வி, செல்வம், வாக்கு சாதுரியம், சொற் சாதுர்யம் முதலிய நற்குணங்களுடைய குலாபிமானமுள்ள பிரமுகர்களைச் சேர்த்து தக்க முதல்வைத்து மேற்கூறிய கூட்டுத்தொழில், கூட்டு விவசாயம், கூட்டு வியாபாரம் முதலிய நற்காரியங்களைச் செய்து வருவார்களானால் ஒரு ஜாதியாரைப் பார்த்து இன்னொரு ஜாதியார் தூண்டப்பட்டவர்களாய் தாங்களும் அம்மாதிரியாக செய்ய முற்படுவார்கள். காலக்கடையில் எல்லா ஜாதியாரும் இப்படிப்பட்ட காரியங்கள் செய்வார்கள். அப்படி செய்வதினால் இன்னும் கொஞ்சகாலத்திற்குப் பிறகு நம்முடைய தேசம் மற்ற தொழில், வர்த்தகம் முதலியவைகளிற் சிறந்த தேசங்களைப்போல மேல் நிலைமையை யடையும்.

சைனா தேசத்தில் ஒரு பழமொழியுண்டு. அதாவது ஒவ்வொரு வீட்டுக்காரனும் தன் வீட்டு முற்றத்தை சரியாய் சுத்திசெய்வானானால் அப்பட்டணத்திலுள்ள எல்லா வீட்டு முற்றங்களும் சுத்தியாக்கப்படும் என்பதேயாம். இந்த பழமொழியின் பிரகாரம் நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் தம் தம் சுய ஜாதியாரைச் சீர்படுத்துவார்களானால் கடைசியில் எல்லா ஜாதியாரும் சீர்படுத்தப்படுவார்கள். இவ்வாறு எல்லா ஜாதியாரும் சீர்திருத்த மடைந்தால் வெகு சீக்கிரத்தில் நம்மிந்தியா தேசத்து ஜனங்கள் யாவரும் மேல்நிலைமை யடைந்து க்ஷேமப்படுவார்கள்.

“படைக்கொருத்தன் கொடைக்கொருத்தன்” என்னும் பழமொழிக்கிணங்க கல்வி, புத்தி சாதுரியம், ஊக்கம், தளரா முயற்சி, வைராக்கியம், பொறுமை, சாந்தம் முதலிய நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற ஒரு புண்ணிய புருஷன் முன்னுக்கு வந்து தன்னைப்போன்ற சில வைராக்கியமும் நற்குணமும் நற்செய்கையுமுடையவர்களுக்கு தன்னுடைய அபிப்ராயம் முழுமையும் விளங்கும்படியாய்ச் சொல்லி அவர்களையுஞ் சேர்த்துக்கொண்டால் எந்த காரியத்தை உத்தேசித்து நடத்த முயன்றாலும் அக்காரியம் சரியாய் நடக்கும். ஆகையால் இதுவரையில் நமக்கென்ன யாராவது செய்வார்களென்று சும்மாயிருந்ததுபோல இனியும் சும்மாயிராமல் ஒவ்வொருவரும் தம்மாற்கூடிய பிரயாசைப்பட்டு நம்மிந்திய தேசம் முன்னுக்கு வரும்படியான பிரயத்தனம் செய்யும்படி கோருகிறோம்.

* * *

தற்காலத்தில் சுய ஆட்சி விஷயமாய் பிராமணர்கள் ஆனிபீசன்டு அம்மையாரைத் தலைமையாக வைத்து முன் ஜாக்கிரதையாக எவ்வளவோ ஏற்பாடுகளெல்லாம் செய்து வருகிறார்களென்பது நம்மனோர் யாவருக்குந் தெரிந்த விஷயம். பிராமணரல்லாதவர்களும் தென்னிந்தியாவில் சென்னையிலும் மற்ற இடங்களிலும் அநேக கூட்டங்கள் கூடி சுய ஆட்சிக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் பேசி பல தீர்மானங்கள் செய்து இந்திய செக்ரிடரியாகிய மிஸ்டர் மான்டேகுக்கு தெரிவிக்கும்படியாய் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். மிஸ்டர் மான்டேகும் இந்தியாவிற்கு வந்திருக்கின்றனர்.

நமது காருண்யமுள்ள பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் இத்தேசத்து குடிகளுக்கு பல சுதந்தரங்களைக் கொடுத்து அவர்களை மேல் நிலைமைக்கு கொண்டுவரவேண்டுமென்கிற நன்னோக்கமுடையவராய் இத்தேசத்தவர்களின் அபிப்பிராயங்களை நேரில்கண்டு கலந்து பேசி அறிந்து வரும்படியாய் மிஸ்டர் மான்டேகுவை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்தியாவின் ராஜாங்க நிர்வாகம் திருத்தியமைக்கப்படுதல் வேண்டுமென்பது நம்மவர்களின் கோரிக்கையாயிருக்கிறபடியால் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே ஆங்கிலேய பார்லிமென்டில் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்ற பொதுஜன க்ஷேமத்தை விரும்பும்படியான கனதனவான்களும் ஏக மனதுடன் மிஸ்டர் மான்டேகு துரையை இந்தியாவிற்கு இப்பொழுது அனுப்பியிருக்கிறார்கள்.

கல்வியிலும் அந்தஸ்திலும் மேம்பாடடைந்திருக்கும் ஜாதியார்களைப்போலவே மேற்படி விஷயங்களில் குறைவாயிருக்கும் இதர ஜாதியார்களும் தாங்கள் சீக்கிரத்தில் மேம்பாடடைவதற்கு தகுந்த முயற்சிகள் செய்யவேண்டியது அத்தியாவசியமாகும். இப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்ய தங்களால் சாத்தியப்படாவிட்டால் நமது காருண்யமுள்ள ராஜாங்கத்தாருக்கு தங்களுடைய குறைகள் இன்னின்னவை யென்றும் அவைகளை நிவர்த்திக்க இன்னின்ன மாதிரியான ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் தேசாபிமானமும் பொதுநலப்பிரியமும் சாதி வித்தியாசம் பாராட்டாமையுங்கொண்ட ஜனத்தலைவர்கள் மூலமாக தெரிவித்துக்கொண்டால் அவர்கள் கூடிய சீக்கிரத்தில் தக்க ஏற்பாடுகள் செய்வார்கள்.

கல்வியிலும், செல்வத்திலும் இன்னும் மற்ற விஷயங்களிலும் மிகவும் தாழ்ந்த அந்தஸ்திலுள்ள ஜாதியார்களில் ஒருவராகிய விஶ்வகர்ம சந்ததியார்கள் இச்சென்னை ராஜதானியைச் சேர்ந்த இருபத்தாறு ஜில்லாக்களில் பெரிய கிராமங்களிலும் பட்டணங்களிலும் உடனே கூட்டங்கள் சேர்த்து நமது ஜாதியார்கள் மேல் நிலைமையடைவதற்கு கவர்ன்மென்டார் இன்னின்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்கிற தீர்மானங்கள் செய்து சென்னப்பட்டணத்திலுள்ள சென்டிரல் கமிட்டியாருக்கு தெரிவிக்கவேண்டுமென்றும் ஷை சென்டிரல் கமிட்டியாரும் ஷை தீர்மானங்கள் வந்து சேர்ந்த உடனே இவ்விடத்திலும் ஒரு பொதுக்கூட்டம்கூடி பேசி ஒரு மகஜர் தயார்செய்து மிஸ்டர். மான்டேகு துரையவர்கட்கு நேரில் கொடுக்கவேண்டுமென்று நாம் சென்றமாதத்திய நமதுதொழில் பத்திரிகையில் தெரிவித்தோம். அதன் பிரகாரம் இதுவரையில் ஒரு ஏற்பாடும் நடக்காதிருக்கிறது. காரணம் இன்னதென்றும் தெரியவில்லை.

சிலர் தென்னிந்தியாவிலுள்ள விஶ்வகர்ம ஜாதித் தலைவர்களென்று சொல்லிக்கொண்டு ஓம் ரூல் கட்சிக்காரர்களோடு சேர்ந்து என்னென்னமோ பேசிக்கொண்டும் பத்திரங்கள் அச்சிட்டு ஏராளமாய் இதர ஜனங்களுக்கு கொடுத்துக்கொண்டும் இருந்தார்கள். தங்களுடைய சுய ஜாதியை சீர்திருத்தஞ் செய்யும்படியாகவும் அவர்களை மேல் நிலைமைக்குக் கொண்டு வரும்படியாகவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யாமல் தாங்கள் ஓம் ரூல் கட்சிக்காரர்களோடு சேர்ந்துக்கொண்டு கூத்தாடுவது மெச்சத்தக்க தன்றும். முற்காலத்தில் ஜா

திகள் ஏற்பட்டதற்கு காரணமென்னவென்றால் ஒவ்வொரு ஜாதியாரும் ஜாதி அபிமானமுடையவராய் தம்தம் ஜாதியை சீர்திருத்தி மேல் நிலைமைக்கு கொண்டு வருவார்களென்கிற நன்னோக்கமேயாம். அவ்வாறு எல்லா ஜாதியாரும் செய்து வருவார்களானால் காலக்கிரமத்தில் இந்தியர்கள் அனைவரும் மேல்நிலைமை யடைவார்கள்.

விஸ்வகர்ம சந்ததியார்கள் இச்சென்னை ராஜதானியில் சற்றேறக்குறைய பத்து பதினைந்து லட்சம் ஜனங்களிருக்கிறார்கள். அவர்களுடைய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் முனிசிபாலிடிகளைச் சேர்ந்த பிரைமெரி பாடசாலைகளில் சம்பளங்கொடுக்காமல் சேர்க்கமாட்டோமென்று சொல்லுகிறபடியால் அவர்களில் ஏழைகளாயுள்ளவர்களின் பிள்ளைகளும் பெண்களும் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து வாசிப்பதற்கு போதுமான வசதிகள் இல்லை. ஆகையால் ராஜாங்கத்தார் விஸ்வகர்ம ஜாதியாரின்மீது கருணை வைத்து எல்லா பாடசாலைகளிலும் பிரைமெரிக் கல்வியை சம்பளம் வாங்காமல் இலவசமாகவும் கட்டாயமாகவும் அவர்கள் மக்களுக்கு போதிக்கும்படியான ஏற்பாடுகள் செய்யும்படியாக கேட்கவேண்டும். எல்லா கவர்ன்மெண்டு பள்ளிக்கூடங்களிலும் மற்ற பள்ளிக்கூடங்களிலும் கல்வியும், சித்திரமெழுதுதலும் கற்பிப்பதோடுகூட கைத்தொழிலும் கற்பிக்கும்படி ஏற்பாடுகள் செய்யும்படியாய் கேட்கவேண்டும். ராஜாங்க நிர்வாகம் திருத்தி யமைக்கப்படும்போது சட்டநிரூபண சபைகளில் விஸ்வகர்ம சந்ததியார்களின் பிரதிநிதிகள் சிலரிருக்கும்படியாக ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கவேண்டும். சென்னப்பட்டத்திலும் வெளியூர்களிலுமுள்ள முனிசிபாலிடிகளிலும் விஸ்வகர்ம சந்ததியார்கள் கமிஷனர்களாக சேர்த்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கவேண்டும். இன்னும் இவைபோன்ற சீர்திருத்தங்கள் யாவும் பூர்த்தியாய் செய்யும்படியாயும் கேட்டவேண்டும். விஸ்வகர்ம சந்ததியார்களில் கல்வியில் தேர்ச்சியடைந்துள்ளவர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கும்படியான ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கவேண்டும்.

இச்சமயம் தப்பினால் வேறு இப்படிப்பட்ட தக்க சமயம் வாய்ப்பது மிகவும் அருமையாகையால் உடனே சென்னப்பட்டணத்தில் விஸ்வகர்ம சந்ததியார்கள் ஒரு பொதுஜனக்கூட்டம் சேர்ந்து தமது குறைகள் யாவற்றையும் தெளிவாய்த் தெரிவிக்கக்கூடிய ஒரு மகஜர் தயார்செய்து மிஸ்டர் மாண்டேகு துரை இவ்விடத்திற்கு வரும்போது தவறாமல் கொடுக்கவேண்டியது அத்தியாவசியமாகும். இதுவரையில் ஏனோதானோ வென்று பாமுகமா யிருந்ததுபோ லிராமல் முன் ஜாக்கிரதையாய் தகுந்த ஏற்பாடுகள் சீக்கிரம் செய்யும்படியாய் கோருகிறோம்.

***

நமது சந்தா நேயர்கட்கு அறிவிப்பு.

நமது சந்தாதாரர்களிடம் மாத மாதம் தவறாமல் சந்தாவை சரியாய் வசூலிப்பதற்கு நமக்கு தக்க பில் கலெக்டர் இதுவரையில் இல்லாதிருந்தபடியால் மிகவும் கஷ்டமாக யிருந்தது சந்தா நேயர்களும் தாங்கள் இப்பத்திரிகையை வாங்கி வாசிப்பதற்காக கொடுக்கவேண்டிய பாக்கித்தொகையை நாங்களே கொடுத்தனுப்பாமலும் இருந்துவிட்டார்கள். ஆகையால் பாக்கிகள் அதிகமாய் நின்றுவிட்டது. இப்பொழுது நற்குணமும் நற்செய்கையுமுடையவர் ஒருவர் கிடைத்திருக்கிறார். அவர்மூலமாக நமது பத்திரிகையின் சந்தா பாக்கித்தொகைகளில் போனதெல்லாம்போக ஏப்ரல் மாதமுதல் தொழில் பத்திரிகையென்று பெயரை மாற்றியதிலிருந்து நமக்குச் சேரவேண்டிய சந்தாவை வசூலிக்கும்படி உத்திரவு செய்திருக்கிறோம்.

நமது சந்தா நேயர்கள் யாவரும் இதை கவனித்து எம்மேற் கிருபைகூர்ந்து சந்தா பாக்கித் தொகைகளை தயவுசெய்து அவரிடம் செலுத்தும்படியாய் கோருகிறோம். மாதம் நாலணா கொடுப்பதற்கு கஷ்டப்படுகிறவர்கள் பாக்கித் தொகையும் சேர்த்து கொடுப்பதென்றால் மிகவும் கஷ்டமாகத்தானிருக்கும். தயவு செய்து தங்களுடைய கஷ்டத்தை கவனிக்காமல் இவ்வளவு உபகாரம் செய்யும்படியாய் கோருகிறோம். இவ்வாறு செய்வார்களானால் நமது பத்திரிகையும் இனிமேல் மாதம் மாதம் தடையின்றி மாதமுதலிலேயே பிரசுரம் செய்வதற்கு ஏதுவாயிருக்கும்.

பத்திராதிபர்.

***

திருமூலாரண்ய மடாதீஸ்வர
ஸ்ரீலஸ்ரீ சிவலிங்காச்சார்ய குருஸ்வாமிகள்

குருபூஜை கைங்கர்யப் பத்திரிக்கை

வெண்பா.

பவலிங்க தேவாம் பரம குருவைச்
சிவலிங்க தேவன் செறிநாள்—தவமுந்தும்
கார்த்திகைத் திங்கட் கடைசோம வாரமதே
தீர்த்தற் குகந்த தினம்.

ஸ்ரீமத் பராத்பர பரசிவ விராட் விஸ்வப்ரம்ஹ பஞ்சானனோத்பவ ஷட்கர்ம நிரத திருமூலாரண்ய மடாதீஸ்வரராகிய ஸ்ரீமத். சிவலிங்காச்சார்ய குருஸ்வாமிகளுக்கு,

நிகழும் பிங்களவரு கார்த்திகைமீ 25வ (10-12-17) சோமவாரதினம் குருபூஜையாதலால் அன்று காலை 7-மணிமுதல் 12-மணிக்குள்ளாக அபிஷேகஅலங்கார மஹா நெய்வேத்திய மஹாஜன சம்ரக்ஷணையும் மாலை 5-மணிமுதல் 7-மணிக்குள் அலங்கார ஆராதனை காலக்ஷேபப்பிரசங்கத்துடன் ஷை குருபூஜை நடைபெறுமாதலால், இதனைக் கண்ணுறும் பஞ்சானனோத்பவர்களான மநு, மய, த்வஷ்ட, சில்ப, விஸ்வக்ஞர்களனைவரும் ஷை கைங்கர்யத்திற்கு த்ரவ்ய சேகரத்துடன் 2-நாள் முன்னதாய் வந்து ஷை பூஜையைநடத்தி ஸ்வாமிகளினருளைப் பெற்றுய்வீர்களென்று ஆசீர்வதித்து இப்பத்திரிகை அனுப்பலாயிற்று.

A. சிவசங்கராச்சார்ய ஸ்வாமிகள்.
திருமூலாரண்ய மடம்,
போளூர் தாலுக்கா, சேனந்தல்.

மேற்கண்ட இம்மடம் முற்காலத்தில் பெரிய மகத்துவமாகிய மடம் என்பதாக தெரிகிறது. ஸ்ரீ சிவலிங்கசுவாமிகள் சமாதியான இடம் சமாதியுமிருக்கிறது.

இது வட ஆற்காடு டிஷ்டிரிக்டு போளூர் ஷ்டேஷனில் இறங்கி 12 மயில் போகவேண்டும் வண்டிகள் கிடைக்கிறது. இது திருவண்ணாமலைக்கும் போளூருக்கும் மத்தியிலிருக்கிறது.

இவ்விடத்தில் கார்த்திகைமாதம் கடைசீ சோமவாரம் ஷை சுவாமிகள் குருபூஜை அதன் தரிசனார்த்தமாக போகப்பட்

டவர்களுக்கு போஜன சவுகர்யங்கள் சரியாக நடக்கிறது. விஸ்வகர்மாக்கள் அநேகமாக வருகிறார்கள் அப்படி வரப்பட்டவர்கள் குருபூஜை கைங்கர்யத்திற்காக அவரவர்கள் சக்தியானுசாரம் சாமக்கிரியைகள் கொண்டுபோய் சமர்ப்பிக்கிறார்கள்.

இவ்வித வைபவானந்தத்தை சென்ற வருடம் சென்றிருந்து கண்ணாரக்கண்டு ஆனந்தமடைந்தனன். ப—ர்.

***

பொது விஷயம்.

இதுபரியந்தம் விஸ்வகர்ம சந்ததியார்களில் கக்ஷி பிரதி கக்ஷி ஏற்பட்டிருந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம். நம் ஓர் வகுப்பார்களாகிய விஸ்வகர்மாக்களுக்குள் கக்ஷி பிரதிகக்ஷி ஏற்படுவதென்றால் சரியாகவில்லை.

இராமனாண்டாலென்ன இலக்ஷ்மணன் ஆண்டாலென்ன என்பதாக நாம் ஏனிருக்கக்கூடாது? நம்மவர்களில் படித்தவர்கள் கொஞ்சம் பெயர்கள்தான். அதிலும் குலாபிமானமுள்ளவர்கள் சிலரேயாவர். அவர்களிலும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு பிளவுபட்டிருக்கும் கக்ஷிகள் அநேகம். கடைசியாக பார்க்கப்போனால் எந்த கக்ஷிக்காரர்களும் அவரவர்களுக்குள் ஒத்துமையாக யிருக்கப்பட்டவர்களாக காணப்படவில்லை. கக்ஷி பிரதிகக்ஷிகள் ஏற்படும் ஒவ்வோர் கக்ஷியிலும் ஊழல்கள் அநேகம் இருக்கிறது. அவ்வித கக்ஷிகள் ஏற்படுவதால் உலகத்திற்கு யாதொரு பயனும் தருவதில்லை. ஓர் சார்பார் சரியானபடி நடவாமல் மற்றொரு சார்பார் சரியானபடி நடந்தால் தேவையில்லை. அப்படியில்லாமல் அம்பட்டன் குப்பையை கிளப்பினால் மயிர் மயிராகவரும் என்கிற பழமொழிக்கிணங்க விஸ்வகர்மாக்களுடைய ஒத்துமை இப்படியிருக்கிறது. ஆகையால் இனி விஸ்வகர்ம ஜாதியார்களில் கக்ஷி பிரதி கக்ஷிகளில்லாமல் ஒரே கக்ஷியாக சேர்ந்து இதில் எவரேனும் ஒருவர் தவறுதல் செய்தால் அவர்களிடம் வாதாடி சரிப்படுத்திக் கொள்வதுதான் ஞாயமாகும். அப்படியில்லாமல் இப்பத்திரிகை முதலில் அற்ப விஷயமென்னும் வியாசத்தைவாசித்தால் நன்கு விளங்கும். அணுக்கூட்டங்கள்தான் மேருவாகிறதுபோல் அற்ப விஷயங்களைப்பற்றி பல பிரிவுகள் ஏற்பட்டுவிட்டால் பிறகு பெரிய பிரமாதமான கக்ஷிகளாக ஏற்பட்டுவிடும். இதை கவனித்து எந்த கக்ஷிக்காரர்களாகயிருந்தாலும் யாவரும ஒன்று சேர்ந்து ஒரேவிதமாக பேசி தீர்மானித்து சரியான ஏற்பாடுகள் செய்துகொண்டு இந்தியாமந்திரி மிஸ்டர் மாண்டேகு துரை அவர்கட்கு மனு கொடுக்கும்படிக்கும் ஓர் பொதுக்கூட்டம்கூட்டி அக்கூட்டத்தில் யாவரும்சம்மதித்த மனுவை தயாரித்துக்கொடுப்பது விஸ்வகர்மாக்களின்கடமையாகுமென்பது எமதுகோரிக்கை. அப்படியிருக்க இரண்டொருவர்கள் மட்டிலும் தங்களுடைய இஷ்டப்படி மனு தயாரித்து இந்தியா மந்திரிக்கு அனுப்பியது பெருந்தவறுதலென்றே நினைக்கிறேன். இப்படி தமது ஜாதியார்களுடைய அனுமதியின்றி தங்களிஷ்டப்படி செய்ததால் இவர்களுக்கு என்ன அநுகூலமோ தெரியவில்லை. ஜனத்தலைவர்கள் என்று சொல்லக்கூடிய பிரபுக்களுடைய ஒழுங்கு இத்தகையதாக யிருக்கிறது.

இப்பேர்ப்பட்டவர்கள் தென்னிந்திய

விஸ்வகர்மாக்களுடைய பிரதி நிதியாக எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். போனது போக இனியாகிலும் அவ்வித ஒழுங்கீனமாகிய காரியங்களில் பிரவேசிக்காமலிருக்கும்படி கோரப்படுகிறது.

***

சென்னையில் விஸ்வகர்ம மஹாஜனக்கூட்டம்.

சில விஸ்வ கர்மாக்களுக்கு சென்னையில் இந்த டிசம்பர் மாதத்தில் ஓர் பொதுக்கூட்டம் ஒன்று கக்ஷி பிரதிகக்ஷியில்லாமல் ஏகமனதுடன் கூட்டவேண்டுமென்கிற அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. அவ்வித அபிப்பிராயம் எனக்கும் சம்மதந்தான். ஆனால் சில கலகக்காரர்கள் சென்னையில் விஜயஞ்செய்திருக்கிறார்கள் அப்பேர்ப்பட்டவர்கள்தான் இவ்விதப் பொதுக்கூட்டத்திற்கு இடையூறுகள் செய்ய உத்தேசித்திருப்பார்களென்று தெரிகிறது. அவர்களால் இவ்வித நன்னோக்கத்தை ஒன்றும் கெடுக்க முடியாதென்று நினைக்கிறேன். அப்படி விஸ்வகர்மாக்கள் ஒன்றுசேர்வதினால் யாவரையும் ஓரேயிடத்தில் ஒரேகாலத்தில் கண்டுகளிக்கலாம்.

இவ்வித கூட்டத்தில் தீர்மானம் செய்யவேண்டிய விஷயம் சில திருக்கின்றன. விஸ்வகர்மாக்களுடைய கல்வி, கைத்தொழில், வியாபாரம், இம்மூன்றுக்கும் முக்கியமாக விஸ்வகர்மாக்கள் ஒன்றுசேர்ந்து சாலைகள் ஏற்படுத்தவும் நடத்தவும் நமது இராஜாங்கத்தாரை துணைகொண்டு ஆரம்பிப்பதற்கு முதல்தீர்மானம் செய்யவேண்டும். இவ்வித பொதுநோக்கத்திற்கு ஆதாரமாயுள்ள விஸ்வகர்ம மஹாஜனக்கூட்டத்தை கூட்டிவைக்க நமது விஸ்வேஸ்வரர் கருணைகூர்வாராக.

விஸ்வ பிரம்ம புராண வசனச் சுருக்கம்.

மேற்படி புராண வசனச்சுருக்கம் விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு முக்கியமானது. இதுபரியந்தம் 8 அணா விலைக்கு விற்பனை செய்து வந்திருந்தோம். இப்பொழுது நடந்துவரும் யுத்த காரணத்தால் பல சாமான்களும் விலை ஏறிவிட்டபடியால் இனி 10 அணா விலைக்குத்தான் விற்கப்படும். இதை ஒவ்வொரு விஸ்வகர்மாக்களும் வாங்கி வாசிக்கவேண்டியது அவஸ்யமாகும்.

***

சித்தூர் தீர்ப்பு.

இதை இதுபரியந்தம் நாம் அச்சிடவில்லை. கேட்பவர்கட்கு வெளியிலிருந்து வாங்கி அனுப்பிவந்திருந்தோம். அதுநல்ல கடிதமாக யிராது இப்பொழுது அதை நமது அச்சுக்கூடத்தில் நல்ல கடிதத்தில் நல்ல சயிசில் அச்சிட்டு தயாராய்விட்டது. இதன் விலை 6 அணாதான்.

***

விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

என்னும் ஓர் இனிய புத்தகம் அச்சிட்டிருக்கிறது. அதில் 12-பக்தர்களுடைய சரித்திரம் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் செய்யுள்களும், வசனமும் தனித்தனி எழுதப்பட்டிருக்கிறது. புராணப் பிரசங்கத்திற்கு தகுதியானவையா யிருக்கும். விலை ரூபா 1.

***

விஸ்வேஸ்வர பகவான் கீர்த்தனை.

இந்த கீர்த்தனை பஜனை செய்பவர்களுக்கும், பாராயணஞ் செய்பவர்களுக்கும் தகுதியானவை. விலை அணா 2.

விஸ்வப்பிராம்மணப் பட்டம்.

சேலம் ஜில்லா கடத்தூர் சி. வரதாசாரியாரென்பவர் 1911௵ பிப்ரவரி௴ 25௳யில் தஞ்சை ஜநாநுகூலன் பத்திரிகையில் கம்மாளர்களை விஸ்வ பிராம்மணர்கள் என்று சொல்வதற்கு சாஸ்திர புராணாதிகளில் ஏதேனும் ஆதாரமிருந்தால் அதுகளை தெரிந்துக்கொள்ள மஹாஜனங்கள் விரும்புகிறார்களென்று எழுதியதற்கு, தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரியாரும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ த. கு. சுந்தராச்சாரியாரும் தக்க ஆதாரத்துடன் நீதியாக பதிலெழுதி ஷை ஜநாநுகூலன் பத்திரிகைகளிலேயே வெளியிட்ட விஷயங்களை தற்காலம் புத்தகரூபமாக அச்சிட்டிருக்கிறது. இதன் விலை அணா 4.

***

விஸ்வகர்மாநுஷ்டான வேதமந்த்ர.

இதில் ஸ்நானம், விபூதிதாரணம், சந்தியாவந்தனம், புருஷ ஸூக்தம், ஸ்ரீ ஸூக்தம், மந்திரபுஷ்பம், தீபாராதனை மந்திரம், விக்னேஸ்வரபூஜை, புண்ணியாவசன மந்திரம், ஆசீர்வசன மந்திரம், அபிவாதன முதலியவை தமிழெழுத்துகளிலெழுதி யச்சிடப்பட்டிருக்கின்றன. கோத்திர சூத்திர பிரவரையாதியவைகளைத் தெளிவாய் விளக்குஞ் சட்டமும் அடங்கியிருக்கிறது விலை அணா 2.

மேற்படி தெலுங்கு பதிப்பு.

இதில் மேற்கூறியவற்றுடன் சந்திரவிபரங்களும் விளக்கமாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணா 6.

***

விஸ்வகுரு சதகம்.

பெருநகர் பிரம்மஸ்ரீ உபயகவி கந்தப்பாச்சாரியார் புத்திரர் பிரம்மஸ்ரீ ஷண்முகாச்சாரியார் அருளிய செய்யுட்களும் காவார்த்தண்டலம் சபாபதி ஆச்சாரி புத்திரர் நடேஸ்வர ஆச்சாரியாரால் இயற்றப்பட்ட உரையும் அனேக இதிகாச புராணங்களி லிருந்து மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட செய்யுட்களுங் கொண்டது. விஸ்வகர்ம சிருஷ்டி முதலியவும் இதில் செவ்வனே விளக்கிக்காட்டி யிருக்கிறபடியால்இதை ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டுமென்று குறைந்த விலைக்குக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டது. விலை அணா 6.

வேலூர் தீர்ப்பு.

ஸ்ரீமத் விஸ்வப்பிரம்ம குலசிரேஷ்ட மகா பண்டிதப் பிரதாபரென்னும் பிரம்மஸ்ரீ மார்க்கசகாயாச்சாரியா ரவர்களுடைய புத்திரர் புதுக்கோட்டை பிரம்மஸ்ரீ வெங்கட சுப்பாச்சாரியார், சித்தூர் ஜில்லா ஆற்காடு தாலூக்கா திமிரியில் பஞ்சாங்கம் கிருஷ்ணமாசாரியாரோடு செய்த வாக்குவாதமும், வேலூர் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் செய்த தீர்மானமும் இதில் அடங்கி யிருக்கின்றன.

பட விளம்பரம்.

இப்படம் 12—10 இஞ்சி அளவில் புகைப்படத்திற்கு சமானமாகிய விஸ்வேஸ்வரர்(பஞ்சமூர்த்தியின்) படம் வெகு அழகாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா 4.

மேற்படி அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவநாகர அக்ஷரம் அடைத்து சுத்தமாய் செய்திருக்கிறது. விலை அணா 4

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது ஒவ்வொருவரும் அவஸ்யம் வாங்கலாம்.

வி.பி சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—" தொழில் ஆபீஸ் "
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இப்பத்திரிகையின் கடைசி பக்கத்தில் இருக்கும் புஸ்தக விளம்பரத்தை கவனித்து வாசித்தால் சில நூதன புஸ்தகங்களும் கிடைக்கும்.

20 SEP 1918

உ

சுபமஸ்து.

"விஸ்வகர்மகுலோபகாரி" என வழங்கிவந்த
தொழில்

மலர்—4. { பிங்கள௵ மார்கழி௴ 1917௵ டிசம்பர்௴ } இதழ்-11.

நமது கடமை.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது, கூன்குருடு செவிடு பேடுநீக்கிப் பிறத்தலரிது, பிறந்தகாலையும் ஞானமுங் கல்வியும் நவின்றலரிது,

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவி தான் யாதினுமரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ எதுவருமோ வறிகிலேன்.

எறியுங்கடலி னுகத்தடியில் ஆமையின் கழுத்துப் புகுவதுபோல்

மேற்கூறிய ஆன்றோர் வாக்கியப்பிரகாரம் மானிடராய்ப் பிறத்தல் மற்ற பசுபட்சியாதி கணக்கில்லாத பிறப்புகளெல்லாவற்றிலும் மிகவும் அருமையானது ஐரோப்பா, ஆப்ரிக்கா, அமெரிக்கா கண்டங்களில் பிறப்பதைப் பார்க்கிலும் புண்ணியபூமியாகிய இப்பரதகண்டத்தில் பிறத்தல் அதனினும் அருமையானது. கூன், குருடு, செவிடு, ஊமை, நபுஞ்சகம், கைகால்கள் குறைந்திருத்தல் முதலிய அங்கப்பழுதுக ளில்லாமலும், வேதசம்மதமான மதத்திலும், நல்ல ஜாதியிலும், நல்ல குலத்திலும் பிறத்தல் அதனினும் அருமையானது. இவ்வரிய மானிடப்பிறவியைப் பெற்றவர்கள் ஞானம், கல்வி, வைராக்கியம், சதாசாரம் (நல்லொழுக்கம்) முதலியவைகளோடு விளங்குதல் மேற்கூறியவைகள் எல்லாவற்றிலும் மேன்மையானது. ஆகையால் மானிடராய்ப் பிறந்த ஆண் பெண்மக்கள் இருவரும் தத்தம் தேசம், மதம், ஜாதி, குலம், பாஷை முதலியவைகளில் அபிமானமுள்ளவர்களாய் அவைகள் முன்னேற்றமடைவதற்கான காரியங்களில் பிரவேசித்து தம்மாற் கூடியவளவு தக்கவேற்பாடுகள் செய்ய வேண்டியது அவர்களுடைய கடமையாகும். சுயநன்மையைக் கருதாமல் பொதுநலப்பிரியர்களாய் சர்வ ஜீவாத்மாக்களும் மேம்பாடடைய, வேண்டுமென்கிற நன்னோக்க முடையவராய் அன்பு, இரக்கம், தயை முதலிய நற்குணங்களோடு பொருந்தி யிருக்கவேண்டும். மானிடராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய கடமைகள் பலவிருக்கின்றன. நமக்கும், நமது குடும்பத்தார்க்கும், உறவினர்க்கும், ஜாதியார்க்கும், மதத்தார்க்கும், தேசத்தார்க்கும் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவில்லாது செய்வதற்குக் கல்வியே சிறந்த காரணமா யிருக்கிறது. நமது தேசத்தில் பெரும்பான்மையோர் கல்வியில்லாதவர்களாய் நம்முடைய ராஜாங்கத்தாராலும் மற்றவர்களாலும் இன்னின்ன காரியங்கள் நடத்தப்படுகின்றன வென்பதை அறியாதவர்களாய் அந்தகாரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். கல்வியைக் கற்கின்ற சிலரும் கவர்ன்மெண்டு ஆபீசுகளிலும், கைத்தொழிற் சாலைகளிலும், ஆங்கிலேயராலும் மற்றவர்களாலும் ஏற்படுத்தி யிருக்கும் ஷாப்பு (வர்த்தகசாலை) களிலும், இன்னும் மற்றக் கல்விச்சாலைகளிலும் இருபது முப்பது ரூபாயாகிய சொற்ப சம்பளத்தில் அமர்ந்து சாண்வயிற்றை வளர்ப்பதிலேயே காலங்

கழித்து வாழ்நாளை வீணாளாக்குகிறார்கள். அவ்வாறின்றி கல்வியை சுயபாஷையிலும் ஆங்கிலம் முதலிய அன்னிய பாஷைகளிலும் பூரணமாய்க் கற்று நாகரீகத்திற் சிறந்ததென்று கருதப்படுகிற இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்டிரியா, பிரான்சு, ஜப்பான், கனடா, ஐக்கியமாகாணம் முதலிய தேசத்தவர்களைப்போல் நம்மவர்களும் அநேகர் ஒன்றுசேர்ந்து பெருத்த முதல்வைத்துத் தக்கவசதிகளேற்படுத்தித் தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகள் விருத்தியடையும்படியான ஏற்பாடுகள் வெகு சீக்கிரத்தில் செய்தால்தான் நமது தேசம் மேன்மைபெறுதல் கூடும். இவ்வாறான ஏற்பாடுகள் செய்வதற்கு இதுவே தக்கசமயம். இந்தச் சமயத்தைக் கைவிடக்கூடாது. உண்மையான கல்வி எத்தேசத்தில் பரவியிருக்கிறதோ அத்தேசத்தில்தான் நவநவமான தொழிற் சாலைகளும், நூதனமாய் சைன்ஸ்முறைப்படி செய்யும் விவசாயமும், ஒற்றுமை வியாபாரமும், மேம்பாடடைந்திருப்பதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்த்துவருகிறோம். ஆகையாற்றான் நம்முடைய தேசத்தில் ஆண் பெண்மக்கள் யாவரும் கட்டாயமாய்க் கல்வி கற்கும்படியான ஏற்பாடுகள் யாவும் குறைவில்லாமல் கூடிய சீக்கிரத்தில் செய்யவேண்டியது நமது கடமையாயிருக்கிறது. பொம்பாய் இராஜதானியைச் சேர்ந்த எல்லா ஊர்களிலும் பிரைமெரிக்கல்வி கட்டாயமாய் கற்பிக்கும்படியான சட்டம் பாசாயிருப்பதாகக் கேள்விப்பட்டு நாமடைந்த மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

இதைப்போலவே இச்சென்னை இராஜதானியிலும் பிரைமெரிக் கல்வி ஜாதிமத வித்தியாசமில்லாமல் ஆண் பெண் மக்கள் யாவருக்கும் கட்டாயமாகக் கற்பிக்கும்படியான சட்டம் எப்பொழுது ஏற்படுத்துவார்களோ வென்று மிகவும் ஏக்கமுற்றிருக்கிறோம். இப்படிப்பட்ட சட்டம் எல்லா இராஜதானிகளிலும் ஏற்பட்டால்தான் நம்மிந்தியா தேசம் மேல்நிலைமையடையும். இதற்காக சட்டநிரூபண சபைகளில் மெம்பர்களாயுள்ள பிரமுகர்கள் யாவரும் மனமொத்து ஊக்கமும் விடாமுயற்சியு முடையவர்களாய் உழைத்து வரவேண்டும். இந்தச்சட்டம் பாசாகிற வரையில் சட்டச்சபைகள் கூடுங் காலங்களில் எல்லாம் இதேவிஷயத்தைப் பிரேரேபித்துப் பேசவேண்டியது அவர்களுடைய கடமையாகப் பாவிக்கவேண்டும். கேட்டால்தான் கொடுக்கப்படும். அழுதபிள்ளைக்குத்தான் பெற்றதாயும் பால் கொடுப்பாள்.

மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார்கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

என்னும் செய்யுளின் அர்த்தத்தை மிகவும் கவனித்து நடக்கவேண்டும். தொன்றுதொட்டு நம்மதாசாரப்படி நம்மவர்கள் இரப்போர்களுக் கில்லையென்னாது கொடுத்தலும், சத்திரம், சாவடி, கோவில், குளம், நந்தவனம், நீராழிமண்டபம் முதலியவைகள் ஏற்படுத்துவதிலும் கண்ணுங்கருத்துமா யிருந்து வந்தார்களென்பது நம்மவர்கள் யாவரு மறிந்த விஷயம். ஆனால் காலதேசவர்த்தமானங்களை யுத்தேசித்து நமது கொள்கைகளை மாற்றிக்கொண்டு தற்காலத்தில் நமது தேசம் மேல்நிலைமை யடைவதற்குச் சிறந்த சாதனங்களாகிய கல்வி, தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளில் நமது அரும்பெரும்பொருளைத் தாராளமாய்ச் செலவு செய்வதுதான் பெரும் புண்ணியமாகும். இதுவே நமது முதன்மையும் முக்கியமானதுமான கடமையாகும். கல்வியொன்றை முதலில் கட்டாயப்படுத்துவோமானால் மற்றவைகளெல்லாம் அடுத்தாற்போல் உடனுக்குடனே கைகூடும்.

தந்தை மகற்காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

மகன்றந்தைக் காற்று முதவி இவன்றந்தை
யென்நோற்றான் கொல்லென்னுஞ் சொல்.

என்கிற தெய்வப்புலமைத் திருவள்ளுவரின் திருக்குறள் வாக்கியங்களை நாம் கவனித்து நடக்கக்கடவோமாக. சர்வ சாதாரணமாய்க் கல்வியைச் சரியானவிதமாய்க் கற்காத ஜனங்கள் மிகுதியாயுள்ள தேசங்களில் தொழில் வியா

பாரம் முதலியவைகள் ஒருக்காலும் விருத்தியடையவே மாட்டாது. "கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை" என்னும் வாக்கியத்தின் தாற்பரியத்தையும் நாம் ஊன்றி யோசித்து நடக்கவேண்டும். கவர்ன்மெண்டாருடைய உதவியையே நாம் எல்லா விஷயங்களுக்கும் எதிர்பார்த்திருத்தலும் கூடாது. நாமும் நம்மாற் கூடியவரையில் பாடுபட்டால்தான் கடவுளுடைய கிருபையால் நமது காருண்யமுள்ள கவர்ன்மெண்டாரும் நமக்கு வேண்டியவளவாக உதவிசெய்ய முற்படுவார்கள். (God helps those who help themselves) தங்களாற் கூடியமட்டும் பிரயாசைப்பட்டுத் தம்முடைய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறவர்களுக்கே கடவுள் உதவிசெய்கிறார் என்கிற பழமொழியின்படி அனந்த கல்யாண குணங்கள் நிரம்பப்பெற்றவரும், கிருபாசமுத்திரமாகவும் எண்ணப்பட்ட கடவுளே இவ்விதஞ் செய்வாரானால் நமது இராஜாங்கத்தாரே நமது தேசம் முன்னேற்றமடைவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்வார்களென்று நாம் வீணான மனோரதமுடையவர்களாய் சும்மா யிருக்கக்கூடாது. நாமிதுவரையிலும் சோம்பற்றனமா யிருந்ததுபோல் இனிமேலு மிருப்போமானால் நாம் மதியீனர்களென்றே மற்ற தேசத்தவர்களால் மதிக்கப்படுவோமென்பது திண்ணம். "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும்" என்னும் திருவள்ளுவர் வாக்கின்படி ஈ எறும்பு முதலிய சகலஜீவராசிகளும் பலவிதமான பாடுகள்பட்டு ஜீவிப்பதை நாம் ஒவ்வொரு நாளும் பார்த்து வருகிறோம். நாம் "எத்தால் வாழலாம் மனமொத்தால் வாழலாம்", "காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" என்னும் ஆன்றோர் வாக்கியங்களைச் சீர்தூக்கிப்பார்த்தும் காக முதலிய பட்சிகளின் நடவடிக்கைகளைப் பார்த்தாவது நாம் நடக்கவேண்டியது நமது கடமையாகும்.

ஒரு நாய் ஏதாவதொரு ஆகாரத்தைப் புசிக்கும்போது இன்னொருநாய் தூரத்தில் வருவதை பார்த்தவுடனே தன்னருகில்வந்து சேரவொட்டாமற் குரைத்துத் தொலைத்துவிடுவதுபோலில்லாமல் ஒரு காகம் ஒரு ஆகாரத்தைக் கண்ட அக்கணமே ஒற்றுமையும் தயையும் உடையதாய் மற்றக் காகங்களைக் கூவியழைத்து பொறாமைக் குணஞ் சற்றேனுமின்றி மனமொத்து அவைகளுடன் கூடிக்குலாவி அவைகள் உண்ணத்தானும் உண்பதுபோலவும், ஒரு காகத்திற்கு ஏதாவதொரு கஷ்டம் நேரிட்டால் அதைக்கண்ட மற்றக்காகங்கள் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்து ஒரே கூச்சலாய்க் கூவிக் கதறுவது போலவும், நம்மைப்போலவே மற்றவர்களும் சுகம் அடைய வேண்டுமென்கிற நன்னோக்க முடையவராய் ஒற்றுமையென்கிற சஞ்சீவிபோன்ற நல்ல குணமுடையவராய் நம்மவர்கள் யாவரையும் (ஜாதிமத வித்தியாசங்களைப்பாராட்ட புறக்கணிக்காமல்) ஒன்றாய்ச் சேர்ந்து இக்காலத்திற்கு அத்தியாவசியமான கல்வி, தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவைகளில் நமது தேசம் மேல்நிலைமையடையும்படியான ஏற்பாடுகள் யாவுங் கொஞ்சங்கூடக்குறைவில்லாமல் இப்பொழுது கட்டாயமாய்ச் செய்யவேண்டியதுதான் சிறந்தபிறவியான மானிடப் பிறவியைப் பெற்ற தேசாபிமானமுள்ளவர்களின் முக்கிய கடமையாகும். இப்படிப்பட்ட பெரிய காரியங்கள் நம்மாலாகப் போகிறதாவென்று நாம் ஒவ்வொருவரும் நினைத்துக்கொண்டு சும்மா இருத்தல் கூடாது. ஐரோப்பாகண்டத்திலுள்ள ஆலண்டு (Holland) தேசம் சமுத்திர மட்டத்திற்கு மிகத் தாழ்ந்திருக்கிறபடியால் சமுத்திரஜலம் ஊருக்குள் வராமலிருத்தற்கு ஒரு பெரிய சுவர் (Dykes) சமுத்திரக்கரையோரத்திற் கட்டப்பட்டிருக்கிறது. ஒருகாலத்தில் அந்தச்சுவரில் ஒருசிறியதுவாரம் அகஸ்மாத்தாய்த் தோன்றியிருந்தது. அந்தசிறிய துவாரத்தை உடனே அடைக்கா விட்டால் சமுத்திரஜலம் சுவரின்மேல் மோதி அடித்துக் கொண்டிருக்கிறபடியால் அந்ததுவாரம் கொஞ்சங்கொஞ்சமாய் பெரியதாகி வெகு சீக்கிரத்தில் சமுத்திரஜலம் அதின்மூலமாய்ப் பிரவேசித்து அந்த ஆலண்டு தேசம் முழுகிப் போய்விடும். ஆகையால் அந்தச் சிறியதுவாரத்தைக் கண்ட

அத்தேசத்து மதியூகியாகிய ஒரு சிறுபையன் ஊருக்குள் போய் பெரியவர்களுக்குத் தெரிவித்துத் தக்க ஏற்பாடுகள் செய்யும்படி சொல்லலாமென்று காலதாமதஞ் செய்தால் அதற்குள் அத்துவாரம் பெரியதாகிவிடுமென்று தெரிந்துகொண்டு உடனே தன் விரலை அந்த துவாரத்தில் விட்டு அதை அடைத்துக்கொண்டு மற்றவர்கள் அதை தெரிந்துவந்து அடைக்கிறவரையில் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். பின்னிட்டு அந்த ஊரார் வந்து அத்துவாரத்தை அடைத்தார்கள் அந்தச் சமயம் அந்த சிறு பையன் என்னால் இந்த பெரிய காரியம் முடியுமாவென்று நினைத்துக்கொண்டு சும்மா யிருந்து விடுவானேயானால் அந்த ஊர் என்ன கதி யாகுமென்று இதை வாசிக்கும் நண்பர்கள் அறிவார்கள். (A Stitch in time saves nine) "தக்க சமயத்தில் ஒரு தையல் போட்டால் பின்னிட்டு உண்டாகக்கூடிய ஒன்பது தையல்கள் உண்டாகாமற்படி செய்யும்" என்னும் பழமொழியை கவனித்து நாம் ஒவ்வொருவரும் நடக்கவேண்டும். மேற்சொன்ன கதையில் அந்தச் சிறுபையன் அந்தத் துவாரத்தை அடைக்கவேண்டியது தன் கடமையென்று நினைத்துச் செய்தபடியால்தான் அந்த ஹாலண்டு தேசத்து ஜனங்கள் அத்தனை பேரும் காப்பாற்றப்பட்டார்கள். ஆகையால் நமது கடமையை நாம் கட்டாயமாய்ச் செய்யவேண்டும்.

அப்படிச் செய்யாமல் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டிராமல் விரோத பாவம் பாராட்டாமல் யாவரும் ஏகமனதுடன் கலந்துழைக்கவேண்டியது நல்லவர்களின் கடமையாகும். இவ்வித எண்ணங்களைக்கொண்டே பல பிரிவினர்களில்லாமல் ஏகோபித்திருக்கவேண்டுமென்கிற நல்லெண்ணம் நம்மவர்களுக்கேற்பட்டுவிட்டது. இனி எக்காரியமும் முட்டுப்படாமல் முடியுமென்பது எமதுகொள்கை. இதற்குக் கடவுள் கிருபை பாலிப்பாராக.

* * *

தடைகளை மேற்கொள்ளல்.

ஒருவேலையிலோ வியாபாரத்திலோ பிரவேசிக்கிற எவனும் ஒவ்வொருபடியிலேயும் சங்கடங்களையும் விருத்தங்களையும் தடைகளையும் மேற்கொள்ள தயாராயிருக்கவேண்டும். உயிர்வாழ்க்கையிலொவ்வொரு ஜீவனமார்க்கத்திலேயும் விருத்தங்கள் அநேகம் நேருகின்றன. அவைகளையெல்லாம் மேற்கொள்ளுவதில்தான் ஜயம் இருக்கிறது.

தடைகள் விருத்தங்கள் ஜயத்திற்கு தூண்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜயம் என்கிற மேல்கட்டிடம் கட்டுவதற்கு தவறுகள் அஸ்திவாரமாகின்றன. உன் உற்சாகத்தைக் குறைக்காதபடி உபயோகிக்க உனக்குத் தெரியவேண்டும்.

முஷ்டியுத்தத்தில் எதிரியானவன் நமது வன்மையையும் பலபடுத்தி நமது சாமர்த்தியத்தையும் திடப்படுத்துவது போல விருத்தங்கள் அபஜயத்திற்கு காரணங்களாயிருப்பினும் அவைகளை நமக்கு உதவிபுரியும் உபசாதனங்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

ஜயம் மனிதனிடத்தில் இருக்கிறது. ஜயம் அவனுடைய செயல்நிர்மாண சக்தியில் இருக்கிறது. ஜயம் பொறுமையான உற்சாகம் குன்றாத தொழில் முயற்சியின் நிர்மாணத்திலிருக்கிறது. ஜயம் தற்கால நிலைமையையும் இருப்பையும் நமக்கு உபயோகமாகச் செய்துகொள்ளும் சாமர்த்தியத்திலிருக்கிறது. தளராத நிர்மாணமும் திடப்பிரயத்தனமும் அற்புதங்களையும் உண்டாக்கும்.

'அசாத்தியம் முடியாது' என்கிற வார்த்தைகள் அதிர்ஷ்டமானவார்த்தைகளல்ல. அவ்வார்த்தைகளை எப்போதும் வாயிலேயுடையவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. எவன் வழியில் சிங்கமிருக்கிறதென்று எப்போதும் சொல்லுகிறவன்? அவன் சோம்பலடைந்தவன். அவன் சிங்கத்தைக் கொல்லவேண்டும். வழிப்பிரயாணம் எப்படியாவது முடியவேண்டும். கவி சாமர்த்தியம் அமைதல் அசாத்தியம் என்று நிரூபிக்கப்பட்டபோதிலும் சாதாரணஜனங்களின் மத்தியிலிருந்து, பர்ன்ஸ் கவி உற்பவிக்கிறார், கியூடிஎன்கிற கவிசக்ரவர்த்தி உண்டாகிறார். நமது சாதாரண திருஷ்டிக்குப் புலப்படாமலே நமது மத்தியில் மகா வீரனாகிய நெப்போலியன் உண்டாகிறார். நாம் எதிர்பாராமலே லோகஜயம் உண்டாகிறது.

நமது காலத்திற்கும் நமது காலத்திற்கும் மகாமனோ சக்திவானாகிய நெப்போலியன் மனோசக்தியை பின்வருமாறு வர்ணிக்கிறார். "தடைகளிலிருந்தும் காரியத்தை முடித்தல். அசாத்தியம் என்பதை மேற்கொளல்."

நூறுவருஷத்திற்குமுன் அவ்வார்த்தை எவ்வளவு உண்மையோ இப்போதும் அவ்வளவு உண்மை. அந்த வார்த்தையின் உண்மைக்கு அந்த மகாவீரனுடைய ஜீவகாலமுழுதும் நிரூபணமாகிறது. வில்லிங்டன் ஓர் சமயம் சொன்னார். "அசாத்தியமானது ஏதாவது உண்டா?" மிராபோ என்பவர் தமது செக்ரடரிக்கு சொன்னதாவது "அசாத்தியமா? அந்த மூடத்தனமான வார்த்தையை எப்போதும் என்னிடத்தில் சொல்லாதே" ப்ரூனல்துரை தெம்ஸ் நதியின்கீழ் குழைப்பாதையைப் போடும்போது இளைக்காத விடாமுயற்சியோடும் சமயோசித அநுகூல மார்க்கங்களோடும் அதற்குண்டாகிய பல கஷ்டங்களையும் பொறுத்தார். அவருடைய குமாரன் ஒரு ஆபத்தான சமயத்தில் குழைப்பாதையிலேயே, இடையிடையே அற்ப தூக்கத்தோடு, ஒரேகட்டாய் 96-மணி நேரம் வேலைசெய்திருக்கிறார். ஆல்ப்ஸ்மலையானது 11 ஆயிரம் அடி உயரமான ஓர் சுவரைக்கொண்டு ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு போக்குவருத்தை தடைபடுத்திக்கொண்டிருந்தது. இரண்டு பக்கத்திலேயும் நாளைக்கு ஒன்பது அங்குலம் துளைக்கும் கையாயுதத்தோடு மான்ட் சீனிஸ் குழைப்பாதை ஆரம்பமாயிற்று. கடைசியாக அதிக நம்பிக்கையற்ற ஆச்சரியகரமான தொழில் முயற்சியின் பின்பு பிரான்சு இடலி தேசத்தார்கள் மலைக்கற்களின் மூலமாய் துளைக்கப்பட்ட 7½-மைல்நீளமுள்ள குழைப்பாதையின் மூலமாய் போக்குவருத்தை செய்கிறார்கள்,

பாரிஸ் நகரத்தில் ஒரு மிட்டாய்க்கடைக்காரன் சரித்திரம் எவ்விதமாக சிலர் தங்களுடைய ஆபத்தைக்கூட தங்களுக்கு அநுகூலமாகும்படி செய்துகொள்ளுகிறார்கள் என்பதற்கு திருஷ்டாந்தமாகும். அவன் அதிக விலையுயர்ந்த மிட்டாய் ஏராளமாய்ச் செய்தான். சிறிது அஜாக்ரதையாயிருந்தபடியால் அது கட்டிப்போயிற்று. சிறிது நேரம்வரைக்கும் அவன் அதிக சங்கடத்தை அடைந்தான். உடனே பத்திரிகையில் பாரிஸ் ஜனங்கள் மிட்டாயைப் பற்றிய பிரசுரத்தை வாசித்தார்கள். டேல்ஸ்துரை தான் அந்த மிட்டாய்க்கு பேர் போனவர். உடனே பாரிஸ் ஜனங்கள்

எல்லோரும் மேல்விழுந்து வாங்கிக்கொண்டார்கள். ஆகையினால வஸ்து நஷ்டமாய் விட்டால்கூட நமது புத்திசாதுர்ய சமயோசித செய்கைகளால் நஷ்டம் வாராதபடி தடுக்கலாம்.

நமது தொழில் முயற்சியில் அநேக இடையூறுகள் நேர்ந்தன. நமது தேசத்தில் சுதேசியம் உண்டான நாளாய் நமது தொழில் முயற்சிகளில் அபஜயங்கள் அநேகம் நேர்ந்தன. அந்த அபஜயங்களின் காரணங்களை கண்டு பிடிப்பதற்கு சமயம் இப்போது வாய்ந்திருக்கிறது.

ஆபத்துகளும் இடையூறுகளும் சௌகர்யமில்லாத சந்தர்ப்ப நிலைகளும் நமக்கு உதவும்படி செய்துகொள்ள அவைகளை நாம் சந்துஷ்டியோடும் உறுதியான தீர்மானத்தோடும் எதிர்க்கவேண்டும். நாம் அவைகளை அவநம்பிக்கையோடு எதிர்த்தாலும் ஒவ்வொன்றும் எவ்விதத்திலாவது நமது நன்மையையே உண்டாக்கும் என்னும் நம்பிக்கைகுறைந்து எதிர்த்தாலும் அவைகள் நமது வழிக்கு தடையாகின்றன. உண்மையாகவே விருத்தங்கள் ஆகின்றன. நாம் நகைப்போடும் உற்சாகத்தோடும் எதிர்த்து சந்துஷ்டியான நம்பிக்கையோடிருந்தாலும் அவைகள் கண்கட்டு வித்தையைப்போல் ஆச்சர்யமாய் நமக்கு அனுகூலமான சாதனங்கள் ஆகின்றன.

இச்சமயத்தில் நமக்கு வேண்டியது அபஜயங்களின் சரித்திரம். தவறுகளின் பத்தகம். தவறுகளுக்கு காரணம் கண்டுபிடிக்க நமக்கு போதுமான அறிவு உண்டாகவேண்டும். நமது உத்தரவாதத்தின் பலனை தெரிந்துகொள்ள நமக்கு ஞானம் உண்டாகவேண்டும். அபஜயமடைந்ததாயிருந்தாலும், ஜயமடைந்தும் மீண்டும் பெருமையடையாதிருத்தலும், பலனை யடையப் போராடலும், அதை நல்வழியில் அடைதலும், அல்லது சந்துஷ்டியோடு இழத்தலும், நமது சொந்தமான முயற்சியில் நமக்குள்ள ஒவ்வொரு சக்தியையும் உபயோகித்தலும், ஒரு காலத்திலும் அன்னியர்களுக்குள்ள சௌகர்யத்தை பலாத்காரமாய் நம்முடையதாக்கிக்கொள்ளாதிருத்தலும், நியாயவிரோதமான ஜயமடையாதிருத்தலும், நமக்கு தொழில் பிரயத்தனங்களில் தேர்ச்சியை உண்டாக்குகிறது. நற்குணத்தை வேரூன்றச் செய்கிறது. இது நமது கஷ்டங்களுக்கெல்லாம் பலனாகிறது.

லாங்பெல்லோ சொல்லுகிறார்:—அடக்கமாகிறதெல்லாம் மேலெழுவதற்கு அடையாளம்.

* * *

ஊசி செய்யும் முறை.

கம்பிகள் இம்மாதிரி நீட்டப்பட்டதும் இரண்டு முனைகளும் குறுக்களவில் 10 அல்லது 20 அங்குலமுள்ள சிறிய கடினமான மணற்கற்களில் தேய்ப்பதால் (சாணைப்பிடிப்பதால்) கூராக்கப்படுகின்றன. இக்கற்கள் பரிமாணத்தில் ஊசிகளின் அளவைச் சார்ந்திருக்கின்றன. அவைகள் அதிவேகமாய்ச் சுற்றும்படி செய்யப்படுகின்றன. வேலைக்காரன் நாற்கால் பலகையின்மேல் உட்கார்ந்துகொண்டு இடதுகையில் சில கம்பிகளை எடுத்துக்கொள்ளுகிறான். பரப்புகிறான். தனது மற்றொருகையை அதின்மேல் ஒரு மாதிரியாய்வைக்கிறதினால் சமமான இடைவிடம் இருக்கும்படியாக அவைகளை வைக்கிறான். தன் கையைத் தள்ளுவதினால் எல்லா கம்பிகளையும் முன்னும்பின்னுமாக பிரளும்படிச் செய்கிறான். அதினால் பூர்ணமான கூர் உண்டாகும். சில வேலைகளில் ஓர் கனத்த தோல் துண்டை உபயோகப்படுத்துகிறார்கள். அதினால் சாணைப்பிடிக்கிறவன் கம்பிகளை கல்லின்பக்கமாய் தள்ளுகிறான். ஒவ்வொருதடவையும் ஒரு தட்டின்பக்கமாய் நெருக்குவதால் முனைகளை சரிப்படுத்துகிறான். அவைகள் குளிர்ந்திருக்கும்பொருட்டு தண்ணீர் தொட்டியில் நனைக்கிறான். ஒரு மணிநேரத்தில் அநேக ஆயிரம் கம்பிகளை கூராக்குகிறான். முனைகளை கல்லோடு சேர்க்கும்போது ஓர் பிரகாசமான பொறிவரிசை உண்டாகின்றன. எழுகு மணற்கல் இவற்றின் நுண்ணிய தூள்கள் வெளியாகி ஆகாசத்தில் தூசுநிறைகிறது. அத்தூசுகள் வேலைக்காரன் சுவாசிக்கும்போதெல்லாம் அவன் காற்றுப்பைகளில் பிரவேசிக்கின்றன. கடினமான சுவாசத்தை உண்டாக்குகிறது. இந்த வியாதி அதிக்கிரமப் பழக்கங்களால் அதிக கொடுமையை அடைகிறபடியால் சாணைப் பிடிக்கிறவன் 30 - வயதிலேயே கிழத்தனத்தை அடைகிறான். வழக்கப்பாடாய் 35-ல் அல்லது 40-ல் இறந்துபோகிறான். இந்நாசத்தை விளைவிக்கும் காற்றிற்கு எதிரான ஒரே பாதுகாப்பு என்னவெனில் தனது வாய் மேல்கட்டும் கைகுட்டைதான். அவனுடைய தொழில் அவனுக்கு கெடுதலையானதாயிராதபடி ஏற்பாடுசெய்யப்பட்ட சாமர்த்தியமான நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட வழிகளை உபயோகிப்பதற்கு மறுத்துவிடுகிறான். ஏனென்றால் அவைகளை உபயோகித்தால் அவனுடைய கூலி குறைந்துபோகுமாம். வாசிப்பில்லாத துற்பழக்கமுடைய வகுப்பினராயில்லாமல் சாணைப்பிடிக்கிறவர்கள் புத்திசாதுர்யமுள்ளவர்களாகவும், சத் பழக்கங்களை யுடையவர்களாகவும் யிருந்தால் அற்ப ஆயுளையும் அதிககூலியையும் குறைந்த வேலையையும் நாடார்கள். நோய் வருத்தும் இவைகளைத் தவிர்ப்பதற்கே பார்ப்பார்கள். அவர்களுக்கு இருக்கிற சுருசுருப்பான அனுபவமும் சாமர்த்தியமும் எப்போதும் அதிக வருமானத்தைக் கொடுக்கும்.

உலர்ந்த சாணையில் பிடிப்பதற்கு பதிலாக நனைந்த சாணையில் பிடித்துக் கூராக்கினால் இதிலுள்ள மிகுந்த அபாயம் நீங்கும். தண்ணீரை சாணைபிடிக்க உபயோகித்தால் முனைகள் சீக்கிரமாய் துருப்பிடித்துப்போகும். 1821ஹு ஷெப்பீல்ட் மிஸ்டர் ஆப்ரஹாம் துரையவர்கள் வாயையும் மூக்கையும் மூடிக்கொள்ளும் ஓர் கவசத்தை நவீனமாய் யோசித்துச் செய்தார். அது மாத்தினாலாகிய ஒரு சிறிய சட்டமாயிருக்கிறது. இரண்டு மூன்று அடுக்கு மஸ்லின் வஸ்திரத்தாலும் வலைத்துண்டாலும் மூடப்பட்டிருக்கிறது. அநேகம் சிறு காந்தமேறிய அல்லது மின்சாரமேறிய காந்தத்துண்டுகள் செருகப்பட்டிருக்கின்றன. அந்த வாய் நாசிமூடியை தரித்துக்கொள்ளுகிறவனுடைய வாயில் போகாதபடி எழுகுத் துண்டுகளை கிரகித்துக்கொள்ளுகிறது. அதேகாலத்தில் வலைத்துணியானது மணற்கல் சாணையின் தூளை அகற்றி வாயுவை பரிசுத்தமாக்குகிறது. இந்த மூடியானது இப்போது எழுகுத் தூள் சாணைத்தூள்கள் நிறைந்து இருக்கிறபடியால் இப்போது செய்யவேண்டியது என்னவென்றால் ஒரு மணிநேரத்தில் இரண்டுமுறை அந்த மூடியை எடுத்து தூள்களை தட்டிவிட வேண்டியதுதான். இந்த உபாய ஏற்பாடு தீங்கை பூரணமாய்

நீக்குவதா யிருந்தாலும், அதை செய்வதற்கு 26வருஷம்பிடித்தாலும், எப்போதும்போல இப்போதும் ஊசியைக் கூராக்குவது அபாயகரமா யிருந்தாலும், வேலைக்காரர்கள் இன்னும் தரித்துக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். அவர்கள் இந்த அபாயத்தைநீக்க வேறொரு உபாயத்தையும் நிராகரிக்கிறார்கள். அது என்னவெனில் சாணைக்கல்லிலிருந்து சாணைபிடிக்கும் அறையின் சுவரின்மூலமாய் வெளியிடத்திற்கு ஒரு குழை செல்லுகிறது. ஒரு விசிறியைக்கொண்டு பல காற்று ஓட்டம் இந்தகுழையில் உண்டாக்கப்படுகிறது. அதினால் எழுகு சாணைக்கல் தூள்கள் அவை உண்டாகும்போதே சாணையிலிருந்து இழுத்துக்கொள்ளப்படுகின்றன. ஷெப்பீல்ட் சாணைபிடிக்கும் இடங்களில் உபயோகப்படுத்தப்படுகிற உபாய ஏற்பாடு சாணைவேலைக்காரர்களுடைய சராசரி வயதில் பத்து வருடத்தை அதிகப்படுத்தி யிருக்கிறது. சாணைப்பிடிக்கிறவன் கையிலிருந்து ஊசி வருகிறபோது மெதுவான கருத்த கம்பியின் வளையில்லாத துண்டுகளாக இருக்கிறது. இரண்டு முனையும் கூராயிருக்கிறது. நன்றாய் கூராயிருக்கிறதா வென்று பார்க்க முனைகளை பரிக்ஷிக்கிறார்கள். பிறகு ஒவ்வொரு கம்பியின்மத்தியில் துவாரம் செய்கிறார்கள்.

ஊசியின் காது என்றால், ஊசியின் கனத்த பாகத்தில் செய்யப்பட்டிருக்கும் ஓர் துவாரம். அந்த துவாரத்திற்கு அடுத்து இரண்டு பக்கத்திலேயும் ஆழிசெய்திருக்கிறது. ஊசியில் நூலைக் கோர்க்கும்போது நூலை வழியில் செலுத்துவதற்காகத்தான் இந்த ஆழிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டுவேலையையும் ஒரேவழியாய் அச்சில் அடிக்கிறதென்றால் உலோகம் இழிபட்டு இரண்டு பிளவாய்விடும். கம்பி நாசமாகும்படி அடியை ஏற்றுக்கொள்ளுகிறது. ஆகையால் துவாரம் போடவும் ஆழிஉண்டாக்கவும் இரண்டு மூன்று ஜாக்கிரதையான வேலை முறைகளை நடத்தவேண்டியதாயிருக்கிறது. முதலில் ஆழி உண்டாக்கப்படுகிறது. அப்போதே துவாரம் செய்ய வேண்டிய இடத்தில் சிறிது பள்ளம் உண்டாக்கப்படுகிறது. இது ஒரு முத்திரிக்கும் யந்திரத்தால் ஆகிறது. யந்திரத்தில் ஒரு இரும்பு பாளமிருக்கிறது. அதில் ஆழியின் மேல் அச்சு பதிந்திருக்கிறது. இது ஒரு பாரமான கல்லின்மேல் வைக்கப்படுகிறது. இதற்குமேல் ஏறக்குறைய 12 பவுண்டு எடையுள்ள சம்மட்டியிருக்கிறது. இந்த சம்மட்டியில் ஆழி அச்சின் மற்றொருபாதி இருக்கிறது. இந்த சம்மட்டி காலினால் அசைக்கப்படுகிறது. ஓர் இரும்பு சட்டத்தால் மேலெழுகிறது. வேலைக்காரன் அநேக கம்பிகளைப் பிடித்துக் கொண்டு ஒருகம்பியை கீழச்சியுள்ள சிறுபணை மேல்போடுகிறான். அதேகாலத்தில் அதை ஓர் உலோகத்துண்டின் பக்கமாய் தள்ளுகிறான். அப்படி செய்வதினால் ஊசியின் நீள வட்டளவு ஏற்படுகிறது. பிறகு தன்னுடைய பாதத்தால்சம்மட்டியைத் தூக்கி ஒரு சுருக்கான அடி விழும்படியாய் விடுகிறான். அச்சின் இரண்டு உயர்ந்த மேற்புறங்களும் கம்பியின் எதிராகவுள்ள இரண்டு பக்கங்களிலேயும் ஆழியை உண்டாக்குகிறது. அந்த கம்பியின் செறிவான வஸ்துவின் ஓர்பாகம் அகல்கிறது. இம்மாதிரியாக அச்சடிக்கிறவன் ஒவ்வொரு கம்பியை இடம் திருத்திவைத்து தனித்தனியாய் அச்சிலழுத்தவேண்டியதா யிருந்த

போதிலும் அவன் ஒரு மணிநேரத்தில் இரண்டாயிரம் கம்பிகளை அச்சில் அழுத்துவான். அதாவது ஒரு மணிநேரத்தில் 4000 ஊசியை உண்டாக்குவான்.

பிறகு ஒரு சிறிய, கையால் அழுத்தும், யந்திரத்திலிட்டு காதுகளை துளைபோடுகிறான். இந்த யந்திரம் சிறு பிள்ளைகளால் அழுத்தப்படுகிறது. ஒவ்வொரு பையனும் ஓர் கணக்கான கம்பிகளை எடுத்துக்கொள்ளுகிறான். அவைகளை ஒரு விசிறியைப்போல் பரப்புகிறான். பரப்பியவற்றை ஒரு சிறு இருப்புப் பலகையின் ஒரு துவாரத்தில்வைக்கிறான். கம்பியின் மத்திய பாகத்தை யந்திரத்தின் மத்திய பாகத்திற்குக் கொண்டுவருகிறான். யந்திரத்தின் மேல்கைபாகம் ஊசியின்காதளவுக்கு சமமான இரண்டு துண்டிக்கும் ஆயுதம் அல்லது இரண்டு எழுகுமுனைகளையுடைத்தாயிருக்கிறது. அவைகளுக்கு சரியான அச்சிலுள்ள துவாரங்களின்மேல் அவைகள் விழுகின்றன. வேலைக்கருகில் தன் தலையை நிமிர்த்திக்கொண்டு நிற்கிற ஒரு பையன் இந்த மேல்கை பாகத்தை கீழே விழும்படிச் செய்கிறான்.

அப்படிச் செய்வதால் காதை துவாரம் போடுகிறான். ஒவ்வொரு ஊசியிலேயும் துவாரம்போடும்போது அந்தபையன் துவாரம்போடும் ஆயுதத்திற்கு கீழுள்ள விசிறிபோல் பரப்பிய கம்பிகளை தள்ளுகிறான். இதுதான் ஊசிக்கு காதுபோடல். சில ஊசிகளுக்கு வேறுமாதிரியாக காது போடுகிறார்கள். உதாரணமாக: கம்பிகளுக்கு இரண்டுபக்கத்திலேயும் கூர் உண்டாக்கினதும் முன்விவரிக்கப்பட்ட நெடுக்கான கத்தரியால் மத்தியில் வெட்டப்படுகின்றன. பிறகு சிறிய மரப்பெட்டிகளில் ஒன்றுக்கொன்று இடையிடத்தை யுடையனவாய்வைக்கப்படுகின்றன. அப்படியே வளைவு நிமிர்த்தும் தலைவனுக்கு அனுப்புகிறார்கள். அந்த வேலைக்காரன் ஒரு மேஜைமேல் உட்கார்ந்துகொண்டு தனக்கு முன்னாக ஒரு கன அளவுள்ள எழுகுப் பணையைவைத்துக்கொண்டு இருபது இருபத்தைந்து ஊசிகளை இடதுகையின் கட்டைவிரலுக்கும் சுட்டுவிரலுக்கும் மத்தியில் முனைகளின் பக்கமாய் எடுத்துக்கொண்டு விசிறியைப்போல் பரப்புகிறான். எழுகுதிம்மையின்மேல் கம்பிகளின் முனைகளை வைக்கிறான். சிறுசுத்தியால் ஒவ்வொன்றாய் அடிக்கிறான். ஒவ்வொரு அடியில் ஒரு கம்பியின் முனை நிமிர்கிறது. இந்த அடியில் கம்பிகளின் முனைகள் கடினமாகின்றன. ஆகையால்அவைகள் காய்ச்சப்பட்டு மெதுவாகஆறும்படி விடப்படுகின்றன. பிறகு காதுபோடுகிறவனுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிறுபையன் ஒரு சிறிய எழுகு பணையின்மேல் அக்கம்பிகளை வைத்து ஒவ்வொன்றிலும் ஓர் துவாரம்செய்யும் ஆயுதத்தின் முனையைவைத்து சுத்தியின் பலமான தாக்கால் காதுபோடுகிறான். இந்த முனைகளைத் திருப்பி எதிர்பக்கத்தில் துளைபோடுகிறான். இன்னொரு பையன் ஒவ்வொரு ஊசியையும் ஓர் ஈயதிம்மையின்மேல் வைத்து அந்த துவாரத்தின் மூலமாய் ஓர் கதிரை செலுத்துவதினால் ஊசியின் காதுகளை சுத்தப்படுத்துகிறான். பிறகு பக்கவாட்டாய் ஒரு தட்டையான எழுகுத் துண்டின்மேல்வைத்து (அதின்மேல் துவாரம்செய்யும் அச்சு சேர்ந்திருக்கிறது) ஒரு சுத்தியால் இரண்டுபாகத்திலேயும் தட்டுகிறான். அப்படிச் செய்கிறதினால் ஊசி துவாரத்திற்கு, துவாரம்போ

டும் ஆயுதத்தின் உருவம் உண்டாகிறது. இவைகளெல்லாம் ஆச்சரியப்படும்படியான விரைவில் ஆகின்றன. இந்தவிதமாக துவாரம்போடுவதில், ஆழி கடைசியில் உண்டாகிறது. கையில் பிடித்துக்கொண்டிருக்கிற சிராமணத்தில் ஊசி வைக்கப்படுகிறது. ஒரு கடினமான எழுகுத்துண்டில் வெட்டப்பட்டிருக்கிற ஓர் கோணவடிவ ஆழியில் ஊசியின் தலையை வைக்கிறார்கள். ஒரு சிறிய உலோகத்துண்டினால் ஊசியின் இரண்டு எதிர் எதிரான பக்கங்களில் ஒரு முறை தாக்குவதினால் ஆழி உண்டாகிறது. அப்போது தலை ஒரு அரத்தினால் உருட்டப்பட்டு செப்பப்படுத்தப்படுகிறது.

இரட்டைக்கம்பியின் மத்தியில் காதையும் ஆழியையும் ஊசிக்கு உண்டாக்கு முறைதான் அதிக சீக்கிரமாக ஆகக்கூடியது. அதிக செலவை குறைக்கத்தகுந்தது. எங்கெங்கே கொள்ளக்கூடுமோ அவ்விடங்களிலெல்லாம் இம்முறையைத்தான் அனுசரிக்கிறார்கள். இந்த முறையில் கம்பிகள் வரிசைக்கிரமமான நிலைகளில் பின்வரும் ரூபத்தை அடைகின்றன. (1) இரண்டு பக்கத்திலேயும் கூராகிய முனைகளையுடைய நேரான கம்பி. (2) அதே கம்பி காதும் ஆழியும் ஊன்றப்பட்டு மத்தியில் தட்டையாக்கப்பட்டது. (3) அதேகம்பி காது துளைக்கப்பட்டது. ஊன்றும்போது காதின் இரண்டுபக்கத்திலும் பிதுக்கம் அரத்தினால் துடைத்து மழுக்கப்படுகிறது. ஒவ்வொரு கம்பிக்கும் தனித்தனியே இவ்வேலையைச் செய்வது அசாத்தியமும் மெதுவாக ஆகக்கூடியதுமாயிருக்கிறபடியால் ஒருவித சாமர்த்தியமான விதத்தில் அவைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்க்கிறார்கள். அவைகள் ஓர் கம்பியில் சேர்க்கப்படுகின்றன. ஒருமெல்லியகம்பியை ஊசிகளின்காதுகளில் செலுத்திச்சேர்க்கிறார்கள். இந்தவேலை சிறுகுழந்தைகளால்வெகு துரிதமாய் ஆகிறது. பிறகு பிதுக்கங்களெல்லாம் அரத்தால் துடைக்கப்படுகின்றன. பிறகு ஊசிகளை முன்னும் பின்னும் வளைப்பதினால் இரண்டு ஊசிகளாகின்றன. இப்போது கம்பிகளில் கோர்த்த இரண்டு ஊசிகளாகின்றன. இப்போது கம்பிகளில் கோர்த்த இரண்டு வரிசைகளாகின்றன. இப்போது ஒவ்வொரு ஊசியையும் கூரான பக்கத்தில் கைபிடிச்சுராவியால் பிடித்துக்கொண்டு தலையை அரத்தால் தக்க உருவத்தைக் அடையும்படி மழுக்குகிறார்கள். இப்போது ஊசிகள் சரியான அளவாக இருக்கின்றன. இன்னும் சுத்தப்படாத நிலையில்தான் இருக்கிறது. ஆனால் கூரும் காதும், ஆழியும் ஏற்பட்டுவிட்டது.

காதும் ஆழியும் ஊன்றுவதிலும் காதுகளில் கம்பியை நுழைத்து ஒன்று சேர்ப்பதிலும் ஊசிகளை இரண்டாக ஒடித்து பிரிப்பதிலும் சில வளைந்து போகின்றன. அவைகளை இப்போது மெதுவாக நிமிர்த்துகிறவனிடத்திற்கு அனுப்புகிறது. அதாவது அவைகள் இப்போது மிருதுவாயிருப்பதினால் ஒரு தட்டையான எழுகு கட்டின்மேல் திரைத்து நிமிர்க்கப்படுகிறது. ஓர் மெதுவான எழுகு சட்டத்தை ஊசிகளின்மேல் வைத்து திரைக்கிறார்கள். இந்த சட்டம் இரண்டுகோடியிலும் மேல்நோக்கி வளைந்து இருக்கிறது. ஆகையால் சட்டத்தின் மத்தியபாகத்தில் கீழ் வளைவைக்காட்டுகிறது. அதினால்தான் நிமிர்த்தும் தொழில் ஆகிறது. சில கணக்கான ஊசிகளை ஒன்றுக்கொன்று சரியான இடையிடம் இருக்கும்படியாய் தகட்டின்

மேல் வைத்துக்கொண்டு நிமிர்த்துகிறவன் (சாதாரணமாய் ஒரு பெண்பிள்ளைதான் செய்கிறாள்) ஒவ்வொன்றாய் எடுத்துக்கொண்டு முன்னும் பின்னுமாக திரைக்கிறான். அவைகள் அப்படி கடினமான இளகிக்கொடுக்காத மேல் பரப்புகளுக்கிடையில் திரைக்கப் படுவதினாலே, நிமிர்கின்றன. ஒரு ஸ்திரீ ஒரு மணிநேரத்தில் ஆயிரம் ஊசியைத் திரைத்து நிமிர்த்துவாள்.

கடினமாக்கல்.

(தோய்ப்பு போடல்.)

இப்போது ஊசிகள் கருப்பாயும் திருவாயும் மலினப்பட்டும் இருக்கின்றன. அவசாமான வேலையில் உபயோகிக்கத் தகுதியுள்ளவையல்ல, படபடப்பான கையால் உபயோகிக்கத் தகுந்தனவுமல்ல. அவைகள் இப்போது தோய்க்கப்படவேண்டும். அதற்காக அவைகளை ஒரு நெருக்கமான (அகலக் குறைவான) இரும்புத் தகடுகளின்மேல் கனமாக ஒரு கோல்லுரைக் கொண்டு பாப்புகிறார்கள்.

உலைமேல் ஒரு தொட்டியில் வைக்கிறார்கள். இங்கே அவைகள் பழுக்கக் காய்கின்றன. அவைகளை அப்போது எடுத்து சடிதியாய்க் குளிரச்செய்கிறார்கள். குளிரச்செய்வதற்கு குளிர்ந்த ஜலத்திலேயாவது, எண்ணெயிலேயாவது அமிழ்த்துகிறார்கள். இப்படிச் செய்வதினால் ஊசிகள் கடினமாயும் ஒடியத்தக்கனவாயுமாகின்றன. ஆனால் இப்போது உபயோகிக்கக்கூடாதபடி அதிக கடினமாய் விடுகின்றன. ஆகையால் அவைகளை குறைந்த கடினத்தை அடையச்செய்ய வேண்டியதாயிருக்கிறது. இது காய்ச்சி ஆற்றுவதால் ஆகத்தகுந்தது. அதற்காக தண்ணீரிலிருந்து எடுத்ததும் உலர்த்தி மறுபடியும் காய்ச்சுகிறார்கள். முன்போல அவ்வளவு பழுக்கக்காய்ச்சவேண்டியதில்லை. சிறிது காய்ந்ததும் எடுத்து தானாகவே படிப்படியாய் ஆறும்படி விடுகிறார்கள். ஆறுவதற்காக ஒரு இரும்புத் தகட்டின்மேல் வைத்து கீழே நெருப்பினால் அந்தத் தகட்டை சூடேறும்படிச் செய்கிறார்கள். அவைகளை ஐந்து நிமிஷம் வரைக்கும் இரும்பு கம்பியினால் கிளறிக்கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அவைகளின்மேல் நீலவர்ணம் சிறிது படிந்ததும் ஊசிகளுக்கு வேண்டிய கடினம்வந்ததாக கருதப்படுகிறது. அவைகளை தகட்டிலிருந்து எடுத்துவிடுகிறார்கள். குளிர்ந்த ஜலத்தில் தோய்த்து ஊசிகளை கடினமாக்கும்போது அவைகள் ஏறக்குறைய வளைந்து போகின்றன. ஆகையால் அவைகளை சுத்தியால் நிமிர்த்தவேண்டியதாகிறது. இந்த வேலை சாதாரணமாய் வீடுகளில் தொழிலாளிகளால் நடக்கிறது. ஊசிகள் விரல்களினால் ஒரு மிருதுவான எழுகு பலகையின்மேல் உருட்டப்படுகின்றன. ஸ்பரிசத்தாலும், பார்வையாலும், உடனுக்குடன் எது நன்றாய் திரைக்கப்படவில்லையென்று அறிகிறார்கள். நன்றாய் திரைக்கப்படாதவைகளை எடுத்து ஓர் பணையின்மேல் வைத்து சுத்தியால் தட்டுகிறார்கள். அதினால் அவைகள் நன்றாய் நிமிர்கின்றன.

சுத்தப்படுத்தல்.

பிறகு சுத்தப்படுத்துவதாகிய முக்கியமான வேலை நடக்கவேண்டியதாகிறது. முதலில் கம்பிகள் ஒன்றோடொன்று உராய்வதினால் வளைவு நிமிர்த்தப்பட்டதுபோல ஊசிகள் பளபளப்பாவதும் அவ்விதத்தில்தான் ஆகவேண்டியிருக்கிறது. இதற்காக

அவைகள் பின் விவரிக்கப்படும் உபாய விதத்தில் நாற்பதாயிரம் அல்லது ஐம்பதாயிரம் சேர்ந்த கட்டுகள் ஆக்கப்படுகின்றன. இரண்டுபக்கத்திலிருக்குள்ள ஒரு மரதொட்டியின் குறுக்காக அநேக கயிறுகளை வைக்கிறார்கள். இந்த கயிறுகளின் மேல் கனத்த கித்தான் துண்டை போடுகிறார்கள். இந்த கித்தானில் ஊசிகளை நீளவாட்டத்தில் குவியல் குவியலாக ஏற்பாடாக வைக்கிறார்கள். இப்போது தலையென்றும் கூர் என்றும் கவனியாமல் எவ்விதமாகிலும் வைக்கலாம். சிறிது எமரி என்கிற அரங்கப்பொருளையும் எண்ணெயையும் கொஞ்சம் மிருதுவான சோப்பையும் அதின்மேல் தெளிக்கிறார்கள். அவைகளை கட்டாக உருட்டுகிறார்கள். சுவற்ப காலம்வரைக்கும் கட்டிவைக்கிறார்கள். இப்போது இந்த கட்டுகளை ஊசிகள் விழுந்து போகும் என்கிற பயமில்லாமல் எடுக்கலாம். பிறகு வேலைக்காரன் ஓர் உறுதியான ட்வைன் கயிற்றை எடுத்துக்கொண்டு அந்த கட்டைச் சுற்றி கட்டுகிறான். அதிக நெருக்கமாய் சுற்றுகளை போட்டுக்கொண்டு போகும்போதே கயிற்றை இழுத்துக் கொள்ளுகிறான். அப்படிச் செய்வதினால் எல்லாம் சேர்ந்து இரண்டு மூன்று அடி நீளமும் சுமார் மூன்று நான்கு அங்குல கனமுமுள்ள ஒரேகட்டாகிறது. அப்படிப் பட்ட கணக்கான சில சுருள்களை உண்டாக்கி மெருகு கொடுக்கும் அல்லது சுத்தமாக்கும் யந்திரத்தின்கீழ் வைக்கப்படுகிறது. நீண்ட பள்ளமான தொட்டியில் அடுக்காக அந்த யந்திரம் இருக்கிறது. அந்த தொட்டிகளில் பாரமேறிய பலகைகளாவது சப்பராவது இருக்கிறது. அவைகளின்கீழ் ஊசிக்கட்டுகள் முன்னும் பின்னுமாக உருட்டப்படுகிறது. அந்த ரப்பர் ஒரு நிமிஷத்திற்கு 20 அல்லது 30 தரம் அசைகிறது. அதினால் கட்டின்மேல் பாரம் தாங்குகிறது. அழுத்தப்படுகிறது. ஊசிகள் ஒன்றின்மேலொன்று பலமுறை தேய்த்துக்கொள்கின்றன. 50 அல்லது 60 மணி நேரத்தில் இடைவிடாத உராய்வால் எண்ணெயினாலும், எமரியினாலும் மெதுவான சோப்பினாலும் உதவி செய்யப்பட்டு பளபளப்பு உண்டாகிறது. ஒருதடவையில் 8 மணி நேரத்திற்குமேல் அதிகமாகத் தேய்க்கப்படுவதில்லை. இடைவிடாமல் உராய்வதால் கித்தான் நைந்துபோகிறது. மறுபடியும் கட்டவேண்டியதாகிறது. ஆகையால் ஊசிகள் அவிழ்க்கப்படுகின்றன. சோப்பு ஜலம் இவற்றால் கழுவப்படுகின்றன. மறுபடியும் மெருகு கொடுக்கும் மருந்துகளையும் சேர்த்து கட்டு கட்டப்படுகின்றன. மறுபடியும் 8 மணி நேரம் தேய்க்கப்படுகின்றன. நல்ல ஊசிகளுக்கு ஒவ்வொருநாளும் இம்மாதிரியாகவே ஏழு எட்டுதினம் செய்கிறார்கள். ஊசியைப்போன்ற அவ்வளவு மெல்லியதான ஒடியத்தக்க ஆயுதத்திற்கு இப்படி தேய்ப்பது அதிகந்தான். அடிக்கடி அநேகம் ஒடிந்துபோகின்றன. எவ்வளவு தேய்க்கிறோமோ அவ்வளவு ஒடிந்துபோகிறது. ஆனால் இம்மாதிரி தேய்ப்பதினால் ஊசிகள் பார்வைக்கு உயர்ந்த தோற்றத்தை யடைகின்றன. குணமும் அதிகமாகிறது. பாலிஷ் செய்வதற்கு மேலாகிறது.

இப்போது ஊசிகள் பளபளப்பாக விருக்கின்றன. ஆனால் பூரண வேலைப்பாட்டை யடைந்தனவல்ல. ஆகையால் ஊசிகள் சுத்தமாக்கும் அறையிலிருந்து பளபளப்பு சோப்பு அறைக்கு எடுத்துக்கொண்டுபோகப்படுகின்றன. அவ்விடத்தில் நீண்ட

தகரத்தொட்டிகளில் ஒருவிதமாய் குலுக்குவதினால் ஊசிகள் ஒன்றுக்கொன்று நேராக ஆகின்றன. அவைகள் நீண்ட வரிசைகளாகவாவது குவியல்களாகவாவது ஏற்பாடாகின்றன. இந்த நிலையில் அவைகள் ஒரு பெண்ணிடத்திற்கு அனுப்பப்படுகின்றன. அவள் தலைப்பக்கம் ஒருபுறமாக யிருக்கப்பார்க்கிறாள். இந்தவேலையை 40, 50, ஆயிரம் ஊசிகளுக்கு செய்யும் கஷ்டமான வேலையாகவும் முடிவுபெறாத வேலையாகவுமிருக்கும். அப்படியிருந்தும் அதிக சீக்கிரமாகவும் வேலைப்பாடாகவும் செய்து முடிக்கிறபடியால் ஆச்சரியம் உண்டாகிறது. இந்தவேலை சுலபமான விதத்தில் செய்து முடிகிறபடியால் சிரிப்பை உண்டாக்குகிறது. அந்த பெண்குழந்தை ஒரு துணிக்கந்தையின் துண்டையாவது அல்லது மிருதுவான பதனிட்ட தோல்துண்டையாவது உடைத்தாயிருக்கிறாள். அவள் வலக்கையின் ஆள்காட்டி விரலில் அது சுற்றப்பட்டிருக்கிறது. அந்த விரலை ஊசிக்குவியலின்மேல் ஒற்றுகிறாள். அந்த பக்கமாயிருக்கிற முனைகளெல்லாம் கந்தையில் தைத்துக்கொள்கின்றன. குவியலிலிருந்து இழுத்து எடுப்பதற்குப் போதுமான பிடிப்பு உண்டாகிறது. மற்றொருகையின் விரலால் தலையானது தாங்கப்படுவதால் ஊசிகள் நூதன குவியலாக ஏற்பாடாகின்றன. முனைகள் இப்போது எதிர் எதிராக இருக்கின்றன. இப்போது ஊசிகளை மறுபடியும் பரீக்ஷிக்கிறார்கள். ஒடிந்தவை குறைபாடாக உள்ளவை விலக்கப்படுகின்றன.

திருகுதல்.

பிறகு அதிக நுட்பமான முக்கியமான வேலை நடக்கவேண்டியதாகிறது. அதாவது ஊசிகளின் காதைத் திருகுதல். திருகுதலாவது ஒவ்வொரு ஊசியின் காதிலிருக்கும் முள்போன்ற கூரிய பிசிர்களை நீக்கி மழுக்குதல். அப்பிசிர்கள் இருந்தால் சாட்டை நைந்துபோகச்செய்யும். தையல்காரியின் காலத்தை விருதாவாக கழியச்செய்யும். இந்தவேலை ஆவதற்கு ஊசிகள் காதினருகில் மறுபடியும் காய்ச்சப்பட்டு மிருதுவாக இருக்கவேண்டும். அப்போது திருகாணிஊடுருவிச்செல்லச் சாத்தியமாகும். திருகுவதற்காக ஊசிகளை ஒரு எழுகு திம்மைமேல், ஊசியின் காது திம்மையின்ஓரத்தைக் கடந்திருக்கும்படியாக, வைக்கிறார்கள். ஒரு பழுக்கக் காய்ச்சின தகட்டை ஜாக்கிரதையாய் அவைகளுக்கு அருகில் கொண்டுவருகிறார்கள். ஊசிகளுக்கு சூடு தாக்கினதும் நிறம் மாறுகிறது. முதலில் மஞ்சளாகிறது. பிறகு சிவப்பாகிறது. கடைசியாக கனத்த நீலநிறத்தை அடைகிறது. அதுதான் வேலைக்கு தயாரான நிலைமை.

திருகு ஆணிகள் எழுகினாலாகிய சிறிய மூன்றுபக்கமுள்ள ஆயுதங்கள். மூன்று நான்கு அங்குல நீளமுள்ளன. அவைகள் அதிக ஜாக்கிரதையாய் தயாராக்கப்படுகின்றன. திருவும் வேலை யௌவன ஸ்திரீகளால் ஆகிறது. அவர்கள் தங்களுக்குமுன்னே அதிக வேகத்தோடு சுழன்றுச் செல்கிற சுர்ராய்சான திருகாணியோடு ஒரு பலகணிக்கு எதிராக ஒரு வீச்சுப்பலகையின் மேல் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். திருகுகிறவர்கள் நிர்பந்தமாய் உட்கார்ந்துகொண்டு இருக்கும் தோற்றம் அதிகமாய் கவனிக்கத்தக்கது. பார்ப்பதற்குக் கோரமானது. கண் உன்னிப்பாய் பார்த்துக்கொண்டிருக்கிறது. தூர பார்வைக்கு வேண்டிய தூரத்தில் இருக்கிறது. தேகத்

தின் ஒவ்வொரு சதையும் அசையாமலிருக்கிறது, கையானது குறித்த இடத்தை விட்டு விலகாதபடிக்கும் சிதறாதபடிக்குமிருக்க அவ்வளவு நிர்பந்தமாயிருக்கவேண்டியதாகிறது. திருகுகிறவள் சில ஊசிகளை இடதுகையால் முனைப்பக்கமாய் எடுத்து ஒரு விசிறியைப்போல் பரப்புகிறாள். திருகாணியின் முனைக்கு எதிராக கொண்டுவருகிறாள். வலதுகையில் திருகாணியை பிடித்து திருகுகிறாள். இடதுகையின் கட்டைவிரல் இதரவிரல்களின் ஒருவித புதுமையான அசைவால் ஊசிகள் ஒன்றின்பின் ஒன்றாய் திருகப்படுவதற்கு திருகு ஆணியின்கீழ் வந்து தங்குகிறது. முதலில் ஒவ்வொரு காதும் எதிர் எதிராக திருகப்படுகிறது, கூரான ஓரத்திற்கு பதிலாக திரண்ட ஓரத்தால் ஆழியைச் சேரும்படி திருகு ஆணியால் துளைக்கப்படுகிறது. பிறகு காதின் வேறோரங்களுக்கு திருகு ஆணி செலுத்தப்படுகிறது. அதினுடைய கூரான ஓரத்தை அடைக்கிறது. கத்தரியின் வளைவுகளைப்போல் அதைச் செய்கிறது. காதின் இரண்டு பக்கங்களும் இந்தமாதிரியாக துளைக்கப்படுகிறது.

பிசுர் துடைப்பது புதுமாதிரி: முன்னையமாதிரியைக் காட்டிலும் மேலானது. பிசுர் துடைக்கப்பட்ட ஊசிகள் சட்டை அறுக்கவே அறுக்காது. அவைகள் ஒருபோது காதண்டை ஒடிகிறதில்லை. ஏனென்றால் அவைகள் நல்ல எஃகினால் செய்யப்படவேண்டும். திருகாணி துளைக்கும்படி நீலநிறமாக சூடேற்றி மெதுவாக்கவேண்டும். துளைக்கப்படாத சாதாரண ஊசிகளைப்போல துளைக்கப்பட்ட ஊசிகள் ஒடிந்துபோகத்தக்கனவல்ல.

ஊசிகள் துளைக்கப்பட்டதும், அதிகவேகமாய் சுற்றுகிற கடைச்சல் பட்டரையில் உயர்த்தியுள்ள சாணைக்கல்லில் முனைகள் பூரணத்தை அடைகின்றன. அதன்பிறகு பாலிஷ் செய்கிறவனிடத்திற்கு அனுப்பப்படுகிறது. அவன்கொஞ்சம் பாலிஷ்பேஸ்டு தடவியிருக்கிற எருமைத்தோலினால் மூடப்பட்டுள்ள மரச்சக்கரத்தின்மேல் பாலிஷ் செய்கிறான்.

ஊசிகள் இப்போது காகிதத்தில் சுற்றுவதற்கு தயாராகயிருக்கிறது. அவைகளை இருபத்தைந்து இருபத்தைந்தாய்எண்ணுகிறார்கள். நீலகடிதத்தில் மடிக்கிறார்கள். லேபில் ஒட்டுகிறார்கள். இருபது பொட்டளங்களை ஒன்றுசேர்த்து ஒருகட்டு கட்டுகிறார்கள். இவைகளை சதுர பாக்கட்டாக, கட்டுகிறார்கள். இதில் 20, 40, அல்லது 60, ஆயிரம் ஊசிகள் இருக்கின்றன. வெளிதேசத்திற்கனுப்ப அவைகளை தகர தேஸ்களில் பாக் செய்கிறார்கள்.

மேல் விவரித்த வேலைகளெல்லாம் சேர்த்தியான ஊசிகளுக்குத்தான் செய்கிறார்கள். சில முரட்டு ஊசிகளுக்கு சுளுப்பான வேலைகளைச் செய்கிறதில்லை,

***

மணி வார்த்தல் மணி உலோகம் வார்ப்பட வெண்கலம்.

கலப்பு உலோகம்.

(a) பெரிய மணிகளுக்கு: 100பவுண்டு செம்பு 25 முதல் 26 பவுண்டு வரையில் வெள்ளீயம். சிறிய மணிகளுக்கு 12-பவுண்டு செம்பு 4 பவுண்டு வெள்ளீயம்.

(b) தாமசன்மணிகளுக்கு: 80 பவுண்டு செம்பு 10.1 பவுண்டு வெள்ளீயம் 5.6 பவுண்டு துத்தநாகம் 4.3 பவுண்டு காரீயம்.

(c) கடிகாரமணிக்கு: (1) 75.19 பவுண்டு செம்பு 48.81 பவுண்டு வெள்ளீயம் (2) ஜர்மன்முறை: 73 செம்பு 24.3 வெள்ளீயம் 2.7 துத்தநாகம். (3) சுவிஸ்முறை: 14.5செம்பு 25.0 வெள்ளீயம் 0.5காரீயம்.

(d) சிறிய அழகு கடிகாரங்களுக்கு பாரிஸ் மணிகளுக்கு: செம்பு 72பாகம் வெள்ளீயம் 26½ பாகம் இரும்பு 1½ பாகம்.

(e) அமெரிக்காவில் செய்யும் மோட்டார் கார் மைசிகல் வண்டி மணிக்கு: செம்பு 80 பவுண்டு வெள்ளீயம் 20 பவுண்டு துத்தநாகம் ½ பவுண்டு காரீயம் ½ பவுண்டு.

(f) வெள்ளை மேஜை மணிக்கு: (1) செம்பு 2.06 பாகம் வெள்ளீயம் 97.31 பாகம் பிஸ்மத் 0.63 பாகம். (2) வெள்ளீயம் 7 பாகம் ஆண்டிமொனி 1 பாகம். (3) நேர்த்தியானதற்கு: செம்பு 40 வெள்ளீயம் 60. (4)வெள்ளீயம் 19 நிக்கல்80 ப்ளாடினம் 1.

(g) காங் (Gong) உலோகம்: (1)செம்பு 78 பாகம் வெள்ளீயம் 22 பாகம். (2) செம்பு 78.5 வெள்ளீயம் 10.27 காரீயம் 0.52 வெள்ளி 0.18. (3) செம்பு 10 வெள்ளீயம் 4 துத்தநாகம் 1.5 வெள்ளி 0.5.

(h) சிறிய மணிகளுக்கு: கருக்காதது பாரத்தில் லேசானது. நல்ல சப்தமுடையது. செம்பு 6 பவுண்டு, நிக்கல் 1 பவுண்டு உருக்கிகுளிரச்செய்யவேண்டும். 1பவுண்டு துத்தநாகம் ½ அவுன்சு அலுமினியம் சேர்க்கவேண்டும். மறுபடியும் உருக்கி குளிரச்செய்யவேண்டும். கடைசியாக உருக்கி ½ அவுன்சு பாதரசம்சேர்க்கவேண்டும். உருகின ஸ்திதியிலேயே 6 பவுண்டு செம்பு சேர்க்கவேண்டும்.

(i) ஜப்பான்மணி: "காகீன்" என்றது. (1)செம்பு 20பாகம், வெள்ளீயம் 8 பாகம், இரும்பு 1 பாகம், துத்தநாகம் 3 பாகம், (2) செம்பு 20 பாகம் வெள்ளீயம் 5.66 துத்தநாகம் 1 பாகம், (3) செம்பு 20 வெள்ளீயம் 6, காரீயம் 4, இரும்பு 1, துத்தநாகம் 2, (4) செம்பு 20, வெள்ளீயம் 4, காரீயம் 4.

(j) ரெயில்வே ஸிக்னல் மணி: செம்பு 60 பாகம், துத்தநாகம் 30 பாகம், இரும்பு 4 பாகம்.

(k) பனி வண்டி மணிக்கு: செம்பு 84, வெள்ளீயம் 10.

(l) கப்பல்: செம்பு 82, வெள்ளீயம் 12 துத்தநாகம் 6.

வழக்கப்பாடான அளவு என்னவென்றால், அதிக கனத்த பாகத்தின் கனத்தில் மூன்றில் ஒருபங்கு கனமுள்ளதாய் மெல்லிய மேற்பாகமிருக்கவேண்டியது. மணியின் நாக்கு எங்கே அடிக்கிறதோ அவ்விடத்தில் அதிக கனமாக இருக்கவேண்டும். மணியின் நாக்கடிக்கும் கீழ் கனத்தபாகம் பரிமாணத்தில் மணியின் மொத்த பரிமாணத்திற்குத் தக்கபடி வித்தியாசப்பட்டிருக்கும். பெரிய பரிமாணத்தையுடைய மணிகளில் இந்தபாகம் மணியின் குறுக்களவில் 1.15 பாகத்தளவு மெல்லியதாயிருக்கவேண்டும். சிறிய மணிகளில் இந்த பாகம மணியின் குறுக்களவில் பத்தில் ஒரு பாகத்தளவு கனத்ததாயிருக்கவேண்டும். இந்தமணிகள் பரிமாணத்தில் அதிகப் பெரியவையும் அதிகச் சிறியவையுமானவை. சாதாரணமாய் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கீழ் பாரிசத்தின் அளவு மணியின் குறுக்களவில் 1.12முதல் 1.13 வரைக்கும் வித்தியாசப்பட்டிருக்கும். உரத்த சத்தம் வேண்டியதாயிருந்தால் அதிககனத்தை வைக்கவேண்டியது அவசியமாகும்.

நீடித்த சத்தத்தால் உரத்த சத்தம் தாழ்த்தப்படாதபடி தடுக்கவேண்டும். அதற்காகத்தான் அதிக கனத்தை வைக்கவேண்டும். உரத்த சத்தம் நீடித்த சத்தத்தை கேட்காதபடிக்கும் கனத்தை வைக்கக்கூடாது. இவ்விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பெரியமணிகளை அதிகமெல்லியதாய் செய்துவிடக்கூடாது. ஏதோ குறித்த சத்தங்களை உண்டாக்க மணிகளின் பரிமாணத்தை கணக்கிடும்போது, எட்டு மணிகளை ஒரே உலோகத்தில் செய்வதாகவும் கணிதரேக்கில் ஒரே அளவுடையதாகவும் இருந்தால், அந்த மணிகள் இரட்டைச் சத்தத்தின் அளவிலுள்ள எட்டுவித சத்தத்தையும் உண்டாக்கும். அவைகளின் பரிமாண அளவுகள் 60, 53,33, 48, 45, 40, 36, 32, 30 ஆக இருக்கவேண்டும். மேற்குறித்த எண்கள் சத்த அளவுக்குரிய 8-வித சத்தங்களின் கீழ்நோக்க அளவுகளைக் குறிக்கிறது. அதாவது ஆரோகண அளவல்ல. அவரோகண அளவு. கொடுத்தமணியின் ஐந்திலொரு பிரமாணமுள்ள மணியை செய்வதாயிருந்தால் ஒவ்வொரு அளவின் பரிமாணத்தில் 2.3 லக்கமுடையதா யிருக்க வேண்டும். குறுக்களவிற்கும் கனத்திற்கும் உள்ள பிரமாணத்தை வேறுத்த எண்ணமிருந்தால் மாத்திரந்தான் மேற்குறித்த அளவில் செய்யக்கூடாது.

அப்போது இந்முறை சரியாக வருகிறதில்லை. ஏனென்றால் ஒரு மெல்லியமணி குறைந்த குறுக்களவோடு அதே சத்தத்தை உண்டாக்கும் காரணமென்னென்றால் சமித்துக்கொண்டிருக்கும் தட்டுகள் அல்லது ஸ்பிரிங்கினுடையகாரியமுறைமையை அநுசரித்து மணியின் விரிந்த அடிபாகத்தின் சத்தச் சலனம் கனத்தின் தன்பெருக்கெண்ணாக வித்தியாசப்படுகிறது.

குறுக்களவு.

மணிகள்கூட பூரணமாய் அதேபிரகாரம் கனத்தப் பொருளாகுமானால், கனமே குறுக்களவுக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறது. அப்போது சத்தச்சலனத்தின் காலவளவு. குறுக்களவின் கீழ்நோக்க இலக்கத்தில் வித்தியாசப்படுகிறது.

உருவம்.

மணியின் கலப்பு உலோகத்தின் நிர்ணயமானதும் மணியின் குறுக்களவு. உருவம் கருவெடுத்தல் ஆகியஇவைகள் நமது கவனத்திற்குரியன. ஓர் எடையில் திர வேண்டுமென்கிற மணி அந்த எடைக்குத் தகுந்தமாதிரியாக கனத்தையும் குறுக்களவையும் உடைத்தாயிருக்கவேண்டும்.

உதாரணமாக ஒரு டன் எடையுள்ள மணிவாயினிடத்தில் 4 அடி குறுக்களவையுடையதாயிருக்க வேண்டும். மணியின் நாக்கடிக்குமிடத்தில் 3½ அங்குல கனமுள்ளதாகவேண்டும். ஒரு அண்ட்ரட் வெயிட் எடையுள்ள மணி 18-அங்குல குறுக்களவையும் 1½-அங்குல கனத்தையும் உடையதாகவேண்டும். மணி வார்ப்பு ஐயமுள்ளதாக வேண்டுமானால் இம்முறைமையிலிருந்து விலகவே கூடாது. எவ்வித பரிமாண மணிகளுக்கும் இதே முறைமையைத்தான் அநுசரிக்கவேண்டும். மணி எவ்வளவுக்கெவ்வளவு எடையில் அதிகமான கனத்ததாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பெரியதாயும் கனமுள்ளதாயுமிருக்கும். எடையில் லேசானதெல்லாம் சிறிதாயும் மெல்லியதாயுமிருக்கும். ஒரே. கணக்கான மணிகளின் எடைகள் அவைகளின் குறுக்களவின் மும்முறை

பெருக்கின் எண்ணுக்கு சமமாக வித்தியாசப்படுகின்றன. ஏறக்குறைய போதுமான வரையில் பின்வரும் எண்களால் அவைகளைக்குறிக்கலாம். அதாவது 216 152, 110, 91, 64. 46. 33. 27. கருவிலிருந்து வெளியாகும்போது ஒரு ஜதையான:மணிகளுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பது நமது கவனத்திற்குரியதல்ல, அவைகளின் சத்தகுணந்தான் நமது கவனத்திற்குரியது. ஏனென்றால் வெட்டிவிடுவதினால் இருவிதத்திலும் கீத சத்தம் சிறிது மாறிப்போகும். ஆனால் சத்தத்தின் குணம் மாத்திரம் எப்போதும் ஒன்றாகத்தானிருக்கும். ஆனால்மணியை முதலில் உபயோகிக்கும் இரண்டு மூன்று வருஷங்கள் வரைக்கும் சத்தத்தில் அதிகரிக்கிறது.

இவ்விடத்தில் பூலோகத்தில் பலவிதமான மணிகளின் எடைகளை இங்கு குறிப்பிடின் சிரத்தையை உண்டாக்கும். உலகத்தில் மகாபெரியமணி மாஸ்கோவிலுள்ள மணி. அது 198 டன் எடையுள்ளது. 16 அடி உயரம் 60 அடி வரம்பின் சுற்றளவு. அது 1655௵ வார்க்கப்பட்டது. நெருப்பில் அது விழுந்து போயிற்று 1837ம்௵ வரைக்கும் அது பூமியில் புதைபட்டு இருந்தது. அப்போது நிக்கோலாஸ் சக்கிரவர்த்தி அதை ஓர் உயர்ந்த மேடைமீது வைக்கச்சொன்னார். அதின் உள்பாகம் இப்போது ஓர் தேவாலயமாக உபயோகிக்கப்படுகிறது. இப்போது மாஸ்கோவில் உபயோகத்திலிருக்கிற இன்னொரு பெரிய மணியின் எடை 128 டன். செண்ட்பால்ஸ்சர்ச்சில் உள்ள பெரிய மணி 1881ம்௵ வார்க்கப்பட்டது. 17½ டன் எடையுள்ளது. ஐக்ய இராஜ்ஜியத்தில் அதுதான் மகாபெரிய மணி. இதர பெரிய மணிகளில் பீகிங் பெரிய மணி ஒன்று. (53 டன்) நான்கிங் (22 டன்) கொலூன் அத்தியக்ஷகர் ஆலய மணி (25 டன்) "கிரோட்பீடர்" யார்க்கு மினிஸ்டர் (19 டன்)

கரு செய்தல் (ஒட்டணம் எடுத்தல்)

சிறிய பரிமணத்தையுடைய மணிகளுக்கு சாதாரணமாய் ஒரு உலோக அல்லது மரமாதிரியிலிருந்து மண்ணில் கரு உண்டாக்குகிறார்கள். அக்கருவை நெருப்பின் மேல் வைத்துள்ள இரும்புத்தகட்டின்மேல் காய்ச்சுகிறார்கள். பெரியமணிகளுக்கு களிமண்ணில் கரு உண்டாக்கப்படுகிறது. உட்பாகம் ஓர் இரும்பு மேடையின்மேல் செங்கல்லினால் செய்யப்பட்டிருக்கிறது. கரு நிலத்திற்குமேல் செய்யப்படுவதாயிருந்தால் அந்த மேடையில் உலோக திம்மைகளிருக்கவேண்டும். அந்த செங்கல் உள்பாகம் 34 அங்குலம் அல்லது 12 அங்குலம் கனமுள்ள களிமண் பூச்சினால் மூடப்பட்டிருக்கிறது. கடைசி மேல்பரப்பின் பூச்சு நேர்த்தியாக அரைக்கப்பட்ட களிமண் செங்கற்பொடி சேர்மானத்தால் செய்யப்படுகிறது. இந்த சேர்மானவஸ்து குதிரைச்சாணியின் சத்தோடு சேர்க்கப்படுகிறது. அதற்கு கொஞ்சம்(Sal ammoniac) சால் அமோனியாக் சேர்க்கப்படுகிறது. உள்பாகத்தின்மேல் மணல் மிஸ்ரமத்தால் கனம் உண்டாக்கப்படுகிறது. இந்த கனமும் நேர்த்தியான களிமண்ணினால் மெழுகப்படுகிறது. இதினால் மெதுவான மேல்பரப்புஉண்டாகிறது மெழுகிலாவது மரத்திலாவது உலோகத்திலாவது முன்னதாகவே செய்துள்ள சித்திர அலங்காரங்களை மெழுகினால் சேர்த்து

வைக்கிறார்கள். வச்சிரத்தாலாவது அல்லது எந்தவிதமான ஒட்டுப் பசையைக் கொண்டாவது சித்திர அலங்கார கருக்களைச்சேர்த்து வைக்கவேண்டும். மணியின் கோப்பைமாத்திரம் தூக்குவது அசாத்தியமா யிருக்கும்படியாக சித்திர அலங்கார கருக்கள் அவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கக்கூடியதா யிருந்தால் (கோப்பை பாழிக்க முடியாது) சித்திர அலங்கார கருக்கள் கொழுப்பின் உதவியினாலாவது அல்லது கொழுப்பு மெழுகு சேர்மானத்தாலாவது கனத்தோடு கெட்டியாக பிடித்துக் கொண் டிருக்கும்படி செய்யப்படுகிறது. கருவிற்கு கொஞ்சம் சூட்டினால் கொழுப்பு உருகும். பிறகு சித்திர அலங்காரங்கள் கோப்போடு ஒட்டிக்கொள்ளும். கோப்பானது உள்பாகச் செங்கல் கட்டையிலிருந்து எடுக்கப்படும்போது கோப்பிலிருந்து சித்திர அலங்காரத்தை எடுத்துவிடலாம். கனத்தை அதிகமாய் பாலிஷ் செய்யவேண்டியது அவசியம். பிரிப்பதற்கு நிலக்கரியை உபயோகப்படுத்துவது சாத்தியமில்லை யாகையால் மரச்சாம்பலை லேசாய் தூவவேண்டும். செங்கல் உள்பாகத்தையும் கனத்தையும் பிரிக்கவுங்கூட மரச்சாம்பலை உபயோகிக்கிறார்கள். முதலில் கோப்பைப்போட வர்ண புருசை உபயோகிக்கிறார்கள். ஜலபதார்த்தம் சேர்த்தியானதாகவும் தேவிதையானதாகவு மிருக்கிறது. அது களிமண் செங்கல்தூள் குதிரை மூத்திரம் இவற்றின் சேர்மானம் இந்தப் பசையின்மேல் கடைசியாக வைக்கோல்பசையைப் போடுகிறார்கள். மணியின் உச்சிபாகம் மாமாதிரியின்மேல் கருகட்டப்படுகிறது. முன்னதாகவே மரத்துண்டை எடுத்துவிடுகிறார்கள். மணியின் உள்பாக கட்டையில் இப்போது உண்டான சந்தில் மணியின் நாக்கு வளையத (இரும்பினாலேயோ எழுகினாலேயோ செய்யப்பட்டது)தை செருகுகிறார்கள். இந்த வளையம் கனத்தில் முட்டிக்கொண் டிருக்கிறது. உலோகம் பாயும்போது இதுவும் உலோகத்தில் பாயும். கோப்பை எடுத்துவிடுகிறபோது கருவின் முகம் பூர்த்தியாகிறது. ஏதாவது சிறிய குறைபாடுக ளிருந்தால் அவைகள் அப்படியே விட்டுவிடலாம். இந்த பாகத்தில் பாய்கிற உலோகத்தை பின்பு வெட்டுளியால் வெட்டி எடுத்துவிடலாம். சமப்பரவலாய் சாம்பலைத் தூவுவதைவிட கருவின் முகபாகத்தை பாலிஷ் செய்ய வேறொன்றும் செய்வதற்கில்லை. கரு உலர்ந்துள்ளபோது வார்ப்பதற்கு மொத்தமாய் வைக்கப்படுகிறது. மணியின் உள்பாகம் வெறுமையாகவாவது மணலோடாகவாவது இருக்கலாம். வெறுமையாக யிருந்தால் அபாயம் ஒன்றுமில்லை. ஏனென்றால் மணி உலோகம் சிறிது புகையைத்தான் உண்டாக்குகிறது. கோப்பின் முக்கிய பாதுகாப்பு நன்றாக சுற்றிலும் பரித்தெடுத்த குழியின் மணல்மேடு. இரும்பினாலேயும் கொஞ்சம் சாக்கிரதையாக வைக்கப்படுகிறது. வார்க்கும் இடம் (வாய்) மணியின் மேல்பாகத்தி லிருக்கிறது. உச்சியிலேயாவது, உச்சி சித்திரவேலை யுள்ளதானால் அதற்குப் பக்கத்திலேயாவது வார்க்கும்வாய் யிருக்கிறது. வார்க்குமிடம் தரையிலிருந்தால் ஒருபலனும்உண்டாகாது. வார்ப்பதற்கு முன்னே உருக்கிய உலோகம் சுத்தமாக முகமாடவேண்டும்.

வார்த்தல்.

இரும்புத்தகட்டின்மேல் கட்டிய கரு நிலத்தில் முன்னமே தோண்டப்பட்ட

குழியில் இறக்கப்படுகிறது. மணி முழுவதும் மறையத்தகுந்த ஆழமாக பள்ளமிருக்கவேண்டும். இந்த கரு உள்பாக கரு என்று பெயர். உட்பாகம் செங்கல்லினாலும் களிமண்ணினாலும் செய்யப்பட்டது. ஓர் அடுப்பின்மேல் நன்றாக காய்ச்சப்பட்டது. இந்த கரு நெருப்புள்ள அடுப்புக்கு தாழ்ந்தவிடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதேமாதிரியாக செய்யப்பட்டு சுடப்பட்டிருக்கிற மூடியை (கவசத்தை) கைஜோடைப்போல் அதன்மேல் வைக்கிறார்கள். இந்த மூடிக்கும் மணிகருவுக்கும் மத்தியில் மணியின் கனத்தளவு இடையிடத்தை விட்டிருக்கிறார்கள். ஏதாவது விசிதம் செய்யவேண்டியதை அந்த மூடியின்மேல் முன்னமே ஊன்றியிருக்கிறார்கள். ஆகையால், மணி வார்த்தபோது இந்த விசிதம் உலோகத்தின் ஓர் பாகமாகிறது. முன்னே விவரித்த அளவில் கலப்பு உலோகம் சேர்க்கப்பட்டு இப்போது ஜல ரூபமாக்கப்பட்டு இருக்கிறது. சில மணிநேரமாய் உலோகம் காளவாயில் உருக்கப்பட்டிருந்தது, அப்போது உலோக காளவாய் துவாரம் செய்யப்படுகிறது. உருக்கப்பட்ட உலோகம் வெளியே போகும் வழியைத் தேடிக்கொள்ளுகிறது. சாய்வான குழாயின் மூலமாய்ச் சென்று கருவின் உச்சியில் பிரவேசிக்கிறது. சில நிமிஷங்களுக்கெல்லாம் வெறும் இடம் உலோகத்தால் பரவப்பட்டிருக்கிறது. உள்ளிடமும் மூடியும் மணியும் எல்லாம் பூமியிலேயே இரண்டொரு நாளைக்கு ஆறவிடப்பட்டிருக்கிறது. 5 அண்டர்வெயிட் எடையுள்ள ஒரு மணி மறுநாளையே தோண்டி எடுக்கப்படலாம். ஒரு டன் எடை உள்ள மணி இரண்டு அல்லது மூன்று நாள்வரைக்கும் சுட்டுக்கொண்டே இருக்கும். தினக்கணக்காகவும் வாரக்கணக்காகவும் தயார்செய்தது. வார்க்கும்வேலையோடு முடிவையடைகிறது.

சந்த சத்தம் உண்டாக்கல்.

மணிக்கு சந்த சமத்துவம் உண்டாக்கல் மிகுந்த சாமர்த்தியத்தைச்சார்ந்தது. மணிகள் தனியாக உபயோகப் படுத்தப்படும்போது என்ன சந்தம் உண்டாகிறது என்பதை கவனிப்பது அவ்வளவு அவசியமல்ல. மணிகள் ஒன்றுசேர்ந்து சார்பாய் அடிக்கும்போது அவைகளை ஒன்றுக்கொன்று முரணான சந்தத்தை உண்டாக்காதபடி பார்ப்பது அவசியமாகிறது. மணியின் போய்மேலே யிருக்கும்படி தலைகீழாய் வைக்கிறார்கள். பிடிச்சுராவியால் பிடிக்கப்பட்டிருக்கிறது. மத்திய ஸ்தானத்தைக் கண்டுபிடித்து எழுகு வெட்டாத்தை வாயின் கனத்தபாகத்தில் வைத்து செதுக்கப் பார்க்கிறோம். இந்தவிதமாகத் தான் ஒரு கணீல் என்று அடிக்கும் மணியை மந்தமாய் அடிக்கும் மணியாக ஆக்குகிறோம். மணிக்கு ஒரு கெடுதியும் உண்டாகாமல் இம்மாதிரியாக ஒரு சந்தத்தில் முக்கால் அல்லது அரைசந்தம் ஆகிறவரையில் மந்தமாக்கலாம். மந்த சத்தம் வாய்பாகத்தின் கனத்தைக் குறைப்பதினால் ஆகிறது. இந்தமாதிரியாக வாயினிடத்தில் உலோகத்தை செதுக்கி எடுத்தால் மணியானது கனம் குறைந்து உரத்த சத்தமில்லாமல் போகிறது.

ஒரு மந்தசத்தத்தை உண்டாக்கும் மணியை சுருக்கான சத்தத்தை உண்டாக்கும். மணியாகச்செய்தல் கடினம். ஆகையால், எப்போதும் அந்த வேலைக்கு பிரவே

சிக்கிறதேயில்லை. அப்படிப்பட்ட மணிகளை வாங்கி கையிருப்பில் வைத்துக்கொள்ளுகிறோம். அல்லதுமறுபடி உருக்கிவார்க்க ஆரம்பிக்கிறோம். மந்தசத்தம் நீக்கப்பார்ப்பது முடிவுபெறாத காரியம். ஆகலால் நமது காலத்தை அதில் செலவிடுகிறதில்லை. அது வீண்காலப்போக்கு ஓர் மந்த சத்த மணியை சுருக்கான சத்தமணியாக அதன் குறுக்களவைக் குறைப்பதினால் செய்யலாம் என்னும் சாஸ்திரப்பிரமாணமிருக்கிறது. இந்தவிதமாக ஓர் மந்த சத்தமணி சுருக்கு சத்தமணியாக்கப்படலாம் என்கிற நம்பிக்கையிருக்கிறது. இந்த சாஸ்திர பிரமாணத்தை பொருத்தி வேலைசெய்து பார்த்தால் மணிகளின் சத்தத்தையே வேறுக்கிவிடுகிறது. ஆகையால் அநேகமாய் சுருக்கானசத்தம் கொடுக்கும் மணியை வார்த்துவிடப் பார்க்கிறோம். ஆகையால் சுருக்கான சத்தமணியை மந்தசத்தமணியாக்க வேண்டுவது அவசியமானால் அது சுலபமாக ஆகிறது. இதுதான் காரியத்துக்குச் சரியாகிறது. இதுதான் சத்தம சரிப்படுத்தும் சரியான மாதிரி.

அநேக தலைமுறையாக அடிக்கப்படுகிறபடியால் மணியின் நாக்கடி படுமிடத்தில் தேய்ந்துபோனால் அந்த குறித்தவிடத்தில் பலஹீனப்பட்டுப் போகிறது. அதுகாரணமாக அவ்விடம் உடைபடக்கூடியதாகிறது. அதாவது விரிந்துபோகக்கூடியதாகிறது. அப்போது செய்யவேண்டியது என்னவென்றால், அதைச்சுற்றி இடம் திருப்பிவைக்கவேண்டும். இப்போது நாக்குக்கு அடிக்க புது உலோகம் கிடைக்கிறது. ஆடும்போது மணி முன்னிருந்த பக்கமல்லாமல் வேறுபக்கமாய் அசைகிறது. நாக்கு வேறிடத்தில் அடிக்கிறது.

நல்லமணி உலோகம் வெட்டிஒடித்தால் சேர்த்தியான சன்னமா அணுக்களை நெருக்கமாக உடையதாக காணப்படுகிறது. அதின்வர்ணம் வெண்மை இதில் வித்தியாசப்பட்டது வெண்கலம். அது கடினமானது. ஒடியத்தக்கது. சந்த சத்தத்தையுடையது. கனில் என்கிற சத்தத்தை உண்டாக்குகிறது. பழுக்க காய்ந்தது திடீரென்று குளிரச்செய்தால் அது மிருதுவாய்விடுகிறது. மறுபடியும் காய்த்து மெதுவாக ஆறும்படிவிட்டுவிட்டால்கடினம் மறுபடியும் உண்டாகும். கலப்பு உலோகத்தில் எவ்வளவுக்கெவ்வளவு செம்பு அதிகமாகிறது அவ்வளவுக்கவ்வளவு ஆழ்ந்த சத்தத்தை உண்டாக்கும். வெள்ளீயமும் இரும்பும் துத்தநாகமும் சுருக்கான சத்தத்தை உண்டாக்கும். வெள்ளி சேர்ந்தால் சத்தத்தை விருத்தி செய்கிறதென்று நம்பப்படுகிறது. வெள்ளி அம்மாதிரியாக சத்தத்தை விருத்தியாக்கவில்லையென்று இப்போது அனுபோகம் உண்டாயிருக்கிறது. கலப்பு உலோகத்தை உண்டாக்கும்போது முதலில் செம்பை உருக்குகிறார்கள். அந்த மொத்தம் பூரணமாய் காய்ந்திருக்கிறபோது வெள்ளீயத்தைச் சேர்க்கிறார்கள். அவற்றை நன்றாய் கலக்கச்செய்ய இரண்டையும் நன்றாய் கிளறிக்கொடுக்கிறார்கள். வெள்ளீயத்தை இரண்டு பகுதியாகச் சேர்த்தால் உத்தம குணங்கள் உண்டாகின்றன என்று நினைக்கிறார்கள். முதலில் பாதிக்கு கொஞ்சம் அதிகமாக சேர்க்கிறார்கள். மிகுதியாக உள்ளதை பிறகு சேர்க்கிறார்கள். இதற்கு மத்தியில் நன்றாய்கிளறுகிறார்கள்.

(Gong) காங் உலோகம்சேர்மானத்தில் மணி உலோகத்தைப்போல்தான் இருக்கிறது. ஆனால் அந்த உலோகம் பல வேறு

விதமான செயல்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. தட்டுகள் வார்க்கப்பட்டதும் கருவிலிருந்து எடுக்கப்படுகின்றன. பிறகு உலோகம் உருக்குமிடத்தில் சீமை இலந்தைப்பழ நிறம் வருகிற வரையில் சிவக்க காய்ச்சுகிறார்கள். இந்த ஸ்திதியில் இரண்டு இரும்புத் தகடுகளுக்கு மத்தியில் வைக்கப்படுகின்றன. தண்ணீரில் தோய்க்கப்படுகின்றன. அவை ஆறினபோது சுத்தியால் அடித்து வேலைசெய்ய போதுமான மிருதுவாயிருக்கிறது.

***

சிறுவர்த்தக தொழில் முறைகள்.

(I) சிரேஷ்டமான வண்டி வார்னிஷ்

32 பவுண்டு இரண்டாந்தரம்ஆப்பிரிக்கா கோபில் (Copal) 10 காலன் சுத்தமான எண்ணெய் இவைகளை நன்றாய் குழம்பாகிறவரையில் காய்ச்சவேண்டும். 1பவுண்டு லிதார்ஜ், 22 காலன் டர்பன்டைன் சேர்த்து கலக்கவேண்டும். வடிகட்டவேண்டும். 32 பவுண்டு இரண்டாந்தரமான அனைன் கம் (Gum Anine) பத்து காலன் சுத்தமான எண்ணெய் 1 பவுண்டு லிதார்ஜ் 22 காலன் டர்பன்டைன் இரண்டையும் முதலோடு சூடாயிருக்கும்போது இந்த வார்னிஷ் நன்றாய் காய்ச்சப்பட்டால் நன்றாய் கட்டி உலர்ந்து போகும். வேனிற்காலத்தில் நான்குமணி நேரத்தில் கட்டிப்போகும். 6 மணிநேரத்தில் மாரிகாலத்தில் கட்டிப்போகும். இது சக்கரம் ஸ்பிரிங், வண்டியின் பாகங்கள். கோச்சின் பாகங்கள் முதலியவைகளுக்கு வார்னிஷ்போட உபயோகப்படுத்தப்படுகிறது.

(2) சீப்பு செய்கிறவர்களுக்கு லிக்கர்.

(Lacquer) எலிமி 4 பாகம் (Elemi), மாஸ்டிக் 4 பாகம் (Mastic), ஷெல்லாக் (Shelleac) 20பாகம், சாராய ஸ்பிரிட் 80 பாகம், அடிக்கடி குலுக்குவதால் கரையச் செய்யவேண்டும். சீப்புகளை இந்த சேர்மான த்ருவ பதார்த்தத்தில் நனைத்து உலர்த்தவேண்டும்.

(3) பல் சோப்பு.

கொழுப்புசோப் 80 பாகம் பூமிஸ்மாவு சன்னமாய் சலித்தது 2 பாகம் தயாரான சீமைச்சுண்ணாம்பு 8 பாகம், ஸ்டார்ச்சு 2 பாகம் போதுமான நீரில் சோப்பை கரைக்கவேண்டும். மற்ற சரக்குகளை சேர்க்கவேண்டும். அடுப்பின்மேல் காய்ச்சவேண்டும். கொதித்தபிறகு அச்சுகளில் வார்க்கவேண்டும்.

உலோகத்திற்கு நீர் படாமலிருக்க. பெயிண்டு (Paint.)

3 பவுண்டு வெனிஷியன் டர்பன்டைனும் 1 பவுண்டு மாஸ்டிக்கும் (Mastic) உஷ்ணத்தால் கரையும்படிச் செய்யவேண்டும். இதோடு 96 பவுண்டு நல்லெண்ணெய் வார்னிஷைச்சேர். டர்பன்டைன் வாசனை போகிறவரையில் எல்லாவற்றையும் அடுப்பின்மேல் வைத்து சூடேற்று. 115 பவுண்டுள்ள இந்த வார்னிஷோடு நன்றாய்ச் சுட்ட களிமண் 20 பவுண்டு உத்தமமான போர்ட்லாண்டு சிமிட்டி 80 பவுண்டு துத்தநாக வெள்ளை 10 பவுண்டு சிவப்பு காரீயம் 5 பவுண்டு இவைகளை தூளாக்கிப்போடு. எல்லாம் நன்றாய் தேய்க்கப்பட்டு ஒன்றாய்க் கலந்தபோது 25 பவுண்டு அதிகம் டர்பன்டைன் எண்ணெயைச்சேர்.

(5) பிரஞ்சு இங்க்.

750 பாகம் லாக்மாம் 32 பாகம் படிக்காரம் அதேபாகமுள்ள கம் ஆரபிக் (Gum arabic) 16 பாகம் சர்க்கரை இவற்றை

6000 பாகம் தண்ணீரில் ஒரு மணிநேரம் கொதிக்கவைக்க வேண்டும். இரண்டு அல்லது மூன்றுநாளைக்கு அப்படியேயிருக்க வேண்டும். பிறகு மெல்லிய துணியில் வடிகட்டவேண்டும், இந்த இங்கு காலம் செல்லச்செல்ல நன்றாயிருக்கிறதாம்.

(6) வெள்ளாவி வைக்கிறவனுடைய இங்க.

4 அவுன்சு காஸ்தாரை (Gas tar) ஒரு அவுன்சு பென்சோல் (Benzol) சேர்த்து லேசாக்கு. 1 அவுன்சு டர்பன்டைனில் 2 அவுன்சு ஆஸ்பால்டம் (Asphaltum) கரைக்கவேண்டும். எல்லாவற்றையும் ஒன்றாய் சேர்க்கவேண்டும். உரலிலேயாவது மில்லிலேயாவது அரைக்கவேண்டும் இந்த இங்கியை பருத்தி முதலிய வஸ்திரங்களை அடையாளம்போட உபயோகப்படுத்தப்படுகிறது. க்ளோரைன் போட்டால் கூடப்போகிறதில்லை.

(7) பிரிஞ்சு பிஸ்கோத்து.

மூன்றுமுட்டைகளை எடுத்துக்கொள். அதேஎடையுள்ளமாவையும்சர்க்கரையையும் எடுத்துக்கொள். முட்டை வெள்ளையை விஸ்கியோடு நன்றாய்இடிக்கவேண்டும். நேர்த்தியான நுரை கிளம்புகிறவரையில் இடிக்க வேண்டும். ½ அவுன்ஸ் கல்கண்டுசேர்த்த எலுமிச்சபட்டையைத் துண்டுதுண்டாகச் செய்துசேர்த்து கிளரவேண்டும். பின்னும் இடிக்கவேண்டும். பிறகு மாவையும் சர்க்கரையையும் சேர்த்து இடிக்கவேண்டும். பிறகு அடுப்பில் வைக்கவேண்டும் கரண்டியைக்கொண்டு நன்றாய் பதமாக்க வேண்டும். ஒரு நேர்த்தியான வெள்ளைக்காகிதத்தின்மேல் கரண்டியால் பிஸ்கோத்தின் உருவத்தைச் செய்துகொள். சர்க்கரைத் தூளை அதின்மேல் தூவு. மிதமான சூடுள்ள அடுப்பில் அதை சுடு. சுட்டானதும் ஒருநேர்த்தியான கத்தியைக்கொண்டு கடிதத்திலிருந்து பிரத்தியேகப்படுத்து. பெட்டியில் போட்டுக்கொண்டு உபயோகப்படுத்து.

அச்சடிக்கிறவர்களுடைய உருளைகள்.
(Rollers.)

மழைகாலமானதும் அச்சடிக்கிறவர்கள் தங்கள் உருளைகளை மறுபடியும் புதிதாக வார்க்கவேண்டியதாகிறது. அநேக நல்லமுறைகள் அவர்களுக்கு உபயோகமாகும். ஐரோப்பிய தேசங்களில் சில ஷாப்புகளில் உருளைகளை வார்ப்பதே வேலையாக இருக்கிறது. தகுந்த காலத்தில் தங்களுடைய உருளைகளை வார்ப்பித்துக் கொள்ள அவர்களிடத்தில் கூட்டம் கூட்டமாய்ச் செல்லுகிறார்கள். இந்த தேசத்தில் அப்படிப்பட்ட ஷாப்புகள் இல்லாததினால் சாதா அச்சுக்காரர்கள் தங்கள் உருளைகளை தாங்களே வார்த்துக்கொள்ள வேண்டியதாகிறது. அவர்களுடைய செய்பாடும் சேர்மானமும் சுருக்காயிருந்தாலொழிய வார்க்கப்பட்ட உருளைகள் நல்ல வேலையைச் செய்யும் என்று எதிர்பார்க்கவேண்டியதில்லை. இந்த விவரிக்கப்படும்முறைகள் உருளைகளை நன்றாய் செய்யத்தக்க ஆள்களை வைத்துக்கொள்ள பொருளில்லாதவர்களும் அப்படியிருந்தும் நல்ல வேலையைச் செய்யவேண்டியிருப்பவர்களும் பலனை அடையும் விதமாக உபயோகப்படுத்திக்கொள்ளத் தக்கவை.

(a) 8பவுண்டு முகம் விளங்கும்படியான பளப்பான வச்சிரத்துக்கு அதை மூழ்கச்செய்யும்படியான மழைத்தண்

ணீரை அல்லது சுத்த நீரை சேர்க்கவேண்டும், 7 அல்லது 8மணிகளுக்குள்ளேதா ஒருதடவை கலக்க வேண்டும். 24-மணிநேரம் அதேமாதிரி இருந்தும், எல்லா ஜலமும் இழுத்துக்கொண்டதும் அடுப்பில்வைத்து சூடேற்ற வேண்டும். சுற்றிலும் நீர் சூழ்ந்திருக்கவேண்டும். ஏனென்றால் வச்சிரம் சாதாரணமாய் சூடேறுகிறது. சீக்கிரமாய் கரைந்துபோகிறது. நுரைகிளம்பினதும் நெருப்பிலிருந்து எடுத்து விடு. அதோடு 7பவுண்டு மொலாஸஸ் (இது முன்னதாகவே சூடேறியிருக்கவேண்டும்.) சேர். நெருப்பின்மேலுள்ள நீர் சூழ்ந்த சூடேறுமிடத்தில் சேர்மானத்தை ஒன்றாக நன்றாய்க் கலக்கவேண்டும். அதை கொதிக்கவிடக்கூடாது. இவ்விதமாக ஏறக்குறைய அரை மணிநேரம் சூடேற்றியதும் அடிக்கடி கலக்கப்பட்டதும் நெருப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும். கொஞ்சகாலம்வரைக்கும் ஆறவிடவேண்டும். பிறகு தகரத்தினால் செய்த குழையில் ஊற்றவேண்டும். அதாவது ஈயம்பூசிய இரும்புத்தகடு அல்லது செம்புத்தகடு. இது ஓர் மரக்குழையை உடைத்தாயிருக்கிறது.

இந்த மாத்திரணை உலோகத்திரணையின் மத்தியில் அதன் கடைசிமூலையினால் முன்னதாகவே தாங்கப்பட்டிருக்கிறது. இந்த உலோகஅச்சில் 8 அல்லது 10-மணிநேரம் வரைக்கும் தண்ணீரில் இருந்த பிறகு (வேனிற்காலத்தில் நெடுநேரம் நீரிலிருக்க வேண்டும்.) உலோக அச்சில் மூலையில் கட்டியிருக்கிற கயிற்றைக்கொண்டு அச்சிலிருந்து திரணை எடுக்கப்படுகிறது. இந்த கயிறு இப்போது அறையின் கூரையில் கட்டியிருக்கும் கப்பியின்மேல் சேர்க்கப்படுகிறது. ஆனால் உலோக அச்சிலிருந்து திரணையை மெதுவாக ஜாக்கிரதையாய் எடுக்க வேண்டும். பழைய திரணைகள் கூட இம்மாதிரிதான் மறுபடியும் வார்க்கப்படுகிறது. இதை முதலில் அதிக நெடியான ஆல்காலிவர்ணத்தால் கழுவி சுத்தப்படுத்தப்படுகிறது. கொஞ்சம் ஜலத்யும் மொலாஸஸ் (Molasses) யும் சேர்க்க வேண்டும். முன்னிருக்க சேர்மான வஸ்து லாபகரமாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

(b) திரணைகளுக்கு சேர்மான வஸ்து. வேனிற்காலஉபயோகம். 1½பவுண்டு மேலானவச்சிரம் 4பவுண்டு (treacle) ட்ரியாகல் வச்சிரத்தை கனமாயிருந்தால் 1½-மணிநேரம் மெல்லியதாயிருந்தால் 1-மணிநேரம் ஊறவைக்கவேண்டும். தண்ணீரிலிருந்து எடுத்து மறுநாள்வரைக்கும் ஓர் பலகையின்மேல் வைக்கவேண்டும். பிறகு சரியான உருக்குகிற பானையில் உருக்கவேண்டும், அல்லது கொழும்பு சட்டியில் வைக்கவேண்டும். இந்த சட்டியை நீருள்ள இன்னொரு சட்டியில் வைக்கவேண்டும். பின் சொன்னசட்டியின் நீர் முன் சொன்ன சட்டியில் பிரவேசிக்கக்கூடாது. வச்சிரத்தில் நீர் பாயக்கூடாது. உருளை வார்ப்பதில் ஒரு பெரிய ரகசியம் என்னவென்றால், வச்சிரத்தில் நம்மால் கூடுமான வரையில் நீரில்லாமல் பார்க்கவேண்டியதுதான். முன்போல (Treacle) ட்ரியாகல் சேர்க்கவேண்டும். ஒருமுறை கொதிக்கட்டும் பிறகு கூழாகிறவரையில் கொதிக்கும் உஷ்ணநிலைமையிலேயே இருக்கட்டும் அதற்கு. சற்றேறக்குறைய 2 மணிநேரம் செல்லும். அச்சில்வார். அச்சு சுத்தப்படுத்தப்பட்டு எண்ணெய் தடவப்பட்டு

இருக்கவேண்டும். இந்த சேர்மானம் அதிகநேரம் நெருப்பின்மேலிருந்தால் அது கெட்டியாய்ப்போய் கெட்டுப்போய்விடும். விவரித்தது 18-அங்குல உருளைக்கு போதுமானது. மற்றஅளவு உருளைக்கு அளவாக சேர்மானவஸ்துவை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

***

சிறுவர்த்தகம் செய்யும் விஷயங்களும் முறைகளும்.

வைலெட்-மை. (VIOLET INK)

மென்னதல் வைலெட், (Menthye Violet) 3. B., 96 கிராம் சர்க்கரை 96 கிராம், ஆக்ஸாலிக் திராவகம் (Oxolic acid) 20 கிராம், சுடு தண்ணீர் 19½-சொட்டு அவுன்ஸ், 60 சொட்டு அவுன்ஸ் குளிர்ந்த தண்ணீரில் சாயத்தை கலக்கவும். ஒருபுறமாக 2-மணிவரை வைத்துவிடு. மீதமுள்ள தண்ணீரையும் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து நன்றாக சுடவைத்து பிறகு கீழே எடுத்துவைக்க வேண்டியது. மேற்சொன்ன மாதிரி செய்தால் வைலெட்மை ஆகும்.

இங்கிலீஷ் சோப். (ENGLISH SOAP.)

15 தோலா தண்ணீரில், 5 தோலா காஸ்டிக் சோடா (Caustic Soda) வை சேர்த்து வேகவைக்கவும். பிறகு கொஞ்சங் கொஞ்சமாக 15. தோலா தேங்காய் எண்ணெய்யைவிடவும். கெட்டியாகும் வரையில் அடுப்பிலே இருக்கவேண்டியது. நாம் எந்த வர்ணம் செய்யவேண்டுமோ அந்த வர்ணம் கலக்கவேண்டியது.

சுகந்த பரிமள கூந்தல் தைலம்.

நல்லெண்ணெய் ஒருசேர், 3 தோலா சந்தன தைலம் 5தோலா ஆல்மான்டு ஆயில் (Almond Oil) ஒரு தோலா ராடிக்ஸ் ஆன்கசா (Radix Anchusa) எல்லாம் சேர்த்து ஒரு கார்குவைத்த பாட்டலில் ஊத்திவைத்து வெயிலில் 3 மணி நேரம் வைக்கவேண்டியது. பிறகு உபயோகத்திற்கு உதவும்.

டாய்லெட் சோப். (TOILET SOAP)

தேங்காய் எண்ணெய், காஸ்டிக் சோடா (Caustic Soda) ஒரே அளவில் எடுத்துக்கொண்டு வேகவைக்கவும். பிறகு எந்தநிறம் வேண்டுமோ அந்தநிறம் கலர்கலக்க வேண்டியது.

எம். ஸ்ரீ ஜி. பெருமாளய்யர்,
மதுரை.

***

ஞானரகசிய உபதேசம்.

(1) நமது ஜீவகாலத்தின் பெரும்பாகம் நமது மனோசக்தியையும் வன்மையையும் சௌகர்யத்தையும் பாழாக்குவதில் கழிந்துபோகிறது.

(2) சிநேகம், தனக்குள்ளேயே பரிசுத்தமானதென்றால், ஆபத்துகளினால் இன்னும் அதிக பரிசுத்தமாகிறது.

(3) அறியாமை என்னும் காரணம் அல்லது தெரியாது என்கிற சாக்குபோக்கு நமது உத்தரவாதத்தை நீக்காது.

(4) உன்னுடைய கவலைகளை சாத்தியப்பட்டவரையில் ஓர் சிறுமூட்டையாக கட்டிவிடு. அதை நீயே சுமந்துசெல்லலாம். அதினால் அன்னியர்களுக்கு தொந்தரை உண்டாகாது.

(2) சரித்திரம் ஒருதலைபாய பக்ஷத்தை நீக்குவதோடு உற்சாகத்தை உண்டாக்க வேண்டும். அநேகருக்கு சரித்திரம் அவர்களுடைய ஜீவகாலத்தைத் தூண்டுகிற அதிக்கிரமமான எண்ணங்களுக்கு ஆதாரமாயிருக்கிறது.

(6) நமது கஷ்டங்களை மறைக்கும்படியாகச் செய்து அன்னியர்களுக்கு கஷ்டமுண்டாக்காதபடிச் செய்தால் அதனை அகங்காரம் என்பது நல்லதுதான்.

(7) ஞானக்கோயிலின் வாயில்படி நமது ஞான சூனியத்தின் உணர்வே: எவனுக்கு தனக்கு ஒன்றும் தெரியாது என்பது முதலில் புலப்படவில்லையோ அவன் சரியாய் ஒன்றையும் கற்றுக்கொள்ளமாட்டான்.

(8) காரியங்களைச்செய். அவைகளைப் பற்றி அதிகமாகப் பேசாதே. எல்லா முயற்சிகளிலேயும் இதுதான் ஜயத்தின் ரகசியம். பேச்சென்றால் - வாதம். வாதமென்றால் - கோபமூட்டல். கோபமூட்டலென்றால் - எதிர்த்தல். எதிர்த்தலென்றால் - எல்லாவழிக்கும் தடை. நீ சரியாயிருந்தாலும் சரி, தப்பாயிருந்தாலும் சரி, நீ எதிர்த்தால் காரிய விருத்தந்தான் உண்டாகத்தக்க பலன்.

(0) அசாதாரண பாரமான சுமைகளையும் பொறுமையாய் தூக்கிச்செல்ல அதிக இடத்தைக் கொடுப்பது புகழ்ச்சி. சாதாரண சுமைகளையும் தூக்கிச்செல்ல நிந்தனை என்பது உதவிபுரியாது.

(10) ஆனகாரியம் ஆனதுதான். அது முன்னமே எல்லையில்லா காரியங்களில் சேர்ந்து ஒன்றாய்விட்டது. நித்தியமாயுள்ள எப்போதும் சலிக்கிற பிரபஞ்சத்தில் சேர்ந்துவிட்டது. அவ்விடத்தில்கூடஎல்லையில் காலமுள்ளளவும் பகிரங்கமாகவாவது ரகசியமாகவாவது நன்மையையோ தின்மையையோ செய்துக்கொண்டுதானிருக்கும்.

(11) உயிர்வாழ்க்கையில் எல்லா உத்தம குணங்களும் பலப்படுத்தவேண்டியிருக்கின்றன. மனிதன் அவற்றை ஆதரிக்கவேண்டும். இயற்கையால் உனக்குண்டான சாமர்த்தியங்களும், நற்குணங்களும் விர்த்தியில்லாமல் உண்டானபடியே இருப்பதோடுநீ திருப்தி யடைந்திராதே. அவைகளை இன்னும் மேலான பூரண ஸ்திதிக்குக் கொண்டுவருவதிலே இரு.

(12) விர்த்தியாகும் காலத்தில் நாமெல்லோரும் பலஹீனராயிருக்கிறோம். ஆபத்துக்காலத்தில் நமக்கு ஒருமதிப்பும்இல்லை விபத்து நமது வலிமையை பரீக்ஷை செய்கின்றது, அது நமது சதையைப் பரீக்ஷிக்கிறது, நமது பொறுமையை பரீக்ஷிக்கிறது. ஆகையால்விபத்து காலமுறையாக நமக்கு நேரிடவேண்டியது அதினால்தான் நாம் திடத்தை அடையவேண்டும்.

(13) ஒரு சுவிசேஷமும் ஒருசந்தோஷமான செய்தியும் எல்லா நன்மையையும் உண்டாக்கா. சிறிதுபிரயத்தனம். சிறிது செயல் தீர்மான சக்தியின்உபயோகம் வேண்டியதாகிறது. அப்போதுதான் மனம் களிக்கும். ஆனால் நல்லவார்த்தை விஷயத்தைசுத்தமாய் நோக்குவதில் அதிக உபயோகமுள்ளது. உலகத்தோடொத்துநடக்க சுவிசேஷம் உதவிபுரியும்.

***

கல்வி.

"கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லா தவர்."

சகல சாஸ்திரங்களையுஞ் சந்தேக விபரீதமின்றி கற்றோரே கண்களுடையவரென்று சொல்லப்படுவோர். மற்றோரே அதாவது கல்லாதவர்களோ முகத்தில் கண்களின்றி நோய்முதலானவைகளாலே துன்பஞ்செய்தற்குரிய இரண்டுபுண்களை யுடையவராவர்.

"கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு மாடல்ல மற்றை யவை."

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வங் கல்வியாம். பொன்மணி முதலானவை செல்வமல்லவாம். நமது தேசம் மேல்நிலைமை அடையவேண்டு மென்னும் நன்னோக்கமுடையவர்களாகிய நாம் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய காரிய மென்னவென்றால் நமது தேசத்தில் எல்லாவூர்களிலும் ஆண் பெண்மக்கள் யாவரும் சேர்ந்து வாசிப்பதற்கு பாடசாலைகள் அனேகமாய் ஏற்படுத்தவேண்டும். ஏழ்மையாலும் மற்ற காரணங்களாலும் பகற்காலத்தில் பாடசாலைகளிற் சேர்ந்து வாசிப்பதற்கு சௌகரியக் குறைவாயுள்ளவர்கள் இராக்காலத்தில் இரண்டு மூன்று மணிகாலந் தினந்தோறும் கட்டாயமாய் வாசிப்பதற்குத்தகுதியான தர்ம இராப்பள்ளிக்கூடங்கள் எல்லா வூர்களிலும் ஏற்படுத்த வேண்டும். எந்தேசத்தில் ஆண் பெண் மக்கள் கல்வி கற்காமலிருக்கிறார்களோ அந்த தேசத்தில் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலியவைகள் ஒருபோதும் முன்னேற்ற மடையாது. ஆகையால் இந்தியர்களாகிய நாம் தேசாபிமானமுள்ளவர்களாகையால் நமது தேசம் எந்தவகையாலும் நாகரீகத்திற் சிறந்த தேசங்களென்று கருதப்படுகிற மற்றதேசங்களைப்போல் முன்னேற்ற மடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதிலேயே கண்ணுங்கருத்துமா யிருக்கவேண்டியது கடமை. இப்பேர்க்கொத்த ஏற்பாடுகள் யாவும் நம்மொருவரால் செய்யமுடியாதென்று அசட்டையா யிருப்போமேயானால் நமது தேசத்தார்க்கும் நம்மினத்தார்க்கும் நமக்கும் நாமே தீங்குசெய்கிறவர்களாகிறோம்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர் பிறர்க்கு"

மானிடராய்ப்பிறந்தவர்களில் யார் மற்ற ஜீவான்மாக்களின்மேல் அன்பில்லாதவர்களா யிருக்கிறார்களோ அவர்கள் எல்லாப் பொருளையுந் தமக்கே யுரியவராவர். அவ்வாறின்றி உண்மையான அன்புடையவர்கள் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க உரியவராவர். மேற்கூறப்பட்ட குறளுக்கு கருத்து (தாற்பரியம்) எழுதிய பரிமேலழகர் இவ்விடத்தில் என்பு ஆகுபெயராய் உடம்பிற்காய் நின்றதென்றும், வேடனால் துரத்தப்பட்டுத் தன்னை அடைக்கலமாய் வந்தடைந்த ஒரு சிறுபுறவைக் காப்பாற்று நிமித்தம் தன் தேக முற்றிலுமுள்ள மாமிசம் யாவும் அறுத்து துலையிலிட்டபோதும் புறவினெடைக்கு சமானப்படாமற்போனபடியால் தானே துலையிலேறி புறவினெடையைச் சரிப்படுத்திய சிபி சக்ரவர்த்தியையும், விருத்திராசூரன் எந்தயுகத்தாலும் தான் மரணமடையாதிருக்கும்படி வரம் பெற்றுக்கொண்டு தெய்வலோகத்திற்குப் போய் தேவேந்திரனையும் மற்ற தேவர்களையுந் தொந்திரவுசெய்ய ஆரம்பித்தபோது தமதுயிரை திரணமாகநினைத்துத் தேவர்களனைவரையுங் காப்பாற்று நிமித்தமாக பரோபகார சிந்தையுடன் தமது முதுகெலும்பைக்கொடுத்துதவிய ததீசிமுனிவரையும் உதாரணமாய் கூறியிருக்கிறார். ஆகையால் ததீசிமுனிவர் ஒருவரால் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றவர்களுஞ் சுகமடைந்தார்கள். ஆகையால் நம்மொருத்தரால் பெருத்த காரியங்களைச்செய்து முடிப்பது அசாத்தியமென்று நினைப்பது மிகவுந் தவறான அபிப்பிராயம். "படைக்கொருத்தன் கொடைக்கொருத்தன்" என்னும் பழமொழியைச் சற்று வூன்றி யோசித்தால்

வூக்கமும் விடாமுயற்சியுமுடைய புருஷர்களால் எப்படிப்பட்ட காரியமுஞ் சாதிக்கக் கூடுமென்பது நன்கு விளங்கும். அதிசூரனும் பாண்டவர்களில் ஒருவனுமாகிய அர்ச்சுனனால் எப்படிப்பட்ட அசாத்தியமான காரியங்களெல்லாம் நடந்திருக்கிறதாக ஐந்தாம்வேதமென்று கருதப்படுகிற மகாபாரதத்தில் வாசித்திருக்கிறோம். "பரோபகாரம் இதம்சரீரம்" நமக்கு பகவானால் நாம் முன்ஜென்மங்களிற் செய்த புண்ணிய பாபங்களுக்கீடாகக் கொடுக்கப்பட்ட தேகத்தினால் செய்யவேண்டிய காரிய மென்னவென்றால் பரோபகாரமேயாம்.

"ஞானிகள்விவகாரம் லோகோபகாரம்" என்னுஞ் செய்யுளாலும் நாம் உலகத்தார்க்கு உபகாரமான காரியங்களையே செய்யவேண்டுமென்றேற்படுகிறது. இதைவிட்டு "அநித்தியானி சரீராணி அந்துருசொம் மூகாகோராணி" தேகம் அநித்தியம் எல்லாருடைய சொத்துக்களும் எனக்கே வரவேண்டுமென்னும் விகட வாக்கியத்தைப் போல நான் யாருக்கும் உபகாரஞ் செய்யமாட்டேன் எல்லாரும் எனக்கே உபகாரஞ்செய்ய வேண்டுமென்று சுய நன்மையை பாராட்டிக்கொண்டிராமல் எல்லாவற்றிற்கும் அருமையாகிய மானிடப்பிறவியைப் பெற்ற நாம் எப்பொழுதும் மறவாமலும் தவறாமலும் பிறர்க்குபகாரமான காரியங்களையே முக்கியமாய் செய்யவேண்டும். அதுவும் பிறதி யுபகாரத்தைக் கருதாமலே செய்யவேண்டும்.

"என்று முகமனியம்பா தவர்கண்ணுஞ் சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்— துன்றுசுவை, பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ, நாவிற் குதவு நயந்து"

"பிறர்க்குதவி செய்யார் பெறுஞ்செல்வம் வேறு, பிறர்க்குதவியாக்கு பவர்பேறும்— பிறர்க்குதவி, செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து, பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு"

துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்கள் இயற்றிய நன்னெறியில் மேற்கூறப்பட்டுள்ள இரண்டு பாடல்களுமிருக்கின்றன. இவற்றின் கருத்துகளை நாம் நன்கு ஆராய்ந்து நடக்கவேண்டுவது நமது கடமை யாகும். சுவாமி விவேகானந்தர் ஒருவரால் அநேக காலமாக கிரிஸ்தவ மதத்தை அனுசரித்து வந்தவர்களா யிருந்த ஐரோப்பியர், அமெரிக்கர் முதலானவர்களெல்லாம்இந்துமத வுணர்ச்சியைப்பெற்று தங்கள் தேசங்களில் சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும் ஏற்படுத்தி இந்துமதத்தை அனுசரித்து வருகிறார்களென்பது நம்மவர்கள் யாவருக்குந் தெரிந்த விஷயமாகையால் இதுவே திடவைராக்கியமும் உள்ளன்பும் உடைய ஒரு புருஷரால் எப்பேர்க்கொத்த காரியமும் வெகு சுலபமாய் செய்ய முடியுமென்பதற்கு தக்க சாட்சியாகும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நமது தேசத்திலுள்ள ஆண் பெண் மக்கள் யாவரையும் நமது சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் அந்தரங்க அன்புடன் பாவித்து அவர்களுக்கு கல்வி எவ்வகையாலும் போதிக்கவேண்டியது நமது கடமையென்று கங்கணங் கட்டிக்கொண்டு கூடியசீக்கிரத்தில் தக்க ஏற்பாடுகள் யாவுங் கொஞ்சங்கூட குறைச்சலில்லாமல் பூர்த்தியாய் செய்யவேண்டும். அமெரிக்கன் பாப்டிஸ்டுமிஷன், அமெரிக்கன் ஐனுமிஷன், சர்ச்மிஷன், ஸ்காட்ச்மிஷன், ஸீஜிமிஷன் முதலிய அந்நியதேசத்துமிஷன

ஒருவனுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியாம், பொன்மணி முதலானவை செல்வமல்லவாம். நமது தேசம் மேல்நிலைமை அடையவேண்டு மென்னும் நன்னோக்கமுடையவர்களாகிய நாம் அத்தியாவசியமாய் செய்யவேண்டிய காரிய மென்னவென்றால் நமது தேசத்தில் எல்லாவூர்களிலும் ஆண் பெண்மக்கள் யாவரும் சேர்ந்து வாசிப்பதற்கு பாடசாலைகள் அனேகமாய் ஏற்படுத்தவேண்டும். ஏழ்மையாலும் மற்ற காரணங்களாலும் பகற்காலத்தில் பாடசாலைகளிற் சேர்ந்து வாசிப்பதற்கு சௌகரியக் குறைவாயுள்ளவர்கள் இராக்காலத்தில் இரண்டு மூன்று மணிகாலந் தினந்தோறும் கட்டாயமாய் வாசிப்பதற்குத்தகுதியான தர்ம இராப்பள்ளிக்கூடங்கள் எல்லா வூர்களிலும் ஏற்படுத்த வேண்டும். எந்தேசத்தில் ஆண் பெண் மக்கள் கல்வி கற்காமலிருக்கிறார்களோ அந்த தேசத்தில் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் முதலியவைகள் ஒருபோதும் முன்னேற்ற மடையாது. ஆகையால் இந்தியர்களாகிய நாம் தேசாபிமானமுள்ளவர்களானையால் நமது தேசம் எந்தவகையாலும் நாகரீகத்திற் சிறந்த தேசங்களென்று கருதப்படுகிற மற்ற தேசங்களைப்போல் முன்னேற்ற மடைவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதிலேயே கண்ணுங்கருத்துமா யிருக்கவேண்டியது கடமை. இப்பேர்க்கொத்த ஏற்பாடுகள் யாவும் நம்மொருவரால் செய்யமுடியாதென்று அசட்டையா யிருப்போமேயானால் நமது தேசத்தார்க்கும் நம்மினத்தார்க்கும் நமக்கும் நாமே தீங்குசெய்கிறவர்களாகிறோம்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர் பிறர்க்கு"

மானிடராய்ப்பிறந்தவர்களில் யார் மற்ற ஜீவாத்மாக்களின்மேல் அன்பில்லாதவர்களா யிருக்கிறார்களோ அவர்கள் எல்லாப் பொருளையுந் தமக்கே யுரியவராவர். அவ்வாறின்றி உண்மையான அன்புடையவர்கள் பிறர்க்கு எலும்பையுங் கொடுக்க உரியவராவர். மேற்கூறப்பட்ட குறளுக்கு கருத்து (தாற்பரியம்) எழுதிய பரிமேலழகர் இவ்விடத்தில் என்பு ஆகுபெயராய் உடம்பிற்காய் நின்றதென்றும், வேடனால் துரத்தப்பட்டுத் தன்னை அடைக்கலமாய் வந்தடைந்த ஒரு சிறுபுறவைக் காப்பாற்று நிமித்தம் தன் தேக முற்றிலுமுள்ள மாமிசம் யாவும் அறுத்து துலைபிடித்தபோதும் புறவினெடைக்கு சமானப்படாமற்போனபடியால்தானே துலையிலேறி புறவினெடையைச் சரிப்படுத்திய சிபி சக்ரவர்த்தியையும், விருத்திராசூரன் எந்த ஆயுதத்தாலும் தான் மாணமடையாதிருக்கும்படி வரம் பெற்றுக்கொண்டு தெய்வலோகத்திற்குப் போய் தேவேந்திரனையும் மற்ற தேவர்களையுந் தொந்திரவுசெய்ய ஆரம்பித்தபோது தமதுயிரை திரணமாகநினைத்துத் தேவர்களனைவரையுங் காப்பாற்று நிமித்தமாக பரோபகார சிந்தையுடன் தமது முதுகெலும்பைக்கொடுத்துதவிய ததீசிமுனிவரையும் உதாரணமாய் கூறியிருக்கிறார். ஆகையால் ததீசிமுனிவர் ஒருவரால் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் மற்றவர்களுஞ் சுகமடைந்தார்கள். ஆகையால் நம்மொருத்தரால் பெருத்த காரியங்களைச்செய்து முடிப்பது அசாத்தியமென்று நினைப்பது மிகவுந் தவறான அபிப்பிராயம். "படைக்கொருத்தன் கொடைக்கொருத்தன்" என்னும் பழமொழியைச் சற்று ஊன்றி யோசித்தால்

ஊக்கமும் விடாமுயற்சியுமுடைய புருஷர்களால் எப்படிப்பட்ட காரியமுஞ் சாதிக்கக் கூடுமென்பது நன்கு விளங்கும். அதிசூரனும் பாண்டவர்களில் ஒருவனுமாகிய அர்ச்சுனனால் எப்படிப்பட்ட அசாத்தியமான காரியங்களெல்லாம் நடந்திருக்கிறதாக இதிகாசமென்று கருதப்படுகிற மகாபாரதத்தில் வாசித்திருக்கிறோம். "பரோபகாரம் இதம்சரீரம்" நமக்கு பகவானால் நாம் முன்ஜென்மங்களிற் செய்த புண்ணிய பாபங்களுக்கீடாகக் கொடுக்கப்பட்ட தேகத்தினால் செய்யவேண்டிய காரிய மென்னவென்றால் பரோபகாரமேயாம்.

"ஞானிகள்விவகாரம் லோகோபகாரம்" என்னுஞ் செய்யுளாலும் நாம் உலகத்தார்க்கு உபகாரமான காரியங்களையே செய்யவேண்டுமென்றேற்படுகிறது. இதைவிட்டு "அநித்தியானி சரீராணி அந்தருசொம் முநாகோனி" தேகம் அநித்தியம் எல்லாருடைய சொத்துக்களும் எனக்கே வரவேண்டுமென்னும் விகட வாக்கியத்தைப் போல நான் யாருக்கும் உபகாரஞ் செய்யமாட்டேன் எல்லாரும் எனக்கே உபகாரஞ்செய்ய வேண்டுமென்று சுய நன்மையை பாராட்டிக்கொண்டிராமல் எல்லாவற்றிற்கும் அருமையாகிய மானிடப்பிறவியைப் பெற்ற நாம் எப்பொழுதும் மறவாமலும் தவறாமலும் பிறர்க்குபகாரமான காரியங்களையே முக்கியமாய் செய்யவேண்டும். அதுவும் பிறதியுபகாரத்தைக் கருதாமலே செய்யவேண்டும்.

"என்று முகமனியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்,
துன்றுசுவை, பூவிற் பொலிகுழலாய் [illegible]
கை புகழ்வோ, நாவிற் குதவு நயந்து"

"பிறர்க்குதவி செய்வார் பெருஞ்செல்வம்
வேறு, பிறர்க்குதவியாக்கு பவர்பேறும் —
பிறர்க்குதவி, செய்யாக் கருங்கடனீர் சே
ன்ற புயன்முகக்கு, பெய்யாக் கொடுக்கும்
பிறர்க்கு"

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்கள் இயற்றிய நன்னெறியில் மேற்கூறப்பட்டுள்ள இரண்டு பாடல்களு மிருக்கின்றன. இவற்றின் கருத்துகளை நாம் நன்கு ஆராய்ந்து நடக்கவேண்டுவது நமது கடமை யாகும். சுவாமி விவேகானந்த ஒருவரால் அநேக காலமாக கிறிஸ்தவ மதத்தை அனுசரித்து வந்தவர்களாயிருந்த ஐரோப்பியர், அமெரிக்கர் முதலானவர்களெல்லாம் இந்துமத வுணர்ச்சியைப்பெற்று தங்கள் தேசங்களில் சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும் ஏற்படுத்தி இந்துமதத்தை அனுசரித்து வருகிறார்களென்பது நாமவர்கள் யாவருக்குந் தெரிந்த விஷயமாகையால் இதுவே திடவைராக்கியமும் உள்ளன்பும் உடைய ஒரு புருஷரால் எப்பேர்க்கொத்த காரியமும் வெகு சுலபமாய் செய்ய முடியுமென்பதற்கு தக்க சாட்சியாகும். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் நமது தேசத்திலுள்ள ஆண் பெண் மக்கள் யாவரையும் நமது சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் அந்தரங்க அன்புடன் பாவித்து அவர்களுக்கு [illegible] எவ்வகை [illegible] மது கட [illegible] ண்டு கூ [illegible] யாலும் போதிக்க [illegible] வையென்று க [illegible] டிபத்திரத்தி [illegible] ஒருசங் [illegible]

ரிகள் நமது தேசத்திற்கு வந்து நாம் வெகு அருமையாய்ப் பெற்று வளர்த்து வருகிற ஆண் பெண் மக்களைத் தமது கிறிஸ்தவ மதத்திற் சேர்ப்பதற்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு வருகிறார்கள். ஐம்பது அறுபது வருஷகாலமாக பல இடங்களில் பாடசாலைகள் வைத்தும் வீடு வீடாகப் போய் சுவற்ப சம்பளத்திற்கு கல்வியும் தையல் முதலானவைகளும் கற்பித்துக் கொடுக்கிறோமென்றும் சொல்லி ஏமாற்றி காலாந்தரத்தில் அவர்களைக் கிறிஸ்தவர்களாக்குகிறார்கள். கிளியைவளர்த்து பூனைக்கு இரைகொடுப்பதுபோல் நம்மக்களைப் பறிகொடுத்துவிட்டு நாம் ஏமாந்திருப்பது மானிடர் தர்மமல்ல. இப்படி நடவாமலிருப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் ஒன்றுஞ்செய்யாமல் இஞ்சிதின்றக் குறங்கைப்போல் பற்களை இளித்துக்கொண்டும் பார்த்துக்கொண்டும் கும்பகர்னன் ஆறுமாசம் தூங்கிக்கொண்டிருந்ததுபோல் நாம் சதாகாலமும் தூங்கிக்கொண்டு மிருந்தால் நம்மக்களெல்லாம் கிறிஸ்தவர்களாய்விட்டால் நாம் யாருக்காக கோவில்கள் மேலும் மேலும் கட்டிவருவது? கவனியுங்கள். மிகவும் தீர்க்கமாய் ஆலோசியுங்கள். எந்தகாலத்தில் எந்த தர்மம் அத்தியாவசியமாய் செய்ய வேண்டுமோ அந்த தர்மத்தைச் செய்வது தான் புத்திசாலிகளின் கடமையாகும். ஆகையால் இந்தகாலத்தில் நமது தேசத்திலுள்ள ஆண்பெண் மக்கள் யாவருக்கும் கல்வியை இலவசமாயும், கட்டாயமாயும் போதிப்பதுதான் பெருந்த தர்மமாகும். கல்வி யில்லாதவர்கள் குருடருக்குச் சமானமாகும். புருஷன் படித்தவனாயிருந்து அவன் மனைவி படிக்காதவளா யிருந்தால் அவர்கள் இருவரும் சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கையானது ஒரு வண்டியில் பழகின மாடொன்றையும் பழகாத முரட்டுமாடொன்றையும் கட்டி செலுத்துவதுபோலத்தானிருக்கும். இது நம்மவர்கள் ஒவ்வொருவருக்கும் தினசரி அநுபவமான விஷயமேயன்றி வேறல்ல. பெண்பிள்ளைகளும்படித்திருந்தால் அவர்கள் குடும்ப சம்ரட்சணையை வெகு கவனமாய் நடத்துவார்கள். அவர்கள் பெறும் பிள்ளைகளுக்கும் கல்வி போதிப்பார்கள். தங்களுடைய புருஷன், மாமன், மைத்துனர் முதலானவர்களிடத்திலும் சரியாய்நடந்துகொள்வார்கள். புருஷனுடைய சம்பாத்தியத்திற்குத் தக்கபடி செலவு செய்வார்கள். குடும்பங்களில் கலகங்கள் சச்சரவுகள் முதலானவைகளில்லாமல் யாவரும் மனமொத்து வாழ்வார்கள்.

"அறம்பொருள் இன்பம் வீடும் பயக்கும், புறங்கடை நல்லிசையு நாட்டும்— உறுங்கவலொன், றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங் கில்லை, சிற்றுயிர்க்குற்றதுணை" என்று குமரகுரு பரசுவாமிகள் நீதிநெறி விளக்கத்திற் கூறி யிருப்பதை நன்றாய்க் கவனிக்கவேண்டும். எழுதவும் படிக்கவும் பெண்களுக்கு கல்வி கற்பித்தால் கள்ளபுருஷர்களுக்கு கடிதம் எழுதுவார்களென்றும், வீட்டு வேலைகளை சரியாய்ச் செய்யமாட்டார்களென்றும் புருஷன், மாமனார், மாமியார் முதலானவர்களுக்கு அடங்கி நடக்கமாட்டார்களென்றும் நினைத்து அவர்களுக்கு எழுதப் படிக்க கற்பிக்கக்கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள். இது மிகவும் தப்பான அபிப்பிராயம். "Little knowledge is a dangerous thing" "கொஞ்ச அறிவு அபாயகரமானது" என்கிற வாக்கியப்பிரகாரம் கல்வியை கொஞ்சமாய் கற்பித்தால் அப்படி

தானிருக்கும். பள்ளிக்கூடங்களில் வாசித்துக்கொண்டிருக்கும்போதே தாய், தமக்கைமுதலானவர்கள் அவர்களுக்கு வீடுகளைச் சுத்தஞ்செய்யவும், சாதம், காய் கறி பதார்த்தம்முதலியவைகளை நன்றாய் சமைக்கவும், இன்னும் மற்ற சம்ரக்ஷணைக்குரிய காரியங்களைச்சரியாய்ச்செய்யவும் கற்பிக்க வேண்டும். தகப்பன், தமையன் முதலானவர்கள் அவர்களுக்கு பாரதம் இராமாயணமுதலிய இதிகாசங்களை வாசிக்கச்சொல்லி அவைகளிலுள்ள தத்துவார்த்தங்களை எல்லாம் ஒவ்வொருநாளும் போதித்துவரவேண்டும். தேகப்பயிற்சிக்குரிய ஆட்டங்களை ஆண்பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது போலவே பெண்பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் போதித்துவந்தால்பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளைப் போலவே நமக்கு எல்லாகாரியங்களுக்கும் உதவியாயிருப்பார்கள். ஆகையால் அறிவுள்ளவர்களா யிருக்கிற நாம் எந்தகாலத்தில் எது செய்யத்தக்கதோ அதைச் செய்யவேண்டும்.

கோ. கு. குமாரசாமி ஆச்சாரி

***

பலகுறிப்பு.

தர்மகைங்கர்ய முயற்சி.

தஞ்சாவூர் ஜில்லா திருக்காட்டுப்பள்ளி என்னும் கிராமத்தில் விஸ்வகர்மாக்களுக்கு இதுபரியந்தம் தனியாக ஓர் தேவஸ்தானமில்லாம லிருந்தது. அக்குறையை நிவர்த்திக்க அவ்விடத்திலுள்ள விஸ்வகர்ம மேதாவிகள் ஒன்றுசேர்ந்து ஷை தர்ம கைங்கர்யங்களை முடித்துவைப்பதற்கான விடாமுயற்சிசெய்து வருவதாக தெரியவருகிறது. இவ்வித தர்மவிஷயத்தில் பிரவேசித்து கூடியசீக்கிரம் முடித்துவைப்பது பெரும் புண்ணியமாகும்.

நமது சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

நாம் நமது பத்திரிகைகளில் பலநாளாக பிரிவுபட்டுள்ள விஸ்வகர்மமஹாஜனங்கள் ஒற்றுமைப்பட்டு ஒருவழியாக உழைக்க வேண்டுமென்றும், பலகாரியங்களை ஒன்றுசேர்ந்து நடத்தவேண்டுமென்றும் எழுதிவந்த முயற்சியால் தற்சமயம் யாவரும் ஒருமிக்க நேர்ந்தது. இதைக்கண்ணுற்ற சில துராபிமானிகள் பொறாமைகொண்டு தனிவழி பிரிந்து அடாத காரியங்களைச் செய்ய முயன்றுவிட்டார்கள். ஆகிலும் அவர்களுடைய விரோதங்களை எதிர்பாராமல் நம் குல ஒற்றுமையைக் கருதி கடவுளுக்கு சம்மதமாக ஒற்றுமைப்பட ஒப்புக்கொண்டோம்.

இந்த புதுவருடமாகிய 1918ஞு ஜனவரிமீ முதல் நமது 'விஸ்வகர்ம குலோபகாரி' என வழங்கிவந்த தொழில் பத்திரிகையையும், 'விஸ்வகர்மன்' என வெளிவந்திருந்த பத்திரிகையையும் சேர்த்து ஓரே பத்திரிகையாக அச்சிட்டு வெளிப்படுத்த தீர்மானித்துவிட்டபடியால் அடுத்தமாதமுதல் ஒரேபத்திரிகையாக வெளிவரும் இவ்விரண்டு பத்திரிகைகளுக்குமுள்ள சந்தாதாரர்களையும் ஒன்றாகச் சேர்த்துவிடப்படும். இனி சந்தாதாரர்கள் ஒவ்வொருவர்களும் தங்கள் தங்களிஷ்ட பந்துமித்திரர்களுக்கு தெரிவித்து சந்தாதாரர்களை அதிகமாகச் சேர்த்துக் கொடுக்கும்படிக்கு கோரப்படுகிறது.

விஸ்வ பிரம்ம புராண வசனச் சுருக்கம்.

மேற்படி புராண வசனச்சுருக்கம் விஸ்வகர்ம சந்ததியார்களுக்கு முக்கியமானது. இதுபரியந்தம் 8 அணா விலைக்கு விற்பனை செய்து வந்திருந்தோம். இப்பொழுது நடந்துவரும் யுத்த காரணத்தால் பல சாமான்களும் விலை ஏறிவிட்டபடியால் இனி 10 அணா விலைக்குத்தான் விற்கப்படும். இதை ஒவ்வொரு விஸ்வகர்மாக்களும் வாங்கி வாசிக்கவேண்டியது அவஸ்யமாகும்.

***

விஸ்வகர்ம பக்தோபாக்யானம்.

என்னும் ஓர் இனிய புத்தகம் அச்சிட்டிருக்கிறது. அதில் 12-பக்தர்களுடைய சரித்திரம் அடங்கியது. ஒவ்வொன்றுக்கும் செய்யுட்களும், வசனமும் தனித்தனி எழுதப்பட்டிருக்கிறது. புராணப் பிரசங்கத்திற்கு தகுதியானவையா யிருக்கும். விலை ரூபா 1.

***

விஸ்வப்பிராம்மணப் பட்டம்.

சேலம் ஜில்லா கடத்தூர் சி. வரதாசாரியாரென்பர் 1911௵ பிப்ரவரி௴ 25௳யில் தஞ்சை ஜனனுகூலன் பத்திரிகையில் கம்மாளர்களை, விஸ்வ பிராம்மணர்கள் என்று சொல்வதற்கு சாஸ்திர புராணாதிகளில் ஏதேனும் ஆதார மிருந்தால் அதுகளை தெரிந்துகொள்ள மஹாஜனங்கள் விரும்புகிறார்களென்று எழுதியதற்கு, தஞ்சாவூர் தெற்கு இராஜவீதி பிரம்மஸ்ரீ சா. சுந்தராச்சாரியாரும், கும்பகோணம் பிரம்மஸ்ரீ த கு சுந்தராச்சாரியாரும் தக்க ஆதாரத்துடன் நீதியாக பதிலெழுதி ஷை ஜனனுகூலன் பத்திரிகைகளிலேயே வெளியிட்ட விஷயங்களை தற்காலம் புத்தகரூபமாக அச்சிட்டிருக்கிறது இதன் விலை அணா 4.

***

விஸ்வகுரு சதகம்.

பெருநகர் பிரம்மஸ்ரீ உபயகவி கந்தப்பாச்சாரியர் புத்திரர் பிரம்மஸ்ரீ ஷண்முகாச்சாரியார் அருளிய செய்யுட்களும் காவாந்தண்டலம் சபாபதி ஆச்சாரி புத்திரர் நடேஸ்வர ஆச்சாரியாரால் இயற்றப்பட்ட உரையும் அனேக இதிகாச புராணங்களி லிருந்து மேற்கோள்களாக எடுத்தாளப்பட்ட செய்யுட்களுங் கொண்டது விஸ்வகர்ம சிருஷ்டி முதலியவும் இதில் செவ்வனே விளக்கிக்காட்டி யிருக்கிறபடியால்இதை ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டுமென்று குறைந்த விலைக்குக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டது. விலை அணா 6

***

வேலூர் தீர்ப்பு.

ஸ்ரீமத் விஸ்வப்பிரம்ம குலசிரேஷ்ட மகா பண்டிதப் பிரதாபரென்றும் பிரம்மஸ்ரீ மார்க்கசகாயாச்சாரியா ரவர்களுடைய புத்திரர் புதுக்கோட்டை பிரம்மஸ்ரீ வெங்கட சுப்பாச்சாரியார், சித்தூர் ஜில்லா ஆற்காடு தாலூக்கா திமிரியில் பஞ்சாங்கம் - கிருஷ்ணமாசாரியாரோடு செய்த வாக்குவாதமும், வேலூர் ஜாயிண்ட் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் செய்த தீர்மானமும் இதில் அடங்கி யிருக்கின்றன.

தந்திபோதினி.

என்னும் இங்கிலீஷ் சுலபமாக கற்றுக் கொள்ளக்கூடிய புஸ்தகம் இருக்கிறது. அதில் இங்கிலீஷ் முதல் எழுத்து தொடங்கி பெரியவார்த்தைகள் வரையில் எழுதப்பட்டிருக்கிறது. இங்கிலீஷுக்குசரியான தமிழும் போடப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் எழுத்துகள் மட்டிலும் தெரிந்திருந்தாலும் அதைக்கொண்டு பெரியவார்த்தைகள் பரியந்தம் அடங்கியிருக்கிறது. சீக்கிரம் கற்றுக்கொள்ளக்கூடும் இதன்விலை ரூ. ஒன்று. வாங்கி வாசிக்கவேண்டியது நம்மவர்களின் முக்கிய கடமையாகும்.

விலை ரூ. 1—0—0

பட விளம்பரம்.

இப்படம் 12—10 இஞ்சி அளவில் புகைப் படத்திற்கு சமானமாகிய விஸ்வேஸ்வரர்(பஞ்சமூர்த்தியின்) படம் வெகு அழகாய்ச் செய்யப் பட்டிருக்கிறது. விலை அணா 4.

மேற்படி அளவில் விஸ்வேஸ்வரர் யந்திரம் தேவனாகர அக்ஷரம் அடைத்து சுத்தமாய் செய்திருக்கிறது. விலை அணா 4

மேற்கண்ட படங்கள் பூஜையில் வைத்து ஆராதிக்கக்கூடியது ஒவ்வொருவரும் அவஸ்யம் வாங்கலாம்.

வி.பி சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—"தொழில் ஆபீஸ்"
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இப்பத்திரிகையின் கடைசி பக்கத்தில் இருக்கும் புஸ்தக விளம்பரத்தை கவனித்து வாசித்தால் சில நூதன புஸ்தகங்களும் கிடைக்கும்.

பாலாஜி அண்டு கம்பெனி

காசி.

சகாயமாகவும் நவீன மாதிரிகளில் பட்டாடை விரும்புகிறவர்கள் காசியில் பிரபலப்பட்டு வர்த்தகர்களாகிய பாலாஜி அண்டு கம்பெனிக்கு எழுத மறந்துவிடாதீர்கள். எங்களின் பட்டாடைகளின் உயர்வுக்கும், அதன் நேர்த்திக்கும், பகிரங்க பொருள் காட்சிகளில் தங்கப் பதக்கம் பரிசளிக்கப் பெற்றிருக்கிறோம். பட்டுப் புடவை, ..ப்பட்டாக்கள், வெண்பட்டு அங்கவஸ்திரங்கள் முதலிய புதுமாதிரியான தினுசு தயாரில் சித்தமாக விருக்கின்றன. சிறு ஆர்டர்செய்து தருவித்துப் பார்த்தால், விலைகளின் நோட்டமும், சரக்குகளின் பெருமையும் தெரிந்துகொள்வீர்கள்.

விளையாட்டுப் பாத்திரம்.

விதமான விளையாட்டு சாமான்கள் ..கியது. குழந்தைகளை மகிழ்விப்ப ..மிக்க பெயர்பெற்றது.

பெரியசயிஸ் செட்	ஒன்றுக்கு	3—8—0
மத்தியசயிஸ்	,,	2—0—0
சிறுசயிஸ்	,,	1—8—0

முதல்தரமான கஸ்தூரி ஒரு ரூபாய் இடைகொண்ட தோலா ஒன்றுக்கு ரூபா ... 40—0—0

குங்குமப்பூ முதல்தரம் தோலா ஒன்றுக்குரூபா ... 2—8—0

காபூல் பால் காயம் 12-தோலா கொண்ட டப்பி ஒன்றுக்கு ரூ. 1—0—0

பட்டுக் கைக்குட்டை.

நேர்த்தியான நிசவு.

18இஞ்சு	சச்சவுக்கும்	1க்கு ரூ.	0-10—0
20	,,	,,	0-14—0
24	,,	,,	1—2—0

விஷ்ணுபாதத் தட்டு.

இது சுத்தமான தாம்பிரத்தில் செய்யப்பட்டது, தாம்பாளம் போன்ற வடிவுள்ளது. இதன் மத்தியில் விஷ்ணுபாதம் செதுக்கப்பட்டிருக்கும். தட்டு 1-க்கு விலை ரூபா $1\frac{1}{2}$-முதல் 2-வரை.

காசி வயிரவர் கயறு.

1-நெ.	பெரியகபர்	100-க்கு ரூ.	2—8—0
2	,,	,,	2—0—0
3	,,	,,	1—8—0
4	,,	,,	0—6—0

விலை விபரக் காட்லாக் இனம்.

BALAJEE & Co., Benares City, U. P.

இந்தியாவில் மிகப் பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஹல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

இந்த ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பாடம் பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும், திறமைவாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான மருந்து சென்ற 35-ஹ காலமாய் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும் புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

32 மாத்திரையின் விலை ரூபா-1.

எங்கேயும் தபாட்டலாக் இனமாய் அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி

மணிசங்கர் கோவிந்தஜி

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

45, மேலக் கோபுர வீதி, மதுரை.

96, மவுண்ட் ரோட், மதராஸ்.

157, பிராட்வே, மதராஸ்.

161166
சென்னை-600 005.